பேரறிஞர்

அண்ணாவின்

கடிதங்கள்

தொகுதி - 4

50 கடிதங்கள்

பேரறிஞர் அண்ணாவின் கடிதங்கள் - 4

அண்ணாதுரை

மின்னூல் வெளியீடு :
http://FreeTamilEbooks.com

உரிமை - CC0 கிரியேடிவ் காமென்ஸ்.
எல்லாரும் படிக்கலாம், பகிரலாம்.

பதிவிறக்கம் செய்ய - http://FreeTamilEbooks.com/ebooks/letters_of_peraringar_anna_4

அட்டைப்படம் - லெனின் குருசாமி - guruleninn@gmail.com

மின்னூலாக்கம் - ஐஸ்வர்யா லெனின் - aishushanmugam09@gmail.com

கணியம் அறக்கட்டளை

(kaniyam.com/foundation)

This Book was produced using LaTeX + Pandoc

மின்னூல் வெளியீடு

மின்னூல் வெளியீட்டாளர்: http://freetamilebooks.com

அட்டைப்படம்: லெனின் குருசாமி - guru-leninn@gmail.com

மின்னூலாக்கம்: ஐஸ்வர்யா லெனின் - aishushanmugam09@gmail.com

மின்னூலாக்க செயற்திட்டம்: கணியம் அறக்கட்டளை - kaniyam.com/foundation

Ebook Publication

Ebook Publisher: http://freetamilebooks.com

Cover Image: Lenin Gurusamy - guru-leninn@gmail.com

Ebook Creation: Iswarya Lenin - aishushan-mugam09@gmail.com

Ebook Project: Kaniyam Foundation - kaniyam.com/foundation

பொருளடக்கம்

1. தன்னை வெல்வான் தரணியை வெல்வான்! 11
2. விந்தை மாந்தர்கள் 48
3. வெந்த புண்ணில் வேல் 71
4. இதயம் வென்றிட. . . (1) 116
5. இதயம் வென்றிட. . . (2) 160
6. இதயம் வென்றிட. . . (3) 231
7. மனிதனும் மிருகமும் 267
8. சொக்கப்பனிடம் பட்ட கடன் 316
9. கங்கா தீர்த்தம் - 1 365
10. கங்கா தீர்த்தம் - 2 395
11. கனடா பயணம் - (1) 437
12. கனடா பயணம் - (2) 468
13. இடியோசையில் கிடைக்காது இன்ப நாதம் 511
14. பால் படி எத்தனை? 561
15. பயில்வான் வீட்டுக் காளை 602

16.அப்போதே செய்த முடிவு 644
17.காக்கும் கரங்கள் 685
18.எங்குச் சென்றாலும். 698
19.தடைக்கற்கள் படிக்கட்டுகளாகும் . . . 734
20.விளக்கு அணைந்து விட்டது! 767
21.கடமையாற்றிட 775
22.பகைவன் பணியலானான் 832
23.பற்று - (1) 870
24.பற்று - (2) 924
25.பொருத்தம் - 1 983
26.பொருத்தம் - 1 1027
27.கனவான் காற்று வாங்குகிறார் 1069
28.நாநலம் 1102
29.இது போதாதா? 1144
30.கிழக்கு வெளுத்திடும் வேளை 1185
31.வானுலக வீதியிலே. 1220
32.கனிவும் கசப்பும் - (1) 1247
33.கனிவும் கசப்பும் - (2) 1273

34. அன்னமென்றும் சொர்ணமென்றும் சொன்னாயே! - (1) 1301
35. அன்னமென்றும் சொர்ணமென்றும் சொன்னாயே! - (2) 1330
36. அகமும் புறமும் 1376
37. வெள்ளை மாளிகையில் - 1 1425
38. வெள்ளை மாளிகையில் - 3 1507
39. வெள்ளை மாளிகையில் - (4) 1538
40. வெள்ளை மாளிகையில் - (5) 1571
41. ”கனா’ நிகழ்ச்சி - ஒரு எச்சரிக்கை! . . . 1608
42. வெள்ளை மாளிகையில் - (6) 1665
43. வெள்ளை மாளிகையில் - (7) 1704
44. வெள்ளை மாளிகையில் - (8) 1737
45. வெள்ளை மாளிகையில் - (9) 1761
46. வெள்ளை மாளிகையில் - (10) 1788
47. கணக்குத் தீர்க்கும் காலம் ! 1821
48. கண்ணீர் பொங்கும்.... 1850
49. உன்னால் முடியும்! - (2) 1897

50. உன்னைத்தான் நம்பியிருக்கிறேன்! . . 1946
கணியம் அறக்கட்டளை 1992

1. தன்னை வெல்வான் தரணியை வெல்வான் !

பாளையங்கோட்டைச் சிறையில் கருணாநிதி
பாதுகாப்புச் சட்டப்படி மாறனும் கைது
கருணாநிதிக்கோ தருமபுரித் தேர்தல் பற்றியே கவலை
விரிவாகிவிட்டது இந்தி எதிர்ப்பு உணர்ச்சி
கருணாநிதிக்குக் கழகம் தரக்கூடிய மகிழ்ச்சிப் பொருள் தருமபுரி வெற்றியே!

தம்பி!

இலைகள் உதிர்ந்த நிலையில் சில மரங்கள்; இது முழுவதும் வெட்டவெளி அல்ல என்பதைக் காட்டுவதற்காக இருந்துகொண்டிருந்தன - மற்றபடி அந்த இடம் இயல்பாகவே வெப்பத்தை அதிகமாக்கிக்

காட்டக்கூடிய இடம்.

முப்பது அறைகளுக்குமேல் இருக்கும் - அதிலே ஒரு அறையில் தம்பி கருணாநிதி - மற்ற அறைகள் எல்லாம் பூட்டிக் கிடந்தன. மொத்தத்தில் ஒருவிதமான வெறிச்சோடிய நிலை. ஆள் நடமாட்டம் இல்லை என்பது மட்டும் அல்ல; பேச்சுச் சத்தம் கூடக் காதிலே விழ முடியாத இடம், அத்தனை தனிமை! அவ்வளவு "பாதுகாப்பு!' பக்தவத்சலனாரின் அரசு என்ன இலேசுப்பட்டதா! அவர்தானென்ன சாமான்யமானவரா - இந்தியப் பேரரசின் போலீஸ் அமைச்சர் நந்தாவினாலேயே பாராட்டப்பட்டவர் - கற்பாறைபோல் நின்றார் என்பதாக!

பாதுகாப்புச் சட்டப்படி சிறைபிடித்து வைத்திருப்பதால், மிக்க பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும் என்பது முதலமைச்சரின் திட்டம்போலும்.

அதனால்தான், பக்கத்திலேயே உள்ள இளம் குற்றவாளிகளுக்கான சிறைக் கட்டடத்தில் பல நூறு பேர் இருக்க, கருணாநிதிக்காகவே ஒரு பெரிய தனிச் சிறையை ஒதுக்கி, அதிலேயும், தனியாக வைத்திருக்கிறார்கள்.

மக்களைப் பெற்றவர்கள் மனம் நொந்து, ஏனோ இந்தக் கொடுமை என்று கண்ணீர் மல்கிடும் நிலையில் இருந்தபடி கேட்பார்கள். கேட்டால் என்ன! பக்தவத்சலனாரா இதற்கெல்லாம் அசைவார்! கற்பாறைபோல நின்றார் என்று சிறப்புப் பட்டம் பெற்றுவிட்டாரே!! தீக்குளித்து இறந்தவர்களை எண்ணி எண்ணி இந்த நாடே பதறுகிறது, கதறுகிறது; நல்லோர் அனைவரும் நெஞ்சு நெக்குருகிப் போயினர்; இந்திக்காரர்களிலே கூடச் சிலர், செய்தி கேட்டு அதிர்ச்சி அடைந்துள்ளனர்; ஆனால், முதலமைச்சர் மட்டும்தான்,

இதயத்தை எடுத்துத் தனியாக வைத்துவிட்ட நிலையினர் போலாகி, துளியும் ஈவு இரக்கம், மனிதத்தன்மையற்றவராகி. தோழர் மதியழகன் மெத்த மன வேதனையுடன் குறிப்பிட்டுள்ளதுபோல, தீக்குளித்த தீரர்களின் பிணங்களின்மீது தூற்றல் சேற்றினை வாரி இறைக்கிறார். எதிர்காலக் காவியமாகப் போகிற எழுச்சிமிக்க தியாகத்தை, இன்று கிடைத்துள்ள இடம் என்றென்றும் தமக்கு என்ற ஏமாளித்தனம் மிகுந்த இறுமாப்பு உணர்ச்சியுடன் எண்ணிக் கொண்டு, இழித்துப் பேசுவதும், பழித்து உரைப்பதும், தமிழ் மண்ணின் மாண்பினையே மங்கிடச் செய்திடும் மாபாதகச் செயல். ஆனால், துணிந்து செய்கிறார்கள் துரைத்தனம் நடாத்துவோர்.

சென்னையிலிருந்து நானூறு கல் தொலைவில், பாளையங் கோட்டையில்

தனிமைச் சிறையில் போட்டடைத்துக் கொடுமை செய்வதனைத் தமிழகம் கேட்டுத் தத்தளிக்கிறது; விம்மிடுகின்றனர் தாய்மார்கள்; இப்படி ஒரு ஆட்சியா என்று கேட்டுத் துடிக்கின்றனர் முதியோர்கள்; நம்மை இத்தனை துச்சமாக எண்ணிவிட்டனரே என்றெண்ணி வேதனைப்படுகின்றனர் இளைஞர்கள்; அறம் அறிந்தவர்கள் பதறுகின்றனர்; சட்டம் தெரிந்தவர்கள் இதற்குப் போதுமான நியாயம் இல்லை என்று எடுத்துரைக்கின்றனர்; கழகத் தோழர்கள் கலக்கமடைந்துள்ளனர்; முதலமைச்சர் மட்டும் நிற்கிறார் கற்பாறைபோல!

காலை மணி பத்து இருக்கும், நான் அங்குச் சென்றபோது; உடன் வந்திருந்த நெல்லை நகராட்சி மன்றத் தலைவர் மஜீத், வழக்கறிஞர் இரத்தினவேலு பாண்டியன் மற்றும் பலரையும் தனியே இருக்கச் செய்துவிட்டு, என்னை

மட்டும், சிறை அதிகாரிகள் மூவர், கருணாநிதி இருந்த சிறைக்கூடம் அழைத்துச் சென்றனர்.

சந்தித்துப் பேசுவதற்காக ஒரு அறை தயாரிக்கப்பட்டிருந்தது; இரு அதிகாரிகள் உடன் இருந்தனர்.

கருணாநிதி அழைத்துவரப்பட்டபோது, முன்பு பல முறை ஒருவரை ஒருவர் சிறையினில் சந்தித்ததுண்டு என்றபோதிலும், இம்முறை தனியானதோர் தவிப்புணர்ச்சி எழுந்து வாட்டியது. அதனை அடக்கிக்கொள்வது கடினம் என்றபோதிலும், கலக்கம் காட்டுவது நமது உள்ளத்தின் உறுதிப்பற்றி மற்றவர்களுக்கு ஐயப்பாடு ஏற்படுத்திவிடுமே என்ற அச்சம் துணை செய்தது; தவிப்புணர்ச்சியைத் தள்ளிவைத்துவிட்டு, அரைமணி நேரத்திற்கு மேல் பேசிக்கொண்டிருந்தோம்.

முன்னாள் நள்ளிரவிலேயே நான் நெல்லை போய்ச் சேர்ந்துவிட்டேன்; விடிந்ததும் என் காதில் விழுந்த முதல் செய்தி, மாறனைப் பாதுகாப்புச் சட்டப்படி கைது செய்துவிட்டிருக் கிறார்கள் என்பது. நெல்லைக்குக் கிளம்புவதற்கு முன்பு காஞ்சிபுரத்திலிருந்து தொலைபேசி மூலம் மாறனிடம் பேசினேன் - கைது செய்யப்படக்கூடும் என்ற குறிகள் தென்பட்டிருந்தால் கூட என்னிடம் சொல்லி இருந்திருப்பார். ஆகவே, நெல்லையில் நான் கேள்விப்பட்ட செய்தி என்னைத் தூக்கி வாரிப்போட்டது. அடுக்கடுக்காக வந்துகொண்டிருக்கும் இந்தக் கொடுமைகள், இறுதியில் நமது கழகத்தைப் புடம் போட்டெடுத்த பொன்னாக ஆக்கிடும் என்ற பொது உண்மை தெரியும் - மிக நன்றாகத் தெரியும் என்றபோதிலும் இப்போது நமது

கழகத் தோழர்கள் அடக்குமுறைத் தீயிலே தள்ளப்பட்டுக் கொடுமைகளால் தாக்கப்பட்டு வருவதைக் காணும்போது என்னால், பீறிட்டுக் கொண்டு கிளம்பும் வேதனையை அடக்கிக்கொள்ள முடியவில்லை. உள்ளம் மேலும் உறுதிப்பட வேண்டும் என்று தோன்றுகிறது.

கொடுமைகள் இழைக்கப்படும்போது, அநீதி தலை விரித்தாடும்போது, அக்கிரமம் தன் அகன்ற வாயினைத் திறந்து அகோரக் கூச்சலிடும்போது, எல்லாம் இறுதியில் நன்மைக்கே என்ற தத்துவத்தைத் துணைக்கழைத்துச் சமாதானம் தேடிக்கொள்ள முடியவில்லை. காரணம், நாம், ஒரு அரசியல் கட்சியின் உறுப்பினர்கள் என்ற முறையிலே மட்டும் இருந்து வருபவர்கள் அல்லர்; பாசத்தால் பிணைக்கப்பட்ட ஒரு குடும்பமாகி விட்டிருக்கிறோம். அதனால்

நம்மில் சிலருக்கு இழைக்கப்படும் கொடுமை நம் எல்லோருடைய உள்ளத்தையும் வேதனையில் ஆழ்த்திவிடுகிறது.

ஆனால், நாம் இத்தகைய கொடுமைகளைத் தாங்கிக் கொண்டே தீரவேண்டும். உள்ள நிலை அது. இன்று இங்குள்ள காங்கிரஸ் அரசு, நாட்டிலே ஏற்பட்டுள்ள நிலையைக் காரணமாக்கிக்கொண்டு, கழகத்தை அழித்தொழிக்கத் திட்டமிட்டு விட்டிருக்கிறது. சுட்டுத் தள்ளவே கூசாத ஒரு ஆட்சி, சிறையில் தள்ளவும் வழக்குகளைத் தொடுக்கவுமா கூசும்! நல்லாட்சிக்குத் தேவையான எல்லா இலக்கணத்தையும் இழந்துவிட்ட நிலையில், கொடுமைகளன்றி வேறென்ன காண முடியும்? காட்டுப் பன்றியிடமிருந்து உறுமலையும், ஓநாயிடம் இரத்த வெறியையும் தவிர, வேறெதைக் காண முடியும்? ஆட்சி

தவறான முறையை மேற்கொள்ளும்போது, நாட்டுக்கும் காட்டுக்கும் உள்ள வேறுபாடு மறைந்துவிடுகிறது.

கவலை கப்பிய நிலையில் கருணாநிதியுடன் பல விஷயங்கள் குறித்துப் பேசிக்கொண்டிருந்தேன். கருணாநிதியோ, இடையிடையே, தருமபுரித் தேர்தல் பற்றியே பேசிடக் கண்டேன்; உடல் நலத்தைக் கவனித்துக்கொள், ஏதேனும் உடல் நலக் குறைவு இருப்பதாகத் தோன்றினாலும் உடனே மருத்துவர் தேவை என்பதைத் தெரியப்படுத்து என்று நான் கூறிக்கொண்டிருப்பேன், இடைமறித்து கருணாநிதி, தருமபுரித் தேர்தலில் காங்கிரஸ் கட்சி பணத்தை அள்ளி வீசுவார்களே அண்ணா! அங்கு நாம் வெற்றிபெற வெகு பாடுபடவேண்டுமே! என்னென்ன ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன? யாரார் தருமபுரி சென்று வந்தனர்?

நீங்கள் எப்போது செல்லப் போகிறீர்கள்? என்ற இவைபற்றிக் கூறுவார், எனக்குக் கவலையைப் பிய்த்துக்கொண்டு புன்னகை கிளம்பும்.

சிறை மிகச் சக்தி வாய்ந்தது என்று ஆணவம் பிடித்த நிலையில் உள்ள எந்தச் சர்க்காரும் எண்ணிக்கொள்ளுகிறது. சிறையிலே போட்டு அடைத்ததும், வேதனை வென்றுவிடும், உணர்ச்சிகள் மங்கிவிடும், உறுதி தளர்ந்துவிடும் என்ற நினைப்பு; நிலைகெடப்போகும் கட்டத்தை நோக்கி நடைபோடும் எந்தச் சர்க்காருக்கும். சிறை அவ்விதமானதல்ல; அந்த இடம், உறுதியைக் கெட்டிப்படுத்தி வைக்கும் உலைக்கூடம்; சிந்தித்துச் சிந்தித்துத் தமது சிந்தனைச் செல்வத்தைச் செம்மையாக்கிக்கொள்ள வைக்கும் பயிற்சிக்கூடம், இதனை அறிய முடிவதில்லை,

அடக்குமுறைச் சுவையால் நினைவு இழந்துவிடும் அரசுகளால். நெல்லையில் சிறைப்பட்டிருக்கும் கருணாநிதியின் நினைவு முழுவதும் எதன்மீது என்பதனை அறிந்துகொள்வாரானால், முதலமைச்சர் தமது முறை தவறு என்பதனை உணர்ந்து கொள்வார். மக்களின் நலனுக்காகக் கழகம்; கழகத்தின் சார்பிலே செயலாற்றினோம்; அந்தச் செயலைத் தவறானது என்று திரித்துக் கூறிச் சர்க்கார் நம்மைக் கொடுமைப்படுத்துகிறது; நமக்கு இழைக்கப்படும் கொடுமையினைக் கண்டும் கேட்டும் இலட்சக் கணக்கானவர்கள் இதயம் துடிக்கிறது; அந்தத் துடிப்பிலிருந்து கிளம்பும் மிகப் பெரிய வலிவு எத்தனை பெரிய ஆணவ அரசினையும் வீழ்த்தவல்லது; அந்த வலிவினை நாடு பெற நாம் நமது வலிவிலே ஒரு பகுதியைச் சிறை

வாழ்க்கை காரணமாக இழப்பது தேவை, முறை, அறம் என்ற எண்ணம், சிறையில் உள்ளவர்களுக்குச் செந்தேன். அந்தச் சுவையில் திளைத்திருக்கக் கண்டேன், உடல் இளைத்தாலும் உள்ளம் களைத்திடாது என்ற நிலையில் உள்ள கருணாநிதியிடம். ஒரே ஒரு கவலைதான் இருக்கிறது; தருமபுரி பற்றி! ஆனால், அதிலேயும் கவலையை விரட்டியடிக்கக்கூடிய ஒரு நம்பிக்கையும் இருக்கிறது; எப்படியும் கழகம், தருமபுரித் தேர்தலில் வெற்றி பெற்றுவிடும் என்ற நம்பிக்கை கருணாநிதியைச் சிறையில் போட்டடைத்து வைத்திருக்கிறதே என்பதனை எண்ணி ஏக்கம் கொண்டுள்ளவர்கள், தங்கள் வல்லமையினை, உழைப்பினை, வசதியினை, நேரத்தை, நினைப்பை, தருமபுரிக்காக என்று அனுப்பிக் கொடுத்திடின், வெற்றி பற்றிக் கவலை ஏது! வெற்றி நிச்சயம்! அந்தச்

செயலினைச் செம்மையாகச் செய்வார்களா என்ற ஐயப்பாடு அல்ல, கருணாநிதிக்கு; அந்தச் செயலிலே தனது பங்கினைச் செலுத்த முடியாதபடி பக்தவத்சலனார் செய்துவிட்டாரே என்ற கவலைதான். அந்தக் கவலை வேண்டாம், தோழர்கள் திறமையாக, சுறுசுறுப்பாக, மெத்த ஆர்வத்துடன் தேர்தல் காரியத்தைக் கவனித்துக்கொள்கிறார்கள் என்று உறுதி அளித்தேன்.

அதிகாரிகள் கைக்கடிகாரத்தைப் பார்த்துக்கொண்டனர்; அதன் பொருள் விளங்கிற்று; நான் விடைபெற்றுக்கொண்டு புறப்பட்டேன்; நான் வெளிப்புற வாயிற்படி நோக்கி நடந்தேன்; தம்பி தனக்கென அரசு தந்துள்ள அறைநோக்கிச் செல்வதைப் பார்த்தபடி.

சென்றேன், கண்டேன்; செய்தியை உங்களிடம் கூறினேன்; ஆனால்,

இதுதானா நாம் ஒருவருக்கொருவர் தந்துகொள்ள வேண்டிய செய்தி? எவ்வளவு முறையாகச் செயலாற்றி வருகிறோம், கழகம் அமைத்து; நமக்கு இத்தகைய கொடுமை களைக் காங்கிரஸ் அரசு செய்தபடி இருப்பதா! நாடு எத்தனை காலத்துக்குத் தாங்கிக்கொள்ளப்போகிறது இவ்விதமான கொடுமைகளை? எத்தனை எத்தனை கொடுமைகள் நடந்து விட்டன இன்பத் தமிழகத்தில். மகனை இழந்த மாதாக்கள் கதறுகின்றனரே! எங்கெங்குச் சென்றாலும், நடைபெற்ற துப்பாக்கிச் சூடுபற்றியும், துடிதுடித்து மக்கள் செத்ததுபற்றியும், ஊரெல்லாம் சுடுகாடுகள் போலாகிக் கிடப்பதுபற்றியும், நண்பர்கள் கூறிடக் கேட்டுக்கேட்டு வேதனை மேலும் வளருகிறது. எத்தனை எத்தனை வழக்குகள்! எத்தனை விதமான கொடுமைகள்!

நள்ளிரவிலே கைதுகள்! பிடிபட்டவர்கள் நையப்புடைக்கப்படும் இழிதன்மை! ஏன் நமக்கு இழைக்கப் படுகின்றன இவ்வளவு கொடுமைகள்? நிகழ்ச்சிகள் நடைபெற்று நாட்கள் பலப் பல ஓடியபின், ஒரு திங்களுக்குப் பிறகும் கழகத் தோழர்கள் வேட்டையாடப் படுகின்றனர்; வழக்குகள் தொடுக்கப்படுகின்றன. நெல்லைக்குச் சென்று அங்கிருந்து மாயவரம், பிறகு ஆத்தூர், ராசிபுரம், பிறகு சேலம், தருமபுரி ஆகிய இடங்கள் சென்று வந்தேன். வழிநெடுக இதே செய்தி, ஊரெங்கும் இதே கொடுமை. சித்திரவதையைவிட, ஒரே அடியாகக் கொன்றுபோட்டுவிடுவதுமேல் என்பார்கள்; அதுபோல இப்படிக் கழகத் தோழர்களைக் கண்டகண்ட இடங்களில் விதவிதமான கொடுமைகளுக்கு ஆளாக்குவதைவிட, ஒரே அடியாகக் கழகத்தைத் தடைசெய்துவிடலாமே,

ஏன் இத்தனை பழிவாங்கும் உணர்ச்சி - வெறித்தனம், புரிய வில்லையே, என்று கழக நண்பர்கள் கேட்கின்றனர். காரணம் இருக்கிறது காட்டு முறையை நாட்டினை ஆள்வோர் கட்டவிழ்த்து விட்டிருப்பதற்கு.

காங்கிரஸ் ஆட்சிக்குப் பலத்த எதிர்ப்பு மூண்டு விட்டிருக்கிறது, சமூகத்தின் பல முனைகளிலுமிருந்து. இங்கேயே உள்ள நிலை என்ன? முன்பு கழகம் கிளர்ச்சி நடத்தியபோது, காங்கிரஸ் அமைச்சர்கள் கெம்பீரக் குரலில் முழக்கிவந்தனர், கழகத்தின் கிளர்ச்சிக்கு மக்கள் ஆதரவு இல்லை; மாணவர்கள், வழக்கறிஞர்கள், இதழ் நடாத்துவோர், அறிவாலயம் நடத்துவோர் ஆகியோரின் ஆதரவு இல்லை; ஒரு சமூகத்தின் மதிப்புமிக்க முனைகள் இவை; இந்த முனைகளில் கழகத்தின் பேச்சுக்கோ செயலுக்கோ துளியும் ஆதரவு இல்லை;

எனவே, கழகத்தின் கிளர்ச்சிக்கு அரசினர் மதிப்பளிக்கத் தேவையில்லை; அது தன்னாலே மங்கி மடிந்துவிடும் என்று மார்தட்டி வந்தனர். இப்போது? எந்த இந்தி எதிர்ப்பு உணர்ச்சியினைக் கழகம் பல ஆண்டுகளாக நாட்டிலே எடுத்துக்காட்டிக்கொண்டு வந்ததோ, எந்த இந்தி எதிர்ப்புக்காகக் கழகம் அறநெறிக் கிளர்ச்சியில் ஈடுபட்டு இன்னல்களையும் இழப்புகளையும் ஏற்றுக்கொண்டு வந்ததோ, அந்த இந்தி எதிர்ப்பு உணர்ச்சி மாணவர் உலகினில் பொங்கிடக் கண்டனர் ஆட்சியினர். வழக்கறிஞர்கள் இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சிக்கு ஆதரவு தந்திடுவது கண்டனர்; இதழ்கள், இனியும் ஏதும் நடைபெறாததுபோல் இருப்பது கூடாது என்ற உணர்வுடன் இந்தி எதிர்ப்புணர்ச்சியின் வேகத்தையும் வடிவத்தையும் அரசினர் அறிந்துகொள்ளச் செய்யும் அரும்பணியினை

ஆர்வத்துடனும் திறமையுடனும் நிறைவேற்றி வருவதனைக் காண்கின்றனர்; காண்பதனால் கிளர்ச்சிக்கு மதிப்பளிக்க முடியாது என்று கூறிவந்த போக்கு சுக்கல்நூறாகி விட்டது. மாணவர்களுமா! ஆசிரியர்களுமா! வழக்கறிஞர்களுமா! இதழ் நடாத்துவோருமா!! என்று கேட்டுக்கேட்டு அரசினர் அதிர்ச்சி அடைந்துவிட்டனர். இப்போது அரசினருக்கு ஆதரவாளர் எவர்? என்பதே புரியவில்லை. அவ்வளவு விரிவாகி விட்டது இந்தி எதிர்ப்புணர்ச்சி.

காங்கிரஸ் கட்சியிலேயே ஒரு பகுதியினர், இந்தி எதிர்ப்புணர்ச்சி கொண்டுள்ளது மட்டுமல்ல, அதனை வெளியே காட்டிக்கொள்வதிலே தயக்கம் காட்டவில்லை, ஆர்வத்துடன் பேசுகின்றனர்.

இந்நிலையில், காங்கிரஸ் அரசு கலக்கம் கொண்டு விட்டிருக்கிறது; எந்த நேரத்திலும்

தனது செல்வாக்கு சரிந்து போய்விடக்கூடும் என்ற அச்சம் பிடித்தாட்டுகிறது.

இத்தனைக்கும் காரணம் இந்தக் கழகம் அல்லவா! தேசியக் கட்சி, சுயராஜ்யத்துக்காகப் போராடிய புனிதக் கட்சி என்ற பாசத்துடன் ஆதரித்து வந்த மாணவர்கள், இன்று எதிர்ப்புச் செய்கிறார்களே! நாட்டின் பெரிய கட்சி, நிலையான ஆட்சியை நடாத்திடும் திறமை பெற்ற கட்சி என்பதற்காக நம்மை ஆதரித்து வந்தவர்கள் வழக்கறிஞர்கள் - அவர்கள் அல்லவா வரிந்து கட்டிக் கொண்டு கிளம்பிவிட்டிருக்கிறார்கள், இந்தியை எதிர்க்க!!

நிர்வாகத் திறமைக் குறைவு, ஊழல் ஊதாரித்தனம், ஆகாத சட்டங்கள், ஆர்ப்பரிப்பு அமுல்கள் என்பவைகளைக்கூடப் பொறுத்துக்கொண்டு, இன்றைய நிலையில், அமைதியான ஆட்சி நடத்திச் செல்லக்கூடிய

பக்குவம் பெற்றுள்ள கட்சி காங்கிரஸ் கட்சிதான், மற்றவை நாட்டைக் கெடுத்திடும் நச்சுக் கொள்கை கொண்டவை என்று கூறி ஆதரவு அளித்து வந்த இதழ்கள் இன்று இந்தி எதிர்ப்புக்கு ஆதரவு திரட்டிடும் பணியிலே மும்முரமாகி விட்டுள்ளனவே! இந்த முனைகளிலே கிடைத்துக்கொண்டு வந்த ஆதரவை இழந்துவிட்டோமே! இனி எதிர்காலம் எவ்விதமோ!! என்று எண்ணும்போது பதவிச் சுவையைப் பருகிப் பழகிவிட்ட காங்கிரஸ் கட்சிக்கு மனம் பதறுகிறது, பார்வையில் பொறி பறக்கிறது, பேச்சிலே தடுமாற்றம் ஏற்படுகிறது.

இத்தனைக்கும் காரணம்? கழகம்! கழகம் ஒழிக்கப்பட்டால், மற்ற முனைகளில் கிளம்பியுள்ள எதிர்ப்பு தன்னாலே முறிந்து விடும்; ஆகவே, பிடி! அடி! சுடு! என்ற ஆர்ப்பரிப்பு முறையில் அரசு, கழகத்தைத்

தாக்கும் செயலில் முனைந்து நிற்கிறது.

கழகம் கூறிடும் பேச்சை யார் மதிக்கிறார்கள்? எவர் பொருட்படுத்துகிறார்கள்? எவர் ஏற்றுக் கொள்கிறார்கள்? என்று பேசிய இறுமாப்பு இன்று இல்லை; எதை எதையோ பேசுகிறார்கள், மக்கள் நம்பித் தொலைக்கிறார்களே! எப்படி எப்படியோ பேசுகிறார்கள்; மக்கள் மனம் மாறிவிடுகிறார்களே!! என்ற அங்கலாய்ப்பு ஏற்பட்டுவிட்டது.

கழக ஏடுகளிலே வரும் சொற்கள், ஆட்சியாளர்களின் ஆணவக்கோட்டைமீது வீசப்படும் வெடிகுண்டுகள் என்றாகி விட்டன, இன்று. அன்று? சொற்களா? பொருளற்ற பிதற்றல் என்று பேசினர் ஆளவந்தார்கள். அன்று கழகம் எழுப்பிய முழக்கங்களைக் காட்டி, எந்தப் பிரிவின்படி

வழக்குத் தொடுக்கலாம் என்று துடித்தபடி உள்ளனர்.

இன்று காங்கிரஸ் அமைச்சர்களின் மேஜைமீது, காந்தியாரின் ஏடுகளும், பண்டித ஜவஹர்லாலின் சுய சரிதமும் இல்லை, பாதுகாப்புச் சட்டத்தின் பிரதிகள்!

பிடி 30லில்! தொடு 41லில்! போடு 54! ஆகட்டும் 147, 148 வீசுக! - இவ்விதம் உள்ளனர்.

கழகத்தின் ஒவ்வொரு அசைவும் அச்சம் தருகிறது ஆட்சியாளர்களுக்கு.

இவர் இவ்விதம் பேசியது எதற்காக? இவர்மீது என்ன விதமான வழக்குத் தொடரலாம்? என்ற இதே நினைப்புடன் உள்ளனர் இன்று - அன்று? கழகமா? தூ! தூ! அதை ஒரு பொருட்டாக மதிப்போமா! யார் இருக்கிறார்கள் கழகத்தில்? ஒரு பத்துப் பேர்! இவர்களை நாடு சீந்துமா!!

என்று பேசிக் கிடந்தார்கள். கழக ஏடுகளிலே வெளியிடப்படும் கேலிப் படங்கள், ஆட்சியாளர்களின் கண்களைக் குத்துகின்றன, மனத்தைக் குடைகின்றன; நெஞ்சை அச்சம் பிய்த்து எடுக்கிறது.

இருக்கவே இருக்கிறது பாதுகாப்புச் சட்டம் - அதனை வீசு! பிடித்துப் போடு உள்ளே!! என்கிறார்கள்.

கருணாநிதியை ஏன் சிறைபிடித்தீர்கள்?

அவர் வெளியே இருந்தால் அமைதியைக் கெடுத்து விடுவார்; அதனால்!!

இப்படி அஞ்சி அஞ்சிச் சாவார்பற்றிப் பாரதியார் அழகாகப் பாடுகிறார்:

அஞ்சி அஞ்சிச் சாவார் - இவர்
அஞ்சாத பொருளில்லை அவனியிலே!

என்றார். கழக ஏட்டிலே வரும் ஒவ்வொரு

எழுத்தும், கவிதையும், படமும் கண்டு அஞ்சி அஞ்சிச் சாகின்றார். யார்? எம்மை வீழ்த்தவல்லாரும் உளரோ! நாடே எமது பக்கம் திரண்டு நிற்கிறது! எமது வீரதீர பராக்கிரமம் எப்படிப்பட்டது! வெள்ளைக்கார ஏகாதிபத்தியத்தையே கிடுகிடுக்க வைத்தவர்கள் நாங்கள்! பிரிட்டிஷ் சிங்கத்தை அதனுடைய குகைக்குள்ளேயே நுழைந்து அதன் பிடரியைப் பிடித்தாட்டியவர்கள்! நாங்களா இந்தக் கழகப் "பொடியன்'களின் பேச்சுக்கும் எழுத்துக்கும் பயப்படுவோம்? சிற்றெறும்பைக் கண்டு சிங்கம் அஞ்சுமோ! எலிக் கூட்டம் கண்டு புலி கிலி கொள்ளுமோ!! என்றெல்லாம் பேசி வந்தவர்கள் இன்று என்ன ஆனார்கள்? கழகப் பேச்சுக்கும் எழுத்துக்கும் ஈடுகொடுக்க முடியாத நிலையினராகி, சட்டத்தைக் கட்டிப் பிடித்துக்கொண்டு, அதிலும் பாதுகாப்புச் சட்டத்தைக் கட்டிப்பிடித்துக்

கொண்டு காப்பாற்று! காப்பாற்று! என்று கதறி நிற்கின்றார்கள். அச்சம் விடுக! அலறலை நிறுத்துக! இதோ உமது பக்கம் யாம் நிற்கிறோம், - என்று அபயம் அளித்துக்கொண்டு, நிற்கிறது அடக்குமுறை! அதன் துணையுடன் துரைத்தனம் நடத்திக்கொண்டிருக்கிறார்கள்; எமது காங்கிரஸ் அரசு, அன்பு வழியை, அகிம்சை வழியை, காந்தியின் சாந்தி வழியைக் கடைப்பிடிக்கும் என்று கூறி வந்தவர்கள்.

உச்சிமீது வான் இடிந்து வீழுகின்ற போதிலும்
அச்சமில்லை! அச்சமில்லை!
அச்சமென்பதில்லையே!!

என்று கூறிவந்தவர்கள். . . பாடி வந்தவர்கள் - இன்று கழகத்தின் அச்சகங்களிலிருந்து வெளிவரும்

எழுத்துக்களைக் கண்டு, கிலிகொண்டு, பாதுகாப்புச் சட்டத்தின் துணையைத் தேடிக்கொண்டு ஓடுகிறார்கள்.

எங்கே போனார்கள், ஆட்சியாளர்களால் ஊட்டி வளர்க்கப்பட்ட, ஆற்றல் மிக்க எழுத்தாளர்கள்? இம்மென்றால் இருநூறு ஏசலைக் கக்கக்கூடிய பேச்சாளர்கள்! அவர்களிடம் இருந்த "சரக்கு' தீர்ந்துபோய்விட்டதா! மகாப் பிரபோ! அம்பறாத்தூணியில் கணைகள் இல்லை! வில்லும் ஒடிந்து விட்டது! இனி உமக்குத் துணை நிற்க இயலாது! ஆகவே மணிமுடியை மறைத்துக்கொண்டு மறைவான இடம் சென்று விடும்; சிக்கினால் சீரழிவு ஏற்படும்; சென்றுவிடும் பாதுகாப்பான இடம்! என்று களத்திலே நின்று படை நடாத்தியவன் கை பிசைந்துகொள்ளும் காவலனுக்குக் கூறிய கதை போலாகி விட்டதோ! இந்த

ஆட்சியாளர்களுக்கு அவர்களை ஆதரிக்கும் எழுத்தாளர்கள் அவ்விதம் கூறிவிட்டார்கள் போலிருக்கிறது.

கழகத்தாரின் பேச்சையும் எழுத்தையும் வலிவற்ற தாக்க, பொருளற்றதாக்க நாங்கள் எங்களால் ஆனமட்டும் பார்த்தோம்; உரத்த குரல் எடுத்தோம், உருப்போட்டவை களை ஒப்புவித்துப் பார்த்தோம், உருட்டி மிரட்டிப் பார்த்தோம், இழிமொழி பொழிந்து பார்த்தோம், பழிச்சொற்களை வீசிப் பார்த்தோம், இட்டுக்கட்டிப் பார்த்தோம், பொய்யும் புனை சுருட்டும் பொழிந்து பார்த்தோம், கலகப் பேச்சை மூட்டிப் பார்த்தோம். வன்முறையைத் தூண்டிடும் பேச்சையும் கொட்டிப் பார்த்தோம்; இத்தனையும் பயன்படவில்லை; இத்தனைக்கும் கிடைக்காத மதிப்பு, அந்தக் கழகத்தாரின் பேச்சுக்கும் எழுத்துக்கும்

கிடைத்து வருகிறது; எங்கள் பேச்சை மக்கள் ஏற்க மறுக்கிறார்கள். கழகப் பேச்சும் எழுத்தும் மக்களிடம் எழுச்சியை, விழிப்பை, வீரத்தை, தியாக உணர்வை ஊட்டிவிட்டிருக்கிறது, மேலும் ஊட்டியபடி இருக்கிறது; ஆகவே, இனி எமது பேச்சையும் எழுத்தையும் நம்பிவிடுவது கூடாது; அவை உம்மைப் பாராட்ட, வாழ்த்துக்கூற, வரவேற்பளிக்க மட்டும் வைத்துக்கொள்ளலாம் இப்போது உடனடியாக எந்தச் சட்டத்தைக் கொண்டாகிலும் கழகப் பேச்சும் எழுத்தும் தடுக்கப்பட வழி செய்யுங்கள்! உடனே! அவசரம்! அவசரம்!

என்று ஆளவந்தார்களின் அன்புக்குத் தம்மைப் பாத்திரமாக்கிக் கொண்ட சண்டமாருதப் பேச்சாளர்களும் வழுக்கி விழும் அளவுக்கு ஆத்திரப் போதையினை ஏற்றிக் கொண்டுவிட்டுள்ள எழுத்தாளர்களும், முறையிட்டுக்கொண்டார்கள் போலும்!

இல்லையென்றால், கழக எழுத்துக்கு மறுப்பளித்து மக்களைத் தமது பக்கம் அழைத்துச்செல்ல காங்கிரஸ் கட்சி ஏன் தமது ஆதரவாளர்களான எழுத்தாளர்களைப் பயன்படுத்தாமல், பாதுகாப்புச் சட்டத்தைத் தூக்கி வீசுகிறது!

மற்றெல்லாப் படைக்கலன்களும் தீர்ந்துபோய்விட்டன என்பதையன்றோ இந்தப் போக்கு காட்டுகிறது?

நிலபுலம் விற்றுச் செலவாகியான பிறகு, தட்டு முட்டுச் சாமான்களை விற்றாகிலும் வயிறு கழுவிக்கொள்ள முனைவது போன்ற நிலைக்கல்லவா காங்கிரஸ் கட்சி வந்து விட்டிருக்கிறது.

சாதாரணச் சட்டம் போதவில்லையே காங்கிரஸ் அரசுக்கு! பாதுகாப்புச் சட்டமே அல்லவா தேவைப்படுகிறது, நிலைமையைச்

சமாளிக்க!! நெறித்த புருவமே போதும் எதிரிகளை முறியடிக்க என்று முடுக்குடன் பேசித் திரிந்தவன், பிறகு அடி ஆட்களைத் தேடி அலைந்த கதை போலாகிவிட்டதே.

முரசொலியில் வெளிவந்த கட்டுரை, படம், இவைகளைக் கண்டு மக்கள் கொண்டிடும் எண்ணத்தைப் போக்கிடவும் மாற்றிடவும், வக்கு வழியற்றுப் போன நிலைக்குக் காங்கிரஸ் பிரச்சார யந்திரம் வந்துவிட்டதைத்தானே காட்டுகிறது கருணாநிதி, மாறன் ஆகியோர்மீது பாதுகாப்புச் சட்டத்தை வீசியிருக்கும் செயல்.

எண்ணிப் பார்த்தாரா, எழுபதாம் ஆண்டுக்கு நடைபோடும் பருவத்தினரான பக்தவத்சலனார்; கருணாநிதியைச் சிறை வைத்திருப்பது பற்றி மக்கள் என்ன பேசிக்கொள்வார்கள் என்பது பற்றி!

என்ன குற்றம் செய்தான் அந்தப் பிள்ளை? குற்றமா! இவர்களின் குணத்தை அம்பலப்படுத்தினான். எழுதினான்.

எழுதினால் என்ன? ஆட்சியாளர் குடியா முழுகிவிடும்.

ஆட்சியாளர்களுக்கு அவ்வளவு வெறுப்பு, பயம், கோபம். . .

கருணாநிதி எழுதினால் என்ன? அதை மறுத்து இவர்கள் எழுதுவதுதானே! மக்கள் இருசாராரின் எழுத்தையும் பார்த்து எது நியாயமோ அதனைக் கொள்ளட்டுமே.

எழுதியும் பார்த்தார்கள், காங்கிரசிலே உள்ள எழுத்தாளர்கள். . .

மக்கள் சீந்தவில்லை போலிருக்கிறது!!

இப்படியும் இதுபோல வேறுபலவும் பேசிக்கொள்வார்களே! இது ஆட்சியில்

உள்ளவர்களின் புகழினையா வளர்த்துவிடும்!! ஆத்திரம் கண்ணை மறைக்கும் என்பார்கள். அதன் விளைவோ இந்த அடக்குமுறை!!

இவைபற்றி எண்ணிடும்போது, சிறையில் தம்பி அடைக்கப்பட்டிருப்பது குறித்து இயற்கையாக எழும் சோகம்கூட மறைகிறது; கருணாநிதியின் பேச்சுக்கும் எழுத்துக்கும் ஆட்சியாளர் எத்துணை அஞ்சுகிறார்கள் என்ற நினைப்பு எழுகிறது; ஒரு வெற்றிப் புன்னகை தன்னாலே மலருகிறது.

கழகத்தின் வளர்ச்சி கண்டு காங்கிரஸ் அரசு கதிகலங்கிப் போயுள்ளதை எடுத்துக்காட்டி, கழகத் தோழர்களுக்கு மேலும் எழுச்சியைத் தரவல்ல நிகழ்ச்சி, கருணாநிதியைச் சிறைப்படுத்தி இருப்பது என்பது புரியும்போது மகிழ்ச்சிகொள்ளக்கூட முடிகிறது,

கழக வளர்ச்சியை அரசினர் கண்டு கலங்கிடும் வண்ணம் பேச்சாலும் எழுத்தாலும் பணியாற்றியதற்காக கழகம் என்ன விதத்தில் நன்றியைத் தனது கருணாநிதிக்குத் தெரிவித்துக் கொள்வது?

ஒன்று இருக்கிறது. கற்கோட்டையில் அடைக்கப்பட்டுள்ள கருணாநிதிக்குக் கழகத் தோழர்கள் காட்டக்கூடிய நன்றியறிவிப்பு! தருமபுரித் தேர்தலில் கழகம் வெற்றி பெறவேண்டும் அந்தச் செய்தி செந்தேனாகி எத்தனை கொடுமை நிறைந்த தனிமைச் சிறையினையும் மாங்குயில் கூவிடும் பூஞ்சோலையாக்கிடும். அந்த வெற்றிச் செய்தி, காடு மலை வனம் வனாந்திரங்களைக் கடந்து, காவல்கட்டு யாவற்றினையும் மீறி கருணாநிதியின் செவி சென்று மகிழ்ச்சி அளித்திடும். அப்போது முதியவர் முதலமைச்சர் பக்தவத்சலனார் யோசிப்பார்,

இதுவும் பயன்தரவில்லையே என்பதாக.

இந்த நோக்கத்துடன் கழகத் தோழர்களும் ஆதரவாளர் களும், தருமபுரி இடைத்தேர்தலில் கழகம் வெற்றி பெற உடனடியாக முனைந்திட வேண்டும்.

கவலையுடன் தம்பி என்னைத் தருமபுரி பற்றிக் கேட்டபோது, நான் மிகுந்த நம்பிக்கையுடன் கூறிவிட்டு வந்திருக்கிறேன், தருமபுரியில் கழகம் நிச்சயம் வெற்றிபெறும் என்று.

அந்த வெற்றியைப் பெற்றுத் தருவதைவிட, அடக்கு முறையால் தாக்கப்பட்டு நம்மிடமிருந்து பிரிக்கப்பட்டுத் தனிமைச் சிறையில், பாஞ்சாலங்குறிச்சிச் சீமையில், அடைக்கப் பட்டிருக்கும் கருணாநிதிக்குக் கழகம் தரக்கூடிய மகிழ்ச்சிப் பொருள் வெறெதுவும் இருக்க முடியாது.

அடக்குமுறையை வீசி அறப்போர் வீரர்களை அடக்கி விடவோ, அவர்தம் பாசறையை ஒழித்துவிடவோ முடியாது. இது மிக எளிதாக எவருக்கும் புரிந்திடும் உண்மை என்றாலும், அரசாள்வோர், அதிலும் தமது பிடி தளர்ந்து வருவதை உணர்ந்து பீதிகொண்டுள்ள நிலையிலுள்ள அரசாள்வோர், உண்மையினை மறந்துவிடுகின்றனர்.

சிறைக்கோட்டம் தள்ளப்படும் இலட்சியவாதிகளோ, உறுதி பன்மடங்கு கொண்டவர்களாவது மட்டுமல்ல, தன்னைப் பற்றிய எண்ணம், தனது நலனைப் பற்றிய நினைப்பு, தனது குடும்பம்பற்றிய எண்ணம், இவைகளைக்கூட மறந்துவிடவும், தான் தனக்காக அல்ல, மற்றவர்களுக்காகவே என்ற நெறியினை உணர்ந்து மகிழ்ந்திடவும், தன்னைப்பற்றிய எண்ணம் எழுப்பி

விடும் ஆசை, அச்சம், கவலை, கலக்கம், பிரிவாற்றாமை போன்ற உணர்ச்சிகளை வென்றிடவுமான ஒரு துறவு நிலையைப் பெற்றளிக்கிறது, இதுபற்றியே ஆன்றோர், சிறைச்சாலையை அறச்சாலை என்றனர்.

பாளையங்கோட்டைச் சிறைவாயிலில், கண்டேன், இந்தப் பேருண்மையை உணர்த்தும் எழுத்தாரத்தை. அங்குப் பொறிக்கப்பட்டிருப்பது என்ன? ”தன்னை வெல்வான் தரணியை வெல்வான்!''

அன்புள்ள

அண்ணாதுரை

4-4-1965

2. விந்தை மாந்தர்கள்

பக்தவத்சலனார் சுளையை விட்டுத் தோலைச் சுவைப்பவர்

காத்திருப்போம்; காலம் தெளிவளிக்கும்

தம்பி!

ஊருக்குப் பெரியவர், அவரைக் காணும்போது வெறுங் கையுடன் போகக்கூடாது என்று எண்ணி, எலுமிச்சம் பழம் கொடுத்து வணக்கம் கூறுகிறாய் என்று வைத்துக்கொள் - என்ன செய்வார் அந்தப் பெரியவர் என்று எதிர்பார்க்கிறாய்? பதில் வணக்கம் கூறிவிட்டு, எதற்கப்பா இவ்வளவு மரியாதை, நீ என்ன எனக்குப் பழக்கமில்லாதவனா, நம்ம வீட்டுப்பிள்ளை போன்றவன் நீ - என்று பேசுவார் என்றுதானே! யாருமே அப்படித்தான் எதிர்பார்ப்பார்கள்.

ஆனால். . .!

•

சிரித்துச் சிரித்துப் பேசிடும் இயல்பு! எவரிடமும் விளையாடி மகிழும் சிறுவன்! அவனிடம் அன்பு காட்டி, உன்னால் இயன்றது ஒரு வாழைப்பழம், கொடுக்கிறாய், என்ன செய்வான் என்று எண்ணுகிறாய்? சிறுவன் துள்ளிக் குதிப்பான்! எங்க மாமா! தங்க மாமா! எனக்கு வாழைப்பழம் கொண்டுவந்து கொடுத்தது! என்று மகிழ்ச்சியுடன் கூறியபடி தன் தாயிடம் பழத்தைக் காட்டி, பிறகு அதைத் தின்பான் என்று. ஆனால். . .!

•

நீ மட்டும் சாக்கடை நாற்றத்தைப் போக்கிவிட்டு, இந்த இடத்தைப் பூக்கடையாக்கிக் காட்டு, நான் உனக்கு அடிமை யாகிவிடுகிறேன் என்று ஒருவரிடம்

கூறுகிறாய் என்று வைத்துக் கொள். அவர் என்ன செய்ய வேண்டும்? முடிந்தால் நீ சொன்னதைச் செய்து காட்டிவிட்டுப் பிறகு உன்னிடம் வரவேண்டும். பார்! நீ சொன்னபடி செய்துவிட்டேன், இப்போது என்ன சொல்கிறாய் என்று கேட்க வேண்டும். ஆனால். . .!

ஊமைப் பெண்ணைப் பேசவைத்துவிடு. ஒன்பதே நாளில் நான் அவளைத் தேசிகர் மெச்சிடும் பாடகியாக்கிக் காட்டுகிறேன் என்று ஒருவரிடம் சொன்னால், அவர் என்ன பொருள் கொள்ள வேண்டும் என்று எதிர்பார்ப்பாய்? ஊமைப் பெண்ணைப் பேசவைக்க நம்மாலே முடியவா போகிறது; எதற்காக நாம் ஒரு வம்பான பந்தயத்திலே போய் மாட்டிக்கொள்வது என்று எண்ணி வாய் மூடிக்கொள்வார் என்றுதானே! ஆனால். . .!

•

கொடுத்த கடனை மட்டும் கோபாலன் திருப்பிக் கொடுத்து விடட்டும், பார்! நான் என் ஒரு பக்கத்து மீசையை எடுத்து விடுகிறேன்!! - என்று ஒருவரிடம் "சவால்' பேசுகிறாய் என்று வைத்துக்கொள் - அவர் என்ன செய்ய வேண்டும்? கோபாலனை நச்சரித்தாகிலும் பணத்தைப் பெற்றுக்கொண்டு, பிறகு வந்து பார்த்து,"கடனைத் திரும்பப் பெறவே முடியாது என்று சொன்னாயே! இதோ பார்!'' என்று பணத்தைக் காட்டிவிட்டு, என்ன ஆவது உன்னுடைய "சவால்' என்று கேட்க வேண்டும். ஆனால். . .! குத்துச்சண்டைக் குமரப்பனைக் குப்புற வீழ்த்திக்காட்டு, உனக்கு எட்டுப் பவுனில் தங்கத்தோடா செய்து போடுகிறேன் என்று கூறினால், அந்த நண்பன் என்ன செய்ய வேண்டும்? குமரப்பனிடம் பேரம் பேசிக் கொண்டாகிலும் அவனை வீழ்த்துவதுபோல பாவனையாகவாகிலும் செய்து காட்டிவிட்டு,

எங்கே எட்டுப் பவுனில் தோடா என்று கேட்க வேண்டும். ஆனால். . .!

□

ஆனால், முதலமைச்சர் பக்தவத்சலனார் இருக்கிறாரே, அவர் நீ எதிர்பார்க்கிறபடி நடந்துகொள்ளமாட்டார் போலிருக்கிறது.

எலுமிச்சம் பழத்தை மரியாதைக்காக நீ கொடுத்ததும் அந்தப் பெரியவர், உருட்டு விழி காட்டி மிரட்டும் குரல் எழுப்பி, "ஏடா! என்னைக் கேலியா செய்கிறாய்! என்ன துணிவு உனக்கு, எனக்கு எலுமிச்சம் பழம்தர! என்ன உன் நினைப்பு! யார் என்று என்னை எண்ணிவிட்டாய்! எனக்குத் தலை கிறுகிறுப்பு, பித்தம், பைத்தியம் என்று காட்டத்தானே, எலுமிச்சம் பழம் கொடுக்கிறாய்? இதைத் தலையில் தேய்த்துக்கொண்டு நீராடினால் பித்தம் குறையும், புத்தி தடுமாற்றம்

போய்விடும் என்று குத்திக் காட்டும் செயலல்லவா இது. எலுமிச்சம் பழம் எனக்கு! ஏடா பயலே! என்ன திமிர் உனக்கு!!'' - என்று பேசினால் என்ன நிலை ஆவாய்? திணறிப் போவாய்! முதலமைச்சர் பக்தவத்சலம் தமது போக்காலும் பேச்சாலும் நம்மைத் திணற அடிக்கிறார் என்று தோன்றுகிறது. மரியாதைக்குத் தந்த எலுமிச்சம் பழத்தை, கேலிக்குத் தந்தது என்று தப்பர்த்தம் செய்துசொண்டு"தகதக' வென்று ஆடிடும் பெரியவர்போல, நான் சொல்வதைத் தப்பர்த்தம் செய்துகொண்டு, பதை பதைக்கிறார், படபடக்கிறார், பலப் பல பேசுகிறார்.

சிறுவனிடம் பழம் கொடுத்ததும், இது என்ன சிறு மலையா, பூவனா, நேந்திரமா என்று கேட்டால், பரவாயில்லையே சிறுவன் கெட்டிக்காரன் என்று எண்ணிக்கொள்வாய்.

அந்தச் சிறுவனோ, பழத்தை ஆவலுடன் வாங்கி உரித்து, சுளையை ஜன்னல் வழியாக வீசி எறிந்துவட்டு, தோலைத் தூக்கிக்கொண்டு ஓடோடிச் சென்று "அம்மா! அம்மா! பார்! பார்! மாமா கொடுத்தது, பாரம்மா!'' என்று கூவுகிறான். வாழைப்பழத்தில் சுளை சுவைத்திட, தோல் மாட்டுத் தொழுவத்துக்கு என்ற விவரமும் புரியவில்லை சிறுவனுக்கு. சிறுவனுக்கேகூட இது புரியவில்லை என்றால், நமக்கு என்னவோபோல இருக்கும். சுளை முக்கியமா தோல் முக்கியமா என்பதுகூடத் தெரியாதா; வயது எட்டு இருக்கும்போலிருக்கிறதே என்று எண்ணிக்கொள்வோம்; ஏக்கம் கொள்வோம்.

பெரியவர்கள், பெரிய இடத்தில் உள்ளவர்கள் எத்தனை பெரிய செயலையும் எளிதாகச் செய்திடும் வாய்ப்புப் பெற்றவர்கள், சுளையை எறிந்துவிட்டு, தோலைத் தூக்கி

வைத்துக்கொண்டு விளையாடினால் நான் என்ன சொல்ல முடியும்! பரிதாபப்படலாம்!!

முதலமைச்சர் பக்தவத்சலனார் சுளையை விட்டுவிட்டுத் தோலை ஆவலுடன் எடுத்துக்கொள்ளும் விவரமறியாத விளையாட்டுப் பிள்ளையல்ல; வயதில் பெரியவர்; சொல் அதன் பொருள், பொருள் அதன் பொருத்தம், இடம் காலம் என்ற இவைகளை அறிந்திடும் பக்குவம் பெற்றவர்; என்றாலும், என் பேச்சிலே அவருக்குத் தோல்தான் பிடிக்கிறது. சுளையைச் சுவைத்திட மனம் இல்லை என்றால் நான் என்ன செய்யலாம்! இவ்வளவு பெரியவரும் இப்படித்தானா என்று எண்ணி ஏங்க வேண்டும்! வேறென்ன செய்ய முடியும்! அவருடைய இயல்பையா மாற்ற முடியும்? நானா? ஏ! அப்பா! நம்மாலே முடிகிற காரியமா! நாடே முயன்று பார்த்து,

முடியவில்லையே என்று முணுமுணுக்கிறதே! நான் எம்மாத்திரம்!!

சாக்கடையை அகற்றிவிட்டு அந்த இடத்தைப் பூக்கடை யாக்கிக் காட்டு, நான் உனக்கு அடிமையாகிறேன் என்று சொன்ன சொல்லைக் கேட்டு, சாக்கடையைச் சுத்தப்படுத்த முனையாமல், தெருத் தெருவாகச் சுற்றி, தெரியுமா! தெரியுமா! எனக்கு அவன் அடிமையாகிவிட ஒத்துக்கொண்டான்! என்று அந்த ஆசாமி பேசினால், ஊர் என்ன சொல்லும்? நேற்றுவரை நன்றாகத்தானே இருந்தான்; இன்று என்ன ஏதோ பேசுகிறானே என்று கூறும்.

ஆனால், நாடாளும் நல்ல நிலையில் உள்ள முதலமைச்சர் பக்தவத்சலம், சாக்கடையைப் போக்கிப் பூக்கடை வைத்திடு என்ற நிபந்தனையைக் கூறாமல்,

அடிமையாகிவிடுவதாகச் சொன்னான் என்ற அபத்தத்தைச் சுமந்து திரிவதுபோல, என் பேச்சிலே இணைந்துள்ள நிபந்தனைகளைக் கூறாமல், என் சவாலின் இறுதிப் பகுதியை மட்டும் எடுத்து வைத்துக்கொண்டு பேசுகிறார். நான் என்ன சொல்லி அவருக்கு விஷயத்தை விளங்க வைப்பேன்! அறியாதவர்களுக்குச் சொல்லலாம்; அறிந்துகொள்ள மறுப்பவர்களுக்கு எப்படிச் சொல்வது! எதைச் சொல்வது! இப்படித்தானா இவர் என்று எண்ணிக்கொண்டு வேறு பயனுள்ள காரியத்தைக் கவனிக்கச் செல்லவேண்டியதுதான்! ஓணானின் முதுகுக் கூனை நிமிர்த்திட மருத்துவமனையா அமைக்க முடியும்!!

இதோ தண்டபாணி தேசிகர்! இவர் மெச்சிடும் விதமான பாடகியாக்கிடுவதாகச் சொன்னாயே! எங்கே அந்தப் பெண்! பாடச்

சொல்லு!! - என்று கேட்டுக்கொண்டு, ஊமைப் பெண்ணை நீ பேச வைத்தால், நான் பாட வைக்கிறேன் என்று சொன்னதில் முதல் நிபந்தனையை நிறைவேற்றாமல், இறுதி நிபந்தனையைத் தூக்கிக் காட்டினால், என்ன பொருள்! ஊமைப் பெண் பேசட்டும், பேசச் செய் - பிறகு பாடுவாள் - பாட வைக்கிறேன் என்றுதானே பதில் தரவேண்டும். அவ்விதமான பதிலை நான் தரவேண்டிய நிலைமையை உண்டாக்குகிறார், என் பேச்சிலே உள்ள இணைப்பைக் கழற்றி விட்டுக் கையில் கிடைத்ததை மட்டும் எடுத்து வைத்துக்கொண்டு பேசும் "கனம்' பக்தவத்சலம் அவர்கள்!

ஒருவருக்கொருவர் நடத்திக்கொள்ளும் வாக்குவாதத்தில், முழுவதையும் - தொடர்பாக உள்ளது அவ்வளவையும் எடுத்துப் பார்த்து, பொருளும் பொருத்தமும்

காணவேண்டுமேயன்றி, ஒரு துண்டு மட்டும் தூக்கி வைத்துக்கொண்டு இதற்கென்ன பொருள் என்றா கேட்பது?

இராமன் சீதையைக் கரம் பற்றினான்.
அனுமாரின் வா-ல் தீ பற்றிக்கொண்டது.
தசரதன் கீழே வீழ்ந்து மடிந்தான்.
மான் மாயமாக மறைந்தது.
சூர்ப்பனகையின் மூக்கை அறுத்தனர்.
ஆ! பிராணநாதா! என்று சீதாதேவி அலறினாள்.
சேடிகள் சிரித்து மகிழ்ந்தனர்.
வில்லை எடுத்தான்; விரிந்தது; ஒடிந்தது.

இவை எல்லாம் உள்ளன இராமாயணத்தில்; ஆனால், ஒவ்வொன்று ஒவ்வோரிடத்தில், ஒவ்வொன்றுக்கு ஒவ்வொரு பொருத்தம், இணைப்பு; இவ்விதமாக உள்ள எண்ணற்ற நிகழ்ச்சிகள் பொருத்தமுடன் இணைக்கப்பட்டுள்ள

மொத்த வடிவத்தைக் கொண்டுதான் இராமாயணத்தின் பொருளைத் தெரிந்துகொள்ளலாமேயன்றி, இராமாயணத்தில் வெவ்வேறு இடத்தில் உள்ளவைகளில் சிற்சில துண்டுகளைக் கல்லி எடுத்து வைத்துக்கொண்டு, "பார்த்தனையா இராமாயணம்' என்றா பேசுவார்கள்? அதுபோல இந்தப் பெரியவர் என் பேச்சிலே தொடர்புதனை இவராக அறுத்துவிட்டு, துண்டு துணுக்குகளைத் தூக்கி வைத்துக்கொண்டு, இதுதான் அண்ணாதுரை சொன்னது! இதுதான் அவருடைய கருத்து! என்றா பேசுவது? இவ்வளவு பெரிய இடத்தில் இருந்துகொண்டா! வெட்கமாக இருக்கிறது நம்மவர் இப்படிப் பேசுகிறாரே என்று இவருக்கு மெத்த வேண்டியவர்களே என்னிடம் கூறும்போது.

என்னைக் கண்டிக்க, கேலி பேச,

அவருக்கு உரிமையும் இருக்கிறது; வசதி நிரம்ப, வாய்ப்பும் அதிகம். நிலையை எடுத்துக் கொண்டாலும், அவர் எதுவும் பேசலாம். ஆனால், அதற்காக இவ்வளவு வழுக்கிவிடுவதா! இந்தி ஆட்சிமொழி இல்லை என்று சர்க்கார் அறிவித்துவிட்டு, அது இணைப்பு மொழியாக இருக்க வேண்டும் என்ற திட்டமும் கூறாமல், அதனைக் கட்டாயம் படித்தாக வேண்டும் என்றும் சட்டம் போடாமல், இந்தி பரப்புவதற்காகச் சர்க்கார் பணமும் செலவழிக்காமல் இருந்தால் இந்தி பரவிட உமது உதவி கிடைக்குமா என்ற கருத்துப்பட - லால்பகதூர் அல்ல - நந்தா அல்ல - பாராளுமன்றத்தில் அல்ல - பத்திரிகை நிருபர் ஒருவர் - நிருபர்கள் மாநாட்டில் கேட்டிருக்கிறார். அவருடைய கேள்வி, சவால் விடுகிற முறையில் இருந்தது. நானே பதில் கூறும்போது, நான் அந்தச்

சவாலை ஏற்றுக்கொள்கிறேன் என்ற முன்னுரையுடன் பேசி இருக்கிறேன் - இதனை நான் விளக்குவதற்கு முன்பே "இந்து' பத்திரிகை விளக்கமாக்கி இருக்கிறது - இவ்வளவுக்கும் பிறகு முதலமைச்சர் என்மீது தமது கேலிப் பேச்சை வீசுவது முறை அல்ல! அதனால் எனக்கு எந்த இழுக்கும் வந்துவிடாது. இவரைப்பற்றி, பலர் பலவிதமாகப் பேசிக்கொள்வார்கள்; பேசிக்கொள்கிறார்கள்.

யாராவது ஒருவர் என்னிடம் வந்து, "அண்ணாதுரை! வா! வா! இந்தி பரப்பிட வா!' என்று அழைத்தால் என்ன சொல்வேன் என்று எதிர்பார்க்கிறார் முதலமைச்சர்,"இதோ வந்துவிட்டேன்' என்று, வந்து கேட்பவர் விவரம் புரியாதவராக இருந்தால், விளக்கம் கொடுத்து அனுப்புவேன்; விஷமத்தனமாகக் கேட்பவராக இருப்பின், "மதியிலி! என்னைப்போய்

அழைக்கிறாயே இந்தியைப் பரப்ப உதவும்படி! நான் சொன்னது என்ன? அதைச் செய்து முடித்தாயா? ஓடு! சாஸ்திரியிடம்! இந்தி இந்தியாவின் ஆட்சிமொழி அல்ல என்ற உத்திரவு போடச் சொல்லு, ஒரு கோடிக்கு மேல் இந்திக்காகச் செலவிடப் பணம் ஒதுக்கியிருக்கிறார்களே, அந்தப் பணத்தை வேறு ஏதாவது உருப்படியான காரியத்துக்குச் செலவிடச் சொல்லு. அதை எல்லாம் செய்துவிட்டல்லவா என்னிடம் வரவேண்டும். அதைச் செய்ய வக்கு வல்லமை இல்லாமல் என்னிடம் வந்து பேசுகிறாயே! போ! போ!'' என்று கூறுவேன்.

ஆனால், முதலமைச்சர் தவறாகப் புரிந்துகொண்டு பேசும்போது குடிமகன் இத்தனை கண்டிப்பாகப் பேச முடியுமா! அதனால்தான் என் மனக்கண்முன், எலுமிச்சம் பழம் கண்டு எரிச்சல் கொண்ட பெரிய

மனிதர், சுளையைக் கீழே போட்டு விட்டுத் தோலைத் தூக்கிவைத்துக்கொண்டு ஆடிடும் சிறுவன், ஊமைப் பெண்ணைப் பேச வைக்க ஒத்துக்கொண்டு அதைச் செய்து முடிக்காமல், இந்தப் பெண்ணைப் பாடச் செய் என்று கேட்ட அப்பாவி ஆகியோர் தெரிந்தனர்.

நானாகவா இட்டுக்கட்டிச் சொல்கிறேன், பத்திரிகையில் வந்ததைச் சொல்கிறேன் என்று வாதாடிக் காட்ட நினைப்பார்கள்.

பத்திரிகை நிருபர்கள் மாநாட்டிலே கூறப்படுபவைகளை இன்னின்ன விதமாக நீங்கள் சொன்னீர்கள். இன்ன விதமாக நாங்கள் வெளியிடுவதாக இருக்கிறோம். நீங்கள் இப்படித்தானே சொன்னீர்கள் என்று நம்மிடம் காட்டி, ஒப்பம் பெற்றுக் கொண்டு, இதழ்களில் வெளியிடும் வழக்கம் இல்லை, குறித்துக் கொண்டு போகிறார்கள். வெளியிடுகிறார்கள்;

வெளியிடுவதற்கு மறுப்பு நாம் அளித்தால்கூட பல வேளைகளிலே மறுப்பை வெளியிடுவதுமில்லை; வெளியிடும்போதுகூட, பளிச்சிட்டுக் காட்டுவதில்லை. இது இன்று உள்ள முறை.

இந்த நிலையில், எனக்கு அல்ல, முதலமைச்சர் போன்ற பெரிய நிலையினருக்கே, அவர்கள் எதிர்பார்க்காத முறையில் செய்திகள் வெளியிடப்பட்டுவிடுவதுண்டு.

மாணவர்களுக்குக் கழகத் தலைவர்கள் புகாரி ஓட்டலில் பிரியாணி வாங்கிக் கொடுத்து மயக்கிவிட்டார்கள் என்று முதலமைச்சர் சொன்னதாகப் பத்திரிகைகளிலே வெளிவந்தது; படித்தோம், பதறினோம்.

முதலமைச்சர் இதற்கு ஒரு மறுப்பும்

வெளியிடவில்லை, பல நாட்கள் உருண்டோடியும்!

தொலைபேசி மூலம் தெரிவித்திருந்தால்கூடப் பத்திரிகைகள் மறுப்பை வெளியிட்டிருக்கும். செய்தாரில்லை. செய்ய வேண்டும் என்று தோன்றவுமில்லை.

ஒரு திங்கள் அளவு சென்ற பிறகு, நான் அப்படிச் சொல்லவே இல்லை; பத்திரிகையில் வந்தது வெறும் புரளி என்று முதலமைச்சர் கூறினார். அதனைப் பத்திரிகைகள் வெளியிட்டன; வேறென்ன செய்ய முடியும்?

ஒரு திங்கள் அளவு வாய் மூடிக்கொண்டிருந்துவிட்டு இப்போது "என் வாயில் பிரியாணி என்ற வார்த்தையே வராது' என்று முதலமைச்சர் சொல்கிறார், என்ன செய்தோம்? சரி! ஒரு விளக்கம், மறுப்பு, சமாதானம் - என்ற முறையில்

அதனைக் கருதிக்கொண்டோம்."இல்லை! இல்லை! பிரியாணி என்று சொன்னார், இன்னின்ன பத்திரிகைகளைப் பார்த்தால் புரியும்' என்று கூக்குரல் எழுப்பினார்களா! இல்லையே!! பெரியவர் கூறிவிட்டார், சரி என்று இருந்துவிட்டோம்.

இவர் போன்றார் பத்திரிகைகளில் வெளியிடப்படுவதை இல்லை என்று மறுக்கலாம், புது விளக்கம் தரலாம், பத்திரிகையில் ஆயிரத்தெட்டு வரும், நானா பொறுப்பு என்று தர்பார் பேசலாம். நாடு தாங்கிக்கொள்ள வேண்டும். ஆனால் நான் பேசியிருப்பதற்கு - இன்ன பொருள் - இதற்குத் தப்பான பொருள் கொள்ளாதீர்கள் பொருத்தமற்று; தொடர்பற்றுப் பேசாதீர்கள் என்று நான் விளக்கம் அளித்தால், அதனைக் கவனிக்கக்கூட மாட்டார்களாம் இவர்கள்! ஏன்? இவர்கள் பெரிய இடம், நான் சாதாரணம்!

நியாயம் பொது! நேர்மை எத்தனை உயரம் சென்றாலும் இருக்க வேண்டும். இருக்கிறதா என்பதற்கு எனக்கல்ல, அவரவர்கள் தமது நெஞ்சுக்குப் பதில் கூறிக்கொள்ள வேண்டும்.

மாணவர்களைச் சந்திக்க முதலமைச்சர் மறுக்கிறார் என்று இதழ்கள் வெளியிட்டன. இவர் அதனை அப்போது மறுக்கவு மில்லை. இப்போது, நான் அவ்விதம் சொல்லவில்லையே என்றார், நாடு கேட்டுக்கொண்டது. அன்று வெளிவந்த இதழ்களைத் தூக்கிக்கொண்டு போய் இவர் எதிரில் போட்டு, "இதற்கென்ன சொல்கிறீர்? இதற்கு என்ன பொருள்?' என்றா கேட்பது?

நான் அப்படிக்கூட அல்ல. என் பேச்சின் மொத்தத்தை, ஏன் அதுபோல் பேசினேன் என்பதற்கான காரணத்தை, என் நோக்கத்தைப் புரிந்துகொண்டு பேசுங்கள் என்று சொல்கிறேன்; அந்த அளவு

கண்ணியம்கூடவா காட்டக்கூடாது?

ராஜ்யசபைப் பேச்சு, பத்திரிகை நிருபர்களிடம் பேசியது என்ற இரண்டையும் ஒன்றாகப் போட்டுக் குழப்பிக்கொண்டு, குழம்பிப்போய், குழப்பமாக இருக்கிறதே என்று பேசுகிறார் முதலமைச்சர். அவராகக் குழப்பத்தைத் தேடிக்கொண்டால் யார் என்ன செய்ய முடியும்? காலம் தெளிவளிக்கட்டும் என்று காத்திருக்க வேண்டியதுதான்.

இதுபற்றி நான் எண்ணிக்கொண்டிருந்தபோது என் மனக்கண்முன் விந்தை மாந்தர்கள் தெரிந்தனர், உனக்கும் தெரிவித்தேன்.

அன்புள்ள

அண்ணாதுரை

11-4-1965

3. வெந்த புண்ணில் வேல்

தருமபுரியில் தோற்கடிக்கப்பட்டோம் தோல்வி நமக்கொரு பாடம்; வெற்றிக்கு வழி அமைக்கும்.

மெய்யும் பொய்யும் குயிலும் காகமும் போல! கழகத்தவர் இருட்டில் ஒளி எழ விளக்கு ஏற்றியவர்கள்.

தம்பி!

கட்டவிழ்த்துக்கொண்டு ஓடிய காளை, பயிரைப் பாழாக்கி, குழந்தைகளைக் குத்திக் குற்றுயிராக்கி அட்டகாசம் செய்வது கண்டு, அதனை மடக்கி அடக்கி, மற்றவர்க்கு ஏற்படக் கூடிய ஆபத்தைத் தடுத்திட வேண்டும் என்று முயன்றவனை, அந்தக் காளை தாக்கிவிட்டு தப்பித்துக்கொண்டு கனைத்துக் கொண்டு, புழுதியைக் கிளப்பிக்கொண்டு, வாலைத்

தூக்கியபடி ஓடுவதைக் கண்டதுண்டா? காளைக்குப் பேசத் தெரியாது; தர்மபுரியில் வெற்றி கிடைக்கப் பெற்ற எக்களிப்புக் கொண்ட காங்கிரஸ் தலைவர்களுக்கு, வாய் இருக்கிறது; ஆகவே வார்த்தைகள் குபுகுபுவெனக் கிளம்புகின்றன; பொழிந்து தள்ளுகிறார்கள்! கேட்டுக்கொள்கிறேன் காது இருப்பதால்; பொறுத்துக்கொள்கிறேன், அவர்களின் போக்குப் புரிவதால்; கூறிவைக்கிறேன், உன் கடமையை உனக்கு நினைவுபடுத்த வேண்டும் என்பதால்.

புள்ளிமானை அடித்துத் தின்றிடும் புலி உறுமுவதும், ஆட்டுக்குட்டியைப் பிடித்துக் கொன்றிடும் ஓநாய் கத்துவதும், காட்டிலே. நாட்டிலே, சில வேளைகளிலே அக்கிரமக்காரர்கள், சூது பல செய்து நீதியைச் சாய்த்துவிட்டு, ஆர்ப்பரிப்பதுண்டு, அவர்களின் எண்ணம் எல்லாம் முடிந்துவிட்டது

என்பதால். பேதமையான எண்ணம் மட்டுமல்ல, தலை சுற்றும் அளவுக்குத் தற்பெருமை ஏறிவிட்டது என்பதும் அந்த ஆர்ப்பரிப்பின் பொருளாகும்.

என்னை எதிர்க்க இனி எவனால் ஆகும்!

எதிர்த்து நின்றவன் என்ன கதியானான் காணீர்!

தாக்கினேன்!
தகர்ந்துபோனான்!

பொடிப் பொடியானான் போரிட வந்தவன்!

இவ்விதம் ஆர்ப்பரித்தவர்கள் ஒவ்வொருவரும், தமது வல்லமை பற்றித் தவறான கணக்குப் போட்டுக்கொள்பவர்களே என்பதனை எடுத்துக்காட்டும் நிகழ்ச்சிகள் எண்ணற்றன உள்ளன வரலாற்றுச் சுவடிகளில்! எக்காளமிடுவோர் இதனை

நினைவிற்கொள்வதில்லை.

தரம் குறைந்தவர்கள் மட்டுமல்ல, ஓரளவு தரம் உள்ளவர் களுக்கேகூடச் சில வேளைகளில் வெற்றி தந்திடும் மகிழ்ச்சி, போதையாகிவிடுவதுண்டு.

பிறகோர் நாள் வீழ்த்தப்பட்ட ஜூலியஸ் சீசர், களம் சென்று வெற்றி கண்டது குறித்துத் தன் நாட்டவருக்குச் "சேதி' அனுப்பிய போது, சென்றேன்! கண்டேன்! வென்றேன்! என்று குறிப்பிட்டிருந்தான் - தனது வல்லமையின் அளவுபற்றி அவனுக்கு அத்தனை பெரிய கணக்கு.

ஜூலியஸ் சீசராவது, சென்றேன் - கண்டேன் - வென்றேன் என்றார்! முதலமைச்சர் பக்தவத்சலமோ, சென்றேனில்லை! வென்றேன் காண்பீர்! என்று பேசுகிறார்! பேசுகிறாரா?

முழக்கமிடுகிறார்! களம்கூடச் செல்லாமல் - வெற்றிபெற்ற வேந்தர் வேந்தே! வாழ்க உமது வீரம்! வளர்க உமது தீரம்!! என்று வளைந்துபோனவர்கள் சொல்லாரம் சூட்டுகின்றனர்.

காணாததைக் கண்டவர்கள்! என்று பேசிடுவோரும், அற்பனுக்கு வாழ்வு வந்தால் அர்த்த ராத்திரியில் குடை பிடிப்பான் என்றும், திருச்சொங்கோட்டையும், திருவண்ணா மலையையும், சென்னை மாநகராட்சி மன்றத் தேர்தலில் மண் கவ்வியதையும் மறந்துவிட்டார்களோ என்றும், பேசிடும் பொதுமக்கள் உளர். ஆனால், நான் அவர்களைப்போலக் காங்கிரஸ் தலைவர்களின் ஆர்ப்பரிப்பைக் கண்டிக்கவோ, திருச்செங்கோடு திருவண்ணாமலையைக் கொண்டு தருமபுரியை மறைக்கவோ போவதில்லை.

தோல்வியை ஒப்புக்கொள்கிறேன் - காரணம் பல காட்டி இது உண்மையில் தோல்வி அல்ல என்று வாதாடப்போவதில்லை; தோல்வி கண்டோம் என்பதனை ஒப்புக்கொள்ளத் தயங்கப்போவதில்லை. கேரளத்தில் கண்ட தோல்வியை மறைத்திடப் புள்ளி விவரக் கணக்குத் திரைக்குப் பின்னே ஒளிந்துகொண்ட காமராஜர்போல, தருமபுரியில் முன்பு பெற்றதைவிட அதிக வாக்குகள் கழகம் பெற்றிருக்கிறது என்று கணக்குக் காட்டிடும் தந்திரத்தையும் மேற்கொள்ள முற்பட வில்லை. ஆமாம்! தோற்றுவிட்டோம்! தோற்கடிக்கப்பட்டோம்! என்பதனைக் கூறிட அச்சம், தயக்கம் கொள்ளவில்லை; தோல்வியை ஒப்புக்கொள்கிறேன்.

தோல்வியை ஒப்புக்கொள்வது மட்டுமல்ல; அந்தத் தோல்வியைச் சுட்டிக் காட்டி, காங்கிரஸ்

தலைவர்கள் பேசிடும் இழிமொழிகள், எடுத்தேன் கவிழ்த்தேன் பேச்சுகள், ஒழித்தே விடுவோம் என்ற மிரட்டல்கள் ஆகியவற்றை வரவேற்கிறேன்.

நான், எனது கழகத் தோழர்களின் கண்முன்பும் பொது மக்களுடைய கண்முன்பும், தோற்கடிக்கப்பட்ட கோலத்திலேயே நிற்க விரும்புகிறேன் - அவர்கள் காண - காண்பதனால் பெற வேண்டிய கருத்துக்களைப் பெற்றிட!

வளைந்தவாள்! நொறுங்கிய கேடயம்! பிய்த்தெறியப்பட்ட கவசம்! குருதி கசிந்திடும் வடுக்கள்! - இவைகளைப் பட்டுப் பீதாம்பரத்தாலோ, இரவல் மினுக்காலோ மறைத்துக்கொண்டு, என் தோழர்களின் முன்பு போலியான ஒரு காட்சிப் பொருளாக நிற்கப்போவதில்லை; தருமபுரியில் காங்கிரசால் தோற்கடிக்கப் பட்டவன் என்ற

நிலையை மறைத்துக்கொள்ளாமல் நிற்க விரும்புகிறேன்; அந்த நிலையில் என்னை என் தோழர்கள் காண வேண்டும் என்றும் விரும்புகிறேன்.

காங்கிரஸ் தலைவர்களே! உங்களால் முடிந்த மட்டும் இழிமொழிகளை மாலையாக்கி எனக்களியுங்கள் என் தோழர்கள் என்னை அந்த நிலையிலே காணட்டும்!

அடைபட்டுக் கிடந்த சேற்று நீர், கல் பெயர்க்கப்பட்டு ஒரு துளை தோன்றியதும் அதன் வழியாகக் கிளம்பி வேகமாகப் பாய்ந்தோடி வருவதுபோல, தருமபுரியில் வெற்றி கண்டதால் உங்களுக்குக் கிளம்பியுள்ள எக்களிப்பைக் காட்ட, என்னை ஏசுங்கள்! தூற்றுங்கள்! கேவலமான வார்த்தைகளை வீசுங்கள்! அவைகளை நான் பெற்றுக்கொள்வது மட்டுமல்ல, உம்மால் எனக்கு அளிக்கப்படும் அந்த

விருதுகளுடன், நான் என் தோழர்கள் முன் நிற்க விரும்புகிறேன்.

அதிலே எனக்குக் கேவலம் வரும் என்று எண்ணுகிறீர்கள் - மக்களின் மனப்பாங்கு அறியாததால்!

அவைகளைத் தாங்கிக்கொள்ள நான் அஞ்சுவேன் அல்லது கூச்சப்படுவேன் என்று எண்ணுகிறீர்கள் - என்னைச் சரியாகப் புரிந்துகொள்ளாததால்!

நமது அண்ணன் கேவலப்படுத்தப்படுகிறான், தருமபுரியில் கழகம் தோற்றதால், என்பதனை எவ்வளவுக்கெவ்வளவு விளக்கமாகத் தெரிந்துகொள்ளுகிறார்களோ, அவ்வளவுக் கவ்வளவு நல்லது - எனக்கு மட்டுமல்ல - கழகத்துக்கு.

இன்று நீங்கள் வீசும் இழிமொழி, நாளைய

எதிர்காலத்தை எமக்கு ஒளி நிரம்பியதாக்கிட உதவட்டும்; தெம்பு இருக்கும் போதே திட்டித் தீர்த்துவிடுங்கள்; பொன்னான வாய்ப்பு அல்லவா இது உங்களுக்கு; எமது எதிர்காலம் பொற்காலமாக இருக்க வேண்டுமானால் இப்போது உம்முடைய இழிமொழிகளை நாங்கள் பெற்றாக வேண்டும்; நாராசநடை வல்லவர்களைக் கொண்டு நன்றாகத் தூற்றுங்கள், எங்கள் உள்ளத்தில் பாய்ந்திடும் விதமாக! எமது தோழர்களின் கண்கள் குளமாகும் விதமாக! தோல்வி ஏற்பட்டால் என்னென்ன கொடுமைகள் விளைந்திடும், எவை எவைகளைத் தாங்கிக்கொள்ளவேண்டிவரும் என்ற உண்மையினை உணர்ந்திட!

தேர்தலில் நாம் வெற்றி பெற்றாக வேண்டும், தொடர்ந்து, இல்லையெனில், ஒரு இடத்தில் நாம் தோற்றாலும் நம்மை இழிவாகப்

பேசிடவும், இதுதான் முடிவு என்று ஆரூடம் கணித்திடவும், பொதுமக்கள் மனத்தில் பீதி மூட்டிடவும் காங்கிரசின் பெருந்தலைவர்கள் முனைவார்கள் என்று நான் என் தோழர்களுக்கு எடுத்துக்கூறி, அவர்களின் நாடியினை முறுக்கேற்றிவிடுவதனைவிட, கழகத்தின் தோல்வியைக் காட்டி, நீங்கள் ஏச ஏச, என்னைப்பற்றி இழிவாகப் பேசப் பேச, இடம் பிடித்தான்கள் குடம் குடமாகத் தமது தூற்றல் சேற்றை இறைக்க இறைக்க, என் தோழர்கள், வேதனை அடைவார்கள்; அந்த வேதனையிலிருந்து வெளிக்கிளம்பும் "சக்தி' இருக்கிறதே, அது சாமான்யமானதாக இராது; நான் அதனைப் பெற விரும்புகிறேன். என்னையும் கழகத்தையும் இழிவாகப் பேசி ஏசுவதன் மூலம், என் வேலைப் பளுவைக் குறைக்கிறீர்கள்; என் கழகத் தோழர்களின் உறுதியையும், ஊக்க உணர்ச்சியையும்

வலுவாக்கி வைக்கிறீர்கள்; வசவாளர்களே! நீவிர் வாழ்க! வாழ்க! நுமது நாவு நீள்க! நீள்க! உமது தூற்றல் அகராதி பெரிதாகுக! பெரிதாகுக!

ஒரு வெற்றி கிடைத்திட்டால், காங்கிரசார் எவ்விதமாக ஆர்ப்பரிக்கின்றனர் என்பதனைக் காணட்டும், கழகத்தவர் மட்டுமல்ல, பொதுமக்களும்.

ஒரு தோல்வி கழகத்தைத் தாக்கினால், அதன் விளைவாக என்னென்ன இழிமொழிகளைக் கழகம் தாங்கிக்கொள்ளவேண்டி வருகிறது என்பதனை உணர்ந்திட, நான் ஆயிரம் விளக்கம் தருவதைவிட, உம்முடைய ஒரு அரை மணி நேரத் தூற்றல் பேச்சு மிக மிகப் பலன் தருவதாக அமையும். எனவே தூற்றுங்கள், எமது தோழர்களின் இதயத்தைத் துளைக்கும் அளவுக்கு. அவர்களின் கண் கலங்கட்டும்,

நெஞ்சு பதைபதைக்கட்டும், இரத்தத்தில் சூடு ஏறட்டும்; அது கழகத்தின் எதிர்காலத்தைச் செம்மைப்படுத்தி வைக்கும்.

தருமபுரி தீர்ப்பளித்துவிட்டது என்கிறார்கள் - பெருந் தலைவர்கள்!!

திருச்செங்கோடும்,
திருவண்ணாமலையும், சென்னை மாநகரமும் தீர்ப்பளிக்கும் திருத்தலங்கள் அல்ல போலும்! அங்கெல்லாம் மக்கள், காங்கிரசைத் தோற்கடித்துக் காட்டியது, தீர்ப்பு அல்ல போலும்! தருமபுரியில் மட்டுந்தான் தீர்ப்பு தெரிகிறதோ! பந்தாடும் சிறுவனும் கைகொட்டிச் சிரிப்பான்!!

தருமபுரி தீர்ப்பளித்துவிட்டது என்று பேசிடும் காங்கிரசின் பெரிய தலைவர் திருவண்ணாமலையின்போது என்ன சொன்னார்? திருவண்ணாமலை தீர்ப்பு

அளித்துவிட்டது என்று கூறி, கன்னத்தில் போட்டுக்கொண்டாரா? காதைப் பிடித்துக் கொண்டு தோப்புக்கரணம் போட்டுக் காட்டினாரா? புத்தி வந்தது புத்தி வந்தது என்று சொல்லித் தலையில் குட்டிக்கொண்டாரா? தெரியுமே பொதுமக்களுக்கு, அவர்கள் காட்டிய போக்கும், பேசிய பேச்சும்!

இல்லாததையும் பொல்லாததையும் சொல்லி, மக்களை ஏமாற்றி, கழகம் வெற்றிபெற்றுவிட்டது என்றார்.

கழகம் வெற்றி பெறும்போதெல்லாம், ”இல்லாததும் பொல்லாததும்’ சொல்லிப் பெற்ற வெற்றி! காங்கிரசுக்கு வெற்றி கிடைத்தால் அது தீர்ப்பு! நாக்குத்தானா அவர்கள் பேசப் பயன்படுத்தும் கருவி!

தருமபுரியில் காங்கிரஸ் வெற்றி பெற்றது “தீர்ப்பு’ என்றால் திருச்செங்கோட்டிலும்,

திருவண்ணாமலையிலும் கழகம் வெற்றி பெற்றதும்"தீர்ப்பு'தானே!

திருச்செங்கோடு, திருவண்ணாமலைத் "தீர்ப்புகளை' மதித்துக் காங்கிரஸ் கட்சி என்ன காவி உடுத்திக் கமண்டலம் எடுத்துக்கொண்டு காடேகிவிட்டதா! இல்லையே! போனால் போகட்டும், மற்றோர் சமயம் பார்த்துக்கொள்வோம் என்று இருந்துவிட்டது. இந்த இலக்கணம் எல்லோருக்கும் பொதுதானே! அப்படியிருக்க, தருமபுரியில் கிடைத்த வெற்றியால் மட்டும், ஏன் அவர்கள் தீர்ப்பு! தீர்ப்பு! என்று நாவாட, தலையாட, நாற்காலி மேஜையாட, ஒலி பெருக்கி உடனாட உரையாற்று கின்றனர்? காரணம் இருக்கிறது, தம்பி! காரணம் இருக்கிறது.

அவர்களுக்குத் தாங்கள் குற்றம் செய்திருக்கிறோம் என்ற அச்சம் நிரம்ப

இருந்திருக்கிறது.

நமது குற்றம் வெளிபட்டுவிடும்; தண்டிக்கப்பட்டு விடுவோம்! என்ற அச்சம் இருந்திருக்கிறது.

மறுக்க முடியாததும் மறைக்க முடியாததுமான குற்றங்களைச் செய்துவிட்டிருக்கிறோமே, மக்கள் எப்படி அவைகளை மறந்துவிடுவார்கள், எப்படி மன்னித்துவிடுவார்கள்? நிச்சயமாக நம்மைத் தண்டிக்கத்தான் போகிறார்கள் என்ற திகில் கொண்ட நிலையிலேதான் அவர்கள் தருமபுரி வந்தனர்.

ஆனால், தருமபுரியில் வெற்றி அவர்கட்கு என்றதும், அவர்களால் அதைத் தாங்கிக்கொள்ள முடியவில்லை; சந்தேகத்துக்கு இடமற்ற தன்மையில் குற்றம் மெய்ப்பிக்கப்பட வில்லை என்ற

காரணம் காட்டி, கொலையாளி விடுதலை செய்விக்கப்பட்டால், அவனுக்கு ஏற்படும் மகிழ்ச்சிக் கொந்தளிப்பு எப்படிப்பட்டதாக இருக்கும்; அந்த நிலையில் உள்ளனர்! நல்ல தீர்ப்பு! நல்ல தீர்ப்பு! என்று பாடுகின்றனர். நாங்கள் வென்றோம்! நாங்கள் வென்றோம்! என்று ஆர்ப்பரிக்கின்றனர்.

தருமபுரியில் அவர்கள் வெற்றியை எதிர்பார்க்கவில்லை; வெற்றிக்கு உரியவர்கள் தாமல்ல என்ற எண்ணம் அவர்களிடம்.

அந்த நிலையில் வெற்றி என்று ஏற்பட்டதும், அவர்களால், நிற்க முடியவில்லை, நினைத்துப் பார்க்க முடியவில்லை; வாயைத் திறக்கிறார்கள், வார்த்தைகள் உருண்டோடி வருகின்றன.

”இவன்தான் களவாடினான் என்பதற்குப் போதுமான சான்று இல்லை;

மெய்ப்பிக்கப்படவில்லை'' என்று தீர்ப்பளித்தார் நீதிபதி.

குற்றக் கூண்டிலே நின்றவன் மகிழ்ச்சிப் பெருக்கடைந்தான், தன் நிலையையும் மறந்தான்.

"அப்படியானால் அந்தத் தங்கச் சங்கிலியை நான் திருப்பித் தரவேண்டியதில்லையே?''

என்று கேட்டுவிட்டானாம், தீர்ப்பளித்த நீதிபதியே, தான் எவ்வளவு பெரிய தவறான தீர்ப்பளித்துவிட்டோம் என்பதை உணர்ந்து திகைத்திடத்தக்க விதமாக.

அவன் விவரமறியாத குற்றவாளி! காங்கிரஸ் தலைவர்கள் எல்லாத் திறமையும் பெற்றவர்களாயிற்றே. ஆகவே, குளறிக் கொட்டவில்லை, தீர்ப்புப் பிரமாதம் என்று பேசித் திருவிழா கொண்டாடுகிறார்கள்.

தருமபுரியில் மட்டுமல்ல, எத்தனையோ இடங்களில் எத்தனையோ தடவைகளில், எத்தனையோ விவரமறிந்தவர்கள் கூட மெய்போன்ற பொய்யை ஆதாரமாகக் கொண்டு தவறான தீர்ப்பு அளித்துவிடுவதுண்டு.

கள்வனைக் கொண்டுவா! என்று கூறவேண்டிய மாமன்னன் கள்வனைக் கொன்று வா!

என்று கூறியபோது, மன்னன் தீர்ப்பு - நீதிநெறி வழுவாத மன்னன் தீர்ப்பு - செங்கோல் வளையாச் சிறப்புடையான் தந்த தீர்ப்பு என்றுதான் அவையோர் கருதினர். கோவலனைக் கொடுமைக்கு இரையாக்கிய கெடுமதியாளன், "இஃதன்றோ நல்ல தீர்ப்பு'' என்றுதான் பெருமிதத்துடன் கூறியிருப்பான்.

உண்மையான தீர்ப்பு பிறகல்லவா

கிடைத்தது, ஒற்றைச் சிலம்பேந்திய கண்ணகி சிலம்பினை உடைத்து உள்ளே உள்ள பரல்களைக் காட்டி, தன் கணவன் குற்றமற்றவன் என்பதனை மெய்ப்பித்தபோது!

எனவே, திருவண்ணாமலையையும் திருச்செங்கோட்டையும், சென்னை மாநகரையும் தீர்ப்பளிக்கும் தகுதி பெற்ற இடங்களல்ல என்று கருதிக்கொண்டு, தருமபுரி மட்டுமே தீர்ப்பளிக்கும் இடம் என்று காங்கிரசார் கூறினாலும் - அது சொத்தை வாதம் - அளிக்கப்பட்ட தீர்ப்பு முறையானதுதான் என்றோ, முடிவானது தான் என்றோ கூறிவிடுவது எங்ஙனம் பொருந்தும்?

தரப்பட்ட ஆதாரங்களைக் கொண்டும், காட்டப்பட்ட சான்றுகளை நம்பியும், எடுத்துக் கூறப்பட்ட வாதங்களைக் கொண்டும், தருமபுரி மக்கள் அந்த விதமான தீர்ப்பு அளித்துவிட்டனர்.

இதனாலே நான் தருமபுரி மக்கள்மீது குற்றம் கூறவில்லை; அவர்களின் நேர்மையையும் திறமையையும் சந்தேகிக்கவில்லை; நான் கூறிக்கொள்வது, நாம் வழக்கை எடுத்துரைத்ததிலும், சான்றுகளை விளக்கியதிலும் குற்றத்தை மெய்ப்பித்துக் காட்ட வாதாடியதிலும், தேவைப்படும் அளவு திறமையைக் காட்டாததால் வழக்கின் வடிவம் கெட்டுவிட்டது; தீர்ப்பு வேறு விதமாகிவிட்டது என்றுதான் கருதுகிறேன்.

நம்மை நாமே நொந்துகொள்ள வேண்டுமேயன்றி, தருமபுரி மக்கள்மீது வருத்தப்பட்டுக்கொள்வது முறையாகாது.

நியாயம் காங்கிரசின் பக்கம் இருந்ததாலும் அல்ல; நீதிபதிகள் தவறான போக்கினர் என்பதாலும் அல்ல; வழக்கை எடுத்துரைப்பதில், நாம் வெற்றி

பெறாததாலேயே தீர்ப்பு காங்கிரசுக்குச் சாதகமானதாகத் தரப்பட்டுவிட்டது.

இது தோல்வியை மறைத்திடக் கூறப்படும் தத்துவம் அல்ல; நான் தோல்வியை ஒத்துக்கொண்ட பிறகே இதனைக் கூறுகிறேன்; உண்மை நிலைமையினை உவகைக் கூத்தாடும் காங்கிரஸ் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்குக்கூட அல்ல; நமக்கே உண்மை நிலைமை புரிய வேண்டும் என்பதற்காக.

பிரச்சாரத்தில் திறமை மிக்கவர்களாயிற்றே, நீங்களா போதுமான முறையிலே வழக்கை எடுத்துரைக்கத் தவறி வீடுவீர்கள்! என்று நையாண்டி செய்வார்கள்; உணருகிறேன். நான் கூறுவது, நமது பிரசார முறை செம்மையாக இல்லை என்பது அல்ல; வழக்கு மிக எளிதானது; சிக்கலற்றது; இதனை விளக்க நாம் அதிகமான முயற்சி எடுக்கத்

தேவையில்லை, குற்றம் புரிந்துவிட்டது காங்கிரஸ் கட்சி என்பது பொதுமக்களுக்கு நன்றாகத் தெரியும், ஆகவே, தண்டிக்க முற்படுவர் என்ற நம்பிக்கையை, அளவு கடந்த முறையிலே வைத்துக்கொண்டு தீர்ப்பு நிச்சயமாக நமது பக்கம்தான், இதிலென்ன சந்தேகம், என்ற முனைப்புடன் தருமபுரி சென்றோம். அதைக் கூறுகிறேன்.

அச்சத்தோடு வந்தவர்கள், குற்றத்தை மறைத்திடத் திறமை காட்டினர், தமக்கு ஆதரவான தீர்ப்புப் பெற்றுவிட்டனர்.

தீர்ப்பு நம் பக்கம்தான் என்ற நம்பிக்கையை மிக அதிக அளவு கொண்டிருந்ததால், நாம் மெத்தனம் காட்டினோம்; தோற்கடிக்கப்பட்டோம்.

இது தோல்வி அல்ல என்று வக்கணை பேச அல்ல இதனை நான் குறிப்பிடுவது.

இந்தப் போக்கு இனிக் கூடாது என்ற உண்மையினை நாம் உணர்ந்துகொள்வதற்கு இந்தத் தோல்வி ஒரு பாடமாக அமையட்டும் என்பதற்காக.

உண்மை எது, பொய் எது என்று கண்டுகொள்வது மிக எளிது என்று எண்ணிவிட்டோம்; பலர் அவ்விதம் எண்ணிக் கொள்கிறார்கள். மெய்யும் பொய்யும் கிட்டத்தட்ட குயிலும் காகமும்போல என்று கொள்ளலாம்; பலரால் இதுவா அதுவா என்று எளிதாகக் கண்டுபிடித்துவிட முடிவதில்லை. அதிலும் பொய் பொன்னாடை அணிந்துகொண்டும், மெய் புழுதி படிந்த மேனியுடனும் உலா வரும்போது பலருக்கு மயக்கம் - பொய்யின் பக்கம் ஈர்க்கப்பட்டுவிடுகின்றனர்.

நாம், தம்பி! உண்மை நமக்குப் புரிவதால், எல்லோருக்கும் உண்மை புரியத்தானே

செய்யும் என்று எண்ணிக்கொள்கிறோம்.

உண்மையின் பக்கம் நாம் இருக்கிறோம் என்பது மட்டும் போதாது. உண்மையின் பக்கம் அனைவரும் வந்து சேரும்படி செய்யவும் வேண்டும். அதற்கான முறைகளைத் திறமையாக, செம்மையாகச் செய்தே வெற்றி பெற முடியும். அதிலே நாம் தவறிவிட்டோம்; காரணம், திறமைக் குறைவு என்று கூடக் கூற மாட்டேன்; உண்மையை உண்மை என்று மெய்ப்பிக்க வாதாடவும் வேண்டுமா என்று எண்ணிக்கொண்டு விட்டதால்,

இது எப்படிப்பட்ட அரசு என்பதுபற்றியும், இந்த அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகளால் நாட்டு மக்கள் படும் அல்லல் பற்றியும், இந்த அரசு நடத்திக் காட்டிய அடக்குமுறைக் கொடுமைபற்றியும், மக்கள் மிக நன்றாக அறிவார்களே; அப்படிப் பட்ட மக்கள், தேர்தலில் எப்படிக்

காங்கிரசை ஆதரிக்க முடியும்! என்று எண்ணிக்கொண்டோம்.

மக்களில், அரசியல் பிரச்சினைகளை அறிந்தவர்கள், இந்த அரசின் இயல்பினைப் புரிந்துகொண்டுதான் இருக்கிறார்கள்; அதிலே எந்தவிதமான ஐயப்பாடும் இல்லை.

ஆனால், அரசியல் பிரச்சினைகளைத் தாமே நேரடியாக ஆராய்ந்து பார்த்து முடிவெடுப்பவர்கள் என்று ஒரு பகுதி, மற்றவர் கூறிடும் முடிவினை ஏற்றுக்கொள்ளும் ஒரு பகுதி என்ற முறையில்தான் சமூகம் இருக்கிறது என்பதனை நாம் மறந்துவிடக் கூடாது.

மக்களாட்சி முறையின் மாண்பினை நன்கு உணர்ந்துள்ள நாடுகளில், தாமாகவே அரசியல் பிரச்சினைகளை ஆய்ந்தறிந்து தக்க முடிவினை மேற்கொள்வோரின் அளவு

அதிகம், இங்கு இருப்பதைக் காட்டிலும்.

எனவேதான், இங்கு உண்மைக்காகப் பரிந்துரைக்கும் பணியிலே மும்முரமாக ஈடுபட்டாகவேண்டி இருக்கிறது. இந்தப் பணி எந்த அளவுக்குத் தேவை என்பதை மறந்த நிலையில் தருமபுரி சென்றோம்; விளைவு நமக்கு வேதனை தந்துவிட்டது.

இந்த அரசு நடாத்திய அடக்குமுறை பற்றிய கருத்தினைத் தெரிவிக்கும் கடமையைக் காட்டிலும், இவருக்கா அவருக்கா ஓட்டு என்ற முறையிலேயும், இன்னின்னார் சொல்கிறார்கள் என்பதற்கா, அவர்களெல்லாம் சொல்கிறார்கள் என்பதற்கா? எதற்கு நாம் கட்டுப்படுவது என்ற முறையிலும், தருமபுரி மக்கள் இந்தத் தேர்தலைக் கவனித்தார்கள்.

சுட்டு வீழ்த்தப்பட்டவர்களிடம்

இரக்கமற்றவர்களாக, இழப்புக்கு ஆளானவர்களின் வேதனையைத் துடைக்க வேண்டும் என்ற எண்ணமற்றவர்களாக, தருமபுரி மக்கள் இருந்திருக்க முடியாது - எவரும் அவ்விதமானவர்களாக இருந்திட மாட்டார்கள்.

ஆனால், அந்தக் கருத்தைத் தெரிவிக்கும் வாய்ப்பு இந்தத் தேர்தல் என்ற எண்ணத்தைவிட வேறு பலவிதமான எண்ணங்களை அவர்கள் கொண்டுவிட்டனர் என்றே தோன்றுகிறது. நாமோ இதயமுள்ளவர்கள் எவரும் இவ்வளவு கொடுமைகளைச் செய்த ஒரு ஆட்சியை நடத்திவரும் கட்சியை ஆதரிக்கமாட்டார்கள் என்ற நம்பிக்கையை அளவுகடந்த முறையிலே கொண்டுவிட்டிருந்தோம்.

மக்களுக்கு இயற்கையாக ஏற்படக்கூடிய நீதி நியாய உணர்ச்சி, பரிவுபச்சாதாப

உணர்ச்சி ஆகியவற்றினைக் கூட உருக்குலையச் செய்திடும் வல்லமை, காங்கிரஸ் கட்சியினருக்கு உண்டு என்பதைத் தருமபுரி எடுத்துக்காட்டிவிட்டது.

காங்கிரஸ் கட்சிக்கு உள்ள இந்த வல்லமை, போற்றுதலுக்குரியதாகாது; நச்சுப்பை கொண்டுள்ள தற்காகப் பாம்பினைப் பாராட்டுவார் இல்லை,

நாம் செய்த தவறு, காங்கிரஸ் கட்சி இந்த நச்சுப் பரப்பிடும் செயலுக்கேற்ற திறமை பெற்றுள்ளது என்பதுபற்றி அறிந்து கொள்ளாதது என்றும் கூறுவேன்.

நாமோ குற்றம் செய்துவிட்டோம்; மக்களோ நம்மை மன்னிக்கமாட்டார்கள். தண்டிக்கத்தான் போகிறார்கள் என்ற அச்ச உணர்ச்சியால் உந்தப்பட்ட காங்கிரஸ் கட்சி, இரண்டு திங்கள், ஒரு சிற்றூர் விடாமல் தமது

பணியாளர்களை ஏவி, மக்கள் மனத்திலே இருந்து வந்த கொதிப்பை மாற்றவும், அவர்கள் முன் வேறு பிரச்சினைகளை வைக்கவும் முனைந்து வந்தபோது, கழகம் அதனைப் பெரிதாகக் கருதவில்லை, தடுத்திடவும் முனையவில்லை.

முதலிலே அறிவிக்கப்பட்ட தேர்தல் நாள் ஒத்தி வைக்கப் பட்டது; வேறோர் நாள் குறிக்கப்பட்டது; அந்த இடைவெளியின் போது, இச்சகம் பேசிடவும், நச்சுக்குழியைப் பச்சை இலை போட்டு மூடிமறைத்திடவும், நாவிலே தேன் தடவிவிடவும், காங்கிரசார் மெத்தத் திறமையுடன் பயன்படுத்திக்கொண்டனர்.

திண்ணைப்பேச்சு, சாவடிப்பேச்சு, கூட்டுறவு அமைப்பு களில் கூடிக்குலவுதல் போன்ற முறைகளைக் காங்கிரஸ் கட்சி தன் வெற்றிக்குப் பயன்படுத்திக்கொண்டது.

இந்த முறைகளைக் கழகம் மேற்கொள்ளவில்லை; முயல வில்லை; காரணம்? மக்கள் எப்படியும், அடக்குமுறையை அவிழ்த்துவிட்ட காங்கிரஸ் கட்சியைத் தோற்கடிப்பார்கள் என்ற நம்பிக்கை.

கழகத் தோழர்கள் மட்டுமல்ல, பொதுமக்களிலே ஒரு பகுதியினரே கூட, சென்ற தேர்தலின்போது காணப்பட்ட புள்ளி விவரத்தைக் கொண்டு ஒரு தவறான முடிவுக்கு வந்திருந்தனர். வெற்றிபெற்ற சுயேச்சை உறுப்பினர் மறைந்த திரு. வீரப்ப செட்டியாருக்குக் கிடைத்த 24 ஆயிரம் வாக்குகளும், காங்கிரஸ் எதிர்ப்பாளரின் வாக்குகள், ஆகவே, இம்முறையும் அந்த 24 ஆயிரம் வாக்குகளும் காங்கிரசுக்கு எதிர்ப்பாகவே இருக்கும், ஆகவே, அவை அவ்வளவும் கழகத்துக்குச் சேரும் என்று கணக்கிட்டனர்.

அந்தக் கணக்கு பொய்த்துவிடுமா என்பதுபற்றிய எண்ணம் கூட எழவில்லை; அவ்வளவு நிச்சயமாக இருந்துவிட்டோம். தேர்தல் முடிவு, அந்தக் கணக்கு தவறு என்பதைக் காட்டி விட்டது; அந்த வாக்குகளைக் காங்கிரஸ் கட்சி பெற்றுக்கொள்ள எல்லா முறைகளையும் பயன்படுத்திக்கொண்டது. அந்த வாக்குகள் நம்மை விட்டுவிட்டு வேறு எங்கும் போய்விடாது என்று எண்ணினோம்; தோல்வி கண்டோம்.

இவற்றை நான் கூறுவதன் காரணம், தம்பி! தோல்வி எதிர்பார்த்ததுதான் என்று வாதாட அல்ல; வெற்றி நிச்சயம் என்று அதிக அளவு நம்பிக்கையை வளர்த்துக்கொண்டு விட்டோம், தொகுதியின் நிலைமையை நன்கு ஆராயாமல் என்பதைக் காட்டத்தான்.

இன்றுகூட, தனித்தனியாகத் தருமபுரி தொகுதி மக்களைக் கண்டு,

இந்தி ஆட்சி மொழியாக்கப்படுவது நியாயமா?

மாணவர் கிளர்ச்சியை இரக்கமற்ற விதமாகத் தாக்கித் தகர்க்க முற்பட்டது நியாயமா?

அடக்குமுறையை அவிழ்த்துவிட்டு 59 பேர் துப்பாக்கிக்குப் பலியாகிடச் செய்தது நியாயமா?

என்று கேட்டால், நியாயம் அல்ல என்றுதான் கூறுவார்கள்.

ஆனால், காங்கிரஸ் பணியாளர் இரண்டு திங்களாக நடத்திவந்த பிரசாரம், அதற்காக நடப்பது அல்ல இந்தத் தேர்தல் - தருமபுரி தலைநகராக வேண்டுமா வேண்டாமா? தலைநகர் வேண்டும் என்றால், காங்கிரஸ் வெற்றி பெற்றாக வேண்டும், அதற்காகத்தான் இந்தத் தேர்தல் நடத்தப்படுகிறது என்பதுதான்.

இந்தி ஆட்சி மொழியாவதைக் கண்டிக்கிறோம், அடக்கு முறையைக் கண்டிக்கிறோம். ஆனால், அதேபோது தருமபுரி தலைநகராக வேண்டும் என்றும் விரும்புகிறோம், அதற்காகவே காங்கிரசுக்கு ஓட்டுப் போடுகிறோம். என்ற எண்ணத்துடன், தருமபுரியின் குறிப்பிடத்தக்க புள்ளிகள் முனைந்து நின்று பணியாற்றினர். காங்கிரசின் வெற்றிக்கு அது மிக நல்ல வாய்ப்பாக அமைந்தது.

மறுப்பார்கள் காங்கிரஸ் கட்சியினர்; எனினும், நான் மனதார நம்புவதை எனக்கு அறிவிக்கப்பட்டதை நான் சொல்லுகிறேன்: காங்கிரசுக்கு எதிராகப் பணியாற்ற முனைபவர்கள், பாதுகாப்புச் சட்டப்படி கைது செய்யப் படுவார்கள் என்ற திண்ணைப் பேச்சு, தருமபுரித் தொகுதியில் மிக வேகமாகப் பரவிற்று.

அமைச்சர்களோ, தரமுள்ள தலைவர்களோ இந்தத் தவறான பிரசாரம் செய்தார்கள் என்று நான் கூறவில்லை. ஆனால், காங்கிரசுக்கு ஓட்டுத் திரட்டச் சென்ற பணியாளர்கள், அதிக அளவில் அரசியல் தெளிவில்லாதாரிடம் இந்த அச்சம் எழச்செய்துவிட்டிருந்தனர் என்று அறிகிறேன்.

கருணாநிதியைப் பார்க்கிறீர்களல்லவா? வழக்குக் கூடப் போடாமல் உள்ளே பிடித்து அடைத்துவிட்டார்கள், பாதுகாப்புச் சட்டப்படி!

என்று பேசி, பலருக்கு, உண்மைதானே! ஒரு பெரிய கட்சியின் பொருளாளருக்கே இந்தக் கதி என்றால், நாம் காங்கிரசை எதிர்த்தால், என்னதான் செய்யமாட்டார்கள்! நமக்கேன் வீண் வம்பு! காங்கிரசுக்கே வேலை செய்வோம்! என்ற எண்ணம் எழுந்தது என்று எனக்குத் தெரிவிக்கப்பட்டது.

அடக்குமுறை கண்டு அருவருப்பும் ஆத்திரமும் எழுவது போலவே, சமூகத்தில் ஒரு பகுதியினருக்கு அச்சம் ஏற்பட்டுவிடுவது இயற்கை. இந்த அச்சம் காரணமாகப் பலர் காங்கிரசுக்கு ஓட்டுத் திரட்டும் வேலையில் தம்மை ஈடுபடுத்திக்கொண்டார்கள் என்றும் எனக்குத் தெரிவிக்கப்பட்டது.

இவற்றைக் கூறும் நான், ஆகவே, தருமபுரியில் நாம் தோற்றது வியப்பல்ல என்று வாதாடவில்லை; இந்த நிலைமை களை மீறி நாம் பணிபுரிந்து வெற்றி பெற்றிருக்க வேண்டும். கழகத்தின் பணி, சூது சூழ்ச்சிகளை முறியடிக்கத் தக்கதானதாக வலிவு பெற்றாக வேண்டும். தருமபுரித் தோல்வி இந்தப் பாடத்தைத்தான் நமக்கு அளிக்க வேண்டும்.

தம்பி! மகனை இழந்த மாதா மனம் நொந்து கதறிக் கிடக்கிறாள். கணவனை

இழந்த காரிகை கண்ணீர் வடிக்கிறாள்; அண்ணனை இழந்த தம்பி புரண்டு அழுகிறான்! இத்தனைக்கும் காரணமான அடக்குமுறையை அவிழ்த்துவிட்ட ஆட்சியின் பொறுப்பினை ஏற்றுக்கொண்டுள்ள கட்சி தேர்தலிலே வெற்றி பெறுகிறது என்றால் இது வெந்த புண்ணிலே வேல் பாய்ச்சுவது போன்றதல்லவா, இது நடந்துவிட்டதே தருமபுரியில்!!

"சுட்டோம், சுடுவோம்!'' என்று ஆட்சியினர் ஆர்ப்பரித் தாலும் வியப்பில்லையே!

சுட்டோம், ஓட்டளித்தனர் என்று வாதாடிடவும் முனைவரே வன்கணாளர்கள். எதை எதையோ எண்ணிக் கொண்டு, தருமபுரி மக்கள் நடந்துகொண்ட போக்கு, ஆட்சியாளர்களுக்கு, நாம் எப்படியும் நடக்கலாம், எதையும் செய்யலாம், எத்தனை முறையும் சுடலாம், எத்தனை

பிணமும் விழலாம், யார் என்ன கேட்க முடியும் என்ற எண்ணத்தை அல்லவா உண்டாக்கிவிடும். தோற்றது கழகமா! இல்லையே! அடக்குமுறைக்கு ஆளான மக்களின் இதயக் குமுறலை அல்லவா, இந்தத் தேர்தல் தோல்வி, பொருளற்றதாக்கி விட்டது. நல்லாட்சிக்கான முயற்சிக்கல்லவா பலமான அடி விழுந்து விட்டது!

வீழ்ந்துபட்ட மக்களின் சார்பில் நின்றோம், நம்மை வீழ்த்தி விட்டார்கள். வேதனைப்பட்டவர்களின் துயர் துடைக்க முனைந்தோம். தோற்கடித்துவிட்டார்கள். இந்தத் தோல்வி, விழிப்புற்ற தமிழர்களுக்கன்றோ பெருந் தோல்வி என்றாகி விட்டது. தேம்பித் தவித்திடும் தமிழ்த்தாயே! உன் கண்ணீரைத் துடைத்து, நீதியை வெற்றி பெறச் செய்ய முடியாமற் போய்விட்டது. என்னை மன்னித்துவிடு!

என்றன்றோ! நாம் ஒவ்வொருவரும் மண்டியிட்டு முறையிட்டுக்கொள்ளவேண்டி ஏற்பட்டுவிட்டது.

மகனே, மனம் தளர்ந்து போகக்கூடாது. நீதியின் பக்கம் நின்றாய், மகிழ்ச்சி! எனக்காகப் பரிந்து பேசிப் பணியாற்றினாய், பெருமைப்படுகிறேன். உன் வல்லமை வளரும், தோல்வி வெற்றிக்கு வழி அமைக்கும் என்று கூறித் தமிழ்த்தாய் நம்மைத் தேற்றுவாள் என்பது உறுதி.

நியாயம் சில வேளைகளில் வெற்றிபெறாமற் போய்விடக் கூடும், அதனாலேயே நியாயத்தின் பக்கம் நிற்கத் தேவையில்லை என்ற முடிவுக்கு அறிவாளர் எவரும் வரமாட்டார்கள். நியாயம் வெற்றி பெறத்தக்க விதமாக உழைப்பதற்கான வலிவினைத் திரட்டிக் கொள்வோம் என்ற உறுதியைப் பெறுவதே தீரர் கடன்.

நஞ்சு கொடுத்துச் சாக்ரடீசைச் சாகடித்துவிட்டதாலேயே, சாக்ரடீசின் கொள்கையைச் சாகடித்துவிட முடிந்ததா! இரண்டு அங்குல நீளமே உள்ள தேள், கொட்டினால் ஆறடி ஆள்கூடத் துடிதுடிக்கிறான்; அதனாலேயே ஆளைவிடத் தேள் வலிவுள்ளது என்றாகிவிடுமா; ஆளிடம் அந்தத் தேள் சிக்கவில்லை, கொட்டிக் கொண்டிருக்கிறது என்பதுதானே உண்மை நிலை. தருமபுரியில் கழகத்தைத் தோற்கடித்துவிட்டதாலேயே காங்கிரசுக்கு எதிராகத் திரண்டுகொண்டிருக்கும் எதிர்ப்பும், அந்த எதிர்ப்பை உண்டாக்கிக் கொடுக்கும் மக்களின் எழுச்சியும் மடிந்துவிட்டது என்றாகிவிடாது.

தருமபுரியில் பெற்ற வெற்றி காரணமாகக் காங்கிரஸ் கட்சி தனது வல்லமைபற்றி மிக அதிகமான கணக்குப் போட்டுக்

கொள்ளுமானால் அது நமக்கு நல்லதுதான். தொடர்ந்து தவறுகளைச் செய்யவும், மக்களின் மனக் கொதிப்பை அதிகமாக்கக்கூடிய நடவடிக்கைகளில் ஈடுபடவும், அடக்கு முறையை அவிழ்த்துவிடுவதிலே சுவை காணவும், தனது ஊழலாட்சியைத் திருத்திக்கொள்ளாதிருக்கவும், துணிந்துவிடும். அந்தக் கட்டம் வேகமாக வளரும்போது, இது வரை அக்கறையற்று இருந்துவந்த மக்களும் சீறி எழுவார்கள்; ஆசைக்கு ஆட்பட்டு அநியாயத்துக்குத் துணைபோனவர்களும் தமது தவற்றினை உணர்ந்து நீதியின் பக்கம் நிற்பார்கள்; அஃது காங்கிரசாட்சியை வீழ்த்தும் வலிவை மக்களுக்கு அளித்திடும்.

அந்த நம்பிக்கையுடன் கழகம் பணியாற்றிவரும்; தருமபுரித் தோல்வி அந்தப் பணியின் தரத்தையும் வேகத்தையும

அதிகமாக்கி விடுமேயன்றித் துவண்டிடச் செய்யாது என்பதனையும் நான் மறந்திடவில்லை.

என்ன கொடுமை செய்தாலும் நமக்குத்தான் "ஓட்டு' என்ற எண்ணம் காங்கிரஸ் கட்சிக்குத் தடித்துவிடச் செய்கிறது தருமபுரி.

நமக்கோ, உன் வலிவு போதாது, வளர வேண்டும்; முறை செம்மைப்படுத்தப்பட வேண்டும்; முயற்சியில் புது முறுக்கு ஏற வேண்டும், உண்மைக்காகப் பரிந்து பேசினால் மட்டும் போதாது, உண்மை வெற்றி பெறத் தக்கவிதமான வலிவு உண்மைக்குக் கிடைத்திட வழி கண்டாக வேண்டும் என்ற பாடத்தைத் தருகிறது.

வெற்றி எந்த நேரத்தில் எந்தக் கட்சிக்குக் கிட்டுகிறதோ, அந்தக் கட்சியை வலிவுள்ள

கட்சி என்று எண்ணிக்கொள்வதும், வலிவு இருக்கிற காரணத்தாலேயே அது நியாயமான கட்சி என்று எண்ணிக்கொள்வதும் கூர்த்தமதி படைத்தோரின் போக்கல்ல; தெளிவற்றோர் பெற்றிடும் மன மயக்கம்.

கழகம் நடாத்துவோர், வலிவுள்ள கட்சியில் தஞ்சம் புகுந்து தகத்தகாயம் பெற முனைந்தவர்கள் அல்ல; சாதாரணக் கட்சியை வலிவுள்ளதாக்கியவர்கள்! ஒளி உள்ள இடம் ஓடி வெளிச்சம் போட்டுக் கொண்டவர்கள் அல்ல கழகத்தினர்; இருண்ட இடத்தில் ஒளி எழத் திருவிளக்கு ஏற்றிவைத்தவர்கள்; எங்கே சென்றால் தேர்தலில் வெற்றி கிடைக்கும் என்று அலைந்து அதற்கோர் இடம் கண்டுபிடித்தவர்களல்ல, தேர்தலில் வெற்றி கிடைக்கத்தக்க வலிவினை உழைத்துப் பெற்றிடும் உறுதி கொண்டு பணிபுரிவோர். கழகத் தோழர்கள் விளைந்த

காட்டுக் குருவிகளுமல்ல, மரம் பழுத்தது கண்டு பறந்தோடி வரும் வௌவாலும் அல்ல, அரைக்க அரைக்க மணம் எழும்பும் சந்தனம் போன்ற இயல்பினர். தருமபுரித் தோல்வியை நமது சிந்தனையைக் கிளறி, முறைகளைச் செம்மைப்படுத்தும் ஓர் வாய்ப்பாக மாற்றிட வல்லவரே, கழகத் தோழர்கள்.

இந்த நமது இயல்பை மேலும் விறுவிறுப்பானதாக்கிட, வெற்றிபெற்ற காங்கிரசார் ஏவிடும் தூற்றலையும் பயன்படுத்திக் கொள்வோம். வெந்த புண்ணிலே வேல் பாய்ச்சிவிட்டனர்; ஆம்! குருதியைத் துடைத்துக்கொண்டு, தொடர்ந்து பணியாற்றி வருவோம் துயரம் காரிருளெனக் கப்பிக்கொண்டிருக்கும், உணருகிறேன்; ஆனால், தம்பி! விடிவதற்கு முன்பு கருக்கல் அதிகமாகத்தான் இருக்கும். பொழுது புலரும், பொறுத்துக் கொள்; பணியாற்று.

அன்புள்ள

அண்ணாதுரை

18-4-1965

4. இதயம் வென்றிட. . . (1)

காந்தியார் காங்கிரசும் ஆளுங்கட்சிக் காங்கிரசும்
இழந்தது சரிகைத் தொப்பி; பெற்றதோ மந்திரி வேலை!
மக்களின் இதயத்தை வென்றிடும் தன்மை மட்டும் போதாது கழகத்துக்கு!

தம்பி!

இரத்த ஆறு ஓடும் - பிணமலை குவியும் - வீடுகள் தீக்கிரையாகும் - வயல்கள் கருகும் - எங்கும் அல்லோலகல் லோலம் - அமளி - அழிவு,

காட்டுத் தீபோல, கட்டுக்கு அடங்காத பெருவெள்ளம் போல, நெருப்பைக் கக்கும் எரிமலையின் குமுறல்போல, செங்கிஸ்கான், தைமூர், அட்டில்லா போன்ற வெறி

பிடித்தலைந்தவர்கள் அவனியில் நடமாடி அழிவை ஏவியபோது, நிலைமை இருந்தது.

அவர்களின் படைகள் பாய்ந்து வருகின்றன என்றால் ஒரே பீதி! எதிர்த்து நிற்க முடிவதில்லை; தடுத்திட முடிவதில்லை! அழிவு ! அழிவு! பெரும் அழிவு! எதிர்ப்பட்டதெல்லாம் அழிக்கப்படும்! வாள்! வேல்! ஈட்டி! இவை மட்டுமல்ல, நெருப்பு, விஷம், சித்திரவதைக் கருவிகள் இவைகளையும் கொண்டுதான் அந்த வெறியர் போர் நடத்தினர்.

போர் முறை, அதிலே ஒரு நெறி; ஆயுதமற்றவர்களைத் தாக்காதிருக்கும் பண்பு, பெண்டிரிடமும் குழந்தைகளிடமும் பச்சாதாபம் காட்டும் உணர்வு; சொத்துக்களை நாசமாக்கா திருக்கும் முறை எனும் எதற்கும் அவர்கள் கட்டுப்படுவதில்லை. எதையும் நாசம் செய்வது, வதைப்பது, வாட்டி எடுப்பது, அதிலே மக்கள் துடிதுடிப்பது கண்டு மகிழ்வது, இப்படி

அவர்கள்.

அவர்களின் வெறித்தனத்தை இன்று கண்டிக்கிறோம்; வரலாற்றுச் சுவடிகள் அவர்களை நடமாடிய நாசம் என்று குறிக்கின்றன. ஆனால், அவர்கள் படைபலமும் போர்வெறியும் காட்டி நாடு நகரங்களை அழித்தும், மக்களைக் கொன்று குவித்தும் நாசத்தை மூட்டிவிட்டபோது அவர்களின் செயலைக் கண்டிக்க முடியவில்லை. கண்டிப்பவனின் நாக்கு துண்டாடப் பட்டுவிடும்.

அவர்களைக் கண்டிக்காதது மட்டுமல்ல, அவர்கள் பெற்ற வெற்றிகளைக் கொண்டாட விழாக்கள்! கோலாகலப் பவனிகள் நடைபெற்றன!

ஒருபுறத்தில் அக்கொடியவர்கள் வெட்டி வீழ்த்திய உடலங்கள் குவியல் குவியலாக;

மற்றோர் புறத்திலே அந்த மாபாவிகளின் கொலு!

அது மட்டுமல்ல! அந்த அக்கிரமக்காரர்களின் வெறித் தனத்தை வீரம் என்றும் படுகொலைகளை வெற்றிகளென்றும் கூறிடவேண்டிய கொடுமைக்கும் சிலர் ஆளாக்கப்பட்டனர். கவிதைகளை இயற்றித் தந்தனர் சிலர்! அவர்களின் கொடுஞ் செயல்களைக் காவியமாக்கித் தந்தனராம் சிலர்! அதற்காகவே சிலர், அந்த வெறியர்களால் அமர்த்தப்பட்டிருந்தனராம்.

அவர்களின் ”காலம்’ முடிந்த பிறகே, அவர்களின் செயல் எத்துணைக் கொடுமை நிரம்பியது என்பதனைக் கூறிட முடிந்தது. அவர்களின் ஆதிக்கம் இருந்து வந்தபோது, புகழாரம் சூட்டிடவும் வேண்டி நேரிட்டது, புண்பட்ட நெஞ்சினரால்! தமது புலமையை அந்தக் கொடியவர்களுக்குப் பகொடுத்

திடவேண்டியும் நேரிட்டதாம்!

கொடுமைகளை எதிர்த்து ஒழித்திட முடியாத நிலையில் பலர் அதற்கு இரையாகிவிடுவதுடன், சிலர் அந்தக் கொடுமையைக் கொடுமை என்று கூறிடவும் முடியாத நிலையினராகிக் குமுறிக் கிடந்திடுவதுண்டு.

வெற்றி வெறி தலைக்கேறிய அந்தத் தருக்கர்களும், தம்மை எதிர்த்து நிற்பார் இல்லை என்பதைக் களம் பலவற்றில் கண்டு கண்டு இறுமாந்து, தமக்கு இந்த ஆற்றலை ஆண்டவன் அளித்திருப்பது, அதனைக் கொண்டு இந்த அவனியை அஞ்சிட வைத்திடவும், அடக்கி ஆண்டிடவுமே என்றுகூடக் கருதினர்.

ஆண்டவனே அனுப்பிவைத்த அழிவாயுதம் என்று தமக்குத் தாமே விருதும்

சூட்டிக்கொண்டனர் அந்தக் கொடியவர்கள்.

இப்போதுதான் எடுத்துக் காட்டப்படுகிறது: அவர்களிடம் இருந்து வந்த படைகளின் தன்மையும், அவர்கள் கையாண்ட போர் முறையும், அவர்கள் காட்டிய வேகமும் துணிவுமே அவர்களைக் கண்டோர் மருண்டிடத்தக்க, கேட்டோர் கிலி கொள்ளத்தக்க வெற்றிகளைப் பெற்றிடச் செய்தது என்பதனை.

நெடுங்காலத்துக்குப் பிறகுதான், எவ்வளவோ நாசத்துக்குப் பிறகுதான், அவ்விதமான அழிவுச் சக்தியை எப்படித் தடுத்து நிறுத்துவது, எப்படி எதிர்த்து ஒழிப்பது என்ற போர் முறையை வகுத்திடவும், வெற்றி காணவும் முடிந்தது. அந்தக் கட்டம் பிறந்திடும் வரையில் அந்தக் கொடியவர்கள், எவராலும் தோற்கடிக்கப்பட முடியாத மாவீரர்கள் என்று கூறிக்கொள்ள முடிந்தது.

உலகை ஒரு குலுக்குக் குலுக்கிவிட்டானல்லவா இட்லர்! சென்ற இடமெங்கும் வெற்றி என்றனர்! சேதி சொல்லி அனுப்பினால் போதும், சரண் அடைய நாடுகள் காத்திருந்தனவே.

அவனை வெல்வார் இல்லை! என்று உலகே பேசிற்று. எதுவரையில்? அவனை வீழ்த்துவதற்கான முறை செம்மைப் படுத்தப்படும் வரையில்,

கொன்று குவித்திடும் கொடுமை நிரம்பிய களம் நின்றவர்களின் இறுதியே, தோல்வி என்றாகிவிட்டது என்கிற போது, ஆயிரத்தெட்டுத் தந்திரங்களின் துணைகொண்டு, அரசியல் ஆதிக்கத்தைப் பெற்றுவிடும் ஒரு கட்சி, என்றென்றும் வல்லமைமிக்கது, வீழ்த்தப்பட முடியாதது என்ற நிலையில் இருந்துவிடும் என்று பேதையும் கூறிடான். கொடுமைகளைத்

தாங்கித் தத்தளித்த உலகு இறுதியில் அந்தக் கொடுமையினை ஒழித்துக் கட்டியது என்பதனைக் காட்டிடுவது வரலாற்றுச் சுவடி. இதனை மறந்து தேர்தல் களத்திலே பெற்றுவிட்ட ஒரு வெற்றியைக் கண்டு காங்கிரசின் தலைவர்கள் எமக்கு இனி எவரே இணை! எவர் இனி எம்மை என்ன செய்திட முடியும்! என்றெல்லாம் இறுமாந்து பேசுகின்றனர்.

அது கேட்டு நமது தோழர்கள் கோபித்து ஆகப்போவது ஒன்றுமில்லை.

வெற்றிபெற்ற காங்கிரசுக் கட்சி பேசுவதில், ஆணவம் நெளிகிறது; உண்மை. ஆனால், அந்தப் பேச்சைக் கேட்டுக் கொள்வது, கழகத்துக்கு நன்மையே செய்திடும் என்று நான் நம்புகிறேன். எனவே, வெற்றி வெறியிலே அவர்கள் பேசுவதை வரவேற்கிறேன்.

தோல்வியால் துயரமும், வெற்றி வெறியாளரின் பேச்சால் கோபம் கலந்த வேதனையும் கழகத் தோழர்களிடம் மூண்டிட மூண்டிட, அவர்கள் தமது முறைகளைச் செம்மைப் படுத்திக்கொள்ள முனைவர் என்பது என் எண்ணம். நான் கடிந்துரைப்பதன் மூலம் நடைபெறக்கூடியதைக் காங்கிரசின் வெற்றி வெறிப் பேச்சினர், நடத்திக் கொடுக்கிறார்கள். கடிந்துரைத்திடும் இயல்பும் எனக்கும் இல்லை.

தேர்தல் களத்திலே ஏற்பட்டுவிடும் ஒரு தோல்வி நம்மைச் செயலற்றவர்களாக்கிவிடாது என்பதனை நான் அறிவேன், நானே தேர்தலிலே தோற்கடிக்கப்பட்டவன்.

தோல்வி, துடைக்க முடியாத இழுக்கை ஏற்படுத்தி விடும் என்று கவலை கொள்பவனுமல்ல; வெற்றி அதனைப்

பெற்றவர்களுக்கு, என்றென்றும் ஒளிவீசும் புகழாரம் சூட்டி விடாது என்பதனையும் அறிந்திருக்கிறேன்.

போட்ட புள்ளிகள் பொய்த்துப்போவதும், தீட்டிய முறைகள் கெட்டுப்போவதும், எதிர்பார்த்தவைகள் நடை பெறாமல் போய்விடுவதும், நாம் இதற்கு முன்பு காணாததுமல்ல; ஒவ்வொரு தனி மனிதரும் சரி; கட்சியும் சரி, இத்தகைய நிலையினைக் கண்டதுண்டு; அறிவோம்.

மோப்பம் பிடிப்பதிலும், பதுங்கிப் பாய்வதிலும், பாய்ந்து பற்றுவதிலும், பற்றுவதைப் பிய்த்து எறிவதிலும் காட்டிலே புலிக்கு உள்ள திறமை, நாட்டிலே தேர்தல் களத்திலே காமராஜருக்கு உண்டு என்று பேசாதார் இல்லை, புகழாதார் இல்லை.

எனினும், திருவண்ணாமலையிலும்

திருச்செங்கோட்டிலும், மாநகராட்சி மன்றத் தேர்தலிலும், கேரளத்திலும் காமராஜரின் கணக்குச் சரியில்லை, வாக்குப் பலிக்கவில்லை, முயற்சி வெற்றி பெறவில்லை; அதனால் அவருடைய மூக்கு அறுபட வில்லை, முகாம் கலைக்கப்படவில்லை, முடுக்குக்கூட குறையவில்லை!

ஐயாயிரம் ஓட்டுகள் அதிகம் பெற்று வெற்றிக்கொடி நாட்டுவோம் என்ற பிரகடனம் செய்தவர்தான் காமராஜர் திருவண்ணாமலைத் தேர்தலின் போது!!

மாநகராட்சி மன்றத்தேர்தலை முடித்துக்கொண்டு டில்புற ப்பட்ட காமராஜர், ஹைதராபாத்திலே, நிருபர்களிடம், தொலைந்தது கழகம்! வென்றது காங்கிரஸ்! கார்ப்பரேஷனைக் காங்கிரஸ் கைப்பற்றிவிட்டது! என்று அறிவித்தார்.

நினைத்தது நடக்கவில்லை; நடந்துவிட்டது கண்டு அவருடைய நினைப்புத் தளரவில்லை, நிலை தடுமாறவில்லை; பேச்சிலேகூட ஒரு அச்சம், ஆயாசம் எழவில்லை.

அதனை நான் எடுத்துக்காட்டுவது அவரைக் கேலி செய்ய அல்ல.

வெற்றியை எதிர்பார்த்து, அதற்காகப் பாடுபட்டு, நிச்சயமாகக் கிடைக்கும் என்று நம்பி, தோல்வியைக் கண்டால், எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பதற்கான கருத்தினைக் கழகத் தோழர்கள் பெற வேண்டும் என்பதற்காகவே இதனைக் கூறினேன்.

சில காலமாக நமக்கு ஓர் எண்ணம் வளர்ந்துவிட்டிருக் கிறது; நம்முடைய முயற்சி எப்படியும் வெற்றி பெற்றுவிடும் என்ற எண்ணம்.

காரணமற்றதுமல்ல அந்த நம்பிக்கை.

நாம் மேற்கொள்ளும் முயற்சி நியாயமானது என்பதால், அந்த முயற்சி வெல்லும் என்று கருதுவதும்,

நாம் மேற்கொள்ளும் முயற்சிக்கு மக்களின் பேராதரவு இருக்கும் என்பதற்கான அறிகுறிகள் நிரம்பத் தெரிவதால், வெற்றி கிடைத்திடும் என்று கருதுவதும் தவறு அல்ல.

ஆனால், நம்முடைய முயற்சி நியாயமானது என்பதை எடுத்து விளக்கும் செயலிலும்,

நம்முடைய முயற்சிக்குப் பேராதரவு அளித்திடும் விருப்பம் கொண்டுள்ள மக்கள் முழுத் திறமையுடன் நமக்குத் துணை நின்றிடச் செய்திடும் செயலிலும், நாம் பெறவேண்டிய வெற்றியைப் பெற்றோமில்லை.

மற்றொன்று, நாம் காங்கிரசுக்கு உள்ள

”தேர்தல் யந்திரத்தின்’ அளவு, தாங்கும் சக்தி, தாக்கும் சக்தி இவைபற்றிய கணக்கிலேயும் தவறு செய்கிறோம்.

காங்கிரஸ், தனது தூய காந்தீயக் கொள்கையை இழந்து விட்டது; ஆகவே, அதற்குக் காந்தியார் காலத்தில் இருந்துவந்த மதிப்பு இப்போது மங்கிவிட்டது.

ஆகவே, காங்கிரசின் செல்வாக்குச் சிதைந்துவிட்டது என்பது நமது கருத்து.

இந்தக் கருத்தினைக் கொண்டோர், வேறு பலரும் உளர். இந்தக் கருத்து தவறானதுமல்ல; உண்மை; மறுக்க முடியாதது.

கொள்கைக் கூடமாகக் காங்கிரஸ் இல்லை, கொள்கை யாளர் அதிகம் பேர் அங்கு இல்லை என்பது உண்மை. அதனால் மதிப்பு மங்கிவிட்டது என்பது உண்மை; ஆனால், ஒரு விசித்திரமான உண்மை என்னவென்றால்,

தம்பி! கொள்கையை இழந்துவிட்ட பிறகு காங்கிரசுக்குத் தூய்மையான அமைப்பு என்ற செல்வாக்கு இல்லை என்றாலும், தேர்தலில் ஈடுபட்டு வெற்றி ஈட்டத்தக்க கட்சி என்ற வலிவு வளர்ந்திருக்கிறது.

கொள்கையை இழந்துவிட்டது காங்கிரஸ், எனவே, அதனுடைய வீழ்ச்சி நிச்சயம் என்பது பொதுவான உண்மை என்றபோதிலும், கொள்கைச் சிறப்புடன் காங்கிரஸ் இருந்து வந்தபோது, அதனுடன் நெருங்க முடியாத நிலையினில் இருந்து வந்த பலர், கொள்கையைக் காங்கிரஸ் இழந்துவிட்ட பிறகு, அச்சமற்று அதிலே சேர்ந்துகொள்ள முன்வந்தனர்.

அவர்கள், ஓட்டு வேட்டையாடும் வலிவினைக் காங்கிரசுக்குப் புதிதாகச் சேர்த்துக்கொடுத்துள்ளனர்.

மகாத்மாவின் காலத்தில் அதன் தூய்மை காரணமாகக் காங்கிரசிடம் மக்கள் "பக்தி' செலுத்தினர். காங்கிரசின் வலிவு மிகுந்திருந்தது.

காங்கிரசின் கொள்கை புதையுண்ட பிறகு, அதிலே புகுந்துகொண்ட புதியவர்கள், இலாப நோக்கத்துடன், திட்டமிட்டு, காங்கிரசுக்கு வலிவு ஊட்டியுள்ளனர்.

காந்தியார் காலத்துக் காங்கிரஸ், மக்களின் இதயத்தை வென்றிடும் வலிவு கொண்டிருந்தது.

கொள்கையை இழந்துவிட்ட காரணத்தால் காங்கிரசுக்கு, முன்பு இருந்த வலிவு இல்லை என்று நாம் கூறும்போது, தம்பி! மக்களின் இதயத்தை வென்றிடும் வலிவு இல்லை என்பதைத்தான் எண்ணிச் சொல்கிறோம்.

கொள்கை இழந்த பிறகு காங்கிரசைத்

தமது கூடாரமாக்கிக் கொண்டவர்கள், மக்களின் இதயத்தை வென்றிடும் வல்லமையைக் காங்கிரஸ் பெறும்படி செய்யவில்லை; அவர்களால் முடியாது; ஆனால், அவர்கள் மக்களின் "ஓட்டுகளை'த் தட்டிப் பறித்திடும் வலிவினைக் காங்கிரசுக்குத் தேடிக் கொடுத்துள்ளனர்.

பத்தினி கெட்டால் பளபளப்பு அதிகமாகும், துவக்கத்தில்! இறுதியில் இழிவு நாசம்! ஆனால், இடையிலே ஒரு புது மினுமினுப்பு, குலுக்கு, தளுக்கு ஏற்படும்.

காங்கிரசைத் தமது கூடாரமாக்கிக் கொண்டவர்கள் அதனுடைய பழைய புனிதத்தன்மையை மாய்த்துவிட்டனர்; ஆனால் ஒரு புதிய பளபளப்பைத் தந்துள்ளனர்;

அந்தப் பளபளப்பு விவரமறியாதாரை

மயக்கவல்லது என்பதனை மறந்துவிடக்கூடாது.

தனிப்பட்ட முறையில் தாக்கும் நோக்குடன் அல்லது நிலைமையை விளக்குவதற்காகக் கூறுகிறேன்; காங்கிரஸ் தூய அமைப்பாக இருந்தபோது, பழைய கோட்டைப் பட்டக்காரரும், சங்கரண்டாம் பாளையத்தாரும் பூண்டி வாண்டையாரும், மூப்பனாரும் மற்றவர்களும் அதிலே இல்லை. அது, சிறை செல்ல, சொத்து இழந்திட, தடியடி பட, துப்பாக்கிக் குண்டடி ஏற்க அழைத்த காங்கிரஸ்.

எங்குச் செல்கிறோம் என்றும் தெரியாது, என்னென்ன இடர்ப்பாடுகள் என்பதும் புரியாது. எத்தனை நீண்ட பயணம் என்ற கணக்கும் அறியாது என்ன கிடைக்கும் என்று நினைக்கவும் முடியாது, ஒரு தூய தொண்டாற்றுகிறோம், இதயம் கூறுகிறது,

அதன்படி நடக்கிறோம் என்று மட்டுமே உணர்ந்து பலர் காங்கிரசில் ஈடுபட்ட காலத்தைக் குறிப்பிடுகிறேன்.

அப்போது, வ. உ. சிதம்பரனாரும், திருப்பூர் குமரனும், சர்தார் வேதரத்தினமும் தேவைப்பட்டனர்; கிடைத்தனர்.

அவர்கள் காலத்துத் தூய்மை மங்கிற்று; மடிந்தது; காங்கிரஸ் ஒரு கட்சியாக வடிவமெடுத்தது; அரசியல் ஆதாயம் தரத்தக்க அமைப்பாயிற்று; வாண்டையாரும் பட்டக்காரரும் நெடும்பலத்தாரும் சேதுபதியாரும் காங்கிரசிலே சேர முடிந்தது. அவர்கள் சேர்ந்ததால் மக்களின் இதயத்தை வெல்லும் சக்தியைக் காங்கிரஸ் இழந்தது; ஆனால், மக்களிடம் உள்ள "ஓட்டுகளை' மயக்கியோ மிரட்டியோ பெற்றிடும் வலிவினை அந்த வித்தையில் மெத்தத் தேர்ந்தவர்களான அவர்கள் காங்கிரசுக்குக் கொடுத்துள்ளனர்.

இந்தக் கணக்கினை நாம் கவனிக்காமலிருப்பது தவறு; மிக மிகத் தவறு.

பழைய கோட்டைப் பட்டக்காரரால், உப்புக்காய்ச்ச முடியவில்லை, சட்டம் மீறமுடியவில்லை, கைராட்டை சுற்ற முடியவில்லை, வரிகொடா இயக்கம் நடத்த முடியவில்லை; ஆனால், அவரால் இன்று, தம்மைப் பெரிய புள்ளி என்றும் பட்டக்காரர் என்றும் விளக்கிக்கொள்வதன் மூலம் ஏற்படும் செல்வாக்கைப் பயன்படுத்தி ஓட்டுகளைப் பெற்றுத் தந்திட முடிகிறது.

இத்தகையவர்கள் நிரம்ப உளர், இன்றைய காங்கிரசில்; அதன் காரணமாக, இதயத்தைப் பெறமுடியாத நிலையைப் பெற்ற காங்கிரசினால், ஏழையின் ஓட்டுகளைத் தட்டிப் பறித்துக் கொள்ளும் புதிய வலிவினைப் பெறமுடிந்திருக்கிறது.

இதயத்தை வென்றிடும் வல்லமையைக் காங்கிரஸ் இழந்து விட்டது என்பது மட்டுமல்ல, மக்களின் இதயத்தை வென்றிடும் தன்மை கழகத்திடம் வளர்ந்துகொண்டு வருகிறது.

மக்களின் இதயத்தை வென்றிடும் வல்லமையையோ காங்கிரஸ் இழந்துவிட்டது; மக்களின் இதயத்தை வென்றிடும் நிலையோ கழகத்துக்கு இருக்கிறது, இந்நிலையில் காங்கிரசால் கழகத்தைத் தோற்கடிக்க முடியுமா என்ற எண்ணம் நமக்கு.

இந்த வாதத்தில் தவறு இல்லை; பொருள் இல்லாமற் போகவில்லை, தவறு எங்கே இருக்கிறது என்றால், தேர்தல் களம் என்பது, முழுக்க முழுக்க இதயத்தை வென்றிடும் இடம் என்று நினைத்துக்கொள்வதுதான்.

□

”சரியல்ல என்று தெரிகிறது என்றாலும்

செய்ய வேண்டி இருக்கிறதே''

"நான் என்ன செய்ய! என் நிலைமை அவ்விதம் ஆகிவிட்டது''

"விருப்பத்தோடா நான் ஆதரவு கொடுத்தேன்!'' இவ்விதமான பேச்சைத் தேர்தல் சமயத்திலே கேள்விப் படலாம்,

□

"அந்தக் கட்சிக்காக அல்ல, நிற்கிறாரே அவர் எனக்கு மிகவும் வேண்டியவர்.''

"நிற்கிற ஆள் எனக்குத் தெரியாது, ஆனால், கம்பெனி முதலாளி அவர் பக்கம்; நான் வேறு பக்கம் இருக்க முடியுமா?''

"என்ன செய்வது, கடன் கொடுத்தவன், கழுத்தின்மீது கத்தியை நீட்டுகிறான்; இந்தத் தேர்தலில் அவன் பக்கம் நான் இருந்தால்தான், தலை தப்ப முடியும்.''

”என்னவோ என் கஷ்டம் போக ஏதாவது வழி கிடைக்காதா என்று பார்க்கிறேன். கொள்கை கோட்பாடு என்று பேசிக்கொண்டிருந்தால், என் குடும்பத்தைக் கவனிக்கவேண்டுமே! பெரிய மனிதர் வாக்குக் கொடுத்திருக் கிறார், உதவி செய்வதாக. அதனால்தான் அந்தப் பக்கம் இருக்கிறேன்.’’

”நம்ம சம்பந்திக்கு வேண்டியவராம். நான் அவர் பேச்சைத் தட்டி நடக்க முடியுமா?’’

”என் மானம் சொத்து எல்லாம் இந்த வழக்கிலே நான் வெற்றி பெறுவதைப் பொறுத்து இருக்கிறது. இதற்கு முக்கியமான சாட்சி ஒருவர். அவர் வந்து சொல்கிறார். இன்னாருக்குத்தான் ஓட்டுப்போட வேண்டும் என்று. எப்படி நான் மீற முடியும்?’’

இவ்விதம் பேசுபவர்களையும், தம்பி! தேர்தலின்போது காணலாம்.

□

தேர்தலின்போது அனைவருமே இதயத்தின் கட்டளைப்படி நடந்துகொள்வார்கள் என்று எண்ணிவிட முடியாது. கட்டளை, கனிவுரை, எச்சரிக்கை, வரம், வாக்குறுதி, மிரட்டல் எனும் பல்வேறு வகையின கிளம்பும், பல்வேறு முனைகளிலிருந்து.

□

"பார்ப்போமே, பயல் என்னை மீறி நடக்கிறானா என்பதை''

"கண்டிப்பாகச் சொல்லிவிடு! இதிலே என் சொல்லை மீறி அவன் நடந்தால், பிறகு எவ்விதமான பந்தமும் பாசமும் எனக்குக் கிடையாது என்பதை.''

"என்ன ஏகப்பட்ட ஆட்டம் போடுகிறானாமே! கேட்டு விட்டுவா, சொத்தை ஏலத்துக்குக்

கொண்டு வரவா என்பதை.''

என்று இவ்விதமாக மிரட்டித் திரியும் பேர்களைக் காணலாம் தேர்தல் காலத்தில்.

மற்றச் சமயத்தில் இதயம் பேசும் - தேர்தல் சமயத்தில் இதயம் தூங்கிவிடும் அளவுக்கு மயக்கமூட்டும் காரியம் நடைபெறும். அதைச் செய்திட வல்லவர்கள் இருக்கிறார்கள்.

மக்களின் இதயம் நமது பக்கம், ஆகவே, தேர்தலில் வெற்றி நமது பக்கந்தான் என்று எண்ணுவது இயற்கை; வாதம் நியாயமானது. ஆனால், தேர்தல் நேரத்தில் நீதியைக்கூடச் சாய்த்துவிடத்தக்க வல்லவர்கள் வரிந்து கட்டிக்கொண்டு கிளம்பி விடுவார்கள்.

கட்சியின் சிறப்பு, கொள்கையின் தூய்மை, வேட்பாளரின் திறமை என்பவைகளைக் காட்டி ஆதரவு திரட்டுவது மேடைகளில், நம்முடைய முறை.

வீட்டுக்குள்ளே உட்கார்ந்து முன்பின் தொடர்புபற்றிப் பேசி, இன்னாருக்கு இன்னார் வேண்டியவர், இதைச் செய்தால் இது கிடைக்கும் என்பதுபற்றி விளக்கி,

எனக்காக இதைச் செய்ய வேண்டும். இதைச் செய்தால் இன்ன பயன் உண்டு, இதைச் செய்யச் சொல்லி "இவர்' சொல்லி அனுப்பியிருக்கிறார்.

எப்படியும் என் பேச்சை நீங்கள் தட்டி நடக்க மாட்டீர்கள் என்று கூறிவிட்டு வந்திருக்கிறேன். என் மதிப்பு உங்கள் கையிலேதான் இருக்கிறது.

கூப்பிட்ட குரலுக்கு ஓடிவருபவன், மறந்துவிடாதீர்! இந்த உதவியை நான் என்றும் மறக்கமாட்டேன்.

என்று இச்சகம் பேசியும் நச்சரித்தும், ஏற்கனவே கொண்டுள்ள நினைப்பை

மாற்றிக்கொள்ளச் செய்வதிலே தனித்திறமை பெற்றவர்கள், தேர்தல் சமயத்திலே சுறுசுறுப்படைகிறார்கள்.

□

யார் வெற்றி பெற்றால் எங்களுக்கு என்ன? எந்தக் கட்சியினால் எங்களுக்கு என்ன? எங்களுக்கு வேண்டியது மூவாயிரம், கோயில் கோபுரம் கட்டி முடித்தாக வேண்டும். அந்தத் தொகை கொடுப்பவருக்கு இந்தக் கிராமத்து ஓட்டு முழுவதும்.

என்று பேரம் பேசிடும், பெரியவர்களைப் பார்க்கலாம் தேர்தல் காலத்தில்,

□

இப்பத்தானய்யா, நம்ம கிராமத்துக்கு நல்ல காலம் பிறக்கப்போவுது. ஏரி மதகு புதிதாக வேணும் என்று இந்தப் பத்து வருஷமாக முயற்சி செய்கிறோம் அல்லவா!

நேற்றுத்தான் அதற்கு வழி பிறந்தது. தாசில்தார் ஒத்துக்கொண்டு விட்டார். நாளைக்கு வருகிறார்கள் அளவு எடுக்க! நம்ம கஷ்டம் தீர்ந்தது.

பரவாயில்லையே, புதுத் தாசில்தார் நல்லவர் போலிருக்கிறது. நம்ம நியாயம் அவருக்குப் புரிந்திருக்குது.

புரியும்படி செய்தாரு கதம்பத்தூராரு. . .

கதம்பத்தூராருக்கு நம்ம ஏரி மதகுபற்றி என்ன அக்கறை?

அவருக்கு எதுக்காக அக்கறை ஏற்படும்? நான் ஏற்படுத்தி வைத்தேன் அந்த அக்கறையை.

அது எப்படி? உன்னோடு பேச்சுக்கு அவர் கட்டுப் படுவானேன்?

அவரோட பேச்சுக்கு நாம கட்டுப்படுவதாக

ஒப்புக் கொண்டதாலேதான். . .

அது என்ன ஏற்பாடு? விளங்கச் சொல்லேன்!

நம்ம கிராமத்து ஓட்டு அவ்வளவும், அவர் கட்சிக்கு நாம போடணும்; ஒத்துக்கொண்டு வந்திருக்கிறேன்.

இவ்விதமாகக் கிராமத்துப் பெரியதனக்காரர் ஊர் கூட்டிப் பேசிவிடுவதும் உண்டு, பல இடங்களில்.

□

"உன்னோட கட்சி கொள்கை கொடி எல்லாத்தையும் நீ அடுத்த தடவைக்குப் பார்த்துக்கொள்ளு. இந்தத் தடவை நான் சொல்றபடி செய்துவிடு! காரணம் இருக்குது''

என்று பேசி, தன் மகனை மடக்கிப் போட்டுவிடும் தகப்பனாரைக் காணலாம்

தேர்தல் நேரத்தில்.

□

தர்மபுரித் தேர்தலின்போது ஒரு கிராமம் - நமக்கு ஆதரவான இடம் - அங்கு ஒரு இளைஞர், கழகத்தவர் - நமக்காகச் சுறுசுறுப்பாகப் பணியாற்றிக்கொண்டிருந்தார் ஒருநாள், சேலம் மாவட்டத்துக் காங்கிரஸ் தலைவர்களிலே ஒருவர் அவரைச் சந்தித்தார்; கூட்டுறவுத் துறையிலே அவர் பெரியவர்; கழக இளைஞர் கூட்டுறவுத் துறையில் தொடர்புள்ளவர். அந்தத் தொடர்பையே காரணமாகக் காட்டி, அந்தக் காங்கிரஸ் தலைவர், கழக இளைஞரைத் தன் பக்கம் இழுக்கும் தந்திரத்தில் ஈடுபட்டார்,

”என்னப்பா! நாம இருவரும், கூட்டுறவுத் துறையிலே உள்ளவர்கள். நமக்குள்ள எந்த

விதத்திலும் சச்சரவு பேதம் வரக்கூடாது. கூடிப்பழகி வருபவர்கள்,''

"கூடிப் பழகுவதற்கும் கட்சிக்காக ஓட்டுக் கேட்பதற்கும் என்னங்க சம்பந்தம்? நான் என் கட்சிக்கு வேலை செய்வதும், நீங்க உங்க கட்சிக்கு வேலை செய்வதும், நம்ம இருவருடைய சிநேகிதத்தையும் எப்படிங்க பாதிக்கும்.''

"நாம இரண்டு பேரும், வேறு வேறு கட்சி அல்ல. இருவரும் ஒரே கட்சி, கூட்டுறவுக் கட்சி; தெரிகிறதா!''

"கூட்டுறவு ஒரு கட்சியாகுங்களா! எந்தக் கட்சிக் காரரும் அதிலே இருக்கலாமே. . .''

"இருக்கலாம்; ஒப்புக்கொள்கிறேன்; ஆனா. நாம இருவரும் தேர்தலிலே வேறு வேறு கட்சிக்கு வேலை செய்தா எப்படியும் நமக்குள்ளே பகை உண்டாகிவிடும், அது நம்ம

கூட்டுறவுத் தொடர்பையே கெடுத்துவிடுமே. . .''

"எனக்கு என்று ஒரு கட்சி இருக்குதுங்களே.''

"கழகம்! தெரியும்! இப்ப நடக்கப்போற தேர்தலில் கழகமே ஜெயித்தாலும், சர்க்காரா மாறப்போகுது? பொதுத் தேர்தலின்போது எந்தக் கட்சி மெஜாரட்டியாக வருதோ அது சர்க்காரை அமைக்கும். பொதுத் தேர்தலின்போது நீ உன்னுடைய கழகத்துக்கு வேலை செய்து, வெற்றி தேடிக் கொடுத்து, சர்க்கார் அமைத்துக்கொள்; நான் தடுக்க வில்லை; வேண்டாமென்று சொல்லவில்லை. இப்ப நடப்பது இடைத் தேர்தல். இதிலே, எனக்குக் கொஞ்சம் மதிப்புக் கொடுத்தா, என்ன கெட்டுவிடும், யோசனை செய்து பாரு! இந்தத் தேர்தலில் என் கட்சி ஜெயித்தால் எனக்கு மதிப்பு - எனக்கு மதிப்பு என்றால்,

நாம நம்முடைய கூட்டுறவுத் துறையை நம்ம மாவட்டத்திலே மேலும் வளரச் செய்ய முடியும், எவ்வளவோ செய்யவேண்டி இருக்குது. செய்ய வேண்டுமானால் என் வார்த்தைக்கு மதிப்பு உயர வேண்டும், அது உயர, என்ன வழி? இந்தத் தேர்தலிலே நான் வெற்றிபெற்றுக் காட்ட வேண்டும். அதனாலேதான் உன்னைக் கேட்டுக்கொள்கிறேன், இந்த முறை கட்சிக்காகப் பிடிவாதம் பிடிக்காதே.''

"எப்படிங்க முடியும். நாலுபேர் என்ன சொல்லுவாங்க.''

"சரி, நீ காங்கிரசுக்கும் வேலை செய்யாதே, கழகத்துக்கும் வேலை செய்யாதே. ஒதுங்கி இருந்துவிடு.''

இவ்விதம் மேடையில் பேச முடியுமா! பேசவேண்டிய இடத்தில் பேசினார் அந்தக் காங்கிரஸ் தலைவர்; கழக இளைஞரும்

ஒதுங்கிக்கொண்டதாகக் கேள்வி.

□

இதயத்தை வேலை செய்யவிடாமல் தடுத்திடும் முறைகள், புதிது புதிதாகக் கிடைத்திடும் வேளை, தேர்தல் காலம்.

மக்களின் இதயம் நம்மிடம் என்ற எண்ணத்தை மட்டுமே நாம் கொண்டிருந்தால் போதாது; அதனைக் கெடுத்திடத்தக்கன தேர்தல் நேரத்தில் என்னென்ன கிளம்பக்கூடும் என்பதனைக் கண்டறியவும், தடுத்திடவும், அவைகளை மீறி, வெற்றி கிடைத்திடவுமான முறையில் பணியாற்ற வேண்டும்.

□

காங்கிரஸ், ஆளுங்கட்சியாகிவிட்ட பிறகு, ஆதாயம் தேடுவோர், தாமாக அதிலே நுழைந்துகொள்ளவும், நட்புத் தேடவும்

முற்பட்டுவிட்டனர்.

காங்கிரஸ் ஆட்சி நடத்தினால் மட்டுமே, தமது நிலைமை பாதுகாக்கப்படும் என்று உணர்ந்த செல்வவான்கள், தேர்தலின் போது, காங்கிரசின் பக்கம் திரண்டு நிற்கிறார்கள்.

மகாத்மாவின் காங்கிரஸ் தனது தூய்மையைக் காட்டி மக்களின் இதயத்தை வென்றது என்றால், ஆளுங்கட்சியாகிவிட்ட காங்கிரஸ், தன்னிடம் உள்ள சலுகை தரும் சக்தியைக்காட்டி ஆசை ஊட்டவும் கெடுத்துவிடும் வலிவைக் காட்டி மிரட்சியை மூட்டிவிடவும் செய்கிறது.

காந்தியாரின் காங்கிரசைக் கண்ட பொதுமக்களின் கண்களில் நீர் துளிர்த்தது - பக்தியால், பாசத்தால்.

இன்றைய காங்கிரசைக் காணும் பொதுமக்களின் கண்களில், மிரட்சி

தெரிகிறது, எதிர்த்தால் என்ன கெடுதல் வந்துவிடுமோ என்ற எண்ணத்தால். இந்த நிலையை மீறி, இதயம் பேசவேண்டும்; எளிதானது அல்ல!!

தம்பி! நான் குறிப்பிட்டுக் காட்டினேனே, பட்டக்காரர், வாண்டையார், நெடும்பலத்தார் என்றெல்லாம்: அவர்களின் "ரகம்' ஒவ்வொரு வட்டத்திலும் உண்டு. அவர்களில் பெரும்பாலோர் முன்பு காங்கிரசை எதிர்த்து நின்றவர்கள், தங்கள் நிலைமைகளை, சொத்து சுகத்தை, அதிகாரம் அந்தஸ்துகளைக் காப்பாற்றிக் கொள்ள. அதனாலே மிகுந்த கஷ்ட நஷ்டத்துக்கு ஆளானவர்கள்.

அவர்களைக் காங்கிரஸ் ஏற்றுக்கொண்டது. தன் தூய்மையை இழந்ததால்.

காங்கிரசில் தங்களுக்கு இடம்

கிடைத்ததும் அதனை எதிர்த்து எதிர்த்து எரிச்சலும் ஏமாற்றமும் கொண்டவர்கள், இது பொன்னான சந்தர்ப்பம் என்று கண்டுகொண்டனர்; எதை எதை. காங்கிரசை எதிர்த்தபோது பெற முடியாமல் தவித்தார்களோ, அதனையும், அதனைவிட மேலானவற்றையும் காங்கிரசில் இருந்துகொண்டு அவர்களாலே பெற முடிகிறது என்றால், அவர்களுக்கு காங்கிரஸ் கசக்குமா! அந்தக் காங்கிரசை வலிவு படுத்துவதும் அவர்களுக்கு நஷ்டமா!

காமராஜர் நல்லவர், பச்சைத் தமிழர். ஆகவே நான் காங்கிரசை ஆதரிக்கிறேன் என்று பெரியார் சொன்னாலும், அவர் காங்கிரசை ஆதரிப்பதற்கான உண்மையான காரணம் எனக்குத் தெரியும்!! எனக்குத் தெரியும் என்பது அவருக்கும் தெரியும்!!!

யாராருக்காகப் பெரியார், வாதாடி,

அவர்களின் நிலைமைகளைக் காப்பாற்றக் காங்கிரசுடன் போராடிப் போராடி வந்தாரோ, அவர்களில் பெரும்பாலானவர்கள் காங்கிரசிலே சேர்ந்து எல்லா வாய்ப்புகளையும் பெற்று, நிம்மதியாக, நிலை உயர்ந்து இருக்கக் காண்கிறார். அவர்களுக்கு இந்த இடம் கொடுத்திருப்பதால், காங்கிரசை ஆதரிக்கிறார். வேறு காரணம் யாவும், திறமையான வாதம்! வேறில்லை!

ஒரு உதாரணம் பாரேன்! தஞ்சைத் தரணியில் நெடும்பலம் சாமியப்பாவின் நிலை காப்பாற்றப்பட, அவரை எதிர்த்து வந்த காங்கிரசைப் பெரியார் மிகப் பலமாகத் தாக்கி வந்தார். இப்போது நெடும்பலத்தாரின் திருக்குமாரன் காங்கிரசில் புகுந்து, தந்தை பெற முடியாதனவற்றைக்கூடப் பெற்று ஒளியுடன் விளங்குகிறார். இந்த ஒளி மங்கிவிடக்கூடாது என்பதற்காகப் பெரியார்,

இப்போது இந்த ஒளியைத் தந்துதவும் காங்கிரசை ஆதரிக்கிறார். எட்டும் எட்டும் பதினாறுதான், பத்தும் ஆறும் பதினாறுதான்; கணக்கு வகைதான் வேறு, முடிவு ஒன்றுதான்.

பெரிய புள்ளிகளின் கணக்கு எப்போதும் இந்தவிதமாகத் தான் சோடையாக இருப்பதில்லை. காங்கிரசை எதிர்த்தனர், சுவையும் பயனும் கிடைக்கும் காலம் வரையில் - வெள்ளைக் காரன் துணை இருக்கும் வரையில். பிறகு காங்கிரசை ஆதரித்து, சுவையும் பயனும் பெறுகின்றனர்.

அவர்கள் இதைப் பெற இழந்தது என்ன? கிளாஸ்கோ மல்லும் சரிகைத் தொப்பியும்! பெற்றது என்ன? மந்திரி வேலை வரையில்! விவரம் தெரியாதவர்களா! அவர்களுக்கே உரிய கணக்குத் திறமையுடன் காரியமாற்றுபவர்கள் இந்தக் கனதனவான்கள் - நடந்த நிகழ்ச்சி ஒன்று

நினைவிற்கு வருகிறது.

ஒரு நண்பர் - குறிப்பிடத்தக்க புள்ளி - பஸ் முதலாளி - பத்து ஆண்டுகளுக்கு முன்பு, கிளாஸ்கோ மல் வேட்டி உடுத்திக் கொண்டு பாப்ளின் சட்டை போட்டுக்கொண்டு பட்டைக்கரை சரிகை அங்கவஸ்திரம் போட்டுக்கொண்டு வந்தார், என்னைக் காண! தெருத் திண்ணையில் உட்கார்ந்தோம் பேச.

முனிசிபாலிடி, பஞ்சாயத்து இவற்றின் உறுப்பினர்களாலே தேர்ந்தெடுக்கப்பட்டு சட்டமன்ற மேல் அவைக்குச் செல்லும் தேர்தலில் தாம் நிற்க விரும்புவதாகச் சொன்னார்; என் உதவி கேட்டார்.

எனக்கு வேண்டியவர்கள் அந்த அமைப்புகளிலே அதிகம் கிடையாது. அவருக்கும் தெரியும். ஆனாலும், தேர்தல் என்றால் எல்லோரையும் பார்க்க வேண்டுமே!

அந்த முறைப்படிப் பார்த்தார் என்று எண்ணுகிறேன்.

நான் சொன்னேன் இந்த விதமான தேர்தலிலே நிறையச் செலவாகிறதாமே என்று.

அவர் பச்சையாகவே பேச ஆரம்பித்தார். எனக்கு ஓட்டுப் போடுபவர்கள், கேட்டால் பணம்கூடத் தர நான் தயார் என்றார்.

எவ்வளவு என்று கொடுக்க முடியும். நிறையச் செலவாகுமே என்றேன்.

உடனே அவர், மளமளவென்று கணக்குப் போட்டுக் காட்டினார்.

இருபதனாயிரம் செலவாகிறது என்றே ஒரு கணக்குக்கு வைத்துக்கொள்ளுவோம். என்ன நஷ்டம் அதனாலே - ஐந்து வருடம் மேல் அவை உறுப்பினராக இருந்தால்; மாதம் 150, வருடத்துக்கு 1800. ஐந்து வருடத்துக்கு 9000!

இதன்றிப் படி வேறு இருக்கிறது. இந்த ஐந்து வருஷத்தில் ஒரு பஸ் ரூட்டாவது கிடைக்காதா! எத்தனை மந்திரிகள், அதிகாரிகள் தொடர்பு ஏற்படும்! போதுமே! முன்னாலே போட்டுப் பின்னாலே எடுக்க வேண்டியதுதானே என்றார். தம்பி! எனக்குத் தூக்கிவாரிப் போட்டது. எனக்கு மட்டுமா, இப்போது உனக்குத் தூக்கிவாரிப் போடப்போகிறது பாரேன்! சொன்னபடியே செய்து காட்டினார் அந்தப் புள்ளி!!

சொன்னதற்கு மேலும் செய்து காட்டிவிட்டார்! காங்கிரசில் சேர்ந்து தலைவராகிவிட்டார்!

இப்போது அவர் மகாநாட்டுத் திறப்பாளர், அமைச்சர், பேச்சாளர்! அவர் அழைக்கிறார், அமைச்சர் செல்கிறார்; அவர் கேட்கிறார், அமைச்சர் அக்கறை காட்டுகிறார்! பெரிய காங்கிரஸ் தலைவராகிவிட்டார். முடிந்தது

பாரேன்! இவ்வளவு எளிதாக எப்படி ஏற்பட முடிகிறது இந்த உறவு? இதயம் இருக்கட்டும் ஒரு பக்கம் என்று இருசாராரும் இருந்துகொள்வதால்.

இப்படிப்பட்டவர்களின் முகாம், இன்றைய காங்கிரஸ். இவர்களின் துணையுடன் நடத்தப்படும் தேர்தலின்போது, மக்களின் இதயம் நமது பக்கம். ஆகவே வெற்றி நமக்குத்தான் என்று எண்ணி ஏமாறக்கூடாது. விழிப்புடனிருந்து, தேர்தலின் போது சுறுசுறுப்பாகப் பணியாற்றும் விந்தை மாந்தர்களைக் கவனித்தாக வேண்டும்; அவர்களில் சிலரை, அடுத்த கிழமை காட்டுகிறேன்.

அன்புள்ள

அண்ணாதுரை

25-4-1965

5. இதயம் வென்றிட. . . (2)

பர்மிட்டும் லைசென்சும் பகை போக்கிப் பாசத்தை ஊட்டிவிடும்!
மதில் மேல் பூனை நிலையில் சிலர் கிராமங்களுடன் நெருங்கிய தொடர்பு கொள்க!
மண்டலத்தின் தேர்தல் நேர வேலைகள்

தம்பி!

சென்ற கிழமை கூறியபடி தேர்தல் காலத்திலே விறுவிறுப்புடனும், மிகுந்த தந்திரத்துடனும் பணியாற்றிடும் சிலர் பற்றி எடுத்துக்காட்டுகிறேன். இவர்களை நமது தோழர்கள் சந்தித்திருக்கிறார்கள். ஊருக்கு ஊர் பெயர்கள் மாறிமாறி இருக்கும் - இயல்பு ஒரேவிதமானதாகவே இருக்கும்.

இவர்கள் தேர்தல் சமயம் தவிர மற்ற

வேளைகளில் பொது வாழ்க்கையில் இல்லாமல் இருக்கக்கூடும்; தேர்தலின்போது மட்டும் தீவிரமாகிவிடுவர்.

தர்மபுரித் தேர்தல் நடைபெறுவதற்கு முன்பு, நமது நண்பர்கள், காங்கிரசில் இன்னாரை வேட்பாளராக்கினால் இன்னின்னார் வேலை செய்யமாட்டார்கள். ஒதுங்கிக் கொள்வார்கள் என்றுகூடச் சொன்னார்கள், அவ்விதம் நம்பினார்கள்; நம்பிக்கை கொள்ளும்படி அவர்கள் பேசி யிருக்கிறார்கள் என்று தெரிகிறது.

ஆனால் தேர்தல் நாள் நெருங்க நெருங்க, ஒதுங்கி இருப்பார்கள், ஒப்புக்கு வேலை செய்வார்கள் என்று எவர்களைப்பற்றி நமது நண்பர்கள் கூறிக்கொண்டிருந்தார்களோ அவர்கள் அனைவரும் தீவிரமாக வேலை செய்தனர்.

அது தவறு என்று நான் கூறவில்லை; அது முறையுங்கூட.

ஆனால் அவர்கள், உண்மையில் ஒதுங்கிக்கொள்ள மாட்டார்கள் என்பதனை நமது தோழர்கள் முன்னதாகவே உணராமலிருந்தது, தவறு இல்லையா?

கசப்பு, வெறுப்பு, பகை எனும் உணர்ச்சிகள் கொந்தளிக்கும் உள்ளம் என்பதைக் காட்டிக்கொள்ளும் விதமாகத்தான் காங்கிரசில் உள்ளவர்களில் பலர், சாதாரண நாட்களில் பேசிக் கொள்வார்கள்; நம்மிடமேகூடப் பேசுவார்கள்.

□

இந்தப் பக்தவத்சலம் இப்படித் துப்பாக்கித் துரைத்தனம் நடத்துவது, அதற்கு நாங்கள் துதிபாடிக்கிடப்பது என்றால், அது எப்படி முடியும், எத்தனை நாளைக்கு முடியும்? □ நான்

கண்டிப்பாகச் சொல்லிவிட்டேன், "இந்தி ஆட்சி மொழியாகக்கூடாது. ஆங்கிலம் நீடித்திருக்க வேண்டும்; இதற்கு உத்தரவாதம் சட்டப்படி கிடைக்காத வரையில், நான் காங்கிரசுக்காக வாதாட முடியாது'' என்று.

□

காங்கிரசுக் கட்சி புனிதமானதுதான், ஆனால் கறையான் புற்றெடுக்கக் கருநாகம் குடிபுகுவதுபோலாகிவிட்டது நிலைமை. ஊரை அடித்து உலையில் போடுபவனெல்லாம் காங்கிரசிலே! இந்த நிலைமையில் உள்ள காங்கிரசை ஆதரிக்கும்படி ஏழைகளிடம் எப்படிக் கேட்டுக்கொள்ள முடியும்? முடியாது என்று கூறிவிட்டேன்.

சர்க்காரின் மந்தத்தனம், நிர்வாக ஊழல், இவ்விதம் இருக்கும்போது, எப்படி ஓட்டுக்

கிடைக்கும் காங்கிரசுக்கு என்று கேட்டேன், தலைவர்களை. எனக்கென்ன பயம்!

இவ்விதமாகவெல்லாம், நம்மிடமே வந்து பேசும் காங்கிரஸ் காரர்கள் உண்டு. உள்ளபடி அவர்களில் பலருக்கு மனக்குமுறல் கூட உண்டு. ஆனால், தேர்தல் சமயத்தில், அவர்களில் மிகப் பெரும்பான்மையினர், சட்டை மாட்டிக்கொள்கிறார்கள், காங்கிரசுக்கு ஓட்டு வேட்டையாடுவதில் மும்முரமாகி விடுகிறார்கள். ஏன்? அவர்களின் குமுறல் அடங்கிப்போகும் படியான நிலைமை ஏற்பட்டுவிடுகிறது; அதற்கு ஆயிரத்தெட்டு வழிகள் உள்ளன; ஆளுங்கட்சிக்கு மட்டுமே அந்த வசதிகள் உண்டு.

ஒரு சிறு சலுகை, மன எரிச்சலைக் குறைத்துவிடுகிறது.

ஒரு பர்மிட்டும் லைசென்சும், பகையைப்

போக்கிவிடுகிறது; பாசத்தை ஊட்டிவிடுகிறது.

□

அவரே தோளின்மீது கைபோட்டுக்கொண்டு உரிமையோடு பேசினார், என்ன! உன்னைப்பற்றி என்னென்னவோ சொல்லுகிறார்களே! காங்கிரசுக்கு வேலை செய்யப்போவதில்லை என்று சொன்னாயாமே. நான் நம்பவில்லை. கேள்விப்பட்டபோது திடுக்கிட்டுப் போனேன் என்று கூறினார். அவருடைய நிலைமைக்கு, வீடுதேடி வந்து என்னைப் பார்த்து, தோளின்மீது கைபோட்டுக்கொண்டு தோழமையுடன் பேசுவது என்றால் சாதாரணமா! அவர் அவ்வளவு தூரம் கேட்ட பிறகு நான் எப்படி மறுக்க முடியும்? மறுநாளே கிளம்பி வேலை தொடங்கினேன்.

என்று பேசிடும் உண்மைக்

காங்கிரஸ்காரரும் இருக்கத்தான் செய்கிறார்கள்.

□

ஆளுங்கட்சியை அடியோடு பகைத்துக்கொள்ளப் பலரால் முடிவதில்லை.

மயக்குமொழி கேட்டுப் பலியாகிவிடாத உறுதி பலருக்கு இருப்பதில்லை.

அச்சமும் ஆசையும் அலைக்கழிக்காத விதமான உள்ள உரம் இருந்தால் மட்டுமே, ஆளுங்கட்சியை எதிர்த்து நிற்க முடியும்.

வெற்றியோ தோல்வியோ, நான் என் கட்சிக்காக, எனக்குப் பிடித்தமான கொள்கைக்காக என்று கூறிடும் துணிவு, நேர்மையின்மீது கட்டப்பட்டிருக்க வேண்டும்.

தனித்து நிற்க நேரிட்டாலும் தயங்கமாட்டேன் என்று கூறிடும் துணிவு, ஒரு

கொள்கையிடமோ, அந்தக் கொள்கைக்காக உள்ள அமைப்பினிடமோ நாம் வைத்திருக்கும் பற்று இருக்கிறதே அதன்மீது கட்டப்பட வேண்டும்.

அத்தகைய இயல்பினர் நிரம்பப் பேர் இருக்கிறார்கள், கழகத்துக்கு நல்லாதரவு தந்து வருகிறார்கள். ஆயினும், பலர், மதில்மேல் பூனை நிலையில் இன்னமும் உள்ளனர். அவர்களே தேர்தல் காலத்தில், ஆளுங்கட்சி விரித்திடும் வலையிலே எளிதாக விழுந்துவிடுகிறார்கள்; சில்லறைச் சலுகைகளில் மயங்கிப் போகிறார்கள்.

வலை வீசுவதிலும் நாக்கில் தேன் தடவி விடுவதிலும் வல்லவர்கள், காங்கிரசுக் கட்சிக்காகத் தேர்தல் வேலை செய்வதற்கு நிரம்பப் பேர் உள்ளனர்.

தலைவர்களின் மேடை முழக்கங்களால்

சாதிக்க முடியாத காரியத்தை இந்தக் காரியவாதிகள் சாதித்துவிடுகிறார்கள்.

மேடையிலே நாம் இந்தப் பதினேழு ஆண்டு ஆட்சியிலே காணக் கிடைக்கும் கேடுபாடுகளை விளக்கிக் காட்டுகிறோம்.

இதனை மறுத்திட முடிவதில்லை காங்கிரஸ் தலைவர் களால்; மறுத்திட முன்வருபவர்கள், தங்களைப் பேச்சாளர்க ளாக்கிக்கொள்வதிலே மட்டுமே வெற்றி பெறுகிறார்கள். மக்களின் இதயத்தைப் பெறுவதிலே அல்ல.

இந்த முறையினால் மட்டுமே வெற்றி கிட்டிவிடாது என்று உணர்ந்துள்ள, ஊர் அறிந்தவர்கள் கிளம்புகிறார்கள். தனித்தனியே சந்திக்க, தித்திப்புப் பேச்சுத் தந்திட, மனக்குறையைப் போக்கிட! அதிலே நல்ல வெற்றி கிடைக்கிறது.

நாட்டாண்மைக்காரர் இருக்கிறார், ஊரூருக்கும், அவரும், நாம் நடத்தும் கூட்டத்திற்கு வந்திருந்து நாம் காட்டும் காரணங்களைக் கேட்டு, உண்மையை உணர்ந்து விட்டிருக்கிறார் என்று நாம் எண்ணிக்கொள்கிறோம். ஆனால், உண்மை என்ன? நாட்டாண்மைக்காரர் கூட்டத்திற்கு வருவதுமில்லை! கூட்டத்திற்கு வந்து நாம் சொன்னவைகளைக் கேட்டுச் சென்றவர்களும் அவரிடம் சென்று விளக்கம் கூறுவதில்லை.

இந்த நாட்டாண்மைக்காரரின் பேச்சை மீறி நடந்துகொள்ளும் இயல்பு, கிராமப்புறங்களில் அதிக அளவு இன்னமும் தென்படவில்லை, அரும்பு இருக்கிறது. சில இடங்களில் கருகிய மொட்டுக் களாகிவிட்டதையும் நான் கண்டிருக்கிறேன்.

அரசியல் கட்சிகளிடம் ஈடுபாடு கொண்டு, நாட்டு நிலைமைகளை அறிந்து,

அந்த நிலைமைகளைத் தக்க முறையில் திருத்தி அமைக்க வேண்டும் என்ற உரிமையும் கடமையும் தமக்கு உண்டு என்று உணர்ந்து செயல்படுவோர்களைப்போலவே, கிராமத்துத் தலைவர்கள் இருந்துவருவார்கள் என்று எண்ணிக் கொள்வது சரியல்ல; அப்படி எண்ணிக்கொண்டு கணக்குப் போடும்போதுதான், போட்ட கணக்குப் பொய்த்துப் போய்விடுகிறது.

ரூபாயின் மதிப்புக் குறைந்துவிட்டது. . . எனும் உண்மை விளக்கப்படும்போது அதற்குக் காரணமாக உள்ள ஆட்சியிடமும் அந்த ஆட்சியை நடத்தும் கட்சியிடமும் விவரமறிந்தவர்களுக்கு எரிச்சல் வருகிறது; அந்தக் கட்சிக்குத் தக்க பாடத்தைக் கற்பிக்க வேண்டும் என்று முடிவெடுக்கிறார்கள்.

ஆனால், ரூபாயின் மதிப்புக் குறைந்துவிட்டதே என்ற கவலையில்

அல்ல; வரவர கிராமத்திலே அவனவன் அவன் இச்சைப்படி நடந்துகொள்கிறான்; பெரியவர்கள் நாட்டாண்மைக்காரர்கள் ஆகியோரின் பேச்சின்படி நடப்பதில்லை என்ற கோபமும், தனது மதிப்புக் குறைந்து விடுகிறதே என்ற கவலையும் கிராமத்துத் தலைவருக்கு.

அவருடைய "அரசியல்', நாடு அறிந்த அரசியலோடு முழுக்க முழுக்கத் தொடர்பு கொண்டதல்ல.

சுட்டுத் தள்ளுகிறார்களாம் என்று கேள்விப்படும் போது அவருடைய மனம் பதறத்தான் செய்கிறது, அத்தகையவர்கள் ஆட்சியில் இருக்கக்கூடாது என்றுதான் எண்ணுகிறார், ஒரு கணம். மறுகணமோ நாலு பேர் நடத்திய பஞ்சாயத்திலே ஒப்புக் கொண்டுபோன குப்பன் அதன்படி நடக்கவில்லையே என்ற கவலை அவரைப்

பிடித்துக்கொள்கிறது.

அந்தக் கவலையின் முன்பு நாட்டை வாட்டிடும் அரசியல் பிரச்சினைகள் மங்கிவிடுகின்றன.

இந்த மனப்போக்கு மாற்றப்பட வேண்டும்; இது வெறும் மேடைப் பேச்சினால் மட்டும் மாறிவிடாது; கிராமத்துடன் நமது கழகத் தோழர்கள் தொடர்ந்து, நெருங்கிய தொடர்பு வைத்துக் கொள்வதன் மூலமாகவே, நிலைமையையும் நினைப்பையும் மாற்றிட முடியும்.

தர்மபுரியில் நான் கேள்விப்பட்டேன். ஒரு கிராமத்தில் முக்கியமானவரைக் காங்கிரஸ் தலைவர்கள் தமது பக்கம் சேர்த்துக் கொண்டார்கள் என்று.

யார் அந்தக் கிராமத்துப் பெரியவர்? என்று நான் கேட்டேன். மந்திரிக் கவுண்டர் என்று

சொன்னார்கள்.

தர்மபுரித் தொகுதியில் சில கிராமத் தலைவர்களுக்கு மந்திரிக் கவுண்டர் என்று பட்டப் பெயரே இருப்பதாக அறிந்து கொண்டேன்.

இவர்களைப் போன்றவர்களின் செல்வாக்குப்பற்றிய கணக்கு நாம்தான் மக்களின் இதயத்தை வென்றுவிட்டோமே என்ற நினைப்புடன் மட்டும் நாம் இருந்துவிடும்போது நமக்குப் புரிவதில்லை. இந்தக் கணக்கு நமக்குப் புரிய வேண்டும், தெளிவாக.

தேர்தல் நேரமாகப் பார்த்து ஆசை ஊட்டியும் அச்சமூட்டியும் எவரெவரை எப்படி எப்படி வளையச் செய்வது என்ற வித்தையில் வல்லவர்கள் நடத்திடும் நாடகத்தில் சில காட்சிகளை இனிக் காண அழைக்கிறேன்,

தம்பி!

□

முன்னாள் கள்ளுக்கடைக்காரர்:- போய்யா, போ! போ! காங்கிரசுக்காக வாதாட வந்துவிட்டாயா! எவ்வளவு கிடைச்சுது அதுக்கு. நாங்க எதுக்காகய்யா காங்கிரசுக்கு ஓட்டுப்போடணும், எங்க தலையிலே கல்லைப்போட்டுதே அதுக்காகவா; எங்க பிழைப்பிலே மண்ணைப் போட்டுதே அதுக்காகவா! என்னோட ஓட்டு காங்கிரசுக்குக் கிடையாது - நிச்சயமா - ஆமாம். என் வாயாலே காங்கிரசுக்கு ஓட்டுப்போடுன்னு ஒரு பயலுக்கும் சொல்லமாட்டேன் - நீ கையைப் பிடிச்சிக்கிட்டாலும் சரி, காலைத் தொட்டுக் கும்பிட்டாலும் சரி. . . .

மண்டலம்:- உங்களோட கோபத்துக்கான காரணம் எனக்கு நன்றாகப் புரியுது.

உங்கபேர்லே ஒரு துளியும் எனக்குக் கோபம் கிடையாது. இரண்டு தலைமுறையாக நடத்திக்கொண்டுவந்த தொழிலைக் கெடுத்துவிட்டதே காங்கிரஸ், மதுவிலக்குச் சட்டம் கொண்டுவந்து என்ற கோபம் உங்களுக்கு ஆனா. . . .

மு. க. க.:- ஆனா என்னய்யா ஆனா. . . . வழக்கமான உபதேசந்தானே? ஒரு சிலருக்குப் பண நஷ்டமென்றாலும் பல பேருக்கு நன்மை; புண்யகாரியம்; ஏழைகளோட குடும்பத்துக்கு நிம்மதி; இதைத்தானே சொல்லப்போறே. கேட்டுக் கேட்டுக் காதும் புளித்துப்போயிருக்குது. . . .

மண்டலம்:- அய்யய்யோ! நான் அந்தப் பழைய காடிப் பேச்சையா சொல்ல வந்தேன். மதுவிலக்குச் சட்டம் கொண்டு வந்தாகணும் என்று, ஒரே வற்புறுத்தல். மகாத்மா சொன்னதைக்கூட நிறைவேற்றாமல்

இருக்கலாமா, காங்கிரஸ் மந்திரிசபை என்கிற எண்ணம். அதனாலே கொண்டுவரப்பட்டது மதுவிலக்குச் சட்டம். . . .

மு. க. க.:- காரணம் சொல்றிங்களா, காரணம்! காரணத்தைச் சொல்லிவிட்டா, என் பெட்டியிலே காசு வந்து குவிந்துவிடுமா. . . .

மண்டலம்:- சொல்ல வந்ததை முழுவதையும் கேட்காமலே கோபம் பொங்கிவருதே உங்களுக்கு. கேளுங்க. வந்த புதுசிலே மகாத்மா பேச்சை மறந்துவிடக்கூடாது பாருங்க. . . . அதனாலே சட்டம் போட்டாச்சி. இப்ப, காங்கிரசிலே, மதுவிலக்குச் சட்டம் இருந்தாகவேணும்னு பிடிவாதம் பேசுகிற ஆசாமிகளோட தொகை குறைச்சலாகி விட்டுது. மதுவிலக்குச் சட்டம், எதிர்பார்த்த பலனைக் கொடுக்கல்லே என்கிற பேச்சு வலுவாகிவருது. . . .

மு. க. க.:- அதனாலே. . .! போலீசை நாலா பக்கமும் ஏவி வேட்டை ஆடிக்கிட்டு வர்ரிங்க. . . . அதைத்தானே சொல்றே. . .

மண்டலம்:- அதைச் சொல்லவில்லைங்க. . . . ஒரே அவசரம், ஆத்திரம்; பொறுமையாக் கேட்கவேண்டாமா. மதுவிலக்குச் சட்டம் பிரயோஜனமில்லை. அதை எடுத்துவிடலாம் என்று இப்ப ஒரு அபிப்பிராயம் உருவாகிக்கொண்டு இருக்குது. . .

மு. க. க.:- என்னது! என்னது! மதுவிலக்கு வேண்டாமென்று. . .

மண்டலம்:- மதுவிலக்குச் சட்டம் வேண்டாமென்று காங்கிரஸ் கட்சிக்குள்ளேயே இப்ப கருத்து வளர்ந்துகொண்டிருக்குது. கொஞ்ச நாளிலே இந்தக் கருத்துக்கு அமோகமான ஆதரவு கிடைத்துவிடும்

என்பதற்கான அறிகுறிகள் பளிச்சிட்டுக் காட்டுது. . .

மு. க. க.:- என்னாலே நம்பமுடியல்லையே, மகாத்மாவோட பேரைச் சொல்லிக்கொண்டு மக்களோட ஆதரவு தேடுவது காங்கிரஸ் கட்சி. மகாத்மா, மதுவிலக்குச் சட்டம் வேதம்னு சொல்லிவிட்டாரு. அப்படிப்பட்ட சட்டத்தை எப்படி எதிர்த்து ஒழிக்க முடியும். . . காங்கிரஸ் கட்சியாலே. . .

மண்டலம்:- இப்ப இருக்கிற காங்கிரசுக்கும் அப்ப இருந்த காங்கிரசுக்கும் உள்ள வித்தியாசம் தெரியாததாலே இவ்விதம் பேசத்தோணுது உங்களுக்கு. இப்ப இருக்கிற காங்கிரசிலே. மகாத்மா காந்தியை முன்னே எதிர்த்துக் கொண்டு இருந்தவங்களோட தொகைதான் அதிகம். தெரியுதுங்களா, அவங்களோட எண்ணம், மகாத்மா என்னமோ தன்னைப்போலவே எல்லோரும் தவசிகள்

என்ற நினைப்பிலே மதுவிலக்குச் சட்டம் கொண்டு வரச்சொல்லி கட்டளையிட்டார். ஆனா அது நடைமுறைக்கு ஒத்து வராது என்பதுதான்.

மு. க. க.:- அதனாலே. . . போட்ட சட்டம் போட்டபடியே தானேய்யா இருந்துவருது. . .

மண்டலம்:- இருந்துவருது, ஆனா எத்தனை நாளைக்கு? சட்டத்தை எடுத்துவிட வேண்டும் என்ற குரல் வலுவடையுது தெரியுங்களா? இப்பவே. மகாராஷ்டிரத்திலே கடைகளைத் திறந்தாச்சி.

மு. க. க.:- பம்பாய் பக்கத்திலேயா - அங்கே காங்கிரஸ் ஆட்சி இல்லையா. . .

மண்டலம்:- காங்கிரஸ் ஆட்சிதான் அங்கே நடப்பது, காங்கிரஸ் கட்சியே சொல்லிவிட்டுது மதுவிலக்குச் சட்டத்தைத் தளர்த்தவேண்டியதுதான் என்று. காங்கிரஸ்

கட்சி சொல்வதைக் காங்கிரஸ் ஆட்சி நிறைவேற்றுது, அதுதானே நியாயம். . .

மு. க. க.:- பம்பாய் பக்கத்திலே மதுவிலக்கு சட்டத்தை மாற்றிவிடச் சொல்லி அங்கே இருக்கிற காங்கிரஸ் சொல்லி இருக்குதா! பலே! பலே! துணிச்சல் பாருங்க அப்படி இருக்குது, அங்கே. இங்கே தொடை நடுக்கம் எடுக்குது காங்கிரசிலே உள்ளவங்களுக்கு. பஞ்சமாபாதகத்திலே ஒண்ணல்லவா குடின்னு பஜனைப் பேச்சுப் பேசறாங்க. . .

மண்டலம்:- எதுவரையிலே பேசுவாங்க? உங்களைப் போன்றவங்க, விவரம் தெரிந்தவங்க, காங்கிரசிலே சேராமப்படிக்கு ஒதுங்கி இருக்கிறவரைக்கும். உங்களைப் போன்றவங்க, காங்கிரஸ் கட்சியிலே சேர்ந்து பாடு படணும். . . விளக்கமாகப் பேசணும். . . இந்த மாதிரிச் சட்டமெல்லாம் வீணா பண நஷ்டத்தைத்தான் உண்டாக்கும் என்று

தைரியமாப் பேசணும்.

மு. க. க.:- பேச விடுவாங்களா? மதுவிலக்கு, மகாத்மாவோட திட்டம்; அதை எதிர்த்துப் பேசுவதற்கு எந்தக் காங்கிரஸ் காரருக்கும் உரிமை கிடையாது என்று உருட்டி மிரட்டிப் பேசுவார்களே. . . மண்டலம்:- அதுதான் முடியாது என்கிறேன். ஜனநாயகம் நடக்குது ஜனநாயகம். தெரியுதுங்களா? ஜனநாயக தர்மப்படி, அவரவர்களும் தமக்குச் சரி என்று பட்ட விஷயத்தைப்பற்றி அச்சம், தயை, தாட்சணியம் இல்லாமப்படிக்குப் பேசலாம். . . .

மு. க. க.:- கள்ளுக்கடைகளை மறுபடியும் திறக்க வேணும்னு கூடவா பேச முடியும்? அனுமதிப்பார்களா. . . .!

மண்டலம்:- அனுமதி மறுக்க யாருக்கு உரிமை! ஒருவருக்கும் கிடையாது.

கேட்கலாமே நீங்க, என்னப்பா நான் பொருளாதாரக் காரணத்துக்காகவும், உழைப்பாளிகளுடைய நன்மைக்காகவும் கள்ளுக் கடைகளை மறுபடியும் திறக்க வேண்டும் என்று சொன்ன உடனே, சரமாரியா கண்டனத்தை வீசுகிறீங்களே - காங்கிரசுக்கு இது ஆகாது அடுக்காது என்றெல்லாம்; அதே காங்கிரஸ்தானே புதுச்சேரியிலே அரசாளுது - அங்கே கள்ளுக்கடை கோலாகலமாக இருக்குதே. . . காந்திராஜ்யம் கடலூருக்கு மட்டுந்தானா, காரைக்கால் புதுச்சேரிக்குக் கிடையாதான்னு கேட்கலாமே. என்ன பதில் சொல்ல முடியும். உண்மையைச் சொல்லட்டுமா; உங்களைப்போல ஒரு பத்துப் பேர் இதுபோலப் பேசினா, மதுவிலக்குச் சட்டம் தன்னாலே போய்விடும். . .

மு. க. க.:- கள்ளுக்கடையைத் திறக்கச் சொல்லிக் கள்ளுக் கடைக்காரன்

சொல்கிறான் என்று கேலி பேச மாட்டாங்களா. . .?

மண்டலம்:- எப்படிப் பேசுவாங்க! நீங்க காங்கிரசுக்கு வெளியே இருந்துகொண்டு பேசினா, கண்டனம், கேலி, எதிர்ப்பு எல்லாம் கிளம்பும். நீங்களே காங்கிரசிலே சேர்ந்துவிட்டா! ஒரு பய நாக்கை வளைக்க முடியுமா! காங்கிரஸ்காரர்தான் அவரும் என்று நாங்க பேசமாட்டமா, உங்க பக்கம் ஆதரவு காட்டி. . . .

மு. க. க.:- நினைக்க நினைக்க இனிக்குதப்பா. . . .

மண்டலம்:- அதனாலேதான் சொல்றேன். இந்தத் தேர்தலிலே காங்கிரசுக்கு ஆதரவு காட்டி, வேலை செய்து காங்கிரசுக்கு வெற்றி தேடிக் கொடுங்க. பிறகு பாருங்களேன், நீங்க கூப்பிட்ட குரலுக்கு ஓடி வருது காங்கிரசு. . . .

மு. க. க.:- கள்ளுக்கடை நடத்தின ஆசாமி இப்பக் காங்கிரசிலே சேருகிறானே என்று ஊர் ஒரு மாதிரியாப் பேசாதா. . .

மண்டலம்:- வீணான சந்தேகம் உங்களுக்கு, உங்களைப் போன்றவங்க வேண்டியபேர் இப்பக் காங்கிரசிலே வந்து சேர்ந்திருக்காங்க. . .

மு. க. க.:- என்னைப்பற்றி, உங்க தலைவர்களுக்கு நல்லபடி சிபார்சு சொல்லி வைக்கணும். . .

மண்டலம்:- பாருங்க என்னோட வேலையை, போகப்போகப் புரியும். உங்க மனசோட போட்டு வையுங்க, இந்தத் தேர்தலிலே காங்கிரசுக்கு வெற்றி ஏற்படும்படி வேலை செய்து காட்டுங்க, உங்களையே இந்தப் பக்கத்துக்குக் காங்கிரஸ் தலைவராக்கிக் காட்டுகிறேன். . .

மு. க. க.:- நமக்கு எதுக்கப்பா தலைவர் வேலை. . . மண்டலம்:- நம்மாலே முடியாதுன்னு பார்க்கிறிங்களா. . .

மு. க. க.:- செச்சே! அப்படி நினைப்பேனா. எனக்குப் பலபேர் சொல்லியிருக்கிறாங்களே உன்னைப்பற்றி, உன் யோசனைப் படியே நடக்கறேன், சரிதானே. என் ஓட்டு உன்னோட காங்கிரசுக்குத்தான், திருப்திதானே. . .

மண்டலம்:- அதென்னங்க, உன்னோட காங்கிரசு என்று சொல்றிங்க. நம்மோட காங்கிரசு என்று சொல்லுங்க. . .

மு.க.க.:- நான் இன்னும் கதர்கூடப் போடவில்லை யேப்பா. . .

மண்டலம்:- அதனாலே என்ன! உடையிலே என்ன இருக்குது! எல்லாம் உள்ளத்திலே இருக்கணும்; இருக்குது.

மு. க. க.:- ஏம்பா! உன் பேச்சைக் கேட்டு,

காங்கிரசிலே சேர்ந்துவிடறேன். கட்டாயம் நாம் ஜெயித்தாகணும்; இல்லையானா ஊர் கேலி பேசும்.

மண்டலம்:- வெற்றியிலே இனி என்னங்க சந்தேகம். நீங்களே இனி காங்கிரஸ். வெற்றி பெற்றுக் காட்டாமலா இருப்பிங்க. . . இந்தப் பக்கத்து ஓட்டு மூணு ஆயிரம். . .

மு. க. க.:- ஆமாம்; நம்ம பேச்சுக்குக் கட்டுப்பட்டவங்க ஒரு ஆயிரம் இருக்கும், எவ்வளவு குறைச்சி மதிப்புப் போட்டாலும்.

மண்டலம்:- மற்ற இரண்டு மட்டும் என்ன! உங்களை மீறியா போய்விடும். . .

மு. க. க.:- எதிரி கால் அரைன்னு ஆசை காட்டினா. அதுக பல்லை இளிச்சிவிடுமேன்னு பார்க்கறேன்.

மண்டலம்: நீங்க இருக்கிற பக்கம், ஒருவன் வந்து கால் அரைன்னு பேரம்

பேசுவானா, அவ்வளவு துணிச்சலா! ரோஷம் கிளம்பிவிட்டா, ஓட்டுக்கு இரண்டு மூணுகூட எடுத்து வீசுவீங்கன்னு தெரியாதா எதிரிக்கு. . .

மு. க. க.:- ரோஷத்தைப் பார்த்தா, செலவு அதிகமாக ஆகி விடுமே. . .

மண்டலம்:- அந்தப் பயம் எதிரிக்கு இருக்குமேல்லோ. . . அவன் என்ன உங்களைவிடப் பெரிய புள்ளியா.

மு. க. க.:- புள்ளியாவது கள்ளியாவது; இப்பத்தான் கொஞ்சம் பசை! வரட்டும்பய, பார்த்துக்கொள்ளலாம். . .

மண்டலம்:- அப்ப, நான் வரட்டுங்களா! இனி இந்த வண்டிப்பேட்டை பக்கம், என்னுடையது அல்ல, உங்களுடையது. . .

மு. க. க.:- நீ போய், மற்ற இடத்தைக் கவனி தம்பி! வண்டிப் பேட்டை ஓட்டு, இப்பவே நம்ம

பெட்டியிலேன்னு வைத்துக்கொள்ளு. . .

மண்டலம்:- அதிலே சந்தேகம் என்ன! ஒரு ஐம்பது எடுங்க. . .

மு. க. க.:- ஐம்பது ரூபாயா. . . ஏம்பா! மண்டலம்:- ஆமாங்க! ஒரு செட்டு கதர் உடை அனுப்பி வைக்கிறேன். . .

மு. க. க.:- ஆமாம்பா! அப்படியே கொடிகூட. . .

மண்டலம்:- பட்டுத் துணியிலே உங்க மாளிகைக்கு. . . மற்ற இடத்துக்கு, துணியிலே சரிதானே,

மு. க. க.:- உனக்கா தெரியாது.

□

ஆலை அதிபர் ஆரிமுத்து:- மந்திரி வருகிறார் என்று சொன்னா, நாங்க என்ன மயக்கம் போட்டு விழுந்துவிடுவோம்னு

நினைப்பா, நாங்கள் விவரம் தெரியாதவர்கள் அல்ல. மந்திரி வரட்டும் மகராஜனாக, உனக்குச் சொன்ன பதில்தான் அவருக்கும். தேர்தல் செலவுக்கென்று எங்களைக் கசக்கிப் பிழிந்தால், நாங்கள் என்ன கதியாவது. நாங்கள் என்ன முன்புபோலவா இருக்கிறோம், எங்களைத்தான் வரி போட்டுப் போட்டு வாட்டி எடுக்கிறதே உங்க கட்சி சர்க்கார். . .

மண்டலம்:- நான், முன்பே இதைச் சொன்னேன். டி. டி. கே. க்குத் தந்திகூடக் கொடுத்தேன். . .

ஆலை:- உடனே வரியைக் குறைத்துவிட்டாராக்கும். விடப்பா அந்தப் பேச்செல்லாம். முன்பு போல எங்களுக்கு இலாபம் கிடையாது. ஏதோ ஒரு ஆயிரம் தொழிலாளிகள் பிழைக்க வேண்டுமே என்பதற்காக இதைக் கட்டிக்கொண்டு அழவேண்டி இருக்கிறது.

வருவதிலே ரூபாய்க்கு 14 அணா கொட்டிக் கொடுக்கணுமாம், அதற்குப் பெயர் சமதர்மமாம். . . சோஷியலிசமாம். . . இதற்கு நாங்களே பணம் செலவழித்துக் காங்கிரசை ஆளச்சொல்லி ஏற்பாடு செய்ய வேண்டுமாம். குழியை வெட்ட வேண்டியது நாங்கள் - எங்களை அதிலே போட்டு மூடி மண்ணைப் போடுவீர்கள் நீங்கள். எதற்காகப்பா, வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொள்கிறீர்கள். சோஷியலிசம் பேசுகிற கட்சி, முதலாளிகளிடம் வரலாமா பணம் திரட்ட. . .

மண்:- கோபம் அதிகமாக இருக்கும் என்று நான் எதிர்பார்க்கவே இல்லை. இப்போதுகூட, உங்களுக்கு வரிச்சலுகை செய்தது காங்கிரஸ் அரசாங்கம்தான்.

ஆலை:- அதற்குப் பெயர் சலுகையா. . . வரம்னு சொல்லப்பா! உனக்கு என்ன தெரியும் பொருளாதார சாஸ்திரம். உங்களோட

காங்கிரஸ் சர்க்காரின் கண்மூடித்தனமான போக்கினால், தொழில் அமைக்க மூலதனம் கிடைப்ப தில்லை. தெரியுமா! மூலதனம் எங்கே இருந்து வரும்? அந்தரத்திலிருந்தா? இலாபம் கிடைக்க வேண்டும்; அந்த இலாபத்திலிருந்துதானே மூலதனம் கிடைக்க முடியும். . .

மண்:- அதைக் காங்கிரஸ் சர்க்கார் ஒப்புக்கொள்கிறதே! ஒப்புக்கொள்வது மட்டுமா! கம்யூனிஸ்டுகளின் வாயை அடக்க இந்த வாதத்தைத்தானே பயன்படுத்துகிறது.

ஆலை:- பேசுவது சோஷியலிசம்; தேர்தல் நிதிக்கு. முதலாளிகள்!

மண்:- காங்கிரஸ் சொல்லும் சோஷியலிசத்தில், முதலாளி களுக்கும் இடம் உண்டு. அதுதானே அதிலே இருக்கிற அருமையே. மற்ற நாடுகளில்

சோஷியலிசம் என்றால் முதலாளிகள் இருக்கக்கூடாது என்பது திட்டம். இங்கே அப்படியா! முதலாளிகள் கட்டாயம் இருப்பார்கள், இருந்தாக வேண்டும் என்று திட்டவட்டமாகப் பேசுவது காங்கிரஸ் கட்சி. அதை மறந்துவிடலாமா?

ஆலை:- முதலாளி இருக்கலாம், ஆனால், அவனிடம் இலாபம் சேரக்கூடாது, அதற்கு ஆயிரத்தெட்டுத் தடைகள், விதிகள், சட்டங்கள். ஏன் இதைச் செய்துகொண்டு எங்களிடம் பணமும் கேட்கிறீர்கள்? எதற்காகக் கொடுக்க வேண்டும்? எங்கிருந்து கொடுக்க முடியும்?

மண்:- இப்படிப் பேசினால் நான் என்னத்தைச் சொல்ல முடியும். பணம் தேவை, பெரிய அளவில் காங்கிரசு முதலாளிகளை வாழ வைக்கிறது என்று பலமான பிரசாரம்; எதிர்ப்பு அதிகம். காங்கிரஸ் தேர்தலில் தோற்றுப்போனால், பிறகு சோஷியலிசத்

திட்டப்படி தொழில்களைத் தனிப்பட்ட முதலாளிகளிடம் இருக்கவிடமாட்டார்கள். . .

ஆலை:- அந்த இழவுக்காகத்தான் எங்களாலான உதவி செய்து தொலைக்கிறோம் காங்கிரசுக்கு. போன தடவை ஒரு கோடி ரூபாய் அளவுக்குக் கொடுத்திருக்கிறோம்.

மண்:- கொடுத்ததைக் கவனத்தில் வைத்துக்கொண்டுதான், காங்கிரஸ் சர்க்கார் உங்களுக்கு உள்நாட்டுக் கடன், வெளி நாட்டுக் கடன், சலுகை எல்லாம் கிடைக்கும்படி செய்தது. . .

ஆலை:- செய்ததோ இல்லையோ, அதுகூட இருக்கட்டும் ஒருபுறம். எங்களிடம் பணமும் வாங்கிக்கொண்டு காங்கிரஸ் தலைவர்கள் மேடைமீது ஏறிக்கொண்டு,

உற்பத்தியான செல்வத்தை நாங்களே உறிஞ்சிக் கொண்டோம் என்றா பேசுவது, மக்களுக்கு எங்கள் பேரிலே ஆத்திரம் வருகிறபடி. அவர்கள் சொத்து சிலரிடம் குவிந்திருப்பது ஏன் என்று கேட்டுப் புரட்சியை செய்ய மாட்டார்களா!

மண்:- விடுவோமா! இருக்கிற சொத்தையும் வருவாயையும் பங்கு போட்டுக்கொள்வது சோஷியலிசம் அல்ல என்று பேசி வருவது எந்தக் கட்சி? காங்கிரசல்லவா! சோஷியலிசத்துக்கே நாங்கள் புதிய வியாக்யானம் கொடுத்திருக்கிறோம்.

ஆலை:- என்ன வியாக்யானமோ! என்ன தத்துவமோ! புலியிலே புலி இது புதுப்புலி! சைவப்புலி! என்கிறீர்கள். போகட்டும், இப்போது என்னதான் எதிர்பார்க்கிறீர்கள்?

மண்:- உங்கள் தரத்துக்குத் தக்கபடி; எங்கள் தேவைக்கு ஏற்றபடி. . .

ஆலை:- உங்கள் தேவை நாளுக்கு நாள் வளரும்; நாங்கள் என்ன செய்வது? உங்களிடம் கண்டிப்பு இல்லை; உங்கள் கட்சியிலேயே சில பேர் கண்டபடி பேசுகிறார்கள், முதலாளிகளின் மனம் புண்படும்படி. கொள்ளைக்காரனை நடத்துவதுபோல நடத்துகிறீர்கள் - காட்டு கணக்கு என்கிறீர்கள் - பூட்டு கடையை என்கிறீர்கள் - நீட்டு நோட்டுகளை என்கிறீர்கள்.

மண்:- அப்படி ஒன்றும் நடக்காது. முன்பு ஏதாவது நடந்திருந் தாலும் இனி நடக்காது. இப்போதே டி. டி. கே. போட்டுள்ள புதிய திட்டத்தைப் பார்த்தீர்களல்லவா? கருப்புப் பணத்தில் ஒரு பகுதியைச் சர்க்காருக்குக் கொடுத்துவிட்டால், மற்றதற்குக் கணக்கு வழக்கு இல்லை என்று கூறி விட்டார். . .

ஆலை:- கருப்புப் பணம் உள்ளவர்களுக்கு அது சலுகையாக இருக்கலாம். என்னிடம் எது?

பணம்:- நான் சொன்னேனா? சொல்லுவேனா? எதிர்க்கட்சிக் காரர்கள்தான் அப்படிப் பேசி ஏசுகிறார்கள். இந்தக் காங்கிரஸ் சர்க்கார் கள்ளமார்க்கட்காரரிடம் சரணாகதி அடைந்துவிட்டது என்கிறார்கள். இதைப் பொதுமக்கள் புரிந்து கொண்டார்கள்; அதனால் இந்தத் தடவை காங்கிரசுக்கு ஓட்டுப் போடமாட்டார்கள் என்று பேசுகிறார்கள். இந்தத் தடவை, காங்கிரஸ் தோற்று விட்டால், கள்ளமார்க்கட்டுக்காரருக்குக் காங்கிரஸ் கட்சி உடந்தையாக இருக்கிறது என்ற குற்றச்சாட்டு உண்மை என்றாகிவிடும். ஆகவே, அந்த விதமான பழி விழாதிருக்கவும், முதலாளிகளைப் பூண்டோடு ஒழிக்கத் திட்டமிடுபவர்கள் ஆதிக்கம் பெறாதபடி தடுக்கவும், காங்கிரஸ் வெற்றி

பெற்றேயாகவேண்டும்.

ஆலை:- உம்முடைய வாதம் சரியோ, தவறோ, நான் நீண்ட காலமாகக் காங்கிரஸ் பக்தன். அதனால் என்னாலானது செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன். எப்போது வருகிறார் மந்திரி?

மண்:- நீங்கள் நாள் குறிப்பிட்டதும். . .

ஆலை:- என் தகப்பனாரின் தலைத் திவசம் இந்தப் புதன்கிழமை. . .

மண்:- நினைவு நாள் கொண்டாடிவிடுவோம். . . மந்திரி தலைமையில். . .

ஆலை:- அன்றைக்கோ, அமெரிக்கக் கூட்டுறவுடன் நான் ஆரம்பிக்க இருக்கும் புதிய தொழிற்சாலைக்கான அடிப்படைக் கல்நாட்டு விழாவும். . .

மண்:- நடத்திவிடுவது. . . இதற்கு ஒரு மந்திரி. . . அதற்கு ஒரு மந்திரி. . .

ஆலை:- மந்திரியிடம், தனியாகச் சில விஷயங்கள் பேச. . .

மண்:- ஒரு மணி நேரம் ஒதுக்கச் சொல்கிறேன், போதுமா?

ஆலை:- ஒரு முக்கியமான விஷயம். . . மந்திரி இங்கு வருகிற போது, என்னை மதிப்புக் குறைவாக நடத்திய அதிகாரி இருக்கிறாரே, தெரியுமே உங்களுக்கு, அவர் இருக்கக் கூடாது. . .

மண்:- மாற்றிவிட்டால் போகிறது, வேறு இடத்துக்கு.

ஆலை:- மகாத்மா காந்தியின் அருளால், தேர்தலில் நமக்கு ஜெயம் நிச்சயம். . .

மண்:- உங்களுடைய ஆசீர்வாத பலம்

உண்டு என்று தெரிந்த பிறகுதான், நான் தேர்தல் வேலையிலே ஈடுபட்டேன்.

□

முற்போக்காளர்:- என்ன இருந்தாலும், காங்கிரஸ் கட்சியில் முதலாளிகளின் ஆதிக்கம் வளர்ந்தபடி இருக்கிறது.

மண்டலம்:- நீங்கள் நினைப்பது தவறு. கூடிக்குலவி முதலாளிகளை ஒழித்துக்கட்டும் தந்திரமான திட்ட மல்லவா காங்கிரஸ் மேற்கொண்டிருப்பது.

மு:- கொக்கின் தலையில் வெண்ணெய் வைத்துப் பிடிப்பது என்பார்களே, அப்படி இருக்கிறது உங்கள் போக்கு. . .

ம:- அப்படியானால் முதலாளிகளை அடியோடு ஒழித்துவிட வேண்டும் என்கிறீர்களா? சரி, செய்வோம். அதற்குக் காங்கிரசு வெற்றி பெற்றால்தானே. . .

மு:- முதலாளியை ஒழிக்க, காங்கிரஸ் வேட்பாளராக ஒரு முதலாளியையே நிறுத்துவதா. . . வெட்கக் கேடு. . .

ம:- என்ன செய்வது? காங்கிரசுக்கோ எதிர்ப்பு அதிகமாகி விட்டிருக்கிறது. பணம் நிறையத் தேவை. பணம் செலவழிக்கக்கூடிய ஆசாமியாகப் பார்த்துப் போட்டால் தானே. . .

மு:- தன் பணத்தால்தான் காங்கிரஸ் வெற்றிபெற்றது என்ற நினைப்பில், அந்த முதலாளி மேலும் இறுமாப்புடன் நடந்துகொள்வாரே!

ம:- எப்படி முடியும்! எத்தனை பணம் இருந்தாலும், நம் போன்றவர்களின் உதவியில்லாமல் வெற்றி கிடைக்காது என்பது தெரியாதா அவருக்கு?

மு:- அவருக்கு நம்முடைய கொள்கையில் நம்பிக்கை இல்லை; நமக்கு அவருடைய

குணத்தில் வெறுப்பே இருக்கிறது. ஆனாலும் தேர்தலுக்காக ஒரு உறவு வைத்துக் கொள்கிறோம், முறையா! கூடா நட்புக் கேடாய் முடியும் என்பார்களே. . .

ம:- தேர்தலுக்காக இவரைப் பிடித்து இழுத்துப் போட்டு வைத்திருக்கிறோம், அவ்வளவுதானே, திட்டம் போடுவது, கொள்கை தீட்டுவது இவரா!! மு:- கொள்கை, திட்டம் இவைகளைத் தீட்டும் நிலையில் உள்ள தலைவர்கள் மட்டும் என்ன இலட்சணத்தில் இருக்கிறார்கள்! ஒரே குளறுபடி! மொரார்ஜி வலதுசாரி, மேனன் இடதுசாரி, மாளவியா தீவிரவாதி என்று இப்படித் திக்குக்கு ஒருவராக இருக்கிறார்கள். ஒருமித்த கருத்து இல்லையே. . .

ம:- எந்தக் கருத்துக்குப் பெரிய ஆதரவு கிடைக்கும் தெரியுமோ, நம்மைப்போன்ற முற்போக்காளரின் கருத்துக்குத்தான். . .!

மு:- முற்போக்காளர் முகாமில்தானா தாங்களும். . . .!

முற்போக்கு, இனி ஒரு முழக் கயிறு தேடிக்கொள்ள வேண்டியதுதான்! துணிந்து சொல்கிறீரே, உம்மை முற்போக்காளர் என்று. . . ஒரு தேர்த்திருவிழா பாக்கி கிடையாது, ஆலமரத்தடி கிளி ஜோதிடனிலே இருந்து நாடி ஜோதிடர் வரை தேடி அலைகிறீர், முற்போக்காளர் என்று வேறு சொல்லிக்கொள்கிறீர்.

ம:- அதிலே எல்லாம் எனக்கு நம்பிக்கை இருப்பதாக எண்ணிக்கொள்கிறீர்! அப்படித்தானே! அதுதான் தவறு. . .!

மு:- நம்பிக்கை இல்லாமலா, ஆடி அடங்கிய சாமியாருக்கு அன்னாபிஷேகம் செய்து அவர் காலைக் கழுவி அந்தத் தண்ணீரைப் பருகினீர் - போன வாரம். . .

ம:- பைத்யம்! பைத்யம்! ஆடி அடங்கிய சாமியாருடைய அற்புதத்திலே நம்பிக்கையா எனக்கு! நான் என்ன மடையனா, அப்படிப்பட்ட மூடநம்பிக்கை கொள்ள. ஆடி அடங்கிய சாமியாரிடம் சொக்கிக் கிடக்கும் மக்கள் ஊரிலே நிறையப் பேர், தெரியுமா! சாமியார் ஒரு வார்த்தை சொன்னால் போதும், அந்தப் பக்தர்கள் ஓட்டு அவ்வளவும் நமக்குத்தான். அதற்காக, அவருடைய பக்தனாக ஒரு நாள் இருந்தேன். என்னுடைய உண்மையான நோக்கத்தைத் தெரிந்துகொள்ளாமல், பேசுகிறீர். . .

மு:- அப்படியானால், பேய், பூதம், பிசாசு, மோட்சம், நரகம், முன்வினை, மறுஜென்மம், சடங்கு, சம்பிரதாயம், மாயமந்திரம், புராணம், இதிகாசம் இவைகளைப் பற்றிய நம்பிக்கை உமக்குக் கிடையாது என்று சொல்லும். . . .

ம:- சொல்ல வேறு வேண்டுமா - ஐயா!

என் தலைமை யிலேதான் பெரியார் கூட்டம் நடந்தது. அன்றைக்கு விளாசினார் பாருங்க இராமாயணத்தைப் பற்றி, அடே அப்பா! அவ்வளவு பிரமாதம்.

மு:- அந்தக் கூட்டத்துக்குத் தலைமை வகித்தது எனக்குத் தெரியாது. ஆனால், ஆரண்யபுரம் என்ற ஊரில் கோதண்டராமசுவாமி கோயிலில், பட்டாபிஷேகத் திருவிழாவிலே முக்கிய பங்கு உங்களுடையது என்று பேப்பர்லே பார்த்தேன்.

ம:- ஆமாம்! போட்டோ கூடப் போட்டிருந்தாங்களே. ஆனால், உம்மிடம் சொல்லிவைக்கிறேன், ஏன் போனேன் அந்தப் பட்டாபிஷேகத்துக்கு? ஆரண்யபுரம் வட்டத்திலே மட்டும் ஆறு ஆயிரம் ஓட்டு! புரியுதா! அங்கே என்னைப் பட்டாபிஷேக வைபவத்திலே கண்டதிலே எவ்வளவோ மகிழ்ச்சி, நம்பிக்கை, அந்த ஊராருக்கு. . .

மு:- அவர்களை ஏமாற்றினீர் என்றுதானே பொருள்?

ம:- அவ்வளவு பச்சையாகச் சொல்லலாமா. . . இது ஜனநாயகக் காலமாச்சே. . .

மு:- நான் காங்கிரசுக்கு ஓட்டுப் போடுவதற்குச் சம்மதித்தாலும் இராமாயண பாரதத்தை நம்பும் பைத்யக்காரத்தனத்தைக் கண்டிக்காமல் இருக்கமாட்டேன். . .

ம:- உங்களைக் கட்டுப்படுத்த யாருக்கும் உரிமை கிடையாது. அந்தப் பயமே வேண்டாம். . . காங்கிரசுக்குள்ளேயே மூட நம்பிக்கை ஒழிப்புமுனை என்று ஒரு அமைப்பு வைத்துக் கொள்ளுங்கள். . . யார் தடுக்க முடியும். . .

மு:- அப்படியா. . . பகுத்தறிவுப் பாசறையும் ஏற்படுத்திக் கொள்ளலாமா. . .

ம:- தாராளமாக! இப்போது சமதர்மமுனை என்று ஒன்று வேலை செய்கிறதே,

காங்கிரசிலே தெரியாதா. . .

மு:- என்ன நோக்கத்துடன். . .?

ம:- காங்கிரஸ் சமதர்ம திட்டத்தைச் சரிவர, மும்முரமாக நடத்த வேண்டும் என்று வற்புறுத்த, சமீபத்திலே மகாநாடுகூட நடந்தது. . .

மு:- யாரார் போயிருந்தார்கள் அந்த மகாநாட்டுக்கு. . .

ம:- ஏன்! நம்ம காமராஜரே போயிருந்தார். . .

மு:- சரி! என் ஓட்டு காங்கிரசுக்குப் போடுவதாலே, என் சமதர்மக் கொள்கை, பகுத்தறிவுக் கொள்கை எதுவும் பறிமுதலாகிவிடாது என்று சொல்வதாலே, காங்கிரசுக்கு வேலை செய்கிறேன். ஒரு சின்ன உதவி. . .

ம:- சொல்லுங்க செய்துவிடலாம். . .

மு:- நான் எழுதியுள்ள கடவுள் ஒழிக! என்ற புத்தக வெளியீட்டு விழாவுக்குக் காமராஜரைத் தலைமை வகிக்க அழைத்துவரவேண்டும். . .

ம:- அடுத்த வாரமே நடத்திவிடலாம். . .

மு:- அடுத்த வாரமா. . . அச்சகத்தான் பழைய பாக்கிக்காக நச்சரித்தபடி இருக்கிறான்; வேலையிலே சுணக்கம். . . இரண்டு வாரம் ஆகும். . .

ம:- அடுத்த வாரம் விழா! எப்படி என்ன என்று என்னை ஒன்றும் கேட்க வேண்டாம். எல்லாம் நான் பார்த்துக்கொள்கிறேன். காமராஜர் தலைவர்; அந்தக் கூட்டத்திலேயே, காங்கிரசை ஆதரித்து நீங்களும் ஒரு நாலு வார்த்தை பேசிவிட வேண்டும்; செலவு பற்றி உமக்கு ஒரு கவலையும் வேண்டாம். . .

•

மண்டி மாரியப்பன்:- மண்டலமா! வாங்க, வாங்க, இப்பத்தான் வழி தெரிஞ்சுதா, கண் திறந்துதா. . . அய்யோவ்! உன்னைப் போல ஆசாமிகளை நம்பினா, படு நாசம்தான்யா, யாருக்கும். . . மண்டலம்:- மளமளன்னு சொல்லவேண்டியது அவ்வளவையும் கொட்டிவிடுங்க சீக்கிரமா. . .

ம. மா:- ஆமாய்யா! கேலிதான் பேசுவே. தலைவரில்லையா. . . தெரியப்போகுதே பத்து நாளிலே. தீட்டிக்கிட்டுத்தான் இருக்கிறாங்க எல்லோரும். . .

ம:- ஒழித்துக்கட்டத்தானே. . . செய்யட்டும். . . நீங்களும் சேர்ந்துகொள்ளுங்க. . . தோற்கட்டும் காங்கிரசு, எனக்கு என்ன நஷ்டம்! ஆகிறபடி ஆகுது. . .

ம. மா:- என்ன மண்டலம்! முற்றுத் துறந்ததுபோலப் பேசி மிரட்டிப் பார்க்கறே.

ம:- பின்னே, நீங்க எதுக்காக எறிஞ்சி விழறிங்க. . . ம. மா:- நடையா நடந்தேன் உன் வீட்டுக்கு அந்த அதிகாரி கணக்குப் புத்தகத்தைத் தூக்கிக்கொண்டு போயிட்டான். . . மிரட்டிக்கிட்டு இருக்கிறான். . . மானம் போகுதுன்னு. . . மகாநாடுன்னா பணம், மந்திரிவர்ராருன்னா பணம், மண்டலத் தேர்தல் என்றா பணம், மகாத்மா ஜெயந்தின்னா பணம்; யுத்தநிதி, கடன் பத்திரம், கூட்டத்துக்குப் பணம், இவ்வளவுக்கும் நானு! என்னை ஒரு அதிகாரி கேவலப் படுத்தறது, அதைக் கேட்க ஆள் கிடையாது. இது நியாயமா. . . இந்த விதமாக நீங்க நடந்துகொண்டா, எங்க உதவி எப்படிக் கிடைக்கும். . . சொல்லு நீயே. . .

ம:- அந்த அதிகாரி விஷயமா, சொல்லவேண்டிய இடத்திலே சொல்லவேண்டியதை, சொல்லவேண்டிய

நேரம் பார்த்து சொல்லி இருக்கறேன். . . நான் என்ன, நன்றிகெட்டவனா! காங்கிரசுக்கு நீங்க செய்கிற உதவியை மறந்து விடுவேனா. . .

ம. மா:- அதிகாரி விஷயமா நீ சொன்னது என்னத்துக்குப் பயன்பட்டுது. கல்லுப்பிள்ளையார்போல இங்கேதானே இருக்கிறான் அந்த இரும்புத் தலையன். அவனை வேறு இடம் மாற்ற முடியல்லையே. . .

ம:- முடியல்லே. ஒத்துக்கொள்கிறேன். ஆனால், ஏன் முடியவில்லை என்கிற காரணம் தெரியுமா உங்களுக்கு. . .

ம. மா:- உன்னோட பேச்சுக்கு மேலிடத்திலே அவ்வளவுதான் மதிப்புப் போலிருக்கிறது. . .

ம:- எனக்கு உள்ள மதிப்பு எந்த விதத்திலேயும் கெட்டுப் போகவில்லை. உங்களோட பேரைச் சொன்னதும் மேல்

இடத்திலே, மேலே கீழே பார்க்கறாங்க. காங்கிரசுக்கு நீங்க விரோதியாகிவிட்டதாக யாரோ கதை கட்டிவிட்டிருக் காங்க. . . ஏதோ சங்கக் கூட்டத்திலே பேசிவிட்டிங்களாமே, காங்கிரசுக்கு இந்தத் தடவை வெற்றி கிடைக்காது என்று. . .

ம. மா:- ஆமாம்! கோபம் அவ்வளவு எனக்கு. எங்களோட உதவியைப் பெற்றுக்கொண்டு எங்களையே கேவலமா நடத்தினா காங்கிரசு எப்படி ஜெயிக்கும்னு கேட்டேன். . .

ம:- அது காதிலே விழுந்ததும் மேல் இடத்திலே உள்ளவங் களுக்கு அதிகமான கோபம். இந்த விஷயம் தெரியாமல் நான், அந்த அதிகாரி விஷயமாச் சொன்னேன். மேல் இடம் வேணும் அந்த ஆசாமிக்கு! கணக்குப் புத்தகத்தை எடுத்துக் கொண்டு வந்தால் போதாது, வழக்கே போட்டாகணும். . . அப்பத்தான் ஆசாமியோட

துடுக்குத்தனம் போகும்னு கூச்சலிட்டு, என்னை விரட்டிவிட்டுது. . .

ம. மா:- வழக்கே போடணுமாமா. . . என்ன அநியாயம் இது. . . வாரி வாரிக் கொடுத்தவனாச்சே. . .

ம:- வருத்தப்பட வேண்டாம், கோபத்தாலே அவ்விதமாகப் பேசிவிட்டாங்க. . . நான் ஒரு சபதம் சொல்லி விட்டுத்தான் வந்திருக்கறேன். . . நீங்க யார் பேச்சையோ கேட்டு வீணான பழி சுமத்தறிங்க. மாரியப்பப் பிள்ளையோட தேச பக்தி உங்களுக்குத் தெரியாது. அவருடைய உதவியாலேதான் இந்தத் தடவை காங்கிரசு ஜெயிக்கப்போகுது. . . அவருக்கு அவ்வளவு செல்வாக்கு. . .

ம. மா:- அது மேல் இடத்துக்கும் தெரியுமே. நம்மிடம் கொடுக்கல் வாங்கல் தொடர்பு வைத்துக்கொண்டுள்ள கிராமம் 50க்கு மேலே

இருக்குமே தவிரக் குறையாதே. . .

ம:- சொன்னேன் விவரமா. . . மாந்தோப்புக் குத்தகை எடுத்து இருக்கிற விஷயம், மாரியம்மன் கோயிலுக்கு அபிஷேகம் செய்திருக்கிற விஷயம், உங்க மச்சினனுக்கு உள்ள செல்வாக்கு, எல்லாம் சொல்லி, இந்தத் தடவை முழு மூச்சாக அவர் ஈடுபட்டு, காங்கிரசுக்கு வெற்றி தேடிக்கொடுக்கப் போகிறார். . . அப்புறமாவது அவருடைய செல்வாக்கையும் தேச பக்தியையும் உள்ளது உள்ளபடி புரிந்துகொள்ளுங்க என்று சொன்னேன். . .

ம. மா:- சொன்னயா! அதுதான் சரி. . .

ம:- அதிகாரியை மாற்றித்தான் ஆகணுமான்னு, கடைசியிலே, கேட்டாங்க, மேலிடத்திலே. . . நான் சொன்னேன், இப்ப வேண்டாம், தேர்தல் முடியட்டும், மாரியப்பப்

பிள்ளையோட செல்வாக்கு எப்படிப்பட்டது என்பதைப் புரிந்துகொண்டு, பிறகு அதிகாரியை மாத்துங்க என்று சொல்லிவிட்டு வந்தேன். உங்களை மலைபோல நம்பி இந்தச் சபதம் செய்துவிட்டேன். அதிகாரியை மாற்றி விடலாம் அரை நொடியிலே. . . உங்களோட செல்வாக்கு எப்படிப்பட்டது என்பது மேலிடத்துக்குத் தெரிந்ததும். . .

ம. மா:- பகவானோட கடாட்சத்திலே என் செல்வாக்கு எந்த விதத்திலேயும் பழுதாகிப் போகவில்லை. காங்கிரசுக்கு வெற்றி தேடிக் கொடுக்கவில்லையானா என் பேர் மண்டி மாரியப்பனில்லே. . . பார்த்துவிடுவோம். . . என்ன செலவாகிவிடப் போகுது. . . ஒரு நூறு மூட்டை கெட்டுப்போச்சுன்னு எண்ணிக் கொண்டாப்போகுது. . .

ம:- என்னத்துக்குங்க கெட்ட பேச்சு! ஒரு சிலோன் பர்மிட் கிடைச்சா

கிடைக்கக்கூடியதிலே நூறிலே ஒரு பாகம் ஆகுமா. நீங்க செலவு செய்யப்போகிற தொகை. . .

ம. மா:- சிலோன் பர்மிட்டா? மண்டலம்! அதுமட்டும் எனக்குக் கிடைக்கும் என்கிற உறுதி இருந்தா, எதிரியை ஓடஓட விரட்டி அடிக்கறேன். . . பணம் பத்து ஆயிரம் ஆகும் என்றாலும் கவலை இல்லை. . .

ம:- சிலோன் பர்மிட்டு, காங்கிரசு வெற்றிபெற்ற பத்தாம் நாள் உங்க வீடு தேடி வரும்.

□

மண்டலம்:- குமரப்பனா! ஏம்பா! என்னோட ஒரு வார்த்தைகூடச் சொல்லவில்லையே. . . பத்தாயிரம் கடன் வேண்டும்னு மனு போட்டிருக்கிறயாமே. . .

குமரப்பன்:- ஆமாம் புதிய தொழில் ஒன்று

ஆரம்பித்து விட்டுத் தொல்லைப்பட்டுக்கிட்டு இருக்கறேன். . . கடன் தேவைப்பட்டுது. ம:- என்னிடம் சொல்லப்படாதான்னுதான் கேட்கறேன். நீ சொல்லவில்லை என்றாலும் எனக்குத் தெரியாமலா போய்விடும். . .

கு:- அதெப்படித் தெரியாமல் போய்விடும். . . அதான் ஒருத்தன் இருக்கிறானே எனக்கு மாமனாருன்னு பேர் வைத்துக் கொண்டு, அவன் சொல்லி இருப்பான். . .

ம:- சேச்சே! அவரு ஒரு பேச்சும் சொல்லவில்லை பாங்க் தலைவர் இல்லே பார்த்தசாரதி, அவர்தான் சொன்னார். உன்னைப்பற்றி விசாரித்தார், ஆசாமி எப்படி? குணம் எப்படி? நிலவரம் எப்படி? என்றெல்லாம். . .

கு:- எல்லா விவரமும் தெரிவித்திருக்கிறேனே. . .

ம:- சொன்னாரு. . . ஆனா அதெல்லாம் உண்மைதானான்னு கேட்டாரு. என் பேச்சிலே அவருக்கு ஒரு நம்பிக்கை. . . போன வருஷம் நம்ம நாராயணன் நாலாயிரம் ரூபா கடன் கேட்டிருந்தான். . . அவனோட சொத்து மதிப்பு போதாதுன்னு யாரோ புகார் செய்துவிட்டாங்க. என்னைத்தான் கேட்டாரு. நான் சொன்னேன், நாராயணன் நாணயஸ்தன், அவனை நம்பி, நாலு என்ன எட்டு ஆயிரம்கூடக் கொடுக்கலாம் என்று கொடுத்தாரு.

கு:- நம்ம விஷயமாகவும் சொல்லி ஏற்பாடு செய்யப்பா. . .

ம:- எனக்கு இல்லையா அதிலே அக்கறை. . . ஆனா எனக்கு இப்ப வேலை நெருக்கடி. . . தெரியுமே உங்களுக்கும் தேர்தல் வேலை. அந்த வேலையாத்தான் பாங்க் தலைவரிடம் போயிருந்தேன். அவர் ஒரு பட்டியல் கொடுத்தார் இன்னின்னாரைப் பார்த்தா

நல்லது என்று. . . நம்ம பாங்க் தலைவருக்குக் காங்கிரசு என்றாலே, உயிர். . . அவ்வளவு தேச பக்தி. . . கதர் போட்டவங்களை கண்டபோதும், உபசாரம் செய்வார். . . காங்கிரசுடைய வெற்றியிலே அவ்வளவு அக்கறை. . . பாங்க் வேலையைக்கூட ஒரு பத்து நாளைக்குக் கவனிக்கப்போறதில்லைன்னு சொல்லி விட்டாரு. . .

கு:- அப்படியானா, நம்ம கடன் இப்பக் கிடைக்காதுன்னு சொல்லுங்க. . .

ம:- அவசரம் அதிகமாக இருந்தா ஒண்ணு செய்யுங்க. . . ஒரு நாலு நாளைக்கு நாலு இடம் சுற்றிக் காங்கிரசுக்கு ஓட்டு கேளுங்க. . . சேதி அவர் காதிலே விழுந்தாப் போதும். உடனே கடன் உங்க வீடு தேடி வந்து சேரும். . .

கு:- உன்னோடு கூடவே வந்து வேலை செய்கிறேன் மண்டலம்! எனக்கு சோடப்பட்டி,

சொர்ணாபுரம், ஆளிப்பட்டி, அம்மானூர் இங்கே எல்லாம் சொந்தக் காரர்கள் நிறைய. . .

ம:- கேள்விதான் எனக்கும். ஆனா அங்கே உங்க பங்காளி ஒருத்தர் இருக்கிறாராம், அவர் எதிர்த்து வேலை செய்கிறாராம். . .

கு:- என் பங்காளியா! விட்டுத்தள்ளு மண்டலம்! அவனுக்குச் செல்வாக்கா, எனக்குச் செல்வாக்கா என்பதை ஒருகை பார்த்துவிட்டாப்போகுது. . .

ம:- உன் பங்காளி முரட்டுப் பிடிவாதம்போல இருக்குது. கைக் காசைச் செலவழித்துக்கொண்டு வேலை பார்க்கறானாமே. . .

கு:- பணம் என்ன அவன்கிட்டத்தான் இருக்குதாமா! மற்றவங்களெல்லாம் என்ன பக்கிரியாமா! பார்த்துவிடுவமே

அதையுந்தான். அந்த நாலு ஊரைப்பற்றின கவலையைவிடு, நான் பார்த்துக்கொள்கிறேன். . . கடன் மட்டும். . .

ம:- தேர்தலிலே நம்ம பக்கம் வெற்றி என்கிற செய்தி வந்த எட்டாம் நாள், கடன் தொகை வீடு தேடி வராவிட்டா, என்னை மண்டலம்னு கூப்பிட வேண்டாம், கமண்டலம்னு கூப்பிடு, வேலையைக் கவனி. . . புறப்படு. . .

□

மண்டலம்:- நமஸ்காரம்! நமஸ்காரம்! சௌக்கியந் தானுங்களே. . . பட்டாபிஷேக உற்சவத்திலே பார்த்தது. . . தர்மகர்த்தா தாமோதரம்:- ஓ! மண்டலமா! பகவானோட கடாட்சத்திலே சௌக்கியந்தாம்பா. . . பத்து நாளா இலேசா பல் வலி.

ம:- பல்லை எடுத்துவிடலாமே. . . புது டாக்டர் வந்திருக்காரு பாருங்க, ரொம்பக் கெட்டிக்காரரு. . .

த. தா:- உனக்குத் தெரிந்தவர்தானா. . .

ம:- அதென்ன அப்படிக் கேட்டுவிட்டிங்க. நம்ம ஊருக்கு ஒரு நல்ல டாக்டர் வேண்டுமென்று நானே நேரிலே போய் மந்திரியைப் பார்த்து, இவரை இங்கே அழைத்துக்கொண்டு வந்திருக்கிறேனே.

த. தா:- அப்படியா. . . ரொம்ப நல்லதாப்போச்சி. . .

ம:- தேர்தல் வேலை மும்முரம், தெரியுமே உங்களுக்கு. . .

த. தா:- ஆமாமாம்! ஆனா விலை ஏறிவிட்டுது என்கிற கோபம், வருத்தம் ஜனங்களுக்கு. காங்கிரசுமீது வெறுப்பும் இருக்குது. உனக்கா தெரியாது. . .

ம:- கஷ்டப்படுகிற ஜனங்க அப்படித்தான், விவரம் தெரியாததாலே வெறுப்புக் காட்டுவாங்க. . . உங்களைப் போன்ற பெரியவங்கதான் நல்லபடி சொல்லி ஜனங்களைத் திருத்தவேணும். . .

த. தா:- இந்த ஜனங்களை இந்தக் காலத்திலே திருத்தப்போனா, நீ முதலிலே திருந்திக்கொள்ளு என்று பேசுதுங்க. . .

ம:- ஆமாமாம்! இந்தக் காலத்து ஜனங்களோட போக் கைத்தான் பாகவதப் பிரசங்கி பன்னீர்தாஸ் பட்டாபி ஷேகத் திருவிழாவின்போது நடத்தினாரே பக்த ராமதாஸ் காலட்சேபம், அதிலே புட்டுப் புட்டுக் காட்டினாரே. . .

த. தா:- கேட்டயேல்லோ. . . ராமா! ராமான்னு ராமதாசர் பூஜித்ததும் ராமன் நேரிலேயே வந்தாராம். . . அந்தக் காலத்திலே.

. .

ம:- நம்ம காங்கிரஸ் ராஜ்யம்கூட, ராமராஜ்ஜியம்தானே. . . காந்தியே வைத்த பெயராச்சே. . .

த. தா:- அது சரி மண்டலம்! யாரோ சொன்னாங்க என்னிடம். . . நீ என்னமோ ராமசாமிப் பெரியார் கூட்டத்திலே தலைமை வகித்தயாம். . . அவரு ராமனையும் சீதையையும் கண்டபடி திட்டினாராம். . . ஏம்பா! நீ கலந்து கொள்ளலாமா அந்தக் கூட்டத்திலே. . .

ம:- நான் காரணம் இல்லாமலா கலந்துகொண்டேன். வேறே யாராவது தலைமை வகித்திருந்தா, பெரியார் பேச்சை மறுக்க முடியாமல் திக்கித் திணறிப்போயிருப்பாங்க. நான் விட்டேனா! இவ்வளவு பேசற இவருடைய பேரே

ராமசாமிதான்! என்று சொன்னேன். ஜனங்க ஒரே ஆரவாரம் செய்தாங்க. அந்த ஒரு பேச்சிலே அவருடைய மூன்று மணி நேரப் பேச்சும், போச்சி. . .

த. தா:- பலே! பலே! சரியான பேச்சுத்தான் பேசியிருக்கறே. . .

ம:- அது மட்டுமா! மற்றொரு விஷயம் சொன்னேன். ஜனங்க அப்படியே அசந்து போய்விட்டாங்க. கடவுள் அவதாரமான ராமச்சந்திரமூர்த்தி, மகாலட்சுமியான சீதாபிராட்டி, இவர்களைப் பற்றியெல்லாம் கண்டித்துப் பேசுகிற பெரியாரே, நம்ம காங்கிரசு கட்சியைப் பற்றிக் கண்டிக்க முடியவில்லை; பாராட்டிப் பேசறாரு; ஆதரிக்கச் சொல்கிறார். எதையும் கண்டிக்கிற பெரியாரே காங்கிரசை ஆதரிக்கிறபோது, நாடே திரண்டு வந்து காங்கிரசுக்கு ஓட்டுப் போடும் என்பதிலே என்ன சந்தேகம் என்று கேட்டேன். பத்து

நிமிஷமாச்சி, கரகோஷம் அடங்க. . .

த. தா:- ரொம்பச் சந்தோஷம் வரட்டுமாப்பா. . .

ம:- ஒரு சின்னக் காரியம் செய்யணும். . . நம்ம கோயில் நிலம் இருக்குது பாருங்க. . .

த. தா:- கொட்டாவூர், கோனூர், பருதூர் மூன்று இடத்திலே இருக்குது, நிலம். . .

ம:- சிரமத்தைப் பார்க்காமெ ஒரு நடை நீங்க போய் வந்தா நல்லது. . .

த. தா:- ஓட்டுக்குத்தானே. . . சொல்லி அனுப்பிவிட்டால் போகுது. ம:- நேரிலேயே போய்வந்தா நல்லது. . . ஏன்னா! மேல் இடத்திலே, உங்களை ஏரியா கமிட்டிக்குப் போட வேண்டும் என்ற எண்ணம் இருக்குது. அந்த இடத்துக்குப் பல்விளக்கிக் கொண்டிருக்கிற ஒரு ஆசாமி உங்களைப் பற்றித் தப்புந் தவறுமா சொல்லி

வைத்திருக்கிறான். . .

த. தா:- தப்புந் தவறுமாப் பேச என்ன இருக்குது; என்னைப் பற்றி. . .

ம:- ஒண்ணுமில்லிங்க. . . அவருக்குத் தள்ளாத வயது. . . ஓடி ஆடி வேலை செய்ய முடியாது. எந்தக் காரியத்தையும் தானே நேரிலே போய்ப் பார்க்க முடிகிறதில்லை என்று கோள்மூட்டிவிட்டிருக்கிறாங்க. . . சில பேர். அதனாலேதான் இந்தத் தேர்தல் வேலையாக நீங்களே அந்த ஊர்களுக்கு நேரிலேயே போய்வந்தா நல்லதுன்னு நினைக்கிறேன். . .

த. தா:- அப்படியா விஷயம். . . தள்ளாத வயதாமா எனக்கு. . . எல்லாம் தள்ற வயதுதான். . . நடமாட முடியாதாமா. . . நாளைக்கே கிளம்பிப் போறேன். அந்த மூணு ஊருக்கும், அப்பத் தெரிந்துகொள்ளட்டும்,

தள்ளாதவனோட வேலைத் திறமையை, பல் வலி இருந்தா என்ன. . . கொஞ்சம் காசிகட்டித் தூளை அப்பிக் கொண்டாபோகுது வலி தன்னாலே. . . நாளைக்குக் கிளம்பறேன். . . அந்த ஏரியா கமிட்டி விஷயம்?

ம:- அது உங்க காலடியிலே கிடக்குதுங்க. அதை நான் பார்த்துக்கொள்கிறேன்.

□

தம்பி! இத்தனைவிதமான முயற்சிகளிலும் ஆளுங்கட்சியால் ஈடுபட முடிகிறது. இவை ஒவ்வொன்றும் ஒவ்வோர் அளவுக்கு, நாம் போட்ட கணக்கினை பொய்யாக்கிவிடுகிறது.

மக்களின் இதயம் நமது பக்கம் இருக்கிறது என்பதிலே ஐயமில்லை. ஆனால், மக்கள் தமது இதயம் இடும் கட்டளைப்படி நடந்துகொள்ள முடியாத நிலையை ஏற்படுத்தி, அவர்களை இக்கட்டிலே சிக்க வைத்துவிடும்

காரியம் நடந்துவிடுகிறது.

இவைகளையும் எதிர்பார்த்து, இவைகளையும் மீறி, நமக்கு ஆதரவு கிடைத்திடத்தக்க வழி கண்டறிந்து பாடுபட வேண்டும்.

இத்தனை கொடுமைகளைச் செய்த காங்கிரசுக் கட்சியை எதிர்த்துத் தோற்கடிக்க இவ்வளவு பாடுபடவேண்டுமா என்று எண்ணிக்கொள்ளக்கூடாது.

கொடுமை, உறுமிக்கொண்டு கிளம்பும் சிறுத்தை வடிவிலே மட்டும் இல்லை; பசும்புற்றரையிலே ஒளிந்துகொண்டு நெளியும் பாம்பின் உருவிலேயும் இருந்திடுவது காண்கிறோமே!

ஆகவே, காங்கிரசாட்சியின் கொடுமைகளை மேடைகளில் எடுத்துக் கூறிவிட்டால் போதும், மக்கள் தெளிவு

பெற்று, காங்கிரசாட்சியை வீழ்த்துவதற்கான துணிவு பெற்று, நமக்குத் துணை நிற்பர் என்று எண்ணிவிட்டால் போதாது. கிராமங்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டாக வேண்டும், தோழமை வளர்ந்தாக வேண்டும்.

ஆசைக்கு மயங்கிவிடுவது, அச்சத்துக்கு இடமளித்து விடுவது, இச்சகம் பேசுவோரின் நச்சு வலையில் வீழ்ந்துவிடுவது ஆகியவற்றினை நீக்கியாக வேண்டும்.

இதற்கு ஏற்ற முறையில் உன் எதிர்காலப் பணி அமைந்திட வேண்டும் என்று கேட்டுக்கொள்ளவே இதனை எழுதினேன்.

அன்புள்ள

அண்ணாதுரை

2-5-1965

6. இதயம் வென்றிட. . . (3)

தருமபுரி தோல்வி நம்பிக்கை கொண்டோர்க்கு நம்ப முடியாச் சேதி

மக்களின் பரிவு கழகத்திடம்

ஆபிரகாம் லிங்கனுடைய தோல்வி - வெற்றிப் பட்டியல்

அமைச்சர்கள் தருமபுரி தலைநகர் என்றதால், கழகத்துக்குக் கிடைத்த வாக்குக் குறைவு.

தம்பி!

மல்லிகைக் கொடியின் முனை ஒடிந்திருக்கக் காணும் போது எவருக்கும் அடடா! ஒடிந்துவிட்டதே! கொடியே இதனாலே கெட்டுப்போய்விடுமோ, காய்ந்துபோய்விடுமோ, இனி இந்தக் கொடியிலே அழகிய மலர்கள் பூத்திடாதோ! மணம் பரப்பிடாதோ! என்றெல்லாம் கூறிடத்

தோன்றும், கவலை உண்டாகும்.

எருக்கஞ் செடி எருமையின் காலிலே சிக்கிக் கூழாகிப் போயினும், யார் அதைக் கண்டு கவலை கொள்வார்கள்!! ஊருக்கே எழிலளித்து வரும் மணிமாடத்தின் சுவரிலே ஒரு சிறு வெடிப்பு ஏற்பட்டால் காண்பவரெல்லாம் கவலை கொள்வார்கள்;

இந்த வெடிப்பினாலே கட்டடத்துக்கு ஆபத்து ஏற்பட்டுவிடுமோ என்று அச்சம் கொள்வதால். கலனாகிப்போய் கவனிப்பாரற்றுக் கிடக்கும் பாழுங்கிணற்றிலே மேலும் சிறிது கலன் காணப்பட்டால் கவலைகொள்வார் உண்டோ?

பட்டுச் சட்டையிலே ஒரு பொட்டு மசி வீழ்ந்தாலும், எல்லோர் கண்களிலும் படுகிறது, என்ன இது! என்ன இது! என்று கேட்கிறார்கள்; குடுகுடுப்பாண்டியின்

உடையிலே காணப்படும் கறைபற்றிக் கவலைப்படுவார் உண்டோ?

வீரனுடைய கரத்திலே வீழ்ந்துவிட்ட ”வெட்டு’ எல்லோருடைய கவனத்தையும் ஈர்க்கும்; உடற்கட்டைப் பார், இரும்புபோல! என்று கூறினாலும், வீணனுடைய உடலமைப்பிலே எவரும் கவனம் செலுத்தமாட்டார்கள்.

திருக்குறள் ஏட்டின் பேரிலே மைக்கூடு கை தவறிக் கவிழ்ந்துவிட்டால், பதறிப்போவோம்; பழைய பஞ்சாங்கத்திலே கறையான் குடியேறினால்கூட கவலை கொண்டிடத் தோன்றுமா?

நாம் நல்லது என்று எண்ணி மதிப்பளித்திடும் எந்தப் பொருளுக்கேனும், ஏதோ காரணத்தால் ஏதாகிலும் ஒரு சிறு கெடுதல் ஏற்பட்டுவிட்டாலும்,

பதறிப்போகிறோம். அது அந்தப் பொருளிடம் நமக்கு இருக்கும் பற்று எந்த அளவு இருக்கிறது என்பதற்குச் சான்று!

தம்பி! மகிழ மரத்தடியிலே உதிர்ந்து கிடக்கும் பூக்களை, ஒவ்வொன்றாகப் பக்குவமாகப் பொறுக்கி எடுத்து மகிழ்ந்திடுவர் சிற்றிடையார்!! தேங்காய் ஓட்டுத் துண்டுகளை அல்ல!

கழுத்தளவு தண்ணீரில் இறங்கிப் பறிக்கிறான் ஓர் காளை, அழகோவியமாகத் திகழ்ந்திடும் செந்தாமரையை - அவன் காலைச் சுற்றிக்கொள்ளும் பாசியைத் தூக்கி வீசிவிடுகிறான் மற்றோர் பக்கம்.

தத்தமது கருத்துக்கு எவை எவை விரும்பத்தக்கன, மகிழ்ச்சி தரத்தக்கன என்று தோன்றுகின்றனவோ, அந்தப் பொருளினைப் பெற அவர்கள் முனைவதும், அந்த

முயற்சியிலே வெற்றி கிடைத்திடும்போது மகிழ்ச்சி கொள்வதும் இயற்கை.

பொழுது சாயும் நேரம், உச்சிப்போது முதல் தேடித் தேடிக் கண்டிட முடியாது கவலை மிகுந்திருந்தவனுக்கு, அவன் தேடிவந்த மூலிகை, ஒரு சிறு குன்றின்மீது இருப்பதாகச் "சேதி' கிடைக்கிறது; கிடைத்ததும், இன்றைக்கு இதுபோதும், நாளைய தினம் பார்த்துக்கொள்ளலாம் என்றா இருந்துவிடுவான்? ஒருக்காலும் இல்லை; அலுப்பினை மறந்திடுவான்; அக மகிழ்ச்சியுடன், குன்று நோக்கி நடந்திடுவான்

தாம் விரும்பும் பொருளைப் பெற்றிடும் முயற்சியில் ஈடுபடுவோருக்கும், இன்னலையே கன்னலாக்கிக் கொள்ளும் இயல்பு ஏற்பட்டுவிடும்.

ஆனால், அத்தனை கஷ்டப்பட்டு அவன்

கொண்டுவந்த மூலிகை, கடுங் காற்றொன்று வீசியதால், கரம் விட்டுக் கிளம்பி, காட்டிலே ஓர்புறத்திலே, கள்ளி காளான் மிகுந்த பகுதியிலே பறந்து சென்றுவிட்டால், அவன் எவ்வளவு பதறிப்போவான்!

வெறுங்கையுடன் வீடு திரும்புகிறான்; எடுத்த காரியந்தனை முடித்திடும் ஆற்றல் மிக்கவன் இவன் என்பதால், இல்லத் துள்ளோர், மூலிகை கொண்டு வருகிறான் என்று எண்ணிப் புன்னகை காட்டுகிறார்கள்; பெருமூச்செறிந்தபடி அவன், பட்டபாடு வீணாயிற்று! கரத்திலே சிக்கிற்று, கடுங்காற்று பறித்துக்கொண்டது! என்று கூறுகிறான்; கேட்போர் உள்ளம் என்னென்ன எண்ணும்!

தாம் விரும்பும் பொருள், மதித்திடும் பொருள், பெற்றிட வேண்டி, ஆற்றல் மிக்கவனை அதற்காக அனுப்பி வைத்திட,

அவன் ஆயிரத்தெட்டு இன்னலைத் தாங்கிக்கொண்டு, பொருளைக் கண்டெடுத்து வருகிற வழியில், அவனையும் மீறியதோர் வலிவினால் பறிக்கப்பட்டுப் போய்விடின், பொருளைப் பெறத் துடித்துக்கொண்டிருப்பவர்களின் மனம் என்ன பாடுபடும்!

பெற்றிடவேண்டியதாக ஒரு பொருள் இருந்து, அதைப் பெற்றளிக்கும் ஆற்றல் மிக்கவன் அதைப் பெற முனைந்து, பெற்றிடுவான் என்று நம்பிக்கை பெரும் அளவுக்கு எழுந்திட்ட நிலையில், பெற்றிட இயலவில்லை என்றோ, பெற்றிட முனைந்தேன், வேறொருவன் அதனைத் தட்டிப் பறித்துக் கொண்டு சென்றான் என்றோ அப்பொருளைப் பெற்றளிக்கச் சென்றவன் வந்து கூறிடும்போது, பொருளைப் பெற்று மகிழ்ந்திட எண்ணி ஆவலுடன்

காத்துக் கிடந்தவர்களின் உள்ளம், உலைக் கூடமாகிவிடும்.

பொருளின் அருமை, அதனிடம் ஏற்பட்ட விருப்பம், பொருளைப் பெற்றிட முடியும் என்ற நம்பிக்கை, அதனைப் பெறச் சென்றவனின் ஆற்றலிலே வைத்துள்ள நம்பிக்கை, இவற்றின் தன்மையைப் பொறுத்திருக்கிறது, பொருள் பெறாததால் ஏற்படும் ஏமாற்றம், எரிச்சல், கவலை, வேதனை.

பஞ்சவர்ணக் கிளியைப் பக்குவமாகப் பிடித்திடச் சென்று, பாதி மரம் ஏறுகையில், அது பறந்துபோய்விட்டது என்றொருவன் கூறும்போது, கேட்பவர்கள், அடடா! அப்படியா! என்று பேசுவர், பரிவுகாட்டி!

ஒரு மணி நேரமாகக் காத்திருந்தேன் கிடைக்கவில்லை என்றொருவன் கூற, எதற்குக் காத்திருந்தாய் ஒரு மணி நேரம்

என்று மற்றவன் கேட்க, ஓணானுக்கு என்று முன்னவன் சொன்னால், மற்றவன், பேதையே! பேதையே! இதற்கா இத்தனைக் கவலை கொள்கிறாய்! ஒரு ஓணான் கிடைக்காததற்காகவா!! என்று கூறிக் கை கொட்டிச் சிரிப்பான்.

தர்மபுரியில், தம்பி! நாம் கட்டாயம் வெற்றிபெற்றுத் தருவோம் என்று, வெற்றி பெற்றாக வேண்டும் என்று மெத்தவும் விரும்பி, வெற்றி பெற்றளித்திடுவோம் என்று அழுத்தமாக நம்பிக்கொண்டிருந்தவர்கள் தமிழகத்திலே மிகப் பலர் - கழகத்துக்கு வெளியேகூட. தர்மபுரி வெற்றி இந்த நேரத்தில் மிகவும் விரும்பத்தக்கது என்பதிலேயும், அந்த வெற்றியைக் கழகம் பெற்றளிக்கும் ஆற்றல் உள்ளது என்பதிலேயும், அவர்கள் அவ்வளவு ஆழ்ந்த நம்பிக்கை கொண்டிருந்திருக்கிறார்கள்!

அதனால்தான், தர்மபுரியில் கழகம் தோற்றுவிட்டது என்ற "சேதி' வந்ததும், அவர்களால் நம்பமுடியவில்லை, கவலை அவர்களை அலைக்கழித்திருக்கிறது.

தர்மபுரியில் தோற்றுப்போனதால், எல்லோருக்கும் ஏற்படுவதுபோல எனக்கும் கவலையும் வேதனையும் ஏற்பட்டது என்றாலும், அந்தக் கவலையும் இடையில்,

மக்கள் கழக வெற்றியை எவ்வளவு எதிர்பார்த்து இருந்திருக்கிறார்கள்,

கழக வெற்றி நிச்சயம் என்று மக்கள் எத்துணை நம்பிக்கையுடன் இருந்திருக்கிறார்கள்,

வெற்றி பெற்றிடத்தக்க ஆற்றல் கொண்டது கழகம் என்ற எண்ணம் எவ்வளவு அழுத்தமாக இருந்திருக்கிறது,

என்பவைகளை அறிந்துகொள்ள

முடிகிறது; கவலையையும் கலைத்துவிட்டு ஓர் இன்பப் புன்னகை எழுகிறது.

கழகமாவது, வெற்றி பெறுவதாவது! கழகத்துக்கு ஏது அந்த வலிவு!

கழகம் வெற்றி பெற்றால் என்ன, தோற்றால் என்ன!

என்ற இந்த முறையிலே, பற்றற்று, மக்கள் இருந்துவிடவில்லை; உலகிலே கவனிக்கப்படவேண்டிய விஷயங்கள் எத்தனை எத்தனையோ இருக்கின்றன. இப்போது கழகம் தர்மபுரியில் வெற்றி பெற்றதா இல்லையா என்பதிலா கவனம் செலுத்த வேண்டும்! என்று கூறி அலட்சியப் போக்கிலே இருந்துவிட வில்லை. கழகம் வெற்றி பெறவேண்டும், கழகம் வெற்றி பெறும், அந்தச் சேதி காதில் விழும், களிப்புக் கிடைத்திடும் என்று மக்கள் மிக்க ஆவலுடன்

இருந்திருக்கிறார்கள். ஆகவேதான், கழகம் தர்மபுரியில் தோற்றுவிட்டது என்றதும், அவர்கள் திடுக்கிட்டுப் போயினர், துயர் கப்பிக்கொண்டது.

ஒரு பத்து ஆண்டுகளுக்கு முன்பு, கழகம் ஒரு தேர்தலிலே ஈடுபடும்போது, வெற்றி யாருக்கு என்பது பற்றி, மக்கள் இந்த அளவு அக்கறை காட்டினதில்லை.

வெற்றி பெற்றால்கூட, கழகமா? வெற்றியா? சரி, அதனால் என்ன? கழகம் வெற்றிபெற்றுவிட்டதால்! காய் கனியாகிவிடப் போகிறதா, காகம் கானம் பாடப் போகிறதா! ஏனப்பா, கடுகை மலையாக்கிக் காட்டுகிறாய்!! என்று பேசிடுபவரின் தொகைதான் மிகுதி.

இன்று நிலைமை அவ்விதம் இல்லை; கழகம் தேர்தலிலே ஈடுபடுகிறது என்றால், கட்டாயம் வெற்றிதானே! இதிலென்ன!

ஐயப்பாடு எழ முடியும்!! என்று மக்களில் பெரும் அளவினர் பேசிக்கொள்ளக்கூடிய கட்டம் தோன்றிவிட்டது.

கழகம், மக்களின் கவனத்தை ஈர்த்துக்கொண்டிருக்கிறது; கழகம் வெற்றிபெறத்தக்க ஆற்றலுடன் இருக்கிறது என்ற நம்பிக்கை மக்களிடம் மிகுந்திருக்கிறது; கழகம் வெற்றிபெற வில்லை என்றால், மக்களுக்குத் திகைப்பு ஏற்படுகிறது, எனும் இவை பொருள் மிக்கன. நாம், மக்களின் பார்வையிலே இருக்கிறோம், மக்களின் பரிவு நம்மிடம் உறவுகொண்டிருக்கிறது என்பது பொருள்.

ஆகவேதான் தம்பி! தர்மபுரியில் கழகம் தோற்றுவிட்டது என்றவுடன், மல்லிகைக் கொடியின் முனை ஒடிந்திருப்பதைக் காணும்போது, மணிமாடச் சுவரிலே வெடிப்பு ஏற்பட்டுள்ளதைப் பார்க்கும்போது, பட்டுச்

சட்டையிலே ஒரு சொட்டு மசி விழுந்திருப்பது காணும்போது, வீரன் கரத்திலே ஒரு வெட்டு வீழ்ந்திருப்பது தெரியும்போது, திருக்குறள் ஏட்டிலே மசிக்கூடு கவிழ்ந்தது காணும்போது, எப்படிப் பதறுவார்களோ, கவலை கொள்வார்களோ. அப்படிக் கவலை கொள்கிறார்கள், கழகத்தின் தோல்வியைக் கேட்டு.

செல்லாத நாணயத்தைத் தந்திரமாக, நல்ல நாணயம் என்று கடைக்காரனை நம்பச்செய்து தந்துவிட்டு, பொருள் பெற்றுக் கொண்டுவந்து விடுபவன் அடையும் மகிழ்ச்சி காங்கிரஸ்காரர்களைப் பிடித்து உலுக்கியபடி இருக்கிறது, இப்போது!!

அதிலும், பல நாட்கள் பட்டினி கிடந்தவனுக்கு ஒரு நாள் விருந்து கிடைத்துவிட்டால், தின்னமுடியாத அளவுக்குத் தின்றுவிட்டுத் திணறுவார்களே, அந்த

நிலைக்குச் சென்று விட்டார் முதல் அமைச்சர் பக்தவத்சலனார்!

பல நாட்களாக, கொளுத்தினார்கள், இடித்தார்கள், சுட்டார்கள், செத்தார்கள், ஓடினார்கள் துரத்தினார்கள், பிடித்தார்கள், அடைத்தார்கள் என்ற விதமான "சுபசேதி'களையே கேட்டுக்கேட்டு, இடிந்துபோயிருந்தவரல்லவா, இப்போது வெற்றி என்றதும், தெருக்கூத்திலே காண்போமே, கலர்க் கண்ணாடித் துண்டுகள் பதித்த கிரீடமும், காக்காப் பொன்முலாம் பூசப்பட்ட கட்கமும், ஐந்தாறுவிதமான வர்ணத்துணிகளைச் சுற்றி விடப்பட்ட ஆடை அலங்காரமும், பிசின்போட்டு ஒட்டப்பட்ட மீசை கிருதாவும் கொண்ட "ராஜா' குதித்துக் கூவுவாரே, ராஜாதி ராஜன் வந்தேனே! மகா ராஜாதி ராஜன் வந்தேனே!! என்று அதுபோலாகிவிட்டார்!

வெற்றி! வெற்றி! வேட்டுச்சத்தம் கேட்ட நாட்டில், வெற்றி! வெற்றி! சுட்டுத்தள்ளிய சூரர்கட்கே வெற்றி! வெற்றி! என்று பாடுகிறார். பல நாள். பதைபதைத்துக் கிடந்தவர், இந்தப் பாயசம் பருகட்டும் பாவம்! வேண்டாம் என்பார் இல்லை. ஆனால், இப்படித்தான் வெற்றி கிடைக்கும் என்று முன்பே தமக்குத் தெரியும் என்று பேசுகிறாரே, அது தவறு, தேவையற்றது, பொருளற்றது!

ஆனால், வெற்றிக் களிப்பிலே பொருள் பொருத்தம் பார்க்கவா தோன்றும்; ராமன் பிறவாததற்கு முன்னாலேயே இராமாயணம் எழுதினாராமே வால்மீகி, அதுபோலத் தம்மை எண்ணிக்கொள்ள வேண்டும் என்று ஆசைப்படுகிறார்.

காங்கிரஸ் வெற்றி பெற்றிருப்பது, அத்தனை பாராட்டத் தக்கதாக கொண்டாடத்தக்கதாக ஏன் தோன்றுகிறது?

துளியும் எதிர்பார்த்திராததால்!!

தாளம் துளிகூடத் தவறவில்லை என்று பாராட்டுக் கிடைத்ததும், யாருக்குப் பெருமையும் மகிழ்ச்சியும் கிளம்பும்? இசை மன்னர் சித்தூர் சுப்பிரமணியத்துக்கா!! இன்றைக்கு வரவேண்டிய வித்துவான் வராததாலே, இலுப்பையூர் கருப்பையா பாடுவார்!! என்ற அறிவிப்புடன் பாடத் தொடங்கியவர், ஆனந்தத் தாண்டவம் ஆடுவார், தாளம் தவறாமல் பாடியதாகப் பாராட்டப் பட்டால்.

பொதுத் தேர்தலுக்குப் பிறகு கழகம், காங்கிரசைச் சந்தித்த, தேர்தல் களம்,

திருச்செங்கோடு
திருவண்ணாமலை
சென்னை மாநகர்
தர்மபுரி

இவற்றில், முதல் மூன்று இடங்களிலும் காங்கிரஸ் தோற்கடிக்கப் பட்டது; தர்மபுரியிலே வெற்றிபெற்றது.

தாளம் தவறவில்லை என்று தட்டிக்கொடுப்பது போன்ற பாராட்டுதலுக்கு மட்டுந்தான் காங்கிரஸ் உரிமை கொண்டாட முடியும். அதற்கு மேலே கொண்டாடுவது, உப்பை அதிகமாக்கு வதாகும்; மணம் நெடியாகிவிடும் நிலைமை!! ஆனால், அதைத்தான் முதல் அமைச்சர் செய்துவருகிறார் - மும்முரமாக!! நெடுநாளைக்குப் பிறகு புதிதாக வளையல்களை நிறையப் போட்டுக்கொண்டவள், குலுக்கி நடைநடந்து கலகல ஒளழுப் பிக் காட்டுவதுபோல,

மூன்று முறை கழகம் வெற்றி பெற்றபோது, இதை "முன்கூட்டியே' இன்னதுதான் நடக்கும் என்று கணித்திடும் வால்மீகி எங்கே

போயிருந்தாரோ!!

இத்தனை பிணங்கள் வீழாதிருந்தபோது, மூன்று முறை காங்கிரசைத் தோற்கடித்த பொதுமக்கள் தர்மபுரியில் வெற்றி கொடுத்தார்கள் என்றால், காங்கிரசின் அடக்கு முறையைப் பாராட்டியா! மக்கள் என்ன இதயமற்றவர்களா!! அல்லவே!!

அடக்குமுறைப் பிரச்சினையைக்கூட மறைத்துவிடத்தக்க வேறு ஏதோ நிலைமைகள் உருவாக்கப்பட்டதாலன்றோ மக்கள் காங்கிரசுக்கு வெற்றி தந்தனர். இதனைப் புரிந்துகொள்ள, சராசரி அறிவே போதுமே!

மக்கள் விரும்பவுமில்லை, எதிர்பார்க்கவுமில்லை; காங்கிரசின் பெருந்தலைவர்கள் எதிர்பார்க்கவில்லை; ஆனால், தொகுதியில் வேலை பார்த்துவந்த காங்கிரஸ் தலைவர்கள், தமது வேலை

முறைகளைக் கணக்கெடுத்து வெற்றி கிடைத்திடும் என்று எதிர்பார்த்திருக்கக்கூடும். அவர்கள் கூறியிருப்பார்கள் முதல் அமைச்சருக்கு; அப்போது அவரே அதை நம்பியிருந்திருக்க மாட்டார். நடந்துவிட்ட பிறகு பேசுகிறார், நமக்கு முன்பே தெரியும்!! என்று.

தம்பி! அவர்கள் அவ்விதம் பேசுவதாலே நமக்கு நட்டமில்லை; சொல்லப்போனால் நமக்கு ஒருவிதத்தில் அந்த விதமான பேச்சு நல்லதுகூட.

நாம் தோற்கடிக்கப்பட்டிருக்கிறோம்; நாடே எதிர்பார்த்தது நாம் வெற்றி பெறுவோம் என்று. ஆனால் நாம் தோற்கடிக்கப்பட்டிருக்கிறோம்.

இதனை நாம் மறத்தலாகாது, நினைவினிற் கொள்ள வேண்டும்; எதற்கு? மக்களின் இதயம் நமது பக்கம் என்று அறிந்து அகமகிழ்ந்து நம்பிக்கை கொண்டுவிடுவது

மட்டும் போதாது; வெற்றிக்கான முறைகளைச் செம்மைப்படுத்திக்கொள்ள வேண்டும் என்ற உணர்ச்சியைப் பெறுவதற்காக.

தேர்தலிலே மட்டுமல்ல, எடுத்த காரியம் எதிலும் தொட்டது அத்தனையும் பலித்துவிடும் என்று நிலைமை இருந்துவிடுவதில்லை. ஏமாற்றங்களும், இடையூறுகளும் எவருடைய பாதையிலும் ஓரோர் வேளை குறுக்கிடத்தான் செய்யும். தோல்விகளையும் சந்தித்திட வேண்டும் துணிவுடன். ஒரு பட்டியல் தருகிறேன், பார் தம்பி!

1831 – வியாபாரத்தில் தோல்வி.
1832 – சட்டசபைத் தேர்தலில் தோல்வி.
1833 – மீண்டும் வியாபாரத்தில் தோல்வி.
1834 – சட்டசபையில் பதவி.
1835 – காதலியின் மரணம்.
1836 – நரம்புக் கோளாறு நோய்.
1838 – சட்டசபைத் தலைவர் தேர்தலில்

தோல்வி.

1840 – எலக்டர் தேர்தலில் தோல்வி.

1843 – பெருமன்றத் தேர்தலில் தோல்வி.

1846 – பெருமன்றத் தேர்தலில் வெற்றி.

1848 – பெருமன்றத் தேர்தலில் தோல்வி.

1855 – செனட் தேர்தலில் தோல்வி.

1856 – உதவி ஜனாதிபதி தேர்தலில் தோல்வி.

1858 – செனட் தேர்தலில் தோல்வி.

1860 – ஜனாதிபதி தேர்தலில் வெற்றி.

இந்தத் தோல்வி - வெற்றி பற்றிய பட்டியல் எவருடையது தெரியுமா தம்பி! இறவாப் புகழ் பெற்றுவிட்ட ஆபிரகாம் லிங்கனுடையது!

ஆமாம்! தம்பி! அத்தனை தோல்விகளைக் கண்டிருக்கிறார் ஆபிரகாம் லிங்கன். எத்துணை உள்ள உரம்! அந்தத் தோல்விகளைக் கண்டு மனம் உடைந்திடாமல், முயற்சியிலே மேலும் மும்முரம் காட்டி, அமெரிக்கக் குடியரசுத் தலைவராகி இறவாப்

புகழ்பெற்றுக் காட்டினார். ஒவ்வொரு முறை அவர் தோற்றபோதும் அந்த நாட்டுப் பக்தவத்சலங்கள் என்னென்ன பேசியிருப்பார்கள்! தொலைந்தான்! தொலைத்துவிட்டோம்!! என்று எத்தனை பேர் முழக்கம் எழுப்பியிருப்பர்? ஆபிரகாம் லிங்கனுடைய நண்பர்களேகூட, இந்தத் தோல்விகளைக் கண்ட போது, இவ்வளவு தகுதியுள்ளவரைத் தேர்ந்தெடுக்காத இந்த மக்களை என்ன சொல்வது! இப்படிப்பட்ட மக்களை நம்பி யார்தான் எந்த நல்ல காரியத்தைத்தான் செய்ய முற்பட முடியும்! என்றெல்லாம் பேசியிருந்திருப்பார்கள். ஆயினும், ஆபிரகாம் லிங்கன், இந்தத் தோல்விகளைக் கண்டு, துயர் துளைக்கும் மனத்தினராகிவிடவில்லை, மக்களின் நல்லாதரவு கிடைக்கும் வரையில், அதற்காகப் பாடுபடுவது தமது கடமை என்ற உணர்வுடன்

பணியாற்றினார்; திராவிட முன்னேற்றக் கழகம், பொதுமக்களின் நல்லாதரவைக் கேட்டிடும் பணியினை ஓர் கடமை எனக்கொள்ள வேண்டும். மக்கள் தமது நல்லாதரவை நமக்குத் தராமலும் இல்லை. தர்மபுரியில் நமக்கு அந்த நல்லாதரவு கிடைக்காமற் போனதற்கான காரணத்தை, கழகத் தோழர்கள் கண்டறிய வேண்டும்; நமது வேலை முறைகளிலே இருந்திடக் கூடிய குறைபாடுகளைக் களைந்திடுவதிலே கவனம் செலுத்த வேண்டும். நமது தோல்வி, நமக்கு மட்டுமின்றி, நமது கழகத்திற்கு வெளியே உள்ள இலட்சக்கணக்கான மக்களுக்கெல்லாம், எவ்வளவு ஏமாற்றத்தைக் கொடுத்திருக்கிறது என்பதை அறியும் போது, கவலையைவிட, ஒரு புதுவித நம்பிக்கையே நமக்குத் தோன்றும். அத்துணை மக்கள் நமது வெற்றியை எதிர்பார்த்தபடி உள்ளனர் என்பது

புரிவதால்.

பொது உண்மையை அனைவரும் அறிவர்; ஆளுங் கட்சிக்குக் கிடைக்கக்கூடிய சில வசதிகளும், வாய்ப்புகளும், எதிர்க்கட்சிகளுக்குக் கிடைக்காது. ஆம் எனில் அதற்கு என்ன பரிகாரம்? அந்த வசதிகளையும் வாய்ப்புகளையும் கொண்டு ஆளும் கட்சி சாதித்துக்கொள்வதை நாம் நமது பரிவினைக் காட்டி, தோழமையைக் காட்டி தூய்மையைக் காட்டி, முயற்சியின் மூலம் பெற்றிட வேண்டும்; பெற்றிட முடியும்; பெற்றிருக்கிறோம்; தருமபுரியில் பெறத் தவறிவிட்டோம்.

ஆளுங்கட்சி அதிகார பலத்தைக் காட்டி ஏழை எளியவர் களை மட்டுமல்ல, வணிகர்களை, அலுவலகப் பணியாளர்களை மயக்கவும், மிரட்டவும் முடிகிறது. அதனால்தான், அமைச்சர் களாக

இருந்துகொண்டே பொதுத் தேர்தலை நடத்துவதைக் கண்டித்தோம்; தேர்தலுக்குச் சில மாதங்களுக்கு முன்பாகிலும், மந்திரி பதவிகளை ராஜிநாமா செய்திட வேண்டும் என்று கேட்டுக்கொண்டோம். காங்கிரஸ் அமைச்சர்கள் ஒப்புக்கொள்ள வில்லை.

இடைத் தேர்தலின்போது, நாம் அந்த யோசனையைக்கூட கூறமுடியாது; பொருளில்லை.

இடைத் தேர்தலிலே பெரும்பாலும் ஆளுங்கட்சி வெற்றியைத் தட்டிப் பறித்துக்கொள்ளும் வாய்ப்புப் பெறுகிறது. வருபவர் யார்? மந்திரி! கேட்பது என்ன? ஓட்டு! கொடுக்கா விட்டால்? கோபம்! கோபம் வந்தால்? என்னென்ன செய்வாரோ? நமக்கேன் அவர்களின் பொல்லாப்பு!! - இது பொதுவாக மக்களின் மனப்போக்கு. இதை மீறித்தான் எதிர்க்கட்சிகள் வெற்றி பெற்றிட

வேண்டும்.

எதிர்கட்சிக்குத் தருகிற "ஓட்டு' உடனடியான பலனை எதிர்பார்த்து அல்ல!

ஆளுங்கட்சியினர் "ஓட்டு' கேட்கும்போதோ, உடனடியாகப் பலன் தருவதாகச் சொல்லுகிறார்கள்; மக்கள் நம்பவும் செய்கிறார்கள்.

"பெண்கள் கல்லூரி வேண்டும், வேண்டும் என்று பல வருஷங்களாகக் கேட்டுக் கொண்டிருக்கிறோம். இன்னும் ஏற்பாடாகவில்லை''

என்று தர்மபுரி பிரமுகர்கள், கழகத் தோழர்களிடம் கூறும் போது, கழகத் தோழர்கள் என்ன சொல்லுவார்கள்?

"சட்டசபையில் இதைப்பற்றிக் கட்டாயம் பேசுகிறேன். கல்லூரி அமைக்காதிருக்கும் போக்கைக் கண்டிக்கிறேன். இந்தத் தேர்தலில்

காங்கிரசைத் தோற்கடித்துக் காட்டினால், காங்கிரஸ் மந்திரிகளுக்குப் பயம் ஏற்படும்; அப்போது கல்லூரிக்கு வழி பிறக்கும்.''

இதைத்தான் சொல்லுவார்கள்; முறை. அமைச்சர் ராமைய்யாவிடம் அதே தருமபுரி பிரமுகர்கள் அதே கல்லூரி விஷயமாகக் கேட்டால், அவரால் என்னென்ன சொல்ல முடியும் என்பதை எண்ணிப் பாரேன், தம்பி!

"கல்லூரியா! பெண்கள் கல்லூரியா! ஏற்படுத்தலாமே! அதிலென்ன கஷ்டம்! எத்தனையோ கல்லூரிகள் ஏற்படுத்தி இருக்கிறோமே. இங்கே எந்த இடம் நல்ல இடம், கல்லூரிக்கு?''

இவ்விதம் பேச முடியும்; பேசுகிறார்கள். உள்ளம் பூரிக்கிறது பிரமுகருக்கு இருக்கிறது நல்ல இடம் ஊருக்கு மையமாக; ஒரே சதுரம்; அறுபது ஏக்கர்.

என்கிறார் என்று வைத்துக்கொள்ளேன், உடனே மந்திரியின் மோட்டார் கிளம்புகிறது; ஜீப் முன்னாலே பறக்கிறது; பக்கத்தில் பிரமுகர்; இடத்தைப் பார்வையிடச் செல்கிறார்கள்.

"உங்க பேட்டை ஓட்டு எப்படி?''

என்று அந்தச் சமயத்தில் மந்திரி கேட்டால் என்ன பதில் வரும்?

"எல்லாம்"ஐயா' சொல்கிறபடிதான்! காங்கிரசுக்குத் தான்''

இடத்தைப் பார்வையிடுகிறார்கள்; தரமான இடம் என்கிறார் மந்திரி; ஆமாம்! என்கிறார் அதிகாரி! அகமகிழ்ச்சி பிரமுகருக்கு; கல்லூரி வந்துவிடும் என்பதனாலே மட்டுமல்ல; நெடுநாளாக விலை போகாதிருந்து வந்த அந்த நிலத்தை நல்ல விலைக்கு விற்றுவிட முடியும் என்பதால்;

நிலம் பிரமுகருடையது; இந்த விவரம் விளக்கப்பட்ட பிறகு அந்தப் பிரமுகர், ஐம்பது பேர் சுட்டு வீழ்த்தப்பட்டார்களே அந்தக் கொடுமையையா எண்ணிக் கொண்டிருப்பார்; ஏகர் ஐயாயிரம், அறுபது ஏகர்! மொத்தத்தில் 3 இலட்சம்!! இந்தக் கணக்கிலே அல்லவா அவர் உலவிக் கொண்டிருப்பார். மகனை இழந்த மாதா கதறுவதா காதில் கேட்கும், புதுப்புது நோட்டுகளை எண்ணும்போது எழுகிறதே இன்பநாதம், அது!!

தம்பி! நாம் மக்களின் இதயம் நமது பக்கம், ஆகவே, தேர்தலிலே வெற்றி நமது மக்கள் என்று எண்ணிக் கொண்டிருக்கும்போது, காங்கிரசாட்சியின் கொடுமைகளை எடுத்துப் பொதுமக்களிடம் விளக்கிக்கொண்டு இருக்கும்போது, இந்தக் கல்லூரிப் பிரச்சினை படை எடுத்து, நமக்கு வரவேண்டிய ஓட்டுகளை விழுங்கிக்கொண்டிருக்கிறது.

பண்புள்ள ஜனநாயக நாடுகளில், அமைச்சர்கள் தேர்தலின் போது - அதிலும் இடைத் தேர்தலின்போது - அதைச் செய்து தருகிறோம், இதை நிறைவேற்றிக் கொடுக்கிறோம் என்று வாக்களிக்கமாட்டார்கள், முறையல்ல என்பதால்.

தர்மபுரியில் நடந்தது என்ன?

சேலம் மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்கும்போது, புதிய மாவட்டத்துக்கு எது தலைநகர், கிருஷ்ணகிரியா? தருமபுரியா? என்கிற பிரச்சினை அங்கு ஓட்டுக் கேட்க வந்த அமைச்சர்கள்.

தருமபுரியைத் தலைநகராக்கித் தருகிறோம்

என்று அங்கேயே அறிவித்திருக்கிறார்கள். தருமபுரியில் பிரமுகர்களும், வணிகர்களும்,

எப்படி அதிலே மயங்காதிருக்க முடியும்!

முழுக்கணக்கு எனக்குக் கிடைக்கவில்லை என்றாலும், தருமபுரியைத் தலைநகராக்குகிறோம் என்று தேர்தல் நேரத்தில் காங்கிரசார் வாக்களித்த காரணத்தால், தருமபுரி வட்ட ஓட்டுகள் நமக்குக் கிடைத்திருக்கவேண்டியவை, காங்கிரசுக்கு விழுந்துள்ளன என்பது தெரிகிறது.

தம்பி! தருமபுரி தொகுதி மூன்று பிரிவுகள் கொண்டது; ஒன்று காரிமங்கலம் வட்டம்; இரண்டாவது தருமபுரி வட்டம்; மூன்றாவது நல்லம்பள்ளி வட்டம்.

கடந்த பொதுத் தேர்தலில், காங்கிரஸ் வேட்பாளராக நின்றவர் நல்லம்பள்ளி வட்டம் பாளையம்புதூர் கந்தசாமி கவுண்டர். கழக வேட்பாளர், தருமபுரி வட்டம் வெற்றிபெற்ற

சுயேச்சையாளர் வீரப்ப செட்டியார் காரிமங்கலம் வட்டம்.

ஆகவே காரிமங்கலம் வட்டத்து ஓட்டுகளில் மிகப் பெரும்பாலானவை, வீரப்பசெட்டியாருக்கு, நல்லம்பள்ளி வட்டத்து ஓட்டுகளில் மிகப் பெரும்பாலானவை காங்கிரஸ் வேட்பாளர் பாளையம்புதூராருக்கு, கழக வேட்பாளரான சுப்பிரமணியம் அவர்களுக்கு, தருமபுரி வட்ட ஓட்டுகளில் மிகப் பெரும்பாலானவை விழுந்தன.

கடந்த பொதுத் தேர்தலில் கிடைத்ததைவிட இம் முறை காரிமங்கலம் வட்டத்திலும், நல்லம்பள்ளி வட்டத்திலும் (நான் அறிந்தவரையில்) கழகத்துக்குக் கிடைத்திருக்கிறது; ஆனால், தருமபுரி வட்டத்துக்குள் ஓட்டுகள் கழகத்துக்குக் குறைந்துவிட்டன.

காரணம் என்ன இருக்க முடியும்? தலைநகர்!!

இந்த ஆராய்ச்சி செய்துகாட்டி தோல்வியை மறைத்திட ஒரு திரை நெய்துகொண்டிருக்கிறேன் என்று எவரும் எண்ணிக் கொள்ள வேண்டாம். இந்த விவரம் கூறுவதற்குக் காரணம், தேர்தலின்போது, நாம் துளியும் எதிர்பாராத, புதிய நிலைமைகள் வடிவமெடுத்து, எதிர்பாராத விளைவுகளை உண்டாக்கி விடக்கூடும் என்பதை விளக்குவதற்காகவே.

ரஷியாவிலே, நெப்போலியன் படுதோல்வி அடைந்த தற்கான பல காரணங்களிலே ஒன்று என்று இன்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள். நெப்போலியன் ர□யர் மீது படை எடுத்துச் சென்ற சமயத்தில், வழக்கமாக ஆரம்பமாகிற பனிக்காலம் பத்து நாள் முன்னதாகவும்,

வழக்கத்தைவிடக் கடுமையாகவும் ஆரம்பித்தது ஆபத்தாக முடிந்தது என்கிறார்கள்.

களத்திலே ஏற்பட்டுவிடும் தோல்விகள், படை பலத்தை மட்டும் நம்பிக்கொண்டிருந்தால் போதாது, முறைகளையும் செம்மையாக்கிக்கொள்ள வேண்டும் என்ற பாடம் தருவன. அந்த முறையில், தருமபுரி தோல்வியை நாம் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். மக்களின் இதயம் வென்றிட நாம் எடுத்துக்கொண்ட முயற்சி நாம் பெருமிதம் கொள்ளத்தக்க வெற்றியைக் கொடுக்கிறது. நமக்குக் கிடைத்துள்ள இந்த வலிவினைச் சிதைத்திட, ஆளுங்கட்சியான காங்கிரஸ் என்னென்ன நிலைமைகளை உருவாக்கும், என்னென்ன முறைகளை மேற்கொள்ளும் என்பன பற்றி விழிப்புடனிருந்து கண்டறிந்து

அவைகளையும் முறியடிக்கத்தக்க விதமாக நமது முறைகளைச் செம்மைப்படுத்திக்கொள்ள வேண்டும். இதற்காகவே இதனைக் கூறினேன்.

அன்புள்ள

அண்ணாதுரை

9-5-1965

7. மனிதனும் மிருகமும்

மக்களுக்கும் மாக்களுக்கும் உள்ள வேறுபாடுகள்
இராகுல சங்கீத்ராயனின் படப்பிடிப்பு
விஞ்ஞான விற்பன்னர்களின் கருத்துரைகள்
வெள்ளைப்பாண்டி கவிதையால் எழுந்த எண்ணங்கள்

தம்பி!

அடவியிலே அலைந்துகொண்டும், குகைகளிலே பதுங்கிக் கொண்டும், கல்லையும் கட்டையையும் கருவிகளாகக் கொண்டு மிருகங்களுடன் போரிட்டுக்கொண்டும் காயோ, கனியோ, கிழங்கோ, மிருகத்தின் இறைச்சியோ, பசித் தீயைப் போக்கிக் கொள்ள எதனையோ உண்டு, கதிரவன் கக்கிடும் வெப்பத்தாலும்,

கடுங்குளிராலும், பெருமழையாலும், பேய்க் காற்றாலும், நில நடுக்கத்தாலும், காட்டுத் தீயினாலும் அலைக்கழிக்கப்பட்டு, கொல்வது கொல்லப்படுவது, துரத்துவது, துரத்தப்படுவது என்ற நிலையில், இருந்துவந்த மனிதகுலம் இன்று விண்ணகத்து விந்தைகளைக் கண்டறிந்திட, முனைந்திடும் காலகட்டம் வந்து சேர்ந்திருக்கிறது. எத்தனை நெடிய பயணம்! எத்தனை ஆபத்துக் களையும் அழிவுகளையும் எதிர்த்து நடாத்தப்பட்ட பயணம்! எங்கு இருந்தான்! எங்குச் செல்கிறான்!! எவ்விதம் இருந்து வந்தான், எவ்விதமான மாறுதலைப் பெற்றுக்கொண்டிருக்கிறான்! குகைகளில், மொழி அறியாது, தாய்க்கும் தாரத்துக்கும், உடன் பிறந்தாளுக்கும் உள்ளத்தை வென்றாளுக்கும் வித்தியாசம் தெரியாது, மிருக இச்சையை எப்படியோ தீர்த்துக்

கொண்டு, உறுமிக் கிடந்தவன், இன்று சமூகக் கட்டுக்கோப்பும் சட்ட திட்டங்களும் பெற்று, இந்த அவனியைத் தனது விருப்பத்தின்படி உருமாறச் செய்ததுடன் நில்லாது, மேலே மேலே செல்கிறான்; சென்றபடி இருக்கிறான்; வேக வேகமாக; விதவிதமான முறைகளைத் துணைகொண்டு; ஒளி ஒலி இவற்றின் வேகத்துடன் போட்டியிட்டபடி!! பெற்ற வெற்றிகள் பெற வேண்டிய வெற்றிகளைத்தான் நினைவுக்குக் கொண்டு வருகின்றன! சென்ற இடம், இனியும் செல்லவேண்டிய இடத்துக்கு தூண்டுதலைத் தருகிறது! பயணம் முடிவு பெறவில்லை! பயணத்தின் முடிவு தெரியவுமில்லை! எங்கே செல்கிறான்? அறிந்திட நேரமில்லை; நினைப்பும் எழவில்லை! பயணம் செய்திடவே காலமெல்லாம் செலவாகிறது! எங்கே செல்கிறான்? காற்று எங்கே செல்கிறது?

ஒலியும் ஒளியும் எங்கே செல்கின்றன? விடை உண்டா இவ்வினாக்களுக்கு? உண்டு எனில், அஃதே, மனிதகுலம் மேற்கொண்டுள்ள பயணத்தின் பொருளையும் அறிந்திடத் துணை செய்யும். செல்லும் இடமும், செல்வதன் நோக்கமும் அறிந்த பிறகு பயணத்தைத் தொடரலாம் என்று மனிதன் ஓய்வு எடுத்துக்கொள்ளவில்லை. சென்று கொண்டே இருக்கிறான்! புதிது புதிதாகப் பலவற்றினைக் கண்டறிய வேண்டும் என்ற ஆவலால் உந்தப்பட்டு, சென்ற வண்ணம் இருக்கிறான். எதனாலோ ஈர்க்கப்பட்ட நிலையில், சென்றபடி இருக்கிறான். சந்திரமண்டலத்துடன் அந்தப் பயணம் நின்றுவிடப்போவதில்லை! செவ்வாய் மண்டலம் அழைக்கிறது!! காணவேண்டிய மண்டலங்கள், இன்னும் எத்தனை எத்தனையோ உள்ளன! எல்லாம்

புரிந்துவிட்டது, எல்லாம் கிடைத்துவிட்டது, இனிப் பயணம் தேவையில்லை என்று கூறிடும் கட்டம் இல்லவே இல்லை! சென்றுகொண்டே இருப்பது மனிதகுலத்தின், பொழுது போக்குமல்ல, தொழிலும் அல்ல; இயல்பு! இயங்கும் நிலை உள்ள மட்டும் இந்த இயல்பு இருந்தே தீரும், சுற்றிடும் பம்பரம் கண்டு வியந்திடும் குழவிபோல, பறந்திடும் விமானம் கண்டு மகிழ்ந்திடும் இளைஞன் போல, இன்று மனிதகுலப் பயணத்திற்கான வழி வகைகளைக் கண்டறிந்து, ஒரு விந்தையிலிருந்து மற்றோர் விந்தைக்கு அழைப்பு விடுத்திடும் விஞ்ஞானிகளின் கண்டுபிடிப்பு களையும் செயல்முறைகளையும் கண்டு, நாம் பெருவியப்படைகிறோம்.

உண்டு, உறங்கி, உறவாடி, இனம் பெருக்கி, மாண்டு மடிந்து போவது மனித குலத்தின் செயலின் அடிப்படை. கிடைத்ததை உண்டு,

அலுப்பினால் வீழ்ந்து உறங்கி, வலிவு காட்டி உறவாடி இனம் பெருக்கி, அழிவு தன்னை நோக்கி வரும்போது எதிர்த்துப் பார்த்து, இயலாதபோது மாண்டுபோவது, மனிதகுலத்தின் பாலபருவ நிலையாக இருந்தது. இந்த நிலையிலிருந்து, தேவைப்படுவதை உண்பது, உண்பனவற்றை உண்டாக்கிக் கொள்வது வேலை செய்வதால் அலுப்படைவது, அதனால் இழந்துவிட்ட வலிவினைத் திரும்பப்பெற உறங்குவது, உடல் உணர்ச்சிக்காக மட்டுமின்றி உள்ளத்தில் எழுந்திடும் பற்று பாசம் காதல் எனும் உணர்ச்சிகளைச் செம்மைப்படுத்தி உறவு முறையினை வகுத்துக்கொண்டு அதன்படி ஒழுகுவது, சாவு வந்திடும் என்று தோன்றிடும்போது, தடுப்பு முறைகள் தேடுவது, இறுதியில் மடிந்துபோவது எனும் கட்டம் வருவதற்குள் மனிதன்

பலப்பல நூறாயிரம் ஆண்டுகளைக் கழித்துவிட்டான்; ஆண்டுகள் என்ற காலக் கணக்குக்கூடத் தெரியாத நிலையிலேயே, எத்தனை எத்தனையோ ஆயிரமாயிரம் ஆண்டுகளைக் கழித்து விட்டான். மனிதன், உருப்பெற்று உலவத் தொடங்கி ஐந்து இலட்சம் ஆண்டுகளாகின்றன என்று விஞ்ஞான விற்பன்னர்கள் கூறுகின்றனர். மிருக நிலையிலேயே, மனிதன் நீண்ட நெடுங் காலத்தைக் கழித்துவிட்டிருக்கிறான். எனினும், துவக்க முதலே, மனிதன் சில தனித்தன்மைகளையும் தனிச் சிறப்பினையும் பெற்றிருந்ததால், மிருக நிலையினை மாற்றிக்கொள்ளும் முயற்சியிலே ஈடுபட்டு, மெள்ள மெள்ள வெற்றி கண்டான். மிருகங்கள் இருக்கும் இடத்திற்கு ஏற்ற இயல்பைப் பெறுகின்றன; அந்த இயல்பு, மாற்ற முடியாததாகிவிடுகிறது. உறுமிக்

கொண்டிருந்த புலியும், சீறிக்கொண்டிருந்த பாம்பும், கொத்திக் கொண்டிருந்த வல்லூறும் இன்றும் அதே இயல்புடனேயே இருந்திடக் காண்கிறோம். மனிதனைவிட மிருகங்கள், எத்தனையோ காலத்துக்கு முன்பிருந்தே உள்ளன; எனினும், இயல்பு மாறவில்லை; மாற்றிக்கொள்ளும் திறமை மிருகங்களுக்கு அமையவில்லை.

இயல்பு, சுற்றுச் சார்பினாலே உருப்பெறுகிறது, வளருகிறது; எனவே, இயல்பு மாறவேண்டுமெனில் சுற்றுச்சார்பு மாற வேண்டும்; மாற்றி அமைக்கப்பட வேண்டும்; அதற்கான தனித் திறமை மிருகங்களிடம் இல்லை; எனவேதான் இயல்பு, அன்று இருந்தது போன்றே இன்றும் - மிகப் பெரும் அளவுக்கு - இருந்திடக் காண்கிறோம்.

மிருகங்களின் உருவ அமைப்பு, நடமாட்ட முறை இவற்றிலே ஏற்பட்டுவிட்ட

மாற்றங்கள்கூட, தாமாக விரும்பி, முயன்று ஏற்படுத்திக்கொண்ட மாற்றங்கள் அல்ல. இருந்துவந்த சுற்றுச்சார்பு தானாக மாற்றமாகி, அதன் காரணமாக, மிருகங்களின் நிலையிலேயும் சில மாற்றங்கள் ஏற்பட்டன. ஏற்படுத்திக் கொள்ளவில்லை!! இதிலேதான், மனிதனுக்கும் மிருகத்துக்கும் உள்ள அடிப்படை வித்தியாசம் அடங்கி இருக்கிறது.

யானை முதல் பூனை வரை, பாம்பு பறவை பூச்சி புழு என்பவைகள் ஈறாக, வடிவமாற்றம் நிரம்ப ஏற்பட்டுள்ளன என்பதனை ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்து கூறுகின்றனர்.

இன்று காணப்படும் யானைக்கும், பண்டு இருந்து வந்ததற்கும், உள்ள வித்தியாசத்தைக் காணும்போது, திடுக்கிட்டுப் போய்விடுவோம். நீர் வாழ்வன, நிலம் வாழ்வன, ஊர்வன, பறப்பன எனும் எவற்றிலும், பெரிய

மாறுதல் வடிவத்திலே ஏற்பட்டுவிட்டன. குதிரை காட்டுக் குதிரையாக இருந்த காலத்திலிருந்து வெகுவாக முன்னேறி, இன்றைய நிலையினைப் பெற்றது. நகரக்கூட முடியாதபடியான மாமிச மலையாக இருந்துவந்த பல மிருகங்கள் அழிந்தே போய்விட்டன. இன்று உள்ள மிருகங்கள் நமது முன்னோர்கள் எவ்விதம் இருந்தனர் என்று கண்டறியுமானால், வெட்கித் தலைகுனியும். மிருகங்களைச் சொல்கிறோமே! நமது இலட்சணம் மட்டும் என்ன! நமது மூல மூதாதை குரங்கு!! பெருமைப்படத்தக்கது என்றா கூற மனம் வரும்.

சுற்றுச் சார்பினை மாற்றி அமைத்து இயல்பையும் வடிவினையும் அதற்கு ஏற்ப, மிருகங்கள் பெற்றிடவில்லை; மனிதன் மட்டுமே, சுற்றுச் சார்பினைத் தனக்கு ஏற்றதாக, வசதி அளிப்பதாக

அமைத்துக்கொண்டான்.

மிருகங்கள் போலவே, புதர்களில் பதுங்கிக் கிடந்தவன். குகைகளைக் கண்டான்; அதிலே இருந்துவந்த மிருகங்களை விரட்டிவிட்டோ கொன்றுவிட்டோ, குகைகளைத் தனதாக்கிக் கொண்டான். குகைகளைக் கண்டறிந்தது மட்டுமல்ல, சில காலத்துக்குப் பிறகு, மலைகளைக் குடைந்து குகைகளை உண்டாக்கிக் கொண்டான். சுற்றுச் சார்பினை மாற்றி அமைத்திட அமைத்திட, அதற்கு ஏற்றவிதமாக இயல்பு மாறிக்கொண்டு வரலாயிற்று.

சுற்றுச் சார்பினைத் தனக்குச் சாதகமான முறையில் மாற்றி அமைத்துக்கொள்ளும் திறமை பெற்றிருக்கும் காரணத்தினாலேயே, மனிதன் எந்த இடத்திலும் இருந்திடும் வகை கண்டறிந்து வாழ்ந்திட முடிகிறது.

வெப்பம் தீயெனத் தாக்கும் சகாரா பாலைவனத்திலும் மனிதன் இருக்கிறான், பனி மலை மிகுந்த அயிஸ்லாந்திலும் இருக்கிறான்; கடலோரமும் அவனைக் காணலாம், மலை முகட்டிலும் அவன் இருக்கிறான்; ஆற்றோரமும் இருக்கிறான்; அடவியிலும் இருக்கிறான்; பெருமழை பொழிந்தபடி உள்ள இடத்திலும் இருக்கிறான்; வறட்சி மிகுந்த இடத்திலும் இருக்கிறான்

. மிருகங்களின் நிலை அவ்விதமில்லை. பனிப் பிரதேசத்து மிருகங்களை பாலைவனத்தில் கொண்டு சேர்த்தால் செத்துப் போகின்றன; நீர்வாழ்வனவற்றை நிலத்தில் கிடத்தினால் உயிர் போய்விடுகிறது. சில சுற்றுச் சார்பிலே வாழ்ந்திடும் வகையினுள்ளவைகள், மாறான சுற்றுச் சார்பிலே கொண்டு சேர்க்கப்பட்டாலோ, தாமாகச் செல்ல நேரிட்டாலோ மடிந்து

விடுகின்றன.

மிருகக் காட்சிச் சாலைகளில் இதனை உணர்ந்தே, எந்தெந்த மிருகத்துக்கு என்னென்ன விதமான சுற்றுச் சார்பு தேவையோ அதனை அமைத்துத் தருகிறார்கள்.

மனிதன், எவ்விதமான சுற்றுச் சார்புள்ள இடத்திலும் இருக்கிறான்; காரணம், அதனைத் தனக்கு ஏற்றதாக்கிக் கொள்ளும் முறைகளைக் கண்டறிந்துகொள்ள முடிவதால்.

கடுங்குளிர் மிக்க இடமானால் கம்பளிச் சட்டை அணிந்து கொள்வதன் மூலம், கொடுமை நேரிட்டு விடாதபடி தடுத்துக் கொள்கிறானல்லவா! மானோ மாடோ கடுங்குளிரிடத்தில் கொண்டு செல்லப்பட்டால் என்ன செய்திட முடியும்! விறைத்து

இறந்துவிடுகின்றன.

மிருகங்கள், தமக்கென்று அமைந்துவிட்ட உடலமைப்பு, இயல்பு இவற்றினை மட்டுமே கொண்டு செயல்பட வேண்டி யிருக்கிறது; வேறு துணை - வேறு கருவி - வேறு முறை - பெற்றிடவும் பயன்படுத்திக்கொள்ளவும் முடிவதில்லை. நகர்ந்து செல்லும் உடலமைப்பும் இயல்பும் பெற்ற ஆமை, வேகமாகப் பாய்ந்தோடும் குதிரையின் துணைபெற்று, விரைந்து ஓரிடத்திலிருந்து மற்றோரிடம் சென்றிட முடியுமா! ஆமை, அந்த நாளிலிருந்து நகர்ந்துகொண்டுதான் இருந்திடுகிறது - வேகம் பெற முடியவில்லை! குதிரை எப்போதும் வேகமான ஓட்டத்தைப் பெற்றிருந்திருக்கிறது.

மனிதன், தனக்கு உள்ள உடலமைப்பு, இயல்பு, என்பவைகளினால் மட்டும் கிடைத்திடும் நடவடிக்கைகளோடு

நின்றுவிடவில்லை; வேறு துணை பெறுகிறான்; வேறு கருவிகளைத் தேடுகிறான்.

பறந்திடும் உடலமைப்பு மனிதனுக்கு இல்லை! ஆனால், பறந்து செல்கிறான், பறவைகள் வியந்திடத் தக்க விதத்தில்.

நீருக்கடியிலே இருந்திடத் தக்கதான உடலமைப்பு மனிதனுக்கு இல்லை; ஆனால், நீர்மூழ்கிக் கப்பல் அமைத்து, அதன் துணைகொண்டு, நீருக்கடியில் இருந்திடும் வழி பெற்று விட்டான்.

கிடைத்ததைக் கிடைத்தபடியே தின்றிடும் மிருக முறையிலிருந்து வந்தான் மனிதன்; இன்று கிடைப்பதை அல்ல, உற்பத்தி செய்வதை; அதே முறையிலே அல்ல, தன் சுவைக்கு ஏற்பப் பக்குவப்படுத்தியும், மற்றப் பொருளுடன் கலந்தும் உண்ணத்

தலைப்பட்டுவிட்டான்.

மிருகங்கள் நடமாடுகின்றன, மனிதன் வாழுகின்றான் என்று கூறிடுவதற்கான காரணத்திலே இது முக்கியமானது; மனிதன் தனக்கான வாழ்க்கையை அமைத்துக்கொள்கிறான்; மிருகங்களுக்கு அமைந்துவிடுகிறது.

மக்களுக்கும் மாக்களுக்கும் இயல்பிலேயும் நடவடிக்கை களிலேயும் வேறுபாடு காணமுடியாதிருந்த காலத்தை இன்று ஆராய்ச்சியாளர்கள், எடுத்துக் காட்டுகிறார்கள். பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு மக்கள் மாக்களை வேட்டையாடுவதும், மாக்கள் மக்களைப் பிய்த்துத் தின்பதும் மாறி மாறி நடைபெற்று வந்த நிகழ்ச்சிகளாக இருந்திருக்கின்றன.

இராகுல சங்கீத்ராயன் எனும்

ஆராய்ச்சியாளர், கி. மு. 6000லில், இருந்த நிலைமை பற்றி எழுதியிருப்பதைப் பார்க்கும்போது, எந்தவிதமான வாழ்க்கை முறையிலிருந்து மனித குலம் இன்றைய புதுமை வாழ்க்கை முறைக்கு வந்திருக்கிறது என்பது புரிகிறது; புரியும்போது வியப்பு, திகைப்பூட்டும் அளவுக்கு ஏற்படுகிறது.

பனிப்படலம் மிகுந்த வால்கா நதிப் பிரதேசத்தைக் காட்டுகிறார் ஆராய்ச்சியாளர். நீலநிற வானம் மேலே! கீழே பனி கப்பிக்கொண்டுள்ள நிலப்பரப்பு. பெரிய பெரிய மரங்கள் - கிளைகளிலே பனிக் கட்டிகள். மிருகங்களின் உறுமல், பட்சிகளின்கலகல ஒலி, வண்டுகளின் ரீங்காரம் எதுவும் இல்லை. திகைப்பூட்டும் அமைதி.

மலைகளிலே இயற்கையாக அமைந்துள்ள குகைகளே வீடுகள்!

ஒரு கிழவி - ஆடை இல்லை - கற்றை கற்றையாக ரோமம் அடர்ந்திருக்கும் நிலையில் - கண்களில் ஒளி இல்லை - ஒரு வெறிச்சிட்ட பார்வை.

எலும்பைச் சுவைத்தபடி சில பெண்கள்.

அதிலே ஒரு துண்டு வீசப்படுகிறது அழுகுரலெழுப்பும் குழந்தையிடம்.

குகையிலே பதுங்கிக் கிடக்கும் மனித மிருகங்கள்!

நெருப்பு மூட்டிட விறகு தேடி, கட்டுகளாக்கித் தூக்கிக் கொண்டு வருகிறார்கள் இளம் பெண்கள்.

ரோமம் நீக்கப்படாத தோலால் ஆடை, அவர்களுக்கு. நீண்ட கூர்மையுள்ள கம்பு, நன்றாகத் தீட்டிக் கூர்மை யாக்கப்பட்ட கல் அம்பு!

குடும்பத் தலைவி முன்னே செல்ல, மற்றவர்கள் பின்னால் செல்கிறார்கள்.

ஆழ்ந்த தூக்கத்தில் உள்ள கரடிகளைத் தாக்கிக் கொல்கிறார்கள் - உணவுக்காக.

குகைக்கு வருகிறார்கள் - வழியிலே ஓநாய்கள் சூழ்ந்து கொள்கின்றன. போர்!

ஓநாய் கொல்லப்படுகிறது, அதன் பச்சை இரத்தத்தை இவர்கள் குடிக்கிறார்கள் - சதையைப் பிய்த்துத் தின்கிறார்கள்.

இவர்களிலே சிலரை ஓநாய்கள் கொன்று, சதையைப் பிய்த்துத் தின்கின்றன.

இது ஒவ்வொரு நாளும் - கொல்வது கொல்லப்படுவது - குருதி கொட்டுவது - குருதி குடிப்பது - நாலு கால் மிருகங்களுக்கும் இரண்டு கால் மிருகங்களுக்கும் ஓயாத போர்! இது வாழ்க்கை முறையாக இருந்திருக்கிறது என்பதை எடுத்துக்

காட்டுகிறார் ஆராய்ச்சியாளர்.

இவ்விதமான முறையிலா மனிதகுலம் இருந்து வந்தது என்று எண்ணும்போதும், இவ்விதமாக இருந்து வந்த மனித குலத்தில், வழிவழி வந்தவர்களே நாம் என்பதை எண்ணும் போதும், எல்லா வகையாலும் மனிதன் உயர்ந்தவன், சிறந்தவன் என்ற எண்ணமே ஒருவிதமான கேலிக்கூத்தாகத் தென்படும்.

மாக்களுக்கும் நமக்கும் மாறுபாடு தெரிய முடியாத நிலையிலே இருந்து, வெகுதூரம் முன்னேறிவிட்டோம் என்ற எண்ணம் ஒருவிதமான மன நிம்மதியைக்கூடத் தரும் என்பதில் ஐயமில்லை.

கூர்ந்து பார்த்தால், முறையிலே வியக்கத்தக்க மாறுதல் ஏற்பட்டிருக்கிறது என்றாலும், அடிப்படை அலுவல்கள்,

இயல்புகள், உணர்வுகள், வெகுவாக மாறிவிடவில்லை என்பது புலனாகும்; புலனாகும்போது, மாக்களைவிட நாம் மிக அதிகமாக முன்னேறிவிட்டோம் என்று கூறிக்கொள்வதற்கில்லையே என்ற எண்ணம் நம்மைப் பிடித்து வாட்டி வதைத்திடும்.

கல்லைத் தீட்டிக் கருவியாக்கி, காட்டுமிருகங்களை வேட்டையாடிக் கொன்றுதின்று உடற்பசியைப் போக்கிக் கொள்வதிலே வரம்புவகை, முறைநெறி என்பவைகளைக் பார்க்காமல் நடந்துகொண்டு வந்த நாட்களிலே, உண்பது உறங்குவது, உறவாடுவது, போராடுவது, பெறுவது, தருவது என்பவைகளுக்கு அடிப்படையாக அமைந்திருந்த அதே உணர்வுகள், இன்றும் அதே விதத்திலே கிளம்பி, மனிதக் குலத்தை ஆட்டிப் படைத்துக்கொண்டிருப்பதை அறிகிறோம்;

அறியும் போது, முன்னேறிவிட்டோம் என்று கூறிக்கொள்ளும் முழு உரிமையை மனிதகுலம் பெறவில்லை என்பது தெளிவாகிறது.

இன்றும், எனக்கு, உனக்கு என்பதற்காகவும், என்னுடையது உன்னுடையது என்பதற்காகவும் அன்றுபோலவே அமளி நடந்தபடி இருக்கிறது! கருவிகள் மாறிவிட்டன, கருத்து மாறிவிட வில்லை, போர் முறைகள் மாறிவிட்டன, போர் உணர்வு மாறவில்லை.

கோபம் கொந்தளிப்பு, தாக்குதல் தப்பித்தல், பாய்வது பதுங்குவது - எல்லாம் அன்று போலவே இருந்திடக் காண்கிறோம்.

மலைமுகடுகளில், அடவிகளில், அருவிக்கரைகளில் அமளிகள் நடைபெற்றன முன்பு; இப்போது நவநாகரிகநகர்களில்,

மின்னிடும் மாளிகைகளில், அமளி! முன்பு கல்லாலான கருவிகள்! இன்று அணு ஆயுதம்!

அழிக்கும் உணர்வும், அழிவிலிருந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்ளும் உணர்வும், அந்த உணர்வுகளின் அடிப்படையில் அமைந்துள்ள போராட்டமும், அன்றுபோலவே இன்று இருந்திடக் காண்கிறோம்.

முன்பு, வாழ்நாளில் மிகப் பெரும்பகுதி, போராட்டமாகவே இருந்து வந்தது என்று கூறலாம்; இன்று வாழ்நாளில் ஒரு போராட்டத்துக்கும் மற்றொரு போராட்டத்துக்கும் இடையிலே, ”அமைதி நாட்கள்’ இருக்கின்றன. இந்த அளவுதான் மனிதகுலம் முன்னேற்றம் காணமுடிந்திருக்கிறது.

அரசு இல்லை ஆகவே அமைதி இல்லை! மார்க்கம் இல்லை ஆகவே ஒழுக்கம் இல்லை!

சட்டம் இல்லை ஆகவே சாந்தி இல்லை! அறநூல் இல்லை ஆகவே அறம் இல்லை! அறிவாளர் இல்லை ஆகவே அறிவுத் தெளிவு இல்லை! - அன்று, மாக்களுக்கும் மக்களுக்கும் அதிக அளவு மாறுபாடு இல்லாத காலத்தில்.

இன்றோ! அரசு இருந்தும் அமைதி இல்லை; மார்க்கம் இருந்தும் ஒழுக்கம் இல்லை; அறநெறி காட்டப்படும் அறம் நிலைத்து நிற்கவில்லை; அறிவாளர் முயன்றும் அறிவுத் தெளிவு ஏற்படவில்லை!

ஆனால், எழிலூர்கள் பலப்பல, தொழிலின் ஏற்றம் மிகப்பல! மாடமாளிகை, கண்ணைப் பறிக்கத்தக்க விதமாக! கலை கவர்ச்சி தருவதாக! இவைகளுக்குக் குறைவு இல்லை.

இவைகளைக் காட்டிலும் மிக முக்கியமானது என்று கூறத்தக்கதான விஞ்ஞான அறிவுப்பெருக்கத்துக்கோ

ஒரு அளவு இல்லை! மேலே மேலே செல்கிறது மனிதகுலம், விண்ணிலே உள்ள கிரகங்களைத் தனது ஆதிக்கத்தின் கீழ்க்கொண்டுவர.

புறத்தோற்றத்தைக் காணும்போது, மனிதகுலம் வெகுதூரம், வேகவேகமாக முன்னேறி, உன்னதமான கட்டத்தில் வந்திருப்பது தெரிகிறது.

அகத்தில் நெளியும் உணர்வுகளையும், அந்த உணர்வுகள் ஆட்டிப் படைத்திடுவதற்கேற்ற வண்ணம் மனிதகுலம் ஆடித் தொலைப்பதையும் பார்க்கும்போது முன்னேற்றம் அடைந்து விட்டோமா என்பதிலேயே பலமானதோர் சந்தேகம் ஏற்படத்தான் செய்யும்.

வாழப் போரிட்டுத் தீரவேண்டியுள்ள நிலையும், வலிவைக் காட்டிப் பகையைத்

தீர்த்துக்கட்டும் முறையும், காடு மிகுதியாக இருந்த நாட்களில் இருந்துவந்ததுபோலவே காடு குறைந்து நாடு எழில்பெற்ற நாட்களிலேயும் இருக்கிறது; இதைப் பார்க்கும் போது, மனிதகுலம் பெற்றுவிட்ட முன்னேற்றம், அடிப்படையை மாற்றுவதாக இல்லை என்பது புரிகிறது; கவலை மிகுந்திடுகிறது.

காட்டுக் குணத்தைப் போக்கிக்கொள்வதிலே பெருமைப் படத்தக்க அளவு முன்னேற்றம் ஏற்படாத நிலையில், மனித குலத்திடம் விஞ்ஞானம் புதிய புதிய மிகுதியும் வலிவுள்ள கருவிகளை, முறைகளைக் கொடுத்துவிட்டிருக்கிறதே என்பதனை எண்ணி இன்று பெருத்த கவலைக்குள்ளாகிவிட்டுள்ளனர் பேரறிவாளர் பலர். உணர்வுகளைக் கட்டுப்படுத்திக்கொள்வதிலே மனிதகுலம் வெற்றி பெறாத நிலையில், உணர்வுகளின்

அடிப்படையிலே அமைந்துவிடும் நடவடிக்கைகளுக்குப் பயன்பட்டுவிடும் விதமாக, இன்றைய விஞ்ஞான அறிவு பல புதிய கண்டுபிடிப்புகளைக் கொடுத்துவிட்டிருப்பது, குருடன் கையில் சிக்கிவிட்ட தீப்பந்தம் போன்ற நிலையை உண்டாக்கி விட்டிருக்கிறது.

இதனை எண்ணும்போதுதான் இன்றைய நிலையில் ஒரு பெரும்போர் மூண்டுவிடுமானால், உலகமே அழிந்துபடும் என்ற அச்சம் எழுகிறது. மனிதகுலம் அழிந்துபடாமல் காப்பாற்றப் படவும், உலகம் மீண்டும் காடாகிடாமல் தடுத்திடவும் வேண்டும் என்ற தூய்மை மிக்க பொறுப்புமிக்க கருத்தினைக் கொண்டவர்கள், உலகப் பெரும்போர் ஏற்பட்டுவிடக்கூடாது என்பதை உருக்கத்துடன் எடுத்துரைத்து வருகின்றனர்.

அநேகமாக எல்லா நாட்டுத் தலைவர்களும்

உலகப் பெரும்போர் மூண்டுவிடக்கூடாது என்பதிலே மிகுந்த அக்கறை காட்டிப் பேசி வருகின்றனர்.

ஒரே ஒரு நாட்டின் தலைவர் மட்டுமே, பெரும்போர் மூளட்டுமே! உலகிலே அழிவு நடமிடட்டுமே! அழிந்தது போக, மிகுந்திருப்பதிலிருந்து மீண்டும் ஒரு புதிய வளர்ச்சி துளிர்க்கும் என்று பேசுகிறார். கூசாது இத்தகைய கொடிய கருத்தினைக் கூறிவருவது மக்கள் கொல்லப்பட்டு மலைமலையாகக் குவிக்கப் பட்டாலும் என்ன என்ற விதமான இரக்கமற்ற இயல்பு கொண்டுள்ள சீனத்துத் தலைவன் மாலிசேலிதுங் எனும் வெறியன் மட்டுமே.

மனிதகுலம் மெத்தப் பாடுபட்டு, பலப்பல ஆயிரம் ஆண்டுகளாக நடத்திய பயணத்தின் பலன் அனைத்தையும் ஒரு நொடியில் பாழாக்கி, மறுபடியும் கற்காலத்துக்குச்

சென்றிடும் நிலை பிறந்திடும், ஒரு பெரும்போர் மூண்டிடின் என்ற அச்சமும் பொறுப்புணர்ச்சியும், ஓரளவுக்கு, இன்று அரசோச்சுகிறது. இந்த நல்லியல்பையும் நாசமாக்கிடும் விதத்தில், சீனத்துப் போர் வெறியர்களும் அவர்களின் உறவிலே உவகை கொள்ளும் பாகிஸ்தான் தலைவர்களும், நடந்துகொண்டு வருவது, மனித குலத்துக்கே இழைக்கப்படும் மாபெருந் துரோகமாகும்.

இருப்பது போதாது மேலும் வேண்டும் என்ற நினைப்பும், நமக்கு மட்டுமே இருக்க வேண்டும், அதனைப் பெற எம்முறையையும் மேற்கொள்ளலாம் என்ற துணிவும், காட்டிலும் சரி நாட்டிலும் சரி, கொடிய செயல்களுக்குக் காரணமாக அமைந்துவிடுகிறது.

எல்லோரும் இன்புற்று வாழ்ந்திடத்தக்க, ஒருவரை ஒருவர் வஞ்சித்தும் அழித்தும் கொள்ளத் தேவையற்ற முறைபெற,

விஞ்ஞானம் வழிகாட்டுகிறது. ஆனால், இதற்கு அந்த விஞ்ஞானத்தைப் பயன்படுத்திக்கொள்வதைக் காட்டிலும், அழிவுக் கருவிகளைத் தயாரிப்பதற்காகவே விஞ்ஞானத்தைப் பெரிதும் பயன்படுத்திக்கொள்கிறார்கள்.

பல விஞ்ஞான விற்பன்னர்கள் இது குறித்துத் தமது கவலையையும் தெரிவித்துள்ளனர்.

பொருளை மிகுதியாக்கிக்கொள்ளவும் வளத்தைப் பெருக்கிக்கொள்ளவும், விஞ்ஞானம் வழிகாட்டத் தயாராக இருக்கிறது; ஆனால், அதனிடமிருந்து வெடிகுண்டுகளையும் அணுகுண்டுகளையுமே அரசுகள் கேட்டுப் பெற்று இறுமாந்து கிடக்கின்றன.

பஞ்சம் பசி போக்கிடும் வழிகாட்டப்

பயன்படவேண்டிய விஞ்ஞானம், இன்று பகை மூட்டிட, அழிவை ஏவிடப் பயன் படுத்தப்பட்டு வருகிறது.

மனிதனுடைய வாழ்க்கை முறையையே செம்மைப் படுத்தவும், மேம்பாடடையச் செய்யவும் பயன்படவேண்டிய விஞ்ஞானத்தை, மனிதகுலத்தின் நாசத்துக்குக் கருவிகளைச் செய்திடும் காரியத்துக்குப் பயன்படுத்துவது கொடுமையினுங் கொடுமை. எனினும் இந்தக் கொடுமை நடந்தபடி இருந்திடக் காண்கின்றோம்.

இன்றுள்ள மனிதகுலம், தனக்குக் கிடைத்துள்ள விஞ்ஞானத்தை இத்தகைய கொடுமைக்குப் பயன்படுத்தினது போல, மாக்கள் நிலையிலிருந்து விடுபடாதிருந்த மக்கள், தமக்குக் கிடைத்த கருவிகளைப் பயன்படுத்திக்கொண்டார்களில்லை.

அவர்களுக்கு விஞ்ஞானம் நகர் அமைப்பு, பாதை அமைப்பு, பாசன வசதி, பயிரிடும் முறை, கல்விக்கூடம், மருத்துவக்கூடம் என்பவைகளைத் தரவில்லை - இன்றைய மனித குலத்துக்கு விஞ்ஞானம் தந்துள்ள வசதிகள் மிகப் பல; எனினும், கிளியைக் கொன்று காக்கைக்கு விருந்திடுவதுபோல, விஞ்ஞான அறிவைக் கொண்டு மனிதகுல அழிவுக்கு வழி கண்டுபிடிக்கும் கொடுஞ் செயலில் இன்றைய மனிதகுலம் ஈடுபட்டிருக்கிறது.

டாக்டர் எட்வர்டு டெல்லர் எனும் விஞ்ஞான விற்பன்னர், சென்ற திங்கள், விஞ்ஞானத் துறையை மக்களின் நல்வாழ்வுக்குப் பயன்படும் விதமாகக் கட்டுப்படுத்தும் உரிமை விஞ்ஞானிகளிடம் இல்லாமலிருப்பது குறித்தும், அவர்கள் நினைத்துக்கூடப் பார்க்கக் கூசிடும் கேடான காரியங்களுக்கு

விஞ்ஞான அறிவு ஆக்கித் தரும் கருவிகள் பயன்படுத்தப்பட்டு வருவது குறித்தும் மிகுந்த கவலையைத் தெரிவித்திருக்கிறார்.

விஞ்ஞானி, பொருள்களைப் படைத்திட விரும்பும் பேரறிவாளன் - அழிவு கண்டு உள்ளம் வெதும்பிடத்தான் செய்வான். தூங்கும் பனிநீர் தங்கிடும் மூங்கில் இலையெனினும் அதனிடம் காணக்கிடக்கும் கவர்ச்சி அதனிடம் உள்ள உயிர்ப்பு. இதனை மேலும் மேலும் வலிவுள்ளதாக்கிட பொலிவுள்ள தாக்கிட விரும்பும் விஞ்ஞான விற்பன்னர்கள் மனிதர்கள் மாக்களைப்போல ஒருவரை ஒருவர் அழித்துக்கொள்வதற்கு, விஞ்ஞானம் பயன்படுத்தப்படுவது கண்டு, உள்ளம் நொந்து போகின்றனர்.

பசியாலும் பஞ்சத்தாலும் தாக்கப்பட்டோ, இயற்கை விளைவிக்கும் கொடுமைகளால் கொட்டப்பட்டோ, நோயூட்டும் கிருமிகளால்

அரிக்கப்பட்டோ, கூனிக் குறுகி, குற்றுயிராகிடும் மக்களை, நிமிர்ந்து நின்றிடச் செய்திட நிம்மதியான வாழ்வு பெற்றிட வழி காண இரவு பகல் விழித்திருந்து, பொருள்களின் தன்மையினை ஆய்ந்தறிந்து புது முறைகளைக் கண்டுபிடித்துத் தந்திடும் விஞ்ஞானிகள், அவர்கள் பெற்றளித்திடும் பேருண்மை களே மனித குல அழிவுக்குப் பயன்படுத்தப்படுவதனைக் காணும்போது, ஏன் விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளைத் தந்தோம் என்று எண்ணி வேதனைப்படத்தான் செய்கிறார்கள்.

இதனால்தான் டாக்டர் எட்வர்டு டெல்லர் எனும் விஞ்ஞான விற்பன்னர் மனித குலத்துக்கு உள்ள இன்னலைத் துடைத்து, இன்ப வாழ்வு அளித்திடும் வழிகள் காணவே, விஞ்ஞானம் உடனடியாகப் பயன்படுத்தப்பட வேண்டும் என்று கூறியுள்ளார். டாக்டர் ராபர்ட்

ஒப்பன் ஈமர் எனும் மற்றோர் விஞ்ஞான விற்பன்னரும் இதுபோன்றே கூறியுள்ளார்.

விஞ்ஞானம் இதுவரை பெற்றளித்துள்ள பெரு வெற்றிகளால், மனித குலம் எந்த வகையிலும் அளவிலும் பயன்பெற்றிருக்கிறது என்பது பற்றிய கணக்கெடுத்தாக வேண்டும் என்பதற்காகவே பல்கலைக் கழகமொன்றில் பார்த்துவந்த வேலையைக்கூட உதறித் தள்ளி விட்டார் இந்த விஞ்ஞானத்துறைப் பெருமகன்.

விஞ்ஞானத் துறையின் வளர்ச்சிக்காகப் பெரும் பொருள் செலவிடப்பட்டு வருகிறது; காலத்தையும் கருவூலத்தையும் கணக்கற்ற அளவு செலவிட்டுத்தான் பேருண்மைகளைக் கண்டறிந்து, புதிய கண்டுபிடிப்புகளைத் தருகின்றனர் விஞ்ஞான விற்பன்னர்கள்.

மின்னிடும் விண்மீன்களின்

இயல்புகளைக் கண்டறியவும், விண்வெளியில் உலவிடவும், ஆங்கு உள்ள கிரகங்களைக் காணவும், எத்தனை எத்தனைக் கருவிகள்! என்னென்ன முறைகள்! விண்வெளியிலே நடந்தே காட்டிவிட்டான் சோவியத் நாட்டு மாவீரனொருவன், விஞ்ஞானத்தின் துணைகொண்டு.

இவை எவரையும் வியப்பில் ஆழ்த்தும், ஐயமில்லை. எனினும் மறைந்த மாமேதை ஆல்டேன் என்பார், விண்வெளியின் ஆராய்ச்சிக்காகப் பெரும் பணம் செலவிடுவது தேவைதானா! இப்போது கவனிக்கப்படவேண்டிய பிரச்சினைதானா விண்வெளி விஷயம் என்று சில ஆண்டுகளுக்கு முன்பே கேட்டிருந்தார்.

இப்போது விண்வெளி ஆராய்ச்சிக்காகப் பல்வேறு நாடுகளும் செலவிடும் தொகை, கேட்போருக்கு மயக்கமூட்டும் அளவினதாக

இருக்கிறது.

விண்வெளித் துறை பற்றிய ஆராய்ச்சிக்காக மட்டும் ஆண்டொன்றுக்கு 10,000 கோடி ரூபாய் செலவிடப்படுகிறது என்கின்றனர்.

இத்தனை பெருந்தொகையை, விண்வெளி ஆராய்ச்சிக்காகச் செலவிடுவதனைக் காட்டிலும், மனித உடற்கூறு பற்றியஆய்வுத் துறைக்கும், உணவுத் துறை, பொருள் ஆக்கத் துறை, மருத்துவத் துறை ஆகியவற்றினுக்கும் செலவிட்டிருக்கலாம் - செலவிட வேண்டும் என்ற கருத்தினைக் கூறிச் சென்றார் ஆல்டேன்.

மக்களின் இயல்புகளே பெரும்பாலும் அவர்களுடைய நடவடிக்கைகளுக்குக் காரணம்; அவர்களின் நடவடிக்கைகளைச்

செம்மையாக்கிட வேண்டுமானால், இயல்புகளை மாற்றிட, அல்லது கட்டுக்குள் கொண்டுவர வேண்டும்; விஞ்ஞானம் அதற்குப் பயன்பட வேண்டும் என்ற கருத்து இன்று ஒப்புக் கொள்ளப்பட்டுள்ள உண்மைகளில் ஒன்றாகும்.

குற்றவாளி ஒரு நோயாளி. குற்றவாளியைத் தண்டிப் பதனால் மட்டும் அவனைத் திருத்திவிட முடிவதில்லை.

ஒருவர் இருவரைத் திருத்திவிட்டாலும் குற்றம் எழாதபடி தடுத்துவிட முடிவதில்லை.

குற்றவாளி, ஒரு நோயாளி! ஆகவே அவனுக்கு உள்ள நோயைப் போக்க வேண்டும்; போக்க முடியும். இந்தக் கருத்துக்களை இன்று அறிவாளர்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

ஆனால், இதனைத் தொடர்ந்து, இயல்பினைக் கெடுத்திடும் நோயை

நீக்கிட வழி கண்டறிந்திடும் முயற்சியில், விஞ்ஞானிகள் ஈடுபட்டு, புதிய முறைகளைச் சமைத்து அளித்திடப் போதுமான தொகை செலவிடப் படுவதில்லை.

நிலவிலே காணப்படும் "கறை'யின் தன்மையைக் கண்டறியச் செலவிடுவது உடனடியாகத் தேவையா அல்லது மக்களுடைய மனத்திலே மூண்டிடும், அழுக்கு களைப் போக்கிட வழி கண்டிடச் செலவிடுவது உடனடித் தேவையா என்ற கேள்வி பிறந்துவிட்டிருக்கிறது.

குற்றவாளி ஒரு நோயாளியே என்ற பேருண்மையின் அடிப்படையில், நரம்புகள், உடல் உறுப்புக்களிலே சில ஆகியவற்றிலே பழுது பார்ப்பதன் மூலம், புதுப்பிப்பதன் மூலம், குற்றம் செய்திடும் இயல்பினை மாற்றிட முடியும் என்று கூறுகின்றனர், அந்தத் துறையின் விற்பன்னர்கள்.

ஆனால், அந்தத் துறைக்காகச் செலவிடப்படும் தொகை போதுமான அளவினதாக இல்லை. விண்வெளிபற்றிக் கிளம்பிவிட்டுள்ள வேட்கை பெரும் தொகையை விழுங்கிவிடுகிறது.

குடல் வெந்து கிடப்பவன் வாய் நாற்றமடிப்பதும், நீர் கொண்டவன் தும்மியபடி இருப்பதும், வெப்ப நோயாளன் இருமிக்கிடப்பதும் காண்கிறோம். அவர்களின் நோயைப் போக்கிட மருந்தளிக்காமல், வாய் நாற்றக்காரனுக்கு நாற்பது ரூபாய் அபராதம், தும்மலொன்றுக்கு எட்டணா கட்ட வேண்டும், இருமலுக்கு இரண்டு ரூபாய் அபராதம் என்று முறை கூறினால் எப்படி இருக்கும்; முறையாகுமா? ஆகாது. அதுபோலத்தான். ஒருவனுக்கு அமைந்துவிட்ட உறுப்புகளின் தன்மைக் கோளாறு காரணமாக ஏற்பட்டுவிடும் நடவடிக்கைகளுக்காகத்

தண்டனை விதித்திடும் முறை என்று கூறுகின்றனர்.

உடற்கூறு பற்றிய அறிவுத் துறையிலே கண்டறிய வேண்டுவன நிரம்ப உள்ளன. அந்தத் துறையிலே நல்ல வெற்றி கிட்டக்கிட்ட, குற்றவாளிகளாகப் பலரையாக்கிவிடும் அந்த நோயையே போக்கிவிடலாம்; பெருமளவு குறைத்துவிடலாம் என்கின்றனர்.

மக்கள் தொகை எத்தனை வேகமாகவும் அளவினதாகவும் பெருகினாலும்கூடக் கவலையில்லை. விவசாயத் துறையிலும், பொருளாக்கத் துறையிலும் புதுப்புதுக் கண்டுபிடிப்புகளைப் பெற்று அனைவருக்கும் ”வாழ்வு’ அளித்திட இயலும் என்கின்றனர்.

நோயினால் மக்கள் மடிந்துபோவது மட்டுமல்ல, பிழைத்துக்கொள்பவர்கள்கூட வலிவிழந்து போய்விடுவதன்

காரணமாக, அவர்களின் உழைப்புத்திறன் கெட்டுப்போகிறது; அதன் காரணமாக உற்பத்தித் திறன் உருக்குலைந்துவிடுகிறது. எனவே, நோய்களை நீக்கிட வழி காண வேண்டும்; காண முடியும் என்கின்றனர்.

இந்தத் துறைகளில் செலவிடப்படும் பணம், மனித குலத்தின் இன்னலைத் துடைத்து இதம் தந்திட உடனடியாகப் பயன் தந்திடும். ஆனால், இந்தத் துறைகளுக்காகச் செலவிடுவதைக் காட்டிலும் எத்தனையோ மடங்கு அதிகத் தொகையை வெறி என்று கூறத்தக்க ஆர்வ உணர்ச்சியுடன் அழிவுக் கருவிகளைக் காண்பதற்கான துறைகளுக்கு வல்லரசுகள் செலவிட்டு வருகின்றன!

மனிதனை, மிருக நிலையிலிருந்து விடுவித்து முன்னேற்ற மடையச் செய்யப் பயன்படவேண்டிய விஞ்ஞானம், அதனை முறைப்படுத்திக்

கட்டுக்குள் வைத்துக்கொள்ளத் தவறிவிட்டதன்காரணமாக, மீண்டும் மனிதனை மிருக நிலைக்கே கொண்டு போய்ச் சேர்க்கப் பயன்பட்டு வருகிறது என்ற கருத்து இன்று பரவிக்கொண்டு வருகிறது.

இந்தக் கருத்தின் வெற்றியைப் பொறுத்திருக்கிறது, மனித குலத்தின் எதிர்காலம். கூடி வாழ்தல், கேடு செய்யாதிருத்தல், உழைத்துப் பிழைத்தல், பகிர்ந்து அளித்தல் என்பவை பாராட்டத்தக்க பண்புகள் என்று பேசிடும் நிலை மாறி, இவையே இனி மனித குலத்தின் வாழ்வுமுறைகள் என்றாக வேண்டும். அதிலே எந்த அளவு வெற்றி கிடைக்கிறதோ அதைப் பொறுத்துத்தான் மனிதனுக்கும் மிருகத்துக்கும் உள்ள வேறுபாடு மறையும்.

தம்பி! இந்த எண்ணங்கள் எனக்கு ஏற்படக் காரணம் என்ன என்று அறிந்துகொள்ள

விரும்புகிறாயல்லவா! நான் ஏதும் பெரிய தத்துவ நூலைப் புதிதாகப் படித்து அதனால் ஏற்பட்ட எண்ணக் கொந்தளிப்புக் காரணமாக இதனை எழுதவில்லை. த. வெள்ளைப்பாண்டி, (பி.எஸ்.ஸி. இரண்டாம் ஆண்டு படிக்கும் மாணவர்) செயிண்ட் ஜான்ஸ் கல்லூரி இதழில் தீட்டிய கவிதை ஒன்றைக் காணும் வாய்ப்புப் பெற்றேன். அதனைப் படித்ததால் இத்தனை எண்ணங்கள் எழுந்தன; உன்னிடம் சொல்லி வைத்தேன்.

இதோ அந்தக் கவிதையையும் தந்திருக்கிறேன்; படித்துப் பயன் பெற!

எண்ணில்லாப் பொறிகளினை
விசைகள் தம்மை
இருள்போக்கும்
மின்னொளியை நிறைத்து வைத்தாய்
மண்ணுக்குட் புகுந்தாய்நற்
கனியைக் கண்டாய்

மனமெட்டாத்
தொலைவினையும் கைக்குள் கொண்டாய்

கண்ணுக்குத் தெரியாத
பொருளை எல்லாம்

கண்டறியும் நுண்கருவி
பலவும் செய்தாய்

விண்ணினையும்
காற்றினையும் அளந்தெ டுத்தாய்

வியக்கின்றேன்;
வியக்கின்றேன்; வியக்கின்றேனே;

பிணியெல்லாம் போக்குதற்கு
மருந்தைக் கண்டாய்

பிறநாட்டில் பேசுவதை இங்குக்
கேட்டாய்

அணுவையும்நின் ஏவலனாய்
ஆக்கிக் கொண்டே

அகலுலகைப் புதுமையினால்
நிறைத்து விட்டாய்

இணையில்லாச்
செயற்கைக்கோள் பறக்க விட்டாய்

இயற்கைதனை
வென்றேனென் றலறு கின்றாய்

திணிசெருக்கால் உன்னைநீ அழித்தல் கண்டு

சிரிக்கின்றாள் சிரிக்கின்றாள் இயற்கை அன்னை!

ஆதிக்க வெறிகொண்டிவ் வண்ட மெல்லாம்

அழித்திடுவேன் நொடியில்என் றறிவிக் கின்றாய்

சோதித்துப் பார்ப்பாயாம் குண்டை வானில்!

தொல்லையினை
யோரவில்லை: வருங்காலத்தில்

காதற்றும் காலற்றும் பார்வை யற்றும்

கருப்பையுள் குழவியதும் ந-தல் உண்டாம்

போதித்துப் பார்க்கின்றார் பெரியோ ரெல்லாம்

புழுதியிலே கொட்டியநெய் போலா யிற்றே!

ஏற்றங்கள் பலகண்ட மனிதன் இந்நாள்
இறங்கிவிட்டான் அழிவென்னும் புதைகுழிக்குள்:
காற்றெல்லாம் நஞ்சாக மாறக் கூடும்
கழனியெலாம் கருவற்றுப் போகக் கூடும்
ஊற்றுக்கள் நச்சாறாய் ஓடக் கூடும்
உண்ணுகின்ற மக்கள்உயிர் இழத்தல் கூடும்
கூற்றிங்குத் தலையைவிரித் தாட்டம் போடும்
குவலயமே வெற்றிடமாய்க்

காட்சி கொள்ளும்!

பயனுள்ள வாள்தூக்கிப் பகையை வெல்லார்
பதடிகளாய்த் தம்முடலை யரிவார் போலும்
வயலுக்குக் களைநீக்கும் கருவி கொண்டு
வளர்பயிரைத் துண்டாக்க முனைவார் போலும்
கயமைக்கு நல்லறிவை உகுத்தல் போலும்
கருதிவிட்டாய் அணுவாலே யுலகைத் தாக்க
நயமான வேலைக்கே அணுவைக் கொண்டால்
நலமென்பேன் இல்லையேல் அழிவே மிஞ்சும்!

அன்புள்ள

அண்ணாதுரை

16-5-1965

8. சொக்கப்பனிடம் பட்ட கடன்

அமெரிக்கக் கடனும் ரஷ்யக் கடனும்
புதுக் கடன் கொண்டு பழங்கடன் அடைப்பு
கடன் தீர்க்கும் அளவுக்குத் தொழில் அமைப்பு ஏற்படாமை
நேரிடைப் பதிலும் திட்டவட்ட விளக்கமும் தேவை
காமராஜரால் கழுகைக் கிளியாக்கிவிட முடியுமா?

தம்பி!

சொக்கப்பனிடம் பட்ட கடனைத் தீர்க்கச் சோணா சலத்திடம் புதிதாகக் கடன் வாங்குபவர் உண்டு; சொக்கப்பனிடம் பட்ட கடனைத் தீர்க்கச் சொக்கப்பனிடமே மேலும் கடன் வாங்குபவர் உண்டா? கண்டதுண்டா?

இல்லை என்கிறீர்கள். அப்படி ஒருவர்

எப்படி இருக்க முடியும் என்று கேட்கிறீர்கள். மலைபோல இருக்கிறார் தம்பி! மலைபோல! கண்டதில்லை என்கிறாய். நான் என்னத்தைச் சொல்ல!!

சொக்கப்பனிடம் பட்ட கடனை ஏன் திருப்பித்தர முடியவில்லை என்பதை முதலில் புரிந்துகொள்ள வேண்டும்; மற்றவை பிறகு எளிதாகப் புரியும்.

சொக்கப்பனிடம் பட்ட கடன் விளக்காகாமல் மத்தாப்பாகிவிட்டால், வயலுக்குப் பாயாமல் விழலுக்குச் சென்றுவிட்டால், பணம் வீணாகிப்போகும் - பயன் கிடைக்காது. பயன் கிடைத்தாலல்லவா, கடனைத் திருப்பிச் செலுத்த முடியும்? கலியாணச் செலவுக்காகக் கடன் வாங்கிக்கொண்டு வந்து அதனைக் கழனி வாங்கச் செலவிட்டால் இரண்டோர் வருடத்தில் பட்ட கடனையும் தீர்த்துவிடலாம்,

கடன் படாமல் கலியாணத்தையும் பிறகு நடத்திக்கொள்ளலாம். அவ்விதமின்றி, கலியாணச் செலவுக்காகப் பெற்றுவந்த கடன் தொகையைக் கொண்டு காவடித் திருவிழா நடத்திவிட்டால், கலியாணந்தான் நடக்குமா, பட்ட கடனைத் தீர்க்கத்தான் வழி கிடைக்குமா!! கந்தன் அருள் கிடைக்கலாம், அங்கே! மேலே!! இங்கே? கடன் கொடுத்தவன் "பிடி வாரண்டு' அல்லவா அனுப்புவான்!

கடன்படுவது என்பதே அடியோடு தவறு அல்ல; தேவை, நேரம் இவைகளைப் பொருத்துக் கடன்படலாம்; அதனைக் கொண்டு தக்க பலன் கொடுக்கக்கூடிய செயலாற்றி, வருவாய் பெற்று, அதிலே மிச்சம்பிடித்து, பட்ட கடனையும் தீர்த்து விடலாம், புதிய உடைமையையும் காணலாம். காண்கின்றனர், கருத்துடன் காரியமாற்றுபவர். கடனோடு கடன்

கந்தப்பொடி பலம் பத்து - என்பார்கள் கொச்சை மொழியில். அதுபோலக் கடன்பட்டுப் பட்டு, கவைக்குதவாத காரியத்தில் செலவிட்டு விட்டால், சொக்கப்பனிடம் பட்ட கடனைத் தீர்க்கச் சோணாசலத்தைத் தேடவேண்டியதுதான்! இதுவே தவறு, மோசம். நான் சொல்வது இதனைவிட விசித்திரம், சொக்கப்பனிடம் பட்ட கடனைத் தீர்க்கச் சொக்கப்பனிடமே கடன் வாங்குவது.

பருவச் சேட்டை மிகுந்த அரும்பு மீசைக்காரன் "ஐயா' வைத்து விட்டுப்போன அறுபது வேலி நிலத்தைக் காட்டிப் பத்து ஆயிரம்தான் கடன் வாங்குகிறான் முதலில். வட்டி வளருகிறது, கேட்டனுப்புகிறார்கள்; மீண்டும் அதே புள்ளியிடம் மற்றுமோர் கடன் வாங்கி, பழைய கடனுக்கான வட்டியைச் செலுத்துகிறான்! செலுத்துகிறானா!! அந்தப் புள்ளியே, புதிய கடன் கொடுக்கும் போது,

பழைய கடனுக்கான வட்டித் தொகையை எடுத்துக் கொண்டு மிச்சத்தைத்தான் கொடுக்கிறார்.

கடைசியில் என்ன நிலை? இன்னும் இருப்பது என்ன? அந்த அரும்புமீசை மட்டுந்தான் என்று ஊரார் கேலி பேசும் நிலை.

நான் இந்த "உல்லாச புருஷனை' அல்ல, காணச் சொல்லிக் கேட்டுக்கொண்டது. இந்தியப் பேரரசு, நம்ம மாநில அரசு இவைகளையே பாருங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

காங்கிரஸ் அரசு, சொக்கப்பனிடம் பட்ட கடனைத் தீர்க்கச் சொக்கப்பனிடமே மறுபடியும் கடன் வாங்குவது போன்ற நிலையிலேதான் நடத்தப்பட்டு வருகிறது.

அமெரிக்காவில் பட்ட கடனைத் தீர்க்க மறுபடியும் அமெரிக்காவிடமே கடன் வாங்கும்

விந்தை நடந்தபடி இருக்கிறது. நிலையில் இதேதான் மாநில அரசு! பேரரசிடம் பட்டுள்ள கடனைத் திருப்பித்தர, மாநில அரசுகள் மறுபடியும் பேரரசிடமே கடன் வாங்குகின்றன.

பேரரசிடம், மாநில அரசுகள் பட்டுள்ள கடன் தொகையில், 1965 - 66-ம் ஆண்டில் 274 - கோடி ரூபாய் திருப்பித் தரவேண்டும் - தவணை முறைப்படி.

மாநில அரசுகள் பேரரசிடம் பட்ட கடன் தொகையைக் கொண்டு பயன்தரும் விதமாகச் செலவிட்டிருந்தால், பட்ட கடனைத் தவணை முறையிலே திருப்பித் தருவதற்கான வருவாய் கிடைத்திருக்கும். வருவாய் அந்த முறையில் கிடைக்கவில்லை.

எந்தப் பிரச்சினையையும் ஆராயும் போக்குடையவரும், காங்கிரஸ் கட்சியினருமான திரு. சந்தானம் மாநில

அரசுகள் பெற்றுள்ள கடன் தொகையில் பாதிக்கு மேல், பயன் தராத விதமாக, வருவாய் கிடைக்க முடியாத காரியங்களுக்காகச் செலவிட்டுவிட்டதாகக் கூறுகிறார்.

நாம் கூறினால், அது பக்தவத்சலனாரின் அதி அற்புதமான மூளையைக் குழப்பிவிட்டுவிடுகிறது; ஆட்சியைக் கைப்பற்ற, எம்மை விரட்டச் சூழ்ச்சி நடக்கிறது என்கிறார். இது சந்தானம் சொன்னது; எதிர்க் கட்சிக்காரர் பேச்சு அல்ல. எனவே, எரிச்சல் எழத் தேவையில்லை.

வருவாய் கிடைக்கும் விதமாகக் கடன் தொகையைச் செலவழிக்காததால், 1965-66லில் செலுத்தவேண்டியுள்ள தவணைத் தொகையான 274 - கோடி ரூபாய்க்கு வழி தெரியவில்லை மாநில அரசுகளுக்கு. என்னதான் செய் கிறார்கள்? சொக்கப்பனிடம் பட்ட கடனைத் திருப்பித்

தரச் சொக்கப்பனிடமே மீண்டும் கடன் வாங்குகிறார்கள்.

274 - கோடி என்றேனே. இது அசல் தொகையில் ஒரு பகுதி.

இத்துடன் வட்டியும் கட்டவேண்டுமே! அதற்காக 135 - கோடி ரூபாய் தேவை. மொத்தத் தேவை இந்த ஆண்டுக்கு 409 - கோடி ரூபாய்.

இதற்காகப் பேரரசிடம் மாநில அரசுகள் மீண்டும் 703 - கோடி ரூபாய் கடன் வாங்குகிறார்கள். அந்தக் கடன் தொகையிலிருந்து, பழைய கடனுக்காக 409 - கோடி ரூபாயைக் கட்டப்போகிறார்கள்!

இதுபோலவே பேரரசு கதர்த்தொழில் அமைப்புக்குக் கடன் கொடுத்திருக்கிறார்கள்; அந்த அமைப்பும் 34 - கோடி ரூபாய் தரவேண்டும்! அதற்காக, பேரரசு புதிய கடன் கொடுக்கிறார்கள் அந்த அமைப்புக்கு! அந்தப்

புதிய கடனைக்கொண்டு பழைய கடனை அடைக்கப்போகிறது கதர் அமைப்பு!

இதற்கெல்லாம் பேரரசுக்குத் தொகை வேண்டுமே அதற்கு வழி? பாடுபட்டுக் குவித்துள்ள வருவாயிலிருந்து எடுத்து வழங்கப் போகிறதா? இல்லை! இல்லை! அப்படி இருந்திருந்தால், பேரரசு, மாநில அரசுகளைத் தட்டிக் கேட்காதா; பட்ட கடனைக்கூடத் திருப்பித் தரமுடியாமல் புதுக் கடன் கேட்டுக்கொண் டிருக்கலாமா? இது உருப்பட வழியாகுமா? என்றெல்லாம். பேரரசு பட்டுள்ள கடன் தொகையைக் கொண்டு தக்க வருவாய் தேடிக்கொள்ளாததால் 1965-66 ஆண்டிலே மட்டும், இந்தியாவுக்கு உதவி செய்யும் கழகத்திடம் புதிதாகக் கடன் கேட்டிருக்கிறது, 560 கோடி ரூபாய்!!

மேலேயும் சரி, கீழ்மட்டத்திலும் சரி, ஒரே முறை; சொக்கப்பனிடம் பட்ட கடனைத் தீர்க்கச்

சொக்கப்பனிடமே புதிய கடன் பெறுகிறமுறை.

இது நல்லதல்ல என்கிறார்கள் நிபுணர்கள்! இது கேவலம் என்கிறார் விஜயலட்சுமி பண்டிட்! இதைப் பற்றிக் கவலைப் படுகிறார்கள் பலர்; பொருளாதார நிபுணர்கள்; பொறுப்புள்ள அதிகாரிகளாக இருந்தவர்கள்!

ஒரே ஒருவர் மட்டும், இதைப் பற்றிக் கவலை இல்லை என்று கூறுகிறார்; காமராஜர்!

சொக்கப்பனிடம் பட்ட கடனைத் தீர்க்கச் சொக்கப்பனிடம் புதுக்கடன் வாங்குவது, நிலைமை எவ்வளவு மோசமாகி இருக்கிறது என்பதைக் காட்டுகிறது; காமராஜரோ, கவலை இல்லை என்று கூறுகிறார்.

சொக்கப்பனிடம் கடன்பட்டவர் எத்தப்பனாக இருந்தால், கொடுத்தவனுக்குத்தான் கவலை,

வாங்கியவனுக்கு அல்ல! ஆனால், இந்தியப் பேரரசு எத்தப்பனாக முடியுமா! கொடுத்தகடனைத் திருப்பிப் பெற, கடன் கொடுத்தவன் எதை எதைத் தன்னிடம் ஒப்படைக்கச் சொல்லிக் கேட்பானோ என்ற அச்சமே வந்துவிட்டிருக்கிறது பலருக்கு.

அமெரிக்காவிலிருந்து ட.க. 480 என்ற சட்டப்படி இந்தியா பெற்றுள்ள பொருளுக்கான பணம், ரூபாயாகத் தரப்பட்டு அந்தத் தொகை இந்தியாவில் அமெரிக்காவின் கணக்கில் குவிந்து கொண்டு வந்திருக்கிறது.

இன்னும் கொஞ்ச காலத்தில் அமெரிக்கா இந்தியாவில் சேர்த்துவைத்துள்ள தொகை ஆயிரம் கோடி ரூபாயாகிவிடுமாம்! இப்போது 800 கோடிக்கு மேல் இருக்கிறதாம்.

இந்தத் தொகையை அமெரிக்கா இந்தியாவிலேயேதான் செலவிட வேண்டும் -

அது நிபந்தனை.

அமெரிக்கா, வேறு சில வெளிநாடுகளுக்குத் தருவதாக ஒப்புக்கொண்டுள்ள பொருளை, இந்தியாவில் குவிந்துள்ள பணத்தைக் கொண்டு இந்தியாவிலே வாங்கி, அந்த வெளி நாடுகளுக்கு அனுப்பினால் என்ன? பணம் பாசி பிடித்துப்போகும் நிலையில் இருக்கிறதே! இந்தவிதமாகப் பயன்படுத்திக் கொண்டால் என்ன? என்ற பேச்சு அமெரிக்காவில் கிளம்பி விட்டது. இதற்கு இந்தியப் பேரரசு இணங்கவில்லை. அமெரிக்க அரசு வற்புறுத்தவில்லை, இப்போதைக்கு! இந்தக் கருத்து அமெரிக்காவில் வலுப்பெற்றால், நிலைமை எப்படி மாற நேரிடும் என்பது பற்றிக் கூறுவதற்கில்லை; ஆனால், நினைக்கும்போதே நடுக்கமெடுக்கிறது - விவரமறிந்தவர்களுக்கு.

அமெரிக்காவுக்குச் சொந்தமாகியுள்ள இந்தப் பெரிய தொகையைக் கொண்டு, இங்கே உள்ள பொருளை வாங்கி வெளிநாடுகளுக்கு அமெரிக்கா தன் கணக்கிலே அனுப்பினால் என்ன நேரிடுமென்றால், அந்த நாடுகளுக்கு அந்தப் பொருளை இந்தியா அனுப்பினால் இந்தியாவுக்குக் கிடைக்கக்கூடிய வெளிநாட்டுச் செலாவணி குறைந்துபோகும்; குறைந்துபோனால், வெளிநாடுகளிலிருந்து இந்தியா வரவழைக்கும் பொருளுக்காகப் பணம் செலுத்த முடியாத திண்டாட்டம் இந்தியாவுக்கு ஏற்பட்டுவிடும். இந்த நிலையைப் பயங்கரமானது என்று நிபுணர்கள் கூறுகிறார்கள். இத்தகைய சிக்கல்கள் பல முளைத்தபடி உள்ளன.

ஆனால், எதற்கும் அஞ்சாமல் சொக்கப்பனிடம் பட்ட கடனைத் தீர்க்கச்

சொக்கப்பனிடமே புதிதாகக் கடன் வாங்கும்விந்தைச் செயலில் ஈடுபட்டபடி இருக்கிறார்கள்; எதிர்காலத்தை இடருள்ளதாக்கியபடி உள்ளனர், மெத்தத் திறமையுடன்.

கடன் கொடுக்கும் நாடுகளுக்கு ஏற்படாத கவலை உங்களுக்கு ஏன் ஏற்பட வேண்டும் என்று கேட்பவர்கள் உயர்ந்த இடத்திலே இருந்துவிடுவதனாலேயே அந்தப் பேச்சு உயர்ந்ததாகி விடாது; ஊர் மெச்ச வாழ்பவர்களின் பேச்சுக்கு எதிர்ப்புப் பேசி ஏன் வம்பை விலைக்கு வாங்கிக்கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தில் விவரம் தெரிந்த பலர் அந்தப் பேச்சு அறிவற்றது என்பதனை எடுத்துக் கூறாமலிருக்கிறார்கள்.

இன்று உலகிலே அமைந்துள்ள இரு பெரும் போட்டி முகாம்கள், அமெரிக்காவும் - ரஷியாவும் என்பது அனைவருக்கும் தெரியும்.

வளர்ச்சி பெறாத, புதிதாக விடுதலை பெற்ற நாடுகளை, தத்தமது முகாமுக்கு அழைத்துக்கொள்ள, அமெரிக்கா - ரஷியா எனும் இரு பெரும் அரசுகளும் போட்டி போட்டுக்கொண்டு கடன் தருவது, இனாம் வழங்குவது, தொழில் நுட்ப அறிவு அளிப்பது, கூட்டுத் தொழில் அமைப்பது என்பவைகளில் மும்முரமாக ஈடுபட்டுள்ளன.

இந்தியப் பேரரசு, இந்த இரு முகாம்களில் எதிலும் சேராத ”நடுநிலை’க் கொள்கையைக் கொண்டது.

ஆனால் இந்தியப் பேரரசு, இந்த இரு முகாம்களிலும் தாராளமாகவும் ஏராளமாகவும் கடன் வாங்கியபடி இருக்கிறது.

இன்று இந்த இரு முகாம்களும், முகத்தைச் சுளிக்காமல், கேட்ட கடனைக் கொடுத்தபடி உள்ளன.

ஆனால், பெற்ற கடனை எப்படியும் திருப்பித் தரவேண்டும் என்ற பொறுப்புணர்ச்சியின்படி, பணத்தைச் செலவிட்டு, தொழிலைப் பெருக்கி, வருவாய் கிடைக்கும் விதமாகப் பேரரசு நடந்துகொள்ளவில்லை.

மேலும் மேலும் கடன் வாங்கியே காலந்தள்ள வேண்டிய நிலையிலேதான் நாடு இருந்து வருகிறது.

அரசியல் பொது அறிவும் பொருளாதாரத்துறை நுண்ணறிவும் கொண்ட சமுதாயம் இந்தப் போக்கை. அபாயம் நிறைந்தது என்று கண்டிக்கவும் இந்த நிலைமைக்குக் காரணமாக இருந்த ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கும் கட்சியின் ஆதிக்கத்தை அகற்றவும் தயங்காது.

இன்று நமது நாட்டிலே அந்த நிலையில்,

சமுதாயம் இல்லை. சர்க்கார் பட்ட கடன் என்றால் அது ஏதோ மக்களுக்குச் சம்பந்தமில்லாத ஒரு தனி விஷயம் என்று எண்ணிக்கொண்டு விடும் மக்கள் மிகுதியாக இருக்கிறார்கள் - இன்று.

இதே நிலையில்தான் சமுதாயம் எதிர்காலத்திலும் இருக்கும் என்று எவரும் கூறிட முடியாது.

நமது கழகமும், முற்போக்குக் கருத்துக்களைக் கொண்ட பிற அரசியல் அமைப்புகளும், மக்களிடம், உண்மை நிலையை எடுத்து விளக்கியபடி இருக்க வேண்டும். விளக்கிக்கொண்டு வருவது, உடனடியாகப் பலன் தராது போகலாம் - இடையிலே தருமபுரிகள் தோன்றலாம் - ஆனால், மெள்ள மெள்ள மெய்யறிவு சமுதாயத்திலே இடம்பெற்றே தீரும்; அப்போது இவைகளுக் கெல்லாம் மக்கள் "கணக்குக்'

கேட்பார்கள்! ஜனநாயக உணர்வு வளர்ந்துள்ள நாடுகளில் சர்க்காரை நடத்தும் கட்சியிடம் இவ்விதமான"கணக்கு'களை மக்கள் கேட்கிறார்கள்; கேட்பதால் எதிர்க்கட்சி ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டாலும், மக்களுக்குப் பயந்து, எதிர்க்கட்சிகளுக்குப் பயந்து, நீதி நியாயத்துக்குப் பயந்து நடந்துகொள்ளவேண்டி இருக்கிறது. இங்கோ, சொக்கப்பனிடம் பட்ட கடனைத் தீர்க்க சொக்கப்பனிடமே மேலும் கடன் வாங்கி, வாங்கிய கடனை வகையான முறையில் செலவிட்டு வருவாயைப் பெருக்கிக் கொள்ளாமல் நடந்துகொள்ளும் ஒரு அரசு அட்டகாசம் செய்கிறது; அதனை நீக்கிட, மாற்றி அமைக்க, மக்கள் துணிந்து எழ இயலவில்லை.

கொடுப்பவர் கிடைக்கும்போது கடன் வாங்குவது எளிதான காரியம், அதிலே பெருமை இல்லை; புதிய சுமை ஏறுகிறது

என்றுதான் பொருள்.

கொடுத்த கடனைத் திருப்பிச் செலுத்திவிட முடியும்; ஏனென்றால், அந்தத் தொகையைக் கொண்டு அமைக்கப் பட்டுள்ள தொழிலில், ஆதாயம் எதிர்பார்த்த அளவு கிடைத்து வருகிறது, ஆகவே, கவலை வேண்டாம் என்று கூறிடும் அரசுதான், மக்களின் நன்மதிப்பைப் பெறக்கூடிய அரசு.

இன்று வரையில், இந்தியப் பேரரசு, பெரும் பெரும் தொகையினைக் கொட்டிக் கட்டி நடத்தி வரும் தொழில் அமைப்புகள் ஆதாயம் தந்துவருகின்றனவா என்ற சாதாரணக் கேள்விக்கு, நேர்மையுடனும் நேரிடையாகவும் பதில் கூறட்டுமே பார்க்கலாம், அரசாளும் பெரிய தலைவர்கள்!

கடன் வாங்காமல் இருக்க முடியுமா என்று கேட்பதும், அமெரிக்காவே ஒரு காலத்தில்

கடன் வாங்கி இருக்கிறது தெரியுமா? ர□யர்ன்வ கடன் வாங்கி இருக்கிறது தெரியுமா! என்று கேட்பதும், புதிதாகத் தொழில் துவக்கிட, கடன் வாங்கித்தானே ஆகவேண்டும்? என்று கேட்பதும் எனக்குத் தெரியும்.

அரைத்த மாவையே அரைத்துக் காட்டாமல் நேர்மை யாகவும் நேரிடையாகவும் அந்தப் பெரிய தலைவர்களைப் பதில் கூறச்சொல்லிக் கேட்டுப் பார், தம்பி! வாங்கிய கடனைக் கொண்டு பேரரசு துவக்கி நடத்திவரும் தொழில் அமைப்புகளிலே, ஆதாயம் கிடைக்கிறதா? இல்லை என்றால், ஏன்? ஆதாயம் கிடைக்காத போது, கடனைத் திருப்பிக்கட்ட வழி ஏற்படுமா? கடனைக்கூடத் திருப்பிக் கட்டுவதற்கான வருவாயைப் பெறமுடியாத நிலையில் தொழில்களை நடத்தி வருவது, திறமைக் குறைவைத்தானே காட்டுகிறது?

இந்தத் திறமைக் குறைவு உள்ள ஒரு ஆட்சியை நடத்தி வரும் கட்சியை மக்கள் எதற்காக மறுபடியும் மறுபடியும் ஆதரிக்க வேண்டும்? இந்தத் திறமைக் குறைவு நெளியும் நிலையில் உள்ள கட்சி, நாட்டிலே வேறு எந்தக் கட்சிக்கும் நாடாளும் தகுதியும் திறமையும் கிடையாது என்று பேசுவது முறையாகுமா?

தம்பி, இந்தக் கேள்விகளுக்கெல்லாம் ஒரே பதில்தான் கிடைக்கிறது காமராஜர்களிடமிருந்து: எதிர்க்கட்சிக்காரன் பேச்சைக் கேட்காதே!! - இதுதான் பதில் பேச்சு!

சர்க்காரே நியமித்துள்ள தணிக்கைக் குழு சர்க்கார் துறையிலே உள்ள தொழில் அமைப்புகளிலே காணக் கிடக்கும், ஊழல் ஊதாரித்தனம், மந்தம், முறைகேடு, நஷ்டம் ஆகியவை பற்றிப் புட்டுப் புட்டுக் காட்டுகிறது.

எடுத்துக் காட்டுக்காக ஒரு கணக்கு:

இந்தியப் பேரரசு 870 கோடி ரூபாய்களை மூலதனமாகப் போட்டு அமைத்து நடத்திவரும் தொழில் அமைப்புகளின் மூலம் கிடைத்துள்ள வருவாய், சர்க்கார் கணக்கின்படி 3 கோடியே 22 இலட்ச ரூபாய்.

போட்டப்பட்டுள்ள மூலதனத்துக்கு வட்டி மட்டும் எவ்வளவு தெரியுமா தம்பி! 24 கோடி ரூபாய்!

இந்த 3 கோடியே 22 இலட்ச ரூபாய் இலாபம் என்பது வட்டி கொடுத்தான பிறகு அல்ல! இந்த3 கோடியே 22 இலட்ச ரூபாய் இலாபமும் எப்படிக் கிடைத்தது? தொழிற்சாலையிலே பொருளை உற்பத்தி செய்ததன் மூலம் கிடைத்தது அல்ல. பண்டங்களை வாங்கி விற்றதிலே கிடைத்த இலாபம்!

இதைக் கண்டு பொறுப்புள்ள கட்சி

வெட்கப்பட்டிருக்க வேண்டும்; பொறுப்புள்ள மக்கள் இந்த நிலைமைக்குக் காரணமாக உள்ள கட்சியை வீழ்த்தியிருக்க வேண்டும்.

பொதுப் பணத்தையும், கடனாகப் பெற்ற பணத்தையும் - ஆயிரக்கணக்கான கோடி ரூபாய்களை, வகையற்ற விதமாகச் செலவிட்டு, ஆதாயம் தராதவிதமாகத் தொழில் அமைப்புகள் நடத்தி, மக்களுக்கு - எதிர்காலச் சந்ததிக்கும் சேர்த்து - துரோகம் செய்திடும் ஒரு கட்சியை வேறு எந்த நாட்டிலும், தாங்கிக் கொள்ள மாட்டார்கள். இங்கு அந்தக் கட்சியை விட்டால் வேறு வக்கு வழி இல்லை என்று கூறிடத்தக்க அளவுக்கு நிலைமை மோசமாகி வருகிறது.

அத்தகைய மோசமான நிலைமையை மாற்றி, காரிருளைக் கலைத்திடும் அறிவு ஒளியைத் தந்திடும் எழு ஞாயிறாகத் திகழ்கிறது நமது கழகம்.

ஆபத்து நிரம்பிய ஒரு எதிர்காலத்தை உருவாக்கிக் கொண்டிருக்கும் காங்கிரஸ் அரசினர், சொக்கப்பனிடம் பட்ட கடனைத் தீர்க்கச் சொக்கப்பனிடமே கடன் வாங்கும் போக்கிலே நடந்துகொள்கிறீர்களே, இது முறையா சரியா என்று கேட்கும் போது, கடனைத் திருப்பிக் கட்டக்கூடிய வருவாய் பெருகி வருகிறது என்ற கணக்குக் காட்டாமல், வேறு ஏதேதோ தேவையற்ற பிரச்சினைகளைப் பேசி வருகின்றனர்.

தம்பி! யாரோ சொல்லியிருப்பார்கள் போலிருக்கிறது காமராஜருக்கு; நீங்கள் அகில இந்தியக் காங்கிரஸ் தலைவராகி விட்டிருக்கிறீர்கள். ஆகவே, இனிச் சற்று அதிகமாக, வெளி நாட்டுப் பிரச்சினைகளைப் பற்றிப் பேசுங்கள் என்று. இம்முறை நடத்தினாரே - என்ன பயணம்? - மின்னல் வேகச் சூறாவளிப் பயணம்!! அதிலே

வெளிநாட்டுப் பிரச்சினை பற்றியும் பேசியிருக்கிறார்.

மின்னல், நிரந்தர ஒளியைத் தருவதில்லை; சூறாவளி நல்லதைக் கொடுப்பதில்லை; இதை உணர்ந்துதானோ என்னவோ சில இதழ்கள், காமராஜரின் சுற்றுப் பயணத்தை, மின்னல் வேகச்சூறாவளிப் பயணம் என்று எழுதியிருக்கின்றன. அந்தப் பயணத்தின்போதுதான் காமராஜர், ர□யர்மடன் சேருவதா அமெரிக்காவுடன் சேருவதா என்று பிரச்சினையைப்பற்றிக்கூடப் பேசியிருக்கிறார்.

மற்ற யாருக்கு எந்தவிதமான கருத்து இருந்து வந்த போதிலும், தம்பி! நமது கழகம், ர□யர்மடன் சேர வேண்டாம், அமெரிக்காவுடன் கூட்டுச் சேர வேண்டும் என்று எப்போதும் வலியுறுத்தியது இல்லை; இனியும் சொல்வதாக இல்லை.

கழகம் கூறுவதெல்லாம், எந்த இடத்திலிருந்து பெறுகிற கடனாக இருந்தாலும் - கடன் கடன்தான் என்பதும், அந்தக் கடனை, வருவாய் தரத்தக்க விதமாகச் செலவிட்டுத் தொழில் அமைப்புகளைக் காண வேண்டும் என்பதும்,

இதிலே இன்றுவரை, இந்தியப் பேரரசு, வருந்தத்தக்க கண்டிக்கத்தக்க தோல்விகளைத்தான் பெற்றளித்து இருக்கிறது என்பதும், இதன் காரணமாக இந்தத் தலைமுறை மட்டுமல்லாமல், வருகின்ற தலைமுறைக்கும், பெருஞ்சுமை ஏறிவிட்டிருக்கிறது என்பதும்,

இத்தனை கேட்டினுக்கும் காரணமாக உள்ள காங்கிரஸ் கட்சியிடம் மீண்டும் மீண்டும் ஆட்சிப் பொறுப்பை ஒப்புவிப்பது தவறு என்பதும் ஆகிய இவைகளே.

அமெரிக்கா, நமக்குச் சரியானபடி மதிப்பளித்துப் பரிவு காட்டி, நியாயம் காட்டி நடந்துகொள்ளவில்லை; ர□யர் அவ்விதம் இல்லை; நமக்காகப் பரிந்துபேசி வருகிறது. ஆகவேதான் லால்பகதூர் ர□யர் போகிறார் என்கிறார் காமராஜர்.

இவ்விதம் லால்பகதூர் பேசமாட்டார்.

இனி என்றென்றும் லால்பகதூர், அமெரிக்கா போகவே கூடாது என்று முடிவு எடுத்துவிடவில்லை.

இனி என்றென்றும் எந்தவிதமான உதவியும் அமெரிக்கா விடமிருந்து நமக்குத் தேவையே இல்லை என்று லால்பகதூர் அறிவித்துவிடவில்லை.

வெட்கப்படாமல் உண்மையை ஒப்புக்கொள்வதானால், லால்பகதூர் அமெரிக்கா போகாமல் ர□யர்

சென்றதற்குக்காரணம், இப்போது இங்கே வரவேண்டாம் என்று அமெரிக்கத் தலைவர் ஜான்சன் சொன்னதுதான்.

காமராஜரின் "கண்டுபிடிப்பு' வேறு!!

அவருடைய அந்தப் பேச்சு ஆங்கில ஏடுகளில் எடுப்பான முறையிலே வெளியிடப்பட்டாலேபோதும், அவருக்கும் சங்கடம் ஏற்படும், இந்தியப் பேரரசுக்கும் சங்கடம் விளையக்கூடும்.

நல்ல வேளையாக இங்கே பேசினார், தமிழில்! இப்படியா பேசினீர்கள் என்று யாரேனும், டில்லி வட்டாரத்திலே கேட்டால், உடனே, நான் பேசியது அவ்விதம் அல்ல பத்திரிகைக்காரர்கள் திருத்திப் போட்டுவிட்டார்கள் என்று கூறிடத் தெரியும் காமராஜருக்கு. முன்பு ஒரே அடியாக அடித்தாரல்லவா, இந்தியிலே அறிக்கை

வந்தால், கிழித்துப்போடுவோம் என்று. நான் சொல்லவே இல்லை என்று, வடக்கே உள்ளவர்கள் கேட்ட போது! அதுபோல!!

இப்போது உள்ள பிரச்சினை, இந்தியா ர□யர்விடம் நேசமாக இருப்பதா, அமெரிக்காவுடன் நட்பாக இருப்பதா என்பது அல்ல.

அமெரிக்கக் குடியரசுத் தலைவர் ஜான்சன், இப்போது இங்கே வரவேண்டாம் என்று கூறியது பொறுத்துக்கொள்ளக் கூடியதுமல்ல, மறந்துவிடத்தக்கதுமல்ல; அந்தப் பேச்சு ஜான்சனுடைய தரத்தையே வெகுவாகக் குறைத்துவிட்டிருக்கிறது என்பதையும் நான் மறுப்பவனல்ல.

ஆனால் தம்பி! காமராஜர் பேசியதில் இருந்து, இனி அமெரிக்காவின் உதவி கேட்டிட, இந்தியப் பேரரசு விரும்பாது

என்று மட்டும் யாரும் எண்ணிக்கொள்ள வேண்டாம், அவருக்கேகூட அந்த எண்ணம் ஏற்பட்டுவிடக்கூடாது. சூறாவளிப் பயணத்தின் காரணமாக, அவர் நிலைமையை மறந்துவிட்டுப் பேசியிருக்கிறார்.

அவர் அத்தனை வீராவேசமாக இங்கே பேசிக் கொண்டிருந்த நாளில், அமெரிக்காவில், உதவி கேட்டுக் கொண்டு, உருக்கமாக ஒரு மேத்தா பேசிக்கொண்டிருந்தார். ஆமாம், தம்பி! அசோக் மேத்தா, இந்தியாவுக்கு உதவி, தாராளமாகவும் ஏராளமாகவும் செய்யும்படி ர□யர்வில் பேசிக் கொண்டிருக்கும் அதே நாட்களில், இந்தியாவுக்கு அதிக அளவில் உதவி செய்யும்படி, மற்றொரு மேத்தா, - ஜி. எல் மேத்தா - அமெரிக்காவில் பேசிக்கொண்டிருந்தார்.

மே திங்கள் 11, 12 நாளிதழ்களைப்

பார்த்தால், இரு வேறு நாடுகளில் இரு வேறு மேத்தாக்கள் இந்தியாவுக்கு உதவி அளிக்கும்படி உருக்கத்துடன் வேண்டிக்கொண்ட செய்திகளைக் காணலாம்.

அதே இதழ்களில் மின்னல் வேகச் சூறாவளியார், அமெரிக்காவைத் தூக்கி ஆறு காத தூரம் வீசிப்போட்டுவிட்டு, சோவியத் ரஷியாவுடன் சரசமாடிடும் விந்தைப் பேச்சுப் பேசியதையும் காணலாம்.

இவைகளுக்குள் உள்ள முரண்பாடுகளை இங்கு உள்ள மக்கள் அவ்வளவாகக் கவனிக்கமாட்டார்கள்; அவர்களில் மிகப் பலர் இன்னமும் அண்டத்தை ஆதிசேஷன் தாங்குகிறார் என்பதையும், அரிபரந்தாமன் திருப்பாற்கடலில் ஆலிலைமீது பள்ளிகொண்டிருக்கிறார் என்பதையும் "இருந்தாலும் இருக்கும்' என்று ஏற்றுக்கொண்டுள்ளவர்கள்!

ஆனால், விவரம் தெரிந்தவர்கள், விழுந்து விழுந்து சிரிப்பார்கள்.

நான், தம்பி! அந்த முரண்பாடுபற்றிக்கூட இப்போது குறிப்பிடவில்லை; நான் கேட்பதெல்லாம் கடன் சுமை ஏறிக் கொண்டே வருகிறதே. கடனைத் திருப்பிக் கொடுத்திடத்தக்க முறையில், வருவாய் தரும் தொழில் அமைப்பு ஏற்படவில்லையே, இதற்கு இன்று அரசாளும் காங்கிரசார் என்ன சமாதானம் கூறுகிறார்கள் என்பதுதான்.

தம்பி! சர்க்காரிடம் பெற்ற கடன் மட்டுமல்ல; ஏராளமான வெளிநாட்டு முதலாளிகள், குறிப்பாக அமெரிக்க முதலாளிகள், முதல் போட்டு இங்கே தொழில் நடத்தி, இலாபத்தைக் கோடிக் கணக்கில் தத்தமது நாடுகளுக்குக் கொண்டுசெல்கிறார்கள். இங்குள்ள "முதலாளிகளுடன்' கூட்டுச்சேர்ந்து தொழில் நடத்துகிறார்கள்; இலாபம் குவித்தபடி

இருக்கிறார்கள்.

இவை யாவும் எதிர்காலத்தில், இந்த நாட்டின் பொருளாதார யந்திரத்தின் சூத்திரதாரிகளாக வெளி நாட்டார்களே ஆகிவிட்டுள்ளனர் என்ற பேராபத்தை மூட்டி விடலாம்.

இப்போதே, சுயராஜ்யத்துக்கு முன்பு இருந்ததைவிட, மிக அதிகமான அளவு, பிரிட்டிஷ் அமெரிக்க முதலாளிமார்களின் ஆதிக்கம் இங்கு வளர்ந்துவிட்டிருக்கிறது. இதனைக் காங்கிரஸ் தலைவர்கள் மறுத்திட முடியாது.

கடனும் நிரம்ப வாங்கி இருக்கிறார்கள்; பெரிய பெரிய தொழில்களிலும் வெளிநாட்டாரின் பிடி அதிகமாகி வந்திருக்கிறது, இந்தியப் பேரரசு துவக்கி நடத்தி வரும் தொழில்களில்,

மகிழத்தக்க வருவாய் கிடைக்கவில்லை; ஊழல் ஊதாரித்தனம் காரணமாகப் பல அமைப்புகளிலே நட்டம் தொடர்ந்து ஏற்பட்டு வருகிறது.

இவை பெருமை தரத்தக்கவைகளா?

பாருங்கள் எமது ஆட்சித் திறமையை என்று கூறி, காங்கிரஸ் தலைவர்கள் மார்தட்டிக்கொள்ளத் தக்கவையா?

இவற்றைச் செய்திடும் ஒரு கட்சி, மக்களின் ஆதரவைப் பெறுவதற்கேற்ற தகுதியைக் கொண்டதுதானா? இந்தக் கேள்விகள் இன்று பெரும்பாலான மக்களின் மனத்தைக் குடையாமலிருக்கலாம்; ஆனால், மக்கள் இவை பற்றி என்றைக்குமேவா சிந்திக்கமாட்டார்கள்?

தம்பி! மக்களை இந்த விஷயங்களைப் பற்றிச் சிந்திக்கச் செய்யவேண்டிய

பொறுப்பைத்தான் கழகம் மேற்கொண் டிருக்கிறது; அதனைத் தக்க முறையில் நடத்திக்கொண்டும் வருகிறது.

எனவேதான் காமராஜர், மாதத்தில் இருபது நாட்கள் நான் தமிழ் நாட்டிலே சுற்றுப் பயணம் செய்யப்போகிறேன் என்று அறிவிக்கிறார்.

இதைவிடப் பெருமை தரத்தக்க "சான்று' வேறு தேவையில்லை, நமது கழகத்துக்கு.

நாக நாட்டுப் பிரச்சினை, பாஞ்சாலச் சிக்கல், மத்தியப் பிரதேசத்து மாச்சரியம், உத்திரப்பிரதேசத்து உபத்திரவம், ஒரிசா ஊழல், மைசூர் மனத்தாங்கல், பாகிஸ்தான் பகை, சீனாவின் தாக்குதல் எனும் இன்னோரன்ன எல்லாப் பிரச்சினைகளுக்கும் பத்தே நாள்; நமது கழகம் ஏற்படுத்தி வைத்துள்ள எழுச்சியை, மக்களின்

விழிப்புணர்ச்சியை அழித்திடும் முயற்சிக்கு இருபது நாள்!

அவ்வளவு வேலை இருப்பதாக உணருகிறாரே காமராஜர், ஒப்புக்கொள்கிறாரே மறைமுகமாக, அது போதும், நமக்கு நமது பணியின் தரத்திலும் அளவிலும் பெருமை இருக்கிறது, பலன் இருக்கிறது என்பதை உணர்த்த.

அகில இந்தியாவுக்கும் சேர்த்து அவர் தலைவர்!! ஆமாம், தம்பி! ஆனால் அவர், மாதத்தில் இருபது நாள் இங்கு இருந்தாக வேண்டும் என்று நிலைமை!!

தருமபுரியில் வெற்றி பெற்றதனால், வேறு சில தலைவர்கள், கழகம் செல்வாக்கு இழந்துவிட்டது, காங்கிரசுக்குச் செல்வாக்கு அதிகமாகிவிட்டது என்று தப்புக் கணக்குப் போடுகிறார்கள்; காமராஜருக்குத் தெரிகிறது,

தருமபுரி வெற்றியைக் கொண்டு கணக்குப் போட்டு ஏமாறக்கூடாது என்று; ஆகவேதான், மாதத்தில் இருபது நாள் இங்கு!!

மாதத்தில் இருபது நாள் காமராஜர், மின்னல் வேகச் சூறாவளிச் சுற்றுப் பயணம் நடத்தி, மக்களிடம் கழகம் ஏற்படுத்தி வைத்துள்ள எழுச்சியை மாய்த்திடும் முயற்சியில் ஈடுபடவேண்டி ஏற்பட்டுவிட்டிருக்கிறது. இது என்னைப் பொறுத்தவரையில், தம்பி! ஒரு இனிப்பளிக்கும் நிகழ்ச்சியாகவே தோன்றுகிறது.

காமராஜருக்கு நிரம்ப வேலை தர, கழகம் களிப்புடன் காத்துக்கொண்டிருக்கிறது.

ஆனால் ஒன்று. கழகம் எழுப்பிடும் பிரச்சினைகளை நேர்மையாகவும் நேரிடையாகவும் சந்தித்து, தக்க விளக்கம்

தரவேண்டும் காமராஜர். சுற்றி வளைத்துப் பேசுவது, சூடம் கொளுத்திப் பூஜை செய்வோர்களின் புன்னகையைப் பெற்றிடப் போதும், எடுத்தேன் கவிழ்த்தேன் என்று பேசுவது, எடுபிடிகளின் எக்காளத்துக்குப் போதும்! அவனே! இவனே! என்று பேசுவது, பண்பு நிரம்பப் பெறவேண்டும் என்பதைமட்டுமே விளக்கிக் காட்டிடும். மக்களின் மனத்திலே ஏற்பட்டுள்ள அச்சம், ஐயப்பாடு, அருவருப்பு, அலுப்பு இவைகளைப் போக்க நேர்மை வேண்டும், நேரிடையான பதில் வேண்டும், திட்டவட்டமான விளக்கம் வேண்டும்.

இதனைக் கருத்திலேகொண்டு, காமராஜர், இருபது நாட்கள் அல்ல, இருபது நிமிடம் பேசினாலும், விவரமறிந்தோர் பாராட்டுவர். குயில் நாளெல்லாம் பாடித்தானா பாராட்டுப் பெறுகிறது; இல்லையல்லவா!!

மக்கள் தெரிந்துகொள்ள விரும்புகிறார்கள், ஏன் எங்கள் இன்னல் போகவில்லை,

எங்கள் இன்னலைப் போக்கத் தீட்டிய திட்டங்கள் ஏன் எங்களை வாழவைக்கவில்லை,

எங்களை வாழவைக்க என்று சொல்லிப் போட்ட திட்டத்தின் பலன் எப்படிச் சீமான்களிடம் சிக்கிக்கொண்டது,

அப்படிச் சீமான்களிடம் அந்தப் பலன் சிக்கிக்கொண்டதை ஏன் நீங்கள் தடுக்கவில்லை,

தடுக்காதது மட்டுமல்ல அவர்களுடன் கூடிக் குலாவிக் குழலூதி வருகிறீர்களே, அது ஏன்?

அது மட்டுமல்லாமல், அந்த அக்கிரமக்காரர்களிடமிருந்து, கட்சிக்காகக்

கோடி கோடியாகப் பறித்துக்கொள்கிறீர்களே, அது முறையா?

அப்படிப் பறித்துக்கொண்டு பிழைத்து வரும் நீங்கள், சோஷியலிசம் பேசுகிறீர்களே, அது உண்மையாக இருக்க முடியுமா?

ஊர்க்குடி கெடுப்பவனை உறவினனாக்கிக்கொண்டு ஊர் வாழ வகுக்கப்பட்ட சோஷியலிசத்தை நடத்திக் காட்ட முடியுமா? இவை போன்றவைகளை.

அவனுக்கு என்ன தெரியும்! இவனுக்கு என்ன முடியும்! எல்லாம் எனக்குத் தெரியும்! எதுவும் என்னால்தான் முடியும்!! - என்ற இந்த முறையில், இருபது நாட்களா, முப்பது நாட்கள் பேசினாலும், மக்களிடம் நன்மதிப்பும் பெறமுடியாது, கட்சியின் எதிர்காலத்தையும் செம்மைப்படுத்திக்கொள்ள முடியாது.

இப்போது நடைபெற்று முடிந்த

சூறாவளிபோலத்தான் மேலும் பல சூறாவளிகள் நடக்கும். அதுதான் மாதத்தில் இருபது நாட்களுக்கு என்றால், மேளதாளம், தீவட்டி மத்தாப்பு, கோச்சு மோட்டார், பூக்கடை பழக்கடை, மூங்கில் துணிமணி, ஒபெருக்கி அச்சகம் இவைகளுக்கு வருவாயும், பல செல்வவான் களுக்குச் செலவும், மக்களுக்கு நேரக்கேடும் ஏற்பட முடியுமே தவிர, வேறு உருப்படியான பலன் ஏற்படாது.

காமராஜர், தாராளமாக அதைச் செய்து பார்க்கட்டும்.

மாதத்தில் இருபது நாட்கள் நான் தமிழ் நாட்டில் இருக்கப் போகிறேன் என்று அவர் சொல்லும்போதே, இந்தியப் பேரரசின் தலைவர்களின் நினைவு, திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீதுதான் இயற்கையிலேயே செல்லும். ஏனெனில், எத்தனை கசப்பானதாக

இருப்பினும், உண்மையை அவர்களும் ஒப்புக் கொண்டாக வேண்டுமே; தமிழகத்தில் பல எதிர்க்கட்சிகள்இருந்தாலும், திராவிட முன்னேற்றக் கழகம்தான் முன்னணியில் நிற்கிறது என்ற உண்மையை. ஆக, காமராஜர் மாதத்தில் இருபது நாள் சூறாவளிச் சுற்றுப்பயணம் செய்கிறார் என்றால், என்ன பொருள்கொள்ள முடியும்? திராவிட முன்னேற்றக் கழகத்தின் வலிவு அந்த அளவு இருக்கிறது என்பதைத்தானே!

இங்கே மந்திரிகள் இருக்கிறார்கள்; தலைவர்கள் நிரம்ப! புதிதுபுதிதாக!! பேச்சாளர்கள் புதுப்புது பூச்சுகளுடன்!! - இவ்வளவு இருந்தும், "பெரிய மேளம்' வந்தாக வேண்டும் என்ற நிலைமை! அதுவும் ஒருவேளை இரண்டு வேளைக்கு அல்ல! ஒரு நாள் இரண்டு நாளைக்கு அல்ல; மாதத்தில் இருபது நாட்களுக்கு!! அவ்வளவு

வேலை இருக்கிறது. இங்குள்ள காங்கிரஸ் மந்திரிகளும் தலைவர்களும், பேசுகிறார்கள், நித்த நித்தம் காரசாரமாக!! ஆனால், காமராஜருக்குத் திருப்தி ஏற்படவில்லை. மக்களை வசப்படுத்த இவர்களால் முடியவில்லை என்று எண்ணுகிறார், மறைமுகமாக அதை எடுத்தும் காட்டுகிறார். காட்டிவிட்டுக் கூறுகிறார், நான் வருகிறேன், நானே வருகிறேன், மாதத்தில் இருபது நாள் வருகிறேன் என்று.

மாதத்தில் இருபது நாள், காங்கிரஸ் கூட்டம் நடக்கும் என்று அல்ல,

மந்திரிகளும் காங்கிரஸ் பேச்சாளர்களும் கூட்டம் நடத்துவார்கள் என்று அல்ல,

நான் வருகிறேன்!
நானே வருகிறேன்!

என்பதாகப் பேசுகிறார்.

பெரிய டாக்டரே வரப்போகிறார், இங்கேயே தங்கி இருந்து வைத்தியம் செய்யப்போகிறார் என்பது, நோயாளியின் நிலைமை அத்தனை மோசமாகிவிட்டிருக்கிறது என்பதற்குத்தானே அடையாளம்?

அதுபோலத்தான், தமிழகத்தில் காங்கிரஸ் கட்சியின் நிலைமை, "பெரிய டாக்டர்' வந்து தீரவேண்டிய விதமாக ஆகி விட்டிருக்கிறது.

இருபது நாட்கள் அல்ல, மாதம் முழுவதும் இங்கேயே இருந்து, பேசி வந்தாலும், ஆட்சிமுறை இன்றுள்ளது போல, மக்களை வாழவைக்காததாக, ஊழல் ஊதாரித்தனம் நெளிவதாக, முதலாளிகளைக் கொழுக்கவைப்பதாக, கடன் பளுவைஅதிகப்படுத்துவதாக, சொக்கப்பனிடம் பட்ட கடனைத் தீர்க்கச் சொக்கப்பனிடமே கடன் வாங்கும்

முறையினதாக இருந்து வரும் வரையில்.

ஊர்குடி கெடுப்பவர்களும், முதலாளிகளும், கள்ள மார்க்கட்காரரும் கொள்ளை இலாபம் அடிப்பவனும், கொள்கை அறியாதவனும் பிடி ஆட்களும், பேரம் பேசிகளும் சோரம் போனவர்களும், காங்கிரஸ் கட்சியின் நடு நாயகங்களாக இருந்து வரும் வரையில், மாதத்தில் இருபது நாளென்ன, முப்பது நாளும் இங்கே முகாமடித்தாலும், பலன் என்ன கிடைத்துவிடும்! பச்சை வண்ணம் பூசி, கழுகைக் கிளியாக்கிவிட முடியுமா, பளிங்குப் பாத்திரத்தில் ஊற்றித் தருவதால் காடி பாலாகிவிடுமா?

ஒரு பலன், உருப்படியான பலன், காமராஜர் அறிவித்துள்ள திட்டத்தின்படி கிடைப்பது, கழகத்தின் வளர்ச்சியின் அளவு இந்தியப் பேரரசுக்குப் புரிகிறதே அதுதான். அந்த மகிழ்ச்சி எனக்கு!!

அரசியல் நிலைமைகளை, ஆட்சியாளர்களால் ஏற்படும் கேடுபாடுகளை மக்களிடம் எடுத்துக் கூறிவருவது மகத்தான ஜனநாயகக் கடமை. அந்தக் கடமையைச் செய்து வருகிறது கழகம்; அதனை எதிர்த்து இருபது நாள் சுற்றுப்பயணம் மட்டும் செய்து பலன் காண எண்ணுவதைவிட, ஆட்சி முறையைத் திருத்தி வழி என்ன என்று யோசிக்க ஒரு நாள், காங்கிரஸ் கட்சிமீது மக்கள் வெறுப்புக்கொள்ளத்தக்க நிலைமையை உண்டாக்கி வைப்பவர்கள் இருக்கிறார்களே, அவர்கள் காங்கிரசின் செல்வாக்கைப் பயன்படுத்தித் தமது சுயநலனைப் பெருக்கிக்கொள்கிறார்களே, அதனை ஒழிப்பது எப்படி என்பதற்கு ஒரு நாள், உள்நாட்டு வெளிநாட்டு முதலாளிகளின் கொட்டம் வளர்ந்து வருகிறதே அதனை அடக்கிட ஒடுக்கிட வழி என்ன என்பதுபற்றி

யோசிக்க ஒரு நாள், சொக்கப்பனிடம் பட்ட கடனைத் தீர்க்கச் சொக்கப்பனிடமே மீண்டும் கடன் வாங்கும் போக்கிலே அரசு நடந்துகொள்கிறதே, அதனைத் திருத்துவது எப்படி என்பதுபற்றி யோசிக்க ஒரு நாள் என்ற முறையில், மிச்சமிருக்கும் பத்து நாட்களையாவது காமராஜர் பயன்படுத்தினால், நல்லது. நான் சொல்லியா அவர் கேட்பார்! ஏ! அப்பா! அவர் எவ்வளவு பெரிய உயரத்தில் இருக்கிறார்!! என் பேச்சு காதில் விழுமா!

நான் சொல்வது அவருடைய காதிலே வீழ்ந்தாலும் விழாவிட்டாலும், தம்பி! உன் செவிவழி நுழைந்து நெஞ்சிலேநிறைந்திருந்தால், அது போதும் எனக்கு. அதனால்தான் உன்னிடம் சொக்கப்பனிடம் பட்ட கடனைத் தீர்க்கச் சொக்கப்பனிடமே மறுபடி கடன் வாங்கும்

போக்கிலே காங்கிரஸ் அரசு நடந்துகொண்டு வருவது பற்றிச் சொன்னேன். பட்டம், பதவி, பர்மிட்டு, லைசென்சு இவைகளுக்காக ஏங்கிக் கிடப்பவர்கள், பதவிப் பல்லக்கினைச் சுமந்து திரிந்தால் பாகும் பருப்பும் சுவைக்கக் கிடைக்கும் என்று நினைத்துக் காத்துக் கிடப்பவர்கள், ஐயோ! நம்மால் ஆகுமா? என்று அஞ்சிக் கிடப்பவர்கள், விளைந்த காட்டுக் குருவிகள், ஒளிவீழ்ந்து மாய்ந்திடும் விட்டில்பூச்சிகள் போன்றாரை விட்டுவிட்டு உழைத்துப் பிழைப்பவர்கள், ஊருக்கு உழைப்பவர்கள், உண்மையை உணரத் துடிப்பவர்கள், நீதிக்காகப் பரிந்து பேசுபவர்கள், நெருப்பாற்றைக் கடந்திடும் அஞ்சா நெஞ்சு கொண்டவர்கள் ஆகியோரிடம் இவைகளைக் கூறிடு. பெரிய பெரிய சர்வாதிகாரங்களைக்கூட, இத்தகையவர்களைக் கொண்டு

அமைக்கப்பட்ட அணிவகுப்புகள் வீழ்த்தின என்று படித்திருப்பதால், தம்பி! எனக்கு ஒரு நம்பிக்கை; அந்த நம்பிக்கையுடன் இவைபற்றிக் கூறினேன், வேறு எவரிடம் கூறுவேன்?

அன்புள்ள

அண்ணாதுரை

23-5-1965

9. கங்கா தீர்த்தம் - 1

பொருளற்ற சொல் பயனற்றுப் போகும் சோஷியலிசம் என்பதுதான் என்ன? காமராஜர் பேசுவது சோஷியலிசம்; குலவுவதோ முதலாளிகளிடம்!

தம்பி!

நெல்லுக்கும் பதருக்கும் உருவ அமைப்பிலே அதிக வித்தியாசம் தெரிவதில்லை; ஆனால், உழவர்கள் எளிதாக இரண்டையும் வெவ்வேறாகப் பிரித்துவிடுகிறார்கள்; ஒவ்வொன்றாக எடுத்துப் பார்த்துப் பார்த்து அல்ல; முறத்திலே கொட்டி, காற்றடிக்கும் பக்கமாக நின்று "தூற்றி' எடுப்பதன் மூலம்.

கானலுக்கும் நீருக்கும் தொலைவிலிருந்து பார்க்கும்போது வேறுபாடு தெரிவதில்லை;

கானல், நீர்போலவே தோற்ற மளிக்கிறது; அருகே சென்று பார்த்தால் கானல் என்று கண்டறிந்திட முடிகிறது.

சொல்லிலேகூடப் பதரும் உண்டு, நெல்லும் உண்டு; கானலும் உண்டு, நீரும் உண்டு; கண்டறிய வேண்டும்.அதற்குக் காது மட்டும் பயன்பட்டால் போதாது, கருத்து சுறுசுறுப்பாக வேலை செய்தபடி இருக்க வேண்டும்.

நெல் விளைவிக்க எடுத்துக்கொள்ளவேண்டி வரும் முயற்சி உழைப்புப்போலவா சொல்லை விளைவித்திடத் தேவைப் படுகிறது? வெகு எளிதாக வண்டி வண்டியாக, அம்பாரம் அம்பாரமாகக் குவித்திட முடிகிறது சொல்லினை.

நெல்லுக்கும் பதருக்கும் உள்ள

வேறுபாட்டினைக் கண்டறிந்து, பதரை அப்புறப்படுத்தினால் மட்டுமே, பயனுள்ள நெல்லைப் பெறமுடியும்; சொல்லுக்கும் அவ்விதமே.

பயனற்றதைச் சொல்லாதே என்கிறார் வள்ளுவர்; கேட்டனரா! பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்றார், கேட்டனரோ? இல்லையே.

பயனற்றன பேசுவதிலேயும், தம்பி! இரு வகை உண்டு. ஒன்று தெரியாமல் பயனற்றன பேசிவிடுவது; மற்றொன்று, தெரிந்து, திட்டமிட்டு, வேண்டுமென்றே, கேட்பவர்களை ஏய்க்க என்றே பயனற்றவைகளை பயனுள்ளவைபோலத் தோற்றம் கொள்ளும்படிச் செய்து பேசி வைப்பது. முன்னது அறியாமையின் விளைவு, மற்றது கயமையின் ஒருவகை.

மற்றொன்றும் தெரிந்திருக்குமே தம்பி!

சீமான் கொடுக்கும் வேப்பெண்ணெய் தேன்போல இனிக்கிறது என்று கூற வேண்டிய கொடுமையை ஏழைகள் சில வேளைகளிலே தாங்கித் தொலைக்க வேண்டி நேரிட்டுவிடுகிறது. சீமான் என்று நான் குறிப்பிடுவது பணம் படைத்தவனை மட்டுமல்ல, பதவியால் உயர்ந்திருப்பவரும் ஒரு வகையில் சீமானே! அதிலும் இந்நாட்களில் பணம் படைத்தவன்கூடப் பதவி பிடித்தவன் முன்பு கைகட்டி நிற்கவேண்டி இருக்கிறது, காரியம் சாதித்துக் கொள்ள.

பெரிய புள்ளியின் பேச்சுக்கு மறுபேச்சுப் பேசுவது கூடாது என்ற எண்ணத்தில், குமுட்டல் கொடுத்திடுவதைக்கூட இனிப்பளிப்பதாக, ஏழை கூறிடவேண்டி நேரிட்டுவிடுகிறது; ஆனால் அந்த ஏழைக்கு உண்மை தெரியும்; நாக்கு மட்டுந்தான் வேறுவிதமாகப் பேசுகிறது; நெஞ்சம் உண்மையினை அறியும். நிலை

காரணமாக அந்தப் பேச்சு.

அஃதே போலத்தான் பதவியில் உயர்ந்தவர்கள், பதர் கொடுத்து இது உயர்தரமான நெல் என்று கூறிடும்போது, ஏழையால் மறுத்துப் பேசிட முடிவதில்லை. ஆனால், வாய் மட்டுந்தான் மூடிக்கிடக்கிறது; மனம்? தூங்குவதில்லை! உண்மையை உணராமலிருப்பதில்லை.

திட்டமிட்டு, பயனற்றவைகளைக் கலந்தளிக்கும் முறை வணிகத்துறையிலே மிகுந்துவிட்டிருக்கிறது என்று அறிந்தோரும் அனுபவித்து அல்லற்பட்டோரும் கூறுகின்றனர்.

ஒருவர் கூறினார் என்னிடம் ஒரு ஊரில், அரிசியுடன் கலப்பதற்காக வெள்ளை நிறக் கூழாங்கற்களை அரிசிபோன்ற வடிவிலேயே உடைத்துத் தந்திட ஒரு சிறு யந்திரமே

வைத்திருக்கிறார்களாம்! அரிசி சோறாக ஆன பிறகே, இந்தக் கல்லரிசியைக் கண்டுபிடிக்க முடியுமாம்! வேகாதல்லவா, கல்லாலான அரிசி! கண் மட்டும் போதவில்லையல்லவா, அரிசியுடன் கலந்துள்ள - கலந்துள்ளதா!! கலக்கப்பட்டுள்ள!! - கல் அரிசியைக் கண்டுபிடிக்க!

சீவல் பாக்குடன் ஏதோ ஓர்விதமான கொட்டையை (காட்டுப்பயிர்) சீவிக் கலந்துவிடுவதாகவும், தழையை வேக வைத்துக் கருநிறமாக்கிப் பொடி செய்து தேயிலைத் தூளுடன் கலந்துவிடுவதாகவும், ஏலத்துடன் கருநிறமான மெழுகுத் துண்டுகளைக் கலந்துவிடுவதாகவும் கூறுகிறார்கள்.

இவை, குறுக்கு வழியில், தவறான வழியில் ஆதாயம் தேட நடத்தப்பட்டு வரும் அக்கிரமங்கள், சட்டம் இருக்கிறது, ஆனால்,

அதனால் மட்டும் எவ்வளவு என்று வேலை செய்ய முடியும்! அலுத்துப்போய்விடுகிறது! தூங்கிவிடுகிறது! மயக்கமடையச் செய்தும் விடுகிறார்கள்! இன்று நேற்றா! நெடுங்காலமாகவே.

கிரேக்க நாட்டுக் கவிஞர் பெருமகன், ஹோமர் கூறினார்.

ஓடிவிடுகிறது ஒய்யார அநியாயம்!

மாந்தரை அலைக்கழித்து மானாய்ப் பறக்கிறது.

அநியாயம் விளைவித்த புண்ணுக்கு மருந்தளிக்கப் புறப்பட்டுப் போகின்றாள் தொழுகை எனும் பெண்ணாள்! தொல்தேவர் குடிப்பிறந்தாள்! ஆயினும் என்ன?

நங்கை அவள் நொண்டி. நகர்கின்றாள், நைந்த கண்ணாள் முகமது சுண்டி

என்று பாடினார்.

அநியாயம் இழைக்கப்படும்போது, தேவனைத் தொழுது பரிகாரம் தேடுகின்றனரல்லவா - அது எப்படிப் பயனற்றுப் போகிறது என்பதனைக் காட்டுகிறார் கிரேக்கக் கவிஞர்

அநியாயம் மானாகப் பறக்கிறதாம்!

அநியாயத்தை வீழ்த்தக் கிளம்பும் தொழுகை எனும் பெண்ணுக்கு, கண் குருடாம், கால் நொண்டியாம்!

இப்போது, அநியாயத்தை வீழ்த்தக் கிளம்பும் சட்டம், இதைவிட மோசமான நிலையில் அல்லவா இருக்கிறது!

சரி, அண்ணா! கலப்படத்தால் விளையும் கேடு பற்றி எதற்காக இப்போது கூறுகிறாய்? எந்தப் பண்டம் வாங்கி ஏமாந்துவிட்டாய்? என்று கேட்கிறாயா, தம்பி! நான்

கூறவந்தது, சொல்லிலே கலக்கப்பட்டுவிடும் பயனற்றன பற்றி; இடையிலே பொருளிலே கலக்கப்பட்டுவிடும் பயனற்றவை பற்றியும் குறிப்பிட்டேன்.

தம்பி! வடிவத்திலே ஒத்ததுபோலவே இருப்பினும் ஏன் பதர், கானல் இவைகளைப் பயனற்றன என்கிறோம்.

பொருளற்றன, பயனற்றன; அவ்வளவே!

பதருக்குள்ளே, பொருள் இல்லை, நெல்லுக்குள் அரிசி எனும் பொருள் இருப்பதுபோல! பொருள் இல்லை; ஆகவே பயன் இல்லை!!

கானலில், நீர் இல்லை, பருகிட! பொருள் இல்லை, பயன் இல்லை! சொல்லிலேயும் அவ்விதமே, பயனுள்ள சொல்லில் பொருளிருக்கும், பொருளுள்ள சொல்லால் பயன் கிடைக்கும்; பொருளற்ற சொல்

பயனற்றுப் போகும்.

நெல்லும் பதரும் ஒரே பயிரிலே விளைவதுபோலவே, பயனுள்ள சொல்லும் பயனற்ற சொல்லும், ஒரே பேச்சி லிருந்துதான் முளைக்கின்றன.

பதர் நீக்கி நெல் கொள்வதுபோல, பேசப்படுவனவற்றில் பயனற்றதை நீக்கிவிட்டுப் பயனுள்ளதைக் கொள்ள வேண்டும்.

இது மிகக் கடினமா! என்ன அண்ணா! உனக்கு இளையவன் - வயதில்தானே!! பதர் நீக்கி நெல்லைக் கொள்ள வேண்டும் என்பதனைக் கூடவா எனக்குச் சொல்லிக் கொடுக்க வேண்டும் என்று கேட்பாயோ, தம்பி! கேட்டாலும் கேட்டுவிடுவாய்; ஆகவே விரைந்து கூறிவிடுகிறேன். நான் குறிப்பிட்டேனே, சீமான் கொடுத்த

வேப்பெண்ணெய் - அதனை நினைவுபடுத்திக் கொள். பயனற்றன - பயனளிப்பன என்று சொல்லைப் பிரித்துவிடலாம், நல்லன கொண்டு அல்லன தள்ளலாம் - நம்மை ஒத்தவர்கள் பேசக் கேட்டால்; ஆனால், பேசுபவர், பெரிய புள்ளி - பெரிய பதவியில் உள்ளவர் என்றால் முடியுமா; எளிதாக! முடியும்என்னால்! என்கிறாயா!! சரி, தம்பி! நீ எதனையும் துருவித் துருவிப் பார்த்திடவும், உண்மையை எடுத்துரைக்கவும் தேவைப்படும் இயல்பினைக் கொண்டிருக்கிறாய்; உன்னால் முடிகிறது. ஆனால், எல்லோராலும் முடியுமா - எத்தனையோ தொல்லைகளைத் தாங்கித் தாங்கி வாழ்க்கையே வளைந்து போயுள்ள நிலையில் உள்ளவர்களால் முடியுமா - பதவியில் உயர்ந்தவர்கள் பேசும் பேச்சிலே, தரம், வகை பிரித்துக் காட்டி, அவர்களின் கோபம் கிளம்பித் தாக்கினால் அதனுடைய

வேகத்தைத் தாங்கிக் கொள்ளும் "உள்ள உரம்' எல்லோருக்குமா ஏற்பட்டுவிடும்? முடியாதல்லவா! அவர்கள் நெல்லுக்குப் பதிலாகப் பதர் கிடைக்கப்பெற்று, பதர் என்று வெளியே கூறிடவும் முடியாமல், அதனைச் சுமந்தும் செல்லவேண்டி நேரிட்டுவிடுகிறது. காமராஜரின் சுற்றுப் பயணப் பேச்சைக் கேட்டவர்களுக்கு இந்த நிலை ஏற்பட்டதாகக் கூறுகிறார்கள்; இதழ்களிலே நான் பார்த்த அளவில், எனக்கும் அதுபோலத்தான் தோன்றுகிறது.

தம்பி! மற்றொன்று உளது முக்கியமானது; பேச்சு பொருளுள்ளதாக, பயனுள்ளதாக இருக்க வேண்டும் என்பதுடன், சொல்லுக்கும் செயலுக்கும் பொருத்தமிருக்க வேண்டும்; சொல் சுவைத்து, செயல் கசப்பளித்தால்,

பயன் என்ன?

வாளது கையில்கொண்டு
வருபவன் சிரம் அறுத்து
வாகையைச் சூடிநானே
வந்திடுவேன், உறுதி
உறுதியாமே!

என்று உரத்த குரலிலே முழக்கம் எழுப்பிவிட்டு, களம் நோக்கிச் செல்லாமல், அடுக்களை சென்று பதுங்கினால், முழக்கத்தால் பயன் என்ன கிடைத்திடும்!

செந்தமிழின் சுவையினைச் சேர்த்து, செல்லரித்துப்போன ஏடுகளிலே உள்ள கதைகளுக்குப் புதுவடிவம் கொடுத்து, "காலட்சேபம்' செய்து கனதனவான் வாழ்க்கையைப் பெற்றிருப்பவர்கள் சிலரை அறிந்திருப்பாயே, தம்பி! அப்படிப்

பட்டவரில் ஒருவர் - பெயரா? ஏதாவது வைத்துக்கொள்ளேன்! - தேனாமிர்தானந்தர்! - பரதன் பாதுகை சுமந்ததுபற்றி உருக்கமாகக் காலட்சேபம் செய்துவிட்டு, அன்றிரவு அண்ணனுக்குச் சேரவேண்டிய சொத்தினை ஏமாற்றிப் பறித்துக் கொள்வதற்காக, ஆள்வைத்து அவனை மண்டையில் அடித்து, மூளை குழம்பிப்போகும்படி செய்து,"பித்தர் விடுதி'யில் சேர்த்துவிட்ட பிள்ளைப் பெருமாள் எனும் சீமான் வீட்டில்விருந்துண்ணச் செல்வதும், கண்ணப்ப நாயனார் கதையை, கேட்பவர் கண்களில் நீர் வழியும் விதமாகக் "காலட்சேபம்' செய்துவிட்டு, இளையாளுக்காக மூத்தாளைத் தாக்கி, அதன் காரணமாக அவளுடைய கண்ணுக்குச் சேதம் உண்டாக்கி, அது மாரியம்மன் செய்தது என்று மற்றவர்களை நம்பும்படி செய்து விட்ட பெரியசாமி மாளிகையில்

விருந்துண்ணச் செல்வதும், வள்ளலார் வகுத்த வழிபற்றி அழகொழுகப் பேசிவிட்டு, பட்டாளத்துக்கு ஆட்டுக்கறி"காண்ட்ராக்ட்' எடுத்து ஆறு இலட்சம் ஆதாயம் பெற்ற அருமைநாயகம் பங்களாவில் விருந்து சாப்பிடச் செல்வதும், காரைக்காலம்மையார் பற்றிக் காலட்சேபம் செய்துவிட்டு, கணவனிடம் மல்லுக்கு நின்று மாதம் ஆயிரம் ஜீவனாம்சம் பெற்றுக்கொண்ட மரகதம் வீட்டிலே சிற்றுண்டி சாப்பிடச் செல்வதும், எம்மதமும் சம்மதமே என்ற சமரசபோதம் அளித்துவிட்டு, கோயில் யானைக்கு நாமம், வடகலையா, தென்கலையா என்ற பிரச்சினையில் முன்னாலே நின்று, எதிர்த்தரப்பினரை ஆள்வைத்து மண்டையை உடைத்த தர்மகர்த்தா தனபாலர் வீட்டிலே விருந்துக்குச் செல்வதும், ஆலயத் திருப்பணி பற்றி அழகாகப்

பேசிவிட்டு, அம்பாளின் ஆபரணங்களைத் தன்னுடைய "அன்னத்துக்கு' என்று ஆக்கிக் கொண்ட கோயிற் பெருச்சாளி கோதண்டபாணி வீட்டிலே"ஜாகை' வைத்துக்கொள்வதும், பொருத்தம் என்று புராணத்தைப் போற்றுபவர்களேகூட ஒப்புக்கொள்பவர்களா! சொல்லுக்கும் செயலுக்கும் பொருத்தமில்லையே; எதெது தவறு, பாபம் என்று காலட்சேபத்தில் கூறுகிறாரோ, அந்தத் தவறுகளை, பாபங்களைச் செய்து பணம் திரட்டிக்கொண்டுள்ள பாதகர்களின் விருந்தினராகச் செல்லலாமா? எப்படி மனம் ஒப்பிச் செல்கிறார்? இவர் அப்படிப்பட்டவர்களின் இல்லங்களில் சென்று விருந்துண்டால், ஊரார் என்ன எண்ணிக்கொள்வார்கள்? எத்தனையோ பயல்கள், என்னை அக்கிரமக்காரன்,

அநியாயம் செய்தவன் என்று பேசினார்கள்! இப்போது என்ன சொல்கிறார்கள். அறநெறிபற்றியும் அன்புவழிபற்றியும், ஹரிஹரன் அவர் மகன் ஆகியோரின் மகிமைபற்றியும் அழகாகக் காலட்சேபம் நடாத்தும் தேனாமிர்தானந்தரே எனது இல்லத்திற்கு வந்திருந்தார், விருந்துண்டார், வாழ்த்தினார்; காணிக்கையை ஏற்றுக்கொண்டார்! என்று அவர்கள் பேச மாட்டார்களா! உள்ளபடி அந்தக் காலட்சேபம் செய்பவருக்கு, அக்கிரமத்திலே வெறுப்பு என்றால், அக்கிரமக்காரர் வீடு செல்ல மனம் இடம் கொடுக்குமா! சென்றார் என்றால், அவரைப்பற்றிஎன்ன தம்பி! எண்ணிக்கொள்வாய்? அவருடைய ”காலட்சேபம்’ பற்றி எந்தவிதமான மதிப்புப் போடுவாய்?

சூறாவளிச் சுற்றுப் பயணக்காரர் -

காமராஜர் - 3000 மைல்களாமே - அவ்வளவு தொலைவுசுற்றி, பேசினாரே, ஏழைக்காக, சோஷியலிசத்துக்காக - தம்பி! அந்தப் பேச்சிலே பதர் எவ்வளவு என்பது ஒருபுறம் இருக்க, அந்தப் பேச்சுப் பேசினவரை வாழ்த்தி வரவேற்றவர்கள், செலவு செய்து விழா எடுத்தவர்கள், சூழ நின்று சூடம் கொளுத்தியவர்கள், மாளிகை அழைத்துச் சென்று விருந்து நடத்தியவர்கள், இவர்கள் யார்? சோஷியலிசத்துக்கும் இவர்களுக்கும் என்ன சம்பந்தம்? ஏழை இவர்களைப்பற்றி என்ன எண்ணுகிறான்? என்பவைபற்றி எண்ணிப் பார்த்தால் தம்பி! நான் குறிப்பிட்ட காலட்சேபக்காரர் உவமையின் பொருள் விளங்கும்.

ஒரு ஊரில் பஸ் முதலாளி, மற்றோர் இடத்தில் ஆலை அரசர், இன்னோரிடத்தில் வட்டிக் கடைக்காரர் வேறோரிடத்தில்

மிட்டா, மற்றுமோரிடத்தில் புது பர்மிட், இப்படிப்பட்டவர்கள் இல்லங்களிலா அல்லது ஆலைத் தொழிலாளி, கதர்க் கடையில் கணக்கெழுதுபவர் போன்ற எளியோர் குடில்களிலா, எங்கு அழைத்துச் செல்லப்பட்டார், சோஷியலிசம் பேசியவர் என்பதைக் கேட்டறிந்தால், தம்பி! சொல்லுக்கும் செயலுக்கும் பொருத்தம் இல்லாததை, முரண்பாடே இருப்பதை அறிந்து கொள்ளலாம்; அறிந்துகொண்டுள்ளனர் மக்கள்.

"ஏழை பங்காளர் காமராஜர் என்பது இப்போது தெரிகிறதல்லவா?''

மண்டலம் கேட்கிறார் இதுபோல வறண்ட தலைத் தோழரைப் பார்த்து.

"மகராஜன்! ஏழைக்காகத்தான் ஆட்சி என்கிறார். காது குளிரக் கேட்டேன்'' என்று

அந்த ஏழை கூறுகிறான்; உடனே மண்டலம், சரி! இந்த ஓட்டு நமக்கு, காங்கிரசுக்கு என்று எண்ணிப் பூரித்து, வேறு ஆளைப் பார்க்கச் செல்கிறார். ஏழைக்காகப் பேசிய காமராஜர் ஏறிச் செல்லும் படகு மோட்டார் பறந்து வருகிறது; பாதையில் நிற்காதே, போ! அந்தப் பக்கம்! என்று விரட்டுகிறார் போலீஸ்காரர்.

"எங்கே செல்கிறார் காமராஜர்?'' என்று கேட்கிறான் ஏழை, போலீஸ்காரரிடம்.

கட்டாயம் தெரிந்துகொண்டாக வேண்டுமோ! ஏனாம்! பேட்டி பார்க்கவோ!

என்று கேலி பேசித் துரத்துகிறார், காலை முதல் கால் கடுக்கச் சேவகம் பார்த்த அலுப்பினால், கான்ஸ்டபிள்.

மற்றோர் ஏழை பதில் கூறுகிறான்.

ஆலை முதலாளி அய்யம்பெருமாள் அரண்மனைக்கு.

இது கேட்ட ஏழையின் உச்சி குளிருமா! உள்ளம் பதறுகிறது.

அய்யம்பெருமாள் அரண்மனைக்கா!

விருந்து சாப்பிட அந்த இடமா!

நூல் கட்டுகளைக் கள்ளமார்க்கட்டில் விற்பவனாயிற்றே.

நெசவாளர்களின் குடும்பம் எத்தனையோ நாசமாகக் காரணமாக இருந்தவனாயிற்றே.

கணக்கு, மூன்று நாலு தினுசாச்சே அவனிடம், அவன் அரண்மனைக்கா செல்கிறார் காமராஜர்.

அவன் போன்றவர்களின் ஆதிக்கத்தை ஒழித்தால் தானே, சோஷியலிசம் மலரும்.

சோஷியலிசம் மலர்ந்தால்தானே ஏழைக்கு வாழ்வு.

ஏழையின் வாழ்வைக் குலைக்கும் எத்தன்

அரண்மனைக்கு இவர் போகலாமா?

இவர் அங்குப் போனால் பிறகு சோஷியலிசம் பெற எப்படி வேலை செய்ய முடியும்?

பேசுவது சோஷியலிசம், குலவுவது முதலாளியிடமா!

எங்கள் காதுக்காகச் சோஷியலிசப் பேச்சு; இவர் தங்குமிடம் முதலாளி மாளிகை!

இவ்விதமெல்லாம் தம்பி! அந்த ஏழை கேட்க முடியாது - மனத்திலே இவை கொந்தளித்தபடி இருக்கும். மண்டலத்துக்கு இது தெரியாது!

சோஷியலிசம் ஏன் தேவைப்படுகிறது? என்பது குறித்தும், சோஷியலிசம் என்றால் என்ன? என்பது பற்றியும் சோஷியலிசத்தை எப்படிக் காண்பது என்பது பற்றியும்சோஷியலிச தத்துவம்

அறிந்தவர்கள், சோஷியலிசத்தை நடைமுறைக்குக் கொண்டு வருவதிலே வெற்றி கண்டவர்கள். கூறியுள்ளனர்.

காமராஜர் இந்தக் கருத்துக்களை அல்ல - சோஷியலிசம் பற்றிக் காங்கிரஸ் கொண்டுள்ள கருத்தைத்தான் கூறுகிறார்.

இது அல்லவே சோஷியலிசம் என்று கூறுகின்றனர்; சோஷியலிச தத்துவத்துக்கும் நீங்கள் சொல்லுவதற்கும் பொருந்தவில்லையே என்று விவரமறிந்தவர்கள் கூறுகின்றனர்; அதுபற்றி எமக்குக் கவலையில்லை; தத்துவம் பேசுபவர்கள் அல்ல நாங்கள்; நாங்கள் கூறும் சோஷியலிசம் இப்படித்தான்! போ! போ!! - என்று கூறிவிடுகிறார் காமராஜர்.

மண்டலத்தைக் கேட்டால், இது ஒரு மாதிரி சோஷியலிசம் என்கிறார்.

சோஷியலிசம் மாதிரிதான் இது என்கிறார் வேறோர் காங்கிரஸ்காரர்.

தம்பி! இப்போது புனிதப் பயணத்தின் புகழ் பாடி, நம்மோடு இருந்தபோது, சோஷியலிசம் மாதிரி என்று காங்கிரஸ் கட்சி ஆவடியில் திட்டம் கூறினபோது முழக்கமிட்டது என் காதில் இப்போதுகூட ஒலித்துக்கொண்டிருக்கிறது.

சோஷியலிசம் மாதிரி!
குதிரை மாதிரி!

குதிரை மாதிரி என்றால் என்ன பொருள்? கழுதை என்று பொருள்.

அப்படிப் பேசிவிட்டு இப்போது இப்படி இருக்கலாமா என்று என்னைக் கேட்காதே தம்பி! பயில்வான்போல இருந்தான் இப்போது எலும்புருவாகிவிட்டானே ஏன் என்று கேட்டால், என்ன பதில் கூறுவது; கெட்ட கிருமிகள்

கொட்டிவிட்டன என்றுதானே, அதுபோல, அது கிடக்கட்டும்; காமராஜர், பேசிடும் சோஷியலிசம் பற்றிப் பார்ப்போம். அவர் பேசுவது சோஷியலிசம் அல்ல! பதர்; நெல் அல்ல!! - ஏன்? பொருள் இல்லை; பயன் இல்லை.

இதனை எல்லோராலும் உணர்ந்துகொள்ள முடிந்தாலும் எடுத்துக் கூறிடும் இயல்பு அனைவருக்கும் இருந்திடாது; அந்த இயல்பு இருந்திடினும், அச்சம், தயை, தாட்சணியமின்றி அதனை எடுத்துக் கூறுவோரின் தொகை அதிகம் இருக்க முடியாது.

ஏழைக்காகப் பரிந்து பேசுவது,
ஏழைக்கு இயன்ற அளவு உதவி செய்வது,
ஏழையும் ஓரளவு நிம்மதியான வாழ்வு பெற வழி காண்பது,
ஏழைக்குத் தொழிலும் வருவாயும் கிடைக்கச்

செய்வது,
ஏழையை ஏழை என்பதற்காக இழிவாக நடத்தாமலிருப்பது,
ஏழைக்கு, குடி இருக்க வசதி, படிப்பு வசதி, மருத்துவ வசதி தேடிக் கொடுப்பது,
இவைகளைச் செய்துவிட்டால் போதும், அதுதான் சோஷியலிசம் என்று எண்ணிக்கொள்ளச் சொல்லுகிறது, காங்கிரஸ் கட்சி.

காய்ச்சல் காரணமாக வாய்க்கசப்பு கொண்டவன் நாவில், ஒரு துளி தேன் தடவிவிடுவது போன்றது இது.

தானதருமம் செய்வது, சத்திரம் சாவடி கட்டுவது, கோயில் குளம் அமைப்பது, கல்விக் கூடம், கலியாண மண்டபம் கட்டுவது, இவைகளைச் செய்தால் போதும் அதுதான் சோஷியலிசம் என்று எண்ணிக்கொள்ளச் சொல்கிறார்கள்.

இந்த உதவிகளை - தருமங்களை - தனிப்பட்ட "முதலாளிகளை'ச் செய்யச் சொல்லி வற்புறுத்துவதும் முதலாளி களிடம் வரியாகவும் நன்கொடையாகவும் பணம் பெற்று சர்க்கார் இந்த உதவிகளைச் செய்வதும் போதும், சோஷியலிசம் அதுதான் என்று காமராஜரைச் சொல்ல வைத்திருக்கிறது காங்கிரஸ் கட்சி.

ஆனால் சோஷியலிசம் என்பதற்கு தரப்பட்டிருக்கும் விளக்கம் வேறு; அதனைப் பார்க்கும்போது மன எழுச்சியே ஏற்படும்.

உடலிலே படிந்துள்ள சேற்றினைக் கழுவிக்கொள்ள ஒரு பானைத் தண்ணீர் தரச் சொல்லி "உபதேசம்' செய்வதைச் சோஷியலிசம் என்று காங்கிரஸ் கூறுகிறது. சோஷியலிசம் உடலிலே சேறு படியாத நிலையை ஏற்படுத்த என்ன வழி, யாது முறை என்பதை எடுத்துக் காட்டும் திட்டமாகும்.

"கொடு!'' என்று முதலாளிகளிடமும்,"பெறு'' என்று ஏழையிடமும் கூறுவதும். "அவ்வளவு இருக்கிறதே கொஞ்சம் கொடு!'' என்று பணக்காரரிடமும்,"இவ்வளவு கிடைத்ததே திருப்திப்படு'' என்று ஏழையிடமும் பேசி, இரு வர்க்கத்துக்கும்இடையே நின்று இருவருக்கும் இனிப்பாகப் பேசிவருவதை, சோஷியலிசம் என்று காங்கிரஸ் கட்சி கருதிக்கொள்கிறது! கருதிக்கொள்ளச் சொல்லுகிறது. சோஷியலிசத் தத்துவமும், முறையும் வேறாக இருக்கிறதே என்று கூறினாலோ, கோபம் பொத்துக்கொண்டு வருகிறது - புரியாததால் அல்ல - புரிவதால்!! - எங்கள் சோஷியலிசம் இதுதான் என்று கூறிவிடுகிறார்கள். இதுபற்றிப் பிறகு எழுதுகிறேன்.

புரோகிதன், நம் வீட்டுக் கிணற்றிலிருந்து

தண்ணீர் எடுத்துவரச் சொல்லி, செம்பிலே நிரப்பி, ஒரு கொத்து மாவிலையைச் செருகி, இதிலே இருப்பது, கங்கா, யமுனா, சரஸ்வதி ஆகிய நதிகளின் புண்ணிய தீர்த்தம் என்று சொல்லும் போது, இது ஏன் இப்படி ஒரு அண்டப் புளுகு! என்று கேட்கிறார்களா - நன்றாகத் தெரியும், நம்முடைய வீட்டுக் கிணற்றுத் தண்ணீர்தான் என்பது - இருந்தாலும் புரோகிதர் பொய்யுரைக்கும்போது மறுப்பதில்லையே!! ஆம்! என்று ஒப்புக் கொள்கிறார்களல்லவா? அதுபோல நெடுங்காலமாக - இங்கு மட்டும் அல்ல - நாகரிக அரசியல் வளர்ந்த எல்லா நாடுகளிலும் ஈவு இரக்கம், பரிவு பச்சாதாபம், தானம், தருமம் என்ற பண்புகள் இருந்து வந்தனவே, அவைகளையே எடுத்து தமது கட்சி முத்திரையிட்டு, இதுதான் சோஷியலிசம் என்கிறது காங்கிரஸ் கட்சி. கிணற்றுத்

தண்ணீர் கங்கா தீர்த்தம் ஆகிவிடுகிறது!!

அன்புள்ள

அண்ணாதுரை

30-5-1965

10. கங்கா தீர்த்தம் - 2

எல்லாம் எல்லாருக்கும் என்பதே சோஷியலிசம்
மாங்காய் மாலை போன்றது காங்கிரஸ் பேசும் சோஷியலிசம்
அமெரிக்க முதலாளிகளை மேத்தா அழைக்கிறார்
காங்கிரஸ் சோஷியலிசம் முதலாளிகளைக் கொழுக்க வைக்கிறது
ஜான் நைஹார்ட்டின் எழுச்சிக் கவிதை

தம்பி!

ஏழைக்கு இதம் செய்திடவே செல்வவானிடம் பணம் ஆண்டவனால் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. செல்வவான்கள் "தர்மகர்த்தாக்கள்'. அவர்களிடம் சேர்ந்திடும் செல்வம் அவர்களுடைய சுகபோகத்துக்காக

அல்ல என்ற கருத்தை, மெத்தக் கனிவுடன், கேட்போர் உள்ளம் உருகும் விதத்தில் எடுத்துரைத்தவர்களில் காந்தியாருக்கு நிகர் எவரும் இல்லை என்றே கூறலாம்.

பண்புகள் குறித்து எடுத்துரைத்த மேலோர் அனைவருமே இத்தகு கருத்தினை வலியுறுத்தி வந்தனர். இதனை மறுத்தவர் எவரும் இல்லை; அதுபோன்றே இதனை முழுக்க முழுக்க ஏற்றுக்கொண்டு அந்த நெறி நின்றவர்களும் இல்லை.

ஊசியின் காதுக்குள் ஒட்டகம் நுழைந்தாலும் நுழைய லாம், செல்வவான்கள் மோட்ச சாம்ராஜ்யத்தில் நுழைய முடியாது

என்ற அருள்மொழியை அறிந்து, ஒப்புக்கொண்டு, உள்ளம் உருக அதுபற்றிய உபதேசத்தைக் கேட்டுக் கொண்டிருந்தவர்கள் மேனாட்டினர்; அதன் காரணமாக அவர்கள்

உடைமைகளைத் தேடிப்பெறுவது, உல்லாச வாழ்க்கையில் ஈடுபடுவது என்பவைகளை விட்டொழித்தனரா? இல்லை! உபதேசம் கேட்பது ஞாயிற்றுக்கிழமைகளில், உடைமைகளைப் பெற அலைவது மற்ற நாட்களில் என்று முறை வகுத்துக்கொண்டனர்!!

முற்றுந் துறத்தல், தன்னலம் மறுத்தல், பிறர் நலம் பேணுதல், ஊருக்குழைத்தல், ஈதலில் இன்பம் கண்டிடல், கூடி வாழ்தல் - இவைகளைப் போற்றிட எவரும் தவறியதுமில்லை; இவைகளின்படி ஒவ்வொருவரும் வாழ்ந்து சமூகத்தின் தன்மையை மாற்றி அமைப்பதிலே முழு வெற்றி கண்டவர்களும் இல்லை. சிலர் அந்த முயற்சிகளை மேற்கொண்டனர்; ஆனால், துவக்க காலத் தூய்மை, நாளாகவாகத் தேய்ந்து தேய்ந்து மாய்ந்தே போய்விட்டது;

அருளகமாகத் துவக்கப்பட்ட வைகள் பிறகு ஆதிக்க பீடங்களாக, மடாலயங்களாக மாற்றப்பட்டுவிட்டன.

இந்நிலை மேனாட்டில் மட்டுமா கீழ்நாடுகளிலுமா என்ற கேள்விக்கே இடமில்லை, எங்கும் இந்நிலை; அளவில், வேகத்தில், தரங்கள் இருக்கலாம், போக்கிலே ஒரேவிதமாகத்தான் இருந்தது.

ஏன் உபதேசங்களைப்பற்றி இப்போது கூறுகிறேன் என்று கேட்பாய் தம்பி! காங்கிரஸ் பேசிவரும் சோஷியலிசம், உபதேச பாணியில் இருக்கிறதல்லவா, அந்த உபதேசம் பலன் தராது. ஏனெனில், இன்றையக் காங்கிரஸ்காரர்களைக் காட்டிலும் எத்தனையோ மடங்கு அதிகமான தூய்மையாளர்கள், இன்று இவர்கள் செய்வதைவிட மெத்த உருக்கத்துடன் செய்த உபதேசங்கள் யாவும், பூஜாமாடத்துக்கு

உரிய ஏடுகளாய், பாடல்களுக்கான கருப்பொருளாய்ப் போய்விட்டன - ஏழை - பணக்காரன் எனும் பொல்லாங்கு மூட்டிவிடும் பேதத்தைப் போக்கவில்லை; போக்கிட முடியவில்லை.

அருளாளர் என்று விருது பெற்றோரின் உபதேசம் மூலம், ஏழையின் இன்னலைத் துடைத்திட முயன்று பார்த்து அது தக்க பலன் தராது போனது கண்ட பிறகே, மேனாட்டு அறிவாளர்கள் சிந்தித்துச் சிந்தித்து, சோஷியலிசம் எனும் சமதர்ம முறையைக் கண்டறிந்து கூறினர்.

நல்ல இதயம், உயர்ந்த பண்பு இவைகளிலிருந்து எழுந்ததுதான் சோஷியலிச முறை என்றாலும் இதயம் நல்லதாக்கப்பட வேண்டும் என்ற நல்லுரையே, சோஷியலிசம் காணும் வழி என்று சோஷியலிசக் கருத்தளித்த வித்தகர்கள்

கூறிடவில்லை.

அய்யோ பாவம்!
அவனும் மனிதன்!
ஏதோ செய்வோம்!
போகிற கதிக்கு நல்லது!
கொண்டு செல்லவா முடியும்!
கொடுத்தால் குறையாது!
ஒன்றுக்கு ஒன்பது கிடைக்கும்!

என்பன போன்ற பேச்சுகளும், அவைகளுக்கான மனப் போக்கும் இன்று நேற்று ஏற்பட்டவை அல்ல, நெடுங்காலமாக இருந்து வருபவை.

இம்மைச் செய்தது மறுமைக்கு ஆகும் என்ற கருத்தை வலியுறுத்தி எழுதப்பட்ட கதைகளும், புனையப்பட்ட புராணங்களும் கொஞ்சமா!

தம்பி! ஊருக்கு ஒரு உபகாரமும்

செய்தறியாதவனாம் ஒருவன். அவன் இறந்து மேலுலகம் சென்றான் - படித்த கதையைச் சொல்லுகிறேன்; பார்த்ததை அல்ல - அவன் இறந்தபோது, ஒருவருக்கு ஒரு உதவியும் செய்யாத இவன் நரகம்தான் செல்வான் என்று ஊரார் பேசிக்கொண்டனர் - ஆனால், அவனைத் தேவ தூதர்கள் பொன்னுலகம் கொண்டு சென்றனராம் - கணக்குப் பார்க்கப்பட்டது - "இவனுடைய ஆள்காட்டி விரலுக்கு மாலை மரியாதைகள் நடத்தி இவனைச் சிறிது காலம் பொன்னுலகில் இருந்திடச் செய்திடுக! அனைவரும் இவனுடைய ஆள்காட்டி விரலைக் காணட்டும்; மகிழட்டும்; போற்றிப் புகழட்டும்'' என்று தேவதேவன் கட்டளையிட்டானாம்.

காரணம் என்ன தெரியுமா, தம்பி! ஆசாமி ஒருவருக்கும் ஒருவிதமான உதவியும் செய்யாதவன் என்றபோதிலும், ஒரு நாள்

உச்சிப்போதில், கடுமையான பசியுடன் வந்த ஒருவன், இவனிடம் எந்த உதவியும் பெற முடியாமற்போகவே, இங்கே தர்மசத்திரம் எங்கே இருக்கிறது? அதையாவது காட்டுமே ஐயா! என்று கேட்டிட ஆள்காட்டி விரலை நீட்டி, சத்திரம் இருக்கும் பக்கத்தைக் காட்டினானாம். அந்தப் புண்ணிய காரியத்துக்காக, அவனுடைய ஆள்காட்டி விரலுக்கு அத்தனை மரியாதை!!

இவ்விதமான கதைகளைக் கூறியாகிலும் மற்றவர்களுக்கு உதவி செய்திட வேண்டும் என்ற எண்ணத்தை ஊட்ட வேண்டும் என்று பலர் வெகுபாடுபட்டிருக்கிறார்கள்.

ஆனால், அத்தகைய உதவிகள், தான தருமங்கள், பாலைவனத்திலே தெளித்த பன்னீர்த் துளிகளாகிப் போயினவேயன்றி, பாலைவனத்து வெப்பத்தைப் போக்கிடவில்லை!

இதனைக் கண்ட பிறகுதான் பேரறிவாளர்,

மனிதன் வாழப் பிறந்தவன்,
எல்லாம், எல்லோருக்கும் என்றே உளது.

என்ற அடிப்படையை எடுத்துக் காட்டி சோஷியலிசத்தை உருவாக்கினர்.

சோஷியலிசமே போதுமான பலனைத் தரவில்லை, தத்தித் தத்தி நடக்கிறது, தடுமாறிக் கீழே விழுகிறது என்று கூறி, அடித்து நொறுக்கிப் பிறகு புது வார்ப்படம் காண்பதுபோல, புரட்சி நடாத்திப் புதுமுறை காண வேண்டும் என்று கூறுகின்றனர் பொது உடைமைவாதிகள். ஆனால், இன்றைய காங்கிரசோ, ஏழைக்கு ஏதேனும் உதவி செய்திடுக! என்ற பழைய பேச்சைப் புது முறுக்குடன் மேடைகளிலே பேசுகின்றனர்; அதனைச் சோஷியலிசத் திட்டம் என்று வேறு நம்பச் சொல்கின்றனர்.

வேலிகள் ஆயிரம் பட்டக்காரருக்கு, வாண்டையாருக்கு, மூப்பனாருக்கு, இராமநாதபுரத்தாருக்கு, நெடும்பலத்தாருக்கு, அவர் போன்றாருக்கு; அவர்களெல்லாம் நடத்திச் செல்லும் காங்கிரசிலே சோஷியலிசம் வேறு எப்படி இருக்க முடியும்?

மறைந்த மாமேதை நகைச்சுவை மன்னர் என். எஸ். கிருஷ்ணன் நடித்துக் காட்டிய ஒரு காட்சி நினைவுக்கு வருகிறது - அதன் தொடர்பான கதை நினைவிலே இல்லை.

ஒரு இடத்தில், மாங்காய் மாலை கொடுக்கவேண்டி வருகிறது; மாங்காய் மாலை என்பது, பொன்னால் செய்யப்பட்ட மாங்காய் உருவ பில்லைகளில் கல்லிழைத்து, சரமாக்கி மாலையாகப் போட்டுக்கொள்ளும் விலை அதிகமுள்ள ஆபரணம்! இதைக் கொடுக்கவேண்டி வருகிறது; கொடுக்க வசதி இல்லை; அவ்வளவுக்குப் பணம்

இல்லை!! எனவே ஒரு தந்திரம் புரிகிறார், நகைச்சுவையுடன்.

ஒரு ரோஜா மாலை, ஒரு மாங்காய் எடுத்துக்கொண்டு போய், இதோ மாங்காய், இதோ மாலை, மாங்காய் மாலை; வந்து கேட்டால் சொல்லிவிடுங்கள். மாங்காய் மாலை கொடுத்தாகி விட்டது என்று என்பதாகக் கூறிவிடுகிறார்.

அந்த "மாங்காய் மாலை' போன்றது தம்பி! காங்கிரசார் இன்று பேசும் சோஷியலிசம்!! புரிகிறதா என்று கோபம் கொள்ளாத காங்கிரஸ்காரர்களைக் கேட்டுப் பார்.

இதனைக் கூறுவதால், உதவி செய்வது, தான தருமம் செய்வது கூடவே கூடாது என்று நான் சொல்லுவதாக எண்ணிக் கொண்டுவிடக்கூடாது. சிலர் இருக்கிறார்கள். இந்த வாதத்தையே

தமக்குச் சாதகமாக்கிக்கொண்டு, இந்தவிதமான உதவிகளைச் செய்வதாலே எந்தவிதமான உருப்படியான பலனும் ஏற்பட்டு விடப்போவதில்லை, ஆகவே, ஒருவருக்கும் ஒருவிதமான உதவியும் செய்யத் தேவையில்லை என்ற போக்கை மேற்கொள்பவர்கள்.

நான் சொல்ல வந்தது அத்தகைய எண்ணத்தை ஏற்படுத்த அல்ல. உதவி செய்வது சோஷியலிசமாகாது, சோஷியலிசம் என்பது, புதிய சமூக அமைப்பு முறை, புதிய அரசியல் அமைப்பு முறை, புதிய பொருளாதார அமைப்பு முறை என்பதையும், அதனை நோக்கமாகக் கொண்டது அல்ல, காங்கிரஸ் கட்சி பேசிவரும் சோஷியலிசம் என்பதையும் கூறுகிறேன்.

மண் குதிரை மீதேறிக்கொண்டு ஆற்றில் இறங்குவது என்பார்களே அது போன்றது

காங்கிரஸ் பேசி வரும் சோஷியலிசம்.

காங்கிரஸ் பேசிவரும் சோஷியலிசம் தமது உடைமைகளை, ஆதாயம் தேடித் தரும் அமைப்புகளை, அதனால் கிடைத்திடும் ஆதிக்கத்தை எந்தவிதத்திலும் கெடுத்துவிடாது என்று நன்றாகத் தெரிந்திருப்பதாலேயே, இன்று எல்லாப் பெரிய புள்ளிகளும் காங்கிரசிலே இருக்கின்றனர். அவர்கள் என்ன ஏமாளிகளா! ஜாண் பணத்துக்கு முழம் புத்தி என்று கிராமத்திலே பேசிக் கொள்வார்கள்!!

உள்நாட்டு முதலாளிகள் மட்டுமல்ல, காங்கிரஸ் பேசி வரும் சோஷியலிசம் தங்கள் உடைமைகளையும் பணம் தேடும் உரிமையையும் ஒரு துளியும் பாதிக்காது என்ற அழுத்தமான நம்பிக்கை வெளிநாட்டு முதலாளிகளுக்கும், நிரம்ப ஏற்பட் டிருக்கிறது; கோடி கோடியாக, முதல் போடுகிறார்கள், புதிய

புதிய தொழில்களிலே!

ஏழை எக்கேடோ கெடட்டும் என்ற போக்கில், வெள்ளைக்காரன் முதலாளித்தனத்தை வளர்த்து வந்தான் என்று கூறினோம். வெள்ளைக்கார ஆட்சி போன பிறகு, அவன் காலத்திலே ஏற்பட்டிருந்த முதலாளி ஆதிக்கம் ஒழிக்கப்பட்டிருக்க வேண்டும் அல்லவா? கேட்டுப் பார், உண்மையை ஒளிக்காமல் பேசும் இயல்புள்ள காங்கிரஸ்காரர் எவரையாவது பார்த்து; எந்த அளவுக்கு வெள்ளைக்காரன் காலத்திலே அமைக்கப்பட்ட முதலாளித்தனம் ஒடுக்கப்பட்டிருக்கிறது என்று. தலையைக் கவிழ்ந்து கொள்வார்! ஏன்? ஒடுக்காதது மட்டுமல்ல, வெள்ளைக்காரன் காலத்திலே இருந்ததைவிட மூன்று மடங்கு அளவு வளர்ந்துவிட்டிருக்கிறது முதலாளித்தனம் - காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் - சோஷியலிசம்

பேசும் காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில்.

வெள்ளையராட்சி விலகும்போது 1947லில், இங்கு முதலாளிகள், தொழில்களில் போட்டிருந்த மூலதனம் 700 கோடி ரூபாய் என்று கணக்கெடுத்தனர்.

சுயராஜ்யம் அமைந்து சோஷியலிசம் மலர்ந்திருப்ப தாகக் கூறுகிறார்களே, அதன் காரணமாக, முதலாளி தொழிலில் போட்ட பணம் குறைந்ததா? இல்லை. நாலு ஆண்டுகளுக்கு முன்பு எடுத்த கணக்கின்படி இந்தத் தொகை 1900 கோடி ரூபாயாக வளர்ந்துவிட்டிருக்கிறது.

இதுபோல, முதலாளிகளின் முகாம்களை வளர வைத்துக்கொண்டே, சோஷியலிசமும் பேச முடிகிறது காங்கிரஸ் கட்சியினால்! அந்த அளவுக்கு மக்களின் மதி மங்கிக் கிடக்கிறது என்று காங்கிரஸ் கட்சி நம்புகிறது.

வெள்ளையராட்சியின்போது கிடைத்ததைவிட அதிக வருவாய் இப்போது முதலாளிகளுக்குக் கிடைத்திருக்கிறது என்பதை எந்தக் காங்கிரஸ் தலைவரும் மறுத்திட முடியாது.

நான் குறிப்பிட்டேனே நாலு ஆண்டுகளுக்கு முன்பு எடுத்த கணக்கு - அதன்படி, தொழில் அதிபர்களுக்கு மத்திய சர்க்கார் வழங்கியுள்ள மானியம், சலுகை, கடன் ஆகிய வகையில் 590 கோடி ரூபாய் செலவாகி இருக்கிறது.

சோஷியலிசம் பேசும் காங்கிரஸ் கட்சியின் ஆட்சி, முதலாளிகளை ஊட்டி வளர்க்கிறது; கொழுக்க வைக்கிறது. அதனாலே காங்கிரசுக் கட்சிக்கு என்ன இலாபம் என்று கேட்கமாட்டாய் - உனக்குத்தான் தெரியுமே தம்பி; போன பொதுத் தேர்தலின்போது முதலாளிமார்கள் காங்கிரஸ் கட்சிக்குக் கொடுத்த நன்கொடை,

98 இலட்ச ரூபாய் என்பது!

முதலாளித்துவ முறையைக் கட்டிக் காத்துக்கொண்டும் கொழுக்க வைத்துக்கொண்டும் இருக்கும் காங்கிரஸ் கட்சி எப்படி சோஷியலிசத்தின் உண்மைக் கணக்குப்படி நடந்துகொள்ள முடியும்? முடியாது!

காங்கிரசுக் கட்சியிலேயே சிலர் இப்போது, சோஷியலிசம் வளரத்தக்க விதத்தில் காங்கிரசாட்சி நடந்துகொள்ளவில்லை என்று பேசத் தலைப்பட்டுள்ளனர்.

அமைச்சராவதற்கு முன்புவரை, இந்திரா காந்தி இந்தக் கருத்தை வலியுறுத்தி வந்தார்கள். இப்போது எப்படியோ தெரியவில்லை.

இரு திங்களுக்கு முன்பு காங்கிரஸ் தலைவர்கள் சிலர் கூடி ஒரு காங்கிரஸ்

சோஷியலிச மாநாடு நடத்தி, சோஷியலிசத் திட்டத்தை அக்கறையுடனும், தீவிரமாகவும் நிறைவேற்றும்படி காங்கிரஸ் ஆட்சியை வற்புறுத்திப் பேசினர்.

காங்கிரஸ் கட்சி, உள்ளபடி சோஷியலிசத்தின் வழி நடப்ப தானால், சிலர் கூடி, ஏன் வற்புறுத்த வேண்டும்! காங்கிரசுக் கட்சியிலேயே, சோஷியலிச வழி நடப்பதாகக் கூறும் ஒரு பிரிவும், சோஷியலிச வழி நடக்கவில்லை என்று குறைகாணும் ஒரு பிரிவும் இருக்கிறது; காமராஜர் இந்த இரண்டு பிரிவிலும் இருக்கிறார்!

தம்பி! சோஷியலிசத் தத்துவத்தின் அடிப்படை, தொழில்கள் உற்பத்தியைப் பெருக்க வேண்டும், அந்த உற்பத்தி மக்களின் வசதிகளை அதிகப்படுத்தப் பயன்படவேண்டுமேயன்றி, முதலாளிகளின் இலாபத்தைப் பெருக்கிடப் பயன்படக்கூடாது

என்பதாகும்.

அதன்படி நடந்திருக்கிறதா என்பதைக் கண்டிட, ஒரு கணக்கினை ஆராய்வோமே!

இந்துஸ்தான் மோட்டார் கம்பெனி தெரியுமல்லவா - காங்கிரஸ் தேர்தல் நிதிக்கு 20 இலட்ச ரூபாய் நன்கொடை கொடுத்த அமைப்பு - அதனுடைய மூலதனம் 7 கோடியே 79 - இலட்சமாம்.

அந்தக் கம்பெனிக்கு ஒரே வருடத்தில் - 1960லில் கிடைத்த இலாபம் 2,85,71,127 ரூபாய் என்று கணக்குத் தந்திருக்கிறார்கள். பார்த்தனையா, காங்கிரசின் சோஷியலிசம் கொண்டுள்ள கோலத்தை!!

டாட்டா கம்பெனிக்குக் கிடைத்த இலாபம் 5 கோடியே 77 இலட்சமாம்!

ஒரிசா மாநிலத்தில் இருக்கிறதே - இப்போது அதன் பெயர் "பாரதம்' முழுவதும்

அடிபடுகிறதே கலிங்கா கம்பெனி, அதற்கு ஒரே வருஷத்தில் கிடைத்த இலாபம் 26 இலட்சம்! இப்படி இலாபம் திரட்டிக்கொள்ள இடமளித்துவிட்டு, சோஷியலிசம் பேசுகிறது காங்கிரஸ் கட்சி!

துரைத்தனமே அமைத்த ஒரு குழு, மக்களின் நிலைமை எப்படி இருக்கிறது என்பதையும் படம் பிடித்துக் காட்டியிருக்கிறது.

ஒரு நாளைக்கெல்லாம் ஒரு மணி நேரத்துக்கு மட்டுமே வேலை கிடைக்கிறதாம் - மற்ற நேரத்தில் வேலை தேடி அலைகிறார்கள் - கிடைக்காமல் திண்டாடுகிறார்களாம் 270 இலட்சம் மக்கள்! இந்த ஒரு மணி நேர வேலையில் கிடைக்கும் கூலியைக் கொண்டு எப்படி வாழ முடியும்? வதைபடுகிறார்கள், அரைப் பட்டினியாக.

ஒரு நாளைக்கெல்லாம் இரண்டு மணி

நேரத்துக்கு மட்டுமே செய்வதற்கு வேலை கிடைக்கிறது 200 இலட்சம் மக்களுக்கு;

ஒரு நாளைக்கு ஐந்தணா மட்டுமே கூலியாகப் பெற்று வாழவேண்டிய பரிதாபம் 600 இலட்சம் மக்களுக்கு; நாலணா பெறுபவர்கள் 400 இலட்சம்; இவை சர்க்கார் நியமித்த அமைப்பு கொடுத்துள்ள கணக்கு, நான் இட்டுக்கட்டியது அல்ல.

டாட்டா, பிர்லா கோடி கோடியாகக் குவித்துக் கொண்டிருப்பதும், குப்பனும் சுப்பனும் கூலி போதாமல் குமுறிக் கொண்டிருப்பதும், சோஷியலிசம் அல்ல!!

இத்தகைய பயங்கரமான பேதத்தைப் போக்குவதுதான் சோஷியலிசம்.

ஆனால் சோஷியலிசம் பேசும் காங்கிரசின் ஆட்சியில் மக்களிடையே காணக் கிடக்கும் பொருளாதார பேதம் விரிவாகி

விட்டிருக்கிறது; ஆழமாகியும் விட்டிருக்கிறது.

இதனை சர்க்காரே அமைத்த மகனாலோபிஸ் குழுவினர் ஒப்புக்கொண்டுள்ளனர்.

ஏழை - பணக்காரன் பேதத்தைப் பயங்கரமான அளவு வளர்த்துவிட்டவர்கள், வளர்த்துக்கொண்டு வருபவர்கள் சோஷியலிசம் எமது திட்டம் என்றும் பேசுகிறார்கள்! விந்தையை என்னென்பது?

நானும் சைவன்தான் என்று பேசினானாம், ஆட்டு இறைச்சியின்றி ஒருவேளைகூட இருக்க முடியாதவன். வியப்பாக இருக்கிறதே! நீயா சைவன்? என்று கேட்டானாம் நண்பன்! ஆமாம்! அதிலென்ன சந்தேகம்! புல், பச்சைத்தழை இவைதானே ஆடு தின்கிறது, அதை நான் தின்கிறேன் என்றானாம். அது வேடிக்கைப் பேச்சு. காங்கிரஸ் ஆட்சியினர்

முதலாளித்துவத்தை வளர்த்துக்கொண்டே சோஷியலிசம் பேசுகிறார்கள்; தங்கள் நாணயத்தை எவரும் சந்தேகிக்கக்கூடாது என்றும் கூறுகிறார்கள் - கூறுகிறார்களா! கட்டளையிடுகிறார்கள்!

இவ்விதம் பேசுவது காங்கிரசின் எதிரிகளின் போக்கு என்று கூறித் தப்பித்துக்கொள்ள முயற்சிப்பார்கள் காங்கிரஸ் தலைவர்கள்.

தம்பி! நான் எடுத்துக்காட்டிய இந்தக் கருத்துரைகள் சில காங்கிரஸ்காரர்களே பேசியவை.

உத்திரப்பிரதேசத்தை சேர்ந்த ஒரு காங்கிரஸ்காரர் அன்சர் ஹர்வாணி என்பவர். அவர் மனம் நொந்து பேசியிருக்கிறார்:

சோஷியலிச வழியிலே காங்கிரஸ் அரசு செல்லவில்லையே!

கொள்ளை இலாபமடிக்கும் முதலாளிகளின் கொட்டத்தை அடக்குவதற்குப் பதிலாக அவர்களுடன் கூடிக் குலவுகிறீர்களே! இது அடுக்குமா!

வரி கொடுக்காமல் ஏய்க்கும் வணிகக் கோமான்கள் இருக்கிறார்கள்; அவர்களைப் பிடித்திழுத்துத் தண்டிக்காமல், அவர்களின் மாளிகைகளிலே விருந்துண்ணச் செல் கிறீர்களே! நியாயமா?

என்றெல்லாம் கேட்டிருக்கிறார்.

சோஷியலிசம்கூட அல்ல, காந்திய வழியிலேகூடச் செல்லவில்லையே, முறையா? கைகூப்பி, மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன், காந்திய வழியிலே நடவுங்களய்யா என்று காங்கிரஸ் ஆட்சியினரைக் கேட்டுக்கொள்கிறார் அகில இந்தியக் காங்கிரஸ் தலைவராக இருந்துவந்த தேபர்.

இவர்களின் மனக்குமுறலையுமா, காங்கிரசாட்சியினர் எதிர்க்கட்சியினரின் எரிச்சலூட்டும் பேச்சு என்று அலட்சியப்படுத்திவிடப்போகிறார்கள்!!

சென்ற கிழமை கல்கத்தாவில் பேசிய மாளவியா எனும் காங்கிரஸ் தலைவர், நேரு மறைந்ததற்குப் பிறகு, காங்கிரசின் சோஷியலிசப் பணி பின்னுக்குச் சென்று விட்டது என்று நிருபர்களிடம் கூறியிருக்கிறார்.

சோஷியலிசப் பாதையில் வேகமாக நடைபோடுவதாக இங்கு காமராஜர் முழக்கமெழுப்புகிறார். சோஷியலிசத்தில் இதுவரை இருந்து வந்த ஆர்வமும் மங்கிவிட்டிருப்பதாக மாளவியா கூறுகிறார். அவரும் காங்கிரஸ்காரரே! அவரைக் கண்டிக்கச் சொல்லுங்கள் பார்க்கலாம், காமராஜரை!! செய்யமாட்டார்!!

சோஷியலிசம்பற்றி இங்கு காமராஜர்கள் பேசும்போது, மக்கள்,

தனி முதலாளிகளின் கொட்டம் அடக்கப்படும், வருவாய் தரத்தக்க பெரிய தொழில்கள் பொதுத்துறைக்கு ஒதுக்கப்படும்,

பொருளாதார பேதம் ஒழிக்கப்படும் அல்லது குறைக்கப்படும்,

தொழில்கள் வெறும் இலாபவேட்டைக் கூடங்களாக இனி இராமல், மக்களுக்கு வசதி தேடித் தரும் அமைப்புகளாகிவிடும்,

ஓடப்பர் உயரப்பராகி எல்லோரும் ஓப்பப்பராகிவிடுவார்!

என்றெல்லாம் எண்ணிக்கொள்கிறார்கள். பாவம் அவர்கள் அறியார்கள், காங்கிரசின் சோஷியலிசம் அது அல்ல என்பதனை.

சோஷியலிசம் பேசுகிறார்களே இவர்கள்

ஆட்சி செய்யும் நாட்டிலே நாம் எப்படி நம்பி, பெருந்தொகைகளை முதல் போட்டுத் தொழில் நடத்துவது என்று ஐயப்பட்ட அமெரிக்க முதலாளிகள் இங்கு உலா வந்தனர், உரையாடினர், உசாவிப் பார்த்தனர், உண்மையை உணர்ந்துகொண்டனர், உவகையுடன்ஊர் திரும்பி மற்ற முதலாளிகளைக் கூட்டிவைத்து, அஞ்சற்க! அங்கு பேசப்பட்டு வரும் சோஷியலிசம் நம்மை ஒன்றும் செய்யாது. அது குறித்து நாம் அச்சம் கொள்ளத் தேவையில்லை. இந்தியாவிலுள்ள முதலாளிகளே அதுபற்றிக் கவலைப்பட வில்லை; காங்கிரஸ் பேசும் சோஷியலிசம், ஏழையின் செவிக்கு இனிப்பளிக்கத்தான், வேறு எதற்கும் அல்ல; நாம் "நமது' முதல் போட்டுத் தொழில் நடத்த ஆரோக்கியமான சூழ்நிலை இந்தியாவிலே அமைந்திருக்கிறது என்று கூறியுள்ளனர்.

போன வாரத்திலே, ஜி. எல். மேத்தா, இதனை மேலும் உறுதிப்படுத்தும் விதமாகப் பேசியிருக்கிறார், வர்□ங்டன் நகரில்.

இந்திய முதலாளிகளுடன் கூட்டுச் சேர்ந்து தொழில் நடத்தும் அமெரிக்க முதலாளிகளுக்கு மேத்தா அன்புரையும் நன்றியுரையும் வழங்கினார். அவர்களிலே குறிப்பிடத்தக்கவர்கள் 67 முதலாளிகளாம்.

முதலாளிகளுக்காக இல்லை காங்கிரசாட்சி, ஏழைக்காகவே இருக்கிறது; பணக்காரரின் கொட்டம் அடக்கப்படும், பாட்டாளியின் வாழ்வு உயர்த்தப்படும் என்றெல்லாம் இங்கே காமராஜர் சோஷியலிசம் பேசுகிறார். அங்கே ஜி. எல். மேத்தா அமெரிக்க முதலாளிகளைக் கூட்டி வைத்து,

காங்கிரஸ் அரசுமீது சந்தேகம்

கொள்ளாதீர்கள்.

தனிப்பட்ட முதலாளிகளின் தொழில் அமைப்பு களுக்குக் காங்கிரஸ் அரசு விரோதம் காட்டவில்லை.

காங்கிரசாட்சியில், 17 ஆண்டுகளில் தனியார் துறை விரிவடைந்திருக்கிறது, வளம் அடைந்திருக்கிறது. தனியார் துறைக்குக் காங்கிரஸ் அரசு உதவி அளித்து வருகிறது.

என்று எடுத்துக்கூறி, அமெரிக்க முதலாளிகளுக்கு அன்பழைப்பு விடுத்திருக்கிறார்.

உள்நாட்டு முதலாளிகளை எதிர்த்து, சமாளித்துச் சோஷியலிசத்தை நிலைநாட்டுவதே கடினமானது என்று விவரம் அறிந்தோர் கவலை கொள்கின்றனர்.

ஆனால், சோஷியலிசம் பேசிக்கொண்டே காங்கிரஸ் அரசு, பிரிட்டிஷ் - அமெரிக்க

முதலாளிகளை இங்கு ஆதிக்கம் செலுத்த அழைக்கிறது. அவர்களும் இங்கு முகாம் அமைத்துக்கொண்டால், சோஷியலிசம் வெற்றிபெறுவது எளிதாக முடியக்கூடியதா!

வெள்ளைக்காரன் காலத்திலே இருந்ததைவிடப் பலத்துடன் இன்று முதலாளி முகாம் இருக்கிறது என்பதை எந்தக் காங்கிரஸ் தலைவரும் மறுக்க முடியாது.

தன்னை வரவேற்க வந்த காங்கிரஸ் அமைச்சரையே ஒருபுறம் போகச் சொல்லிவிட்டு, பிர்லாவுடன் மோட்டாரில் பேசிக்கொண்டே பவனி வந்தாராமே நந்தா கல்கத்தாவில் போன மாதம், அதிலிருந்தே புரியவில்லையா முதலாளிகட்குக் காங்கிரஸ் அரசிடம் உள்ள பிடிப்பு.

பச்சையாகவே பேசிவிட்டாரே காங்கிரஸ் அமைச்சர் படீல், சுயராஜ்யப் போராட்டக்

காலத்தில் எத்தனையோ கோடிக் கணக்கான ரூபாய்களைக் காங்கிரசுக்குக் கொடுத்தவர்கள் முதலாளிகள் என்று. மிரட்டும் குரலில் பிர்லாவும் பேசி விட்டாரே, முதலாளிகளைக் காங்கிரஸ் சர்க்கார் பகைத்துக் கொள்ளக்கூடாது என்று.

இவைகளை எல்லாம் மக்கள் மறந்தேவிடுவார்கள் என்ற எண்ணத்தில், சோஷியலிசம் பேசிச் சுவை ஊட்டப் பார்க்கிறார்கள்.

சோஷியலிசத்தின் அடிப்படை ஒன்றைக்கூட அமைத்துக் கொள்ளாமல், சோஷியலிசத்துக்கு வெடி வைக்கும் போக்கை மாற்றாமல், சோஷியலிசம்பற்றிப் பேசுவது, எப்படிப் பொருளுள்ளதாகும்? என்ன பயனைத் தரும்?

இங்கே சோஷியலிசம் பேசுகிறார்

காங்கிரஸ் தலைவர்; பிர்லா அறிவிக்கிறார் சென்ற வாரம், அமெரிக்காவிலிருந்து:

3,00,000 டன் உற்பத்தி செய்யக்கூடிய தேன் இரும்புத் தொழிற்சாலையை 1967லில் துவக்கப்போவதாக! அமெரிக்க முதலாளியின் கூட்டுறவுடன்!!

அலுமினியத் தொழிற்சாலையை விரிவுபடுத்தப் போவதாக! அமெரிக்கக் கூட்டுறவுடன்.

உர உற்பத்தித் தொழிற்சாலை விரிவான முறையில்! அமெரிக்கக் கூட்டுறவுடன்!!

அதேபோது, இந்தியப் பேரரசின் தொழில் அமைச்சர் சஞ்சீவய்யா,

தொழிலாளர்களுக்குப் போதுமான வசதிகளைத் தொழில் அமைப்புகள் செய்து தரவில்லை என்று தெரிவிக்கிறார்.

பிர்லா புதுத் தொழில் அமைக்கிறார்; தொழிலாளி பழைய வேதனையைத் தொடர்ந்து அனுபவித்து வருகிறான்; காமராஜர் சோஷியலிசம் பேசுகிறார்; நாடு கேட்டுக்கொள்ளவேண்டி இருக்கிறது.

நாடு நம்புகிறதா என்று கேட்கிறாயா, தம்பி! நான் என்னத்தைச் சொல்ல! எதை எதையோ நம்பிக் கிடக்கும் மக்கள் இன்னமும் ஏராளமாக இருக்கிறார்களே!

அனுப்பிய மணியார்டர் வந்து சேர்ந்ததாகக் கடிதம் வருவதற்குள் துடிதுடிக்கும் அதே மக்கள், மேலுலகு சென்று விட்ட பெரியவர்களுக்கு, "திவசம்' செய்வதன் மூலம், பண்டம் அனுப்பிவைப்பதாக நம்பிக்கொண்டிருக்கிறார்களே! எனவேதான் தம்பி! காங்கிரஸ் பேசும் சோஷியலிசம் பதர், நெல் அல்ல என்பதையும், காட்டும் கனிவு வெறும் கபடம் என்பதையும்,

அமைத்துள்ள முறை முதலாளியைக் கொழுக்கவைப்பது என்பதையும் விளக்கிக் காட்டவேண்டியிருக்கிறது. தெளிவு தேவைப்படும் அளவு இருந்தால், இன்றைய காங்கிரசில் நடுநாயகர்களாகக் கொலுவிருப்பவர்கள் யாரார் என்பதைப் பார்த்தாலே போதும் இந்தக் காங்கிரசினால் சோஷியலிசத்தை நடைமுறைக்குக் கொண்டுவர முடியாது என்பதைப் புரிந்து கொள்ள புள்ளிமான் குட்டிக்குப் புலி பால் தராது என்பதை நான் மட்டுமா, இன்று பூஜை செய்து வரம் கேட்டுக் கொண்டிருக்கும் தம்பிகளும் சேர்ந்து சொன்னார்கள். விளக்கம் போதும் என்று நாம் இருந்துவிடுவதற்கில்லையே; தெளிவு அரசோச்சும் வரையில் எடுத்துக் கூறியபடி இருந்தாக வேண்டும்.

காங்கிரஸ் பேசிவரும் சோஷியலிசம்

பொருளற்றது; பயனற்றது,

காங்கிரசின் பேச்சுக்கும் நடத்தைக்கும் பொருத்தம் இல்லை.

என்பது மேலும் மேலும் விளக்கப்பட்டாக வேண்டும்,

ஏழைக்காகப் பரிந்து பேசுவது போதும், அதனையே இந்த மக்கள் சோஷியலிசம் என்று ஏற்றுக்கொள்வார்கள் என்ற நம்பிக்கையுடன் உள்ளனர் காங்கிரஸ் தலைவர்கள்.

ஏழைக்காகப் பரிந்து பேசுவதும், ஏழையை வதைக்கும் செல்வவான்களுக்கு அறநெறி, அன்பு வழி பற்றிக் கூறுவதும், புதிய கண்டுபிடிப்பு அல்ல, மூவர்ணச் சரக்கும் அல்ல; மிக மிகப் பழையது.

வறுமையால் தாக்குண்டு கிடப்பவர்கள், தெளிவு பெற்று, தமது நிலைமைக்கான காரணம் கண்டறிந்து, உரிமை உணர்வு

பெறுகிற வரையில், தானம் தருமம், பரிவு பச்சாதாபம், உதவி சலுகை இவைகளைப் பெற்றுக்கொள்வதில், மகிழ்ச்சிகொள்வர், நன்றியும் கூறிடுவர், இது நல்ல திட்டம் என்றும் ஒப்புக்கொள்வர். ஆனால், பொருளாதார யந்திர அமைப்பின் தன்மையையும், அதனைச் சமைத்திட்ட அரசியல் அமைப்பின் போக்கையும் விளங்கிக்கொண்ட பின்னர், என்ன கூறுவர்?

இருளது விட்டு வந்துளோம் வெளியே!

அய்யோ பாவம்! எனு மொழி கேளோம்!

ஐயமளித்திடும் கரமது வேண்டோம்!

என்றன்றோ கூறுவர். உரிமை கேட்பர், உதவி அல்ல!

1881-ம் ஆண்டு பிறந்தவர் ஜான் நைஹார்ட் எனும் கவிஞர், அவர் அந்த நாளிலேயே பாடி வைத்தார், தெளிவு பெற்ற ஏழை, விழிப்புற்ற

பாட்டாளி என்னவிதமாகப் பேசுவான் என்பதனை.

”ஆணவக் கோட்டை
அமைத்திடுவோரே!
அடிமைகள் கண்டினி
நடுங்கிடுவீரே!

உலகிடை எழுந்திடும்
போர்கள் எதிலும்
இருப்பவர் யாமே
மறுப்பவருளரோ!

மன்னர் பெற்றிடும்
வலிவனைத்தும்
அளிப்பவர் யாங்கள்

அறிந்திடுவோமே.

ஞானிகளும் மோனிகளும்
முன்பு காட்டிய வழிகண்டு
காலகாலமாயுள
கடுந்தளைகளை
உடைத்தெறிந்துமே

உலக இதயமதை
எம் முரசாகக்கொண்டு
இருளது விட்டு
வந்துளோம் வெளியே

அய்யோபாவம்! எனுமொழி
கேளோம்
ஐயமளித்திடும் கரமது
வேண்டோம்

பேரூர் சமைத்தவர்க்கேன்

பிச்சைதானும்!
என்றுதான் புரியுமோ
உமக்கிப் பேருண்மை.

குலப்பெருமை குடிப்பெருமை
விட்டொழிப்பீர்
வார்ப்படப் பொற்கடவுள்
வாணிபமும் விடுவீர்!

அவரவர் பெறும் தகுதி
ஆக்குந்திறன் வழியதாகும்.
உழைப்போர் நாங்கள்
உற்பத்தியாளர்
ஊமைகளாயிரோம்
இனியுந்தானே!

சுரண்டிடுவோரே!
சோம்பிக் கிடந்திடுவோரே!

பரவிப் பாய்ந்து வந்துளோம்
பாரினில்
பொழுது புலர்ந்தது
புவியெங்குமே, காண்!

இருளும் ஒழிந்தது
வாள் வெளிவந்தது.
உறையையும் வீசி
எறிந்தோம் கீழே!

தம்பி! கவிதையிலே குலுக்கிடும் எழுச்சியைக் கண்டனையா! இவ்விதமான எழுச்சி முரசு கேட்டு உலாவந்து வெற்றிகண்ட முறை சோஷியலிசம்.

இங்கோ, பதர் கொடுத்து நெல் எனக் கூறிடுவார்போல, அய்யோபாவம்! என்பதனையே சோஷியலிசம் என்று கருதிக் கொள்ளச் சொல்கிறார்கள்.

அவர்கள் கூறிடும் சோஷியலிசத்தில், பொருள் இல்லை; பயன் இல்லை!

பொருளற்றதைப் பேசிடுவதுடன், சொல்லுக்கும் செயலுக்கும் பொருத்தமற்ற முறையில் ஏழைக்காகப் பரிந்து பேசிவிட்டு, ஏழையின் அந்த நிலைமைக்குக் காரணமாக உள்ள முதலாளிகளுடன் கூடிக்குலாவுவதும், அவர்களைக் கொழுக்க வைப்பதுமான செயலில் ஈடுபடுகிறது காங்கிரஸ் கட்சி.

இதனை மெய்ப்பிக்கும் விதமாகவே இருந்திருக்கிறது காமராஜரின் மேடைப் பேச்சும், அவருடன் கூடிக் குலாவியவர் களின் பட்டியலின் தன்மையும், இதனை எடுத்து விளக்கிட வேண்டும். இது வெறும் கிணற்றுத் தண்ணீர்; கங்காதீர்த்தம் என்று கூறுவது ஏமாற்றுப் பேச்சு என்பதனை எடுத்துக் கூறிட வேண்டும் - தொடர்ந்து.

அன்புள்ள

அண்ணாதுரை

6-6-1965

11. கனடா பயணம் - (1)

ஆட்டவா ஒப்பந்தமா? ஒட்டவா ஒப்பந்தமா?
இலால்பகதூரின் கனடா பயணம்
மொழிப் பிரச்சினைக்குப் பயன்பட வேண்டும்
கனடாவின் வரலாறு
கனடாவில் கியூபெக் மாநிலப் பிரச்சினை

தம்பி!

லால்பகதூர் கனடா நாட்டுக்குச் செல்கிறார். . . அடடா! விஜயம் செய்கிறார் என்றல்லவா சொல்லியிருக்க வேண்டும். . . கனடா நாட்டுப் பிரதமருடன் கலந்துரையாடப் போகிறார். தலைநகரான ஆட்டவாவில் அமோகமான வரவேற்பு. பிறகு மான்ட்ரியல் நகர் செல்கிறார். அங்கு ஒரு பல்கலைக் கழகத்திலே லால்பகதூருக்கு "டாக்டர்' பட்டம் வழங்கப் போகிறார்கள். நயாகரா

நீர்வீழ்ச்சியைக்கூடப் பார்க்கப் போகிறார்.

கனடா நாட்டுடைய உதவி, மற்ற பல நாடுகளின் உதவி கிடைத்திருப்பது போலவே கிடைத்திருக்கிறது, குறிப்பாகவும் சிறப்பாகவும் நீலகிரி மாவட்டத்திலே அமைக்கப்பட்டுள்ள மின்சார உற்பத்திக்கான குந்தா திட்டம், கனடா நாட்டின் பேருதவியின் சின்னமாகத் திகழ்கிறது. லால்பகதூரின் கனடா விஜயம், ஏற்கனவே பெற்றுக் கொண்டதற்கு நன்றி தெரிவிக்கும் முறையிலும், இனிப் பெற வேண்டியவற்றுக்கு வழிகாணும் விதத்திலும் அமையவேண்டும் என்று விரும்புகிறேன்.

கனடா, பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திலே ஒரு அங்கம்; பிரிட்டிஷ் அரசியார் கூடச் சென்ற ஆண்டு அங்குச் சென்றிருந்தார்கள் என்ற செய்தி நினைவிலிருக்கும் என்று எண்ணுகிறேன்.

ஹிட்லர், பிரிட்டனைப் படுசூரணமாக்கிவிட வேண்டும் என்று திட்டமிட்டு, லண்டன் நகர்மீது ஓயாது குண்டு வீசிக் கொண்டிருந்தபோது, பிரிட்டனே அழிக்கப்பட்டு விட்டாலும் பிரிட்டிஷ் குலக்கொழுந்துகள் வேறு எங்கேனும் சென்று தழைக்கட்டும் என்ற எண்ணத்துடன் எண்ணற்ற பெற்றோர்கள் தங்கள் மழலைச் செல்வங்களைக் கப்பலேற்றி இந்த கனடா வுக்குத்தான் அனுப்பி வைத்தார்கள்.

கனடா என்ற உடன் எனக்கு இது மட்டுமல்ல, தமிழக அரசியல் நிகழ்ச்சியொன்றும் நினைவிற்கு வருகிறது.

இந்தியாவுக்கும் கனடாவுக்கும் முன்பு ஒரு முறை வணிக ஒப்பந்தம் ஒன்று ஏற்பட்டது. பிரிட்டிஷ் சாம்ராஜ்ய நாடுகளாக இந்தியாவும், கனடாவும் இருப்பதால், இவை இரண்டுக்கும் இடையே வணிகத் துறையில் சலுகைகள்

இருத்தல் வேண்டும் என்பதற்காக ஏற்பட்ட ஒப்பந்தம் அது. அதனை முன்னின்று நடத்தியவர் சர். ஆர். கே. சண்முகம் செட்டியார்.

அந்த ஒப்பந்தம் இந்தியாவின் நலன்களுக்குக் கேடு செய்வது என்று காரணம் காட்டி, காங்கிரஸ் தலைவர்கள் அதனை மிகப் பலமாகக் கண்டித்து வந்தனர். ஆர். கே. சண்முகத்துடன் தேர்தல் போட்டியில் ஈடுபட்டிருந்த காங்கிரஸ் தலைவர் சாமி வெங்கடாசலம் செட்டியார், ஒப்பந்தத்தைக் காரசாரமாகக் கண்டித்துப் பேசி வந்தார். தமிழ்நாடு முழுவதும், குறிப்பாகச் சென்னை நகரத்தில், ஒவ்வொரு காங்கிரஸ் மேடையிலும் கண்டனம்; இதழ்களில் கண்டனம்; ஒட்டாவா ஒப்பந்தம் ஒழிக என்ற முழக்கம்.

அத்தனை கண்டனத்துக்கும் சேர்த்து பதில்

அளிக்கும் முறையில், சென்னை விக்டோரியா பொது மண்டபத்தில், சண்முகமும், சர். ஏ. ராமசாமி முதலியாரும் பேசினார்கள். பேச்சா அது!!

சர். சண்முகம் அன்று பேசியது இன்றும் என் காதுகளில் ஒலித்துக் கொண்டிருக்கிறது.

நான் முன்னின்று நடத்திவைத்த வியாபார ஒப்பந்தத்தைப் பற்றிக் கண்டனக்குரல் எழுப்புபவர்களின் கூற்று அவ்வளவும் தவறு; முழுத் தவறு; பரிதாபத்துக்குரிய தவறு! ஒப்பந்தம் நடந்த ஊர்ப் பெயரிலிருந்து ஒப்பந்த ஷரத்துக்கள் வரையில் ஒன்றைக் கூடச் சரியாக அறிந்து கொள்ளாமல் பேசுகிறார்கள்; ஏசுகிறார்கள். நண்பர்களே! நான் சென்று கையொப்ப மிட்டுவிட்டு வந்த ஒப்பந்தம் நடைபெற்ற நகரின் பெயர் ஆட்டவா!! - ஒட்டவா அல்ல!!

தம்பி! அன்று நான் கேட்ட மகிழ்ச்சி ஆரவார ஒலி போல் இன்னும் கேட்கவில்லை.

அந்த ஆட்டவாவில் லால்பகதூர், கனடா நாட்டுப் பிரதமருடன், பல பொதுப் பிரச்சினைகள் குறித்துப் பேசப் போகிறார்.

கனடாவுக்கும் இந்தியாவுக்குமிடையில், சிக்கலான எந்தப் பிரச்சினையும் அதிக அளவிலே இல்லை. கனடாவின் நட்புறவு மேலும் வளப்படுத்தப்படவேண்டும்; அம்முறையில் பேச்சு கனிய வேண்டும்.

என்ன அண்ணா! நல்லெண்ணத்தைத் தெரியப்படுத்த அவருக்கே நாலுவரி கடிதம் எழுதிவிட்டிருக்கலாமே, அதை விட்டுவிட்டு, என்னோடு பேச வேண்டிய நேரத்தை வீணாக்கி விடுகிறாயே என்று தம்பி! கேட்கத் தோன்றும். உனக்குச் சில கூறத்தான் லால்பகதூரின் பயணத்தைப்

பற்றி எழுதுகிறேன்.

இன்று நம்மை எல்லாம் வாட்டி வதைத்துக் கொண்டிருக்கும் ஒரு சிக்கலான பிரச்சினைப் பற்றிப் புதிய தெளிவு பெற்றுக்கொள்ள, கனடா பயணம் பயன்பட வேண்டும் என்று நான் பெரிதும் விரும்புகிறேன்; மொழிப் பிரச்சினை பற்றித்தான் குறிப்பிடுகிறேன்.

ஒருமைப்பாடு, ஒன்றுபட்ட உணர்வு, நாட்டுப் பற்று, விரிந்த மனப்பான்மை; அடிப்படையில் கவனம் செலுத்துவது என்ற சொற்றொடர்கள், சுவைமிக்கன; பொருள் மிக்கன; மிகப் பெரியவர்களால் வழங்கப்படுவன! அவைகளை நான் மறுக்க வில்லை; குறைத்தும் மதிப்பிட்டுவிடவில்லை. இன்னிசை எழுப்பிடும் இந்தச் சொற்றொடர்களை, நடைமுறையில் கொண்டு வரும் முயற்சியை மேற்கொள்ளும்போது, இடர்ப்பாடுகள் என்னென்ன விளைகின்றன,

பிரச்சினைகள் புதிது புதிதாக எவையெவை எழுகின்றன என்பதனைப் பார்க்கும்போது, சுவைமிக்க சொற்றொடர்கள் மட்டும் போதாது, பிரச்சினைகளைத் தீர்த்து வைத்திட இதயத்தின் அடித்தளத்தில் ஊடாடிக் கொண்டிருக்கும் எண்ணங்களைக் கண்டறிந்து, மதிப்பளித்தாக வேண்டும் என்பது புரியும். கனடாவில் இப்போது இந்தக் கட்டம் காணலாம், விரும்பினால், அக்கறை எடுத்துக் கொண்டால். லால்பகதூர் அக்கறை காட்டினாலும் காட்டாவிட்டாலும், அவர் செல்ல இருக்கும் இடம் அவர் மனத்தில் அந்த எண்ணத்தை நிச்சயமாகக் கிளறிவிடும். மான்ட்ரியல் நகருக்கும் அவர் செல்ல இருக்கிறார் என்று அறிகிறேன். கனடாவின் தலைநகர் ஆட்டவா; மான்ட்ரியல் ஒரு புதிய எழுச்சிக்கு இருப்பிடமான தலைநகராகி இருக்கிறது.

தம்பி! க்யூபெக், கனடாவில் ஒரு மி□நிலம்; மத்திய அரசுக்கு உட்பட்ட ஒரு மாநில அரசு; மொத்தம் பத்து மாநில அரசுகளை இணைத்துக் கொண்டுள்ள அமைப்பு கனடா நாட்டின் மத்திய சர்க்கார் - பேரரசு.

3,619,616 சதுர மைல் கொண்டது கனடா! 16,589,000 மக்கள் தொகை.

இதிலே, க்யூபெக் 523,860 சதுர மைல் கொண்டது. 4,628,378 மக்கள் தொகை கொண்ட மாநில அரசு. இதன் தலைநகர் க்யூபெக்; 166,996 இந்நகரின் மக்கள் தொகை; மான்ட்ரியல் 1,094,448 மக்கள் தொகை கொண்டது.

இந்த விவரம், நான் காரணமற்றுத் தரவில்லை.

பேரரசிலே இணைந்துள்ள பத்து மாநிலங்களிலே ஒன்றான க்யூபெக்

மாநிலத்திலிருந்து கிளம்பியுள்ள பிரச்சினை - மொழி அடிப்படையிலே துவக்கப்பட்ட பிரச்சினை - இன்று கனடா நாட்டின் எதிர்காலத்தையே ஒரு பெரிய கேள்விக்குறியாக்கி விட்டிருக்கிறது என்பதனைக் குறிப்பிடத்தான் இந்தத் தகவலைத் தந்தேன்.

க்யூபெக் மாநிலத்திலிருந்து எழும்பியுள்ள இந்தப் பிரச்சினை தீர்க்கப்படுவதைப் பொறுத்துத்தான், கனடாவில் பேரரசு இருக்குமா, அல்லது அது போரரசு ஆக வேண்டி நேரிடுமா என்பது முடிவாக இருக்கிறது என்று, வீண் மிரட்டல் பேச்சுக்காரர்கள் அல்ல, வதந்திகளைக் கிளப்பிவிடுவோர் அல்ல, பொறுப்பு மிக்க ஆய்வாளர்கள் கூறுகிறார்கள்.

எனக்கே இது புரிந்திருக்கிறபோது, அங்குச் செல்லும் லால்பகதூர் இதனை உணராமலிருந்திருக்க முடியாது.

ஆனால் கனடாவின் உள்நாட்டுப் பிரச்சினை அது; அதுபற்றி வெளிநாட்டுத் தலைவர் ஏதும் கருத்தளிப்பது கூடாதே என்று கூறுவர்; நான் அதுபற்றிக் கருத்து அளிக்கும்படி லால்பகதூரைக் கேட்டுக் கொள்ளவில்லை; அங்கு உள்ள நிலைமையைப் பார்த்து, பிரச்சினையைப் புரிந்து கொண்டு, கருத்திலே கொள்ள வேண்டும் என்று விரும்புகிறேன்.

தம்பி! எழும் பிரச்சினைகளை ஏளனம் செய்து விடுவது எளிதான காரியம்; அதிலும் சிக்கலைத் தீர்த்திட வகை தெரியாத போது, பிரச்சினைகளை அலட்சியப் படுத்திப் பேசி விடுவது, தோல்வியை மறைத்திடக்கூடப் பயன்படும். பிரச்சினைகள், கிளம்புகின்றன; கிளப்பப்படுவதில்லை! பிரச்சினைகளைச் சந்திக்கும் துணிவும், புரிந்து கொள்ளும் தெளிவும், தீர்த்து

வைக்கும் ஆற்றலும் அற்றவர்கள், பிரச்சினைகளை வேண்டு மென்றே யாரோ, எதற்காகவோ, கிளப்பிவிடுகிறார்கள் என்று பேசுகின்றனர்; பேசிவிட்டுப் பிரச்சினைகளைச் சந்திப்பதற்குப் பதிலாக, எந்தப் ப-க்கடா கிடைக்கும் என்று தேடித் திரிகிறார்கள்.

காரணமற்று, எந்தப் பிரச்சினையும் எழுவதில்லை; எழும் பிரச்சினையின் நியாயத்தை உணர்ந்தவர்கள் அதன் பக்கம் நிற்கிறார்கள், வாதாடுகிறார்கள்; அவர்கள் பிரச்சினையால் ஈர்க்கப்பட்டவர்கள், கிளப்பி விட்டவர்கள் அல்ல.

ஆனால், ஆதிக்கத்தில் உள்ளவர்கள், எழும் எந்தப் பிரச்சினையையும்., இயற்கையானது, நியாயமானது, கவனிக்கப்பட வேண்டியது என்று எந்தக் காலத்திலும் ஒப்புக் கொண்டதில்லை.

கொடுங்கோலை எதிர்த்து மக்கள் குமுறியபோதுகூட, ர□ய ஜார் சொன்னானாம், "என் குழந்தைகளை எப்படி நடத்த வேண்டும் என்பது எனக்குத் தெரியும்'' என்று.

இந்தியாவுக்கு சுயராஜ்யம் வேண்டும் என்ற பேச்சு எழுந்தபோது, வெள்ளை ஏகாதிபத்யம் அதனை ஒரு பிரச்சினை என்று ஒப்புக் கொண்டதா, துவக்கத்தில்?

வேண்டுமென்றே, சில கலகக்காரர்கள் கிளப்பி விடும் பிரச்சினை - இது அடக்கப்பட வேண்டியது - கவனிக்கப்பட வேண்டியது அல்ல - என்றுதான் பேசினார்கள்; வாதாடினார்கள்.

அதே முறையிலேதான் இந்தியப் பேரரசும் எந்தப் பிரச்சினையையும் - மொழிப் பிரச்சினை முதற்கொண்டு வாழ்க்கை வழிப் பிரச்சினை வரை - எதனையும்

இயற்கையானது என்றோ, நியாயமானது என்றோ ஒப்புக் கொள்வதில்லை.

வீணான பயம்; காரணமற்ற கலக்கம்; குழப்பம்; சந்தேகம் என்று பல பேசி, பிரச்சினைகளுக்காக வாதாடுபவர்களை விவரமறியாச் சிறுவர்களாகச் சித்தரித்துக் காட்டுகின்றனர்.

கனடாவில், துவக்கத்திலே க்யூபெக் மாநிலத்திலிருந்து எழுந்த பிரச்சினையே, அலட்சியப்படுத்திப் பார்த்தனர் என்றாலும், பிறகு அது இயற்கை வலிவுடன் உள்ளது என்பதனையும், வளர்ந்து வருகிறது என்பதனையும் உணர்ந்து, பிரச்சினையைத் தீர்த்து வைக்கத் தீவிரமான முயற்சியினை மேற்கொண்டுள்ளனர்.

லால்பகதூர், கனடா செல்லும் இந்த நேரம், கனடியப் பேரரசு, பிரச்சினையை

அலட்சியப்படுத்திய நேரம் அல்ல, பிரச்சினையை முழு அளவில் கண்டறிந்து, சிக்கலைப் போக்கிட வழிதேட முனைந்துள்ள நேரம் இது.

இங்கு பேசப்படுவது போலத்தான், ஒருமைப்பாடு, ஓரரசு என்பன பற்றிய பேச்சு கனடாவில் பேசப்பட்டது. இங்காவது 17 ஆண்டுகளாகப் பேசப்பட்டு வருகிறது, அங்கு நெடுங்காலமாக.

நாம் அனைவரும் முதலில் இந்தியர்! பிறகே பிற என்று பேசுகிறோம்; ஒருவருக்கு மற்றவர் தாராளமாக இந்த உபதேசத்தை வழங்கி வருகிறோம். அதேபோது கிளை அஞ்சல் அலுவலகத்தில் துணை அதிகாரியாக வந்திருப்பவர், நம்மவரா! என்று கேட்டறிந்து, காற்றினிலே வரும் கீதமாகக் கொள்கிறாம் அந்தச் சேதியினை!

அங்கும், நாம் அனைவரும் கனடியர் - கனடா நாட்டவர் - என்ற "தேசியம்' இருக்கிறது; நெடுங்காலமாகக் கொலுவிருக்கிறது. கனடியர் என்ற தேசிய உணர்ச்சியின் முன்பு மதம், பிரதேசம், மொழி எனும் எதுவும் நிற்காது; கதிரவன் ஒளி முன் மின்மினி அவையெலாம் என்று பேசத் தவறவில்லை.

கட்டுரைகளும் கவிதைகளும், கனடா தேசிய உணர்ச்சியை மலரச் செய்யப் பயன்பட்டன. ஆனால். . . ஆமாம், தம்பி! அங்கேயும் அந்த ஆபத்தான "ஆனால்' படை எடுத்திருக்கிறது!

அதனைக் கூறுமுன்பு தம்பி! கனடாவின் வரலாற்றைச் சிறிதளவு சொல்லிவிடுவது தேவை என்று எண்ணுகிறேன் - ஏனெனில் பிரச்சினையின் ஆணி வேர் வரலாற்றுடன் பிணைந்து கிடக்கிறது.

கனடா, ஒரு நாடு ஆக்கப்பட்ட பூபாகம்! ஒரு நாடு ஆக்கப்படுவதற்கு முன்பு, அந்தப் பூபாகத்தில் தனித் தனி அமைப்புகள் இருந்து வந்தன; ஒவ்வொரு அமைப்புக்கும் ஒரு தனி இயல்பு, அந்த இயல்புக்கு ஏற்றவிதமான நடவடிக்கை, இவ்விதம்.

மிகப் பழைய காலத்தை விட்டு விடுகிறேன்; பெரும் பெரும் அரசுகள், "ராஜ்யம்' தேடி அலைந்த கால கட்டத்தில் நடந்தவைப் பற்றி மட்டும் சிறிதளவு கூறுகிறேன்.

இருநூறு ஆண்டுகளுக்கு முன்பு, இன்றுஎந்த பூபாகத்தைக் கனடா என்று குறிப்பிடுகிறோமோ அங்கு, மிகப் பெரிய அளவு இடம், பிரஞ்சு அரசுக்கு இருந்தது. பிரஞ்சுக்காரர்களே குடி இருந்தார்கள் என்பதல்ல பொருள்; பிரஞ்சு ஆதிக்கம் இருந்து வந்தது. அந்த ஆதிக்கம் வளர

வளர, அந்த இடத்தில் மேலும் மேலும் பிரஞ்சுக்காரர்கள் குடியேறினர்.

பிரிட்டிஷ் அரசுக்கும் பிரஞ்சு அரசுக்கும் ஆதிக்கப் போட்டி நடைபெற்ற நாட்களில் - எங்கெங்கு பிரான்சு ராஜ்யம் அமைத்ததோ அங்கெல்லாம் பிரிட்டிஷாரும் கோட்டை கட்டிக் கொடி பறக்க விட்டனர். ஆங்காங்குக் களம்! இடங்கள் அடிக்கடி கைமாறும்! இப்படிப்பட்ட நிலை.

ஏழு ஆண்டுச் சண்டை ஒன்று நடைபெற்றது, பிரான்சுக்கும் பிரிட்டனுக்கும்; அது ஐரோப்பிய பூபாகத்தோடு நிற்கவில்லை; இங்கும் நடந்தது; கனடாவிலும் நடந்தது; அப்போது, பிரஞ்சுப் பிடியில் இருந்த பூபாகம் பிரிட்டனிடம் சிக்கிற்று; அப்படிச் சிக்கிய இடங்களிலே ஒன்று க்யூபெக்; அந்தக் களத்திலே கீர்த்திமிக்க வெற்றி பெற்று உயிர் நீத்தவர் வுல்ப் எனும் பிரிட்டிஷ் தளபதி.

1763லில், பாரிஸ் பட்டினத்தில் நடைபெற்ற சமாதான ஒப்பந்தத்தின்படி கனடா முழுவதும் பிரிட்டனுக்கு ஒப்படைக்கப் பட்டது.

கனடா, பிரிட்டிஷ் பிடியில் வந்த பிறகு, பல மாநிலங்களை இணைப்பதிலும், ஒரே விதமான அரசு முறை அமைப்பதிலும் ஈடுபட்டனர்; கனடா, கனடியர் என்ற உணர்ச்சி ஊட்டப்பட்டது.

ஊட்டப்பட்ட இந்த உணர்ச்சி பிரிட்டிஷ் ஆதிக்கத்துக்கே உலை வைத்துவிட்டது. கனடா நமது நாடு. கனடியர் நாம், ஏன் பிரிட்டனின் அடிமை நாடாக இருக்க வேண்டும் என்ற கேள்வி எழுந்தது; கிளர்ச்சி நடந்தது; 1849லில், கனடாவுக்குச் சுயாட்சி வழங்கப்பட்டது; கனடாவின் பல பகுதிகளை இணைக்கும் வேலை மும்முரமாகி, 1867லில் கனடா பேரரசு ஆகிடத்தக்க சட்டம் பிறந்தது. பத்து மாநில அரசுகள், ஒரு பேரரசு;

பேரரசுக்குத் தலைநகரம் ஆட்டவா; மாநில அரசுகளுக்குத் தனித் தனி மந்திரி சபை என்ற முறையில் அரசு அமைந்தது.

ஏன் இதனைக் கூறுகிறேன் என்றால், தம்பி! 1867-லிருந்து கனடா - கனடியர் என்ற உணர்ச்சி ஊட்டப்பட்டு வந்திருந்த போதிலும், கனடியர் என்ற தேசிய உணர்ச்சி காரணமாக, தத்தமக்குத் தேவைகள் யாவை என்பது பற்றி எண்ணிடவோ, அவை கிடைக்காதபோது மனம் புழுங்கிடவோ, அந்த மனப் புழுக்கம் ஏற்படும்போது தாங்கள் யார், தமது பூர்வீகம் என்ன? இயல்பு என்ன என்ற துறையில் சிந்தனையை ஓட்டவோ, அங்ஙனம் சிந்தனை செல்லும்போது தங்களை யார் அழுத்தி வைத்திருக்கிறார்கள், எந்தக் கருவியைப் பயன்படுத்தி என்று ஆராயவும், ஆராய்ந்து பார்த்தபிறகு, நாங்கள் தனி இயல்பினர் எமது இயல்பினை நாசமாக்கும்விதமாக

நடந்து கொள்ளும் எந்த ஆதிக்கத்தையும் நாங்கள் எதிர்த்தே தீருவோம் என்று முழக்க மிடவும், அந்த முழக்கம் கேட்டு மற்றவர்கள் இவ்விதமான பேத உணர்ச்சி உனக்கு ஏற்படலாமா, நாமெல்லாம் ஒரே நாட்டின ரல்லவா, கனடியர் அல்லவா என்று சொந்தம் பேசவும், அதைக் கேட்டதும் மேலும் எரிச்சல் கொண்டு சொந்தம் பந்தம் பேசிக் கொண்டு சுகபோகம் அனுபவிக்கிறாய், நாங்கள் தேய்ந்து போகிறோம் இது அக்கிரமம் அல்லவா என்று கேட்டு, அக்கிரமம் ஒழிக! அக்கிரமம் செய்திடும் ஆட்சி ஒழிக! என்று முழக்கமிடவும் முடியாமற் போகவில்லை.

அப்படிப்பட்ட முழக்கம் எழுப்பியுள்ள இடம் க்யூபெக்.

இருநூறு ஆண்டுகள் உருண்டோடிய பிறகும் எத்தனையோ நிகழ்ச்சிகளில் கனடியர் என்ற உணர்ச்சியுடன், க்யூபெக்கில்

உள்ளவர்கள் உட்பட ஒன்றாகக் கலந்திருந்த பிறகும், தங்கள் நிலை கெடுகிறது, கெடுக்கப்படுகிறது என்ற எண்ணம் ஏற்பட்டதும், க்யூபெக் தனிக்குரல் எழுப்ப முனைந்துவிட்டது.

நாம் அனைவரும் கனடியர் என்ற பேச்சு, சட்ட சம்மதம் பெற்று விட்டது; இருநூறு ஆண்டுகளாக அரசியலில் அந்தச் சொல்லுக்குத் தனிப்பட்ட மதிப்பு இருந்து வந்திருக்கிறது; ஆயினும், இப்போது மிகப் பலமாகவும், சில ஆண்டுகளாகவே மெள்ள மெள்ளவும், நாங்களும் கனடியர் என்று பேசி வந்தவர்கள் "நாங்கள் கனடாவில் உள்ள பிரஞ்சுக்காரர்கள்; நாங்கள் பிரஞ்சுக் கனடியர்' என்று பேசத் தலைப்பட்டு விட்டனர்.

தம்பி! பதவி கிடைக்காத பசி நோய்க்காரர்கள், பேதம் மூட்டிவிட்டுப் பிழைப்பு நடத்துபவர்கள், குட்டையைக் குழப்பி

விட்டு மீன் பிடிப்பவர்கள் போன்றவர்கள் இப்படிப்பட்ட பேச்சுத்தான் பேசுவார்கள், ஆனால், நாட்டின் அறிவாளர்கள் இத்தகைய பேச்சைத் துச்சமென்று தள்ளிவிடுவார்கள் என்று கூறுவர்.

ஆனால், நாங்கள் பிரெஞ்சுக் கனடியர். எமது பிரஞ்சு மொழிக்கும் பிரஞ்சுப் பண்பாட்டுக்கும் பாதுகாப்பும் வளர்ச்சியும் கிடைத்தாக வேண்டும்; பிரஞ்சுக் கனடியர்களான எம்மீது ஆங்கிலக் கனடியர்கள் ஆதிக்கம் செலுத்துகிறார்கள், எல்லாத் துறைகளிலும்; இதனை நாங்கள் பொறுத்துக் கொள்ள மாட்டோம்; உரிமையை இழக்கமாட்டோம் எமது உரிமை எந்த விதத்திலும் பாதிக்கப்பட முடியாத விதமான அரசு முறை அமைக்க வேண்டும், இல்லையேல், நாங்கள் பிரிந்து போகிறோம்!

என்று முழக்கம் எழுப்புபவர்

படித்தவர்கள். மாணவர்கள், பேராசிரியர்கள், வழக்கறிஞர்கள், பொறியிய-னர், மருத்துவத் துறையினர், தேவாலயத் துறையினர், இத்தகையோர்; விவரமறியாதவர்களுமல்ல, விஷமிகளும் அல்ல! தேசியம், ஒருமைப்பாடு, ஓரரசு என்பன பற்றி எல்லாம் அறிந்தவர்கள்; எடுப்பார் கைப்பிள்ளைகள் அல்ல, ஏதுமறியாதாரும் அல்ல.

இத்தனைக்கும் தம்பி! பேதம் எழலாகாது, பிளவு இருத்தல் கூடாது, வஞ்சனை ஆகாது, உரிமையை அழித்திடல் பெரும் தீது என்ற உணர்வுடன் கனடாவின் புதிய அரசியல் சட்டம் இயற்றப்பட்டபோது, மொழி ஏகாதிபத்தியம் ஏற்பட முடியாதபடி பாதுகாப்புத் தந்துள்ளனர்.

கனடாவில் உள்ள மக்களில், இரு பெரும் பிரிவினர் உள்ளனர்; ஆங்கிலேயர்கள், பிரஞ்சுக்காரர்கள்.

கனடாவில் உள்ள ஆங்கிலேயர்கள், மொழி ஒன்றினால் மட்டுந்தான் ஆங்கிலேயர்கள், மற்றபடி அவர்களுக்கும் இங்கிலாந்துக்கும் வேறு தொடர்புகள் குறிப்பிடத்தக்க விதமாக இல்லை. அதுபோன்றே பிரஞ்சுக் கனடியர் நிலையும்.

இந்த இரு பெரும் மொழிப் பிரிவினரும், மொழியால் வேறுபட்டவர்கள் என்ற உணர்ச்சியை ஒதுக்கி வைத்துவிட்டு, கனடா சுயாட்சி பெறக் கிளர்ச்சி நடாத்தினர்.

ஆனால், சுயாட்சி நடத்திடும் கனடாவில், தங்கள் உரிமை தழைக்கவில்லை, வாழ்வு செழிக்கவில்லை என்றதும், மொழி உணர்ச்சி மீண்டும் ஏற்பட்டு விட்டது. எப்படி முடிந்தது என்கிறாயா, தம்பி! பொது ஆபத்தை எதிர்த்து நிற்கும்போது ஒதுக்கி வைக்கப்படும் உணர்ச்சிகள், ஒதுக்கித்தான் வைக்கப் படுகின்றன. அவை மடிந்து

போய் விடுவதில்லை, ஆகவேதான் அந்த உணர்ச்சிகள், தமது நலன் கெடுக்கப்படுகிறது, உரிமை பறிக்கப்படுகிறது என்ற நிலை கிளம்பும்போது மீண்டும் வெளி வந்து விடுகின்றன! அந்த உணர்ச்சி ஒடிந்த வாளாகி விடவில்லை; உறைக்குள் வாளாக இருந்திருக்கிறது என்று தோன்றுகிறது.

கனடாவில்; பிரெஞ்சு மொழி பேசுவோரை விட ஆங்கில மொழி பேசுவோரின் தொகை அதிகம்.

அதுமட்டுமின்றி பிரஞ்சுமொழி பேசுபவர்கள், களத்தில் ஆங்கில அரசால் தோற்கடிக்கப்பட்டவர்கள். அவ்விதம் இருந்தும் ஆங்கிலந்தான் ஆட்சிமொழி, பிரஞ்சு பிராந்திய மொழியாக இருக்கட்டும், மத்திய அரசுக்கு, பேரரசுக்கு ஆங்கிலம் மட்டுமே ஆட்சிமொழியாக இருக்கும் என்று சட்டம் இல்லை. மாறாக கனடாவின் அரசியல்

அமைப்புச் சட்டத்தின் 133-ம் விதியின்படி, பாராளுமன்றம், அரசாங்கப் பணிமனைகள், நீதிமன்றங்கள் ஆகிய எல்லா இடங்களிலும் எல்லா அலுவல்களுக்கும், ஆங்கிலம் பிரஞ்சு ஆகிய இருமொழிகளும் ஆட்சிமொழிகளாகப் பயன்படுத்தப்பட வேண்டும்; சர்க்கார் வெளியிடும் எல்லா விதமான அறிக்கைகள், உத்தரவுகள் கொண்ட ஏடுகளும், இரு மொழிகளிலும் வெளியிடப்பட வேண்டும், இரு மொழிகளில் எதை வேண்டுமானாலும் எவரும் அவருடைய விருப்பப்படி உபயோகித்துக் கொள்ளலாம் என்று உறுதிப்படுத்தப் பட்டுள்ளது.

களத்திலே தோற்றுப்போனவர்கள் என்பதைக் காரணம் காட்டி, ஒரு மொழித் திட்டத்தை அமுல் செய்திடலாம் என்ற ஆதிக்க நினைப்பு எழவில்லை. நாம்தான் களத்திலே தோற்று விட்டோமே, நம்முடைய பிரஞ்சு

மொழிக்கு அரியணை எப்படி நாம் துணிந்து கேட்க முடியும் என்ற தயக்கம் பிரஞ்சுக் கனடியருக்கும் ஏற்படவில்லை.

மாறாக இருமொழிகளும் ஆட்சி மொழிகளாக ஏற்றுக் கொள்ளப்பட்டன; அதற்கான சட்டம் 1867-ஆம் ஆண்டு மார்ச் 29-ஆம் நாள் நிறைவேற்றப்பட்டது.

கிட்டத்தட்ட இருநூறு ஆண்டுகள் இருமொழிகள் ஆட்சி மொழிகளாக அமுலில் இருந்து வருகின்றன.

இருந்தும், மீண்டும் மாச்சரியமா? மறுபடியும் மொழித் தகராறா? என்று கேட்கத் தோன்றும்.

இப்போது, மொழி ஆதிக்கம் பற்றிய பிரச்சினை எழவில்லை; இருநூறு ஆண்டுகளுக்கு முன்பே, மிக்க அரசியல் நுண்ணறிவுடன் இருமொழிகளையும் ஆட்சி

மொழிகள் என்று சட்டம் செய்துவிட்டதால், இந்த இருநூறு ஆண்டுகளாக, மொழி ஆதிக்கம் என்பதனால், தகராறு, மாச்சரியம், கிளர்ச்சி எழவில்லை.

இப்போது கிளம்பி இருப்பது, மொழி ஆதிக்கம் செய்கிறது, ஆட்சிமொழி என்ற நிலையில் என்பது அல்ல. ஆங்கிலம் மட்டுமல்ல ஆட்சிமொழி; பிரஞ்சு மொழியும் ஆட்சிமொழி;- ஆகவே மொழி ஆதிக்கம் என்ற பேச்சுக்குப் பொருள் இல்லை. ஆனால், இப்போது எழுந்துள்ள பிரச்சினை, ஆங்கில மொழியினரின் ஆதிக்கம் என்பதாகும். அதை விளங்கிக் கொள்ள வேண்டும் என்ற ஆவல் இருக்கும், நிச்சயமாக; ஆனால், முதலில், மொழி காரணமாக, மாச்சரியம் எழாதபடி இந்த 200- ஆண்டுகளாக நடந்துகொள்ள முடிந்ததே, இரு மொழிகளையும் ஆட்சி மொழிகள் என்று சட்டம் இயற்றியதன் மூலம், அந்த அரசியல்

நுண்ணறிவு பற்றி, தம்பி! எண்ணிப்பார்!! நீயும் நானும் எண்ணிப் பார்த்து மட்டும் என்ன பயன்? அங்கே போகிற லால்பகதூர் அல்லவா எண்ணிப் பார்க்க வேண்டும்.

இருநூறு ஆண்டுகள் எத்தனையோ இனிமையுடன், கனடியர் என்ற தேசிய ஒருமைப்பாட்டு உணர்ச்சியை ஊட்டி வளர்த்த பிறகும், இன்று கனடாவில் கிளம்பியுள்ள பிரஞ்சு உணர்ச்சி பற்றி லால்பகதூர் கூர்ந்து கவனித்துத் தமது கட்சியினர் கொண்டுள்ள நோக்கத்தையும் போக்கையும் மாற்றிக் கொண்டாக வேண்டும் என்ற தெளிவான கருத்தினைப் பெற வேண்டும். சென்றேன்! கண்டேன்! மெய்மறந்து நின்றேன்!! என்பதிலே என்ன பலன்? சென்றேன், கண்டேன், புதுக்கருத்துக் கிடைக்கப் பெற்றேன் என்றால், பயன் மெத்தவும் உண்டு.

தம்பி! அடுத்த கிழமை மீண்டும் க்யூபெக்

சென்று பார்ப்போம் - நிலைமையை - நினைப்பினை.

அன்புள்ள

அண்ணாதுரை

13-6-65

12. கனடா பயணம் - (2)

கனடாவில் இரு ஆட்சி மொழிகள்
கனடா ஆங்கிலம் - பிரஞ்சு மொழி பேசுவோரின் சொந்த நாடு
க்யூபெக் மக்கள் கேட்பது சலுகை அன்று உரிமை!
இந்தி பெரும்பான்மையோர் பேசும் மொழி அன்று!
தமிழக அரசே இந்தி ஆட்சிமொழி ஆவதை எதிர்க்கும் நிலை ஏற்பட வேண்டும்!

தம்பி!

எங்கோ நெடுந்தொலைவிலே நடப்பதுபற்றி நாம் ஏன் கவலைப்பட வேண்டும், அது பற்றி ஏன் இவ்வளவு விரிவாக எழுத வேண்டும் என்று எண்ணி எங்கே சலித்துக் கொள்ளு கிறாயோ என்ற சந்தேகத்தால்தான்,

சென்ற கிழமையே முழுத் தகவலையும் கூறாதிருந்தேன்.

ஒன்று கூற விரும்புகிறேன், ஆதிக்க மனப்பான்மையும் அதன் விளைவாக ஏற்பட்டுவிடும் அடிமைத்தனமும், அது வேதனையாக வளர்ந்த பிறகு எழுகிற குமுறல், கிளர்ச்சி, புரட்சி ஆகியவையும் எவ்வளவு நெடுந்தொலைவிலே நடந்தாலும், நாம் அக்கறை காட்டியாக வேண்டும். ஏனெனில், அவைகளின் வகை மாறுபட்டிருக்கலாமே யொழிய அடிப்படை எங்கும் ஒரேவித மானதாகத்தான் இருக்கும், சில இடத்திலே இனம், சில இடத்திலே மதம், இன்னும் சில இடத்திலே மொழி, பற்பல இடத்திலே பணம் என்பவை ஆதிக்கத்துக்கான கருவிகளாக உள்ளன. கருவியின் வகை வேண்டுமானால் ஒவ்வோர் இடத்தில் ஒவ்வோர் விதத்தில் இருக்குமேயொழிய,

ஆதிக்கமுறை, நோக்கம், போக்கு, விளைவு இவை எங்கும் கொடுமை தருவனவாகவே அமையும். எவ்வளவு நெடுந்தொலைவிலே நடைபெறும் ஆதிக்கமாக இருப்பினும், அதனை ஆராய்ந்து பார்ப்பதிலே நிச்சயம் பயன் கிடைக்கும்; அதனால்தான் கனடா நாட்டு நிகழ்ச்சி பற்றிச் சிறிதளவு விரிவாகவே விளக்க விரும்பினேன்.

பசி! பசி! பசி! என்று எப்போதும் இதே பல்லவிதானா என்று பணம் படைத்தவர் கேட்கிறார் அல்லவா, தன்னிடம் பாடுபட்டும் பராரியாகக் கிடப்பவனைப் பார்த்து, அதுபோல, ஆதிக்கத்தினால் தாக்குண்டு தத்தளிக்கும் நிலைமையில் இல்லாதவர்களும், மற்றவர் மீது ஆதிக்கம் செலுத்துபவர்களாக உள்ளவர்களும், வேதனைப் படுகிறவர்களிடம் ஒரு புன்னகையை உதிர்த்தபடி பேசுகிறார்கள்;

இது என்ன குறுகிய மனப்பான்மை! என் மொழி! உன் மொழி! என்று சிறுபிள்ளைத்தனமான பேச்சு! மொழி ஆதிக்கம், மொழி ஏகாதிபத்தியம் என்ற பேச்சு! சேச்சே! எல்லோரும் மனிதர்கள்! அனைவருக்கும் சொந்தம் இந்த உலகம்! இதிலே இனம், மதம், மொழி என்ற அற்பக் காரணங்களுக்காகப் பிளவுபட்டு நிற்பதா பேதம் மூட்டிக் கொள்வதா!! என்று கேட்கிறார்கள். நான் அப்படியொன்றும் மேலே விழுந்து கடித்துக் குதறிச் சதையைப் பிய்த்துத் தின்றிடவில்லையே, இலேசாகப் பல்லால் தீண்டினேன், பாவிப்பயல் இதற்கே சுருண்டு கீழே விழுந்து செத்துத் தொலைத்தானே! என்று நல்லபாம்பு கூறுவதில்லை. ஆனால், சில நல்லவர்கள் கூறுகிறார்கள், என்ன கெடுதல் செய்துவிட்டோம் உங்களுக்கு, எல்லோருக்கும் பொதுவாக ஒரு மொழி

இருக்கட்டும் என்கிறோம், வேறு என்ன சொல்லுகிறோம்; அந்த மொழி ஏற்கனவே பலர் பேசும் மொழியாக இருப்பதால் அதனைப் பொதுமொழி என்று ஏற்கச் சொல்கிறோம், இதுவா கொடுமை! இதுவா அநீதி! இதற்கா இத்தனை எதிர்ப்பு, எரிச்சல், கிளர்ச்சி!! - என்றெல்லாம்.

கனடாவின் அரசியல் சட்டதிட்டத்தை வகுத்தவர்கள் இதுபோல வாதாடவில்லை. கனடாவில் உள்ளவர்களில் பெரும்பான்மையினர் ஆங்கில மொழி பேசுபவர்கள், ஆகவே, கனடா நாடு முழுவதற்குமாக ஆங்கிலம் ஆட்சி மொழியாக இருக்க வேண்டும் என்று விதி வகுத்திடவில்லை; மாறாக மிக நேர்த்தியான அரசியல் நுண்ணறிவுடன், சிறுபான்மையோரின் மொழி என்றாலும், அவர்கள் அம்மொழியைத் தாய்மொழி யாகக்

கொண்டிருப்பதால், அவர்கள்மீது வேறு மொழியை ஆட்சி மொழியாகத் திணிக்கக் கூடாது என்று உணர்ந்து ஆங்கிலம், பிரஞ்சு எனும் இருமொழிகளையும் ஆட்சி மொழிகள் என்ற திட்டம் மேற்கொண்டனர்.

இரு மொழிகளை ஆட்சி மொழிகளாகக் கொண்ட தனால், எதிர்பாராத சிக்கல் பல ஏற்பட்டு, நிர்வாகம் சீர்குலைந்துபோய், புதிய ஆபத்து ஏதும் ஏற்பட்டுவிட வில்லை. இரு ஆட்சி மொழிகள் திட்டம் நடைமுறைச் சிக்க-ன்றி அமுலில் இருந்து வருகிறது. என்றாலும் இப்போது க்யூபெக் அரசு போர்க்கொடி உயர்த்தி யிருக்கிறது. அதற்குக் காரணம் இரு ஆட்சி மொழிகள் கொண்டிருப்பதால் ஏற்பட்ட குழப்பம் அல்ல. ஆங்கில மொழியினர், பிரஞ்சு மொழியினரின் மொழியைத் தாழ் நிலைக்குத் தள்ளிவிடவில்லை; சட்டம் இடம் கொடுக்க வில்லை; ஆனால், மற்றத் துறைகளில்,

பிரஞ்சு மொழி யினரான க்யூபெக் மக்களைத் தாழ்த்திவிட்டுள்ளனர்.

இரண்டு கருத்துக்களைப் பெறுகிறேன் தம்பி! நான் இந்தத் தகவலை ஆராய்வதில். ஒன்று, ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகள் ஆட்சி மொழிகளாக இருப்பது முடியாது, சிக்கலும் குழப்பமும் ஏற்படும் என்று அச்சப்படத் தேவையில்லை; கனடாவில் இரு ஆட்சி மொழிகள் இயங்கி வருகின்றன; அதனால் சிக்கலோ, குழப்பமோ மூண்டுவிடவில்லை. இரண்டாவது, ஆதிக்கம் செலுத்துவதில் சுவை காண்பவர்கள், அதற்கு ஒரு கருவி பயன்படாமற் போய்விட்டால் வேறு கருவியைத் தேடிப் பெற்றுக் கொள்கிறார்கள்.

மொழி மூலம் தமது ஆதிக்கத்தைப் புகுத்துவது முடியாது என்பதை உணர்ந்த ஆங்கில மொழி பேசுவோர், பிரஞ்சுமொழி பேசுவோரைத் தாழ்த்தி அவர்கள்மீது

ஆதிக்கம் செலுத்த மத்திய அரசு அமைப்பிலே தமக்குள்ள மெஜாரிட்டி பலத்தைக் கருவியாக்கிக் கொண்டனர். இதனை எதிர்த்து நிற்கிறது க்யூபெக். கருவி எதுவாக இருந்தால் என்ன, ஆதிக்கம் ஆதிக்கந்தானே! ஆதிக்கத்தை எதிர்த்து நிற்கிறது - பொருளாதாரத் துறையில், அரசியல் அரங்கில், தொழில் துறையில், ஆங்கிலேயர் பெற்றுள்ள ஆதிக்கத்தை எதிர்க்கிறது.

இந்த எதிர்ப்பு வலுப்பெற்ற நிலையில் க்யூபெக் மக்கள் தங்கள் பிரஞ்சு மொழி, பிரஞ்சுக் கலாச்சாரம் ஆகியவற்றினைப் பாதுகாத்துக் கொள்ளவும், வளர்ச்சி பெறச் செய்யவும் தக்கவிதமான அரசியல் அமைப்பு தமக்குத் தேவை என்று கேட்டுக் கிளர்ச்சி செய்கின்றனர்.

1867-லேயே, இரு மொழிகளும் ஆட்சி

மொழிகள் என்று சட்டம் வகுத்து, அதனைச் செயல்படுத்தி வந்ததனால் இப்போதைய மாச்சரியம், மொழிப் பிரச்சினையின் அடிப்படையிலே இல்லை.

ஆனால் இந்தியப் பேரரசோ, மொழியிலிருந்தே ஆதிக்க அரசைத் தொடங்க வேண்டும் என்று திட்டமிடுகிறது.

மொழி விஷயத்திலே மாச்சரியம் எழவிடாதபடி தடுத்த பிறகும்கூட, வேறு முறைகளிலும் துறைகளிலும் ஆதிக்கத்தைப் புகுத்திட ஆங்கிலேயர் முனைகின்றபோது, எதிர்ப்புக் கிளம்புகிறது கனடாவில்! இங்கோ மொழியிலிருந்து ஆதிக்கத்தைத் தொடங்குகிறார்கள்; ஏன் என்று கேட்பவர்களைக் கண்டிக்கிறார்கள்; பல்வேறு வகையில் அடக்கி ஒடுக்கப் பார்க்கிறார்கள்.

ஆதிக்கம் இருக்கிறதே தம்பி! அது மிக விந்தையானது. ஆதிக்கத்திலே சிக்கிச் சீரழிவோர் போக, அடிமைத்தனத்தைத் தாங்கித் தாங்கி உணர்ச்சியற்றுப் போனவர் போக, மீதமுள்ள வர்கள், ஏன் நாம் அடிமைப்படுத்தப் பட்டோம்? எந்தக் கருவி கொண்டு நம்மை அடிமைப்படுத்தினார்கள்? என்று எண்ணிப் பார்க்கத் தொடங்கி, நாம் யார்? நம்முடைய இயல்பு என்ன? மரபு என்ன? என்பன பற்றிச் சிந்திக்கத் தொடங்கி, நம்முடையன யாவை? என்று ஆராய்ந்து கண்டறிந்து, அவைகளைப் பேணி வளர்த்திடவும், அவற்றிலே பெருமை காணவும் முற்படுகின்றனர். ஆதிக்கம் துவக்கத்திலே தொல்லையையும் துயரத்தையும் தருகிறது. இறுதியில், நம்மை நாம் உணர்ந்து கொள்ளும் நல்லுணர்ச்சியை, உள்ளுணர்ச்சியைத் தருகிறது, எழுச்சி பிறக்கிறது!!

இந்த நிலை ஒவ்வோரிடத்தில் ஏற்பட ஒவ்வோர் விதமான முறை தேவைப்படலாம்; ஆனால், இந்த நிலையை இன்று பல்வேறு இடத்திலே, ஆதிக்கக் கரத்தில் சிக்கிக் கிடந்தவர்கள் பெற்று வருகின்றனர்.

ஆப்பிரிக்கக் கண்டத்தில் ஏற்பட்டு விட்டிருக்கிற எழுச்சியை இருபது ஆண்டுகளுக்கு முன்பு எவரும் எதிர் பார்த்துக்கூட இருக்க மாட்டார்கள். ஆனால், இன்று விழிப்பால் விடுதலை பெற்ற "கறுப்பர்' நாடுகள், ஐக்கிய நாடுகள் மன்றத்தின் முடிவுகளை உருவாக்கக்கூடிய செல்வாக்கினைப் பெற்று விட்டிருக்கின்றன.

இந்த நிகழ்ச்சிகளையும் அவை தரும் பாடங்களையும் நன்கு உணர்ந்திருப்பதால், கனடா, அரசாங்கம், க்யூபெக்கில் கிளம்பி யுள்ள எதிர்ப்பை அடக்க எத்தனை படை ஏவலாம், எத்தனை சிறைகளை நிரப்பலாம்,

எத்தகைய பயங்கரச் சட்டம் போடலாம் என்று திட்டமிடாமல், என்ன குறை? ஏன் இந்தக் குமுறல்? என்ன வேண்டும் உங்களுக்கு? என்று கனிவுடன் கேட்கவும், அக்கறை யுடன் அதற்காவன செய்திட முற்படவும் முனைந்திருக்கிறது.

இங்கே எக்காளம் எழுப்புகிறார்களே, இருக்கும் இடம் அதற்கு வசதி செய்து தருகிறது என்ற ஒரே காரணத்தால்; விட மாட்டோம்! பிடித்தடைப்போம்! சுட்டுத் தள்ளுவோம்!! ஒழித்துக் கட்டுவோம் என்றெல்லாம், அந்த முறையில் அல்ல; அனுபவம் மிக்க, அறிவாற்றல் கொண்ட ஒரு அரசு எவ்விதம் நடந்து கொள்ள வேண்டுமோ அந்த முறையிலே நடந்து கொள்ளக் கனடப் பேரரசு முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறது. அங்குதான் லால்பகதூர் உலா வருகிறார் என்பதால், இதுபற்றி அறிந்து கொள்வார்

என்ற நம்பிக்கையுடன் இதனை எழுதுகிறேன்.

எதிர்ப்புத் தெரிவிக்கலாம், ஆனால், முறையாக, கட்டுக்கு உட்பட்டதாக அந்த எதிர்ப்பு இருக்க வேண்டும் என்று இங்கே பேசுகிறார்கள் பெரியவர்கள். தம்பி! க்யூபெக்கிலே தோன்றியுள்ள எதிர்ப்பு எந்த அளவுக்குச் சென்றது தெரியுமா! பிரிட்டிஷ் பேரரசியார் கனடா சென்றபோது, இங்கு வராதீர்! உயிருக்கே ஆபத்து உண்டாகும்!! என்று அவர்களை மிரட்டும் அளவுக்கு! அந்த மிரட்டலையோ, முறையையோ நான் சரி என்று கூறவில்லை. எனக்குப் பிடிக்காத முறை அது; நமது கழகம் வெறுத்தொதுக்கிடும் முறை அது. ஆனால், க்யூபெக் மக்கள் அந்த முறையிலே தமது எதிர்ப்பைக் காட்டினர்; அங்கு எந்தக் கருணாநிதியையும் பாளையங்கோட்டைக்கு அனுப்பியதாகத் தெரியவில்லை; எந்த இலக்குவனார் மீதும் பாதுகாப்புச் சட்டம்

பாயவில்லை. மாறாக, இந்த மனக்குறையை வளரவிடக் கூடாது, க்யூபெக் மக்களைச் சாந்திப்படுத்த வேண்டும், சமாதானம் கூற வேண்டும் என்ற பெருநோக்குடன்,

மொழி
பண்பாடு
பொதுநிலை

ஆகியவை குறித்து எழுந்துள்ள பிரச்சினைகளை ஆராய்ந்து பார்த்து, கனடா உடைபட்டுப் போகாமலிருக்கத்தக்க வழி வகைகளைக் கூறும்படி, கனடா அரசு ஒரு நிபுணர்கள் குழுவை அமைத்தது - மத்தியப் பிரதேசத்திலிருந்து போலீசையும், மற்ற இடத்திலிருந்து பட்டாளத்தையும் அழைத்தார்களே, அகிம்சையின் அடிப்படையில் அரசு அமைத்துக் கொண்டுள்ள அறநெறி மறவாத அண்ணல்கள், அவர்கள் அறிந்து கொள்வதற்காகக் கூறுகிறேன்,

குமுறி எழுந்து க்யூபெக் கிளர்ச்சி செய்யக் கண்ட கனடா அரசு சீறிப்பாயவில்லை, மாறாக கமிஷன் அமைத்து, கிளர்ச்சி எழக் காரணம் என்ன என்று கண்டறிகிறது. அது ஜனநாயகம்!!

ஆண்ட்ரிலாரண்டாவ், என்பவரும், டேவிட்சன்டன் என்பவரும், இந்தக் கமிஷனுக்குக் கூட்டுத் தலைவர்கள்.

இந்தக் குழுவில் 10-பேர் உறுப்பினர்கள்.

1963 ஜூலை மாதம் முதற்கொண்டு இந்தக் குழு பணியாற்றி, இப்போது கருத்தளித்திருக்கிறது.

பிரச்சினையைத் தீர்த்துவைக்க என்னென்ன வழிகள் என்று கமிஷன் கூறவில்லை. பிரச்சினை என்ன என்பதனை விளக்கி இருக்கிறது.

இந்தியப் பேரரசு, பிரச்சினை

இருப்பதாகவே இன்னும் ஒப்புக் கொள்ளவில்லை என்பதைத் தம்பி! இந்த நேரத்தில் நினைவுபடுத்திக் கொள்ள வேண்டுகிறேன்.

கனடாவில், பிரச்சினை இருக்கிறது, அதனை அடக்கு முறையினால் ஒழித்துவிட முடியாது, கூடாது, தேவையில்லை என்ற நுண்ணறிவு அரசோச்சுகிறது! இங்கு? என்று கேட்கிறாயா தம்பி! இது என்ன கேள்வி! இங்குப் பக்தவத்சலம் அரசாள்கிறார் - காமராஜரின் ஆசீர்வாத பலத்துடன்!!

212- பக்கங்கள் கொண்ட ஒரு அறிக்கையை அந்தக் குழு வெளியிட்டிருக்கிறது; அந்த அறிக்கை எனக்குக் கிடைக்கவில்லை; அதனுடைய சுருக்கம் மட்டும் கிடைத்தது; அதிலேயே குழு எத்தனை அக்கறையுடன் பிரச்சினையை ஆராய்ந்திருக்கிறது என்பது

தெளிவாக்கப்பட்டிருக்கிறது.

மிகப் பெரிய வகையான மாறுதல்களைக் காலத்திற்கேற்பச் செய்தாலொழிய நிலைமை பலர் எதிர் பார்ப்பதைவிட விரைவில் மோசமாகிப் போய்விடும்.

என்று குழு எச்சரித்திருக்கிறது.

இந்தி ஆட்சிமொழி ஆகலாமா என்பதுபற்றி அறிந்து கொள்ள இங்கு அமைக்கப்பட்ட மொழிப் பிரச்சினைப் பற்றிய ஆய்வுக்குழுவில் அறிவாளர்கள் பலர் - சிலர் காங்கிரசார் - எச்சரித்திருந்தனர், இந்தியை ஆட்சி மொழியாக்குவதால் ஆபத்தான நிலைமை மூண்டுவிடும், நிர்வாகம் சீர்குலைந்துவிடும், ஓரவஞ்சனை தலைவிரித்தாடும், மொழி ஏகாதிபத்தியம் கொக்கரிக்கும், இந்திய ஒற்றுமை குலைந்துபோகும் என்றெல்லாம். இந்தியப்

பேரரசும் அதன் நடுநாயகர்களும் இந்த எச்சரிக்கையைப் பொருட்படுத்தவில்லை. பிரச்சினை சிக்கலற்றது; வேண்டுமென்றே சிலர் இதுபற்றி எதிர்ப்புக் காட்டுகிறார்கள்; நாடு பிரச்சினையை ஒப்புக் கொண்டு விட்டது என்று பேரரசினர் வாதாடி வருகின்றனர்.

மொழிப் பிரச்சினை குறித்து இங்கு இந்தியப் பேரரசினர் ஒரு தவறான கருத்தை விடாப்பிடியாக வற்புறுத்திக் கொண்டிருக்கிறார்கள். இந்தி மொழி பேசுவோர் மிகப்பெரிய அளவினராக - மெஜாரிட்டியாக - உள்ளனர்; மற்றமொழி பேசுவோர் சிறுபான்மையினராக உள்ளனர்; ஒரு நாடு ஆட்சி மொழியாக, பெரும்பான்மையினரின் மொழியைத்தான் ஏற்றுக் கொள்ள வேண்டும்; அதுதான் ஜனநாயகமுறை; சிறுபான்மை யோரின் மொழி அழியாதிருக்கப் பாதுகாப்புக் கேட்டுப்

பெறலாம், ஆனால், பெரும்பான்மையினரின் மொழியைத்தான் ஆட்சி மொழியாகக் கொள்ள வேண்டும் என்று கூறுகின்றனர்.

இந்த வாதம் ஜனநாயகப் பண்புக்கு உகந்தது அல்ல என்பதை 1867-லேயே கனடா அரசு உணர்ந்து சிறுபான்மை யோரின் மொழியான பிரஞ்சு மொழியையும் ஆட்சிமொழி என்று சட்டமூலம் அறிவித்தது.

நடைமுறையில், ஆங்கில மொழி பேசும் கனடியர்கள், பல்வேறு துறைகளிலும் தமது ஆதிக்கத்தைப் புகுத்தி, பிரஞ்சு மொழி பேசும் கனடியர்களை ஆத்திரம் கொண்டிடச் செய்துவிட்டனர், புதிய பிரச்சினையும் புகைச்சலும் புகையும் கிளம்பிவிட்டிருப்பதற்கு இதுதான் காரணம்.

நாம் அனைவரும் கனடியர்கள் அல்லவா! என்ற பேச்சு, அழகானது; பொது எதிரியைச்

சந்திக்க வேண்டிய நேரத்தில், அந்தப் பேச்சு எழுச்சியூட்டக் கூடியது. ஆனால் ஒரு பகுதியினர் மற்றோர் பகுதியினர் மீது ஆதிக்கம் செலுத்திக் கொண்டு, அந்த ஆதிக்கத்தை எதிர்க்கும் மக்களிடம், நாம் அனைவரும் கனடியர்கள் அல்லவா? என்று பேசும்போது, எழுச்சி எப்படி ஏற்படும்? எரிச்சல் அல்லவா உண்டாகும்!!

க்யூபெக்கில் மிகப் பெரும்பான்மையினர் பிரஞ்சு மொழியினர்; அவர்களுக்கும் பிரான்சுக்கும் மொழி தவிர வேறு எந்தவிதமான பந்தமும் பாசமும் இல்லை. கனடா அரசியலில் க்யூபெக் தனது பங்கினைச் செலுத்தி வந்தது; பிரான்சு நாட்டு நடவடிக்கைகளிலே க்யூபெக் எந்தவிதமான பங்கும் கொள்ளவில்லை.

இவ்விதமாக க்யூபெக் இருந்துவந்த போதிலும், கனடாவில் உள்ள ஆங்கிலமொழி

பேசுபவர், இங்கிலாந்து நாட்டு நடவடிக்கைகளிலே அக்கறை காட்டவும். சொந்தம் கொண் டாடவும் தவறவில்லை. அதேபோது, எமது மொழி, எமது பண்பாடு, எமது பாரம்பரியம் என்று க்யூபெக் மக்களும், கனடாவில் இதர பகுதிகளில் உள்ள பிரஞ்சு மொழி பேசுபவர்களும் பேசிட முன்வந்தபோது, "இது என்ன குறுகிய மனப்பான்மை! நாம் அனைவரும் கனடியர் அல்லவா! என்ற பழைய பல்லவியைப் பாடி வந்தது.

ஆதிக்கம் செலுத்துபவர் நாம் அனைவரும் கனடியர் அல்லவா என்று பேசி, சொந்தம் கொண்டாடியது, க்யூபெக் மக்களுக்குக் கோபத்தைத்தான் கிளறிவிட்டது. அவர்கள் சீறி எழுந்து, "நாங்கள் கனடியர்கள் அல்ல! பிரஞ்சுக்காரர்கள்! எமது நாடு தனி! பண்பாடு தனி!'' என்று பேசத் தலைப்பட்டனர்.

கனடா ஒரே அரசு என்று சட்டம்

ஏற்பட்ட நாளிலிருந்து, அதற்கு உட்பட்டு இருந்துவந்த க்யூபெக் இப்போது அந்த "ஓரரசு' ஏற்பாட்டினையே உடைத்து விடப்பார்க்கிறது, இது மிகப் பெரிய ஆபத்து என்று (கமிஷன்) குழுவினர் தெரிவித்துள்ளனர்.

பிளவு மனப்பான்மை தோன்றிவிட்டது கண்டிக்கத்தக்கது என்று கூறுவதோடு அந்தக் குழு தன் வேலை முடிந்துவிட்டதாகக் கருதவில்லை. மாறாக க்யூபெக் மக்களிடம் இந்த எண்ணம் எழுந்ததற்குக் காரணம், ஆங்கில மொழியினர் மேற்கொண்டுள்ள போக்குத்தான் என்று கண்டிக்கத் தயங்கவில்லை.

கனடா ஆங்கில மொழியினரின் நாடு, அதிலே பிரஞ்சு மொழி பேசுவோர் சிறுபான்மையினர் என்று ஓர் கருத்து நிலவுகிறது. இது மிகத் தவறான கருத்து. கனடா, ஆங்கில மொழி பேசுவோர், பிரஞ்சு

மொழி பேசுவோர் எனும் இரு சமூகங்களுக்கும் சொந்தமான நாடு; இதிலே பெருவாரியாக உள்ளவர்கள் என்ற காரணம் காட்டி, "எஜமானர்'களாகப் பார்த்திடும் ஆங்கில மொழியினரின் போக்கு, நியாயமுமல்ல, உண்மை ஜனநாயகமுமாகாது என்று குழு குறிப்பிட்டு, இப்போது கியூபெக் மக்கள் கேட்பது, சலுகை அல்ல; உரிமையைக் கேட்கிறார்கள்; கனடா ஒரே நாடாக எதிர்காலத்தில் இருக்க வேண்டுமானால், இந்த இரு சமூகங்களும் சரிசமமான நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கத்தக்க விதமான ஏற்பாட்டினை விரைவில் மேற்கொண்டாக வேண்டும் என்றும் குழு குறிப்பிட்டிருக்கிறது.

யார் பேசுவது நியாயம்? பிரஞ்சுமொழி பேசுவோர் கூறுவது நியாயமா? ஆங்கில மொழியினர் கூறுவது நியாயமா? இரண்டிலே

எது நியாயம் என்பது அல்ல பிரச்சினை. இரு வேறு "நியாயங்கள்' உள்ளன; இவை இரண்டும் நியாயங்களே! இவை இரண்டும் ஒன்றோடொன்று முட்டி மோதிக் கொள்ளாமல், இணைந்து இருக்க வழி கண்டுபிடித்தாக வேண்டும் என்று அந்தக் குழு கூறுகிறது.

தம்பி! இங்கு இந்தியை ஆட்சிமொழியாக ஏற்றுக் கொண்டாக வேண்டும் என்பதற்கு இந்தி ஆதரவாளர் கூறிடும் காரணம், இந்தியாவில் மிகப் பெரும்பாலோர் பேசும் மொழி இந்தி என்பதாகும்.

மிகப் பெரும்பாலோர் இந்தி பேசுகின்றனர் என்ற வாதமே தவறு; அந்தக் கணக்கே தவறு என்று நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்தியிலேயே பல்வேறு வகையான இந்தி உண்டு. ஒரு இந்திக்காரர் பேசுவது மற்றோர் இந்திக்காரருக்குப் புரியாது என்பதை,

மறுத்திட முடியாது இந்தி ஆதரவாளர்களால்.

தம்பி! இந்தியிலேயே என்னென்ன வகை உண்டு என்பது பற்றி நாவலர் பேசுவது என் காதிலே ஒலித்தபடி இருக்கிறது.

இந்திதான் பொது ஆட்சிமொழி ஆக வேண்டும் என்று வாதாடுபவர்கள், இதற்கு எந்தவிதமான சமாதானமும் கூற முயல்வது கூட இல்லை.

மைதிலி என்ற மொழி தனிமொழி என்று வாதாடுகிறார்கள் விற்பன்னர்கள்; அந்த மொழி பேசுவோர்களின் எண்ணிக்கை யையும் சேர்த்துக் கொண்டு, இத்தனை கோடி பேர் இந்தி பேசு கிறார்கள் என்று இந்தி ஆதிக்கக்காரர் கணக்குக் காட்டுகிறார்கள். மைதிலி தனிமொழி, அதையும் இந்தி என்று கூறிவிடுவது சரியல்ல என்று மைதிலி மொழிப் புலவர்கள் கூறுகின்றனர்.

மைதிலி மொழிக்காக என்று தனிவகுப்பு அமைக்கப் பட்டிருக்கிறதாக அறிகிறேன், டில்லி பல்கலைக் கழகத்தில்.

கலாச்சாரக் கழகம் எனும் அமைப்பை இந்தியப் பேரரசு நிறுவி, ஒவ்வொரு மொழியிலும் வெளியிடப்படும் சிறந்த கருத்தோவியத்துக்குப் பரிசு தருகிறது, இந்தத் திட்டத்தின்படி, மராத்தி, குஜராத்தி, தமிழ், இந்தி என்று பல மொழிகளுக்குப் பரிசு இருக்கிறது.

மைதிலி, இந்தி அல்ல; அது ஒரு தனிமொழி என்பதை ஒப்புக்கொள்ளும் முறையில் இந்தியப் பேரரசு, இந்தி, வங்காளி, மராத்தி போன்ற மொழிகளுக்குப் பரிசு வழங்குவது போல, மைதிலிக்கும் தனியாகப் பரிசு வழங்கும் ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

இந்தி மிகப் பெரும்பான்மையினர் பேசும் மொழி என்ற வாதமே தவறு; கணக்கே தவறு.

இந்தியே மிகப் பெரும்பான்மையினர் பேசும் மொழி என்பது உண்மை என்று வைத்துக் கொண்டால்கூட, மிகப் பெரும்பான்மையினர் பேசுவது என்பதற்காக மற்ற மொழியினர் மீது அந்த மொழி ஆதிக்கம் செலுத்துவது அறமாகாது; அறிவுடைமையாகாது என்ற தீர்ப்பு அளிப்பார்கள், கனடாவில் அமைக்கப்பட்ட ஆய்வுக்குழுபோல ஓர் தகுதிமிக்க குழு இங்கு அமைக்கப்பட்டால்.

தம்பி! இப்போது இங்கே சொல்லுகிறார்கள் அல்லவா, வடக்கே உள்ளவர்கள் ஏதாவது ஒரு தெற்கத்தி மொழியைப் படித்துக் கொள்ள விரும்புகிறார்கள், முன் வந்துள்ளனர் என்று; அதுபோல, எதிர்ப்பும் எரிச்சலும்

வளர்ந்துவிட்டிருப்பது கண்டு, ஆங்கில மொழி பேசுவோர், இனித் தங்கள் பிள்ளைகளுக்குப் பிரஞ்சு மொழியைக் கற்பிக்கப் போவதாகவும், பிரஞ்சு மொழிக்கான பள்ளிக்கூடங்களைத் தமது பகுதியில் இனி அமைக்கப் போவதாகவும் பேசுகின்றனர்.

இதைக் கேட்டு கியூபெக் மக்கள் புளகாங்கிதம் அடைந்து விடவில்லை. இது மயக்கும் பேச்சு, பயன் இல்லை என்று கூறுகின்றனர்.

கியூபெக்கில் உள்ள மக்களில் 100-க்கு 98 பேருக்கு ஆங்கிலம் தெரியாது; அங்கு அன்றாட நடவடிக்கைகள் அனைத்தும் பிரஞ்சு மொழியில்.

ஆனால், கியூபெக்கில் வணிகக் கோட்டங்களையும் தொழிற்கூடங்களையும் அமைத்துக் கொண்டுள்ள ஆங்கில

மொழியினர், தமது அலுவலக நடவடிக்கைகள் அனைத்தையும் ஆங்கில மொழியிலேயே அமைத்துக் கொண்டுள்ளனர்.

கியூபெக் மக்கள் அந்த அலுவலகங்களில் பணிபுரியும்போது, "அன்னியர்' போன்ற ஒரு உணர்ச்சி தன்னாலே ஏற்பட்டு விடுகிறது. நாம் அனைவரும் கனடியர் அல்லவா!! - என்று பேசுவது, அந்தச் சமயத்தில் எவ்வளவு பெரிய கேலிக்கூத்தாக இருக்கும் என்பதை எண்ணிப் பார்த்துக் கொள்ளேன்.

அந்த அலுவலகங்களில் பெரும்பாலான நடவடிக்கை ஆங்கில மொழியிலேயே நடத்தப்படுவதால், ஆங்கில மொழி பேசுவோரே, பெரிய இடங்களில் அதிகாரிகளாக முடிகிறது. கியூபெக் மக்கள் "எடுபிடி' வேலை மட்டுமே பார்க்க முடிகிறது.

கியூபெக் நமது நாடு; இங்குத் தொழில்

நடத்திப் பெற்றிடும் செல்வம் நம்முடையது. ஆனால், இங்கு நமக்கு "எடுபிடி' வேலை!! இது அக்கிரமம்! சொந்த நாட்டிலேயே நாம் அடிமைகளாக்கப் பட்டிருக்கிறோம்! இந்த அக்கிரமத்தை எப்படிச் சகித்துக் கொள்வது; ஏன் சகித்துக் கொள்ள வேண்டும் என்று கியூபெக்கில் எழுச்சி பெற்ற மக்கள் கேட்கின்றனர். அந்தக் கேள்வி கோபத்தை மூட்டவில்லை கனடா அரசுக்கு, சிந்தனையைக் கிளறி விட்டிருக்கிறது.

இந்திதான் ஆட்சி மொழி என்ற நிலை வந்தே தீரும் என்று பேச்சு வலுவடைய வலுவடைய, டில்லி போன்ற வடநாட்டுப் பெருநகர்களில், அரசாங்க அலுவலகங்களிலே மட்டுமல்ல, தனியார் துறையில் உள்ள அமைப்புகளில், வணிகக் கோட்டங்களில், மிகப் பெரும்பாலான நடவடிக்கைகளை இந்தியிலேயே

நடத்த முற்பட்டுவிட்டனர். ஆங்கிலம் தெரிந்தவர்கள்கூட இந்தியிலேயே பேசுவது, இந்தியிலேயே அலுவலகக் குறிப்புகளைத் தயாரிப்பது என்ற முறையில் மும்முரமாகிவிட்டனர்.

படிப்பில், பயிற்சியில், செயல் திறமையில் தகுதி மிக்கவர் களாக உள்ள தென்னகத்தார், அத்தகைய அலுவலகங்களில், இந்திப் படை எடுப்பின் காரணமாக இப்போது இடர்ப்படுகின்றனர்.

இங்கே தரப்படுவதில் அரைப்பகுதி கிடைக்கும் என்றாலும், இதை விட்டுவிட்டுத் தமிழ் நாட்டுக்குத் திரும்பி வந்துவிடலாம் என்று பார்க்கிறோம்: இங்கே இனி அதிக நாட்களுக்கு இருக்க முடியாது போலிருக்கிறது என்று இப்போதே அவர்கள் குமுறிக் கூறி வருகின்றனர்.

இந்தி மட்டுமே ஆட்சிமொழி; ஆங்கிலம் அறவே அகற்றப்படும் என்ற நிலையில் இன்னும் எவ்வளவு தத்தளிக்க வேண்டி நேரிடும் என்பதை எண்ணிப் பார்க்கும் போதே திகில் மூண்டுவிடுகிறது, நிச்சயமாக.

தம்பி! இருமொழித் திட்டத்தை மேற்கொண்ட நிலையிலேயே மறைமுகமான அநீதி இழைக்கப்படுவதாக, க்யூபெக் மக்கள் கூறி எதிர்க்கிறார்கள்; இங்கோ காமராஜர் துணிந்து கூறுகிறார், போனால் போகட்டும் என்று. ஆங்கிலமும் சிறிது காலம் இருந்துவரட்டும் என்று ஏற்பாடு செய்கிறோம்; ஆனால் ஒன்று மட்டும் இப்போதே கண்டிப்பாகக் கூறி விடுகிறேன்; இந்த ஆங்கிலம் என்றென்றும் இருந்து வரும் என்று எண்ணிக் கொள்ளாதீர்கள்; இந்தி மட்டுமே ஆட்சி மொழி என்ற நிலை எப்படியும் ஏற்பட்டே தீரும், என்பதாக.

அந்த நிலையில், என்னென்ன விதமான ஆதிக்கம் அநீதி அக்கிரமம் நெளியும் என்பதை எண்ணிப் பார்த்திடும் எவர்தான், இன்றிருந்தே இந்தியை எதிர்த்தாக வேண்டும் என்ற உணர்ச்சி கொள்ளாமலிருக்க முடியும்?

அந்த உணர்ச்சி கொந்தளித்துக் கொண்டிருக்கிறது. அச்சமூட்டி அதனை அழித்திட முடியவில்லை; கனிவாகப் பேசி அதனைக் கட்டுப்படுத்த முடியவில்லை? அந்த உணர்ச்சி, கட்சிக் கட்டுகளைக்கூட இடித்துத் தள்ளிக் கொண்டு, பரவிக் கொண்டிருக்கிறது. துரைத்தனம் மேற்கொள்ளும் அடக்குமுறை அந்த உணர்ச்சியை மேலும் மேலும் வளர்த்திடச் செய்து வருகிறது.

ஆனால், தம்பி! அந்தவிதமான உணர்ச்சியைக் கனடா அரசு மதித்து, பரிகாரம் தேடிட முயல்வதுபோல இங்கும் இந்தியப் பேரரசு தக்க முறையை மேற்கொள்ள

வேண்டுமானால், அந்த உணர்ச்சியை எதற்குப் பயன்படுத்தி, எவ்விதமாகப் பணியாற்றி, வெற்றி பெற்றிட வேண்டும் என்பது பற்றித்தான் இப்போது அனைவரும் தீவிரமாகச் சிந்தித்தாக வேண்டும்.

குழப்பம், கலகம், பலாத்காரம், நாசவேலை என்பவைகள் மூலம், இந்தி எதிர்ப்புணர்ச்சியை இந்தியப் பேரரசு உணர வேண்டும் என்று எண்ணுவதும், அம்முறையில் செயலாற்று வதும், நிச்சயமாகப் பயன் தராது. மாறாக, இந்தி எதிர்ப்புணர்ச்சி யையே அது அழித்தொழித்துவிடும்.

பலாத்காரத்துக்குப் பணிய முடியுமா? சட்டம் ஒழுங்கு காப்பாற்றப்பட வேண்டாமா? என்று துரைத்தனம் கேட்கும்; பொதுமக்கள் "ஆம்' என்றுதான் கூறுவார்கள்; இதிலே சந்தேகம் வேண்டாம்.

ஏனெனில், மிகத் தூய்மையான கொள்கைக்காகக்கூட பலாத்காரம் - அவிழ்த்து விடப்பட்டு, அது தன்னுடைய கோரத் தாண்டவத்தை நடத்திட ஒரு அரசு அல்லது ஒரு சமூகம் அனுமதித்து விடுமானால், பிறகு அதேவிதமான பலாத்காரத்தை மிக மோசமான காரியத்துக்காக, நச்சு நினைப்பினர் மேற்கொண்டிட முடியும். பிறகு நாடு, காடு ஆவது தவிர வேறு வழியில்லை.

க்யூபெக் கனடாவில் ஒரு பகுதிதான் என்றாலும், இன்று ஒரு கமிஷன் நியமித்துப் பிரச்சினைக்குப் பரிகாரம் தேடியாக வேண்டும் என்ற அளவுக்குக் கனடப் பேரரசு எதனாலே வந்திருக்கிறது? பலாத்கார நடவடிக்கையினால் அல்ல!

உணர்ச்சியை வகைப்படுத்தி, அந்த உணர்ச்சி கொண்ட சர்க்காரை க்யூபெக்கில் அமைத்ததால்!!

இந்தி எதிர்ப்புணர்ச்சியையும் இந்தியப் பேரரசு மதித்து, இந்தி பேசாதாரின் உரிமைகளை வழங்கிடத்தக்க ஏற்பாட்டினை மேற்கொள்ள வேண்டுமானால் - பலாத்காரத்தால் அல்ல - இந்தி எதிர்ப்புணர்ச்சி கொண்ட சர்க்காரை இங்கு அமைத்துக் காட்ட வேண்டும். அது மட்டுமே இந்தியப் பேரரசின் மமதையை மாய்க்கும்' பிடிவாதத்தைப் போக்கும், பிரச்சி னையைத் தீர்த்து வைக்கும்.

கனடப் பேரரசு கொண்டுள்ள முறையினை அப்படியே ஒப்புக்கொள்ளும் அரசு இருந்து வந்தது, க்யூபெக்கில், முன்பு.

க்யூபெக் மக்கள் மட்டும், ஆங்கில மொழியினரின் ஆதிக்கத்தை எதிர்த்து வந்தனர்; கிளர்ச்சி செய்தனர்; வேலை நிறுத்தங்கள், சச்சரவுகள் நடைபெற்றன.

வேலை நிறுத்தங்களை உடைக்கவும், சச்சரவுகளை அடக்கவும்தான் கனடா பேரரசு முனைந்தது, அந்த நாட்களில்.

பிறகு, தெளிவு பெற்றவர்கள், ஆங்கில மொழியினரின் ஆதிக்கத்தை எதிர்க்கும் உணர்ச்சி மக்களிடம் வெளிவந்தால் மட்டும் போதாது, அந்த உணர்ச்சியின்மீது கட்டப்பட்ட அரசு க்யூபெக்கில் அமையவேண்டும் என்று திட்டமிட்டுப் பணியாற்றினர்.

அத்தகைய அரசு அமைந்தது க்யூபெக்கில்; இனி இந்தப் பிரச்சினையைப் புறக்கணிக்க முடியாது என்று கனடப் பேரரசு, கைகூப்பிய நிலை பெற்றது.

இப்போது க்யூபெக்கில், மக்களின் எண்ணம் வேறு, அரசின் எண்ணம் வேறு என்பது அல்ல நிலை.

தம்பி! இதனை மறந்திடலாகாது; எத்தனை

வலுவுள்ளது என்று நாம் கூறினாலும், இந்தி எதிர்ப்புணர்ச்சி என்பது தமிழ் மக்களிடையில் - அதிலும் தெளிவும் துணிவும் பெற்ற, தன்னலம் மறந்த பகுதியினரிடையில் - காணப்படுவதேயன்றி, தமிழக அரசுடையது அல்ல.

தமிழக அரசு, இந்தி ஆதரவாளர்களின் முகாம்; இது கண்டு அருவருப்புக் கொண்டிடுவதால் மட்டும் ஆகப் போவது ஒன்றும் இல்லை.

அரசு என்ன அரசு! மக்களின் சக்தியின் முன்பு இந்த அரசு எம்மாத்திரம்! என்று பேசலாம்! சுவையும் சூடும் மிகுந்திருக்கும். ஆனால், உலகம் ஒரு கேள்வி கேட்கும், அதற்குப் பதில் தர முடியாமல் திணறுவோம்.

அரசினையே துச்சமென்று கருதத்தக்கவிதமாக இந்தி எதிர்ப்பு உணர்ச்சி

தமிழக மக்களிடம் இருப்பதாக வீரம் பேசுகிறாயே ஐயா! அந்த வலிவினைக் கொண்டு, இந்தி எதிர்ப்பு உணர்ச்சி கொண்ட அரசு அமைத்திட ஏன் முடியவில்லை உம்மால்? என்று கேட்கும்!! அது. . . அது. . . என்று இழுத்துப் பேசினால் பயன் இல்லை.

இந்தி எதிர்ப்பு உணர்ச்சி என்பது மக்களில் ஒரு பகுதியினரின் உணர்ச்சி மட்டும் அல்ல, தமிழக முழுவதும் ஊடுருவிப் பாய்ந்துள்ள உணர்ச்சி என்பது உண்மை என்றால் அந்த உணர்ச்சி கொண்ட அரசு ஏன் அமைக்கக் கூடாது, தமிழகத்தில்?

கலயங்களிலே வண்ணக் குழம்புகளை நிரப்பி வைத்துக் கொண்டு, தூரிகை கொண்டு, ஓவியம் தீட்டிட வேண்டும் அது ஓவியன் வேலை. வண்ணக்குழம்பினை மனம் போன போக்கிலே அள்ளித் தெளிப்பது ஓவியக் கலையல்ல.

உணர்ச்சியைப் பயன்படுத்துவதும், தம்பி! ஒப்பற்ற திறமை தேவைப்படும் ஒரு நுண்கலை.

தமிழகத்தில் இன்று காணப்படும் உணர்ச்சியைத் திறமையுடன் பயன்படுத்தி, இந்தி எதிர்ப்புணர்ச்சியின் மீது கட்டப்பட்ட அரசு காணவேண்டும் தமிழகத்தில்.

இந்தி எதிர்ப்புணர்ச்சியைத் தமிழகத்தில் அரியணை ஏறச் செய்வதிலே வெற்றி பெறாமல், இந்தியப் பேரரசின் துணையுடனும் தமிழகக் காங்கிரஸ் அரசின் ஒப்புதலுடனும் அரியணை ஏறிடும் இந்தியை எப்படி விரட்ட முடியும்? கேட்க மாட்டார்களா, இந்தியப் பேரரசினர் உன்னுடைய இந்தி எதிர்ப்புணர்ச்சிக்கு உன்னுடைய தமிழகத்திலேயே தரவேண்டிய மதிப்பினை மக்கள் தந்திருந்தால், தமிழக அரசு இந்தி எதிர்ப்பு அரசாக அல்லவா

வடிவம் பெற்றிருக்கும்; காணோமே; உன்னுடைய இந்தி எதிர்ப்பு உணர்ச்சியை ஒப்புக்கொள்ளும்படி உன்னுடைய மக்களையே உன்பக்கம் கொண்டுவர முடியவில்லை உன்னால், நான் உனக்குப் பணிய வேண்டுமா! கூரை ஏறிக் கோழி பிடி ஐயா! முதலில்!! பிறகு கோபுரம் ஏறி வைகுந்தத்திற்கு வழி அமைக்கலாம்!! என்றெல்லாம்.

எனவேதான் தம்பி! க்யூபெக் மக்கள், முதலில், தம் வழி நடந்திடும் அரசு அமைப்பதில் வெற்றி கண்டனர்; அந்த வெற்றியைக் கண்டபிறகு கனடப் பேரரசு, க்யூபெக்கின் கேள்வி களைப் புறக்கணிக்க முடியவில்லை.

கனடாவின் பிரச்சினை இந்தக் கருத்தினை நாம் பெற்றிடவும் பயன்படுகிறது. ஆனால் தம்பி! இதனை நான் உணர்ந்து

என்ன பலன்! நீ உணர்ந்து மட்டும் என்ன பலன்! இந்தி எதிர்ப்பு உணர்ச்சி கொண்ட அனைவரும் உணர்ந்து தமிழக அரசினை மாற்றி அமைக்கும், உறுதி கொண்டால்தானே பலன் கிடைக்கும்?

இந்தியைத் தமிழக மக்களிலே ஒரு பகுதியினர் எதிர்க்கிறார்கள், தமிழக அரசு இந்தியை ஆதரிக்கிறது என்ற நிலை இருக்குமட்டும், இந்தியப் பேரரசு இறுமாந்து நிற்கும்; உலக ஜனநாயக நாடுகள்கூட, இந்தியப் பேரரசின் போக்கைக் கண்டிக்கத் தயங்கும்.

ஆனால், தமிழக அரசு இந்தி ஆட்சி மொழியாவதை எதிர்க்கிறது என்ற நிலை பிறந்திடும்போது இந்தியப் பேரரசு, அந்த உணர்ச்சியைப் புறக்கணிக்கத் துணியாது; துணியுமானால், இந்தியப் பேரரசை ஜனநாயக உலகு கண்டித்திட முனைந்திடும்.

பிரஞ்சு மொழியினரின் கிளர்ச்சியை இன்று கனடப் பேரரசு மதித்தாக வேண்டிய நிலை ஏற்பட்டதன் காரணத்தைக் கருத்துடன் ஆராய்ந்து பார்த்தால், தம்பி! இந்தி எதிர்ப்பு உணர்ச்சி வெற்றி பெறுவதற்கான வழி அந்த உணர்ச்சிமீது கட்டப்பட்ட அரசு தமிழகத்தில் அமைவதுதான் என்பது புரியும். இதனைப் புரிந்திடச் செய்திடும் பணியினைத்தான் தம்பி! நீ மேற்கொண்டிருக்கிறாய். உன் வெற்றியைப் பொறுத்துத்தான் இருக்கிறது, நாட்டின் எதிர்காலம்.

அன்புள்ள

அண்ணாதுரை

20-6-65

13. இடியோசையில் கிடைக்காது இன்ப நாதம்

ஜனநாயகமற்ற நாடுகளின் நிலை மாற்றுக் கருத்தைச் சந்திக்க அஞ்சும் ஆட்சியாளர்கள்
அகம்பாவம் அரசோச்சும் புதிய பல நாடுகள்
ஜனநாயகம், அரசுமுறை மட்டுமன்று; வாழ்க்கை நெறி!

தம்பி!

பென்பெல்லா பதவியிலிருந்து விரட்டப்பட்டார்; அவர் கைது செய்யப்பட்டதாகத் தெரிகிறது; இருக்குமிடம் அறிவிக்கப் படவில்லை; என்ன கதி என்பது பற்றிக் கேட்பவர்களிடம், கொடுங்கோலர்கள் என்ன கதி அடைந்தார்களோஅதுதான் இவருக்கும் என்ற பதில் அளிக்கப்படுகிறது;

பட்டாளத்துத் தலைவர் பட்டத்துக்கு வந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. திடுக்கிடச் செய்திடும் இந்தத் திடீர்மாற்றம், அல்ஜீரியா நாட்டில் நடைபெற்றிருக்கிறது.

பென்பெல்லாவிடம் அல்ஜீரிய மக்கள் சொக்கிக் கிடக்கிறார்கள் என்றும், அவருடைய சுட்டுவிரல் அசைவு கண்டு அதன்படி நடந்திடத் துடித்தபடி உள்ளனர் என்றும், அவருடைய அறிவாற்றலையும் தன்னலமற்ற போக்கையும் ஆபத்துக்களைத் துச்சமென்றெண்ணிச் செயலாற்றும் துணிவினையும், நாடுவாழ் மக்கள் ஏற்றம் பெற ஓயாது உழைத்திடும் ஆர்வமிகுதி பற்றியும் கனிவுடன் பேசினர் பலப்பலர்; கவிதைகள் புனைந்தனர் மற்றும் சிலர்; காட்சிகளைப் படமாக்கிப் பாரினுக்குத் தந்தனர் செய்தி அறிவிப்போர்.

அல்ஜீரிய விடுதலைக்காக பென்பெல்லா போராடி வந்த நிகழ்ச்சியே நாட்டின்

பெருங்காப்பியமாகி விட்டது என்று கூறப்பட்டது. பென்பெல்லா பிரஞ்சு அரசினரால் சிறைப் படுத்தப்பட்ட செய்தி கேட்டபோது அல்ஜீரிய மக்கள் பதறினர்; உள்ளம் உருகிடும் நிலையினராயினர். பென்பெல்லா, பிரஞ்சுச் சிறையினின்றும் எப்படியோ தப்பித்துவிட்டார்; பிடிபடவில்லை; பிரஞ்சுக் கொடியவர்களின் கரங்களால் தீண்டப்பட முடியாத நெடுந்தொலைவு சென்று விட்டார்; உலவுகிறார் முழக்கமிட்டபடி; அல்ஜீரியா விடுதலை அடையா முன்பு நான் இறந்துபடுவேனோ! நான் இருப்பது எதற்கு? என் நாட்டை விடுவிக்க! என் நாடு விடுவிக்கப்பட்டது என்ற இன்பச் செய்தி கிடைத்த பிறகே அந்தச் செய்தி எனது இமைகளைத் தடவிடும்போதுதான் எனக்குத் துயில் கொள்ளவே இயலும்! இப்போது எனக்கு வேறு எதற்கும் நேரம்

இல்லை; விடுதலைப் போராட்டத்துக்குத் தவிர - என்றன்றோ கூறுவார் எம் தலைவர்!! அவரைக் கொன்றுவிட முடியுமா பிரஞ்சுக் கொடியவர்களால்! எழுச்சியை மாய்த்திட இயலுமோ!! என்றெல்லாம் நாட்டுப்பற்று மிக்கவர்கள் கூறினர் எக்களிப்புடன்; புரட்சிப் போக்கினர் பிரஞ்சுக்காரர்களை வாய்ப்புக் கிடைத்த போதெல்லாம் தாக்கினர், வெட்டி வீழ்த்தினர்; புரட்சியாளர் பலப்பல ஆயிரவர் சுட்டுத் தள்ளப்பட்டனர். இறந்துபடுமுன்பு அவர்கள், வாழ்க அல்ஜீரியா! வாழ்க பென்பெல்லா! என்றே முழக்கமிட்டனர். அந்த இன்ப எண்ணம் தந்த புன்னகை பூத்த முகத்துடனேயே வீழ்ந்தனர் அவ்வீரர்கள்.

காவியச் சிறப்புக்குரியதான வீரதீரச் செயல்களை வெற்றியுடன் நடத்திக்காட்டியவர், நாட்டுப்பற்றுமிக்கவர், மக்களுக்கு வழிகாட்டி என்றெல்லாம் புகழாரம் சூட்டப்பட்ட நிலையில்

இருந்து வந்தவர் பென்பெல்லா. நாடுகள் பல, அவரே அல்ஜீரியா நாட்டின் ஒப்புயர்வற்ற தலைவர் என்று ஏற்றுக் கொண்டன. அவருடைய அழைப்பினைப் பெற்ற பல நாடுகள், அல்ஜீரியத் தலைநகரில் கூடி, பாண்டூங் மாநாட்டிலே பெற்ற "பஞ்ச சீல'த்தை மேலும் பேணி வளர்த்திட வழி காண மாநாடு நடத்தவும் திட்டம் வகுத்தன. அதற்கான ஏற்பாட்டிலே மும்முரமாக ஈடுபட்டிருக்கிறார் பென்பெல்லா என்ற செய்தி அடிக்கடி வெளிவந்தபடி இருந்தது. குமுறல் எதிர்ப்புணர்ச்சி குறிப்பிடத்தக்க அளவு இருப்பதாகக்கூடத் தகவல் ஏதும் தரப்படவில்லை. சிரித்திடும் முல்லைக்கொடி, குதித்திடும் பூங்கா, திடீரெனக் கிளம்பிய புயலால் பெயர்த்தெறியப்பட்டுவிடுவது போல, வெடித்த எதிர்ப்பு, பென்பெல்லாவை உச்சியிலிருந்து ஒரே அடியாகக் கீழே உருட்டி

விட்டது. அவருக்கு அடுத்த இடத்தில் இருந்து வந்தவர் பெதோயின் என்பார் இப்போது, அல்ஜீரிய அரசு எம்மிடம்! இராணுவத்திடம்! இராணுவம் ஜனநாயகத்தைக் காப்பாற்ற, கொடுங்கோலனை வீழ்த்த நடவடிக்கை எடுத்துக் கொண்டது; இது அல்ஜீரியாவின் மக்களின் நலனுக்காகச் செய்யப்பட்டுள்ள மாறுதல்; மற்ற எந்தத் துறையிலும், அதிலும் குறிப்பாக வெளிநாடுகளுடன் அல்ஜீரியா கொண்டுள்ள தொடர்பு நிலையைப் பொருத்த வரையில், எந்தவிதமான மாறுதலும் இல்லை என்று தெரிவித்திருக்கிறார்.

வெளி உலகுக்குக் கனிவுடன் செய்தி அளித்திடும் புதியவர், பென்பெல்லா பற்றிய கேள்வி எழும்போது மட்டும் கொதிப்புடன் பேசுகிறார்; பென்பெல்லா செய்துள்ள கொடுமைகள் உங்களுக்குத் தெரியாது என்கிறார்.

பென்பெல்லாவுக்கு நேரிட்டு விட்டது பற்றி எண்ணிடும் போது, திகைப்பாகவும் இருக்கிறது; அதேபோது நாட்டு விடுதலைக்காக அரும்பாடுபட்ட தலைவனுக்கா இந்தக் கதி! என்று பதைபதைத்துக் கேட்கவும் தோன்றுகிறது.

பென்பெல்லாவிற்கு ஏற்பட்டது பற்றிப் பதறுகிறோம்; ஆனால், பென்பெல்லா அரசுத் தலைவரான உடன் எதிரிகள், வேண்டாதவர்கள், கருத்து மாறுபாடு கொண்டவர்கள் ஆகியோரை என்ன செய்தார் என்று பார்க்கும்போது அருவருக்கத்தக்க, கண்டிக்கத்தக்க முறையிலேதான் நடந்து கொண்டார் என்பது தெரிகிறது. விடுதலைப் போரில் பெரும் பங்கெடுத்துக் கொண்டவரும், பென்பெல்லா அல்ஜீரியாவில் இல்லாத நாட்களில் தலைமை ஏற்றிருந்தவருமான அபாஸ், சிறையில் தள்ளப்பட்டார்; வேறு

பலர் சுட்டுத் தள்ளப்பட்டனர்; பலர் நாடு கடத்தப்பட்டனர்; சிலர் தப்பி ஓடிவிட்டனர்; அப்படித் தப்பி ஓடியவர்கள் மீது வழக்குத் தொடுக்கப்பட்டு, "மரண தண்டனை' தரப்பட்டது.

அப்படி மரண தண்டனை விதிக்கப்பட்ட கிதர் என்பார், ஸ்பெயினில் மாட்ரிட் நகரில் தங்கியிருக்கிறார்; அவருடைய திட்டப்படிதான், பென்பெல்லா கவிழ்க்கப்பட்டார் என்றும் செய்தி உலவுகிறது.

பென்பெல்லாவின் ஆதரவாளர்கள் கிளர்ச்சி நடத்துவ தாகவும், அதனை அடக்குமுறையால் புது அரசினர் அழித்திட முனைவதாகவும், துருப்பு நடமாட்டம், டாங்கிகள் நடமாட்டம், வேட்டுச் சத்தம் மும்முரமாக இருப்பதாகவும் செய்திகள் வெளி வந்துள்ளன.

தம்பி! இந்த மடல் உன் கரம் கிடைத்திடுவதற்குள் வேறு என்னென்ன நிகழும் என்று கூறுவதற்கில்லை.

நான் எழுதுவது நடைபெற்றது நியாயமா அல்லவா என்பது பற்றிய கருத்துத் தெரிவிக்கவோ, எதிர்காலத்தில் என்ன நடந்திடும் என்று ஆரூடம் கணித்திடவோ அல்ஜீரியாவின் நிலை பற்றி எடுத்துக் கூறவோ அல்ல.

பொதுவான இரண்டு கருத்துக்களை எடுத்துக்காட்ட மட்டுமே, பென்பெல்லா கவிழ்க்கப்பட்டது பற்றிக் குறிப்பிட்டேன்.

ஒன்று உண்மையான ஜனநாயகம் நிலைத்து நின்றாலொழிய அரசியல் என்பது அதிர்ச்சிகளும், அமளிகளும், திடுக்கிடும் நிகழ்ச்சிகளும் திடீர்மாற்றங்களும் கொண்டதாகி விடும்; சதிகாரர்கள், பதுங்கிப்

பாய்வோர், அடுத்துக் கெடுப்போர், அமளி மூட்டுவோர் ஆகியோர் மட்டுமே பங்கு கொள்ளத்தக்க துறையாகிவிடும் அரசியல்.

வெடிகுண்டுகள்தான் பிரச்சினைகளைத் தீர்க்கும்; கூடிப் பேசுதல், கருத்தறிதல், விட்டுக் கொடுத்தல், இணைந்திருத்தல் என்பன, பொருளற்ற பேச்சாகிவிடும். சுடு! அல்லது சுடப்படு! கொல்லு! அல்லது மடிந்துவிடு! என்ற நிலை ஏற்படும். ராணுவத்தை எவர் தமது பக்கம் கொண்டு செல்ல முடிகிறதோ, அவரே மற்றவர்களை மீறிடவும், அரசினைக் கைப்பற்றிடவும் முடியும் என்ற நிலை ஏற்பட்டுவிடும். அந்த நிலையில், அரசியல் நடவடிக்கைகளிலே பொதுமக்களுக்குத் தொடர்பு, தோழமை ஏதும் இருந்திட முடியாது. வல்லான் வகுத்ததே வாய்க்கால் என்றாகி விடும். அரசு அமைப்பவர்களாக அல்ல, அரசுக்கு அஞ்சி நடப்பவர்களாகிவிடுவர்

மக்கள். எந்தச் சமயம் என்ன நேரிடும், எந்த முறை எத்தனை காலம் இருக்கும், எவர் எத்தனை நாள் தலைமையில் இருப்பார், எவர் வழி ஏற்ற வழி, எந்த வழி நீண்ட நாட்களுக்கு மேற்கொள்ளத்தக்க வழி என்பது பற்றி எல்லாம் ஒரே குழப்பம் ஏற்பட்டு, பீதி ஏற்பட்டு, மக்கள் பதறிக் கிடப்பர். அந்த நிலையில் வாழ்வு செம்மையாக இருந்திட இயலாது; தொழில் வளம் ஏற்படாது; அகப்பட்டதைச் சுருட்டுவது, அடிவருடிக் கிடப்பது, வதைபட்டுச் சாவது என்ற கொடுமை மிகுந்துவிடும். படைபலம் காட்டிப் பதவி பறிப்பவன் இறுதிவரை அந்தப் படைபலத்தை நம்பியே வாழ வேண்டும்; அதுபோன்ற படைபலம் வேறு எவரிடமும் சேர்ந்துவிடாதபடியும் பார்த்துக் கொண்டாக வேண்டும்; தனக்குக் கிடைத்துள்ள ஈடு எதிர்ப்பற்ற பதவி மீது எவருக்கும் ஆவல் எழாதபடி பார்த்துக்

கொண்டாக வேண்டும். எவருக்கேனும் அவ்விதமான ஆசை தோன்றினால், முளையிலேயே கிள்ளி எறிந்திட முனைய வேண்டி நேரிடும்! எவரிடமும் சந்தேகம்! எதற்கெடுத்தாலும் ஆத்திரம்! எவரிடமும் உண்மையைக் கூறாமலிருக்கும் போக்கு! இப்படிப்பட்ட இயல்புகள் நோயாகிவிடும்!

நோய் முற்ற முற்ற என்னாலன்றி வேறு எவராலும் இந்தச் செயலைச் செய்திட முடியாது என்ற எண்ணம் இறுமாப்பாகி, எவரேனும் நட்புரிமையுடன் இதனை இப்படிச் செய்திடலாமே என்ற யோசனையை, கனிவுடன், மரியாதையாகக் கூறினால் கூடக் கொதித்துக் குதித்து, என் முறையில் தவறு கண்டுபிடிக்கும் அளவு பெரியவனாகி விட்டாயா! அவ்வளவுக்கு வளர்ந்து விட்டதா உன் ஆணவம்! என்று கொக்கரிக்கவும், அவனைப் பகைவனாகக் கருதிக் கொள்ளவும்

முற்படுவர். விளைவுகள் வேதனை தருவனவாகி விடும் - நாட்டுக்கு - மக்களுக்கு.

உண்மையான ஜனநாயகத்திலேதான் எத்தனை பெரிய வலிவுடன் உள்ள ஆட்சித் தலைவரிடமும், குறைகாண, மாற்றுமுறைகூற, திட்டத்தைக் கண்டிக்க மற்றவர்களுக்கு உரிமை கிடைக்கிறது.

குறை கூறுவதில், கண்டிப்பதில், எதிர்ப்பதில் ஒரு சுவை இருக்கிறது என்பதற்காக அல்ல, அந்த முறை இருப்பது; குறை கூறும் உரிமை கொண்டவர்கள் இருக்கிறார்கள், எதிர்த்திடும் வாய்ப்புப் பெற்றவர்கள் இருக்கிறார்கள், அவர்களும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டுத்தான் அரசாளும் அவையில் அமர்ந்திருக்கிறார்கள். நம்முடைய ஆட்சியிலே மக்கள் அருவருப்பு அடைவார்களானால், எதிர்வரிசையினரை அழைத்து ஆட்சிப் பொறுப்பை

ஒப்படைத்துவிடக்கூடும். ஆகவே அவர்கள் குறை சொன்னால் பொறுமையுடன் கேட்டுக் கொள்ளத்தான் வேண்டும், பொறுப்புடன் பதிலளிக்கத்தான் வேண்டும் என்ற மரபு ஏற்படுகிறது, அதன் காரணமாக எவரும் எம்மை மிஞ்சுவார் இல்லை என்ற இறுமாப்பு பெறமுடியாது போகிறது; மக்களை மதித்து நடந்திடும் மாண்பு மணமளிக்கிறது. இவ்வளவும் உண்மையான ஜனநாயகம் இருக்கும் இடத்தில்! ஒப்புக்கு ஜனநாயகம் உள்ள இடத்தில் அல்ல! உள்ளத்தில் ஜனநாயகம் குடிகொண்டுள்ள இடத்தில்; உதட்டளவு உறவாடும் இடத்தில் அல்ல!

உண்மையான ஜனநாயகம் நடைமுறையில் இருக்கும் இடத்தில் அரசாள்வோர் மாறுவர்; அதிர்ச்சி காரணமாக அல்ல, அமளி காரணமாக அல்ல, மக்களின் விருப்பத்தினைக் கேட்டுப் பெற்றிடும்

முறையினால், ஆட்சித் தலைவர்கள் மாறுவார்கள், தலைகள் உருளாது! அரியணையில் புதியவர் அமருவார், பழையவர் சிறைப்படமாட்டார்! அரசியலில் நாகரிகம் மிளிரும்; நட்புரிமை திகழும்! நாட்டுக்குத் தொண்டாற்றுவதில் போட்டி இருக்கும், ”நானா நீயா’’ என்ற காட்டுமுறை எழாது.

இந்தப் பண்பு புதிய ஜனநாயகத்தின் மூலமாக மட்டுமே பெற முடியும்.

நாட்டாட்சி நடத்திடும் உரிமை அனைவருக்கும் உண்டு என்ற எண்ணமும்,

நாடு எப்படி ஆளப்பட்டு வருகிறது என்று விழிப்புடனிருந்து பார்த்துக் கொள்ள வேண்டிய கடமை அனைவருக்கும் உண்டு என்ற எண்ணமும்,

நாட்டு மக்களைக் கெடுத்திடும்

போக்கிலே ஆட்சி நடத்துவோரை நீக்கிடும் பொறுப்பு அனைவருக்கும் உண்டு என்ற எண்ணமும், உண்மையான ஜனநாயகத்துக்கு அடிப்படை! அந்த வலிவு மிக்க அடிப்படை மீது அமைக்கப்படும் அரசுகளில் அதிர்ச்சிகளும் அமளிகளும், தூக்கிலிடுதலும் சுட்டுத் தள்ளுவதும், சிறையில் பூட்டுவதும் சித்திரவதை செய்வதும், நாடு கடத்துவதும் நாசம் விளைவிப்பதும் ஏற்படாமல், அரசாள்வோர் மாறிடுவர்; மாற்றப்படுவர்.

அவ்விதமாக அதிர்ச்சியற்ற, அமளியற்ற முறையிலே மாற்றம் ஏற்பட்டால்தான், சமூகம் பீதியின்றி, கட்டுக்கோப்பு குலையாமல் இருந்திட முடியும்; மக்கள் தமது வாழ்வைச் செம்மைப்படுத்திக் கொள்ளும் செயலில் தொடர்ந்து அக்கறை காட்டி ஈடுபட்டு, பலன்பெற முடியும்.

பூங்காற்று வீசுமிடத்திலேதான், இனிமை

அளித்திடும் குழலோசை எழுப்பிட இயலும்; வேட்டுச் சத்தம் காதினைத் துளைத்திடும் களத்தில்? இயலாது!

அல்ஜீரியாவில் மட்டுமல்ல, உண்மையான ஜனநாயகம், நல்ல வலிவான அடிப்படையில் அமையாதிருக்கும் நாடுகளிலே, அரசியல் அமளி நிரம்பியதாக இருந்து வருவதும், அதன் காரணமாக மக்கள் அலைக்கழிக்கப்பட்டு வருவதும், காண்கிறோம், அத்தகைய இடங்களில் பகை கப்பிக்கொள்கிறது, பழி தீர்த்துக் கொள்ளும் போக்கு தலைவிரித்தாடுகிறது, மக்கள் தங்கள் எதிர்காலம் எப்படியோ என்ற பீதியால் பீடிக்கப்பட்டிருக்கிறார்கள்.

அல்ஜீரியாவில் ஏற்பட்டது பற்றிப் படித்தபோது தம்பி! நான் உண்மையான ஜனநாயகத்தின் அருமையினை உணர்ந்து உவகை கொண்டேன்; அதனை உன்னுடன்

பகிர்ந்து கொள்கிறேன்.

கன்சர்வெடிவ் கட்சித் தலைவரிடமிருந்து தொழிற் கட்சித் தலைவர் வில்சன் ஆட்சிப் பொறுப்பைப் பறித்துக் கொண்டார்; பறித்துக் கொண்டார் என்று கூறுவது கூடத்தவறு; பெற்றுக் கொண்டார்.

இப்போது பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் பதவி இழந்த ஹோம், பதவி வகிக்கும் வில்சனுக்கு எதிர் வரிசையில் அமர்ந்திருக்கிறார். பெதேயின் வந்தார், பென்பெல்லா காணப்பட வில்லை! என்ற நிலைமை இல்லையல்லவா!!

ஆகவே, தம்பி! சமூகம் அமளியில் ஈடுபடுத்தப்படாமல் அரசியல் நடைபெற ஜனநாயகம் மிக மிகத் தேவை; மறந்துவிட வேண்டாம், உண்மையான ஜனநாயகம்!!

அல்ஜீரியச் சம்பவத்திலிருந்து நான்

பெறும் மற்றோர் கருத்து, விடுதலை வீரர்கள் ஆட்சித் தலைவர்களாகும்போது, சர்வாதிகாரம் செலுத்தலாம் என்ற சபலம் வெகு எளிதாக ஏற்பட்டுவிடுகிறது; அந்தப் சபலத்தை அடக்கினால் மட்டுமே அவர்கள் ஜனநாயகத் தலைவர்களாக முடியும், மக்களுக்கு அவர்களால் பலன் பெற முடியும் என்பதாகும்.

விடுதலை வீரன் நான்! என் குருதி கொட்டி இந்த நாட்டை அன்னியர் பிடியிலிருந்து விடுவித்தேன்! நாட்டு விடுதலைக்காக, சொத்து இழந்தேன், சுகம் இழந்தேன், உயிரையும் இழந்திடச் சம்மதித்தேன் என்று விடுதலை வீரன் பேசும்போது, அந்தப் பேச்சு உள்ளத்தை உருக்கும்; ஐயமில்லை.

அந்த விடுதலை வீரனுடைய செயலைச் சிந்து ஆக்கிப் பாடிடலாம்; கூனன் நிமிருவான், குருடன் பார்வை பெறுவான்.

ஆனால், அந்த விடுதலை வீரன், தான் கொட்டிய குருதி பற்றி நினைவுபடுத்தியபடி, நாட்டு மக்களின் குருதியைக் குடித்து இன்புற எண்ணினால், நாடு சம்மதிக்குமா?

புதிது புதிதாக விடுதலை பெற்ற நாடுகளிலே எழுச்சிமிக்க தலைவர்கள் உள்ளனர், கோலோச்சும் நிலையில். அவர்களின் அறிவாற்றலை எவரும் குறைத்து மதிப்பிட மாட்டார்கள்; அவர்களுக்கு மக்கள் தமது இதயத்தைக் காணிக்கையாக்கிடத் தயங்கிடவுமில்லை.

ஆனால், அவர்கள் அந்த நிலையுடன் திருப்தி அடைவதாகத் தெரியவில்லை.

கொடுங்கோல் முறிந்தது, செங்கோலோச்ச வந்திருக்கிறார் விடுதலை வீரர், இனி மக்களுக்கு உரிமைகள் தாராளமாக வழங்கப்படும், மக்களின்

கருத்தறிந்து அரசு செயல்படும், மக்களில் நலிந்து கிடப்போருக்காக அரசு தனி அக்கறை காட்டும் என்றெல்லாம் மக்கள் எதிர்பார்க்கிறார்கள். கனியிலே சுவை காண எண்ணுவதும், விளக்கிலே ஒளி காண விழைவதும், யாழிலே இனிய நாதம் எழும் என்று எதிர்பார்ப்பதும் இயல்புதானே! அதுபோல.

ஆனால், நாட்டை விடுவித்த மாவீரன், மக்களுக்கு எது நல்லது, எது தேவை என்பது எனக்குத் தெரியும் - எனக்கு மட்டுமே தெரியும் - மக்களுக்குத் தெரியாது என்ற நினைப்புடன் அரசாளத் தொடங்கினால், அவனையுமறியாமல், மக்கள் உரிமை யற்றவர்களாகி, அரசிடம் அக்கறையற்றவர்களாகி, பழைய கொடுமை தொலைந்தது, புதியது புகுந்தது என்றெண்ணிக் குமுறுவர். பல நாடுகளிலே

இன்று இந்த நிலை.

ஆப்பிரிக்க பூபாகத்தில் வெள்ளை, பிரஞ்சு போன்ற வல்லரசுகளிடமிருந்து போராடி விடுதலை பெற்ற நாடுகளில், விடுதலை வீரர்கள் மக்களுக்கு நல்வாழ்வு பெற்றுத்தருகிறோம் என்று அறிவிக்கிறார்கள். ஆனால், மக்களாட்சி முறையை ஏற்க மறுக்கிறார்கள்:

முன்பு அந்த நாடுகளை ஆண்டுவந்த வல்லரசுகள், தமது ஆட்சி முறை பற்றி எவரும் ஏதும் கூற அனுமதி அளித்திடாது இருந்து வந்தது போலவே, விடுதலை வீரர்கள் என்ற விருதுடன் அரசாள வந்துள்ளவர்கள், தமது ஆட்சி முறை பற்றி மக்கள் அல்லது மக்களின் ஆதரவு பெற்ற தலைவர்கள், மாற்றுக் கருத்தினைக் கூற அனுமதிக்க மறுக்கின்றனர். இதற்காக வேண்டி, தமது நாட்டில் ஆளும் கட்சி தவிர வேறு கட்சி

கூடாது என்று சட்டம் இயற்றி விட்டனர்!! இதற்கு மக்களின் "சம்மதம்' கிடைத்து விட்டது. அதற்கான தேர்தல் நடத்தியாகிவிட்டது. ஆகவே, இதுவும் ஜனநாயக ஆட்சிதான் - இதுதான் வலிவான, பயனுள்ள ஜனநாயகம் என்றும் வாதாடுகின்றனர்!!

நான் இதுபற்றி இவ்விதம் கருதுகிறேன்! - என்ற பேச்சே, எதிர்ப்பு என்று கருதப்பட்டு, நாட்டுக்குத் துரோகம் என்று அறிவிக்கப்பட்டு, அந்தக் கருத்தே அழிக்கப்படுகிறது; கருத்து பொருளற்றது என்று விளக்கி மக்களைத் தமது கருத்தின் வழி ஈர்த்திடும் முறையினால் அல்ல; மாற்றுக் கருத்தினைக் கூறிடுவோரை மாய்த்திடுவதன் மூலம் அல்லது விரட்டிவிடுவதன் மூலம் அல்லது சிறையில் தள்ளிவிடுவதன் மூலம்!?

எமக்கு இதயம் தங்கம்! கரம் மட்டுந்தான் இரும்பு! - என்று கூறுவார் போலுள்ளனர் இந்த

ஆட்சித் தலைவர்கள்.

என்னென்ன உரிமைகளை வல்லரசு அழித்துவிடுகிறது என்று கூறி, மக்களைத் தட்டி எழுப்பி, விடுதலைப் போரினை நடத்தினார்களோ, அதே உரிமைகளை விடுதலை பெற்ற பிறகு அரசாளவந்துள்ள தலைவர்கள் மக்களிடமிருந்து பறித்துக் கொண்டுள்ளனர். வயிறாரச் சோறு! வேறென்ன வேண்டும்!! - என்று கேட்கத் துணிகின்றனர்.

காரணம் என்ன காட்டுகின்றனர்? மக்களுக்கு என்ன தேவை என்பது எமக்குத் தெரியும், எப்படித் தருவது என்பதும் எமக்குத் தெரியும்; அந்தத் தொண்டிலே நாங்கள் ஈடுபட்டிருக்கும் வேளையில், அவரவர் தத்தமக்குத் தோன்றியதைக்கூறி, கருத்து மாறுபாடு எழச்செய்வது, காரியத்தைக் கெடுத்துவிடும். ஆகவே, ஒருவரும் ஆட்சிக்

கட்சிக்கு எதிரான கருத்தினைக் கூறலாகாது என்கின்றனர்.

தம்பி! தமது அறிவாற்றலில் அவர்களுக்கு அளவற்ற நம்பிக்கை இருப்பது மட்டுமல்ல மற்ற எவருக்கும் அத்தகைய அறிவாற்றல் கிடையாது என்ற எண்ணமும் தடித்துக் கிடக்கிறது. முன்னது தவறான கணக்காகக்கூட இருக்கலாம்; பொறுத்துக் கொள்ளக்கூடியதுகூட; ஆனால், இரண்டாவது இருக்கிறதே, வேறு ஒருவருக்கும், யோசனை கூறிடக்கூடத் திறமையும் உரிமையும் கிடையாது என்ற எண்ணம், அது சகித்துக் கொள்ள முடியாதது; அது வெறும் அகம்பாவம்; வெறும் அகம்பாவமா! மெள்ள மெள்ள அழிவைத் தந்திடும் அகம்பாவம்.

ஆனால், புதியநிலை பெற்றுள்ள பல நாடுகளில் இத்தகைய அகம்பாவம் அரசோச்சுகிறது; மக்கள் அச்சத்தின்

பிடியிலே சிக்கியுள்ளனர்; ஆனால், எப்போது அங்கெல்லாம் என்ன நேரிடும் என்று கூறிடுவதற்கில்லை; போன வாரம்தானே மகிழ்ச்சிப் பெருக்குடன் முழக்கமிட்டார் பென்பெல்லா, எமது அரசாளும் குழுவிலே எந்தவிதமான பேத உணர்ச்சியும் இல்லை என்று!!

உண்மையான ஜனநாயகம், கூட்டு முயற்சியில் நம்பிக்கை கொள்கிறது.

புதிதாக விடுதலை பெற்ற நாடுகளிலே, அதன் தலைவர் களுக்கு மக்களின் அறிவாற்ற-லேயும், பொறுப்புணர்ச்சியி லேயும் நம்பிக்கை இல்லாதது மட்டுமல்ல, உடன் உள்ள தோழர்களிடம்கூட நம்பிக்கை இல்லை; அவர்களின் திறமையை ஒப்புக்கொள்ள மனம் இல்லை! உடனிருந்து அரசாளும் அலுவலிலே ஈடுபட்டுள்ளவர்கள் ஒவ்வொருவரும், தாமாக இயங்கிவிடும் ஆற்றலுமற்றவர்கள், நமது

தயவால் வாழ்பவர்கள், நமது கட்டளைக்குக் கட்டுப்பட வேண்டியவர்கள் என்ற எண்ணம் மேலோங்கி விட்டிருக்கிறது.

காவியச் சிறப்புக்குரிய வீரச்செயல் பல புரிந்த ஜோமோ கெனியாட்டா, தனது நாட்டு அமைச்சர்கள் வெளியிடும் உத்தரவுகள் ஒவ்வொன்றும், தன்னால் பரிசீலிக்கப்பட்டு, ஒப்புக் கொள்ளப்பட்ட பிறகே, நாட்டுக்கு அறிவிக்கப்பட வேண்டும் என்ற கட்டளையைப் பிறப்பித்துள்ளார்! இப்படி ஒரு கட்டளையா! ஜனநாயகத்திலா!! என்று எவரும் கேட்கவில்லை. கேட்டிடின் என்ன நேரிடும் என்பது உணர்த்தப்பட்டிருப்பதால்!!

உண்மையான ஜனநாயகத்தில் நம்பிக்கை கொண்டவர்கள், தமது கருத்து மற்ற எவருடைய கருத்தைக் காட்டிலும் மேலானது, பயன் தருவது என்பதனை மெய்ப்பித்துக் காட்ட முடியும் என்பதில் தளராத

நம்பிக்கை கொண்டிருக்கிறார்கள்.

மறுத்துப் பேசுவோரையும் மனம் மாறிடச் செய்திட முடியும் என்கின்றனர்.

எமது கருத்தினையா மறுக்கின்றீர் என்று எக்காளமிடும் தலைவர்களுக்கு அந்த நம்பிக்கை இல்லை. கருத்துடன் கருத்து மோதட்டும், தங்கமானால் தணலால் அழிந்திடாது என்று கூறிடும் நெஞ்சுரம் அவர்களிடம் இல்லை. ஆகவேதான் அவர்கள், மாற்றுக் கருத்தைச் சந்திக்க அஞ்சுகிறார்கள்; தமது கருத்துக்காக வாதாடக் கூச்சப்படுகிறார்கள்; போட்டியற்ற பந்தய வீரர்களாக விரும்புகிறார்கள்!!

இம்முறையினால், சிலகாலம், சிலபல நலன்களைக்கூட நாட்டுக்குப் பெற்றளித்திடக்கூடும்; அளித்துள்ளனர்.

அரபுக் குடியரசுத் தலைவர் நாசர்

தமது நாட்டுக்கு அஸ்வான் அணை அமைத்துத் தந்துள்ளார்; சூயஸ் கால்வாயின் ஆதிக்கத்தை வல்லரசுகளிடமிருந்து பறித்து எகிப்தின் உரிமையாக்கினார்.

ஆனால், அந்த நாசர் அவருக்கு இணையானவர் என்று பலராலும், அவருக்கு முன்னோடி என்றும் ஒரு காலத்தில் கருதப்பட்ட நகீப் என்பவரைக் கருத்தளிக்கும் உரிமையுடன் நடமாடவிடவில்லை. அவரைப் பூட்டி வைத்துவிட்டுத்தான், எகிப்துக்குப் ”பொற்காலம்’ அளித்திடுவேன் என்று கூற முடிகிறது. வேறு எந்தக் கட்சியும் கூடாது; தனது கட்சியிலும் வேறு கருத்தினைக் கூறிடத் துணிபவர் ஒருவர் இருத்தல் கூடாது; இது சட்டம்! மக்கள் சம்மதம் பெற்றுவிட்டேன் என்கிறார் நாசர்! இதுவா ஜனநாயகம்? என்று கேட்பவர்களுக்கு, அவருடைய ஆதீனத்தில் இடம் பெற்றுள்ளவர்கள், தைரியமாகக்

கூறுகிறார்கள் - மனச்சாட்சியின்படி என்று கூறுவதற்கில்லை - இதுதான் நாசரிசம் என்று!

இந்தப் பாதையில் மேலும் வேகமாகச் செல்கிறார், ஹோஸ்டிங்ஸ் பண்டா எனும் தலைவர்! இவருடைய மோட்டார் நெடுஞ்சாலையில் போகும்போது, வேறு எவருடைய மோட்டாரேனும் முன்னே செல்ல முயன்றால், வழக்கு! தண்டனை! அபராதம்! ஆமாம்! நெடுஞ்சாலையில் அவர் என்றால், மற்றவர் ஓரம் நிற்க வேண்டும்.

கனடா நாட்டு அதிபர் நிக்ருமா இதிலே மேலும் உச்சிக்குச் சென்றுவிட்டார்.

கனா பல்கலைக் கழகத்தில், நிக்ரூமாவின் கருத்துக்கள். பாட நூற்களாகிவிட்டன!

ஜனநாயகம் - சோஷியலிசம் - விஞ்ஞானம் - மதம் - ஒழுக்கமுறை - சட்ட நுணுக்கம் எனும் எதற்கும் அந்தந்தத் துறை வித்தகர்கள்

படைத்துள்ள ஏடுகள் என்ன கூறியிருந்த போதிலும், அவை பற்றி நிக்ரூமா என்ன கூறியிருக்கிறாரோ, அந்தக் கருத்துக்களே மேலானவை, ஒப்புக் கொள்ளத்தக்கவை, போற்றப்பட வேண்டியன! போதுமா தம்பி! அவர் சென்றுள்ள உயரத்தின் அளவினைத் தெரிந்துகொள்ள! மேலும் வேண்டும் என்கிறாயா! உண்டு! கேட்டிடு!

அவர் விரும்பியபடி கனா நாட்டு உயர்நீதிமன்றத்து நீதிபதிகள், அரசியல் எதிரிகளுக்குத் தண்டனை வழங்கவில்லை - சட்டம் இடம் கொடுக்கவில்லை - நீதிக்குப் புறம்பாக நடக்க முடியாது என்று கூறிவிட்டனர். என்ன செய்தார் நிக்ரூமா? அந்த நீதிபதிகளை வேலையினின்றும் நீக்கிவிட்டார்! தாமே, தமது அரசியல் எதிரிகளுக்கான புதிய தீர்ப்பினைப் பிறப்பித்தார்! இனி கடைசி தீர்ப்பளிக்கும் உரிமை நிக்ரூமாவுக்கே என்ற

சட்டமும் பிறப்பித்து விட்டார்! எவ்வளவு உயரம் சென்றுவிட்டார் என்பதனை விளக்குவதுபோல ஒரு திங்களுக்கு முன்பு, நிக்ரூமா தம்முடைய உருவச் சிலையைத் தாமே திறந்து வைத்தார்! சிலையின் உயரம் 55 அடி என்கிறார்கள்!

அவ்வளவு உயரமான சிலையை, உயர்ந்தவரின் சிலையைத் திறந்து வைக்கத்தக்க தகுதி வேறு யாருக்கு இருக்க முடியும் - நிக்ரூமாவுக்குத் தவிர!! அதனால்தான் அவருடைய சிலையை அவரே திறந்துவைத்தார் போலும்!!

வேறு கட்சி, வேறு தலைவர்கள், வேறு முறை, வேறு கருத்து, தலைகாட்டக் கூடாது. எல்லாம் நிக்ரூமா மயம்!! ஏன்? வேறு கருத்து, வேறு தலைவர், வேறு கட்சி தோன்றினால் மக்கள் அதனை ஏற்கமாட்டார்கள், தனது தலைமை, தனது

முறை, தனது கருத்து இவற்றை மட்டுமே ஏற்பார்கள் என்ற நம்பிக்கை இல்லை; அந்த நம்பிக்கை உண்மையான ஜனநாயகத்தைக் கொண்டிடுவோர் மட்டுமே பெறமுடியும்.

முறை எதுவோ இருக்கட்டும், மக்கள் வாழ்ந்திட வழி அமைத்துக் கொடுத்தால் போதும், அதனை இந்தத் தலைவர்கள் செய்கிறார்கள் அல்லவா என்று கேட்க நினைப்பார்கள், சிலர். துவக்கத்திலே முடியும்; ஆனால், நாளாகவாகத் தன்னிச்சையாக நடந்து கொள்ளும் தலைவர்களின் தர்பார், தம்மைக் காப்பாற்றிக் கொள்ளும் காரியத்திலேயே பெரும்பகுதி நேரத்தையும் ஆற்றலையும் செலவிட வேண்டிய நிலையை உண்டாக்கிவிடும். பிறகு நாட்டு நிலை சீர்குலைந்து போகும்.

கனா நாட்டுப் பொருளாதார நிலை பற்றி நிபுணர்கள் இப்போது கவலை

தெரிவித்துள்ளனர்.

கனா நாட்டுக்கு வளம், அங்கு விளையும் கோகோவை வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதிலேதான் பெரும்பாலும் கிடைக்கிறது. பொருளாதார விளைவுகள், சிக்கல்கள் பற்றி எண்ணிப் பார்க்காமலும், சந்தை விரிவான முறையில் அமைவதற்கு ஏற்றவிதமான ராஜதந்திர உறவுகளைச் செம்மைப் படுத்திக் கொள்ளாமலும், கோகோ விளைச்சலை மட்டும் பல மடங்கு அதிகமாக்கிடும் திட்டமிட்டார் நிக்ரூமா! இந்தத் திட்டத்திலே ஏற்படக் கூடிய கெடுதல் பற்றி எவர் பேச முடியும்? அவர் திட்டத்தைக் குறை கூறலாமா! நாடு தாங்காது என்கிறதே சட்டம்! எனவே அவர் இச்சை திட்டமாயிற்று; திட்டம் காரணமாக கோகோ விளைச்சல் அதிகமாயிற்று; அந்த அளவுக்குச் சந்தை விரிவாகவில்லை; விலை விழுந்தது;

எதிர்பார்த்ததில் பாதி அளவுக்கு வந்து விட்டது விலை; பொருளாதார நெருக்கடி கனாவில்?

தன்னிச்சையுடன் நடந்து கொள்ளும் "அதிபர்'களிடம் உள்ள பல நாடுகளிலே, இன்று இதுபோன்ற சிக்கல்கள்.

சிக்கல்கள் உள்ளன என்பது மட்டுமல்ல; அந்தத் தலைவர்கள் அடக்கி வைக்க வைக்க, எதிர்ப்பு மடிந்து விடவில்லை, மறைந்து கொள்கிறது; எதிர்பாராத வேளையில் எதிர்ப்பு வெடித்துக் கிளம்பி நாட்டிலே அமளியை, குழப்பத்தை மூட்டிவிடுகிறது; அமளி காரணமாக மேலும் பொருளாதாரச் சீர்குலைவு ஏற்பட்டு விடுகிறது. மக்களின் வாழ்க்கை வெகுவாகப் பாதிக்கப்பட்டுப் போகிறது.

ஜனநாயகத்தை மதிக்க மறுக்கும் தலைவர்களுக்கு ஓர் நாள் ஆபத்து வந்திடும்

என்பதுகூட அல்ல முக்கியமான பாடம், அத்தகையவர்களைத் தாங்கிக் கொள்ளும் நாடு, பிறகு தத்தளிக்க நேரிடுகிறது, மக்கள் வேதனைப்பட வேண்டி வந்துவிடுகிறது.

விதிவிலக்குப் போல சில நாடுகளில் நிலைமை இருக்கலாம்; ஆனால், பொதுவான உண்மை அதனால் பொய்த்துப் போய் விடுவதில்லை.

உண்மையான ஜனநாயகம் ஒரு மரபினை ஏற்படுத்தித் தருவதுடன், ஒரு தலைவர்கள் வரிசையை அமைத்துத் தருகிறது; அல்லது அமைந்திடத் துணை செய்கிறது. ஒரு தலைவர் மறைந்த பிறகோ அல்லது ஓய்வு பெற்ற பிறகோ, அவர் செய்துவந்ததை, அதே முறையில் அதே அளவில், அதே தரத்தில் செய்ய முடியாமற் போயினும், மக்களின் நலனுக்கு ஏற்ற விதத்தில் தொடர்ந்து செய்து கொண்டு போகத் தக்க ”மற்றவர்கள்’

கண்ணுக்குத் தெரிகிறார்கள்.

சர்ச்சிலைப் போல ஒருவர் கிடைப்பாரா என்று வியந்து பாராட்டினார்கள், திகைத்துக் கூறிடவில்லை: ஏனெனில், ஈடன், மாக்மிலன் என்று பலர் கண்ணுக்குத் தெரிந்தனர் வரிசையில்!

தொழிற் கட்சியிலும் அவ்விதமே! அட்-இருந்து வந்த இடத்திற்கு ஒரு வில்சன் கிடைத்திருக்கிறார் - இடையிலே பெவான் - மாரிசன் - கெயிட்ஸ்கில் எனப் பலர்.

ஜனநாயகத்தில், ஓரோர் சமயம் வியப்பளிக்கத் தக்க நட்சத்திரங்களாகத் தலைவர்கள் சிலர் திகழ்கின்றனர் என்றாலும், தொடர்ந்து ஒளிதரத்தக்க திருவிளக்குகள் வரிசையாக உள்ளன. இடியோசையுடன் போட்டியிட முடியாது முரசு! ஆனால், முரசொலி தொடர்ந்து கிடைக்கும்; கரத்தின் தரத்துக்குத்

தக்கபடி நாதம் எழும்! இடியோசை கிடுகிடுக்க வைத்திடும், ஆனால், ஓசை தொடர்ந்து இருந்திடாது. இடியோசையில் கிடைத்திடாது இன்ப நாதம்!

ஜனநாயக முறையை மாய்த்திட்ட முறை இடியோசை என்றால், ஜனநாயக முறையை முரசுக்கு ஒப்பிடலாம்!!

தம்பி! நாம் உண்மையான ஜனநாயகத்திலே பற்று மிகுதியாகக் கொண்டுள்ளதால்தான் அந்தக் கடமையைச் செய்வதிலே எத்தனை இன்னல் ஏற்படினும் பொறுத்துக் கொள்கிறோம். எத்தனை இழிமொழிகளை, பழிச்சொற்களைத் தாங்கிக் கொள்கிறோம்! பறந்து செல்லும் காக்கை எச்சமிடுகிறது; பாதையிலே செல்பவனின் பட்டுச் சட்டை பாழ்படுகிறது! அதனால் பயணம் நின்றுவிடுவதில்லை.

உண்மையான ஜனநாயகத்திலேதான் ஒவ்வொருவருக்கும் தத்தமது திறமைக்கேற்ப, பணியாற்றிடும் உரிமை கிடைக்கிறது, கிடைப்பதனால் சமுதாயத்துக்குக் கூட்டுப் பணியின் பலன் முழுவதும் கிடைக்கிறது; மேம்பாடு பெறுகிறது.

அல்ஜீரியாபோல விடுதலைபெற்ற நாடுகளிலே, பென்பெல்லா போன்றவர்கள், ஜனநாயக முறையை மேற்கொள்ளாததால் அந்த நாடுகளிலே உள்ள எத்தனையோ நல்லறிவாளர்கள் மூலம் கிடைத்திடக்கூடிய நலன் நாட்டுக்குக் கிடைத்திடாமல் போகிறது. யாழுக்குப் பல அன்றோ நரம்புகள்! இசை நேர்த்தியாகக் கிடைக்கிறது! ஒற்றைக்கம்பியிலும் இசைக்கருவி உண்டு! பெரிதும் பிச்சைக்காரரின் கருவியாகிவிடுகிறது.

டாக்டர் சுகர்ணோ உண்மையான

ஜனநாயக முறையில் இந்தோனே□யர்ன்வ நடத்திச் சென்றிருப்பாரானால், அந்த நாட்டுப் பேரறிவாளர் என்று மதிக்கப்பட்டு வந்த டாக்டர் ஹட்டாவின் திறமை மிக்க பணியினால், நாட்டுக்குப் பயன் கிடைத்திருக்குமல்லவா இன்று?

உண்மையான ஜனநாயகம் அற்ற நாடுகளில், காட்டில் காய்ந்த நிலவாக, புழுதியில் புதையுண்ட மாணிக்கங்களாக, எத்தனை எத்தனை பேர்களோ? யாரறிவார்!! அதனால்தான் எத்தனை பளபளப்பினைக் கூட்டிக் காட்டினாலும், ஜனநாயகமற்ற நாடுகள், அந்தச் சமூகத்திலே கிடைக்கத்தக்க அறிவுச் செல்வம் முழுவதையும் பெற்றுத் திகழ்ந்திடும் நிலையினைப் பெற்றிடா, ஒவ்வொரு கதிரிலும் மணிகள் உண்டு! மொத்தம் கிடைத்தாலே செந்நெற் குவியல்!!

பொதுவாக ஏற்பட்டுவிடும் இந்த

இழப்புடன், ஜனநாயகமற்ற நாட்டிலே உள்ள தலைவர்கள், எத்தனை வலிவான பாதுகாப்பு அரண் அமைத்துக் கொண்டிருந்தாலும், ஆபத்து அவர்களைத் தாக்கிட எப்போதும் மோப்பம் பிடித்தபடி இருக்கும்.

இதனைப் பயங்கரமான அளவில், தென் அமெரிக்க நாடுகளிலே காணலாம்.

இப்போது உலக முழுவதும் பேசிக் கொள்ளப்படும் டோமினிகன் நாடு, தென் அமெரிக்காவில் உள்ளது; நான் குறிப்பிட்ட நோயினால் பாதிக்கப்பட்ட இடம்.

இப்போது இங்கு அமெரிக்கப்படை தலையிடுவது பற்றிய கருத்தினை விளக்க இதனைக் கூறவில்லை. அமளியும் அதிர்ச்சியும், உள்நாட்டில் புரட்சியும் வெளியார் தலையீடும் ஏற்பட்டதற்கு அடிப்படையாக அமைந்துள்ள காரணத்தை மட்டுமே விளக்க

முனைகிறேன். ஜனநாயக முறையற்ற நிலையே இத்தனை கோளாறுக்கும் அடிப்படை.

டோமினிகன் நாட்டிலே ஒரே கட்சி, ஒரே தலைவர் என்ற நிலையில், முன்னம் ஓர் தலைவன் இருந்தான்; நாடு கொண்டாடும் நிலையில்; நானிலம் பாராட்டும் நிலையில்!

நமது ரட்சகன்; நமது வழிகாட்டி!! - என்ற விருதுகள் பெற்றிருந்தான்! சூட்டிக் கொண்டிருந்தான் என்று சொல்லலாம். எந்த அளவுக்குப் பைத்தியம் முற்றியிருந்தது என்றால், தம்பி! அந்த நாட்டிலே ஒவ்வொரு மருத்துவமனையின் நுழைவு வாயிலிலும் கொட்டை எழுத்தில் எந்த நோயையும் தீர்த்திடும் மருத்துவன் எனது தலைவன் ட்ரோஜில்லோ என்ற விளம்பரப் பலகை தொங்கவிடப்பட்டிருந்ததாம். இறுதி? மோட்டாரில் செல்கையில் சுட்டுக்

கொல்லப்பட்டான்; பிணத்தை ஒரு குப்பை மேட்டிலே வீசி எறிந்துவிட்டுப் போயினராம் புரட்சிப் படையினர்.

இதுபோன்ற படுகொலைகள் பதைபதைக்கும் நிகழ்ச்சிகள் நெளிந்தபடி உள்ள இடம் டோமினிகன் நாடு.

இந்த நாடுகளில் பொதுவுடைமையாளர்கள் ஆதிக்கம் செய்ய முனைகிறார்கள், அமளி மூட்டுகிறார்கள்; ஆகவேதான் நாங்கள் தலையிட்டு அமைதி ஏற்படப் போரிடுகிறோம் என்று அமெரிக்கத் தலைவர்கள் பேசுகின்றனர்.

அது முறைதானா, காட்டும் காரணம் உண்மைதானா என்பது வேறு விஷயம்; ஆனால், நான் இப்போது, தம்பி! கூற விரும்புவது உண்மையான ஜனநாயகம் இல்லாததுதான், இதற்குக் காரணம்

என்பதனைத்தான்.

காஸ்ட்ரோவிடம் உள்ள க்யூபாவில் வலிவான அரசு இருக்கிறது. ஆனால் அங்கும் ஜனநாயகம் இல்லாததால் கருத்து மாறுபாடு கொண்டவர்கள் கலகம் விளைவித்தபடியும், புரட்சி மூட்டிடும் திட்டம் வகுத்தபடியும், அதற்கு அமெரிக்க உதவியை நாடியபடியும் உள்ளனர். எப்போது வெடித்திடும்? எரிமலை கக்கும்? என்று கூறுவதற்கில்லை, இப்போதைக்கு, க்யூபாவுக்கு கண்கண்ட கடவுளாகக் காஸ்ட்ரோ இருக்கிறார். அவர்போல மற்றவர்கள் தொடர்ந்து கிடைப்பார்களா? ஜனநாயகம் இல்லையே, வரிசையைத் தந்திட!

இப்போதே, ஸ்பெயின் நாட்டில், பிராங்கோவுக்குப் பிறகு யார்? என்பதுப் பற்றி பீதியுடன் கேட்கத் தலைப்பட்டுள்ளனர். க்யூபாவிலும் சரி, சர்வாதிகாரத் தலைவர்கள் நடத்திச் செல்லும் நாடுகள் எவை எனினும்

அங்கெலாம் இந்தக் கேள்வி எழத்தான் செய்யும் - அதற்கான பதில், அட்-க்குப் பிறகு வில்சன் என்ற முறையில் அமையாது. அத்தகைய நாடுகளில் அரசோச்சுபவர் களின் அரியணை எரிமலையின் முகட்டிலேதான் இருக்கிறது.

பொலீவியா நாட்டுத் தலைவர் ஜெனரல் ரெனேபாரியன் டோஸ் இராணுவ ஆட்சி நடத்தி வருகிறார். ஆனால், எதிர்ப்புகள் குமுறியபடி உள்ளன. பலமுறை அவரைக் கொல்ல முயற்சிகள். தப்பித்துக் கொண்டார். ஆனால், அவருடைய தலைமீது குறி வைத்தபடி உள்ளனர் அரசியல் பகைவர்கள்! ஏன்? அங்குதான், மக்களின் ஒப்புதலைப் பெற்று, ஆட்சித் தலைவரை மாற்றிடும் உண்மையான ஜனநாயகம் இல்லையே!

கவுடமேலா எனும் நாட்டில் துணைத் தலைவர் துப்பாக்கியால் சுடப்பட்டுச் செத்தார்!

சிறிதளவு வளமாக உள்ள நாடு வெனிஜுலா. அங்கும் அமைதி இல்லை; எதிர்ப்பு; அமளியின் அறிகுறிகள்.

கொலம்பியா நாட்டில் பகைப்புயல்! அதிபர் படை பலத்தைக் கொண்டு, ஆபத்தைத் தடுத்து வருகிறார். எத்தனை நாளைக்கு என்ற கேள்வி.

அத்ஜெண்டினா நாட்டில் விரட்டப்பட்ட சர்வாதிகாரி பெரான் மீண்டும் புகுந்துவிடக்கூடும் என்ற பீதி. பெரானின் கூட்டாளிகள், அரசினை எதிர்த்து அமளிகளை மூட்டியபடி உள்ளனர். ஈக்வடார் நாட்டிலும் உராகுவே நாட்டிலும் நிம்மதியான வாழ்க்கை நடத்த முடியவில்லை மக்களால்; வேலை நிறுத்தங்கள், பொருளாதாரச் சீர்குலைவு; அடக்குமுறை.

பிரேசில், சிலி, பெரு எனும் நாடுகளில்

நிலைமை ஓரளவு கட்டுக்கடங்கியதாக இருப்பதாகக் கூறுகிறார்கள்.

மொத்தத்தில், ஜனநாயக முறையும் மரபும் அமையாததால் தென் அமெரிக்க நாடுகள் பலவும் அமளிக்காடுகளாக உள்ளன.

அந்த நிலையில், அங்கு உள்ள மக்கள், எதற்கும் துணிந்த "பேர்வழிகள்' ஆகிடவேண்டி நேரிட்டு விடுகிறது. ரயிலை நிறுத்திக் கொள்ளை அடிப்பது, பாங்கிகளைக் கொள்ளை அடிப்பது, தலைவர்களைக் கடத்திச் செல்வது, வீடு புகுந்து கொலை செய்வது இவைகள் நடைபெற்றபடி உள்ளன, அரசு, துப்பாக்கியின் துணையில்!

இவ்விதமான நாடுகளில் மக்கள், நிம்மதி பெறுவது ஏது! வாழ்க்கை செம்மையடைவது எப்படி முடியும்? மக்களாட்சி இல்லை; மக்கள் மக்களாக இல்லை.

அமைதியான வாழ்வு கொண்ட சமூகந்தான், அறிவு வளர்ச்சியில் அக்கறை காட்டிட முடியும்; அதன் மூலமாகத்தான் உலகத்தின் பொதுச் சொத்தான அறிவுச் செல்வம் மேலும் மேலும் வளர்ந்து, மனிதகுல மேம்பாட்டினுக்கு உதவிட முடியும். மக்களாட்சி இல்லாத நிலையில், பெரும்பாலான மக்கள் ஓநாயிடம் சிக்கிய ஆடுகளாகவோ அல்லது பட்டியில் போட்டடைக்கப்பட்டவைகளாகவோ ஆக்கப்பட்டு விடுவர்; மனிதத் தன்மை மாய்ந்துவிடும். கற்காலத்திலே இருந்துவந்த நிலைமையை நோக்கி மனிதகுலம் துரத்தப்படும் கொடுமை படை எடுத்திடும்.

ஆகவே, தம்பி! ஜனநாயகம் ஒரு அரசுமுறை மட்டுமல்ல, வாழ்க்கை நெறி; மனிதத் தன்மையை மேம்பாடுடையதாக்கிட

வல்ல மார்க்கம். ஆகவேதான்,

பயல்களுக்கு என்ன தெரியும்,
ஒழித்துக்கட்டிவிடுவேன்.
ஓடஓட விரட்டி அடிப்பேன்,
காலிகள் - கூலிகள் - கபோதிகள்,
பதவிப் பைத்தியங்கள், வகுப்புவாதிகள்,
நாட்டைக் காட்டிக்கொடுப்போர்,
கோழைகள், கோமாளிகள்

என்றெல்லாம், ஆளவந்துவிட்டோம் என்ற ஒரே காரணத்தால் சிலர் தூற்றித் திரிவதையும் தாங்கிக் கொண்டு, நாம் உண்மையான ஜனநாயகத் தொண்டாற்றிக்கொண்டு வருகிறோம். நமது நோக்கம் தூய்மையானது என்பது நமது நினைவிலே இருத்தல் வேண்டும்; நடையில்

தளர்ச்சி ஏற்படாது; பார்வை பழுதுபடாது; வெற்றி பெற்றிடுவோம்.

அன்புள்ள

அண்ணாதுரை

27-6-65

14. பால் படி எத்தனை?

காவிரி ஆற்றைக் காண்போர்க்கு ஏற்படும்
கருத்தோட்டங்கள்
பயனற்ற பகுதிக்கு முக்கியத்துவம் தரும்
இதழ்கள்
தன் வலி, மாற்றான் வலி அறிந்திடுதல்
வேண்டும்
மற்றவர்களை மதிக்கத் தெரிந்திடுக!
கழகத்தின் இலட்சியம் ஜனநாயகப்
பாதுகாப்பே!

தம்பி,

புதிதாக ஒரு ஊருக்குச் செல்பவர்கள், அல்லது முன்பு கண்ட இடமாக இருந்தாலும் ஆண்டு சிலவற்றுக்குப் பிறகு அதே இடத்திற்கு மறுபடி செல்பவர்கள் ஊரின் வளம் பற்றியும், அங்குள்ள வியப்புக்குரிய பொருள் அல்லது

நிலைமை பற்றியும் கேட்டறிந்துகொள்ள ஆவல் கொள்வார்கள்; தேவை என்று கூடச் சொல்லலாம். ஆனால், என்னென்ன விஷயம் குறித்து அறிந்துகொள்ள ஆவல் காட்டுவார்கள் என்பது அவரவர்களின் இயல்பு, நோக்கம் அலுவல் இவற்றைப் பொருத்தே அமைந்திருக்கும். காவிரி ஆற்றையும் அதன் எழிலையும் காணும் உழவுத் தொழிலில் பற்றும் தொடர்பும் கொண்டவன், பொன்னி தந்திடும் வளம் பற்றிய விவரத்தைக் கேட்டறிந்து இன்புறுகிறான்; பயன்பெறுகிறான். பொறியியல் துறையில் தொடர்புள்ளவன் மேலும் வளமளிக்கத்தக்க விதமாகக் காவிரியில் வேறு எங்கெங்கு என்னென்ன விதமான அமைப்புகளை ஏற்படுத்தலாம் என்பது பற்றிய விவரம் கேட்டறிந்து கொள்கிறான்; போக்குவரத்துத் துறை

வளர்ச்சிக்கான நாட்டம் கொண்டவன் படகுகள் மூலம் போக்குவரத்துக்கான ஏற்பாட்டினை எவ்வகையில் மேற்கொள்ளலாம் என்று அறிந்து கொள்ளும் விழைவு கொண்டு அதற்குத் தேவைப்படும் தகவல்களைக் கேட்டறிந்து கொள்ள முற்படுகிறான்; தமிழ்ப் புலவரோ, காவிரி குறித்து உவகை பொங்கிடக் கூறப்பட்டுள்ள கவிதைகளை நினைவிலே கொள்கிறார்; காவிரி பாயும் நாடதனில் தோன்றிய புலவர் பெருமக்களைப் பற்றி எண்ணி எண்ணி மகிழ்கிறார்; இதுபோது இப்பகுதியில் உள்ள தமிழ்ப் புலவர் எவரெவர் என்று கேட்டறிந்து பெருமிதம் கொள்கிறார். மீன்பிடி தொழிலினில் ஈடுபட்டோன் ஆற்றிலே எந்தெந்தக் காலத்தில் என்னென்ன வகையான மீன்கள் எந்தெந்த அளவு கிடைத்திடும் என்பதற்கான தகவல் பற்றிய அக்கறை காட்டுகிறான். பழமையில் மூழ்கிக்

கிடப்போன், காவிரி ஆற்றினிலே ஆங்காங்குக் காணக் கிடைக்கும் படித்துறைகளின் "மகத்துவம்' பற்றிய தகவலைச் சேகரித்துக் கொள்கிறான். போலீஸ் துறையினர் வெள்ளம் பெருக்கெடுத் திடும்போது எந்த அளவு உயிர்ச்சேதம் ஏற்படுகிறது என்பது குறித்தும், தற்கொலை செய்து கொள்பவர்கள் காவிரியில் எந்தெந்தப் பகுதிகளை அதிக அளவில் உபயோகப்படுத்திக் கொள்கிறார்கள் என்பது குறித்தும் தகவலைக் கேட்டறிந்து குறித்து வைத்துக் கொள்கிறார்கள்.

இயல்பு, நோக்கம், அலுவல் ஆகியவற்றிலே பல்வேறு வகையினராக உள்ள இவர்கள் அனைவருக்கும், அவர்கள் விரும்பிப் பெற்றிடத்தக்க தகவல்களைத் தந்தபடி, முத்து நகையழகி கொத்தவரும் கண்பார்வை பல தன் மீது வீழ்வது கண்டு எள்ளி நகையாடிச் சென்றிடுதல்போல

பொன்னி ஓட்டம் பெருநடையாய், தனக்கென்று அமைந்த வழிதன்னில் சென்றபடி இருக்கின்றாள்; மாந்தரில் எத்தனை எத்தனை இயல்பினர் உளர் என்பது பற்றி எண்ணிச் சிற்சில வேளை தன்னில் "க்ளுக்'கெனச் சிரித்திடுகின்றாள்.

பல்வேறு வகையான இயல்பு கொண்டோர் தன்னைக் குறித்துக் கொண்டிடும் கருத்து பற்றிக் கவலையற்று, தனக்கென்று அமைந்துள்ள இயல்பு கெடாமல் காவிரி இயங்கிவரக் காண்கின்றோம்.

எப்பொருளாயினும் அப்பொருளின் மெய்ப்பொருள் கண்டறிதல் வேண்டுமெனக் கூறினார் வள்ளுவப் பெருந்தகை. எனினும், எல்லாப் பொருளிலும் பயனற்ற பகுதியை மட்டும் மெத்தக் கஷ்டப்பட்டுத் தேடிப் பெற்றிடுவோர் உளர்; மிகச் சிறிய எண்ணிக்கையினரும் அல்ல அவர்

போன்றார். சுளையின் சுவை அறியாது அதனை வீசி எறிந்துவிட்டுத் தோ-னைச் சுவைத்திடுவோரைப் பித்தர் என்கின்றோம்; தெளிந்த நீரிருக்கச் சேற்றினிலே புரண்டு மகிழ்ச்சி பெறுவதை எருமை என்கின்றோம்; தழையும் தானியமும் அல்ல சருகாகிக் போன காகிதத்தைத்தின்று காலந்தள்ளும் பிராணிகளும் உள்ளன, கேவலம் என்கிறோம். ஆனால், மாந்தரிலேயுமன்றோ உளர், பயனற்ற பகுதியினைப் பாடுபட்டுத் தேடிப்பெற்று, பயனுள்ள பகுதியினை இழந்துவிடும் இயல்பினர்!

"தலைமுடி என்ன இவ்வளவு நரைத்துவிட்டதே?'' என்ற கேள்வியையா, முதலாவதாக முக்கியமானதாகக் கொள்வது, நீண்ட நாட்களுக்குப் பிறகு சந்திக்கும் நண்பனைப் பார்த்திடும் போது? அல்லது மிகப் பெரியவர், மிக நல்லவர் என்று கேள்விப்பட்டு

ஒருவரைக் காணச் செல்லும்போது? இல்லை என்பாய். ஆனால், தம்பி! அத்தகைய இயல்புள்ளவர்கள் இருக்கின்றார்கள்.

ஆண்டு பலவற்றுக்கு முன்னே ஜனாப் ஜின்னாவைக் காணச்சென்ற என் நண்பரொருவர், அவரைப் பார்த்ததும் கேட்ட முதல் கேள்வி, "மாதம் எத்தனை ஆயிரம் உங்களுக்கு வருமானம் கிடைக்கிறது வக்கீல் தொழிலில்'' என்பதாகும். அந்தக் கேள்வி கேட்ட அந்த விநாடியே, என் நண்பரைப் பற்றி மிகக் குறைவான மதிப்புக் போட்டு, அவரிடம் முகம் கொடுத்துப் பேசுவதையும் நிறுத்திக் கொண்டுடார் ஜனாப் ஜின்னா.

அறிந்து கொள்ளத்தக்கனவற்றிலே ஆவலும் அக்கறையும் காட்டுவது அறிவாளர் இயல்பு; அக்கப்போரில் ஈடுபடுவோர், அறிந்து கொள்ளத்தக்கவை அல்லாதவைகளிலேயே அளவு கடந்த ஆவல்

காட்டுவர், கொள்வர். அவை பற்றியே பேசுவர், ஆர்வக் கொந்தளிப்புடன். திருவிழாக் காணச் செல்லும் சிறுவன் தன் விழிகளை அகலமாகத் திறந்து, மெத்த ஆவலுடன் எதைப் பார்க்கிறான்? உலாவரும் உற்சவரையா? இல்லை! பலாப்பழக் கடையில் மொய்த்திடும் ஈக்களை!

சிலருடைய இயல்பு இதுபோன்றிருக்கிறது என்பது மட்டுமல்ல, சிலர் தாம் காணும் பொருளில் எது பயனற்றதோ, தேவையற்றதோ, தரமற்றதோ, அதைப் பற்றி மட்டுமே அக்கறை காட்டி, அதுபற்றி மட்டுமே வெளியே பேசுகின்றனர்; இயல்பு காரணமாக மட்டுமல்ல, அந்தப் பொருள்மீது பகை மூட்ட வேண்டும், பழி கூறவேண்டும் எனும் கெடு நோக்குடன். இயல்பு கெட்டவர்களைக் காட்டிலும் இவர் போன்றவர்களால் சமூகத்துக்குக் கேடு அதிகம் ஏற்படும். இவர்

போன்றார் பற்றித் தம்பி! மிக மிக விழிப்புடன் இருக்க வேண்டும்.

எப்பொருள் யார் யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு

என்றும்,

எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.

என்றும், வள்ளுவர் கூறியது, விந்தை மிகு இயல்புள்ளவர்கள் மாந்தர் என்ற பேருண்மையை நன்கு அறிந்திருந்ததாலும், மாந்தரில் பலர் மெய்ப்பொருளை அறிந்துகொள்வதிலே கொண்டிடும்

நாட்டத்தைவிட அதிக அளவு போலிகளைக் காண்பதிலே கொள்கின்றனர் என்பதனை நன்கு கண்டிருந்ததாலுமாகும்.

தம்பி! நமது கழகம் பற்றிச் சிலர் காட்டிடும் போக்கு, மெய்ப்பொருளைக் கண்டறிய வேண்டும் என்ற நோக்க மற்றதாகவும், உள்ளதிலே எது பயனற்றதோ அதனை மட்டுமே வெகு பாடுபட்டுத் தேடிப் பெற்றிடும் இயல்பு கொண்டதாகவும் இருந்திடக் காண்கின்றேன்; எனவேதான் இதனை எடுத்துரைத்தேன்.

இன்னிசை கேட்டிடச் செல்பவன். இராக இலக்கணம் அறிந்துகொள்ள முடியாவிட்டாலும், இனிமையாக இருக்கிறது, உள்ளத்துக்கு ஒரு குளிர்ச்சி அளிக்கிறது என்பது மட்டுமாகிலும் உணர்ந்து கொண்டால், இசை கேட்டதிலே பயன் உண்டு. அவ்விதமின்றி மூன்று மணி நேரம் பாடிடக்

கேட்டுவிட்டு வீடு திரும்பி, என்ன விசேஷம் இன்றைய இசை நிகழ்ச்சியில் என்று கேட்பவரிடம், பக்கத்துக் கடையொன்றில் வெங்காய வடை சுட்டுக் கொண்டிருந்தார்கள், வாசனை "கமகம'வென்று வந்தது, வாயிலே தண்ணீர் சுரந்தது என்றோ பாடியவர் பதினோரு முறை இருமினார், ஆறு முறை தும்மினார், மூன்று முறை ஏப்பம் விட்டார், நாலு முறை பால் சாப்பிட்டார் என்றோ கூறினால்,"மந்த மதியினனே! இதற்கோ நீ இசைக்கூடம் சென்றாய்?'' என்றன்றோ கேட்கத் தோன்றும்? இசை நுகரும் உணர்வு அற்றவர்களன்றோ, இசை நயம் பற்றிக் கவனிக்காமல் ஏப்பம், தும்மல், இருமல் பற்றிக் கவனம் செலுத்தி இருப்பார்கள்.

இவர்கள் மந்த மதியினர்; பரிதாபத்துக்குரியவர்கள்; ஆனால் ஆபத்தானவர்கள் அல்ல!!

ஆபத்தானவர்கள் எவர் என்றால், இசை நயம் உணர்ந்திருந்தும் அந்த அருமையினை எடுத்துக் கூறிட மனமின்றி, இசைவாணனுக்கு இழுக்கு ஏற்படுத்த வேண்டும் என்ற அழுக்காறு காரணமாக, இசை பற்றிக் கூறாமல், இருமல், தும்மல் பற்றி எடுத்துக் கூறி, இசை நிகழ்ச்சியைக் கேவலப்படுத்த முயல்பவர்கள்.

நமது கழகத்தைப் பற்றியும், அதனுடைய கொள்கை- தொண்டு, அது ஏற்றுள்ள இன்னல், தாங்கிக்கொள்ளும் இழிவு, உழைப்பால் அதற்குக் கிடைத்த உயர்வு என்பன பற்றி உணர்ந்து கொள்ள முடியாதவர்கள் சிலர், உணர்ந்துகொண்ட பிறகும்கூட, அதனை ஒப்புக்கொள்ள மனமற்று, கழகத்துக்கு இழுக்கு ஏற்படுத்த வேண்டும் என்ற கெடுமதியுடன், இருமல், தும்மல், ஏப்பம் போன்றவைகளைக் கண்டறிவதிலே

தீவிரமான திறமை காட்டி, அது தமது மேதாவித்தனத்துக்கு ஒரு எடுத்துக்காட்டு என்று எண்ணிக் கொள்பவர்களாகச் சிலரும் உளர்.

அவர்களின் எண்ணிக்கையும் நாளாகவாகக் குறைந்து கொண்டும் வருகிறது; அவர்களின் இட்டுக் கட்டும் பேச்சுகளுக்கு இருந்து வந்த "பிடிப்பும்' வெகுவாகத் தளர்ந்து போய்விட்டது; எனினும், வலிவிழந்த பயில்வான்,"கிருதா'வை மட்டும் காட்டிக் கொண்டு உலவுவது போலச் சிலர் இன்னமும் நப்பாசை கொண்டுள்ளனர்.

அந்தச் சிலரில் முன்னணியில் நிற்கின்றன சில இதழ்கள்!

அதனால்தான் நான் நீண்ட நாட்களுக்கு முன்பே கூறியிருக்கிறேன். இத்தகைய இதழ்களின் நோக்கமும் போக்கும் அறிந்து,

நமது தோழர்கள் நடந்து கொள்ள வேண்டும் என்று. என் வேண்டுகோள் நான் மகிழத்தக்க அளவு பலன் கொடுத்திருக் கிறது; நமது தோழர்கள், கழகத்தைப் பற்றி இழிவாகவும் பழி சுமத்தியும், இட்டுக் கட்டியும் அவ்வப்போது எழுதிக் காட்டும் ஏடுகளை மதிக்கத்தக்கன என்று கொள்வதில்லை. ஆனால், குப்பை கிளறிக் கிளறிப் பழக்கப்பட்ட கோழி, பாறையைக் கூடக் கிளறுமாம், பழக்கக் கொடுமை காரணமாக; - அதுபோலச் சில இதழ்கள் இன்னமும் நடந்து கொள்கின்றன.

சிந்திப் பசு வேளைக்கு எத்தனைப் படி பால் கறக்கும், ஓங்கோல் பசு எவ்வளவு தரும். புங்கனூர் எவ்வளவு கொடுக்கும் என்ற கணக்கறிந்து கூறுவது பயன் தரும் வேலை; பாராட்டத் தக்கதும்கூட. ஆனால், அதை விட்டு விட்டு, ஒவ்வோர் வகையான பசு ஒரு நாளைக்குத் தந்திடும் ”சாணம்’

எத்தனை கூடை என்ற கணக்கு அறிய, குப்பைக் கூடையும் கூட்டுக்கோலும் தூக்கிக் கொண்டு திரிபவர்களைப், பாராட்டவா முடியும்? பரிதாபப்பட வேண்டும்.

முன்பெல்லாம் தம்பி! பல இதழ்கள், பொதுத் தொண்டாற்றுவோர் பற்றிப் பெரிதும் இந்தப் போக்கிலேயே இருந்து வந்தனர்.

ஆயிரக்கணக்கிலே மக்கள் கூடுவர்; வாதத் திறமை காட்டி கொள்கை விளக்கமளிப்பார் பேச்சாளர். ஒரு வரி வெளியிட மாட்டார்கள்; ஆனால் அத்தகைய ஒரு கூட்டத்தில் எவனோ விரட்டிவிட்ட பன்றி நுழையும், மறுநாள் எட்டுக் கலத்தில் கொட்டை எழுத்தில் அந்தச் செய்தி வெளிவரும். அவர்களின் எண்ணம் அவ்விதமான செய்தியைப் படித்ததும் மக்கள் அருவருப்பு அடைவார்கள் என்பது! அருவருப்பு அடைந்தார்கள் மக்கள் - கழகத்தின் மீது அல்ல!

கழகக் கூட்டத்திலே பன்றியை விரட்டிவிட்ட பெரிய கட்சிக்காரரிடம்!!

நடைபெற்ற நிகழ்ச்சியொன்று நினைவிற்கு வருகிறது. 1938 என்று கருதுகிறேன். ஆச்சாரியார் இந்தியைக் கட்டாயப் பாடமாக்கிய நேரம் - இந்தி எதிர்ப்புப் பிரசாரம் சென்னையில் வெகு மும்முரமாக இருந்த நாட்கள். தியாகராய நகரில் - அப்போது மிகச் சிலரே தியாகராய நகர் என்று கூறுவார்கள் - மாம்பலம் என்ற பெயர்தான் பிரபலம். அந்த நாட்களில் - ஒரு இடத்திலே இந்தி எதிர்ப்புக் கூட்டம். பலர் பேசினார்கள்; நானும் பேசச் சென்றிருந்தேன். சென்னையில் என்னைப் பலருக்குத் தெரியாத காலம் அது; ஆகவே நான், பத்திரிகை நிருபர்களுக்கு மத்தியில் உட்கார்ந்திருந்ததை யாரும் கவனிக்கவில்லை. கூட்டத்தில் துவக்க முதலே தொல்லை, கல்வீச்சு; கேலிச் சிரிப்பு, கேள்வித்

தாள்கள், நிருபர்களின் கெக்கலி; போலீசாரின் பரிகாசம்கூட!

ஒரு நிருபருக்கு அவசரமான வேலைபோல இருக்கிறது. அவர் மற்றவர்களிடம் சொல்லிக் கொண்டு கிளம்பினார்; கிளம்பும்போது ஆங்கிலத்திலே கூறினார்: "நான் போகிறேன்; பத்திரிகையில்,"கூட்டம் குழப்பத்தில் முடிந்தது என்ற தலைப்புடன் செய்தி வெளியிடச் சொல்லிவிட்டு வீட்டிற்குப் போகப் போகிறேன்'' என்றார். மற்றவர்கள், "ஆமாம்' நாங்களும் அதுபோன்ற தலைப்புத்தான் போடப் போகிறோம்'' என்று கூறினார்கள்.

என்னைப் பேச அழைத்தார்கள்; எழுந்து சென்றேன்; மேடை ஏறினதும் சொன்னேன், "வீணாக ஏன் கூச்சல் கிளப்பிக் கஷ்டப்படுகிறீர்கள். இந்தக் கூட்டம் மிக அமைதியாக நடைபெற்றால்கூட நாளைய பத்திரிகையில் கூட்டம் குழப்பத்தில் முடிந்தது

என்ற தலைப்புடன் செய்தி வரப் போகிறது. நிருபர் சொல்லிவிட்டுத்தான் போயிருக்கிறார். இதோ உள்ள மற்ற நிருபர்களிடம். ஆகவே சிரமப்படாதீர்கள்; எங்கள் பேச்சைக் கேளுங்கள். உங்கள் விருப்பம்போலச் செய்தி நாளையப் பத்திரிகையில்தான் வரப்போகிறதே ஏன் இப்போது காரணமற்ற கஷ்டத்தை அனுபவிக்கிறீர்கள், நிம்மதியாக இருங்கள்'' என்று சொன்னேன்; கூட்டத்திலும் அமைதி ஏற்பட்டது; மறுநாள் இதழ்களிலும், இந்தி எதிர்ப்புக் கூட்டம் என்ற தலைப்புடன் செய்தி வந்தது.

அப்படிப்பட்ட காலம் இருந்தது. இதழ்களின் போக்கு இப்போது வெகுவாக மாறிவிட்டிருக்கிறது. நமது கழகம் ஜனநாயகக் கடமையாற்றத் தகுதி பெற்ற ஒரு அமைப்பு; இந்தக் கடமையைச் செய்திட இது போன்ற வேறோர் அமைப்பு இல்லை என்ற உணர்வு

வலிவு பெற்றிருக்கிறது. எனினும் சில இதழ்கள், இன்னமும் பழைய இயல்பில் சிற்சில வேளைகளில் நடந்து கொள்கின்றன.

இரண்டு கிழமைகளுக்கு முன்பு தஞ்சை மாவட்டத்தில் பல இடங்களிலே பேசினேன் - பயனுள்ள கூட்டங்கள் என்றுதான் நம்புகிறேன். இந்த இதழ்கள் கூட்டத்தைப் பற்றி என்ன செய்தியைப் பெரிதாக்கிப் போட்டன தெரியுமா தம்பி! பாம்பு நுழைந்ததாம் கூட்டத்தில் - அதற்குத்தான் மரியாதை!! அண்ணாதுரை கூட்டத்தில் பாம்புகள் படைஎடுப்பு என்பது தலைப்பு!!

இரண்டொரு இதழ்கள் ஒரே அடியாகக் காங்கிரசில் சேர்ந்து கொண்டு கழகத்தை எதிர்ப்பது கூடாது - காங்கிரசை எதிர்ப்பது போல "வேடம்' போட்டுக் கொண்டு, அதே போக்கில் கழகத்தை இழிவுபடுத்த வேண்டும் என்ற போக்கில் நடந்து வருகின்றன;

இது நாடறிந்த உண்மை காங்கிரசிலுள்ள சில பெருந் தலைவர்களுடன் செய்து கொண்டுள்ள ஒப்பந்தத்தின் விளைவு இது என்கிறார்கள்.

அத்தகைய இதழ்கள்தான், நான் துவக்கத்தில் கூறியுள்ளபடி, பயனுள்ள பகுதியைக் கண்டறிந்து கூறாமல், பயனற்ற பகுதியை எடுத்துக் காட்டிக் கொண்டு எக்காளமிடுகின்றன.

என்னைத் தேடி இத்தகைய இதழினர் வருகின்றனர், சிற்சில சமயம். வருகிறபோது எந்த அரசியல் சிக்கல் பற்றியோ, பொருளாதாரப் பிரச்சினை பற்றியோ கேட்பதில்லை. மாறாக, போராட்டம் உண்டா? இல்லையா? தோல்வி காரணமாகப் போராட்டத்தை நிறுத்தி விட்டீர்களா? என்ற முறையில் எதையாவது கேட்பது; இதற்குப் பதில் கூறத் தேவையில்லை என்று நான்

கூறுவேன். மறுநாள் போராட்டம் இல்லை - என்று செய்தி வெளியிடுவார்கள்; உடனே இரண்டு மூன்று போர் முனைகளில் ஏககாலத்தில் படைகளைச் செலுத்தி வெற்றிமேல் வெற்றிபெற்ற வீரத்தலைவர்கள் சிலர், "செச்சே! போராட்டம் இல்லையா; அப்படியானால் கழகம் எதற்கு? என்று முழக்கம் எழுப்புவார்கள் - கூட்டத்தில்கூட அல்ல - காகிதத்தில் எழுதி அச்சுக் கோப்பவரிடம் காட்டுவதன் மூலம்! போராட்டம் தேவை என்பதிலே அடக்க முடியாத தாகம் இருந்து, கழகம் போராட்டத்தை நடத்தாதாமே என்ற கவலை இருந்தால், இந்த வீரத்தலைவர்கள் உடனே துந்துபி முழக்கி, ஜல்லடம் கட்டி, தொடை தட்டி, வாளை உருவிக்கொண்டு, வந்தது வரட்டும் என்று களம் நோக்கி பாய்கின்றனரா என்றால், அந்த யோக்கியதையைக் காணோம் - போராட்டம்

உண்டு என்று அறிவிக்கக் காணோம் - கழகம் ஏன் இருக்கிறது என்று கேட்டு, தமக்கு உள்ள பொச்சரிப்பைக் காட்டிக் கொள்ளத்தான் கிளம்புகிறார்கள்.

இத்தகைய போக்கினர் பற்றி ஏன் இன்று எழுதுகிறேன் என்றால், தம்பி! இவ்விதமான போக்கு இல்லாமல், உள்ளபடி கழகத்தைப் பற்றிய முழு விவரம் தெரிந்து கொள்ள வேண்டும். உண்மையை அறிந்து கொள்ள வேண்டும் என்ற உணர்வுடன், தமிழகத்துக்கு வெளியே உள்ள பல இதழ்கள், பொது அமைப்பின் நிர்வாகிகள் வருகிறார்கள்; அறிவுத் தெளிவுள்ள கேள்விகளைக் கேட்கிறார்கள்; கழகத்தைப் பற்றி இருந்துவரும் இருட்டடிப்பு போக்கப்பட்டாக வேண்டும் என்ற ஆர்வம் காட்டுகிறார்கள், அவர்களைக் கண்டு பேசும் வாய்ப்பு கிடைக்கிறது; ஆகவேதான் இங்குள்ள சில

பொச்சரிப்பாளர்கள் பற்றிய எண்ணம் வந்தது.

இரண்டு திங்களுக்கு முன்பு பீகார் மாநிலத்தைச் சேர்ந்த கல்லூரி ஆசிரியர் சிலர், இதழாசிரியர் சிலர் வந்திருந்தனர் - நீண்ட நேரம் பேசிக் கொண்டிந்தனர் - வாதாடக்கூடச் செய்தனர் - விளக்கங்கள் கேட்டறிந்து கொண்டனர் - கழகம் பற்றி இதுவரையில் அவர்களுக்கு கூறப்பட்டிருந்தவைகள் எத்தகைய பொய்யுரைகள் என்பதனை உணர்ந்து கொண்டதாக மகிழ்ச்சியுடன் கூறினர்.

நீங்கள் இவ்வளவு நல்லவராக, இத்தனை சாதுவாக இருப்பீர்கள் என்று நாங்கள் எதிர்பார்க்கவே இல்லை என்று கூட ஒருவர் சொன்னார்.

சென்ற திங்கள், மராட்டியத்தில் புனாவில் உள்ள கல்லூரியைச் சார்ந்த

இரண்டு ஆசிரியர்களும் ஒரு மாணவரும் வந்திருந்தனர். கழகத்தின் வரலாற்றிலே இருந்து மொழிப் பிரச்சினை வரையில், கடவுள் கொள்கையிலிருந்து மாணவர் கிளர்ச்சி வரையில் என்னுடன் "விவாதம்' நடத்தினர்; இறுதியில் நமது கழகத்தின் தூயநோக்கத்தைப் புரிந்து கொண்டதாகக் கூறிச் சென்றனர்.

தமிழகத்தின் நிலைமைகளை உள்ளது உள்ளபடி உணர்ந்து கொள்ள, இங்கிருந்து அடிக்கடி நல்லெண்ணக் குழு மராட்டியம் வரவேண்டும் என்றுகூட அழைத்தனர்.

இவர் போன்றார் தம்பி! ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு வரையில்கூட, கழகத்தைப் பற்றி ஒரு துளியும் அக்கறை கொள்ளாதவர்கள்; கழகத்தைப் பற்றிய தவறான செய்திகளைப் பற்றி மட்டுமே கேள்விப்பட்டவர்கள்.

அவர்களுக்கெல்லாம் இப்போது ஒரு உணர்வு - நாம் இதுவரையில் கேள்விப்பட்டதுபோல இந்தக் கழகம் கருத்தறியாத, காட்டுப் போக்குடைய, குழப்பவாதிகளின் முகாமாக இருக்குமானால், இத்தனை வளர்ச்சி எப்படிக் கிடைத்திருக்க முடியும்? இந்தியப் பேரரசு ஒரு புதிய சட்டம் போட்டு இதன் நடவடிக்கையை ஒடுக்க முயல வேண்டிய அளவுக்கு எப்படி இந்தக் கழகத்துக்கு வலிவு கிடைத்திருக்க முடியும்? இந்தக் கழகத்திற்கு மக்களை ஈர்க்கும் சக்தி இருக்கிறது. அந்தச் சக்தியை சாய்த்திடக் காங்கிரசின் பெருந்தலைவர்கள் ஓயாமல் உழைக்கிறார்கள், இலட்ச இலட்சமாகப் பணத்தைத் திரட்டுகிறார்கள். இருந்தும் முடியவில்லை; ஆகவே, இந்தக் கழகம் தமிழகத்தில் வேர் கொண்டுள்ள ஒரு பலமான அமைப்பு, இதைப் பற்றிய

உண்மையை நாம் தனி நிருபர்கள் மூலமோ காங்கிரஸ் தலைவர்கள் மூலமோ தெரிந்து கொள்ள முடியாது. நேராகவே சென்று விசாரித்துத்தான் தெரிந்து கொள்ள வேண்டும். கழகம் அலட்சியப்படுத்தத் தக்கதல்ல, அது ஒரு பிரச்சினையாகி விட்டிருக்கிறது, புரிந்து கொண்டாக வேண்டும் என்ற எண்ணம் பலமாக இருக்கிறது; அது வளர்ந்து கொண்டும் வருகிறது.

மூன்று கிழமைகளுக்கு முன்பு கல்கத்தாவிலுள்ள "ஸ்டேட்ஸ்மென்' எனும் ஆங்கில நாளிதழின் சென்னைக் கிளையின் பொறுப்பை ஏற்றுக் கொண்டுள்ள நண்பர் வந்திருந்தார் - விவரம் கேட்க - விளக்கம் அறிய - கேள்விகளை எழுப்ப - கழகத்தின் வேலை முறையினை அறிந்து கொள்ள மிக நுட்பமான கேள்விகளை, வெகு நேர்த்தியான முறையிலே கேட்கிறார்கள்.

தம்பி! இதிலே எனக்குள்ள மகிழ்ச்சி என்ன என்றால், இவர்கள் நான் கூறுவதை அப்படியே ஒப்புக் கொள்கிறார்கள் என்பது அல்ல - கருத்து மாறுபாடு கொண்டிருக்கிறார்கள் - ஆனால், அவர்கள் வேளைக்கு எத்தனை படி பால் கறக்கிறது என்ற பயனுள்ள விஷயம்பற்றி அக்கறை காட்டுகிறார்கள்; எத்தனை கூடைச் சாணம் என்ற கணக்குப் பார்ப்பதிலே அல்ல.

என்னால் முடிந்த அளவு பொறுப்புணர்ச்சியுடன் இவர்களிடம் கழகம் பற்றிய விளக்கம் தந்து வருகிறேன் - அவர்களும் தத்தமது வாய்ப்புக்கு ஏற்ற முறையில் என்னிடம் கேட்டறிந்து கொண்டவைகளை மற்றவர்களுக்குக் கூறி வருகிறார்கள் - கட்டுரைகள், செய்தித் தொகுப்புகள் மூலமாக.

காங்கிரசாட்சியை நமது கழகம்

எதிர்க்கிறது என்பதனால், காங்கிரசின் பெருந்தலைவர்களைப் பற்றி ஏதாவது கேட்டால், எரிச்சல் காரணமாக ஏதேனும் இழிமொழி கூறுவேன் என்று எண்ணிக் கொண்டு சிலர் என்னிடம் கேள்விகளைத் தொடுத்தனர். அதைப் புரிந்து கொண்டதால் அல்ல, எனக்கே எவரையும் இழிமொழியாலே தாக்கும் இயல்பு கிடையாது என்ற காரணத்தால், நான் அவர்களைப் பற்றி மிக்க மரியாதையான முறையிலேதான் பேசினேன்.

குறிப்பாக, இலண்டனிலிருந்து வந்திருந்த டெலிவிஷன் அமைப்பாளர், என்னிடம் ஒரு கேள்வி கேட்டார் - காமராஜர் இந்தியாவின் பிரதமராக வரத்தகுதி உள்ளவர் என்று நீங்கள் கருதுகிறீர்களா? என்று. நான் தட்டாமல் தயங்காமல், ஏன் வரக்கூடாது! என்றுதான் கூறினேன்.

எனக்கு ஒரு எண்ணம் தம்பி!

நாம் எவருடன் மாறுபாடான கருத்துக் கொண்டிருக்கிறோமோ, எவரை எதிர்த்து நிற்கிறோமோ, அவர் மிகச் சாமானியமானவர். எந்தவிதமான திறமையுமற்றவர், தகுதியுமற்றவர் என்றிருந்தால், அப்படிப் பட்டவரை எதிர்ப்பதிலே பெருமையே இல்லை என்ற எண்ணம், புலிவேட்டை ஆடுவதிலே வீரமும் களிப்பும் ஏற்படும் - ஆபத்து இருப்பினும்; நான் வேட்டை ஆடுவது மிகச் சாதாரணமான எ-யை என்றால், அந்த வேட்டையிலே பெருமை ஏது! மதிப்பார் யார்? ஆகவே நான் காங்கிரசின் பெருந்தலைவர் களைத் தாழ்வாகப் பேசுவது இல்லை என்பது மட்டுமல்ல, அவர்களைப் பற்றிய தாழ்வான எண்ணமே என் மனத்தில் கிடையாது. அவர்கள் தாழ்வானவர்கள், தகுதியற்றவர்கள் என்றால், அவர்களை எதிர்த்து நாம் போராடி வருகிறோம் என்று கூறிக் கொள்வதற்கே நாம்

கூச்சப்பட வேண்டும்!

ஒரு கட்சியில் உள்ளவர்களுக்கும் மற்றோர் கட்சியில் உள்ளவர்களுக்கும் இருக்கும் போட்டி. எந்த முகாமிலே உள்ளவர்கள் "மேலோர்' எவர் தாழ்வானவர் என்பது அல்ல. எவர் காட்டும் வழி நாட்டுக்கு நல்வழி என்பதிலேதான். ஒரு கட்சியில் உள்ளவர்களை மற்றோர் கட்சியில் உள்ளவர்கள் மதித்திடவே கூடாது, மதித்துவிடுவோமானால் பிறகு அவர்கள் முன் மண்டியிட்டு விட நேரிடும் என்று கருதுவது மிகமிகத் தவறு.

நமக்கு நமது கொள்கையிலே அழுத்தமான நம்பிக்கையும், நாம் மேற்கொண்டிருக்கும் தொண்டு கடமை உணர்ச்சியின் மீது கட்டப்பட்டிருக்கிறது என்ற உணர்வும் இருக்குமானால், தகுதி மிக்கவர்கள், நிலைமையில் உயர்ந்தவர்கள்,

மாற்று முகாமில் இருந்தாலும், அவர்களிடம் நமக்கு மிகுந்த மதிப்பு எழுந்தாலும் கூட, நமது கொள்கையை விட்டுக் கொடுக்கும் மனப்போக்கு வரவே வராது. நமது கொள்கைக்கு மாறான கொள்கை கொண்டுள்ளோரிடம் மதிப்பு வைத்தால், நமது கொள்கை கெட்டொழியும் என்று எண்ணுவது பேதைமை. அது காட்டு முறை; மக்களாட்சி முறையின் மாண்பறியாதாரின் போக்கு.

பத்து நாட்களுக்கு முன்பு சென்னையில் ”எகின் பாதம்ஸ்’ என்ற புத்தகக்கடைக்கு நான் போயிருந்தபோது, அங்கு அலுவல் பார்க்கும் நண்பர், மறைந்த சத்தியமூர்த்திக்கும் சர். ராமசாமி முதலியாருக்கும் கட்சி வேறு வேறு, போட்டி பலமாக என்று இருந்தபோதும், ஒருவருடன் ஒருவர் மரியாதையுடன் பழகி வந்தனர், அப்படிப்பட்ட பண்பு இப்போது இல்லையே என்று கூறி வருத்தப்பட்டார்.

அவர் கூறியதிலே பெரும் அளவு உண்மை இருக்கிறது; இன்று வெறுப்பு, அருவருப்பு, பகை எனும் உணர்ச்சியின் துணை கொண்டு மட்டுமே அரசியலில் தம்முடன் மாறுபட்டிருப்பவர் களை மட்டந்தட்டி, தாம் சார்ந்திருக்கும் அரசியல் அமைப்பிற்கு ஏற்றம் தேடித்தர முடியும் என்ற எண்ணம் தடித்துக் கிடக்கிறது ஆயினும், ஒன்று நான் இந்தச் சூழ்நிலையிலும் காண்கிறேன், யாரார்க்குத் தாம் ஈடுபட்டுள்ள கொள்கையிலே வற்றாத பற்றும், தளராத நம்பிக்கையும் இருக்கிறதோ அவர்கள் தம்முடன் மாறுபாடான அரசியல் கருத்துக் கொண்டவர்களுடன் மதிப்புடன், நட்புரிமையுடன், நம்பிக்கையுடன் கூடப் பழகிடும் முறையை மேற்கொண்டுள்ளனர். காலஞ்சென்ற சர்தார் வேதரத்தினம் அழுத்தமான காங்கிரஸ்காரர்; இந்தியிலே பிடிவாதமான பற்றுக் கொண்டவர்.

எனினும், அவர் என்னைப் பகைவனாகக் கருதியதில்லை, கேவலப்படுத்திப் பேசியதில்லை. வேறு பலர் அவர்போல், இன்றும் ம. பொ. சி. அவ்விதமானவரில் ஒருவர்; செங்கல்வராயன் அவ்விதமே; மற்றும் பலப்பலர்.

ஆனால், கொள்கையில் நம்பிக்கை சுரந்ததால் அல்ல, இருந்த இடத்தில் கசப்பு வளர்ந்ததால் காங்கிரசுக்குள் சென்றவர்களோ, பகை கக்கி, இழிமொழி பேசியே மாற்று முகாமினரை ஒழிக்க முடியும் என்ற நினைப்புடன் நாப்பறை கொட்டுகின்றனர், பழுதுபட்ட மங்கை பழுக்க மஞ்சளை முகத்தில் அப்பிக்கொண்டு பத்தினிவேடத் போட்டிடும் கதை போல!!

அவனுக்கு என்ன தெரியும், இவனால் என்ன முடியும்? என்று பேசுவதன் மூலமாகத்தான், தமது பெருமையைத் தம்மவர்

ஒப்புக் கொள்ளச் செய்ய முடியும் என்ற நிலை காங்கிரசின் பெரிய தலைவர்கள் சிலருக்கு ஏற்பட்டிருப்பது விருந்துண்ணு பவனைக் கெடுக்க அவன் எதிரே நின்று "வாந்தி' எடுப்பது போன்றது.

மற்றக் கட்சித் தலைவர்களை மதித்திடுவது, நமது கொள்கையை நம்மிடமிருந்து பெயர்த்தெறிந்துவிடும் என்று எண்ணுவது பேதைமை. அதனால்தான் "காமராஜரின் கட்சிப் பற்று எனக்கு அவரிடம் மதிப்பையும், பெரியாரின் ஓயாத உழைப்பு அவரிடம் மதிப்பையும், ராஜகோபாலாச்சாரியாரின் பேரறிவு அவரிடம் மதிப்பையும், ம. பொ. சியின் தியாகம் அவரிடம் மதிப்பையும் எனக்கு அளித்திருக்கிறது' என்று தம்பி கருணாநிதி, ம. பொ. சி விழாவில் பேசியதை அறிந்து நான் மகிழ்ந்தேன்.

எனக்கோர் தணியாத ஆவல் - என் இயல்புகளை என் தம்பிகள் பெற வேண்டும் என்பதில் - ஆற்றலைப் பற்றிய ஐயப்பாடு எனக்கு எழுந்ததே இல்லை - எனக்கென்று அமைந்துள்ள இயல்புகள் என் தம்பிகளுக்கு முழுக்க முழுக்க ஏற்படவேண்டும் என்ற ஆவல். எனவேதான் நான் மகிழ்ந்து வரவேற்கும் இயல்பான, மற்ற கட்சித் தலைவர்களை மதித்திடும் இயல்பு போற்றத்தக்கது என்ற கருத்துப்படத் தம்பி கருணாநிதி பேசியதை அறிந்து மெத்தவும் மகிழ்ச்சி அடைந்தேன்.

தனி நபர்கள்போலவே சில இதழ்களும், மற்றவர்களை மதிப்பது கூடாது, அதிலும் மாற்றுக் கருத்துக் கொண்டவர்களை மனம்போன போக்கில் தூற்றியபடி இருக்கவேண்டும் என்ற போக்குடன் உள்ளன. இந்த நோக்கம் காரணமாகவே, நான் குறிப்பிட்டுள்ளபடி அவைகள், பயனற்ற

பகுதிகளைத் தேடிப் பிடித்தெடுத்துக் கழகத்திற்கு இழுக்குத் தேடிட முனைகின்றன. பயனற்ற முயற்சி.

அவ்விதமான வீண் முயற்சியில் தம்மை ஈடுபடுத்திக் கொள்ளாத ஏடுகளும் உள்ளன என்பதற்கான எடுத்துக்காட்டு சில கூறினேன். அதனை மேலும் மெய்ப்பிக்கத் தக்கபடி "இல்லஸ்ட்ரேடட் வீக்லி' எனும் ஆங்கில இதழாசிரியர், கழகத்தைப் பற்றிய முழு விவரத்தை அறிந்து கொள்ள, சென்ற கிழமை வந்திருந்தார். விரிவாகப் பேசினோம் - விளக்கம் பல கேட்டார் - வினாக்கள் பல எழுப்பினார் - ஐயப்பாடுகளைக் கூறினார் - உண்மையை அறிந்துகொள்ள விழைந்தார்.

என்னுடன் பேசியதன் விளைவாக அவரோ, அவர் சார்ந்திருக்கிற இதழோ கழகத்தின் கொள்கைகளை அப்படியே ஏற்றுக் கொள்ளும் நிலை ஏற்பட்டுவிட்டது என்று நான்

கூறவில்லை. அத்தகைய மனமயக்கத்தில் நான் எப்போதும் ஈடுபடுவதில்லை. ஆனால் ஒன்று உணர்ந்தேன். அவர் வினா எழுப்பும்போதும் நான் அளித்த பதிலைக் கேட்டுக் கொண்டிருந்தபோதும், கழகத்திடம் மதிப்புடன் இருந்திடக் கண்டேன். என் மகிழ்ச்சிக்குக் காரணம் அதுதான்.

தம்பீ! வள்ளுவர், போர்முறை இலக்கணம் தெரிவிக்கும் நோக்குடன் கூறினார், தன் வலியும் மாற்றான் வலியும் இரண்டையும் அறிந்து கொள்ள வேண்டும் என்று.

மாற்றானின் வலிமையைக் குறைத்து மதிப்புப் போட்டால், விளையக்கூடிய ஆபத்து கொஞ்சநஞ்சமல்ல. மாற்றானிடம் என்ன வலிமை இருக்கிறது! போர்முறை அறியான்! போர்க் கருவிகள் அற்றவன்! நெஞ்சுரம் இல்லை! - என்று கருதி விட்டால், நமது வலிவைக் கெட்டிப் படுத்திக் கொள்ள

வேண்டும், கருவிகளைச் செம்மையாக்கிக் கொள்ள வேண்டும் என்ற எண்ணம் எழாது, ஏற்பாடுகளிலே நாட்டம் செல்லாது. முடிவு? மாற்றானை வீழ்த்திவிடலாம் என்ற எண்ணம் மண்ணாகிப் போகும். எனவேதான், வள்ளுவர் மாற்றானின் வலிவு பற்றிய கணக்குத் தெரிந்திருக்க வேண்டும் என்றார்.

இன்று தமிழகக் காங்கிரஸ், கழகத்தின் வலிவு பற்றிய கணக்கெடுத்துப் பார்த்துத்தான் தேர்தல் கணக்கில் தேவைப்படும் படைக்கலன்களை மிக்க மும்முரமாகச் சேகரித்தபடி இருக்கிறது. பல காலம் பேசிய பழக்கம் காரணமாகவும், தமது படை வரிசையிலே கிலி மூண்டுவிடக் கூடாது என்பதற்காகவும், கழகத்தைப் பற்றிக் கேவலமாகவும், அதனைத் தமது கோபப் பார்வையாலேயே சுட்டுப் பொசுக்கிவிட முடியும் என்ற பாணியிலும் பேசி

வந்தாலும், கழகம் வலிவுள்ளது என்பதனை உள்ளூர உணர்ந்து, இலட்சக் கணக்கிலே பணம் குவித்திடுவதிலும், அலங்கார ஊர்வலங்கள், ஆர்ப்பாட்ட விளம்பரங்கள், பகட்டான பயணங்கள் நடாத்துவதிலும் முனைந்திருக்கிறன்றனர்.

பொதுத் தேர்தல் இன்னும் இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகுதான் வரப்போகிறது என்றாலும், அதற்கு இப்போதிருந்தே காங்கிரஸ் கட்சி முஸ்தீப்புகளைச் செய்து வருவதும் முகாம்கள் அமைத்து வருவதும் எதைக் காட்டுகிறது? எளிதாகத் தேர்தல் களத்து வேலை நடவாது, கழகத்தைச் சந்திப்பது சாமானியமான காரியமல்ல, துளி ஏமாந்தாலும் வீழ்ந்துபடுவோம் என்ற அச்சம் பிடித்து ஆட்டுகிறது தமிழகக் காங்கிரசை.

படைக்கலன்களை - பண மூட்டைகளைச் சேகரிப்பது மட்டும் போதாது என்று, காங்கிரஸ்

கட்சி, நான் குறிப்பிட்ட இதழ் சிலவற்றின் துணைகொண்டு கழகத்துக்கு இழுக்குத் தேடிட எண்ணுகிறது. இந்த இதழ்கள் சில வேளைகளில் "ஜனநாயகம்' பற்றியும் சிந்து பாடுகின்றன!

ஜனநாயகக் கடமையாற்றிடும் வலிவு கொண்ட அமைப்பு இன்று தமிழகத்தில், கழகம் என்ற பேருண்மையை எவரும் மறுக்க முடியாது. இந்த நிலையில், காரணம் எதுவாக இருப்பினும், கழக வலிவைக் குலைத்திடும் முயற்சியில் எவர் ஈடுபட்டாலும், வளரும் ஜனநாயகத்தைக் கெடுப்பதாகவே பொருள்படும்.

"இல்லஸ்ட்ரேடட் வீக்லி' இதழாசிரியர் என்னிடம் கேட்டபோது, நான் கூறினேன், கழகத்தின் இலட்சியம், ஜனநாயகப் பாதுகாப்பு என்று.

தம்பி! மொத்தமாக எமக்குள் நடைபெற்ற உரையாடலைக் கூறினால் மட்டுமே, தரமுள்ள வட்டாரங்கள் என்னென்ன விவரம் அறிந்துகொள்ளும் ஆர்வம் கொண்டுள்ளன என்பது புரியும். அடுத்தகிழமை அது குறித்து எழுதுகிறேன் - இப்போது இதனை மட்டும் கூறுகிறேன் - அந்த இதழாசிரியர், பால் படி எத்தனை என்று அறிந்து கொள்ளத்தான் ஆர்வம் காட்டினார்; சாணம் எத்தனை கூடை என்பது பற்றி அல்ல.

அன்புள்ள

அண்ணாதுரை

4-7-65

15. பயில்வான் வீட்டுக் காளை

காமராசர் பிறந்த நாள் நிதியும் மனோகரனின் கருத்தும்
நோட்டுக்கள் குவிப்பு ஓட்டு வேட்டைக்கு!
பாகல் மேட்டுத் திட்டமும் பாத யாத்திரைத் திட்டமும்
மரம் பழுத்த பிறகே வெளவால் வரும்!

தம்பி!

பார்த்தாயா இந்தப் பொல்லாத ஆசாமி நாஞ்சில் மனோகரன் செய்துவிட்டுள்ள வேலையை துணிச்சல் அதிகம் - காங்கிரசின் பெரிய தலைவரை பெரியவர் என்றுதான் அவரைப் புகழ்பாடிகள் அழைக்கிறார்களாம்! - காமராஜரை ஒரு சிக்கலான சங்கடத்தில் சிக்க வைத்து விட்டிருக்கிறார். இதழொன்றில் பார்த்தேன் - காமராஜரின் பிறந்த

நாள் விழாவுக்காக என்று சொல்லித் திரட்டுகிறார்களே பத்து இலட்ச ரூபாய், அந்தத் தொகையை இந்தியாவை உருட்டி மிரட்டிய படியும் இந்திய எல்லைப் பகுதியை விழுங்கி ஏப்பம் விட்ட நிலையிலும் உள்ள சீனப் பகைவர்களை முறியடிப்பதற்கான நல்ல காரியத்துக்காக நன்கொடையாகக் கொடுத்துவிட வேண்டும் என்று ஓர் யோசனை வெளியிட்டிருக்கிறார். யோசனையா அது! வெடிகுண்டு தம்பி! பயங்கரமான வெடிகுண்டு! எந்த இலட்சங்களை நம்பிக் காங்கிரசார் சல்லடம் கட்டிக் கொண்டு தேர்தல் களத்திலே குதித்திடலாம் என்று துணிவைப் பெற்றிருக்கிறார்களோ, எந்த இலட்சங்களைக் கொண்டு ஏழை எளியோர்களுக்கு ஆசாபாசம் ஊட்டி, அவர்கள் மனத்திலே குமுறிக் கொண்டிருக்கும் வெறுப்பு, எதிர்ப்பு, அருவருப்பு ஆகிய

உணர்ச்சிகளை உருக்குலையச் செய்து ஓட்டுக்களைத் தட்டிப்பறித்து மீண்டும் தர்பார் நடத்தலாம் என்று ஆசையாக உள்ளனரோ, எந்த இலட்சங்களைத் திரட்டிக் காட்டுவதன் மூலமாகவே எதிர்க்கட்சிகளை மிரட்டி விடலாம் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்களோ, காங்கிரசாவது இந்த முறை தேர்தலிலே வெற்றி பெறுவதாவது என்று அய்யப்பாடும் அச்சமும் கொண்டுள்ளவர்களை எந்த இலட்சங்களைக் குவித்துக்காட்டி, தைரியம் கொள்ளச் செய்யலாம் என்று எண்ணிக் கொண்டிருக்கிறார்களோ, அந்த இலட்சங்களை, நாட்டை எதிரியிடமிருந்து மீட்டிடும் நல்ல காரியத்துக்காகக் கொடுத்து விடுங்கள் என்று கூறிவிட்டிருக் கிறார்! ஆத்திரம் அலை அலையாக அல்லவா எழும், பணம் திரட்டிச் செலவிட்டு மீண்டும்

பட்டாபிஷேகம் செய்து கொள்ளலாம் என்று தவமாய்த் தவம் இருக்கும் காங்கிரஸ் தலைவர்களுக்கு, எதை எதையோ எடுத்துக் காட்டியும், ஏதேதோ வாக்குக் கொடுத்தும், அமைச்சர்களே ஊரூர் அலைந்தும், மிட்டா மிராசையும் செல்வவான்களையும், கெஞ்சியும் கொஞ்சியும் திரட்டும் பத்து இலட்சத்தை, அப்படியே கொடுத்து விடச் சொல்கிறார், நாட்டை மீட்டிடும் நல்ல காரியத்துக்கு. இப்படியா ஒரு இக்கட்டான நிலைமையை இந்தத் தம்பி ஏற்படுத்தி காங்கிரசின் பெரிய தலைவர்களைச் சங்கடத்திலே சிக்கவைப்பது!

நாட்டுக்கு இன்றுள்ள பேராபத்தான நிலையையும் அந்த நிலைமையை மூட்டிவிட்டுள்ள பகைவர்களை முறியடிக்கவே அவரவரும் தத்தமக்குக் கிடைத்திடும் பொருளையும் உழைப்பினையும் தந்திட

வேண்டும். அஃதே உண்மையான நாட்டுத் தொண்டு என்பதனையும் எவரும் ஒப்புக் கொள்வார்கள்.

விருந்தும் வீண் ஆரவாரமும், விழாவும் வேடிக்கையும் வேண்டாம்; நேரமும் நினைப்பும் பணமும், இன்று இம்முறையிலே பாழ்பட்டுவிடக்கூடாது. பகைவன் உறுமியபடி இருக்கிறான், அவனை விரட்டியடித்திடவே பணம் அவ்வளவும் பயன்படவேண்டும். மற்ற எல்லாக் காரியங்களையும் பிறகு கவனித்துக் கொள்ளலாம் என்று ஊருக்கு உபதேசம் செய்த காங்கிரஸ் பெரிய தலைவர்கள் ஒரு பெரியவரின் பிறந்த நாள் என்பதன் பேரால் திரட்டிடும் இலட்சங்களை, உத்தமமான காரியத்துக்கே செலவிடல் வேண்டும் என்று யோசனை கூறும் போது அதனைத் தவறான யோசனை என்றோ தகாத திட்ட மென்றோ தள்ளிவிட முடியாது; ஊர் கேலி செய்யும்.

நாட்டை மீட்டிடும் நல்ல காரியத்துக்காக அந்தப் பெரியவர் பெயர் கூறித் திரட்டப்படும் பெரிய தொகை தரப்படுவது அவருக்கே கூடப் பெருமை தருவதாகவே அமையும், உலகு போற்றிப் புகழ்ந்திடும்; அய்யமில்லை! ஆனால், தேர்தல் வருகிறதே பெரியதோர் புயல்! வஞ்சகத்தை வீழ்த்திடவல்ல புயல்! வன்கணார்களை விரட்டி யடித்திடக்கூடிய புயல்! வரிமேல் வரிபோட்டு வாட்டத்தை மூட்டிவிட்ட ஆட்சியாளர்களை அகற்றிடும் வேகம் கொண்ட புயல்! அந்தப் புய-னால் வீழ்ந்து படாதிருக்க, எந்த இலட்சங்களை நம்பிக் கொண்டிருக்கிறார்களோ, அந்தத் தொகையை நாட்டு பாதுகாப்புக்காகத் தந்துவிட்டால் பிறகு பதவிப் பாதுகாப்புக்கு என்ன செய்வது! பண பாணம் வேண்டும், பதவியை மீண்டும் பெற்றிட! அந்தப் பணத்தை வேறோர் காரியத்துக்கு - அது

எத்தனை உயர்வானதாக இருந்தாலும் - செலவிட்டு விட்டால் பதவியைப் பிடித்திடும் வழி அடைபட்டுப் போய்விடுமே! வெகு எளிதாகச் சொல்லிவிட்டாரே - இவருக்கு என்ன தெரியும் அந்த இலட்சங்களைத் திரட்டிட நாங்கள் எடுத்துக் கொண்ட முயற்சிகளின் வகையும் அளவும்! பத்து இலட்சம் என்றால் சாதாரணத் தொகையா! எத்தனை பேர்களிடம், என்னென்ன சொல்லிக் கேட்டுப் பெற்றது அந்தத் தொகை. அதனைத் தேர்தலுக்காகவா பயன்படுத்துவது, நாட்டைக் காத்திடும் பணிக்காகப் பயன்படுத்த வேண்டும். அதுதான் முறை அதுதான் அறம் என்று பேசுகிறாரே இந்தக் கழகத்துக்காரர் - இது வேண்டுமென்றே பொதுமக்களைக் கிளப்பிவிடுகிற தந்திரப் பேச்சல்லவா - ஏன் இந்தப் பக்தவத்சலம் காண்டீபத்தைத் தூக்காமல் இருக்கிறார்

- இந்தக் கழகத்துக்காரர்களை வெளியே விட்டுவைத்தாலே ஏதேனும் பேசி நம்மை வம்பிலே சிக்கவைத்து விடுவார்கள் - எதற்காகத்தான் இருக்கிறது பாதுகாப்புச் சட்டம்! - என்றெல்லாம் எண்ணுவர் காங்கிரஸ்காரர்கள் - பிறந்த நாள் நிதியை நாட்டுக்காகச் கொடுத்துவிடச் சொல்லியது கேட்டு. பொல்லாத ஆசாமி, ஓசைப்படாமல் வீசுகிறார் காங்கிரசாரின் ஆசைக் கோட்டை யினைத் தகர்த்திடவல்ல ஒரு வெடிகுண்டெடுத்து.

ஒவ்வொரு நாளும் பத்துப் பேருக்குச் சாப்பாடு இலவசமாக! மருத்துவத்துக்குப் பணம்! கல்விக்குப் பணம்! துணிமணிகளுக்குப் பணம்! நந்தவனப் பாதுகாப்புக்குப் பணம்! இவ்வளவும் எமது "தர்மஸ்தாபனத்தின்' மூலம் நடந்து கொண்டிருக்கிறது என்றார் ஒரு முதியவர்.

அந்தச் செய்தி கேட்டவர் பூரித்துப் போனார். பொருள் தேடிப் பெறுவதே மற்றவர்களின் இன்னலைத் தீர்க்கத்தான்! அறம் செய விரும்பு என்ற ஆன்றோர் மொழிக்கு ஏற்ப நடந்துவரும் தங்கள் பெருமையைப் பாடிட நான் கவிவாணனாக இல்லையே என்றே கவலைப்படுகிறேன்! பத்துப்பேருக்கு ஒவ்வொரு நாளும் உணவளிக்கிறீர்! உண்டி கொடுப்போர் உயிர் கொடுப்போரே! ஜீவாத்மாக்களைக் காப்பாற்றுவதைக் காட்டிலும் மேலான முறை ஏதும் கிடையாது பரமாத்மாவை வழிபட! உமக்கு இம்மையில் புகழ் மறுமையில் தேவ பதவி நிச்சயம் கிடைத்திடும். உண்டி தருகிறீர்! வந்துற்ற நோயையும் தீர்க்கின்றீர்! கல்விச் செல்வமும் அளிக்கின்றீர்! உமது கருணையே கருணை! என்று புகழ்ந்துரைத்துவிட்டு,"பத்துப்பேர் என்கின்றீரே. இன்னின்னார் என்று ஏதேனும்,

ஜாதி மதம் நிலை என்ற முறை உண்டோ?'' என்று கேட்டார். "இல்லை!'' என்றார் தர்மஸ்தாபனக்காரர்."அப்பதின்மர் ஒவ்வோர் நாள் வேறு வேறோ - ஒரு பதின்மரே ஒவ்வோர் நாளுமோ!'' என்று விளக்கம் கேட்டார். தர்ம ஸ்தாபனத்தார், "அப்பதின்மர் வேறு யாருமல்ல, நாங்கள் அண்ணன் தம்பிகள் மூன்று பேர், எமது துணைவியர் மூவர், எமது பிள்ளைகள் இருவர், அவர் மனைவியர் இருவர், ஆக மொத்தம் பதின்மர்!'' என்று விளக்கமளித்தார்.

எந்த ஊரில் உளது இந்த விந்தை அமைப்பு என்று கேட்கின்றனையோ தம்பி! எடுத்துக்காட்டுக்காகக் கூறினேன் - கற்பனைதான்! அவ்விதமான "தர்மம்' உண்மையான அறமாகாதன்றோ! அதுபோல, ஒரு கட்சியின் தேர்தல் செலவுக்காகப் பயன்படுத்தத் திரட்டப்படும் பணம், ஒரு

பெரியவரின் பிறந்த நாள் நிதி என்ற பெயர் பெறுவது பொருத்தமில்லையே; பொருளுமில்லையே; பெருமையும் அளிப்பதாகாதே! அஃது சோறு சமைக்க அடுப்பை மூட்டிவிட்டு, அதனை வேள்வித்தீ என்று கூறுவது போலன்றோ இருக்கிறது ஏன் இந்தக் கேவலம்? காமராஜருக்குப் பெருமை வரத்தக்க முறையில், அவருடைய பிறந்த நாள் நிதி என்று திரட்டிடும் பெருந்தொகையை, பொதுநலம் தரத்தக்க் சீரிய காரியத்துக்குச் செலவிடுக! என்று கூறுகிறார் - அதனைத் தவறு என்று வாதாடி மெய்ப்பிக்க முடியாது. நாட்டுப் பாதுகாப்புக்கான காரியம், தேர்தல் வேலையைவிட முக்கியமானது என்பதையும் எவரும் எளிதில் மறுத்துவிட முடியாது; ஆனால் ஒப்புக் கொள்வார்களோ காங்கிரஸ்காரர்! எந்தப் பெரியவரின் பெயர் கூறி அவருடைய பிறந்த நாளுக்காக என்று

குறிப்புக் காட்டிப் பணம் திரட்டப்படுகிறதோ, அந்தத் தொகையை நாட்டுக்கான நல்ல காரியத்துக்குக் கொடுத்து விடுங்கள் என்று அந்தப் பெரியவரே கூடச் சொல்லுவாரா! அவரா!

அத்தகைய இயல்பு உள்ளவராக அவர் இருப்பவரானால் எனக்கோ மனைவி மக்கள் இல்லை; என் அன்னையார் மட்டுமே உள்ளார், மூதாட்டியார்; ஆகவே, எனக்கு மாதச் சம்பளம் 1000, 1500; என்ற அளவு எதற்கு? தேவையில்லை; தருமமுமாகாது என்று கூறி விட்டிருப்பாரே! கூறினாரோ!!

ஆகவே, மனோகரன் பேசியது நியாயந்தான் என்று அவர்கள் ஒப்புக் கொள்ள மாட்டார்கள். ஓங்காரக் கூச்சலிட்டுக் கூறுவார்கள், தேர்தல் செலவுக்குப் பணம் வேண்டாமோ! பாவிகளே! உங்கள் தொல்லையைத் தாங்கிடப் பணம்

வேண்டாமே!! என்று.

தேர்தல் செலவுக்காக என்று இத்தனை பெருந்தொகை தேவைதானா - அதுவும் ஒரு ஆளுங்கட்சிக்கு. . . என்ற கேள்விக்கு என்ன பதில் அளிப்பார்களோ தெரியவில்லை.

தேர்தலிலே அதிகமான அளவு பணம் செலவிடப்படுகிறது என்றும், அதன் காரணமாக ஜனநாயகமே கேலிக்கூத்தாக்கப் படுகிறது என்றும், தேர்தல் செலவைக் குறைத்திட வழிவகை கண்டாக வேண்டும் என்றும் அறிவாளர்கள் கூறிவருகின்றனர்.

இந்த நிலையில், காங்கிரஸ் கட்சி இத்தனை இலட்சங்களைத் திரட்டுகிறது, தேர்தல் நிதியாக!

ஏன் இத்தனை பெரிய தொகை?

தேர்தல் செலவுக்காகத்தான்!

தேர்தல் செலவு என்றால், எந்த வகையான செலவு?

தேர்தலுக்கான பிரச்சாரச் செலவுதான்!

இப்படித்தான் பதில் அளிப்பர் சற்றுப் பொறுப்புணர்ந்த காங்கிரசார் - பொங்கி வழிந்திடுபவைகள் ஏதேதோ பொல பொலவென உதிர்த்திடும்.

தேர்தல் பிரச்சாரம் - ஆளுங்கட்சி தன் சாதனைகளை மக்களிடம் எடுத்துக் கூறிடுவது - வேறென்னவாக இருக்க முடியும்?

இதனை ஒரு ஆளும்கட்சி தனியாகத் திட்டம் போட்டுக் கொண்டு, தனியாகப் பணம் செலவழித்துச் செய்திட வேண்டிய அவசியமே எழவில்லை.

சர்க்காரின் செய்தித் துறை பெரிய செலவில் அவ்வப் போது, சர்க்காரின் திட்டங்கள் பற்றியும், சாதனை குறித்தும்,

அழகழகான வழவழப்பான பளபளப்பான ஏடுகளை வெளியிட்டு வழங்கியபடி உள்ளது. படங்கள், கண்கவரும் விதத்தில். பொலி காளையைத் தடவிக் கொடுத்த நிலையில் ஒரு மந்திரி! மக்காளச் சோள மணியை வாயில் போட்டுக் கொள்ளும் நிலையில் மந்திரி! மல உரக்குழித் திட்டத் துவக்க விழாவில் மந்திரி! மார்கழி மாத பஜனைக்கூட ஆண்டு விழாவில் மந்திரி! கூடை முடைவோருடன் மந்திரி! குத்துவிளக்கு ஏற்றும் நிலையில் மந்திரி! கயிறு திரித்திடும் தொழிற்கூடத்தில் மந்திரி! - இவ்விதம் படங்கள், பக்கத்துக்குப் பக்கம் இந்த வெளியீடுகளில்.

இதழ்களும் அமைச்சர்களின் பவனி, பயணம், பேச்சு எதனையும் சிந்தாமல் சிதையாமல் வெளியிட்டபடி உள்ளன.

வானொலியும், அமைச்சர்களின் அறிவுரைகளை, அறை கூவலை, பரப்புவதில்

தனித் திறமை காட்டுகிறது.

படக் கொட்டகைகளில் ஒவ்வொரு நாளும், சாதனைகள் பற்றிய காட்சிகள் - உருண்டோடும் வெள்ளம் - அதிலே வீழ்ந்து வேதனைப்படும் மக்கள் - அதனைக் கண்டு கண்ணீர் வடித்திடும் மந்திரி - அதுபற்றிய உருக்கமான பேச்சு, நித்த நித்தம்! பாலைவனம் சோலைவனமாகிறது. ஆங்குப் பசுங் கிளிகள் இசை பயிலுகின்றன - படக்காட்சியில்.

ஒவ்வொரு நாளும் ஒரு திறப்பு விழா! ஒவ்வோர் திறப்பு விழாவும் ஒரு பிரச்சாரக் கூட்டம்!!

இவ்வளவு நடைபெறுகிறது. சர்க்கார் பற்றிய செய்தி அறிவிப்பு என்ற பெயரால் - ஆளுங்கட்சிக்கு ஆதரவான தேர்தல் பிரச்சாரம்.

இவ்வளவுக்குப் பிறகும் தனியாகச் செலவிட்டுத் தேர்தல் பிரச்சாரம் தேவைதானா - அதிலும் இத்தனை பெரிய தொகை - பத்து இருபது இலட்சங்கள் - அந்தப் பிரச்சாரத்துக்காகத் தேவையா! பேசுபவர்கள் வார்த்தைகளை வீசப் போகிறார்களா - அல்லது பொற்காசுகளை வீசப் போகிறார்களா!! ஏன் இத்தனை இலட்சங்கள்.

எதிர்க்கட்சிகளுக்கு இந்த வசதிகளும் வாய்ப்புகளும் இல்லை - கிடைத்திட வழி இல்லை. சர்க்காரின் வெளியீடுகளும், வானொ-யும் எதிர்க்கட்சிகளுக்கு எட்டாக் கனிகள். இதழ்களோ, பட்டும் படாமலும் சில நாட்கள் சிறிதளவு செய்திகளை வெளியிடுகின்றன - இதற்கே பாவம், பெரிய இடத்தின் சீற்றத்தால் தாக்கப்படும் நிலை.

எதிர்க் கட்சிகள் தமது கருத்தினை மக்களிடம் எடுத்துக் கூறிடும் முயற்சியில்

எதிர் நீச்சலிடும் முறையில் ஈடுபட வேண்டி இருக்கிறது. ஆளுங்கட்சிக்கு இதுவா நிலைமை?''

பொதுப்பணத்தில் ஆளுங்கட்சி தன் பிரசாரத்தை மும்முரமாக நடத்திக் கொண்டபடி இருக்கிறது.

தம்பி! ஒரு இதழில் பார்த்தேன். யாரோ ஒருவர் மெத்தக் கவலையுடன் கேட்டிருக்கிறார், இது முறைதானா அரசியல் அறம்தானா என்று.

திருமதி இந்திராகாந்தி அவர்கள் சத்தியமூர்த்தி பவனில் காங்கிரஸ் ஊழியர்களுக்காக நடத்திய கூட்ட நிகழ்ச்சியையும்,

திரு. காமராஜரின் பிறந்தநாள் விழாவைக் காங்கிரஸ் கட்சி கொண்டாடிய நிகழ்ச்சியையும் வானொ-யில் விரிவாக ஒலி பரப்பியது அரசியல் அறமா, முறையா என்று

கேட்டிருக்கிறார்.

முறையற்ற விதமாகவெல்லாம்கூட, தமது கட்சிப் பிரசாரத்தைப் பொதுப்பணத்தைச் செலவிட்டு நடத்திக் கொள்ளத் துணிவும் வாய்ப்பும் இருக்கிறது ஆளுங்கட்சிக்கு. இவ்வளவுக்குப் பிறகும், தனிச் செலவிட்டு, தனியாகத் திட்டமிட்டுப் பிரசாரம் செய்திட வேண்டுமா! ஏன்? அவ்வளவு தேவைப்படுகிறது பொய்யை மெய்யாக்க! மக்களை மயக்கிட!! கழகம் மக்களிடம் எடுத்துரைத்திடும் கருத்தினை மறுத்திட!! பத்து இலட்சம் - தம்பி! இது முதல் தவணை! இன்னும் பலப்பல இலட்சங்கள் குவித்திடப் போகிறார்கள் - குவித்தாக வேண்டும் - கழகம் இவர்களை இலேசாகவா வேலை வாங்கப் போகிறது! இளிப்பதை இப்போது முதல் தொடங்கியாகிவிட்டது - இனி 1967 தேர்தல் முடிகிறவரையில் இவர்களுக்கு இதேதான்

வேலை!

இந்த இலட்சணத்தில் ”பெரியவர்’ முழக்கமிடுகிறார், கழகம் கலகலத்து விட்டது! ஓடி ஒளிந்து கொண்டார்கள்! என்பதாக. ஆமாம்! ஐயா! ஆமாமாம்! என்கிறார்கள் அடிவருடி மடி தடவிடுவோர்.

கொள்கையை விட்டுவிட்ட கழகம் - கோழைகள் உள்ள கழகம் - தடுமாறித் திரிந்திடும் கழகம் - கட்டுப்பாடற்ற கழகம் - குட்டையைக் குழப்பும் கழகம் - இவ்விதம் இந்தப் பெரியவர்களே பேசுகிறார்கள்! இந்தவிதமான குளறலைப் பேச்சு என்கிறார்கள் - பேருரை என்கிறார்கள் - தம்பி! தம்பி! இதற்கு அறிவுரை என்றுகூட விளம்பரம் செய்கிறார்கள்!

ஆண்டு பல காத்திருந்து முதலமைச்சர் ஆகியுள்ளவர் இருக்கிறாரே

பக்தவத்சலனார். அவர் சென்ற கிழமைதான் தூத்துக்குடியில் பேசியிருக்கிறார் - ராஜகோபாலாச்சாரியார் கழகத்திடம் தூக்குக் கயிறு கொடுத்துவிட்டிருக்கிறாராம்; அதிலே மாட்டிக் கொண்டு கழகம் தன்னாலே ஒழிந்துவிடப் போகிறதாம்!

இவ்விதம், அலட்சியப்படுத்தத்தக்க, அடிப்படை அற்ற, கொள்கையற்ற, கோழைத்தனம் உள்ள கழகத்தை எதிர்த்துத் தேர்தலை நடத்தப் பத்து இலட்சம்! புரிகிறதா தம்பி! இந்தக் கேலிக்கூத்து!

இரும்புக் கவசம் போட்டுக் கொண்டு, இடுப்பில் குத்துவாள் செருகிக் கொண்டு, கரத்திலே உடைவாள் ஏந்திக் கொண்டு, காற்றெனப் பறந்திடும் புரவி மீது அமர்ந்து களம் நோக்கிச் செல்கிறான் வீரன்! செல்லுமுன் சொல்லுகிறான். "பகைவன் படுகிழம்! கட்கம் தூக்கிடும் வலிவுமற்றவன்!

பாதை தெரிந்து நடந்திட முடியாது. விழி பழுதானவன்!'' என்று பகைவன் இத்தகையவன் என்றால் அவனை எதிர்த்திட இத்தனை"முஸ்தீப்பா' என்று கேட்டுக் கைகொட்டிச் சிரித்திடுவாரன்றோ!

காங்கிரசார், கழகத்தை மிகக் கேவலமாகக் கூறிக் கொண்டே, அதனை எதிர்த்து நிற்க, தேர்தலுக்கு இரண்டாண்டுகளுக்கு முன்பே பலப் பல இலட்ச ரூபாய்களைத் திரட்டுவது கண்டு விவரமறிந்தோர் கைகொட்டி சிரித்திடத்தான் செய்கின்றனர்; அது காங்கிரசின் பெரிய தலைவர்களின் செவியிலே விழவில்லை பணம் சேரச் சேரக் காதும் கேட்காதாம். கண்ணும் தெரியாதாமே!

ஒரு பெரிய புள்ளியிடம் பணம் கேட்கச் சென்றபோது அவர் கேட்டே விட்டாராம்; கழகம் கலகலத்து விட்டது, கொள்கை இல்லை,

கோழைத்தனம் மிகுந்து விட்டது, மக்கள் அதனை மதிப்பதில்லை என்றெல்லாம் “தலைவர்’ கூறுகிறாரே, அவர் விவரம் தெரியாமலா பேசுவார். பொய்யா பேசுவார்; அப்படிப்பட்ட கழகத்தை எதிர்த்து நிற்க எதற்காக இவ்வளவு பணம் என்று. திரட்ட வந்தவர், குரலைத் தாழ்த்தி,”அது பிரச்சாரப் பேச்சு! உண்மையில் கழக வலிவு வளர்ந்தபடி இருக்கிறது; நாம் தவறான கணக்குப் போடக்கூடாது’’ என்று. அந்தப் பெரிய புள்ளியே உன்னிடம் சொன்னாரா அண்ணா! என்றுதானே கேட்கிறாய் தம்பி! அவரிடம் பேசும் நிலையிலும் இடத்திலுமா நான் இருக்கிறேன்; அந்தப் பெரிய புள்ளியின் மோட்டார் ஓட்டும் தோழன் மூலம் கேள்விப்பட்டேன்.

கழகம் அத்துணை வலிவுள்ளது என்ற உண்மையை ஒப்புக் கொள்ளக் காங்கிரஸ்

தலைவர்களுக்கு அச்சமாகவும் இருக்கிறது, கூச்சமாகவும் இருக்கிறது. எனவேதான், கழகம் எமக்கு ஒரு பொருட்டல்ல என்று ஓரோர் சமயம் கதைக்கிறார்கள்.

கழகம், உண்மையில் வலிவற்றது. மக்களின் ஆதரவை இழந்தது என்றால், ஒரு ஆளுங்கட்சி, இன்னமும் மகாத்மாவின் பெயர் கூறி மக்களை மயக்கிடும் வாய்ப்பை இழந்துவிடாத நிலையில் உள்ள கட்சி, தேர்தலுக்காக இத்தனை முன்னேற் பாடுகளையா மும்முரமாகச் செய்து கொண்டிருக்கும், இத்தனை இலட்சங்களையா திரட்டிக் கொண்டிருக்கும்! பேதையும் இதனை ஏற்கமாட்டானே! அறிவுத் தெளிவுள்ள தமிழக மக்களா இதனை ஏற்றுக் கொள்வார்கள்.

இதனைச் சுட்டிக் காட்டுவதற்காகவே மனோகரன், திரட்டியுள்ள இலட்சங்களை நாட்டுப் பாதுகாப்புக்கான நிதியாகக்

கொடுத்துவிட்டு, உமது கட்சியின் சாதனைகளை மக்களிடம் எடுத்துச் சொல்லி "ஓட்டு'க் கேளுங்கள் என்கிறார்.

மக்களிடம் பாவம் அவர்கள் எந்தச் சாதனையைச் சொல்வார்கள்!

உணவுப் பிரச்சினையைத் தீர்த்துவிட்டோம் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கிவிட்டோம் தொழிலாளர் துயரம் துடைத்துவிட்டோம்

என்று கூறமுடியுமா - எவ்வளவு நெஞ்சழுத்தம் இருந்தாலும் கூறமுடியாதே! ஆக, சாதனைகளைக் காட்ட முடியாத நிலையில் என்ன செய்ய முடியும்! நோட்டுகளைக் குவிக்கிறார்கள் ஓட்டு வேட்டைக்காக!! அந்த நோட்டை நாட்டுக்குக் கொடுத்துவிட்டு, "ஓட்டு'க் கேட்க வாருங்கள் என்று சொல்லும்

போது கோபம் கோபமாகத்தானே வரும் காங்கிரஸ்காரர்களுக்கு.

மக்களிடம் தமது சாதனைகளைச் சொல்லி ஓட்டு வாங்க முடியும் என்ற நம்பிக்கையுடன் காமராஜர் அதற்கான பல முறைகளையும் செய்து பார்த்தாகி விட்டது, பலிக்கவில்லை.

பாகல்மேடு திட்டம்
பாதயாத்திரைத் திட்டம்.

நினைவிலிருக்கிறதா, தம்பி! கிராமம் கிராமமாகச் செல்வது, மரத்தடியில் மாநாடு! கிராமத்து மக்களைக் கேட்பது உங்களுக்கு என்ன குறை? என்ன வேண்டும்? என்று. அவர்கள் தங்கள் தேவைகளைத் தெரிவித்ததும் உடனே, அந்த இடத்திலேயே அதற்கான உத்திரவுகளைப் போட்டு விடுவது. பிரச்சினையைத் தீர்த்துவிடுவது. இதுதான் பாகல் மேடு திட்டம். பாகல் மேடு என்ற

சிற்றூரில் காமராஜர் நடத்திக் காட்டிய விளம்பர மிக்க நடவடிக்கை. அடே அப்பா! அதற்கு இதழ்களில் என்னென்ன விதமான வர்ணனைகள், படங்கள், பாராட்டுகள்!'' ஆனால், நடைபெற்றது என்ன? பாகல் மேடோடு பாகல் மேட்டுத் திட்டம் முடிந்துவிட்டது. தொடர்ந்து நடை பெறவில்லை.

பிறகு பாதயாத்திரை! அமைச்சர்களும் தலைவர்களும் கிராமம் கிராமமாகக் கால் நடையாகச் செல்வது. கால்நடை என்றால் என்னமோ போல இருக்கிறது என்பதாலே இதழ்கள் ஒரு சிறப்புப் பெயர் சூட்டின - பாதயாத்திரை என்று. அமைச்சர்கள் பாதயாத்திரையைப் பாதியாத்திரை ஆக்கிக் கொண்டனர். ஊர் எல்லை வருகிற வரையில் படகு போன்ற மோட்டாரில் பயணம், எல்லையிலே காரை நிறுத்திவிட்டு, ஊருக்குள்ளே நடந்து பயணம்; மறு

எல்லை வந்ததும் மோட்டார்; இப்படிப் பாதி யாத்திரையாக்கிவிட்டனர், அதுவும் தொடர்ந்து நடைபெறவில்லை; பயன் இல்லை.

பிறகு "இளைஞர் காங்கிரஸ்' அமைத்தனர் - காங்கிரசில் புதிய இரத்தம் பாய்ச்ச! இளைஞர் காங்கிரஸ் திறப்பு விழாக்கள் - மாநாடுகள் - ஊர்வலங்கள் - முழக்கங்கள் - அடிதடி கலகம் - அவ்வளவும் நடைபெற்றன. பிறகு அதனாலும் பயன் இல்லை என்று கண்டு கொண்டனர். முதியவர்களே இளைஞர்கள் ஆகிவிட்ட விந்தைதான் நடந்தது; இளைஞர் காங்கிரசில் இளைஞர்கள் சேரவில்லை.

பிறகு மண்டலக் காங்கிரஸ் திட்டம் வகுத்தனர்; தீவிர மெம்பர் திட்டத்தை இணைத்தனர், அந்தத் திட்டம் மும்முரமாக வேலை செய்த நேரத்திலேதான், தம்பி கழகம் 15 இடங்களிலிருந்து 50 இடங்கள் என்ற அளவுக்கு வளர்ந்தது.

இவ்விதமாகப் பலப் பல திட்டங்கள் போட்டுப் பார்த்து, பலன் தராதது கண்டு, இப்போது பணம் திரட்டும் திட்டம் போட்டிருக்கிறார்கள். இதனைத் தகர்த்திட முனைந்து - அதற்காக ஒரு யோசனையும் சொன்னால், அவர்களுக்கு எப்படி இருக்கும்! கண்கள் கொவ்வையாகின்றன.

ஆனால் தம்பி! இந்தப் பணம் திரட்டும் திட்டமும் பலிக்கப் போவதில்லை; நீ மட்டும் விழிப்புடனிருந்தால், எழுச்சி குன்றாமல் பணிபுரிந்தால்.

இந்த முறை வெளிப்படையாகச் சொல்லுகிறார்கள். விளம்பரக் கோலத்துடன் - பணம் திரட்டுவதாக. ஆனால், போன தேர்தலில் பணம் திரட்டாமலில்லை. எராளமாகப் பணம்! அவர்கள் கொடுத்த கணக்கின்படியே பெரிய கம்பெனி களிடமிருந்து நன்கொடையாகப் பெற்ற

தொகை மட்டும் 98 இலட்சம். ஆகவே இந்தப் பண பாணமும் புதிது அல்ல! ஜனநாயக உணர்வு வளர வளர இந்தப் படைக்கலன் கூர் மழுங்கிப் போய்விடக் கூடியது.

செல்வாக்கு சிதைந்து வரும் நிலையில் ஒரு கட்சி. பணம் சேர்த்து புதிய பலம் பெற நினைப்பது ஆடிக்கெட்ட முதியவன் ஆசை அடங்காததால் தங்க பஸ்பம் சாப்பிடுவதற்கு ஒப்பானது. முறுக்கு ஏறும்! வேகமாக!! அதைவிட வேகமாக முறுக்கு தளர்ந்துவிடும். முறிந்தே கூடப் போய்விடும்.

இவ்வளவு பணம் குவித்துக் கொண்டிருக்கிறார்கள் என்ற செய்தியைக் கேள்விப்படுவார்கள், நாளைய தினம் தேர்தல் சம்பந்தமான வேலைக்காகத் தலைவர்கள் அழைத்திடும்போது, தாவிக் குதித்து வரமாட்டார்களா, பச்சை நோட்டை நீட்டுங்கள், பணி செய்வதைப் பாருங்கள்

என்று! தன்னலமற்ற பணியா நடைபெறும்! எதற்கெடுத்தாலும் பணம்! ஒன்றுக்கு ஒன்பதாகச் செலவு! ஒரே வேலைக்கு ஒன்பது ஆள்! பல வேடிக்கைகள் நடைபெற இருக்கின்றன.

கழகத்தை ஒழித்துக் கட்டிவிடுகிறேன் என்று காமராஜரே கூறிவிட்டார் என்று பேசுகிறார்கள் - அந்த "ரே'வுக்கு என்ன பொருளோ தெரியவில்லை. அவர் என்னமோ இதுநாள் வரையில் கழகம் வளரட்டும் வாழட்டும் என்று கூறி வந்தவர் போலவும், இப்போதுதான் அதனை ஒழித்துவிடும் எண்ணம் அவருக்கு முளைத்திருப்பது போலவும் பேசுகிறார்கள்; பொருளற்ற பேச்சு.

"ரே' என்பதிலேயும் எந்தவிதமான தனிச் சிறப்புப் பொருளும் இருப்பதாக எனக்குப்படவில்லை. அவருடைய ஆற்றல் திடீரெனப் பெருக்கெடுத்து ஓடத் தொடங்கி

விட்டதாகவும் நான் கருதவில்லை.

தேர்தல் வேலையைச் சுறுசுறுப்பாகக் கவனிப்பதில், பணம் இருக்கும் இடத்தைக் கண்டறிவதில், திரட்டுவதில் அவருக்கு எப்போதும் தனித் திறமை உண்டு.

திறமையைவிட, இன்று ஏற்பட்டுள்ள நிலை பணம் திரட்டுவதற்குச் சாதகமாக அமைந்திருக்கிறது.

எட்டு ஆண்டுகள் அமைச்சராக இருந்திருக்கிறார் - முதல் அமைச்சராக - இப்போது முதல் அமைச்சருக்கு மூக்கணாங் கயிறு போட்டு நடத்திச் செல்வதாகச் சொல்கிறார்கள் - இந்த நிலையில் பணம் திரட்டுவதிலே கஷ்டம் என்ன ஏற்பட முடியும். பணம் கொடுக்க முடியாது என்று கூறி அவரைப் பகைத்துக் கொள்ள யார் விரும்புவார்கள் - அதிலும் சர்க்காரின்

தயவினாலேயே "கனதனவான்' ஆனவர்கள்!

இந்த எட்டு ஆண்டுக் காலத்தில், எத்தனை எத்தனை புதிய புதிய தொழிற்கூடங்கள் அமைத்துள்ளனர் முதலாளிகள்.

சென்ற கிழமைகூட 14 கோடி ரூபாய் மூலதனம் கொண்ட அலுமினியத் தொழிற்சாலை துவக்கி அதன் அதிபர் வெங்கடசாமி நாயுடு அவர்களைப் பாராட்டினார்களே!

முதலாளிகள் இத்தனை புதிய புதிய தொழிற்சாலைகள் நடத்தி இலாபம் குவித்திட சர்க்காரின் துணையின்றி முடியுமா? கடன், மானியம், அன்னியச் செலாவணிக்கான அனுமதி, யந்திர இறக்குமதிக்கான அனுமதி, இவ்வளவும் சர்க்கார் தருகிறது; இந்தச் சர்க்காரை நடத்தியவர் காமராஜர், எட்டு ஆண்டுகள் அவருடைய பிறந்த நாள் நிதி

என்று சொல்லி, இவ்விதமாக முதலாளிகளை வாழச் செய்யக் கூடிய சர்க்கார் அமைத்திடும் காங்கிரசின் தேர்தல் செலவுக்காக என்றும் சொன்னால், எந்த இலாப வேட்டைக்காரன் பணம் தரமுடியாது என்று கூறிடும் மடத்தனத்தைக் காட்டிக் கொள்வான்; ஆகவே, அள்ளிக் கொடுக்கிறார்கள். இதைப் பெறத் தனித்திறமையா தேவை!! தம்பி! மனக்கண்ணால் பாரேன், பணம் திரட்டக் கையாளப்படும் முறை பற்றி. தம்பி! வாயேன் என்னோடு பெரியவர் வீட்டுக்கு.

வெளியே பார்த்தாயா பெரிய மோட்டார் - அமெரிக்க மோட்டார் - இறக்குமதி செய்ய அனுமதி இல்லை இங்கு - ஆனால் சீமான் - பெயர் எதற்கு - இதை வாங்கினார் - ஒரு இலட்சத்திற்குப் பத்தாயிரம் குறைவு, விலை. காத்துக் கொண்டிருக்கிறார், பெரியவரைக்காண.

பெரியவர் வெறும் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவராக இருந்தபோது இந்தச் சீமான் இப்படிக் காத்துக் கொண்டிருந்தாரா? மரம் பழுத்த பிறகுதானே தம்பி! வெளவால் வரும். வந்திருக்கிறார்.

பெரியவர் குளித்துக் கொண்டிருக்கிறார் - தெரிய வில்லையா - வேலையாள் பரபரப்பாக, மடிப்புக் கலையாத வேட்டி சட்டைகளை வைத்துக் கொண்டு நிற்கிறானே, பயபக்தியுடன், புரிகிறதல்லவா!!

கூடத்திலே அமர்ந்திருப்பவர்? ஒரு அமைச்சர்!

வருகிறார் காமராஜர் - எழுந்திருக்கிறார் அமைச்சர்.

உட்காரச் சொல்லி கைகாட்டுகிறார் காமராஜர்.

நீயும் நானும் அமைச்சரும் கொஞ்சநேரம்

காத்திருக்க வேண்டும் - ஐயா காலைச் சிற்றுண்டி சாப்பிடுகிற வரைக்கும்!

முடிந்தது. பேசுகிறார்கள், கேட்போம்.

"எதுக்காகப் பார்க்கணுமாம்?''

"சிமிட்டித் தொழிற்சாலை விஷயமாத்தான். . .''

"நல்ல கொள்ளையாமே சிமிட்டியிலே, ஒரே பிளாக் மார்க்கட்டாம். இல்லாமலா அத்தேப் பெரிய கார் வாங்கி யிருப்பான். . . சரி. . . நீ என்ன சொல்றே?''

"ஆள் நல்லவன்தான். . . கொஞ்சம் அழுத்தம்''

"அப்படியானா ஒரு அஞ்சாறு தடவை இழுத் தடிக்கணும்...''

"தேவையில்லே. பார்லிமெண்ட் சீட் ஒண்ணும் நாலு M.L.A. சீட்டும் அவனிடம்

பொறுப்பா ஒப்புவித்து விடலாம்.''

"நம்பலாமா. . .? பின்னால கையை விரித்து விடுவானா. . .''

"அப்படிச் செய்யமாட்டான். . .''

"சரி. வரச்சொல்லு. . .''

சீமான் வருகிறார்! சிரிப்பு! பேச்சு! மகிழ்ச்சி! புரிகிறதல்லவா!!

தம்பி! வேறோர் ஊர் போவோமா, வேறோர் காட்சி காண?

இதோ இவர்தான் மண்டலம். ஆட்சித் தலைவர் சுற்றுலா மாளிகையில் வந்திருக்கிறார். பார்த்துவிட்டு வந்திருக்கிறார் மண்டலம். அவரோடு போய்வருவோமே.

மாளிகை பெரிது என்கிறாயா! ஆமாம்! இதுபோல மூன்று. இங்கு, ஊட்டியில்

ஒன்று, கோடைக்கானலில் ஒன்று, விலை பேசிக்கொண்டிருக்கிறார்; கோடீஸ்வரர், பெயரா? அதுவா முக்கியம்! இலட்சுமி புத்திரன் என்று சொல்லுகிறார்கள்.

"யாரு, மண்டலமா? வாய்யா, டெலிபோன் செய்தது நீதானா. . .?''

"ஆமாம். . . நீங்க வெளியே பொறப்படறதுக்குள்ளே முக்கியமான விஷயம் சொல்ல வேண்டி இருந்தது.''

"உனக்கு எல்லா விஷயமும் முக்கியமான விஷயந்தான். கூட்டமா, மகாநாடா, ஊர்கோலமா; நன்கொடை கேட்கத் தானே. . .!''

"அதில்லங்க. நீங்க பசுபதீஸ்வரர் கோயில் தர்மகர்த்தா வாகணும்னு மனுக் கொடுத்திங்களா. . .''

"ஆமாம், ஆமாம். . . அது என்னோட

பூர்வீக ஊர்லே உள்ள கோயிலு எனக்கு அந்தக் கோயிலுக்குத் தர்மகர்த்தாவாகிப் பசுபதீஸ்வரருக்குச் சேவை செய்யணும்னு நெடுநாளா ஆசை. .

.'' "ஒரு பேச்சு என்னிடம் சொல்லப்படாதா. . . சரி இருக்கட்டும். . . அது உங்களுக்கு வேணும். .

.'' "ஆமாய்யா, கிடைக்க என்ன வழிசொல். . .''

"கிடைக்கத்தானே போகுது, அவரு அதுக்காகவேதானே வந்திருக்காரு''

"யாரு கமிஷனரா?. . .''

"கமிஷனரை நியமிக்கிற எஜமானரு! கமிஷனர் வந்திருந்தா, அதைப் போயி ஒரு பிரமாதம்னு சொல்ல வந்திருப்பேனா. . . அவரு வந்திருக்காரு. . . தலைவரு. . .

"அப்படியா. . . எங்கே. . . நம்ம மாளிகையிலே அவரோட பாதம்படக் கூடாதா. . .?''

"அவசரமான வேலையா வந்திருக்கிறாரு. சுற்றுலா மாளிகையிலே இருக்கறாரு, கையோடு அழைத்துக் கொண்டு வரச்சொன்னாரு.''

"என்னையா! ஏன்யா, அவரே சொன்னாரா, என்னை அழைத்துக் கொண்டு வரச்சொல்லி?''

கிளம்பிவிட்டார்கள்! தம்பி! சுற்றுலா மாளிகை அறைக்குள்ளே போய்விட்டார் சீமான். நீயும் நானும் வெளியே இருந்து, அந்தச் சிரிப்புச் சத்தத்தைத்தான் கேட்க முடிகிறது. அந்த சத்தத்திற்கு என்ன பொருள் தெரியுமா, உனக்கு! பசுபதீஸ்வரருக்குச் சேவை செய்யும் பாக்கியம் கிடைத்துவிட்டது

சீமானுக்கு - தேர்தல் நிதி சேர்த்துவிட முடியும் என்ற நம்பிக்கை மண்டலத்துக்கு. பசுபதீஸ்வரரின் மகிமையைச் சொல்ல மறந்துவிட்டேனே! முந்நூறு வே- அயன் நஞ்சை - நாலு கடைவீதி - இவ்வளவும் பசுபதீஸ்வரருக்கு இவ்வளவையும் கவனித்துக் கொள்ளப் போகிறவர் தர்மகர்த்தா.

தம்பி! ஆளுங்கட்சி தேர்தல் நிதி திரட்டுவது கண்டு மலைத்துவிட மாட்டார்கள் யாரும், பயில்வான் வீட்டுக் காளை பயிரை அழித்தால், அடித்து விரட்ட முடியுமா! தேவையான அளவு மேயும்!!

ஆளுங்கட்சி பணம் திரட்டுவதிலே காட்டிடும் ஆர்வத்தை முறியடிக்கத் தக்கவிதமாகக் கழகப் பிரசாரம் மும்முரமாக வேண்டும்.

சென்ற கிழமை நான் குறிப்பிட்டிருந்தேனே, கழகம் பற்றிய உண்மையான தகவலைத் தெரிந்து கொள்ளப் பலர் ஆர்வம் காட்டி வருகின்றனர் என்று. அவர்களில் ஒருவர், "காங்கிரஸ் கட்சி பெரிய தொகை திரட்டுகிறார்களே'' என்று கூறினார். அதிலிருந்து தெரிந்து கொள்ளுங்கள், கழகத்தின் வலிவு பற்றிய கணக்கினை என்று கூறினேன். தம்பி! உன் ஆற்றலை நம்பித்தான் அவ்விதம் கூறினேன், நான் கூறியது தவறல்லவே!

அன்புள்ள

அண்ணாதுரை

11-7-65

16. அப்போதே செய்த முடிவு

ஒரு சுவையான - பயனுள்ள கதை

இந்தி ஆட்சிமொழி என்பது அப்போதே செய்த முடிவாம்!

இந்தியாவுக்கு ஒரு மொழியே ஆட்சி மொழி என்பது அறிவீனம்!

மதுவிலக்குக் கூட அப்போதே செய்த முடிவுதானே!

பொறி பறக்கப் பாடியவர் பறந்தே போயினார்!

தம்பி!

ஒரு சுவையான கதை - பயனும் உண்டு - சொல்லட்டுமா! நிகழ்ச்சி என்றுகூடச் சொல்லலாம், ஆனாலும், கதையின் கவர்ச்சி இருப்பதால் கதை என்றே பெயரிட்டு விட்டேன். ஓடும் இரயிலில் நடைபெற்ற நிகழ்ச்சி - மூன்றாவது வகுப்புப் பெட்டியில்.

இரண்டு குடும்பங்கள் உள்ளன அந்தப் பெட்டியில் - தாயும் மகனும் - தாயும் மகளும் - மகன் ஆறு வயது - மகள் ஐந்து வயது. அழகான சிறுவன், சிறுமி. நமது நாட்டிலேதான் குழந்தைப் பருவத்து அழகு மிகுதியாயிற்றே - வளர வளரத் தானே பாவம், உடல் கருத்து, உறுப்புகள் தேய்ந்துபோய் பரிதாபத்துக் குரிய உருவங்களாகி விடுகின்றன. சென்ற கிழமை திருமண விழாவிலே சி.பி.சி. சொன்னது நினைவிற்கு வருகிறது - குழந்தைகள் வளர வளரக் கையைக் காணோம், காலைக் காணோம், வயிறு மட்டும்தானே முன்னாலே முட்டிக்கொண்டு வந்திருக்கிறது என்றார் - தாய்மார்கள் அனைவரும் கொல்லென்று சிரித்தனர். சிலர் தமது குழந்தைகளை மறைத்துக் கொண்டனர்.

இரயிலில் செல்லும் சிறுவனும் சிறுமியும் அவ்விதம் இல்லை - சிங்காரச் சிட்டுப்போல,

மல்லி மொட்டுப்போல அழகாக உள்ளன. அந்தத் தாய்மார்களுக்கு மகிழ்ச்சி - பெருமை - தமது குலக் கொடிகளின் அழகு கண்டு.

சிறுவனும் சிறுமியும் சிணுங்கிக் கொண்டில்லை - சிரித்து விளையாடுகின்றனர்.

மணிப்பயல் துணிச்சல்காரன். சிறுமியுடன் கைகோர்த்துக் கொண்டு விளையாடுவது மட்டுமல்ல, தன்னிடம் உள்ள "பிஸ்கட்டு'த் துண்டு எடுத்துத் தந்து தின்னச் சொல்வது மட்டுமல்ல, போக்கிரிப் பயல், முத்தமே கொடுக்கிறான். அந்த வயதிலேயே ஒரு வெட்கம் அந்தப் பெண்ணுக்கு; பெண்ணைப் பெற்றவளோ முகவாய்க் கட்டையில் கையை வைத்தபடி இதனைக் காண்கிறாள், வாய்விட்டுச் சிரித்தே விடுகிறாள்.

”உன்னோட மகன் பெரிய கைகாரப்பயலா இருப்பான்போல இருக்குதே. ஒரு அரைமணி நேரத்திலே, என் பொண்ணோட பழகிப் பேசி, எம்மாந்தூரம் போயிட்டான் பார்த்தியா’’ என்றாள் செல்லமாக!

”வாடா என் ராஜா! என் கண்ணு! பாப்பாவுக்கு முத்தா கொடுத்தே. கேட்டாளா அந்தக் குட்டி! கேட்டிருப்பா, தளுக்குக்காரி!’’ என்று கூறி, பிள்ளையைப் பெற்றவள் மகனுக்குத் திருஷ்டி கழிக்கிறாள்.

”பையனுக்குச் சிபாரிசு பேசறதைப் பாரு, என் பொண்ணுதான், உன்னோட மகனைக் கூப்பிட்டு முத்தம் கொடுக்கச் சொன்னாளா?’’

”சொன்னாளோ இல்லையோ, முத்தம் கொடுத்தபோது வேண்டாமுன்னு தடுக்கக் கூடாதா, சொக்கிப் போய் நின்னுட்டாளே. . .’’

“சொக்கவுமில்லை, நிக்கவுமில்லை;

அய்யோ பாவம் இவ்வளவு கெஞ்சிக் கூத்தாடறானே, ஒண்ணு கொடுப்போம்னு,"உம்'னு சொன்னா என் மக. . ."

"உம்னு சொல்லிவிட்டாளேல்லோ, அந்த விநாடியே அவ அவன் பொருளாயிட்டா.'"'அடி அம்மாடி; அப்படி ஒரு நியாயம் இருக்குதா. . .''

"ஏன், என் மகனுக்கு உன் பெண்ணைக் கொடுக்க என்ன கசக்குமா. . . ராஜாவாட்டம் இல்லையா என் மகன். எங்கே போய் நீ தேடினாலும் உனக்கு இதுபோல் அழகான மாப்பிள்ளை கிடைப்பானா! கேள்டா கண்ணு! மாமி, மாமி! உன் பொண்ணை எனக்குக் கொடுன்னு கேளு. . .''

"கேட்பானா தைரியமா. . . என் மக என்ன பொம்மையா, யார் கையிலேயாவது தூக்கிக் கொடுத்துவிட. . .''

”நீ கொடுக்கறது என்ன! அதோ பார்! அதுக ரெண்டும் நம்மைப் பத்தித் துளிக்கூடக் கவலையில்லாமே விளையாடிக் கிட்டு இருக்கறதை. ஜோடி பொருத்தமாயிட்டுது. இனி நீயும் நானும் தடுத்தாலும் நிற்கவாப் போவுது. பேசாம உன் பொண்ணை என் மகனுக்குக் கொடுத்துடு.’’

”அப்படியே ஆகட்டும். அதுக இரண்டும் ஆடிப்பாடி சந்தோஷமா இருக்கறதைப் பார்க்கப் பார்க்க கண்கொள்ளாக் காட்சியாத்தான் இருக்குது. . .’’

”பேர் என்னா சொன்னே பொண்ணுக்கு. . .’’

”அவ பேரா, அரசாளப் பிறந்தவளாச்சே என் மவ; பேரு இந்திரா. . .’’

”என் மவன் பேரு தெரியுமா உனக்கு. . . அழகேசன். . .’’

“பொருத்தமான பேருதான். . . வயசு ஏழா?’’”ஆறு வயசு ஆகுது. . . உன் மகளுக்கு அஞ்சு இருக்குமா.’’

”அதேதான். . . எப்படி அவ்வளவு கணக்காச் சொல்லிட்டே. . .’’

”என் மகனுக்கு வாழ்க்கைப் படப்போறவளைப் பத்தி எனக்குப் புரியாமலா போகும். பேச்சு மாற மாட்டயே. . . என் மகனுக்கே கொடுக்கணும். . .’’

”ஆகட்டும். . . அப்படியே செய்யறது. . .’’

”வாக்குக் கொடுத்தாச்சி, தெரியுதா? தாம்பூலம் மாத்திக் கிட்டோம்; அப்பாலே வந்து அப்படி இப்படின்னு ஏதாச்சும் மறுத்துப் பேசினே, என் மகன் இலேசா விடமாட்டான்.’’

ஓடிக் கொண்டிருந்த இரயில் நிற்கிறது. பெண்ணைத் தூக்கி இடுப்பில் வைத்துக் கொண்டு, போய் வருவதாகச் சொல்லி விட்டு,

அந்தத் தாய் கீழே இறங்கிக் கொள்கிறாள். மகனிடம் காட்டுகிறாள் அவன் தாய், பெண்ணை.

"கண்ணு! நல்லா அடையாளம் பார்த்து வைத்துக் கொள்ளு. . . உனக்குத்தான் அந்தக் குட்டி. . . தெரியுதா. . . வாக்குக் கொடுத்தாச்சி'' என்கிறாள்.

மூன்றாவது வகுப்புப் பெட்டியிலேதான் தம்பி, அடிதடிச் சண்டை முதற்கொண்டு இப்படிப்பட்ட அளவளாவுதல் வரையிலே காண முடியும்.

யாரோ இரண்டு குடும்பம்; முன்பின் பழக்கமில்லை; இரயிலில் நேசம்; இதிலே இப்படிப்பட்ட பாசப் பேச்சு!

வருடங்கள் உருண்டோடுகின்றன - இதுபோன்ற எத்தனை எத்தனையோ நிகழ்ச்சிகளை உருட்டித் தள்ளிவிட்டபடி.

பன்னிரெண்டு ஆண்டுகளுக்குப் பிறகு ஓர் நாள்.

கட்டுடல் படைத்த ஒரு காளை ஒரு ஊரில், ஏதோ ஒரு முகவரியைக் கேட்டுத் தெரிந்து கொண்டு அந்த இடம் நோக்கி நடக்கிறான். வீட்டைக் கண்டறிகிறான்; தாளிடப்பட்டிருக்கிறது; தட்டுகிறான்; உள்ளே இருந்து சிறிதளவு நரை தோன்றியுள்ள பருவத்தினளான ஒரு மாது வருகிறார்கள்.

"அன்னம்மாள் வீடு இதுதானே. . .?''

"ஆமாம், நான்தான் அன்னம். . . யார்? என்ன வேண்டும்...''

"இந்திராவோட அம்மா நீங்கதானே. . .?''

"ஆமாம். . . என் மகதான் இந்திரா. . . நீங்க. . .?''

"இந்திராவைக் கூப்பிடுங்க. . .''

”என்னடா தம்பி! முன்பின் பழக்கமில்லாதவன் இப்படி வந்து, ஒரு வயசுவந்த பொண்ணை இங்கே கூப்பிடுன்னு சொல்லலாமா. . .? உலகம் தெரியாத பிள்ளையாயிருக்கறியே. .. யார் நீ. . .?’’

”விவரம் தெரியாம நான் ஒண்ணும் பேசல்லே, இந்திரா இருக்குதே இந்திர. உங்க மக அது எனக்காகத்தான் வளருது. . . எனக்குத்தான் இந்திரா. . .’’

”யார்டா இவன் அறிவு கெட்டவனா இருக்கறே, குடிபோதையா, வெறியா. . . கூப்பிடட்டுமா அக்கம் பக்கத்திலே உள்ளவர்களை. அவ்வளவு திமிர்பிடிச்சா அலையறே. . . நீ யாரோ எவனோ. . . என் பொண்ணு உனக்குன்னு பேசறியே - நாக்கைத் துண்டாக்கிப் போட. . . நாசமாப் போக’’

”ஏம்மா வீணா அலட்டிக் கொள்றே இப்பப் பேசி என்ன பிரயோசனம் அது அப்போதே செய்த முடிவு. . . பனிரெண்டு வருடத்துக்கு முன்னாலே; இரயிலிலே போகிறபோது, இந்திராவை எனக்கே கொடுக்கறதாக, எங்க அம்மாவிடம் வாக்குக் கொடுத்தாச்சி. . . சொன்ன சொல்லின்படி நடந்து கொள்ளணும்; வாக்கு மாறக்கூடாது. . .’’

”என்னடா இது பெரிய சனியனாப் போச்சி. சந்தேகமில்லாம இவன் ஒரு பைத்தியக்காரன்தான் அண்ணாச்சி! கோபாலண்ணாச்சி! கோவிந்தப்பா! பெரியப்பா! ஓடியாங்க. . .’’

தம்பி! கதையை இந்த அளவோடு நிறுத்திக் கொள்கிறேன். ஏனென்றால் அதற்குமேல் நடைபெற்றவை, அடிதடி, போலீஸ் ஸ்டேஷன், மருத்துவமனை, வழக்குமன்றம் இப்படி இருக்கிறது. விவரம் புரிகிறதல்லவா

உனக்கு பனிரெண்டு ஆண்டுகளுக்கு முன்பு இரயிலில், சிறுவனும் சிறுமியும் விளையாடியது கண்டு பெற்றவர்கள் பேசிக் கொண்டார்களல்லவா, பொழுது போக்காக, அந்தப் பேச்சை அப்படியே தூக்கி வைத்துக் கொண்டு, அப்போதே செய்த முடிவு என்று கூறிக்கொண்டு பித்தமனம் கொண்ட இளைஞன் வந்திருக்கிறான்! கிடைக்க வேண்டியது கிடைத்தது.

இதை ஏன் இப்போது கூறுகிறாய், என்கிறாயா தம்பி! நான் எந்தக் கதையையாவது காரணமில்லாமல் சொல்வதுண்டா? இதற்கும் காரணம் இருக்கிறது.

சில சூழ்நிலைகளில் ஒருவருக்கொருவர் அளவளாவி மகிழ்ந்திருப்பது இயற்கை. கட்டுக்கடங்காத நேச உணர்ச்சி பொங்கி வழியும் வேளைகள்

உண்டு. அந்தச் சந்தர்ப்பங்களில், ஒருவருக்கொருவர் வாக்குக் கொடுத்துக் கொள்வது, பெரும்பாலும் உபசாரத்தின் அடிப்படையிலேதான் அமைந்திருக்கும். அவைகளை ஏதோ மாற்ற முடியாத ஒரு ஒப்பந்தம் என்று எண்ணிக் கொள்வதோ அதன்படிதான் நடந்தாக வேண்டும், மாறவே கூடாது என்று பேச முற்படுவதோ கவைக்கு உதவாது.

ஓடும் இரயிலில், உல்லாச வேளையில் சிறுவன் - சிறுமி விளையாடக்கண்டு மகிழ்ந்து, என் மகனுக்குத்தான் உன் மகள் என்று சொன்னதை. அப்போதே செய்த முடிவு என்று, ஏதோ ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டு விட்டதாகக் கருதிக் கொண்டானே கதையில் காணப்படும் இளைஞன், அதுபோல நடந்து கொள்பவர்களும் உண்டா என்று கேட்கிறாய்; நான் என்ன சொல்ல, தம்பி! இருக்கிறார்கள்

அப்படிப்பட்ட இயல்பினர்.

ஒருவர் நம் வீட்டுக்கு வருகிறார், விருந்தாளியாக; சிறிதளவு கூச்சமுள்ளவர்; அவரிடம் நாம் உபசாரமாகச் சொல்கிறோம். "ஏன் இவ்வளவு கூச்சம்! இது அன்னியர் வீடு என்று நினைக்கலாமா! இதுவும் உங்கள் வீடுதான்; சொந்த வீடுதான்'' என்று. உடனே அந்த ஆள்,"அப்படியானால் வீட்டிலே பாதி பாகம் எனக்குத்தானே'' என்று வக்கீல் மூலம் நோட்டீசு கொடுத்தால் எப்படி இருக்கும், அப்போதே செய்த முடிவு - என்று அவன் வழக்குமன்றத்திலே கூறினால் கைகொட்டி யன்றோ சிரிப்பார்கள்.

இதைப் போன்ற வேடிக்கையான நிகழ்ச்சிகள் மட்டுமல்ல, உள்ளபடி இருவரோ, பலரோ கூடி ஒரு ஏற்பாடு செய்து கொள்கிறார்கள் - ஒப்பந்தமே செய்து கொள்கிறார்கள் என்றே

வைத்துக் கொள்வோம். அந்த ஏற்பாடு கெடுதலாக இருக்கிறது, அந்த ஒப்பந்தம் ஓரவஞ்சனையாக இருக்கிறது, என்று ஒருவருக்கு உணர்வு உண்டானால், செய்து கொண்ட ஏற்பாட்டை எப்படி மறுப்பது, ஏற்பட்டுவிட்ட ஒப்பந்தத்தை எப்படி மாற்றச் சொல்லுவது என்றா இருந்துவிடுவார்கள்? அன்று இருந்த சூழ்நிலையில் அந்த ஏற்பாடு நியாயம், தேவை என்று கருதினேன்; இப்போது ஏற்பட்டுள்ள அனுபவத்தின்படி பார்த்தால் அந்த ஏற்பாடு நியாயமற்றது, தீமை பயப்பது, தேவையற்றது என்று தெரிகிறது. ஆகவே, ஒப்பந்தத்தை மாற்றிக் கொள்ளலாம் என்றுதான் கூறுவார்கள். விவாக விடுதலையே சட்ட சம்மத வடிவம் பெறுகிறதே! அவ்விதமிருக்க, ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையின்போது செய்துகொண்ட ஏற்பாடு, பிறகோர் நாள் சரியில்லை என்று

தெரிகிறபோது, அதனை மாற்றிக் கொள்ள உரிமை இல்லாமலா போகும்! அவ்விதம் மாற்றவே கூடாது. ஏனென்றால் அது அப்போதே செய்த முடிவு என்று ஒருவர் வாதாடினால், இவர் இரயில் பேச்சை நம்பி, பெண் கேட்க வந்த பித்தனை விடச் சற்று உயர்ந்த ரகம், ஆனால் கிட்டத்தட்ட அதே போக்கிலே நடந்து கொள்பவர் என்றுதானே பொருள்படும்?

காமராஜர், இந்திதான் ஆட்சிமொழி என்பதை இப்போது இவர்கள் எதிர்க்கிறார்களே, நியாயமா? இந்தி ஆட்சிமொழி என்று இப்போதா புதிதாகச் சொல்லுகிறோம். அது அப்போதே செய்த முடிவு என்கிறார். அந்தப் பேச்சைக் கேட்டபிறகுதான் தம்பி! எனக்கு இந்தக் கதை நினைவிற்கு வந்தது!!

அப்போதே செய்த முடிவு என்று காமராஜர்

கூறுவது எதனை மனத்திலே கொண்டு என்பது சரியாக விளக்கப்பட வில்லை. காந்தியார் காலத்திலேயே, காங்கிரஸ் கட்சி சுயராஜ்யம் கிடைத்ததும் இந்திதான் ஆட்சி மொழியாக வேண்டும் என்று தீர்மானம் போட்டதைக் குறிப்பிடுகிறார் என்றால், ஒன்று கூற வேண்டி இருக்கிறது.

காங்கிரஸ் கட்சியின் முடிவு என்பது நாடு முழுவதன் முடிவு என்று கொள்ளவும் முடியாது, கூறுவது நியாயமுமாகாது.

மற்றும் ஒன்றுகூடச் சொல்ல வேண்டி இருக்கிறது. காந்தியார், இந்தியை அல்ல, இந்துஸ்தானியைத்தான், குறிப்பிட்டார்; நாடு இந்து இந்தியா, முஸ்லீம் இந்தியா என்று இரண்டு ஆகிவிடக்கூடாது என்பதற்காகக் குறிப்பிட்டார்.

அந்த நிலைமை இன்று இல்லை;

பாகிஸ்தான் தனி நாடு ஆகிவிட்டது.

இந்தியும் இந்துஸ்தானியும் ஒன்று அல்ல.

இதைச் சொல்லுவதால் இந்திக்குப் பதிலாக இந்துஸ் தானியை வைப்பதானால் ஏற்றுக்கொள்ளத் தயாரா என்று குறைமதியினர் கேட்கத்துடிப்பர்; தம்பி! நான் கூறுவது அதற்கு அல்ல; அப்போதே செய்த முடிவு என்கிறாரே காமராஜர், அந்த "அப்போது'' எப்படிப்பட்டது என்பதை விளக்கிக் காட்டினேன்.

காமராஜர் குறிப்பிடும் "அப்போது' என்பது, காந்தியார் காலத்துக் காங்கிரஸ் போட்ட தீர்மானத்தை அல்ல, அரசியல் நிர்ணய சபையிலே நிறைவேற்றப்பட்ட மொழி பற்றிய தீர்மானத்தை என்பார்களானால் அதற்கு நான் கூறக்கூடியவை பல.

முதலாவதாக, அரசியல் நிர்ணய

சபை கூடிய சூழ்நிலை, மொழிப் பிரச்சினை பற்றி ஆர அமர யோசித்துப் பார்த்து ஒரு நியாயமான, நிரந்தரமாக இருக்கத்தக்க திட்டம் வகுத்திட அமைந்ததல்ல. விழாக்கோலம்! வெள்ளையராட்சியை விரட்டி விட்டோம் என்ற பெருமித உணர்ச்சி பொங்கி வழிந்து கொண்டிருந்த நேரம்! இயற்கையிலேயே அமைந்துள்ள வேறுபாடுகள், முரண்பாடுகள், இயல்புகள், நினைப்புகள் எனும் எவை பற்றியும் பேசுவதே தவறு என்று ஒரு தேசிய வேகம் இருந்த வேளை. அந்தச் சூழ்நிலையில், பல்வேறு மொழிகளைத் தாய்மொழியாக, பல ஆயிரம் ஆண்டுகளாகப் பெற்றிருக்கும் மக்களின் எதிர்கால எண்ணம் எப்படி எப்படி உருவெடுக்கும் என்று எண்ணிப் பார்த்திருக்கவே முடியாது. சச்சரவுகள் அறவே கூடாது, சமரசம் எதிலும் வேண்டும்,

ஒருவருக்கொருவர் தகராறு விளைவித்துக் கொண்டால், வெள்ளையன் சிரிப்பான், உலகம் கேலி செய்யும், ஆகவே ஒன்றுபட்டு இருக்க வேண்டும், ஒருமித்த கருத்து இருப்பதாகக் காட்டியாக வேண்டும் என்ற ஆர்வம் இருந்த நேரம்.

எவ்விதமான பத்தியம் இருந்தாகிலும் நோய் போக்கிக் கொள்ள வேண்டும் என்பது போன்றதோர் நிலை.

அந்தச் சூழ்நிலையில் பல கோடிக்கணக்கான மக்களின் பிறப்புரிமையைப் பாதிக்கக் கூடிய மொழிப் பிரச்சினை பற்றி ஒரு முடிவு எடுக்க முற்பட்டதே தவறு. அந்தச் சூழ்நிலையில் எடுக்கப்பட்ட முடிவு எந்தெந்தச் சூழ்நிலை மாறி மாறி ஏற்படினும் நிலைத்து நிற்கும் என்று நினைப்பது அறிவுடைமை ஆகாது; நிலைத்து நின்றாக வேண்டும் என்று வாதாடுவது,

சகித்துக் கொள்ள முடியாத கொடுமையாகும்.

இதை உணராமல்தான் காமராஜர், ”அப்போதே செய்த முடிவு’ என்று வாதாடுகிறார்! வாதாடுகிறாரா? அவர் ஏன் வாதாடப் போகிறார் - தீர்ப்பு அளிக்கிறார், வரச்சொல்லு இந்திராவை என்று கேட்கிறானே கதையில் வரும் இளைஞன் அதுபோல! கதையிலே வரும் இளைஞன் அடிபடுகிறான், அக்ரமம் பேசுகிறான் என்பதால்; இவர் நாடாளும் பெரியவரல்லவா, இவர், இந்த அக்ரமம் ஏனய்யா என்று கேட்பவர்களை, அடி! உதை! சுடு! என்று உத்தரவு போடுகிறார், பக்தவத்சலனாருக்கு.

அப்போதே செய்த முடிவு என்கிறாரே, அரசியல் நிர்ணய சபை தீர்மானத்தை மனத்திலே வைத்துக் கொண்டு, அப்போது செய்யப்பட்ட அரசியல் சட்ட திட்டத்தில், இதுவரை 17 முறை திருத்தங்கள் - மாற்றங்கள்

செய்திருக்கிறார்கள்; அப்போதே செய்த முடிவாயிற்றே, அதனை மாற்றலாமா என்று இதே அறிவாளர்கள் கூறவில்லை, தயங்கவில்லை; அப்போது சில முடிவுகள் செய்தோம், இப்போது சில மாற்றம் செய்கிறோம், இதிலே என்ன தவறு என்று வாதாடுகிறார்கள்; அதே நேர்த்தியான நாக்கேதான்!!

அப்போதே செய்த முடிவுகள் பலவற்றை இவர்களே இப்போதைய நிலைமைக்காக மாற்றிக் கொள்கின்றனர். ஆனால், அப்போது மொழி பற்றிச் செய்த முடிவு, எமது உரிமையை அழிக்கிறது, நிலைமையைக் கெடுக்கிறது என்று பல கோடி மக்கள் முறையிட்டாலும், அறிவாளர் மன்றாடிக் கேட்டுக் கொண்டாலும், ஆர்வமிக்கவர்கள் அதற்காகப் போராடினாலும் அப்போதே செய்த முடிவு, மாற்ற முடியாது என்று பேசுவது நியாயமாகுமா - நாடு

இத்தகைய பிடிவாதத்தைத் தாங்கித் தவித்திடத்தான் வேண்டுமா, தம்பி! இதுதான் நான் கேட்பது.

வாதம் செய்கிறாரே, அப்போதே செய்த முடிவு என்று, அவர் மறுக்க முடியுமா, அப்போதே இதனை வன்மையாகக் கண்டித்தவர்கள், கடுமையாக எச்சரிக்கை விடுத்தவர்கள் உண்டு என்பதையும், அவர்கள் ஒவ்வொருவரும் நாட்டு விடுதலைக்காக இவர் அளவுக்கேனும் ”தியாகம்’ செய்தவர்களே என்பதனையும்,

விருப்பத்துடன் ஏற்றுக் கொள்ளவில்லை. விபரீதம் இது என்று எச்சரித்துவிட்டுப் பிறகு வருகிறவர்கள் இது பற்றிக் கவனித்துக் கொள்வார்கள் என்ற எண்ணத்துடன் ஒப்புதல் அளித்தார்கள் என்பதை மறுக்க முடியுமா!

அரசியல் நிர்ணய சபை நடவடிக்கைக்

குறிப்புகள் இதனை நன்றாகத் தெளிவுபடுத்துகின்றனவே.

இந்தி பேசாத பகுதியிலிருந்து வந்திருந்தவர்கள் அனைவருமே, இந்தி ஆட்சிமொழி என்ற திட்டத்தைத் தாக்கி யிருக்கிறார்கள்; சிலர் மனக்கசப்பை வெளிப்படையாகவே எடுத்துக் காட்டியுமுள்ளனரே, அப்போதே!! அதனை மறுப்பார்களா, பிடிவாதக்காரர்கள்.

இன்று போலவே அன்றும், இந்தி பேசும் பகுதியினர் ஒன்று கூடிக்கொண்டு, எண்ணிக்கை பலத்தைக் காட்டி இந்தி பேசாதோரின் வாதங்களை மறுக்க முடியாத நிலையில், கொடுமைப்படுத்தி, இந்தி ஆட்சி மொழி என்ற விதியைப் புகுத்தி விட்டார்களேயன்றி, நாட்டின் பல்வேறு பகுதியினரும் மனமுவந்து இந்தி ஆட்சி மொழி ஆவதை ஏற்றுக் கொண்டனரா?

அரசியல் நிர்ணய சபைக் குறிப்புகளைக் காண்போர், அப்போதே எழும்பியிருந்த எதிர்ப்புணர்ச்சியினை நன்கு அறிந்து கொள்ளலாமே!

இவ்வளவையும் மறைத்துவிட்டு, அப்போதே செய்த முடிவு என்று பேசுவது அறமாகாது, ஆனால் ஆளவந்தார் களான பிறகு அறம் தேவையில்லை, பாதுகாப்புச் சட்டம் போதும் என்ற துணிவு பிறந்துவிட்டிருக்கிறது என்று எண்ணுகிறேன்.

கொங்கு நாட்டவர், தமிழகமெங்கணும் மதிக்கத்தக்க நிலை பெற்றவர். டி.ஏ. இராமலிங்கம், செட்டியாரவர்கள், இந்தி மொழியாளரின் இறுமாப்பினை இடித்துக் காட்டி,

தில்லியிலே நானோர் அன்னியன் என்பது போன்ற உணர்ச்சி கொள்ளும்படிச்

செய்கின்றனரே, இந்தப் போக்கு எங்குக் கொண்டுபோய் விடுமோ என்றெண்ணும் போதே கவலை பீறிட்டுக் கொண்டு வருகிறதே, எதிர்காலத்தில் என்னென்ன ஆபத்துக்கள் எழுமோ என்றெண்ணும்போதே நடுக்கமெடுக்கிறதே என்று பேசினார்.

மராட்டியத்தின் தலைவர் சங்கர் ராவ் இந்தி ஆதிக்க நோக்கம் கொண்டோரைக் கடிந்துரைத்திருக்கிறார்.

பி. தாஸ் அவர்கள், வெள்ளையர்களிடம் கொண்டிருந்தது போன்றதோர் அச்சம் இந்தி மொழியாளரிடம் கொள்ள வேண்டி வந்துவிட்டதே, அத்துணை அகம்பாவத்துடன் அவர்கள் உள்ளனரே என்று குமுறியிருக்கிறார்.

எவ்வளவு படித்தாலும் தென்னாட்டவர், இந்தியைத் தாய் மொழியாகக்

கொண்டவர்களுடன் சரி சமமான நிலையிலிருந்து, போட்டியிட்டு வெற்றி பெற முடியாது என்று எச்சரித்துப் பேசினார் துர்காபாய் அவர்கள் (பிறகு தேஷ்முக்கானவர்).

இந்திப் பிரச்சினையை இப்போது எடுத்துக் கொள்ளவே வேண்டாம். பிறகோர் சமயம் பார்த்துக் கொள்ளலாம்; பிறகு அமையும் பாராளுமன்றம் இதுபற்றி கவனம் செலுத்தட்டும் என்று (இன்றைய பாராளுமன்ற துணைத் தலைவர்) கிருஷ்ண மூர்த்திராவ் முறையிட்டுக் கொண்டார்.

இந்த முறையீடுகள், எச்சரிக்கைகள், கண்டனங்கள் யாவையும் "அப்போதே'தான் இருந்தன. ஆனால், அதனை மறந்துவிடச் சொல்லுகிறார்கள் போலும்.

அப்போதே முடிவு செய்ததாகக்

கூறுகிறார்களே, அதேபோது எழுந்த எதிர்ப்பு, நாளுக்கு நாள் வளர்ந்தது; குறையவில்லை.

அரசியல் நிர்ணய சபை கூடியபோது, இந்தப் பிரச்சினையில் போதுமான அக்கறை காட்டாமலிருந்தவர்கள் கூட, பிறகு இந்தி ஆட்சிமொழி ஆக்கப்படுவதனால் ஏற்படக் கூடிய பேராபத்தினை உணரத் தலைப்பட்டனர்; இந்திக்கு எதிர்ப்பு வலுவடைந்தது, பரவிற்று.

டாக்டர் சுப்பராயன், இடத்தைக் கொடுத்தால் மடத்தைப் பிடுங்கும் கதை போலிருக்கிறதே இந்திக்காரர் போக்கு என்று இடித்துரைத்தார்.

இந்தியாவுக்கு ஒரே ஒரு மொழிதான் ஆட்சிமொழியாக இருக்க வேண்டும் என்று கருதுவதே அறிவீனம் என்று வங்க முதல்வர் பி.சி. ராய் முழக்கமிட்டார். இந்தி ஆதிக்கத்தை எதிர்த்து ஒரு இயக்கமே உருவெடுத்து

விட்டது. இந்தியைக் கட்டாய பாடமாக்கி, வெற்றி கிட்டாததைக் கண்ட ராஜகோபாலாச் சாரியார் இந்தி எதிர்ப்பில் முன்னணியில் நின்றிடலானார்.

அப்போதே செய்த முடிவுக்கு இப்போது இவ்வளவு எதிர்ப்பு பல முனைகளிலுமிருந்து கிளம்பிவிட்டிருக்க, இந்தி ஆதிக்கத்தை எதிர்த்து அறப்போர் நடாத்தி இன்னுயிரையும் இழந்திடும் உறுதி ஓங்கி வளர்ந்திருக்க, காமராஜர் இப்போது, "அப்போதே செய்த முடிவு' என்று பேசுவதிலே பொருளுமில்லை, பொருத்தமுமில்லை.

அப்போதே செய்த முடிவு பற்றிப் பேசிடும் காமராஜருக்கு ஒரு கேள்வி - அப்போது செய்த முடிவுகளின்படியா இப்போது அவருடைய கட்சியினர் - மிகப் பெரியவர்கள் கூட - நடந்து கொள்கிறார்கள். நானும் "அப்போது செய்த முடிவுகள்'' சிலவற்றைக் காமராஜருக்குக்

கவனப்படுத்தலாமா!

”அப்போதே செய்த முடிவு மதுவிலக்கு! சட்டமும் செய்தாயிற்று. அப்போதே செய்த அந்த முடிவு இப்போது எந்தக் கதி அடைந்திருக்கிறது?

கேரளாவில் கள்ளுக் கடை!

மராட்டியத்தில் ”பீர்’ கடை!

புதுவை காரைக்காலில் சாராயக் கடை!

டில்லியில் குடிப்பதற்கென குறிப்பிட்ட நாட்கள்!

இவ்விதம் மதுவிலக்கு கேலிக்கூத்தாக்கப்பட்டிருக்கிறதே!

வெட்கப்படுகிறாரா, காமராஜர்! வெகுண்டெழுந்து “அப்போதே செய்த முடிவு’ மதுவிலக்கு, அதனை இப்போது மாற்றும்படிச் சொல்ல யாருக்கும் உரிமை இல்லை என்று

முழக்கம் எழுப்புகிறாரா! அடியோடு மறந்து விடுகிறாரே,"அப்போது செய்த முடிவு' பற்றி. நியாயமா!

அசோக்மேத்தா அச்சம் கூச்சமின்றிக் கூறுகிறார், மதுவிலக்குத் திட்டத்தை ஒழித்து விடுங்கள். ஆண்டுக்கு 400 கோடி ரூபாய் வருமானம் கிடைக்கும் என்று!

"அப்போதே செய்த முடிவு' மதுவிலக்கு, அதனை மாற்றும்படிச் சொல்வது கூடாது என்று இந்தக் காமராஜர் அசோக் மேத்தாவைப் பார்த்துச் சொல்கிறாரா! அந்தத் துணிவு இருக்கிறதா!! இல்லையே! இந்தி விஷயமாக மட்டுந்தானா, அப்போதே செய்த முடிவு பற்றிய வீராப்பு! மற்றவற்றுக்கு?

மற்றோர் "அப்போதே' கூட இருக்கிறது, நினைவிற்குக் கொண்டுவர!

அப்போதே செய்த முடிவு, காங்கிரஸ்

அமைச்சர்கள் மாதம் 500 ரூபாய் மட்டுமே சம்பளம் பெற வேண்டும் என்று! என்ன ஆயிற்று அந்த "அப்போது?' மகாத்மாவின் ஆசீர்வாதம் பெற்று அப்போதே செய்த முடிவாயிற்றே, அதற்குக் கட்டுப்பட்டு நடந்திட வேண்டும் என்ற கடமை உணர்ச்சி இருந்ததா காங்கிரசின் பெரிய தலைவர்களுக்கு?

கராச்சி காங்கிரசில் "அப்போதே' செய்த முடிவு மாதம் 500! இப்போது இந்தி விஷயமாக அப்போதே செய்த முடிவு பற்றிப் பேச அகன்ற வாய் திறந்திடும் அறிவாளர், அப்போது செய்த முடிவை மதித்தாரா! இவர் வரையிலாகிலும்!! இல்லையே!! அப்போதே செய்த முடிவைக் காற்றிலே பறக்க விட்டுவிட்டு, மாதம் 1000, 1500 என்று சம்பளம் பெற்றுக் கொள்ளத் துணிந்தனர்."அப்போது' என்ன ஆயிற்று.

ஆகவே அப்போதே செய்த முடிவு என்று பேசுவது அர்த்தமற்றது மட்டுமல்ல

அக்கிரமமானது.

எப்போது செய்யப்பட்ட முடிவாக இருப்பினும், மக்களின் கருத்து வழி நின்று முடிவுகளை மாற்றிக் கொள்வது, திட்டங்களைத் திருத்தி அமைப்பது, ஜனநாயகக் கடமை, ஜனநாயகத்துக்கு விழா கொண்டாடிக் கொண்டே ஜனநாயகத்தைப் பழித்திடும் பாதகத்தினைச் செய்வதிலே சுவை காண்கின்றனர்.

இவர்தம் பொருத்தமற்ற பேச்சினையும் அகம்பாவப் போக்கினையும் மாற்றிட வழி என்ன? கடுமையாகத் தாக்குவதா! இழித்தும் பழித்தும் பேசுவதா! இல்லை. இல்லை! அஃதல்ல நாம் மேற்கொள்ள வேண்டிய முறை.

தம்பி! கடுமொழியும் கனல் கக்கும் பேச்சும் பேசின பலர் என்னுடன் இருந்தனர் - ஏ! அப்பா! இந்த இந்தி விஷயமாகவும், அதனைப்

புகுத்திடத் துணை செய்யும் காங்கிரஸ் தலைவர் களையும் என்னென்ன கூறினர், எத்துணைக் கடுமையாகத் தாக்கினர், கேட்பவர் இரத்தம் கொதித்திடும் விதமாக! எங்குளார் அவரெலாம்!! இந்தியின் காலடி தொழுதிடும் இடத்தில்!! ஏன்? அவர் அங்கு காணும் சுகம் யாதோ, எங்ஙனம் நான் அறிந்திட இயலும்?

ஒன்று மட்டும் தெரியும் எனக்கு - துள்ளும் மாடு பொதி சுமப்பதில்லை - தூற்றித்திரிவோர் எந்த முனையிலும் நிலைத்து நிற்பதில்லை.

இந்தியை எதிர்க்கும்போது, நாம், தம்பி! இழிமொழியால் எவரையும் தாக்கத் தேவையில்லை. தமிழ் அத்தகைய தகாத செயலுக்குப் பயன்படுதல் கூடாது. நமது உள்ளத்தைத் திறந்து காட்ட, உறுதியை வெளிப்படுத்தவே, தமிழ் பயன்படுத்தப்படுதல்

வேண்டும்.

எம்முறையில் பணியாற்றி இந்தி ஆதிக்கத்தினை ஒழித்திட வேண்டும் என்பதிலே நமது நோக்கம் செல்ல வேண்டுமேயன்றி இழிமொழியை எத்தனை வேகத்துடன் பொழிந்து நமது எரிச்சலைக் காட்டிக் கொள்ளலாம் என்பதிலே செல்லுதல் கூடாது.

தென்னவர் இந்தி கற்கச்
செப்புவோன் தமிழனல்லன்
அன்னையை வடவர்கூடி
ஆக்கிய கருவே அன்னான்!

எப்படித் தம்பி! இருக்கிறது. இந்தத் தாக்குதல்! இப்படி யல்லவா சம்மட்டி அடி கொடுக்க வேண்டும் என்று பக்குவ மற்றோர் பாராட்டுவர். ஆனால் இத்தனை துணிவுடன்

இந்தியைத் தாக்கினோர் - இந்தியையா, இந்தி ஆதரவாளர்களை - இன்று எங்கு உளர்! இந்தி, கெக்க- செய்கிறது! இந்தி ஆதரவாளர் கூறுகின்றனர், அந்த நாவுக்கரசர்கள் நம்மிடம் அடைக்கலமாயினர் என்று.

தம்பி! இந்தி மொழியை நீயும் நானும், இலக்கண வரம்பற்ற மொழி, இலக்கிய வளமற்ற மொழி, நேற்றுப் பிறந்த மொழி என்று மட்டுந்தானே கூறுகின்றோம், இந்தியும் இந்தியாவின் ஒரு பகுதியினரின் தாய்மொழி. ஆகவே அம்மொழியை இழித்துரைப்பது அம்மொழியாளரின் மனத்தினைப் புண்ணாக்கும் என்று எண்ணுகின்றோம்.

இது அல்ல போர்முறை! இஃதன்று வீரம்! தாக்க வேண்டும், அவர்கள் தமது நாக்கைப் பிடுங்கிக் கொண்டு சாகும் விதமாக என்று

கூறிச் சிலர் இந்தியைத் தாக்கினர்;

வங்காள நாயகனை ஓடிப்பிடித்தாய்!

மராட்டி ஆடவனின் கூடப்படுத்தாய்!

எங்கேனும் யாரேனும் கைகாட்டினாலும்

எப்போதும் செயலாகும் தப்பாத கற்பின்

பங்காளியன்றோ? உன் பட்டாடையெல்லாம்

பல்லோரும் தொட்டாண்ட புத்தாடையன்றோ?

வங்காளம் மராட்டி எல்லாமிப்போது

வாலாட்டும் உன் வாழ்வை வீழ்த்தல் தப்பாது.

ஆமாம் தம்பி! பொறி பறக்கிறதல்லவா!! பறந்தது! பறந்தே போயினர்! புதிய

பிறவிகளாயினர் - பிறவிகளா? - புதிய தொழி-னை மேற்கொண்டு விட்டனர்.

எனவேதான், தம்பி! கடுமொழி பேசிடுவோர் குறித்து நான் சற்றுக் கண் விழிப்புடன் இருந்திட வேண்டும் என்பது.

பொங்கி வழிந்திடும், நெடுந்தூரம் நெடி பரப்பிடுங்கள் - பால் அல்ல!

வீரன், தாங்கிக்கொள்ள அறிந்தவன், தாக்கும் முறையிலும் ஒரு தரம், வரம்பு, இவைகட்குக் கட்டுப்படுபவன் - மேலே வீழ்ந்து கடித்துக் குதறிடுபவன் அல்ல.

முழக்கம்! ஆணையிட்டுக் கூறல்! சூள் உரைத்தல்! - கொஞ்சமா!! இந்தியை ஒழித்திடாமல் இருப்பேனா - அதனை எவர் செய்திடத் தவறிடினும், நானே அப்பணியினை மேற்கொள்வேன், பகை வெல்வேன் என்று உரத்த குரலெழுப்பிக், கேட்போர் உள்ளத்தை,

உலுக்கினர்! உருமாறிப் போயினர் இன்று!!

இழி செருப்பனைய இந்தியைக் கா-ல்
இட்டழித் தொருதுகள் எடுத்து
விழி குருடான கொடியவர் முகத்தில்
விட்டெறி வேனிதும் உண்மை!
கழிபெரும் உவகை கனித் தமிழ் மொழியில்
காணுவன் காணுவன் உண்மை!
அழிவதென்றாலும் இந்தியை அழித்தே
அழிவன் நான்! உண்மையினுண்மை!

தம்பி! நான் உன்னிடமிருந்து இத்தகைய "வாணங்களை' எதிர்பார்க்கவில்லை! இடியோசை அல்ல நான் விரும்புவது - உன்

இதயத்தை!!

”அப்போதே செய்த முடிவு’ என்று பேசிடும் காமராஜரின் வாதத்தின் பொருளற்ற தன்மையினை நாடு அறிந்திடச் செய்திடு, நாம் மேற்கொண்டுள்ள இந்தி ஆதிக்க ஒழிப்புத் திட்டத்துக்கு நாட்டினரின் நல்லாதரவு உண்டு என்பதனை உலகறியச் செய்திடு. அதற்கான பொன்னான வாய்ப்பாகப் பொதுத் தேர்தல் வருகிறது. பொறுப்புடனும் பொறுமையுடனும், பணியாற்றி வெற்றி தேடித் தந்திடு! உன்னையல்லால் வேறு எவருளர் இச்செயலை முடித்திட!

அன்புள்ள

அண்ணாதுரை

17. காக்கும் கரங்கள்

நம் வீட்டு நெருப்பு எனினும் ஊர் அழிக்க விடலாமோ?
கட்டுப்பாட்டுடன் கடமையாற்றிடுக!
விரட்டிடுவோம் இந்தி ஆதிக்கத்தை!

தம்பி,

எந்தக் கரம் பட்டால் காயும் கனியுமோ,

எந்தக் கரத்தின் வலிவினாலே தமிழர்தம் எதிர்கால வாழ்வு ஏற்றம் அடைய இருக்கிறதோ,

எந்தக் கரம் தன்னலத்துக்காகத் தருக்கர்முன் குவிந்திடாதோ,

எந்தக் கரம் ஏற்புடையனவற்றுக்கெல்லாம் உறுதுணை யாக இருந்திடுவதோ, எந்தக் கரம் தமிழர்க்கு அறநெறியைக் காட்டி

வருகின்றதோ,

எந்தக் கரம் கழகம் மேற்கொள்ளும் தொண்டினுக்காகப் படைக்கலனை ஏந்தி வருகிறதோ,

எந்தக் கரம் இழிவினைத் துடைத்து, இன்னலை முறியடித்து, மொழிகாத்து, தமிழ் வழியை அமைத்துத் தரவல்லதோ,

அந்தக் காக்கும் கரத்திடம் ”காஞ்சி’ இதழின் ஆண்டு மலர் உறவாடி உவகை அடைகின்றது.

ஒவ்வொரு கிழமையும் ”காக்கும் கரங்களில்’ என் கருத்தினைத் தாங்கி வரும் மடல் சேருகிறது, பெருமிதத்துடன் ஏற்றுக் கொள்ளப்படுகிறது என்பதனை அறிந்து அளவிலா அக மகிழ்ச்சி அடைந்து வருகின்றேன்.

தம்பி! உன் தகுதிமிக்க கரங்களுக்கு

ஏற்றவிதமான எழில் கூட்டி இதழினைத் தந்திடும் முயற்சியில் என் இளைய மகன் இளங்கோவன் ஈடுபட்டு வருகின்றான், என்றாலும் இதழின் எழிலைவிட, என் இதயத்தில் ஊற்றெனப் பெருகிடும் அன்பினையே பெரிதெனக் கொண்டிடுவாய், மகிழ்ந்து வரவேற்பாய் என்பதனை நானறிவேன்.

ஒவ்வொரு பிரச்சினையையும் உன்னிடம் எடுத்துக் கூறிடுவதன் மூலம், எனக்கே ஒரு தெளிவும், உறுதியும் பிறந்திடக் காண்கின்றேன்; நான் அளித்திடும் கருத்தினுக்கு நறுமணம்தான் கூட்டி நாலு திசைதனிலும் சேர்த்திடுவாய் என்ற நம்பிக்கை கொண்டுள்ளேன்; நான் அறிவேன் உன் திறமை.

தம்பி! எப்படியோ நமது உள்ளமதில் தாயகம் குறித்துப் பற்று நிரம்பிக் கிடக்கிறது.

முன்பிருந்த நிலையினை நாமறிந்திடச் செய்யும் இலக்கியச் செல்வங்கள் இனிதே பெற்றுள்ளோம்; இணையற்ற செல்வமது. மறுப்பார் எவருமில்லை! எனினும், ஈடற்ற கருவூலம் பெற்றவரே நாமெனினும் இற்றை நாளில் எத்தனை இடர்ப்பாடும் இழிநிலையும் வந்துற்றதென்பதனை எண்ணும்போது ஏனோ நமக்கிந்த மெய்யுணர்வு நெஞ்சில் இடம் பிடித்து நிறைந்துளது என்றும் நாம் கவலைப்படுகின்றோம்; கண் கசியும் நிலையுந்தான்.

எதிர்ப்புகள் அல்ல, நமது இதயத்தை வாட்டுபவை; களம் நின்று போராடக் கலங்கிடப் போவதில்லை; நமக்கிருக்கும் கவலையெலாம், மரபு மறந்திடுவார் மாற்றாருடன் கூடி மாண்பு கெடுத்திடவும் துணிகின்றாரே, அவரும் தமிழர்! ஆம்! அவர்க்கும் சேர்த்தன்றோ அருந்தொண்டு

ஆற்றுகின்றோம்! அதனை அறிந்திடாது, கனியிருக்கக் காய் கவர்வார் போலும், தாய் அருகிருக்க ஓர் பேய் மகளைப் பின் தொடர்ந்து செல்கின்றாரே! என் செய்வோம்!!

எக்கேடு எவர்க்கெனினும் எமக்கு ஈந்திடுவீர் சுவை என்றால், சேர்ந்திடுவோம் உம்மோடு, உற்றாரை மாற்றாராய்க் கருதிக் கொண்டு, என்றுரைத்து நிற்கின்றாரே, இவர் நிற்கும் இடமும் தமிழ் மண்தானே, ஐயோ! வழிவழி அம்மண்ணுக்கு வந்த மாண்பதுவும் இவர் தீண்டி நிற்பதனால் மங்கி மடிந்திடுமே, எவர் இவரைத் திருத்திடுவார், என்று இவர் விழி திறக்கும்? உற்ற வழி அதற்கு என்ன? என்றெண்ணி ஏங்குகிறோம்; மாற்றார் படை கண்டு, அல்ல, அல்ல; அவர்தம் பலம் கண்டும் அல்ல, அல்ல, உண்மை வென்றிடும் என்ற உறுதி நமக்குண்டு என்பதனால்.

வெள்ளையனை விரட்டிவிட்டோம், வெற்றி

முரசு கொட்டி விட்டோம், அதற்குப் பின்னர் முரசொன்று அறைந்திடவும், முழக்கம் எழுப்பிடவும், அறமென்றும் நெறியென்றும் பலவற்றைக் கூறிடவும், தேவை துளியும் இல்லை, தெரிந்திடுவீர்! தெளிந்திடுவீர்! அன்னியன் ஆண்டபோது மிகத் தேவை கிளர்ச்சி பல; இன்றல்ல; கதை முன்பே முடிந்ததுகாண் என்கிறார் ”கன’மானார்.

அரசு கட்டி-லே அமர்ந்துவிட்ட காரணத்தால், எதையும் செய்திடலாம், எம்முறையும் திணித்திடலாம், வரி பலவே திரட்டிடலாம், வயிற்றினில் அடித்திடலாம்த, வாழ்வே சுமையாகி வாட்டுதே என்போரை, வாழ்வா பெரிது? நாடன்றோ? எனக் கேட்டு, வாயை அடக்கிடலாம், மீறிட முனைவோரைச் சிறையில் அடைத்திடலாம் சின்ன பின்னமாக்கிடலாம், என்றெல்லாம் ஆர்ப்பரித்து ஆடுகின்றார் வெறியாட்டம்!

அவர் கூற்று ஏற்றிடுவோர் அறிவினை அடகு வைத்தோர்! தமிழராகார்!! அரசாள முனைந்தோர்கள் எவரெனினும், நம்மவரெனினும், கேடு செய்திடுவோர்கள் போடும் உடை யாதெனிலும், எதிர்த்து நின்றிடுதல் நம் கடமை; நம் உரிமை; நம் வீட்டு நெருப்பெனினும் ஊரழிக்க விடலாமோ! புற்றரவு நம் வீட்டுப் பூந்தோட்டம் உள்ளதெனில் நச்சுப்பல் தீண்டிடுமேல் நமைச் சாகவைக்காதோ!! ஏனோ இவர்க்கிந்த எளிய உண்மை ஏறவில்லை; எம்மையா எதிர்க்கின்றீர் என்றுரைக்கின்றாரே; கொடுமையின் வடிவமதுயாதெனினும் தாக்கிடுதல் நம் கடமை; நம் உரிமை!! நாமெல்லாம் இந்நாட்டு மன்னர்! நமை ஆள்வோர் நாம் கொண்ட ஊழியரே!

இந்த விதமான எண்ணம் இன்று நந்தம் தமிழகத்தில் நன்றாக வேரூன்றி, ஆல்போல்

தழைத்திருக்கக் காண்கின்றோம். அத்தருவை அழித்திடவே முனைகின்றார் ஆளவந்தார், இருளாட்சி நடாத்திடவே ஏற்கப்போமோ!

ஆண்டு பதினேழாகி அவதி தீரவில்லை, அல்லல் போகவில்லை, அவர் வகுத்த பாதையிலே அகன்றவாய்ப் பள்ளங்கள், நெருப்புக்குண்டம்; ஏனென்று கேட்டாலோ, எதிர்ப்பா? எமக்கா? என்று கிளம்புகின்றார், மக்கள் வாழ்வறுத்துத் தம் வாழ்வைக் கொழுக்கச் செய்யும் மாநிதியைப் பெற்றவர்கள் புடை சூழத்தானே!

ஏழைக்காம் இவ்வாட்சி, எவருக்கேனும் இருந்திடுமேல் அய்யப்பாடு, எழுவீர் எம்முடன் வருவீர் திடலை நோக்கி, எத்தனை ஆர்வமுடன் எமது தலைவர் தாமும் பேசுகிறார் காணீர் பெருமை மிகு கொள்கை பற்றி, ஜனநாயக சோஷியலிசம் எமது கொள்கை; பொருள் என்ன அறிவீரோதான்; பொன்னும் பொருளும்

குவிந்துவிடும் ஏழையர்க்கு என்பதாகும் என்கின்றார்கள்; கண் சிமிட்டி நிற்கின்றார்கள். முன்னணியில் கனதனவான்களாம் வாண்டையார் மூப்பனார் நெடும்பலத்தார், வகைமிக்க பட்டக்காரர் போன்றார் பல்லோர்.

இதற்கென்ன செய்வதென எண்ணிப் பார்த்திட்ட நான் என் தம்பி இருக்கின்றான் பகை முடிக்க, பழி துடைக்க என்று உறுதிபெற்று, எடுத்துரைத்தேன் அவர்க்கெல்லாம், நாட்டில் உள்ளதொரு ஆட்சிமுறை மக்களாட்சியாகும், மக்கள் ஆணையின் முன் மற்றெதுவும் நில்லாது, ஆகவே, அரசாள வந்தவரே, அறிந்திடுவீர் அருந்தமிழை அழித்திடும் உம் அக்கிரமச் செயனுக்கு அடி பணியோம், சிறைக்கஞ்சோம்; பொதுத் தேர்தல் களத்தினிலே நின்றிடுவோம், பொறுப் புணர்ந்து மக்கள் தாமும் புத்தாட்சி கண்டிடுவார், வாக்குரிமை வலிவு கொண்டு.

ஏளனம் செய்கின்றார் என் தம்பி! நம்மையெலாம் கோட்டை பல கட்டிக் கொலுவிருக்கும் எம்மிடமா காட்டுகின்றீர் உம் வீரம், நீட்டுகின்றீர் உம் வாளை, எம்மிடம் உள்ள பலம நீரறியமாட்டீர்! இருபது இலட்சங்கள் எமது பேழை விழும். ஏழை எளியோரை எமது வலை பின்னி விடும். எதிர்ப்பென்ன கதியாகும் என்பதனை எடுத்துரைக்கத் தேவையில்லை. இழுத்து வா! பூட்டிப் போடு என்றுரைக்கும் வல்லமையைப் பெற்றுள்ளோம் பாதுகாப்புச் சட்டத்தால்! ஏனோ வீணாய் எமை எதிர்க்கின்றீர், எவரெவர்க்கு என்ன விலை என்பதறிவோம் நாம் எதிர்த்து நிற்காதீர், எறிபட்டுப் போகாதீர் என்கின்றார்.

அவர் கூறி வருவதுபோல் பெருநிதியும் குவிந்திடுது; காண்கின்றோம் நித்த நித்தம், வாளுக்கும் வேலுக்கும் வல்லம்பு தனக்கும்,

கரிபரி மிகக்கொண்டு களம் நிற்கும் படையினுக்கும் அஞ்சாது போரிட்ட ஆற்றல் மரபு வந்தோம், ஆர்ப்பரிப்புக்கு அஞ்சுவதா! துஞ்சுவதே யெனினும் அஞ்சிடுவோர் நாமலவே! பஞ்சை பராரிகளோ பாராண்ட நம் தமிழர், பளபளக்கும் வெள்ளிப் பணத்துக்குக் பல்லிளிக்க - என்று உள்ளம் உரைக்கிறது, தம்பி நீ உரைத்திடுவது வேறோ!

இட்ட அடி நோக எடுத்த அடி கொப்பளிக்க வட்டில் ஏந்தி வந்த வடிவழகி மீது கொண்ட மையல் மிகுதியினால் மாய்ந்தான் அம்பிகாபதி என்பார்; மாற்றான் என்றறியாது மாறுவேடம் புரியாது பாசறைக்குள் பகைவனையே சேர்த்த தனால் வீழ்ந்தான் ஓர் மன்னன் என்பார்; இவை யாவும் கதையெனினும், நமது கருத்தினிலே தெளிவுண்டாக்கும் பாடம் உண்டு, காண்பாய் தம்பி!

நோக்கம்தனிலே நமக்கோர் உறுதி உண்டாமென்றால், பாக்கம் பல தந்தாலும், பகைவர் முன் பல்லிளித்து நில்லோம்; பதவிப் பானம் தந்த மயக்கம் மேலிட்டதாலே பற்பல பேசுகின்றார்; பொருளற்ற பேச்சு, மருள்வோம் அல்லோம்; மறவர் நாம், மறவோம் என்றும்.

தம்பி! உன் ஆற்றல் அறிந்ததனால் அறைந்தேன் நான் இவ்வாறெல்லாம். அஃதுணர்ந்து விழிப்பு மிகுந்திடுக! எழுச்சி மிகக் கொள்க! கட்டுப்பாட்டுடனே கடமையாற்றிடுக! கண்ணியம் மறவாமல் காரியமாற்றிடுக! என்று நாட்டினருக்கு, இன்று தொட்டு எடுத்துரைத்து, வீழ்த்திடுவோம் வஞ்சகத்தை, காத்திடுவோம் தமிழ் மரபை, விரட்டிடுவோம் இந்தியின் ஆதிக்கத்தை என்றெவரும் சூளுரைத்துக் கிளம்பிடும் வகையே செய்க! முனைந்து நீ இதனைச் செய்தால், முத்தமிழ்க்கு உரியவனே! மும்முரசு

கொண்டவனே! முக்காலும் உண்மை, வெற்றி ஈட்டிடலாம்’ வேற்று மொழி ஓட்டிடலாம், வெந்த உள்ளம் கொண்ட மக்கள் சிந்தையில் தேன் பெய்திடலாம், நல்லாட்சி அமைத்திடலாம். அறிந்திடுக அன்புத் தம்பி.

அன்புள்ள

அண்ணாதுரை

முதல் ஆண்டு நிறைவு மலர்

18. எங்குச் சென்றாலும். . .

மலேசியாச் செலவு

கனவான் கவலையும் பாட்டாளியின் கவலையும்

உழைத்து அலுத்தவனுக்கு ஓய்வு தேவை

ஓய்வு என்பது எது?

ஓய்வு நேரம் ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொரு விதம்

புண்ணியப் பயணங்கள்

தம்பி,

அண்ணனுக்கென்ன, உல்லாசமாகக் கிளம்பிவிட்டான் - வேலைகளைக் கவனிக்காமல் - பாரத்தை என் மீது போட்டு விட்டு - சிங்கப்பூராம் - பினாங்காம் - கோலாலம்பூராம், ஈப்போவாம், ஹாங்காங்காம் - பாங்காக்காம்,

டோக்கியோவாம், ஓசாகாவாம், மணிலாவாம், கம்போடியாவாம் - பார்க்கக் கிளம்பிவிட்டான் என எண்ணிக் கோபித்துக் கொள்ளாதே. எங்குச் சென்றாலும், எத்தகைய எழில்மிகு காட்சியெனினும் அவைகளை உனது இன்முகத்துக்கும், அன்பு ததும்பிடும் கண் ஒளிக்கும் மிஞ்சியதெனவா கருதிக் கொள்வேன்?

ஓங்கி உயர்ந்த மலைகளைக் கண்டால், உனது திண் தோள்களை எண்ணிக் கொள்வேன்; அன்றலர்ந்த மலர்கள் உன் முகத்தை என் கண் முன் கொண்டு வந்து நிறுத்தும்; சிற்றாறுகள் பாடிடும் சிந்துகள் உன் சிரிப்பொலியை நினைவுபடுத்தும்; கண்டிடும் காட்சி யாவும் உன்னைத்தான் எண்ணிடச் செய்திடும் என்பதனை அறியாயா? - அறிவாய் நிச்சயம் - எனினும், ஒரு பொய்க் கோபம் காட்டுகிறாய், புன்னகையை மறைத்துக்

கொண்டு.

ஓய்வு எனக்கு நிரம்பக் கிடைத்திருக்கிறது என்பதாலே நாடு பல கண்டிடலாம், பொழுதினை ஓட்டிடலாம் என்றெண்ணி உல்லாசப் பயணம் நடாத்திடும் உயர்நிலையினனா நான்! உனக்கு அண்ணன் என்றால் அந்த நிலையினன் அல்ல என்பது தன்னாலே விளங்கிவிடுமே. வேலை மிகுதியாக உளது, மும்முரமாகப் பணியாற்றிட வேண்டிய நிலை. எனினும், மலேசியா வாழ் நண்பர்கள் பல ஆண்டுகளாக அன்பழைப் பினைத் தந்தபடி உள்ளனர். வருக! வருக! அளவளாவிட வருக! என்பதாக. பலமுறை எனது இயலாமையைக் கூறிக் கூறிப் பார்த்தாகிவிட்டது. இனியும் அவர் மனம் புண்படச் செய்திடல் முறையாகாது என்பதால், பயணத்துக்கு ஒப்புதல் அளித்தேன்.

தம்பி! ஓய்வு நேரம்! உல்லாச வேளை!

சல்லாபப் பேச்சு! - இவை நமக்குக் கிடைத்திடுபவை அல்ல.

ஓய்வாக ஒயிலாக இருந்திட வேறு பலர் நமக்காக உழைத்தபடி இருந்திட வேண்டுமே - அஃதோ நமது நிலை? அந்த நிலையையோ நாம் வரவேற்கத்தக்கது எனக்கொள்வோம்? இல்லையல்லவா!

நாடு பல கண்டிடலாம் என்ற எண்ணம் கூட, கண்கவர் காட்சி கண்டிடும் நோக்குடன் அல்ல; எண்ணற்ற நல்லிதயங்களுடன் உறவாட; அவர்தம் எண்ணத்தினை அறிந்து மகிழ்ந்திட; பிறகு உன்னிடம் அவை பற்றி எடுத்துக் கூறிட; வேறெதற்கு!

உள்ளத்துக்கு ஏற்பட்டுவிடும் அலுப்பினைப் போக்கிக் கொள்ள, சோர்வு நீக்கிக் கொள்ள, புதிய தெம்பு பெற்றிட, மேலும் பணியாற்றிடும் உற்சாகம்

பெற்றிட, சிலர் உல்லாசப் பயணத்தினை மேற்கொள்கின்றனர். வேறு சிலரோ காலம் மெள்ள மெள்ள நகருவது கண்டு கவலை மிகக் கொண்டு ஒரே இடம், ஒரே வாழ்க்கை முறை, ஒரேவிதமான சுற்றுச் சார்பு ஆகியவை பளுவினை மனத்திலே ஏற்றிவிடுவது கண்டு திகைத்து, புதிய கோலம் கண்டாகிலும் பழைய சோர்வைப் போக்கிக் கொள்வோம் என்பதற்காகச் சுற்றுகின்றனர். காலத்தைக் கொன்றிட, உல்லாசப் பயணத்தை ஒரு கருவியாக்கிக் கொள்கின்றனர்.

காலம், தம்பி! விந்தை மிக்கது, வேலை மிகுதியும் உள்ளவர்களுக்குக் காலம் ஒரு கசையடி! சுரீல் என்று அடித்தல்லவா எழுப்பி விடுகிறான் கதிரவன் ஏழையை! வேலையோ மலைபோல, காலமோ கடுகி ஓடிவிடுகிறது. செய்ததோ சிறிதளவு; செய்திட வேண்டியதோ பெருமளவு; காலம் கேலிக் குரலெழுப்பிச்

சிரிக்கிறது, பாடுபடுபவனைப் பார்த்து.

இப்போதுதான் விடிந்தது என்றிருந்தோம். உச்சிப்போது வந்துவிட்டதே என்பதனை உழைப்பாளி தன் உடலெங்கும் கசியும் வியர்வையால் அறிந்து கொள்கிறான்; காலம் வேகமாக ஓடிடுவது அறிந்து, தன் வேலையில் மேலும் மும்முரமாகிறான். பொழுது சாய்வதற்குள் செய்து முடித்தாக வேண்டுமே, இல்லையென்றால், சோம்பேறி! தடிக்கழுதை! கடாமாடு! இத்தனை அர்ச்சனைகளல்லவா நடக்கும், வேலை தந்திடும் மேலோரிடமிருந்து. உச்சிப்போதும் பறந்து செல்கிறது, உழைத்து அலுத்துப் போகிறான்; பிறகேனும் ஓய்வு உண்டா? அவனுக்கா! செய்த வேலையுடன் செய்தாக வேண்டிய வேலையினை ஒப்பிட்டுப் பார்க்கும்போது காலம் ஏன் தான் இப்படிக் கடுகிச் சென்றிடுகிறதோ என்று கோபம் கோபமாய் வருகிறது.

உல்லாசச் சீமானுக்கோ, காலம் நகர மறுக்கிறது, அன்ன நடை போடுகிறது. காலத்தை ஓட்டிட அவரும் ஏதேதோ செய்து பார்க்கிறார் - தோட்டத்தில் உலவுகிறார், தோழர்களுடன் அளவளாவுகிறார், காலத்தை மறந்திடச் செய்யும் கலை இன்பம் நுகருகிறார். ஏதேதோ விளையாட்டு, களியாட்டம்! எனினும், காலம் ஓடிட மறுக்கிறது. காலம் கூட, குடிசையை விட மாளிகையிலேதான் அதிக நேரம் இருந்திட விரும்புகிறது போலும்!

காலம் போகவில்லையே என்ற கவலை, கனவானுக்கு!

காலம் வரவில்லையே என்ற கவலை பாட்டாளிக்கு!

காலம் வரவில்லையே! என்று கூறுகிறான் - குமுறுகிறான் - தம்பி! சாவு வரவில்லையே என்றுதான் கவலை! சாவே வா! என்றுதான்

அழைக்கின்றான் வாழ்வுக்காகப் போராடிப் போராடித் தோல்வி கண்டவன், சாவாவது தன் குரல் கேட்டு வந்து உதவிடுமா என்று பார்க்கிறான் - மெத்த ஆவலுடன். ஆனால் சாவும் சிரிக்கிறது அவனைப் பார்த்து! ”தப்பித்துக் கொள்ள விரும்புகிறாயா! விடுவேனா! சாவே வா! என அழைக்கிறாயே, நான் வந்து உன்னை அழைத்துக் கொண்டு சென்று விட்டால், நீ செய்யாமல் விட்டு வைத்திருக்கும் வேலைகளை வேறு யார் செய்திடுவர்! ஏமாற்றவா பார்க்கிறாய் நான் ஏமாறமாட்டேன். உனக்கு நிரம்பவேலை இருக்கிறது, செய்து முடித்திடுவதிலே கவனம் செலுத்துட்டம், செத்து விடலாம் என்று தந்திரத் திட்டம் போடாதே நான் ஏமாறமாட்டேன் போ! போ! உனக்கு நிரம்ப வேலை இருக்கிறது’’ என்று கூறிவிடுகிறது காலம், குற்றுயிராகக் கிடக்கிறான், இப்போதோ இன்னும் சிறிது

நேரத்திலோ, ஈளை கட்டி விட்டது. இழுப்பு வந்துவிட்டது, உடல் சில்லிட்டு விட்டது. மூச்சுத் தடைப்படுகிறது என்றெல்லாம் கூறுகிறார்கள், பிறகு? தெய்வாதீனமாகப் பிழைத்துக் கொண்டான் என்கிறார்கள் அல்லவா - காலம் செய்திடும் பல கொடுமைகளிலே இதுவு மொன்று - கட்டையைக் கீழே போட்டுத் தொலைக்கலாம், கண்களை மூடிவிடலாம் என்று எண்ணும் ஏழையைச் சாகவும் விடமாட்டேனென்கிறது. அணு அணுவாகச் சிதைந்திடு என்று கூறுகிறது.

தம்பி! காலம் வரட்டும் என்று பேசுவதைக் கேட்டிருப்பாயே!

உழைக்கிறான், உருக்குலைகிறான்; அவன் கண்ணெதிரே ஊர்க்குடி கெடுப்பவன் உயர்ந்து கொண்டே போகிறான். உழைத்தவன் மனத்திலே ஓராயிரம் ஆசைகள் அலை மோதுகின்றன; நம்பிக்கை

கூடப் பூத்திடுகிறது. ஆனால், ஆசைகள் அவலமாகிப் போகின்றன; நம்பிக்கை நசித்துப் போகிறது; தாங்க முடியாத வேதனைதான் பெறுகிறான்; மனம் உடைந்துவிடும் என்ற நிலை; அந்த நிலையிலே அவன் மெள்ளக் கூறுகிறான், தனக்குத்தானே கூறிக் கொள்கிறான் - காலம் வரட்டும்! என்று.

காலம், தம்பி! அவன் கண்ணீரைத் துடைத்திட வந்திடுகிறதா! அது இந்த வேலையையா மேற்கொள்ளும், வேறு சுவையான வேலை இருக்கும்போது!

காலம் வரட்டும்! என்று இவன் கண்ணீரைத் துடைத்தபடி கூறுகிறான். இவனைத் தேடியா வந்திடும்? அதோ! அந்த அழகுமயில் கூறுகிறாளே, அடிமூச்சுக் குரலாலே, காலம் வரட்டும் என்று, தன் காதலை வேண்டித் தவமிருப்போனிடம்

- தனிமை கிடைக்கட்டும், கட்டுக்காவல் குறையட்டும் - காலம் வரட்டும் என்பதாக! அவள் எண்ணத்தை ஈடேற்றத் துணை செய்கிறது, ஏழைக்குத் துணை செய்யுமா?

தம்பி! காலம், கனவானின் கருவி, ஏழையை வேலை வாங்குவதற்காகச் சீமான் கரத்தில் வந்து சேர்ந்த சாட்டை!!

காலம் கடுவேகத்துடன் சென்றிடும் நிலையைக் காண்பவர்கள் நாம்.

முத்தனா! அடே, நம்ம முத்தனா! என்னடா இப்படிக் கிழமாகி விட்டாயே. . .

வயசு ஆகலியா. . . காலம் ஓடிக்கிட்டேதானே இருக்குது, உருண்டு உருண்டு. . .

என்ன இருந்தாலும், ஐந்து வருஷத்துக்குள்ளாகவா நீ இப்படி ஆகிவிடுவது. . . நம்பவே முடியவில்லையே. . .

தலைமுடி முழுவதும் நரைத்துப் போயிருக்கே. . .

ஆமாம்பா! வயசு ஆகுதேல்லோ. . . 45 ஆகுதே. . . அதுக்குள்ளாகவா இப்படி ஆகிவிடுவது. . .

தம்பி! இப்படிப்பட்ட உரையாடல் நடந்தபடி இருக்கிறது. காலம், ஏழைகளின் முகத்திலே கவலைக் கோடுகளை, மனம்போன போக்கிலே கீறிவைக்கிறது, செல்வவான்களிடமோ, அடக்க ஒடுக்கத்துடன் நடந்து கொள்கிறது.

தங்கள் வயது. . .?

என்ன இருக்கும் சொல்லு பார்ப்போம். . .

நாற்பது நாற்பத்திரண்டுக்கு மேலே. . . யோசித்துச் சொல்லு; சொல்லு சும்மா, தைரியமாக. . . என்ன இருக்கும் எனக்கு வயது. . . நாற்பத்தைந்துக்கு மேலே

இருக்கவே முடியாது! சீமான் சிரிக்கிறார்; அவன் முதுகைத் தட்டிக் கொடுக்கிறார்; அவள் கூட இப்படியேதான் சொல்கிறாள் என்கிறார்.

யார் அந்த "அவள்'. . . என்று கேட்க முடியுமா! எத்தனையோ "அவள்' அவருக்கு இருக்கக் கூடுமே?

நான் சொல்வது இருக்கட்டும், "அவள்' சொல்வதும் இருக்கட்டும், உங்கள் வயதுதான் என்ன? என்று கேட்க ஆவல்தான்;ஆனால், அவசரம் காட்டலாமா. . .?

அவரே சொல்லுகிறார், எனக்கு வயது ஐம்பது முடிந்து ஆறுவருடமாகிறது என்று.

இருக்கவே இருக்காது; நான் நம்பவே மாட்டேன். விளையாட்டுக்குச் சொல்கிறீர்கள் - என்று கூறுகிறான்.

காலம் கனவானிடம் முரட்டுத்தனம் காட்டவில்லை; மெதுவாகத் தடவிக்

கொடுக்கிறது. ஏழையையோ பிறாண்டிப் பிய்த்துவிடுகிறது.

காலத்தின் இயல்பு அது; கடும் உழைப்பு பலருக்கு, களியாட்டம் சிலருக்கு என்ற முறை இருக்குமட்டும் காலம் இந்த இயல்புடன்தான் இருந்திடும்.

ஆனால், இதனை மாற்றிட வேண்டுமென்பது சமதர்ம நோக்கத்திலே ஒன்று.

பாடுபடுபவனுக்கும் "ஓய்வு நேரம்' வேண்டும் என்ற கருத்தினை இப்போது ஏற்றுக் கொண்டுள்ளனர்; முன்பு ஓய்வு நேரம் என்பது உயிர் நிலையினருக்கு மட்டுமே கிடைத்திடத் தக்கது, கிடைத்திட வேண்டியது என்று கருதிக் கொண்டிருந்தனர்; அதனை ஒரு தத்துவம் என்று கூடக் கூறி வந்தனர்.

"ஓய்வு நேரம்' கிடைத்தால்தான் உழைத்து

அலுத்தவன், தனது அலுப்பைப் போக்கிக் கொள்ள முடியும்; மறுபடியும் பாடுபட, அலுப்புப் போக வேண்டும்.

வேலையே இல்லை, நாளெல்லாம் வாளாயிருக்கிறான், ஓய்வு அல்ல அது - பயன்படுத்தப்படவில்லை; கொடுமை! வேலை இருக்கிறது - வேலை செய்யாமல் வாளாயிருக்கிறான் - ஓய்வு அல்ல - சோம்பல்!

வேலை இருக்கிறது - வேலை செய்த அலுப்பினால் வேலை நேரம் முடிந்ததும், கட்டை போலக் கீழே விழுகிறான் - தூங்கி விடுகிறான் - ஓய்வு அல்ல இதுவும்: சோர்வு.

ஒரு வேலையும் செய்ய வேண்டிய நிலையில் இல்லை, எப்போதும் சும்மா இருக்கிறான்; இதுவும் ஓய்வு அல்ல, இது ஓய்யாரம்!

ஓய்வு என்பது ஒரு உரிமை; வேலை

செய்தவன், தன் அலுப்பைப் போக்கிக் கொண்டு, இழந்த உற்சாகத்தை மீண்டும் பெற்று, மறுபடியும் வேலையிலே ஈடுபடுவதற்கான மாமருந்து.

ஓய்வு நேரம் என்பது வேலை செய்யாதிருக்கும் வேளை என்று மட்டும் பொருள் கொள்ளக் கூடியதல்ல. ஒருவன் தன் வாழ்க்கைக்குத் தேவையான வசதியைக் கொள்வதிலே ஈடுபடுவதே வேலை. அந்த வேலை முடிந்த பிறகு அவன் மனம் ஒரு நிம்மதி பெற்று, தெம்பு பெற வேண்டும். அந்த வாய்ப்பைப் பெற்றுத் தருவதே ஓய்வு. காலை முதல் மாலை வரை பாடுபட்ட தொழிலாளி, இரவு பிறந்ததும் அயர்ந்து தூங்குகிறான், அதனால் அவனுடைய உடல் அலுப்பு நிச்சயம் குறையும்; ஆனால் உள்ளத்திலே ஏறிவிட்டுள்ள பாரம், சோர்வு - குறையுமா? குறைந்திட வழி இல்லை;

ஏனெனில், அதற்கான வழி தேடிடவில்லை அவன், செயலற்றுக் கிடக்கிறான்; தூக்கம். ஆனால், ஒய்வு என்பது தூக்கத்தால் உடல் அலுப்பைப் போக்கிக் கொள்வது மட்டுமல்ல; உள்ளத்திலே உள்ள சோர்வினைப் போக்கிக் கொள்ள அவன் உலவுவது, உரையாடுவது, பாடுவது, ஆடுவது, ஆடல் காண்பது, பாடல் கேட்பது, குழந்தைகளுடன் கொஞ்சுவது, இவ்விதமான ஏதாவதோர் செயலில் ஈடுபாடு கொண்டாக வேண்டும்.

வேலை செய்த அலுப்புப் போக அவன் தூங்கி எழுந்திருப்பது பல மணி நேரம் ஓடிக்கொண்டிருந்த இயந்திரத்தைச் சில மணி நேரம் நிறுத்திவைப்பது போன்றதே.

இயந்திரத்துக்குக் கூடத் தூக்க நேரம் இருக்கிறது. வேலை செய்யாத நேரம் மனிதன் உழைத்த அலுப்பினால் தூங்குவது, இயந்திரம் சில நேரம் வேலை செய்யாமல் இருப்பது

போன்றதே.

தூக்கத்தால் மட்டும் பாட்டாளியின் மனத்திலே உள்ள சோர்வு போய்விடுவதில்லை.

சிறிது நேரம் உறங்கிக் கிடப்பதால் மட்டும் இயந்திரம் வேலை செய்ததால் ஏற்பட்ட ”தேய்வு’ இருக்கிறதே, அது போய்விடாது, புது வலிவு வந்திடாது.

உழைப்பினால் ஏற்பட்டுவிடும் உள்ளத்துத் தேய்வு இருக்கிறதே, அதனைத் தூக்கத்தினால் மட்டும் போக்கிட முடியாது - மனத்துக்குத் தெம்பு தரத்தக்க விதமாக அவன் சிறிது நேரத்தைச் செலவிட வேண்டும்; ஓய்வாக!!

உழைத்த அலுப்பினால் வீடு வந்ததும் படுத்து உறங்கி விடும் பாட்டாளி விடிந்ததும் மீண்டும் இயந்திரமாகிறான் -

மனத்திலே "தேய்வு' வளர்ந்தபடி இருக்கிறது; குறைந்திட வழி இல்லை. அங்ஙனமின்றி உழைத்தலுத்தவன், உடனடியாக உறக்கத்தை மட்டுமே தேடிக் கொள்ளாமல், நண்பர்களுடன் பேசி மகிழ்வது, குழந்தைகளுடன் விளையாடுவது என்ற ஏதேனும் ஓர் பொழுதுபோக்கிலே ஈடுபட்டால், உடல் அலுப்பு மட்டுமல்ல, உள்ளத்திலே மூண்டுவிட்ட அலுப்பும் குறையும், அப்போது அவன் புதிய உற்சாகம் பெறுகிறான்.

மாலை ஆறு மணி வரையில் மாடாக உழைத்தாச்சே, பேசாம போய்ப் படுத்துத் தூங்குவதை விட்டுவிட்டு, விடிய விடியக் கண் விழித்துக் கொண்டு தெருக்கூத்துப் பார்த்துவிட்டு வந்தா, உடம்பு என்னத்துக்கு ஆகும்?

என்று கனிவுடன்தான் கேட்கிறாள் மனைவி. ஆனால் பகலெல்லாம் பாடுபட்டவன்,

இரவு கண்விழிப்பது உடலுக்குச் சிறிதளவு கெடுதலைக் கூடத் தரக்கூடும் என்றாலும், கூத்துப் பார்த்ததில், கண்ணுக்கும் காதுக்கும் விருந்து பெற்றான், மகிழ்ச்சி பெற்றான், மற்றவர்கள் மகிழ்ந்திருக்கக் காண்கிறான்; சிரித்தான், மற்றவர்கள் சிரித்திடக் கண்டான், இதிலே அவனுக்குக் கிடைத்த களிப்பு இருக்கிறதே, அது அவனுடைய மனத்திலே மூண்டு கிடந்த சோர்வுச் சுமையைக் குறைத்துவிட்டது. மனம் துள்ளிடுகிறது.

இதுதான் தம்பி! ஓய்வு. இழுத்துப் போர்த்துக் கொண்டு படுத்துத் தூங்குவது மட்டும் அல்ல,

கூத்துப் பார்ப்பதிலேதான் இந்த விருந்து கிடைத்திடும் என்பதில்லை. இரைச்சல் மிகுந்த தொழிற்சாலையையும் அதிலே பரபரப்புடன் சுழன்று கொண்டிருக்கும் ஆட்களையும் பார்த்துப் பார்த்துச்

சலித்துப்போன கண்களுக்கு, ஒரு சிங்கார ஓடை, அதிலே பூத்துக் கிடக்கும் மலர், கரையினிலே ஓங்கி வளர்ந்த மரம், அதிலே குலுங்கிடும் கனி, அந்தக் கனியைக் கொத்திடும் கிளி, அதனை ஏக்கத்துடன் பார்த்துக் கொண்டிருக்கும் அணில், இத்தகைய காட்சியைக் கண்டால், கண்ணும் கருத்தும் விருந்து பெறும், சோர்வு பெருமளவு நீங்கிடும்.

கவலை தோய்ந்த முகத்துடன், தொழிற் கூடத்தில் தன்னோடு இருந்திடும் பாட்டாளிகளைக் கண்டு கண்டு அவன் மனத்திலே குடிகொண்டு விடுகிறதே ஒரு கவலை, அது அவன் வெண்ணிலவு ஒரு மேகத்திலிருந்து மற்றொன்றுக்கு ஊர்ந்து செல்வது போன்ற காட்சியைக் கண்டால் சிறிதளவேனும் கலையத்தான் செய்யும். காது குடைந்திடும் ஒலியைப் பொறிகளிலிருந்து

அதனைக் கேட்டதால், உள்ளத்துக்கு ஓர் அலுப்பு; அந்த அலுப்பு, ஒரு தெம்மாங்கு கேட்டிடப் பெருமளவு குறைந்து போகும்! இந்தவிதமான வாய்ப்புகளைப் பெற்றிடுவதே ஓய்வு - வேலை செய்யாமலிருப்பது, அல்லது தூங்கிக் கொண்டிருப்பது அல்ல.

வயிற்றுக்காகப் பாடுபடுவதைவிடக் கடினமானதுதான், மலை உச்சி ஏறுவது, ஆற்றிலே நீந்துவது போன்றவை; ஆனால், அவை மனத்திலே உள்ள சோர்வைப் போக்கிடும் மாமருந்து; மிக மிகத் தேவை.

வேறு வேலையே செய்யாமல், பொழுதினை ஓட்டிட வேட்டையாடுவது ஓய்வு அல்ல; வேலை செய்தான பிறகு, மனத்துக்குத் தெம்பு பெற, புறாவினைப் பறக்கவிட்டுப் பார்த்துப் பார்த்துப் பூரித்துப் போகிறானே அது ஓய்வு!

உழைத்துத்தான் வாழ வேண்டும் - வாழ்வு, உரிமை; உழைப்பு, கடமை! ஆனால் உழைத்தும் வாழ முடியவில்லை என்றால், அது சமூகத்தில் உள்ள கொடுமையைக் காட்டுகிறது. வாழ்வதற்கு உழைக்கிறான், பிறருக்கு வாழ்வு அளிக்கவும் உழைக்கிறான். ஆனால், அந்த உழைப்பே அவனை உருக்குலையச் செய்து, வாழ்வை நுகரவே முடியாதபடி ஆக்கிவிடுமானால், அவன் உழைத்து என்ன பயன்?

தண்டவாளத்தின் மீது சென்றிடும் இரயில், போகும் போதே தண்டவாளத்தையே தேய்த்துவிடுமானால், பிறகு பயணம் எப்படி நடந்திடும்? அதுபோலவே, உழைத்து உருக்குலைந்து போனால், வாழ்க்கையிலே இன்பம் பெற முடியாத நிலையினனானால், உழைப்பு அவனைப் பொறுத்த மட்டில், உயிர் குடிக்கும் நஞ்சாகியது, உழைத்த பிறகு அவன்

வாழ்வை அனுபவிக்கும் நிலையினனாகவும் இருந்திட வேண்டும்.

ஓவியத்தைத் தீட்டி முடித்ததும், அவன் கண்கள் அவிந்து போய்விடும் என்றோர் விபரீத முறை இருப்பின் ஓவியக் கலையிலே எவர் ஈடுவடுவர்?

உழைத்தோம், பிழைத்தோம், உறுதிப்பாடும் இல்லை யெனில், உழைத்திடும் உள்ளம் எங்ஙனம் ஏற்பட முடியும்?

உழைப்பு, தம்பி! உள்ளத்தையும் உடலையும் ஒரே அடியாக முறித்துவிடக் கூடியதாக இருந்துவிடின், உலகப் பெருங்கதை சோகச் சிறுகதையாகிப் போகும் அல்லது பயங்கரப் படுகொலைக் கதையாக முடிந்திடும்.

உழைத்ததால் ஏற்பட்ட உடற் சோர்வு போக, உண்டி, உறையுள், உறக்கம் தேவை;

உழைத்ததால் ஏற்பட்ட உள்ளச் சோர்வு போக ஓய்வு, பொழுதுபோக்குத் தேவை.

உழைத்ததால் செலவானது போக, ஓய்வினை அனுப விக்கத்தக்க அளவுக்கு வலிவு மிச்சம் கைவசம் இருக்க வேண்டும். வாழ வழி தேடுவதிலேயே கால முழுவதும், வலிவு முழுவதும் செலவாகிப் போய்விடுமானால், உருக்குலைவு ஏற்பட்டு விடுமானால், தோகை விரித்ததும் செத்துவிடும் மயிலாவான்; அரும்பு மலர்ந்ததும் அறுந்துபடும் கொடியாவான்; பயன் காணான், பயனளித்திடவும் மாட்டான்.

ஆகவே பாட்டாளி ஓய்வு பெறுவது, சமூக நீதியில் ஒன்று; அடிப்படை நீதி.

ஆகவே அண்ணா! ஓய்வுபெற அங்கெல்லாம் போகின்றாய், அப்படித்தானே! என்று கேட்கிறாய் தம்பி; உணருகிறேன்.

ஆனால், நான் என் மனத்துக்கு மகிழ்ச்சி தேடிக் கொள்ள அல்ல, உழைத்திட வாய்ப்புப் பெற்று, வாழ்ந்திட உரிமை பெற்று ஓய்வும் சமூக நீதியும் பெற்று எங்கெங்கு உள்ளவர்கள் இன்புற்று வாழ்கின்றார்கள் என்பதனைக் கண்டறிந்து வந்து உன்னிடம் கூறிடும் நோக்குடனேயே பயணம் மேற்கொண்டிருக்கிறேன்.

ஓய்வு நேரம் - ஒய்வின் தன்மை ஆகியவற்றினைக் கொண்டு, ஒரு சமூகத்தின் நிலையை மதிப்பிடுகிறார்கள், அறிவாளர். பெரும்பாலான மக்களுக்குக் கிடைக்கும் ”ஓய்வு’ இருக்கிறதே, அதனை நாகரிகத்தின் அளவுகோலாகக் கொள்கிறார்கள், நல்லறிவாளர்.

ஓய்வு நேரம் ஒவ்வோர் நாட்டில் ஒவ்வோர் காலத்தில் ஆங்கு அமைந்திருந்த இயல்புக்கு ஏற்றவிதமான வடிவமெடுத்திருந்தது.

வெற்றிமேல் வெற்றி பெற்றிட வீரப்போர் புரிந்து வந்த ரோம் நாட்டவர் உடற்கட்டுள்ளவர்கள். ஒருவருடன் ஒருவர் மறப்போர், வாட்போர் செய்து, ஆற்றலைக் காட்டிடும் வீர விளையாட்டுகளைக் காண்பதிலே மட்டுமல்ல, வீரர்கள் மிருகங்களுடன் போரிட்டு அவைகளைக் கொல்வது அல்லது அவைகளால் கொல்லப்படுவது என்ற "இரக்கமற்ற' விளையாட்டுக்களைக் காண்பதனை உல்லாசமளித்திடும் ஓய்வாகக் கருதினர்.

அறிவுச் செல்வத்தைப் பெற்றுத் திகழ்ந்த கிரேக்கர்கள், ஓய்வு நேரத்தைக் காப்பியம் என்ற தரம்பெற்ற புதிய நாடகங்களைக் காண்பதிலே, களிப்பதிலே, கருத்துப் பெறுவதிலே ஓய்வு நேரத்தைச் செலவிட்டனர்.

முரட்டுக் காளையுடன் போரிடுவது, ஸ்பெயின் நாட்டவர்க்கு வீரவிளையாட்டு;

ஓய்வு நேரம் அதற்கே பெரும் பகுதி செலவிடப்பட்டது.

பழந்தமிழகத்தார் தமது ஓய்வு நேரத்தில், ஏறு தழுவுதல், மற்போர் போன்ற வீர விளையாட்டிலே செலவிட்டனர் என்று அறிகிறோம்.

கோழிச் சண்டை, கரடிச் சண்டை இவைகளை நடத்தி ஓய்வு நேரத்தில் பொழுது போக்கினர் இங்கிலாந்து நாட்டவர், மூன்று நூற்றாண்டுகளுக்கு முன்பு வரையில்.

ஓய்வு நேரத்தைப் பயன்படுத்துவதில், ஒரு நல்ல முறை அமைக்காவிட்டால், களியாட்டம், வெறியாட்டம், வீணாட்டமாகி, புதிய தெம்பு பிறப்பதற்குப் பதிலாக மனத்திலே போதையும், காட்டுணர்ச்சியும் கொந்தளிக்கச் செய்துவிடும்.

மேனாடுகள் பலவற்றிலே ஓய்வு

நேரத்துக்காக என்று அமைக்கப்பட்டுள்ள நாட்டியக் கூடங்களும், சூதாட்டச் சாலைகளும், நல்லியல்பை வளர்ப்பனவாக உள்ளன என்ற உணர்வு இப்போது வலுபெற்று வந்து கொண்டிருக்கிறது.

ஆனால் இவைகளிலே ஈடுபடுவோர் பெரும்பாலும் உல்லாசம் தேடிடும் பணம் படைத்தோரே - பெரும்பாலான நடுத்தர நிலையினர், காற்பந்து, கிரிக்கட், ஆக்கி போன்ற வீர விளையாட்டுக்களைக் காண்பதிலேயே பெரு விருப்பம் கொண்டுள்ளனர்.

குத்துச்சண்டை கண்டு களிப்பதனை, எழுச்சி தரத்தக்க பொழுது போக்காகக் கொண்டுள்ள அமெரிக்காவில் இதற்கெனப் பெரும்பணம் செலவிடப்பட்டு வருகிறது.

சென்ற திங்கள் க்ளே எனும்

குத்துச்சண்டை வீரன், தன்னுடன் போட்டிக்கு நின்ற லிஸ்டன் என்பானை, ஒரே ஒரு குத்து கொடுத்துக் கீழே வீழ்த்தினான், விழுந்தவன் குறிப்பிடப் பட்ட நேரத்திற்குள் எழுந்திருக்கவில்லை. எனவே க்ளே வெற்றி வீரன் என்ற விருது அளிக்கப் பெற்றான். இலட்சக்கணக்கான டாலர்கள் குவிந்தன இந்தக் குத்துச்சண்டையின்போது. ஒரே விநாடி! ஒரே குத்து! குத்துச்சண்டை முடிந்தது! க்ளே பெரும்பொருள் பெற்றான் பரிசுத் தொகையாக.

க்ளே - லிஸ்டன் இருவருமே நீக்ரோக்கள்.

இவை போன்ற விளையாட்டுக்கள், காண்போருக்குக் களிப்பூட்டும்; வீர உணர்ச்சி தரும், அய்யமில்லை. ஆனால், புதிய கருத்துத் தந்திடுமா, கருத்துக்கு விருந்தாக அமையுமா என்ற கேள்வி பலமாக எழுந்து விட்டிருக்கிறது.

மற்ற நாடுகளிலே, ஓய்வு நேரத்தை எந்த வகையிலே செலவிட்டால், கருத்துக்கு இன்பம் கிடைக்கும் என்பது பற்றிய திட்டங்கள் தீட்டப்பட்டு வருகின்றன. இங்கோ, தம்பி! ஓய்வு நேரம் என்பது, வாழ்வின் இயல்பை, தொழிலின் இயல்பைத் தரமுள்ளதாக்கிடும் என்ற உணர்வே பெறவில்லை. ஓய்வு என்பது வேலை செய்யாத நேரம் என்ற அளவிலேதான் அதற்கான இலக்கணம் இருந்து வருகிறது. ஓய்வு என்பது கருத்துக்கு விருந்து பெறும் ஓர் வாய்ப்பு என்ற நிலை அமையவில்லை; அமைத்திடுதல் வேண்டும்.

வறுமை மிகுந்த நாட்டிலே ஓய்வு நேரம் கிடைப்பதும் அதனை உள்ளத்துக்கு மகிழ்ச்சி தரத்தக்க விதமாகச் செலவிடுவதும் எங்ஙனம் முடியும் - வீண் பேச்சு - என்று கூறுவர், பலர்.

நீர்வீழ்ச்சி - சித்திரச் சோலை - ஆறு உற்பத்தியாகும் இடம் - மலை உச்சி - சிற்றாறு

- புள்ளினம் எழுப்பிடும் பண் - மானினம் துள்ளிடும் எழில் - இவை பற்றிக் கூறிப் பொழுதுபோக்குக்காக இவைகளைக் கண்டு களித்திடுவது உண்டா என்று கேட்டால், கோபித்துக்
கொண்டு, தமது இயலாமையைக் காரணம் காட்டும் அதே அன்பர்களை, தம்பி! காஞ்சியில் காணலாம் கருடோற் சவத்தின்போது, தில்லை. திருவரங்கம், திருப்பதி. காளத்தி இங்கெல்லாம், காணலாம். பணம் கிடைக்கிறது செலவிட, கடனாகப் பெற்றதாகக் கூட இருக்கக் கூடும் அந்தப் பணம். இஃது ஓய்வுக்காக மேற்கொள்ளப்படுவது அல்ல, "புண்ணியம்' தேடிட!

இராமர் பல்லாங்குழி ஆடிய இடமும், சீதை மஞ்சள் அரைத்த இடமும், ஜடாயு வீழ்ந்த பள்ளமும், பீமன் சமையல் செய்த இடமும், காண்டீபம் பெற்ற இடமும்,

கல்லானை உயிர் பெற்ற இடமும் கருங்குருவிக்கு மோட்சமளித்த இடமும் இப்படிப்பட்டவைகளைக் காண்கின்றனர்.

இவைகளிலே இருந்துவந்த நம்பிக்கையின் அழுத்தம் போய்விட்டதாலும் இவைகள் என்ன அற்புதங்கள்! சந்திர மண்டலமே செல்லப் போகிறார்களாமே என்று அவர்களையு மறியாமல் வியப்பு அவர்களைக் குலுக்கி விடுவதாலும், இந்தப் புண்ணியம் தந்திடும் இடங்களைப் பார்ப்பதனால் முந்தைய சந்ததியினர் பெற்றதுபோன்ற உணர்ச்சியையும் இவர்களால் இன்று பெற முடிவதில்லை.

புண்ணியம் தேடிடும் பயணம் என்ற கருத்து இவர்களைப் பிடித்துக் கொண்டிருப்பதால், இயற்கையின் எழிலைக் கண்டு களித்திடவும் இவர்களால் முடிவதில்லை. தில்லையையும்,

திருப்பதியையும் கண்டுவிட்டு, சாத்தனூர் அணையையும் நெய்வேலியையும் பார்த்துவிட்டு, மாமல்ல புரத்தையும், மந்திரி வீட்டையும் கண்டுவிட்டு, "கதம்ப' உணர்ச்சி பெற்றுக் கொண்டு செல்கின்றனர்.

மிகச் சிலரால் மட்டுமே, தம்பி! இந்த விதமான பயணத்தையாகிலும் மேற்கொள்ள முடிகிறது. மிகப் பெரும்பாலோர் ஓய்வு நேரத்தின் அருமையினை உணர்ந்திடவும் வாய்ப்பின்றி, உழைத்து உருக்குலைந்து போகின்றனர், இங்கு.

பிற இடங்களில் உழைப்பு எந்த அளவு உருப்படியான வடிவம் கொள்ளுகிறது, வாழ்வை எந்த முறையில் செம்மைப் படுத்துகிறது, உள்ளத்திற்கு ஏற்படும் சோர்வு போக்கிக் கொள்ள ஓய்வு நேரத்தை எம்முறையில் பயன்படுத்திக் கொள்கிறார்கள் என்பதனை அறிந்து கொள்ள வேண்டும் என்ற

விருப்பம் எனக்கு மிகுதியாக. என் பயணம், எனது இந்த விருப்பத்தையும் அடிப்படையாகக் கொண்டதுதான்.

கண்டறிந்து கொள்பவைகளில் கருத்துக்கு விருந்தாகத் தக்கவைகளைப் பிறகு கூறிட முற்படுவேன்.

எனவே, தம்பி! நான் ஓய்வாகச் சென்றிருக்கிறேன் என்று கூடச் சொல்வதற்கில்லை, உனக்குக் கூறிடத்தக்க சுவையான சேதிகளைத் தேடிப்பெற்றிடவே சென்றிருக்கிறேன்.

நெடுந்தொலைவு என்கிறாயோ தம்பி! எத்தனை தொலைவானால் என்ன, என் கண்களில் உன் உருவம் தெரிந்த படிதான் இருக்கிறது.

அன்புள்ள

அண்ணாதுரை

8-8-65

19. தடைக்கற்கள் படிக்கட்டுகளாகும்

பலன் எதிர்பாராது கடமை ஆற்றுக; களிப்பு உண்டு!

கழக வரலாறு பற்றிய விளக்கம் கழகம் கலகலத்துவிடும்; பெரியார் கணிப்பு!

பயத்தை வெல்லாதவன் வாழ்க்கையைக் கல்லாதவன்!

வாழ்க்கைக் கப்பலுக்கு உணர்ச்சியே காற்று; பகுத்தறிவே மாலுமி!

பிரிவினைத் தடைச்சட்டத் தடைக்கல் நமது பயணத்துக்கு ஒரு படிக்கல்!

தம்பி,

பிரஞ்சுப் புரட்சி பற்றி அருமையானதோர் ஏடு எழுதிய கார்லைல் என்பார், எண்ணிப் பார்த்திட இனிப்பளிப்பதுடன் எழுச்சி

தருவதும், செயலாற்றிடத் தூண்டுவதுமான ஓர் கருத்தினைக் கூறியிருக்கிறார்:

”வலிவற்றவர்களின் பாதையில் தடையாக நின்ற கருங்கற் பாறை, வலிவு மிக்கோனின் பாதையில் படிக்கட்டாக அமைகிறது’’

தடைப்பட்டுவிட்டதே! முட்டுக்கட்டை போட்டு விட்டார்களே! என்றெல்லாம் சிற்சில வேளைகளில், கடமை உணர்ச்சியால் உந்தப்பட்டுப் பயணத்தினை மேற்கொள்பவர்கள் கூட, எண்ணி ஏங்குவது உண்டு. கலக்கமுற்று, கடமையை நிறைவேற்றிட இயலாது என்றெண்ணித் தமது பயணத்தை நிறுத்திக் கொள்வதும் உண்டு. பாதை எங்கும், இருபுறமும் நிழல் தரு தருக்களும், கனியுதிர் மரங்களும், ஆங்காங்குச் சிற்றாறும் இருந்திடும் என்றெண்ணிப் பயணத்தைத் துவக்கிவிட்டு, இடையே இன்னல் மிகுந்திருக்கக் கண்டு

கலங்கித் தவித்து கைபிசைந்து கொள்வாரும், கண் கசச்சிக் கொள்வாரும் உண்டு.

எத்தனையோ பயணங்கள் இதுபோலப் பாதியளவோடு நிறுத்தப்பட்டுப் போயுள்ளன. எத்தனையோ பேர், பயணத்தில் தொடர்ந்து ஈடுபட முடியாது என்று கூறிவிட்டு, ஒதுங்கிக் கொண்டதுண்டு.

தாங்க முடியாத தொல்லை, நீக்க முடியாத தடை என்று காரணம் காட்டுவர்; காரணம் பொய்யல்ல. எனினும், தொல்லை தாங்க முடியாதது என்றும், தடை நீக்க முடியாதது என்றும் எண்ணிக் கொண்டதற்குக் காரணம், வலிவு போதுமான அளவு இல்லை என்பதுதான் - உள்ளத்தில் வலிவு.

எப்படியும் பயணத்தில் வெற்றி பெற்றாக வேண்டும் என்ற ஆர்வம், உறுதி, உள்ளத்துக்கு நிச்சயமாக வலிவளிக்கும்; ஆனால், அதைவிட

அழுத்தமான வலிவு அளிப்பது, நாம் நமது கடமையைச் செய்கிறோம் என்ற உணர்வு பலன் கிடைத்தாக வேண்டும். அதுவும் விரைவில் என்ற "பதைப்பு' மிகுந்திடுமானால் பயணத்திலே ஒவ்வொரு அங்குலமும் ஒரு மைல்போலத் தோன்றும், ஒவ்வொரு விநாடியும் ஒரு நாள் பொழுது போன்றிருக்கும். கடமையாற்றுகிறோம், உள்ளம் உரைத்தபடி நடக்கின்றோம் என்ற உணர்வு இருப்பின், இன்னலைப் பொருட்படுத்தக் கூடாது என்ற மனத்திட்பத்தை மட்டுமல்ல, பலன் பற்றிய கணக்குப் பார்க்கும் அரிப்பையே போக்கிவிடும்; பயணம் செய்வது நம் கடமை என்ற உணர்வு புதியதோர் வலிவினை, மன நிறைவினைத் தந்திடும்.

வளர்த்திடும் மகவுகள் யாவுமே பெற்றவளுக்குப் பரிவு காட்டி, பெருமை தேடித்தந்து விடுவதில்லை. எனினும், தாய்

உள்ளம் தனக்குக் கிடைக்கப் போவது என்ன என்ற கணக்குப் பார்த்து அல்ல, பெற்ற மகவினைப் பாலூட்டிச் சீராட்டி வளர்த்திடல் தன் கடமை என்ற உணர்வுடனேயே பாசம் காட்டுகிறாள் - அந்தக் கடமையைச் செய்வதிலே களிப்படைகிறாள்.

பிறகோர் நாள் மகவு வளர்ந்து, தன் வாழ்க்கைக்கான வசதிகளைத் தேடித் தந்திடப் போகிறான் என்ற எண்ணத்துடனா தாய் தன் குழந்தையைக் கொஞ்சி மகிழ்கிறாள்? என் மகன் என்னை மாளிகையிலே கொலுவிருக்கச் செய்யப் போகிறான், மாநிதியை என் காலடியில் கொண்டு வந்து கொட்டப் போகிறான் என்றெல்லாம் கூடத் தாய் பேசுவாள் - ஆனால், அது கொஞ்சும் முறையிலே ஒரு வகை; போடும் ஒரு கணக்கு அல்ல.

பலன் கருதாது பாசம் காரணமாக,

எப்படி ஒரு தாய் தன் மகவிடம் பரிவுகாட்டி மகிழ்கின்றாளோ, அது போன்றே, கொண்ட கொள்கை, வகுத்துக் கொண்ட பாதை, மேற்கொண்ட பயணம் ஆகியவற்றின் மூலம் என்ன பலன் கிடைத்திடும் என்ற கணக்குப் பார்க்காமல், கடமையைச் செய்வதிலே ஓர் களிப்பு இருக்கிறது என்ற உணர்வுடன் பணிபுரிபவர்கள் வலிவு மிக்கவர் களாகின்றனர்.

அத்தகையவர்களுக்குத்தான் கார்லைல் குறிப்பிட்ட படி, தடைக்கற்கள், படிக்கட்டுகளாகின்றன.

ஏன் இந்தப் பயணத்தை மேற்கொண்டோம், பயன் என்ன காணப்போகிறோம் இந்தப் பயணத்தினால் என்ற எண்ணம் மே-ட்டவர்கள், வெகுவிரைவிலே, பலன் கிடைக்கக் காணோமே என்ற சலிப்பு அடைந்து வலிவிழந்து போகின்றனர், உற்சாகம்

அழிவதால், உறுதி தளருவதால்! உற்சாகமும் உறுதியும் கடமையாற்றுகிறோம் என்ற உணர்விலிருந்து மட்டுமே பெறக்கூடியவை. அந்த உணர்வு கொண்டவர்கள் கருங்கற் பாறைகளைத் தடைக்கற்கள் என்றெண்ணிக் கலக்கமடைந்திட மாட்டார்கள்.

திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தம்பி! நாம் துவக்கிய போது, என்ன பலன் கிடைக்கும், வளர்ச்சி எவ்விதம் இருக்கும் என்று கணக்குப் போட்டுக் கொண்டு காரியமாற்றக் கிளம்பவில்லை திராவிடர் கழகத்தில் இருந்துகொண்டு. பொதுத் தொண்டாற்ற முடியாது என்ற நிலை பிறந்தபோது, எப்படியும் பொதுத் தொண்டாற்ற வேண்டும், அதற்கு ஒரு கருவி வேண்டும் என்ற உணர்வு மட்டுமே இருந்தது; கடமையைச் செய்தாக வேண்டும் என்ற உணர்வு. இந்த உணர்வு காரணமாகவே, நாம் பலன்

என்ன கிடைக்கும், எப்போது கிடைத்திடும் என்ற கணக்குப் போட்டுக் கொண்டு துவக்கினோமில்லை. கடமையாற்றுகிறோம் என்ற உணர்வு மேலோங்கி இருந்ததாலே, நமது பாதையிலே காணப்பட்ட கருங்கற் பாறைகள் தடைக் கற்களாகிவிடவில்லை, படிக்கட்டுகளாகிவிட்டன.

தம்பி! துவக்க நாள் முதல் நம்முடன் இருந்து பணியாற்றி வந்திடுவோரின் தொகையே மிகுதி, புதிய தோழர்கள் அதிக அளவில் கிடைத்துள்ளனர் என்ற போதிலும். ஆகவே, என்னென்ன இன்னல்களைச் சந்தித்தோம், எவ்விதமான ஆபத்துக்களைக் கடந்திருக்கிறோம் என்பதெல்லாம் நன்றாக நினைவிலிருக்கும் - இருக்கிறது.

கழகம் சந்தித்த ஒவ்வொரு இன்னலும், பயணத்தை மேற்கொண்டு நடத்திட முடியாது - கூடாது - என்ற அச்ச உணர்வையும்

ஐயப்பாட்டையும் எவருக்கும் ஏற்படுத்திவிடக் கூடியவை; எனினும், கடமையைச் செய்கிறோம் என்ற உணர்வினால் நாம் உந்தப்பட்டதனால் கணக்குப் பார்க்க வில்லை, கலக்கம் கொள்ளவில்லை; தடைக்கற்கள் படிக்கட்டுகளாயின.

மாற்றார்கள் நம்மை மாய்த்திட மேற்கொண்ட ஒவ்வொரு நடவடிக்கையும், நமக்கு ஏதேனும் ஓர் விதத்தில் பயன்படத் தக்கதாகி, நமது வளர்ச்சிக்கு மெத்தவும் துணை நின்றது. என்ன கிடைத்திடும் என்று நாம் கணக்குப் போட்டுக் கொண்டு, மிக்க ஆவலுடன் அது கிடைத்ததா கிடைத்ததா என்று பார்த்தபடி இருந்ததில்லை என்பது மட்டுமல்ல, நம்மைப் பற்றி மாற்றார்கள், ஆத்திரம் காரணமாகத் தவறான கணக்குப் போட்டதாலே, அது பொய்த்துப் போய்விட்டது.

கடமையாற்று கிறோம், தூய

தொண்டாற்றுகிறோம் என்ற உணர்வு மட்டும் நமக்கு அந்த அளவு இல்லாதிருந்திருக்கு மானால், இந்த அளவு வளர்ச்சியினைப் பெற்றிருந்திருக்க முடியாது, இவ்வளவு இன்னல்களையும் தாங்கிக் கொண்டிருந்திருக்க முடியாது.

என்னை எதிர்த்தவன் எவன் உருப்பட்டிருக்கிறான்?

என்னை எதிர்த்த எவனை நான் விட்டு வைத்திருக்கிறேன்?

பேசும் குரலில் ஒலியும், நிற்கும் காலிலே வலிவும் இருக்கிற வரையில், என்னை எதிர்ப்பவன் என்னிடமிருந்து தப்பித்துக் கொள்ள முடியாது!

என்பதாக, பெரியார் கோகலே மண்டபக் கூட்டத்தில் சொன்னார் - சான்றுகளையும் தந்தார். கலக்கமடையும்

இயல்பினராக நாம் இருந்திருப்பின், அந்த மிரட்ட-லேயே மாய்ந்துவிட்டிருப்போம். பெரியாருடன் இருந்து வந்தபோது என்னென்ன கொள்கைகளுக்காகப் பாடுபட்டுக் கொண்டிருந் தோமோ, அதே பணியினை, புதிய அமைப்பின் மூலம் செய்து கொண்டிருக்க வேண்டும். அதுவே நமது கடமை என்று கருதினோம்; பெரியாரை எதிர்ப்பது நமது கடமைகளிலே ஒன்று என்று கொள்ளவில்லை.

துடிப்புள்ள இளைஞர்கள், மெத்த மனக்கொதிப் படைந்து பெரியாரைவிட்டு விலகுகிறார்கள், இவர்கள் தமது ஆத்திரம் தீரப் பெரியாரைத் தாக்கிப் பேசுவார்கள்; செவிகளுக்குச் செந்தேன் கிடைக்கப் போகிறது; பெரியாரும் இவர்களைப் பிய்த்துத் தள்ளப் போகிறார்; காணக் காட்சியாக இருக்கப் போகிறது.

என்று அரசியல் வட்டாரம் எண்ணிக் கொண்டது; எதிர் பார்த்தது.

சட்டசபைகளுக்குச் செல்லலாமா, கூடாதா என்ற பிரச்சினையிலே ஏற்பட்ட கருத்து வேற்றுமை காரணமாகக் காங்கிரசிலே ஒரு சுயராஜ்யக் கட்சி தோன்றியபோது கூட அத்தனை பெரிய தலைவர்களால் எரிச்சலையும் எதிர்ப்புணர்ச்சி யையும் அடக்கிக் கொள்ள முடியாமற் போய்விட்டது; மேடைகளிலே பல சமயம் தரக்குறைவான பேச்சுகள் மொழியப்பட்டன

நாமோ இளைஞர்கள், மனம் நொந்து வெளியேறுபவர்கள்.

எனினும், வந்த இடம் பற்றி ஒரு வார்த்தை, கேவலமாகப் பேசினோமில்லை; நம்மைக் கேவலப்படுத்த பெரியார் பயன்படுத்தாத வார்த்தைகள் இல்லை; இதனாலே

நாம் எந்த விதத்திலும் பாதிக்கப்பட்டுப் போய்விடவில்லை.

பொறுத்துக் கொள்ளும் இயல்பு, நாம் மேற் கொள்ளும் கடமையிலே நமக்கு இருக்கும் அழுத்தமான பற்றின் விளைவு; கோழைத்தனத்தின் மறுபதிப்பு அல்ல.

நமக்கென்று ஒரு கடமை இருக்கிறது என்ற மெய்யுணர்வு நமக்கு இருந்ததனால், நமது நோக்கத்திலே நமக்குத் தெளிவும் நம்பிக்கையும் இருந்ததனால், நாம் எவருடைய தூற்றலையும் பொருட்படுத்தவில்லை; அதனை அதிகமாகக் கவனிக்க நமக்கு நேரமும் இல்லை. முன்கூட்டிப்பலன் என்ன, எப்படி இருக்கும் என்று கணக்குப் போட்டுக் கொண்டு காரியத்தில் ஈடுபட்டோ மில்லை; இப்போது கணக்குப் பார்க்கும்போது, களிப்புத் தரத்தக்க அளவினதாகவும், வகையினதாகவும், "பலன்' இருக்கிறது.

கார்லைல் சொன்னதுபோல், தடைக்கற்கள் படிக்கட்டுகளாகி உள்ளன.

கழகத்தின் வரலாறு பற்றி என்னிடம் விவரம் விளக்கம் கேட்க வரும் சில நேர்மையாளர்கள் இது குறித்து உள்ளபடி வியப்படைகின்றனர். எப்படி முடிந்தது, கொதிப்படையாம லிருந்திட என்று கேட்கின்றனர். நான் நன்றாக அறிவேன், அந்த நாட்களிலே நமது தோழர்களிலே மிகப் பலர் கொதிப்பை அடக்கிக் கொள்ள முடியாமல், தத்தளித்ததனை.

பெரியாரும், நமது இறுதி இன்று, அல்லது நாளை அல்லது மறுநாள் என்று ஆரூடம் கணித்தபடி இருந்தார்; அவருடன் இருந்துகொண்டு இந்தத் தூய காரியத்திலே தமது தனித்திறமையைக் காட்டி வந்தவர்கள், முடிவுக்கு ஆரம்பம்! அழிவுக்கு அச்சாரம்! என்று முழக்கமிட்டபடி இருந்தனர். எங்கோ ஓர்

கிளைக்கழகத்தில், செயலாளர் பதவிக்காக இருவர் மோதுவர், ஒருவர் விலகுவார்; விலகுபவரின் நீண்ட அறிக்கையை இதழ்கள் மிகுந்த நம்பிக்கையுடன் வெளியிடும்; அந்த அறிக்கையிலே ஏன் விலக நேரிட்டது என்ற காரணம் இருக்காது, உடனே என் மீதுதான் பாய்ச்சல்! அவனுக்கு என்ன தெரியும்? யார் இவன். இவன் ஒரு தலைவனா! என்று கடாவுதல்கள். தம்பி! நமது கழகத்தவர்களிலே சிலர் மிரட்சியேகூட அடையத்தக்க விதமான அறிக்கைகள் அடிக்கடி கிளம்பும். பேராபத்து வருகிறது, பிளவு வாய் திறந்து கொண்டிருக்கிறது, இந்த முறை தப்பித்துக் கொள்ள முடியாது, காஞ்சிபுரத்தானைக் காலை வாரிவிடப் போகிறார்கள் என்பதான தலைப்புகள், எத்தனை எக்களிப்புடன் அவைகளை எழுதியிருப்பார்கள், பாவம் அவர்களின்

ஆசை நிறைவேறாமல் போய்விட்டது எனக்கு ஒருவிதத்தில் வருத்தம்கூட! ஒன்பது மாதங்களுக்குப் பிறகு பெரிய மருத்துவர் பார்த்துவிட்டு, இது சூதகக் கட்டி என்று சொன்னால், கருவுற்றிருப்பதாக அதுவரை எண்ணிக் கொண்டிருந்த தாய் எவ்வளவு கவலைப்படுவார்கள்? அதுபோல அவர்கள், பாவம், மெத்தவும் எதிர்பார்த்து எதிர்பார்த்து ஏமாற்றமடைந்தார்கள். தம்பிகளிலே எத்தனை பேருக்கு நினைவிலிருக்கிறதோ எனக்குத் தெரியவில்லை. ஆத்திர மேலீட்டால் பெரியார் ஒரு முறை எழுதினார். இந்தக் கண்ணீர்த் துளிகள் என்ன கதியாகப் போகிறார்கள் பாருங்கள்! சீந்துவாரற்றுப் போவது மட்டுமல்ல! மக்கள் இவர்களைக் கல்லால் அடித்து விரட்டப் போகிறார்கள்; காணத்தான் போகிறீர்கள்! - என்று.

அவ்வளவு கோபம் அவருக்கு என்பது

மட்டுமல்ல, அவ்வளவு நம்பிக்கை அவருக்கு. நாம் அழிந்துபடுவோம் என்பதில். கூடிவாழமாட்டோம் என்று மிகப் பலமாக நம்பிக் கொண்டிருந்தார். பலப் பரீட்சைகள் நடக்கும், உத்திகள் பிரியும், உட்குழப்பம் ஏற்படும் என்றெல்லாம் எதிர்பார்த்தார். இந்த நிலைமை ஏற்படுமானால், கழகம் அதனைத் தாங்கிக்கொள்ள முடியாது, தகர்ந்து போகும் என்பது அவருடைய எண்ணம். தம்பி! கழகம் அவர் எதிர்பார்த்தது போலக் கலகலத்துப் போய்விட்டிருந்தால் என்ன நேரிட்டிருக்கும்? நமக்குத் தனித் தனியே நட்டம் ஏதும் இருந்திருக்காது; அவரவர்கள் தத்தமது விருப்புக்கு ஏற்ப ஏதேனும் ஓர் துறையில் சென்றுவிட்டிருப்பர். ஆனால், நாட்டுக்கு ஒரு பொதுநட்டம்; ஒரு கட்டுக்கோப்பான ஜனநாயக அணிவகுப்பு அமைந்திருக்காது.

தம்பி! சிலர் ஒவ்வோர் நாளும் ஒவ்வோர்

விதமான பீதி தந்திடும் செய்திகளைக் கொண்டு வந்தபடி இருப்பார்கள்; கழகத்தை அந்த ஊரிலே கலைத்துவிடப் போகிறார்களாம், இந்த ஊரிலே கழகக் கூட்டம் நடத்தச் சென்றால், உயிரோடு திரும்பிவர முடியாதாம் என்றெல்லாம்.

எமர்சன் என்னம் பேரறிவாளர் சொல்லியிருக்கிறார், நாளுக்கொரு பயத்தை வெல்லாதவன், வாழ்க்கையின் முதல் பாடத்தையே கல்லாதவன் என்று.

அந்தப் பாடத்தை நாம் செவ்வனே கற்றுத் தெளிவு பெறவோ என்னவோ ஒவ்வொரு நாளும் ஒருவகையான பயம் கிளப்பப்படும்.

இவை பற்றி ஏன் சிறிது விரிவாக எழுதுகிறேன் என்றால், தம்பி! அத்தனை விதமான தூற்றல்களைத் தாங்கிக்கொண்டு, அவைகளைப் பொருட்படுத்தாமல்,

கடமையாற்றிக் கொண்டுவந்த நமக்கு இப்போது காங்கிரசின் தலைவர்கள் தூற்றித் திரிவது கேட்கும்போது, சீற்றம் அல்ல, சிரிப்புத்தான் வர வேண்டும்.

கழகம் என்ற கருநாகத்தின் விஷப்பற்களைக் கழற்றிவிட்டு, அதை விளையாட விட்டு வேடிக்கை காட்டுகிறாராம், ராஜகோபாலாச்சாரியார்!

யாருடைய பொன்மொழி என்கிறாயா, தம்பி! முதியவர் முதலமைச்சர் இருக்கிறாரே, பக்தவத்சலனார் அவருடைய "வைரமொழி' - பொன்மொழியாக மட்டுமா அத்தனை பெரியவருடைய பேச்சை மதிப்பிடுவது! வைர மொழி, கோபம் வரலாமா! கூடாது! ஏன்? கோபம் வந்தால் என்ன சொல்லத் தோன்றும், பக்குவமற்றவர்களுக்கு?

ராஜகோபாலாச்சாரியாரல்ல. அவருடைய

பாட்டன் முப்பாட்டன் வந்தால்கூட எம்மை ஒன்றும் செய்ய முடியாது என்பார்கள் அல்லவா!

அந்தப் பேச்சு நம்மிடமிருந்து வரவேண்டும் என்று எதிர் பார்க்கிறார்; அனுபவமிக்கவரல்லவா!! உடனே அதனைத் தூக்கிக் கொண்டு போவார், அவரிடம் காட்ட!!

அப்பேர்ப்பட்ட ராஜாஜியையே இதுகள் இவ்வளவு கேவலமாகப் பேசுகின்றனவே

என்று புதிய பல்லவி தொடங்குவார்; அவரிடம் உள்ளபடி மதிப்பு வைத்து அல்ல; உடனே நம்மிலே சற்றுத் துடிப்புள்ளவர்கள் ஏதேனும் பேசுவார்கள், அதைத் தூக்கிக் கொண்டு போய்க் காட்டலாம் என்ற நப்பாசையால்!

எனக்குப் பெரியதோர் மகிழ்ச்சி, நமது தோழர்கள் பெரும்பாலும் இத்தகைய

பேச்சுக்களை, சிண்டு முடிந்து விடும் பேச்சுகளைப் பொருட்படுத்துவதில்லை, பதிலளிப்பதில்லை. இந்த இயல்பு முழுமை பெற வேண்டும் என்பது என் விருப்பம்; வேண்டுகோள்.

எவர் எதனைக் கூறிடினும், ஏன் அவ்விதம் கூறுகிறார்; எந்த நோக்கத்துடன் என்பதனைப் பகுத்தறிவு கொண்டு பார்த்திடுவோமானால், பத்திலே ஒன்பது பேச்சு, பொருட்படுத்தத் தேவையற்றன என்பது புலப்பட்டுவிடும்; எரிச்சல் எழாது; புன்னகை மலரும்.

நான் தம்பி! இந்தப் பயிற்சியை, மிக மிகத் தேவையானது என்று கருதுகிறேன்.

பகுத்தறியும்போது, உணர்ச்சிக்கு முதலிடம் இருக்காது; உணர்ச்சிக்கு மட்டுமே முதலிடம் கொடுத்து விடுபவர்கள் பெரும்பாலும், பகுத்தறியும் திறனை

முழுவதுமாகப் பெற மாட்டார்கள். உணர்ச்சி ஒருவிதமான கொந்தளிப்பு - பகுத்தறிவு என்பது, கொதிப்பதைக் கிளறிக் கிளறிப் பார்த்து, உள்ள பொருள் என்ன, என்ன நிலையில் அஃது உளது என்பதனைக் கண்டறிவது.

உணர்ச்சியே வாழ்க்கைக் கப்பலை உந்தித் தள்ளும் காற்று என்றால், பகுத்தறிவுதான் அதை ஓட்டும் மாலுமி. காற்று இன்றேல் கப்பல் நகராது; மாலுமி இன்றேல் முழுகிவிடும்!

பிரஞ்சுப் பேரறிவாளர் கூறியது தம்பி! உணர்ச்சிப் பிழம்புகளாகித்தான் பிரான்சிலே பயங்கரமிக்க புரட்சி நடத்தினர்; வெறும் உணர்ச்சி மட்டுமே கொந்தளித்துக் கொண்டிருந்ததால், பிரான்சு நாடு படாத பாடுபட நேரிட்டது. அதனை நன்கு உணர்ந்ததாலேயே பிரஞ்சுக்காரர், உணர்ச்சி யால் மட்டும் உந்தப்பட்டுவிடும் நிலை கூடாது

என்று கூறினார்.

தம்பி, நாம் உணர்ச்சிக்கு மட்டுமே ஆட்பட்டு விடுவோம்! பிரச்சினைகளையும் நிலைமைகளையும் பகுத்தறியும் பக்குவம் நம்மிடம் இருக்காது என்ற தவறான கணக்கினைத்தான் மாற்றார் போட்டனர். உணர்ச்சிக்கு மட்டுமே இடமளித்து, பொறி பறக்கப் பேசியும் எழுதியும் வந்தவர்கள் இருந்தனர். இப்போது சென்ற இடம் அவர்களுக்குப் பக்குவத்தை ஏற்படுத்தி இருக்கும் என்று எண்ணுகிறேன். இங்கு இருந்த போதே கூடக் கொதித்தபடி இருப்பது கூடாது, கொதித்து அடங்கி, பக்குவம் பெற்றிட வேண்டும் என்று நான் கூறிவந்ததுண்டு, நான் கூறுவதைக் கேட்டுக் கொள்ளலாம் என்ற மரியாதை உணர்ச்சி அவர்களிடம் இருந்த வரையில்; பிறகு? தேவையற்ற இடத்திலே தெளிவைப் புகுத்த முடியுமா, தம்பி ஒதுங்கிக்

கொண்டேன்.

உணர்ச்சியால் மட்டும் உந்தப்பட்டு, பேசுவதும் எழுதுவதுமாக இருந்தவர்கள், அன்று என்னென்ன சொன்னார்கள், எவ்வளவு விரைவிலே அவற்றினை மறந்தார்கள், இன்று அதே வேகத்துடன் நம்மை ஏதேது பேசுகிறார்கள் என்பது பற்றித் தம்பி நான் எண்ணிப் பார்த்திடும்போது எத்தனை விந்தையாக இருக்கிறது, மனம், இயல், போக்கு, என்பதனை அறிந்துகொள்கிறேன்; அவ்விதமான இயல்பு என்னைப் பற்றிக் கொள்ளாதிருக்கத்தக்க பாதுகாப்பு முறைகளைத் தேடிக் கொள்கிறேன்.

உணர்ச்சியால் உந்தப்படுவதற்கும் அழுத்தமான நம்பிக்கையுடன் இருப்பதற்கும் உள்ள மாறுபாடு, குறை குடத்திற்கும், நிறை குடத்திற்கும் உள்ள வித்தியாசம் போன்றதேயாகும்.

அனுபவம் பெறப்பெற, ஒருவிதமான அமைதி பிறந்திடும், அந்த அமைதி செயலாற்றாத இயல்பாக மாறிவிடாதபடி பார்த்துக் கொள்ள வேண்டும். கதிர் முற்றா முன்னம் கழனியிலே "தெம்மாங்கு' பாடுவதுபோன்ற ஒலி கேட்கிறது; கதிர் முற்ற முற்ற, சாய்ந்துவிடுகிறது! பயன் மிகுதியும் மாந்தர்க்குக் கிடைக்கிறது.

பொதுத் தேர்தல் நெருங்கிட நெருங்கிட, தம்பி! நமது உணர்ச்சிகளை மட்டும் தட்டி எழுப்பிடும் நிகழ்ச்சிகளும், உள்ளத்தில் கொதிப்பை மூட்டிவிடும் பேச்சுக்களும், மிகுதியாகிவிடும். அதுபோது நாம் நமது கழகம் வளர இதுவரையில் மேற்கொண்ட போக்கினையும், பெற்றுள்ள மாண்பினையும் மறவாது, தக்கபாடம் பெற்றுக் கொள்ள வேண்டும்.

வெறும் உணர்ச்சிக்கு மட்டுமே

நாம் ஆட்பட்டவர்கள், எனவே அதனைத் தட்டிவிட்டு நம்மைத் தகர்த்து விடலாம் என்ற நினைப்புடன்தான், தம்பி! நாட்டுப்பிரிவினை கேட்பது கூடாது; கேட்போர் தேர்தலில் ஈடுபட முடியாது என்றதோர் சட்டம் இயற்றினர். சட்டம் வந்ததும், உணர்ச்சி வயப்பட்டுக் கொதிப்பார்கள், சட்டத்தை மீறுவார்கள், தேர்தலிலே ஈடுபடும் வழி இழந்து போவார்கள், நாம் எதிர்ப்பாரற்றுத் தேர்தல் களம் புகுந்து, வெற்றியைத் தட்டிக் கொண்டு போய் விடலாம் என்று ஒரு கணக்குப் போட்டனர்; அதுவும் பொய்த்துப் போய்விடவே, அவர்கள் இப்போது மேலும் அதிகமான ஆத்திரம் கொண்டு அரற்றுகின்றனர். தம்பி! உணர்ச்சியால் மட்டுமே நாம் உந்தப்பட்டவர்களாக இருந்திருப்பின் இந்நேரம் நமது கழக அமைப்பு கலகலத்துப் போய்விட்டிருக்கும்; இப்போது பயணம் வருகிறாரே, நாளைக்கு

ஒரு ஊர், வேளைக்கு ஒரு கூட்டம் என்பதாகப் ”பெரியவர்’, அதுகூடத் தேவைப்பட்டிருக்காது. ஆனால், நாம், உணர்ச்சியால் மட்டுமல்ல, பகுத்தறிவினாலும் நமது பணியினைச் செம்மைப்படுத்திக் கொள்பவர்கள். ஆகவே தான், ஏன் இப்படி ஒரு சட்டம் கொண்டு வந்தார்கள் என்பது பற்றி யோசித்துப் பார்த்தோம்.

தேர்தலில் நாம் ஈடுபடுவதை எப்படியாவது தடுத்திட வேண்டும் என்பதே இவரின் நோக்கம்.

என்பது புரிந்தது; புரிந்திடவே நாமும் நமது சட்ட திட்டத்தை மாற்றிக் கொண்டு, நாட்டுப் பிரிவினை மூலம் எதெதனைப் பெற முடியுமோ அவைகளைப் பெறத்தக்க விதமாக, இந்திய அமைப்பில் இருந்துகொண்டே பெறத்தக்க வழி காண்போம் என்று கூறினோம்; தேர்தல் களத்திலே நிற்கிறோம்.

இதுவே இவர்களின் இதயத்துக்கு வேலாகிவிட்டது. பாவிப்பயல்கள், படபடத்து, துடிதுடித்து, சட்டத்தை மீறுவோம் என்பார்கள், ஒரே அடியாக ஒழித்துக்கட்டி, "மங்களம்' பாடிவிடலாம் என்று எண்ணிக் கொண்டிருந்தோம், பயல்கள் தந்திரமாகத் தப்பித்துக் கொண்டார்களே என்பதிலே அவர்களுக்கு எரிச்சல்.

ஆனால், தம்பி! தந்திரம் செய்தவர்கள் நாமல்ல! அவர்கள் நம்மை ஒழிக்க மிகக் கீழ்த்தரமான தந்திர முறையை மேற்கொண்டனர்; நம்மை ஏமாளிகள் என்று எண்ணிக் கொண்டு. ஒரு கதை உண்டு தம்பி! ஒருவன் ஏமாளி - மற்றவன் எத்தன்! எத்தன் ஏமாளியிடம் கேட்டானாம், நான் கண்ணை மூடிக் கொண்டு செய்கிற காரியத்தை, உன்னால் கண்ணை திறந்து கொண்டு செய்ய முடியுமா என்று ஏமாளிக்குக்

கோபம்! அவ்வளவு கேவலமான எண்ணமா என்னைப் பற்றி; இவன் கண்ணை மூடிக் கொண்டு செய்வானாம், அதனை நான் கண்ணைத் திறந்து கொண்டு செய்ய முடியாதாம்! பார்ப்போம்! இவன் கர்வத்தைத் தொலைத்துவிடுவோம் என்று எண்ணிக் கொண்டான்; "ரோஷ' உணர்ச்சி பொங்கிற்று,"முடியும்'' என்றான்; அவன் "முடியவே முடியாது'' என்றான்; இவன்,"நிச்சயமாக முடியும்! பந்தயம் வைத்துக் கொள்!'' என்றான். அவன் ஒப்புக் கொண்டான்; பந்தயம் ஐம்பது ரூபாய் என்பது ஏற்பாடு. எத்தனுக்கு ஏகப்பட்ட மகிழ்ச்சி, ஏமாளி தன் வலையில் வீழ்ந்துவிட்டான் என்று.

இதோ பார் என்று கூறி ஒரு பிடி மண் எடுத்து கண்களை இறுக மூடிக் கொண்டு, மண்ணைக் கொட்டிக் கொண்டான், மூடப்பட்டிருந்த கண்களின் மீது! ஒரு

விநாடிக்குப் பிறகு மண்ணைத் தட்டி விட்டுவிட்டு, நான் கண்ணை மூடிக் கொண்டு செய்த காரியத்தை நீ கண்ணைத் திறந்து கொண்டு செய் பார்க்கலாம் என்றான், முடியுமா! கண்ணல்லவா பாழாகிவிடும் ஐம்பது ரூபாயை ஓசைப்படாமல் கொடுத்துவிட்டு வாய் மூடிக் கொண்டு சென்றான் ஏமாளி! எத்தன் கை கொட்டிச் சிரித்தான்.

தம்பி! நம்மை அப்படிப்பட்ட ஏமாளி என்று எண்ணிக் கொண்டனர், அவர்கள். நாம் ஏமாற மறுத்தோம்.

உணர்ச்சியால் மட்டும் உந்தப்படும் நிலையினராக நாம் இருந்திருப்பின், கதையில் வந்திடும் ஏமாளி நிலை பெற்றிருப்போம். நாம் பகுத்தறிவையும் துணையாகக் கொண்டிருப்பதால், அவர்களின் சூழ்ச்சியினை முறியடித்துக்

காட்டினோம்.

மாற்றலாமா! மாற்றலாமா! என்று கேட்டு மாரடித்துக் கொள்கிறார்கள் இன்று.

மாற்றக் கூடியதை மாற்றும் துணிச்சலையும் மாற்ற முடியாததைச் சகித்துக் கொள்ளும் பொறுமையையும் மாற்ற முடியாதது எது, மாற்றக் கூடியது எது என்ற வித்தியாசத்தைப் புரிந்து கொள்ளும் அறிவையும், இறைவனே! எனக்கு அருள்வாயாக!

என்றோர் சான்றோர் மொழி உண்டு. அதன்படி நடந்து இன்று, காங்கிரஸ் எதேச்சாதிகாரத்தை எதிர்த்து நிற்கும் ஆற்றலுள்ள அமைப்பாக விளங்குகிறோம்.

தம்பி! துவக்கத்தில் குறிப்பிட்டேனே, கார்லைல் கூறிய கருத்துரை - அதன்படி பிரிவினைத் தடைச் சட்டம் என்பதனைப்

பெரிய தடைக்கல்லாகக் கருதிக் கொண்டுதான் காங்கிரஸ் அரசு, நமது பாதையிலே உருட்டி விட்டது; நாமோ அதனைப் படிக்கற்களில் ஒன்றாக்கிக் கொண்டு விட்டோம்; பயணம் தொடருகிறது. துவக்க நாட்களில் இருந்து வந்த பக்குவம், பயிற்சி காரணமாக மேலும் பதமாகி இருக்கும் வேளை இது. அந்தப் பக்குவம் நமக்கு எப்படி ஏற்பட்டது என்பதனை நினைவுப்படுத்திக் கொள்வது நல்லது என்பதனாலேயே, அது குறித்த கருத்துக்களைச் சிறிதளவு விளக்கமாக எடுத்துரைத்தேன்.

அன்புள்ள

அண்ணாதுரை

15-8-65

20. விளக்கு அணைந்து விட்டது!

போளூர் சுப்பிரமணியம் மறைவு வாழ்க்கை, வரலாறாகிவிட்டது!

தம்பி,

விளக்கு அணைந்துவிட்டது; இருள் கப்பிக் கொண்டது; எண்ணெயும் திரியும் இருக்க இருக்க, ஏதோ ஓர் கரம்பட்டு விளக்கு, கீழே விழுந்து நொறுங்கியதால், ஒளி மாய்ந்துவிட்டது, இருள் சூழ்ந்து கொண்டது, இதயத்தில் வேதனை மூண்டு விட்டது. எனவே, ஏதேதோ கூறிட எண்ணிக் கொண்டிருந்த நான், என் கண்ணீரைத் துடைத்துக் கொள்ளும் காரியத்தில் இருக்கிறேன். ஆம்! இருக்கிறேன்; என் இதயத்தில் நல்லதோர் இடம் பெற்று, முப்பது

ஆண்டுகளாக எனக்குற்ற நண்பராக இருந்து வந்த போளூர் சுப்பிரமணியத்தின் உடலுக்குத் தீ மூட்டப்பட்ட கொடுமைமிகு நிலையை கண்டதனால், மனம் புண்பட்ட நிலையில், வேதனை கொப்பளித்திடும் நிலையில், அதிர்ச்சி நீங்கவில்லை - இலேசானதல்ல அந்த அதிர்ச்சி.

முன்னால் என்னிடம் மகிழ்ச்சி குழையக் குழையப் பேசிக் கொண்டிருந்தவர், மறுநாள் மருத்துவமனையில் இரத்தம் சொட்டச் சொட்ட, உயிரொளி மெள்ள மெள்ள அணைந்து கொண்டுள்ள நிலையில் கிடத்தப்பட்டிருக்கிறார், காண்கிறேன், வேதனை தாக்குகிறது, விழி இருளுகிறது, உடல் பதறுகிறது. உள்ளம் கூறுகிறது, "நம்பிக்கை இல்லை! நண்பன் பிழைப்பான் என்ற நம்பிக்கை இல்லை!' என்பதாக. ஓடோடிச் சென்று தலைமை மருத்துவரைக்

கேட்கிறேன் - நிலைமை எப்படி? என்று. ஏதோ நான் கேட்டால் அவர் என் நண்பனைப் பிழைத்து எழுந்திருக்கச் செய்துவிடுவார் என்ற விதமானதோர் பித்தம் முற்றிய எண்ணம்.

மோசமான நிலை! ஏதும் கூறுவதற்கு இல்லை. மண்டையில் பலமான அடி, மூளையில் சிதறல் ஏற்பட்டிருக்கும் - என்றெல்லாம் விளக்குகிறார்; விளக்கு நொறுங்கிவிட்டது என்ற செய்தி சில மணி நேரத்திற்கெல்லாம் என் செவியில் நுழைந்தது, நெஞ்சைத் தாக்கிற்று. நிலைகுலைந்து போனேன், நினைப்புகள் சிதறின, பறந்தன.

போளூர் சுப்பிரமணியத்தை நான் எப்போதும் பெயரிட்டு அழைத்ததில்லை; எப்போதும் போளூர்! போளூர்! என்றேதான் அழைப்பேன். போளூரின் வாய் பேசுமுன்பு

கண்கள் பேசும்! கனிவு வழியும்! சிரிப்பு பொங்கி வழியும்!

கட்டுடல்! கருத்த மேனி! கருப்பிலே எத்தனை கவர்ச்சி காண முடியுமோ அத்தனை கவர்ச்சி! கண்களிலே ஓர் ஒளி! இதழில் ஓர் மலர்ச்சி! இதயம், போளூருக்கு உடலில் எங்கோ உட்புறத்தில் அல்ல அவருடைய கண்களிலேயே தெரிந்தபடி இருந்திடும். அந்தப் போளூர் மோட்டார் விபத்திலே சிக்கி, மாய்ந்து போனார், மறைந்து போனார், என் மனத்திலே நெருப்பை அள்ளிக் கொட்டிவிட்டு, நான் எப்படித் துடிக்கிறேன் என்பதனைக் காண வேண்டியே காலம் இந்தக் கொடுமையைச் செய்ததோ என்று எண்ண வேண்டியிருக்கிறது. எண்ணெய் தீர்ந்து போய் விளக்கு அணையவில்லை! திரி தீர்ந்து போய் விளக்கு அணையவில்லை, விபத்தினால் அணைந்தது அந்த ஒளி -

முப்பதாண்டுகளுக்கு மேலாக நான் கண்டு கண்டு களிப்படைந்து வந்த இன்ப ஒளி. பெரு நெருப்பிட்டுக் கொளுத்திக் கருக்கி நீறாக்கிவிட்டனர் அந்த ஒளியினை. என்ன கொடுமை!

என்ன கொடுமை! என் நிலையே போளூராரை அறிந்துள்ள கழகத் தோழர்கள் அனைவரின் நிலையும்.

தோழர்தம் நிலையே இதுவென்றால், அவரது துணைவியார், குழந்தைகள் என்ன வேதனையில் துடித்திடுவர் - எவர் அவர்க்கு ஆறுதல் அளித்திட முடியும்; என்ன எண்ணி ஆறுதலைப் பெற்றிட முடியும்?

பொல்லாத நோயொன்று பற்றிக் கொண்டு, பொன்னுடலை உருக்கி உருக்கி மாய்த்திட, இருமி ஈளை கட்டி இழுப்புடன் போராடி, இன்றோ நாளையோ, பகலோ

இரவோ, உயிர் பிரியும் வேளை எப்போதோ என்று பலரும் பேசிக் கொள்ளும் நிலையிலா நேரிட்டது இந்த மறைவு? நண்பர்களிடம் அளவளாவி விட்டு நண்பகல் சென்னை விட்டுக் கிளம்பியவர் ஒரு மணி நேரத்திலே, உயிர் வேதனை அடைந்திடும் விபத்திலே சிக்கி, இரவு உயிரற்றுப் போனார் என்பதன்றோ நிலை. எவர்தான் தாங்கிக் கொள்ள முடியும்! இயற்கை! என் செய்வது! என்று கூறிடும் துணிவு எவருக்குத்தான் எழ முடியும்? கண்டவர் கல்லாயினர் - கல் மனத்தினரும் கசிந்துருகினர் - என் கலக்கம் குறைந்திடாதோ என்றதோர் நிலை - எனவேதான் தம்பி! கருத்தளிக்கும் காரியத்தில் ஈடுபட இயலவில்லை.

போளூராரின் இனிய இயல்புகள், அவர் இயக்கத்தில் ஆற்றிய அருந்தொண்டுகள், நெஞ்சை அள்ளும் நிகழ்ச்சிகள், அவருடைய

நகைச்சுவைப் பேச்சினால் நாடு கண்ட அறிவுக் கதிரொளி என்பவைகளைப் பற்றிக் கூட எடுத்துக் கூற இயலவில்லை - முதலில் வேதனை தீர வேண்டும்; அதன் கூராவது ஓரளவு மழுங்க வேண்டும்; பிறகுதான் அவரைப் பற்றியவைகளைக் கூட நினைவிற்குக் கொண்டு வந்து ஒழுங்கு படுத்திக் கூற முடியும்; இப்போது உள்ள நிலை, எங்கள் இருவருக்கும் இருந்துவந்த முப்பதாண்டுத் தோழமைத் தொடர்பிலே நான் கண்டவைகள் வேக வேகமாகக் கிளம்பிக் கிளம்பி என் மனத்திலே ஓர் கொந்தளிப்பைத்தான் ஏற்படுத்து கின்றன. பெருமழை கண்ட புள்ளினம் சிறகுகளை விரித்திடவும் இயலாமல், ஏதேனும் பதுங்குமிடம் சென்று உடல் நடுங்கிக் கிடத்தல் போலுள்ளது, என் உள்ளம். விளக்கு அணைந்து விட்டது, கீழே வீழ்ந்து நொறுங்கி

விட்டது; ஒரு வாழ்க்கை, வரலாறு ஆகிவிட்டது; என் வாழ்வில் ஓர் பெரிய வேதனை தாக்கி விட்டது; இந்நிலையில் நான் எதை எழுத, எதைக் கூற...

அன்புள்ள

அண்ணாதுரை

29-8-65

21. கடமையாற்றிட

பாகிஸ்தானுடன் போர்

அனைத்துக் கட்சிகளும் அரசுக்கு ஒத்துழைப்பு

நாடு பிடிக்கும் நப்பாசை நமக்கு இல்லை

தாக்குதலைத் துவக்கியது பாகிஸ்தானே!

உலக நாளேடுகளின் கண்டிப்பு

வல்லரசுகளின் விபரீதப் போக்கு.

தம்பி,

நாடே பாசறையாகி, இல்லங்கள் வீரக் கோட்டங்களாகி, பேச்செல்லாம் பரணியாகி வீரம் கொப்பளித்துக் கிளம்பி, பகைவர்களைப் பொசுக்கித் தள்ளிக் கொண்டிருக்கும் நாட்களைக் காண்கிறேம் - பகைப்படைகள் சிதறி ஓடுகின்றன; டாங்கிகள் நொறுக்கப்படுகின்றன; அரண்கள் பிளந்தெறியப் படுகின்றன, ஆற்றல்

மறவர்கள் அகிலம் வியந்திடும் வெற்றிகளை ஈட்டிக் குவித்தபடி உள்ளனர்; நேற்றுவரை தயக்கம் காட்டி வந்தவர்கள் இன்று என்ன இவ்வளவு தீரச் செயல் புரிகின்றனரே, கொழுந்துவிட்டு எரிகிறதே அவர்தம் ஆற்றல் என்று எண்ணிப் பகைவர்கள் திகைக்கின்றனர் - அஞ்சா நெஞ்சினரான நம் படை வீரர்கள், மானம் காத்திடும் இந்தப் போரில் மகத்தான தீரம் காட்டி வருகின்றனர் - பாகிஸ்தானியத் தளங்களைத் தாக்கித் தகர்க்கின்றனர்; ஆணவக் கோட்டைகளை அழித்து வருகின்றனர்; எட்டுத்திக்கும் புகழ் முரசு கொட்டி வருகின்றனர்.

கவிகள் வேண்டும் வீர காவியம் புனைந்திட! அத்தனை வீரமிகு நிகழ்ச்சிகள் நித்த நித்தம் நடைபெற்று வருகின்றன, போர்க்களத்தில் என்று அமைச்சர் அளகேசன் கூறியுள்ளார்; அந்தப் பெருமித உணர்ச்சி

இன்று நம் நாட்டினர் அனைவருக்கும் பொங்கிடும் நிலை!!

சீனப் படையெடுப்பின்போது நேரிட்டுவிட்ட சில சம்பவங்களைக் கொண்டு, இவர்கள் போரிடும் ஆற்றலற்றோர் - தாக்கிடின் தகர்ந்து போவர் - என்று ஒரு தவறான எண்ணம் கொண்டனர் பற்பல நாட்டினர், துளியும் எதிர்பாராத நிலையிலும் முற்றிலும் பழக்கமற்ற சுற்றுச் சார்பிலும், சீனர்களைச் சந்திக்க வேண்டி நேரிட்டுவிட்டதால், நமது படையினர் திருப்பித் தாக்கிடும் நிலையினை முழு அளவில் பெற முடியாமற் போய் விட்டது; ஆற்றல் அற்றதாலே அல்ல; அஞ்சா நெஞ்சுடை வீரர்க்குக் குறைவு ஏற்பட்டுவிட்டதாலே அல்ல என்பதனை உணர முடியாதவர்கள் மமதை கொண்டனர், வீர மற்றவர்கள் என்று கருதிக் கொண்டனர். இன்றோ, தவறு! தவறு! முற்றிலும் தவறு! என்று அலறியபடி

புறமுதுகு காட்டுகின்றனர். அனைத்துக் கட்சியினர் முதலமைச்சர் பக்தவத்சலனார் தலைமையில் நடாத்திய பேரணியில் தம்பி கருணாநிதி கூறியபடி, புதிய புறநானூறு இயற்றப்பட்டு வருகிறது. தாக்கிடத் துணிந்த பாகிஸ்தான் மட்டுமல்ல, தருக்குடன் கிடக்கும் வேறு நாடுகளும், நமது வீரர்தம் ஆற்றலை உணர்ந்து கொண்டு வருகின்றன.

எந்த ஒரு நாடும், தனது சிறப்பினை, இரத்தத்தால் மட்டுமே எழுதிக் காட்டிட வேண்டும் என்ற நிலையினை நாம் விரும்புபவர் அல்ல; அஃது வரவேற்கத்தக்கதுமல்ல. ஆதரிக்கத்தக்கதுமல்ல. ஒரு நாட்டின் சிறப்பு, அந்நாடு மக்களை எத்தனை நேர்த்தியாக வாழவைத்திருக்கிறது, பிற நாடுகளுக்கு எத்துணை நட்புணர்ச்சி காட்டுகின்றது, உலகம் மேம்பாடடைய. மனிதக்குலம்

தழைத்திட, பண்பாடு மிகுந்திட எவ்வகையில் பணிபுரிந்து வருகிறது என்பதிலேயே இருக்கிறது. இதனை உணர்ந்து, உலகில் அமைதி நிலவிடவும், பூசலும் புகைச்சலும் அற்ற நிலை மலந்திடவும், எத்தனை சிக்கலான பிரச்சினையாயினும் கலந்துரையாடித் தீர்த்துக் கொள்ளலாம், ஒருவரை ஒருவர் வெட்டி வீழ்த்திக் கொள்ளத் தேவையில்லை என்ற குறிக்கோளைக் கடைப்பிடித்து, எரிச்சலூட்டப்பட்ட போதெல்லாம்கூட உணர்ச்சியைக் கட்டுப் படுத்திக் கொண்டு வந்ததனை, வலிவற்ற தன்மை என்றும் கோழைத்தனமென்றும் கருதிக் கொண்டு, படை கொண்டு தாக்கிட பாகிஸ்தானில் கொட்டமடித்துக் கொண்டுள்ள போர்வெறி கொண்டலையும் ஒரு கும்பல் துணிந்துவிட்டது. காஷ்மீரத்திலே "பிடாரிகளை' ஏவிவிட்டு, பெருத்த புரளிகளைக் கிளப்பிவிட்டு, அமளி

மூட்டிட முனைந்தது. அம்முறை பலன் தராதது கண்டதும், படையினரைச் சிறுக சிறுக முதலிலும், பிறகு பெரும் அளவிலும், புதுமுறைக் கருவிகளுடனும் அனுப்பி அமளி எழச் செய்துவிட்டது. எல்லை தாக்கப்பட்டது, நாட்டின் தன்மானம் தாக்கப்பட்டது; மெள்ள மெள்ளக் காஷ்மீரத்தையே விழுங்கிவிடத் திட்டமிடப்பட்டது.

இஃது, எந்த நேரத்தில்? கட்ச் ஒப்பந்தம் ஏற்பட்டு பிரச்சினைகளைப் பேசித் தீர்த்துக் கொள்ளலாம் என்ற கட்டம் ஏற்படுத்தப்பட்ட நேரத்தில்.

கட்ச்சில் சமரசக் கோலம் புனைந்து காட்டிய அதேபோது காஷ்மீரில், படைகளை ஏவிவிட்டனர். இதனை அறமென்றோ அறிவாளரின் அரசியலென்றோ, சர்வதேச நியதிக்க ஏற்ற தென்றோ, எவரும் கூறார். இது சதிச் செயல்! நன்னெறியை மறந்திடத்

துணிந்திடும் தூர்த்தரின் முறை. இதற்கு ஒரே ஒரு பதில்தான் உண்டு - திருப்பித் தாக்குவது. குண்டுக்குக் குண்டு! தாக்குதலை முறியடிக்கத் தாக்குதல்! இந்தியா இதனைத்தான் மேற்கொண்டது.

லால்பகதூர், அவசரப்பட்டு அல்லது ஆத்திரப்பட்டு, இந்த முறையை மேற்கொள்ளவில்லை; சொல்லப்போனால், தாக்க வேண்டும்! தாக்கித் தகர்க்க வேண்டும்! கட்ச் ஒப்பந்தத்தைக் கிழித்தெறிய வேண்டும்! பாகிஸ்தானியத் தளங்களைத் தவிடு பொடியாக்க வேண்டும்! என்ற முழக்கமெழுப்பினர் பாராளுமன்றத்தில் பற்பலர்; அமைதி! அமைதி! பாகிஸ்தான் அதிபர்கள் அறிவை இழந்திட மாட்டார்கள்! ஆத்திரப் படாதீர்கள்!! என்று கூறி வந்தவர், லால்பகதூர். அவரே, இதுபோது, பாகிஸ்தான் போர் வெறியர்களின் கொட்ட மடக்கிட,

தாக்குவதுதான் முறை என்று முடிவெடுத்தார் என்றால், நல்வழிகள் அனைத்தையும் பாகிஸ்தானிய அதிபர்கள் தாமாகவே, ஆணவம் காரணமாக அடைத்துவிட்டனர் என்பதுதான் காரணம். அப்போர் வெறியர்கள் தாமே மூட்டிக் கொண்டு விட்ட பெருநெருப்பில் வீழ்ந்து இன்று கருகிக் கொண்டுள்ளனர் - தாங்கிக் கொள்ளத் தெரிந்த இந்தியாவுக்குத் தாக்கவும் தெரியும், எதிரி தலை தெறிக்க ஓடித் தீர வேண்டிய அளவுக்குச் செம்மையாகத் தாக்கத் தெரியும் என்பதனைத் தரணியே இன்று உணர்ந்து கொண்டு விட்டிருக்கிறது. உலக வல்லரசுகள் வியப்பால் வாய்பிளந்து நின்றிடத் தக்கவிதமான வீரப் போரிட்டு வெற்றிமேல் வெற்றி பெற்றவண்ணமுள்ளனர் நமது படையினர்.

பீரங்கி வாயிலிருந்து வேக வேகமாகக் குண்டுகள் கிளம்பியபடி இருந்தனவாம்;

துளியும் அஞ்சாது, உயிரைச் துச்சமென்று எண்ணி, எப்படியும் பீரங்கிக்காரனை ஒழித்தே தீருவேன் என்ற உறுதி பூண்டு, எதிரே பாய்ந்து வந்து கொண்டிருக்கும் குண்டுகளைப் பூச்செண்டுகளாக எண்ணிக் கொண்டு, மெள்ள மெள்ள ஊர்ந்து சென்று, கைவெடிக் குண்டு வீசி பீரங்கி பிளந்து போகச் செய்தானாம் ஓர் ஆற்றல் மறவன், நம் நாட்டு வீரன்! வாழ்க அவ்வீரன்! எந்நாடும் போற்றிடும் அத்தகு வீரத்தை! வெறி தலைக்கேறிய நிலையில், விமானத் தாக்குதலை நடத்தி மக்களை - படையினரைக் கூட அல்ல - ஊர் மக்களைப் படுநாசமாக்கிட முனைகின்றனர் பகைப் படையினர்; நமது விமானப் படையினர் சுட்டு வீழ்த்துகின்றனர் அவ்விமானங்களை! விழுகின்றன, எரிகின்றன! கருகி விடுகிறது, விமானமும், அதனை நம்பிக் கிடந்திடும் வெறியரின்

ஆணவமும்!! தீரச் செயல்கள் ஒன்றல்ல; பல; பலப் பல! வீரப் பதக்கம் பெற்று வருகின்றனர் பலர்; பெருமாள் எனும் தென்னவர் அவர்களில் ஒருவர்.

போதிராஜு எனும் மற்றோர் தென்னவர், குண்டூர் மாவட்டத்தினர், பாகிஸ்தானிய ஜெட் விமானத்தைச் சுட்டு வீழ்த்தியுள்ளார்; இருபத்தைந்து வயதாம் இந்த வீரனுக்கு; வீரச் சக்கரம் பெற்றுள்ளான்.

தென்னகத்தவரான பொறியியல் வல்லுநர்கள் - ஒருவர் குறிப்பிடத்தக்கவர், பெயர் லட்சுமணன் - போர் முனையில் அரும் பணியாற்றி வருவதனையும், போர் முனையில் முன்னணியில் தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் எனும் தென்மொழி ஒலி கேட்டபடி இருப்பதனையும், போர் முனை சென்று செய்தி கண்டறிந்துள்ள "இந்து' செய்தியாளர் இ.கே. ராமசாமி பூரிப்புடன்

தெரிவித்திருக்கிறார்.

டாங்கிப் படையை அவர்கள் மெத்தவும் நம்பிக் கிடந்திருக்கிறார்கள் என்று தெரிகிறது. டாங்கிகளைத் தந்தவர்கள் அத்தனை தைரியம் கூறியிருந்திருப்பார்கள் போலிருக்கிறது. இந்த டாங்கிகளில் ஒரு பத்து உருண்டோடி வந்தால் போதும், இந்தியப் படையினர் மிரண்டோடிப் போவார்கள், அத்தகைய பயங்கர ஒலி கிளம்பும், அவ்வளவு பலமாகத் தாக்கும் வலிவுள்ளவை என்றெல்லாம் கூறித்தான் அமெரிக்கா பாடான் டாங்கிகளைக் கொடுத்திருக்க வேண்டும். ஆனால், இன்று அமெரிக்காவே அச்சம் கலந்த ஆச்சரியத்தில் ஆழ்ந்து கிடக்கிறதாம். பாடான் டாங்கிகள் பொடிப் பொடியாகி விடுவது கண்டு! பீரங்கிகளைக் கொண்டு தாக்குகிறார்கள், அந்த டாங்கிகள் பிளந்து போகின்றன; உருப்படியாக

உள்ளவைகளிலே உள்ளவர்கள் உயிர் பிழைத்தால் போதுமென்று, டாங்கிகளைக் களத்திலே விட்டு விட்டு ஓடுகின்றனராம்!! டாங்கிப் படைகளைக் கொண்டு எந்த முனையிலும் நமது படையினரின் முன்னேற்றத்தைத் தடுத்திட முடியவில்லை; சுற்றி வளைத்துக் கொண்டுள்ளன இந்தியப் படைகள் லாகூர் நகரினை, சியால்காட் தளத்தினை தம்பி! இந்த மடல் உன் கரம் சேர்வதற்குள் என்னென்ன பாகிஸ்தானிய அரண்கள் பிளக்கப்படும் என்று கூறுவதற்கு இல்லை ஒன்று தெரிகிறது, தெளிவாக; எந்தப் போர் முனையிலும் பாகிஸ்தானியப் படையின் கரம் ஓங்கி நிற்கவில்லை; எல்லா முனைகளிலும் வெற்றி தொடர்ந்து, படிப்படியாக நமது பக்கம் கிடைத்து வருகிறது போர் முறை அறிந்தோர் கூறுகின்றனர், இதே விதமான

நிலையில் இன்னும் ஒரு திங்கள் கூடப் பாகிஸ்தானால் தாக்குப் பிடிக்க முடியாது என்பதாக! காஷ்மீரப் பகுதியிலிருந்து கராச்சி வரையில் பாகிஸ்தானியப் படை பிளக்கப்பட்டு விட்டிருக்கிறது. தோற்றுப் போகப் போவது தவிர்க்க முடியாதது என்பது தெளிவாகத் தெரியத் தொடங்கிய பிறகும், பாகிஸ்தானியப் போர் வெறியர்கள், அறிவுத் தெளிவு பெற்றார்களில்லை; ஆணவப் பேச்சை மறந்தார்களில்லை. கொக்கரித்தபடி உள்ளனர்.

காரணம் என்ன? தோல்வி மேல் தோல்வி பெற்று பெற்று வரும் அவர்களைத் தூக்கி எறிந்துவிடும் விதமான ஆத்திர உணர்ச்சி பாகிஸ்தான் மக்களிடம் ஏற்பட்டு விடுமே என்ற திகில்! பொய் பேசி, அந்த மக்களை மயக்கத்திலாழ்த்தலாமா என்று எண்ணச் செய்கிறது. இட்லரும், முசோலினியும்

இதே போக்கையே மேற்கொண்டனர்; வீழ்ச்சி நெருங்கிட நெருங்கிட, வீறாப்பு மிகுந்திடும்! சர்வாதிகாரிகளின் - போர் வெறியர்களின் இயல்பு அது. பாகிஸ்தான் மக்களிடம் தாம் செய்துள்ளதாக எதையாவது எடுத்துக் காட்ட வேண்டாமா என்ற எண்ணத்தில், அமிர்தசரசிலிருந்து விசாகப்பட்டினம் வரையில் பல்வேறு இடங்களில் - கிராமங்களில் கூட - விமானத் தாக்குதலை நடத்தி வருகிறார்கள். பீதி ஏற்படும் என்று ஒரு எண்ணம். நாட்டு மக்களின் மனத்திடம் என்றும் இந்த அளவு உன்னதமானதாக இருந்ததில்லை; அத்துணை நெஞ்சுரத்துடன், நீதி நமது பக்கம், அந்த நீதியை நிலைநாட்டத்தக்க வலிவு படைத்த படை நம்மிடம் என்ற நம்பிக்கையுடன், மக்கள் அமைதியாக உள்ளனர்; இந்தப் போர் விரைவிலே

வெற்றிகரமாக முடிவடைய எந்தவிதமான தியாகத்தையும் மேற்கொள்ளும் துணிவுடன் உள்ளனர். கட்சிப் பூசல்கள் கிளர்ச்சிகள் எல்லாம் தாமாக மறைந்துவிட்டன; நாட்டைக் காத்திடும் பணியில் நாம் அனைவரும் ஒன்று என்ற முழக்கம் கேட்பது மட்டுமல்ல, உறுதி ஏற்பட்டு விட்டிருக்கிறது, ஜனநாயக முறையின் ”இருப்பு’ வலிவு முழுவதும் இன்று திரட்டப்பட்டு, பகையை முறியடிக்கப் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

பாகிஸ்தான் அதிபர்கள் பல தவறான கணக்குகளைப் போட்டுக் கொண்டு, போர்த்திட்டம் வகுத்துக் கொண்டனர். அவைகளிலே முக்கியமானது, இந்தியாவிலே, ஒற்றுமை கிடையாது, ஏற்படாது, பேதமும் பிளவும், போட்டியும் பூசலும் மாச்சரியமும் மனத்தாங்கலும் நிரம்ப உள்ளன. ஆகவே, ஒன்றுபட்டு நின்று போரிடும் ஆற்றல்

கிடையாது, மூலைக்கு ஒருவராகி நிற்பர், முறியடித்துவிடலாம் என்ற எண்ணமாகும். அந்த எண்ணம் தடித்ததற்குக் காரணம், இங்குப் பல்வேறு அரசியல் கட்சிகள் இருக்கும் நிலைமை. போர்நிலை மூள்வதற்குச் சின்னாட்களுக்கு முன்பு தில்லி பாராளுமன்றத்தில் லால்பகதூர் அமைச்சரவையிடம் நம்பிக்கை இல்லை என்று தீர்மானம் கொண்டு வரப்பட்டது; பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்கள் லால்பகதூர் சர்க்காரின் போக்கைச் சாடினர். இதுபோன்ற நிகழ்ச்சிகளின் உண்மைப் பொருளை உணர்ந்து கொள்ளும் நிலையில் அயூப்கான் சர்க்கார் இல்லை; அது இராணுவத்தைக் காட்டி ஜனநாயகத்தை மூலைக்கு விரட்டிவிட்ட சர்வாதிகார அரசு; எனவே ஜனநாயகம், கருத்து வேற்றுமைகளுக்கு, அரசாளும் வாய்ப்பில் "எனக்கு உனக்கு' என்று போட்டி

போட்டுக் கொள்வதில் உரிமை அளிக்கிறது என்பதனையும், அந்த உரிமையைப் பெற்றுள்ளவர்கள் நாட்டுக்குப் பேராபத்து என்ற நிலை மூண்டிடும்போது கட்சிப் பாகுபாடுகளை மறந்து, எல்லோரும் நாட்டுக்காக, எந்தத் திட்டமும் நாட்டைக் காத்திட என்ற மூலத்தை உணர்ந்து, ஒன்றுபட்டு நின்றிடும் கடமையினைச் செம்மையாக நடத்திடுவர் என்பதனையும், பட்டாளத்தில் பத்தாம் இடமோ எட்டாமிடமோ பெறத்தக்க நிலையிலிருந்து, பாராளுமன்ற முறையை மாய்த்துவிட்டு, பட்டத்தைத் தட்டிப் பறித்துக் கொண்டு"பாதுஷா' போன்றாகிவிட்ட அயூப்கான் அறியமாட்டார். அறியும் திறனும் இயல்பும் அற்றவரானதால் தான் சின்னாட்களுக்கு முன்புதானே பாராளுமன்ளத்தில், ஆளும்கட்சியுடன் எதிர்க்கட்சிகள் மோதிக் கொண்டன,

வெளியேறு என்றும், வேண்டாம் உமது ஆட்சி என்றும் முழக்கமிட்டார்களே இந்நிலையில் இவர்கள் சர்க்காருடன் ஒத்துழைக்கவா போகிறார்கள் என்று எண்ணிக் கொண்டிருக்கக் கூடும் - ஜனநாயக முறையின் நேர்த்தியினை உணராத காரணத்தால். ஆனால், என்ன காண்கிறார், காக்கி உடைக் கனவான்! கட்சிகள் பலப்பல என்ற நிலையே மறைந்து போய் எல்லோரும் ஒரே அணிவகுப்பில் என்ற நிலை! எந்தெந்த அரசியல் கட்சிகள் லால்பகதூர் சர்க்காரிடம் நம்பிக்கை இல்லை என்று சின்னாட்களுக்கு முன்பு தெரிவித்தனவோ, அதே கட்சிகளின் தலைவர்கள் கூடி, லால்பகதூர் சர்க்காருக்கு முழு ஒத்துழைப்பு, தயக்கமற்ற ஒத்துழைப்பு, நிபந்தனையற்ற ஒத்துழைப்புத் தந்திட உறுதி கொண்டோம் என்று அறிவித்தனர்.

நம்பிக்கையில்லாத் தீர்மானம்,

பாராளுமன்றத்தில், ஆகஸ்ட்டு 23-ம் நாளில்!

செப்டம்பர் 6-ம் நாள் பாராளுமன்ற மாளிகையில் ஐம்பதாவது எண் கூடத்தில், லால்பகதூர் தலைமையில், எல்லாக் கட்சித் தலைவர்களும் கூடுகின்றனர்; நாட்டைக் காத்திட, பகைப்படையை விரட்டியடித்திட, நீதியை நிலை நாட்டிட. நாங்கள் அனைவரும் ஆளுங்கட்சி மேற்கொள்ளும் நடவடிக்கை களுக்குத் துணை நிற்போம் என்று சூளுரைத்தனர்.

ஜனநாயக முறை என்பது அருமை மிகு நெறி என்பதற்கு இதனினும் சிறந்ததோர் எடுத்துக்காட்டு இருக்க முடியுமா! ஜனநாயகத்தை மாய்த்துவிட்டு, போர்வெறிக் கும்ப-டம் அரசு சிக்கிக் கொள்ளச் செய்துவிட்ட அயூப்கானாலும், புட்டோ போன்றார்களாலும் இதனை உணர்ந்திட முடியுமா! விட்ட குறை தொட்ட குறை போலச் சிறிதளவு

ஜனநாயக உணர்வு இருந்திடினும், பீகிங்கின் மாசேதுங் அதனைக் கொன்று, மென்று தின்று விட்டிருந்திருப்பாரன்றோ!

எனவேதான் தம்பி, அயூப்கானால் உண்மையை உணர்ந்து கொள்ள முடியவில்லை. போர் மூண்டிடினும், கம்யூனிஸ்டும் கழகமும், சோஷியலிஸ்டும் ஜனசங்கமும், சுதந்திராவும் இன்ன பிறவும் மக்களைத் தனித்தனி முகாம்களில் இழுத்து வைத்துக் கொள்வார்கள், நாடு ஒன்றுபட்டு இருந்திடாது என்று எண்ணிக் கொண்டார் போலும் அவர் மட்டுமல்ல, அவனியே காண்கிறது, நாடே திரண்டெழுந்து நிற்பதை! எல்லாக் கட்சிகளும், எம்முடைய பணி நாட்டைக் காத்திட ஒன்றுபடுவதே என்று முழக்கமெழுப்புவதை!

தம்பி! தில்லியில், பிரதம மந்திரி தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில்,

காங்கிரஸ் சர்க்காரை மாற்றியாக வேண்டும் என்ற கருத்தினை மிக அழுத்தமாகக் கொண்டுள்ள தலைவர்கள் பலரும் வந்திருந்தனர்.

இந்த சர்க்கார் முதுகெலும்பற்றது, உரிமைகளைக் காத்திடும் ஆற்றலற்றது என்று கூறிவரும் கோல்வால்கர் ஒரு புறம்; இந்த சர்க்கார் மாற்றப்பட வேண்டும், புரட்சி பூத்திட வேண்டும், புதுவாழ்வு மலர்ந்திட வேண்டும், பாட்டாளி அரசு அமைந்திட வேண்டும் என்று முழக்கமிடும் கம்யூனிஸ்டு தலைவர் டாங்கே ஓர்புறம், அவருக்குத் துணையாக புபேஷ்குப்தா; கோல்வால்கருக்குத் துணை போல ஜனசங்க வாஜ்பாய்! பிரஜா சோஷியலிஸ்டு தலைவர்! சோஷியலிஸ்டுத் தலைவர்! குடியரசுக் கட்சித் தலைவர்! ஆங்கிலோ - இந்திய வகுப்பினரின் தலைவர் பிராங் அந்தணி! சுதந்திரக் கட்சித்

தலைவர் மசானி, ரங்கா! முஸலிம்லீக் தலைவர் முகமது இஸ்மாயில்! சீக்கியத் தலைவர்கள்! அகில இந்திய காங்கிரஸ் தலைவர் காமராஜர், லால்பகதூர். அமைச்சர் அவையினரான நந்தா, சுப்பிரமணியம், இந்திராகாந்தி, சபாநாயகர் ஹுக்கும்சிங்! இப்படி பல தலைவர்கள். நானும் இருந்தேன்.

இப்படி ஒரு மன்றம் அமைய முடியும் என்றே அயூப்கான் எண்ணியிருந்திருக்க முடியாது; ஏனெனில் இவர்களில் பலர் சில நாட்களுக்கு முன்பு லால்பகதூர் சர்க்கார்மீது நம்பிக்கை இல்லை என்று தெரிவித்தவர்கள்.

ஆனால், ஒன்றுபடுகிறார்கள் - வேற்றுமைகளை மறக்கி றார்கள் - எப்படி? புதிர் ஒன்றுமில்லை ஜனநாயகவாதிகளுக்கு அரசியல் தெளிவு இருக்கிறது. கட்சி - சர்க்கார். நாடு - என்பனபற்றிய தெளிவு நன்றாக இருக்கிறது. எல்லாவற்றுக்கும்

அடிப்படை நாடு! நாடு நலம் பெறத்தான் சர்க்கார். அந்த சர்க்கார் நல்ல முறையில் அமைந்திட வழிகாட்டத்தான் கட்சிகள்! வழி அமைப்பதிலேதான் கட்சிகளுக்குள் கருத்து வேறுபாடுகள், வேற்றுமைகள், பூசல்கள், போட்டிகள்.

ஆனால், நாடு எனும் அடிப்படை வலிவும் பொலிவும் உள்ளதாக இருந்தாக வேண்டும். அதற்கு ஊறு விளைவிப்பவன் எவனெனினும் அவனை எதிர்த்தொழித்திடும் கடமை எல்லாக் கட்சிகளுக்கும் உண்டு. அந்தக் கடமையாற்றுவதிலே, கட்சிகள் வேற்றுமைகளை மறந்து ஒன்றுபட்டு நின்றே தீரும், இதுவே ஜனநாயகத்தில் உள்ள வலிவு, இருப்பு!! இது எத்தகைய வலிவு என்பதனை, இன்ற நாடே கட்சிப் பாகுபாடுகளைத் தூக்கித் தொலைவிலே வைத்துவிட்டு, ஒன்றுபட்டு நிற்பதிலிருந்து, உணர்ந்து

கொள்ளலாம் - தெளிவுள்ளவர்கள் - வெறும் தேசம் ஆள்பவர்களால் இந்தத் தெளிவைப் பெறமுடியாது.

தாங்கள் மிக நியாயமானது என்று நம்பிடும் கொள்கை வெற்றிக்காக நடத்தத் திட்டமிட்டிருந்த கிளர்ச்சிகளைப் பல கட்சியினர் நாடு இன்றுள்ள நிலையில் கூடாது என்று நிறுத்தி வைத்துவிட்டனர்.

நாடு பகைவர்களால் தாக்கப்படக் கூடும் என்ற சூழ்நிலையைக் கருதி. நமது கழகம் எந்தவிதமான கிளர்ச்சிகளிலும் ஈடுபடப் போவதில்லை என்று ஏற்கனவே அறிக்கை மூலம் தெளிவுபடுத்தி இருக்கிறேன் என்று அந்தக் கூட்டத்தில் நானும் எடுத்துரைத்தேன்.

உணவுப் பிரச்சினை, தொழிலாளர் உரிமைப் பிரச்சினை, மொழிப் பிரச்சினை, ஊதிய உயர்வுப் பிரச்சினை என்பவைகள்

முக்கியமானவை என்ற போதிலும், நாட்டுப் பாதுகாப்புப் பிரச்சினைக்கே முதலிடம்; அந்தப் பிரச்சினையில் ஈடுபட வேண்டிய நிலை எழுந்துள்ளபோது மற்றப் பிரச்சினைகளுக்கு இடம் இல்லை என்பதனை உணர்ந்து எல்லாக் கட்சிகளும் செயல்பட்டு வருகின்றன. இந்தத் துறையிலே, தம்பி! நமது கழகம் செம்மையாகப் பணியாற்றும் என்பதிலே எனக்கு நிரம்ப நம்பிக்கை உண்டு. அதற்கேற்ற முறையில், கழகச் செயல் முறையை வகுத்துக் கொள்ளக் கேட்டுக்கொள்கிறேன்.

கட்சிகளுக்குள் உள்ள வேறுபாடுகளை எடுத்துப் பேசிக் கொண்டிருப்பது, இப்போது பொருத்தமற்றது, பொருளற்றது, பொல்லாங்கை விளைவிக்கக் கூடியது.

மக்களுடைய நேரமும் நினைப்பும் இன்று பல்வேறு பிரச்சினைகளிலே செலவிடப்படக் கூடாது; சிதறவிடக் கூடாது. நேரமத்தனையும்

நினைப்பு அவ்வளவும், ஆற்றலத்தனையும் வசதிகள் அனைத்தும், நாட்டுக்கு வந்துள்ள ஆபத்தை முறியடித்திடும் கடமைக்காகவே பயன்படுத்தப்பட வேண்டும்.

ஆளுங்கட்சியிடம் எமக்கு நிரம்பக் கருத்து வேறுபாடுகள் உண்டு; பல பிரச்சினைகளுக்குப் பரிகாரம் கண்டாக வேண்டி இருக்கிறது. ஆனால் இது அல்ல கணக்குப் பார்க்கும் காலம்: இப்போது நமக்குள்ளது ஒரே பணி, நாட்டைக் காத்திடும் பணி; அதிலே எனது கழகம் லால்பகதூர் சர்க்காருடன் முழு அளவில் ஒத்துழைக்கும் என்று அன்றைய கூட்டத்திலே கூறினேன். நான் எண்ணுவது போலவேதான் கழகத் தோழர்கள் அனைவரும் எண்ணுவார்கள் என்பதனை நன்கு அறிந்திருக்கிறேன். சீனன் படை எடுத்த நாட்களில், கட்சிக் காரியங்களை மூட்டை கட்டி ஒருபுறம்

எடுத்து வைத்துவிட்டு, போர் நடாத்திட ஆதரவு திரட்டிட நம்மால் இயன்றதனைச் செய்திருக்கின்றோம். அதுபோலவே இது போதும். அன்று இருந்ததைவிட இன்று போர் விரிவான அளவிலே அமைந்துவிட்டிருக்கிறது.

போரின் விரிவும் வேகமும், தன்மையும், நாமாக உண்டாக்கிக் கொண்டதல்ல; பாகிஸ்தானிய அதிபர்களின் நோக்கமும் போக்கும், அவர்கள் ஏவிடும் படைகளின் பாய்ச்சலும் எவ்விதம் அமைகிறதோ, அதற்கு ஏற்றவிதமாக; நமது போர்முறை அமைய வேண்டியிருக்கிறது.

காஷ்மீரில் நுழைபவர்கள் பாகிஸ்தானிகள் அல்ல; விடுதலை விரும்பிகள் என்று பசப்பிய நிலையிலிருந்து பாகிஸ்தான் வெளிப்படையாகவே பெரும்படையை ஏவி, காஷ்மீர் பகுதியைத் தாக்கிய பிறகே, இந்தியத் துருப்பு,

பாகிஸ்தான் அரண்களைத் தாக்கும் திட்டத்தை மேற்கொண்டது.

பாம்புகள் வருகின்றன! தடியடிபட்டுச் சாகின்றன! ஆனாலும், மேலும் பல பாம்புகள் வந்தபடி உள்ளன என்றால், வருகிற பாம்புகளை அடித்துக் கொல்லுவதுடன் எந்தப் புற்றிலிருந்து இந்தப் பாம்புகள் கிளம்புகின்றன என்று கண்டுபிடித்து, அந்தப் புற்றினை அழித்திட வேண்டாமோ! இல்லையெனில் காலமெல்லாம், தடி தூக்கிக் கொண்டு, எந்தப் பக்கம் பாம்பு வருகிறது என்று பார்த்தபடி அல்லவா இருக்க வேண்டி நேரிடும்! வேறு வேலைக்கே நேரம் இருக்காதே.

ஆகவேதான் புற்றுகளை அழித்திடப் படைகள் அனுப்பப்பட்டன!

ஒரு புற்று அழிக்கப்பட்டதும், வேறோர்

புற்றிலிருந்து பாம்பு கிளம்பினால் என் செய்வது? புற்றுகளை ஒன்று விடாமல் அழித்திட வேண்டும். அது மட்டுமல்ல, இத்தனை புற்றுகளை மூடி மறைத்துக் கொண்டுள்ள புதர்களை அழித்தாக வேண்டும்.

லாகூர், சியால்காட், பார்மர் போன்ற இடங்களிலே துருப்புகள் எடுத்துவரும் நடவடிக்கை, புற்றுகள் உள்ள புதர்களை அழித்திடும் செயலுக்கு ஒப்பானதாகும்.

லால்பகதூர் மிகத் தெளிவாகத் கூறிவிட்டிருக்கிறார். நமது நோக்கம் பாகிஸ்தான் மீது படை எடுத்து, முறியடித்து அதனை நம்முடையது ஆக்கிக் கொள்வது அல்ல என்று.

பாகிஸ்தான் பகுதிக்குள் படைகள் சென்று போரிடுகின்றன என்றால், அந்த

மண்ணுக்காக அல்ல; அங்கிருந்து தளம் அமைத்துக் கொண்டு பாகிஸ்தானியப் படைகள் இந்தியா மீது பாய்வதைத் தடுத்திட, அந்தத் திட்டத்தை வெட்டி வீழ்த்திட.

தடுப்பு நடவடிக்கையாகவே இது மேற்கொள்ளப்பட்டிருக் கிறதேயன்றி, நாடு பிடிக்கும் நப்பாசை காரணமாக அல்ல! இந்த நடவடிக்கையும், பாகிஸ்தான் பயங்கரமான திட்டத்துடன் இந்தியா மீது தாக்குதலை நடத்தி, காஷ்மீரில் புதிய இடங்களைப் பிடித்துக் கொண்டதனைக் கண்ட பிறகே மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

ஒவ்வொரு முனையிலும், பாகிஸ்தானின் சதித் திட்டம் உருவெடுக்கப் போகிறது என்பதற்கான அறிகுறிகள் தென்பட்ட பிறகே நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

பாகிஸ்தானை நடத்திச் செல்லும் போர்

வெறியர்கள், பெரிய அளவு படைகொண்டு தாக்கிப் பார்த்துத் தோற்றோடினார்கள். இப்போது ஒரே நேரத்தில் பல முனைகளிலே போர் துவக்கி, வெற்றி கிட்டுமா என்று பார்க்கிறார்கள். பாதுகாப்பு அமைச்சர் சவான் கூறியுள்ளார், எத்தனை போர் முனைகளை ஏற்படுத்திக் கொள்ளப் பாகிஸ்தான் துணிந்தாலும், அத்தனை முனைகளிலும், எதிர்த்து நின்று போரிட்டு வெற்றி பெற்றிடும் வலிவு நமது படைகளுக்கு உண்டு என்று.

சவான் கூறியுள்ளபடி, ஒவ்வொரு முனையிலும், பாகிஸ்தானே முதலில் வம்புக்கு வருகிறது. களத்திலே நமது வீரர்கள் காட்டிடும் ஆற்றலின் முன்பு தாக்குப் பிடிக்க முடியாமல் திணறுகிறது.

இரண்டாம் உலகப் போரின்போது, பெரும் பங்கேற்று, ஆற்றல் மிக்கவர்கள் என்ற புகழ் பெற்ற தளபதிகளும், படை வீரர்களும்,

இந்திய வரிசையில் நிரம்ப உள்ளனர். படைத் தலைவர் சவுத்ரி, டாங்கிப் போரில் நிபுணர் என்று கூறுகிறார்கள். இரண்டாம் உலகப் பெரும்போரில் 16-ஆம் எண் டாங்கிப் படையை நடத்தி வீர வெற்றிகள் பெற்றவர்; குறிப்பாக, பர்மா களத்தில் ஐதராபாத், கோவா நடவடிக்கைகளில் வீர வெற்றி பெற்றவரும் சவுத்ரியே! சீனப்படை நமது நாட்டைச் சின்னாபின்னப்படுத்திவிடுமோ என்ற அச்சம் ஏற்பட்டபோது, சவுத்ரியைப் படைத் தலைவராக்கினர்.

அந்த நாட்களில், இன்று பாகிஸ்தானின் சர்வாதி காரியாக உள்ள அயூப்கான் கீர்த்திமிக்கவ ராகவோ, முதல் வரிசையின ராகவோ இருந்தவரும் அல்ல! எனவே, அவரால் நடத்திச் செல்லப்படும் படையினர் அழிவைத் தான் காண்கின்றனர்.

திட்டங்கள் தோற்கடிக்கப்பட்டுப்

போனதால் திகைத்துப் போயுள்ள அயூப்கான் இனி நாட்டு மக்களைப் பீதி கொள்ளச் செய்திடும், திடீர் தாக்குதல்களிலும், சதிகாரர்களை ஏவி நாசவேலை நடத்துவதிலும், பாதுகாப்பற்ற குடிமக்கள் மீது குண்டுகள் வீசிடும் விமானத் தாக்குதல் நடத்துவதிலும் மும்முரமாகக் கூடும். அந்தச் சமயத்தில் தம்பி! நாட்டு மக்களின் மனம் குழம்பாத நிலையை ஏற்படுத்தி, பாதுகாப்புத் தேடிடும் செயலில், சர்க்கார் மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு உனது முழு ஒத்துழைப்பைத் தந்திட முன் வரவேண்டும். பணம் திரட்டித் தருவதும், குருதிக் கொடை அளிப்பதும், ஊர்ப் பாதுகாப்புப் படையில் பணியாற்றுவதும், நொந்தவர்க்கு இதமளிப்பதுமான தொண்டாற்றுவதில், நமது கழகத் தோழர்கள், கட்சிப் பாகுபாடு மறந்து மற்றவர்களுடன் கூடி

நின்று நற்பணியாற்ற வேண்டும்.

நாடு பாதுகாத்திட வீரர்கள் உயிரையும் துச்சமென்று எண்ணிப் போரிலே ஈடுபட்டிருக்கும் வேளையில், போர்ச் சூழ்நிலையைச் சுயநலத்துக்குப் பயன்படுத்திக் கொண்டு, கொள்ளை இலாபம் அடிக்கவும், கள்ள வாணிபம் செய்யவும், விலைகளை ஏற்றிவிடவும் சிலர் ஈடுபடக்கூடும். இதுபோன்ற துரோகச் செயல், நமது வீரர்களின் முதுகிலே கத்தி கொண்டு குத்துவது போன்ற ஈனச் செயலாகும். இது விஷயத்திலே மிக விழிப்பாக இருக்க வேண்டும். விமானத் தாக்குதலின்போது, பீதி ஏற்படாது பார்த்துக் கொள்வதும், விளக்கணைப்பு முறைப்படி நடந்திடச் செய்வதும், பாதுகாப்புக் குழிகள் அமைத்துத் தருவதும், சிறு தாக்குதல் களுக்கு ஆளானவர்களுக்கு முதலுதவி

பெற்றளிப்பதும், இன்று முதல் தம்பி! நீ மேற்கொள்ள வேண்டிய தொண்டு என்பதனை மறவாதே. சமூகத்தின் எந்தவிதமான சலசலப்பும், பரபரப்பும், ஒற்றுமைக் குலைவும் ஏற்படக் கூடாது. ஒரு உன்னதமான ஒற்றுமை உணர்ச்சி மலர வேண்டும். அதற்காவன செய்திட முனைந்திடு. வதந்திகள், வீண் விவாதங்கள், இட்டுக் கட்டுதல், இவை அறவே தவிர்க்கப்பட வேண்டும். இவை சமூகக் கட்டினைக் குலைத்துவிடக் கூடியவை. எல்லாவற்றுக்கும் மேலாக வெற்றி நமது பக்கமே என்ற நல்ல நம்பிக்கையுடனும் போர்முனையில் வெற்றி தேடித்தரப் படைகளும், ராஜதந்திர முனையில் வெற்றி ஈட்டிடத் தலைவர்களும் ஆற்றலுடன் உள்ளனர்; அவை பற்றி நாம் துளியும் கலக்கம் கொள்ளத் தேவையில்லை; நாம் சமூகமுனை செம்மையாக இருந்திடச் செய்திடல் வேண்டும்

என்ற நோக்கத்துடன் பணியாற்றி வர வேண்டும்.

வீரர்கள் உயிரையே அர்ப்பணித்துவரும் நாட்களில், நம்மில் ஒவ்வொருவரும், வெற்றிக்காக, நமது நலன்களில் எதனை விட்டுக் கொடுக்க நேரிடினும் மகிழ்ச்சியுடன், அந்தக் கடமையை ஆற்றிட வேண்டும்.

போர் நீடித்திடின் பல பண்டங்கள் பற்றாக்குறையாகிடக் கூடும், வாழ்க்கை வசதிகள் குறையலாம்; தேவைக்கு ஏற்ற அளவு பண்டம் கிடைக்காமற் போகலாம். இவைகளைப் பொறுத்துக் கொள்ளப் பயிற்சி பெற்றிட வேண்டும் இது நாம் செய்யக் கூடிய குறைந்த அளவு தியாகம்! படை வீரர்கள், குண்டுக்கு மார்காட்டி நிற்கிறார்கள், மானம் காத்திட, மண்ணைக் காத்திட!

ஒளிவிளக்குகளும் ஒய்யார விழாக்களும்,

சுவைமிக்க விருந்துகளும் கேளிக்கைகளும் அறவே நீக்கப்பட வேண்டும்; வீரர்கள் களத்திலே நிற்கின்றனர், குண்டு வீச்சுக்கிடையில். இந்தச் சமயம் சொகுசான வாழ்க்கை தேடுபவன், மனித இதயம் படைத்தவன் அல்ல.

பற்பல நாடுகளில் ஒரு தலைமுறையில் இருமுறை போர் நடைபெற்றதைக் கண்டவர்களும், அதிலே ஈடுபட்டவர்களும், மகனை இழந்த மாதாவும் கணவனை இழந்த காரிகையும், கரமிழந்தோன், கண்ணிழந்தோன், முடமானோன் என்போர் உளர், நெருப்பாற்றில் நீந்தி வெளிவந்தோர். நமக்கு அதுபோன்றதோர் அனுபவம் இதுவரையில் ஏற்பட்டதில்லை. முன்பு நடைபெற்ற போர்கள் எங்கோ நெடுந்தொலைவில்! இப்போது இங்கேயே!

தோல்வி தாக்கிடும் நிலையில்

அயூப்கானின் கண்கள் எந்தெந்த ஊர்களின் மீது பாய்ந்திடுமோ, கூறுவதற்கில்லை, ஆனால், எது நேர்ந்திடினும், ஆண்மையுடன் தாங்கிக் கொள்ள வேண்டும். அதற்கேற்ற ஆற்றல் நம்மிடம் நிரம்ப உண்டு. தமிழ் இலக்கியம் இதற்கான சான்று பல காட்டுகின்றன.

போரினை விரிவான அளவில் தொடர்ந்து நடத்தியாக வேண்டும் என்பதல்ல நமது நோக்கம். பாகிஸ்தானைப் பிடிக்கவும் நடப்பதல்ல இந்தப் போர்; பாகிஸ்தான் மக்களிடம் பகை கொண்டுமல்ல; பாகிஸ்தானில் கொட்டமடிக்கும் கும்பலின் கெடுமதியை ஒழித்துக் கட்ட. போர் மூட்டி நமது நாட்டினைக் கெடுத்திட, பிடித்திட முனையும் போக்கினை ஒழித்திட, நடத்தப்படுவதே இந்தப் போர். இதனை அரசு சார்பில் லால்பகதூர் தெளிவுபடுத்திவிட்டார். எனினும், தெளிவு

பெறாததுபோல நடிக்கின்றன வல்லரசுகள். போரை நிறுத்துக என்று புத்திமதி கலந்த வேண்டுகோளை விடுத்தபடி உள்ளன.

போர் நிறுத்தப்படும் - எப்போது? போரை மூட்டி விட்ட குற்றம் இழைத்தது பாகிஸ்தான் என்று உலக மன்றம் அறிவிக்க வேண்டும், கண்டன நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும்; இனியும் இந்தப் போக்கில் நடந்து கொள்ளுவதில்லை என்ற உத்திரவாதம் பாகிஸ்தான் தர வேண்டும்; உலக நாடுகள் மன்றம் அதனை உறுதிப்படுத்த வேண்டும். இதனைத்தான் ஊதாண்டிடமும் லால்பகதூர் கூறியிருக்கிறார்.

காஷ்மீரில் வாக்கெடுப்பு நடத்துவதாக ஒப்புக் கொண்டாக வேண்டும் என்று பாகிஸ்தான் அதிபரும், அவரை ஆட்டிப் படைப்பதாகக் கூறப்படும் புட்டோவும் கூறுகின்றனராம்.

இப்போது மூண்டுவிட்டுள்ள தாக்குதல் காஷ்மீர் வாக்கெடுப்புப் பிரச்சினை குறித்து ஏற்பட்டதல்ல.

காஷ்மீரில் பாகிஸ்தான் படை கொண்டு தாக்கிற்று. சர்வதேச எல்லைகளைப் பிளந்தது - இந்திய பூபாகத்தில் நுழைந்து கைப்பற்றிக் கொண்டது; இந்த அக்கிரமத்தை முறியடிக்க, ஆக்கிரமிப்பை அழித்திட, நாட்டு எல்லையைக் காத்திட, தன்மானம் காத்திட, இந்தியா "பதிலடி' கொடுத்திட முனைந்தது.

தாக்குதல் நிறுத்தப்பட வேண்டுமானால், ஒரே வழி, ஒரே நிபந்தனை, இந்தத் தாக்குதலை யார் துவக்கியது என்பது பற்றித் "தீர்ப்பு' அளித்து, அதற்கு ஏற்ற கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட்டாக வேண்டும். பாகிஸ்தானே குற்றம் இழைத்திருக்கிறது - தாக்குதலைத் துவக்கிற்று - பெரும்படை கொண்டு - அமெரிக்கா வேறு நோக்கத்துடன்

தந்த வலிவு மிக்க போர்க் கருவிகளைக் கொண்டு தாக்குதலை நடத்திற்று.

இதுபற்றி இனித்தான் கண்டறிய வேண்டும் என்ற நிலை கூட இல்லை; ஏற்கனவே, எல்லைக் கோட்டின் பார்வையாளர் குழுத் தலைவர் ஜெனரல் நிம்மோ இதனைக் கண்டறிந்து, பாகிஸ்தானே தாக்குதலைத் துவக்கிற்று என்று தமது அறிக்கையில் தெளிவுபடுத்தி விட்டிருக்கிறார். இந்த அறிக்கை ஊதாண்டிடம் தரப்பட்டு விட்டிருக்கிறது. எனவே பாகிஸ்தானே குற்றம் இழைத்திருக்கிறது என்பது பற்றி ஐயம் எழக்கூடக் காரணம் இல்லை.

எனவேதான், தாக்குதலை நிறுத்திட ஒரே நிபந்தனை, நியாயமான நிபந்தனை, பாகிஸ்தான் குற்றம் இழைத்திருக் கிறது என்று அறிவிப்பதுதான், அதன் தொடர்ச்சியான நடவடிக்கை களை உலக

நாடுகள் மன்றம் மேற்கொள்ளு வதுதான் என்று லால்பகதூர் அறிவித்திருக்கிறார்.

காஷ்மீரில் வாக்கெடுப்பு என்பது தனியான பிரச்சினை காலத்தால் தேய்ந்து மாய்ந்துபோன பிரச்சினை. அதனையும் இன்றைய தாக்குதல் பிரச்சினையையும் ஒன்றாக இணைப்பது உயிரற்ற சடலத்துக்கு ஒய்யார அலங்காரம் செய்வதற்கு ஒப்பாகும்.

போர் வெறி கொண்ட அதிபர்களிடம் சிக்கியுள்ள ஒரு நாடு, அண்டை நாட்டின்மீது அக்கிரமமாகப் பாய்கிறது, தாக்குகிறது; தாக்குதலை முறியடிக்க, தாக்குதலுக்கு ஆளான நாடு திருப்பித் தாக்குகிறது; இந்தத் தாக்குதல் பெரும் போராகி உலகுக்கே பேராபத்தை மூட்டி விடுமே என்று கவலை கொண்டு சமாதானம் பேச வருபவர்கள், இருநாடுகளில், எந்த நாடு தாக்குதலைத் துவக்கியது என்று அறிந்து அந்த நாட்டைக்

கண்டிக்கக் கூடத் தைரியம் அற்றவர்களாக, அந்த அளவுக்குக் கூட நேர்மையில் நாட்டம் காட்ட முடியாதவர்களாக இருந்திடின், உலகில் அறம் தழைப்பது எங்ஙனம்? உலக நாடுகள் மன்றம் உருப்படுவது எவ்விதம்?

சிக்கலற்றுத் தெரிகிறது, பாகிஸ்தானே இந்தியாவைத் தாக்கிற்று என்பது; பாகிஸ்தான், முதலில் பசப்பிற்று, பிறகு ஆமாம்! தாக்கினோம்! என்று கூடக் கொக்கரித்தது. எனினும், உலக நாடுகள் மன்றம் இந்த உண்மையை ஏற்றுக் கொண்டு மற்ற நடவடிக்கையைத் தொடர்ந்திட, மனமற்று இருப்பது வியப்பை மட்டுமல்ல, வேதனையையும் தருவதாக இருக்கிறது.

தாக்குதலைப் பாகிஸ்தான் நடத்தத் தொடங்கிய போதே உலக நாடுகள் மன்றம் அந்தச் செயலைக் கண்டித்துக் கடும் நடவடிக்கை எடுத்தேனும் பாகிஸ்தான்

திட்டத்தை முறியடிப்போம் என்று துணிந்து அறிவித் திருந்தால், இந்தத் தாக்குதல், போர் அளவு ஆகி இருந்திருக்காது.

அந்தத் துணிவும் உலக நாடுகள் மன்றத்துக்கு எழவில்லை. துணிவு எழாதது மட்டுமல்ல, தூய்மையான நோக்கமும் எழவில்லை. போர் முற்றிடும் வரையில் அக்கரையற்றுக் கிடந்துவிட்டு, அக்கிரமம் செய்தோன் அடிபட்டு அலறி, அக்கிரமம் செய்வதற்கான வலிவை இழந்து வெறிபிடித்து அரற்றும் வேளையில், ஊதாண்டை அனுப்பி, சமரசம் பேசச் சொல்லுகிறது.

தாக்குதல் துவக்கப்பட்டதும், உலகிலே பல்வேறு நாடுகளிலே உள்ள நாளேடுகளும் பாகிஸ்தானே குற்றம் இழைத்திருக்கிறது, அமைதியாக இருந்துவந்த முனையில் அமளியை மூட்டியிருக்கிறது, போர்க்கருவிகளைக்

கொடுத்து, படையினரை, மாறுவேடத்தில் அனுப்பி வைத்திருக்கிறது என்பது பற்றித் தெளிவாகத் தெரிவித்தன; கண்டிக்கவும் செய்தன.

ஆகஸ்ட்டுத் திங்கள் 12-ம் நாளன்றே, சிகாகோ நாட் செய்தித்தாள் "பாகிஸ்தானியர், போர் நிறுத்த ஒப்பந்தக் கோடு அமைந்துள்ள 475 மைல் கொண்ட முனையில், பிடாரிகளை அனுப்பி வைத்திருக்கிறது. 1947-ம் ஆண்டுக்குப் பிறகு நடைபெற்ற சம்பவங்களில் இது மிகக் கவலை தருவதான சம்பவமாகும்'' என்று தெரிவித்திருக்கிறது.

ஆஸ்திரேலிய நாளேடான "சிட்னி டெயிலி டெலிகிராப்' ஆகஸ்ட்டு 13லில், எழுதும் போது,"நடைபெறுவது பாகிஸ்தானின் தாக்குதல் அல்ல, காஷ்மீர் மக்கள் புரட்சி நடத்துகிறார்கள் என்று பாகிஸ்தான் கூறுவதை நம்புவதற்கு இல்லை,

ஏமாளித் தனம் மிகுந்திருந்தாலொழிய; காஷ்மீர நாட்டுப் பாமரர், உழவர்கள், எங்கிருந்து ஸ்டென் துப்பாக்கிகளையும் வெடிகுண்டுகளையும் பெற்றிருப்பார்கள்! என்று கேட்டு கேலியால் தாக்கியிருக்கிறது.

ஆகஸ்ட்டு 14-ம் நாள் அமெரிக்க ஏடான "நியூயார்க் டைம்ஸ்' பிடிபட்டவர்கள் காஷ்மீரிமொழி பேசவில்லை. பஞ்சாபி மொழியோ அதுபோன்ற வேறு மொழியோ பேசுகிறார்கள் என்பதனைச் சுட்டிக்காட்டி, தாக்குதலை நடத்துபவர்கள் பாகிஸ்தானியரே என்பதனை வெட்டவெளிச்சமாக்கி யிருக்கிறது.

காஷ்மீர் மக்கள் புரட்சி செய்கிறார்கள், தாக்குதல் நடத்துகிறார்கள் என்பதற்குத் துளியும் ஆதாரம் இல்லை இந்தியாவுக்கும் காஷ்மீர் சர்க்காருக்கும் வேண்டாதவர்களாக உள்ள வட்டாரத்தினர்கூட, இதனை நம்பத்

தயாராக இல்லை என்று பால்டிமூர்சன் என்ற ஏடு எழுதிற்று.

காஷ்மீர் மக்கள், தாக்குதல்காரர்களிடம் எவ்வளவு பரிவு காட்டுகிறார்கள் என்பது, அவர்கள் தந்துவரும் தகவல்களின் துணை கொண்டு, எத்தனை வேகமாக, "பிடாரிகள்' நித்தநித்தம் பிடிபட்டுவருகிறார்கள் என்பதிலிருந்தே விளங்குகிறதே! என்று நையாண்டி செய்திருக்கிறது கிருஸ்தியன் சயன்ஸ் மானிடர் எனும் ஏடு.

படைகொண்டுதான் பாகிஸ்தான் தாக்குதலை நடத்தி வருகிறது என்பதிலே துளியும் ஐயமில்லை என்ற கருத்துப்பட லண்டன் டைம்ஸ் எழுதிற்று.

கிளாஸ்கோ ஹெரால்டு, "தாக்குதல் திட்டம் குலைந்து விட்டது, இந்தியாவில் மட்டுமல்ல, வேறு எங்கும் கூட, பாகிஸ்தானின்

வாதத்தை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். அயூப்கான் தன் மீது படிந்துவிட்டுள்ள கறையைத் துடைத்துக் கொள்ளவே முடியாது என்று எழுதிற்று.

பிடிபட்டவர்கள் தாம் பாகிஸ்தான் படையில் பல ஆண்டுகள் இருந்துவருபவர்கள் என்பதனை ஒப்புக் கொண்டுள்ளனர் என்பதனை பால்டிமூர்சன் எடுத்துக் காட்டிற்று.

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் நட்பு காட்டி வரும் எமக்கே கட்ச் ஒப்பந்தம் நேரிட்ட நேரத்திலேயே இந்தத் தாக்குதல் தொடுக்கப்பட்டிருப்பது ஆத்திரமூட்டுகிறது. இந்தத் தாக்குதலுக்கு நான் பொறுப்பாளியல்ல என்று பாகிஸ்தான், கூறுவதை ஒப்புக் கொள்ளவே முடியாது பாகிஸ்தான், சமாதானத்தை விரும்பினால், உடனே இந்தப் பிடாரித் தாக்குதலைக் கைவிட்டுவிட வேண்டும், கட்டுக்குக் கொண்டு

வர வேண்டும் என்று ஆஸ்திரேலிய ஏடான கான்பெரா டைம்ஸ் எழுதிற்று.

கட்ச் சம்பவத்திற்குப் பிறகு, தொடர்ந்து காஷ்மீரில் தாக்குதல்! இந்தியாவின் பொறுமை உணர்ச்சிக்கு மிகப்பெரிய சோதனை இது என்று பாரின் இதழ் லீமாண்டி எழுதிற்று.

கட்ச் பிரச்சினையில் நடுவர்கள் தீர்ப்பு தனக்குச் சாதகமாக இருக்காது என்று உணர்ந்த பாகிஸ்தான் கட்ச் ஒப்பந்தத்தை இந்தியப் பாராளுமன்றம் ரத்து செய்யட்டும். அந்த அளவு ஆத்திரம் எழத்தக்க ஒரு புதுத் தாக்குதலை நடத்திடுவோம் என்ற கெடுமதியுடன்தான் காஷ்மீரில் தாக்குதலை நடத்திற்று என்று மான்செஸ்டர் கார்டியன் ஆகஸ்ட்டு 12-லேயே எழுதிற்று.

இத்தனை ஏடுகளும், புது டில்லியில்

அச்சிடப்படுபவைகளா! இவ்வளவு தெளிவாக அந்த ஏடுகள் பாகிஸ்தானே குற்றம் செய்தது என்பதனை, துவக்கத்திலேயே ஆகஸ்ட்டுத் திங்களிலேயே எடுத்துக் காட்டியுள்ள போது, பாகிஸ்தான் குற்றம் இழைத்தது என்று நேர்மையுடன் ஒப்புக் கொள்ள, உலக நாடுகள் மன்றம் தயக்கம் காட்டுவானேன்?

பாகிஸ்தான், சிறு சிறு தாக்குதல்களைத் தொடர்ந்து நடத்தியபோது, உலகப் பெரு நாடுகள் வாய்மூடிக் கிடந்தன. கேட்பார் எவர்? என்ற எண்ணம் தடித்தது; அதன் பிறகே பாகிஸ்தான், "ச்சம்' முனையில் மிகப்பெரிய படையையே அனுப்பிற்று. இன்று அந்தப் படை முறியடிக்கப்பட்டு, நிலை குலைந்து ஓடுகிறது.

தம்பி! நான் ஏற்கனவே கூறியபடி, போர்முனையைக் கவனித்துக் கொள்ள வீரர்கள் உளர்; ராஜதந்திர முனையைக் கவனித்துக் கொள்ள அரசுத் தலைவர்கள்

உளர். நாம் நமது முனையைக் கவனித்துக் கொள்ள வேண்டும். உலக நாடுகள் மன்றத்திலே இடம் பெற்றுள்ள வல்லரசுகள், நீதிக்குப் பரிந்து நிற்பவர்களாகக் காணோம். இந்தியா பெற்றுள்ள போராற்றல் அவர்களுக்கு ஒருவிதமான பொறாமை உணர்சியைத் தந்திருக்கக் கூடும் என்றுகூட எண்ணுகிறேன். எனவே, வல்லரசுகளான பிரிட்டனும் அமெரிக்காவும், தாங்கள் கூறிடும் யோசனையைக் கேட்டிட இந்தியா இணங்காவிட்டால், உதவிகளை நிறுத்தி விடுவதன் மூலம் ஒடுக்கி மடக்கி, இணங்கவைக்கலாம் என்று எண்ணுகின்றன. இதனை சோவியத் ஆதரிக்குமா என்பது பெரியதோர் கேள்விக்குறி. ஆதரிக்காது என்பதே என் கருத்து. எது எப்படி உருவெடித்திடினும், நாம் இங்கே நமக்குள்ளாகத் திரட்டிடும்

வலிவும், சமைத்துக் கொள்ளும் ஒற்றுமை உணர்வும், உரிமைக்காக எதனை இழந்திடவும் துணிந்திட வேண்டும் என்ற உள்ளுணர்வும் சரியான விதமாக அமைந்துவிடுமானால், வல்லரசுகளின் போக்குக் குறித்துப் பெரிதும் கவலை கொள்ளத் தேவையில்லை.

பாகிஸ்தானின் ராணுவயந்திரம் நொறுங்கிக் கொண்டு வருகிறது.

வல்லரசுகள் துணிந்து ராணுவத் தளவாட உதவி தர முன்வராது என்றே எண்ணுகிறேன்.

ஒரே ஒரு நம்பிக்கை அயூபுக்கு இருக்கிறது; சீனா உதவிக்கு வந்துவிடும்; புதிய போர்முனை உண்டாக்கிப் புதிய ஆபத்தை ஏற்படுத்தும் என்று.

சீனா, தன்னலத்தில் மிகுதியும் நாட்டம் கொண்ட நாடு. வியட்நாமில், அமெரிக்கா இவ்வளவு வெளிப்படையாகத் தாக்குதல்

நடத்தியும், வியட்நாம் களம்புகச் சீனா அஞ்சுகிறது. காரணம் சீனா நுழைந்தால், இரண்டில் ஒன்று பார்த்து விடுவது என்று அமெரிக்கா தயாராக இருப்பது சீனாவுக்குத் தெரியும்.

சின்னஞ்சிறு பார்மோசா தீவில் இருந்து கொண்டு சியாங்கேஷேக், சீனா என்னிடம்தான் என்று கூறுவதையே சகித்துக் கொண்டிருக்கிறது, சீனா! பார்மோசா மீது பாயவில்லை. காரணம்? அமெரிக்க கடற்படை தயாராக நிற்கிறது அகன்ற வாய்ப் பீரங்கிகளுடன் மட்டுமல்ல, அணுகுண்டுகளுடன்!!

எனவே, அயூபின் பக்கம் சீனா வந்துதான் தீரும் என்று கூறுவதற்கில்லை. அதிலும் அடிமேல் அடிவாங்கி, தன் ஆற்றலற்ற தன்மையை உலகுக்குக் காட்டிக் கொண்ட அயூபின் படைக்குப் பக்கம் நிற்க, சீனாவுக்கே

மனம் வராது. மூழ்கிக் கொண்டிருக்கும் கப்பலில் எவர் பயணம் செய்ய முன்வருவர்!

தம்பி! இவை என்னுடைய எண்ணங்கள் இவைகளுக்கு முற்றிலும் மாறாகக்கூட நிலைமைகள் உருவாகலாம். எனவே, நாட்டுப் பாதுகாப்புக்கான கடமை நம்முடையது என்ற உணர்வு ஒன்றுதான் நம்மைக் காப்பாற்றக் கூடியதுட என்று அறிந்து அதற்கு ஏற்றபடி நடந்திட வேண்டுகிறேன். இப்போதே வடிவமெடுத்துள்ள ஒற்றுமையும், அமைந்துள்ள மக்கள் முன்னணியும் பாராட்டுதலுக்குரிய வகையிலுள்ளன, மாணவர் அணி வகுப்பு சென்னையில் நடைபெற்றதும், முதலமைச்சர் பக்தவத்சலம் தலைமையில் பேரணி நடந்ததும் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்தது.

தம்பி! நாட்டுக்கு ஆபத்து என்ற நிலை பிறந்திடும் போது ஜனநாயகம் எத்தகைய

ஒற்றுமை உணர்ச்சியைப் பெற்றுத் தருகிறது பார்த்தனையா! பக்தவத்சலம் தலைமையில் மாணவர் பேரணி! லால்பகதூர் தலைமையில் சர்வகட்சிக் கூட்டணி! இவைகளைத் தொடர்ந்து,

சமூகத்தில் ஒன்றுபட்ட உணர்ச்சி.

சர்வகட்சிக் கூட்டணி.

பாதுகாப்புப் படை அமைப்பு.

வதந்திகள், பீதிகள் தடுப்பு.

வீரர்கட்கு வாழ்த்து, அவர் குடும்பத்தினர் நலன் பேணுதல்.

பாதுகாப்பு நிதி திரட்டித் தருதல்.

இரத்ததானம் தருவதை மேற்கொள்ளுதல்.

ஆடம்பரம், விழா, களியாட்டம் தவிர்த்தல்.

விளக்கணைப்பு விதிகளைக்

கடைப்பிடித்தல்.

தேவைகளைக் குறைத்துத் கொள்ளுதல்.

ஒவ்வொருவரும் ஏதாவதொரு பண்டம் உற்பத்தி செய்தளிக்க முன்வருதல்.

கட்சி மாச்சரியம் களைதல்.

விவாதத்துக்குரிய பிரச்சினைகளில் ஈடுபடாதிருத்தல்.

அமைதி! ஊக்கம்! தொண்டு! நம்பிக்கை!

என்பவைகளை வளரச் செய்தல்.

இம்முறையில் கட்டுப்பாட்டுடன் பணியாற்றி வந்திடுவோ மானால், தம்பி! வெற்றி நமதே என்பதில் ஐயமில்லை. காலம் உன்னை அழைக்கிறது, கடமையாற்றிட!

அன்புள்ள

அண்ணாதுரை

19-9-65

22. பகைவன் பணியலானான்

நம்பிக்கோட்டைச் செம்பிய மாதேவரின் மனக்குமுறல்

களம் காட்டும் காதைகள் பற்றி எழுத்தோவியங்கள்

தேவை

இலாபவேட்டை நோக்கத்தை விட்டுவிடுவதே நெறி

"எல்லாம் எல்லார்க்கும்' எனும் முறை அறிந்தவனே இறையவன்.

போர்க்காலத்தில் நாசவேலைக்காரருக்கு நாடு இடம் தரக்கூடாது.

தம்பி,

மன்னனாம் மன்னன்! மன்னன் மகனானதால் மன்னனானோன், திறமையாலா! நாட்டுக்கு ஒரு மன்னன்

தேவை என்பதால், மன்னனாக்கப்பட்டோன், மன்னர்க்கு வேண்டிய அறிவாற்றல் இருப்பதனாலா! மணிமுடி ஒளி விடுகிறது! கண்கள்? துளியாவது வீரஒளி காண்கிறோமா? வீரம் இருந்தால்தானே! கண் வழியாக வழிகிறது மமதை! மன்னன் என்பதால் அதனைக் கெம்பீரம் என்கிறார்கள் - புலவர்கள்கூட. மார்பிலே புரள்கின்றன விதவிதமான மாலைகள்; ஒரு வெற்றி மாலையையாவது பெற்றதுண்டா அந்த மார்பு! களமே கண்டதில்லை, பெயர் மட்டும் வெற்றி பல கண்டோன்! - என்பதாக. பொருளற்ற பட்டம்! பொறுத்துக் கொள்ள வேண்டி இருக்கிறது - மன்னன் ஆக்கப்பட்டுவிட்டானே, என்ன செய்வது! நாடு வாழ்ந்திட, தொழில் பெருகிட, செல்வம் மிகுந்திட, கலை வளர்ந்திட, செய்தது என்ன? உள்ளது உருக்குலைந்து போவதனைக் கூடத் தடுத்திட ஆற்றலற்று,

உள்ளதில் உருசிமிக்கவை எனக்கே என்று கூறிடும் குரல் மட்டும் கொண்டவனாக உள்ளான் - கொற்றவன் என்பது பட்டம்! மற்றவர் அதனை மறுத்திட இயலுமா - அவனோ மன்னன்!

கோட்டைகள் கலனாகிக் கிடக்கின்றன, கொத்தளங்கள் செம்மையாக இல்லை; அரண்களிலே பிளவு. அகழிகள் தூர்ந்து போன நிலையில் - என்று படைத் தலைவர்கள் கூறுகின்றனர் - என்னிடம்! மன்னனிடம் கூறுவதுதானே என்கிறேன்; மன்னனிடமா என்று கேட்கிறார்கள்! இவன் ஒரு மன்னனா என்று கேட்பது போலிருக்கிறது அவர்களின் முகக்குறி! இப்படி ஒரு மன்னன்! என்று எண்ணி எண்ணி எரிச்சல்பட வேண்டி இருக்கிறது.

வரி கேட்டுப் பெறுவதிலே மட்டும், வல்லவனாக இருக்கிறான் -

தொட்டதெற்கெல்லாம் வரி! - தொடர்ந்து வரி! - தொல்லைதரும் முறையிலே வரி! இவ்வளவா என்று கேட்போரும், எமக்கா என்று கவலைப்படுவோரும், எங்கிருந்து கட்டுவது என்று ஏக்கம் கொள்வோரும் நிரம்ப! பலர் என்னிடம் வந்து முறையிடுகிறார்கள்! என்னிடம்! மன்னனிடம் முறையிட வேண்டும், ஆனால் என்னிடம் முறையிடுகிறார்கள்! நீங்கள் சொல்லக்கூடாதா, நீங்களெல்லாந்தானே சொல்ல வேண்டும், நீங்களெல்லாம் சொன்னால் கூடவா கேட்கமாட்டார் என்று கூறுகிறார்கள்! சொல்வதைப் புரிந்து கொள்கிற திறமை கொண்டவன் மன்னனாக இருப்பதாக எண்ணிக் கொண்டு! சொல்வதைப் புரிந்து கொள்ளும் திறமை இருக்கிறதா என்பது கூட இருக்கட்டும் ஒருபுறம் - தெளிவளிக்க முடியும் எவ்வளவு

மந்த மதியினனுக்கும் - ஆனால், இந்த மன்னன், எதையாவது சொல்ல இடம் கொடுத்தால்தானே எதையாவது சொல்லத் தொடங்கிய உடன், கரம் காட்டுகிறான் நிறுத்து என்பதாக! கனைக்கிறான், கண்களை உருட்டுகிறான், எல்லாம் தெரியும் என்கிறான்! சொல்லாததற்கு முன்பாகவே, எல்லாம் தெரியும் என்கிறான்! என்ன செய்வது! எமது மன்னன் என்று நானுமல்லவா மற்றவர்களுடன் சேர்ந்து கூறவேண்டி இருக்கிறது, இத்தனை மண்டைக்கனம் மிகுந்தவனை.

மன்னனின் முறையை மக்களுக்கு ஏற்றதாக, அவர் நலன் காத்திடத்தக்கதாக மாற்றி அமைக்க வேண்டும் என்று கூறிடவே துணிவு வரவில்லை, பலருக்கு; மெள்ள மெள்ளத்தான் அந்தத் துணிவு பிறந்தது; வியந்திடத்தக்க அளவு வளர்ந்தது.

ஆயினும் என்ன? கலக்கம் கொண்டானோ? இல்லையே! கவலைப்படு வதாகக்கூடக் காட்டிக் கொள்ளவில்லை. எவரெவர் எதிர்ப்பு பேசுகிறார்கள் என்று கண்டறியச் செய்து, ஆசாபாசத்திற்கு அடிமைப்படக் கூடியவர்களை இழுத்துக் கொண்டு விட்டான். எக்காளமிட்டுக் கொண்டு வந்ததுகளெல்லாம் இளித்துக் கிடக்கின்றன! மன்னன் மன்னன்தான்! என்று தத்துவம் பேசுகின்றன. இவ்விதமான இயல்பு இருந்திடும் நாட்களில் மன்னன் மேற்கொண்டுள்ள முறைகளை மாற்றிடும் முயற்சியில் வெற்றி எங்ஙனம் கிடைத்திடும், முறை மாற வேண்டும் என்று என்னிடம் முறையிடுகிறார்கள். அனைவரும் சேர்ந்து பணியாற்றினால் மட்டுமே, முறையினை மாற்ற முடியும் என்று கூறி அழைத்தாலோ, அங்காடி வேலை மும்முரம் என்கிறான் ஒருவன்;

அரண்மனையின் அலங்கார வேலைக்கான ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டுவிட்டேன், என் செய்வது என்கிறான் மற்றொருவன்; புதிய நூலொன்றினை அரங்கேற்ற அரச மண்டபம் தந்திருக்கிறார்கள், அந்நிலையின் நான் எப்படிச் சேர முடியும் என்கிறார் இன்னொருவர் - ஒவ்வொருவருக்கு ஒவ்வொரு காரணம்!! மொத்தத்தில், தயக்கம், தடுமாற்றம்!! குறை கூற மட்டும் தயக்கமில்லை - என்னிடம் வந்து பேசுகிறார்கள்.

ஆத்திரம் ஆத்திரமாகப் பேசினார், நாடே கெடும்! வாழ்வே பாழ்படும்! என்றெல்லாம் அரிமானூரார்; ஆச்சரியப்பட்டுப் போனேன்! அடுத்த திங்கள் பார்க்கிறேன். அரசனுடைய அரண்மனைக் காவற்படைக்குக் கௌரவ தளபதியாகி விட்டிருக்கிறார்! இவர் போன்றாரை நம்பி என்ன செய்திட முடியும்!!

நாலு இடத்தில் சற்றுக் கொதிப்புடன்

பேசினால் போதும், அவர்களை நாடி வருகிறது பட்டம், பதவி, செல்வம், சீர்! உடனே அவர்களுக்கு "ராஜபக்தி' பொங்கி வழிகிறது, நான் என்ன செய்ய!!

□

கீர்த்தி மிக்க மரபினர்! அப்பழுக்கற்ற இயல்பினர்! பலருக்குப் பரிவு காட்டி வாழ்வு அளித்தவர்! களம் பல கண்டவர்! எவர் கரத்தையும் நம்பிப் பிழைத்திட வேண்டிய நிலையினர் அல்ல! ஆடம்பர வாழ்க்கை தேடி அலைபவரல்ல! அடிவருடிகளைத் தேடிக் கொள்பவருமல்ல! இளித்துக் கிடந்திட இசைபவருமல்ல. அரசர் அவையிலே இடம் கேட்பவரும் அல்ல; ஆங்கு இடம் பெற்றாரிடம் பொறாமை கொண்டவருமல்ல. உழவும் தொழிலும் அறிந்தவர்; உள்ளது போதும் என்ற நினைப்பினர்; ஊர் சீர்பட ஏதேனும் செய்திட வேண்டு மென்பதிலே பெருவிருப்பம்

கொண்டவர். அதற்குத் தக்கதாக அரசு மாற வேண்டும், மாற்றப்பட வேண்டும் என்பதிலே, மிகுந்த நாட்டம் கொண்டவர் நம்பிக்கோட்டைச் செம்பிய மாதேவர். அவருடைய மனக் குமுறலையே மேலே காண்கின்றோம், எனினும். . .

□

இளவரசன் தொட்டால், பூங்கொடி பொற்கொடி யாகும் என்பதனைக் கூறுவதுதானே. . .

கூற இடம் கொடுத்தால்தானே அந்தக் குலக்கொடி. . . இழுத்துவரச் சொல்லி எட்டு பேர்களை இப்போதே அனுப்புக! என் கட்டளை! இனி அந்தப் பெண்ணிடம், கொஞ்சப் போவதில்லை, கெஞ்சிடப் போவதுமில்லை! மஞ்சம் வந்தாக வேண்டும்! மன்னன் மகனுக்கு விருந்தாக வேண்டும்!

இது அரசனாகப் போகின்றவன் ஆணை! மந்திரியாக வேண்டும் என்ற விருப்பம் இருப்பின், இன்றிரவே, இந்த என் ஆணையை நிறைவேற்றிடுக!

இவ்விதம் கெடுமதி கொண்டு களியாட்டம் ஆடிடும் போக்கினன், இளவரசன். ஆனால், அத்தகையவனும். . .

□

உழைத்து உழைத்து உருக்குலைந்து போகிறோம், மாடாக உழைத்து ஓடாகிக் போகிறோம், ஏன் பிறந்தோம் என்ற ஏக்கம் தாக்கிடத் தத்தளிக்கிறோம் என்று கதறிக் கிடந்திடும் நிலையில் பாட்டாளி! ஆனால் அவனும். . .

நாட்டைத் தாக்கிடப் பகைவன் வந்திடும்போது,

எல்லையைத் தாண்டி எதிரிப் படை

நாட்டுக்குள்ளே பாய்ந்திடும்போது,

கோட்டைகளை இடித்திட, கொத்தளங்களைப் பிளந்திட, மாற்றான் படை வருகிறபோது,

அடித்து நொறுக்குகிறார்கள், அழிவை ஏவு கிறார்கள், அடிமை கொள்ள வருகின்றார்கள் அன்னிய நாட்டினர் நம் நாடு நோக்கி என்ற சேதி செந்தீயெனக் கிளம்பிடும்போது,

எடடா வாளினை! தொடடா போரினை! தாக்கிடக் கிளம்புக! தருக்கரைச் சாடுக! போரிட வந்திடுக! புயலெனக் கிளம்பிடுக! - என்று முழக்க மெழுப்பி, திரண்டெழுந்து சென்று, பகைப் படையினைத் தாக்கி, இன்னுயிர் இழந்திடவும் துணிந்து போரிட்டு, நாட்டைக் காத்திட, மானம் காத்திடவே முனைந்து நிற்பர்!

காவியம் புனைந்திட, ஓவியம் தீட்டிட,

கட்டிப் பொன்னைப் பெற்றுக் குவித்திட, காதலின்பத்தில் திளைத்திட இதுவல்ல நேரம்! எதிரியின் மார்புக்கு நேராக நம் ஈட்டியினைப் பாய்ச்சிட வேண்டிய நேரமிது! வேறு எது குறித்தும் நினைத்திட, கதைத்திட நேரமல்ல இது! எதிரியின் கால் நம் நாட்டு மண்ணில் பட்டுவிட்டது! நாட்டின் மாண்புக்குப் பங்கம் ஏற்பட்டுவிட்டது, பழி துடைப்போம்! பகை முடிப்போம்! என்று வீரவுரையாற்றி வாளொடு கிளம்புவர், வென்று திரும்புவர், பலர் வெஞ்சமரில் வீழ்ந்து படுவர். விந்தையா? வீரத்தின் இயல்பு!!

நாடு காத்திடும் நற்பண்பு கொண்டோர், நாட்டுக்கோர் ஆபத்து என்றதும், தத்தமது மனக்குமுறல், உல்லாச இயல்பு, சலிப்பு, தவிப்பு எனும் எதனையும் மறந்திடுவர்; நாட்டுக்கு வந்துற்ற ஆபத்தினைப் போக்கிடத் துடிதுடித் தெழுவர், வீரப் போரிடுவர்.

அன்றோர் நாள் இருந்த இயல்பு மட்டுமல்ல இது, என்றும் எழுந்திடும் இயல்பு!

இன்று நாட்டுக்கு ஆபத்து என்ற நிலை பிறந்ததும், ஆட்சி முறை தன்னில் மாற்றம் பல காண எண்ணி "மக்கள் மன்றமதில் பணியாற்றிடும் கட்சியினர் அனைவருமே இதற்கு இது நேரமல்ல! எதிரி நுழைந்துள்ளான் என்றுணர்ந்து ஆர்த்தெழுந் தார், பொங்குமாங் கடல்போல! புலிபோலப் பாய்கின்றார், புல்லர்களைச் சாடுகின்றார். புவியுள்ளோர் புதுமை இது! புதுமை இது! எனப் புகல்கின்றார்!

பிற நாடுகளிலே நடைபெற்ற போர் குறித்து, விவரம் பல கொண்ட விளக்க ஏடுகள் பல உண்டு. படைத்தலைவர் பற்பலரின் திறமைதனைக் காட்டிடும் காட்சிகள் பலவற்றைப் படம் பிடித்துக் காட்டுதல்போல், வரலாற்றில் இணைந்துள்ளார். படித்திடும்

அந்நாட்டு மக்களிடம் வீரம் கொழுந்துவிட்டுக் கிளம்பிடவும், நாட்டைக் காத்திட எத்தனை எத்தனை வீரர்கள் குருதியினைக் கொட்டினர் என்ற சேதி அறிந்ததனால் எழுச்சி மிக்க கொண்டிடவும் வாய்ப்பு நிரம்பஉண்டு படைத்தலைவர் குறிப்புகளும், களம் அமைந்த விவரமதும், போர்மூண்ட வகையதுவும், மூண்ட போரில் முன்னணியின் செயல் முறையும் துணையணியின் செயல்முறையும், கருவிகளின் வகையும், அளவும், இன்னபிற விவரங்கள் தெரிந்திடவும், தெரிவதனால் போர் முறைகள் பல பற்றி அறிந்திடவும், அறிவதனால் ஆற்றல் மிகுந்திடவும் வழி உண்டு; மற்றைய நாட்டில்.

மாவீரன், மண்டலம் பல வென்ற தீரன், எந்நாடு சென்றாலும், அதனைத் தன்நாடு ஆக்கிக் கொண்டோன் என்றெல்லாம் புகழ்பெற்ற ஜூலியஸ்சீசர், களந்தன்னில்

கடும்போரிட்டு வந்த காலை, ஒவ்வொரு நாளிரவும் அன்று நடந்ததனை விளக்கமாகக் குறிப்பெழுதி வைத்தனனாம்; அந்தக் குறிப்பு, பிறகோர் ஏடாகி, போர்முறை பயில்வோர்க்கு அருமை மிகு நூலாகி நின்றது.

வேறுபல போர்த்தலைவர் ஆற்றிய வீரச் செயல்கள், ஏடாகி நாடதனின் நற்புகழை விளக்கிடவும், உலகோர் கற்றுப் புத்தார்வம் பெற்றிடவும் வாய்ப்பளித்துள்ளன.

போர்முறை பற்றி மட்டுமன்றி, களந்தன்னில் வெற்றி கிட்டியதற்கும், சில வேளை தோல்விவந்து தாக்கியதற்கும் விளக்கமாய்க் காரணங்கள் தந்துள்ளார் ஏடுகளில்.

எத்தனையோ வீரப்போர் நடத்தினோர் நம் தமிழர்! மன்னர்கள் ஆண்டபோது!!

கங்கை கொண்டானென்றும்

கடாரம் வென்றானென்றும், ஈழம் சென்றானென்றும் இமயமதில் கொடி பொறித்தா னென்றும், வாதாபிப்போரதனில் வாகை சூடினானென்றும், எத்தனையோ உண்டிங்கு; எல்லாம் கதையாக!

சிற்சிலவற்றினை உள்ளடக்கிச் செந்தமிழின் சுவை கூட்டத் தந்துள்ளார் இலக்கியத்தில் எனினும் விவரம் விளக்க, போர் முறையின் வகை பற்றிய தகவல் மிகக் கொண்ட ஏடாக்கித் தரவில்லை, நாடதிர நடாத்திய போர் பற்றி, குறிப்பெழுதும் வழக்கமில்லை, ஏடு கிடைத்திடவில்லை, கற்பனை நயத்துடனே க-ங்கத்துப்பரணி உண்டு; சுவையும் பயனும் அதில் மிகுதி, ஐயமில்லை; ஆயினும், வரலாற்று ஏடல்ல, போர்வகை அறிந்து பயன்பெற வழிகாட்ட வல்லதா. ஓசை நயத்தாலேயே போர்க்களம் காட்டுகின்றார் புலவர் பரணிதனில்! ஆம்!

படித்தோர் எழுச்சி கொள்வர்!! ஆயினும், களந்தன்னில் இன்னபடை இப்புறத்தில் இன்னவிதம் தாக்கிடின், எதிர்த்திட வழி இஃது என்று காட்டும் கண்ணாடியாகிடுமோ! இல்லை! கவிதைச் சிறப்புண்டு, சுவையுண்டு!!

போர்வெறுத்த இயல்பதனால், போரே பொல்லாங்கு அதனைத் தவிர்த்திடலே முறை எனும் நெறியதனால், போர் பற்றி ஏடெழுதப் புலவோர் மறுத்தனர் என்று கூறுவரேல், உண்மை அதில் ஓரளவு உண்டென்போம், எனினும், போர் பற்றி மட்டுமல்ல, மற்ற பொன்னான பலபற்றியும் இதே போக்கினிலே இருந்ததனை மறந்திட இயலாதே. இம்மன்னன் மகன் இன்னான், இவ்வூரில் இடம் பெற்றான், இத்தனை ஆண்டுகளிருந்திட்டான், இந்நிறத்தான், இன்ன இயல்புடையான், இவனுக்குற்ற நண்பரிவர், இவன் நாட்டம் இதில் என்பன

போன்றவையும் எடுத்துரைக்க ஏடில்லை எங்கெங்கோ தேடி, கல்வெட்டு காண்கின்றார்; இதற்கு இது பொருள் என்றுரைப்பார் ஒருவர்; இல்லை! பொருள் இஃதல்ல! என்று கூறி வேறொருவர் மறுத்திடுவார். இரு கருத்தும் கொண்டு குழம்பிடுவார் படித்திடுவோர், இது நிலைமை. எனவேதான், வீரம் செறிந்திருந்த நம் நாட்டின் புகழ்க்காதை முழு அளவில் தெரிந்திட வழி இல்லை, மற்றைய நாட்டில் நிலை வேறு.

இப்போது நடைபெற்றிடும் போரில் எழுச்சி மிகு நிகழ்ச்சிகள், உணர்ச்சிக் கொந்தளிப்பில் உப்பரிகை வாசியையும் தள்ளிடும் காட்சிகள் பல உண்டு. இவையெல்லாம் எடுத்துக் காட்டும் படம் வேண்டும், எழுத்தோவியமாக.

இறந்தனன் ஐயோ! உம் மகன்! என்று உரைக்கக் கேட்டவுடன் இதயம் அத்தந்தைக்கு என்ன நிலையாகும். எவ்விதம் துடி துடிப்பார்,

எதெதனை எண்ணிடுவார்! சுட்டிப் பயல் இவன், குலப்பெருமை விளக்கிடுவான், மாடு மனை பெற்று மகிழ்ந்திடுவான் சீமானாய், என்று பலர் கூறியது கேட்டு இன்புற்ற நாட்களையும் எண்ணி எண்ணி நெஞ்சம் புண்ணாகிப் போகுமன்றோ! இன்று நாம் காணுகின்றது யாதெனில், இளைஞன், ஒரு வீரன் இறந்து பட்டான் வீரப் போர் புரிந்து; தந்தைக்குக் கூறுகிறார்; தத்தளித்திடவில்லை; தலை நிமிர்ந்து நடக்கின்றார்! நான் பெற்ற பிள்ளையவன் நாட்டைக் காத்திடும் போரில், இன்னுயிரை ஈந்திட்டான், இறவாப் புகழ் பெற்றான்; இவன் என் மகன் என்று கூறிடும் பேறு பெற்றேன்! எத்தனையோ தந்தையர்கள் இழந்துள்ளார் மகவுகளை! அந்த இழப்புப் பற்றி எவர் எண்ணிடப் போகின்றார்? நாடு உள்ளளவும், நல்லியல்பு உள்ளளவும் என் மகனை நான் இழந்த இணையில்லாச்

சேதியினை, கண்களில் நீர் சோர, கைகூப்பி நின்றுமேதான், எவரும் கூறிடுவர், என் மகன் என்றும் நிலைத்திருப்பான், கொற்றம் அழியாது கொடியும் தாழாது இருந்திடும் நிலை கண்டு மகிழ்ந்திடும் போதெல்லாம் இந்த நிலை நாடுபெற உயிர் ஈந்தான், இன்னான் மகன் இன்னான் என்றியம்பிக் கசிந்திடுவார். இஃதன்றோ யான் பெற்ற பேறு! எனக் கூறி ஏறுநடை போடுகிறார், மகனை இழந்திட்ட மாமுதியோர்! நெஞ்சை உருக்கிடும் ஓர் சித்திரமன்றோ இஃது? கருத்துக்குத் தவியாகத் தவித்திடும் கவிஞர்கட்கு, கருவூலமன்றோ, இக்களம் காட்டும் காதையது. ஒன்றல்ல, பல உண்டு இதுபோல. இவை யாவும் தொகுத்திட வேண்டும் முறையாக. வழிவழி வந்திடுவோர் பெறத்தக்க வரலாறாக.

□

அம்மா! உன் கணவன்

ஆவிபிரிந்ததென்றார்,

அம்மா! உன் கணவன் ஆவிபிரிந்ததென்றார்,

அத்தான்! உமை இழந்தேனா என்று மொழியால் அல்ல, விழி நீரால் கேட்கின்றாள் மாதுதானும்.

அஞ்சா நெஞ்சனிவன்! ஆற்றல் மிக்கோன்!

ஒரு துளியும் கலங்காது கடும் போரிட்டான்! சமாய்த்தான் எதிரிகளை! மண்ணில் சாய்ந்தான்!

வீர ஒளிவிடு கண்ணினான், சாகுமுன்பு எதிரிகள் ஓடிடக் கண்டான், பெருமிதமும் கொண்டான்.

இத்தகு வீரர் தம்மின் இரத்தம் படிவதாலே இந்த நம் நாட்டு மண்ணும் மாண்பு மிகுந்திடும், உணர்கின்றோம்.

உத்தமன் இவன் பேர் இந்த உலகெலாம் பரவும், எவர் உளத்திலும் எழுச்சி சேர்க்கும்.

விழியினில் இனித் தென்படமாட்டான் வீரன்! நம் இதயமே வீற்றுளான், நாடுகாத்தோன்.

இவ்விதம் கூறுகின்றனர், போர்க்களத்தில் வீரப்பணியாற்றி மரணமுற்ற கணவனைப் பற்றி.

திக்கற்றுப் போனோம் நாங்கள் என்று தேம்பிய தையல்தானும்,

வீடதில் வேதனைத் தீ மூண்டது, நெஞ்சிலுந்தான்

ஆயினும் அவர் ஆற்றல் தன்னால்

நாடதில் தீயோர் மூட்ட எண்ணிய நாசந்தானும்

வீழ்ந்தது! நாடு வாழ்ந்தது என்பதெண்ணி

ஏழையின் நெஞ்சில் பொங்கிடும் பெருமிதம் தன்னால்

பூவிழந்தவளானேன் புலம்புகின்றேன், எனினும்

நாடெல்லாம் பூக்காடாக நற்பணியாற்றினோனின்

நாயகி நானென்றும் பேறு பெற்றனன் என்றாள் மாது.

போகின்றான் பார், அந்தப் பொதிமாடு! போர் மும்முரமாக நடைபெற்றபோது, முடக்குவாத நோய் வந்துற்றதென்று பொய்யுரைத்து, அப்பொய்யை மெய்போலாக்கிப் பொற்காசு தூவித் தப்பித்தான்! உயிர் சுமந்து செல்கின்றான்; காண்போர் பிணம் என்கின்றார்.

என்முன் நின்றிட எவர்க்கு உண்டு திறமை என எக்காளமிட்டிடுவான் இக்காளை

எப்போதும் வம்புக்கு நின்றிடுவான்; வாய்ச்சண்டையில் வல்லமை காட்டிடுவான். போர்க்களம் சென்றான்! நடந்ததென்ன? வாள் சுழற்றி வந்தனனாம் ஒரு வீரன் - பகைப்படையிலுள்ளோன். கை நடுக்கம் இவனுக்கு! கட்கம் நழுவிற்று! காலில் வீழ்ந்து, சிறை பிடித்துச் சென்றுவிடு, கொல்லாதே! சிற்றப்பா எனக்குண்டு, சீமான், நீ கேட்கும் செல்வம் கொடுத்து என்னை மீட்டிடுவார்! உனக்கும் இலாபம்! என் உயிரைப் பறிப்பதனால் என்ன கிட்டும்! வேண்டாம் விட்டுவிடு! என்று கெஞ்சிக் கேட்டானாம்; கோழை நீ களம் வந்ததன்றோ இழுக்கு! உன்னைக் கொல்ல வாள் ஒன்றும் வேண்டுமோ! ஓடிப்போடா! வாள்விழி மாதரின் கேலி போதும், உன் உயிரை வாட்ட! உயிரினும் பெரிது மானம் என்னும் உண்மை உனக்கல்ல, மனிதர்க்கு! போ! போ! என்றானாம் பகைப்

படையின் வீரனுந்தான்.

உருட்டி விழி காட்டிடும் உலுத்தன் மருட்டிடுவான் மாந்தோப்பில். மடுவங்கரையில், மான் விழி மாதர்களை! போரில்? அவனெங்கே களம் சென்றான்? எதிரியுடன் கூடிக் கொண்டான், எனக்கென்று ஓர் எதிர்காலம் உறுதி என்றால் என் வசம் உள்ளதொரு கோட்டைவாசல் உமக்காகத் திறந்திருக்கும் என்றோர் ஓலை அனுப்பினனாம், எதிர்த்து வந்த வேந்தனுக்கு! எச்சிற் கலயம் இவனுக்கு! இழுத்து வந்திடுவீர் இவனை என்று கூறிச் சிரித்தானாம் நம் கொடி தாழ்த்த வந்த பகை நாட்டான். இவனை மணந்திட்ட மாதுதானாம், பாவம்! என்ன வேதனையைப் பெற்றாளோ; எண்ணிடவே மனம் தாளவில்லை தன் கணவன் வீரன் அல்ல. பேரம் பேசியவன், கோழை எனும் சொல் போல, மானம்

மதித்திடும் மங்கையரின் இதயத்திற்கோர் வேலுண்டோ! வெந்துபோனாள் வேதனை யால், தீயில் மூழ்கக் கருகியே விட்டாளாம் மானமுள்ளாள்.

தமிழகத்திலே, தன்னிகரில்லா வீரம் செறிந்திருந்த நாட்களிலும் கோழைத்தனம் காட்டினவர் சிலர் இருந்திருப்பர் - அவர் குறித்து உரையாடல் எங்ஙனம் இருந்திருக்கும் என்பது பற்றி எண்ணிப் பார்த்திடின், மேலே உள்ளவை போன்ற எத்தனையோ கிடைத்திடும். இவை பற்றி எல்லாம் எழுத்தோவியங்கள் வேண்டும்; மிகுதியாக!

பிற நாடுகளில் இற்றைய நாட்களிலும் நம் நாட்டில் பழங்காலத்திலும், போருக்குச் சென்றான், புகழ் பெற்றான் என்றோ, களத்திலே வீழ்ந்துபட்டான் என்றோதான் கூறத்தகும் நிகழ்ச்சிகள், நிரம்ப.

தாழ்ந்த நிலை பெற்றுவிட்ட நம் நாட்டில், இதுகாறும் சண்டையின்போது சம்பாதித்தான் என்ற பேச்சே பலமாக அடிபடக் கேட்டுள்ளோம்.

நூல் வாணிபம், அவருக்கு! சண்டைக்கு முன்பு சரக்கு இருப்பு ஏராளம்; கட்டுக்கு முப்பது ஏறிவிட்டது. கடவுள் அருளாலே பத்து இலட்சம் ஒரே வருடத்தில்! போன வருடம் பங்குனித் திருநாள் நடத்தினார், பத்தாயிரம் செலவிட்டு, கலெக்டர் வேலைக்குப் போகப் போகிறான் மருமகன்!

இதுபோன்ற பேச்சு நம் நாட்டில் நிரம்பக் கேட்டிருக்கிறோம்.

சண்டையிலே செத்தான் என்பதல்ல, சண்டையிலே சம்பாதித்தான் என்ற பேச்சு - இதுவரையில்.

இம்முறை அதுபோன்ற நிலை எழுவதைச் சமூகம் அனுமதிக்காது;

சண்டை, இங்கே! நம் நாட்டில்! இதில் நாம் சாய்ந்துவிடுவோமானால், சொத்தில்லை, சுகமில்லை, மானமே பறிபோகும், எனவே, வீரப் போரிட்டுப் பகையை முறியடிக்கும் தீரர்கள் பிறந்துள்ள நாட்டில், சண்டை வந்தது, சரக்குக் குவித்துள்ளோம். விலையை ஏற்றுவோம், நிறையச் சம்பாதிப்போம் என்று திட்டமிடுவோரை, விழிப்புற்ற நாடு விட்டு வைக்காது.

இலாப வேட்டைக்காரர் கொழுத்திட அல்ல, வீரர் பல்லோர் இன்று தியாகத் தீயிலே குளித்தெழுந்திருக்கத் துணிந்திருப்பது. இதனை இன்றே அறிந்திடல் நன்று! இடரும் இழிவும் படருமுன்னம் இலாபவேட்டை நோக்கத்தை விட்டுவிடுவதுதான் முறை, நெறி.

ஓர் பெருங்குறை உளது நம் நாட்டு மக்களிடம் - அறமழித்துப் பொருள் பெறுவார்

தம்மை இகழ்ந்திருத்தல் எனும் இயல்பு எழுந்திடுவதில்லை; எவ்வழி அவர் சென்று, எத்தனைச் சூதுடனே எளியோரை ஏய்த்துப் பொருள் பெற்றிடினும் அவர் பெற்ற பொருளின் அளவு எண்ணி ஏத்துகின்றார்; அவராற்றல் அதுவென்று போற்றுகின்றார்; அடிபணிந்து நின்றிடவும் முயலுகின்றார். அதுகண்டு, பெரும் பொருளைக் குவித்திட் டோன் அகமகிழ்ந்து, அறமழித்தோன் என்பதனால் அவனி தூற்றும் என்று அஞ்சிக் கிடந்திட்டேன் சின்னாட்கள், தவறு அது, மிகத் தவறு; கொல்புலிமுன் எவரேதான் துணிந்து நிற்பர். கோலம் காட்டும் மானெனின் பிணைத்திடத் துடிப்பர், இப்புவியின் இயல்பு இது என்று எண்ணி இறுமாந்து கிடக்கின்றார்; மற்றும் சிலர் இம்முறையில் நாமும் முன்னேற வேண்டுமென்று முனைகின்றார், அநீதி தானும் ஒன்றுக்குப் பத்தாகப்

பெருகி, நாட்டைக் காடாக்கி விடுகிறது, காண்கின்றோம்.

முன்பு நடைபெற்ற பெரும்போரின்போது மேலை நாட்டுள்ளோரெல்லாம், களம் நின்று குருதி கொட்டும் வீரம் போற்றி, கவிதை புனைந்ததுடன் நின்றாரில்லை; அவர்க்கே உடனடியாய் எல்லாப் பொருளும், நமக்கெதற்கு இந்நாளில் சுவைப் பண்டங்கள் என்றெண்ணித் தேவைகளைக் குறைத்துக் கொண்டார். பால் வேண்டேன் பழம் வேண்டேன், பற்பல பண்டம் வேண்டேன் நடமாடும் அளவுக்கு உடல் வலிவு தரவல்லது போதும், மற்றதெல்லாம், நாம் வாழப் போராடும் நண்பர்கட்கு அளித்திடுவோம் என்றுரைத்து, தியாகம் செய்தார். உண்ணும் உணவு வகைமாற்றிக் கொண்டார், அளவினைக் குறைத்துக் கொண்டார்; நைந்திடும் வரையில் உள்ள உடை

போது மென்றார்; ஊரில் பண்டம் தேடி அலைந்தாரில்லை; அதனாலே அங்காடி அதிபதிகள் ஆதாயம் தேடிடும் அரிய வாய்ப்பு இது என்று பண்டத்தின் விலை ஏற்றி விற்றிட மார்க்கமில்லை. இங்கோ, எட்டு பதினெட்டு ஆகிறது என்ற அளவு அல்ல; எட்டு எண்பதாகி, ஏழை வாழ்வில் எரி நெருப்பு வீழ்ந்ததனைக் கண்டோம், முன்பு. இன்றும் அதுதான் முறை என்று ஆகிடுமேல், ஏழையின் பெருமூச்சே புயலாகிப் புல்லர் வாழ்வை வேரறுத்துச் சாய்த்து விடும் புத்தறிவுடனே இன்று நடந்திடுதல் வேண்டும், பச்சை இரத்தம் பரிமாறிப் பகைவரை ஓட்டும் வீரர், நமக்கேற்ற நாடே இஃது என்றெண்ணிப் பெருமிதம் பெறவும் வேண்டும்.

□

ஐயன் அளித்தான் என்றும், அவர் ஆற்றல் அஃது என்றும் தத்துவம் கூறிடுதல்

உண்டு. ஐயன், சிலருக்கல்ல, எல்லோர்க்கும் பொது! எல்லாம் எல்லோர்க்கும் எனும் முறை அறிந்தவனே இறையவன். இவனைத் திரையாக்கிக் கொண்டு, ஏழையரை வஞ்சித்து இலாபம் பெற்று, ஐயன் அளித்ததிது என்று பேசுவது முறையாமோ!

ஆற்றல் பாராட்டிடுதல் வேண்டும், இல்லை என்று கூறவில்லை, ஆயின், ஆற்றல் தந்த விளைவு கண்டன்றோ பாராட்டுத் தருதல் வேண்டும்.

நேற்றிரவு இருளதிகம், இடர் மிக்க பாதைதனில் புரவிகள் மிரட்சி கொண்டு பாய்ந்தோடின; வண்டி பாறை மோதி நொறுங்கிடுமோ என்றஞ்சிக் கூவினர் பயணம் செய்தோர். அந்த வேளைதன்னில், கட்டுடல் படைத்திட்டோன், அஞ்சா நெஞ்சன், கலங்காது ஓடிவந்து குதிரையின் கயிறுபற்றி, இழுத்து நிறுத்திவிட்டான் வண்டியினை - இது

ஆற்றல், ஐயமில்லை!

ஆயின், இதற்குப் பாராட்டு எப்போது? வண்டி கவிழாமல் வல்லமையால் நிறுத்தியவன் உள்ளே இருந்தோர்க்குத் துணையாகி, துயர்போக்கிக் காத்திட்டால், அதுபோலன்றிக் காட்டுப் பாதையிலே கடுகிச் செல்லும் குதிரை வேகத்தை வலிவினால் தடுத்தவனும், உள்ளே இருந்தோர் முன் உருட்டு விழி காட்டி ஒரு வார்த்தை பேசாமல் உடைமையெல்லாம் கொடுத்திடுக, உயிர் தப்ப வேண்டுமெனில் உடனே கொடுத்திடுக! என மிரட்டிப் பொருள் பறித்தால், அவன் வலிவு போற்றி ஓர் விருத்தம் இயற்றுவரோ, ஆற்றலைப் பாராட்டி அகவலோ பாடிடுவார்!

ஆற்றல் போற்றுதலுக்குரியது ஆகவேண்டின், அதன் விளைவு, நன்மை பயந்திடுவதாய் அமைய வேண்டும்.

உடல் வலிவால் வரும் ஆற்றல் குறித்த இந்த விளக்கம், பொருள் குவிக்கும் ஆற்றல் என்கின்றாரே, அதற்கும் பொருந்தும், ஏழையை வஞ்சித்தால், ஆற்றல் அல்ல! இருட்டறையில் பொருளைப் போட்டடைத்து இல்லையே என்று கைவிரித்துக் கண் சிமிட்டி இவ்வளவு விலை தந்தால் எங்கிருந்தோ கொண்டு வருகின்றேன் உனக்காக என்று கூறிப் பொருள் பறித்தல் போற்றிடத் தக்கதோர் ஆற்றல் அல்ல, புறாக்குஞ்சைப் பிடித்துத் தின்னும் பூனைப்போக்கு, மான்கன்றை மடக்கிடும் புலியின் போக்கு, மலர்ச்செடியின் மறைவிருந்து தீண்டிக் கொல்லும் கருநாகம் கொள்ளும்போக்கு! மதியுள்ளார் இதனை ஆற்றலெனக் கூறமாட்டார்! ஆயினும், நம் நாட்டில், இதுபோன்ற ஆற்றலால் பொருளைச் சேர்த்துப் புதுப்பொலிவு கொண்டுவிடும்

பூமான் தம்மை, பெம்மானின் பேரருளால் பெற்றான் செல்வம் என்று பேசுவோரும், அறிவுமிக்கோன், இன்னவிதம் ஆகுமென முன்பறிந்து பெற்றான் ஆதாயம் மிகப் பெரிய அளவு என்று கூறுவோரும் உளர், நிரம்ப; இன்றும், இந்த இயல்பு மாற வேண்டும். மாய்ந்திடுதல் வேண்டும். அதிலும் இன்னுயிரை ஈந்தேனும் தாய்நாட்டைக் காத்திடுவோம் என்று காளையர்கள் களம் நிற்கும் இந்த நாளில் இது போல நடந்திடுவதனைப் பொறுத்திடுதல் ஆகாது.

□

என் மகனை நான் இழந்தேன் நாட்டுக்காக! இதோ காணீர் அவன் வடிவம்! நடமாடி வந்த மைந்தன், படமாகிப் போனான், பாரீர்! - என்று முதியவர் கூறி நிற்கும்போது, காண்போர் கண்களில் நீர் துளிக்கும், நெஞ்சிலே தூய்மை சேரும்.

அறமறிந்தோர் அஞ்சாமல் கூற வேண்டும், நெறிமறவாதிருந்திடுக! என்பதாக.

□

என் தோட்டம்! என் மாடம் கூடம்! என்று எத்தனைதான் காட்டிடினும், இதோ என் மகன்! இறந்து பட்டான்! இறவாப் புகழ்பெற்றான்! என்று காட்டி நிற்கும் தந்தையின் கால் தூசுக்கும் நிகராமோ அவையெல்லாம், இல்லை! இல்லை!

இதனை அறிந்துள்ளோம், அதனால்தான், நாட்டுக்கோர் இடர்ப்பாடு வந்துற்ற வேளையிலே, நாடாளும் முறை குறித்து நமக்குள்ளே உள்ள பல கருத்து மாறுபாட்டை ஒதுக்கிவிட்டு, நம்மாலானதனைச் செய்திடப் புறப்பட்டோம். பகைவனும் ஓர் முனையில் பணியலானான்.

அன்புள்ள

அண்ணாதுரை

26-9-65

23. பற்று - (1)

விருப்பம், பற்று என்பனவற்றின் விளக்கங்கள்

பற்றுகளின் வகைகளும் தரங்களும்

நாட்டுப்பற்றே சிறந்தது என்பதற்கான விளக்கங்கள்

ஜனநாயக நாடுகளிலேயே நாட்டுப்பற்று மிகுதி

தம்பி,

உனக்குப் பற்று எதன் மீது என்ற கேள்வியைப் பலர் பல்வேறு சமயங்களிலே எழுப்பி இருந்திருக்கிறார்கள் - ஆமல்லவா?

அவனுக்கு அதன்மீதுதான், அல்லது இன்னார் மீதுதான் ”பற்று’ அதிகம் என்ற பேச்சும்,

எதிலே பற்று இருந்தாலும்

இல்லாவிட்டாலும், "அதிலே' மட்டும் அவனுக்குப் பற்று மிகுதியாக என்ற பேச்சும்,

இதிலே "பற்று'க் காட்டாதவன் மனிதனா - நம்மவனா? என்ற கோபப் பேச்சும். ஒவ்வொருவருக்கு ஒவ்வொன்றிலே "பற்று' என்ற பேச்சும்,

பற்று எனக்கு உண்டு என்று சொல்கிறான், ஒப்புக்கு! உண்மையான பற்று இருந்தால் இப்படியா நடந்து கொள்வான் என்ற பேச்சும்,

மெள்ள மெள்ள எனக்குப் "பற்று' ஏற்பட்டுவிட்டது. என்ன செய்வது என்ற பேச்சும்,

"பற்று' உள்ளவர்கள் அனைவரும் ஒன்றுகூட வேண்டா மோ என்ற பேச்சும், அடிக்கடி காதினில் விழுந்திருக்கும், தம்பி! நீயே கூடப் பலமுறை பேசியிருப்பாய்.

எனக்கு இருப்பதெல்லாம் இந்த ஒரே

“பற்று’த்தான், வேறு எதிலும் பற்று கிடையாது என்று பேசக் கேட்டிருப்பாய்; கேட்டிருக்கிறேன். இந்தப்”பற்று’ப் பற்றித்தான் இன்று கூற முனைகிறேன் - சுவையும் சிக்கலும் நிரம்பிய பிரச்சினை; ஆனால், எவரும் வேண்டாமென்று ஒதுக்கித் தள்ளிவிட முடியாத பிரச்சினை - அடிப்படைப் பிரச்சினை.

முற்றும் துறந்த முனிவர்கள் “பற்று’ அற்றவர்கள் என்கின்றனர்;”பற்று’ என்பது எவரையும் பற்றிக் கொள்ளும்; அதனிடமிருந்து தப்பிடுவோர் முனிவர்கள் மட்டுமே என்பர் இதிலிருந்து முனிவர்களின் பெருமையை விளங்கிக் கொண்டால் போதாது, இந்தப் ”பற்று’ இருக்கிறதே, அது எத்தனை வலிமை வாய்ந்தது என்பதனைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

“பற்றற்றான்’ என்று கடவுளுக்கு ஓர் இலக்கணம் கூறிடுவர்; ஆயினம், அந்தப்

பற்றற்றானும்”ஆன்ம கோடிகள்’ உய்வு பெற வேண்டும் என்பதிலே பற்றுக் கொண்டோன் என்ற சுவை மிகு கருத்தினையும் இணைத்துக் கொண்டனர்.

பற்றற்றானைப் பற்றிக் கொண்டால், பரமபதம் சேர்ந்திடலாம், பற்று அற்று இருந்திடலாம் என்கின்றனர் ”மார்க்க போதகர்’ பலர்.

பற்றுக பற்றற்றான் தாளினை. எனும் மொழி அறிவாயன்றோ?

பற்று அற்றவர் எவரெவர் என்பது பற்றிய பிரச்சினை ஒருபுறம் இருக்கட்டும் - ”பற்று’ என்பது என்ன? எனும் இலக்கணத்தையல்லவா முதலில் புரிந்து கொள்ள வேண்டும்.

பற்றிக் கொண்டான் என்கிறோம் - பிடித்துக் கொண்டான் என்பதனை உணர்த்த.

ஒரு பொருளையோ, கருத்தையோ, அமைப்பையோ, ஆளையோ, நமக்குத் தேவை என்று உணர்ந்து, நம்முடையது ஆக்கிக் கொள்வதனைத்தான் "பற்று' என்கிறோம்; இல்லையா?

விருப்பம், விழைவு, ஆவல், ஆசை என்ற உணர்ச்சிகளைக் குறிப்பிடும் வலிவு மிக்க சொல் பற்று என்று கூறுவர். ஆனால், பற்று, விருப்பம் எனும் இரண்டும் முழுக்க முழுக்க ஒன்று என்று கூறிடலாகாது, விருப்பத்தைக் காட்டிலும், அழுத்தம்மிக்க உணர்ச்சி பற்று.

என் விருப்பம் அது, என்றாலும் உன் விருப்பத்தைத் தட்டிட மனம் இல்லை; ஆகவே, என் விருப்பத்தையும் விட்டுக் கொடுத்துவிட்டு உன் விருப்பப்படி நடந்து கொள்கிறேன் என்று பேசுகிறோம்; நட்புக் காரணமாகவோ, சலிப்புக் காரணமாகவோ, இலாப நோக்கம் கொண்டோ, "விருப்பம்' நாம் விரும்பும்போது விட்டுவிட

இடந்தருகிறது; பற்று அவ்விதமல்ல!

பற்று - பற்றிக் கொள்வது! எளிதில் விட்டுவிட முடியாதது, ஓசையையே கவனித்தாயல்லவா தம்பி! பற்று!! வலிமை மிகுந்துள்ள ஓசை!

விருப்பம், ஒரு நிலையை நினைப்பைக் காட்டுவது, ஒருவித உணர்ச்சியைக் காட்டுவது.

பற்று என்பது, தம்பி! உணர்ச்சிக்கும் அந்தச் சொல்தான்; செயலுக்கும் அந்தச் சொல்லேதான், கவனித்தனையா?

என்ன அண்ணா! இலக்கண வகுப்பா என்று கேட்டு விடாதே தம்பி! கடினத்தைக் காட்ட அல்ல, நான் இந்தச் சொல்லாராய்ச்சியில் ஈடுபடுவது? சுவையும் பயனும் இதிலே மிகுந்திருப்பதனால்தான்.

பற்று - ஒரு உணர்ச்சி - ஒரு செயல் -

இரண்டுக்கும் பயன்படும் ஒரு சொல்!

பசு - பதி - பாசம் என்பது குறித்து, சைவப் பெரியார்கள் பேசிடக் கேட்டதுண்டா! ஆன்மாக்களுக்கும் அரனுக்கும் அமைந்துள்ள "பற்று' பற்றியதே, அவர் தரும் விளக்கம்.

பற்று பற்றிடாதார் எவரும் இலர்! உணர்ச்சி உள்ளார் எவரும் "பற்று'க் காட்டியே தீருவர், ஏதேனும் ஒரு பொருளிடம், ஒரு கருத்திடம், ஒரு முறையிடம்.

ஏதேனும் ஓர் பொருளிடம் "பற்றுக்' கொண்டார், அப்பொருள் பெற்றிட முனைந்திடுவர்; அப்பொருள் கிட்டுமட்டும் தேடிடுவர்; கிடைத்த பின்னர் களித்திடுவர்; கிடைத்ததனை இழந்திட ஒருப்படார் வேறு எப்பொருளைத் தருவதாக எவர் கூறிடக் கேட்டிடினும், எப்பொருளின் மீது பற்றுக் கொண:, பற்றிக் கொண்டனரோ

அப்பொருளைத் தந்திட இசையமாட்டார். இப்பொருளிடம் எனக்குள்ள”பற்று’ அறிந்தும், கேட்டிடலாமோ, இஃது அறமாமோ என்றெல்லாம் பேசிடுவார்.

பற்று உள்ளத்தில் எழுந்திடும் உணர்ச்சி மட்டுமல்ல, உள்ளத்தில் இடம்பிடித்துக் கொண்டு, வெளியேற மறுத்திடும் வலிவுமிக்க உணர்ச்சி.

உயிரே போவதாயினும் இதனை மட்டும் தர சம்மதியேன் என்றும்,

இதனை நான் இழந்திடின் உயிர் தரித்திரேன் என்றும்,

வேறு எதை வேண்டுமானாலும் கேள், தரத் தயங்கிடேன், ஆனால் “இதனை’ மட்டும் கேட்காதே, தர இயலாது, அத்துணைப்”பற்று’ எனக்கு இதனிடம் என்றும் பலர் பேசக் கேட்கின்றோம்.

”பற்று’ எனும் உணர்ச்சி வலிவு பெற்று விட்டிருப்ப தனையும், அவனோடு இரண்டறப் பிணைந்து விட்டிருப்ப தனையும் குறிப்பனவே அந்தப் பேச்சு.

விருப்பம் என்ற விதமாகத்தான் ”பற்று’ துவங்குகிறது. ஆனால், வளர்ந்து வளர்ந்து, ஆழ வேர்விட்டு இதயத்தில் கெட்டியான விதத்தில் நிலைத்து விடுகிறது, பற்று ஆகிவிடுகிறது.

சுவையையோ, பயனையோ அறிந்துதான் முதலில், எதனிடமும் விருப்பம் எழுகிறது. கிடைக்காதிருக்கும் காலம் வளர்ந்திடும்போது ஆவல் வளருகிறது, அப்பொருள் கிடைத்த பிறகு “திருப்தி’ ஏற்படுகிறது, மகிழ்ச்சி பிறக்கிறது, சுவை காண்கிறோம். பிறகு இந்தத் திருப்தி, சுவை, மகிழ்ச்சி என்னும் உணர்வுகளோடு ஒரு பயம் நுழைகிறது, கிடைத்தது கைவிட்டுப் போய்விட்டால்

என்ன செய்வது என்ற பயம்; கிடைத்தது தீர்ந்துபோனதும் மேலும் கிடைக்காது போய்விட்டால் என்ன செய்வது என்ற பயம்! அந்த உணர்ச்சி காரணமாகப் பெற்றதைப் பாதுகாத்திட வேண்டும் என்ற உறுதி பிறக்கிறது. அந்த உறுதி, பிறகு,"பற்று' ஆகிவிடுகிறது; பறிக்க முடியாததாகவும், அவனிடமிருந்து பிரிக்க முடியாததாகவும் ஆகிவிடுகிறது; அந்த உணர்ச்சி வன்மை மிக்கதாகி விடுகிறது.

விருப்பம் எழுவதும், விழுவதும் எளிது - பெற்ற பிறகு விழுவதும் உண்டு, பெற முடியாதபோது மறைவதும் உண்டு, மேலெழுந்தவாரியான உணர்ச்சி, அந்த விருப்பம்.

விருப்பம் கொண்டதுடன், விரும்பியதைப் பெற்றே தீருவது என்ற உறுதி பிறந்திடும்போதுதான், விரும்பியதைப்

பெற முனைவர்; முனைந்து பெற்றிடுவரேல் பெற்றதனை இழந்திட லாகாது என்ற உறுதி இணைந்திடும்; "பற்று' பற்றிக் கொள்ளும்.

மண்ணைப் பற்றிக் கொண்டு மரம் எழுகிறது, மரத்தைப் பற்றிக் கொண்டு கொடி படருகிறது, கொடியினைப் பற்றிக் கொண்டு இலையும் பூவும் காயும் உள்ளன!

ஒன்று மற்றொன்றைப் பற்றிக் கொள்ள, ஆழப் பதிந்திருத்தல், சேர்ந்து இருந்திடுதல் எனும் நிலை இருந்தாக வேண்டும்.

ஆழப்பதிந்திருத்தல், ஒன்றுக்கொன்று பொருத்தம் சரியாக இருந்தால் மட்டுமே இயலும், மண்ணைப் பற்றிக் கொண்டு மரம் எழுவது, மரத்தின் வேர் ஆழப் பதிந்திட மண் இடந்தருவதால்; அதற்கேற்ற பொருத்தம் அமைந்திருப்பதால்,

மணற்பாங்குமிக்க இடத்திலும்,

மலைப் பாறை மிகுந்த இடத்திலும், ”ஆழப்பதிந்திருத்தல்’ இல்லையல்லவா!!

விதை விழுந்ததும், மண் அதற்கு இடமளித்து, இதமளித்து வாழ வழி அமைத்து விடுவதனால்தான் செடியாகி மரமாகிச் செழித்திருத்தல் காண்கின்றோம். அதே விதையினை மண்ணி -டாமல், பாதையிலோ பாறை மீதோ, பளிங்கு அறையிலோ பட்டாடை மீதோ தூவிடின், முளைவிடுமா! இல்லை! ஏன்? பொருத்தம் இல்லை! ஆழப்பதியவில்லை! சேர்ந்து இருந்திட வில்லை; பற்று ஏற்படவில்லை!!

மண் விதையையும், விதை மண்ணையும் பற்றிக் கொண்டாலன்றி, முளைவிடுவதில்லை!

விதையின் வகைக்கு ஏற்றவிதமாக மண் இருத்தல் வேண்டும் என்பதும், உழவு முறை

இருத்தல் தேவை என்பதும், நான் மேலே கூறிய அடிப்படை உண்மைக்கு மாறானதல்ல; அந்த உண்மையின் பல முனைகளிலே ஒன்று.

நஞ்சைக்கும் புஞ்சைக்கும் வேறுபாடு இருக்கிறது - மண்ணின் தரத்தில், பாசன முறையில், உழவு வகையில்; ஆனால் நான் குறிப்பிட்ட,

ஆழப் பதிந்திடல்
கூடி இருந்திடல்

எனும் "விதி' இங்கும் உண்டு; இல்லையேல், முளை இல்லை; வளர்ச்சி இல்லை.

தம்பி! எதன் மீதாவது "பற்று' ஏற்பட வேண்டுமானால், விருப்பம் எனும் உணர்ச்சி நம் மனத்தில் ஆழப் பதிந்திருத்தல் வேண்டும். மனத்திலே கூடி இருந்திடுதல் வேண்டும். அஃது இல்லையெனில், காற்றிடைப்பட்ட இதழ்

இங்குமங்கும் சிதறி எதற்கும் பயன்படாது போவது போல, எழும் விருப்பம், அலை அலையாய்க் கிளம்பி, உருப்பெறாது போய்விடும்.

கண்டதன் மீது மனத்தைச் செலுத்தி, வீணுக்கு அலையாதே! - என்கிறார்களே பெரியவர்கள், இந்தக் கருத்தைத் தான் "கொச்சை'யாகக் கூறுகிறார்கள், அதுபோல!

விருப்பம் எழுந்திடும்போது, நாம் விரும்பும் பொருளின் தன்மையையும், பெறத்தக்க பயனையும், தெளிவுடன் அறிந்திட வேண்டும்; அறிந்திடும்போது விருப்பம் சிலவற்றை விலக்கிடவும் வழி கிடைக்கும். பெற்றே தீர வேண்டிய விதமானது அப்பொருள், அத்துணைப் பயன் தருவது என்று தோன்றுமானால், முயற்சியில் ஈடுபடல் வேண்டும், பெற முனைந்திடுதல் வேண்டும், அதற்கேற்ற ஆற்றலுடன்.

சிறுவயதில் பட்டுப் பூச்சிகளைக் கண்டதும் ”விருப்பம்’ - எழுகிறது; பிடித்திட முயற்சிக்கிறோம்; முயற்சி எளிதாகப் பலன் தராதபோது, விருப்பம் தன்னாலே போய்விடுகிறது; முயற்சியிலே வெற்றி பெற்று, அந்த வண்ணப் பூச்சி நம் கரம் சிக்கியதும் மகிழ்கின்றோம்; விளையாடுகின்றோம்; ஆனால், விரும்பியதைப் பெற்றாகி விட்டது. அதனால் கிடைத்திடக் கூடிய மகிழ்ச்சி கிடைத்தாகிவிட்டது என்றதும், மனத்திலே வேறு விருப்பம் எழுகிறது, வண்ணப் பூச்சி மீது இருந்த விருப்பம் குறைகிறது, மறைகிறது; பூச்சியை விட்டுவிடுகிறோம்; புதுப் பொருளில் நாட்டம் காட்டுகிறோம்.

இந்த விருப்பம், விவரம் அறியாத ஒன்று, எனவேதான் வேகமாக எழுகிறது, வேகமாக மறைகிறது.

ஆனால், தம்பி! பூச்சிகளின் இயல்பினை ஆராய்ந்திடுவதில் பற்றுக் கொண்ட "அறிவாளர்' இதுபோன்றிருப்பதில்லை. நாளெல்லாம், விதவிதமானவைகளைப் பெறுவதிலும், பெற்றவற்றினைக் கண்டு கண்டு கருத்துப் பெறுவதிலும், தம்மை மறந்து இருந்திடுவர் - அவர்களுக்கு அத்தகைய"பற்று' பூச்சிகள் பற்றிய உண்மைகளைத் தேடிக் கண்டறிந்திடும் துறையினில், பணியினில்.

விருப்பம், பற்று ஆக வடிவமெடுப்பது எங்ஙனம் என்று அறிந்திடச் சில கூறினேன்; விருப்பத்தில் உள்ள வகை பல என்பதனையும் கூறினேன். விருப்பங்கள் எல்லாம், "பற்று' என்ற வடிவம் பெற்றுவிடுவதில்லை; விருப்பங்களிலே பலப்பல, வடிவம் பெறுமுன்பே கூடக் கலைந்துவிடுகின்றன.

ஒன்றின் மீது விருப்பம் கொள்கிறோம்; அது கிடைக்கவில்லை என்றால், "அதுபோல,

வேறொன்று’ கிடைத்திடப் பெற்று, சரி! இதுபோதும்! என்றெண்ணி மகிழ்ச்சி பெற்றிடுகிறோம்; மறுத்திடமாட்டாய். சிறுவர்களுக்கு வேடிக்கைப் பாட்டுப் பாடுகிறார்களே, வாலு போயி, கத்தி வந்தது என்று அதுவும், நாடகத்திலே பாடுகிறார்களே, மயிலுக்கு நான் கண்ணி வைத்தேன், தங்கமே! தங்கம்! குயிலுக்குஞ்சி மாட்டிக்கிட்டுது, தங்கமே! தங்கம் என்று, இவையெல்லாம், ஒன்றை விரும்பிப் பெற நினைத்து அது கிடைக்காதபோது, வேறு ஒன்றைப் பெற்று”போதும்’ என்ற திருப்தியைத் தருவித்துக் கொள்ளும் இயல்பினை விளக்கிடும், வேடிக்கைக் கதைகள், வேறென்ன!

ஒன்றை விரும்பி அது கிடைக்கப் பெறாமல், கிடைத்த வேறொன்றைக் கொண்டு திருப்திப்படுவது போல, ஒன்றின் மீது பற்றுக்

கொண்டு, வேறொன்று பெற்று, போதும் என்று இருந்திடல் முடியாது!

விருப்பம், பலப் பல; பலவகையின; பல தரத்தன; பல நிலையின! பற்றும், பலவகையின.

ஆனால், விருப்பம் - பற்று எனும் இரண்டுக்கும், தரம், நிலை, வகை எது எனினும், அடிப்படையிலே அமைந்துள்ள வேறுபாடு உண்டு. விருப்பம், நீக்கிக் கொள்ளத் தக்கது; பற்று, விட்டுவிடக் கூடியது அல்ல.

தம்பி! பொருள், கருத்து, முறை, குழு, தனி ஆள் என்று நாம் பற்றுக் காட்டத்தக்கவை பல உள்ளன.

பொருளின் மீது மிக்க "பற்று' உள்ளவன், அதனைப் பெற்றிடும் முறை பற்றிக் கவலை கொள்ளான். பெற்றிடுவதால் விளைந்திடும்

பயன் யாது என்று கூட ஆராய்ந்திட மாட்டான்.

பொன்னைப் பெற வேண்டும் பொதி பொதியாக என்று ஓர் "ஆசை' மைடாஸ் எனும் மன்னனுக்கு ஏற்பட்டதாம்! தேவன் வரமளித்திட வந்தான்! மைடாஸ், எனக்குக் குன்றளவு பொன் வேண்டும் என்றா கேட்டான்! அவன் ஆசைக்கு அளவில்லை, ஆகவே, இவ்வளவு பொன் வேண்டும் என்று கேட்டிடவில்லை. தேவா! நான் தொட்டதெல்லாம் பொன்னாதல் வேண்டும்; வரம் அருளும்! என்று கேட்டான்; பெற்றான், பெற்று!. . . உண்ண முடியவில்லை, ஒரு முழுங்கு தண்ணீர் பருக முடியவில்லை. தொட்டதும் பொன்னாயின, உணவும், நீரும்! என் செய்வான்! தொட்டதெல்லாம் பொன்னாகிறது, ஒரு கவளம் சோறு இல்லை! பசிக் கொடுமை! நா உலருகிறது!! துடிக்கிறான்!!

கதைதான், தம்பி! ஆனால், விளைவு யாதாகும் என்பது அறியாது விருப்பம் கொண்டோன், அந்த விருப்பம் நிறைவேறப் பெற்று, மகிழ்ச்சி அல்ல, வேதனையைத்தான் பெறுகிறான் எனும் கருத்தினை விளக்கிட வல்லது.

ஆகவே, கொள்ளத்தக்கது, தள்ளத்தக்கது என்று விருப்பத்தைத் தரம் பிரித்திட வேண்டுமானால் விருப்பம் நிறைவேறப் பெற்றால் ஏற்படும் விளைவு என்ன என்று ஆராய்ந்து பார்த்திட வேண்டும்.

இதுபோல ஆராய்வதனால், விருப்பம் கொள்ளத்தக்கதா அல்லவா என்று அறிந்துகொள்ள முடிவது மட்டுமல்ல, ஆராய்ந்திட ஆராய்ந்திட விருப்பம் வலிவு பெறுகிறது. பற்று அளவுக்கு வளருகிறது.

“பற்று’ என்பதற்கும்,”விருப்பம்’

என்பதற்கும் உள்ள மற்றோர் வேறுபாட்டினைக் கூடக் காணலாம்:

ஒருவன் தான் கொண்ட விருப்பத்தை மற்றப் பலரும் கொண்டிடல் வேண்டும் என்று எதிர்பார்ப்பதில்லை, அதே விருப்பத்தைப் பலரிடம் புகுத்த முனைவதில்லை; வாணிபம் நடாத்துவோர் தவிர.

ஒருவன், ஒருவிதமான உணவிலே "விருப்பம்' கொண்டுள் ளான் என்றால், அதுபற்றி மெத்த ஆர்வத்துடன் பேசுவான். மற்றவர்களுக்கும் அந்த உணவு மீது விருப்பம் எழுப்பிட முயல்வான்; ஆனால், அந்தப் பணியிலேயே முனைந்து நிற்கமாட்டான் நீ அறிய மாட்டாய் அந்தச் சுவை! - என்று கூறிவிட்டுச் சென்றிடுவான். ஆனால்"பற்று'க் கொண்டவர் களோ, மற்றப் பலரும் அதேவிதமான "பற்றுக்' கொண்டிட வேண்டும் என்பதிலே நாட்டம் மிகுதியாகக்

கொண்டிடுவர், அதற்கான பணியினில் முனைந்திடுவர்.

அதனால், விருப்பம் பெரும்பாலும், தனி மனிதர்களிடம் காணப்படும் உணர்ச்சியாகவும், ”பற்று’ தனி மனிதர்களிடம் பிறந்து சமூகத்தில் பலர் கொண்ட குழுவினிடம் இடம் பெற்றிடும் முறையில் வளர்ந்திடவும் காண்கிறோம்.

எனக்கு இதன் மீது விருப்பம்; நீங்களும் அதனையே விரும்புங்கள் என்று எடுத்துக் கூறிடும் போக்கினை அதிக அளவில் காண முடியாது; ஆனால் எனக்கு இவ்விதமான பற்று உண்டு, அது சாலச் சிறந்தது; அந்தப் பற்று உங்கட்கும் ஏற்பட வேண்டும், அந்தப் பற்றினைப் பெற்றிடுக! என்று ஆர்வத்துடன் எடுத்துக் கூறிடும் போக்கினை நிரம்பக் காணலாம்.

விருப்பம், பெரிதும் தனி மனித உணர்ச்சியாகி விடுகிறது, “பற்று’ தனிமனித உணர்ச்சி என்ற அளவிலிருந்து, சமூகத்தில் ஏதேனும் ஒரு பிரிவில் இடம் பெற்றிடும்”பொது உணர்ச்சி’ எனும் நிலையை அடைகிறது.

இது பற்றித் தம்பி! அறிந்திடக் கொள்கைகள், முறைகள், கோட்பாடுகள், மார்க்கங்கள் ஆகியவைகளின் வரலாறு காண வேண்டும். எவரெவர், அவர் கொண்டிருந்த ”பற்று’ மற்றவர்க்கும் ஏற்பட வேண்டும் என்பதற்காகப் பாடுபட்டனர், எத்தனை தொல்லைகளைத் தாங்கிக் கொண்டனர் என்பன பற்றி அறிந்திடும்போது ஒரு எழுச்சியே ஏற்படும்.

“பற்று’ எத்தகையது என்பதனையும் விருப்பம் என்பதிலிருந்து எந்த முறையில் மாறியிருக்கிறது என்பதனையும் வளர்ச்சி பற்றியும் கூறினேன் -

ஓரளவுதான். முழு அளவு தெரிந்துகொள்ள முயன்றுபார், சுவையும் பயனும் நிரம்பக் கிடைத்திடும்.”பற்று’ பலவகை உண்டு என்று அறிகின்றோம். இவற்றில் எளிதாக எவர்க்கும் புரிந்திடுபவை,

நாட்டுப்பற்று
மதப்பற்று
மொழிப்பற்று
இனப்பற்று

என்று கூறிடலாம்; எவரும் கூறிடுவர்; பிறகு மெல்லிய குரலில் கூறிடுவர், குடும்பப்பற்று என்பதனையும்.

நாட்டுப்பற்று என்பதிலேயே, வட்டாரப்பற்று, நகரப்பற்று, வீதிப்பற்று, வீட்டுப்பற்று என்பவைகள் உள்ளடங்கி உள்ளன; இவைகளைத் தனித்தனியே கூறிடுதல் கூச்சப்படத்தக்கது என்ற கருத்தில்,

பலரும் மொத்தமாக நாட்டுப்பற்று என்று மட்டுமே கூறுவர்; மற்ற ”பற்று’ தரக் குறைவானது என்ற எண்ணத்தில்.

தரம் குறைவா, இல்லையா என்பதிருக்கட்டும்; இப்படிப் பலவகை உண்டு. மறந்திடுதல் தேவையில்லை; மறுத்திடுதல் வீண் வேலை.

இந்தத் தொழிற்சாலை இங்கேன் துவக்கவில்லை?

எமது ஊரில் இன்னும் ஓர் கல்லூரி வேண்டும், மறுக்காதீர்.

எமது ஊரில் பாய்ந்தோடும் ஆற்று நீரை மற்றவர்க்கே தருகின்றீர்; இங்கே தேக்கம் கட்டி எமக்களிப்பீர், பாசன வசதி.

எமதூர் எழிலூராக எட்டு இலட்சம் பரிந்தளிப்பீர், தப்பாமல்.

எங்களூர் தொழிற்கூடந் தன்னில் எவரெவர்க்கோ வேலையா! இங்குள்ள நாங்களெல்லாம் என்ன கதியாவதய்யா! ஊரில் உள்ள தொழிற்சாலை தன்னில் பாதிக்கு மேல் ஊர் மக்கள் பங்குபெற வழி செய்யும்.

இவ்விதமெல்லாம் கேட்பவர்களுக்கு நாட்டுப்பற்றே கிடையாது என்று கூறிவிடுவது முறையாகாது. இவர்கள் தமது வட்டாரம் வளர்ச்சிபெற, நகரம் எழில்பெற வாதாடுகின்றார்கள், ஏன்? நாட்டுப்பற்று அற்றதனாலா? அல்ல! அல்ல! அந்த வட்டாரம் நாட்டில் ஒரு பகுதி! எனவே, அதற்காக வாதாடல் நாட்டுக்கு வாதாடல் ஓர் விதத்தில் என்பதனால்.

தம்பி! எளிதாகப் புரிந்திடுவதும், எவர்க்கும் தெரிந்திருப் பதுமான, நாட்டுப்பற்று, இனப்பற்று, மொழிப்பற்று எனும் இந்தப்

”பற்று’ தனித்தனி மனிதர்களின் உணர்ச்சி மட்டுமல்ல, கூட்டு உணர்ச்சி - இன்று நேற்றுத் தோன்றியதல்ல. நெடுங்கால மாக வளர்ந்து வந்திருப்பது.

இஃதேயன்றி, தொழிற்பற்று, கலைப்பற்று, சமூகத் தொண்டில்பற்று என்று பல உள.

இனி, இந்த வகையான ”பற்று‘, ஒன்றுக்கொன்று இணைந்துள்ளனவா மோதிக் கொள்கின்றனவா என்பது குறித்தும், இவைகளில் முதலிடம் முன்னிடம் எதற்கு, எங்ஙனம் வரிசைப்படுத்துதல் என்பது பற்றியும், இவைகளில் ஏதேனும் ஒரு “பற்று’ அரசோச்ச மற்றப்”பற்று’ அடிமையாகிவிடுவது அடுக்குமா என்பது குறித்தும் தெளிவு பெற்றிட வேண்டும்.

மார் தட்டிக் கூறிடலாம், ”பற்று’ எனக்கு இதிலேதான் என்று. ஆனால், மற்ற

வகையான பற்றினைச் சுட்டிக்காட்டி, இதிலே பற்று இல்லையா என்று கேட்டிடுவரேல், பதில் கூறல் எளிதல்ல.

இத்தனை வகையான ”பற்று’ ஒன்றோடொன்று மோதிடாமல் இருந்திடவும் வேண்டும், ஒன்றினைப் பெற்றிடுவதால் மற்றொன்றைக் கட்டாயமாக இழந்திட வேண்டிய நிலையும் ஏற்பட்டுவிடக் கூடாது.

”உயிரின் மீது உனக்கு பற்று இருக்குமானால், உடைமையைக் கொடுத்துவிடு’’ என்று மிரட்டல் பேச்சும்,

”உடைமை மீது உள்ள அடக்கமுடியாத பற்றுக் காரணமாக அவன் எதனையும் - மானத்தைக் கூட இழந்திடச் சம்மதித்தான்.’’ என்ற பேச்சும் எழுவதனைக் கேட்டிருக்கிறாய்.

“மகன் மீது அவனுக்கு அத்தனை”பற்று‘! அதனால்தான் அவன் ”கொலை’

செய்யக்கூடத் துணிந்தான்.'' என்று வழக்குகளின்போது வாதாடுவதாகக் கதைகளில் எழுதப்பட்டிருக்கக் காண்கிறோம்.

ஆகவே, "பற்று ஒன்றுக்காக வேறோர்"பற்று' இழந்திட வேண்டும் என்ற நிலையும், ஒரு "பற்று' நீக்கிக் கொண்டால்தான் மற்றோர் வகையான"பற்று'க் கொண்டிட முடியும் என்ற நிலையும் உண்டு.

"தன் சுகம், நன்னலம் என்பதிலே உள்ள"பற்று' போக்கிக் கொண்டல்லவா, தாய் தன் மகவு வளர்ந்திட வழி செய்கிறாள்! மகவிடம் தாய்க்கு உள்ள "பற்று' தனது நலனிலே உள்ள"பற்று' விட்டுக் கொடுத்துவிடத் தக்கது என்று உணர்த்துகிறது.

படக் கதைகளிலே பார்த்திருப்பாயே,

தம்பி! கெடுமதி யாளன், கருவிழியாளைப் பெற எண்ணி, பிடித்திழுத்து வந்து அவள் கற்பினைச் சூறையாட முனையும் வேளை, அவள் அவனைக் குத்திக் கொல்ல முயன்று தோற்று, துடி துடித்து, பிறகு அந்தக் கத்தியாலே தன்னைத்தானே குத்திக் கொண்டு இறந்துபடத் துணிகிறாள்; தூய கற்பின் மீது உள்ள "பற்று' சாகும் துணிவையும் கொள்ளச் செய்கிறது. ஆனால், அதேபோது காமவெறியன், தொட்டிலில் கிடந்திடும் அவள் மகவைத் தூக்கி வைத்துக் கொண்டு, எனக்கு இணங்கிவிடு! இன்பம் தந்திடு! இல்லையெனில், நீ பெற்ற இம்மகவை, உன் இன்பப் பெருக்கை, உன் குல விளக்கை, இதோ, இந்தச் சுவரினிலே வீசிக் கொன்றிடுவேன், கண்டிடச் சம்மதமா! என்று கேட்டு இடி இடியெனச் சிரித்திடுகிறான்.

ஒரு "பற்று'க்கும் மற்றோர்"பற்று'க்கும்

கடும் போர்! காரிகை தனக்குள்ள பற்றுகளிலே, எது காப்பாற்றித் தீர வேண்டிய பற்று என்பதனைத் தீர்மானித்தாக வேண்டும்.

படக் காட்சிகளிலே, கெடுமதியாளனின் மிரட்டலால் இத்தகைய இன்னல் வந்திடும்; வாழ்க்கையிலேயோ நித்தம் நித்தம் ஒவ்வொருவருக்கும் இதுபோன்ற "மனப் போராட்டம் நிகழ்ந்தபடி இருக்கிறது! எது விடப்படுகிறது எது கொள்ளப் படுகிறது என்பதனைப் பொறுத்து, அவன் எதனை விட்டுக் கொடுக்கவே முடியாத"பற்று' என்று கருதுகிறான். எதனைப் பரவாயில்லை விட்டுக் கொடுத்துவிடக் கூடியதே' என்று கருதுகிறான் என்பது விளக்கமாகிறது.

மனப் போராட்டத்தில் ஈடுபடுவோரின், தரம், இயல்பு சூழ்நிலை ஆகியவைக்கு ஏற்றபடி முடிவு எடுக்கப்படுகிறது.

ஆகவே, “பற்று’ பலவகைப்பட்டன என்பதுடன், பல விதமான”தரம்’ உள்ளன என்பதும், அவரவரின் நோக்கம் இயல்பு ஆகியவற்றுக்கு ஏற்ப, ”பற்று’களை அவர்கள் தரம் பிரித்துக் கொள்கிறார்கள் என்பதும் புரிகிறது.

இன்ன ”பற்று’த்தான் எல்லாவற்றினுக்கும் மேலானது, உயர்வானது, தரம்மிக்கது என்று பண்டங்களுக்குத் தரம் பிரித்து “முத்திரை’ பொறித்து விடுகின்றோமே, அதுபோல”பற்று’களைத் தரம் பிரித்து முதலாவது, அடுத்தது அதற்கு அடுத்தது என்று அறுதியிட்டுக் கூறிட எளிதில் முடியாது. தரம் பிரித்து முத்திரை பொறித்துள்ள நிலையிலேயே கூட, பண்டங்களின் உண்மையான தரம் கெட்டிருப்பதனையும் கெடுத்துவிடப்பட்டிருப்பதனையும் முத்திரைக்கும் பொருளின்

தரத்துக்கும் உண்மையான பொருத்தம் இல்லாதிருப்பதையும் காண்கின்றோம், இந்நிலையில், "பற்று' பற்றித் தரம் பிரிப்பது எளிதானதல்ல. ஆனால் பலகாலமாக நிலைத்து நிற்பது, அறிவாளர்களின் ஒப்புதலைப் பெற்றது, மிகப் பலரால் ஏற்றுக் கொள்ளப்பட்டிருப்பது என்ற காரணங்களைக் கொண்டு"பற்று'களுக்குத் "தரம்' கிடைத்திடும், அவ்விதமான தரமுள்ள பற்று என்றுதான்,

நாட்டுப்பற்று
இனப்பற்று
மொழிப்பற்று
மதப்பற்று

என்பனவற்றைக் குறிப்பிட்டிருக்கிறார்கள், இவை ஒன்றுடன் ஒன்று மோதிக் கொள்ளாதிருக்கும் நிலை வேண்டும்! மோதிக் கொள்ளுமானால் மனத்திற்கு உளைச்சல், சமூகத்திலே கிலேசம், கலகம்,

புரட்சி ஆகியவைகூட ஏற்பட்டுவிடக்கூடும். ஏனெனில், இந்தப் ”பற்று’ மற்றவைகளைக் காட்டிலும் ஆழமாகப் பதிந்திருப்பவை. அழுத்தமாகிவிட்டிருப்பவை; எவரும் எளிதிலே விட்டுவிட ஒப்புக்கொள்ள மாட்டார்கள்.

எதையும் விட்டுக் கொடுத்துவிடுவேன்; பொன்னும், பொருளும் இழந்திடத் தயார்! ஆனால், பிறந்த நாட்டை மட்டும் இழந்திட மாட்டேன். பெற்ற தாயினும் பிறந்த நன்னாடு நனி சிறந்தது என்று எழுச்சியுடன் பேசிடுவர். எவரும், பேசுவது மட்டுமல்ல, நாட்டுப்பற்று காரணமாக உயிரையும் துச்சமென்றெண்ணி, நெருப்பாற்றில் நீந்திடுவது போன்ற இன்னலை ஏற்றுக் கொண்டவர்கள் கோடிக்கணக்கில். நாடு காத்திட, நாடு மீட்டிட, நாட்டைத் தாக்கிடும் பகைவனை ஓட்டிட, கொட்டப்பட்ட குருதி கொஞ்சமல்ல. வீடிழந்து வாழ்விழந்து, காடுமேடு சுற்றி,

குகைகளில் பதுங்கி, மிருகங்களைப் போல வேட்டையாடப் படுவதையும் சகித்துக் கொண்டு, நாடு மீட்டிடப் பாடுபட்டோரின் தொகை ஏராளம். நாட்டுப்பற்று மற்ற எல்லா ஆசாபாசங்களையும் விரட்டிடும் வல்லமை கொண்டது; வீரத்தை ஊட்டிடும் வல்லமை கொண்டது; விழியிலே ஓர் ஒளி, நடையிலே ஓர் முறுக்கு, பேச்சிலே ஓர் எழுச்சி கொண்டிட வைப்பது கவிஞர்களின் இதயத்தில் நல்லிடம் பெற்றிடுவது. காரணம் கேட்டிட மாட்டார், பலாபலன் பார்த்திட மாட்டார், விளைவு குறித்து எண்ணிட மாட்டார், நாட்டுப் பற்றுக் கொண்டு விடுதலைப் போர் தொடுத்திடுவோர்.

மற்ற பலவிதமான ”பற்று‘களைவிட, மிக எளிதாக மனத்தை வயப்படுத்தக் கூடியதும் மிகப் பெரும்பாலானவர்களை ஆட்கொள்வதும், பன்னெடுங்காலமாக

நிலைத்திருப்பதுமான ”பற்று’ நாட்டுப்பற்று!

பேரறிவாளர் சிலர் இந்த நாட்டுப்பற்று மட்டும் போதாது, உலகப்பற்றும் வேண்டும் என்றும், நாட்டுப் பற்று எனும் உணர்ச்சி காரணமாக, ஒரு நாடு மற்றோர் நாட்டுடன் மோதிக் கொண்டிடும் நிலை, உலக அமைதியைக் கெடுத்து, மனிதகுல வளர்ச்சியை நாசமாக்குகிறது என்றும், ஆகவே, ”நாட்டுப்பற்று’ எனும் குறுகிய பிடியினின்றும் விடுபட்டு, சர்வதேச நோக்கு - உலகப் பொது நோக்கு - எனும் உணர்ச்சியை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்றும் கூறி வருகின்றனர்.

”ஒரே உலகம்’ என்பதனைத் தத்துவமாக்கி, வெண்டல் வில்க்கி எனும் அமெரிக்கத் தலைவரொருவர், ஏடுகூட எழுதினார்.

யாதும் ஊரே, யாவரும் கேளிர் - என்று

ஈராயிரம் ஆண்டுகட்கு முன்பே தமிழர்கள் நெறி அறிவித்திருந்தனர்.

நாட்டுப்பற்று முற்றிட முற்றிட, தனது நாட்டுப் புகழ்க்கொடி எங்கும் பறந்திட வேண்டும், எந்த நாடும் தனது சொந்த நாட்டின் ஆதிபத்தியத்தை ஏற்றுக் கொண்டாக வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டு, சொந்தநாடு செழித்திட, அங்குச் செல்வம் கொழித்திட, பிற நாடுகளை அடிமை கொள்வதும், சுரண்டுவதுமான கொடுமைகளையும் கூசாது செய்திடும் போக்கு ஏற்பட்டிருக்கிறது.

என் நாடு - என் நாட்டரசு - பல நாடு என் நாட்டிற்குப் பணிந்துள்ள - என் நாட்டரசு பேரரசு ஆகிவிட்டது - வல்லரசு ஆகிவிட்டது - ஆதிபத்திய அரசு ஆகிவிட்டது - சாம்ராஜ்ய மாகிவிட்டது - இதே போக்கிலே முனைந்து சென்றால் அண்டத்தையே கட்டி

ஆண்டிடத்தக்க வல்லமை எனது நாட்டுக்கு உண்டு என்பது மெய்ப்பிக்கப்பட்டுவிடும் என்று வேகமான உணர்ச்சி மனத்திலே புகுந்து குடைந்திடும்.

நாட்டுப்பற்று காரணமாக, நாட்டின் வளத்தைப் பெருக்கி, எழிலைக் கூட்டிடத் தலைமுறை தலைமுறையாக உழைத் துள்ளனர் மக்கள்.

இயற்கையாக அமைந்திருக்கும் ஒரு பூபாகத்தை, நாடு என்ற அமைப்பு ஆக்குவதற்காகச் செலவிடப்பட்ட நேரம், வெறும் ஆண்டுக் கணக்கிலே அடங்குவதல்ல; நூற்றாண்டுகள் பிடித்திருக்கின்றன; அறிவாற்றலைக் காட்டியவர்கள் உழைப்பினைக் கொட்டியவர்கள் சில ஆயிரவர் அல்ல; பல தலைமுறையினர்!

இயற்கை தந்த செல்வமே பூபாகம்

- அதிலே காணக்கிடக்கும் மற்றவை. ஆனால், மனிதனின் அறிவாற்றலால் தான் அந்த இயற்கைச் செல்வம் பயன் மிகுந்திடத்தக்க விதமான அமைப்பினை, வடிவத்தினைப் பெறுகிறது. நாடு என்ற பெயர் பொருத்தமாகிறது.

முழுவதும் காடாக இருந்த நிலை மாற்றப்பட்டு, காடு, கழனி, ஊர், நீர்நிலை எனும் பிரிவு கொண்டதாக அமைப்பு ஏற்பட்டிட மட்டும் எத்தனையோ நூற்றாண்டுகள் திறமையுடன் திட்டமிட்டு உழைத்திருக்க வேண்டும்.

கட்டுக்கடங்காத காட்டாறுகள் பூபாகத்தை வெள்ளக் காடுகளாக்கி வந்த நிலையினை மாற்றி, கட்டுக்குக் கொண்டுவந்து, ஆறுகள் பாசனத்துக்கும், போக்குவரத்துச் சாதனத்துக்கும் பயன்படத்தக்கதாக மாற்றி அமைக்கப்படுவதற்கு மட்டும் நுண்ணறிவு

மிக்கோரும், தோல்விகண்டு அஞ்சாதோரும், உழைத்திடத் தயங்காதோருமான பல்லாயிரவர் பற்பல ஆண்டுகள் பணியாற்றியிருந்திருக்க வேண்டும்!

கடலும் ஆறும், காடும் மேடும், தருக்களும் உயிரினங்களும் இயற்கை அளித்த செல்வங்கள். ஆனால், இந்தச் செல்வங்களை அதன் போக்கிலே விட்டு விட்டிருந்தால், ஒன்றை ஒன்று அழித்துக் கொள்ளும் நிலையோ, ஒன்றுக்கொன்று வித்தியாசம் தெரிந்துகொள்ள முடியாத நிலையோதான் ஏற்பட்டு விட்டிருந்திருக்கும். நாடு ஒரு வாழ்விடம் என்ற நிலை கிடைத்திருக்காது.

பழுது பார்க்கப்படாத வீடு இடிபாடு ஆகிவிடுவதையும், பதப்படுத்தப்படாத வயல் காடாகி விடுவதையும், ஒழுங்குப் படுத்தப்படாத நீர்நிலைகள் அழிவிடங்களாக மாறிவிடு வதனையும் காண்கின்றோம். வீடு,

வயல், ஆறு, குளம் என்று வடிவங்கள் பெற்ற பிறகே, வசதியாகப் பூபாகம் மாறிற்று. இந்த "வசதி' கிடைத்திட உழைத்தவர்கள், அவர்தம் வழி வழி வந்தவர்கள், தாம் வாழ்ந்திடும் நாடு தமது உழைப்பின் உருவம் என்பதனை உணரும்போது, ஓர்"பற்று' இயல்பாகவே ஏற்பட்டுத் தானே தீரும்?

இயற்கை, கடலின் அமைப்பையும், மலை, குன்றுகள் கணவாய்கள், பள்ளத்தாக்குகள் ஆகியவற்றினையும் ஆறுகளின் போக்கையும், விளைவனவற்றினையும், புதை பொருளாக உள்ள கனி வகைகளையும் தந்திட்டது. ஆனால், மனிதன் தன் வசதிக்காக, எடுத்துக் கொண்ட ஓயாத உழைப்பின் காரணமாகவே கடலோரத்தில் துறைமுகங்களையும் ஆற்றை ஒட்டி வாய்க்கால்களையும் துறைகளையும், போக்குவரத்துக்கான பாதைகளையும், மலைகளைக்

குடைந்துகூட வழிகளையும், தன்னாலே விளைந்திடுவனவற்றை வகைப்படுத்தியும், மிகுதியாக்கியும், புதைந்துள்ளனவற்றை வெட்டி எடுத்து விதவிதமாகப் பயன்படுத்திப் புதுப்பொருள்களை உண்டாக்கியும், நாடுகள் கண்டான். இயற்கை, வண்ணக்குழம்பு தந்ததென்றால், மனிதன் அதனைக் கொண்டு வனப்பான ஓவியம் தீட்டினான்.

எனவேதான், தமது திறனாலும் உழைப்பாலும் அமைந்த நாடுகளிடம் அந்தந்த நாடுகளில் உள்ளவர்களுக்குப் ”பற்று’ ஏற்படுகிறது.

இதற்கிடையில், இயற்கை சீறுவதாலோ, வேறு மக்கள் பாய்வதனாலோ அழிவு மிரட்டிக் கொண்டு கிளம்பும்போது, தடுத்திட, நாட்டைப் பாதுகாத்திட, பலவிதமான இன்னல்களை ஏற்றுக் கொண்டவர்கள் இன்னுயிரை ஈந்தவர்கள் எண்ணிக்கையிலடங்கார்.

இதுபற்றிய குறிப்புகள், பேச்சளவிலிருந்து பாட்டளவாகி, வரலாற்று உருப்பெற்று, வழிவழி வந்திடுவோருக்கு உணர்வூட்டி, இது என் நாடு! இந்த எனது நாட்டிடம் எனக்குள்ள "பற்று' இம்மியும் குறைந்திடுமேல், நான் நல்லோன் ஆகேன், நாடும் காடாகிடும் என்ற எண்ணம் பிறக்கிறது, உறுதி ஏற்படுகிறது; நாட்டுப்பற்று எனும் நல்லுணர்ச்சி வலிவுமிக்கதாகிறது; அந்த உணர்ச்சிக்கு அடுத்ததாகவே மற்ற உணர்ச்சிகள் இருந்திட வேண்டும் என்பது தத்துவம் ஆகிறது.

தத்துவமாக மட்டும் இது நின்றுவிடுவதில்லை. எழுச்சியூட்டத்தக்க படைப்புகள் மூலம் கற்றறிவாளர் நாட்டுப் பற்று ஊட்டுகின்றனர் - மக்கள் சொக்கிப் போகும்விதமான சுவை கூட்டி.

மலை, காடு, ஆறு, நகர், விளைநிலம், தொழில் ஆகியவை குறித்து,

ஒவ்வோர் நாட்டிலும், எழுச்சியூட்டத்தக்க கவிதைகள் இயற்றப்படுகின்றன. காவியங்களிலேயும் இவை பற்றிய ஓவியங்கள் காணப்படுகின்றன. ஓவியங்களே கூடத் தீட்டப் படுகின்றன. இவற்றின் மூலம் அவரவர்க்கும் தத்தமது நாட்டின் எழில்பற்றியும் ஏற்றம் பற்றியும் ஒரு பெருமித உணர்ச்சி ஊட்டப்படுகிறது.

எமது மலைமுகடும் மேகமும் கொஞ்சிடும் அழகே அழகு என்றும், எமது ஆறு புரண்டோடி வரும்போது எழும்பிடும் ஓசை, வெற்றி முரசொலி போன்றுளது என்றும், எமது வயல்களின் செழுமைபோல வையகத்தில் வேறெங்கும் கண்டிட முடியாது என்றும் கூறிக் கூறிக் களித்திடுகின்றனர் - தலைமுறை தலைமுறையாக இந்தப் பெருமித உணர்ச்சி மூலம் நாட்டுப்பற்று வளர்ந்திட மேலும் வழி கிடைக்கிறது.

இந்தக் குன்றின் சரிவிலே நடைபெற்ற பயங்கரப் போரின் போது என் முன்னோரில் ஒருவர் வீரதீரம் காட்டிப் போராடி, எதிரிகளை விரட்டி விரட்டி அடித்தார்; ஆனால், பகைவர்கள் பின்புறமாகப் பாய்ந்து வந்து அவரைக் குத்திக் கொன்று விட்டனர். நமது கொடிமரத்துக்குப் பக்கத்திலேயே வீழ்ந்து இறந்தார். அங்கு ஒரு நினைவுச் சின்னம் இருக்கிறது என்பன போன்ற நிகழ்ச்சிகளை, நினைவுகளைக் குறித்துப் பேசிக் கொள்ளும் இல்லங்கள் எண்ணற்றன!

அந்த ஆற்றங்கரை ஓரம்! இந்தத் தோப்பின் பக்கம்! அந்தக் கோயிலுக்கு அருகே - என்று வீரம் பூத்திட்ட இடங்களைக் காட்டிக் காட்டிப் பெருமிதம் கொண்டிடுவோர் ஆயிரமாயிரம்.

கட்டப்பட்ட கோட்டைகள், அமைக்கப்பட்ட அரண்கள், வெட்டப்பட்ட அகழ்கள்

பற்றியெல்லாம் பேசிடுவர். பெற்ற விருதுகள், மானியங்கள் பற்றிப் பேசுவோரும், பட்ட இன்னல்கள், ஏற்பட்ட இழப்புகள் குறித்துப் பேசுவோரும் நிரம்ப.

காவியம் - ஓவியம் - கவிதை - வரலாறு - சின்னங்கள் - ஒரு நாட்டின் பெருமையைப் பெற்றிட மக்களாற்றிய அரும் திறன் மிக்க பணி பற்றிய உரையாடல் நாட்டுப் பற்றினை வலுப்பெறச் செய்கிறது; வலுப் பெறுவதுடன் அந்தப் "பற்று' வழி வழி வருகிறவர்களுக்குக் கிடைத்துக் கிடைத்து"நெறி'யாகிவிடுகிறது; இயல்பான உணர்ச்சியுமாகிவிடுகிறது.

என் நாடு, என் மூதாதையர் உருவாக்கிய நாடு, என் உழைப்பால் வளப்படுத்திய நாடு. ஆகவே, எனக்கு என் நாட்டிடம் பற்று இருக்கிறது, இது இயற்கை - கடமை - பிறப்புரிமை - என்ற உணர்ச்சி, நாட்டு ஆட்சி முறை எவ்விதமானதாக இருப்பினும்

ஏற்படக் கூடியதுதான். ஆனால், இந்த நாட்டுப் பற்று அழுத்தமானதாகவும், எத்தகைய இழப்புகளையும் இன்முகத்தோடு ஏற்றுக் கொள்ளும் துணிவினைத் தரத் தக்கதாகவும், இருந்திடுவது, எந்த நிலையில் என்றால், நாட்டு நிலையினை உயர்த்திடவும், பாதுகாத்திடவும் பாடுபடவும், கருத்துரைக்கவும், அதற்காக எடுத்துக் கொள்ளப்படும் முயற்சிகளில் பங்கு பெறவும், தவறானவைகளைக் கண்டிக்கவும் உரிமை தரப்பட்டுள்ளபோதுதான்.

இது என் நாடுதான், என் முன்னோர்களின் இரத்தமும் என் வியர்வையும் இங்குக் கொட்டப்பட்டிருக்கிறது. என் உயிரினும் மேலாக நாட்டை நேசிக்கிறேன். ஆனால், என்னை நடைபிணமாக்கி, உரிமைகளை அழித்து உலுத்தர்களைக் கொழுத்திடச் செய்திடும் விதமாக ஆட்சி நடத்துகிறார்கள்,

யாரோ சிலர் - அவர்களின் சுயநலத்துக்கும் சுகபோகத்துக்கும் நாட்டுச் செல்வம் ப-யிடப்படுகிறது; மக்களுக்கு உணவளிக்கத் தேவைப்படும் வயல்கள் வெடித்துக் கிடக்கின்றன. ஆனால், பாசனத்துக்குப் பயன்படுத்தப் பட வேண்டிய ஆற்று நீரை மடக்கி அரச குடும்பத்தினர் விளையாட அழகுக் குளம் அமைத்திருக்கிறார்கள்! நாட்டு மக்கள் கந்தலாய் உடுத்து கிறார்கள், நாடாள்வோரும் அவர்தம் அடிவருடிகளும் பட்டு பீதாம்பரம் உடுத்திக் கொண்டு பவனி வருகிறார்கள்! நாட்டு மக்கள் மூச்சினை அடக்கி மூழ்கிச் சென்று கடலிலிருந்து முத்து எடுக்கிறார்கள். அந்த முத்து மாலைகள் காமவல்லிகளின் கழுத்திலே புரளுகின்றன, அவர்கள் நாடாள்வோரின் மஞ்சத்திலே புரள்கிறார்கள் - இந்த நாடு என் நாடு - ஆனால், இது எனக்கும்

சொந்தந்தான் என்று ஒப்புக்கொள்ள மறுத்திடும் மமதையாளரின் பிடியிலே சிக்கிக் கிடக்கிறது, சீரழிக்கப்படுகிறது - என்று குமுறிடும் நிலையில் ஒரு நாட்டு மக்கள் வைத்திருக்கப் படுவார்களானால், அந்த மக்களிடம் "நாட்டுப் பற்றுத் ததும்பிடும் என்று எதிர்பார்ப்பதற்கில்லை; தலை அசைவு மட்டும்தான் கிடைக்கும்.

கொடுங்கோலர்கள் - எதேச்சாதிகாரிகள் - ஆட்டிப் படைக்கும் நாடுகளில், எவரும் விரும்பி மதித்திடும், இயல்பாகப் பெற்றிடும் நாட்டுப் பற்று மிக மிக மங்கிக் கிடந்திடும்.

ஆனால், மக்களாட்சி முறை உள்ள நாடுகளில் "நாட்டுப் பற்று' மிகுந்து காணப்படும். ஏனெனில், நாட்டு நிலையை உருவாக்கும் பொறுப்பு நம் ஒவ்வொருவருக்கும் உண்டு என்ற கடமை உணர்ச்சியும், நாட்டிலே கிடைத்திடும்

வசதிகளில் நமக்கு உரிய பங்கு உண்டு என்ற உரிமை உணர்ச்சியும் அந்த மக்களுக்கு நிரம்ப ஏற்படுகிறது.

“யாரோ! ஆட்சி நடத்தும் இடம் அல்ல இது;”நாம்’ ஆட்சியை அமைத்துள்ள நாடு இது; நம் நாடு - என்ற உணர்ச்சி மேலோங்கி நிற்கிறது.

அமைந்திடும் ஆட்சி நல்லதாக இருக்கிறதா அல்லவா என்பதற்கு நாமே பொறுப்பு என்ற எண்ணமும்,

ஆட்சி சரியான முறையில் நடத்தப்பட்டு வருகிறதா என்று கவனித்துக் கொள்ள வேண்டியவர்கள் ”நாமே’ என்ற உணர்வும்,

ஆட்சியை மாற்றி அமைத்திடும் உரிமை பெற்றவர்கள் ”நாமே’ என்ற உணர்வும் மேலோங்கி நிற்பது ஜனநாயக முறையிலேதான்.

ஆகவே "என் நாடு' என்ற சொற்றொடருக்கு எதேச்சாதிகாரிகளிடம் உள்ள நாடுகளிலே கிடைத்திடக் கூடிய பொருளைவிட, வலிவை விட, பொருத்தமான பொருளும், தளராத வலிவும், தன்னிகரற்ற துணிவும், ஜனநாயக நாடுகளிலே ஏற்படுகிறது.

ஒரே குடும்பத்து மக்களிலேயே ஆர்ப்பரிக்கவும் அடக்கி ஆளவும், அகப்பட்டதைச் சுருட்டவும் ஒரு அண்ணனும், அடங்கிக் கிடக்கவும், தரப்பட்டதைப் பெறவும் தம்பிகளும் இருந்திடின், அந்தத் தாழ்நிலை பெற்றவர்கள், "என் குடும்பம்' என்று பெருமிதத்துடன் பேசிட முடிவதில்லை. நாடு, ஒரு பெரிய குடும்பம்; சம உரிமை கொண்ட நிலையில் மக்கள் வாழ்ந்திடும் இடம். எனவே"நாட்டுப்பற்று' என்பது ஜனநாயக நாட்டினில், சுவையுடன் பயனும் மிகுதியாகப்

பெறத்தக்க வலிவுமிக்க உணர்ச்சியாகிட வழி இருக்கிறது.

எந்த நாடு நான் பிறந்த நாடோ, எந்த நாட்டு வளத்திலே எனக்கு உரியன பெறும் உரிமை இருக்கிறதோ, எந்த நாட்டின் வடிவத்தை, அரசு முறையை, தொழில் அமைப்பை, சமூக நெறியை, மாற்றி அமைத்திடும் முயற்சியில் ஈடுபடும் உரிமை எனக்கு இருக்கிறதோ, அந்த என் நாட்டுக்கு வேறோர் நாட்டினால் ஆபத்து என்றால், நான் துடித்தெழாமல் இருந்திட முடியுமா! - இத்தகைய எண்ணம் கொழுந்துவிட்டெழுகிறது மக்கள் மனத்தில், ஜனநாயக நாட்டினில்.

ஜனநாயக நாட்டினில் ஆட்சி மக்களால், அமைக்கப்படுகிறது;

எதேச்சாதிகார முறையுள்ள நாடுகளில் யாரோ சிலரால் ஆட்சி அமைக்கப்படுகிறது.

அமைந்துவிடுகிற ஆட்சியிலே நல்லன கிடைக்கா விட்டால், மக்கள் அடிமை மனப்போக்கினர் ஆகிவிடக் கூடும். குமுறிக்கிடந்திடக்கூடும், அல்லது புரட்சி செய்திடக்கூடும்.

அமைக்கும் ஆட்சி நல்லது செய்திடாவிட்டால், அந்த ஆட்சியை அமைத்த மக்கள், தங்கள் தவற்றுக்காக, திறமைக் குறைவுக்காகத் தாமே வருந்திட வேண்டும்; மீண்டும் ஒரு முறை அவ்விதத் தவறு செய்திடக் கூடாது என்ற உறுதி மேற்கொள்ள வேண்டும்; வாய்ப்புக் கிடைக்கிறபோது புதியதோர் நல்லாட்சி அமைத்திட வேண்டும்.

ஆகவே, ஜனநாயக நாட்டில், நாட்டில் பிறந்தோம் நாட்டில் உழைக்கிறோம், நாட்டில் வாழுகிறோம் என்பதுடன் நாட்டில் ஆட்சியை நல்ல முறையில் அமைப்பவர்களும் நாமே என்ற பெருமித உணர்ச்சி கிடைக்கிறது;

அஃது ஓர் புதிய வலிவினை நாட்டு மக்கள் ஒவ்வொருவருக்கும் தருகிறது, அத்தகைய மக்களிடம் எழுந்திடும் "நாட்டுப்பற்று', நாடே பாசறையாகிட இல்லங்களெல்லாம் வீரக்கோட்டங்களாகிடச் செய்கிறது.

"பற்று'ப் பற்றி மேலும் சில கூற விழைகிறேன் - அடுத்த கிழமை.

அன்புள்ள

அண்ணாதுரை

3-10-65

24. பற்று - (2)

பற்று வெறி ஆகிவிடக் கூடாது
நாட்டுக்குப் பூபாகம் உண்டு; மதத்துக்குப் பூபாகம் இல்லை!
மதச் சார்பற்ற நாடுகளும் மதச் சார்புள்ள நாடுகளும்
பற்றே பற்றை அழித்திடப் பயன்படுத்துதல் கூடாது
பற்றுகளின் வகை பெருகப் பெருகப் பற்றாளரின் தொகை குறையும்!
தான் வாழ, சமூகம் வாழப் பற்றுக் கொள்க!

தம்பி,

நாட்டுப்பற்று, தத்தமது நாட்டினை வளமானதாக்கிட, உரிமையுடன் திகழ்ந்திடத் தேவைப்படும் அறிவாற்றலையும், வழிமுறைகளையும் பெற்றிடப்

பயன்படுத்தப்படுகிற வரையில் தூய்மை நிரம்பியதாக இருக்கிறது. ஆனால், எவரும் மறுக்கொணாததும், எவருக்கும் இயல்பாக எழுவதுமான "நாட்டுப்பற்று' உணர்ச்சியினைத் தூண்டிவிட்டு,"வலிவு' திரட்டி, வேற்று நாட்டினைத் தாக்கிடப் பயன்படுத்தினாலோ, நாட்டுக் குள்ளாகவே கொடுங்கோலாட்சியைப் புகுத்தினாலோ, நாட்டுப்பற்று எனும் உணர்ச்சி நாசகாரியத்துக்கு, அறமழித்திடும் செயலுக்குப் பயன்படுத்தப்படுகிறது என்று பொருள், கண்டிக்கத்தக்கதாக, வெறுக்க தக்கதாகி விடுகிறது, இந்தப் போக்கு.

நாட்டுப்பற்று மிக்கவர்களாக ரோம் நாட்டவர் எழுச்சியுடன் இருந்தனர். அதன் பயனாகக் கிடைத்த வீரத்தைப் பயன்படுத்தி ரோம் நாட்டு அதிபர்கள் வேறு பல நாடுகளைத் தாக்கி அடிமைப்படுத்தி, சுரண்டி, தமது

ரோம் நாட்டிலே வெற்றி வளைவுகளையும், வீரக்கோட்டங்களையும், மணி மாடங்களையும் அமைத்து, எழில் மிகுந்திடச் செய்தனர்.

ரோம் நாட்டவர் காட்டிய நாட்டுப்பற்று, பிற நாடுகளிலே இருந்துவந்த நாட்டுப்பற்றினை அழித்திடவே பயன்படுத்தப் பட்டது. அந்தக் கட்டம் பிறந்திடும்போதுதான் நாட்டுப்பற்று எனும் தூய்மையான உணர்ச்சி, தவறான வழியிலே பயன் படுத்தப்படுகிறது என்று பொருள்படுகிறது. இந்தப் போக்கினைப் பேரறிவாளர் கண்டித்தனர்; ஆனால், அவர்களை அடக்கிட இதே நாட்டுப்பற்று உணர்ச்சியைத்தான் ஆதிக்க வெறியர்கள் பயன்படுத்தினர்!

நமது நாட்டிடம் நமக்குப் பற்று இருப்பதுபோலத்தானே மற்ற நாட்டவர்க்கு அவரவர் நாட்டின்மீது பற்று இருக்கும், நம்முடைய நாட்டுப்பற்றுக் காரணமாக நாம்

எப்படி நம்முடைய நாடு அடிமைப்படக் கூடாது என்று எண்ணுகிறோமோ, அதுபோலத்தானே ஒவ்வொரு நாடும் அதனதன் நிலைகெடச் சம்மதிக்காது என்றெல்லாம் நாடு பல பிடித்திடும் போக்கினரான அதிபர்கள் எண்ணிடவேயில்லை.

போர் பல மூண்டதன் காரணம், நாட்டுப்பற்று எனும் உணர்ச்சியை ஆதிக்க வெறியர்கள் தவறான முறையிலே பயன்படுத்தியதுதான்.

நாட்டுப்பற்று காரணமாக, தமது நாட்டினைச் செல்வம் கொழித்திடும் திருநாடு ஆக்கவேண்டும் என்று எண்ணியவர்கள், அந்த நாட்டு மக்களுடைய நல்லாத ரவைப் பெறுகிறார்கள் எளிதாகவும், முழு அளவிலும்.

ஆனால், நாட்டினைச் செம்மைப்படுத்த, அங்குக் கிடைக்கும் இயற்கை வளத்தை,

உழைப்பின் நேர்த்தியால், தொழில் திறமையால் பன்மடங்கு அதிகமாக்கிடும் முறையைப் பின்பற்றாமல், பிறநாடுகளைத் தாக்கிக் கொள்ளையடித்துப் பொருளைத் தமது நாட்டிலே கொண்டு வந்து குவிப்பதும், பிற நாட்டவர்களைத் தோற்கடித்து அடிமைகளாக்கிக் கொள்வதுமான கொடுமையில் ஈடுபட்டனர், ஆதிக்க வெறி கொண்ட அதிபர்கள்.

பிற நாடுகளிலே காணப்பட்ட பளிங்கு மண்டபங்களை இடித்து நொறுக்கி, அந்தப் பளிங்குக் கற்களைக் கொண்டு வந்து தமது நாட்டிலே மாளிகைகள் அமைத்தனர்! காணீர் எமது நாட்டின் எழிலை என்று.

பிற நாடுகளிலே மக்கள் அலறித் துடித்திடவும், ஓலமிடவும் செய்துவிட்டு, கொள்ளைப் பொருளைக் கொண்டு தனது நாட்டிலே கோலாகல வாழ்வு அமைத்து, இசை

விருந்து அளித்தனர்.

பிற நாடுகளைச் சுடுகாடுகளாக்கி விட்டுத் தமது நாட்டினைத் திருநாடு ஆக்கி மகிழ்ந்தனர்.

இதனால் ஏற்பட்ட அழிவினைக் கண்ட பிறகே, நாட்டுப் பற்று மட்டுமே மேலானது என்று எண்ணிட வேண்டாம்.

உலக முழுவதும் வாழ்ந்திட வேண்டும்.

மனித குலம் தழைத்திட வேண்டும்.

என்ற புது உணர்ச்சியினை ஊட்டிடத் தலைப்பட்டார்கள்.

ஆனால், இந்த உணர்ச்சி காரணமாக, நாட்டு எல்லைக் கோடுகள் கலைக்கப்பட்டு, ஒரு நாட்டுக்கு ஒரு அரசு என்றிருக்கும் முறை நீக்கப்பட்டு, ஒவ்வொரு நாட்டுக்கு ஒவ்வோர் விதமான கொடி, பண் என்று உள்ள முறை

கைவிடப்பட்டு, உலகம் ஒரே அரசின் கீழ், ஒரே கொடியின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளதா என்றால், இல்லை.

உலக நாடுகள் பலவும் உலகிலே நாட்டுக்கு நாடு மோதுதல் ஏற்படாது தடுத்திடும் நோக்குடன் அமைத்துள்ள ஐக்கிய நாடுகள் மன்றத்தின் மணிமாடத்திலே இன்று 117 நாட்டுக் கொடிகள் பட்டொளி வீசிப் பறக்கின்றன, மன்றத் தலைவராக இத்தாலி நாட்டவர், பான்பானி என்பார் தேர்ந்தெடுக்கப்பட்டார் என்று அறிவிக்கப்பட்டவுடன், இத்தாலியர்கள் ஓர் பெருமிதம் கொண்டிடத்தான் செய்கின்றனர்.

உலக நாடுகள் மன்ற அமைப்போ, சர்வதேச ஒருமைப்பாட்டு உணர்ச்சியோ, நாட்டுப் ”பற்று’ எனும் உணர்ச்சியினைத் தேவையற்றது ஆக்கி விடவில்லை.

”பற்று’ வெறியாகி விடாமல் பார்த்துக் கொண்டால் போதும், அதுவே மாபெரும் வெற்றி என்று கொள்ளலாம் என்று கூறத்தக்க நிலை மட்டுமே மலர்ந்திருக்கிறது.

”நாட்டுப்பற்று’க் கொண்டோர், தமது நாட்டின் ஏற்றம், எழில், பலரும் கண்டு வியந்து பாராட்டிடத்தக்கதாகிட வேண்டும் என்ற தூய எண்ணத்துடன், அறிவாற்றலைப் பயன்படுத்திப் பணியாற்றிடும்போது, அந்த நாட்டுக்கு மட்டுமல்ல, அந்த நாடு மூலம் உலகுக்கு நலன் பல கிடைக்கிறது.

இந்தப் புது முறையைக் கண்டுபிடித்த நாடு எனது நாடு என்று பெருமிதத்துடன் கூறிக்கொண்ட போதிலும், கண்டு பிடிப்பினால் ஏற்படும் நலன், அந்த நாட்டுக்கு மட்டுமல்ல, உலக நாடுகள் பலவற்றினுக்கும் கிடைத்திடுகிறது; உலகு செழிக்கிறது.

எனது நாட்டுத் தத்துவம், மொழி, இலக்கியம், கலை, தொழில் நுட்பம் என்று கூறிப் பெருமைப்படுவது முதல் கட்டம்; ஆனால், அது படிப்படியாக வளர்ந்து உலகிலே பல்வேறு நாட்டவரால் பாராட்டப்படும் கட்டம் பிறந்திடக் காண்கிறோம்.

வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான் புகழ் கொண்ட தமிழ் நாடு - என்றன்றோ பாரதியார் கூறினார்.

உலகினையும் மறந்தாரில்லை!
தமிழ்நாட்டையும் மறந்தாரில்லை!!

"நாட்டுப்பற்று' இன்று ஒவ்வொரு நாட்டு மக்களுக்கும் கிட்டத் தட்ட"இயல்பு' ஆகிவிட்டது. வளமும் எழிலும், வரலாற்றுச் சிறப்பும் இருந்தால் மட்டுமே, "பற்று' அந்த நாட்டினிடம் ஏற்படும் என்பது அல்ல நிலை.

பாலைவனம் மிகுந்ததெனினும்,

பனிக்காடு நிறைந்த தெனினும், பசி போக்கிடும் வளம் அற்றதெனினும், எந்தன் நாடு இது! இதிலே பிறந்தேன், வாழ்கிறேன், மடிந்துபட இருக்கிறேன். இந்த என் நாடு எனக்குப் பொன்னாடு, ஏனெனில், இது என் தாய்நாடு என்று கூறிடுவர் எவரும்.

வளமும் வல்லமையும், எழிலும் ஏற்றமும் எந்த நாட்டில் உளதோ அதனை எனது நாடு என்று கொள்வேன் என்று கூறிடுவார் எவரும் இல்லை. வளம் தேடியோ, வாழ்வின்பம் தேடியோ, வேறோர் நாட்டிலே சென்று இறுதி வரையில் இருப்போரும்கூட, இடமளித்த நாட்டினை, எழில்மிக்க நாடு, ஏற்றம் மிக்க நாடு என்று பாராட்டுவரேயன்றி, எனது நாடு! தாய் நாடு! என்று பற்றுடன் கூறார்; இயற்கையான எண்ணம் இதற்கு இடம் கொடுப்பதில்லை.

இருந்திடத்தக்கதென்று ஒரு நாட்டைச் சென்றடைந் தவர்கள், அந்த நாட்டு நடை

உடையினை, மொழி நயத்தினைப் பாராட்டி மேற்கொண்டிடக் கூடும்; ஆயினும், இது என் தாய்நாடு என்று கூறிடுவதில்லை.

தமக்கு மகிழ்வுமிக்க வாழ்வளித்த நாட்டினையும், தமது தாய்நாடு என்று கொள்ளாதது மட்டுமல்ல, அங்குக் காணப்படும் எழிலும் ஏற்றமும், வளமும் வல்லமையும் தன் தாய்நாட்டிலே இல்லையே என்ற ஏக்கம் கொள்வர்; எப்படியேனும் இந்த நாடு பெற்றுள்ள சிறப்பினை என் தாயகம் பெற வேண்டும் என்ற ஆர்வம் கொள்ளுவர்; தாயகம் சீர்பெற முயல்வர். இத்தனைச் சிறப்புள்ள இந்த நாட்டையே இனி நான் என் தாயகமாகக் கொள்வேன் என்று கூறிடுவதில்லை.

மடி நிறையப் பால் ததும்பிடும் நிலையிலுள்ள பசுவே என் தாய் என்று கன்று கூடக் கருதுவதில்லையே -

கிடைக்கிறதோ இல்லையோ, நாவுலருகிறது என்றாலும் தாய்ப்பசுவிடமல்லவா துள்ளி விளையாடுகிறது!

தாயகத்திடம் ”பற்று’ மிகக் கொண்டவர்கள், ஏதாவதோர் செய-ன் மூலம், இந்தத் தரணி புகழ்ந்திடும் நிலையினைத் தாயகம் பெற்றிட வேண்டும், அந்த நோக்கத்துடன் நாம் நமது அறிவாற்றலைப் பயன்படுத்துதல் வேண்டும் என்று முனைந்திடுவர்.

குறுக்கு வழி தேடிடும் இயல்பினர், பிறநாடுகளைத் தாக்கித் தாழ்த்திப் பொருள்திரட்டி, தன் தாயகத்தின் நிலையினை ஒளியுள்ளதாக்கிட முயல்வர்.

எதற்காகவும் பாடுபடும் இயல்பு அற்றோர், உள்ளது போதும் என்றெண்ணி உறங்கிடச் செய்வர்; நமக்குள்ள தாயகம்

இந்நிலையிலுளது, நாம் என்ன செய்வது என்று இருந்துவிடுவர்,

இதுபோல உள்ள பல்வேறு நினைப்பினரும் நிலையினரும், தத்தமது தாயகத்திடம் ”பற்று’ அற்றவர்களாகிவிடுவதில்லை. புகழ்பாட மறப்பதில்லை.

நாட்டுப்பற்றுக் காரணமாக எழுதப்பட்டுள்ள ஏடுகளைப் பார்க்கும்போது, தாய்நாட்டுச் சிறப்பினை விளக்கிடுவது மட்டுமல்ல, பிற நாடுகளைத் தாழ்த்திடும் மனப்போக்கும் மிகுதியாக எழுதப்பட்டிருப்பதனைக் காணலாம்.

தமது நாடு தவிர மற்ற நாடுகளை, மிலேச்சர்கள் நாடு என்றும், இருண்ட கண்டம் என்றும், அநாகரிக நாடு என்றும் எழுதிடுவதனை முறை எனக் கூடக்

கொண்டிருந்தனர், வரலாற்று ஏடு தீட்டிடும் திறன் படைத்தோர் கூட.

டாக்டர் ஜான்சன் என்பார் ஆங்கில நாட்டவர், அறிவு மிக்கவர்! அவர் அகராதி தயாரித்தபோது அதிலே "ஓட்' எனும் தானியத்தைப் பற்றிப் பொருள் தரும்போது தமது நாட்டுப் பற்றினை மட்டுமல்ல, பிற நாட்டினைத் தாழ்த்திடும் போக்கினையும் வெளிப்படுத்திக் கொண்டார்.

ஓட் - ஒருவகைத் தானியம்; இது இங்கிலாந்து நாட்டில் குதிரைகளுக்குத் தீனி; ஸ்காத்லாந்து நாட்டு மக்களுக்கு இது உணவு.

என்று பொருள் தந்திருந்தார் ஜான்சன். சங்கீதமா அது!' காது குடைகிறது என்றும், உணவா அது, குமட்டல் எடுக்கிறது என்றும், நடனமா அது, பேயாட்டமாக இருக்கிறது என்றும், பேச்சா அது, கூச்சலாக இருக்கிறது

என்றும், மற்ற நாடு குறித்துக் கூறுவர்; வீண் வம்பு செய்திடுவோர் அல்ல, விவரம் தெரிந்தவர்கள் கூட!

கையாலே தொட்டுப் சாப்பிடுகிறார்கள்!! என்று மேனாட்டினர், நமது சாப்பிடும் முறை பற்றிக் குறிப்பிடுகிறார்கள் அல்லவா?

அதிலே கேலி மட்டுமல்ல. பச்சாதாபம் கூடக் கலந்திருக்கிறது தமது நாட்டிலுள்ள உணவு உட்கொள்வதற்கான பழக்கந்தான் சிறந்தது, மேலானது, நாகரிக மக்களுக்கு உரியது, எவரும் பின்பற்ற வேண்டிய விதத்தது என்ற அழுத்தமான நம்பிக்கை அவர்களை அவ்விதம் பேசச் சொல்கிறது.

ஆணும் பெண்ணும் கட்டிப் பிடித்துக் கொண்டு நடனமாடுகிறார்கள்; கண்றாவி! சகிக்கவில்லை!! என்று, மேனாட்டு நடனம் குறித்து நாம் பேசும்போது, என்ன எண்ணிக்

கொள்கிறோம்; அதுபோலத்தான் அவர்கள் நம்முடைய முறைபற்றி எண்ணுகிறார்கள்.

சர்வதேச உணர்ச்சி, நாட்டுப்பற்று என்பதைத் தேவையற்றது ஆக்கிவிடத்தக்க வல்லமை பெற்றிடவில்லை என்றாலும், ஒரு நாட்டவர் மற்ற நாட்டவரின் பழக்க வழக்கங்களைக் கேலி செய்து, கண்டித்து, கேவலப்படுத்தும் போக்கை வெகுவாகக் கட்டுப்படுத்திவிட்டிருக்கிறது.

இப்போது நம்முடைய விருந்தினராக வருகிற மேனாட்டர், கையால் எடுத்துச் சாப்பிடுவதும் நாம் கரண்டி கொண்டு சாப்பிடுவதுமான நிலை!

நாட்டுப்பற்று கேவலப்படுத்தப்பட்டால், கேலி செய்யப்பட்டால், சீற்றம் பீறிட்டுக் கொண்டு கிளம்பும். மனத்திலே வேதனைப் புயல் வீசும், பகை மூளும் என்பதனை

உணர்ந்து கொண்டுள் ளனர். இது நாட்டுப்பற்று இன்றும் எத்தனை அழுத்தமான இடம்பெற்றிருக்கிறது என்பதனை நன்றாக விளக்குகிறது.

"நாட்டுப்பற்று'க் கொள்வதிலே கெடுதல் ஏதுமில்லை; அந்தப் பற்று; தக்கவிதமாகப் பக்குவப்படுத்தப்பட்டால், நற்பலனே கிடைத்திடுகிறது.

வருகிற தொல்லையெல்லாம், அவரவர் தத்தமது நாட்டிடம் "பற்று' கொண்டிருப்பதிலே ஏற்படுவதில்லை, ஒரு நாட்டுப் பற்றுக்கும் மற்றோர் நாட்டுப்பற்றுக்கும் போட்டி - பகை - ஏற்படும்போதும், நாட்டுப் பற்றுக்கும், மற்ற வகையினதான இனப்பற்று, மொழிப்பற்று, மதப்பற்று போன்றவைகளுக்கும் மோதுதல் ஏற்படும்போதுதான், தொல்லை மட்டுமல்ல,

ஆபத்தே மூண்டுவிடுகிறது.

இந்த நாட்டு மகன்தானே நீ?

ஆமய்யா! ஆம்! இந்த நாட்டவனே!

பிறந்த நாட்டை இகழ்பவன் பேயன்? ஒப்புக் கொள்கிறாய்!

ஆம்! பிறந்த பொன் நாட்டை எவனே இகழ்வான்?

இந்த நாடு ஏற்றம் பெறவேண்டும்.

ஆம்! ஏற்றம் பெறத்தான் வேண்டும்.

அதற்காகப் பாடுபடத் தயார்தானே?

நிச்சயமாகத் தயார்!

எந்த இன்னலையும் ஏற்றுக் கொள்ளத் தயார்?

என்ன இன்னலையும் பொருட்படுத்த மாட்டேன்.

நாடு வாழ்ந்திட, எதனையும்

இழந்திடச் சம்மதம். உயிரையும்!

இதிலென்ன ஐயப்பாடு! உயிரையும் தரச் சம்மதிக்கிறேன்.

உயிரையும்! நிச்சயமாகத்தானே! அப்படியானால். . .

என்ன செய்திட வேண்டும் செப்பிடு!

இந்த நாடு ஏற்றம் பெற, வாழ்ந்திட, நாட்டு மக்கள் சிலர், இது என் மதம் என்றும், சிலர் அது என் மதம் என்றும் கூறும் மடமை தொலைய வேண்டும். ஒரே மதமாக வேண்டும்! நாட்டுக்கு ஒரு பொது மதம்! தனித்தனியாக உள்ள பல்வேறு மதங்கள் உள்ளனவே, அது கூடாது. ஒரு நாடு - ஒரு கொடி! இல்லையா! அதுபோல ஒரு நாடு - அதற்கு ஒரு மதம்! இந்த இலட்சியத்துடன், நீ உன் மதம் என்று எதையோ கூறிக் கொள்கிறாயே, அந்த மதத்தை விட்டுவிட

வேண்டும்; நாட்டுக்கு என நல்லோர் பார்த்து எந்த மதத்தைத் தேர்ந்தெடுக்கிறார்களோ, அதனை உன் மதமாகக் கொண்டிட வேண்டும்; நாடு வாழ்ந்திட, ஏற்றம் பெற! என்ன சொல்லுகிறாய்?

தம்பி! எத்தனை பெரிய சிக்கல் புரிகிறதா! நாட்டுப்பற்று - மதப்பற்று - இருவேறு "பற்று' - இவை இரண்டிலே, ஒன்றின் ஆணைக்கு ஏற்ப மற்றொன்று அடங்கி நின்றிட வேண்டும் - இப்படி ஒரு சிக்கல் எழுந்திடின், என்ன ஆகும்! நினைப்பதற்கே நடுக்கமெடுக்கிறதல்லவா?

ஒரு நாட்டிலுள்ளோர் அனைவரும் ஒரே மதத்தினராக இருந்தாக வேண்டும்; அப்போதுதான் "நாட்டுப்பற்று' ஏற்படும் என்று கூறுவதற்கான ஆதாரம் ஏதும் இல்லை.

ஒரு நாட்டுக்குள்ளாகவே பல மதங்கள் உள்ளன; ஒரே மதம் பல நாடுகளிலே உள்ளது!

ஒரு நாட்டுக்கு ஒரு மதம் என்பது, நாட்டுக்கான இலக்கணங்களிலே ஒன்று அல்ல.

நாடு - ஒரு எல்லைக்கோட்டுக்குள் நெடுங்காலமாக அமைந்துள்ள ஒரு பூபாகம்; நீண்ட நெடுங்காலமாக அங்கு வாழ்ந்து வரும் மக்கள், அந்தப் பூபாகத்தில், தலைமுறை தலைமுறையாகப் பாடுபட்டுப் பாடுபட்டு வளம் ஊட்டி வந்திருக்கிறார்கள், எழில் கூட்டி இருந்திருக்கிறார்கள் அந்தப் பூபாகத்தையோ, அதிலுள்ள பொருள்களையோ, வேறொரு பூபாகத்தவர் தாக்கிட, கெடுத்திட, பறித்திட முயன்றபோது கடும் போரிட்டுத் தடுத்திருக்கிறார்கள். விரட்டி அடித்திருக்கிறார்கள். அந்தப் பூபாகத்துத் தட்ப வெப்ப நிலைமைக்கேற்ற வாழ்க்கை முறை அமையப்பெற்று, அதன் காரணமாகச் சில பல தனி

இயல்புகள், திறமைகள் பெற்றிருக்கிறார்கள், உழைப்பின் காரணமாக. உறைவிடமாக்கிக் கொண்டதன் காரணமாகவும், பாதுகாத்திட்ட காரணத்தாலும், அந்த நாடு அவர்களுக்குச் சொந்தமாகிறது; அதனிடம் ஓர் பந்தம் உண்டாகிவிடுகிறது; அந்த மக்களின் வாழ்வு அந்த நாட்டு இயல்போடு பின்னிப் பிணைந்துவிடுகிறது; அதனால் ஒரு பற்று.

இந்தப் ”பற்று’ கெடும்விதமாக வேறு ஏதேனும் உணர்ச்சி - அல்லது பற்று - அவர்களுக்கு எழுந்திடுமானால், அத்தகைய உணர்ச்சியை - பற்றினை - விட்டாக வேண்டும். நாட்டுப்பற்று நாசமாகாதிருக்குமானால், ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள், நெடுங்காலமாக, கூட்டாக வாழ்ந்து வரும் பூபாகம், நாடு என்பது போல, மதம் என்பதற்கு, ஒரு பூபாகம் கிடையாது; இன்ன எல்லையிலிருந்து இன்ன எல்லைவரை உள்ள இடம், இன்ன மதம்

இருந்திடும் இடம் என்றோர் விதி இல்லை.

ஒரே நாட்டுக்குள் பல மதம், பல நாட்டுக்குள் ஒரு மதம் என்ற நிலை இருக்கும்போது, மதத்தையும் நாட்டையும் பிணைத்துப் பேசுவது பேதைமை - பிணைத்துப் பேசி நாட்டுப் பற்றுக்காக உன் மதப் பற்றினை நீக்கிக்கொள் என்று கட்டளையிடுவது கொடுமை; அத்தகைய கட்டளையிட்ட எந்த அரசும் நிலைத்து நின்றதில்லை. மதம், மனத்திலே இடம்பெறும், ஓர் தூய்மை - நாட்டு எல்லைக்குக் கட்டுப்பட்டுக் குறுகுவதுமல்ல, பெருகுவதுமல்ல. மதம் பரவிட வேண்டும் என்பதற்காகவும், பல நாடுகளிலே நாம் நம்பிடும் மதம், அரச மதம் ஆகிட வேண்டும் என்பதற்காகவும் நடத்தப்பட்ட புனிதப் போர்களே, இரத்தம் பெருகிட வழி செய்ததேயன்றி, மதத்துக்கும் நாட்டுக்கும் பிணைப்பு ஏற்படுத்த முடியவில்லை. எனவே

நாட்டுப்பற்றுக்காக மதப்பற்று நீக்கிக் கொள்ள வேண்டும் என்று கேட்பவர், நாட்டுப்பற்று மதப்பற்று எனும் இரு உணர்ச்சிகளின் தன்மையையுமே அறியாதவர்கள். அவர்களின் கட்டளையை ஏற்க மறுப்பதும் எதிர்த்து நிற்பதும் நாட்டுப் பற்றுக்கு ஊறு செய்வதாகாது; கொடுங்கோலை எதிர்த்திடும் கடமையாகிவிடும்.

பிறர் கட்டளையிடுவது கொடுமை, அதுபோன்றே தனி மனிதர்களுக்கே, தமக்குள்ளாகவே, நாட்டுப்பற்று முக்கியமா, மதப்பற்று முக்கியமா, என்பது போன்ற குழப்பம் ஏற்படுவது அறியாமை அல்லது அகந்தையின் விளைவு.

கிருத்தவமார்க்கம் பரவியபோது, அரசின் ஆணையை ஏற்பதா, அருளாளர் ஆணையின்படி நடப்பதா என்ற சிக்கல் எழத்தான் செய்தது. ரோம் சாம்ராஜ்யாதிபதி

கிருத்தவ மதத்தையே தடுத்திடலானான். அரச ஆணையைக் குலைத்து, நாட்டுப்பற்றை நாசமாக்கி, மக்களைக் கெடுத்திடுவது அம்மதம்! - என்று முழக்கமெழுப்பினான்.

நமது மதத்தை மதிக்க மறுத்து, அழித்திடத் துடித்திடும் இந்த அரசுக்கு நாம் அடங்கிக் கிடப்பதா, வரி செலுத்துவதா என்று கிருத்தவ மார்க்கத்தினரில் சிலர் கொதித்தெழுந்து கேட்ட போது ஏசு,

அரசனுக்கு அளிக்க வேண்டியதை அரசனுக்கு அளித்திடுக!

ஆண்டவனுக்குத் தரவேண்டியதை ஆண்டவனுக்குச் செலுத்திடுக!

என்று கூறினார். கிருத்தவ மதத்தை அழித்திடத் துடித்த அரசு என்ற போதிலும், அந்த அரசின் கீழ் உள்ள குடிமக்கள் என்ற முறையில், வரி கட்டத்தான் வேண்டுமென்றார்,

நமது மதத்திற்கென ஏன் ஒரு "ராஜ்யம்' அமைத்திடக் கூடாது என்று கேட்டவர்களுக்கு ஏசு,

என் ராஜ்யம் இந்த லோகத்தில் இல்லை என்று கூறினார்.

மதம், மனிதனுடைய மனத்தை ஆட்சி செய்வது - ஒரு மண்டலத்தை அல்ல.

எந்த மண்டலத்திலே உள்ளவரெனினும், அவர்கள் தமது மனத்தில் எந்த மதத்திற்கு இடமளிக்கின்றனரோ, அந்த மதத்தினராகின்றனர்.

நாட்டு எல்லை, மத உணர்ச்சிக்குத் தடுப்புச் சுவர் எழுப்புவதில்லை. எனவே நாட்டுப்பற்றா, மதப்பற்றா, எது தேவை என்ற கேள்வியே கோணல். அதற்கான ஆணை பிறப்பித்தல் கொடுமை.

இன்று பல மதங்கள் இடம் பெற்றுள்ள

நாடுகளிலும், பொதுவாக அறிவுத் தெளிவுள்ள நாடுகளிலும், மதத்திற்கும் அரசுக்கும் தொடர்பு ஏற்படுத்தாமல், அரசு, மதச்சார்பற்றதாக அமைக்கப்படுகிறது. இந்தியா அதுபோல, ஆனால், பாகிஸ்தான், மதத்தைப் பிணைத்துள்ள அரசு - இஸ்லாமியக் குடியரசு என்றே முத்திரை பொறிக்கப்பட்டுள்ளது.

ஒரு நாட்டிலே, மிகப் பெரும்பாலான மக்கள் ஒரு மதத்தையும் குறைந்த எண்ணிக்கையுள்ளோர் வேறோர் மதத்தையும் கொண்டிருக்கலாம்; ஆனால், நாட்டுப்பற்று என்பதில் மதவேறுபாடு குறுக்கிட்டுக் குலைப்பதில்லை, மத வேறுபாடு இருப்பதைக் காட்டி நாட்டுப்பற்று இன்னாருக்கு இருக்க முடியாது என்று வாதாடுவதுமில்லை.

ஒரு நாட்டுக்குள், பல மதத்தினர் இருப்பினும் அனைவருக்கும் அந்த நாட்டிடம் பற்று இருந்திடும்; அதிலே ஐயப்பாடு

கொள்வது தவறு என்பது போலவே, ஒரே மதம் பல நாடுகளிலே இருப்பதாலே அந்த நாடுகள் யாவும், நேச நாடுகளாக வாழ்ந்து வரும் என்றும் சொல்வதற்கில்லை. வரலாற்று நிகழ்ச்சிகள் பல உள.

இப்போது மலேஷியாவை அழித்தொழித்தாக வேண்டும் என்று உருட்டி மிரட்டிக் கொண்டுள்ள இந்தோனேஷியா, இஸ்லாம் மதத்தினர் நிரம்பிய நாடு, மலேஷியா போலவே. ஒரு இஸ்லாமிய நாடு மற்றோர் இஸ்லாமிய நாட்டை அழித்திடத் துடிக்கிறது. மதம், அந்த இரண்டு நாடுகளுக்குள் நேசத் தொடர்பை ஏற்படுத்த வில்லை; பகை கக்கப்படுகிறது. பகை மூண்டிருப்பதற்குக் காரணம் வேறு.

அதுபோலவே, வட வியட்நாம் தென் வியட்நாம் இரு பகுதிகளும் புத்தமதத்தார் பெருமளவு உள்ள இடங்கள்; ஒன்றோடொன்று

மோதிக் கொள்கின்றன. காரணம் வேறு. "நாட்டுப்பற்று' அந்த நாட்டிலே உள்ள அனைவரும் ஒரே மதத்தினராக இருந்தால் மட்டுமே ஏற்படும் என்பது மடமை.

அதுபோலவே, மதப்பற்று காரணமாக, தனது நாட்டிடம் பற்றுக் கொள்ளாது, அதே மதத்தைக் கொண்டுள்ள வேறு நாட்டுக்குத் துணை நிற்பதும் மடமை, ஆனால், மிகப் பெரும்பாலான மக்களுக்கு இத்தகைய கெடுமதி பிறப்பதில்லை.

ஒரு நாட்டிடம், அங்குப் பிறந்த காரணத்தால் அங்கு முன்னோர்கள் வாழ்ந்திருந்த காரணத்தால் ஏற்பட்டுவிடும் தொடர்பு, அங்கு உழைத்துப் பயன்பெற்று வாழ்ந்து வருவதனால் பலப்பட்டுப் பலப்பட்டு, "பற்று' ஆகிறது. இந்தப் பற்று வேறு எந்தப் பற்றுக் காரணமாகவும் கெடுவதில்லை, வழி மாறுவதில்லை.

நாட்டுப்பற்று ஏற்பட வேண்டுமானால் நாட்டிலுள்ளோர் அனைவரும் ஒரே மதத்தினர் ஆதல் வேண்டும் என்பது எத்துணை கொடுமை நிரம்பியதோ அதுபோன்றதேதான், நாட்டுப்பற்று ஏற்பட, அல்லது கெடாதிருக்க, நாட்டினி லுள்ளோர் அனைவரும் ஒரே மொழியினராக இருந்திட வேண்டும். ஒரே மொழியின் ஆட்சியை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று கூறுவது.

சிற்சில நாடுகளிலே மட்டுமே, ஒரு நாட்டுக்கு ஒரு மொழி என்ற நிலை இருக்கிறது; சிக்கல் இல்லை.

பற்பல நாடுகளில், பல மொழியினர் கொண்டதாகவே சமூகம் அமைந்திருக்கிறது. ஆனால், வேறு வேறு மொழி பேசிடுவோராக இருப்பினும், அந்த நாட்டிலே, இரத்தமும் வியர்வையும் கொட்டி வளப்படுத்தியவர்கள், வாழ வைத்தவர்கள் அந்த மக்கள்; அதன்

காரணமாக அவர்களுக்கு ஏற்பட்டுள்ள “பற்று’ ஒருபோதும் குன்றாது, குறையாது,”மாத்துக்’ குறைவானதுமாகாது.

ஒரு மத ஆதிக்கம், ஒரு மொழி ஆதிக்கம், ஒரு இன ஆதிக்கம் புகுத்த வேண்டும் என்ற கெடுமதி கொண்டவர்கள், தங்கள் திட்டத்துக்கு ஆதரவாக, ஒரு மதம், ஒரு மொழி, என்பதனை ஏற்றுக் கொள்ள மறுப்பவர்களை, எதிர்த்து நிற்பவர்களை இவர்கள் நாட்டுப்பற்று அற்றவர்கள் என்று கூறிப் பழி சுமத்தி ஒழித்துக்கட்ட எண்ணிடுவர்; வெற்றி கிட்டாது எனினும் முயற்சியிலே முனைந்து நிற்பர்.

எந்த ஒரு ”பற்று’ம் மக்களைக் கொடுமைக்கு ஆளாக்கிடப் பயன்படுத்தப்படுமானால், அந்தப் பற்றுக்கு இயற்கையாக உள்ள தூய்மை கெட்டொழிந்து போகும்.

“பற்று’ பாதுகாப்புக்கு, வளர்ச்சிக்குப் பயன்படுத்தப்பட வேண்டுமேயன்றி, பிற”பற்று’க்களை அழித்திடப் பயன்படுத்தப் படக்கூடாது, அதுபோலப் பயன்படுத்தியவர்கள் அழிந்தொழிந்து போயினர்.

நாட்டுப்பற்று எனும் தூய்மைமிக்க உணர்ச்சி இட்லரால் எவ்விதமான நாச வேலைக்குப் பயன்படுத்தப் பட்டது என்பதனையும், அதன் காரணமாக, உலகுக்கு வந்துற்ற கேட்டினையும், அந்தக் கேட்டினை மூட்டிவிட்ட இட்லர் என்ன கதியானான் என்பதனையும் நமது வாழ்நாளிலேயே கண்டு விட்டோமே!

கேடு செய்திட, கொடுமை செய்திட, ஒரு பற்று பயன் படுத்தப் படுமானால் அந்தப் ”பற்று’ தூய்மை இழந்து, வலிவிழந்து, உயிரிழந்து போய்விடும். இதனை விளக்கிடும்

சான்றுகள் வரலாற்றிலேயே நிரம்ப உள்ளன.

“பற்றுக் கொண்டிருப்பவர்களால் வரக் கூடியதைக் காட்டிலும், அந்தப்”பற்று’ப் பற்றித் தூண்டிவிடும் கெடுமதி யாளர்களால் வந்திடும் கேடே அதிகம், நாட்டுப்பற்றுக் கொண்டவர்கள், மற்ற எல்லாவற்றிலும் ஒன்றுபட்ட கருத்தினராகவே இருந்திடுவர் என்று எண்ணுவதும், இருந்திட வேண்டும் என்று கூறுவதும் தவறு.

மதம், மொழி, இனம் என்பன போன்ற அடிப்படைகளிலே மட்டும் அல்ல, மிகச் சாதாரணமான வேறு எத்தனையோ விஷயங்களில், வெவ்வேறு விதமான உணர்ச்சிகள் - பற்று - இருக்கலாம்; இருந்திடக் காண்கிறோம். உணவு, உடை, கல்வி முறை, தொழில் நிலை, கலை உணர்வு, செல்வநிலை - எத்தனையோ இவை போல ஒரே நாட்டினரிடையே வெவ்வெறு விதமான

உணர்ச்சியினை - ”பற்றை’ ஊட்டிட.

குற்றவாளிக் கூண்டில் நிற்பவனும், நீதிபதியும் ஒரே மதம்! அதனால்? இருவரும் ஒரே மொழி பேசுவோர்! அதனால்? இருவரும், ஒரே நாட்டினர்! அதனால்!

நீதி அதற்கு ஏற்றபடி நெளியுமா? இல்லை, நிமிர்ந்து நின்றிடும்.

ஆனால், வேண்டுமென்றே சிலரும், விவரமறியாது சிலரும், தமக்குச் சாதகமாக இந்தப் ”பற்று’களைச் சுட்டிக்காட்டிப் பயன்பெறப் பார்ப்பர், விழிப்பாக இருந்திடல் வேண்டும்.

“அட! நம்ம ஊர்க்காரர்!’ ’ என்று கூறுவதால் அவன் சொன்ன விலையை அப்படியே கொடுத்து விடுகிறோமா? பளிச்சென்று அந்த உணர்ச்சியை நமக்குச் சாதகமாக்கிக் கொள்ள எண்ணி,”அட! நம்ம ஊர்க்காரராக இருந்துமா

இந்த அநியாய விலை சொல்லுகிறாய்'' என்று கேட்கிறோம்.

ஒருவரை ஒருவர் வீழ்த்த, தாழ்த்த, ஏய்த்திட, "பற்று' பற்றிப் பேசித் தூண்டிவிடுவது, தந்திரமுறைகளிலே ஒன்று; வெள்ளை உள்ளத்தினர் ஏமாந்து போய்விடுவர்.

ஒரே நாட்டுக்காரர் - நாட்டுப்பற்று உள்ளவர் என்பதாலே, அந்த நாட்டுக்காரர்களிலே ஒரு சாரார், கள்ள வாணிபம் செய்தால் பொறுத்துக் கொள்ள முடிகிறதா! "நாட்டைக் கெடுத்திடும் இவன் போன்றாரை விட்டு வைக்கக் கூடாது, எத்தனை அக்கிரமம் செய்கிறான்! இத்தனைக்கும் அவன் அன்னியன் அல்ல! நம்மவன்!! நம்ம நாட்டுக்காரன்!'' என்று கூறுகிறோம் கொதிப்புடன்.

நம்ம நாட்டுக்காரன்தான் களவாடுபவன்

ஒவ்வொருவனும். அவன் களவாடும் பொருளும் வேற்று நாட்டுக்குப் போய் விடவில்லை, நம் நாட்டிலேயேதான் இருக்கிறது. அப்படி யானால் பரவாயில்லை என்ற நிம்மதியா பெறுகிறோம்!

தம்பி! எதற்குக் கூறுகிறேன் தெரிகிறதா, நாட்டுப்பற்று எனும் உணர்ச்சி நாட்டவரை ஆட்கொண்டிருக்கிறது என்ற காரணத்தால், அந்த உணர்ச்சியைத் தட்டிவிட்டு, கொடுமை செய்திட, ஏய்த்திட, அடிமைப்படுத்திடப் பலர் முனைந்திடக் கூடும். விழிப்பாக இருந்திட வேண்டும்; "பற்று' என்பது எத்தகையது, என்ன பயன் தருவது என்பதனைத் தெளிவாகத் தெரிந்து கொள்ள வேண்டும்.

நாட்டுப்பற்று அல்லது வேறு ஏதேனும் ஓர் பற்று நமக்கு இருப்பது என்பது ஒன்று. வேறொருவர் அந்தப் பற்று நமக்கு இருப்பதனைக் கண்டறிந்து நமது மனத்திலே

வெறி அல்லது வெறுப்பு மூட்டிவிட்டுத் தவறான வழியில் அழைத்துச் செல்வது என்பது முற்றிலும் வேறானது.

நாட்டுப்பற்று அல்லது வேறு எந்தப் பற்றுக் காரணமாக நாம் எவ்விதமான செயலில் ஈடுபடுவது, போக்கினை மேற்கொள்வது என்பதுபற்றி நாம் நமது அறிவுத் தெளிவினைக் கொண்டு கண்டறிந்து முடிவெடுக்க வேண்டுமேயன்றி, பிறருடைய கருவியாகி விடக்கூடாது.

மற்றொன்றையும் மறந்து விடக்கூடாது; மற்ற எந்த வகையான பற்றுடன் நாம் வாழ்ந்திட வேண்டுமென்றாலும், நாம் இருந்திட ஒரு நாடு, அந்த நாட்டுக்கு ஒரு நிலையான வாழ்வு, அடிமைப்படுத்தப்படாத நிலை இருந்தாக வேண்டும். ஒரு நாட்டுக் குடிமகனாக இருந்து கொண்டுதான், மொழிப்பற்று, மதப்பற்று போன்ற எந்தப்

பற்றினையும் நாம் பெற்றுப் போற்றி வாழ்ந்து வரமுடியும்; நாடோடி நிலையோ, அல்லது வலுத்தவனுடைய தாக்குதலுக்கு அடிபணிந்திடும் போக்கோ இருந்திடுமானால், வேறு எந்தப் "பற்றும்' கொண்டிட வழியே கிடைக்காது. சுவர் இருந்தாலன்றோ சித்திரம்!!

ஆகவேதான், மற்றப் பல்வேறு பற்றுகளையும்விட நாட்டுப்பற்று முக்கியமானதாகிறது.

அதனால்தான், நாட்டுக்கே பகைவர்களால் ஆபத்து என்ற நிலை பிறந்திடும்போது மற்ற எந்த "பற்று'க் காரணமாகவும், நாட்டு மக்கள் பிளவுபட்டு, பேதப்பட்டு நின்றிடுவது கூடாது; அது எந்தப் பற்றுக்கும் நாம் உரியவர்களல்ல என்ற நிலையை மூட்டிவிடும்.

நாட்டின் நிலை பகைவர்களால் கெடுக்கப்பட முடியாத வலிவுடன்

இருந்திடச் செய்வதும், அந்த வலிவினை அழித்திடப் பகைவர் வந்திடின், அவர்களை முறியடிப்பதுமான நோக்கமொன்றே நமது நோக்கம் என்று பணியாற்றுவதும் தேவை.

இந்தக் காரணத்தால்தான், நாட்டுக்கு ஆபத்து என்ற நிலை மூண்டிடும்போது, நாட்டுப் பற்று உணர்ச்சிக்கே முதலிடமும் முழு இடமும் தருகிறார்கள்; மற்றப் பல ”பற்று’கள் பற்றிய பேச்சு, விவாதம், சச்சரவு ஒதுக்கி வைக்கப்படுகிறது.

இசையிலே நாட்டம் இருக்கலாம் ஒருவருக்கு, அதனால் பகைவனின் குழலோசையில் மயங்கி, அவன் நமது நாட்டினைத் தாக்கிடும்போது, இராகம், தாளம் பற்றிய நினைப்பிலா மூழ்கி இருப்பது! அறிவுள்ளோர் அதனைச் செய்யார்.

நாட்டுக்குப் பேராபத்து வந்திடும்போது,

முரசுதான் இசை!

இத்தகைய ஏற்றம் நாட்டுப்பற்று எனும் உணர்ச்சிக்கு உண்டு, எவரும் ஒப்புக் கொள்வர்; என்றாலும் வேறு எந்த விதமான "பற்றும்' மக்கள் கொண்டிடவே மாட்டார்கள், கொண்டிடக் கூடாது என்பதல்ல பொருள்."பற்று' பலவற்றிலே இருக்கலாம்; ஒரே நாட்டவருக்குள்ளேயே ஒவ்வொருவருக்கு ஒவ்வோர் விதமான "பற்று' இருக்கலாம்; அதன் காரணமாக அவர்களுக்குள் வேறுபாடுகள் இருக்கலாம், விவாதம் நடத்தலாம். ஆனால், பகைவர் பாய்ந்திடும்போது மற்ற எத்தனையோ துறைகளில் மாறுபாடான கருத்துக் கொண்டவர்களும், வெவ்வேறு பற்றுக் கொண்டவர்களும், நாம் அனைவரும் ஒரே நாட்டினர்! நாட்டுப்பற்று என்பதில் நாம் அனைவரும் ஒன்று! எனவே நாம் அனைவரும்

ஒன்றுபட்டு நின்று பகைவர்களை வீழ்த்திட வேண்டும் என்று உறுதி பெறுவர்.

இதனை விளக்கிடும் நிகழ்ச்சிகள் பலப்பல உள, வரலாற்று ஏடுகளில்; நாமே இன்று இந்த நிலை நமது நாட்டிலே மலர்ந்திடக் கண்டிருக்கிறோம்.

இனி மற்றோர் விதத்திலும் மற்றப் பற்றுக்களைக் காட்டிலும் நாட்டுப்பற்று ஆழமானது, அழுத்தமானது, விரிந்து பரந்து நிற்பது என்பதனை உணரலாம்.

மதம், இனம், மொழி என்பனவற்றிலே உள்ள "பற்று' பற்றிப் பார்த்திடும்போது, ஒரு நாட்டு மக்களில் ஒவ்வொரு பிரிவினர் ஒவ்வோர் மதத்தில், இனத்தில், மொழியில்"பற்று'க் கொண்டவர்களாக இருப்பர். நாட்டு மக்கள் முழுவதும் ஒரே விதமான பற்றுக் கொண்டவர்களாக

இருந்திடார். ஆனால், நாட்டுப்பற்று எனும் உணர்ச்சியோ, அந்த நாட்டு மக்கள் அனைவருக்கும் இருப்பது.

ஒரு கோடி பேர் கொண்ட நாட்டு மக்களை இன அடிப்படையில் பிரித்துக் கணக்குப் பார்க்கும்போது, 15 இலட்சம் மக்கள் இன்ன இனம், 25 இலட்சம் மக்கள் இன்னோர் இனம், 20 இலட்சம் மக்கள் வேறோர் இனம் என்று இருக்கக் கூடும். மொழியிலும் அதுபோல, மதத்திலும் அப்படியே, பிரிவுகள் இருக்கும்.

ஆனால், அந்த நாட்டு மக்கள் என்ற நிலையில் கணக்கெடுக்கும்போது ஒரு கோடி!

கத்தோலிக்கர், பிராடெஸ்டெண்டு, பௌத்தர், முஸ்லீம், இந்து என்று மதத்தின் அடிப்படையில் பிரித்துக் கணக்குப் பார்க்கும்போது, ஒரு நாட்டு மக்கள் அவ்வளவு பேரும் ஒரே பட்டியலில் இருப்பதற்கில்லை.

நாட்டு மக்களே! வாரீர்!

என்ற அழைப்பு கிடைத்திடும் போது அந்த நாட்டு மக்கள் தொகை அவ்வளவும் திரள்கிறது. கத்தோ-க்கர்களே! வருக! பௌத்தர்களே வருக! என்று அழைத்திடும்போது, அந்த நாட்டு மக்கள் அவ்வளவு பேர்களும் அல்ல, அவர்களிலே ஒரு பிரிவினர் மட்டுமே வர முடியும்!

மக்கள், பல்வேறு பிரிவினர்களாக இருந்து வருகின்றனர். ஆனால், இந்தப் பிரிவுகளில், மிகப் பெரிய அளவுள்ள மக்களை ஒரே முகாமில் கொண்டு வந்து நிறுத்துவது, நம் நாடு எனும் உணர்ச்சிதான். நாட்டின் பாதுகாப்பு, வளர்ச்சி எனும் பணியாற்றிடும்போது, மற்ற எந்தத் தனித்தனி உணர்ச்சிகளையும் விட, நாட்டுப் பற்று எனும் உணர்ச்சியே மேலோங்கி நிற்கும்; நிற்கிறது.

உலகிலே பல நாடுகள்! பல நாடுகளின்

பிரதிநிதிகள் கொண்ட ஓர் மன்றத்துக்கு, ஒவ்வொரு நாடும் குடிமகனா என்பதுதான் இலக்கணமாகக் கொள்ளப்படுகிறது. மொழி, இனம், மதம், வேறுவிதமான பற்று, இது அல்ல.

ஐக்கிய நாடுகள் மன்றத்துக்கு இந்தியாவின் உறுப்பினராகச் சென்றவர். சக்ளா! அவர் பாகிஸ்தானின் அடாத செயலைக் கண்டித்துப் பேசினார்; ”இந்தியர்’ என்ற முறையில்; அவருடைய நியாயவாதத்தை முரட்டுத்தனத்தால் முறியடிக்கத் துடித்தார், பாகிஸ்தான் உறுப்பினர் புட்டோ!

புட்டோவும் சக்ளாவும் இஸ்லாமியர்! மார்க்கத்தால் ஒன்றுபட்டவர்கள்.

உலகிலே ஏதேனும் ஓரிடத்தில், இஸ்லாமிய மாநாடு நடைபெற்றாலோ மார்க்க மாநாடு நடைபெற்றாலோ புட்டோவும்

சக்ளாவும் இஸ்லாமியத்தின் பிரதிநிதிகள் என்ற உரிமையுடன் கலந்து கொள்ள முடியும். ஆனால், நாடு என்ற பெயரில் கூடும் போது, சக்ளா இந்தியாவுக்காக, புட்டோ பாகிஸ்தானுக்காக என்பதுதான் நடைபெறும்; நடைபெற்றது; அதுதான் நியாயம்; நாட்டுப் பற்றுக்கு அதுதான் சிறப்புமிக்க சான்று.

மக்களை நிறம் கருதிப் பிரித்திடின், கருப்பு, சிகப்பு, வெள்ளை, மாநிறம் என்று பிரித்திடின், ஒவ்வொரு வண்ணத் துக்கு ஒவ்வொரு நாட்டினர் என்று இருந்திடாது; கருப்பு வண்ணமுடையார் எந்த நாட்டிலே இருப்பவராயினும் முகாமாவார்! அதுபோன்றே ஒவ்வோர் வண்ணத்தினரும்,

படித்தவர் - படிக்காதவர்
செல்வர் - ஏழை

எனும் முறைப்படி மக்களைப் பிரித்திடின்

பல்வேறு நாடுகளிலுள்ள செல்வர்கள், அமெரிக்க ராக்பெல்லரும் இந்தியாவின் டாட்டாவும், ஒரே முகாமிலும் அமெரிக்க சுரங்கத் தொழிலாளியும் கோலார் தங்கவயல் தொழிலாளியும் ஒரு முகாமிலும் சேர்ந்திட வேண்டிவரும்.

அந்த விதமாகப் பிரித்துப் பார்ப்பது, மக்களின் பொருளா தார நிலையை அடிப்படையாகக் கொண்டு; நாட்டு அடிப்படையில் அல்ல.

வைத்தியர் வரதப்பிள்ளை, மருத்துவ மாநாட்டுக்குச் செல்கிறார்! மாநாட்டுத் தலைவர் மகமத் மூசா! வரவேற்புத் தலைவர் பிரணதார்த்தி ஐயர்! செயலாளர் செபாஸ்டியன்! என்று இருந்திடக் காண்கிறார். மதத்தின் அடிப்படையில் ஒன்று சேர முடியாத மூசாவும் பிரணதார்த்தியும், செபாஸ்டியனும் அவர்களுக்கு மருத்துவத் துறையிலே உள்ள

”பற்று’க் காரணமாக ஒன்றாகக் கூடுகிறார்கள் - மருத்துவத் துறையினரான நாம்! என்று பேசுகின்றனர்! நமது பிரச்சினைகள் என்று கூறுகின்றனர்.

தம்பி! அதே மருத்துவ மாநாட்டில், சித்த வைத்தியர் சிதம்பரமும் இருப்பார், யூனானி வைத்தியர் யூசுப் இருப்பார்; ஆயுர்வேத வைத்திர் ஆராவமுதும் இருப்பார்; மேனாட்டு முறை பயின்ற சர்ஜன் செபாஸ்டியனும் இருப்பார். பொதுவாக மருத்துவ மாநாடு என்று இருப்பதால், மருத்துவத்தில் உள்ள வெவ்வேறு முறையினரும், அந்த வேறுபாட்டினைக் கவனிக் காமல், மருத்துவத் துறையில் உள்ள ”பற்று’க் காரணமாக ஒன்று கூடுகிறார்கள். மறந்துவிட்டேனே, லேடி டாக்டர் லலித குமாரியும் அந்த மாநாட்டில் இருப்பார்.

அடுத்து ஓர் இடத்தில் சித்த வைத்தியர்கள் மாநாடு என்றோ, யூனானி வைத்தியர்

மாநாடு என்றோ, ஆயுர்வேத வைத்தியர் மாநாடு என்றோ, அலோபதி வைத்தியர் மாநாடு என்றோ கூட்டினால், பொதுவாக மருத்துவ மாநாடு என்று கூட்டப்பட்டதிலே கலந்து கொண்டவர்கள் அனைவரும் இருந்திடுவார்களா! முடியாது!

நமது யூனானி முறை கைகண்டது என்றோ சித்த வைத்தியமே சிலாக்கியமானது என்றோ

ரிஷிகளும் தபோதனர்களும் அருளிய முறை ஆயுர்வேதம் என்றோ இப்படி எந்தெந்தத் தலைப்பிலே மாநாடு கூட்டப் படுகிறதோ, அந்தத் தலைப்பிற்குச் சொந்தம் கொள்பவர்களின் பாணியில் பேச்சு அமையும்.

இசையைத்தான் எடுத்துக் கொள்ளேன், இனிமை பொது, எந்தவிதமான இசைக்கும்; இசை என்றாலே கேட்பவர்களை இசைய வைப்பது என்பதுதானே!

பொது இசை மாநாடு கூடினால், அமெரிக்க ஜாஸ் வாத்தியக்காரரும், தமிழக நாதஸ்வர வித்துவானும் அலகாபாத் ஷெனாய் வித்துவானும், கல்கத்தா டோலக் வாத்தியக்காரரும் கூடிப் பேசிடலாம்.

கீழ்நாட்டு இசை என்று மாநாட்டை மாற்றிவிட்டால்? மேனாட்டு மெருகின் போன்ற மேதைகூட இயலாது.

மேனாட்டு இசை மாநாடு என்றால்? தேன்தமிழ் இசைத்திடும் தேசிகருக்கு இடம் கிடைக்காது.

தம்பி! "பற்று'களின் வகையை அதிகமாகப் பிரிக்கப் பிரிக்க, பற்றுக் கொண்டோரின் தொகை குறைந்து போய் விடும்.

அதனை விளக்கத்தான் இத்தனை மாநாடுகளுக்கு அழைத்துச் சென்றேன்.

புதுமை எழுத்தாளர் மாநாடு

புரட்சி எழுத்தாளர் மாநாடு
தேசிய எழுத்தாளர் மாநாடு
பகுத்தறிவு எழுத்தாளர் மாநாடு

என்று பல உண்டல்லவா? இவைகளிலே கலந்து கொள்ளும் எழுத்தாளர்கள், எந்த நாடு, எந்த மொழியினர் என்பதல்ல தகுதி - புதுமை - புரட்சி - தேசியம் - பகுத்தறிவு - எனும் ”பாணி’தான் முக்கியம்.

இந்த மாநாடுகளின் பெயருடன் ”தமிழ்’ என்ற சொல்லை இணைத்துவிடு - ஆந்திரத்தின் தேசிய எழுத்தாளரோ, கேரளத்தின் புரட்சி எழுத்தாளரோ, அந்த மாநாட்டில் கலந்து கொள்ள முடியாது. நடையின் தன்மையைக் குறிப்பிடாமல்,

தமிழ் எழுத்தாளர் மாநாடு

என்று கூட்டினால் வரக் கூடிய எழுத்தாளர்களின் எண்ணிக் கையைவிடக்

குறைவாகத்தான், தமிழ்ப் புரட்சி எழுத்தாளர், தமிழ்ப்புதுமை எழுத்தாளர் என்று தனித்தனியாக அமைக்கப் படும் மாநாட்டிலே எழுத்தாளர் கலந்து கொள்வர்.

எழுத்தாளர் மாநாடு என்று பொதுவாக மாநாடு கூட்டினால் நாடு, மொழி, பாணி எனும் எந்தப் பாகுபாடுமின்றி, எழுத்தாளர் அனைவரும் கூடிடுவர். விரிவாக இருக்கும்.

துறைகளைப் பிரிக்கப் பிரிக்க, ஒரே துறையிலே நுணுக்கமான பிரிவுகளை வகுக்க வகுக்க, அப்படிப்பட்ட பிரிவுகளின் அடிப்படையில் கூடக் கூட, கூடுவோரின் எண்ணிக்கை குறைந்து கொண்டே போகும்.

தம்பி! இதே எழுத்தாளர் மாநாட்டை மற்றோர் விதத்திலேயும் கூட்டிப் பார்க்கலாம்; கற்பனையாகத்தானே! ஆகவே காசு செலவா? வந்துபார்!

நான் தந்த முந்தைய தலைப்புகளில் எதையாவது ஒன்றை எடுத்துக்கொள் - புதுமை எழுத்தாளர் என்று எடுத்துக் கொள்ளேன் - இந்த மாநாட்டை.

புதுமை எழுத்தாள இளைஞர் மாநாடு என்று மாற்றிவிடு.

புதுமை எழுத்தாளர் மாநாட்டுக்கு வருகிறவர்களின் தொகையைவிடக் குறைவானவர்களே கூடுவர்.

வேறோர் மாநாடு கூட்டிப் பார்ப்போமா! இதோ, தம்பி! இந்த மாநாடு எப்படி இருக்கும் பார்த்துச் சொல்லு.

புதுமை எழுத்தாள தொண்டை மண்டலத் துளுவ வேளாள இளைஞர் மாநாடு!

எப்படித் தம்பி, மாநாட்டின் பெயர்!! ஆனால், எத்தனை பேர் வருவார்கள் என்று எதிர்பார்க்கிறாய்!!

எனக்கு எழுத்தாளரிடம் "பற்று' என்று கூறிக் கொள்வதற்கும், நான் பற்றுக் காட்டுவதானால், அவர்

எழுத்தாளராகவும் இருக்க வேண்டும், புதுமை எழுத்தாளராகவும் இருக்க வேண்டும். இளைஞராகவும் இருக்க வேண்டும், தொண்டை மண்டலத் துளுவ வேளாளராகவும் இருக்க வேண்டும்.

என்றால், அந்தப் "பற்று' விரிவானதாகவா அமையும்! மிகக் குறுகிப் போகும்; விரைவிலே கருகிப் போகும்!

ஆகவேதான், தம்பி! "பற்று' கூடுமானவரையில் குறுகிய நோக்கம் கொண்டதாக, குறிப்பிட்ட அளவுள்ள சிறு தொகையினருக்கு மட்டுமே சம்பந்தப்பட்டதாக இருத்தல் கூடாது.

"பற்று' நேர்த்தியானதாகவும், பயன்தரத்

தக்கதாகவும் இருந்திட வேண்டுமானால், சமூகத்தில் மிகப்பெரிய எண்ணிக்கையினர், இந்தப்"பற்று' எமக்கும் தேவை என்று கூறத் தக்கனவற்றின் மீது இருந்திட வேண்டும். எண்ணிக்கை பெருகிட வேண்டும் என்பதல்ல என் நோக்கம் - மிகப் பலருக்கும் தேவைப்படு வனவற்றின் மீது "பற்று' இருந்தால்தான், அந்த மிகப் பலரின் துணை கிடைத்து அந்தப்"பற்று' வளர்ந்து, தரம் உயர்ந்து, பலன் மிகுதியாகிடும்.

"பற்று' என்பதிலே இத்தனை சிக்கல் இருக்கிறதா என்றெண்ணிச் சலித்துக் கொள்ளாதே, தம்பி!"பற்று' வேண்டும். நிச்சயமாக ஒவ்வொருவருக்கும் ஏதாவது ஒன்றின் மீது "பற்று' ஏற்பட்டே தீரும். ஏற்பட்டுவிடும்"பற்று' எல்லாம் பயனளித்திடும் என்று எண்ணிவிடாமல், அந்தப் "பற்று' எத்தன்மையது, என்ன பலனைத் தரவல்லது,

எத்துணை மக்களை உள்ளடக்கியது, அந்தப்”பற்று’ வேறு ஏதேனும் பற்றினைக் கெடுத்திடக்கூடியதா என்பன பற்றி எண்ணிப் பார்த்திட வேண்டும் என்பதற்கே இவ்வளவும் கூறினேன்.

எதிலும் ”பற்று’க் கொள்ளக்கூடாது, அது நம்மைப் பிணைத்துவிடும், இன்னலுக்கு ஆளாக்கிவிடும் என்று கூறுவார் உளர்; அறிவேன்.

ஏன்! இந்த உலகத்தின் மீது, வாழ்வின் மீதே ”பற்று’ வைக்காதே!! என்று உபதேசம் புரிவோர்கள் இருப்பதனையும் அறிந்திருக்கிறேன்.

வாழ்க்கை ஓர் நீர்க்குமிழி - பற்று வைக்காதே.
பெண்டு பிள்ளை பெருஞ்சிறை - பற்று வைக்காதே.

என்றெல்லாம் கூறுவர்; கூறியுள்ளனர். காதொடிந்த ஊசியும் வாராதுகாண் கடை வழிக்கே என்று பட்டினத்தடிகள் சொன்னதை எனக்குச் சொன்னவர்களே, அவர் தமது தாயாருக்கான கடைசிக் கடனைச் செய்திட வந்தார் என்றும் சொல்லியிருக்கிறார்கள்.

தாமரை இலைத் தண்ணீர்போலப் பட்டும் படாததாக, ஒட்டியும் ஒட்டாததாக இருந்திடச் சொல்பவர்களும், பக்குவம் ஏற்பட ஏற்பட, எப்படி விளாங்கனி முற்றிட முற்றிட ஓட்டுக்கும் பழத்துக்கும் உள்ள "பற்று' அற்று விடுகிறதோ அது போலிருந்திட வேண்டும் என்று சொல்பவர்களும் உண்டு. கேட்டிருக்கிறேன். அவர்கள் அது போலெல்லாம் கூறியதற்குக் காரணம்,"பற்று'க் கொண்டதன் காரணமாக அலைகிறார்களே, கெடுகிறார்களே, கெடுக்கிறார்களே என்ற கவலை.

"பற்று' தனது சுகத்துக்காக, நலனுக்காக,

ஆதிக்கத்துக்காக ஏற்பட்டுவிடுமானால், அல்லல், தொல்லை; உண்மை.

பிறரைக் கெடுத்தாகிலும் தான் பெற வேண்டியதைப் பெற்றாக வேண்டும் என்ற கெடுமதி பிறந்திடும், சமூகம் பாழ்படும்.

நான் குறிப்பிடும் "பற்று' அந்த விதத்தது அல்ல.

ஒரு கொள்கையில், ஒரு ஏற்பாட்டில், ஒரு அமைப்பில் "பற்று'க் கொள்ளுதல்.

அந்தப் "பற்று'தான் வாழ, தன்னலம் வளர அல்ல; சமூகம் வாழ, மக்கள் நலன் பெருகிட.

இதற்கான "பற்று' நிரம்பத் தேவை.

அந்தப் பற்றும் நம்மை ஆட்டிப்படைப்பதாக ஆகிவிடக் கூடாது; கண்மூடித்தனமான பற்று ஆகவும் இருந்திடக் கூடாது, தெளிந்து தேர்ந்தெடுக்க வேண்டும்; அந்தப் பற்று

நமக்குப் புது விழிப்பு, எழுச்சி, ஆற்றல் தருவதாக அமைந்திருக்க வேண்டும். நமக்கு உள்ள அந்தப் பற்று சமூகத்தை உயர்த்துவதற்கான ஆற்றலையும் வாய்ப்பையும் நமக்கு அளிப்பதாக இருந்திட வேண்டும். தம்பி! எங்கெங்கோ சுற்றி வளைத்துக் கொண்டு போவானேன்? உனக்கு நமது கழகத்திடம் பற்று இருக்கிற தல்லவா, அது என்ன உன் நலன் பெருக்கிக் கொள்ளவா! நாடு வாழ! அத்தகைய பற்று மற்றவர்க்கும் ஏற்படத்தான் பணியாற்றி வருகிறாய்; பற்று பரவிக் கொண்டு வருகிறது; பயன் கிடைத்திடும் என்ற நம்பிக்கை பிறந்திடுகிறது; கிடைத்திடும் பயன் உனக்கும் எனக்குமா! நாட்டு மக்களுக்கு!!

அன்புள்ள

அண்ணாதுரை

10-10-65

25. பொருத்தம் - 1

காஞ்சிக் கடிதம் – அறிஞர் அண்ணா

பெருத்தம் என்றால் என்ன?

ஆன பிறகே பொருத்தம் இல்லை என்பார் அதிகம்

கவர்ச்சிக்கு இலக்கணமே இல்லை!

பொருத்தம் நீருக்கும் நெய்க்கும் இல்லை, நீருக்கும் பாலுக்கும் உண்டு!

விஞ்ஞானமே பொருத்தமற்றதையும் பொருத்தமுள்ளதாக்க கூடியது.

பழந்தமிழர் தெளிவாகத் தெரிந்திருந்த பொருத்தங்கள்.

தம்பி,

சிறப்பு நிகழ்ச்சிக்கான நாள்

குறிக்கப்பட்டான பிறகு அந்த நிகழ்ச்சியின் அமைப்பாளர் நண்பர் டி.கே.சீனுவாசன், நான் எந்தப் பொருள் குறித்து – எந்தத் தலைப்பில் – பேச இருக்கிறேன் என்று கேட்கலானார். பிடிகொடுக்காமல் இருந்து பார்த்தேன். இயலவில்லை. சிற்ப்புச் சொற்பொழிவு என்றால் ஏதேனும் ஓர் தனிப்பொருள் குறித்து, தனித் தலைப்பிட்டுப் பேசுவதுதான் 'பொருத்தம்' என்ற எண்ணம் நண்பருக்கு; அவர் விளக்கிக் கூறவில்லையே தவிர, ஏதாவது ஒரு பொருள் பற்றிப் பேசவேண்டும் என்பது பற்றி அவர் வலியுறுத்தியதிலிருந்து நானாக அவருடைய நோக்கத்தைப் புரிந்துகொண்டு, 'பொருத்தம்' என்ற பொருள் குறித்துப் பேசுவதாகக் கூறினேன்; கூறியான பிறகுதான் பொருத்தம் என்ற அந்த எளிமையான சொல்லுக்குள்ளே என்னென்ன ஒளிந்துகொண்டுள்ளன

என்பதனை எண்ணிப் பார்த்தேன்; ஏ! அப்பா! ஒரு சிறப்புக் கூட்டத்திலே சொல்லி விளக்கிவிடக் கூடியதாகவா இருக்கிறது, 'பொருத்தம்' பற்றிய விளக்கம்! காலமெல்லாம் பேசிக்கொண்டிருந்தாலும், சொன்னவைகளைவிடச் சொல்ல வேண்டியவைகளின் அளவே அதிகம் என்றுதான் எவரும் கூறவேண்டி நேரிடும்.

மிக நெடுந் தொலைவிலே உள்ள கோளங்களை இங்கிருந்து காணும்போது எத்துணை சிறிய அளவினதாகத் தெரிகின்றன; ஆனால் விஞ்ஞானிகள் அறிந்து கூறுகிறார்கள் அல்லவா, சில கோளங்கள், பூமியைவிட எத்தனையோ மடங்கு பெரியவைகள் அளவில் என்று.

ஐந்தே எழுத்துக்களாலான சிறிய சொல், 'பொருத்தம்' ஆனால் பெருள்பற்றி ஆராய ஆராய விரிகிறது விரிகிறது

அத்தனை பெரிதாக – கோளம் போல. பொருளினைக் கண்டறியக் கண்டறிய நாமே ஒரு கட்டத்தில், ஒது நம்மாலே ஆகிற காரியமல்ல, இந்த வேலைக்கு நாம் பொருத்தமல்ல என்ற கூறிடவேண்டி வரும். ஆனால், நமது செவிகளில், தம்பி! மிக அதிகமாக விழுகிற சொல் இந்தப் 'பொருத்தம்' என்பது. நாமே அடிக்கடி இந்தச் சொல்லைப் பயன்படுத்துகிறோம், இந்தச் சொல்லின் நடமாட்டம் மிக அதிகம். காதிலே வீழ்ந்ததும், எளிய சொல் என்று தோன்றுகிறது; பொருள் என்ன இதற்கு என்றுகூடப் பெரும்பாலும் கேட்கத் தோன்றுவதில்லை; பொருத்தம் என்றால் தெரியாதா, பொருத்தம் என்று கூறிவிடுகிறோம். தன்னாலே விளங்கிவிடும். ஒரு சொல்லுக்கு விளக்கம் வேறு தனியாகத் தரவேண்டுமா என்ற எண்ணத்தில்.

வன்கணாளர்

இடுக்கண்
உடுக்கள்

இப்படி உள்ள சொற்கள், கடினமானவைகளாக, பொருள் அறிந்தாக வேண்டும் என்ற எண்ணத்தைக் கிளறுவனவாக உள்ளன; தோன்றுகின்றன. அனால், பொருத்தம்! இதற்கு இன்னொருவரிடம் பொருள் கேட்க வேண்டுமா! என்று எண்ணிடச் செய்கிறது. ஆனால், இத்துணை எளிதா – எண்ணிப் பார்த்திடேன்.

அவனுக்கு அவள் துளி கூடப் பொருத்தமில்லை.

சொல்கிறோமல்லவா. ஆம். என்கிறாய். ஆனால் தம்பி. நமக்குள்ளே பேசிக்கொள்வதிலே தவறு என்ன, உண்மையில், அப்படிச் சொல்வதில்லை.

அவளுக்கு அவன் துளிகூடப் பொருத்தமில்லை.

என்றுதான் பெரும்பாலும் பேச்சு! கூச்சப்படாதே. தம்பி! வாடிக்கையான பேச்சு, இது. சொல்பவரின் கண்களுக்கு 'அவர்களுக்குள்' உள்ள பொருத்தம் தெரிவதில்லை; அதனால் எழும் பேச்சு அது; கெட்ட நினைப்பிலே எழுவது என்று கூடக் கூறுவதற்கில்லை.

அந்த வேலைக்கு அவன்தான் பொருத்தம்.

பொருத்தம் இல்லையாம், சொன்னார்கள்!

பொருத்தம் சரியாக இருக்கிறதா என்று பார்க்க வேண்டாமா!

பொருத்தமானவனாகப் பார்த்தாகவேண்டும்.

பொருத்தமான வேளை அல்லப்பா, இது!

ஒன்றுக்கொன்று பொருத்தம் இருக்கவேண்டுமே.

பொருத்தமான பேச்சாகப் பேசு.

இப்படிப் பலப்பல – அடிக்கடி – எங்கும். இவை ஒவ்வொன்றுக்கும் பின்னணியில் சொல்பவர்களின் விருப்பு வெறுப்பு தொக்கி இருக்கிறது.

அழைப்பின் பேரில் திருமண வீடு செல்கிறான்; வாழ்க்கையில் வசீகரம் எண்ணி ஏங்கிக் கிடப்பவன் அல்லது ஏமாற்றமடைந்தவன், தன்னிடம் உள்ள வனப்புக்கு ஏற்றவிதமான 'துணைவி'யல்ல தன் இல்லத்தரசி என்ற எண்ணம் – பெரும்பாலும் தவறான எண்ணம் கொண்டவன். அவன் தன்னைப் போன்ற நினைப்பினனுடன் பேசும்போது சொல்கிறான்.

அவளுக்கு அவன் பொருத்தமானவனே அல்ல

என்று. 'அவள்' அழகி! 'அவன்' அப்படியல்ல! இது 'இவன்' எண்ணம்! என்ன 'இவன்' அளவுகோல்! ஒன்றும் இல்லை! 'இவன்' மனத்திலே உள்ள விருப்பு வெறுப்பு, சலிப்பு கசப்பு, இவற்றின் விளைவு அந்தப் பேச்சு.

பொருத்தமானவனா அல்லவா என்பது குறித்து அறிந்து கொண்டாக வேண்டியவர்கள், தமது திறமைக்கேற்ற விதத்தில் ஆராய்ந்து பார்த்தாகி விட்டது; அதற்குப் பிறகே, மணமேடையில் மணமக்கள் அமர்ந்திருக்கிறார்கள்; மாலை மாற்றிக் கொள்வதைக் கண்டுகளிக்கவும்(முடியுமானால்!) வாழ்த்தவும் (தெரியுமானால்!!) வந்துள்ளவன் சொல்கிறான்.

அவளுக்கு அவன் துளியும் பொருத்தம் இல்லை

என்று! யாரோ இவன் கருத்தைக் கேட்டதாலே, அல்ல! கருத்துத் தெளிவுள்ளவன் என்ற விருது பெற்றவன் என்பதாலே அல்ல! இவன் கருத்து என்ன என்று கண்டறிந்து பிறகே திருமண ஏற்பாட்டினை மேற்கொள்ளப் போகிறார்கள் என்ற நிலை இருப்பதால் அல்ல! கெட்டிமேளம் கொட்டியாயிற்று! தொட்டுத் தாலி கட்டிவிட்டான். பிறகு, பேசுகிறான்.

பொருத்தம் இல்லை
என்று!

தம்பி! அவனுக்கும் அவளுக்கும் பொருத்தம் இருக்கிறதா இல்லையா என்பது இருக்கட்டும ஒரு புறம்; இவன் பேசுகிறானே அந்தப் பேச்சு, பொருத்தமானதா? துளிகூட இல்லை.

பொருத்தமறிந்து பேசவில்லை.

பொருத்தமான நேரத்தில் பேசவில்லை.

பொருத்தமானவன் பேசவில்லை.

மணமேடையில் அமர்ந்துள்ளவர்களைப் பார்த்தான பிறகு,

அவளுக்கு அவன் துளிகூடப் பொருத்தம் இல்லை என்று பேசுகிறான்!!

அவளுக்கு அவன் துளிகூடப் பொருத்தம் இல்லை என்றே வைத்துக் கொண்டாலும், அந்த எண்ணம் யாருக்கு ஏற்படவேண்டுமோ, எந்த நேரத்தில் ஏற்படவேண்டுமோ, அந்த நேரத்தில் ஏற்பட்டிருந்தால் பொருத்தமாக இருந்திருக்கும். இவனுக்கு, இலைபோடும் வேளையில் இந்த எண்ணம் ஏற்பட்டு என்ன பயன்? துளியும் இல்லை.

இதுபோலத் தம்பி! பொருத்தம்

பற்றித் துளியும் பொருத்தமற்ற முறையில் பொருத்தமற்றவர்கள் பொருத்தமற்ற வேளையில் பேசிக்கொள்கிறார்களே. அதுதான் நமது செவிகளிலே நிரம்ப விழுந்திருக்கிறது. புரிகிறதல்லவா!! நாமும், பலமுறை, ஆழ்ந்த சிந்தனையற்று, ஆமாமாம்! என்று சொல்லியிருந்திருப்போம். மறுக்கமாட்டாயல்லவா?

மங்கைக்கேற்ற மணாளன் அமையவேண்டும்; இல்லையென்பார் இல்லை. ஆனால், அதற்கான முறை, அந்தக் கடமையை மேற்கொள்ள வேண்டியவர்கள், அதற்கான நேரம் எது? மணமக்கள் மாலை மாற்றிக் கொண்டான பிறகா! முதல் பந்தியா, இரண்டாம் பந்தியா! முந்திரிப்பருப்பு பகோடாவா, மோர்க்குழம்பு வடையா! என்ற பேச்சோடு பேச்சாகப் பேசித் தீர்க்கவேண்டிய பிரச்சினையா இது? இல்லையல்லவா!

ஆனால், பேசுகிறார்களே! கேட்டிருக்கிறாயே. ஆக, பேசுபவர்களும் சரி, கேட்பவர்களும் சரி, பொருத்தம் என்பது பற்றி ஆர அமர எண்ணிப் பார்த்தவர்கள்தானா? இல்லை, அத்தகையவர்கள் கூறிடுவதைக் கொண்டு,

பொருத்தம் இருக்கிறதா இல்லையா என்று தீர்ப்பளிக்க முடியாது.

பொருத்தம் பார்ப்பது – அதுபற்றிக் கூறுவது அறிந்து கொள்வது சாதாரணமல்ல! மிகக் கடுமையான காரியம்; பக்குவம், பயிற்சி, தெளிவு, விருப்பு வெறுப்புக்கு ஆளாகாமை இவ்வளவும் நிரம்பவேண்டும். பொறுப்பான காரியம். ஆனால் இதனைத்தான், மிக எளிதாக, விநாடிக்கு விநாடி செய்துகொண்டிருக்கிறார்கள்; வேறு யாரையோ சொல்லுவானேன், தம்பி! நாமே செய்து கொண்டிருக்கிறோம்!

பொருத்தம் என்பதுபற்றி நன்றாகச் சிந்தித்துப் பார்க்காமல், பொருத்தம் என்றால் என்ன என்பது பற்றிய விளக்கத்தைப் பெற்றுக் கொள்ளாமல், பொருத்தம் இருக்கிறதா இல்லையா என்பதனைக் கண்டறியும் முறை அறியாமல், தெளிவு பெறாமல், பயிற்சி பெறாமல், பொருத்தம் எது என்பதைக் கண்டறியும்போது, விருப்பு வெறுப்பு நீக்கிக்கொண்டு உண்மையைக் கண்டறியும் தூய்மையைத் தேடிப் பெறாமல்,

இது பொருத்தமில்லை, அது பொருத்தமில்லை என்று வெகு எளிதாகப் பொறுப்பற்றுப் பேசுவதில் சுவை காண்கிறோம்.

நான் அறிந்தவரையில் தம்பி! இது பொருத்தமில்லை, அது பொருத்தமில்லை! என்ற பேச்சு கிளம்பும் அளவிலும் வேகத்திலும்,இது பொருத்தம்! அது

பொருத்தம்! என்று கூறப்படும் பேச்சின் அளவும் வேகமும் குறைவு,

இந்த மங்கை நல்லாளுக்குப் பொருத்தமானவன் இன்னான் என்றோ,

இந்தக் காரித்தை முடித்திடப் பொருத்தமானவன் இவன் என்றோ,

இதனை முடித்திட இந்த வழிதான் பொருத்தம் என்றோ,

இதற்கு இந்த நாள்தான் பொருத்தம் என்றோ

கூறிடும் போக்கினர் அதிகம் இருப்பதில்லை, நடைபெற்றான பிறகு, பொருத்தமில்லை என்று கூறுவோர் மிக அதிகமான எண்ணிக்கையினர். நடைபெற ஏற்பாடாகிவிட்டது என்பதனை அறிந்த பிறகு, பொருத்தமில்லை என்று கூறுபவர்கள் அதற்கு அடுத்த அளவினர். பொருள் தெரிகிறதா தம்பி!

இதற்குப் பொருத்தம் இதுதான்

என்று முன்னதாகச் சொல்லிடும் பொறுப்பினரின் எண்ணிக்கை மிக மிகக் குறைவு. பொருத்தம் இல்லை என்று முடிந்துபோன, அல்லது முடியப் போகிறபோது சொல்லிவைக்கும் பொறுப்பு ஏற்காதாரின் எண்ணிக்கை மிக அதிகம். இடையில் மற்றோர் வகையினரும் உண்டு,

பொருத்தம் எது என்று சொல்ல என்னால் முடியாது; ஆனால், இது பொருத்தமில்லை என்பது என் அபிப்பிராயம்.

என்று, கெம்பீர நடையில் பேசித் தட்டிக் கழித்துவிடுபவர்!

இதற்கு நான் பொருத்தமானவன் அல்ல! –

தம்பி! இந்தப் பேச்சு உன் காதிலே விழுந்ததுண்டா! ஆம்! என்கிறாயா!! நாடக மேடையில் கேட்டதைச் சொல்லாதே!

வாழ்க்கையில் மிகமிகக் குறைந்த அளவுதான், இத்தகைய பேச்சு; அதிலே பாதி, தன்னடக்கத்தின் விளைவு; மற்றோர் பகுதி, இதற்கு உங்களைவிடப் பொருத்தமானவர் வேறு யார் இருக்க முடியும் என்று சொல்லமாட்டார்களா என்ற ஆவலுடன் பிணைக்கப்பட்ட பேச்சு! உண்மையாகவே, உள்ளத்திலிருந்து இந்தப் பேச்சு வருகிறது என்றால், அது ஆயிரத்தில் ஒருவன்கூட அல்ல, இலட்சத்தில் ஒருவன் என்றுதான் சொல்லவேண்டும்.

பொதுவான எண்ணம், உள்ளத்திலே பாதி உறக்கநிலையில் உள்ள எண்ணம், ஒவ்வொருவருக்கும், எதற்கும் பொருத்தம் நமக்கு உண்டு என்பதுதான். அச்சம், கூச்சம் தடுப்பதால் அனைவரும் இதனைச் சொல்லுவதில்லை, ஆனால், மிகப் பலருடைய மனத்திலே இந்த எண்ணம் இருக்கத்தான்

செய்கிறது.

இந்த எண்ணத்தைத் துணைக்கொண்டு, தகுதியையும் திறமையையும் பெற்றிடப் பயிற்சி பெற்று, நிலையை உயர்த்திக்கொண்டால், நல்லது. அனால், இந்த எண்ணத்தை மட்டும் கட்டிப் புரண்டபடி தகுதி, திறமை பெறப் பயிற்சியும் பெறாமல், என்னை ஏன் இதற்கு அமர்த்தவில்லை, இந்த வேலையினை என்னிடம் ஏன் ஒப்படைக்கவில்லை, நான் தானே இதற்குப் பொருத்தமானவன் என்று கொதிப்படைந்து கூவி, வாய்ப்புத் தரப்படவில்லை என்று வேதனை அடைந்து, தராததற்காக அனைவரிடமும் வெறுப்புக் காட்டிடத் தொடங்கினால், பொல்லாத மனநோயால் பீடிக்கப்பட்டு, உள்ள திறமையும் அழிந்து உருக்குலைந்து போய்விடும் நிலை எற்பட்டுவிடும், அவ்விதம் ஆகிவிட்டவர்களைக்

கண்டுமிருக்கிறேன்.

இதற்கு இது பொருத்தம் என்று கண்டறிவதற்கு, எந்த இரண்டுக்கும் பொருத்தம் இருக்கிறதா என்று கண்டறிய விரும்புகிறோமோ, அந்த இரண்டு பற்றியும் முழுவதும் முழு அளவிலும் தெரிந்திருக்கவேண்டும்.

தெரிந்திருக்க வேண்டும் என்று நான் கூறுகிறபோது தம்பி! தெளிவு இருக்கவேண்டும் என்பதைத்தான் வலியுறுத்துகிறேன் – ஓ! தெரியுமே! என்ற வழக்கமாகச் சொல்லிவிடுகிறோமே, அந்த முறையிலே அல்ல.

அவனுக்கும் – அவளுக்கும் பொருத்தம் இருக்கிறதா என்று கூறுவதற்கு, முதலில் அவனைப் பற்றியும் அவளைப் பற்றியும் முழுவதும் தெளிவாகத்

தெரிந்திருக்கவேண்டும்

தோற்றத்தை மட்டும் கண்டுவிட்டு, தெரிந்துவிட்டதாகக் கூறிவிடுவது சரியல்ல.

பிறர் கூறக்கேட்டு, அவர்களின் இயல்வு, நிலை, நினைப்பு குறித்து அறிந்துவிட்டதாக எண்ணிக்கொண்டு, அடிப்படையற்ற அந்த அறிவை அளவு கோளாகக் கொண்டு பொருத்தம் உண்டா இல்லையா என்று கூற முற்படுவது பேதைமை.

அஃதேபோலத்தான் மற்ற எதுபற்றிய பொருத்தம் குறித்த கருத்தளிப்பதற்கும்.

மணவாழ்க்கையில் பொருத்தம் அமைந்து அந்தப் பொருத்தம் காரணமாக இல்லற இன்பம் அமைவது, வெறும் உடல் தோற்றத்தின் காரணத்தால் மட்டுமல்ல, உடல் தோற்றத்தின் பொருத்தம் தேவையேயில்லை என்று நான் கூறவில்லை; கண்படைத்தவர்

எவரும் கூற மாட்டார்கள். உடல் தோற்றத்திலே பொருத்தம் இருக்கவேண்டும். ஆனால், அந்தப் பொருத்தம் வாழ்க்கை மாளிகையின் நுழைவு வாயில் அவ்வளவே – நுழைவு வாயில் வேலைப்பாடு மிகுந்ததாக மட்டும் இருந்தால் போதாதல்லவா! அதுபோலத்தான் தோற்றம் வனப்பானதாக இருப்பதும்.

இந்த வனப்பு – அல்லது கவர்ச்சி என்பதற்கு ஒவ்வொருவருக்கும், அவரவர்களின் இயல்பு, அறிவு ஆகியவற்றினுக்கு ஏற்ப ஒரு இலக்கணம் அமைகிறது.

சோகை என்று ஒருவர் கருதும் முகத்தோற்றம், பளிங்கு நிறமாக மற்றொருவருக்குத் தோன்றக்கூடும்! எலும்புக்கூடு என்று ஒருவர் ஏளனமாகப் பேசி இருக்கக்கூடும், மற்றொருவரின் பூங்ககொடியை!! ஆணவம் என்று

ஒருவருக்குத் தென்படும் பேச்சு கெம்பீரம் என்றாகிவிடக்கூடும் மற்றொருவருக்கு, பகட்டு என்று கூறுவார் ஆடை அலங்காரம் கண்டு ஒருவர், நவீனமுறை என்று அதனைப் பாராட்டுவார் மற்றொருவர்! இதற்கெல்லாம் தம்பி! ஒரு திட்டவட்டமான இலக்கணம் கிடையாது. ஆளாளுக்கு மாறும்! ஒரே ஆளுக்கே வேளைக்கு வேளை மாறுகிறதே! பார்க்கிறோமே!!

பார்த்தால் பசி தீரும் என்கிற பருவம் மாறிவிடுவதையும், தொட்டேன்! கெட்டேன்! என்று பேசும் பருவம் தோன்றுவதையும், கதைகளில் மட்டுந்தானா காண்கிறோம்? வாழ்க்கையில் இத்தகைய படப்பிடிப்புகள் பல உள்ளன.

தம்பி! மணவாழ்க்கையின் பொருத்தம், மணவாழ்க்கையில் ஈடுபடும் அந்த ஒருவர் உய்த்து உணரத்தக்கது; பிறர் கண்டு

அறிவிப்புத் தரத்தக்கதல்ல.

உய்த்து உணரத்தக்கது மட்டுமல்ல, தொடர்ந்து முயன்று முயன்று, இடையிலே முளைத்திடும் இன்னல் களைந்து பிறகு கன்னல் சுவை பெறுவது அல்லது கிடைப்பதனைக் கன்னல் சுவை எனக் கொள்வது என்ற முறையில் அமைந்துள்ளது, வாழ்க்கைப்பயணம். அது பிறர் கண்டதும் இன்ன விதமாகத்தான் இருக்கும் என்று முடிவு செய்து அறிவித்துவிடக் கூடியதல்ல. வாழ்க்கைப் பயணத்தின்போது எத்தனை எத்தனையோ சோதனை ஏமாற்றங்கள், புன்னகை, பெருமூச்சு, கண்ணீர், இணைப்பு, பிணைப்பு, அணைப்பு என்று பலப்பல! இவ்வளவும் கணக்குப் பார்த்து, பொருத்தம் காணவேண்டும்! யார் கணக்கேட்டுககு உரியவர்களோ அவர்களாலேயே எளிதாகக் கண்டுபிடிக்க முடியாத ஒன்று; அந்நிலையில்,

காகிதப் பையில் வைத்தளிக்கப்படும் தாம்பூலத்தை வாங்கிக் கொண்டுபோக வந்திருப்பவர்கள், துளியும் பொருத்தம் இல்லை என்று சொல்லிவிடுவது, பொருள் உள்ளதாக முடியுமா!!

இருபொருள்களின் தன்மையும் ஒன்றுக்கொன்று சிறப்பளிக்கத் தக்கன என்கிறபோது, பொருத்தம் இருக்கிறது என்று கூறலாம்.

இதற்கு அதுதேவை, துணை என்று எற்படும்போது பொருத்தம் இருக்கிறது என்று தெரிந்துகொள்ளலாம்.

இதுவும் அதுவும் ஒன்று கூடினால், அந்த இரண்டும் தனித்தனியாக இருக்கும்போது கிடைத்திடக் கூடிய பயனைவிட மிகுதியான பயன் கிடைத்திடும் என்பது புரிகிறபோது, இதற்கு அது பொருத்தமாக இருக்கும் என்று

கூறிடலாம்.

ஆக, இருவேறு இயல்புகள், தன்மைகள், திறமைகள் தகுதிகள் ஒன்று கூடி, மொத்தமாக இயங்கி, அவ்விதம் இயங்குவதன் காரணமாக, புதிய பயன் கிடைத்திடும்போது, அந்த இரண்டுக்கும் பொருத்தம் அமைந்திருக்கிறது என்கிறோம்.

பொருத்தமான நிலம் – பொருத்தமான விதை! பொருத்தமான பண்ணைமுறை! - நிரம்பிய அறுவடை!

இந்த நிலத்திற்கு, சம்பாதான் பொருத்தம் என்கிறோம்.

கரிசல் பூமி – பருத்திப் பயிருக்குப் பொருத்தமானது என்கிறோம்.

மணலும் செம்மண்ணும் கலந்த பூமி – முந்திரிக்குப் பொருத்தமான இடம் என்கிறோம்.

ஊர்க்கோடியில் உள்ள வயல் – இரண்டாம் போகம் பயிரிடப் பொருத்தம் இல்லை என்கிறோம்.

இவ்விதம் கூறிட, மண்ணின் இயல்பும் பயிரின் தன்மையும், இவைகளின் கூட்டு என்னென்ன விதமாக அமைய முடியும் என்ற வகைபற்றிய அறிவும், என்னென்ன வகையான கூட்டு என்னென்ன விதமான பலனைத் தருகிறது என்பதுபற்றிய ஒப்பிட்டுக் கண்டிடும் அறிவும் தேவை.

வாழைக்கு ஏற்ற வயலில் வரகரிசி தூவிடலாம், பருத்திக்கேற்ற காட்டில் பழச் செடிகளை நட்டுப் பார்க்கலாம் – ஆனால், பொருத்தமற்றது என்பது அறுவடையில் தெரிந்துவிடும்!

பொருத்தம் அறிவதற்குத் தேவைப்படும் அறிவினைப் பெறுவது எளிதானதுமல்ல.

எல்லாத் துறைகளிலும் பொருத்தம் எவ்விதம் இருக்கிறது என்பதனை அறிந்து கொள்ள இயலும் என்று கூறுவதும் சரியல்ல!

வயலுக்கும் பயிருக்கும் இருக்கக்கூடிய பொருத்தம் அறிந்து கூறிடக்கூடிய உழவர் பெருமக்களிடம் மருத்துவத்துறை குறித்தோ, பொருத்தம் கேட்டால் என்ன கிடைக்கும்?

பொருத்தம் பற்றிய அறிவு பெறுவதும் தெளிவளிக்கும் பயிற்சி பெறுவதும் கடினம் என்பதுடன், ஒருவரிடம் எல்லாத் துறைகள் குறித்தும் பொருத்தம் கூறிடத் தக்க திறமை இருக்கும் என்று எதிர்பார்ப்பது மிகமிகத் தவறு என்பதனையும் தெரிந்துகொள்ள வேண்டும்.

இவரே இதற்குப் பொருத்தமானவர் என்று ஒருவரைக் கண்டறிவதே கடினம் என்கிறபோது, இவரே எல்லாவற்றுக்கும் பொருத்தமானவர் என்று கூற முற்படுவது,

எங்ஙனம் இயலும்?

எல்லாம் எனக்குத் தெரியும் என்று சிலர் கூறலாம்; அதனை நம்பி அவரிடம் எல்லாவற்றையும் ஒப்படைக்க முன்வருவார் உண்டா! இவருக்கு எல்லாம் தெரியுமாம்! - என்ற ஏளனப் பேச்சுக்குதான் அவர் பயன்படுத்தப்படுவார்.

பொருத்தம் என்பது தம்பி! பொருந்துவது – சரியாகச் சேருவது – கூடுவது – பயன் தரத்தக்க விதத்தில் கலப்பது – எனும் பொருள் தருவது.

தண்ணீரில் எண்ணெய் பெய்துவார் – பொருத்தமில்லை – எண்ணெய் மேலே மிதக்கிறது; தனியாகத் தெரிகிறது; தண்ணீருடன் கலந்துவிட மறுக்கிறது; பொருத்தம் இல்லை.

பொருத்தம் இல்லாதது தெரிவது மட்டுமல்ல, பொருத்தமில்லாத இரண்டினை

– தண்ணீரையும் எண்ணெயையும் நாம் வேண்டுமென்றே ஒன்றாகக் கலக்கியதால், எண்ணெய் எரிபொருளாகும் இயல்பினை இழந்துவிடுகிறது. பயன் கெடுகிறது; தண்ணீர் பருகிடப் பயன்படுவதில்லை; இயல்பு கெட்டொழிகிறது; இந்த இரண்டின் இயல்புகள் கெட்டபிறகு, பொதுவான, பயன்தரத்தக்க ஒரு புதிய இயல்பு கிடைக்கிறதா என்று பார்த்தால், இல்லை!!

பாலில் கலக்கும் தண்ணீர் அவ்விதம் இல்லையே – கலந்துவிடுகிறதே; தனித்தனி தெரிவதில்லையே; பருகிடத்தக்கது என்ற இயல்பும் கெடுவதில்லையே என்று வாதாட முயல்வார்கள் – வாதாடுவதில் சுவை காண்பவர்கள். சுவையான வாதம் தம்பி! சூடு ஏறுகிறவரையில்; பாலுடன் கலந்த தண்ணீர், ஆவியாகத் தனியே பிரிந்து, சொல்லாமல் கொள்ளாமல் மேலே பேயேவிடுகிறது

தெரியுமல்லவா, பாலைக் காய்ச்சும்போது சூடு கொடுத்ததும், பொருத்தமற்ற கூட்டு, உடைபட்டுப் போய்விடுகிறது.

எண்ணெய் என்பதனை மட்டுமேதான் எடுத்துக்கொள்ளேன் தம்பி!

விளக்கெரிக்கப் பயன்படும் எண்ணெய் யாவும் யந்திரங்களை இயங்கவைக்க முடிகிறதா! டீசலை ஊற்றி இயங்கவைக்க வேண்டிய யந்திரத்தில் விளக்கெண்ணெய் ஊற்றுவாரும், விளக்கெண்ணெய் ஊற்ற வேண்டிய அகல்விளக்கில் பெட்ரோலை ஊற்றுவாரும் உண்டா!! பொருத்தம் இல்லை என்பது தெரிகிறது.

ஒரு பொருளுடன் மற்றோர் பொருள் கூடிப் பயன்தர முடியுமா என்பதனைப் பொறுத்து, பொருத்தம் இருப்பதனை அறிந்துகொள்ளலாம்.

விஞ்ஞானம் பொருத்தமற்றது என்று நாம் கருதிவந்த பொருள்களை, இயல்பினை மாற்றியோ, திருத்தி அமைத்தோ, பொருத்தம் உள்ளது ஆக்கித்தர பயன்படுகிறது.

இயற்கையான இயல்பின்படி இருவேறு பொருள்களின் கூட்டு பயன் தரத்தக்கதாக இருந்திடும்போது, பொருத்தம் இருக்கிறது என்ற கூறிடலாம்.

வழிவழி வந்த அறிவின் துணைகொண்டும், கண்டு கண்டு பெற்ற தெளிவின் துணைகொண்டும், இயற்கைப் பொருள்களிடையே உள்ள பொருத்தம் அல்லது பொருத்தமற்ற தன்மை ஆகியவற்றினை, சராசரி அறிவுள்ளவர்களும் அறிந்து கூற முடிகிறது.

வெங்காயத்துண்டும் பச்சை மினகாயும் கடித்துக் கொண்டு கூழ் சாப்பிட்டால் ஒரு

பொருத்தம் இருக்கிறது என்பதும், அதே பச்சை மிளகாய் பால் சாப்பிடுவதற்குப் பொருத்தமாக இராது என்பதும், தெரிந்து கொள்ள பல்கலைக்கழகம் போகவேண்டுமா; பட்டி தொட்டியெல்லாம் தெரிந்த அனுபவ அறிவு, அது மார்கழி மாதம் பயன்படும் கம்பளிப்போர்வை கோடையில் பொருத்தமில்லை என்பதனைக் கூட்டம் கூட்டியா சொல்லவேண்டும்.

கூடுமானவரையில் இயற்கைப் பொருள்களுக்குள்ளே இருக்கக் கூடிய பொருத்தம் பற்றிய அறிவும் தெளிவும் வியந்து பாராட்டத்தக்க அளவு பரவி இருக்கிறது; நிலைத்து இருக்கிறது.

மக்களுக்குள்ளே ஏற்படக்கூடிய பொருத்தம், செயலுக்கும் செய்பவனுக்கும் இருந்தாக வேண்டிய பொருத்தம், செயலுக்கும் செயல்படவேண்டிய காலத்துக்கும் உள்ள

பொருத்தம், செயலுக்கும் செயல்முறை, கருவி ஆகியவற்றுக்கும் உள்ள பொருத்தம் ஆகியவை குறித்த அறிவினைப் பெறுவதும், தெளிவடைவதும், போதுமான அளவிலோ, தரத்துடனோ, வளர்ந்திடவில்லை; வளர்ந்தாக வேண்டும்.

கோட்டை, எதிரியிடம் சிக்காதிருக்க என்பதும், அகழ் கோட்டைக்கு அரணாக என்பதும், காட்டுவழி எதிரி அறியாமல் அவன்மீது பாய்ந்திட என்பதும், மலைச்சரிவு, பள்ளத்தாக்கு, அற்றோரம், நகர்ப்புறம், சதுப்புநிலம் எனும் இன்னபிற இட அமைப்புகள் ஒவ்வோர் வகையான போர் முறைக்கு ஏற்றதென்பதும், நெடுங்காலத்துக்கு முன்பிருந்தே தமிழகம் பெற்றிருந்த நுண்ணறிவாகும்.

வீசுவதற்கு வாள், எறிவதற்கு ஈட்டி, குத்திக் குடலெடுக்க வேல், எய்வதற்கு

அம்பு, நொறுக்குவதற்குப் பெருந்தடி, சுழற்றி அடிப்பதற்குக் கம்பு, வாளிட உறை, அம்புகளுக்குத் தூணி, தடுப்புக்குக் கேடயம், உடலுக்குக் கவசம் – எனும் இந்தப் பொருத்தங்கள் நீண்ட நெடுங்காலத்திற்கு முன்பிருந்தே தமிழகம் தெரிந்து வைத்திருந்தது.

கோட்டைகளைத் தாக்கிட யானைப் படையையும், விரைந்து சென்று எதிரிப்படையைப் பிளந்தெறியக் குதிரைப் படையையும் பயன்படுத்துவதே பொருத்தமான போர்முறை என்பதைப் பழந்தமிழகம் தெளிவாகத் தெரிந்துவைத்திருக்கிறது.

எதிரியின் போக்கைக் கண்டறிய, உளவுத்துறை பொருத்தமானது என்பதுபற்றிய நுண்ணறிவு நிரம்ப இருந்திருக்கிறது.

போர் முறை, போர்க் கருவிகள் என்பவைகளுடன் போருக்கான காலம், எந்ததெந்தக் காலத்தில் என்னென்ன விதமான போர் முறையை மேற்கொள்வது பொருத்தமாக இருக்கும் என்பது பற்றிய நேர்த்தியான அறிவுத் தெளிவு மிகுந்திருந்திருக்கிறது.

காலம், இடம், முறை இவைகளைப் பொறுத்து ஒரு செயலின் வெற்றிக்கான பொருத்தம் அமைகிறது என்ற அறிவுத் தெளிவும், அந்த அறிவுத் தெளிவினை எல்லாத் துறைகளிலும் பயன்படுத்திய திறனும் கொண்டவர்களாகத் தமிழர் விளங்கி வந்தனர்.

பொருத்தமான காலம், இடம், முறை ஆகியவற்றினைத் தேர்ந்தெடுத்தும், வெற்றி கிட்டாமல் போவதுண்டு; அதனால், காலம், இடம், முறை பற்றிய பொருத்தம்

பார்க்கவே தேவையில்லை என்று முடிவு கொள்வது பெருந்தவறு. பொருத்தம், பொருத்தமாக அமையவில்லை என்று மட்டுமே கொள்ளமுடியும்.

அதுபோலவே, தம்பி! ஏதேனும் ஓர் துறையில் எவரோ ஒருவருக்கு ஏதாவதொரு வகையான வெற்றி கிட்டிவிட்டதும், அந்தத் துறையில் அவரே பொருத்தமானவர் என்றோ, அவருடைய முறைகளே பொருத்தமானவை என்றோ தீர்மானித்துவிடுவதும் சரியல்ல.

பல துறைகளிலே பலருக்குக் கிடைத்திடும் வெற்றி, பொருத்தத் தினாலேயே அமைந்து விடுவதுமில்லை.

தம்பி! இவ்விதம் நான் கூறுவதால், அதிர்ஷ்டம், ஜாதக பலன் என்பன போன்றவைகளை நம்புகிறேன் என்றோ, நம்பச் சொல்கிறேன் என்றோ தவறாக

எண்ணிக் கொள்ளாதே!

எந்தத் துறையிலும், போர்த் துறை எனினும், வாணிபத் துறையெனினும், அரசியல் துறையெனினும், இல்லறத் துறையெனினும், இருவேறு சக்திகள் ஒன்றுடன் மற்றொன்று கொண்டிடும் தொடர்பின் விளைவாகவே, வெற்றியோ தோல்வியோ ஏற்பட முடியும். தொடர்பு கொள்கிற இருவேறு சக்திகளும், இடம், காலம், முறை ஆகியவற்றின் பொருத்தமறிந்து செயல்படும்போது, இரு சக்திகளின் ஒன்றின் முறைப் பொருத்தம் மற்றொன்றின் முறைப் பொருத்தத்தை மிஞ்சக் கூடியதாக அமைந்துவிடுமானால், வெற்றி அந்தப் பக்கம் இருந்திடுமல்லவா?

சர்க்கரை மூட்டைகளை இந்த மாதம் இன்ன விலைக்கு வாங்கி இன்ன மாதத்தில் விற்றால் இவ்வளவு இலாபம் கிடைக்கும்

என்று சாந்தப்பன் திட்டம் வகுத்திருப்பான் – இடம், காலம், முறை ஆகியவை பற்றிய பொருத்தத்தைப் பார்த்து.

ஆனால், சாத்தப்பன், எந்தக் கந்தப்பனிடம் மூட்டைகளை விற்கலாம் என்று எண்ணித் திட்டமிடுகிறானோ, அந்தக் கந்தப்பன் இன்ன மாதத்தில் வாங்காமலிருந்துவிட்டால், நாலு மாதத்திற்குப் பிறகு தன்னாலே சரக்கு விலை விழும் என்று ஒரு கணக்குப் போட்டுப் பார்த்து, சாத்தப்பன் விற்கிறபோது, சரக்கு இப்போதைக்குத் தேவையில்லை என்று தீர்மானித்து விடுவானானால் சாத்தப்பன் போட்டிருந்த திட்டம் கெட்டுவிடுகிறது.

விந்தை இதிலேகூட இல்லை, சாத்தப்பன் – கந்தப்பன் எனும் இருவரன்றிப் பிறிதோரின் நடவடிக்கை காரணமாகவும், சாத்தப்பன் – கந்தப்பன் எனும் இருவருக்குள் அமையவேண்டிய வாணிபத் தொடர்பு

கெட்டுவிடக்கூடும்.

திட்டமிட்டபடி சாத்தப்பன் சரக்கினை விற்க முனைகிறான். கந்தப்பனும் வாங்க வருகிறான். ஆனால், திடீரென்று சர்க்கார் உத்திரவு ஒன்று கிறம்புகிறது – இன்னும் ஆறு திங்களுக்கு, தனிப்பட்ட வாணிப முறைப்படி சர்க்கரை விற்பனை நடத்தப்படக் கூடாது என்று. அப்போது? சாத்தப்பன் திட்டம், கந்தப்பனால் அல்ல, பிரிதோர் சக்தியால் நடவடிக்கை காரணமாகக் கெட்டுவிடுகிறது.

இவைகளைக் கொண்டு, திட்டமிடுவதே கூடாது என்ற முடிவுக்கும் வருவதல்ல, திட்டமிட்டாலுங்கூடச் சில சூழ்நிலைகள் கெடுதலை உண்டாக்கிவிடும் என்ற பாடம் மட்டுமே பெறவேண்டும்.

வெற்றி கிடைத்திடப் பெற்றவர்களெல்லோரும், பொருத்தமான

முறையிலே பணியாற்றியதாலேயே வெற்றி பெற்று விடுவார்கள் என்று பொருள் கொண்டிடுவது, கானலை நீரென நம்பிடுவதாகி விடும்!

சிறுகதையொன்று நினைவிற்கு வருகிறது. ஒரு அலுவலகத்தில் நீண்டகாலமாகப் பணியாற்றி வருகிறார் ஒருவர்; போதும் இத்தனை ஆண்டுகள் பணியாற்றியது என்று கருதுகிறார்; வேலையை விட்டுவிட வேண்டும், வீட்டோடு ஓய்வாக இருந்திட வேண்டும் என்று விருப்பம். இதனை அவருடைய இல்லத்தரசி ஒப்பவில்லை. அதனால் கூடச் சங்கடம் அதிகம் இல்லை. அலுவலக உரிமையாளர் இவர் விலகுவதைத் துளியும் விரும்பவில்லை. விலகுவதாகக் கூறியபோதெல்லாம் மறுத்து வந்தார். என்ன செய்வதென்று எண்ணிப் பார்த்து எண்ணிப் பார்த்து,

அலுவலக உரிமையாளரே தன்னை விலக்கிவிடும்படியான சூழ்நிலையை உண்டாக்க வேண்டுமென்று திட்டமிட்டு, அதற்கோர் வழி கண்டுபிடித்தார்.

ஒரு மாலை, அலுவலக உரிமையாளரின் தனி அறைக்கு வெளியே நின்று கொண்டு, வாய்க்கு வந்தபடி அலுவலக உரிமையாளரை ஏசலானார்.

முதலாளியாம், முதலாளி! முகத்தைப் பார், முகத்தை! இவனைப்போய் என் முதலாளி என்று கூறவேண்டுமாம்! மோசக்காரன்! நயவஞ்சகன்! நல்லவன் போல் வேடம் போட்டுக்கொண்டு ஊரை ஏய்க்கிறான். நானா ஏமாறுவேன்! உன் கபட நாடகம் எனக்கு நன்றாகத் தெரியும்!

அலுவலக முதலாளியைத் தாறுமாறாக ஏசும் குரல்கேட்டு அலுவலகப் பளியாளர்

பலரும் வந்து கூடினர். அவர்களுக்கு ஒரே வியப்பு! திகைப்பு! முதலாளியின் நன்மதிப்பைப் பெற்றவர், நீண்ட பல ஆண்டுகளாகப் பணியாற்றி நல்ல பெயர் பெற்றவர். இவரா முதலாளியை இப்படி ஏசுகிறார். குடிவெறியா! மூளைக் குழப்பமா! என்றெண்ணித் திகைத்தனர்.

கேவலமாக ஏசியதுடன் நிற்கவில்லை! கையில் கொண்டு வந்திருந்த கணக்கு ஏடுகளை, உள்ளே நார்காலி மீது உட்கார்ந்து கொண்டிருந்த முதலாளி மீது வீசலானார். அலுவலகப் பணியாளர்கள் பதறிப்போய், வேண்டாம் வேண்டாம்! என்று கூவினர். தடுத்துப்பார்த்தனர், முடியவில்லை. கணக்கு ஏடுகள், உள்ளே உட்கார்ந்திருந்தவரின் தலையிலே விழுகின்றன, மூக்குக் கண்ணாடி நொறுங்குகிறது.

அக்கிரமக்காரன்! அறியாயக்காரன்!

பிடித்து உதையுங்கள், போலீசைக் கூப்பிடுங்கள்! என்று அலுவலகப் பணியாளர்கள் கூவுகின்றனர். அருகே செல்ல அவர்களுக்கு அச்சம்! வெறி தலைக்கேறிவிட்டது; அதனால்தான் முதலாளியைத் தாக்குகிறான்; நாம் அருகே சென்றால் என்ன செய்வானோ; கத்தி வைத்துக்கொண்டிருப்பானோ என்னவோ! இப்படியெல்லாம் பீதி கொண்டனர்.

என்னையா அக்கிரமக்காரன் என்கிறீர்கள். அட! பைத்தியக்காரர்களே! அக்கிரமக்காரன் உள்ளே இருக்கிறான், உள்ளே! ஒய்யாரமாக உட்கார்ந்துகொண்டிருக்கிறான், நாற்காலியில்; அவனைப் பிடித்து உதையுங்கள், பலமாக! போலீசையா கூப்பிடச் சொல்கிறீர்கள், கூப்பிடுங்களேன்! போலீஸ்! வந்தால்தானே தெரியும்! இந்தப் புரட்டனுடைய விஷயம் அம்பலமாகும். கூப்பிட்டுக்கொண்டு

வாருங்கள் போலீசை! ஓடுங்கள்! ஓடுங்கள்! போலீஸ்! போலீஸ், உடனே போலீஸ்!

இவ்விதம் கூவுகிறார். சந்தேகமே இல்லை ஆசாமிக்குப் பைத்தியமேதான் பிடித்துவிட்டது என்று அனைவரும் முடிவு செய்தனர்.

பிறகு என்ன நடந்தது என்கிறாயா, தம்பி! என்ன நடக்கும் என்று எதிர்பார்க்கிறாய்! அவரைப் பிடித்துக் கட்டிப்போட்டு நல்ல டாக்டரிடம் காட்டுவார்கள்; பித்தர் விடுதியில் சேர்ப்பார்கள் என்றுதானே.

அதுதான் இல்லை! தம்பி! அத்தனை வெறிச் செயலைச் செய்தவனுக்கு, அதே அலுவலகத்தில் பதவி உயர்வு, பாராட்டு, பரிசு, விருந்து கிடைத்தது.

எப்படி? எப்படி முதலாளியைத் தாக்கினார், அவருக்கா பதவி உயர்வு, பட்டம், பரிசு என்றுதானே கேட்கிறாய். கிடைத்தது! ஏன்

எப்தனை அடுத்த கிழமை தெரிவிக்கிறேன்.

அன்புள்ள

அண்ணாதுரை

17.10.1965

26. பொருத்தம் - 1

பொருத்தத்திற்குத் திட்டவட்டமோ இலக்கணமோ இல்லை.

காலம், இடம், கருவி, முறை பொருந்தியிருக்கும்போதே பொருத்தமறிய வாய்ப்புண்டு.
காலத்துக்கேற்ற செயல், செயலுக்கேற்ற காலம்

சமூகச் செயலுக்குப் பொருத்தம் தேவை

இதனை, இதனால், இவன்: எளிய சொற்கள்: பொருள் பொதிந்த விளக்கங்கள் உண்மை உணரத் தெளிவு, துணிவு தேவை

தம்பி,
அலுவலக உரிமையாளரைத் தாறுமாறாக ஏசி, அவர் மீது கணக்கேடுகளை வீசிக் கலகம் விளைவித்தவரைப் போலீசிடம்

ஒப்படைக்க வேண்டியது முறையாயிருக்க, அதே அலுவலகத்தில் அவருக்குப் பரிசும் பாராட்டும் பதவி உயர்வும் கிடைத்த விந்தைக்கான காரணம் பற்றி அடுத்த கிழமை தெரிவிப்பதாகச் சென்ற கிழமை சொல்லியிருந்தேனல்லவா, சொல்லுகிறேன்.

உள்ளே உட்கார்ந்திருந்த முதலாளியைக் கண்டபடி ஏசினாலே போதும், அவர் கடுங்கோபம் கொண்டு இந்த வெறியனைக் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளுங்கள் என்று முதலாளி உத்திரவிடுவார் என்றுதான் எதிர்பார்த்தார், தூற்றியவர். உள்ளே இருந்தவரோ ஆடவில்லை அசையவில்லை, ஏன் என்று ஒரு வார்த்தை கேட்கவில்லை. பிறகுதான் கணக்கேடுகளை வீசினார். அலுவலகப் பணியாளர் பலரும் வந்து குழுமினர். அப்போதும் ஒரு வார்த்தை பேசவில்லை, உள்ளே இருந்தவர்.

வீசப்பட்ட கணக்கேட்டிலே ஒன்று, தலை மீது பலமாக வீழ்ந்தது; பதறிப்போய்ப் பணியாளர்கள் உள்ளே சென்றனர் முதலாளிக்குப் பாதுகாப்பளிக்க. அவர்கள் கண்ட காட்சியோ அவர்களைத் திடுக்கிட வைத்தது.

கணக்கேடு வீழ்ந்ததால், தலைப்பாகை மட்டுமல்ல, செயற்கை முடியும் கீழே வீழ்ந்தது; உட்கார்ந்திருந்த ஆசாமி பதறி எழுந்திருக்கக் கண்டனர்.

பொய் முடி! முதலாளிபோல வேடம்! முதலாளி அல்ல!!

ஆ! ஆ! என்று அலறினர். வேடமிட்டோன் தப்பி ஓட முயன்றான்; பிடித்தனர்; நையப் புடைத்தனர்.

நடைபெற்றது என்னவென்றால், உண்மையான முதலாளி யைக்

கண்டுபேசவந்த ஒரு கயவன், அவரைக் கட்டிப்போட்டு ஒரு பேழையில் அடைத்துவிட்டு, அவர் போலவே வேடமணிந்து கொண்டு, அலுவலகப் பொருளைக் களவாடிக் கொண்டு எவரும் சந்தேகிக்காதபடி தப்பிச் செல்லத் திட்டமிட்டிருந்தான்.

கயவன் செய்ததனை எவரும் அறிந்துகொள்ளவில்லை.

சற்றுத் தொலைவிலிருந்து பார்ப்பவருக்கு அவன் உண்மையான முதலாளி போலவே தோற்றமளித்தான். எவரும் எந்தவிதமான ஐயப்பாடும் கொள்ளாமல், அவரவர் தத்தமது அலுவலைக் கவனித்து வந்தனர்.

தூற்றினாரே அவராகிலும் இந்தச் சூது தெரிந்து கொண்டாரா என்றால், இல்லை. அவர் உண்மையான முதலாளியைத் தூற்றுவதாகத்தான் முழுக்க முழுக்க

எண்ணிக் கொண்டிருந்தார். அவர் வீசிய கணக்கேடு, கயவன் தலைமீது வீழ்ந்து, வேடத்தைக் கலைத்து விட்டது; உண்மையை அம்பலப்படுத்திற்று.

முதலாளி கட்டி அணைத்துக் கொள்கிறார்; அலுவலகப் பணியாளர்கள் பாராட்டுகிறார்கள்; போலீஸ் துறையினர் புகழ்கிறார்கள், திகைத்துக் கிடப்பவரை, என்ன எண்ணிக் கொண்டார்கள் என்றால், கயவன் இப்படி ஒரு சூது செய்திருக்கிறான் என்பதை எப்படியோ கண்டறிந்து, அவனைத் தூற்றியும் தாக்கியும், அலுவலகத்தாரை அவ்விடம் கூடும்படி செய்தும், தந்திரமாக முதலாளியைக் காப்பாற்றிவிட்டார், நீண்ட காலமாக அந்த அலுவலகத்தில் அக்கறையுடன் பணியாற்றி வந்தவர் என்று எண்ணிக் கொண்டனர்.

நீ இருக்கிற வரையில் எனக்கு

ஒரு ஆபத்தும் வராது; ஒரு பயலும் என்னை ஒன்றும் செய்துவிட முடியாது என்பது எனக்குத் தெரியும் என்று கூறிப் பாராட்டுகிறார் முதலாளி.

முதலாளியாம், முதலாளி! முகத்தைப் பார்!! உன்னைப் போய் முதலாளி என்று கூறவேண்டி இருக்கிறதே! - என்று கூச்சலிட்டாரே, அப்போது, என்ன இப்படி வெறி பிடித்தவர் போலப் பேசுகிறாரே என்று எண்ணிக் கொண்டேன்.

இப்போதல்லவா தெரிகிறது, உள்ளே இருப்பவன் ஒரு கயவன், வேடதாரி, உண்மையான முதலாளி அல்ல என்று எப்படியோ தெரிந்து கொண்டுதான் அப்படியெல்லாம் பேசினார் என்பது என்று புகழ்கிறார் அலுவலகத்தார் ஒருவர்.

துப்பறியும் இலாக்காவிலே

உள்ளவர்களுக்கு மட்டும், இவருக்கு உள்ள திறமையிலே நா-லே ஒரு பாகம் இருக்குமானால், குற்றம் செய்பவன் தப்பித்துக் கொள்ள முடியுமா என்று பெருமிதத்துடன் பேசுகிறார் பெரியவரொருவர்.

திட்டமிட்டு வேலை செய்தார் என்றே எல்லோரும் நம்பிக் கொள்கிறார்கள். அவரே மறுத்துப் பார்க்கிறார்; அடக்கத்தின் காரணமாக அவ்விதம் பேசுகிறார் என்று கூறி, மேலும் பாராட்டுகிறார்கள்.
பிறகு பரிசும் பாராட்டும் பதவி உயர்வும் எப்படிக் கிடைக்காமலிருக்கும், தமது அபாரமான திறமையால் அலுவலகத்தில் நடைபெற இருந்த கொள்ளையைத் தடுத்த தீரர் என்ற பட்டம் கிடைத்தது.

தம்பி! இதுபோலத் தற்செயலாக நடைபெற்று விடுகிற சில நிகழ்ச்சிகளைக்

கொண்டு, ஒரு முடிவுக்கு வருவது மிக மிகத் தவறு.

இவர் ஒன்று எண்ணிக் கொண்டு வேலை செய்தார்; அது வேறொன்றாகப் போய் முடிந்தது. இதனை அறியாதவர்கள் என்ன முடிவுக்கு வருவார்கள்? எத்தகைய கபடத்தையும் கண்டறிந்து உடைத்தெறியக்கூடிய திறமை படைத்தவர் இவர் என்றுதானே!!

சரியா அது! முழு உண்மையைத் தெரிந்து கொண்டவர்கள் கூறுவார்கள், இந்த முடிவு சரி அல்ல என்று.

எனவே தம்பி! ஒருவர் ஒரு குறிப்பிட்ட செயலாற்று வதற்குப் பொருத்தமானவரா என்பதனைத் தெரிந்து கொள்வது எளிதானதல்ல; இடையிலே தவறான முடிவுக்கு நம்மை இழுத்துச் செல்லும்

நிலைமைகள், நினைப்புகள் நிகழ்ச்சிகள் எழக்கூடும்.

அவைகளின் தன்மையையும் கண்டறிய வேண்டும்; முழு உண்மையையும் தெரிந்து கொள்ள வேண்டும், "பொருத்தம்' இருக்கிறதா இல்லையா என்பதைக் கண்டறிந்து முடிவு கட்ட,"பெரியவரே! தங்களுக்கு வயது 90 என்கிறார்களே, இவ்வளவு நீண்ட காலம் வாழ்ந்திருக்க, தாங்கள் மேற்கொண்டுள்ள முறை என்ன? தாங்கள் எவ்விதமான உணவு உட்கொள் கின்றீர்கள்? பொழுதுபோக்கு என்ன?'' என்று கேட்கப் படுவதுண்டு; நீண்ட காலமாக வாழ்ந்து வருபவர் கூறிடும் முறைப்படி வாழ்ந்து வந்தால் நாமும் நீண்டகாலம் வாழ்ந்திடலாம் என்ற நினைப்பினால், நீண்ட காலம் வாழ்வதற்குப் பொருத்தமான யோசனையை அவருடைய பேச்சிலிருந்து நாம் தெரிந்து கொள்ளலாம்

என்ற எண்ணத்தில்.

முதியவர் ஒருவர்; "ஐயா! நான் அதிகமாக அலைவதில்லை. அளவோடு சாப்பிடுகிறேன். எந்தவிதமான கெட்ட பழக்கமும் இல்லை. சுருட்டுக் கூடக் குடிப்பதில்லை'' என்கிறார். ஓ! நீண்ட காலம் வாழ இவர் வாழ்ந்துவந்த விதம் பொருத்தமான முறை என்று எண்ணிடத் தோன்றும்.

அலைச்சல் அதிகம் சர்ச்சிலுக்கு; பரபரப்பு மூட்டிடத்தக்க செயல்களுக்கு நடுவிலேயே உழன்றவர். ஓயாமல் பெரிய பெரிய சுருட்டுகளைக் குடித்தபடி இருந்தவர். அவரும் மிக நீண்ட காலம் வாழ்ந்திருந்தார். நீண்ட காலம் வாழ்ந்திருக்கப் பொருத்தமான முறை என்ன என்று சர்ச்சி-டம் கேட்டால் பதில் என்ன கிடைத்திருக்க முடியும்!!

"பொருத்தமானது' என்பது தம்பி! எல்லாக்

காலத்துக்கும் எல்லா இயல்பினருக்கும் ஒரே விதமானதாக இருந்திடும் என்று எண்ணுவதே தவறு. தென்றல் குளிர்ச்சி தரும், வாடைக்காற்று வறட்சி தரும், குளிர் நடுக்கம் தரும், வெப்பம் புழுக்கம் தரும் என்று திட்டவட்டமாகக் கூறிட முயல்வதுபோல்,"பொருத்தம்' இதற்கும் இதற்கும் இருந்திடும் என்று திட்டவட்டமாகக் கூறிட முடியாது. தென்றலும் திங்களும்கூட நெருப்பாகிவிடுமாமே, காதல் பிடியில் சிக்கிக் கலங்கிக் கிடப்பவர்க்கு.

எனவே, "பொருத்தம்' எது என்பதனைத் திட்டவட்டமாக எடுத்துக் கூறிடும், கணக்கேடு இல்லை, இலக்கண ஏடும் இல்லை; ஒவ்வொரு நேரத்திலும் ஒவ்வொருவரும் தத்தமது அறிவுத் தெளிவின் துணைகொண்டு,"பொருத்தம்' எது, எப்படி, எதனால், என்பது பற்றிக் கண்டறிய

வேண்டும்.
ஆனால் சில பொதுவிதிகள் உள்ளன, ”பொருத்தம்’ அமைந்திட.

காலம், இடம், கருவி, முறை என்பவைகளை நன்கு ஆராய்ந்து தேர்ந்து எடுத்துச் செயல்படும்போது வெற்றி கிட்டிட வாய்ப்பு பெருமளவு இருக்கிறது.

காலமும் இடமும், கருவியும் முறையும் ”பொருந்தி’ இருக்கும்போது செய-லே வெற்றி கிடைத்திடுவதற்கான வாய்ப்பு நிரம்ப இருக்கிறது.

எந்தச் செய-லே நமக்கு நாட்டம் ஏற்பட்டு அதிலே நம்மை ஈடுபடுத்திக் கொள்வதானாலும் காலம், இடம், கருவி, முறை பற்றிய தெளிவு இருந்தாக வேண்டும்.

எத்தகைய செயலுக்கு எத்தகைய காலம், இடம், கருவி, முறை தேவை என்பதனை

அறிந்துகொள்ளாமல், ஆற்றல் இருக்கிறது, ஆகவே நாம் மேற்கொள்ளும் செயலில் நமக்கு வெற்றி எப்படியும் கிடைத்தே தீரும் என்று எண்ணிக் கொள்வது, நம்பிக்கை அல்ல, ஏமாளித்தனம், தம்பி! காலம், இடம், கருவி முறை என்று நான் கூறும்போது, ஜோதிடர்கள் சொல்கி றார்களே, அமாவாசை கழிந்த ஆறாம் நாள் என்றும் வடமேற்குப் பக்கத்திலே இருந்துதான் உங்களுக்கு வரப்போகிறது. அதிர்ஷ்டம் என்றும், இந்தக் கங்கணத்தைப் பதினெட்டு நாள் பூஜையில் வைத்திருந்து பிறகு, வலக்கையிலே கட்டிக் கொள்ளுங்கள் நினைத்தது நடந்தே தீரும் என்றும் சொல்கிறார்களே, அதனைக் குறிப்பிடுவதாக எண்ணிக் கொள்ளாதே, நான் ஆரூடக்காரரின் துணையைத் தேடச் சொல்லவில்லை; அறிவுத் தெளிவினைத் தேடித் தேடிப் பெற்றிடக் கேட்டுக் கொள்கிறேன்.

நமது மக்களிலே மிகப் பலர் - படித்தவர்களிலேயே மிகப் பலர் - இன்னமும் இந்தப் "பொருத்தம்' காண ஆரூடக்காரரை நாடிக்கொண்டிருக்கிற அவல நிலையில் உள்ளனர்; என் செய்வது!

ராகு காலம், குளிகை காலம், கரி நாள், மரணயோகம், சகுனம் என்பவை பற்றி அழுத்தமான - ஆனால் பொருளற்ற நம்பிக்கைக் கொண்டுள்ளவர்கள் நிரம்பப்பேர் இருக்கிறார்கள்.

அந்தப் பொருளற்ற நம்பிக்கை பற்றிப் பகுத்தறிவாளர் அலசிக் காட்டிடும்போது, சிரிக்கக் கூடிச் செய்கிறார்கள்; ஆனால் அந்த மூட நம்பிக்கையின் பிடியிலிருந்து விடுபட மட்டும் மறுக்கிறார்கள்.

எங்கோ நெடுந்தொலைவிலே உள்ள விண் மீன்களே! இங்கே நடைபெறும்

நல்லனவற்றுக்கும் அல்லனவற்றுக்கும், உங்கள் பேரிலே பாரத்தை தூக்கிப் போட்டுக் கொண்டி ருக்கிறார்களே மாந்தர், இதனை நீங்கள் அறிவீர்களா என்று கருத்துத் தெளிவுள்ள பேரறிஞர்கள் கேலிக் குரலில் பேசி யுள்ளனர். பயன்? நாம் மகிழத்தக்க அளவு ஏற்படவில்லை.

ஆகவேதான், காலம், இடம், கருவி, முறை என்று நான் குறிப்பிடும்போது, எனக்கே ஒரு அச்சம் வந்து விட்டது, ஆரூடக்காரன் பேசும் காலம், இடம், கருவி முறையும் நான் கூறுவதும் ஒன்று என்று எங்கே எவரேனும் எண்ணிக் கொண்டு விடுகிறார்களோ என்று.

காலமறிந்து செயலாற்ற வேண்டும்; செயலுக்கேற்ற காலத்தைக் கண்டறிய வேண்டும் என்பது பற்றி வள்ளுவர் தந்துள்ள அறிவுரை அருமை மிக்கது. எளிதில் உணர்ந்திடத் தக்கது, பக-லே காக்கை

ஆந்தையை வென்றுவிடும். அறிவாய ல்லவா என்று கேட்டிருக்கிறார். ஆந்தை பகலில் கண்மூடிக் கிடக்கும்; அப்போது அதனை வென்றிடக் காக்கையால் முடியும்!

தண்ணீருக்குள் இருக்கும் முதலை எதனையும் இழுத்துக் கொன்றுவிடும், தண்ணீரைவிட்டு முதலை வெளியே வந்தாலோ, எதுவும் அதனைக் கொன்று விடும் என்கிறார்.

எந்தச் சமயத்தில், எந்த இடத்தில், எவ்விதமான வலிவு இருக்கும் என்பது பற்றிய கணக்குத் தெரியாமல், செயல்பட்டால், வெற்றி எங்ஙனம் கிட்டும்?

போர் முறை, உழவு முறை, வாணிபம், அரசியல் முறை, காதல் முறை எனும் எதிலேயும் காலம், இடம், கருவி, முறை அறிந்தாலன்றிச் செம்மையான முறையிலே

செயல் அமைந்திடாது.

இந்தச் செயல் இந்தக் காலத்திற்குப் பொருத்தமானது; இந்த இடத்துக்குப் பொருத்தமான செயல், இதுவே! இந்தச் செயலுக்குப் பொருத்தமான கருவி இஃதே; இந்தச் செயலுக்கு மேற்கொள்ள வேண்டிய முறை, இதுவே என்று கண்டறியும் திறனை, ஆட்சி நடாத்துவோருக் காக மட்டுமல்ல, அனைவருக்குமே வள்ளுவர் வலியுறுத்திக் கூறுகிறார் என்று கொள்ள வேண்டும்.

காலம், இடம், கருவி என்பவை பொருத்தமாக அமைக்கப்பட்ட பிறகு செய-லே ஈடுபட்டிருக்கும்போது இடையிலே, இவைகளிலே ஒன்றோ பலவோ கெட்டுப்போவது உண்டு, ஆனால் "முறை' இருக்கிறதே, அது, இந்தப் புதிய நிலைமையில் யாது செய்திட வேண்டும் என்ற அறிவினைத் தந்திடத் துணை செய்திடும்.

காடு நுழைந்து சென்றால், மாற்றானின் பாசறையை அவன் அறியாவண்ணம் சுற்றி வளைத்துக் கொண்டு அழித்திட வாய்ப்பாக இருக்கும்; அதிலும், மேகம் கருத்திருக்கும் இந்தக் காலம் அதற்கு ஏற்றது என்று எண்ணிப் படையைச் செலுத்திடுகையில், எங்கோ நெடுந்தொலைவில் பெருமழை
பெய்ததால் காட்டாறு கரைபுரண்டு ஓடிவரக் கண்டால், இடம், காலம், முறை ஆகியவற்றினைப் பொருத்தமுற அமைத்துக் கொண்டும், எதிர்பாராத இந்த இடையூறு வந்துற்றதே என்று எண்ணிக் கலங்கிடத் தோன்றும். ஆனால், அந்த நிலைமையில், போர் முறையில் தக்க மாற்றத்தைக் கண்டறிந்து செயல்படும் நுண்ணறிவு இருந்திடுமானால், கலக்கம் பீடித்துக் கொள்ளாது; வெற்றிக்கு வழி கிடைக்கும்.

எத்தனைத் திறத்துடன் காலம், இடம்,

கருவி, முறை ஆகிய பொருத்தம் அமைத்துக் கொண்டாலும், ஏதாகிலும் இன்னல் கிளம்பி எடுத்த காரியத்தைக் கெடுத்திடுமோ என்ற அச்சமும்
ஐயப்பாடும் கொண்டு, காலமாவது இடமாவது, பொருத்த மாவது, பார்ப்பதாவது என்று எண்ணிக் கொள்வது பேதைமை!

இடையிலே என்னென்ன இன்னல் வந்திடக் கூடும் என்பது பற்றிய தெளிவினை நாம் போதுமான அளவு பெற முடியாமற் போய்விட்டதன் மூலம், அதற்கான தெளிவைச் செம்மைப் படுத்திக் கொள்ள வேண்டும் என்ற உறுதிதான் பெற்றிட வேண்டும்.
பல துறைகளிலே மனித முயற்சியும் உழைப்பும் நேரமும் நினைப்பும் பாழ்பட்டுப் போவதன் அடிப்படைக் காரணம், தெரிந்து செயல்படாததேயாகும்; பொருத்தமான முறையில் செயல்படாததேயாகும்.

நம்மில் ஒவ்வொருவரும் மேற்கொள்ளும் செயலுக்கு, காலம், இடம், கருவி, முறை இவை பொருத்தமாக இருக்கிறதா என்பது பற்றிய தெளிவு பெற்றிட வேண்டும். ஆனால் தம்பி!

எல்லாச் செயலையும் நாமே செய்து கொண்டிருக்க இயலுமா!

எத்துணை வல்லமை மிக்கவரெனினும், எல்லாச் செய-னையும் ஒருவரே மேற்கொள்ள முடியாதல்லவா! ஆகவே, நாம் விரும்பும் செயலை, அல்லது நமக்குத் தேவைப்படும் செயலை, நாமேயன்றி, மற்றவர்களைக் கொண்டும் செய்து கொள்ள வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. அப்போது எந்தச் செயலுக்கு எவர் பொருத்தமானவர் என்று கண்டறியும் பொறுப்பு நமக்கு ஏற்படுகிறது இந்தப் பொறுப்பினுக்குத் தேவைப்படும் திறம் நமக்கு இருந்தாலொழிய, எந்தச் செய-லும் வெற்றி கிட்டிடும் நிலையை நாம் காண

முடியாது.

மனித குலத்தின் வளர்ச்சியிலே, தம்பி! இப்போது ஏற்பட்டுள்ள கட்டம், ஒவ்வொருவரும் தத்தமக்குத் தேவையான வைகளைப் பெற்றிடத் தாமே செயலாற்றிட வேண்டும் என்ற நிலையில் இல்லை; மாறிவிட்டிருக்கிறது.

அடவி சென்று வேட்டையாடி, இறைச்சியைத் தின்று தோலை ஆடையாகக் கொண்டு, குகையினில் பதுங்கிக் கிடந்த காலத்தில் ஒவ்வொருவரும் தத்தமது தேவைகளைப் பெறத் தாமே செயலாற்றி வந்தனர், அந்தக் காலத்தில், மனிதனுடைய தேவைகளுக்கும் மிருகங்களின் தேவைகளுக்கும் அதிக வித்தியாசம் இல்லை; ஆகவே, செயல் முறைகளிலும் அதிகமான வித்தியாசம் இல்லை.

தன் வாழ்வுக்குத் தன் வலிவினையே நம்பி இருந்திட்ட நிலை.

இன்று, முறைகள் மாறிவிட்டன, தேவைகள் பெருகிவிட்டன; வளர்ந்தபடி உள்ளன; அளவு வகை இரண்டிலும்.

எனவே, தானே செய்துகொள்ளக்கூடியவை என்பவைகளுடன், தனக்காக மற்றவர்கள் செய்யக்கூடியவை என்பவைகள் சேர்ந்துவிட்டுள்ளன.

மற்றப் பலருடைய செயல் திறமையால் கிடைத்திடும் பொருள் பெற்று இன்றைய மனிதன் தன் தேவைகளைப் பெற்று வாழ முற்பட்டிருக்கிறான்.

எனவே, தானே மேற்கொள்ளும் செயலுக்குப் ”பொருத்தம்’ பார்ப்பது மட்டுமன்றி, தனக்காக மற்றவர்கள் செய்திடும் செயல்களுக்கும் பொருத்தம் பார்த்திட

வேண்டியவனாகிவிட்டான்.

வயலில் உழவு செய்திடுகிறான், காலமறிந்து, முறை அறிந்து; அந்த வயலுக்கு உரம் வேண்டும்; முன்பு உழவன் தானே பசுந்தழையை உரமாக்கிக் கொண்டான்! இப்போது, "உரம்' வேறுவகையானதாகி விட்டது; இந்த வகையான உரத்தை உழவனே செய்துகொள்ள முடியாது; உழவனுக்காக இந்த உரம் தயாரிக்கும் வேலையை வேறு சிலர் மேற்கொண்டுள்ளனர்.

எனவே, இப்போது உழவன் காலம், இடம், கருவி, முறை இவற்றின் பொருத்தமறிந்து பண்ணையம் செய்தால் மட்டும் போதும் என்ற நிலை இல்லை; உழவனுக்காக உரம் தயாரிப்பவர்களும், காலம், இடம், கருவி, முறை ஆகியவற்றினைப் பொருத்தமுள்ளதாக்கிச் செயல்பட்டாக வேண்டும். இதுபோன்றே வேறு பலப்

பல துறைகளிலும். எனவே, இன்று ”பொருத்தம்’ சமூகத்தில் அமைந்துள்ள எல்லாச் செயல் துறைகளிலும் செம்மையாக இருந்தாக வேண்டியதாகிவிட்டது சமூகத்தில் அமைந்துள்ள செயல் துறைகளில் ஏதேனும் ஓர் முனையில்
பொருத்தமற்ற செயல் நடைபெற்றுவிட்டால், அதனால் விளையக்கூடிய கெடுபாடு சமூகம் முழுவதிலும் பரவி விடுகிறது.

எனவே சமூகத்தில் அமைந்துள்ள ஒவ்வொரு செயல் துறையிலும், பொருத்தம் அமைந்திருக்க வேண்டும்.

இந்தப் பொருத்தம் செம்மையாக அமைந்திருக்க வேண்டிய பொறுப்பினை மேற்கொண்டிருக்கும் அமைப்பே அரசு.

இத்துணைப் பெரிய, இவ்வளவு முக்கியமான பொறுப்பினை மேற்கொள்ள

வேண்டுமானால், அந்த (அமைப்பு) அரசு, அதற்குப் பொருத்தமானதாக இருந்திட வேண்டும்; அமைந்திட வேண்டும்.

அரசு அவ்விதமாக அமைந்திட வேண்டுமானால், அரசினைப் பொருத்தமானதாக அமைத்திடும் திறமை மக்களுக்கு இருக்க வேண்டும்; ஏனெனில், இப்போது அரசு அமைக்கும் பொறுப்பு மக்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

எனவே, மீண்டும் தனி மனிதனின் திறமை பற்றிய பிரச்சினைக்கே வந்து சேருகிறோம்.

பொருத்தமான அரசு அமைத்திடும் திறனைத் தனித் தனி மக்கள் போதுமான அளவு பெற்றிருப்பார்களானால், சமூகத்தில் உள்ள பல்வேறு செயல் துறைகளிலும் பொருத்தமானவர்கள்
பொருத்தமான முறையில் பணியாற்றிச் சமூக

மேம்பாடு பெற்றளித்திடுவர்.

முடியாட்சிக் காலத்தில், மன்னன் இந்தப் பொறுப்பினை மேற்கொண்டிருந்தான்; அமைச்சு, போர்த்துறை, வாணிபத் துறை, உழவுத்துறை, அறிவுத்துறை எனும் பல்வேறு துறைகளில் தக்கார்
இருந்து, தக்கன செய்திட வழி கண்டிடும் பொறுப்பினை மேற்கொண்டிருந்தான். அந்தப் பொறுப்பினை மன்னன் செம்மையாக நிறைவேற்றிடத் தேவைப்படும் அறிவாற்றல் குறித்தும், மேற்கொள்ள வேண்டிய வழிவகை பற்றியும் எடுத்துக் கூறப்பட்டுள்ளவைகள் அனைத்தும் இன்று மக்கள் தமக்காகக் கூறப்பட்டவை என்று கொள்ள வேண்டும்; ஏனெனில், இப்போது நாம் எல்லோரும் இந்நாட்டு மன்னர்! அல்லவா தம்பி!

ஆகவே,
இதனை இதனால் இவன் முடிக்கும் என்று

ஆய்ந்து அதனை அவன் கண் விடல் என்று திருவள்ளுவர் கூறியது அரசனுக்காக மட்டுமே, நமக்கல்ல என்று கருதிடலாகாது; நாம் எல்லோரும் இந்நாட்டு மன்னர்! ஐந்தாண்டுகளுக்கு ஒரு நாளாகிலும்!!

இதனை
இதனால்
இவன்

எவ்வளவு எளிய சொற்கள், தம்பி! எவ்வளவு தாராளமாக இந்தச் சொற்களைப் பயன்படுத்தி வருகிறோம். ஆனால், இந்தச் சொற்களைப் பற்றிய பொருளினை எண்ணிப் பார்த்திடேன்!

எத்தனை சரிவுகள் சருக்கல்கள்; சதுப்புகள் உள்ளன என்பது புரியும்.

இதுதானே! - என்று மிக அலட்சியமாகப் பேசி விடுகி றோம். ஆனால் "இது' என்று"எதை'ச் சொல்கிறோமோ,

“அது’ அவ்வளவு எளிதானது அல்ல என்பதனை”அதனை’ப்பற்றிய முழு விவரம் தெரிந்திட முனையும்போது புரியும்; புன்னகை மறையும்.

அதிலும் இன்று ஆட்சியிடம் போய்ச் சேர்ந்துள்ள பொறுப்புகளைப் பார்த்திடும்போது, தலையே சுற்றும்; அவ்வளவு பெரிய அளவு; பலவகையினதாக இருந்திடக் காண்கிறோம்.

பொருள் ஈட்டிடல், காத்திடல், வகுத்திடல் என்பவை, ஒரு திறமை மிக்க நல்லரசு இருந்தாலொழிய இயலாது என்று கூற வேண்டிய காலம்.

அரசு மேற்கொள்ளும் செயல்களின் வகை பலப்பல என்பது மட்டுமல்ல, தம்பி! அந்த வகையும் அளவும் நாளுக்கு நாள் வளர்ந்தபடி உள்ளன.

ஆகவே, "இதனை' என்ற ஒரு எளிய சொல்லுக்குள் பின்னிப் பிணைந்து கிடந்திடுபவைகளைப் புரிந்து கொள்ளுவது எளிதான காரியமல்ல.

எடுத்துக்காட்டுக்காக ஒன்று கூறட்டுமா, தம்பி! தொழில் வளர்ச்சி என்பதனை "இதனை' என்பதற்குப் பொருளாகக் கொள்வோம்.

தொழில் வளர்ச்சி (இதனை)யைத் திட்டமிட்டுச் செய்திட வல்லவன் நல்லான் (இவன்) என்று கண்டறிந்து, அந்தத் தொழில் வளர்ச்சியை (அதனை) நல்லானிடம் (அவன்கண்) ஒப்படைக்க வேண்டும் (விடல்).

புரிந்துவிடுகிறதல்லவா! ஆம்! என்கிறாய். ஆனால், தம்பி!

தொழில் வளர்ச்சி என்று பொதுவாகக் கூறிடுகிறோமே, போதுமா!

எத்தகைய தொழில் வளர்ச்சி?

எந்த முறையில் அந்த வளர்ச்சி அமைவது?

எவருடைய நலனுக்காக அந்தத் தொழில் வளர்ச்சி தேவை?

இவைகள் எண்ணிப் பார்க்கப்பட வேண்டிய பிரச்சினைகள் அல்லவா?

டாட்டா, பிர்லா, பஜாஜ், டால்மியா, சிங்கேணியா, டி.வி.எஸ்., கோத்தாரி, சங்கர், சேஷசாயி, இப்படி ஒரு குழுவிடம் ஒப்படைத்தால் தொழில் வளர்ச்சி நிச்சயம் ஏற்படும். திட்டமிடுவதில் வல்லவர்கள்; நிர்வாகத் திறமை மிக்கவர்கள்; இலாபம் பெறத் தெரிந்தவர்கள்; இல்லை என்பார் இல்லை. ஆனால், இந்தக் குழுவினரிடம் ஒப்படைக்கப்பட்டு ஏற்படும் தொழில் வளர்ச்சி, யாருக்குப்
பயன்படும்? முதலாளிகட்கு. மறுப்பார் உண்டா?

முதலாளிகளின் இலாப நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டதாகவே அந்தத் தொழில் வளர்ச்சி இருந்திடும், மக்களின் வாழ்க்கைத் தேவைகளுக்கான முறையில் உற்பத்தி அமையாது; இலாபம் தரத்தக்க பொருள்களாக உற்பத்தி செய்யப்படும். வெண்ணெய் உற்பத்தியில் கிடைப்பதை விடச் சுண்ணாம்பு உற்பத்தியில் இலாபம் அதிகம் என்று கணக்குக் காட்டி டின் வெண்ணெய் உற்பத்தியை நிறுத்தி விடுவார்கள்.

தொழில் வளரும், ஆனால், அதன் விளைவாக முதலாளித்துவ முறை வளரும்.

மாளிகைகள் எழும்; வண்ணமிக்கன! ஆனால் யந்திரங்க ளாக்கப்படுவர் ஏழை மக்கள்!

பன்னீரில் குளித்திடுவர் சிலர்; பல்லோர் கண்ணீர் பொழிவர்!

அனால், எட்டே தொழிற்சாலை இருந்த இடத்தில் எண்பது எழும்! தொழில் வளர்ச்சி காட்டும்.

தொழில் வளர்ச்சிக்கான திட்டத்தை நிறைவேற்றத்தக்கவர் இன்னார், அவரிடம் தொழில் வளர்ச்சிக்கான பொறுப்பை ஒப்படைக்கலாம் என்ற முடிவெடுக்கும்போது, நாம் எந்தவிதமான தொழில் வளர்ச்சியைக் காண விரும்புகிறோம் என்பதைத் பொறுத்துத்தான் பொருத்தமான முடிவெடுக்க முடியும்.

இப்போது இதனை இவனால் என்ற இரு எளிய சொற்களுக்கும் எத்தனை சுவை சேர்ந்துவிடுகிறது.
கவனித்தனையா தம்பி! சுவை இருக்கட்டும், "இவன்' யார் என்பது பற்றிய"ஆய்வு' எத்தனை சிக்கலைக் கிளப்பி விடுகிறது என்பதனைப் பாரேன்; திகைத்திட வைக்கும்.

இடையிலே, தம்பி! ஒரு சொல்லை விட்டு வைத்துள்ளேன்; மறந்துவிடாதே.

இதனை

இவனால்

என்ற இரு சொற்களுக்கு இடையில் "இதனால்' என்றோர் சொல் இருக்கிறது.

இதனை (இந்தச் செயலை) இவன் முடிப்பான் என்று அறிந்து அந்தச் செயலை அவனிடம் ஒப்படைப்பது என்று மட்டும் கூறிவிட்டால், பொருள் முழுமை பெறவில்லையே.

இதனை இவன் முடிப்பான் என்று எதைக் கொண்டு கண்டுபிடிப்பது என்ற சிக்கல் எழுமல்லவா? ஆகவேதான், இதனை இவன் எனும் இருசொற்களுக்கு இடையில் "இதனால்' என்ற சொல்லை இணைத்தளிக்கிறார் வள்ளுவர்.

இவன், இன்ன திறனுடையான், இன்ன தகுதியுடையான், இன்ன நினைப்புடையான், இன்ன கருவியுடையான், இன்ன முறையுடையான், இன்ன அனுபவமுடையான், ஆகவே, அவனிடம் அந்தச் செயலை ஒப்படைக்கலாம் என்ற முடிவுக்கு வரச் சொல்லுகிறார்.

சிற்பி சீருடையான் பேரூரில் சமைத்த சிலை அருமை மிக்கது.

சிற்பி சீருடையானிடம் சிற்பக்கலைக்குத் தேவையான கருவிகள் பாங்குடன் உள்ளன.

சிற்பி சீருடையான் சிற்பம் செதுக்கித் தந்திடுவதில் மிகுந்த ஆர்வமுடையான்.

ஆகவே, சிற்பி சீருடையானிடம் பாராண்டான் சிலை சமைக்கும் பணியினை ஒப்படைக்கலாம்.

இப்படி ஒரு முடிவு செய்வதுபோல,

”இதனை‘ச் செய்திட “இவன்’ என்ற முடிவு செய்திட, அவனிடம் உள்ள
திறமை
முறை
கருவி
வாய்ப்பு
ஆர்வம்
அனுபவம்
என்பவைகளை ஆய்ந்து அறிந்திட வேண்டும். இவ்வளவும்,”இதனால்’ என்ற சொல்லிலே அடங்கிக் கிடக்கிறது.

ஆகவே தம்பி! செய்யப்பட வேண்டியது பற்றிய தெளிவும், செய்வோனின் திறன் அறியும் தெளிவும் வேண்டும்; அந்தத் தெளிவு பெற்று ”அதனை அவன்கண் விட’ வேண்டும். நாம் இந்த முறையில் செயலாற்ற வல்லவர்கள் என்று நம்பித்தான், மக்களாட்சி முறை இங்கு நடத்தப்பட்டு வருகிறது.

ஆனால், நமக்குள்ளே பேசிக் கொள்வோம் தம்பி!

இதனை இதனால்
இவன் முடிக்கும்

என்று அறிந்து தெளிந்து, அரசு அமைக்கிற நிலையிலா நாட்டவர் உள்ளனர்? அந்த உரிமை நாட்டு மக்களுக்கு நிச்சயமாக இருக்கிறது; ஆனால், அந்த உரிமையின் சுவை மிகு பயனைப் பெறத்தக்க விதமாக மக்கள் செயல்பட முடிகிறதா! எத்தனை மயக்கம் குறுக்கிடுகிறது! எது எதை எண்ணி எண்ணித் தயக்கம் காட்ட வேண்டி ஏற்பட்டு விடுகிறது! இது எப்படி, அது எப்படி என்று எண்ணுவதாலே எத்தனைக் குழப்பம் ஏற்படுகிறது!

எந்தக் காரியத்துக்கு எவர் பொருத்தமோ அவரிடம் அந்தக் காரியத்தை ஒப்படைக்க வேண்டும் என்ற தத்துவத்தை மறுக்க மாட்டார்கள்.

ஆனால், அதனை நடைமுறைக்குக் கொண்டு வருவதிலே எத்தனை சிக்கல்!

இந்தக் காரியத்திற்குப் பொருத்தமானவர் இவர் என்றுதான் எண்ணிக் கொண்டிருந்தேன், ஏழுமலை சொல்கிறார், இவர் இதற்குப் பொருத்தமே இல்லை என்று, என்ன செய்வது என்ற மயக்கம் எழுகிறது.

ஏழுமலையின் கருத்தினை ஏற்றுக் கொள்ள வேண்டுமா என்ன, நம்முடைய கருத்துக்கு நாம் மதிப்பளிக்க வேண்டு மல்லவா என்று எண்ணிடக் கூடாதா என்று கேட்கிறாய் தம்பி!

அவ்வளவு எளிதல்ல, ஏழுமலையின் கருத்து ஒரு மயக்கத்தை மூட்டிவிட்டிருந்தால்.

தனக்கு ஒரு கருத்து, ஏழுமலைக்கு வேறு ஒரு கருத்து, இரு கருத்துக்களில் எது சிறந்தது என்பது பற்றி ஒரு குழப்பம்

என்று மட்டும் நிலை இருந்தால், சிறிதளவு தீவிரச் சிந்தனை செய்து குழப்பத்தை நீக்கிக் கொள்ளலாம்; முடியும். ஆனால், ஏழுமலை குழப்பத்தை அல்ல, மயக்கத்தை மூட்டிவிட்டால்? விடுபடுவது கடினம்.

மயக்கம் எப்படி ஏற்படுகிறது என்கிறாயா, தம்பி!

பலவகையில் ஏற்படலாம்; ஏழுமலையிடம் கடன்பட்டிருக்கிறாய் என்று வைத்துக்கொள், அடித்துப் பேச முடியுமா, நீ கூறுவது சரி அல்ல; என் முடிவுதான் சரி என்று!! முடியாதே! ஏழுமலை, ஊர்ப் பெரியதனக்காரர் என்று வைத்துக் கொள். அவருடைய கருத்தை மறுத்துப் பகையைத் தேடிக் கொள்ளலாமா!

முடியாதல்லவா? ஏழுமலை, வீட்டிலே ஒரு சுவையான விருந்தளித்துவிட்டுப் பிறகு தன் கருத்தைப் புகுத்துகிறார் என்று வைத்துக்

கொள், தள்ளிவிட முடியுமா? முடியாதே!!

உயர்தரமான காரணமே காட்டுகிறேனே; ஏழுமலை இதற்கு முன்பு பல சமயங்களில் தக்கவிதமான கருத்தளித்துப் புகழ் பெற்றவர் என்று வைத்துக் கொள்ளேன்; அப்படிப் பட்டவர் சொல்லும் கருத்தை எளிதிலே தள்ளிவிட முடியுமா!

முடியாதல்லவா!!

ஆகவே, இந்த மயக்கம் பல்வேறு காரணங்களால் ஏற்படக் கூடும். இதிலிருந்து விடுபடத் துணிவு வேண்டும்.

உண்மையை உணரத் தெளிவு வேண்டும், அந்த உண்மையின் பக்கம் நின்றிடத் துணிவு வேண்டும்.

அந்தத் தெளிவும் துணிவும் பெற்று, இதனை முடித்திட இவனால்தான் ஆகும் என்று அவனிடம் அதனை ஒப்படைக்க வேண்டும்

என்று தம்பி! நீயும் நானும். நம்மோடு சேர்ந்து ஒரு நாற்பது பேர்களும் கூறுகிறார்கள்; நானூறு பேர்கள் வேறு விதமான தீர்ப்புத் தருகிறார்கள் என்று வைத்துக்கொள்; நாம் கண்டறிந்த உண்மை என்ன ஆகிறது! வெற்றி பெறவில்லை. அந்த உண்மை வெற்றி பெறாதபோது, நாம் எதிர்பார்க்கும் பயன்?

கிடைக்காது! கிடைக்காதபோது, நாம் மேற்கொண்ட முயற்சி?

வீண் என்று ஆகிறது. அவ்விதம் ஆகிவிடுவதால், விளைவது என்ன? ஒருவிதமான சலிப்பு! அந்தச் சலிப்பின் விளைவு!

நமக்கேன் இந்தச் சங்கடம் என்ற நினைப்பு எழும். அந்த நினைப்பு "இந்நாட்டு மன்னர்' என்ற பட்டம் இருந்தும், இழுப்பார் பின் செல்லும் நிலையை ஏற்படுத்திவிடும்; அந்த

நிலையைப் பெறவா மக்களாட்சியைக் கேட்டுப் பெற்றது? இல்லை.

எனவே, உண்மையை உணரும் தெளிவும், அதன் பக்கம் நின்றிடும் துணிவும் பெறுவதுடன், அந்த உண்மையின் பக்கம் மற்றவர்களையும் நின்றிடச் செய்திடும் பணியினையும் மேற் கொண்டாக வேண்டும். மக்களாட்சி முறைதான் பொருத்தமான ஆட்சி முறை என்பதனை ஏற்றுக் கொண்டுள்ளோம்; ஆனால், அந்த மக்களாட்சி முறைக்குப் பொருத்தமானவர்களாக நாம் நம்மை ஆக்கிக் கொண்டிருக் கிறோமா என்ற கேள்வியை நாம் ஒவ்வொருவரும் நம்மை நாமே கேட்டுக் கொள்ள வேண்டும்.

மக்களாட்சி ஒரு முறை, ஒரு கருவி! ஆனால், அந்த முறைக்கும் கருவிக்கும் பொருத்தமானவர்களாக நம்மை நாம் ஆக்கிக் கொள்ள வேண்டும்.

இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து அரசியல் வித்தகர்கள், அரசு அமைக்கும் பொறுப்பினை நிறைவேற்றத்தக்க பொருத்தம் நமக்கு இருக்கிறது என்று ஒப்படைத்துள்ளனர். நாம் நமது பொருத்தத்தை மெய்ப்பித்துக் காட்டியாக வேண்டும்!

அன்புள்ள

அண்ணாதுரை

24-10-65

27. கனவான் காற்று வாங்குகிறார்

இடம், நேரம், நிலை அறிந்து பேசுக
மமதை மதியைக் கெடுத்த கதை
பேச்சின் தன்மை பற்றிய விளக்கங்கள்

தம்பி,

”ஜெர்மன் மருந்தாமா! அற்புதமானது என்கிறாரா, டாக்டர்! இதைக் கொடுத்தால் ஆபத்துப் போய்விடும், ஆசாமி பிழைத்துக் கொள்வான் என்று சொன்னாரா! சொல்லுவார்! சொல்லுவார்! சொல்லுவார். கோடி வீட்டுக் குமரப்பனுக்கு உயிர் போய்க் கொண்டு இருக்கும்போது, இதே போலத்தான் ஒரு மருந்தைக் காட்டி, அது அற்புதமான மருந்து, இனி ஆபத்து இல்லை என்று அடித்துப் பேசினார், இவரைவிடப் பெரிய

டாக்டர்! ஜெர்மன் மருந்தாவது, ஜப்பான் மருந்தாவது இனி எந்த மருந்தும் வேலை செய்யாது; நள்ளிரவு வரையிலாவது தள்ளுமா என்பது கூடச் சந்தேகம், வீணாக ஏன் அந்த நாட்டு மருந்து, இந்த டாக்டர் சொன்னது என்றெல்லாம் பேசிக் கொண்டிருக்கிறீர்கள்!''

•

"அழாதே தம்பி! அழாதே! இப்போது என்ன நடந்து விட்டது என்று இப்படிப் புலம்புகிறாய்! டாக்டர் இப்போது கொடுத்தனுப்பியுள்ள மருந்து, ஜெர்மன் மருந்தாம், இது அற்புதமான மருந்தாம், பலர் சொல்லி இருக்கிறார்கள்; இந்த மருந்து ஒருவேளை சாப்பிட்டால் உன் அப்பாவின் மயக்கம் தெளிந்துவிடும்; கண் விழித்துப் பார்த்து உன்னிடம் பேசுவார்; பயப்படாதே. பக்கத்துத் தெரு பார்வதிக்குப் பல்லெல்லாம் கிட்டி விட்டது, பார்த்தவர்களெல்லாம் இனிப் பிழைக்காது

என்று சொன்னார்கள்; ஆனால், இதே டாக்டர், இதே விதமான ஜெர்மன் மருந்து கொடுத்தார்; ஒரே மணி நேரத்தில் பார்வதி எழுந்து உட்கார்ந்துவிட்டாள்; தெரியுமா! நான் கண்ணால் பார்த்ததைச் சொல்லுகிறேன். வீணாக ஏன் மனத்தைப் போட்டுக் குழப்பிக் கொள்ளுகிறாய். நல்ல மருந்து கிடைத்து விட்டது. இனித் துளியும் பயம் வேண்டாம்.''

•

தம்பி! முதல் பேச்சு இருக்கிறதே அதுதான் உண்மை. எந்த மருந்தும் இனி வேலை செய்ய முடியாத கட்டம், சந்தேகமில்லை ஜெர்மன் மருந்தோ ஜப்பான் மருந்தோ எல்லாம் வீணான ஒரு நம்பிக்கையை மற்றவர்கள் பெற்றிட உதவிடும்; அவ்வளவுதான்; ஆள் பிழைக்க மாட்டான். அதுதான் உண்மையான நிலைமை.

இரண்டாம் பேச்சு இருக்கிறதே, அது உண்மை அல்ல! சொல்லுபவருக்கே தெரியும். நம்பிக்கை இல்லை, உயிர் ஊசலாடிக் கொண்டிருக்கிறது என்ற உண்மை. அந்த உண்மையை மறைத்துவிடுகிறார். பிழைத்துக் கொள்வார், புது மருந்து அற்புதமானது என்று பொய் பேசுகிறார். அழுது கிடப்பவர்களைத் தேற்றுகிறார். அவர்களின் வேதனையை மாற்றிட முயல்கிறார்.

•

எப்படியாவது பிழைத்துக் கொள்ள மாட்டாரா என்று குடும்பத்தார் குமுறிக் கொண்டிருக்கும்போது எதுபற்றியும் கண்டிப்புடன், ஒளிவு மறைவு இல்லாமல் பேசிடும் பழக்கமுள்ள ஒருவர், அதுபோலப் பேசினால், பாராட்டவா செய்வார்கள்! ஒளிவுமறைவின்றிப் பேசுபவர், அச்சம்

தயை தாட்சணியத்துக்குக் கட்டுப்பட்டு மனத்திற்குச் சரியென்று பட்டதை மறைத்துக் கொள்ளாதவர் என்பதற்காக அவரைப் பலர் பாராட்டியிருக்கக் கூடும்; முன்பு, ஆனால் இப்போது இந்த நிலையில் இந்த இடத்தில்? எவ்வளவு விளக்கமாகப் பேசுகிறார். இது அல்லவா அறிவாளிக்கு அழகு; துளியும் நெளிகிறாரா வளைகிறாரா! இல்லையே! டாக்டர் பேச்சை நம்பாதே! மருந்து இனி வேலை செய்யாது என்ற உண்மையைத் துளியும் மறைக்காமல் பேசுகிறார்; பொய்பேச, மயக்கமொழி பேச மறுக்கிறார்; அவர் எப்போதும் அப்படித்தான்; வெட்டு ஒன்று துண்டு இரண்டு என்ற விதமான போக்கினர்! - என்று பலரும் பாராட்டவா செய்வார்கள்?

“இவனும் ஒரு மனிதனா! துளியாவது இடம் நேரம் தெரிகிறதா இவனுக்கு. குடும்பம்”கோ‘வெனக் கதறுகிறது; இவன்

இந்த நேரமாகப் பார்த்து, இவ்விதம் பேசுகிறானே; ஆணவம்! இரக்கமற்ற நெஞ்சம்!" - என்றெல்லாம் பலரும் பதறிப் பேசுவார்கள்; ஏசுவார்கள்.

ஓடிப்போய் டாக்டரைக் கேட்டால், "கண்டிப்பாகப் பேசுபவர்' சொன்னதுதான் உண்மை என்று கூறுவார்.

"நான் உண்மையைச் சொல்லுகிறேன். பொய் சொல்ல மாட்டேன். வீண் நம்பிக்கையூட்டமாட்டேன்'' என்று கண்டிப்புப் பேர்வழியேகூட வாதாடிடக்கூடும். ஆனால், மற்றவர்கள் சமாதானம் அடையமாட்டார்கள்; அந்த வாதத்தில் நியாயம் இருப்பதாக ஒப்புக் கொள்ள மாட்டார்கள்; அந்தப் பேச்சிலே பண்பு இருப்பதாகக் கருதமாட்டார்கள். இந்தக் கண்டிப்புப் பேச்சு, மற்றவர்கள் விஷயமாகத்தான்; இவர் வீட்டிலே இப்படி ஒரு நிலைமை என்றால், வேறு யாராவது இந்த

விதமான கண்டிப்புப் பேச்சுப் பேசினால் இதே ஆசாமி"ஆமாம்' என்றா ஒப்புக் கொள்ளுவார்; ஆகாயத்துக்கும் பூமிக்குமாகத் துள்ளிக் குதிப்பார், ஆத்திரத்துடன்! மற்றவர்கள் விஷயம் என்கிறபோது. "மனத்திற் பட்டதைப் பேசுகிறார்; கேட்பவர்களின் உள்ளம் எப்படி வேதனைப்படும் என்பது பற்றித் துளியும் கவலைப் படாமல். அறிவு இருந்துவிட்டால் போதுமா; அதை எப்படி எப்படிப் பண்புடன் பயன்படுத்த வேண்டும் என்ற பக்குவம் இருக்க வேண்டாமா என்றுதான் கூறிக் கண்டிப்பார்கள்.

"காயமே இது பொய்யடா! - நல்ல
காற்றடைத்த பையடா!"

• இது பொய்யல்ல; மெய், யாரிடமும்

இதுபற்றிய விளக்கம் சொன்னாலும் மறுக்கமாட்டார்கள். பலர், தமக்கே ஒருவிதமான சலிப்பு ஏற்படுகிறபோது இதை முணு முணுத்திருப்பார்கள். ஆனால், வெண்கலக் குரலில், இதைப் பாடுகிறார், ஒருவர்; பலராலும் பாராட்டப்பட்டவர் இந்தப் பாடலைத் தனிச் சுவையுடன் பாடியதற்காக மெச்சி ஊரார் தங்கப் பதக்கம் கூடக் கொடுத்திருக்கிறார்கள் இவருக்கு! ஆயினும், அன்று அவர்

காயமே இது பொய்யடா
காற்றடைத்த பையடா!

என்று பாடத் தொடங்கியதும் மூலைக்கு மூலை கூச்சல்! மூடு வாயை! பாடாதே! மூடு வாயை!! என்று, சிலர் அடிக்கவே

கிளம்புகிறார்கள் ஏன்? அந்தப் பாடல் தவறு என்பதால் அல்ல, பொருள் பொய் என்பதாலே அல்ல; முறையாகப் பாடவில்லை என்பதாலே அல்ல; எந்தப் பாட்டுக்குப் பதக்கம் வாங்கினாரோ அதே பாட்டுதான், அதே பாகவதர்தான்! ஆனாலும் பதறுகிறார்கள், பாவி என்கிறார்கள், அடிக்கவே கிளம்புகிறார்கள். ஏன்? பாடிய இடம் ஒரு திருமண வீடு! தாலி கட்டும் வேளை! ஆயிரம் காலத்துப் பயிர் என்பார்கள்! பதினாறும் பெற்றுப் பெருவாழ்வு வாழ்க என்று வாழ்த்துவார்கள். அத்தகைய இடத்திலே காயமே இது பொய்யடா! என்று பாடினால், பாடியவர் படாதபாடு படத்தான் வேண்டிவரும்; பாடலிலே உள்ள பொருள் என்பதாலே அல்ல; இடமும் நேரமும் அந்தப் பாடலுக்கு ஏற்றது அல்ல என்பதால்.

•

1962 வருஷத்து மாடல்
பிளைமவுத்.
நேவிபுளூ - நீல நிறம்!
எக்ஸ்ட்ரா பிட்டிங்ஸ் ஏராளம்!
உள்ளே அழகான ரேடியோ!
சீட்டுகளுக்குப் பிளாஸ்டிக் கவர்.
பின்சீட்டில், "ஆறு ஆப்பிள், மூன்று சாத்துக்குடி,
"சூட் கேஸ்' பிரிட்டிஷ் மாடல்
அமெரிக்க மாடல் தெர்மாஸ்,
ஒரு ஜப்பான் காமிரா!
மோட்டார் விலை முப்பதாயிரம் ரூபாய்,
சேட் ரங்கலாலிடம் வாங்கினார்கள்.

மேலும் விவரங்களைத் தர முயல்கிறார் நிருபர், தமது குறிப்புப் புத்தகத்தைப் பார்த்தபடி. இவ்வளவு விவரமான தகவலைத் தருகிறாரே என்பதற்காக ஆசிரியர் பாராட்டத்தானே வேண்டும்? இல்லை! கோபிக்கிறார்; மேஜையை ஓங்கி அடித்துக்

கொண்டு கூறுகிறார்,

”உம்மை யாரய்யா இந்த விவரமெல்லாம் கேட்டது? எந்த விதமான காமிரா இருந்தது? எந்த ஊர் தெர்மாஸ்? இவைகளா இப்போது எனக்குத் தேவை. விபத்து எப்படி நடந்தது? யாராருக்கு ஆபத்து? போலீசார் யாரையாவது கைது செய்திருக்கிறார்களா! என்ற விவரமல்லவா எனக்கு வேண்டும்; ஊராருக்கும் அவைதானே முக்கியம் - அது பற்றி ஒரு வார்த்தை பேசாமல், மோட்டாரில் ஆப்பிள் இருந்தது என்று கணக்குக் கொடுக்கிறீரே! நான் என்ன செய்ய? தலைதலை என்று அடித்துக் கொண்டு எங்காவது ஓடித் தொலைக்க வேண்டியதுதான். உம்மோடு மாரடிக்க நம்மாலே ஆகாது என்று.

காரணம் புரிகிறதல்லவா, தம்பி! கடற்கரைப் பக்கம் நேரிட்டுவிட்ட மோட்டார்

விபத்து பற்றி நேரிலே போய் பார்த்து வந்து விவரம் கூறும்படி நிருபரை அனுப்பி இருக்கிறார் ஆசிரியர். விவரம் ஒன்றுவிடாமல் வேண்டும் என்று சொல்லி அனுப்பினார். அதை அப்படியே நிறைவேற்றத் திட்டமிட்டதன் விளைவு, மோட்டாரில் அரைபட்டு உயிரிழந்த சிறுவன் ஆறு வயதுள்ளவன், மோட்டார் டிரைவர் கைது செய்யப்பட்டான் என்ற விவரத்தைத்தானே தர வேண்டும் என்று கருதாமல், மோட்டாருக்குள்ளே இருந்த பழத்தின் கணக்கும் விட்டு விடக் கூடாது என்று குறிப்பு எடுத்துவந்த வேதனை தரும் வேடிக்கை.

விவரம் தேவை, ஆனால் கிடைத்திடும் தகவல்களில் எவையெவை முக்கியமானவை, மக்களுக்கு அறிவிக்கப்பட வேண்டியவை என்ற பாகுபாடு வேண்டுமல்லவா! அந்தப் பக்குவம் இல்லாமல் நான் கூறியது

அவ்வளவும் உண்மை; சந்தேகமிருந்தால் போய் எண்ணிப் பாருங்கள் ஆறே ஆறு ஆப்பிள்தான் இருக்கிறது என்று பேசி, உண்மைக்கு இந்த ஆசிரியர் மதிப்பளிக்க மறுக்கிறார் என்று குறை கூறிக் கொள்வதா! உலகம் ஏற்றுக் கொள்ளாது.

•

இடமறியாது பேசுவது போலவே, பாகுபாடு அறியாமற் பேசுவதும், எதிர்பாராத இக்கட்டுகளை மூட்டிவிடுவதாகிவிடும்.

அதனால், உண்மையைப் பேசக்கூடாது; இடத்திற்குத் தக்கபடி, வேளைக்குத் தக்கபடி, ஆளுக்குத் தகுந்தபடி, உண்மையை மறைத்தும் குறைத்தும் திரித்தும் பேச வேண்டும் என்பதல்ல பொருள்.

உண்மையைக் கூறுவதால் தன்னுடைய உயிருக்கே ஆபத்து ஏற்படக் கூடும் என்ற

நிலை இருப்பினும் அஞ்சாமல், உண்மையைக் கூற வேண்டும்.

உண்மையைக் கூறுவதால் தன் உயிருக்கு அல்ல, மற்றவருடைய உயிருக்கு ஆபத்து ஏற்படும் என்றாலோ, மற்றவருடைய மனம் வேதனைப்படும் என்றாலோ, உண்மையைக் கூறாமலிருப்பது, பக்குவத்தில் ஒன்றாகும்.

தம்பி! நோயாளி துடிப்பதையும், அதைக் கண்டு குடும்பத்தார் குமுறுவதையும் பார்த்தும் டாக்டர் கொடுக்கும் புதிய மருந்தினால் பயன் இல்லை, ஆள் பிழைக்கப் போவ தில்லை என்ற "உண்மை'யைக் கூறினானே "கண்டிப்பு'ப் பேர்வழி அவன் அந்த உண்மையைக் கூறியதாலே யாருக்கு என்ன பயன் விளைந்தது? அவ்விதம் பேசாதிருந்தால், யாருக்கு என்ன கெடுதல் ஏற்பட்டுவிடும்? ஒன்றுமில்லையல்லவா! ஆனால் "பச்சை'யாகப் பேசியதால்,

ஏற்கனவே குமுறிக் கிடந்தவர்கள மேலும் பதறுகிறார்கள்; வேதனை அடைகிறார்கள். இந்த வேதனையைத் தான் அவனுடைய "பேச்சு' மூட்டிவிட்டதேயன்றி, வேறென்ன செய்தது! ஒன்றுமில்லை.

அந்த இடத்திலே அவன் பக்குவமாகப் பேசியிருக்க வேண்டும் அல்லவா?

நீதியை நிலைநாட்ட, பிறர் நன்மை பெற, ஊர் வாழ, உரிமை காத்திட, இவை போன்றவைகளுக்காகப் பணியாற்றிடும் போது, உண்மை பேச வேண்டும்; அவ்விதம் பேசுவதால் தன் உயிருக்கே ஆபத்து வந்திடும் என்றாலும் கவலையற்று, கலங்காமல்!

இடமும் நேரமும் தெரியாமல் சிலர் பக்குவமற்றுப் பேசுவது போலவே, தனக்கேற்ற இடம், தனக்குச் சாதகமான நேரம் கிடைத்ததைப் பயன்படுத்திக் கொண்டு, சிலர்

தமது ஆதிக்கத்தை வளர்த்துக் கொள்ளும் விதமாகவும், பிறரை இன்னலுக்கும் இழிவுக்கும் ஆளாக்கும் நோக்கத்துடனும், பேசுவது காண்கிறோம்.

முன்னது மடைமையிலே சேருவது; இஃது கொடுமையிலே சேர்க்கத்தக்கது.

நோயாளியிடமே செல்வோம், தம்பி! டாக்டர் சொன்ன மருந்து வாங்கி வர வேண்டும். யாரும் கிடைக்கவில்லை; குடும்பத்தார் துடிக்கிறார்கள், எதிர் வீட்டு இளைஞன் தெரிகிறான்; அவனிடம் கெஞ்சுகிறார்கள், மருந்து வாங்கிக் கொண்டு வந்து கொடுக்கச் சொல்லி,

”இப்பத்தான் கண்ணுக்குத் தெரியுதா என்னை! சிறு துரும்பும் பல் குத்த உதவும் என்பார்கள். அந்தப் புத்தி கூட இல்லாமல் நான், மணி பார்க்க வீட்டுக்குள்ளே

வருகிற போதெல்லாம், இங்கே என்ன வேலை! மணிபார்த்து எந்த ஆபீசுக்குப் போகப் போகிறாய்! போ! போ! கடிகாரம் ஓடவில்லை! என்று ஏசி அனுப்புவீர்களே, கவனமிருக்கிறதா! இப்போது நான்தான் உதவவேண்டி வருகிறது! போக முடியாது என்றால் என்ன செய்து விடுவீர்கள்! காலிலே கூட விழுவீர்கள்!! தெரியுமே, எனக்கு.''

என்று அந்த இளைஞன் பேசினால், அதுதான் கொடுமை என்பது.

நோயாளியின் நிலைமை மோசமாகிவிட்டதை அறிந்து, இதுவரை பார்த்த டாக்டரால் பயனில்லை என்று உணர்ந்து புதிய டாக்டரை அழைக்கிறார்கள் என்று வைத்துக் கொள்; அந்தப் புதிய டாக்டர் இதுதான் தக்க சமயம் என்று எண்ணிக் கொண்டு,

யாரு? எல்லப்பனா! ஏது இந்தப் பக்கம்? உனக்குத்தான் வேறு எத்தனையோ டாக்டர்கள் உண்டே! என்னிடம் வருவானேன். போ! போ! உயிர் போகிற நேரம் என் கவனம் வருகிறது இல்லையா! நான் என்ன வேலையற்றவனா, எவன் எந்த நேரத்தில் வந்து கூப்பிட்டாலும் வந்துவிடுவேன் என்ற எண்ணமோ?

என்றெல்லாம் பேசினால் நிலைமையைத் தனக்குச் சாதகமான தாக்கிக் கொண்டு, கொடுமையைக் கொட்டுகிறார் என்பது பொருள்.

•

”ஐயா, எப்பவும் மோட்டார் பஸ்ஸிலேதானே போற பழக்கம். நாமாகப் பார்த்து, கொடுப்பதைக் கொடுங்க, ஏறுங்க வண்டியிலேன்னு கூப்பிட்டாக் கூட, பொழுது விடிந்துவிடுமே உன் வண்டியிலே ஏறினா

என்று பேசறவராச்சே. இப்ப? பஸ் இல்லை! நம்ம வண்டியை விட்டா வேறே வழி இல்லை. கூப்பிட வர்ரீங்க, இல்லையா! மூணு ரூபா சம்மதமானா, வாங்க. இல்லையான காத்துக்கிட்டு இருங்க; நாளைக்கு வருவான் பஸ்ஸுக்காரன்''

என்று பேசிடும் வண்டிக்காரர்களைப் பார்க்கிறோமல்லவா? இந்த விதமான மனப்பான்மையினர், மேல்மட்டத்தில் நிரம்ப! அடிமட்டத்தினர்' அஞ்சுவார்கள், இந்தப் போக்கினைக் கொள்ள! மேல்மட்டத்தினரோ, கூசாமல், இந்தக் கொடுமையுள்ள போக்கினை மேற்கொள்வர்; அதிலே ஒரு குதூகலமும் காண்பர்!

"மேல்மட்டத்தினரில்' சிலர் தம்மிடம் மதிப்பு வைத்துள்ள வர்களை, குத்திவிட்டு வேடிக்கை பார்க்கும் விதமாகப் பேசுவதில் தனிச்சுவை காண்பவர்கள்.

”நான் சொல்கிறேன் என்று கோபித்துக் கொள்ளக் கூடாது; அப்படிக் கோபித்துக் கொண்டாலும் நான் கவலைப்பட போவதில்லை; சொல்ல வேண்டியதைச் சொல்லித்தானே ஆக வேண்டும்? உன் அண்ணன் ஒரு பெரிய முட்டாள். ஆமாம்! காரணத்தோடுதான் சொல்கிறேன். உன்னைச் சொன்னேனா, முட்டாள் என்று. எனக்கு அப்படித் தோன்றவில்லை; ஆகவே சொல்ல வில்லை, ஆனால், உன் அண்ணனைப் பற்றி என்னால் சொல்லாமல் இருக்க முடியவில்லை.''

இவ்விதம் ”மேல்மட்டம்'' பேசுவது கேட்டு, அவரிடம் உள்ளபடி மதிப்பு வைத்துள்ள இளைஞன் என்ன நினைத்துக் கொள்வான், சங்கடமான நிலைமை; ஆனால், இப்படிப்பட்ட ஒரு இக்கட்டான நிலைமையை உண்டாக்கி மகிழ்வதில் ஒரு தனிச் சுவை கொள்கிறார்கள்

மேல்மட்டத்தினர்; என்ன செய்வது?

மேலதிகாரி, தன்னை மெச்சிடுபவர் எதிரில், தன்னிடம் வேலை பார்ப்பவர்களைப் பற்றிக் கேவலமாகப் பேசி மகிழ்வதைக் கண்டதுண்டா, தம்பி?

"இவன் சார்! எட்டு வருஷமாக இங்கு வேலை பார்க்கிறான். சம்பளம் நூற்று ஐம்பது. பி.ஏ. படித்தவனாம் ஒரு நாளாகிலும் ஒரு பக்கமாகிலும் பிழையில்லாமல் எழுதுவானா என்று நான் தவம் கிடக்கிறேன், இதுவரையில் பிழையில்லாத ஒரு பக்கத்தைக் கூடப் பார்க்கும் பாக்கியம் எனக்குக் கிடைக்கவில்லை. ஆசை மட்டும் இருக்கிறது கொள்ளை கொள்ளையாக! ஆபீஸ் மானேஜராக ஏன் வரக் கூடாது என்ற ஆசை - என்னவோ பழமொழி சொல்லுவார்களே, ஆசை இருக்கு தாசில் பார்க்க. . . என்னது சார் அந்தப் பழமொழி. . .''

என்று சொல்லி, ஏசல் நிரம்பிய பகுதியை வந்தவரைக் கொண்டே சொல்ல வைப்பார்,

ஆசை இருக்குது தாசில் பார்க்க. . .

என்று பழமொழியில் பாதி சொல்லி மற்றப் பாதியைச் சொல்லச் சொல்லும்போது எவ்வளவு நேரம் தயக்கம் காட்டிக் கொண்டிருக்க முடியும். வலியுறுத்தல் வளர வளர,

"ஆசை இருக்குது தாசில் பார்க்க், அம்சம் இருக்குது கழுதை மேய்க்க''

என்று பழமொழியை, வந்தவர் சொல்லித் தீர வேண்டி வருகிறது.

தனியாகக்கூப்பிட்டு நாலு வார்த்தை கண்டிக்கட்டும். கேட்டுக் கொள்ளலாம்; வேறொருவர் எதிரில் இப்படியா அவமானப்படுத்துவது என்று அந்த B.A வருத்தப்படுகிறான், வருத்தத்தை யார் மீது

காட்ட முடியும்! மேலதிகாரி மீதா!! முடியாதே.

அவனால் "முடியாது' என்பது தெரிந்து, மேலதிகாரி வாட்டுகிறார்; கவ்விக் கொண்ட எலியைப் பூனை வாட்டுகிறதே அதுபோல!

•

இடம், நேரம், நிலை இவற்றினைச் சாதகமாக்கிக் கொண்டு, இழிவுபடுத்தும் முறையுலும், சங்கடம் ஏறபடுத்தும் விதத்திலும் பேசுவது, இடமறியாது, நிலை புரியாது, நேரமறியாது பேசுவது போலவே, கேடு நிரம்பியது; ஆனால், நாட்டினில் இந்த விதமான பேச்சுகளை நிரம்பக் கேட்டுத் தீர வேண்டி இருக்கிறது.

வறுமையால் கொட்டப்பட்ட நிலையில், மனைவியிடம் ஆத்திரத்தைக் காட்டுகிறான் கணவன், அந்த ஆத்திரம் அவள் கன்னத்தை வீங்கச் செய்து விடுகிறது; தாய் வீடு சென்று

விடுகிறாள். கணவன் கோப மிகுதியால்,

"அந்தக் கழுதை எங்கே ஓடிப் போனால் எனக்கு என்ன!''

என்று கூவுகிறான். நடைபெற்றது இவ்வளவுதான். ஆனால், அவனுடைய "எஜமானன்' அந்த நிலை காரணமாக, நாலு பேர் எதிரில் கேட்கிறார் அவனை,

"என்னடா சடையா! உன் பெண்ஜாதியா ஓடிப்போயிட்டா''

என்ற. என்ன செய்வான் இந்தப் பேச்சைக் கேட்டு?

"ஆத்தா வீட்டுக்கு. . .''

என்று கூறுகிறான்; அங்கே போய்ப் பார்த்தாயா? என்று குறுக்குக் கேள்வி கேட்கிறார் எஜமானன்! ஆத்திரம் பொங்கி வழிகிறது அவனுக்கு. ஆனால் நிலைமை!

ஏதாகிலும் எருது, எருமை அந்தப் பக்கம் வந்தால், அதன்மீது காட்டிக் கொள்ளலாம் ஆத்திரத்தை - எஜமானரிடம் காட்ட முடியுமா! துடிக்கிறான், அவர் சிரிக்கிறார்.

•

கிடைத்துவிட்ட அல்லது பிடித்துக் கொண்ட நிலை காரணமாகச் சிலருக்குப் பேச்சு தன்னாலே தடித்துவிடுவதுண்டு. நிலை என்பது, பணம், பதவி எனும் எதன் காரணத்தாலும் வரலாம்.

கதை ஒன்று சொல்லுவார்கள், கையிலே நாலு காசு சேர்த்ததும், தன்னாலே "திமிரான' பேச்சு வந்து சேர்ந்துவிடும் என்பதை விளக்கிட.

பட்டிக்காட்டான் ஒருவன் சந்தையிலே மாடுவிற்று இரு நூறு ரூபாய் பெற்றான்; பெற்றதை மடியினில் பாதுகாப்பாக வைத்துக்

கொண்டு, சாவடியிலே படுத்தான், உறக்கம் தொட்டிழுக்கும் நிலை. அந்தப் பக்கத்தில் களவு, வழிப்பறி நடத்துபவர் நாலைந்துபேர், சாவடிக்குள் நுழைந்தனர் பதுங்கிக் கொள்ள. இருட்டு; உள்ளே ஆள் படுத்துக் கிடப்பது தெரியாமல், ஒருவன் பட்டிக்காட்டான் காலை இலேசாக மிதித்துவிட்டான்; இடறி விழ இருந்தவன் சமாளித்துக் கொண்டு, உற்றுப்பார்க்க, படுத்திருப்பது ஒரு ஆள் என்று தெரிந்ததும் கேலியாக, கட்டை போலக் கிடக்கிறான் பயல்! என்றான், படுத்துக் கிடந்தவன், சும்மா இருப்பானா; மடியில் பணம் இருக்கிறதே இரண்டு நுறு!! அதனால் என்றுமில்லாத ஒரு இறுமாப்பு. அதன் காரணமாக, "கட்டையா! உங்க வீட்டுக் கட்டை மடியிலே இருநூறு ரூபாய் முடிந்து வைத்துக் கொண்டிருக்குமோ?'' என்று கேட்டான். உயர்தரமான நகைச்சுவை என்ற எண்ணம்,

மடியில் இருநூறு! என்று சொன்னதும், வழிப்பறிக்காரன் சும்மா இருப்பானா? எடடா! என்றான் ஒருவன், போடடா! என்றான் இன்னொருவன், மற்றொருவன் மடியில் இருந்ததைப் பறித்துக் கொண்டான். வேறொருவன் ஏதாகிலும் கூச்சல் கிளப்பினே, தொலைத்து விடுவோம் என்று மிரட்டினான். பணத்தைப் பறி கொடுத்தவன், பயத்தால் வெடவெடத்துப் போய், உயிர் தப்பினால் போதுமென்று ஓராயிரம் கும்பிடுகள் போட்டான்! போ! என்று களவாடுபவர் உத்தரவு கொடுத்தனர், ஓடிவிட்டான், உயிர் தப்பினோம் என்று. ஓடும்போதுதான் புத்தியிற்பட்டது அவனுக்கு. மடியில் பணம் இருக்கிறது என்பதைச் சொல்லி நாமேயல்லவா சிக்கிக் கொண்டோம். ஒரு விநாடி ஆணவத்துக்கு இடம் கொடுத்ததன் பலன், பணம் பறிபோயிற்று. வாய் திறவாது

இருந்திருந்தால் வந்திராதே இந்த இழப்பு, ஆபத்து என்று எண்ணி வருத்தப்பட்டுக் கொண்டான். காரியம் கெட்டபிறகு!! மடியிலே பணம் என்றதும் மமதைப் பேச்சு தன்னாலே வந்துவிடும் என்பதையும் மமதை மதியைக் கெடுக்கும் என்பதையும், விளக்கும் கதை.

சாவடியில் படுத்துக்கிடப்பவன் மட்டுமல்ல, அரசுக் கட்டில் ஏறிடுவோர் பலருக்கு இத்தகைய வாய்த்துடுக்கு எளிதாக ஏற்பட்டு விடுகிறது. சாவடியில் இருந்தவனுக்கு ஏற்பட்ட இன்னல் இவர்களுக்கு ஏற்படுவதில்லை; ஏனெனில், இருக்கும் இடம் அத்தனை பாதுகாப்புள்ளது, ஆனால், இறுதியில், பொதுமக்கள் விழித்தெழுந்து இத்தகையவர்களுக்குத் தக்க தண்டனை தந்துவிடுவார்கள்; தீர்ப்பு நாளன்று.

ஜனநாயக ஆட்சி முறையில் அரசுக்

கட்டில், எவருக்கும் கிடைத்துவிடக்கூடும்; அவர்கள் எந்தக் காரணத்தாலாவது மக்களின் பேராதரவைப் பெற்றிட்டால்! அரசாள வாய்ப்புக் கிடைத்த பிறகு, அவர்களிலே பலருக்கு, எங்கு இருந்தோம், எங்கே வந்திருக்கிறோம்? என்ன முறையாலே வந்தோம்! என்னென்ன கூறிவிட்டு வந்திருக்கிறோம்; என்பவைகள் மறந்து போகின்றன; பழங்கதையாகி விடுகின்றன. பெரிய இடத்துக்கு வந்து சேர்ந்திருக்கிறோம் என்ற எண்ணம் போய்விடுகிறது. நாம் பெரிய ஆசாமி என்ற நினைப்பு மேலோங்கி விடுகிறது. உடனே, தன்னைச் சுற்றி உள்ளவை அனைத்தும் அற்பமாகத் தெரியத் தொடங்குகின்றன. தகுதிகள் யாவும் தமக்கே உண்டு என்ற தருக்கு தலைக்கு ஏறிவிடுகிறது. எடுத்தேன் கழித்தேன் என்று பேசும் போக்கு மிகுந்து விடுகிறது.

பெரிய இடத்தில் உள்ளவர் பேசுகிறார் என்பதால், கேட்டுக் கொள்கிறார்கள், சகித்துக் கொள்கிறார்கள். அதைக் கண்டதும், ஆணவம் மேலும் வளருகிறது. டாக்டர்களுக்கு மருத்துவ முறை பற்றியும், பொறி இயல் துறையினருக்குக் கட்டட அமைப்புப் பற்றியும், பேராசிரியர்களுக்குக் கல்வியின் மேம்பாடு பற்றியும், தொழிலதிபர்களுக்குத் தொழிற்சாலை அமைப்பு பற்றியும் புத்தி கூற முனைந்து விடுகிறார்கள்!

ஜனநாயக முறை காரணமாக ஆட்சிப் பொறுப்பில் இடம் பெற்றுவிட்டதாலேயே, அந்த ஆட்சிக்கு உட்பட்ட நிலையில் உள்ளவர் எவர் என்றாலும், அவர்களுக்கு உள்ள தகுதிகள் திறமைகள் எவ்வளவு உயர்ந்தன என்றாலும், மதிப்பளிக்கத் தேவையில்லை என்ற எண்ணம் வளர்ந்து விடுவது, ஜனநாயகப் பயிரைக் கெடுத்திடும் களை போன்றது.

கதிரை அழித்திடும் பூச்சி போன்றது. இதனால் ஜனநாயக முறை மூலம் கிடைக்க வேண்டிய பலன் வெகுவாகக் குறைகிறது, கெடுகிறது.

பதவி காரணமாக மட்டுமல்ல, பணம் காரணமாகவேகூட இந்த மனப்பான்மை வளர்ந்து விடுவதைக் காண்கிறோம். காண்பது மட்டுமல்ல, அதற்கு அடங்கிக் கிடக்கிறோம்; அடங்கிக் கிடப்பதன் மூலம் நாமே அந்த மனப்பான்மையை மேலும் வளர்த்தும் விடுகிறோம்!

கையில் காசு இல்லாதவன் அதிகம் பேசாமலிருந்தால் ஊமை உன்மத்தன்; பேசத் தெரியாததால் பணம் படைத்தோன், வாய் மூடிக்கிடந்தால், அடக்கம், பெருந்தன்மை கண்டபடி பேசமாட்டார், அளந்து பேசுவார் நிறுத்துப் பேசுவார் என்ற புகழாரம்; நாமே சூட்டிவிடுகிறோம்! களங்கமற்றுச் சிரிப்பவன், காசு இல்லாதவனானால், என்னடா

இளிக்கிறாய் என்று கேட்டு விடுகிறோம்; பணம் படைத்தவனை அவ்விதம் கேட்போமா? ஐயா எப்போதும் இப்படித்தான், கலகலப்பாக இருப்பார் என்று கூடப் பாராட்டுகிறோம். கனவான், கடற்கரையில் காற்று வாங்குகிறார்! காசில்லாதவனை அதே இடத்தில் கண்டால்? கடலோரம் அலைந்து கொண்டிருக்கிறான்! என்கிறோமல்லவா!! பதவியில் உள்ளவர்கள் பற்றி இதே போலத்தான், பேசுகிறோம்.

இது தம்பி! ஒருவர் இருக்கும் நிலையைக் கண்டு மற்றவர்களுக்கு ஏற்பட்டுவிடும் நினைப்பும், அந்த நினைப்பின் காரணமாகக் கிளம்பும் பேச்சுமாகும். இது ஒரு சிலருக்கு மட்டும் இருந்தால் கேடு அதிகம் இல்லை. ஆனால் இது "சமூக இயல்பு' ஆகிவிட்டால், அங்கு"ஜனநாயகம்' பிழைக்காது, தழைக்காது. அதற்காகத்தான் அது குறித்துச் சொல்கிறேன் இந்த அளவு.

ஆக, நிலைமை அறியாது பேசுவது தவறு; நிலைமையைச் சாதகமாக்கிக் கொண்டு பேசுவதும் தவறு. நிலைமையைக் கண்டு அஞ்சி நடுக்குங்குரலிற் பேசுவதோ, மயங்கி மழுப்பும் குரலில் பேசுவதே, இவை யாவுமே தவறுதான்.

என்ன அண்ணா! "பேச்சு' பற்றி இத்தனைக் கூற வேண்டுமா? என்று கேட்கிறாயா, தம்பி! இன்னமும் கூற வேண்டியது இருக்கிறதே! அடுத்த கிழமை மேலும் சில கூற இருக்கிறேன்.

அன்புள்ள

அண்ணாதுரை

31-10-65

28. நாநலம்

பயன் தராததைப் பேசுபவன் பதர்

ஜனநாயக நாள்களில் நாநலம் தேவை !

கொக்கொக்கக் கொத்திட வேண்டும்

பேச்சிலே பக்குவம், பயன், தெளிவு வேண்டும்

எனக்கு மட்டுமே எல்லாம் தெரியும் என்ற இறுமாப்புக் கூடாது

காமராசர் விரும்பும் ஜனநாயகம்

தம்பி,

பயனறிந்து பக்குவம் கெடாமல், பண்பு குறையாமல், பேசிட வேண்டும். அதுபோன்றே, மேல்மட்டத்து இடம் கிடைத்துவிட்டது என்பதாலோ, நேரம் தனக்குச் சாதகமானது என்பதாலோ, மற்றவர்களைக் கெடுத்திடத்தக்க இன்னலை உண்டாக்கத்தக்க விதமாகவும் பேசக்கூடாது.

•

”பயனில சொல்லாமை’ என்று ஓர் அதிகாரமே அளித்திருக்கிறார் வள்ளுவர்.

வெறும் சொல்வன்மையைக் காட்டவோ, தான் எது சொன்னாலும் கேட்டுக் கொள்ள வேண்டிய நிலையிலே சிலர் உளர் என்ற நினைப்புடனோ, எந்தவிதமான பயனும் தராததைப் பேசுபவனைப் “பதர்’ என்றே கடிந்துரைக்கிறார்!”பதர்’ உருவில் நெல்போலத்தான் இருக்கிறது; பயன்? ஏதுமில்லை அல்லவா! அதுபோலத்தான் பயனற்றன பேசுவான் மனித உருவில்தான் இருக்கிறான், ஆனால், பயன் ஏதும் இல்லை என்கிறார்.

பயனில்சொல் பாராட்டு வானை மகன்எனல்;
மக்கட் பதடி எனல்.

ஜெர்மன் மருந்தாவது ஜப்பான் மருந்தாவது என்று பேசினானே, அந்தப் பேச்சு பயனற்றது மட்டுமல்ல, பலருக்கும் கோபமூட்டிடத் தக்கது. அவ்விதமானவனைத்தான் வள்ளுவர் முதலில் காட்டிச் சாடுகிறார்.

பல்லார் முனியப் பயனில சொல்லுவான் எல்லாரும் எள்ளப்படும்.

நான் உண்மையைத்தானே சொன்னேன் என்று வாதாடுவானல்லவா, அதனையும் விளக்குகிறார் வள்ளுவர். வாய்மைக்கு ஒரு இலக்கணம் வகுத்தளிக்கிறார்:

வாய்மை எனப்படுவது யாதுஎனில் யாதொன்றும்
தீமை இலாத சொலல்.

என்று கூறிவிட்டு, அப்படியானால் பொய் பேசுவதோ என்று கேட்பார்களே

என்று உணர்ந்து, அதற்குத் தக்க விளக்கம் தந்துவிடுகிறார்:

பொய்ம்மையும் வாய்மை இடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கும் எனின்

தம்பி! நன்மை பயக்கும் என்கிறபோது பேசுபவருக்கு நன்மை பயப்பது என்று கொள்ளக்கூடாது; மற்றவர்க்கு என்பதே பொருள்.

மற்றும், கடுஞ் சொல் கூடாது என்பது குறித்தும், தெளிந்த பிறகு பேசு; தெரிந்ததை எல்லாம் கூறிவிடலாம் என்று எண்ணிப் பேசாதே என்றும், குறிப்பறிந்து பேச வேண்டும், அவை அறிந்து பேச வேண்டும் என்றும் வலியுறுத்தி இருக்கிறார்.

பேசுவது பற்றி இவ்வளவு கூற வேண்டுமா என்று என்னை எங்கே

கேட்டு விடுகிறாயோ என்றுதான், தம்பி! வாழ்க்கைக்கு இலக்கணம் வகுத்த வள்ளுவரே, அதுபற்றிய இலக்கணத்தை மிக விளக்கமாக அளித்திருக்கிறார் என்பதனை எடுத்துக் காட்டுகிறேன்.

தம்பி! எழுதுவது என்பதைவிட எளிதாக உள்ளதல்லவா, பேசுவது? ஒரு சமூகத்தில் விரல் விட்டு எண்ணத்தக்க சிலர் மட்டுமே எழுத்தாளர் ஆகின்றனர்; அவர்களில் சிலரே எழுத்தாளர் என்று ஏற்றுக் கொள்ளப்படுகின்றனர். பேசுபவர் என்று சமூகத்தில் ஒரு பகுதியைப் பிரித்துக் காட்ட முடியாது; பேச்சாளர்கள் இருக்கிறார்கள், சமூகத்தில் ஒரு பகுதியினராக; ஆனால் பேசுவோர் சமூகத்தினர் முழுவதுமல்லவா! பேசுவோர், எங்குப் பேசினும், எவரிடம் பேசினும், எதற்காகப் பேசினாலும், ஏதேனும் ஓர் விளைவு ஏற்பட்டுத்தானே தீரும்?

ஒரு அவசரப் பேச்சு, ஆத்திரமிக்க பேச்சு, பழிச்சொல், சமூகத்தில் எத்தனை கேட்டினை உண்டாக்கிவிட முடிகிறது! தீயினால் சுட்ட புண்ணை ஆற்றிவிடலாம், நாவினால் சுட்ட வடு ஆற்ற முடியாதது என்று அறிவிக்கிறார்.

தீப்பட்ட இடம் புண்ணாகிப் பிறகு உலர்ந்து வடுக்கூடத் தெரியாது போய்விடும் தக்க மருத்துவ முறையினால், ஒருவருடைய பேச்சினால் மனம் புண்ணாகிப் போனால், அது ஆறாது, ஆற்றவே முடியாத புண்ணை ஏற்படுத்தக் கூடிய பயங்கரமான கருவி நாக்கு என்பதால்தான்.

யாகாவாராயினும் நா காக்க!

என்று எச்சரிக்கிறார், காத்திடுவது எங்ஙனம் என்பது பற்றிய விளக்கமும் அளிக்கிறார்; குடும்பத்தாருக்கு,

நண்பர்களுக்கு, அமைச்சர்கட்கு, தூதுவர்க்கு.

கடன் அறிந்து காலம் கருதி இடன் அறிந்து
எண்ணி யுரைப்பான் தலை.

தன் கடமை என்ன என்பதனைத் தெரிந்து கொள்ள வேண்டும், காலம் இடம் தெரிந்து கொண்டு பேச வேண்டும் என்று வள்ளுவர் தூதருக்கு இலக்கணம் வகுத்திருக்கிறார்.

•

தம்பி! நாநலம், நாகாத்திடல், நல்லன நவின்றிடல், அல்லன தவிர்த்திடல், பயனில் சொல்லாமை எனும் பண்புகள் மற்ற எந்த நாட்களையும் விட ஜனநாயக நாட்களில் மிகமிகத் தேவைப் படுகிறது.

மக்கள் தங்களைத் தாங்களே ஆண்டு கொள்ளுகிறார்கள் என்பது ஜனநாயக

முறை. இது நடைமுறையில், மக்கள் தங்கள் சார்பில் ஆட்சி நடத்தச் சிலரைத் தேர்ந்தெடுத்து அனுப்பு கிறார்கள் என்று ஆகிறது. சிலரைத் தேர்ந்தெடுத்து அனுப்புவது என்ற முறை இருக்கிறது என்றால், அதன் முழுப் பொருள், பலருக்கும் தேர்தலில் ஈடுபடும் உரிமை இருக்கிறது என்பதாகும். இந்தப் ”பலரில்’, சிலர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். இதற்குப் பலர் பேசுவதனையும் கேட்டு, சீர்தூக்கிப் பார்த்து, பயன் அறிந்து, தக்காரைத் தேர்ந்தெடுக்க வேண்டும். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்பதற்காக, தேர்தலில் ஈடுபடுபவர்கள், மக்களிடம், தமது நோக்கம், திறம் பற்றிய விளக்கமளித்துப் பேச வேண்டும். அதற்கு நாநலம் இருந்தால் மட்டும் போதாது; பறை ஓசை கிளப்பிடின் யாழ் இருக்குமிடம் தெரியாது போய்விடும்! சங்கு கொண்டு ஊதிடின் குழல் இனிமை

விளங்கிடாது.

•

பேச்சிலே அழுத்தந் திருத்தம் இருந்திடல் வேண்டும், அப்போதுதான் கேட்பவர் மனத்திலே அந்தப் பேச்சுப் பதியும், ஏற்றுக் கொள்வார்கள் என்று கூறப்படுகிறது.

இது ஓரளவுக்கு உண்மை.

பொறி பறக்கப் பேசினான் என்று கூறுகிறோமல்லவா! பொறி மட்டும் இருந்திடின், பயன் இல்லை; ஒளி கிடைத்திட வேண்டும். சம்மட்டி அடி நொறுக்கத்தக்க வலிவு மிக்கது. ஆனால், அது இரும்பு அடிக்க அல்லது பாறையைப் பிளக்கத் தேவை, ஆடையின் அழுக்கெடுக்க அல்ல, பொன்னை அணியாக்கிட அல்ல!

இது “மடத்தனம்’ - இவர்கள்”முட்டாள்கள்’ இதுகளை ”ஒழித்துக் கட்டாமல் விடமாட்டேன்’

என்றெல்லாம் பேசுவது எளிது; அதிலும் முழுக்க முழுக்க நம்மவர்கள் உள்ள அவை என்று அறிந்துவிட்டால், மிக மிக எளிது; கைதட்டுதல் பெற இது பயன்படும், இதயத்தைத் தடவிட அல்ல.

குழலூதும்போது கவனித்துப் பார் தம்பி! விரல்கள் எவ்வளவு "நளினமாக' வேலை செய்கின்றன என்பது விளங்கிடும். ஓவியம் தீட்டுவோன் தூரிகையை எவ்வளவு பக்குவமாகப் பயன்படுத்துகிறான் என்பதனையும் பார்த்திடு, கல்லிழைத்த நகை செய்திடும் பொற்கொல்லரின் கைத்திறனையும் பக்கமிருந்து பார்! பொன்னார் இழை கொண்டு ஆடை நெய்திடும் கலைஞன் என்ன முறையில் வேலை செய்கிறான் என்பதனைப் பார்! கட்டை பிளப்பவன், கோடாரியை வீசிடும் விதத்தையும் பார்!

முன்னவர்கள் புதிய ”படைப்புகளை’ச் செய்தளிக்கிறார்கள்; கோடாரிக்காரன் கிடைத்ததை உடைத்துத் தருகிறான். பேச்சிலேயும், இப்படி வகை உண்டு.

நாம் கூறிடும் கருத்தினை ஏற்ப மறுப்பவர்கள் எல்லோரும் மாற்றார்கள் - நம்முடைய கண்டனக் கணைக்கு ஆளாக வேண்டியவர்கள் அல்லது நம்மாலே அலட்சியப்படுத்தத் தக்கவர்கள் என்ற நினைப்புடன் - முனைப்புடன் என்றாலும் தகும் - பேசுவது ஏற்கனவே நம்மோடு இணைந்து போய் விட்டவர்களுக்குக் கரும்பு! மற்றவர்களுக்கு அது வேம்பு மட்டுமல்ல, எட்டி என்றே தோன்றும்; நம்மை நெருங்கிடவே அவர்களுக்கு விருப்பம் வராது!

பொறி பறக்கப் பேசுவது என்றால், ஒருவரையும் அருகே நெருங்கவிடாதபடிப் பேசிடுவது என்பதல்ல பொருள்;

கொள்கையிலே நமக்குள்ள ஆர்வம் கொழுந்து விட்டு எரிந்து, அதன் பொறிகள் பேச்சின் மூலம் சிதறுகின்றன என்பதுதான் உண்மையான பொருள்.

கனியிருக்கக் காய் கவருவது போன்றது என்றார் வள்ளுவர் கடுஞ்சொல் பேசும் முறையை.

நாம் எங்கு இடம் பெற்றிருக்கிறோமோ, அந்த இடத்திற்கு உள்ள வலிவு, நமக்கும் வந்து சேருகிறது. இது இயற்கை. நாற்பது மைல் வேகத்தில் ஓடும் மோட்டாரில் உள்ளவன் தானாக நடந்தால் "மாதம் காதவழி' மட்டும் போகத்தக்க"நோன்ஜான்' ஆக இருந்தாலும் அவன் மேற்கொண்ட பயணம், வேகமாக அமைந்து விடுகிறது.

அதனை உணராமல், அவன், நான் மணிக்கு நாற்பது மைல் வேகம்

செல்லவல்லேன் என்று கூறிடின், அவனைப் பேதை என்று அறிவாளர் கூறுவர்; கூறுவரா? இல்லை! எண்ணிக் கொள்வர்!

இருக்கும் இடத்தின் வலிவு கண்டு இறுமாந்து கிடந்திடும் இயல்பினின்றும் தப்புவது மிகக் கடினம். பயில்வான் வீட்டில் பாத்திரம் துலக்கும் வேலைதான் என்றாலும், அவன் பக்கத்து வீட்டுக்காரனிடம் வம்புக்கு நிற்கும்போது, பல்லைத் தட்டிக் கையில் கொடுத்துவிடுவேன் பயலே! என்றுதான் ஆர்ப்பரிக்கிறான்!

ஆட்சியிலே அமர்ந்திருக்கும் கட்சியிலே புகுந்து கொள்ளும் "அடைக்கலம்' முழக்கம் எழுப்பும்போது, ஆட்சிக் கட்சியின் முழு வலிவும் அந்த நா வழி வழிந்திடுவதைக் காண்கிறோமல்லவா! அதுபோலத்தான்.

அத்தகைய இயல்பினரால்

இருக்குமிடத்திலே கிடைக்கும் இனிப்புப் பண்டங்களைப் பெற்றிட முடியுமேயன்றி, புதிதாக ஒன்றையும் செய்திடவோ, உள்ளதைப் பெருக்கிடவோ முடியாது.

இருக்கும் இடம் வலிவுள்ளது என்பதால் எழும் எண்ணம் தடித்துத் தடித்து, எதையும் செய்தளிக்கத் தக்க ஆற்றலையே மாய்த்துவிடும்!

தம்பி! நீ இருக்கும் இடம் இனிப்புப் பண்டம் நிரம்பிக் கிடந்திடும் இடமுமல்ல, அதிகாரம் அளித்திடும் வலிவு உள்ள முகாமுமல்ல.

ஆட்சியால் கிடைத்திடும் வலிவே, நாநலமற்றவர்களால் சிதைக்கப்பட்டுப் போய்விடும் என்கிறபோது, ஆட்சியைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டுள்ளவர்களின் கருத்துகளுக்கு மறுப்புக் கூறிடும் முகாமில் உள்ளவர்கள், நா நலத்தை

எத்தனை பக்குவமுள்ளதாக்கிடப் பயிற்சி மேற்கொண்டபடி இருக்க வேண்டும் என்பதனை எண்ணிப் பார்த்திட வேண்டும்.

நம்முடன் இல்லாதவர்களையும் நம்முடன் வந்திடச் செய்திடும் வகையிலே பேச்சு சிறந்திட வேண்டும். நம்மை அந்த நெறியினின்றும் மாறிடச் செய்வதற்காக மற்றவர்கள் தடித்த சொல் வீசும்போது, பொறுத்துக் கொள்ளும் மனத்திடம் இருக்க வேண்டும். சாக்ரடிஸ், இன்று உலகோரின் வழிகாட்டிகளில் ஒருவராக அரசோச்சுகிறார். ஆனால், அவர் வாழ்ந்த நாட்களில், நாடகம் எழுதிடும் புலவரொருவர் அழுக்காறு காரணமாக சாக்ரடீசைக் கேலி செய்திட, கேவலப்படுத்திட, "மேகங்கள்2 என்றோர் நாடகம் நடத்திக் காட்டினாராம். அந்த நாடகத்தை, தம்பி! சாக்ரடீசே நேரிலே கண்டு களித்தாராம்! எத்தனை பொறுமைக்

குணம், சகிப்புத்தன்மை என்றுதான் நீ எண்ணி எண்ணிப் பாராட்டுகிறாய். நான் தம்பி! அதனை எண்ணிட வில்லை, எத்தனை நம்பிக்கை சாக்ரடிசுக்கு, தன்னைக் கேவலப்படுத்தும் ஒரு நாடகம், தன் செல்வாக்கைத் துளியும் சிதைத்திடாது என்பதில்! அந்த நம்பிக்கைதான் எனக்கு வியப்பளிக்கிறது.

நாநலத்துடன், நமது சொல், வெல்லும் என்ற நம்பிக்கையும், வெற்றி கிட்டத்தக்க முறையில் பணியாற்றிடும் திறனும், அவற்றை விட, காலம் வருகிற வரையில் காத்திருக்கும் பொறுமையும் வேண்டும்.

கொக்கொக்கக் காத்திரு!
அதன் குத்து ஒக்கச் செயலை

என்கிறார் வள்ளுவர்.

துள்ளி ஓடிடும் சிறு மீன்கள், கரையில் உள்ள கொக்கு கண்ணற்றது, செயல் திறனற்றது என்றுதான் எண்ணிக் கொண்டிருக்கும் ஏன்? கொக்கு, தான் ஆடாமல் அசையாமல் உட்கார்ந்திருக்கிறதே அதனால்.

இத்தனை மீன்கள் துள்ளி ஓடின, கரையோரக் கொக்கு ஏதும் செய்திடவில்லை, இயலவில்லை; இனி நமக்கென்ன பயம் என்று எண்ணிக் கிளம்புகிறது, சிறிதளவு பெரிய மீன்! என்ன ஆகிறது? கொக்கு கொத்திக் கொள்கிறது! கொக்கு அங்கே இருந்தது அதற்குத்தானே?

ஓடு மீன் ஓட உறுமீன் வருமளவும்
வாடி இருக்குமாம் கொக்கு.

இரைதேடிக் காத்திருப்பதும், கிடைத்ததும் பற்றிக் கொள்வதும் கொக்குக்கு மட்டும்தானா இயல்பு; மற்றப் பலவற்றினுக்கும் உண்டே! ஏன் கொக்கினை மட்டும் குறிப்பாகக் காட்டுகிறார் வாக்குண்டாம் பாடிய ஔவையார் என்று கேட்கத் தோன்றுகிறதா தம்பி? காரணத்தோடுதான், காட்டியிருக்கிறார்.

புலிகூட இரை தேடிக் காத்திருக்கிறது, பதுங்கிக் கொள்ளக் கூடச் செய்கிறது.

வல்லூறு கூடப் புறாவைத் தேடி வட்டமிடுகிறது.

ஆனால், பதுங்கி இருந்திடும் புலி, மானைக் கண்டதும் பாய்கிறது, மான் ஓடுகிறது, புலி துரத்துகிறது, பல மைல்கள் கூட அலுப்பு மேலிட ஓடி ஓடி வேட்டையாடிய பிறகே மானைக் கொல்ல முடிகிறது

புலியினால்; ஒரு போராட்டம் நடைபெறுகிறது.

வல்லூறு பாய்ந்து வருவது கண்ட புறா தப்பித்துக் கொள்ளப்படும் பாடு, கொஞ்சமல்ல.

கொக்கு மீனைக் கொத்துவது அவ்விதமல்ல! என்ன நடக்கப் போகிறது என்று தெரியாமல் மீன் துள்ளி வருகிறது. கொக்கு அதைக் கொத்தப் போக, மீன் தப்பித்து ஓட, கொக்கு விடாமல் துரத்திச் சென்று கொத்திடும் முறை இல்லை. மீன் வருவதும் கொக்கு கொத்துவதும், மீன் சிக்கிக் கொள்வதும் உடனே இரையாகிவிடுவதும் எல்லாம் கண் மூடிக் கண் திறப்பதற்குள். மீன் வருவதற்கும், மீன் சிக்குவதற்கும் உள்ளே இரையாகிச் செல்லுவதற்கும், இடைவெளிகளே இல்லை; எல்லாம் ஒரே நேரத்தில் நடைபெற்று விடுகிறது. அதனால்தான் கொக் கொக்கக் கொத்திட

வேண்டும் என்றார். பாம்பு கூட, ஓசைப்படாமல் தீண்டிவிடுகிறது. ஆளை வேட்டையாடிக் கடிப்பதில்லை. ஆனால், மனிதனைத் தீண்டித் தீர்த்துக் கட்டுமேயன்றித் தின்பதில்லை. கொக்கு தீண்டித் தீனியாக்கிக் கொள்கிறது மீனை. அவ்வளவு கூர்மையான பார்வை. அத்தனை நேர்த்தியான குறிபார்த்திடும் திறன், அவ்வளவு வேகமான கொத்தும் தன்மை, கொக்குக்கு! அத்தனை திறமையாக இரை தேடிக் கொண்ட கொக்கு, புலிபோல உறுமுவதில்லை, இரத்தம் குடித்த மகிழ்ச்சியில் புலி படுத்துப் புரள்கிறதே, அதுபோலவும் இல்லை, ஏதும் அறியாததுபோல, எப்போதும் போல இருக்கிறது கொக்கு, காரியத்தைக் கச்சிதமாக முடித்துக் கொண்டு! இவற்றினை எல்லாம் எண்ணிப் பார்த்துத்தான் வள்ளுவர், "கொக்கொக்க' என்று கூறினார்.

•

துடுக்குத்தனமாக புட்டோ பேசியதைக் கண்டதாலே, பேச்சின் தன்மை பற்றிய விளக்கம் அளித்திட முற்பட்டிருக்கி றேன் என்று எண்ணிக் கொள்ள வேண்டாம், தம்பி! அறிவுத் தெளிவும், சராசரிப் பண்பும் உள்ளவர்கள் சில வேளைகளில் பக்குவம் மறந்து பேசிவிடுகிறார்களே, அவர்களுக்குப் பயன்பட வேண்டும் என்பதற்காக, இதனைக் கூறுகிறேன், வெறியும் மண்டைக் கனமும் கொண்டு காட்டு மிராண்டியாக உள்ள புட்டோ போன்றோரைத் திருத்த முடியும் என்ற நோக்கத்துடன் அல்ல; லால்பகதூர் கூறியபடி, புட்டோ போன்றாரின் பேச்சுக்கு வார்த்தைகளை வீசிப் பதில் அளிக்கத் தேவையில்லை, தீரமிக்க நமது படை வீரர்களின் வல்லமைமிக்க பதிலடியே பொருத்தமானதாக இருக்கும்!

இன்னவிதமான "சோப்பு' தேய்த்துக் குளித்து வந்தால், சொறி சிரங்கு அரிப்பு ஆகியவை போய்விடும் என்று கூறும்போது, குட்டம் போன்ற வியாதியாலே பீடிக்கப்பட்டவனுக்காகக் கூறப்படும் யோசனை என்று கொள்ளக்கூடாதல்லவா? அதுபோல பேச்சிலே பக்குவம் இருக்க வேண்டும் பயன் இருக்க வேண்டும், இடம் நேரம் பற்றிய தெளிவு இருக்க வேண்டும் என்று நான் கூறுவது, இயல்பு அடியோடு பாழ்பட்டு விட்டவர்களுக்கு அல்ல. திருந்திவிடக் கூடிய அளவு நலிவுற்றிருப்பவர்களுக்கு; புட்டோக்களுக்கு அல்ல.

யார் என்ன எண்ணிக் கொண்டாலும் கவலையில்லை! கொள்ளினுஞ்சரி, தள்ளினும்சரி கவலை கொள்ளேன். என் மனதுக்குச் சரியென்று பட்டதனைச்

சொல்லித் தீருவேன், என்னை எவரும் தடுத்திட முடியாது என்ற போக்குக் கொள்வது கொள்வோருக்குச் சுவை தந்திடும். சிற்சிலருக்குப் புகழ்கூடத் தந்திடும்; ஆனால், அதனை எல்லோராலும் எல்லாக் காலத்திலும் எளிதிலே கையாளத்தக்க பொது விதியாகக் கொண்டிட முடியாது; கூடாது.

தீவிரமான பேச்சுக்காரர் என்ற பட்டத்தைத் தட்டிப் பறித்துக் கொள்வதற்காக, சிலர் எத்தனை வேகம் காட்டினார்கள் என்பதும், அதைவிட, வேகமாக வேறு திக்கு நோக்கிப் பாய்ந் தார்கள் என்பதும், எனக்குத் தெரியும்; உனக்குந்தான் தெரியுமே தம்பி!

வளைய வேண்டும், நெளிய வேண்டும், வழவழா என்று குழைய வேண்டும் என்று சொல்லுவதாக எண்ணிக் கொள்ள மாட்டாய்.

எல்லாம் எனக்குத் தெரியும்; எனக்கு

மட்டும் தெரியும் என்று இறுமாப்புக் கூடாது என்று மட்டுமே கூறுகிறேன்; அழுத்தந் திருத்தமாகப் பேச வேண்டாமென்றோ, திட்டவட்ட மாகப் பேச வேண்டாமென்றோ, அச்சமற்றுப் பேச வேண்டா மென்றோ கூறவில்லை; கூறுவேனா?

பொதுவாக நாம் கூறுவது ஏற்றுக் கொள்ளத்தக்கது என்பதிலே நம்பிக்கை நிரம்ப இருக்குமானால், அடித்துப் பேச வேண்டும். இடித்துப் பேச வேண்டும் என்ற எண்ணம் வராது. நாம் எடுத்துக் கூறுவதிலே நமக்கே ஐயப்பாடு இருந்திடிலோ, நமது வாதத் திறமையிலே குறையிருக்கிறது என்ற எண்ணம் நமக்கே தோன்றினாலோ, பேசிடும் பேச்சிலே பொறிபறக்கும், நெடி அடிக்கும் காட்டுமிராண்டித்தனம் வெடித்துக் கிளம்பும்!

•

ஜனநாயக முறை, கருத்து வேற்றுமைகளை மதித்திடும் அடிப்படையிலும், கருத்துக்களை அச்சமற்று எடுத்துக் கூறிடும் உரிமையின் அடிப்படையிலும் அமைந்திருக்கிறது.

போர்க்காலம் இது. இந்த நேரத்தில் கருத்து வேற்றுமைகளை மூட்டைகட்டி ஒரு பக்கம் வைத்து விடுங்கள்.

என்று அகில இந்தியக் காங்கிரசின் தலைவர் காமராஜர் கூறுகிறார். எவரும் ஒப்புக் கொள்ளக்கூடிய கருத்து. நமது கழகம் இந்தக் கருத்தின் அடிப்படையிலேதான் இதுபோது செயல்பட்டு வருகிறது.

நாட்டு மக்களின் முழுவலிவும் அன்னியன் கொட் டத்தை அடக்கவே பயன்பட வேண்டும்.

அந்த முழு வலிவு கிடைக்க வேண்டுமானால், நேரத்தையும்

நினைப்பையும் வேறு பக்கம் அல்லது வேறு பிரச்சினையில் திருப்பி விடக் கூடிய நிலை ஏற்படக் கூடாது.

அந்த நிலை ஏற்பட வேண்டுமானால், கருத்து வேற்று மைகளைக் கிளறிக் கொண்டிருக்கக் கூடாது.

கருத்து வேற்றுமையை ஜனநாயகப் பண்புகளிலே ஒன்று, அடிப்படையானது என்று நாம் போற்றினாலும், அது பிளவு, பேதம், வலிவிழக்கும் நிலைமை என்ற விதமாக வடிவமெடுத்து, பகைவர்களுக்குச் சாதகமாகிவிடக் கூடும்.

எனவே, போர்க்காலத்தில், கருத்து வேற்றுமைகளைக் கிளறிக் கொண்டிருப்பது நல்லதல்ல.

இதனை வலியுறுத்தும் காமராஜர் கருத்து வேற்றுமை எனும் உரிமையை மதிக்கிறாரா

என்று பார்க்கும்போதுதான், திகைப்பு ஏற்படுகிறது!

போர்க்காலமல்லாதபோது, உங்கள் கருத்து வேற்றுமைகளைப் பேசித் தொலையுங்கள்!

என்றுதான் கூறுகிறார். கருத்து வேற்றுமை என்றால் அவ்வளவு கடுங்கோபம் பிறக்கிறது. பேசித் தொலையுங்கள் என்று கூறித் தமது கோபத்தையும், வெறுப்பையும் காட்டிக் கொள்கிறார். இது ஜனநாயகப் பண்பு ஆகாது. இந்த நோக்கத்துடன்தான் அரசு நடத்தப்பட வேண்டும் என்றால், பல நாடுகளிலே செய்து விட்டிருப்பதுபோல,

கட்சிகள் பல கூடாது.

என்று சட்டமியற்றிவிட்டு, ஒரு கட்சிச் சர்வாதிகாரத்தை மேற்கொண்டுவிடலாம்.

ஜனநாயகம் - அதிலும் குறிப்பாகவும்

சிறப்பாகவும் பாராளு மன்ற ஜனநாயகம் - எமது முறை, இங்கு வயது வந்தவர்களுக் கெல்லாம் வாக்குரிமை உண்டு, எந்தக் கட்சியும் தேர்தலில் ஈடுபடலாம் என்றெல்லாம் சொல்லிவிட்டு, கருத்து வேற்றுமை யைப் பேசித் தொலையுங்கள் என்று வெறுப்புடன் பேசுவதில் பொருள் இல்லை; பொறுப்புள்ள ஜனநாயக உணர்வு ஆகாது அந்தப் போக்கு.

நாட்டுக்கு எது நல்லது என்பதைக் கண்டறிந்து கூறிடும் உரிமை, உனக்கு இருப்பதைப் போலவே எனக்கும் உண்டு,

நாட்டிற்கு எது நல்லது என்பதனைக் கண்டறியக் கூடிய திறமை உனக்கு மட்டுந்தானா, எனக்கும் உண்டு,

நாட்டுக்கு நல்லது என்று எதனை நீ நம்புகிறாயோ அதனை நாட்டினர் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று நீ எதிர்பார்ப்பது

போல நானும் எதிர்பார்க்க உரிமை இருக்கிறது.

என்ற இந்த அடிப்படைகளின் மீது ஜனநாயகம் எழுப்பப்பட்டிருக்கிறது.

பேசுவதற்கு உரிமை தரப்பட்டிருப்பதால் பேசுகிறான் - ஆனால், இவனுக்கு ஏது அறிவு, நாட்டுக்கு நல்லது எது என்று கண்டறிய என்ற எண்ணமும்,

இவனுக்கு நாட்டுக்கு நல்லது எது என்று கண்டறியும் நோக்கமே இருக்க முடியாதே, வெறும் சுயநல உணர்ச்சிதானே இருக்கும், தனக்குச் சுகம், பதவி பட்டம் இவைகளைத் தட்டிப் பறித்துக் கொள்ளும் நோக்கம் கொண்டவன்தானே, இவனுக்கு எங்கிருந்து நாட்டுக்கு எது நல்லது என்று கண்டுபிடிக்கும் எண்ணம் ஏற்பட முடியும் என்ற நினைப்பும் தடித்துப்போன நிலையிலேதான், மற்றவர்கள்

ஜனநாயக அடிப்படையில் பெற்றிருக்கிற கருத்துச் சுதந்திரத்தைக் கேவலமாக்கிடும் எண்ணம் வர முடியும், அந்த எண்ணத்தின் காரணமாகத்தான் காமராஜர்

"சாதாரண காலத்தில் கருத்து வேற்றுமைகளைப் பேசித் தொலையுங்கள்'' - என்று கூறுகிறார்.

நாட்டுக்குத் தேவையான நல்லனவற்றை எல்லாம் கண்டறிந்து செயல்படுத்தும் அறிவாற்றல், இவருக்கும் இவருடன் இணைந்துள்ள பேரறிவாளர் சிலருக்கும் மட்டுமே உண்டு, மற்றவர்களுக்குக் கிடையாது என்ற எண்ணத்தை வளர்த்துக் கொண்டு, ஜனநாயகத்தை எப்படிச் செம்மையாக நடத்திச் செல்ல முடியும்!

ஜனநாயகமோ அல்லவோ, முறை எதுவோ அது பற்றிக் கவலை இல்லை,

நாட்டுக்கு எது நல்லது என்பது தெரியும், அதனைச் செயல்படுத்த முடியும், இது வேறு எவராலும் ஆகாது என்ற நம்பிக்கை பொங்கிடும் உள்ளம் கொண்டவர்களாக இருந்திடின் மற்றவர்களுக்கும் உரிமை உண்டு என்று ஒப்புக் கொண்டு, முறை வகுத்திருக்கத் தேவையில்லை. நான் கொடுப்பதுதான் சரக்கு, சொன்னதுதான் விலை, கூறுவதுதான் எடை என்று ஒரு அடாவடிக் கடை நடத்தலாம்; ஆதாயம் பெறலாம். ஆனால், ஜனநாயகமும் இருக்கும், அங்கு ஆட்சியில் உள்ளவர்கள் தவிர, மற்றவர்கள் எவரும் "பேசித் தொலைக்கலாம்' - சகித்துக் கொள்கிறோம் என்றும் பேசுவது என்றால், அது ஜனநாயகம் அல்ல.

எல்லாம் எமக்குத்தான் தெரியும், மற்றவர்கட்கு ஏதும் தெரியாது என்ற எண்ணம் கொண்டிருக்கிறார்களேயொழிய இன்றைய

ஆளுங் கட்சியினர் எல்லாம் அறிந்தவர்களாக நடந்து கொண்டிருக்கிறார்கள் என்று துதி பாடிடுவோர் கூடத் துணிந்து பேசி, மெய்ப்பிக்க முடியாதே.

சீனா பகைவனாகிவிடுவான் என்று யூகித்தறிந்திட முடிந்ததா? இல்லையே! பாய் - பாய் பாடிக் கொண்டிருந்தனரே!! இப்போது? சீனாவின் ஆதிக்கவெறி புரிகிறது, அதனைத் தடுத்திட நாட்டு மக்களை ஒன்று திரட்டிடும் பணி நடந்து வருகிறது.

நாட்டுக்கு உணவு நெருக்கடி வராமல் தடுத்திடத் தெரிந்ததா - எல்லாம் தெரிந்தவர்களுக்கு - எவனுக்கு என்ன தெரியும் என்று பேசுபவர்களுக்கு - இல்லை என்பதை அளவரிசி முறை காட்டுகிறதே!

திட்டத்தின் பலன் ஏழை ளியோர்களுக்குப் போய்ச் சேர்ந்திடும் முறையிலே

காரியமாற்றிடத் தெரிந்ததா? இல்லையே! பலன் எங்கே போய்ச் சேர்ந்திருக்கிறது என்பதனைக் கண்டுபிடிக்க ஒரு துப்பறியும் இலாகாவே அல்லவா அமைக்க வேண்டி வந்துவிட்டது!

இதுபோன்றே பல்வேறு துறைகளில், பிரச்சினைகளில், இந்நிலையில், எல்லாம் எமக்குத் தெரியும், எவனும் எமக்கு எதையும் கூறத் தேவையில்லை என்றா எண்ணிக் கொள்வது? பேரரசர்கள் இதுபோல எண்ணிக் கொண்டபோதே, பேதைமை என்று உலகு கண்டித்தது. நம்மிலே ஒரு பகுதியினர், எல்லாம் நமக்குத் தெரியும் என்று எக்காளமிடுவது, அதிலும் ஜனநாயக முறையை வைத்துக் கொண்டு பேசுவது, கொடுமை அல்லவா! ஆனால், பேசுகிறார்கள்.

அன்னியனை எதிர்த்துப் போரிட்டுக் கொண்டி ருக்கும் வேளையில், நமக்குள்

உள்ள கருத்து வேற்றுமை களைக் காட்டிக் கொண்டிருக்கக் கூடாது, ஒற்றுமை குலையும்படி நடந்து கொள்ளக் கூடாது.

இது அறிவுரை! தம்பி! நாம் வரவேற்கத் தயங்கமாட்டோம். ஆனால், அமைதி மலர்ந்த பிறகும், கருத்து வேற்றுமைகளைப் பேசிடும் உரிமை இல்லை என்ற நிலை பிறந்தால், அந்த அரசினை ஜனநாயக அரசு என்று எண்ணி மதித்திட இயலாதல்லவா?

நாட்டுக்கு நெருக்கடி நிலை இல்லாதபோது கூட, அவரவர்கள் தத்தமக்குச் சரியென்று பட்ட கருத்தினை எடுத்துக் கூறி மக்களின் ஆதரவினைப் பெற்றிடும் உரிமையைப் பெறக் கூடாது என்ற உள்ளம் கொண்டுள்ள காமராஜர்களின் கட்சிக்கு உள்ளாகவே, கருத்து வேற்றுமைகள் இல்லையா, அவைகளை வெளியே கூறாமலிருக்கிறார்களா!

உணவுப் பிரச்சினை ஒன்றிலே மட்டும் ஆளுங்கட்சித் தலைவர்களுக்கிடையிலே எத்தனை விதமான கருத்து வேற்றுமைகள் உள்ளன, என்பது நாடு அறியாததா!

சென்ற கிழமை பேசியிருக்கிறார் மொரார்ஜி தேசாய், உணவு நெருக்கடிக்குக் காரணம், உற்பத்திக் குறைவு அல்ல; விளைந்ததைச் சரியான முறையில் பங்கிட்டுத் தராததுதான் என்று!

மற்றோர் ஆட்சித் தலைவர், தேவைக்குமேல் அதிகம் விளைவித்துள்ள மாநிலங்கள், பற்றாக்குறை இடங்களுக்கு உணவுப் பொருளை அனுப்பாமல் பதுக்கியதுதான் நெருக் கடிக்குக் காரணம் என்று பேசுகிறார். கருத்து வேற்றுமை இல்லையா - வெளியே பேசிக் கொண்டில்லையா? பேசுகிறார்கள்!

புட்டோவின் போக்குக்கு இடமளித்த காரணத்தால், ஐ.நா. மன்ற நடவடிக்கையில் கலந்துகொள்ளவில்லை; வெளியேறி விட்டோம் என்று வெளிவிவகார அமைச்சர் சுவரண்சிங் பேசுகிறார்; அதுவே சரியான முறை என்று பலரும் பாராட்டியுள்ளனர்.

தவறு! தவறு! மிகப்பெருந்தவறு! ஐ. நா. கூட்டத்தை விட்டு வெளியேறி இருக்கக் கூடாது என்று பேசுகிறார் முன்னாள் அமைச்சர் கிருஷ்ணமேனன்.

சாதாரணமான பிரச்சினையிலே வந்ததா இந்தக் கருத்து வேற்றுமை? அதிலும் எப்படிப்பட்ட நெருக்கடி நேரத்திலே பேசுகிறார் கிருஷ்ணமேனன்? என்ன சொல்கிறார் காமராஜர்?

இங்கே ஒவ்வொரு மாலையும் போடு போடு என்று போடுகிறார் காமராஜர்,

அமெரிக்காவை; உன் காலிலே வந்து விழவா! முடியாது! செத்தாலும் சாவேன், காலில் விழ மாட்டேன் என்று பேசுகிறார்.

தம்பி! அந்தப் பேச்சு எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது. அந்தப் போக்கை நான் வரவேற்கிறேன், ஆதரிக்கிறேன். அமெரிக்க டாலர் ஏகாதிபத்தியத்தை எதிர்க்கத்தான் வேண்டும்; அடிமையாகிவிடக் கூடாது. ஒப்புக் கொள்கிறேன்.

ஆனால் அதேபோது பெரிய அமைச்சர் பட்டீல் என்ன செய்து கொண்டிருக்கிறார்? ஜான்சன் - சாஸ்திரி சந்திப்புக்கு "முகூர்த்தம்' பார்த்துக் கொண்டிருக்கிறார், அமெரிக்காவில். டிசம்பரில் இந்தச் சந்திப்பு ஏற்படலாம் என்று தெரிவிக்கிறார். ஜான்சனுக்கு உடல் நலம் இடம் கொடுக்கவில்லை என்றால், சாஸ்திரி"டெக்சாஸ்' மாநிலம் சென்றுகூட

ஜான்சனைச் சந்திப்பார் என்கிறார்.

மாலை நேரப் பேச்சிலே பூத்திடும் கருத்துக்களுக்கும், பட்டீல் அமெரிக்காவிலே தூவிக் கொண்டிருக்கும் கருத்துக் களுக்கும் வித்தியாசம் இல்லையா? இருக்கலாமா?

பாகிஸ்தான் நம்முடைய விரோதி அல்ல, சீனாவே நம்முடைய பகைவன்.

என்று பட்டீல் அமெரிக்காவிலே பேசுகிறார். காங்கிரசின் மற்றத் தலைவர்கள் கொண்டுள்ள கருத்துடன் பட்டீ-ன் கருத்து மோதவில்லையா! கருத்து வேற்றுமை இல்லையா! இருக்கிறது! வெளிப்படையாகத்தான் பட்டீல் காட்டுகிறார். காமராஜர் என்ன செய்கிறார்? டெக்கான் எரால்டு எனும் இதழ்தான் முன்வந்திருக்கிறது, பட்டீலின் போக்கைக் கண்டிக்க.

இவை பற்றித் தம்பி! நான் கூறுவதன்

காரணம், கருத்து வேற்றுமை, ஆளுங்கட்சிக்கு உள்ளேயே நிரம்ப இருக்கிறது; பேசிக் கொள்ளப்படுகிறது. அதைத் தாங்கிக் கொள்ளும் காமராஜர், போர்ச் சூழ்நிலை உள்ள இந்த நாளில் அல்ல, அமைதி நிலவிடும் நாட்களிலே கூட, மற்றக் கட்சிகள் தமது கருத்தைக் கூறுவதை வரவேற்கும் ஜனநாயகப் பண்பு காட்டுகிறாரா என்றால், இல்லை;

பேசித் தொலைக்கட்டும்

என்று பெரிய மனது வைத்து அனுமதி கொடுக்கிறார்; சகித்துக் கொள்ளச் சம்மதிக்கிறார். இதுதான் இவர் விரும்பும் ஜனநாயகமா?

உன்னுடைய கருத்தை நான் ஏற்றுக் கொள்ள மாட்டேன், ஆனால் நீ உன்னுடைய கருத்தை எடுத்துக் கூறும் உரிமையை எவன்

எதிர்த்தாலும் அவனை நான் எதிர்த்து உன் உரிமையைப் பெற்றுத் தருவேன்.

வால்டேர், தம்பி! இவ்விதம் கூறியவர். எத்தனை இனிய ஜனநாயக மணம் வீசுகிறது பார்த்தனையா!

எத்தனையோ இன்னல்களைத் தாங்கித் தாங்கி தகர்ந்து போகாமல், பேரறிவாளர்கள் ஜனநாயகப் பயிரைத் தழைக்கச் செய்திருக்கிறார்கள்.

அந்த ஜனநாயகம் தழைத்திட, கனிந்திட, பேச்சுச் சுதந்திரம் பேணிக் காப்பாற்றப்பட வேண்டும்.

பேச்சு பக்குவம் கொண்டதாக, பயன் உள்ளதாக, காலம் இடம் பற்றிய தெளிவு கொண்டதாக, நிலையைச் சாதகமாக்கிக் கொண்டு மற்றவர்களை நிந்திக்கும் போக்கு அற்றதாக, நாவால் சுட்டிடும் கேட்டினை

நீக்கியதாக, அமைய வேண்டும்.

எடுத்துக் கூறி மெய்ப்பிக்கப் பட வேண்டியவைகள் ஏராளமாக உள்ளன; தொகை வளர்ந்தபடியும் இருக்கிறது.

விளக்கிக் காட்டி, ஒப்புக் கொள்ளச் செய்திட வேண்டிய தாகப் பல பிரச்சினைகள் உள்ளன.

கேட்போர் உள்ளத்திலே, வாழ்க்கைக் தொல்லை காரணமாக ஏற்பட்டுவிடும் "சோர்வு', பிரச்சினைகளின் முழுத் தன்மையை உணர்ந்துக் கொள்ளும் ஆற்றலை அரித்து விட்டிருக்கக் கூடும்; அதனை அறிந்து அவர்கட்கும் பிரச்சினையிலே அக்கறை ஏற்படச் செய்திடும் விதமாகப் பேசிட வேண்டும்.

ஆதிக்கத்தில் இடம் பெற்றோர், அதுகளுக்கு என்ன தெரியும் என்பர்;

ஆத்திரம் கொள்ளலாகாது; இடம் பெறாத நிலையில் எல்லோருமே, "அதுகள்' என்ற பட்டியலில்தான் இருந்திருக்க முடியும் என்பதனை உணர்ந்து கொள்ள வேண்டும். இவற்றினுக்கான பயிற்சி நிரம்ப வேண்டும்; நான் கூறியுள்ள சிலவற்றுடன் மேலும் பல கருத்துக்களைத் தேடிப் பெற்று பயிற்சி பெற்றிட வேண்டுகிறேன்.

அன்புள்ள

அண்ணாதுரை

7-11-65

29. இது போதாதா?

வினோபா பாவே, கஜேந்திர கட்கர் ஜெயப்பிரகாசரின் இடித்துரைகள் மக்களின் ஆர்வம் நாட்டுப் பாதுகாப்பிலே போர்ச் சூழ்நிலையில் கட்சிக் கண்ணோட்டத்துடன் காரியமாற்றுகிறது காங்கிரஸ் கட்சி.

தம்பி!

மகன், மன்னன்போல இருக்கிறானா! உன் கண்ணுக்கு விருந்தாக இருக்கிறதா அந்தக் காட்சி! மெத்தவும் நல்லவனப்பா நீ!! மெத்தவும் நல்லவன். ஆனால், உன் கண்களுக்குத் தெரிவது போல என் கண்களுக்குத் தெரியவில்லை. பாசம் நிரம்பிய மனம்; என்ற போதிலும் என் கண்கள் அவனுடைய உண்மை வடிவத்தைத்தான் காண்கின்றன. அவனைக்

கண்டு நான் அகமகிழ்ச்சி கொள்வதற்கும் இல்லை; பெருமைப்படுவதற்கும் இல்லை; மனம் வெதும்பிடும் நிலையில் நான் இருக்கிறேன்.''

ஊர் கொண்டாடும் நிலையை, மகன் தன் தந்திரத்தாலே ஏற்படுத்திக் கொண்டாலும் அவனுடைய உண்மையான இயல்பு அறிந்து மனம் நொந்து கிடந்திடும் நிலையில் உள்ள தந்தை பேசுவது, முன்னாலே தரப்பட்டிருப்பது.

வினோபாபாவே, தமது பிரார்த்தனைக் கூட்டங்களில் இன்றைய ஆட்சிபற்றிப் பேசுவதைக் காண்பவர்களுக்கு, இத்தகைய தந்தையின் மனக்குமுறல்தான் நினைவிற்கு வரும்.

போர் நெருக்கடி காரணமாக, நாட்டிலே ஏற்பட்டுள்ள எழுச்சியைப் பொன்னான வாய்ப்பாக்கிக் கொண்டு, ஆளுங்கட்சி யான

காங்கிரஸ் கட்சி, தனக்கு புதுப் பொலிவும், அசைக்க முடியாத வலிவும் கிடைத்து விட்டதாகப் பெருமிதம் கொண்டிருக்கிறது.

நாட்டினைப் பாகிஸ்தானியர் நாசமாக்கிடக் கிளம்பியது கண்டு கொதித்தெழுந்த மக்கள், நாட்டினை ஆண்டிடும் கூட்டத்தினர் மீது தமக்கு உள்ள வெறுப்பினையும் மறந்து அவர்க்குத் துணை நின்று, பகைவர்களை வீழ்த்திடும் செயனைச் செம்மையாகச் செய்து வருகின்றனர். இது ஆளுங்கட்சிக்கு, ஒரு இன்பமான மனமயக்கத்தைத் தரத்தான் செய்யும். இயற்கைதான். ஆனால், இந்த நிலை காரணமாக, மக்கள் இந்த ஆட்சியாளர்களால் தொடர்ந்து அடைந்து வரும் தொல்லைகளை மறந்தே போவார்கள், துரைத்தனத்தை நடத்தத் தகுதியுள்ளவர்கள் இந்தக் கட்சியினரே என்று நம்பி விடுவர் என்று கருதுவது

எத்தனை பெரிய தவறு என்பதனை எடுத்துக் காட்டுவதுபோல ஆசார்ய வினோபாபாவே பேசி வருகிறார்.

இந்த நேரத்தில், எத்தனை மனக்குமுறல் இருப்பினும் மக்கள் அதனை வெளியே காட்டிக் கொள்ள மாட்டார்கள் என்ற நம்பிக்கையிலே மூழ்கி, மேலும் தொடர்ந்து மோசமான முறையிலே ஆட்சியை நடத்திடுவரே, நாமாகிலும் உரிய நேரத்திலேயே இடித்துக் கூறுவோம் என்ற எண்ணத்தில், வினோபா பேசி வருகிறார் என்று தெரிகிறது.

இந்தியா - பாகிஸ்தான் போர் என்பது இரு நாடுகளுக் குள்ளே நடைபெறும் போர் என்று மட்டும் கருதுவது முழு அளவு உண்மையாக இருக்க முடியாது; இரு வேறு அரசு முறைகளுக்குள்ளே ஏற்பட்டுள்ள மோதுதல் இது என்பதே முழு உண்மை என்பதனை அடிக்கடி லால்பகதூர் விளக்கிக்

காட்டிய படி இருக்கிறார்.

மக்களின் நலனைக் கவனியாமல் மமதை ஆட்சி நடப்பது மக்களின் உரிமைகளை மதிக்காது மதோன்மத்தர்கள், மதத்தைக் காட்டி மக்களை மாக்கள் நிலைக்குத் துரத்துவதுமான ஆட்சி நடப்பது பாகிஸ்தானில்; உரிமைகள் வழங்கப்பட்டு, நலன்கள் பேணி வளர்க்கப்பட்டு வருவதான ஆட்சி நடப்பது இந்தியாவில் - இந்த இரு வேறு ஆட்சி முறைகளுக்கும் மோதல் நடைபெறுகிறது என்பது வாதமாக மட்டுமின்றி, நிலைத்து நிற்கத்தக்க உண்மையாகிட வேண்டுமென்றால், இங்கு மக்களின் நலன் பேணி வளர்க்கப்படுவதிலும், உரிமைகள் வழங்கப்படு வதிலும், ஆட்சியினர் திறமையையும் காட்டிட வேண்டும்; தகுதியினையும் சந்தேகத்துக்கு இடமின்றி மெய்ப்பித்து வர வேண்டும்.

நாட்டுக்கே பேராபத்து என்கின்றபோது, தனி மனிதர்கள் தமது நலனையா முக்கியமானதாகக் கருதுவது என்று கேட்பர். பேதையும் நாட்டுக்கு நெருக்கடி இருந்திடும்போது தனது நலத்திலே நாட்டம் காட்டிட மாட்டான். நாடு ஓர் போரினில் ஈடுபட்டிருக்கும்போது, மக்கள் கட்டுப்பாட்டு உணர்ச்சிக்கு மதிப்பு அளித்திட வேண்டுமேயன்றி அந்தச் சமயத்திலா, தங்களுக்கான உரிமைகளைப் பற்றிப் பேசுவது என்று கேட்பர். எந்த அறிவி-யும், நாட்டுக்கு ஆபத்துச் சூழ்ந்துள்ள வேளையில், தனது உரிமைகளை வலியுறுத்தமாட்டான்.

இதுபற்றி எள்ளளவும் ஐயப்பாடு கொள்வதற்கு இடமின்றி நம் நாட்டு மக்கள் நடந்து காட்டியுள்ளனர்; பல்வேறு அரசியல் கட்சிகளும் நடந்து கொண்டுள்ளன. எனவே, பன்னிப் பன்னி, போர்க்

காலத்திலா, என் நலம்! என் உரிமை! என்று எக்காளமிடுவது? நாட்டுப்பற்று அற்றவர்களன்றோ இந்தப் போக்குக் கொள்வர் என்று பேசிக் கொண்டிருப்பது அறமுமல்ல, பொருத்தமுமாகாது.

போர்ச் சூழ்நிலையின் காரணமாக, எத்தனை பெரிய தியாக உணர்ச்சி காட்டவும் மக்கள் முன்வந்துள்ளனர்; உண்மை; ஆனால், அதேபோது, ஆட்சி நடாத்துவோர் மீது, அவர்களின் நடவடிக்கைகளாலும், மேற்கொண்டுள்ள முறைகளினாலும் ஏறிப் போயுள்ள கறை அடியோடு துடைக்கப்பட்டு விட்டதாகவோ, தூய்மையாளர்களாகி விட்டனர் என்றோ மக்கள் நம்பிக் கிடந்திட மாட்டார்கள்; நல்லாட்சி முறைகள் குறித்து வலியுறுத்தத் தவறவும் மாட்டார்கள்.

பல்வேறு போர்முனைகளில் வீரர்கள் வெற்றி ஈட்டித் தந்தனர்; பகைவர்களை

முறியடித்துள்ளனர்; பாராட்டுதலுக்கு உரியவராகின்றனர். ஆற்றல் மறவர்களைப் போற்றி வரவேற்கின்றனர்; அவர்கள் பெற்றுள்ள புண்கள் புகழ்க் குறிகள் என்று எழுச்சியுடன் செப்புகின்றனர்; இத்தகு திறம் படைத்த வீரர் துணை இருக்கும்போது இனி எதற்கு நாம் பயப்பட வேண்டும்; ஜெயமுண்டு! பயம் இல்லை மனமே! என்று சிந்து பாடுகின்றனர்.

அந்தப் பெருமிதத்துடன், எழுச்சியுடன், நம்பிக்கையுடன், ஆட்சி நடாத்திடும் கட்சியினர் குறித்து மக்கள் பேசிட முடிகிறதா! வினோபா பாவேவாலேயே முடியவில்லையே!

எமது படையினர் எதிரியை முறியடித்திடுவர் என்ற நம்பிக்கை எமக்கு நிரம்ப உண்டு, அவர்தம் ஆற்றலை, அக்னூர் முனையிலிருந்து பார்மார் முனைவரையில், டாங்கிச் சண்டையி லிருந்து விமானப் போர்

வரையிலே கண்டோம்; பாய்ந்து சென்றிட, உயிரைத் துச்சமென்று எண்ணி வீரப் போரிட்டுப் பகைப் படையினை முறியடித்திட அவர்கள் தயக்கம் காட்டினார்கள் இல்லை. தம்மிடம் தரப்பட்டுள்ளனவற்றினைக் காட்டிலும், வலிவுமிக்க படைக் கருவிகளைப் பகைவர்கள் கொண்டுள்ளனர் என்ற போதிலும், வலிவிலே குறைந்த தரமுள்ளது என்று நிபுணர்கள் கூறத்தக்க விதமான படைக் கலன்களே இருந்தபோதிலும், கருவியின் வலிவு அதனைக் கொண்டோனின் கரத்தைப் பொறுத்தது, திறத்தைப் பொறுத்தது, நெஞ்சின் உறுதியைப் பொறுத்தது என்ற நேர்த்தியான நம்பிக்கை கொண்டு, வீரதீரம் காட்டி வெற்றி ஈட்டினர், தமது குருதி கொட்டி அவர்கள் சூழ்ச்சித் திறன்மிக்க, போர்க்கருவிகளின் துணை மிகக் கொண்ட பகைப் படையினை, திறத்தாலும்

தீரத்தாலும், தன்னல மறுப்புடனும் தளராத நம்பிக்கையுடனும் வீழ்த்தினரே, விரட்டி அடித்தனரே, அதுபற்றி மகிழ்ச்சியுடனும் எழுச்சியுடனும் பேசிடும்போது, மக்களின் மனத்திலே மற்றோர் வினா தன்னாலே எழாமலிருந்திடுமா! இத்துணை ஆற்றல் பெற்றுள்ளனரே இந்த வீரர்கள்! எத்தனை பெரிய ஆபத்தினின்றும் நாட்டை மீட்டளித்துள்ளனர்! இவர் காட்டிடும் திறம்போன்ற திறம் காட்டி, பகைவர்களை இவர்கள் வீழ்த்தியதுபோல, நம்முடைய போற்றுதலுக்கு உரியவர்களாகக் கடந்த 18 ஆண்டுகளாக விளங்கி வருபவர்களும், ஆதரவினைத் தொடர்ந்து பெற்று வருபவர்களுமான ஆட்சி நடாத்திவரும் காங்கிரஸ் கட்சியினர் மக்களின் நலனைப் பெற்றளித்திடும் துறையில், பசியோடும் பஞ்சத்தோடும் பற்றாக்குறையோடும்,

வறுமையுடனும் பேதத்துடனும் மூண்டிட்ட போரினிலே, வெற்றி ஈட்டிக் காட்டினரா? வேதனையைத் துடைத்தனரா? என்று தம்மைத் தாமே கேட்டுக் கொள்ளத்தான் செய்கின்றனர். கிடைத்திடும் பதில் என்ன? லாகூருக்கு வெளியே முகாம் அமைத்திருக்கிறோம்! காசூர் முனையிலே வலிவுடன் நிற்கிறோம்! பாகிஸ்தானிய டாங்கிப் படையிலே பெரும் பகுதியினை அழித்துவிட்டோம்! விமானங்களை வீழ்த்திவிட்டோம்! எல்லா முனையிலும் இறுமாப்பாளர்கள் இடுப்பொடிந்த நிலையில் தான் உள்ளனர் என்று படையினரால் கூறிட முடிகிறதே, அவர் தம் பேச்சே இசையாகி இனிப்பளிக்கிறதே, அதுபோல 18 ஆண்டுகளாக ஆட்சி நடாத்திடும் காங்கிரஸ் கட்சியினால் மக்களின் உரிமைகளை வழங்குவதிலும், அவர் நலன் பேணி

வளர்ப்பதிலும் பெற்ற வெற்றிப் பட்டியலைக் காட்டிட முடிகிறதா! வினோபா பாவே உள்ள பட்டியலைக் காட்டுகிறார், காண்போரின் கருத்திலே உண்மை நிலை பதிந்திடும் வகையில்.

பீகார் மாநிலத்தில் சகார்சா என்னும் இடத்தில், சென்ற திங்கள் முப்பதாம் நாள் மூதறிஞர் வினோபா பேசுகிறார்.

சுதந்திரம் கிடைத்த இந்த 18 ஆண்டுக் காலமாக, உழவன் வாழ்வும் செம்மைப்படவில்லை, அன்றாடத் தேவைப் பொருள்களான உணவு, பால் வெண்ணெய் போன்ற பண்டங்களின் உற்பத்தியும் பெருகவில்லை, இது வருந்தத்தக்கது.

உழவன் வாழவில்லை என்றால் நாடே வாழவில்லை என்பதுதான் பொருள். ஏனெனில், நூற்றுக்கு எண்பது பேர்

இங்கு உழவர்கள். இவர்களின் வாழ்வே செம்மைப்படவில்லை. பதினெட்டு ஆண்டுக் காலமாகக் காங்கிரஸ் கட்சி ஆட்சி நடாத்தியதில்!

போர்முனை வெற்றி பற்றிப் பூரித்து நிற்கிறோம், அந்த வெற்றியினைப் பெற்றளித்த வீரர் தம்மை வாழ்த்தி மகிழ்கிறோம், ஆனால், இந்த 18 ஆண்டுகளாக ஏர்முனை யைக் கூடச் செம்மைப்படுத்த முடியவில்லையே ஆட்சி நடாத்தும் காங்கிரசினால், இதனை எண்ணிடும்போது நெஞ்சு பிளந்து போகும் நிலையன்றோ எழுகிறது!

படைவீரர்களிடம் கொடுத்ததுபோலப் பட்டம் சூட்டிக் கொண்ட காங்கிரஸ் கட்சியிடம் தேவைப்படும் பொருளை, கருவியைத் தராமலிருந்தனரோ மக்கள்! கேட்டதை எல்லாம் கொடுத்தனர், தட்டாமல் தயங்காமல்

பல ஆண்டுகள்; தத்தளித்திடும் நிலையிலும் தந்தனர்.

அன்னியனான வெள்ளையன் உருட்டி மிரட்டி, ஈட்டிமுனை காட்டிப் பெற்ற வரித் தொகையுடன், ஆட்சி நடத்த முற்பட்ட காங்கிரஸ் கட்சி, உதட்டிலே புன்னகை காட்டி, மகாத்மா படத்தைக் காட்டி, சத்தியாக்கிரகக் காட்சிகளைப் படம் பிடித்துக் காட்டிப் பெற்றுள்ள வரித் தொகையுடன் ஒப்பிட்டுப் பார்த்திடின், எவ்வளவு பெரிய அளவிலே படைக்கலனை மக்கள் தந்துள்ளனர் என்பதும், எத்தனை நம்பிக்கையுடன் அளித்துள்ளனர் என்பதும் விளங்கிடும்.

கட்டாந்தரை! மழையோ இல்லை! கரமே கடப்பாரை! நான் என்ன செய்வது! படாதபாடு படுகிறேன், பலன் இன்னமும் கிடைத்திடவில்லையே எனப் பதறுகிறீரே, பலன் கிடைத்திடு வதற்கு ஏற்ற வசதியினைத்

தந்துள்ளீரா என்று ஏழை உழவன் கேட்பதில்லை; கற்கள் நிரம்பிய இடத்திலும் எதனையாவது பயிரிட்டுக் காட்டுகிறான். காங்கிரசார் ஆட்சிப் பண்ணையை ஏற்றதும், மக்கள் பணத்தை ஏராளமாகவும் தாராளமாகவும் வாரி இறைத்தனர். பலன்? சிலர் சுகபோகச் சேற்றிலே அமிழ்ந்து கிடக்கின்றனர். பண்ணையோ பசி போக்கிடத் தக்கவிதமான பலனைத் தந்திடவில்லை. அமெரிக்கப் பண்ணையிலிருந்து வருகிறது அரிசி! இங்கு முன்பு மாடுகட்டிப் போரடித்தால் மாளாது என்று ஆனைகட்டிப் போரடித்தனராம்! இப்போது? அரிசி மட்டும் அனுப்பினால் போதாது, ஆடு வேண்டும், மாடு வேண்டும், கோழி வேண்டும், எல்லாம் உடனே வேண்டும், தொடர்ந்து வேண்டும், கடனுக்கு வேண்டும்; முகம் கோணாமல் தந்திடவும் வேண்டும் என்று கேட்டிடும் நிலை. கட்சியினரைக்

கூட்டிவைத்து லால்பகதூராரின் ஒப்புதலையும் எடுத்துக்காட்டி, அமெரிக்கா பொதுச் சட்டம் எண் 480 எனும் திட்டத்தின்படி, உணவுப் பொருள் தந்தாலொழிய, நாடு பிழைத்திட இயலாது என்று திட்டவட்டமாகத் தெரிவித்துவிட்டார் உணவு அமைச்சர் சுப்பிரமணியம்! இந்த நிலை, 18 ஆண்டுக் கால ஆட்சிக்குப் பிறகு!

போம்டில்லாவிலே தோல்வி, தேஜ்பூரை விட்டு வெளி யேற்றம் என்று நிலை ஏற்பட்டதே, மூன்றாண்டுகளுக்கு முன்பு; சீனத் தாக்குதலின்போது! பாவம் கிருஷ்ணமேனன் ப-யானார்!! படைத் தளபதிகளைப் பற்றி எல்லாம் கடை வீதிகளில் பேசப்பட்டது. அந்தப் போர் முனையின் பொறுப்பேற்றுக் கொண்டிருந்தவர், விலகினார் உடல் நலம் இல்லை என்பதால். போர்முனையில் "திறம்' காட்டாவிட்டால், கொதிப்பு வருகிறது, கோபம்

எழுகிறது; திட்டத்தை மாற்ற வேண்டும் என்கிறோம், இதற்கேற்ற தளபதியைக் கொண்டு வா என்கிறோம்.

ஆட்சி நடத்திடும் காங்கிரசிடம், மக்கள் பலப்பல ஆயிரக்கணக்கான கோடி ரூபாய்களைக் கொடுத்து, வாழ்த்திப் பாராட்டி, அர்ச்சித்து ஆலவட்டம் சுற்றி, பதினெட்டு ஆண்டு களுக்குப் பிறகு கண்ட பலன் என்ன? மக்களின் நம்பிக்கைகள் பாட்டன் டாங்குகளைப் போல நொறுக்கப்பட்டு விட்டுள்ள நிலையைத்தானே? அதனைத்தான் வினோபா எடுத்துக் காட்டுகிறார். பதினெட்டு ஆண்டுகளாயின. உழவன் வாழ்வும் செம்மைப்படவில்லை என்று.

பிரார்த்தனைக் கூட்டத்திலேதானா, இந்த அரசியல் நிலைமையைக் கூறிட வேண்டும் என்று சிலருக்கு வியப்பு ஏற்படக்கூடும். இதிலே வியப்பதற்குக் காரணம் இல்லை.

மக்களிடம் இந்த நிலைபற்றிப் பல கட்சிகள் எடுத்துக் கூறியும் பலனைக் காணோம், அதனால் இதுபற்றி ஆண்டவனிடமாவது முறையிடுவோம் என்று வினோபா எண்ணியிருக்கக் கூடும் அதனால்தான் பிரார்த்தனைக் கூட்டத்திலே இது குறித்துப் பேசினார் என்று கூறத் தோன்றுகிறது. உழவன் வாழ்வு செம்மைப்படவில்லை; உணவுப் பொருள் உற்பத்தி பெருக வில்லை என்று கூறுகிறாரே வினோபா, பதினெட்டு ஆண்டுகளாக ஒரு பலம் வாய்ந்த கட்சி ஆட்சி நடத்திடும்போது ஒன்றுமேவா விளையாது போகும் நம்ப இயலவில்லையே என்று ஐயப்பாடு எழுமல்லவா, வினோபா அதனையும் போக்கத் தவறவில்லை, என்ன பெருகிவிட்டிருக்கிறது என்பது பற்றியும் கூறுகிறார்.

உணவுப் பொருள் பெருகவில்லை.

ஆனால், சிகரெட்டும், பீடியும், ஒயினும், மற்ற போதைப் பொருளும் அமோகமாகப் பெருகி இருக்கிறது. டில்லி போன்ற பெருநகர்களில், மாநிலத் தலைநகர்களில்!

வினோபா தந்துள்ள பட்டியல் முழுமை பெற்றதல்ல, பட்டியலில் சேர்க்கப்பட வேண்டியவை பல உள! புதிய புதிய சேரிகள், சாக்கடை ஓரக் குடிசைகள், நடைபாதை வாசிகள், ஆயிரத் தெட்டுப் பிணிகள், இவைகளுக்கு இடையில் நவநாகரீக நாரிமணிகள், அவர்களின் இதழுக்கு அழகளிக்கும் வண்ணப் பூச்சுகள், அதனால் ஈர்க்கப்படும் காசாதிபதிகள், அவர்கள் நடத்திடும் கள்ள வாணிபம், அதன் பலனாகக் கிடைத்திடும் மாளிகைகள், அங்குக் காணக் கிடக்கும் மந்தகாச வாழ்வு முறைகள், அம்மவோ! பலப்பல உற்பத்திகள் பெருகி உள்ளன. அவை குறித்துக் கூறிட

இயலவில்லை, தூயவரால். நாடு நன்கு அறிந்திருக்கிறது நிலைமையினை!

துரைத்தனத்தின் போக்கை மாற்றிட முடியவில்லை. காங்கிரஸ்காரர்களால் என்றும் கூறுகிறார்.

ஆட்சியை நடத்துகிறது காங்கிரஸ்! அலங்கோலம்தான் விளைந்திருக்கிறது; அதனை தடுத்திடத் திறமையற்று உள்ளனர் காங்கிரசார். இது நிலைமை! இதனை எங்ஙனம் மக்கள் மறந்துவிட முடியும்; இந்த நிலைமை நீடித்திட எப்படி விரும்புவர்? இதனால் ஏற்படும் வேதனையை அடக்கிக் கொண்டுள்ளனர், வெளியே கொட்டிக் காட்டாமல் உள்ளனர் என்றால், மறந்துவிட்டார்கள் என்பதல்ல பொருள், மாற்றான் நம்மை மல்லுக்கு இழுத்திடும் நேரத்தில், நமது வேதனையைக் கூட வெளியே காட்டிக் கொள்ளத்தான் கூடாது! என்ற

பொறுப் புணர்ச்சிதான் காரணம். மக்களின் அப்பழுக்கற்ற நாட்டுப்பற்று, அவர்களை வேறு எது குறித்தும் இந்த நேரத்தில் எண்ணிக் கொண்டிருக்கக்கூடாது என்ற ஒரு உன்னதமான கட்டு திட்டத்தை மேற்கொள்ளச் செய்திருக்கிறது. இது பழக்கமாகி, இயல்பே ஆகிவிடும். இனி நாம் எந்த முறையிலே ஆட்சி நடத்தினாலும் இந்த மக்கள் ஏனென்று கேட்டிட மாட்டார்கள், எதிர்ப்புக் குரல் எழுப்பிட மாட்டார்கள் என்று எண்ணிக் கொள்வது ஏமாளித்தனம்.

மக்கள் எழுச்சி பெற்றிருப்பது, ஆற்றல் மறவர்களின் வெற்றிகளைக் கண்டு; காங்கிரசாட்சியின் சாதனைகளைக் கண்டு அல்ல; சாதனைக்குச் சான்றாகத்தான் அளவரிசி முறை இருக்கிறதே!

மக்கள் ஒன்றுபட்டு நிற்பது காங்கிரஸ் ஆட்சியினிடம் கொண்ட பரிவு காரணமாக

அல்ல; பாகிஸ்தானும் சீனாவும் பகை கக்கி நிற்பதைக் காண்பதால்!

மக்கள் பொன்னும் பொருளும் அள்ளிக் கொடுப்பதும், காங்கிரசின் ஆட்சித்திறம் கண்டு மகிழ்ச்சி கொண்டு பரிசு வழங்கிடும் முறையிலே அல்ல! இவர்களின் ஆட்சித் திறத்தை நம்பி நாடு கெட விட்டுவிடக் கூடாது; நம்மாலான எல்லாவற்றையும் நாம் அளித்து, நாடு காத்திடும் நற்பணியிலே ஈடுபட வேண்டும் என்ற எண்ணத்தால், ஆர்வத்தால்!

இந்த ஆர்வம், நாட்டுப் பாதுகாப்புக்காக, காங்கிரஸ் ஆட்சியின் பாதுகாப்புக்காக அல்ல.

நெல்லுக்கு இறைத்திடும் நீர் புல்லுக்கும் பாயுமாமே. அதுபோல. நாட்டுப் பாதுகாப்புக்காக மக்கள் காட்டிடும் ஆர்வம். ஓரளவு காங்கிரஸ் கட்சிக்கும் போய்ச் சேர்ந்திடக்கூடும். அது இடையிலே நேரிட்டு

விடும் நிகழ்ச்சி; மக்கள் மேற்கொண்டு விட்ட ஆதரவு ஆகிவிடாது. அதுபோல எண்ணி ஏமாறாதீர்கள், இன்று காணப்படும் எழுச்சியும் ஆர்வமும், உதிர்ந்து போய்விடும், உலர்ந்து போய்விடும். இப்போதே அதனைப் பக்குவப்படுத்தாவிடின் என்று இந்தியாவின் பிரதம நீதிபதி கஜேந்திர கட்கார் எச்சரித்துள்ளார், சென்ற திங்கள் பத்தாம் நாள், புது தில்லியில்.

இன்று மக்களிடம் காணப்படும் ஆர்வமும் எழுச்சியும் தக்கவிதத்தில் பக்குவப்படுத்தாவிடின், உதிர்ந்துபோய் விடும், கலைந்து போய்விடும் என்று அஞ்சுகிறேன்.

என்று கூறிவிட்டு, கஜேந்திர கட்கார், அந்த அவையிலே அமர்ந்திருந்த பாதுபாப்பு அமைச்சர் சவான் அவர்களைச் சுட்டிக் காட்டியபடி,

இன்றைய ஆர்வம் எப்போது கலைந்து விடும் என்று எனக்குத் தோன்றுகிறது என்றால், இதோ இருக்கிறாரே பாதுகாப்பு அமைச்சர் சவான், அவர் பாராளுமன்றத்தில் எழுந்து நின்று நிலைமை சரியாகிவிட்டது என்று அறிவிக்கிறாரே, அப்போது என்றும் குறிப்பிட்டார்,

வினோபாவும் கஜேந்திரகட்கரும் ஓட்டுவேட்டைக்காகவே உழல்பவர்கள் அல்ல; எதையாவது இட்டுக் கட்டிப் பேசியாவது பதவி பிடித்தாக வேண்டும் என்ற அரிப்புக் கொண்டவர் களுமல்ல. அதன் காரணமாகவே அவர்களின் கருத்தாழம் மிகுந்த கண்டனம் வலிவு மிக்கதாகிறது இவர்கள் இடித்துரைக்கும் அளவுக்கு ஆட்சியை நடத்திச் சென்றிடும் காங்கிரஸ் கட்சி இன்று போர் வீரர்களின் புகழாரங்கள் தந்திடும் புதுமணம், தமது

ஆட்சி எழுப்பிடும் நறுமணம் என்று தவறாகப் பொருள் கொண்டுவிடக்கூடாது. ஆனால் காங்கிரஸ் கட்சியின் "தேர்தல் சூரர்கள்' இப்படித்தான் எண்ணிக் கொண்டுள்ளனர், சுவை காணுகின்றனர். நெருக்கடி நிலைமை காரணமாக, எல்லா விதமான கருத்தோட்டமும் தடைபட்டுப் போயிருப்பதனைச் சாதகமாக்கிக் கொண்டு, போரில் கிடைத்த வெற்றிக்கான மகிழ்ச்சி ததும்பிக் கொண்டிருக்கும் மனத்தைப் பக்குவமாகத் தடவிக் கொடுத்தபடி இருந்தால், ஆட்சிப் போக்கினாலே ஏற்பட்டு விட்டுள்ள கசப்பு போய்விடும், கனிவு பிறந்திடும். ஓட்டுக் குவிந்திடும் என்ற கணக்கினைப் போட்டுப் பார்த்துப் பூரித்துக் கிடக்கின்றனர்.

போர்ச் சூழ்நிலையில் பொறுப்புடன் நடந்துகொள்ள வேண்டும், கட்சிக் கண்ணோட்டத்துடன் காரியமாற்றக் கூடாது

என்ற கண்ணியத்தை மற்றக் கட்சிகள் கடைப்பிடித்து வருகின்றபோது, ஆளுங்கட்சி தன் ஆதிக்கத்தை நிலை நாட்டிக் கொள்ளும் நோக்குடன் செயல்பட்டு வருகிறது! இதனைக் கண்ட பிறகும், போக்கை மாற்றிக் கொள்ளக் கழகம் விரும்பவில்லை; நாடு பெரிது, மற்ற எதனையும்விட என்ற எண்ணத்தில்!

நாட்டிலே நெருக்கடி நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதனை, மற்ற கட்சிகள் உணர்ந்து அதற்கு ஏற்ற முறையில் ஒழுகி வருவதுபோல, காங்கிரசிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள ஆட்சித் துறைகள் செயல்படுகின்றனவா என்றால், இல்லை என்றே தெரிகிறது.

ஜெயப்பிரகாஷ் நாராயணன் சென்ற மாத இறுதியில் இதுபற்றிக் குறிப்பிட்டார் திகைப்புடன்,

புதுதில்லியில் நடைபெற்ற மாநாட்டில் - காங்கிரஸ் அமைச்சர்களிலே சிலரும் இதிலே கலந்து கொண்டனர் - பேசும்போது, ஜெயப்பிரகாசர் மனம் நொந்து பேசியிருக்கிறார்,

சர்க்கார் அலுவலகங்கள் பலவற்றில், பிரதம மந்திரி சம்பந்தப்பட்ட அலுவலகங்கள் உட்பட, எப்போதும் போல "தூங்கி விழுந்திடும்' போக்கிலேயே அலுவல் நடைபெற்றுக் கொண்டு வருவதனை நான் அறிவேன், நாட்டிலே ஒரு நெருக்கடிநிலை மூண்டு விட்டிருப்பது பற்றிய எண்ணமே அந்த இடத்தில் உள்ளவர்களுக்கு இருப்பதாகத் தெரியவில்லை. பழைய மந்தத்தனம், அக்கறையற்ற போக்குத்தான் இப்போதும் இருக்கிறது.

என்று கூறியிருக்கிறார். ஆனால் காங்கிரஸ் கட்சியை நடத்திச் செல்வோர்

இதுகுறித்துக் கவலைப்படுவதாகவேக தோன்ற வில்லை. காரணம், எத்தனை பாட்டன் டாங்குகளை நொறுக் கினார்கள் தெரியுமா! எத்தனை விமானங்களை வீழ்த்தினார்கள் தெரியுமா! பாகிஸ்தானியப்படை எப்படி மிரண்டு ஓடிற்று தெரியுமா! - என்று பேசினால், எழுச்சி பெற்ற மக்கள் அகமகிழ்கிறார்கள், வாழ்த்துகிறார்கள். அந்தச் சமயமாகப் பார்த்து, "அப்படிப்பட்ட வீரவெற்றிகள் பெற்றிருக்கிறோம். ஆகவே உமது ஓட்டுகளை எமக்கே அளித்திட வேண்டும் என்று கேட்டுப் பெறலாம் என்று நினைக்கிறார்கள். சித்தத்தில் மகிழ்ச்சி பொங்கிக் கொண்டிருக்கும் நேரத்தில், பிரச்சினைகளைப் பற்றிய சிந்தனைத் திறம் குறைந்து காணப்படும் அல்லவா அதனை நம்பிக் கொண்டிருக்கிறார்கள்.

மக்களின் நல்வாழ்வுக்கான திட்டங்களைத்

தொடர்ந்து நிறைவேற்றிக் கொண்டு வருவோம் என்றும் பேசி வருகின்றனர்; இந்த நேரத்தில் இவர்கள் தீட்டிடும் திட்டங்களிலே உள்ள குறைபாடுகளைக் குறித்தும், அவைகளை நிறைவேற்றுவதிலே உள்ள திறமைக் குறைவு பற்றியும், முளைத்து நெளியும் ஊழல் குறித்தும் ஒருவரும் ஒரு பேச்சும் பேசமாட்டார்கள் என்ற எண்ணத்துடன். பேசுவது இல்லைதான், எந்தக் கட்சியும், அதிக அளவில். காரணம் என்ன? குற்றங் குறைகள் இல்லை என்பதாலே அல்ல, அவைகளைக் கூறிக் கொண்டிருக்க இதுவா நேரம் என்றல்லவா ஆட்சியில் அமர்ந்தவர்கள் கேட்பார்கள்; அதனால்.

நெருக்கடி நிலை பற்றிய கவலையற்று, கிண்டி குதிரைப் பந்தயத்தைக்கூட நடத்த விட்டிருக்கிறார்கள்; ஆனால், ஆட்சியினரின் திட்டங்களிலே உள்ள குறைபாடுகளைச்

சொன்னால். இந்தச் சமயத்திலா இதனை எல்லாம் சொல்லிக் கொண்டிருப்பது என்று கேட்கிறார்கள்.

திட்டங்கள் இதனைப் போட்டும், போதுமான அளவிலே பொருத்தமான பலனை ஏன் மக்கள் பெற்றிட இயலவில்லை என்ற கேள்விக்கு, யார் பதில் கூறுகிறார்கள்? நெருக்கடி நீங்கவில்லை! என்பதன்றி வேறு பேச்சு வேண்டாம் என்றல்லவா கருதிவிடுகிறார்கள்! ரஷியாவிலே தாம் கண்ட பெருவியப் பளிக்கத்தக்க முன்னேற்றத்தைப் பற்றி கஜேந்திர கட்கர் குறிப்பிட்டுப் பேசுகையில்,

அங்கு யாரைக் கண்டு பேசினாலும் சரி, நீதிபதி யானாலும் வழக்கறிஞரானாலும், ஆலைத் தொழிலாளி யானாலும், அவர்கள் முகத்தில் ஒரு வெற்றிக்களை இருந்திடக் காண்கிறேன். இந்த முன்னேற்றத்தில்

நம் பங்கு இருக்கிறது என்ற பெருமிதம் கொண்டுள்ளனர். இது இந்நாட்டுக்குத் தேவை. இலட்சோப இலட்சம் மக்களும் உணர்ந்து உவகை கொண்டு பங்கேற்றுப் பலன் பெற்றுப் பெருமிதம் கொள்ளத்தக்க விதமாக முன்னேற்றத் துக்கான முயற்சிகள் அமைந்திட வேண்டும் என்று கூறினார்.

அப்படித்தான் அனைவரும் அகமகிழ்ச்சியுடன், ஆர்வத்துடன் தத்தமது பங்கினைச் செலுத்தி வருகின்றனர் என்று கூறிடுவர், ஒளிவிடு கண் பெற்ற காங்கிரஸ் நண்பர்.

பங்கினைச் செலுத்துவது பகைவனை வீழ்த்திட எடுக்கப்படும் முயற்சிகளில். நாட்டை வளப்படுத்த என்ற பெயரால் நடத்தப்பட்டு வரும் காரியங்களிலே பங்கு கிடைப்ப தில்லை; தரப்படுவதில்லை.

திட்டங்கள் வெற்றிபெற வேண்டுமானால், வய-லே வேலை செய்திடுபவனும், ஆலையிலே பாடுபடுபவனும், திட்டத்தின் பலன் தமக்கும்தான் என்ற நம்பிக்கை பெற்றிடத் தக்க நிலை எழவேண்டும் என்று முன்பு, அமைச்சர் சஞ்சீவய்யா குறிப்பிட்டார்.

இப்போது இரண்டு கிழமைகளுக்கு முன்பு சர்க்கார் துறையிலே செயல்பட்டு வரும் தொழில் அமைப்புகளிலே நிர்வாக அமைப்பிலே பங்குபெறும் திட்டம் தனக்கு மகிழ்ச்சி தரத்தக்க முறையிலே நடைபெறவில்லை என்று சஞ்சீவய்யா வருத்தம் தோய்ந்த குரலில் பேசினார்.

முதலாளிகளிடம் சென்று, தொழிலாளர்களுக்கு உரிய பங்கு கிடைத்திடச் செய்திடுக என்று நான் கூறும்போது, அவர்கள் திருப்பிக் கேட்கிறார்கள், சர்க்காரிடம் உள்ள தொழில் அமைப்புகளிலே இந்த யோசனை

எந்த அளவு ஏற்றுக் கொள்ளப்பட்டுச் செயல்படுத்தப்பட்டு வருகிறது, சொல்லுங்கள் கேட்போம் என்கிறார்கள்; என்னால் தகுந்த பதில் கூற முடியவில்லையே என்று அமைச்சர் சஞ்சீவய்யா ஏக்கத்துடன் பேசியிருக்கிறார், கடந்த மாதம்.

வினோபா பாவே ஏக்கக் குரலிலே அல்ல, சிறிதளவு கோபக் குரலிலேயே பேசுகிறார் திட்டங்கள் நிறைவேற்றப் படுகிற முறை குறித்து,

பீகார் மாநிலத்து சகார்சாவில் அக்டோபர் 30-ம் நாள் ஐந்தாண்டுத் திட்டங்கள் வெற்றி அளிக்காத காரணம் என்ன என்பது பற்றி வினோபா தமது கருத்தைத் தெரிவித்திருக்கிறார். கட்சி மாச்சரியத்தால் திட்டங்களைப் பற்றிக் கண்டபடி உளறுகிறார்கள் என்று காங்கிரசின் பெரிய தலைவர்கள் முழக்கம் எழுப்பிக்

காட்டுகிறார்களே, அவர்கள் வினோபாவின் கண்டனத்தைக் கேட்டு, வாயடைத்துப் போவதுமட்டுமல்ல, சமயத்தைத் தேடிப் பெற்றுக் கொண்டு அவருடைய காலைத் தொட்டுக் கண்களிலே ஒற்றிக் கொண்டு, மகாத்மாவுக்குப் பிறகு எமக்குத் தாங்களே வழிகாட்டி என்று புகழாரம் சூட்டிவிட்டு, பத்திரிகை நிருபர்களிடம் வினோபாவிடம் மனம்விட்டுப் பேசியது பற்றிய சேதியையும் இலேசான ஒரு புன்னகையையும் வீசிவிட்டுப் படகு மோட்டார் ஏறிப் பறந்துவிடுகிறார்கள். மிகக் கடுமையாகத் தாக்கியுள்ளார் வினோபா.

ஐந்தாண்டுத் திட்டங்களில் மக்களுடைய ஒத்துழைப்புக் கிடைக்காத காரணம் என்ன? திட்டம் தீட்டுபவர்கள், மக்களுக்குத் தமக்கு ஏற்ற திட்டம் எது என்று கண்டறியத் தெரியாது என்ற எண்ணத்தில் மக்களை மாடுகள் என்று எண்ணிக் கொண்டு நடத்திவருவதுதான்,

மக்களை மக்களாகவே கருதுவதில்லை. எங்கோ மேலே அமர்ந்து கொண்டு திட்டத் தீட்டி விடுகிறார்கள்!

இந்தக் கடுமையான கண்டனம் காங்கிரஸ் கட்சியிடம் உள்ள பதவியைப் பறித்துக் கொள்ள வேண்டும் என்ற பதைப்பின் விளைவு அல்ல. மக்களின் பேராதரவை, ஆசை காட்டியும் நம்பிக்கை ஊட்டியும் பெற்றுக் கொண்ட காங்கிரஸ் கட்சி, மக்களை மாக்களாகக் கருதி நடத்துகிறதே என்பதனை எண்ணிடும் போது, ஒரு உத்தமர் உள்ளம் கொதித்துக் கூறிடும் உண்மை உரை.

திட்டத்தால், ஏழையும் நாசமாகின்றான், பணக்காரனும் பாழாகிறான். ஒரு சிலரைத்தான் திட்டம் பணம் படைத்தோன் ஆக்கிவைக்கிறது. அதனால் அவன் உள்ளம் காலிப் பாண்டமாகி விடுகிறது. போக போக்கியத்தில் புரளும்படி அவனைத்

தூண்டுகிறது. ஏழை மக்களோ, தங்களுடைய அடிப்படைத் தேவைகளைக் கூடப் பெற்றுக் கொள்ள முடியாத நிலையில் உள்ளனர்.

உண்மைக்கு மாறான வினோபா பேசமாட்டார், ஆனாலும் சிறிதளவு மிகைபடப் பேசிவிட்டிருப்பாரோ என்று சந்தேகப்படு பவர்கள் இருந்திடின், அவர்களின் ஐயப்பாட்டினை இந்தச் செய்தி போக்கிவிடும்:

அகோலா
நவம்பர் 2

மராட்டியத்தின் கிராம முன்னேற்ற அமைச்சர் டாக்டர் ஏ.இ. கேட்கார், நிம்பா என்ற கிராமத்திற்கு விஜயம் செய்தபோது, ஆண் பெண்கள் அடங்கிய ஐந்நூறு பேர் கொண்ட கூட்டம் அவருடைய மோட்டாரைச் சுற்றி வளைத்துக் கொண்டு உணவு கொடு! வேலை கொடு! என்று முழக்கமிட்டது.

பக்கத்துக் கிராமமான ஊரலில் உள்ள சர்க்கார் தானியக்கிடங்கிலிருந்து 20 மூட்டை சோளம் அனுப்பி வைப்பதாகக் கூறிவிட்டு அமைச்சர் சென்றார்.

தங்கள் கிராமத்திலிருந்து சோள மூட்டைகளை எடுத்துச் செல்லக்கூடாது என்று ஊரல் கிராமத்தவரில் சிலர் தடுத்திட முயன்றதாகத் தெரிகிறது.

மிகச் சிறிய செய்தி இது என்று தள்ளிவிடத் தோன்றினால், நாட்டிலே ஏற்பட்டுள்ள உணவு நிலை நெருக்கடியைப் பார்க்கும்போது, அமெரிக்காவிடம் பி.எல். 480 திட்டப்படி உணவுப் பொருள் பெற்றாக வேண்டும் என்று உணவு அமைச்சர் சுப்பிரமணியம் உருக்கமுடன் பேசியதை இந்தச் செய்தியுடன் இணைத்துக் கொள்ளட்டும்!

கொடு! கொடு! என்று அமைச்சர்கள்

கேட்கிறீர்கள்; நாங்களும் கொடுத்தபடி இருக்கிறோம்; ஆனால் உங்கள் நாட்டிலே விவசாய வளர்ச்சியைப் போதுமான அளவு வெற்றிகரமாக நடத்திக் காட்டத் தவறியபடி இருக்கிறீர் களே! எத்தனை காலத்துக்குக் கொடுத்துக் கொண்டு இருப்பது! எவ்வளவு என்று கொடுப்பது? நீங்கள் அங்கே உணவு உற்பத்தியைப் பெருக்கிட என்னதான் திட்டமிட்டி ருக்கிறீர்கள்? அதனை எப்படிச் செயல்படுத்துகிறீர்கள்? விவரம் கூறுங்கள்! கணக்குக் காட்டுங்கள். உதவி செய்தால் அதனால் உருப்படியான பலன் கிடைக்க வேண்டுமே

என்று அமெரிக்கா கேட்கிறது. எதிர்க்கட்சிகள் இதுபோல, விவரம் தரச்சொல்லிக் கேட்டால், கணக்குக் காட்டச் சொன்னால், "எம்மிடமா கணக்குக் கேட்கிறீர்கள்? அத்தனை ஆணவமா? இரு!

இரு! பொறு! பொறு! உன் கணக்கைத் தீர்த்துக் கட்டி விடுகிறேன் என்று கொதித்துக் கூறுவார்கள், கேட்பது சோறு தரும் சொர்ணப்பனல்லவா! கோபித்துக் கொள்ள முடிகிறதா? விவரமா? அனுப்பி இருக்கிறேன்! கணக்கா? அனுப்பி வைக்கிறேன்! என்றுதான், பணிவாக, குழைவாகப் பேச முடிகிறது, காங்கிரஸ் அமைச்சரால்!

பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் பதைபதைத்துக் கேட்கிறார், அமைச்சர் சுப்பிரமணியத்திடம், "ஒரு சுதந்திர நாட்டிடம் மற்றோர் நாடு இப்படித் தலையிட்டு விவரம் கேட்கலாமா?'' என்று. கேட்டால், என்ன தவறு! கப்பல் கப்பலாகக் கோதுமை தருகிறான், நாமும் பெறுகிறோம்; மேலும் கேட்டபடி இருக்கிறோம், நம்முடைய நிலை அவ்விதம் இருக்கிறது. கொடுப்பவன், கணக்குக் கேட்கிறான், என்ன தவறு? என்ற கருத்துப்பட

அமைச்சர் சாந்தம் ஒழுகிடும் விதமாகப் பேசுகிறார்.

உணவு முனை, தொழிலில் நிம்மதி ஏற்படுத்தும் துறை, இல்லாமையை ஒழித்திடும் துறை எனும் எதிலேயும் வெற்றி பெற்றிடாதவர்கள் இன்று, போர்முனையில் வீரர்கள் ஈட்டிய வெற்றியாலே, மக்கள் பெருமையும் பூரிப்பும் அடைந்து இருந்திடக் கண்டு, காங்கிரஸ் ஆட்சியின் மீது உள்ள பரிவுக்கு இது சான்று என்று கருதிக் கொள்கிறார்கள்!

உண்மையை உள்ளந்திறந்து பேசியிருக்கிறார் வினோபா, மக்களை மாக்களாக நடத்துகிறார்கள் என்று. இது போதாதா இவர்களின் ஆட்சித் திறமை குறித்து நாடு அறிந்துகொள்ள?

அன்புள்ள

அண்ணாதுரை

14-11-65

30. கிழக்கு வெளுத்திடும் வேளை

அறிவொளி பரவப் பழமைப் பனி கலையும் !
கொள்ளையடித்த பணத்தில் கொண்டாட்டம் !
ஆண்டவன் அவராக விரும்பும்போதே வரவேண்டும் !
கடவுள் கொள்கையிலே மறுமலர்ச்சி !
யூத இனம் இன்று பழிபோக்கப் பெற்ற இனம் !

தம்பி,

மூன்று கிழமைகளுக்கு முன்பு, பழனியில் பழனி ஆண்டவர் கலைக் கல்லூரியில் பேசும் வாய்ப்புக் கிடைத்தபோது, மாணவரொருவர்,

நான் நினைத்தபோதே நீ வர வேண்டும், முருகா!

என்றோர் “பிரார்த்தனை’ப் பாடலைப் பாடினார். இசை இனிமையாக இருந்தது; பாடல் மட்டுமல்ல; கல்லூரியின் பெயரே எனக்கு இனிமையாகத்தான் இருந்தது; பழனி ஆலய நிதியின் துணையால் அமைக்கப்பட்டுள்ள கல்லூரி. இருபது ஆண்டுகளுக்கு முன்பு, கிறித்தவ சமயத்தார் பெரும் பொருள் செலவிட்டு இங்குக் கல்லூரிகளும் மருத்துவமனைகளும், நடாத்தி, தமது மார்க்கம் அறிவையும் அன்பையும் அடிப்படை யாகக் கொண்டது என்பதனை விளக்கிக் காட்டுகின்றனரே அதுபோல, தமிழகத்துத் திருக்கோயில்களின் தொன்மை குறித்தும் மகிமை பற்றியும், மானியம் குறித்தும் மாநிதி குறித்தும், தேர்த் திருவிழா பற்றியும் தேவாலயக் கட்டட நேர்த்தி பற்றியும் எடுத்துப் பேசிப் பெருமிதம் அடைபவர்கள், அன்பு அரசோச்சிட,

அறிவு பெருகிட, ஏன் ஆலயத்தில் முடங்கிக் கிடக்கும் செல்வத்தையும், வருவாயையும் அறிவாலயங்களான கல்லூரி களும் அன்பாலயங்களான மருத்துவமனைகளும் அமைத்திடப் பயன்படுத்தக் கூடாது! அமைக்கப்படும் கல்விக்கூடங்களுக்கு,"தலத்தி'லுள்ள தேவனின் பெயரையே சூட்டிடலாமே - பழனியில் பழனி ஆண்டவர் பெயராலேயே ஒரு கல்லூரி அமைத்திட லாமே! ஏனோ இந்த எண்ணம் அவர்கட்கு ஏற்புடையதாகத் தெரியவில்லை. திரும்பத் திரும்ப வெள்ளி இடபவாகனமும், தங்க மயில்வாகனமும், புதிய நீராழி மண்டபமும் கோபுரத்துக்குப் பொற்கலசமும் அமைத்துத் தமது பக்தியினைக் காட்டியபடி உள்ளனரே! ஏன் ஆலயங்களில் முடங்கிக் கிடக்கும் பொருளைக் "கோயிற் பெருச்சாளிகள் தின்று கொழுத்திடத்

துணை நிற்கின்றனர்; இதுவா நெறி வளர்த்திடும் முறை, இஃதோ மனத்தூய்மை தந்திடும் மார்க்கம் என்றெல்லாம் பேசி வந்த நினைவு, அன்று பழனி தேவஸ்தானம் நடாத்திடும் பழனி ஆண்டவர் கலைக் கல்லூரிக்குள் நுழைந்தபோது என் மனத்திலே எழுந்து தவழ்ந்தது.

பழனியில், பழனி ஆண்டவர் கலைக் கல்லூரி! எத்தனை பெரிய மாறுதல்! எவ்வளவு ஏற்றமிகு மாறுதல்! தூற்றலைத் தாங்கிக் கொண்டது, பலன் தராமலா போய்விட்டது?

ஆலயத்தைக் காட்டிலும் வேறோர் அறிவாலயம் உண்டோ, ஆலயப் பணத்தைக் கொண்டு அறிவாலயம் அமைக்கச் சொல்கிறானே இந்த அறிவிலி என்று ஆத்திரம் மே-ட்டு ஆர்ப்பரித்தவர்களும்,

ஆலயம் ஆண்டவன் இருப்பிடம்;

அருளைப் பெற்றிட வழிகாட்டும் புனித இடம்; இங்கு உள்ள செல்வம், கிடைத்திடும் வருவாய், ஆண்டவனுக்கான "பூஜா' காரியங்கட்கும்,"பக்தர்கட் கான' வசதிகட்கும் செலவிடப்பட வேண்டுமேயன்றி, வேறு காரியத்துக்கு - கல்விக்குக் கூடச் செலவிடுவது பாபம் என்று பதறிக் கூறியவர்களும்,

ஆதி காலம்தொட்டு இருந்து வருவதும், ஆகம விதிப்படி அமைக்கப்பட்டதுமான ஆலயத்தில் புதுமுறை புகுத்திட வேண்டுமாமே! இது புரட்சியாமே! பேசுகிறான், கேட்டுக் கொண்டிருக்கிறீர்களே! சித்தர்களும் ஜீவன் முக்தர்களும், ஆழ்வார்களும் நாயன்மார்களும் அவதரித்த திருநாடு இது. அவர்களுக்குத் தோன்றாதது, இந்த அறநெறி அறியாதானுக்குத் தோன்றிவிட்டதோ? ஆலயப் பாதுகாப்புக்கும் அம்மையுடன் ஐயன்

பவனி வந்திட ஆகிடும் செலவினுக்கும், அபிஷேக ஆராதனைக்கும் செலவிடவன்றோ பக்தர்கள் காணிக்கை தந்தனர், மானியங்கள் அளித்தனர்; அந்தப் பணத்தை வேறு காரியத்துக்குச் செலவிடுவதா! தகுமா! தர்மம் செய்தவர்களின் மனம் என்ன பாடுபடும்! இது களவு! மோசடி! நாசத்திட்டம்! நாத்திகத்திட்டம்!! என்றெல்லாம் பேசி ஏசியோரும், அன்று என் மனக்கண்முன் தோன்றினர்; எதிரிலேயோ நூற்றுக்கணக்கான இளைஞர்கள், ஒளிவிடு விழியும் புன்னகை சிந்திடும் இதழும், அழகளிக்க வீற்றிருந்தனர். கல்லூரி நடைபெற்று வரும் முறை பற்றி. நடத்திச் செல்வோர் மகிழ்ச்சியுடன் என்னிடம் கூறினர். என் செவியில் அந்தப் பேச்சு விழவில்லை! பாவி! பழிகாரன்! நாத்திகன்! என்றெல்லாம் முன்பு கிளம்பிற்றே "தூற்றல்' - அந்தச் சத்தம்தான் நிறைந்திருந்தது.

எப்படியோ ஒன்று, பழைய முறைகளை இனியும் விடாப்பிடியாகக் கொண்டிருக்கக் கூடாது, பலன் இல்லை, சமூகம் தாங்கிக் கொள்ளாது; அறிவுக் கதிரொளி பரவப் பரவ பழைமை மூடுபனி கலையத்தான் செய்யும் என்ற எண்ணம் வெற்றி பெற்றுக் கொண்டு வருகிறது. பழைய முறைகளுக்கும், பழைய கோட்பாடுகளுக்கும் புதிய விளக்கங்களைத் தேடிக் கண்டுபிடித்துத் தந்திடும் தேவை வலுவடைந்துவிட்டிருக்கிறது. சொல்கிறோம், கேட்டுக் கொள்கிறார்கள் என்று இறுமாந்து கிடந்த நிலை குலைந்து போய்விட்டது; கேட்பவர்கள் ஏற்றுக் கொள்ளும் விதமாகச் சொல்ல வேண்டுமே என்ற எண்ணம் மேலோங்கி விட்டிருக்கிறது.

வெண்ணீறு அணிந்ததென்ன
வேலைப் பிடித்த தென்ன?

என்ற பாடலும் ஒலிக்கிறது; கிரேக்க

சாம்ராஜ்யம், முக்கோ ணத்தின் இலக்கணம், தக்காணத்தின் தனிவளம், வானவெளிப் பயணம், புதுமுறைப் பாசனம் போன்றவை பற்றிய கருத்தொ-யும் பழனியில் பழனி ஆண்டவர் கலைக்கல்லூரி மூலம் கேட்டபடி இருக்கிறது.

கல்லூரி அமைத்தாலும் மருத்துவமனை அமைத்தாலும் "கந்தன்' பெருமை பற்றிக் கசிந்து உருகும் நிலை மட்டும் மாறாது என்பதனைக் காட்டவோ என்னவோ,"முருகனை' வழிபடும் பாட லைப் பாடினார், மாணவர். இனிமையாக இருந்தது என்றேன், விந்தையாகவும் இருந்தது.

முருகா! நீ வரவேண்டும்! என்ற முறையிலே மட்டும் பாடல் அமைந்திருந்தால், வியப்புத் தோன்றி இருந்திருக்காது.

அதே கருத்துள்ள பாடலை அதற்கு முன்பு

ஒருமுறை கூடக் கேட்டதாக நினைவு.

என் கவனத்தை ஈர்த்ததும் விந்தையாகத் தென்பட்டதுமான பகுதி,

மயில்மீது வா!

மங்கையை விட்டு வா!

என்பன போன்ற பகுதிகள் அல்ல.

நான் நினைத்தபோதே, நீ வா!

என்ற கருத்து அமைந்த பகுதி.

பாடலாசிரியர் என்ன எண்ணத்தினால் அந்தக் கருத்துப் படப் பாடலை இயற்றினாரோ, நானறியேன்; ஆனால், பலர், ஆண்டவனை வேண்டிக் கொள்வதும், வரவேண்டும் என்று இறைஞ்சுவதும்,

தாங்கள் நினைக்கும்போது

என்று இருப்பதுதான் எனக்கு

விந்தையாகத் தென்பட்டது. நினைத்தபோதே - என்று கூறியது உடனே வா! தாமதிக்காமல் வா! என்ற பொருளில் என்பது புரிகிறது. ஆனால், பலர் தாங்கள் அழைக்கும்போதுதான் ஆண்டவன் வரவேண்டும் என்றே பொருள் கொண்டவர்கள் போலச் செயலாற்றி வருகின்றனர்.

எப்போது, ஆண்டவன் வர வேண்டும் என்று விரும்பு வார்கள் பெரும்பாலும்?

பெரும்பான்மையினரான மக்கள், அண்டசராசரத்தை ஆக்கி, காத்து, அழித்திடும் வல்லமை பெற்ற ஆண்டவன் எப்படி இருக்கிறார் என்று பார்த்திடும் ஆவலினால் அல்ல. ஆண்டவனை வரவேண்டும் என்று அழைப்பது. அவர் வந்தாரானால், தனக்கு உள்ள அல்லலைப் போக்குவார், இன்னலை நீக்குவார், இதம் அளிப்பார், வரம் அருளுவார் என்பதால், இல்லை என்று கூறிட மாட்டார்கள்

நம்மையொத்த சாமான்யர்கள். பெரியவர்கள் தம்பி! மறுத்துப் பேசுவார்கள்! ஆண்டவனைக் காண எண்ணுவது, அது வேண்டும் இது வேண்டும் என்ற அற்ப ஆசைக்காக அல்ல, வரம் கேட்டுப் பெற்றிட வேண்டும் என்ற நோக்கத்துக்காக அல்ல! ஜென்மம் சாபல்யம் பெற! பிறவிப் பிணி ஒழிந்திட! பேரின்பத்தில் திளைத்திட!! அவன் திருவடி நீழலில் சேர்ந்திட! என்றெல்லாம் கூறுவார்கள். அந்தக் கோடி சூரியப் பிரகாசத்தைக் கண்டதும், ஏ! அறிவிலி! உனக்கு மாடுமனை வேண்டும். மன்னனாக வேண்டும், மகன் பிறந்திட வேண்டும் என்ற அற்ப எண்ணங்களா தோன்றிடும்! ஐயனைக் கண்ட அந்த கணமே, ஆசைகள் அற்றுப் போகும், பாசங்கள் மடிந்து போகும், பார்த்திடுவாய், பரவெளியில் கலந்திடுவாய், நான் - எனது எனும் அகங்காரம் அழிந்துபடும்! அவனே எல்லாம்! என்ற மெய்ஞ்ஞானம்

உதித்து விடும்! மதியிலி! அவனைக் கண்டான பிறகு “நீ” என்று தனியான நிலையும் நிலைக்குமோ! என்று பேசி மெய் சிலிர்க்கச் செய்திடும் மேதைகள் உள்ளனர், இப்போதுகூட! நான், தம்பி! சராசரி களைப் பற்றிப் பேசுகிறேன்;”நாம் சொல்லுவது எல்லாம் சரி!’’ என்று பேசிடும் உபதேசிகளைப் பற்றி அல்ல.

ஆண்டவனே வர வேண்டும்! என்று நெஞ்சு நெக்குருக அழைத்திடுபவர்கள், தம்மை வாட்டி வதைத்திடும் இன்னலைப் போக்குவார் என்ற நம்பிக்கையுடனும், போக்க வேண்டும் என்ற முறையீட்டுடனும்தான், அழைக்கிறார்கள்.

இன்னல் வந்துற்றபோது இறைவனை அழைக்கிறார்கள், இன்னலைத் துடைத்திடுக என்று துதிபாடுகிறார்கள்.

ஆண்டவனே! தீராத நோயால் தாக்குண்டு

தவிக்கிறேன் உட்கொள்ளாத மருந்தில்லை! பார்க்காத மருத்துவர் இல்லை, எனக்கு வந்துற்ற கொடுநோயோ போவதாகத் தெரியவில்லை! உம்மைத்தான் நம்பி அழைக்கிறேன்! என்றோ,

உழைத்து உழைத்து உருக்குலைந்து போகிறேன், வாழ வழி இல்லை! நடைப்பிணமாகிக் கிடக்கிறேன். காத்திடுவார் இல்லை! ஐயனே! உன்னைத்தான் நம்பி அழைக்கிறேன், என் கஷ்டத்தைத் துடைத்திடு என்றோ,

உன் அருளால், ஆண்டவனே எல்லாம் இருக்கிறது எனக்கு! மாடமாளிகை இருக்கிறது! மணி விளக்கென ஒளிவிடும் கண்ணினாள் எனக்கு மனையாட்டியாக வாய்த்து இருக்கிறாள்! ஆனால், மகேசா! மழலைச் செல்வத்தை மட்டும் நான் பெற்றேனில்லை. பாவி நான் என்

செய்வேன்? உம்மைத்தான் நம்பித் தொழுது நிற்கிறேன்! உமையொரு பாகா? வந்திடு! எனக்கோர் வரமது தந்திடு! மகனொருவனை ஈந்திடு என்றோ, இதுபோன்ற ஏதேனும் ஓர் "வரம்' பெற்றிடவே ஆண்டவனை நாடுவர் தேடுவர். இதுவே"வாடிக்கை'யாக, நடைமுறையாக இருந்து வருவதனை எவரும் மறுத்திட இயலாது தத்துவ ஏடுகளில் உள்ளவை இந்த வாடிக்கைக்கு முற்றிலும் மாறானதாக இருக்கக்கூடும். நான் தத்துவ விசாரணையில் ஈடுபடவில்லை, நடைமுறையில் உள்ளவற்றினை எடுத்துக் காட்டும் பணியினில் ஈடுபட்டிருக்கிறேன். எனவே, அதனைக் குறித்துக் கூறுகிறேன். தத்துவங்களைத் தாளச் சத்தத்துடன் பேசி மகிழ்விப்போர், வேறு உளர்.

இன்னலைத் துடைத்திடும்படி இறைவனை வேண்டி அழைப்பது

மட்டுமல்ல, ஏதேனும் இக்கட்டிலே சிக்கிக் கொள்கிறபோதும், இனி அதிலிருந்து தப்பித்துக் கொள்ள முடியாது என்ற திகைப்பு மே-டுகிறபோதும் தன்னைக் காப்பாற்றிட ஆண்டவனை அழைப்பவர்கள் நிரம்ப உண்டு.

தான் நியாயமா - நேர்மையாக நடந்து கொண்ட போதிலும், பிறரால், சூழ்நிலையால், இன்னல் ஏற்பட்டு, அதன் காரணமாகப் பதறி ஆண்டவனை அழைத்திடுவார் உண்டு. அவர்கள் மட்டும் அல்ல! நீதிக்கொன்று, நேர்மை நெறி நடவாது தன் சுகத்துக்காகப் பிறரை வாட்டிடும் போக்கிலே நடந்து கொண்டு சிக்கலில் மாட்டிக் கொண்டு தத்தளிக்கும்போது அதிலிருந்து தன்னை விடுவிக்கும்படி வேண்டிக் கொள்வாரும் உளர்.

இவர் போன்றார், பொதுவாக இன்னலைத் தவிர்த்துக் கொள்ளும் நோக்குடன் உள்ளவர். அவர்கள் ஆண்டவனை எப்போது

அழைத்திடுவர்? தங்களுக்கு ஆண்டவன் உதவி தேவைப்படும்போது!!

எனக்கு இதிலே விந்தையாகப்பட்டது, இன்னல் வந்துற்ற போது இறைவனைத் தேடும் வாடிக்கை இருக்கிறதே என்பது அல்ல;

ஆண்டவன், தன்னை நோக்கி வந்திட, நேரம் குறித்துக் கூறும் பகுதிதான், விந்தையாக இருக்கிறது. சிறிதளவு கோபம் கூட எழுகிறது.

ஆண்டவன், வந்தால்போதும், எந்த நேரமாக இருந்தால் என்ன, அவருக்கு உகந்த நேரத்தில் வரட்டும், எப்போது அவருக்குக் கருணை பிறக்கிறதோ அப்போது வரட்டும், அவரைக் காணும் அளவு எப்போது தூய்மை துளிர் விடுகிறதோ அப்போது வரட்டும் என்று கூறிடாமல், நான் நினைத்தபோது நீ வரவேண்டும் என்று கூறுவது பக்தியாகத்

தோன்றவில்லை, ஏதோ ஓர் எச்சரிக்கை விடுவது போல இருக்கிறதல்லவா! ஆண்டவனே! நீ சமயம் தெரியாமல், சந்தர்ப்பம் தெரியாமல், உனக்காகத் தோன்றிய நேரத்தில் வந்துவிடாதே! நான் என்ன அலுவலிலே ஈடுபட்டிருப்பேனோ! என்ன வேலையிலே மூழ்கிக் கிடப்பேனோ! என்பது பற்றிய எண்ணம் கொள்ளாமல், வந்துவிடாதே, நான் வேண்டும்போது வந்திடு! என்றல்லவா, அழைப்பதுபோல இருக்கிறது, ஆண்டவனை!!

காலையிலே பன்னிரெண்டு மணி வரையில் அலுவலகத்தில் கடுமையான வேலை! பிறகு சாப்பிடும் நேரம்! மூன்று மணி வரையில் ஓய்வு! நான்கு மணிக்கு வெளியூர் புறப்பட வேண்டும்! ஆகவே, மூன்று மணிக்குமேல் நான்கு மணிக்குள் வந்து என்னைக் காணவும் என்று கடிதம் அனுப்புவது போலவா, கடவுளுக்குக்

காணும் நேரம் குறித்து நாம் தெரிவிப்பது! கண்ட நேரத்தில் வந்து விடாதே! நான் கூப்பிடும்போது வந்தால் போதும் என்ற முறையிலா! நினைக்கும்போதே தம்பி! எனக்குச் சிரிப்பாய் வருகிறது, நான் அறிந்த வரையில், பலர், ஆண்டவன் எந்த நேரத்திலும் வரலாம், வந்தால் போதும் என்ற அச்சமற்ற நிலையில் இல்லை,

சத்தியப் பிரமாணமாகச் சொல்கிறேன், சரக்கு அறுபத்து ஆறுக்கு வாங்கியது. வழிச்செலவு, வட்டி, கடைச்செலவு இவை மட்டும் நாலு ஆகுது. நீங்களாக இஷ்டப்பட்டு எனக்கு ஏதாகிலும் இலாபம் போட்டுக் கொடுத்தால் போதும். பழனியாண்டவர் படத்துக்குப் பக்கத்திலே இருந்து கொண்டு சொல்கிறேன், நம்பினாலும் சரி, இல்லை என்றாலும் சரி, என்று நாற்பத்து எட்டு ரூபாய்க்கு வாங்கிய சரக்கு பற்றி ”புளுகு’

பேசி இலாப வேட்டை ஆடும் பெரிய புள்ளி எப்போது வேண்டு மானாலும் ஆண்டவன் வரட்டும் என்றா எண்ணுவார்! வந்தாரானால் நிலைமை என்ன ஆகும்?

அட பாதகா! பாலாபிஷேகமும் பன்னீர் அபிஷேகமும், பல்லக்கு உற்சவமும் நீ நடத்துவது, இப்படி அண்டப் புளுகு பேசி அடிக்கிற கொள்ளைப் பணத்தைக் கொண்டுதானா? எத்தனை நெஞ்சழுத்தத்துடன், என் மீது ஆணையிட்டு ஏமாற்றப் பார்க்கிறாய்! அறுபத்து ஆறு கொடுத்தா வாங்கினாய்? சொல்லு! என்னைப் பார்த்துச் சொல்லு!! ஆறுமுகனே! பன்னிரு தோளா! என்றெல்லாம் இந்தப் பொய் உமிழும் வாயினால் பஜிக்கிறாயே, எவ்வளவு துணிவு உனக்கு! - என்று என்னென்ன கேட்பாரோ ஏதேது பேசுவாரோ என்ற கிலி அல்லவா அவனைப் பிடித்து ஆட்டும்!

நான் நினைக்கும்போது,

நீ வர வேண்டும்

என்று முறை வைத்துக் கொண்டால், இந்த ஆபத்து வராதல்லவா!

”தொட்டேன்; கண்டேனா உடனே நீ தொட்டிலுக்குப் பாரம் சேர்த்துக் கொள்வாய் என்று. ஏதோ பணம் கொடு என்று கேள்; இயன்றதைத் தருகிறேன்; எங்காவது சென்றுவிடு; என் தலைக்குத் தீம்பு வைக்காதே! காலில் விழுந்தாலும் கண்ணீர் பொழிந்தாலும் கடுகளவு பயனும் ஏற்படாது. இவளை நான் கண்டதே இல்லை என்றுதான் சொல்லுவேன். ஆமாம்! ஊர்ப் பெரியவர்கள் நம்ப மறுத்தால் கோயிலிலே கற்பூரம் கொளுத்தி அடித்துக் காட்டிக் கூடச் சத்தியம் செய்வேன். வேறே வழி’ என்று காமுகன் உறுமிக் கொண்டிருக்கும்போது, எப்போது

வேண்டுமானாலும் வரலாம் என்ற நிலையில் ஆண்டவன் அங்கு வந்துவிட்டால்?

ஆண்டவன் வந்துவிடக்கூடும் என்ற அச்சம் ஏற்படுமானால் அக்கிரமம் செய்திட நேரம் கிடைக்குமா! அக்கிரமம் செய்தாக வேண்டுமே, சுயநலம் ஆட்டிப் படைக்கிறதே!! அத்தகையவன் எப்படி ஆண்டவன் எந்த நேரத்தில் வந்தாலும் சரி, வந்தால் போதும் என்று கருதுவான். நான் வேண்டும்போது வரவேண்டும்! - என்ற முறை இருந்தால்தான் நல்லது என்றுதான் எண்ணிக் கொள்வான்,

அந்தவிதமான நோக்கத்தின் அடிப்படையிலேதான் அப்படி ஒரு பாடல் எழுதப்பட்டிருக்க வேண்டும் என்று கூறவில்லை; நான் அற்பனுமல்ல, அடாவடிப் பேர்வழியுமல்ல; நான் சொல்லுவது, ஒருவர் வேண்டும்போதுதான் ஆண்டவன் வரவேண்டும் என்ற முறை இருக்கக்கூடாது,

ஆண்டவன் வர வேண்டிய அவசியம் ஏற்படும்போது, வரவேண்டும் என்ற முறை இருக்க வேண்டும் என்பது, நாம் அழைக்கும்போதுதான் அவர் வர வேண்டும் என்ற முறை இருப்பதைவிட, எந்த நேரத்திலும், அவர் விரும்பியபோது வருவார் என்று முறை இருந்தாலாவது ஒரு அச்ச உணர்ச்சி மனிதனைத் தவறு செய்யவிடாது தடுக்கக் கூடும்.

தீதான எண்ணங்கள் முளைத்திடும்போது, ஆகாத வழியினில் நடந்திட முனைந்திடும்போது அடுத்துக் கெடுத்தாலும் ஆதாயம் தேடிடலாம் என்ற கெடுமதி பிறந்திடும் போது, மற்றவர்க்குக் கொடுமை விளைவிக்கக் கிளம்பும்போது, நேரமறிந்து, நமது பிறவியிலே ஒருவன் தவறு இழைக்கப் போகிறான். அதனால் பலருக்கு கேடு விளைந்து சமூகம் பாழ்படப் போகிறது

என்று அறிந்து செல்வோம்! அவனைத் தடுத்திடுவோம்! என்று ஆண்டவன் வந்திடும் முறை மட்டும் இருந்திடின் தம்பி! இத்தனை கொடுமைகள், அநீதிகள் நெளிந்து கொண்டிருக்க முடியுமா!

ஆண்டவன் அத்தகைய நேரங்களில் வராதது மட்டுமல்ல, வரக்கூடாது என்று எண்ணுபவர்களாகவன்றோ, கெடுமதியினர் உள்ளனர். இந்த நிலையில், ஒருவர் வேண்டும்போதுதான் ஆண்டவன் வரவேண்டும் என்ற ஒரு நிலையும் நிலைத்திடின், அது அக்கிரமக்காரர்களுக்கு அல்லவா கொண்டாட்டமாகி விடும்!

இதனை எண்ணிடும்போதுதான், எனக்கு வியப்புடன் திகைப்பும் பிறந்தது. ஆண்டவனை வேண்டுபவர்கள், நான் அறிவை இழந்திடும் வேளையில், அறத்தை மறந்திடும் போதினில், அக்கிர மத்தைச்

செய்ய முனைந்திடும் நேரத்தில், ஆண்டவனே! வந்திடு! என்னைத் தவறான பாதையிலே போகாதபடி தடுத்திடு! என்று இறைஞ்சிட வேண்டும். அல்லவா?

ஆனால், அந்த நிலை இருப்பதாகத் தெரியவில்லையே தம்பி! என்ன செய்வது!!

அக்கிரமம் நெளிகிறது; அநீதி தலைவிரித்தாடுகிறது, கொடுமை கொக்கரிக்கிறது; கொட்டு முழக்குடன் திருவிழாக்களும் நடக்கின்றன! சித்தம் உருகப் பாடிடுவோருக்கும் பஞ்சமில்லை, செய்த வினையெல்லாம் பொறுத்திடுவாய் சேவற்கொடி யோனே! என்று பஜனை பாடிடுவோருக்கும் குறைவு இல்லை. களவும் நடந்தபடி இருக்கிறது, காவல் நிலையமும் புதிது புதிதாக அமைகிறது என்பது போலவேதானா கொடுமையும் இருக்கிறது கோயில்களில், பூஜைகளும் குறைவின்றி

நடக்கின்றன என்று இருந்து வருவது!

கடவுளைப் பற்றிய எண்ணம், நம்பிக்கை, அதன் அடிப் படையில் எழும் வழிபாட்டு முறைகள், எதற்குப் பயன்படா? கொடுமைகளைத் தடுத்திட அல்லவோ! கொடுமை புரிந்திடும் கெடுமதியைச் சுட்டுப் பொசுக்கிட அல்லவோ பயன்பட வேண்டும்! பயன்படக் காண்கின்றோமா? இல்லையே! நீண்ட நெடுங்காலமாகவே, ஆண்டவன், ஒருவர் வேண்டும்போதுதான் வருவது என்ற முறைப்படிதான் நடந்து கொண்டு வருகிறாரோ? இல்லையென்றால், சூதும் சூழ்ச்சியும், வஞ்சகமும் கொடுமையும், பொய்யும் புரட்டும் கொலையும் களவும் இந்த அளவு தலைவிரித்து ஆடிடச் செய்திடும் கொடியவர்களின் கொட்டத்தை எப்போதோ அடக்கி விட்டிருக்கக் கூடுமே. காணோமே!

மனம் உருகி, உள்ளன்புடன் நீ

முறையிடும்போது ஆண்டவன் வந்திடுவார் என்ற பக்திப் போதனையைத் தம்பி! ஆண்டவன் எப்போது வேண்டுமானாலும் வந்திடுவார், அவர் வரமாட்டார், காணமாட்டார் என்ற எண்ணத்தில். அக்கிரமம் செய்திடத் துணியாதே! பாதை தவறிடும்போது, ஆண்டவன் வந்து நிற்பார், கேட்பார்! - என்ற விதமாக ”பக்தி’ போதனை வெற்றிகரமாக நடைபெற்றிருந்தால் கூட, உலகிலே இத்தனை அக்கிரமம் நெளிந்து கொண்டிருக்காது.

ஆண்டவனைப் பற்றிய எண்ணம், நம்பிக்கை, அறநெறி நடந்திட, அனைவரையும் அன்புடன் நடத்திட, சுயநலத்தை ஒழித்திடப் பயன்படுத்தப்பட்டிருக்குமானால் கொலையும் கொள்ளையும், காமச்சேட்டையும் பிறவும் பெருமளவும் குறைந்திருக்குமே!

அதற்கு எங்கே பயன்படுத்தினார்கள் கடவுட் கொள்கையை, நம்பிக்கையை!

கோயில்கள் கட்டவும் குளங்களை வெட்டவும், வே-கள் விடவும் செல்வம் குவிக்கவும், பூஜைகள் நடத்தவும், அதற்கான படையினை வளர்க்கவும், அற்புதம் கூறவும் அதற்கான கதைகளைக் கட்டவும், மகிமை பேசவும் காணிக்கை கேட்கவு மான காரியங்களுக்குத்தானே பயன்படுத்தி வந்தனர்.

அதனால் வளர்ந்தது என்ன? ஒருபுறம் அக்கிரமக்காரனின் கொட்டம் அடங்காது நின்றது! மற்றோர்புறம் அர்ச்சனையும் ஆராதனையும் சிறப்புடன் நடைபெற்று வந்தன!

பலவற்றிலே மறுமலர்ச்சிக் கருத்துக்கள் தோன்றியது போலவே கடவுட் கொள்கையும் நம்பிக்கையும் எதற்குப் பயன் படுதல் வேண்டும், எம்முறையில் வடிவம் பெற வேண்டும் என்பதிலேயும், மறுமலர்ச்சி,

புது எழுச்சி தோன்றிடத்தான் வேண்டும். தோன்றும் என்பதற்கான அறிகுறியில் ஒன்றாகவே கல்லூரியை நான் கருதிக் களிப்புற்றேன்.

கடவுட் கொள்கையும் நம்பிக்கையும் மக்களை நல்ல நெறியிலே அழைத்துச் செல்வதற்காகத்தான் என்று கூறப்படுவது முழு உண்மையாக இருக்குமானால், நல்ல நெறி பற்றியும், அதன்படி ஒழுகிவருவதால் தனி மனிதனும் சமூகமும் அடைந்திடும் ஏற்றம் குறித்தும் வலியுறுத்தும் விதமான நடவடிக்கைகளை மேற்கொண்டிருப்பார்கள்; ஆனால். நடைபெற்றுக் கொண்டிருப்பது அஃது அல்ல, வீண் விரயம், வெற்றொலி நிரம்பிய ஆரவாரம், விரும்பத்தகாத சடங்குகள், அவைகளுக்கு விசித்திரமான விளக்கங்கள் ஆகியனவற்றிலே மூழ்கிக் கிடக்கின்றனர். இது எற்றுக்கு என்று

கேட்டிடுவோர்கள் மீதோ, பாய்கின்றனர், காய்கின்றனர்; கடவுள் மீது நம்பிக்கை இல்லையோ என்று கடாவுகின்றனர். கடவுள் நம்பிக்கைக்கும் கடவுள் பெயர் கூறி நடத்தப்பட்டுவரும் நானாவிதமான காரியங்களுக்கும் பொருத்தமோ பொருளோ இருப்பதாகக் கூற முடிகிறதா? மெய்ப்பிக்க முடிகிறதா என்றால் முடிவதில்லை. ஆனால், எத்தனை மோசமான மூடநம்பிக்கையாக இருப்பினும், அதனை விடாப்பிடியாகக் கட்டிக்காத்து வருவதிலே எத்தனை தீவிரம் காட்டுகின்றனர்! என்னென்ன காரணங்களைக் சுட்டிக் காட்டுகின்றனர். மறுத்துப் பேசிடுவோர் மீது எத்தனை கடுங்கோபக் கணைகளை வீசுகின்றனர்! பழைய விளக்கங்கள் புதிய அறிவு வளர்ச்சி காரணமாகப் பொய்த்துப் போகக் காணும்போது, அலறித் துடிதுடித்து பதறிப்

பதைபதைத்து, பொய்த்துப் போனதை விட்டுத் தொலைப்போமே என்ற துணிவு பெற்றிட முடியாமல் திகைத்து புதிய விளக்கம் ஏதேனும் கிடைத்திடாதா என்று தேடித் தேடி, ஏதேனும் ஒன்றினைக் கண்டதும், அதனைக் கெட்டியாகப் பற்றிக் கொண்டு வந்து காட்டி, இதோ விளக்கம்! எமது கோட்பாட்டினை மெய்ப்பிக்க வல்ல விளக்கம்! என்று புது உற்சாகத்துடன், புதுப்பிக்கப்பட்ட நம்பிக்கையுடன் பேச முற்படுகின்றனர். இவை காட்டிடும் பாடம் யாதெனில், ஓர் புத்துணர்ச்சி பூத்துக் கொண்டு வருகிறது என்பதுதான்.

தம்பி! விடியும் வேளையில் கருக்கலும் கப்பிக் கொண்டி ருக்கும், இமையைத் தூக்கமும் அழுத்திட முனைந்திடும், அதேபோது காரிருளைப் பிளந்து கொண்டு கதிரொளி கிளம்ப முற்படும், தூக்கத்தின் அழுத்தத்தைத் தூக்கி எறிந்துவிட்டு, விழிமலர்

புத்தொளி கண்டிட முற்படும். மிகப் பலரின் மனம் இன்று அந்த ”விடியற்காலை’ நிலையிலே உள்ளது, இமையை அழுத்திட முற்படும் தூக்கத்தைப் போல, மீண்டும் மூடுபனி படர்ந்திடச் செய்திடும் முயற்சியிலும் சிலர் வெகு மும்முரமாக ஈடுபட்டுள்ளனர். இவ்வளவுக்கும் இடையிலே குறிப்பிடத்தக்க வெற்றிகள், புதுமைகள் கிடைத்தபடி உள்ளன. இங்கு மட்டுமல்ல, தம்பி! உலகெங்கணும்.

ஏசுபிரானைக் காட்டிக் கொடுத்தவன் ஜூடாஸ். அவன் ஒரு யூதன்; அதன் காரணமாக யூத இனமே சபிக்கப்பட்ட இனமாகக் கருதப்பட்டு, ஜூடாஸ் தேடிக்கொண்ட பாபம் யூத இனத்தின் மீது படர்ந்திருப்பதாகக் கருதப்பட்டு, யூத இனத்தவர்கள் மீது பகையும், வெறுப்பும் காட்டிடவும், கொட்டிடவுமான நிலை, தேவையற்றது, பொருளற்றது; புனிதமானது ஆகாது என்று கூறவும் அஞ்சினர் சென்ற

ஆண்டு வரை - ஏன்! சென்ற திங்கள் வரையிலும் கூட அந்த எண்ணம் இருந்து வந்தது. ஜுடாசின் செயலுக்காக, ஒரு இனம் முழுவதும் பழியினை ஏற்க வேண்டுமா, பாபாத்மாக்களாகக் கருதப்பட வேண்டுமா என்று கேட்டிடத் துணிபவனை மன்னிக்க முடியாத குற்றம் செய்தவனாகவே அருளாலய அதிபர்கள் கருதி வந்தனர் யூத இனத்தின் மீது பகையும் வெறுப்பும் கப்பிக் கொண்டதற்கும், அதன் காரணமாகப் பல்வேறு நாடுகளில் மக்களும் அரசும் யூதர்களைக் கொடுமைக்கு ஆளாக்கி வந்ததற்கும், வேறு அரசியல், பொருளியல் காரணங்கள் இருந்தன என்றாலும் வெறுப்புக்கான அடிப்படைக் காரணம், யூத இனத்தவன் ஜுடாஸ், அவன் ஏசுவைக் காட்டிக் கொடுத்தவன் என்பதுதான், கிட்டத்தட்ட ஈராயிரம் ஆண்டுகளாக இருந்துவந்த இந்த அழுத்தமான

நம்பிக்கையை, கத்தோ-க்க மார்க்கத்தின் இணையற்ற தலைவராம் போப்பாண்டவர் சென்ற மாதம் தேவையற்றது, என்று கூறி நீக்கிவிட்டார், குற்றம் இழைத்தவன் ஜூடாஸ்; கொடுமையை அனுபவிக்க வேண்டியவர்கள் யூத இனத்தவரோ, ஏன் இது என்று கேட்டு இனி யூத இனத்தைப் பகைத்திடும் செயல் ஆகாது என்று ஆணை பிறப்பித்து விட்டார். யூத இனம் பழி துடைக்கப்பட்ட, மன்னிப்புப் பெற்று விட்ட இனமாகிவிட்டது. இனி அந்த இனத்தவரின் வேறு நடவடிக்கைகள் அல்லது நிலைமைகள் காரணமாக, பகையும் வெறுப்பும் இங்குமங்குமாக எழலாம் - ஏற்கனவே அரபுக்கள் யூதர்களின் மீது பகை கக்கி வருகின்றனர் - ஆனால், அந்தப் பகைக்கும் வெறுப்புக்கும் காரணம், ஜூடாஸ் ஏசுவைக் காட்டிக் கொடுத்ததை எண்ணி என்பதனை இனி வலியுறுத்திட

இயலாது, கூடாது என்று ரோம் ஆணை பிறப்பித்துவிட்டது.

யூத இனத்தின் மீது கடந்த ஈராயிரம் ஆண்டுகளாக ஏற்றப்பட்டிருந்த பழி துடைக்கப்படும், பகை போக்கப்படும் என்று யார் கருதிட முடிந்தது. ஆனால் நடைபெற்று விட்டிருக் கிறதே!! எத்தனை பெரிய மாறுதல்.

பழங்காலக் கோட்டைகள் காலத்தால் கலனாகி இருந்திடும் இடம் என்ற நிலையினை இழந்த பிறகும், நெடுங் காலம், கோட்டை வடிவத்துடன் நின்று காட்சி தரும்! இங்கொரு வெடிப்பு, அங்கொரு விரிசல், என்ற முறையில் தொடர்ந்து சேதம் வளர்ந்தபடி இருக்கும். சேதம் மிகுந்த நிலையிலேயும், அடியோடு வீழ்ந்திட மாட்டேன் என்று ஆர்ப்பரித்திடுவது போல நின்று காட்டும். பழங்காலந்தொட்டு இருந்து வரும் பல எண்ணங்களும் ஏற்பாடுகளும்,

தத்துவங்களும் அவற்றினுக்கான விளக்கங்களும், இன்று அத்தகைய கோட்டைகளைத்தான் நினைவுபடுத்து கின்றன - எனக்கும் உனக்கும், அவ்விதந்தானே தம்பி! தோன்று கிறது? இதனைத்தான் கிழக்கு வெளுத்திடும் வேளை என்பார்கள்.

அன்புள்ள

அண்ணாதுரை

21-11-65

31. வானுலக வீதியிலே. . .

மக்களிடம் ஒரு மனமாற்றம்!
அறிவுப் பிரச்சாரம் தேவை!
இரண்டும் கெட்டான்கள் எள்ளி நகையாடப்படுவர்!
பழங்கதைகள் குழந்தைப் பிதற்றல்கள்!

தம்பி,

அன்று இரவு, இன்று எப்படியும் விடியற்காலை எழுந்தி ருந்து "வால் நட்சத்திரத்தை'ப் பார்த்தாக வேண்டும் என்ற எண்ணத்தை அணைத்தபடியேதான் படுக்கச் சென்றேன்; மணி நாலு என்று கருதுகிறேன், எழுந்திருந்து பார்த்தேன்; என்னைப் போலவே வேறு பலரும் வால் நட்சத்திரத்தைப் பார்த்துக் கொண்டிருக்கக் கண்டேன், பெரிதும் வியப்புற்றேன்; வால் நட்சத்திரத்தைக்

கண்டு அல்ல; அதனைப் பார்த்த மக்கள், பதறாமல் பயம் கொள்ளாமல், கைபிசைந்து கொள்ளாமல், கண்களில் மிரட்சியின்றி வால் நட்சத்திரத்தைப் பார்த்துவிட்டு, பிறகு அவரவர்கள் தத்தமது அலுவலைக் கவனிக்கச் சென்றது கண்டு!

ஐயோ! வால் நட்சத்திரம்! என்ன நேரிடப் போகிறதோ! யாருக்கு என்ன பேராபத்தோ!! - என்றெல்லாம் அலறவில்லை! ஆச்சரியமாக இருந்தது, மக்களிடம் நான் கண்ட அந்த மன மாறுதல். நான் இதைக் கூறுவது கேட்க தம்பி! உனக்கு வியப்பாக இருக்கிறது. வால் நட்சத்திரத்தைக் கண்டு மக்கள் பதறாதது பற்றி அண்ணன் ஆச்சரியப்படுகிறானே, பதறுவதற்கு இதிலே என்ன இருக்கிறது; விண்வெளியின் விந்தைகளிலே ஒன்று இது; இது குறித்து மக்கள் ஏன் பீதிகொள்ளப் போகிறார்கள் என்று கேட்டுத் துடிப்பாய்.

நான் பார்த்த மக்களை, நீ பார்க்கவில்லையே தம்பி! முப்பது ஆண்டுகளுக்கு முன்பு, வால் நட்சத்திரம் முளைக்கப் போகிறதாம் என்ற பேச்சு எழும்பியதும் பீதி கொண்டவர்கள், பதறியவர்கள் பலப்பலர்; நான் பார்த்திருக்கிறேன். அதனால் தான் இன்று சமூகத்திலே பூத்திருக்கும் மாறுதலைக் கண்டு நான் வியப்படைகிறேன்.

வால் நட்சத்திரம்!

பல நாட்களாக வால் நட்சத்திரம் முளைத்து, மக்கள் கண்டு வருகின்றனர். பலர் பார்த்தனர்; பலர் பார்க்கவில்லை. பார்த்தவர் களும் சரி, பார்த்தவர் கூறக்கேட்டவர்களும் சரி, அதிகமான அளவு பரபரப்பு அடையவும் இல்லை. பயப்பட்டு விடவுமில்லை.

“வால் நட்சத்திரம் தெரிகிறதாமே! நீ பார்த்தாயா?’’ - என்று ஒருவருக்கொருவர்

சர்வ சாதாரணமாகப் பேசிக் கொள்வதுடன் இருந்தார்களே தவிர,"ஐயோ வால் நட்சத்திரமாமே' என்று கிலி கொண்டு கூவவில்லை.

வால் நட்சத்திரம் முளைத்துவிட்டது! மகாஜனங்களே! பக்த சிகாமணிகளே! உலகுக்குப் பெரிய கேடு நேரிட இருக்கிறது. ஆகவே, ஆண்டவனின் கிருபா கடாட்சம் கிடைக்க வேண்டுமென்று உடனே அபிஷேகம் செய் யுங்கள்! ஆராதனை செய்யுங்கள்! தானம் கொடுங்கள்!!

- என்று குருமார்கள் கூறக்கூட இல்லை. மாறாக, கொடைக் கானல் ஆராய்ச்சி நிலையத்திலிருந்து அறிக்கை வெளிவருகிறது, வால் நட்சத்திரம் இன்ன திக்கு நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது; அதைக் கவனித்து வருகிறோம், படம் எடுத்திருக்கிறோம்

என்று!

படம் எடுத்திருக்கிறார்கள், வால் நட்சத்திரத்தை! நம் நாட்டில்!!

எவ்வளவு திடுக்கிடக் கூடிய மாறுதல்!

சூரிய, சந்திர நட்சத்திராதிகளைப் பற்றி இங்கு இருந்து வரும் கதைகள், கற்பனைகள் யாவும் கவைக்கு உதவாதன என்பது நடைமுறை உண்மையாகிவிட்டது - அந்தக் கதைகளுடன் சம்பந்தப்படுத்தப்பட்ட சடங்குகள் சத்தற்றவை என்பது உணரப்பட்டு, ஊராள்வோரால் நிர்வகிக்கப்படும் கொடைக் கானல் ஆராய்ச்சி நிலையத்தார் வால் நட்சத்திரத்தைப் படம் எடுத்திருக்கிறார்கள்!

விண்ணையும், மண்ணையும், காற்றையும் கடலையும், நீரையும் நெருப்பையும் தேவர்களாக்கி - ஒவ்வொரு தேவர் க்கும் தேவியர்க்கும் திருவிளையாடற்

காதைகள் கற்பனை செய்து, கவிதைகளாக்கி, ஞானக்கண்ணினரும், இனிமை பண்ணினரும் தர, அவைகளையே அழிக்க முடியாத உண்மைகள்! மாற்ற முடியாத தீர்ப்புகள்!! - என்று நம்பிக் கொண்டிருக்கும் மக்களுக்கு, வால் நட்சத்திரத்தைப் படம் கூடப் பிடித்திருக்கிறார்கள் என்பது எப்படிப்பட்ட மகத்தான செய்தி!

வால் நட்சத்திரத்தைப் படம் பிடிக்க முடியும் என்று ஒரு இருபது, முப்பது ஆண்டுகளுக்கு முன்பு சொன்னால் நம்புவதற்கு இந்த நாட்டில் ஆள் கிடையாது. வால் இல்லாத நட்சத்திரங் களைக் கூட ஆராய முடியும் என்று கூறினால், கேட்பவன் கேலி பேசுகிறாயா? என்று கேட்டிருப்பான்! முப்பது ஆண்டுகளுக்கு முன்பு!!

நமது பாட்டனார் காலத்திலே, இன்றைய அடிப்படை உண்மையை நம்ப, ஆள்கிடையாது

- பூமி சூரியனைச் சுற்றுகிறது என்று சொன்னால், பாட்டனார் பல்லிழந்த வாயைத் திறந்து, பயலே! என்னிடமா விளையாடுகிறாய்? என்றுதான் கேட்டிருப்பார்!

அப்படிப்பட்ட நாட்டில், ஒரு தலைமுறையில் மற்ற நாடுகளிலே பத்துத் தலைமுறைகளேனும் பாடுபட்டுக் கண்டுபிடித்த உண்மைகள், சர்வ சாதாரணமானவைகளாக ஆகிவிட்டன!

நமது தலைமுறை அந்த விஷயத்திலே மிகமிக வாய்ப்புப் பெற்றது என்று கூறலாம்!

நமது பாட்டனாருக்கு, "சூரியன் சுற்றுவது'' தான் உண்மை! நமது தகப்பனாருக்குச் சுற்றுவது சூரியனா, பூமியா என்ற சந்தேகம்! நமக்கு, சூரியன் சுற்றுவதாகக் கூறும் அறிவுச் சூன்யர்களும் இருக்கிறார்களே என்ற கேலி! நமது மகனோ, அவன்

மகனோ சந்திரமண்டலம் போய் வரும் நிலை பெறக் கூடும்!! மாறுதல், அவ்வளவு மகத்தான வேகத்திலும் முறையிலும் ஏற்பட்ட வண்ணமிருக்கிறது.

வால் நட்சத்திரம் முளைக்கிறது என்று கேள்விப்பட்ட வுடனே, இங்கு மட்டுமல்ல, உலகில் எல்லா நாடுகளிலுமே கிலி பிடித்தாட்டிய காலம் இருந்தது - எப்போதோ ஒரு நாள் அல்ல - 1910லில் கூட வால் நட்சத்திரத்தைக் கண்டு ஐரோப்பிய நாடுகளிலேயே, அடக்க முடியாத அச்சம்! இன்று, எப்படியோ அந்த அச்சம் அடங்கி விட்டது.

வால் நட்சத்திரத்தின் அமைப்பு, இயல்பு அது மேற்கொண் டுள்ள பயணம், செல்லும் பாதை ஆகிய இவ்வளவும் ஞானக் கண்ணினர் அல்ல, விஞ்ஞானக் கண்ணினர் கண்டு பிடித்தது.

இப்போதும் இங்கே வால் நட்சத்திரத்தின் போக்கை, நமக்குக் கூறினவர் சங்கராச்சாரியாருமல்ல, தம்பிரானுமல்ல; அவர்களின் திருப்பாதந் தாங்கிகளுமல்ல; ஆராய்ச்சியாளர்கள்! வால் நட்சத்திரத்தைப் படம் பிடித்துக் காட்டினவரும், விபூதி மகாத்மியத்தாலோ, துளசி மகிமையாலோ, அம்பிகை உபவாசத்தாலோ, அனுமத் பிரபாவத்தாலோ அல்ல, நமது மார்க்கத்தவரல்லாத, நமது நாட்டவருமல்லாத விஞ்ஞானிகள், கருத்துத் தெளிவாலும், ஆராய்ச்சித் திறத்தாலும் அமைந்துள்ள கருவியின் துணை கொண்டு, கொடைக்கானல் வானிலை ஆராய்ச்சியாளர் படம் பிடித்தனர்.

படம் பிடித்து விட்டார்களோ, படம்! என்ன பலனாம்? என்று கேட்கத் தோன்றும் பஜனைப் பிரமுகர்களுக்கு!

பயத்தைப் போக்க - அது பற்றிக் கட்டி விடப்பட்ட கட்டுக் கதைகளைப் போக்க - அதன் மூலம் அறிவு வளர்ச்சிக்கு வழி செய்ய உதவுகிறது இந்த ஆராய்ச்சி!

வைகுந்த, கைலாயப் படப்பிடிப்பாளர்களுக்கு, வால் நட்சத்திரப் படப்பிடிப்பாளர்கள் பற்றிக் கேள்விப்படும்போது கோபமாகத்தான் இருக்கும்! ஏனெனில்,

விஞ்ஞானக் கண்ணினரின் ஆக்கம் வளர வளர, ஞானக் கண்ணால் எதை எதையோ கண்டதாகக் கதைபேசிக் காலந் தள்ளும் கபந்தங்களுக்குப் பிழைப்புக் கெட்டுவிடும்!

சந்திரனைப் படம் பிடிக்கிறார்கள்; சூரியனில் உள்ள புள்ளிகளைப் படம் பிடிக்கிறார்கள்; மழையை வரவழைக் கிறார்கள் என்றெல்லாம் கேள்விப்படக்

கேள்விப்பட, எவ்வளவு காட்டானாக இருந்தாலும், அறிவிலே சிறு சிறு அளவு சுறுசுறுப்பு ஏற்படாமலா போகும்?

ஒரு புறத்திலே பூமாதேவி பற்றியும், வான வீதியிலே நாரதர் பாடிக் கொண்டு போவது பற்றியும், சந்திரனைப் பாம்பு விழுங்குவது பற்றியும், இந்திரன் ஆயிரம் கண் பெற்றது பற்றியும்; சித்திரகுப்தன் கணக்கு எழுதியபடி இருப்பது பற்றியும், சக்தியும் சிவனும் நடனம் ஆடுவது பற்றியும், இன்னும் இது போன்ற கற்பனைகளை, ஏடுகள் மூலம், பாட்டுகள் மூலம், கூத்துகள் மூலம், குருக்களின் கூச்சலின் மூலம், பாமர மக்கள் பெற்றுக் கொண்டே உள்ளனர், - நம்பும்படி நிர்ப்பந்திக்கப்படுகின்றனர்.

அதேபோது, வேறோர் புறத்தில் சந்திர மண்டல ஆராய்ச்சி, சூரியபுள்ளி பற்றிய விளக்கம், வால் நட்சத்திரப் படப் பிடிப்பு,

வானிலை பற்றிய வேறு பல ஆராய்ச்சிகள் ஆகியவற்றையும் செய்தவண்ணம் உள்ளனர்.

இந்த இரு சக்திகளுக்கும் இடையே, பாமர மக்களைத் தள்ளிப் படாதபாடு படுத்தி வைக்கிற நிலையின்றி விஞ்ஞான உண்மைகளைக் கிராமவாசியும் உணரும் அளவுக்கு அறிவுப் பிரச்சாரம் நடைபெற்றால் மிக மிக விரைவில் மக்களின் மனம் வளமாகும்.

புதுமையைப் போரிட்டுத் தடுக்க, விஞ்ஞானத்தை வேண்டாமென்று விரட்டவும் துணிவு இல்லை; விஞ்ஞானத் தால் பொய்யாக்கப்படும் பழமையை விட்டுவிடவும் துணிவு இல்லை, திறந்த வாயினராகின்றனர், விஞ்ஞானத்தின் விசேஷத் தைக் காணும்போது! ஆச்சரியத்தால் நீண்ட வாயினராகின்றனர், பழைமையைப் பற்றிப் பேசும்போது! மாதவியையும்,

கண்ணகியையும் ஒரு மனையில் வைத்துப் பரிபாலிக்கும் புதிய கோவலன்களாக இருப்பதிலே இவர்களுக்குப் பெருமகிழ்ச்சி!

புலி மீதேறி எலி வேட்டைக்கப் போவதுபோல, விமானம் ஏறிக் கொண்டு, விட்டல பஜனைக்குப் போகும் விசித்திர வான்கள் போல, இவர்கள் கொடைக்கானலில் உள்ள ஆராய்ச்சி யாளர்களையும் கேட்கிறார்கள், வால் நட்சத்திரம் பற்றிய தகவல்களைச் சேகரித்து அனுப்பு என்று; அதேபோது வரலெட்சுமி விரத மகிமை பற்றி வானொலி மூலமும் பேசுவர்.

சிலருக்கு உண்மையிலேயே சந்தேகம் - திகைப்பு - குழப்பம். "விஞ்ஞானி சொல்வதும் சரியாகத்தானிருக்கிறது; நமது பூர்வீக ஞானத்தையோ அடியோடு விட்டு விடவும் பயமாக இருக்கிறது'' என்ற குழப்பம் குடைகிறது - குடையும்போது,

சுயநலம் குறுக்கிடுகிறது. அதன் வயப்பட்டதும்,"நமக்கென்ன, இரு சாராருக்கும் நல்ல பிள்ளையாகி விடுவோம் - பகை எங்கிருந்தும் கிளம்ப வேண்டாம் - விஞ்ஞானி தருகிற டெலஸ்கோப்பையும் வாங்கிக் கொள்வோம்! சனாதனி தருகிற துளசி மாலையையும் போட்டுக் கொள்வோம்'' - என்று எண்ணுகிறார்கள்.

நாளாவட்டத்தில் இரு சாராரும் இவரைச் சந்தேகிக்கத் தொடங்குவர் என்பதையோ, இருசாராரும் இவருடைய இதய சுத்தியிலே நம்பிக்கை வைக்க மாட்டார்கள் என்பதையோ, இந்த இரண்டுங்கெட்டான் பிழைப்பு கடைசியில் இரு சாராராலும் எள்ளி நகையாடப்படும் என்பதையோ, இந்த "மேதை'கள் எண்ணிப் பார்ப்பதில்லை! "அறிவுத் தாக்குதல்' பலமாக நடந்தான பிறகே, இந்த அளவுக்காவது இவர்கள் இடம்

கொடுத்தனர்.

ஒரு காலம் இருந்தது, பிடிவாதமாகப் பொய்யை உண்மை எனக் கொண்டு, மெய் உரைக்கத் துணிந்தவர்களைக் கொடுமைப் படுத்திய காலம்,

இயற்கையின் கோலங்களிலே, அடிக்கடியும் நிரந்தர மாகவும் உள்ளவற்றைப் பற்றிப் பல கதைகள் கட்டி வைத்தனர். வால் நட்சத்திரங்கள் அடிக்கடி தோன்றுவனவல்ல - ஆகவேதான், புராணக் கதைகள் இல்லை; வால் நட்சத்திரம், பார்வதியின் ஜடை முடியிலே உள்ள ஒரு பட்டுத் துண்டு, அல்லது பரமசிவனின் நெற்றிக் கண்ணிலிருந்து புறப்பட்டு அடங்கும் ஒலி அம்பு என்று ஏதும் கதை கட்டவில்லை!

வால் நட்சத்திரங்களைக் கண்டு கிலி கொண்டு மக்கள்

அல்லோலப்பட்டிருக்கின்றனர் முன்னாளில்!

1832-ம் ஆண்டு, தோன்றிய வால் நட்சத்திரத்தால், பூமியே அழிந்துபடும் என்று பயந்து வீடு வாசல், உடைமை களை விற்று விட்டுப் பலர், மாதா கோவில்களிலே போய்த் தங்கிவிட்டனர் - இறக்கும்போது இறைவன் சந்நிதியிலே போய் இறப்போம் - என்று!

வால் நட்சத்திரம் வந்தது! மறைந்தது!! உலகம் அழியவில்லை! உடனே மாதா, கோவில் இவைகளின் மீதல்ல - குறைந்த விலைக்கு விற்றுவிட்ட மனை, மாடு, மணி, இவைகள் மீது சிந்தனை சென்று, சோகித்தனராம்! ஐரோப்பாவில்!!

வால் நட்சத்திரம் முளைக்கிறது என்றால், வந்தது விபத்து என்று முடிவு செய்வர், முன்னாளில்.

மாதா கோவில்களில் மணி ஓசை

கிளம்பும்! ஜெப மாலைகளுக்கு அதிகமான கிராக்கி ஏற்படும்! தான தருமம் செய்வாராம்! பாவத்தை மன்னிக்கும்படி குருமார்களிடம் கெஞ்சுவார்களாம்!! ஆலயமணி அடித்தவண்ணமிருந்தால், வால் நட்சத்திரம் கேடு ஏதும் செய்யாமல் போய்விடும் என்று நம்பி பூஜையை இடைவிடாது செய்வாராம்!

மிகப் பழங் காலந்தொட்டு, வால் நட்சத்திரம் உலக மக்களை இவ்வளவு மிரட்டி இருக்கிறது. எனினும் விஞ்ஞானம், அஞ்சாது படையெடுத்து, இந்தப் "பயமூட்டி'யைப் படம் எடுத்துத் தந்துவிட்டது.

ஞானக் கண்ணினர் கூறினர், "அதோ பார்! வால் நட்சத்திரம்! ஆண்டவனின் சீற்றம்! அழிவு வருகிறது என்பதைக் காட்டும் அறிகுறி'' என்று. விஞ்ஞானக் கண்ணினர் கூறுகின்றனர்,"வால் நட்சத்திரம், கிரஹங்களைப் போலவே, சூரியனைச் சுற்றி

வருகின்றது. நீண்ட கோழிமுட்டை வடிவில், அது செல்லும் பாதை, அமைந்திருக்கிறது, அஞ்சாதே! வால் நட்சத்திரங்கள் ஒன்று, இரண்டல்ல; ஓராயிரம், ஈராயிரமல்ல! சூரிய மண்டலத் திலே இலட்சத்துக்கும் மேற்பட்ட வால் நட்சத்திரங்கள் உள்ளன. ஒவ்வொன்றும் வெவ்வேறு பாதைகளில் சுற்றி வருகின்றன ஒரு முறை பயணம் செய்து திரும்ப, ஒவ்வொரு வால் நட்சத்திரத்துக்கும், வெவ்வேறு கால அளவு பிடிக்கும். சில வால் நட்சத்திரங்கள், மூன்றரை வருடத்தில் சூரியனைச் சுற்றி வரும்; சில வால் நட்சத்திரங்கள் 10 லட்சம் ஆண்டுக்காலம் பிடிக்கும் சுற்றிவிட்டு வர!'' என்று.

இந்த முடிவுகளுக்கு ஆதாரங்களை, ஆராய்ச்சிகளை விஞ்ஞானிகள் கூறுகின்றனர். எப்படி படிப்படியாகச் சென்று இந்த உண்மைகளைக் கண்டறிய முடிந்தது

என்பதையும் விளக்கியுள்ளனர்.

முதலிலே, யாருக்குமே புரியத்தான் இல்லை, வால் நட்சத்திரம் எங்கிருந்து கிளம்புகிறது? எங்கே போகிறது? எப்படி மறைகிறது? அதன் இயல்பு என்ன? என்பதெல்லாம்!

வால் நட்சத்திரங்கள் சீன ராஜ்யம், ஜெருசலம் சாம்ராஜ்யம், கிரேக்க ரோம் சாம்ராஜ்யங்கள் ஆகியவை ஜோ-ப்புடன் இருந்த நாட்களிலேயும் தோன்றின. ஆராய்ச்சி யாளர்கள் கி.மு, 48லில், கி.பி. 69லில், கி.பி. 79லில், கி.பி. 451லில், கி.பி 455லில், கி.பி. 1000லில் கி.பி. 1076லில், கி.பி. 1456லில், கி.பி. 1832லில், கி.பி. 1910லில் என்று இப்படிப் பல தடவைகள் தோன்றிய வால் நட்சத்திரங்களைப் பற்றிய ஆராய்ச்சிகளை அறிவு மன்றத்துக்கு அளித்திருக்கிறார்கள்.

இவை தோன்றிய ஒவ்வொரு சமயத்திலும், ஏதேனும் ஒருவகை அழிவு நேர்ந்திருக்கிறது உலகில். ஒரே பேரரசனின் மரணம், பெருவெள்ளம், பெருநெருப்பு, படையெடுப்பு, சாம்ராஜ்யச் சிதைவு என்பன போன்ற ஏதேனும் ஒன்று நடைபெற்றுள்ளன - வால் நட்சத்திரத்தைப் பற்றி மட்டுமல்ல, பொதுவாகவே வானநிலை பற்றிய ஆராய்ச்சியே உருவடையா திருந்த காரணத்தால், இந்தச் சம்பவங்களுக்கும், வால் நட்சத்திரம் தோன்றியதற்கும் தொடர்பு வைத்து, இதனால்தான் அது என்று மக்கள் நம்பினர்.

உலகிலே, மக்கள் மனத்தை உலுக்கக் கூடிய எவ்வளவோ விபத்துக்கள் ஏற்பட்டபோதெல்லாம் வால் நட்சத்திரம் வந்ததில்லை. விஞ்ஞானி பிறகு கூறினான்; ”வால் நட்சத்திரத் திற்கும் விபத்துக்கும்

சம்பந்தமில்லை; அஞ்சாதே!'' - என்று.

வால் நட்சத்திரத்தை, பூமியிலிருந்து புறப்படும் புகையென்று அரிஸ்டாடில் கூறினார். அவர் அறிஞர்தான்; ஆயினம், அவரே அதுபோலக் கூறிவிட்டாரே! சும்மா இருந்து விட்டனரா?

இல்லை; அவர் அறிந்தது அவ்வளவுதான் - நாம் ஆராய்வோம் என்று எண்ணினர். ரோம் நாட்டு அறிஞர் செனகா, ஒரு படி முன்னேறினார். "முன்கூட்டியே சொல்ல முடியும், வால் நட்சத்திரம் எப்போது வருமென்பதை'' என்று சொன்னார்.

விஞ்ஞான முறையிலே, வால் நட்சத்திரத்தைப் பற்றி ஆராய்ந்தவர் ஹா- என்பவர். அவர், 1682லில் தோன்றிய வால் நட்சத்திரம் சூரியனைச் சுற்றிவிட்டு 76 ஆண்டுகள் கழித்து, மீண்டும் தோன்றும்

என்று கூறினார். அதன்படியே 1759லில் வால் நட்சத்திரம் வந்தது!

ஹாலி, 1682லில் தோன்றிய வால் நட்சத்திரம், இவ்வண்ணம் இயல்பு கொண்டது; அது 1759லில் மீண்டும் தோன்றும்; கவனித்துப் பாருங்கள் - என்று கூறினார்.

யாரும் நம்பவில்லை, அவரும் இறந்துவிட்டார். அனால் அவர் சொன்னபடி 1759லில் வால் நட்சத்திரம் தோன்றிற்று. மக்கள் அவர் அறிவை வியந்தனர் - விஞ்ஞானத்தைப் போற்றினர். அந்த வால் நட்சத்திரத்துக்கு ஹாலி வால் நட்சத்திரம் என்று பெயரிட்டனர்.

பிறகு வால் நட்சத்திரத்தைப் பற்றிய விவரமான ஆராய்ச்சிகள் தொடர்ந்து வெளிவரலாயின.

ஹா- வால் நட்சத்திரம், 1682லில்

ஒருமுறை தோன்றி, 76 ஆண்டுகள் பயணம் செய்து சூரியனைச் சுற்றிவிட்டு 1759லில் அது மீண்டும் வந்தது மட்டுமல்ல; அது மறுமடியும் மறுபடியும் அந்தக் குறிப்பிட்ட கால அளவில் வருவதையும் ஆராய்ச்சி யாளர்கள் கண்டறிந்தனர்.

1910லில் ஹா- வால் நட்சத்திரம் வந்தது - மீண்டும் 1986லில் ஹா- வால் நட்சத்திரம் வரும் என்று குறித்து வைத்திருக்கிறார்கள்.

வால் நட்சத்திரம், விஞ்ஞானக் கண்களுக்கு மிக வசீகரமான தோற்றத்துடன் காட்சி அளிக்கிறது. பலவித வர்ணங்கள் உள்ளனவாம்! கண் கூசும் ஒளியாம்! இருண்ட வெளியிலிருந்து கிளம்பிச் சூரியனைச் சுற்றிக் கொண்டு செல்கிறதாம்!

வால் நட்சத்திரத்தின் தலைப் பகுதி 30,000-லிருந்து 1,50,000 மைல் வரை இருக்குமாம்!

வால் சிலவற்றுக்கு 10 கோடி மைல் நீளமாம்! சிலவற்றுக்கு 20 கோடி மைல் நீளமாம்.

சூரியனிலிருந்து பலப்பல கோடி மைல்களுக்கு அப்பால் சென்று, வால் நட்சத்திரம் திரும்புகிறது.

1811லில் தோன்றிய வால் நட்சத்திரம், சூரியனிலிருந்து 1000 கோடி மைல் தூரம் சென்று திரும்ப மீண்டும் 3000 ஆண்டுகள் பிடிக்குமாம்! இது தன் பயணத்தை முடிக்க!! மறுபயணத்தைத் துவக்க, அதாவது இந்த வால் நட்சத்திரம் மீண்டும் 4811லில் தோன்றும்.

காற்றைவிட மிக இலேசான பொருள் வால் நட்சத்திரம்.

இவ்வளவு விஞ்ஞான உண்மைகளுக்கும் ஆதாரங்கள் உள்ளன.

படமும் எடுத்து வைக்கப்பட்டிருக்கிறது.

சீனப்புராணிகர்கள், வால் நட்சத்திரங்களை மேலுலக அரசியல் தூதுவர்களாகக் கருதினர். பூலோகம் போலவே வானலோகம், பல நாடுகள் கொண்டதாக இருப்பதாகவும் பூலோக நாடு ஒவ்வொன்றுக்கும் வானலோகத்தில் ஒரு பிரதிநிதி இருப்பதாகவும் பூலோக நாட்டின் கதியை அங்கே நிர்ணயிப்பதாகவும் அவர்கள் கற்பனை செய்து கொண்டனர்.

வான மண்டலத்திலே கிரகங்கள் ராஜாக்கள்! நட்சத்திரங்கள் மந்திரிகள்! வால் நட்சத்திரங்கள்தான் அரசியல் தூதுவர்கள்!! கற்பனைக் கதைகளின் மீதுதான் கடவுள் கொள்கை கட்டப்பட வேண்டும் என்ற எண்ணமே, இன்று, அறிவுலகில் எள்ளி நகையாடப்படும் அளவுக்கு மக்கள் உள்ளம் பண்பட்டிருக்கிறது. விசித்திரமான உருவங்கள், விதவிதமான செயல்கள்

இருந்தாக வேண்டும் தெய்வத்துக்கு என்ற எண்ணம் முறியடிக்கப்பட்டு விட்டது. பழைய கற்பனைக் கதைகளை மனித சமுதாயத்தின் குழந்தைப் பருவப் பிதற்றல்கள் என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

வானத்திலே உலவும் மேகங்கள், மின்னும் நட்சத்திரங்கள், ஒளியை அள்ளித் தரும் நிலவு போன்றவைகள், குழந்தையின் உள்ளத்திலே எத்தனையோ விதவிதமான எண்ணங்களை எழுப்புகின்றன மழலை மொழியிலே ஏதேதோ கூறுகிறது. மனித சமுதாயத்தின் குழந்தைப் பருவத்திலே, இதே நிலைதான்!

மழலை கேட்டு இன்புறும் தாய் குழந்தை வாலிபனான பிறகும், சந்தமாமாவைப் பிடித்துத் தா!! என்று கேட்டால், மகிழ முடியுமா? மருள்வாள் தாய்; மகனுக்கு ஏதோ மனமருள் என்று! அதுபோலத்தான் மனித சமுதாயம், முறுக்கேறிய வா-பப் பருவம்

பெற்றிருக்கும் இந்நாளிலே, குழந்தைப் பருவத்துக் கதைகளை, கற்பனைகளைக் கூறிக் கொண்டும், நம்பிக் கொண்டும், அந்த நம்பிக்கையையே அடிப்படையாகக்கொண்டு வாழ்க்கையை அமைத்துக் கொண்டும், அப்படிப்பட்ட வாழ்க்கைதான் ஆஸ்திகம் என்று பேசிக்கொண்டும், அதனைச் சந்தேகிப்பது பாபம் என்று மிரட்டிக் கொண்டும் இருந்தால், மகிழ்ச்சியா பிறக்கும், மதியுள்ளவர்களுக்கு!

அன்புள்ள

அண்ணாதுரை

5-12-65

32. கனிவும் கசப்பும் - (1)

பேச்சுரிமையின் அவசியம்
நெருக்கடி நிலைக்கு முன்னும் பின்னும்
அச்சமற்ற மனப்போக்கு - சூழ்நிலை தேவை.
பேச்சுரிமை தந்து பொதுத் தேர்தல் நடத்துக !

தம்பி,

மூன்று சர்ஜன்கள் கூடிப் பேசும் வாய்ப்பு ஓரிடத்தில் ஏற்பட்டதாம் - ஒருவர் பிரிட்டனைச் சார்ந்தவர். மற்றொருவர் அமெரிக்காவைச் சார்ந்தவர், மூன்றாமவர் ர□யர்ன்வச் சார்ந்தவர். மருத்துவத் துறைப் பிரச்சினைகள் பற்றி, அதிலும் குறிப்பாக "அறுவை' முறை பற்றிப் பேச்சு எழுந்தது.

அறுவைச் சிகிச்சையிலேயே மிகக் கடினமானது இருதய அறுவைதான் என்றார் பிரிட்டிஷ் சர்ஜன்.

இல்லை! அதைவிடக் கடினம் மூளையிலே செய்யப்படும் அறுவை என்றார் அமெரிக்க மருத்துவர்.

இவை இரண்டையும் விடக் கடினமானது "டான்சல்' (தொண்டையில் வளரும் சதை) அறுவை என்று ர□ய சர்ஜன் கூறினார். பிரிட்டிஷ், அமெரிக்க அறுவை நிபுணர்கள் வியப்பால் அதிர்ச்சி அடைந்தனர். அறுவையிலேயே, மிக எளிதானது, ஆபத்தற்றது, டான்சல் அறுவை; அவ்விதமல்லவா மருத்துவ முறை ஏடுகள் தெரிவிக்கின்றன; நடைமுறையிலும் அது விளக்கமாக இருக்கிறதே; இவர் என்ன"டான்சல்' அறுவைதான் மிகக் கடினம் என்று கூறுகிறாரே என்று வியப்படைந்தனர். அதைப் புரிந்து கொள்ளாமலில்லை, ரஷிய மருத்துவர்.

"டான்சல்' அறுவையை நாங்கள் காது

வழியாகத்தான் செய்ய வேண்டி இருக்கிறது. ஏனென்றால், எங்கள் நாட்டிலே மக்கள் வாய் திறப்பதில்லை என்று கூறினார் ர□ய மருத்துவர். உட்பொருளை உணர்ந்துகொண்ட மற்ற இரு மருத்துவ வித்தகர்களும் விழுந்து விழுந்து சிரித்தார்கள்.

இப்படி ஒரு நகைச்சுவைக்கான துண்டு கூறப்பட்டிருக் கிறது; நகைச்சுவைக்காக மட்டுமல்ல, மறைமுகமாக சோவியத் ர□யர்மக்ஒ எதிர்ப்புப் பிரசாரம், இதிலே தொக்கிக் கிடக்கிறது. சோவியத் ர□யர்விலே மக்களுக்குப் பேச்சுச் சுதந்திரம் கிடையாது, அச்சத்தால் வாய் மூடிக்கிடக்கிறார்கள் என்று இடித்துரைக்கக் கட்டிவிடப்பட்ட துணுக்கு.

வாயைத் தாராளமாகத் திறந்தால்தான், எளிதாகத் தொண்டையிலே வளரும் சதையை வெட்டி எடுக்க முடியும்; வாயைத் திறக்கவே மறுத்தால்? அல்லது இயலாமற்

போய்விட்டால்? காது வழியாகத்தான் கருவியைச் செலுத்தித் தொண்டையில் வளர்ந்துள்ள சதையை அறுத்தெடுக்க முடியும்.

இவ்விதம் கூறியிருப்பது மருத்துவ முறைபற்றிய விளக்கம் தர அல்ல; பிரிட்டன், அமெரிக்கா போன்ற இடங்களில் மக்களுக்குத் தரப்பட்டுள்ள பேச்சுச் சுதந்திரம், ரஷியாவிலே கிடையாது, அங்கு மக்கள் வாயில்லாத பூச்சிகளாகி விட்டுள்ளனர் என்று கேலி பேசி, அரசியல் பிரச்சாரம் நடத்தவேயாகும்.

தம்பி! இதனை நான் கூறுவதற்குக் காரணம், சோவியத்தில் பேச்சுரிமை இல்லை என்று கண்டிக்கக்கூட அல்ல; பேச்சுரிமை எத்தனை அடிப்படையானது என்பதற்கான பொருள் இந்தத் துணுக்கிலே இருந்து பெறமுடிகிறது என்ற காரணத்தாலேதான்.

எத்தகைய அரசு முறையிலே பேச்சுரிமை

வளமாக இருக்கும், எவ்விதமான ஆட்சிமுறையிலே மக்கள் வாய் பொத்திக் கிடக்க வேண்டி நேரிடுகிறது என்பது பற்றிய விவரம் கூறவும் ஒப்பிட்டுக் காட்டவும் முனையவில்லை. நான் கூற விரும்புவது, பேச்சுரிமை என்பது பற்றிய பொதுவான, முக்கியமான கருத்துக்களை.

பல பிரச்சினைகளைப் பற்றியும், பல பிரச்சினைகளிலே இயல்பாகவே எழுந்திடும் கருத்து வேற்றுமைகளைப் பற்றியும், எடுத்துப் பேசிடும் உரிமை வெகுவாகக் குறைக்கப்பட்டிருக்கும் நேரம் இது; இந்த நேரத்தில் பேச்சுரிமை பற்றிக் கருத்துரைப்பது தேவையா என்று எவரேனும் கேட்டிடின், தம்பி! நெருக்கடி நிலையின் போதும் பேச்சுரிமை தந்தே ஆக வேண்டும் என்று வற்புறுத்த அல்ல; ஆனால், கேடு கக்கிடும் நிலை எழாதபோது, சாதாரண நாட்களில் பேச்சுரிமை இருந்தாக

வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தவே இதனை எழுதுகிறேன் என்பதை எடுத்துக் கூறிட வேண்டுகிறேன்.

நெருக்கடி நிலையின்போது, பேச்சுரிமையைக் கட்டுப்படுத்துவது, அளிக்க மறுப்பது என்பது ஒன்று; பேச்சுரிமையைக் கட்டுப்படுத்தவும், மறுத்திடவும், பறித்திடவும் சூழ்ச்சி மேற்கொண்டு, நெருக்கடி! நெருக்கடி! என்று சவுக்கடி கொடுக்க முற்படுவது முற்றிலும் வேறானது.

இந்த இரண்டுக்கும் உள்ள வித்தியாசத்தை உணர்ந்து கொள்வதும் கடினமானது அல்ல.

பேச்சுரிமையைப் பயன்படுத்திக் கொண்டு நாட்டுக்கு நெருக்கடி மூண்டிருக்கும் நேரத்தில் சீர்குலைவு, ஒற்றுமைக் குலைவு, முயற்சிக் குலைவு ஏற்படுத்துவது

கண்டிக்கத் தக்கது. நான் அதனை வெறுக்கிறேன். ஆனால், நெருக்கடி நிலை என்ற அபாயச் சங்கினைப் பேச்சுரிமையைப் பறித் திடும் நோக்கத்துடனேயே ஊதிக் கிடக்கும் போக்கினை நான் மட்டுமல்ல, பேச்சுரிமையின் நல்லியல்புகளையும், அதனால் கிடைத்திடும் நற்பயன் களையும் உணர்ந்த எல்லோருமே, ஏற்றுக் கொள்ள மறுப்பார்கள்.

“பத்தியம்’ இருந்தாக வேண்டும், உடல் நலிவு இருக்கும்போது; அதனைப் போக்கிக் கொள்ள; ஆனால்”பத்தியம்’ என்பதையே ஒரு ”முறை’ ஆக்கிடும் எண்ணத்துடன், உனக்கு உடல் நலம் இல்லை! இல்லை! என்று கூறினால், எப்படி அதற்கு ஆம்! என்று கூறிட முடியும்?

போரிலே தனது நாடு ஈடுபட்டிருந்த நாட்களிலேயே, நாங்கள் போரை

வெறுக்கிறோம், சமாதான வாழ்வையே விரும்புகிறோம், ஆகவே, போரை ஆதரிக்க மாட்டோம், படையினில் சேரமாட்டோம் என்று ஒரு சில கூறியது பற்றிய வரலாறும் எனக்குத் தெரியும்.

நான் அந்த "அளவு' செல்லலாம் என்றும் கூறவில்லை; செல்வது சரிதான் என்றும் வாதாடவில்லை; நாட்டுக்குப் பகைவர்களால் ஆபத்து நேரிடும்போது, எல்லோருடனும் கூடி, ஆற்றலுடன் போர் நடாத்திப், பகைவனை விரட்ட வேண்டும் என்று வலியுறுத்துகிறேன்; அதன் படியேதான் நமது கழகத்தவர் ஒழுகி வருகின்றனர்.

பேச்சுரிமை, ஜனநாயகத்திற்கு அடிப்படை.

பேச்சுரிமை என்ற சொற்றொடரில், உரிமை என்பது எத்தனை முக்கியமானதோ, அத்தனை முக்கியமானது "பேச்சு'

என்பதற்கான இலக்கணம்.

பேசத்தக்கன! பேச வேண்டியன! - என்ற வகை அறிந்து, பேசும் முறையும் தெரிந்து, பேச்சின் விளைவு யாதாக இருக்கும் என்பதனையும் யூகித்துணர்ந்து, பேச வேண்டும், பேச்சுரிமையை மேற்கொள்ள வேண்டும்.

எதையும் பேசலாம், எப்படியும் பேசலாம், என்ன விளைவு என்பது பற்றி எண்ணாமலே பேசலாம்.

என்ற, பொறுப்பற்ற தன்மையை நான் விரும்பவுமில்லை; பிறரும் அதனை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்; கூடாது. ஆனால், இவைபற்றி எவருக்கும் ஏதும் தெரியாது, கவலை கிடையாது என்ற எண்ணத்தைத் தடிப்பாக்கிக் கொண்டு, பேசாதே! என்ற கட்டளையை, நெருக்கடி நிலை நீங்கிய பிறகும்

முழக்கிடுவா ரானால், அவர்தம் நோக்கம், நாட்டுப் பாதுகாப்பு அல்ல, பேச்சுரிமையை மக்களுக்கு வழங்குவதால், தமது ஆதிக்கம் அழிந்துபடும் என்ற அச்சம் கொண்டு, தமது பதவியை, அமுலைப் பாதுகாத்துக் கொள்வதே அவர் தம் நோக்கம் என்பது எளிதாகப் புரிந்துவிடுகிறது. அதைவிட மோசமானது, நெருக்கடி நிலை நீண்டு கொண்டே போகவிடுவது, தேவையா அல்லவா என்பது பற்றிய சிந்தனைக்குக் கூட இடமளிக்காமல்!

இன்று நம் நாட்டில், நெருக்கடி நிலை; உண்மை; மறுப்பார் இல்லை; அந்த நிலைக்கு ஏற்றவிதமாக, மக்கள் தமது பேச்சுரிமை யைக் கட்டுப்படுத்திக் கொள்ளவும் விட்டுக் கொடுக்கவும், கடமைப்பட்டிருக்கிறார்கள்.

பகைக் படைகள், சதித் திட்டங்களை வகுத்தபடி இருக்கும் போது, இங்கு

நாம், பல்வேறு பிரச்சினைகள் பற்றி, நமக்குள் எழுகின்ற கருத்துக்களை எடுத்துரைத்துக் கொண்டும், மக்களைப் பல்வேறு முகாம்களுக்குள் அழைத்துச் சென்று கொண்டும் இருப்பது, அடாத செயல்.

ஒரே ஒரு முகாம்தான் அமைந்திருக்க வேண்டும், நாட்டைக் காத்திட. இதிலே எவருக்கும் ஐயப்பாடு எழாது.

ஆனால், நெருக்கடி நிலை நீங்கியபிறகு, பேச்சுரிமை உண்டு என்பதிலேயும் ஐயப்பாடு எழுந்துவிட்டால், ஜனநாயக முறையை மேற்கொள்வதிலே, பலன் என்ன காணப் போகிறோம்?

நெருக்கடி நிலையின்போது பேச்சுரிமையை விட்டுக் கொடுத்திடும் கடமை மக்களுக்கு இருப்பது போலவே, கருத்து வேற்றுமைகளைக் கிளறிவிடத்தக்க

காரியங்களில், எல்லோரையும் ஒரே முகாமில் இருந்திடுக! என்று கூறிடும் ஆட்சியாளர்கள், தம்மை ஈடுபடுத்திக் கொள்ளக் கூடாது.

புதிய காரியம், புதுச்சட்டம், புதுவரி, புதுக்கட்டளை, எது எனினும், அது நாட்டுப் பாதுகாப்புக்காகப் பயன்படத்தக்க தாகவும், தேவைப்படத்தக்கதாகவுமே இருக்க வேண்டும். அஃதன்றி, இது நெருக்கடி நிலையுள்ள நேரம், பேச்சுரிமையை மக்கள் விட்டுக் கொடுத்துவிட்டுள்ள நேரம், ஆகவே, இந்த நேரத்தில், எத்தகைய செயலைச் செய்திடினும், ஏன் என்ற கேள்வி எழாது; எழுமேல், பாதுகாப்புக்குக் குந்தகம் விளைவிப்பதாகக் கூறி, வாயை மூடிடச் செய்யலாம் என்ற நினைப்புடன், ஆட்சியினர் செயல்களில் ஈடுபட்டால், அது, ஜனநாயகத்தை மாய்த் திடும் கொடுமை என்றே கொள்ள வேண்டி ஏற்படுகிறது.

இன்றுள்ள ஆளுங்கட்சி, மக்களின் ஆணையின் துணை கொண்டு அரசுக் கட்டிலில் அமர்ந்திருக்கிறது,

இன்றுள்ள ஆளுங்கட்சி, அரசு கட்டிலில் அமர்ந்திருக்கும் நாட்களிலே, அன்னியன் படை எடுத்து விட்டான்; அவனை விரட்டிடும் போர் நடாத்திட, பொறுப்பேற்றுக்கொள்ள, ஆளுங்கட்சி கடமைப்பட்டிருக்கிறது. அந்தக் கடமையை ஆளுங்கட்சி, செம்மையாக நடாத்திச் சென்று, அன்னியனை விரட்டி ஓட்டிடும் பணியினில், நாட்டிலுள்ள எல்லா அரசியல் கட்சிகளும்; மக்கள் சமுதாயம் முழுவதும், ஒன்றுபட்டு ஈடுபட, ஆட்சியினர் கரத்தினை, வலிவுபடுத்த அவர்கள் மேற்கொள்ளும் திட்டங்களை நிறைவேற்றிக் கொடுக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

கடமை, அந்த வகையில் இருக்கிறது.

மக்கள் அந்தக் கடமையைச் செய்திடுவர் என்பதிலே ஆட்சியி னருக்கு மிகுந்த நம்பிக்கை இருந்திடினும், எந்த விதமான குந்தகமும் தெரிந்தோ, தெரியாமலோ ஏற்பட்டு விடக் கூடாது என்பதற்காகக் கட்டுத்திட்டங்களை ஏற்படுத்திக் கொள்ள உரிமை பெறுகிறார்கள்.

அந்த உரிமையின் அடிப்படையிலேதான், பேச்சுரி மையைப் பறித்திடும் சட்டம் இயற்றிக் கொள்ளவும் இடம் கிடைக்கிறது.

ஆகவே, போர் நடாத்திடவும், போர் முயற்சிக்கு எல்லா மக்களின் துணையையும் பெற்றிடவும், பெற்றிடுவதற்கான வழி வகை வகுத்துக் கொள்ளவும், மக்கள் வழி தவறிச் சென்றிடாம லிருக்கக் கட்டுத்திட்டம் ஏற்படுத்தவும் ஆளுங்கட்சிக்குப் பொறுப்பும் கடமையும் இருக்கிறது; உரிமையும் இருக்கிறது,

ஆனால், அந்த உரிமை அந்த நோக்கத்துக்காக மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டுமேயன்றி, தமது ஆதிக்கத்தைப் புதுப்பித்துக் கொள்ளவும் நீட்டிக் கொள் ளவும், அழுத்தமாக்கிக் கொள்ளவும் பயன்படுத்துதல், கூடாது; அறமாகாது.

நாட்டிலே ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் பொதுத் தேர்தல், மக்களின் ஆணை என்ன என்பதனைக் கேட்டறிந்து, அந்த ஆணைக்கு ஏற்றபடி அரசு முறை அமைத்துக் கொள்வதற்காக.

மக்களின் ஆணையைக் கேட்டறிய, பல்வேறு கட்சிகளும் முனைய வேண்டும்; ஆளுங்கட்சியும் மீண்டும் எம்மையே அரியா சனம் அமர்த்துக என்று கேட்டிட வேண்டும்.

முன்பு அரியாசனம் அமர்ந்து, மக்களுக்குச் செய்தளித்த நலன்கள் பற்றி எடுத்துரைத்து,

இனி ஒரு முறை அரியாசனம் அமர அனுமதி கொடுத்திடின், மேலும் இன்னின்ன நலன்களைச் சமைத்தளிப்பேன் என்று ஆளவந்தார்கள் கூறிட வேண்டும்.

அரியாசனத் தமர்ந்து இந்த ஆளவந்தார்கள் மூட்டிவிட்ட கேடுகள் பற்றியும், செய்யத் தவறியவை பற்றியும், செய்திருக்கக் கூடியவை பற்றியும் எடுத்துரைத்து, மற்றும் ஒருமுறை இவர்களை ஆளவந்தார்களாக்கினால் இன்னின்ன கேடுகள் சூழ்ந்திடும் என்ற எச்சரிக்கையினைக் கூறி, ஆட்சிப் பொறுப்பினை எம்மிடம் ஒப்படைப்பின் இன்னின்ன நலன்கள் பெற்றிடலாம் என்று வாக்களித்து, பிரசாரம் செய்திடும் பொறுப்பும் உரிமையும், மற்ற எந்த அரசியல் கட்சிக்கும் உண்டு.

இந்த உரிமை எந்தவிதமான தங்கு

தடையற்று இருந்திட வேண்டும், பொதுத் தேர்தலில், மக்கள் தங்கள் கடமையைச் சரியான முறையில் நிறைவேற்ற வேண்டுமானால்.

பல்வேறு பிரச்சினைகள் பற்றிய கருத்துக்களைக் கேட்டிடவும், ஒரு சாராரின் கருத்துடன் மற்றோர் சாராரின் கருத்தினை ஒப்பிட்டுப் பார்த்து, நல்லன கொண்டு அல்லன தள்ளிடவும் தக்க தெளிவும், துணிவும் எழ வேண்டும், ஒரு அரசுமுறையை அமைத்திட அல்லது ஒரு அரசுக் குழுவை அனுமதித்திட, என்னென்ன திட்டங்கள், பிரச்சினைகள் பற்றிச் சிந்திக்க வேண்டும் என்று கணக்கெடுக்க அச்சமற்ற மனப்போக்கும், சூழ்நிலையும் வேண்டும். பகைப்படைகள் சதித் திட்டத்துடன் நாட்டைத் தாக்கத் துடித்தபடி உள்ளன என்ற நிலையை வைத்துக் கொண்டு, ஆட்சி முறை பற்றியும், ஆட்சிக் குழு பற்றியும்,

அதனை ஒட்டிய பிரச்சினைகளைப் பற்றியும், அவைகளை விளக்கிடப் பல்வேறு கட்சிகள் கூறிடும் வாதங்கள் பற்றியும், பொது மக்கள் அமைதியான நிலையில் சிந்தித்துச் செயல்பட முடியுமா என்று கேட்கிறேன், தம்பி!

பகைப் படைகள் விரட்டப்படாத வரையில், நெருக்கடி நிலை இருக்கும் வரையில். மக்கள் மனத்திலே ஓர் அச்ச உணர்ச்சி இருந்து வரும்; பகையினை முறியடிப்பது பற்றிய சிந்தனை முனைந்து நிற்கும்; அரசியல் பிரச்சினைகள், பல கட்சிகளின் திட்டங்கள் பற்றிய நினைப்பு எழ வேண்டிய அளவிலும் வகையிலும் எழாது.

அந்தச் சூழ்நிலையைச் சாதகமாகக் கொண்டு பொதுத் தேர்தலை நடாத்தி மீண்டும் ஆட்சியிலே அழுத்த மாக அமர்ந்து கொள்ளும் எண்ணத்துடன் அல்லவா. என்ன நேரிட்டாலும், திட்டமிட்டபடி 1967லில் பொதுத் தேர்தல் நடைபெறும் என்று அறிவித்திருக்

கிறார்கள். இது முறையா? ஏற்றுக் கொள்ளத்தக்கதுதானா? என்று எண்ணிப் பார்க்கும்படி அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்.

பேச்சுரிமையும் இருந்திடாது, பாதுகாப்புச் சட்டமும் இருக்கும், நெருக்கடி நிலையும் நீடிக்கும், ஆனாலும் பொதுத் தேர்தல் திட்டமிட்டபடி நடந்திடும் என்று அவர்கள் கூறுகிறார்கள்.

"ஆனாலும்' என்ற சொல் காணப்படுகிறதே, தம்பி! அது அல்ல, உண்மையில் அங்கு பயன்படுத்த வேண்டிய சொல்.

பேச்சுரிமை இருந்திடாது, பாதுகாப்புச் சட்டம் இருக்கும், நெருக்கடி நிலையும் நீடிக்கும். ஆகவே பொதுத் தேர்தல் திட்டமிட்டபடி நடந்திடும்.

இவ்விதம் எண்ணுகின்றனர் காங்கிரசின் பெருந் தலைவர்கள். இதனை நான் உணர்ந்திருக்கிறேன் என்பதை உன்னிடம் எப்படி நான் கூறாமலிருக்க முடியும்?

பேச்சுரிமை இல்லை; பிரச்சினைகளை ஆராயத் தேவைப்படும் மன அமைதி மக்களிடம் இல்லை,

எவரையும் எந்த நேரத்திலும் எங்கும் பிடித்தடைக்க லாம் என்ற சட்டமும் கூராக இருக்கிறது.

மக்களுக்கு அச்சமூட்டத்தக்க விதமாக, பகைவர் களின் நடவடிக்கை இருந்து வருகிறது.

இந்த நேரமாகப் பார்த்து, நமது காரியத்தை நாம் சாதித்துக் கொள்ளலாம் என்று திட்டமிடுகிறார்கள்.

அதனால்தான் தம்பி! நெருக்கடி நிலை

நீக்கப்பட வேண்டும், அல்லது பொதுத் தேர்தல் ஒத்திவைக்கப்பட வேண்டும் என்ற கருத்தினை நான் வெளியிட நேரிட்டது.

கட்சிகள் தத்தமது கருத்துக்களைத் தாராளமாக எடுத் துரைக்கும் சூழ்நிலையும் உரிமையும் இல்லை என்று கூறுகிறபோது, காங்கிரசின் பெருந்தலைவர்கள்,

பாதுகாப்பு முயற்சிக்குக் குந்தகம் விளைவிக்காமல்

பேசலாம் என்று தெரிவிக்கிறார்கள்.

எத்தகைய பேச்சு பாதுகாப்பு முயற்சிக்குக் குந்தகம் விளைவிக்கும் என்று கூறிடும் உரிமையும் அதிகாரமும் யாருக்கு? காங்கிரஸ் ஆட்சியாளருக்கு! அவர்கள் எதிர்த்து மற்றக் கட்சிகள் போட்டியிட வேண்டும் - பொதுத் தேர்தலில். புரிகிறதா, தம்பி! பின்னப்பட்டுள்ள மாயவலை!!

பொதுத் தேர்தலில் ஈடுபட்டாக வேண்டும் என்றால், காங்கிரஸ் ஆட்சியினர் செய்தவைகளைப் பற்றி ஒவ்வொரு கட்சியும் தத்தமது கருத்தினை மக்களிடம் தெரிவித்தாக வேண்டும். உணவு முனையிலே ஏற்பட்டுள்ள வேதனை நிலைமை முதற்கொண்டு, போர்ச் சூழ்நிலையிலும் முதலாளிகளுக்கு ஆதரவளித்திடும் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கும் கொடுமை வரையில் விளக்கி ஆக வேண்டும். வரி விதிப்பு முறைகள் பற்றிய கருத் துரையைக் கூறியாக வேண்டும். ஏழை மேலும் கசக்கிப் பிழியப்படுகிறான், எத்தன் கொழுத்துக் கிடக்கிறான் என்பதனை அம்பலப்படுத்தியாக வேண்டும், பாதுகாப்புக்காக எடுத்துக் கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் எப்படியெல்லாம் புதுப்பிக்கப்பட வேண்டும், திருத்தப்பட

வேண்டும், என்பன பற்றிப் பேச வேண்டும்.

இந்தப் பேச்சில் எந்தப் பேச்சு பாதுகாப்பு முயற்சிக்குக் குந்தகம் விளைவிக்கும் என்பதை யார் கூற உரிமை பெற்றிருக்கிறார்கள்? அதிகாரத்தில் உள்ள காங்கிரசார்! அவர்களுடன் நாம் போட்டியிட வேண்டும், பொதுத் தேர்தலில்; முறைதானா என்று கேட்கிறேன்.

தம்பி! கட்சி சார்பாக வாதாடுவதைக்கூட நிறுத்திக் கொள்கி றேன். நாட்டின் மொத்த நன்மையின் சார்பாகவே கேட்கிறேன், எவ்வளவு முறையான கட்டுக்கடங்கிய பிரசாரம் நடத்தப் பட்டாலும், சமூகத்தில் மக்கள், பல பிரிவுகளாகத்தானே நிற்பார்கள். பொதுத் தேர்தலின்போது, கசப்பு, கிலேசம், மாறுபாடு, மாச்சரியம், இவைகள் ஏற்படத்தானே செய்யும். என் கட்சி! என் வேட்பாளர்! என் ஆதரவாளர்! - என்ற பேச்சு எழத்தானே செய்யும்! இந்த

நிலை, எல்லாக் கருத்து வேற்றுமை களையும் மறந்து "நாட்டுப் பாதுகாப்புக்காக அனைவரும் ஒரு பேரணியாக நிற்கிறோம்' என்று இன்று மகிழ்ச்சியுடன், எழுச்சியுடன், பெருமிதத்துடன் பேசிக் கொள்கிறோமே, அந்த நிலைக்குக் குந்தகம் விளைவித்துத்தானே தீரும்? இதனை வரவேற்கத்தான் முடியுமா, இது பற்றிக் கவலையற்றுத்தான் இருக்க முடியுமா?

பல பிரச்சினைகளில்; அடிப்படைப் பிரச்சினை களில் ஆளுங்கட்சியிடம் பலத்த மாறுபாடு இருக்கிறது; அது இறந்துவிடவில்லை.

இந்தி ஆதிக்கப் பிரச்சினை இருக்கிறது. பொதுத் தேர்த -லே ஈடுபடுவது என்றாகி விட்டால், இந்தி ஆட்சி மொழியாவ தனை ஏற்றுக் கொள்ளக் கூடாது என்ற "பிரசாரம்' நடந்தாக வேண்டும்; அது இந்தி ஆதரவாளர், இந்தி எதிர்ப்பாளர் என்ற இரு முகாம்களில்

அல்லவா மக்களைக் கொண்டு போய்ச் சேர்க்கும்.

மெள்ள மெள்ள, ஆனால் துணிவுடன் மதுவிலக்குச் சட்டத்துக்குக் காங்கிரஸ் அரசு, சாவுமணி அடிக்கத் தொடங்கியிருக்கிறது. இந்தக் கொடுமையைக் கண்டிக்கும் பொறுப்பி லிருந்து எப்படி நாம் விடுபட முடியும்? கண்டிக்கும் போது, கசப்பும் கொதிப்பும் எப்படி எழாமலிருக்கும்? இந்தக் கசப்பும் கொதிப்பும், ஏற்பட்டுள்ள கனிவையும் எழுச்சியையும் எப்படிப் பாதிக்காமலிருக்கும்? என்னால் புரிந்து கொள்ளவே முடியவில்லை.

கசப்பு. கொதிப்பு மூட்டும்படி பேசினால் கம்பி எண்ண வேண்டி வரும் என்கிறார்கள் போலும்.

அதற்குப் பயந்துகொண்டு, பிரச்சினைகளைப் பேசாதிருப்பது என்றால்,

கருத்து வேறுபாடுள்ள பிரச்சினைகளைப் பற்றிப் பேசாமல் பொதுத்தேர்தல் நடாத்துவது எப்படிப் பொருத்தமுள்ளதாகும், பொருளுள்ள தாகும்?

அன்புள்ள

அண்ணாதுரை

12-12-65

33. கனிவும் கசப்பும் - (2)

மணத்துக்கு அனுமதி இல்லை!
”மலடி’ வசை மொழியும் நிற்காது!
உணவு நெருக்கடி காங்கிரஸ் ஆட்சியின் விளைவு!
பேச்சுரிமை மறுப்பது ஆளுவோர் ஆதிக்கத்தை நிலைநாட்டிக் கொள்ளவே!

தம்பி,

பொதுத் தேர்தல் நடத்துவதற்கு ஏற்ற சூழ்நிலை பளிச் செனத் தெரிகிற வரையில், பொதுத் தேர்தலை நடத்தக் கூடாது என்று நான் எண்ணுகிறேன்.

பொதுத் தேர்தலுக்கு ஏற்ற சூழ்நிலை, பளிச்சென இல்லா விட்டாலும் ஓரளவுக்காகிலும், தெரியவேண்டுமானாலும், பாதுகாப்புச் சட்ட அமுலாகிலும் நீக்கப்பட

வேண்டும்.

கருத்து வேற்றுமைகளே இல்லை என்றோ, அந்த வேற்றுமைகள் இப்போது தாமாகப் போய்விட்டன என்றோ, எவ்வளவு துணிந்த பேர்வழியும் கூறிடமாட்டார். பழைய வேற்றுமைகள் மட்டுமல்ல, புதுப்புது கருத்து வேற்றுமைகள் எழுந்துள்ளன.

வேறு எங்கும்கூடச் செல்ல வேண்டாம், காமராஜரின் கருத்துக்களையே எடுத்துக் கொள்வோம்.

நிலவரி முறை மாற வேண்டும் என்று கூறி வருகிறார்.

எப்போது? எப்படி? என்று கேட்கவும், இந்தத் திட்டம் பற்றி, எட்டாண்டுப் பதவியின்போது ஏன் எண்ணிப் பார்க்கவில்லை என்றும், அதற்குப் பிறகாகிலும் மற்ற ”சகாக்களை’க்

கொண்டு ஏன் முறை மாற்றத்தை ஏற்படுத்தவில்லை என்றும் கேட்க வேண்டுமல்லவா? அதையொட்டிய பேச்சிலே இவர்கள் நிலச் சீர்திருத்த சட்டத்தையே கேலிக்கூத்தாக்கிவிட்ட கொடுமையை விளக்க வேண்டுமல்லவா; அதனை விளக்கிடும் போது நில முதலைகளை நம்பிக் கிடக்கும் ஒரு கட்சி எப்படி நிலச் சீர்த்திருத்தம் செய்யும் என்று கேட்க வேண்டுமல்லவா? கேட்கும்போது, ஆட்சி நடாத்திடு வோருக்குப் பாலும் பழமும் சாப்பிட்ட மாதிரியாகவா இருக்கும்! எண்ணிப் பார்க்கட்டுமே நேர்மையாளர்கள்.

இப்போதே, எத்தனையோ வகைவகையான யோசனை களை வெளியிட்டு வருகிறார்கள், பல கட்சியினர்; பல தலைவர்கள்.

இந்தியாவும் - பாகிஸ்தானும் கூட்டரசு அமைக்க வேண்டும் என்று பேசுகிறார்

டாக்டர் லோகியா. பொதுத் தேர்தலில் ஈடுபடுவதென்றால் அந்தத் திட்டம் பற்றி அவர் மேலும் சூடாகவும் விரிவாகவும் பேசத்தானே செய்வார். அந்தப் பேச்சு உள்ள தோழமையை, ஒன்றுபட்ட உணர்ச்சியைக் குலைக்குமா குலைக்காதா என்று கூறும் உரிமை பெற்றவர் யார்? ஆட்சியாளர்! ஆட்சியில் உள்ள கட்சி காங்கிரஸ்! லோகியா எந்தக் கட்சியை எதிர்த்து நிற்க வேண்டும்? காங்கிரஸ் கட்சியை! முறையாகுமா? நடுநிலை நின்று பிரச்சினைகளை ஆராய்ந்திட வல்லவர்களை இது குறித்து எண்ணிப் பார்க்கும்படிக் கேட்டுக் கொள்கிறேன்.

முன்னாள் பாதுகாப்பு மந்திரி கிருஷ்ணமேனன்,

போர்! போர்! என்று சதா பேசிக் கொண்டிருக்கக் கூடாது.

என்றும், ஜெயப்பிரகாஷ் நாராயணன்,

போரின் மூலம் பிரச்சினைகளைத் தீர்த்துவிட முடியாது.

என்றும் பேசி வருகிறார்கள்,

இந்தக் கருத்துகள் தேவை என்ற எண்ணத்தில், பொதுத் தேர்தலில் ஈடுபடும் கட்சிகள், பேசினால், நிலைமை எப்படி இருக்கும்! விரும்பத்தகாத நிலைமையைத் தேடிப்பிடித்து அழைத்துக் கொண்டு வருவது தேவைதானா? எதற்காக? இதுதான் சரியான சமயம், மறுபடியும் பதவியைப் பிடிக்க என்ற ஆசையை நிறைவேற்றிக் கொள்ளவா!! பொறுப்புள்ள போக்காகுமா இது?

அமெரிக்காவிடம் கேட்டுப்பெறும் (பி.எல் 480) உணவு இருக்கிறதே, அது குறித்து, எத்தகைய கடுமையான அபிப்பிராய பேதமிருக்கிறது. தேர்தலை நடத்துவது

என்றால். அதைப் பற்றிய விவாதம் மக்கள் மன்றத்தைப் பிளவு படுத்தாதா!

மக்களைப் பிளவுபடுத்தத் தக்க பிரசாரம் தடுக்கப் படும்; ஆனால், பொதுத் தேர்தல் நடத்தப்படும்.

இது என்ன விசித்திரம்! மணம் செய்து கொள்ளவும் அனுமதி கிடைக்காது, மலடி என்ற வசை மொழி கூறுவதும் நிற்காது!!

இன்று மக்களை அலைக்கழிக்கும் பிரச்சினைகள் யாவும், போர் மூண்டதன் விளைவாக எழுந்தவை என்றால், இவைகளுக்கு ஆளுங்கட்சி பொறுப்பல்ல என்று கூறலாம், மெய்ப்பிக்கலாம். ஆனால், போர் மூள்வதற்கு முன்பிருந்தே இருந்து வருபவைகள், மக்களை வேதனைக்குள்ளாக்கி வரும் பல பிரச்சினைகள்.

எட்டு அவுன்சு அல்ல இரண்டு அவுன்சுதான் தர முடியும்; நாட்டைக் காத்திடும் புனிதப் போரில் ஈடுபட்டி ருக்கும்போது. வயிறாரச் சாப்பிட்டாக வேண்டும் என்றா எண்ணுவது; கேட்பது. நாட்டுப் பற்றுள்ளவன் அவ்விதம் கேட்கலாமா!

இவ்விதம் பெருந்தலைவர்கள் பேசும்போது, கேட்போர் மகிழ்ச்சி ஆரவாரம் செய்வர். எதையும் இழந்து நாட்டைக் காத்திட வேண்டும் என்ற உணர்ச்சி எழும் நேரம் என்பதால்.

ஆனால் எட்டு அவுன்சு என்ற நிலை, போர் காரணமாகவா ஏற்பட்டது? இல்லையே! பாகிஸ்தானியப் பகைவன் கிளம்புவதற்கு ஆண்டு பலவற்றுக்கு முன்பே அல்லவா, "பசி' எனும் பகைவன் நாட்டு மக்களைத் தாக்கிடத் தொடங்கினான்.

ஏன் உமது ஆட்சியிலே இந்த அவலநிலை ஏற்பட்டது என்று ஆட்சியாளர்களைக் கேட்கவும், இத்தகைய அவதி நிலையை ஏற்படுத்தியவர்களையா மறுபடியும் அரியணை அமர்த்துவது என்று மக்களைக் கேட்கவும், நமக்கு உரிமை இருக்கிறது. உணவுப் பிரச்சினையை இன்றைய ஆளவந்தார்கள், குழப்ப மிகுந்த செயல்களினால், மேலும் மேலும் சிக்கல் உள்ளதாக்கி விட்டிருக் கிறார்கள் என்பதை எடுத்து விளக்கிட வேண்டும். உணவு நெருக்கடி, சீன ஆக்கிரமிப்பின் விளைவு அல்ல; பாகிஸ்தான் படை எடுப்பினால் ஏற்பட்டது அல்ல; காங்கிரஸ் ஆட்சியின் திட்டங்கள் கோணலாகிப் போனதனால் ஏற்பட்டதாகும். எனவே இதற்குப் பொறுப்பேற்க வேண்டியவர்கள் காங்கிரஸ் ஆட்சியினர். ஆனால், நெருக்கடி

நிலை இருப்பதனால், அவர்களுக்குத் தங்கள் குற்றங்களை மறைத்துக் கொள்ள வசதி கிடைக்கிறது. உணவு நிலை இப்படி மோசமாகிக் கொண்டு வருகிறதே என்று எவர் கேட்டிடினும்,

நாட்டுக்கு நெருக்கடி!

பகைவன் பல முனையில்!

பாதுகாப்பு! பாதுகாப்பு!

இஃதன்றி, அரிசி, கோதுமை, என்ற அற்பப் பொருள்கள் பற்றிப் பேசவே கூடாது!

நாட்டுப் பற்றுள்ளவன் சோறு பற்றிய நினைப்பா கொள்ளுவான், இந்த நேரத்தில்!

என்று முழக்கம் எழுப்பிட முனைகிறது. இங்கே இவர்கள் ஆட்சியிலே, உழவுத் தொழில் செழித்து, உணவுப் பண்டங்கள் மலை மலையாகக் குவிந்து, போதும்! போதும்! என்று

சொல்லுமளவு மக்களுக்கு உணவுப் பொருள் கொடுத்து, மிகுந்ததைக் கப்பல் கப்பலாக வெளிநாடுகளுக்கு அனுப்பி வைத்துக் கொண்டு இருந்து, பகைவர்கள் பாய்ந்து வந்து தாக்கி, களஞ்சியங்களைக் கொளுத்தி, நாசமாக்கி, வயல்களை அழித்து, சோற்றுப் பஞ்சம் ஏற்படும்படி செய்து விட்டார்கள் என்ற நிலை இருந்தால், பாவம்! அவர்கள் என்ன செய்வார்கள்! ஆட்சியை ஒழுங்காகத்தான் நடத்திக் கொண்டு வந்தார்கள், இல்லை என்ற சொல் எழாதபடி, மக்களுக்கு வசதிகளைத் தேடிக் கொடுத்து வந்தார்கள்; மலை மலையாக செந்நெல் குவிந்திருக்கக் கண்டோமே! மனைகளிலே மகிழ்ச்சி பொங்கிடக் கண்டோமே! ஒரு குறையுமின்றி மக்கள் வாழ்ந்திருக்கக் கண்டோமே. பகைவர்கள் பாய்ந்து வந்து தாக்கி அல்லவா வளத்தை அழித்தார்கள், வாழ்க்கையைக் கெடுத்தார்கள்.

பகைவர்களால் ஏற்பட்ட படுநாசத்திற்காகப் பரிவுடன் ஆட்சி நடாத்தி வந்தவர்கள் மீது கோபித்துக் கொள்ளலாமா! அவர்கள் என்ன செய்வார்கள் பாவம்! - என்று மக்கள் கூறிட முடியும் - அந்தப் பெருந்தன்மை நம் மக்களிடம் உண்டு.

ஆனால், உணவு நெருக்கடி இன்று நேற்றா ஏற்பட்டது! காங்கிரஸ் ஆட்சி ஏற்பட்ட நாள்தொட்டு இருந்து வருவதல்லவா, இந்த உணவு நெருக்கடி.

பற்றாக்குறையும், விலை ஏற்றமும், எவரால் விளைந்தன? பகைவர்களால் அல்லவே!

தம்பி, சுதந்திரம் கிடைத்ததிலிருந்து இதுவரையில், வெளி நாடு களிலிருந்து வரவழைக்கப்பட்ட உணவுப் பொருள்களின் மொத்த மதிப்பு 2600 கோடி ரூபாய்

என்கிறார்கள், பொருளாதார நிபுணர்கள்.

இந்தப் பெரிய தொகையை இங்கே, காடு திருத்திக் கழனி ஆக்கவும், பாசன வசதிகளைப் பெருக்கிடவும், உரம் தயாரித்துத் தரவும், விவசாயக் கருவிகளைச் செய்தளிக்கவும் பயன்படுத்தி இருந்திருப்பின், கணிசமான அளவு உணவுப் பொருள் இங்கேயே விளைந்திருக்கும்; தேவைக்கு மேலேயும் விளைந்து, மிகுந்ததை வெளிநாடுகளுக்கும் அனுப்பி இருந்திருக்க முடியும்.

இவ்விதம் கூறுபவர் பதவிப்பசி கொண்டவரல்ல; இவர்களிடம் அருவருப்பு அடைந்த அரசியல்வாதியுமல்ல; சொல்லப்போனால் அரசியலே வேண்டாம் என்று கூறிவிட்டு, சர்வோதய இயக்கத்துக்காகத் தம்மைத் தாமே தானமாகத் தந்துவிட்ட தகைமையாளர், ஜெயப்பிரகாஷ்

நாராயணன்.

இவைகளுக்கெல்லாம் ஒரே பதில் அல்லவா வெளிவரும், இந்தச் சமயம் பொதுத் தேர்தல் நடத்தப்பட்டால்; அன்னியன் தாக்குகிறான், அறிவி-! இந்த நேரத்திலா அவுன்சுக் கணக்கும்; அரிசிக் கணக்கும் பேசுவது! - இவ்வளவுதானே பதில்.

ஐயா! நான் தாய் தந்தையை இழந்தவன்; என் மீது இரக்கம் காட்டி, தண்டனையை நீக்கிவிடுங்கள்; நான் தாய் தந்தையை பூஜித்துப் புண்ணியம் பெற விரும்புகிறேன். என் தவ நோக்கத்தைக் கெடுத்து விடாதீர்கள் என்று, தாயையும் தகப்பனையும் கொன்றுவிட்ட ஒரு கொடியவன், கூறினானாம், ஆயுள் தண்டனை விதித்த நீதிபதியைப் பார்த்து. தாயையும் தந்தையையும் இவனே கொன்றுபோட்டான்; ஆனால் இவனே நான் தாய் தந்தையை

இழந்து தவிக்கிறேன், ஆகவே என்னிடம் இரக்கம் காட்டுங்கள் என்றும் கேட்கிறான். எப்படி இருக்கிறது வேடிக்கை! உணவுப் பஞ்சம் ஏற்படும்படி செய்தவர்கள் ஆட்சி நடத்தும் காங்கிரசார். ஆனால், அவர்களே பேசுகிறார்கள், உணவுப் பஞ்சம் வந்துவிட்டது, ஆகவே, வயிற்றை இறுக்கிக் கட்டிக் கொள்ளுங்கள், கிடைத்ததைச் சாப்பிடுங்கள் என்று.

ஏனய்யா, இப்படி உணவுப் பஞ்சம் வந்தது? என்று கேட்டாலோ, பேசாதே! பகைவன் தாக்குகிறான்! பாதுகாத்திடும் பணியில் ஈடுபட வேண்டிய நேரம் இது; மற்றவை பற்றிய பேச்சு எதுவும் பேசிடலாகாது என்று கூறுகின்றனர். இது எந்த வகையான நியாயம்?

நிலைமை அவ்விதம், என்ன செய்வது என்று எண்ணிக் கொண்டிருந்து விடுவோம்

என்றாலோ, பொதுத் தேர்தல் வருகிறது, எல்லாக் கட்சிகளும் தாராளமாக ஈடுபடலாம், என்கிறார்கள். பொதுத் தேர்தலில் ஈடுபட வேண்டுமானால், அவரவர்கள் தத்தமது கருத்துக்களைக் கூற வேண்டுமே என்றால்,

கூறுங்கள், ஆனால், நாட்டுப் பாதுகாப்புக்குக் குந்தகம் ஏற்படாதபடிப் பேசுங்கள்; ஏனெனில், இது நெருக்கடி நேரம் என்கிறார்கள், எந்தப் பேச்சு, பாதுகாப்புக்குக் குந்தகம் விளைவிக்கும் என்பதை எடுத்துக் கூறிட, அதற்கான நடவடிக்கை எடுத்திட உரிமை பெற்றவர்? காங்கிரஸ் ஆட்சியினர்!! பாதுகாப்பு முயற்சிக்குக் குந்தகம் விளைவிக்கும் பேச்சின் இலக்கணம் இப்படி இப்படி இருக்கும் என்று ஏதாகிலும் ஒரு வரையறை உண்டா? இல்லை. சர்க்கார் தமக்குக் கிடைத்திடும் தக்க ஆதாரங்களின் பேரில் நடவடிக்கை

எடுக்க முற்படுவர். சர்க்கார் காட்டிடும் ஆதாரங்களை, காரணங்களை எடுத்துக் கூறச் சொல்லிக் கேட்டு, வழக்கு மன்றத்தின் மூலம் நியாயம் தேடலாமா? முடியாது! ஏன்? எந்தெந்த வகையிலே பாதுகாப்பு முயற்சிக்குக் குந்தகம் விளைவிக்கப்பட்டது என்பது பற்றி வழக்கு மன்றத்திலே எடுத்துக் கூறினால், அந்தச் செய்தி எதிரிக்குப் பயன்பட்டுவிடும், ஆகவே, கூறுவதற்கில்லை. பிறகு? உள்ளே தான்! வேறே வழி!! இந்த நிலையில், ஆளுங்கட்சியை எதிர்த்துப் பொதுத் தேர்தலில் எந்தக் கட்சியும் போட்டியிடலாம் வருக! வருக! விரைக! விரைக! என்று அறிவித்திருக்கிறார்கள். இது குறித்து எனக்குத் தோன்றிய ஐயப்பாட்டினை எடுத்துக் கூறியதறிந்த ”ஸ்டேடஸ்மன்’ நிருபர் என்னை அணுகி ஒரு கேள்வி கேட்டார்.

இந்த நிலையில் பொதுத் தேர்தலை

நடத்தியே தீர்வது என்று முனைந்தால், உங்கள் கழகம், தேர்தலில் ஈடுபட முடியாது என அறிவிக்குமோ?

அவர் கேட்ட கேள்வியை வேறு பலரும் கேட்க எண்ணுவர் என்பதால், அவருக்கு அளித்த பதிலையும் இங்குக் குறிப்பிடுவது தேவை என்று கருதுகிறேன். நான் அளித்த பதில்,

இல்லை! பொதுத் தேர்தல் நடந்தே தீரும் என்று ஏற்பட்டு விடுமானால் திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தலில் ஈடுபடும், ஆனால், எவ்விதமான உள்நோக்கத் துடன், எத்தகைய சூழ்நிலையில் காங்கிரஸ ஆட்சியினர் பொதுத் தேர்தலை நடத்த விரும்புகிறார்கள்; அதிலே காணக் கிடக்கும் சூழ்ச்சி எத்தகையது என்பதை முன்னதாகவே பொதுமக்கள் உணர்ந்து கொள்ள வேண்டும் என்பதற்காகவே இதனைக் கூறி வருகிறேன்.

நெருக்கடி நிலை காரணமாக, மராட்டியத்திலும் மற்றும் சில பகுதிகளிலும், உள்ளாட்சிக்கான தேர்தல்கள் - பேரூர் - வட்டம் - மாவட்டம் - இவற்றினுக்கான தேர்தல்கள் நடத்தப்பட மாட்டா என்று அறிவித்திருக்கிறார்கள்.

காங்கிரஸ் கட்சி, தன் அமைப்புக்கான தேர்தலையும் ஒத்திப் போட்டிருக்கிறது, நெருக்கடி நிலை காரணமாக.

நாமும் நமது கழக அமைப்பின் தேர்தல்களைத் தள்ளி வைத்திருக்கிறோம்.

நாட்டுக்கு ஒரு நெருக்கடி ஏற்பட்டிருக்கும் நேரத்தில் நேரமும் நினைப்பும் ஒன்றுபட்ட உணர்ச்சியை வளர்த்திட மட்டுமே பயன்பட வேண்டுமேயன்றி, பேதம், பிளவு, முகாம், அணி, இவைகளை உண்டாக்கிடும் செயல்களுக்குப் பயன்படக் கூடாது

என்பதாலே.

உள்ளாட்சித் தேர்தல்களிலே ஈடுபடுவோர், ஆட்சி முறை, சட்ட திட்டம், பொருளாதாரப் பிரச்சினை, உணவு நெருக்கடி போன்றவை குறித்து, கருத்துரைத்துக் கொண்டிருக்கப் போவ தில்லை; தேவையுமில்லை. எனினும், பல கட்சிகள் ஒன்றோ டொன்று மோதிக் கொண்டு, அதன் காரணமாக வீண் மாச்சரியம் சச்சரவு எழ இடம் கொடுக்கக் கூடாது என்ற நோக்கத்துடன், அந்தத் தேர்தல்கள் ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

பொதுத் தேர்தல் என்றாலோ முழுக்க முழுக்க, "கருத்துப் போர்' எழுந்தே தீர வேண்டிய நிலையை ஏற்படுத்திக் கொள்வது; சச்சரவும், மாச்சரியமும், நிரம்ப எழக்கூடும்; ஒன்றுபட்டுப் பணியாற்றும் சூழ்நிலை வெகுவாகப் பாதிக்கப்பட்டுவிடும்.

இதை அறிந்தும் பொதுத் தேர்தலை நடத்திட எண்ணுவதன் நோக்கம் என்ன? பொதுத் தேர்தலை, பேச்சுரிமையற்ற சூழ்நிலையிலேயே நடத்திவிடுவதுதான் மீண்டும் தமது ஆதிக்கத்தைக் கெட்டிப்படுத்திக் கொள்ளும் வழி என்பதால்!

இந்தச் சூழ்ச்சியை மக்கள் உணர்ந்திட வேண்டும் என்பதற்கே இத்தனையும் கூறுகிறேன்.

சட்ட மன்றங்களிலும் பாராளுமன்றங்களிலும், இந்த நெருக்கடி நிலையிலும் சர்க்காரின் திட்டங்களைச் சாடலாம், கண்டித்து வாக்களிக்கலாம்.

தங்கப் பத்திரத் திட்டம் முதற்கொண்டு திங்கள் இரவு விரதம் இருக்கும் திட்டம் வரையில், பாராளுமன்றத்தில் பாராட்டியவர்கள் மட்டுமல்ல, பலமாகக்

கண்டித்தவர்களும் இருக்கிறார்கள்.

தங்கப் பத்திரத் திட்டம் பற்றிப் பாராளுமன்றத்திலே வீசப்பட்ட கண்டனங்களைக் கணைகளாக, பொது மேடை களிலே இருந்து வீசிடின், தங்கம் திரட்டித் தாயகத்தைக் காத்திடும் பாதுகாப்பு முயற்சிக்கு அந்தப் பேச்சு குந்தகம் விளைவிப்பதாக ஏற்பட்டுவிடக் கூடும்; ஏற்பட்டுவிட்டதாகக் கூறப்படக் கூடும்.

ஆனால், பொதுத் தேர்தலை நடத்துவதானால், அது போன்ற திட்டங்கள் பற்றி ஒவ்வொரு கட்சியும் கருத்தறிவித்தாக வேண்டும்.

நெருக்கடி நிலையையும் வைத்துக் கொண்டு, பொதுத் தேர்தலையும் நடத்த முற்பட்டால், கட்சிகள் எப்படிச் செயல்பட முடியும்?

பொதுத் தேர்தலில் முழுப் பேச்சுரிமையுடன் ஈடுபடுவ தானால், ஆட்சிப் பொறுப்பிலுள்ள காங்கிரஸ் அமைச்சர்கள், தலைவர்கள் ஆகியோரின் நிர்வாக ஊழல்களை அம்பலப் படுத்தியாக வேண்டும்; கெய்ரோன்கள் பற்றிப் பேசியாக வேண்டும்.

ஐந்தாண்டுத் திட்டங்களின் மூலம் பெருகிய செல்வம், எங்கே போய்விட்டதோ தெரியவில்லையே என்று காமராஜர் கேட்டாரே, அதற்குப் பதில் கூற வேண்டும்; அந்தச் செல்வம் சென்ற இடம், சென்ற வகை, அதிலே காங்கிரஸ் கட்சி பெற்ற "பங்கு' இவைகளை வெட்ட வெளிச்சமாக்கியாக வேண்டும்.

அமைச்சர்கள் மீது கூறப்பட்டு வரும் முறைகேடுகள் பற்றிப் பொது மன்றங்களிலே பேச வேண்டி ஏற்படும். இப்போதே சட்ட மன்றங்களிலும், சிலர் துணிந்து பொது

மன்றங்களிலும், இவை பற்றிப் பேசிக் கொண்டு வருகின்றனர்.

காங்கிரசுக்கும் பிற கட்சிகளுக்கும் இடையிலே உள்ள கருத்து மாறுபாடு காரணமாக மட்டுமல்ல, காங்கிரஸ் கட்சிக்கு உள்ளேயே, ஆதிக்கம் செலுத்தும் குழு, அகப்பட்டுக் கொண்டு விழிக்கும் குழு என்று ஒரு "முகாமே' ஒவ்வோரிடத்தில் இருந்து வருகிறது. இதன் காரணமாக ஏற்படும் சச்சரவின்போது, பல ஊழல்கள் வெளியாகின்றன. பல குற்றச்சாட்டுகள் சுமத்தப்படுகின்றன.

ஒரிசாவில், முன்னால் முதலமைச்சர் டாக்டர் அரிகிருஷ்ண மேதாப், "போட்டிக் காங்கிரஸ்' மாநாடே நடத்தினார் சென்ற மாத இறுதியில்.

ஒரிசா சட்டசபை உறுப்பினர்கள்

பலரும், பல மாவட்டத் தலைவர்களும் அந்த மாநாட்டிலே கலந்து கொண்டுள்ளனர் மாநாட்டிலே என்ன பேசப்பட்டது தெரியுமா, தம்பி! இன்று ஒரிசாவில் ஆட்சி செய்யும் காங்கிரசை எப்படியும் வீழ்த்தியாக வேண்டும் என்பது பற்றி.

பொறுத்துக் கிடந்தோம். மே-டம் நியாயம் வழங்கும் என்று காத்துக் கிடந்தோம் ஊழல் நாற்றம் சகிக்க முடியவில்லை. ஆட்சிப் பொறுப்பில் உள்ள பலர் மீது இலஞ்சக் குற்றம் இருக்கிறது.

இவை அவர்கள் எடுத்துக் காட்டிய காரணங்கள்.

காங்கிரசை விட்டு விலகி விடுவதாக அறிவித்து விடுவோமே, என்று ஒருவர் கூறுகிறார். டாக்டர் அரிகிருஷ்ணமேதாப், விலகி விட்டோம் என்று அறிவித் தால்தானா!

மேலிடத்துக்கு நாம் ஒரு தனிக் கட்சியாக இருந்து வருவது ஏற்கனவே தெரியாதா!

இன்று ஆட்சியை நடத்தும் கூட்டத்தை விரட்டி அடிக்க வேண்டும் என்பது நமது நோக்கம்; அதனை நாம் ஏற்கனவே வெளிப்படையாகக் கூறியாகிவிட்டது என்கிறார். அனைவரும், அடுத்த பொதுத் தேர்தலில், காங்கிரசை எதிர்த்துப் போட்டி யிடப் போவதாக முடிவு செய்துள்ளனர் ஒருவர், காங்கிரஸ் "டிக்கட்' கொடுத்தாலும் ஏற்கப் போவதில்லை என்று ஆத்திரத் துடன் பேசினார்.

ஒரிசா காங்கிரஸ் சர்க்கார் போடும் புதிய வரிகளைக் கண்டித்ததுடன், அந்த வரிகளை எதிர்க்கப் போவதாகவும் அறிவித்துள்ளனர்.

உணவுப் பிரச்சினையைத் தக்க முறையில் விரைவில் தீர்த்து வைக்காவிட்டால்,

பெரியதோர் கிளர்ச்சி நடத்தப் படும் என்று மேதாப் அறிவித்திருக்கிறார்.

இந்த எதிர்ப்பும் கொதிப்பும், பொதுத் தேர்தல் நடத்தப்படுவது என்றால், எத்தனை வேகமாகும்; என்னென்ன விரும்பத்தகாத விளைவுகள் ஏற்படக் கூடும் என்பது பற்றிய எண்ணமே காணோம் காங்கிரசின் பெருந்தலைவர்களுக்கு ஏன்? நெருக்கடி நிலை நீடிக்கிறது, பேச்சுரிமை பறிக்கப்பட்டிருக்கிறது, இந்தச் சூழ்நிலையைச் சாதகமாக்கிக் கொண்டு, எதிர்ப்புக் குரலை அடக்கிவிடலாம் என்ற தைரியம்.

இத்தனை சூழ்ச்சித் திறத்துடன், காங்கிரஸ் கட்சியினர் எளிதாக ஆதிக்கத்தைக் கெட்டிப்படுத்திக் கொள்ள, பொதுத் தேர்தலை நடத்த விரும்புகிறார்கள். அதனை விளக்க வேண்டிய கடமை உணர்ச்சியில் இதனைக் கூறினேன்;

பலன் கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும் கவலை இல்லை; நிலைமையை விளக்கி இருக்கிறோம் என்ற அளவிலே மகிழ்ச்சி அடைகிறேன். ஒன்று கூற விரும்புகிறேன், ஜனநாயகத்தையும் பேசிக் கொண்டு, ஒரு கட்சி ஆதிக்கத்துக்காக இத்தனை சூழ்ச்சிகளைச் செய்து கொண்டிருப்பதைக் காட்டிலும், ஒரே அடியாக, நேர்முகமாக, இனி இங்கு ஒரு கட்சி ஆட்சிதான்! என்று சட்டம் இயற்றிக் கொள்ளலாம். ஜனநாயக முறை இருப்பதாக எண்ணிக் கொண்டு, பல கட்சிகள் நம்பி மோசம்போகும் கொடுமையாவது இல்லாமற்போகும்.

இந்த என் எண்ணத்தைச் சிலருடன் எடுத்துரைத்த போதுதான், பலருக்கு இதேவிதமான எண்ணம் இருப்பது எனக்குத் தெரியவந்தது. சிலரிடம் கேட்டானாம், பலர் கருத்து தெரிந்து கொண்டானாம்,

பார்த்தீர்களா இவன் காட்டும் தப்புக் கணக்கை என்று பேச்சாளர்கள் சொற்பொழிவு ஆற்றக்கூடும். தம்பி! சிலரிடம் நான் பேசினேன், அவர்கள் தமது கருத்தையும் தாம் மற்றவர்களுடன் பேசியதையும் கூறினர்; அதனால் பலருடைய கருத்து தெரியவந்தது. என் கடமை அல்லவா! வேறு என்ன நான் உனக்குத் தர இருக்கிறது, எனக்குத் தோன்றும் எண்ணத்தை அனுப்பித் தருவதைத் தவிர.

அன்புள்ள

அண்ணாதுரை

19-12-65

34. அன்னமென்றும் சொர்ணமென்றும் சொன்னாயே ! - (1)

சுதந்தரத்துக்கு முன் பேசியதை இன்று மறந்தோமே !
உள்நாட்டான் ஆட்சியை எதிர்ப்பது அத்தனை எளிதன்று !
உள்ளதை உள்ளபடி உரைப்பதே உன்னதப் பண்பு !

தம்பி,

கொள்ளைச் சம்பளம் ஒழிக !
குட்டிக் குபேரர் கூண்டோடு ஒழிக !
அதிகாரவர்க்கம் அடியோடு ஒழிக !
ஆடம்பரச் செலவு ஒழிக ! ஒழிக !

இவ்விதமான முழக்கம் நாடெங்கும்

எழுப்பப்பட்டு வந்ததே, நினைவிலிருக்கிறதா! ஆத்திரம் பீறிட்டுக் கிளம்புமே! அக்கிரமம்! அநியாயம்! என்று பலரும் கூறுவார்களே, சபிப் பார்களே, கவனமிருக்கிறதா! ஏழை இங்கே சோற்றுக்குத் "ததிங்கிணத்தோம்' போடுகிறான். அவனைக் கசக்சிப் பிழிந்து வரி வாங்கிக் குவித்துக் கொண்டு"பரங்கிப் பயல்கள்' குடித்து விட்டுப் புரளுகிறார்களே. இது அடுக்குமா? குந்தக் குடிசையின்றி ஏழை வதைபடுகிறான், குளிப்பதற்குப் பளிங்குக் குளம் அமைத்துக் கொண்டு கொட்டமடிக்கிறான் வெள்ளையன், இது நீதியா! குமுறிக் குமுறிச் சாகிறான் ஏழை இங்கு, இந்த நாட்டில் பிறந்தவன்; எந்த நாட்டிலேயோ இருந்து இங்கே வந்தவன், தான் வளர்க்கும் குச்சி நாய்க்குப் "பிஸ்கட்டு' தருகிறானே, பார்த்தீர்களா அக்கிரமத்தை! ஆடை இல்லை, இந்த நாட்டுக் குடிமகனுக்கு,

வந்தவன் வசித்திடும் மாளிகை ஜன்னலுக்கு வண்ணத் துணியாலே அலங்காரம் செய்கிறானே, காண்போரின் கண்கள் கனலைக் கக்காதிருக்குமா? வரி! வரி! வரி! ஓயாமல் சரி! எதற்கும் வரி! எப்போதும் வரி! அவ்வளவும் எதற்குப் பயன்படுகிறது; வந்தவன் ஆயிரக்கணக்கிலே சம்பளம் பெறத்தானே! இத்தகைய அக்கிரம ஆட்சியை அகற்ற வேண்டாமா!

கொள்ளைச் சம்பளம் ஒழிக !
குட்டிக் குபேரர் கூண்டோடு ஒழிக !
அதிகாரவர்க்கம் அடியோடு ஒழிக !
ஆடம்பரச் செலவு ஒழிக ! ஒழிக !

இதுபோல எழுப்பப்பட்ட முழக்கம் கேட்கப்படாத ஊர் இல்லை! ஒவ்வொரு நாளும் முழக்கம்! ஒவ்வொரு முழக்கமும் அடிவயிற்றிலிருந்து! ஒரு கூட்டம் கிளப்பிய கூச்சல் அல்ல, ஒரு நாடு எழுப்பிடும் நாதம்,

விடுதலைக்கான கீதம், அன்னியனை விரட்டிடும் துந்துபி, ஆத்ம பலத்தின் எதிரொலி!

- இவ்விதமாக வெல்லாம் பேசப்பட்டது நினைவிலிருக்கிறதல்லவா?

நினைவிலிருக்கிறது அண்ணா! நினைவிலிருக்கிறது; ஆனால், இப்போது எதற்காக அதனை நீ நினைவுபடுத்துகிறாய்? அந்த முழக்கம், தேசிய ஆர்வத்தின் காரணமாக எழுந்தது. தூங்கிக் கிடந்த மக்களைத் தட்டி எழுப்பி விட்டது. கேடான ஆட்சியை எதிர்த்திடும் ஆற்றலை அளித்தது. நல்லாட்சி அமைத்தாக வேண்டும் என்ற ஆர்வத்தைத் தந்தது. நமதாட்சி அமைத்திடும் உறுதி பிறந்தது, தேசிய எழுச்சி எழிலுடன் விளங்கிய நாட்களில் கிளம்பிய முழக்கம்.

கொள்ளைச் சம்பளம் ஒழிக !
குட்டிக் குபேரர் கூண்டோடு ஒழிக !

என்பன போன்றவை! இப்போது அவை உன் நினைவிலிருக் கிறதா? என்று கேட்டிடக் காரணம் என்ன என்கின்றாய், தம்பி! அந்த நாட்களையும், அதுபோது சொன்னவைகளையும் மறந்தே விட்டோம், என்று நான் அல்ல, பதவியில் உயர்ந்தவர் அந்த நாட்களில் முழக்க முன்னணி நின்றவர் சொல்லியிருக்கிறார். அதனால்தான் நான் உன்னைக் கேட்கிறேன், அந்த நாட்களில் எழுப்பப்பட்ட முழக்கங்கள் நினைவிலிருக்கிறதா என்று.

நாட்டு விடுதலைக்காக மூட்டிவிடப்படும் ஆர்வம், இதயத்தில் கொழுந்துவிட்டு எரிவது, உலகெங்கும் காணக் கிடக்கும் ஓர் உன்னதம். இந்நாட்டுக்கு மட்டுமே உரியது அல்ல, அந்த ஆர்வம் தந்திடும் ஆற்றல், அடிமைத் தளைகளை உடைத்திடும், அன்னிய ஆட்சியை விரட்டிடும், நமது ஆட்சியை

அமைத்தளித்திடும், அதிலே ஐயமில்லை. அஃது இங்கும் நம் கண் முன்பாகவே நடைபெற்றுவிட்டது.

முழக்கம் எழுப்புவதும், முறையாக முனைந்து பணியாற்றி னால் பலன் கிடைப்பதும் கடினம் அல்ல; குருதி கொட்டிடவும் குடும்பத்தைச் சிதைத்துக் கொள்ளவும், குண்டடிபட்டுச் சாகவும் குலக்கொடி அறுக்கப்படுவதைத் தாங்கிக் கொள்ளவும் தேவைப்படும் வீரம், தீரம், தியாகம் அந்த முழக்கம் எழுப்பிடும்; ஐயமில்லை.

ஆனால், விடுதலை கிடைத்த பிறகு, சொந்த ஆட்சி அமைந்த பிறகு, முன்பு எழுப்பிய முழக்கம், நினைவில் இருப்பது தான் கடினம். அந்த முழக்கம் எழுப்பியபோது என்னென்ன எழிலான "எதிர்காலம்' மனக்கண் முன் தென்பட்டதோ, அந்த நினைவு நெஞ்சைவிட்டு

அகலாமலிருப்பதுதான் கடினம்.

அக்கிரமத்தைக் கண்டித்து முழக்கம் எழுப்பிடும்போது, அந்த அக்கிரமத்தை வீழ்த்திவிட்டு, நீதியை அரியணை அமர்த்த வேண்டும் என்ற ஆர்வம், பின்னிப் பிணைந்து இருக்கிறது. அக்கிரமம் ஒழிக்கப்பட்டான பிறகும், எந்த நோக்கத்துடன் அன்று முழக்கம் எழுப்பினோம் என்ற நினைவு மட்டும் கலையாமல், குலையாமல் இருக்குமானால், அறம் அரசோச்ச வழி காணும் முயற்சியில் மும்முரமாக ஈடுபட முடியும்; வெற்றி பெற முடியும். முழக்கம் பற்றிய நினைவே அற்றுப் போய் விட்டால்? எழுச்சி கொந்தளித்துக் கொண்டிருந்த நாட்களில், என்னென்ன திட்டமிட்டோம் என்ற நினைவு நசித்துப் போய் விட்டால்! வாதாடிப் போராடி, ஒளிவிளக்கைப் பெற்ற பிறகு, அதற்கு எண்ணெய் பெய்து, திரியிட்டு, ஏற்றி வைக்காவிட்டால்! இருளே

ஒழிக! ஒளியே வருக! என்று முழக்கம் எழுப்பி, ஒளிவிளக்கினைப் பெற்றதனால் என்ன பயன்? இல்லையல்லவா! ஆகவேதான், விடுதலைக்கான ஆர்வத்துக்காக எழுப்பிய முழக்கம் பற்றிய நினைவு விடுதலை பெற்ற பிறகும் இருந்திட வேண்டும் என்கின்றனர் நல்லோர்.

விடுதலைப் போராட்ட காலத்தில், பிரிட்டிஷ் ஏகாதி பத்தியத்தை எதிர்த்த நாட்களில், அந்த ஆட்சியை என்னென்ன காரணத்துக்காகக் கண்டித்தோம், எதிர்த்துப் போரிட்டோம் என்பது விடுதலை பெற்ற பிறகு, சுயராஜ்யம் கண்ட பிறகு மறந்தே விட்டோமே, இது ஆகுமா என்று ஆயாசத்துடன் கேட்கிறார், முழக்க முன்னணியில் நின்றவர்; இன்று சுயராஜ்ய சர்க்காரில் இடம் பெற்றுள்ளவர்; அமைச்சர்.

அன்று எழுப்பிய முழக்கம் அவ்வளவும்

மறந்தே போனீர் களே, முறையாகுமா! முன்பு கொண்டிருந்த இலட்சியம் யாவற் றையும் விட்டுவிட்டீர்களே, ஆகுமா, ஐயன்மீர்! முன்பு கூறினவற்றை இன்று நினைவிலே இருந்தே அகற்றிவிட்டீர்களே, தகுமா அரசாளவந்தோரே! என்று நானோ நீயோ கேட்டால், தம்பி! அதே அமைச்சரே கூட ஆர்த்தெழுந்து, ஆஹா! அங்ஙனம் சொல்லலாமா! நாங்களா இலட்சியத்தை மறந்திடுவோர்! எம்மைப் பார்த்தா கேட்கின்றீர்கள் துடுக்குத் தனமாக, பழைய நினைவுகள் உள்ளனவா என்று! - என்றெல் லாம் சாடுவார். ஆனால் அவரே கூறிவிட்டிருக்கிறார், அந்த நாளில் நாம் பேசியதை இன்று மறந்துவிட்டோமே என்பதாக. அன்று பேசியது என்னென்ன என்பது பற்றிய முழுப்பட்டியலை அவர் தரவில்லை. கோடிட்டுக் காட்டியிருக்கிறார்,

அறிவுத் தெளிவுள்ள மக்கள் அதிலிருந்தே முழுவதையும் உணர்ந்து கொள்வார்கள் என்ற நம்பிக்கையுடன்.

பிரிட்டிஷ் ஆட்சியின்போது அதிகார வர்க்கத்துக் காகப் பெருஞ் செலவு செய்யப்படும் அக்கிரமத்தைக் கண்டித்துப் பேசி வந்தோமே, அதனை இன்று நாமே மறந்து விட்டிருக்கிறோமே

என்ற அளவு மட்டுமே அவர் பேசியிருக்கிறார், ஆனால் "அன்றும் இன்றும்' எனும் தொடரும்,"நிலையும் நினைப்பும்' எனும் தொடரும், தன்னாலே மனக்கண் முன்வந்து நிற்கிறதல்லவா?

அன்று அன்னிய ஆட்சியை எதிர்த்துக் கிளர்ச்சி நடாத்திய போது, கண்டித்துப் பேசிய பலவற்றிலே ஒன்றை மட்டும் அமைச்சர் குறிப்பிட்டுக் காட்டினார்.

அதிகார வர்க்கத்திற்காகச் செலவிடப்படும் பெருந்தொகை நாட்டு மக்களின் முதுகெலும்பை முறித்திடும் பெரிய சுமையாக இருப்பதனை, பிரிட்டிஷ் ஆட்சியினால் விளைந்த பல கேடுகளிலே, அதிகாரவர்க்கம் பெருத்ததும் கொழுத்ததும், வரித் தொகையில் பெரும் பகுதியை உறிஞ்சியதும் ஒன்றாகும்.

வயலுக்குப் பாய வேண்டிய தண்ணீரில் பெரும்பகுதியை வாய்க்காலே குடித்துத் தீர்த்துவிட்டால், வளமான விளைச்சல் எங்ஙனம் கிடைத்திட முடியும்? அதுபோலவே மக்களிடம் பெற்றிடும் வரிப்பணத்தில் பெரும் பகுதியை அதிகார வர்க்கம் கொழுத்திடவே செலவிட்டுவிட்டால், மக்களுக்கு நல்வாழ்வு அமைப்பதற்காகத் தேவைப்படும் செலவுக்குப் போதுமான பணம் எங்கிருந்து கிடைக்கும்?

வரி வாங்குவது மக்களின் நலன்களைப் பெருக்கிடவே என்ற உணர்வும், பொறுப்பும்,

அக்கறையும் இருக்குமானால், அதிகார வர்க்கத்தைக் கொழுத்திடச் செய்வதற்குப் பெரும் பொருளைச் செலவிட மனம் இடந்தருமா?

பிரிட்டிஷ் ஆட்சியாளருக்கு, அந்தப் பரிவும் பொறுப்பும் இல்லை. அன்னியர் என்ற காரணத்தால்; அடக்கி ஆளவந்த வர்கள் என்பதனால்; சுரண்டல் யந்திரமாகவே சர்க்காரைக் கருதிய காரணத்தால்!

இந்தக் காரணத்தால்தான், பிரிட்டிஷ் ஆட்சியை எதிர்த்துப் போரிட்டபோது,

கொள்ளைச் சம்பளம் ஒழிக ! என்றும்
கோலாகல தர்பார் ஒழிக ! என்றும்

முழக்கம் எழுப்பப்பட்டது; விடுதலைப்போர் தொடுக்கப்பட்டது; வெற்றி கிடைத்தது; அன்னியராட்சி அகற்றப்பட்டது.

கொள்ளைச் சம்பளமும் கோலாகல

தர்பாரும் ஒழிய வேண்டும் என்று எழுப்பிய முழக்கமும் அதன் தொடர்பான எண்ணமும், விடுதலை பெற்ற பிறகு நினைவிலே இருக்குமானால், நமது ஆட்சி அமைத்ததும்,

கொள்ளைச் சம்பளமும்
கோலாகல தர்பாரும்

ஒழிக்கப்பட்டு, மக்களின் நல்வாழ்வுக்கான வகையில், வரிப்பணம் செலவிடப்பட்டிருக்கும்.

அவ்விதம் இல்லையே என்பதுதான், அமைச்சருக்கே உள்ள வருத்தம். அன்று கொண்டிருந்த எண்ணம் இன்று நினைவிலே இல்லையே என்பது அவருக்கு வியப்பையும் வேதனையையும் தந்திருக்கிறது; அதையெல்லாம் மறந்தே போய்விட்டோமே! என்று கூறிக் குமுறுகிறார்.

ஆட்சியில் உள்ளவர்களைப் பார்த்து, முன்பு சொன்னதை யெல்லாம் மறந்தே

போனீர்களே, இது முறையா என்று கேட்க வேண்டும்; கேட்டிடும் துணிவு எளிதிலே வருவதில்லை.

சென்னைக் கூட்டமொன்றில் பேசும்போது கிருபளானி சொன்னார், அன்னியனின் கொடுங்கோன்மையை ஒழித்துக் கட்ட ஒரே ஒரு பலமான முயற்சி போதும், வெற்றி கிடைத்திடும்.

ஆனால் நம் நாட்டவர்களே நம்மை ஆளும்போது அவர்கள் எண்ணிக்கைப் பலத்தைக்காட்டி நடத்திடும் கொடுங்கோன்மை இருக்கிறதே அதை எதிர்த்து ஒழித்திட ஒரு முயற்சி போதாது, தொடர்ந்து பல முயற்சிகள் மேற்கொண்டாக வேண்டும் என்று குறிப்பிட்டார்.

ஒரு நாட்டு மக்களை அடிமை கொண்டிடும் அன்னியன் நடத்திடும் தர்பார்

கொடுங்கோன்மை என்று உணருவதும், அதனை எதிர்த்துக் கொதித்து எழுவதும் எவ்வளவு எளிதான தோ, அத்தனை எளிதானதல்ல, நம்மவர்களே நம்மை ஆளத்தொடங்கி கொடுங்கோன்மையை நடாத்தும்போது எதிர்த்திடுவது, அதிலே வெற்றி காண்பது.

பாய்ந்து வரும் புலியை அடித்துக் கொன்றிடலாம், ஆற்றலைப் பெற்றுக் கொண்டால். ஆனால் உடலுக்குள் புகுந்து கொள்ளும் கெட்ட கிருமிகளைக் கண்டறிந்து கொல்லுவது அவ்வளவு எளிதானதல்ல மிகப் பக்குவமான மருத்துவ முறையின் மூலமாக மட்டுமே நோய்க் கிருமிகளை அழித்திட முடியும்.

நம்முடைய ஆட்சி நடக்கிறது என்ற நினைப்பே தேனாக இனிக்கும். நெடுங்காலம். கேடுகள் கிளம்பித் தேளெனக் கொட்டும்

போதுகூட, தேனுண்ட மயக்கம் பற்றிக் கொண்டிருக்கும், விட்டுவிட மறுக்கும்.

நம்மவர்களா நமக்குக் கேடு செய்வார்கள்.

அத்தனை ஆற்றலுடன் விடுதலைப் போர் நடத்தியவர்களா விபரீதம் புரிவார்கள்,

இலட்சிய முழக்கம் எழுப்பியவர்களா மக்களை அலட்சியப் படுத்துவார்கள்;

கொடுங்கோன்மையை எதிர்த்தவர்களா, கொடுங்கோலர்க ளாகி விடுவார்கள்.

நமக்கு நலன் பல காணத்தானே அவர்கள் ஆட்சி அமைத்துள்ளனர்,

நாமாகப் பார்த்துத்தானே அவர்களை ஆட்சியில் அமர்த்தினோம்,

ஏழைக்குக் கேடுகள் என்னென்ன வடிவில் இருக்கும் என்பதை எடுத்துச் சொன்னவர்கள்தானே இன்று ஆட்சியில்

உள்ளனர்,

கொள்ளைச் சம்பளம் ஒழிக ! கோலாகல தர்பார் ஒழிக ! என்று முழக்கம் எழுப்பியவர்கள்தானே இன்று முடிசூடா மன்னராகி உள்ளனர்.

என்ற எண்ணம், மக்களிடம் நிரம்பி நின்றிடும். அதன் பிடியி- ருந்து விடுபட்டு, நமது வீட்டு நெருப்பு என்பதாலே அது சுட்டெ ரிக்காமலிருந்திடுமோ, திருவிளக்கு எனினும் முத்தமிட்டால் உதடு புண்ணாகாது போகுமோ, நம்மவர்கள் ஆட்சி என்பதா லேயே, பொல்லாததெல்லாம் நல்லது ஆகிவிடுமோ, தங்கத்தாலான தெனினும் விலங்கு விலங்குதானே என்று உண்மையை உணர்ந்திட, எளிதிலே முடியாது. உணர்ந்த பிறகோ, நாமாகப் பார்த்து, நல்லது நடக்கும் என்று நம்பி, ஆட்சியில் அமர்த்திவிட்டவர்களை, நாமே எப்படி

எதிர்ப்பது என்ற தயக்கம் குறுக்கிடும்.

அதுபோலவே, ஆட்சியில் அமர்ந்ததும், அலட்சியப் புத்தியி னாலோ, ஆணவத்தினாலோ, கூடா நட்பினாலோ, கூட்டுக் கொள்ளைப் போக்கினாலோ இலட்சியங்களைக் காற்றிலே பறக்கவிட்டு விட்டு, ஆணவ அரசு நடாத்திடும் நிலையிலும்,

இந்த மக்களுக்காக என்னென்ன இன்னலை ஏற்றோம்!

இவர்களை அன்னியன் பிடியிலிருந்து விடுவிக்க எத்தனை அரும்பாடு பட்டோம்!

விடுதலை பெற வேண்டும் என்ற உணர்வை இவர்கட்கு ஊட்டினதையும் மறந்தனரே! தலைவரே என்றும் தயாபரா என்றும், தாள் பணிவோம் என்றும், உடல் பொருள் ஆவியைத் தருவோம் என்றும் பேசி வந்த இந்த மக்கள், - முறையா என்றும், சரியா

என்றும், ஆகுமா என்றும், அடுக்குமா என்றும், நம்மையே எதிர்த்துப் பேசுகிறார்களே, நன்றி கெட்ட நிலையில்!

என்று எண்ணிக் கோபித்துக் கொள்வதும், புத்திமதி புகட்ட முனைவதும், அதற்கும் மக்கள் கட்டுப்படாமலிருந்திடின்,

சுயராஜ்யம் என்றால், சுக்கல்ல மிளகல்ல என்றும்,

ஆட்சியை எதிர்த்திடின் அடக்கியே தீருவோம் என்றும்,

கலாம் விளைத்திடின் தண்டனை தருவோம் என்றும்,

மிரட்டிப் பேசிடவும், கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் முனைந்துவிடுவர். அடக்க அடக்க எதிர்ப்பு வளர்ந்திடக் கண்டாலோ,

நாட்டுப்பற்று அற்றவர்கள் நாசவேலைத் திட்டமிடு கிறார்கள் என்றும்,

வெளியேறிய அன்னியனை மீண்டும் அரச பீடம் ஏற்றச் செய்யப்படும் சூழ்ச்சி இது என்றும்,

ஆயுத பலமிக்க அன்னியனை விரட்டிய எமக்கு, இந்த ஆர்ப்பாட்டக்காரர்களை அடக்கி ஒடுக்குவது முடியாததாகுமா என்றும்,

பெற்ற சுதந்தரத்தைப் பேணி காத்திடும் கடமைக்காக, பொறுப்பற்றவர்களை அடக்கித் தீர வேண்டியது எமது கடமை என்றும்,

கிளர்ச்சி மூட்டி கலாம் விளைவித்து ஆட்சியைக் கைப்பற்ற ஒரு சதிக் கும்பல் வேலை செய்கிறது என்றும்,

பதவிப் பித்தம் பிடித்தலையும் ஒரு கூட்டம், சட்டத் தையே துச்சமென்று எண்ணிச் செய்திடும் "அராஜக'த்தை அடக்கிடும் ஆற்றல் எமக்கு உண்டு என்றும்,

புதிதாக விடுதலை பெற்றுப் பொன்னாடாக நம் நாட்டைச் செய்திடும் புனிதப் போர் நடாத்திவரும் வேளையில், புல்லர்கள் கிளம்பி உள்ளனர்; பொசுக்கியே தீருவோம் என்றும்,

நாட்டுப் பற்று என்றால், உரிமை! உரிமை! என்று சதா கூச்சலிடுவது அல்ல;

கடமை! கடமை மறவாதீர் என்றும்,

மிரட்டியும் மயக்கியும். எதிர்ப்பினை முறியடித்திட முனைவர்.

வெளிநாட்டானை எதிர்த்து ஒரு நாட்டு மக்கள் நடாத்திடும் போர், தேசிய விடுதலைப் போர் எனும் சிறப்புப் பெயர் பெற்றிடும்; பற்பல நாட்டினரும் பாராட்டி வரவேற்பர், சிற்சில நாட்டினர் துணையும் புரிவர்.

ஆனால், ஒரு நாட்டு மக்களை அந்நாட்டு மக்களிலேயே சிலர் ஆண்டிடும்போது

ஆட்சிக் கொடுமையினை எதிர்த்து, கிளர்ச்சி நடந்திடின், அதனைச் சட்டத்தையும் ஒழுங்கையும் குலைத்திடும் செயலென்றும் கலகம் குழப்பம் மூட்டிடும் செயலென்றும், உள்நாட்டுக் கலவரம் விளைவித்திடும் பயங்கரமென்றும் ஆட்சியினர் கூறிடுவர்; பற்பல நாட்டினர் ஆமென்பர்; சிற்சிலர் மக்களின் மனக்குமுறலைக் கவனித்துப் பரிகாரம் தேடித்தருவதே முறை என்று வாதிட முன்வந்திடின், "உள்நாட்டு விவகாரத்தில் தலையிடுவது, சர்வதேச நியதிக்கே முரணானது' என்று பேசிடுவர்.

இத்தனை இன்னல்கள் எழும் என்பதனால்தான் கிருபளானி அவர்கள், வெளிநாட்டானின் ஆதிக்கத்தை எதிர்த்து ஒழிப்பது எளிதான காரியம், உள் நாட்டானே ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்டு கேடு செய்திடின், அந்த ஆட்சியை எதிர்த்து நிற்பதும்,

மாற்றி அமைப்பதும் அத்தனை எளிதானதல்ல என்று கூறினார்.

மயக்கவும் மிரட்டவும் வசதியும் வல்லமையும் பெற்றுக் கொள்ளும் நம்மவர் நடத்திடும் ஆட்சியை மாற்றி அமைத்திடும் ஆற்றல் மக்களுக்கு ஏற்பட்டாலொழிய, உண்மையான மக்க ளாட்சி, நல்லாட்சி மலர்ந்திடாது.

அந்த ஆற்றலுக்கு அடிப்படை, ஆட்சியை ஏற்றுக் கொண்ட வர்கள், ஆட்சிக்கு வருவதற்கு முன்பு எதையெதைச் சொன்னார் களோ, அவைகளை மறவாமல், நடந்து கொள்ளுகிறார்களா என்பதை, விழிப்புடன் இருந்து கண்டறியும் திறனும், தவறி நடந்திடின் தடுத்திடும் கடமை உணர்வும், மக்களிடம் வளர வேண்டும்.

அன்னமென்றும் சொர்ணமென்றும்

சொன்னாயே! இப்போது அடித்துத் துரத்திட துணிந்தாயே! வாழ வைப்பேன் என்று கை அடித்தாயே, இப்போ வாட்டி வதைக்கிறாயே வாழ்வையே! - என்று கொடுமை செய்திடும் கணவனை அழுகுரலிலாகிலும் மனைவி கேட்டிடக் காண்கிறோம்! ஆட்சி நடாத்திடுவோர் முன்பு சொன்னவைகளை மறந்து தவறான போக்கிலே செல்லும்போது ஆகுமா இது என்று கேட்டிடவும் அன்றையப் பேச்செல்லாம் நினைவிலே இல்லையா என்று கேட்கவும் மக்கள் முன்வந்தாக வேண்டும்; தன் ஆடையே என்றாலும் அழுக்கு ஏறிவிடின் வெளுத்தாக வேண்டும்.

ஒரு சிலர் துணிந்து கடமையாற்றிடும்போது, அவர்களிடம் கடும் கோபம் கொண்டு, தாக்கிடும் போக்கிலேயே ஆட்சியினர் உள்ளனர் என்றாலும், சிற்சில வேளைகளில், அவர்களையும் அறியாது

உண்மை நிலைமையை அவர்களே எடுத்துக் காட்டிவிடுகின்றனர்.

அத்தகைய ஒரு நேரத்தில் என்று எண்ணுகிறேன், தம்பி! டில்லிப் பேரரசின் அமைச்சர் அளகேசன் அவர்கள்,

தீட்டப்படும் திட்டங்களுக்காகச் செலவிடப்படும் பணத்திலே பெரும்பகுதி வீண் ஆடம்பரத்திற்காகவும், அதிகார வர்க்கத்துக்காகவும் செலவழிக்கப்பட்டு விடுகிறது. பிரிட்டிஷ் ஆட்சியை எதிர்த்து வந்தபோது, அதிகாரிகளுக் கான செலவு பெரிய பளுவாகிப் போயிருப்பதை நாம் கண்டித்து வந்தோமே, இப்போது, அதனை மறந்தே போய்விட்டோமே!

என்று பேசி இருக்கிறார்.

பக்திப் பாசுரங்களில் அளகேசன் அவர்கள் நிரம்ப ஈடுபாடு ள்ளவர்

என்று கேள்விப்பட்டிருக்கிறேன். அதன் காரணமாக வோ என்னவோ ஏற்பட்டு விட்ட குறைபாட்டினை அவரே எடுத்துக்காட்டிட முனைந்திருக்கிறார்.

மாயலோகமிது என்பதனை மறந்தேனே !
மாநிதி திரட்டிடவே முனைந்தேனே !
மாபாதகச் செயலில் அமிழ்ந்தேனே !
மாதேவன் மன்னித்திடுவானோ !

என்றெல்லாம் உள்ள பதிகம்போல, அதிகாரவர்க்கத்திற்காக ஏராளமான பணத்தைக் கொட்டி அழுகிறீர்களே ஆகுமா என்று அன்று கேட்டோமே; இன்று அதனை அடியோடு மறந்து விட்டோமே என்று பேசியிருக்கிறார்.

திட்டங்களுக்காக ஒதுக்கும் தொகையிலே பெரும் அளவு, சொகுசான விடுதிகளை (அதிகாரிகளுக்காக)க் கட்டச் செலவழித்து விடுவது பற்றியும்,

திட்டத்தின்படி அமைக்கப்பட்டுள்ள பல தொழில் அமைப்புகளில் அதிகாரிகளுக்காக அமைக்கப்படும் சிங்காரத் தோற்றம் கொண்ட சிறு நகரங்கள் போன்ற நேர்த்தி, தொழிற் சாலையிலே காணப்படுவதில்லை என்றும் அமைச்சர் அளகேசன் கூறினார்; குமுறினார்.

உள்ளதை உள்ளபடி உரைத்திடுவது உன்னதமான பண்பு என்ற முறையில், இதனை நான் வரவேற்கிறேன்; ஆனால் இந்தக் குறைபாடு ஏற்படுவதற்குக் காரணமாக உள்ள ஆட்சியில் பொறுப்பான பங்கு பெற்றிருப்பவர் என்பதாலே, இவரும் அதற்கு "உடந்தை'யாக இருந்தார் என்பதனை எப்படி எடுத்துக் காட்டாதிருக்க முடியும்?

மக்களின் பணம் பாழாக்கப்பட்டிருக்கிறது. இதனை ஒப்புக் கொண்டுவிடுவது, இழைக்கப்பட்டுவிட்ட கேட்டி னைத் துடைத்துவிடுமா!!

இனி, இதுபோலப் பணம் பாழாகி இருப்பது, இதுவரையில் தெரியாமலிருந்தது. எவரும் இதனை இதற்கு முன்பு எடுத்துக் காட்டிடவில்லை. அதனால்தான் இந்தக் கெடுதல் ஏற்பட்டு விட்டது என்று வாதாடுவார்களோ, தம்பி! அது மிகமிகச் சொத்தையான வாதம் என்றே கூறுவேன். ஏன் என்று கேட்கிறாயா, தம்பி! தக்க காரணத்தோடுதான் அவ்விதம் சொல்லுகிறேன். அதற்கான விளக்கம் அடுத்த கிழமை தருகிறேன்.

அன்புள்ள

அண்ணாதுரை

26-12-65

35. அன்னமென்றும் சொர்ணமென்றும் சொன்னாயே ! - (2)

சுண்டைக்காய் கால் பணம்; சுமை கூலி முக்கால் பணம் !

அமைச்சர் பேசும் பேச்சு வெறும் பசப்புப் பேச்சு !

ஒரேவித வேலைக்கு இருவேறு அதிகாரிகள்!

“தர்பார்’ நடத்தப்பட்டு வரும் விதம் !

”லாண்ட் சீலிங்’கில் பெரும் ஏமாற்றம் !

உழைப்பாளியே கடவுள் !

அழகுத் தேமல் ஆராத நோயாகிவிட்டதே !

வினோபா பாவேயின் கண்டிப்பு !

தம்பி,

வெள்ளை ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப்

போரிட்டு வந்தபோது

கொள்ளைச் சம்பளம் ஒழிக
கோலாகல தர்பார் ஒழிக

என்றெல்லாம் கண்டித்து வந்தோமே, இப்போது அதை எல்லாம் மறந்தே போய்விட்டோமே என்று கூறி வருத்தப் பட்டார் அமைச்சர் அளகேசன் என்று குறிப்பிட்டிருந்தேனே அவர்,

எதை எதை எல்லாம் மறந்துவிட்டார்கள்

என்ற விளக்கமளித்துப் பேசவில்லை; நிர்வாகச் செலவு, ஆடம்பரச் செலவு செய்திடும் போக்கினை மட்டுமே கோடிட்டுக் காட்டினார்.

சென்னைக்கு அருகே பேரரசு அறுவைக் கருவிகள் தயாரிக்கும் தொழிற்சாலை அமைந்துள்ளது. அந்தத் தொழிற்சாலைக்கான நிர்வாகத்

துறையினருக்காகக் கட்டப்பட்டிருக்கும் சிறுநகருக்குச் செலவிடப்பட்டுள்ள தொகையின் அளவைக் கண்டுதான் அமைச்சர் அளகேசன் அவர்கள் மனம் குமுறி அவ்விதம் பேசியுள்ளார்.

ஆடம்பரச் செலவுக்காகக் கொட்டப்பட்டிருக்கும் தொகை, திட்டச் செலவிலே பெரும்பகுதியை விழுங்கி விட்டிருக்கிறது. இது கடன் வாங்கிப் பிழைப்பு நடத்தும் நிலையில்!

ஏழைகள் புழுப்போலத் துடிக்கிறார்கள், அவர்களுக்கு இதமளிக்கும் திட்டத்திற்காகப் பணம் தாராளமாகச் செலவிடாமல்,

விருந்து மாளிகைகள், விதவிதமான மோட்டார்கள், அலங்காரப் பூங்காக்கள், சிங்காரச் செயற்கைக் குளங்கள்

போன்றவைகளுக்காகப் பணத்தைப்

பாழாக்குகின்றனரே பாவிகள்! அன்னியர் என்பதால் அல்லவா. நமது நாட்டு ஏழைகளிடம் பரிவு பச்சாதாபம் பிறக்கவில்லை, நமது சொந்த ஆட்சி நடைபெற்றால், இப்படிப்பட்ட நிலைமை நீடிக்க விடுவோமா என்று பேசினவர்கள் இன்று ஆட்சியில் அமர்ந்துள்ளனர்; ஆனால், அவர்களின் போக்கு.

சுண்டைக்காய் கால்பணம் சுமைகூலி முக்கால் பணம்.

என்று கூறத்தக்க விதமாக இருக்கிறது. இதைக் கண்டு உள்ளம் நொந்து அமைச்சர் அளகேசன் பேசினார்.

இவர் பரவாயில்லை! இதுபற்றிப் பேசவாவது செய்தாரே. மற்றவர்கள் பேசவும் மறுக்கிறார்களே! இவராவது இந்த விரயத்தைக் கண்டறிந்து கூறினார்,

மற்றவர்கள் இதுபற்றிய கவலையற்று உள்ளனரே என்று எண்ணத் தோன்றும் ஆனால், உண்மை அதுவல்ல. இதுபோல மனக்குமுறலை வெளியிடு வதனை ஒரு "வாடிக்கை'யாக, ஒரு "பிரச்சாரக் கலை'யாக ஆக்கிக் கொண்டுவிட்டனர் ஆட்சியாளர். வீண் செலவு குறித்தும், ஆடம்பரம் பற்றியும், கொழுத்த சம்பளம் குறித்தும், கோலாகல தர்பார் பற்றியும் பேசுவதைக் கேட்கும்போது, மக்கள் அவர்களைப் பாராட்டவும் செய்கின்றனர். ஆனால், இந்த "வீண் செலவு' ஏற்படாதிருக்க வழி காணப்படுகிறதா என்று பார்த்தால் விந்தையாக இருக்கும்; கொள்ளைச் சம்பளமும் கோணல் செலவும் தொடர்ந்து நடந்தபடிதான் இருந்து வருகிறது.

இன்று அமைச்சர் அளகேசன், எடுத்துக் காட்டியதைப் போலவே "சுதந்தர'

இந்தியாவின் பிரதமர் என்ற முறையில் பண்டித ஜவஹர்லால் சோவியத் ர□யர் சென்றிருந்த போது, சைபீரியாவில் பனிக்காடுகளைக் கோதுமை வயலாக மாற்றி அமைக்கும் தீவிரமான திட்டத்தை மேற்கொண்டிருந்த அதிகாரிகள், தமக்காக வசதியான, அழகு நகர்களை அமைத்துக் கொள்ளாமல், தற்கா-கமாகக்"கூடாரங்கள்' அமைத்துக் கொண்டு அதிலே இருந்து கொண்டு, தமது பணியினை நடாத்தி வந்ததனைக் கண்டு பெரு வியப்படைந்து, அதுபற்றிக் குறிப்பிட்டுக் காட்டி, இந்தியாவிலே செய்யப்படும் வீண் ஆடம்பரச் செலவு பற்றிச் சாடினார்!

சாடினார்! அவ்வளவுதான்! அதனைக் கேட்டு கேலிப் புன்னகை யுடன், அதிகாரவர்க்கம் பழைய போக்கிலேயே சென்று கொண்டிருந்தது. பண்டிதர் அந்த

முறையைத் திருத்தி அமைத்திட முனைந்தார் இல்லை. பொருள் உற்பத்திக்காக அமைக்கப்படும் தொழிற்சாலைகளில், மிகப்பெரிய அளவு தொகை, துரைமார்கள் காலம் போலவே, விடுதிகளுக்கும் நிர்வாகத்தினரின் வசதிகளுக்கும் பெருமளவு செலவாகிக் கொண்டு வந்தது. ஆண்டு பலவற்றுக்குப் பிறகு, பண்டித நேரு சுட்டிக் காட்டியதை, இப்போது அமைச்சர் அளகேசன் எடுத்துக் காட்டுகிறார். கண்டுபிடிப்பும் அல்ல, வேறு எவருக்கும் எழாதிருந்த துணிவும் அல்ல அது!

கண்டோரை மலைக்கச் செய்திடும் கட்டடங்கள் விண்ணை முட்டும் விதத்தில்! இரவைப் பகலாக்கிடும் விதமான பளபளப்பு! ஜொலிப்பு! வெள்ளையர் காலத்தில் தரப்பட்டது போன்ற கொள்ளைச் சம்பளம்! வெப்பத் தடுப்பு முறைகள்! மலையூர் பயணம்! என்று குறைவில்லை, இவை

கூடாது என்று பேசுவதற்கும் தயங்கவில்லை; கூடாதவற்றைக் கூசாமல் செய்திடும் போக்கும் நின்றபாடில்லை.

இவை கூடாது தடுக்கப்பட்டாக வேண்டும் என்பதிலே உண்மையான நாட்டம் இருந்திடின் காங்கிரஸ் அமைச்சர்கள் பொதுக் கூட்டத்திலா இவை பற்றிப் பேசுவார்கள்! தமது கட்சிக் கூட்டத்திலே பேசி, இந்த வீண் செலவினை நிறுத்தியிருப்பர்.

அதைச் செய்யாது, ஊர்மெச்ச ஒரு நாளைக்கு இது பற்றிப் பேசுவது பயனில்லை என்பது மட்டுமல்ல; வெறும் பசப்பு என்பதும் வெட்ட வெளிச்சமாகிறது.

இதற்காக இத்தனை கோபமா! நிர்வாகத்தைத் திருத்தி அமைத்திட இப்போது பேரரசு திட்டமிட்டுச் செயலாற்றத் தொடங்கி விட்டது; மொரார்ஜி தேசாய் தலைமையில்

இதற்கென ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது; தெரிந்துகொள்! என்று துந்துபி முழக்குவர், உணர்கிறேன். ஆனால் தம்பி! நிர்வாகத்தைத் திருத்தப் போகிறோம், செலவைக் குறைக்கப் போகிறோம், தரத்தை உயர்த்தப் போகிறோம், மந்தத்தனத்தை மாய்த்திடப் போகிறோம் என்றெல்லாம் இதற்கு முன்பு எத்தனையோ முறை கூறினரே, என்ன ஆயிற்று என்று கேட்டுப்பார்! குழுக்கள் அமைத்தனரே, என்ன விளைவு என்று கேட்டு அறிந்து கொள்ளேன் பார்க்கலாம்! வெளி நாட்டி லிருந்தே தருவித்தார்கள்; இதற்காகவே - ஆப்பீல் பீ என்பவரை; அவரும் பேரரசின் நிர்வாக முறைபற்றி நன்கு ஆராய்ந்து பார்த்து, திருத்தி அமைக்கப்படுவதற்கான வழி முறைகளை வகுத்தளித்தார். ஆப்பீல் பீயின் அறிக்கை என்ன ஆயிற்று? என்று கேட்டுப்பார். இரண்டொரு ஆண்டுகளுக்கு

முன்பு நிர்வாகச் செலவை 100-க்கு 10 என்ற அளவு குறைத்துக் காட்டுகிறேன் பார்! என்று சூளுரைத்து, அதற்காக ஒரு குழு அமைத்தார், டி. டி. கிருஷ்ணமாச்சாரி. கண்ட பலன்-?

எனவே இப்போது மொரார்ஜி தேசாய் குழுவின் மூலம், நிர்வாகம் திருத்தி அமைக்கப்படும் என்று எப்படி நம்புவது? மொரார்ஜி திட்டம் காரணமாக நிர்வாகச் செலவிலே சிக்கனம் ஏற்படும் என்று எந்தச் சான்றினைக் கொண்டு உறுதி பெறுவது?

துவக்கமே, கசப்பினை அல்லவா கிளறுவதாக இருந்திடக் காண்கிறோம். நிர்வாகத்தைத் திருத்தி அமைத்து, சிக்கனம் காண அமைகிறதே மொரார்ஜி குழு, அது வேலையைத் துவங்குவதற்கு முன்பே ஒரு கொலு அமைத்திட விரும்புகிறது. இந்தக் குழுவின் அலுவல்களைக் கவனிக்க, உடனடியாக.

8 கூட்டுக் காரியதரிசிகள், 28 துணைக் காரியதரிசிகள், 243 கிளார்க்குகள்.

வேண்டுமாம்! கேட்டாயா தம்பி! வேடிக்கையை! நிர்வாகச் சிக்கனத்திற்குத் துவக்க விழா!!

40 மோட்டார்கள் வேண்டுமாம், இந்தக் குழுவின் அலுவல்களுக்கு! இந்தக் குழு எங்கெங்குப் பயணம் நடத்துமோ, எவ்வளவு பயணப்படி, வசதிப்படி விழுங்குமோ யார் கண்டார்கள்! காஷ்மீரத்துச் சீநகரிலும் தமிழகத்து கொடைக்கானலிலும், குழு, விசாரணைகளை நடத்திடக் கூடும். ஒவ்வொரு மாநிலத்திற்கும் பயணம் நடாத்தி, கருத்தறியக் கூடும். மொத்தத்தில் எவ்வளவு செலவாகுமோ, தெரியவில்லை.

அதிகாரிகள் பயணம் செய்யும்போது செலவு எந்த அளவுக்குச் செல்லக்கூடும்

என்பதை ஓரளவு புரிந்து கொள்ள ஒரு கணக்குத் தருகிறேன்.

(1965-ல்) இந்த வருஷம் முதல் ஏழு மாதங்களில் வெளிநாடுகள் பயணம் செய்த அதிகாரிகளின் எண்ணிக்கை 1689.

அதிகாரிகள் சென்று வந்த வெளிநாடுகளின் எண்ணிக்கை 46.

இதற்காகச் செலவான தொகை ஒரு கோடி ரூபாய்.

ஒரே வகையான வேலைக்கு இரு வேறு துறையின் அதிகாரிகள் உள்ளனர்; இதனால் இரட்டிப்புச் செலவாகிறது என்பதுடன், இரு வேறு அதிகாரிகளின் நடவடிக்கைகளும் ஒன்றுக்கொன்று துணை செய்யும் முறையில் அமையாமல், ஒருவர் வேலையை மற்றவர் வேலை குந்தகப்படுத்துவதாக அமைகிறது என்பதனை, இனி ஒரு நிபுணர் குழு

கண்டறிந்து கூறத் தேவையில்லை; ஏற்கனவே அறிந்துள்ளனர்.

எடுத்துக்காட்டாக ஒன்றினைக் குறிப்பிடுகிறேன் தம்பி! நாட்டிலே விவசாயப் பொருள் உற்பத்தியைத் திட்டமிட்டுத் தீவிரமாக்குகிறார்களல்லவா!. . ஏன் தம்பி அப்படிப் பார்க்கிறாய் - அவர்கள் சொல்வதைச் சொல்கிறேன் - அந்தத் தீவிரத் திட்டத்திற்காக - உற்பத்திப் பெருகுவதற்காக - யாரார் பணியாற்றுகிறார்கள், தெரியுமா? விவசாயிக்குக் கடன் சிடைத்திடச் செய்தல், உரம் கிடைத்திடச் செய்தல், பூச்சிமருந்து கிடைத்திடச் செய்தல், பாசனவசதி (கிணறு வெட்டுவது) செய்தளித்தல், பொறுக்கு விதைகள் கொடுத்து உதவுதல் - ஆகிய இவைகளைக் கவனித்துக் கொள்ளும் பொறுப்பு ஒரு துறைக்கு அல்ல;

சமுதாய நல அபிவிருத்தித் திட்டத்துறை,

விவசாயத் துறை.

எனும் இரு "துறையினரும்' இதைக் கவனித்துக் கொள்கின்றனர்.

ஒரேவிதமான வேலை, அதற்கு இருவேறுவிதமான "அதிகாரிகள்' - என்ன நடக்கும்? நடக்கக் கூடியது என்ன என்பது விளங்கவில்லையா! இப்போதுதானே திரும்பி இருக்கிறார் உணவு அமைச்சர் அமெரிக்காவிலிருந்து - கோதுமையும் அரிசியும் மலை மலையாகத் தருவதற்கு ஏற்பாடு செய்து கொண்டு இனி அவரை"வானமும் பூமியும்' மிரட்ட முடியுமா! பூச்சியும் புழுவும் நெளிந்து அவருக்குச் சங்கடம் விளைவிக்க முடியுமா! அதோ கப்பல்! பார்! பார்! பெரிய கப்பல்!! பலநாட்டுக் கப்பல்! எல்லாவற்றிலும் கோதுமை! அரிசி! ஏராளமாக! என்றல்லவா எக்காளமிடுவார்.

ஏதோ ஓர் நகைச்சுவைப் பேச்சினைப் பார்த்தேன், தம்பி!

பள்ளிக்கூடத்து ஆசிரியர், மாணவனைக் கேள்வி கேட்கிறார்; நமக்குத் தேவைப்படும் கோதுமை எங்கெங்கு விளைகிறது? என்று.

மாணவன் கூர்மையான அறிவு படைத்தவன். ஆகவே பதில் சொன்னான்; கோதுமை பஞ்சாப், உத்திரப்பிரதேசம், அமெரிக்கா போன்ற இடங்களில் அமோகமாக விளைகிறது என்று.

நிலைமை இவ்விதம் இருப்பதால், உணவுப்பொருள் உற்பத்தியைத் திட்டமிட்டு அதிகமாக்குகிறார்கள் என்று நான் சொல்லும்போது, உனக்குப் புன்னகை எழுகிறது.

இந்தத் திட்டமிருக்கிறதே - உணவு உற்பத்தி அதிகரிப்புத் திட்டம் - இதற்காக

விவசாயிகளுக்குத் தேவைப்படும் வசதி களைச் செய்தளிக்கும் பொறுப்பை, விவசாயத்துறை, சமுதாய நலத்துறை எனும் இரு துறைகளும் பொறுப்பேற்றுக் கொண்டிருப்பதால், வேலை நேரமும், வேலையை முடித்துக் கொள்ள எடுத்துக் கொள்ளப்படும் முயற்சியும் இரட்டிப்பு ஆகிறது; யாரிடம் எதைக் கேட்பது? யாரிடம் எதை எந்த முறையில் கேட்பது? என்பதைக் கண்டறிந்து காரியத்தை முடித்துக் கொள்வதே ஒரு பெரிய சிக்கலுள்ள வேலையாகி, குடியானவர்களை அலைக்கழிக்கிறது.

இரு வேறு துறையினர் ஒரு வேலையைக் கவனித்துக் கொள்ள அமர்த்தப்பட்டிருப்பதால் நிர்வாகச் செலவும் இரட்டிப்பு ஆகிவிடுகிறது.

இதுபற்றிப் பலமுறை எதிர்க்கட்சியினர், பொது நிலையில் உள்ளவர்கள் எடுத்துக் காட்டியாகிவிட்டது. ஒரு திருத்தமும் ஏற்படக்

காணோம்.

இதழ்களைப் பார்த்தால் தம்பி! விவசாயத் துறையினர் நடத்திடும் மாநாடு பற்றிய செய்தியும், அந்தத் துறையினர் உணவு உற்பத்திக்காக மேற்கொள்ளும் தீவிரத் திட்டம் பற்றியும் பேசப்படும் கருத்து விருந்தும் கிடைக்கிறது. அதுபோலவே உணவுப் பொருள் உற்பத்திப் பெருக்கத்துக்காக, எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கும் ”பயன் தரும்’ முறைகள் பற்றி சமுதாய நலத்துறையினர் பேசுவதும் வெளிவருகிறது.

ஏன் இதுபோல இருவேறு துறையினரிடம் ஒரே வேலையைக் கவனித்துக் கொள்ளும் பொறுப்பு ஒப்படைக்கப்பட வேண்டும். புரியவில்லை!

மத்தியப்பிரதேசம் துணிந்து கூறிவிட்டது. எங்களுக்கு வட்டார வளர்ச்சி அதிகாரிகள்

(B.D.O.) தேவையே இல்லை! என்று.

எந்த (B.D.O.) வட்டார வளர்ச்சி அதிகாரிகளால்தான் விவசாயத்துறையில் புரட்சிகரமான மாறுதல் ஏற்பட்டு, உணவுத் துறையில் "தன்நிறைவு' ஏற்படப் போகிறது என்று மற்ற எல்லா மாநிலங்களிலும் பேசப்பட்டு வருகிறதோ, அந்த அதிகாரிகளே வேண்டாம் என்று மத்தியப்பிரதேசம் தெரிவித்துவிட்டது.

இதைவிடக் கடுமையான கண்டனம் வேறு என்ன இருக்க முடியும், வட்டார வளர்ச்சித் துறை என்ற திட்டத்துக்கு?

பாராளுமன்றத்திலேயும் இது பற்றிய பேச்சு எழுந்தபோது பல உறுப்பினர்கள் - கட்சிப் பாகுபாடு அற்று - ஆறுதல் புன்னகை உதிர்த்தனர் - அப்பாடா! என்றனர்.

வினோபாபாவே மேலும் ஒருபடி

முன்னாலே சென்று மத்தியப்பிரதேசத்தில் B.D.O. பதவிகளையே எடுத்து விட்டதை வரவேற்கிறேன்; நாடு முழுவதுமே இதுபோலச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறார்.

கிராமராஜ்யம் அமைய வேண்டும் என்ற நோக்கம் கொண் டவர் அந்தத் தூயவர்.

கிராமராஜ்யம் அமைக்கத்தான் பணியாற்றி வருகிறோம் என்று பேசுபவர்கள் வட்டார வளர்ச்சி அதிகாரிகள்.

வட்டார வளர்ச்சி அதிகாரிகளால் உருப்படியான எந்தப் பலனும் நலனும் விளைந்திடவில்லை, அந்த அதிகாரிகளே தேவையில்லை என்று வினோபா கூறும் அளவுக்குத் ”தரமாக’, நேர்த்தியாக வேலை நடந்திருக்கிறது விளங்குகிறது அல்லவா!

நிர்வாகத்திலே வீண் செலவும் வேலை நடப்பதிலே குந்தகமும் ஏற்பட்டிருப்பது பற்றி

எடுத்துக்காட்ட பல உள; ஒன்று மட்டுமே காட்டினேன்.

கொள்ளைச் சம்பளம் பற்றியும் கோணல் முறை பற்றியும் முன்பெல்லாம் கண்டித்துக் கொண்டிருந்தோமே இப்போது அந்தக் கண்டனத்தையே நாம் மறந்துவிட்டோமே என்று அமைச்சர் அளகேசன் வருத்தப்பட்டார்; அமைச்சர் சுப்பிர மணியமோ, நிர்வாக யந்திரமே துருப்பிடித்துக் கிடக்கிறது என்று வெளிப்படையாகவே பல கூட்டங்களிலே கண்டித்துப் பேசிவிட்டார்.

விவசாய அமைச்சுத் துறையில் உள்ள அலுவலர்களில் 100-க்கு 75 பேர்களுக்கு விவசாயம் பற்றிய தொடர்பு தரும் அறிவோ, கிராமிய மனப்பாங்கோ இல்லை. நிர்வாக யந்திரம் கிழமாகிக் கிடக்கிறது பத்தாம் பசலியாக இருக்கிறது.

இதைவிட மோசமான ஒரு நிலை இருக்கவே முடியாதல்லவா? வெள்ளை ஏகாதிபத்தியம் இருந்தபோது, அதிகாரிகளிடம் என்ன குறை காணப்பட்டதோ அந்த நாட்களில் இருந்த அதிகாரிகளுக்கு மக்களின் குறைகள், பிரச்சினைகள் எப்படிப் புரியாமல் இருந்து வந்ததோ, அதுபோலவே இப்போதும் இருக்கிறது என்றால். இந்தப் பதினெட்டு ஆண்டுகளாக இவர்கள் சாதித்தது என்ன என்று கேட்டுத்தானே தீர வேண்டும்! ஏன் அதிகாரிகளின் போக்கை மாற்றி அமைத்திருக்கக் கூடாது? யார் வேண்டாமென்றார்கள்? எது குறுக்கிட்டது?

தம்பி! இதிலே ஒரு வேடிக்கை என்னவென்றால், பழைய மனப்பான்மையுள்ள அதிகார வர்க்கத்தை மாற்றி அமைத்து, புதிய நிர்வாக முறையைப் புகுத்தவே சமுதாய நலத் திட்டத்தில்

வட்டார வளர்ச்சி அதிகாரிகள் (B.D.O) என்ற "புதியவர்களை' அமர்த்துகிறோம் என்று ஆளுங்கட்சியின் தலைவர்கள் மார் தட்டிக் கொண்டார்கள்.

இப்போது அவர்களே தலையில் அடித்துக் கொள்ளு கிறார்கள், வட்டார வளர்ச்சி அதிகாரிகள் (B.D.O.) சரியாக இல்லை என்று.

அந்த அதிகாரிகளை மூட்டை கட்டிக் கொள்ளச் சொல்லி விட்டோம் என்று மத்தியப்பிரதேச அமைச்சரவை கூறிவிட்டது.

எத்தனை எத்தனை எக்களிப்புடன் இந்த அதிகார வர்க்கத்தை உருவாக்கி உலவவிட்டார்கள், இப்போது எவ்வளவு பலமாக குட்டுகள் அவர்கள் தலையில் விழுகின்றன என்பதைப் பார்க்கம்போது, விந்தையாக இருக்கிறது; இத்தகைய தேவையற்ற காரியத்துக்காகச்

செலவாகியுள்ள தொகையைப் பார்க்கும்போது வேதனையாகவும் இருக்கிறது.

உணவு அமைச்சர் சுப்பிரமணியமோ தமது துறையிலே உள்ளவர் களிலே முக்கால் பங்கு, உருப்படியில்லை என்று கூறிவிட்டார்.

அங்கே போய் விட்டாரே நமது நண்பர், அவர் பாடியது தான் நினைவிற்கு வருகிறது.

"ஒரே ஒரு ஊரிலே ஒரே ஒரு ராஜா' என்ற பாட்டு. அதுபோலல்லவா இருக்கிறது.

"ஒன்பதிலே ஒன்றுகூட உருப்படி இல்லை' என்பதாக!!

சந்திகளில் பேசுகிறார் அமைச்சர் சுப்பிரமணியம், இந்த நிலைமை பற்றி, வெகு தெளிவாக, வெகு துணிவாகக்கூட. அமைச்சர்கள் வெறும் "ரப்பர் ஸ்டாம்புகளாக' - முத்திரை குத்துபவர்களாக - மட்டுமே

இருக்க முடிகிறது. ஏனெனில், அவர்களிடம், அந்த"இலாகாவினர்', ஏற்கனவே அதிகாரிகள் பார்த்து முடிவு செய்துவிட்ட திட்டத்தைத்தான் நீட்டுகிறார்கள், கையொப்பத்திற்கு! வேறு மாற்றுத் திட்டங்கள் தரப்படுவதில்லை. எனவே, தம்மிடம் தரப்படுகிற திட்டத்தை ஒப்புக் கொள்வது தவிர வேறு வழி இருப்பதில்லை.

தம்பி! தர்பார் எப்படி நடத்தப்பட்டு வருகிறது என்பது புரிகிறதல்லவா?

இந்த இலட்சணத்தில் கொள்ளைச் சம்பளம் கோலாகல தர்பார், வீண் செலவு!

அமைச்சர் சுப்பிரமணியம் மெத்தவும் துணிச்சல் உள்ளவர், புட்டுப்புட்டுக் காட்டிவிட்டார் என்றும் கூறிவிடுவதற்கில்லை.

நிர்வாக யந்திரம் பற்றிய கண்டனம் இருக்கிறதே, "பத்தாம்பசலி'ப்போக்கு இருக்கிறதே, அதனைக் கண்டறிந்து கூறின

முதல்"தீரவான்' என்ற "விருதும் அமைச்சர் சுப்பிரமணியத் துக்குக் கொடுத்து அவரை மகிழ்ந்திடச் செய்ய முடியவில்லையே என்று எனக்கு வருத்தந்தான். ஏனெனில், இவர் இவ்விதம் பேசுவதற்கு ஆண்டுகள் பலவற்றுக்கு முன்னாலே, பிரதம மந்திரி பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் இதே கண்டனத்தை அவருக்கே உரிய பாணியில் அழகுபட எடுத்துக் கூறி இருக்கிறார்.

1960-ம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 22-ம் நாள் பேசுகிறார் பண்டிதர்,

நாம் நமது பிரச்சினைகளின் வேகத்தை உணர்ந்து கொள்ளாமல், விக்டோரியா மகாராணியார் கால மனப்போக்குடன் (நிர்வாக) வேலை செய்து கொண்டு வருகிறோம். வாதாடிக் காலந்தள்ளிக் கொண்டிருக் கிறோம். பந்தாட்டத்தில் இவர் அவரிடம், அவர் இவரிடம் பந்தை

வீசிவிடுவது போல, பிரச்சினைகளை ஒருவர் மற்றொருவரிடம் தூக்கிப் போட்டுக் கொண்டு இருக்கிறோம்.

அதே "பந்தாடும்' போக்கினைத்தான் அமைச்சர் சுப்பிரமணியம் காணுகிறார்; காட்டுகின்றார். ஆனால்"ஓட்டுகள்' மட்டும் எமக்கு வேண்டும் - எமக்கே வேண்டும் என்று மட்டும் கூசாமல் கேட்கிறார்கள்!

பண்டித நேரு நிர்வாக யந்திரத்தை அந்த விதமாகக் கண்டித்ததற்குக் காரணம் தம்பி! அமெரிக்க அறிஞரொருவர், உலகின் பல இதழ்களில் நேர்த்தி மிக்க விளக்கக் கட்டுரைகளை வெளியிட்டு, கருத்துக்களை வடிவமெடுக்கச் செய்திடும் வல்லவர், வால்ட்டர் லிப்மான் என்பவர் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தைப் பார்த்துவிட்டுச் சொன்னார்:

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் மூலம் சாதிக்கப்பட வேண்டிய புரட்சிகரமான வேலைகளைச் செய்திடக்கூடிய நிலையிலா, விக்டோரியா கால மனப் பான்மையுள்ள அதிகாரிகள் இருக்கிறார்கள் என்பதை எண்ணி நான் வியப்படைந்தேன், சமூகம் முழுவதும் எழுச்சி பெற்று நின்றாலொழிய மிகப்பெரிய பொருளா தாரப் புரட்சியை, பாராளுமன்ற அரசியல் வாதிகளாலும், நிர்வாக அதிகாரிகளாலும் சாதித்திட முடியுமா என்று ஐயம் கொள்கிறேன்.

வால்ட்டர் லிப்மான் கூறியதை ஒப்புக் கொள்ளுகிற முறையிலே தான் பண்டிதர் அதுபோலப் பேசினார்.

வீண் செலவு, நிர்வாகத் திறமைக் குறைவு, கர்னாடக மனப்பான்மை என்பவைகள் திடீரென்று முளைத்து விட்டவைகள் அல்ல, இன்று கண்டு பிடித்துக் கண்களைக்

கசக்கிக் கொள்ள. அவற்றுடன் சேர்ந்தே காங்கிரஸ் அரசு வளர்ந்து கொண்டு வந்திருக்கிறது; அவற்றைப் பயன்படுத்திக் கொண்டும் காங்கிரஸ் வளர்ச்சியைத் தேடிக் கொண்டிருக்கிறது.

நிர்வாகத் திறமைக் குறைவு காரணமாகத்தான் உணவுத் துறையில் நெருக்கடி ஏற்பட்டு விட்டது என்பதைச் சுட்டிக் காட்டாதவர்கள் இல்லை.

சொன்னதும், காங்கிரஸ் அமைச்சர்கள் தமது முகத்தைக் கடுகடுப்பாக்கிக் கொண்டு, போ! போ! தெரியும்! தெரியும்! என்று கையை அசைப்பதும், கனைத்துக் காட்டுவதுமாக உள்ளனரே யன்றி, எங்கே நிலைமைகளைத் திருத்த முற்பட்டனர்?

புதுமுறைக் கருத்துகள் கிடைக்காமலில்லை, போதுமான பணவசதி

கிடைக்காமற் போகவில்லை. எனினும், சரியான முறையிலே நிர்வாகம் நடத்தி, எதை எப்போது செய்வது, எதற்கு முதலிடம் தருவது என்ற வகை தெரிந்து நடந்து கொள்ளாததால்தான், உணவு உற்பத்தித் துறையிலே நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது.

இதுதான், வெளிநாட்டு நிபுணர்கள் கண்டறிந்து கூறியது. கடுங்கோபம்தான் பீறிட்டுக் கொண்டு வந்தது காங்கிரஸ் அமைச்சர்களுக்கு; இப்போது உணவு அமைச்சர் சுப்பிரமணியம் சொல்லுகிறார் நாங்கள் "ரப்பர் ஸ்டாம்புகள்' என்று!!

நிலச் சீர்த்திருத்தச் சட்டத்தின் மூலமாகத்தான் உழவன் உள்ளம் மகிழ்ச்சி கொள்ள முடியும்.

உழவன் உள்ளம் மகிழ்ச்சி அடைந்தால்தான், உற்பத்திப் பெருக்கம்

ஏற்படும்.

அதனால் நிலத்துக்கு உச்சவரம்பு கட்டுகிறோம் என்று காங்கிரஸ் அமைச்சர்கள் பேசியபோது, மகிழ்ச்சியும் எழுச்சியும் பொங்கி வழிந்தது. இப்போது?

உச்சவரம்புச் சட்டத்தினால் உருப்படியான பலன் கிடைக்கவில்லை.

சட்டம் ஏட்டிலே இருக்கிறது; நடைமுறையில் இல்லை.

அப்படி ஒரு சட்டம் இருக்கிறது என்ற நினைப்போ, அதைச் செம்மையாக நிறைவேற்ற வேண்டுமே என்ற கடமை உணர்வோ அதிகாரிகளுக்கு இருப்பதாகத் தெரியவில்லை.

இப்படிக் கூறியுள்ளார் அமெரிக்காவிலிருந்து வந்திருந்த விவசாயத்துறை நிபுணர்.

சட்டம் உருவாக்கப்பட்ட போதே, அதிலே உள்ள "ஓட்டைகளை'யும், அந்த ஓட்டைகளை அடைக்காமல் சட்டமாக்கினால், ஒரு பலனும் கிடைக்காது என்பதையும், நாம் தம்பி! எடுத்துக்காட்டாமலா இருந்தோம்?

உங்களோடு சேர்ந்து விட்டுள்ள நிலப்பிரபுக்கள் உச்ச வரம்புச் சட்டத்தை மனப்பூர்வமாக ஏற்றுக் கொண்டு, அதை நேர்மையாக நிறைவேற்றி வைப்பார்களா? என்று நான் கேட்டபோது, எத்தனை கேலிப் பார்வை என்மீது பாய்ந்தது.

இம்முறை டில்லிப் பேரரசில், உணவு அமைச்சராக இருக்கும் சுப்பிரமணியம் அவர்களையே கேட்க வாய்ப்புக் கிடைத்தது.

உங்கள் கட்சியினர் உள்ள பக்கமாகத் திரும்பி வெகு கம்பீரமாக கை அசைத்துச் சொன்னீரே, ஐயா! எம்முடன் உள்ள நிலப்

பிரபுக்கள் “தேச பக்தர்கள்’ - அவர்கள் இந்தச் சட்டத்தை ஒழுங்காக நிறைவேற்றிக் கொடுப்பார்கள் என்றீர்களே? இப்போது என்ன நடந்திருக்கிறது? என்று கேட்டபோது, பொருள் மிகுந்த ஒரு புன்னகைதான் பதிலாகத் தவழ்ந்திடக் கண்டேன். என்னை விட்டுத் தள்ளு தம்பி! காங்கிரஸ் கட்சியினரிலேயே எத்தனைபேர் அப்போதே சுட்டிக் காட்டினார்கள். இந்தச் சட்டம் சரியான முறையில் உருவாக்கப்படவில்லை. உழவனுக்கு இதனாலே உருப்படியான பலன் கிடைக்கப் போவதில்லை என்று கேட்டார்களா காது கொடுத்து? மதித்தார்களா துளியாவது? இல்லையே! தமது பக்கம் உள்ள ஆள் கணக்கை எண்ணி எண்ணி இறுமாந்து கிடந்தார்கள். இப்போது பேரரசில் கொலுவிருக்கும் டி. டி. கிருஷ்ணமாச் சாரியாரே ஒப்புக்

கொள்கிறார்,"நிலச்சுவான் தார்கள் ஏமாற்றி விட்டார்கள், என்று. நமது மாகாணத்தை எடுத்துக் கொண்டால் உள்ள நிலத்தில் மூன்றில் ஒரு பாக நிலம் கோவில்களுக்கும் தர்ம ஸ்தாபனங்களுக்கும்தான் சொந்தமாக இருக்கிறது. அவைகளின் வரலாற்றைத் திரையிட்டு மறைக்கப் பார்க்கிறார்கள். தர்ம ஸ்தாபனங்களின் பெயரில் நிலத்தை வைத்துக் கொண்டு இலட்சக் கணக்கான ரூபாய்கள் கொள்ளையடிக்கப்படுகிறது இந்த நாட்டில் என்பதை எடுத்துக் காட்ட முடியும். இப்பொழுது ஒரு வருஷத்திற்குள்ளாக ஏற்பட்டிருக்கிற பாலிடெக்னிக், காலேஜ்கள், ஹைஸ்கூல்கள் இவைகளுக்கு எவ்வளவு நிலம் ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கின்றன என்பதைப் பார்க்க வேண்டும். அதன் டாகுமெண்ட்ஸ் எப்படி இருக்கிறது என்று பார்க்க வேண்டும். ஒரு ஹைஸ்கூலை

நிர்வகிக்க 2000 அல்லது 3000 ரூபாய்கள் வருடம் ஒன்றுக்குக் கொடுப்பது என்ற முறையில் அதற்கு 200 ஏக்கர் நிலம் எழுதி வைக்கப்பட்டிருக்கிறது. நான் கேட்கிறேன். 200 ஏக்கர் நிலத்தின் வருமானம் 2000மா! இவ்வளவு நிலம் இதற்காக எழுதிவைக்க என்ன அவசியம் இருக்கிறது?

அரசாங்கத்தை ஏமாற்றி லாண்ட் சீலிங்கைத் தவிர்க்க வேண்டுமென்று நினைக்கிற தஞ்சை ஜில்லாவிலுள்ள பணக்காரர்களின் பட்டியலை நான் கொடுக்க முடியும்.

தண்ணீர்ப்பந்தலுக்காகப் பத்து வேலி எழுதி வைத்திருக்கிறார்கள். தண்ணீர்ப்பந்தல் வைப்பதற்கே 10 வேலி அவசியமா? ஒரு பிள்ளையார் கோவிலுக்குப் பத்து வேலி எழுதி வைத்திருக்கிறார்கள். ஒரு பிள்ளையார் கோயிலை வைத்து நடத்த

10 வேலி அவசியமா? ஒரு எலிமெண்டரி ஸ்கூல் நடத்துவதற்கு 20 வேலி எழுதி வைத்திருக்கிறார்கள். அதற்கு 20 வேலி அவசியமா?

இப்படி அரசாங்கம் ஏமாற்றப்படுமானால் இந்த லாண்ட் சீலிங் வருவதும் வராமல் இருப்பதும் ஒன்றுதான்.

இதைப்பற்றிச் சொல்லும்போது, ஆண்டவன் தலைமேல் கை வைக்காதே என்று சொல்கிறார்கள். நான் கேட்கிறேன். அசைய முடியாத ஆண்டவனுக்க 20 வேலி நிலத்திலுள்ள வருமானம் தேவையா? அப்படி அசைய முடியாத ஆண்ட வனுக்கு 20 வேலி வேண்டுமென்றால், ஓடி ஆடி உழைக்கிற மனிதனுக்கு எவ்வளவு வேண்டும்; ஓடி ஆடி உழைத்துப் பாடுபட்டு உழைப்பவனுக்குக் கஞ்சிக்குக் கூட போக்கில்லாமல் இருக்கும்போது, ஆண்டவனுக்கு என்ன

வேண்டிக் கிடக்கிறது? பாடுபட்டு உழைத்தும் கூட ஒன்றும் கிடைக்காமல் மனிதன் அழிந்து போவது நல்லதா, அல்லது ஒன்றும் செய்யாமல் ஆடாமல் அசையாமல் இருக்கும் ஆண்டவன் அழிந்து போவது நல்லதா என்று ஆலோசிக்க வேண்டும்.

ஆண்டவன் தனக்கிருப்பதற்காகச் சிதம்பரத்தில் தங்கக் கூரையும், சீரங்கத்தில் தான் அணிந்து கொள்வதற்கு வைர மாலைகளும் கேட்கவில்லை. ஆண்டவனின் பெயரைச் சொல்லிக் கொண்டு மனிதர்கள் மனிதர்களையே ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்கள். ஆண்டவன் பெயரைச் சொல்லிக் கொண்டு மக்களை இதுவரை ஏமாற்றியது போதும். இனியாவது மனிதனே கடவுள் என்றும், எவன் ஒருவன் உழைக்கிறானோ அவனே இந்த நாட்டின் கடவுள் என்ற எண்ணத்திலும் லாண்டு சீலிங்

கொண்டு வர வேண்டும்.

இம்மாதிரி அரசாங்கத்தை ஏமாற்றிக் கொண்டிருக் கின்றவர்களை - அரசாங்கத்தை மட்டுமல்ல - இந்த நாட்டிலுள்ள தொழிலாளிகளையும் ஏமாற்றிக் கொண்டிருக் கின்றவர்களுக்கு எந்தத் தண்டனை கொடுத்தாலும் போதாது. அவர்களுக்குத் தூக்குத் தண்டனை ஒன்றுதான் கொடுக்க வேண்டும்.

இவ்விதம் பேசினார் ஒரு காங்கிரஸ் உறுப்பினர் K.B.S. மணி என்பவர்; 1959-ல் உச்சவரம்புச் சட்டம், தேவையற்ற, தீமை பயக்கும் விதிவிலக்குகள் நிரம்பியதாக, ஓட்டைகள் நிரம்பியதாகக் கொண்டு வரப்பட்டபோது.

ஆகவே எதிர்பாராதது நேரிட்டு விட்டது. இப்படி நடக்கும் என்று நாங்கள்

நினைக்கவேயில்லை என்றெல்லாம் இதுபோது ஆட்சியாளர் வாதாட முடியாது.

ஆகவே தம்பி! நாட்டிலே அமைந்துள்ள துரைத்தனத்தின் "திருக்க-யாண' குணத்தைப் பற்றி ஒரு பட்டியல் போட்டுப்பார்!

கொள்ளைச் சம்பளம்
கோலாகல தர்பார்
ரப்பர் ஸ்டாம்பு மந்திரிகள்
பத்தாம்பசலி நிர்வாகம்
"ஒட்டை'ச் சட்டங்கள்!

இப்படி இருக்கிறது இவர்களின் இலட்சணம். ஆனால், மேடை அதிரப் பேசுகிறார்கள், கேட்கிறதல்லவா?

ஆஹா! எங்கள் அருமை என்ன! பெருமை என்ன! ஆற்றல் என்ன! சாதனை என்ன! எத்தனை பாட்டன் டாங்கிகள் நொறுங்கிவிட்டன தெரியுமா! எத்தனை

சாபர் ஜெட் விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன தெரியுமா! என்றெல்லாம்!

இந்த நிலையில், யாரோ ஒருவராகிலும், அன்னமென்றும் சொர்ணமென்றும் சொன்னாயே! இப்போது ஆலாய்ப் பறக்க விட்டு விட்டாயே! என்று மக்கள் கேட்பார்களே என்று நினைவு பெற்று, உள்ள குறையை ஓரளவு ஒப்புக் கொண்டுப் பேசியிருக் கிறாரே என்பதிலே எனக்கோர் மகிழ்ச்சி; அதனால் தான் இதனை எழுதினேன்.

ஆனால், இப்படி ஒருவர் இருவர் பேசிவிட்டால் போதுமா!

அழகுத் தேமல் என்றுதான் எண்ணிக் கொண்டிருந்தேன்; இப்போதுதான் தெரிகிறது இது ஆகாத நோய் என்று எனக் கூறிவிட்டால், நோய் போய் விடாதே. மருந்திட வேண்டுமே!

மக்களிடம்தான் அந்த மாமருந்து

இருக்கிறது. அவர்கள் தெளிவையும் துணிவையும் பொடியாக்கி, நேர்மையுடன் குழைத்துத் தந்திடின் ஆட்சியிலே ஏற்பட்டுள்ள வலிப்பு, இழுப்பு, படபடப்பு போன்றவை ஒழியும். அந்தக் கடமை, மக்களுடையது. அதனை நினைவுபடுத்த வேண்டிய பொறுப்பு, தம்பி! உன்னுடையது.

நாம் வேண்டுமென்றே, பதவி விரும்பி, பதை பதைத்து ஏதேதோ பேசுகிறோம் என்று எவரேனும் கோபித்துக் கொண்டால், தம்பி! ஐயா! வீணாக எம்மீது வெகுண்டெழ வேண்டாம். காங்கிரசாட்சியின் போக்கினைக் கண்டிப்பது, எதிர்க்கட்சியினரான நாங்கள் மட்டும் அல்ல; இன்றும் உங்களால் "ஞானாசிரியர்' என்று கொண்டாடப்பட்டு வரும் வினோபா பாவே மிகப் பலமாகக் கண்டிக்கிறார் என்று கூறி, அவர் தந்துள்ள கண்டனத்தை எடுத்துக்காட்ட வேண்டுகிறேன்.

மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களுக்குப் பிறகும் வெளியிலிருந்து உணவுப் பொருள் வரவழைக்க வேண்டி இருப்பது மிகவும் வருந்தத்தக்கது.

விவசாய நாடான இந்தியாவில் முதலில் செய்திருக்க வேண்டியது குறைந்த பட்சம் உணவு "போதுமானதை' உற்பத்தி செய்துவிட்டு பிறகு மற்ற எதையாவது செய்து கொள்வது என்பதாக இருந்திருக்க வேண்டும்.

வாரன் ஹேஸ்டிங்ஸ் (பிரிட்டிஷ் வைசிராய்) மீது கொண்டுவரப்பட்ட குற்றச்சாட்டு பற்றிய புத்தகம் என் நினைவிற்கு வருகிறது.

உணவு, கல்வி, பாதுகாப்பு ஆகிய மூன்று துறைகள் குறித்த வரையில், இந்தச் சர்க்கார் மீது அதுபோல குற்றம் சாட்டி வழக்குத் தொடரப்பட்டால், அந்தச் சர்க்கார் எங்கே செல்ல வேண்டி வரும்!

இந்தச் சர்க்கார் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டது, மக்களின் சம்மதத்தின் பேரில் நடந்து வருகிறது; ஆகவே, நடைபெற்று விட்டவற்றுக்கு மக்களே பொறுப்பு என்று ஒருவேளை சொல்லக் கூடும்.

ஜனநாயகத்தில் உங்கள் பங்கு என்ன? கடமை என்ன? என்பதனை உணர வேண்டிய காலம் வந்துவிட்டது.

டில்லியை நம்பிக் கொண்டு வீட்டிலே சோம்பிக் கிடப்பதிலே பொருள் இல்லை.

டில்லியில், யமுனை நதி மட்டுமல்ல, சாராயமும் சீமைச் சரக்கும் ஆறாக ஓடுகிறது.

வெளிநாடுகளிலிருந்து டில்லிவரும் நண்பர்கள் கண்களை மூடிக் கொண்டு வியப்படைகிறார்கள். நாம் இந்தியத் தலைநகருக்கு வந்திருக்கிறோமோ அல்லது நம்முடைய பாரிஸ், அல்லது லண்டன் நகரில்

இருக்கிறோமா என்று!

இதைவிட "மனம் நொந்து' வேறு எவராலும் பேச முடியாது! தம்பி! வினோபா சொன்னதை நான் வேண்டு மென்றே கூட்டிக் குலைத்துச் சொல்லிவிட்டேன் என்று கூறிவிடப் போகிறார்கள். அவர் பேசியிருப்பதனை வடநாட்டு ஆங்கில இதழ் வெளியிட்டிருப்பதனை அப்படியே தருகிறேன், அதனையும் மறவாமல் காட்டு.

It is very unfortunate that after 3 five year plans the country should import food from abroad. The least that ought to have been done in an agricultural country like India was to make her self-sufficient in food and then do anything else.

I am reminded of the book Impeachment of Warren Hastings. If this Government were to be impeached on these Counts of food. Education and defence let go my

fourth charge of ignoring the poor, where would it be? Perhaps it may be said that the Government is elected by the people and it is being run with their consent and the people themselves should be held responsible for what has transpired.

The time has now come when you should become conscious of your role in democracy. There is no sense in relying on Delhi and sitting idle at home. In Delhi flows not only the Jamuna but also the river of wine and liquor. Friends from abroad coming to Delhi close their eyes in amazement and wonder whether they are in the Indian Capital or in their own city of

Paris or London.

Dec.

Bihar - Dalmianagar.

அந்த ஆங்கிலத்தினை நான் தமிழாக்கும்போது, "சூடு' அதிகமாக்கவில்லை;

சொல்லப்போனால்! குறைத்தே தந்திருக் கிறேன்; அதனையும் கவனிக்கச் சொல்லு, அதற்கும் ஆதாரம் கேட்டிடின் தம்பி! வினோபாவின் பேச்ச ஆங்கிலத்தில் உள்ளதில் ஒரு இடத்தில்,

'no sense'

என்று இருக்கிறதே, அதனை நான் அறிவீனம் என்றோ புத்தி இல்லை என்றோகூட தமிழாக்கவில்லை; பெரிய இடத்தில் உள்ளவர்கள் மீது சிறுசொல் விழக்கூடாதே என்பதற்காக, அதனால் no sense என்பதற்கு, பொருளில்லை என்ற தமிழையே தந்திருக்கிறேன்;

மக்களின் ஜனநாயகக் கடமையைக் கவனப்படுத்துகிறார் வினோபா!

காலம் வந்துவிட்டது என்றும் கூறியிருக்கிறார்.

கடமையாற்றிடச் சொல்லியும் கேட்டுக் கொள்கிறார்.

இதனைக் கண்ட பிறகேனும் பொதுமக்கள் விழிப்படையா மலிருக்கலாமா? இதனை எடுத்துக்காட்டாமலிருப்பது நமக்கு முறையாகா தல்லவா! அதனால் எடுத்துக் காட்டினேன், தம்பி! நீ இதனை நாடெங்கும் எடுத்துச் சென்று அளிப்பாய் என்ற நம்பிக்கையுடன்.

அன்புள்ள

அண்ணாதுரை

2-1-66

36. அகமும் புறமும்

உழவர் நாட்டில் அமெரிக்க உணவுப் பொருள் !
புள்ளிமானுக்கு வேங்கையா தோழன் ?
“ஏர்முனைத் திருநாளுக்கு நம் பாராட்டு !
தனி மனித வாழ்க்கை நிலை நமது ஈடுபாடு
புதியதோர் விடுதலைப் போரில் !
”விடுதலை’க் கவிதையே நான் தரும் பொங்கல் பரிசு !

தம்பி,

நள்ளிரவு நேரந்தன்னில், உள அமைதி கெடுத்திடும் நோக்குடனோ என்றெவரும் கேட்கும் வண்ணம், மேகக் கூட்டம், கருத்துப் பெருத்து ஒன்றோடொன்று போரிட்டுக் குருதியினைக் கொட்டுதல்போல மழையைப் பொழிந்திட, கருங்காற்று வீசித் தருக்களைச்

சாய்த்து எவரையும் வெளியே தலைகாட்டா திருந்திடச் செய்திட ஓயுமோ இன்றேல் ஊர் அழியும் வரையில் பேய்ந்தே தீருமோ என்று பெரியோர் கவலை கொள, வேண்டும் போது எங்கோ சென்று ஒளிந்து கொண்டு வேண்டா வேளையில் வந்து எமை அலைகழிப்பதனையே ஓர் விளையாட்டு ஆக்கிக் கொண்டதோ விண்ணுலவும் மேகக் கூட்டம் என்று உழவர் உளம் நொந்து பேசிட, பெருமழை! பெருமழை! எதை நீவிர் தடுக்கவல்லீரெனினும், இதனைத் தடுத்திட இயலாது உம்மால்! முடியுமெனில், முயன்று பாரீர்!! என்று மாந்தரை அறைகூவிடும் முரசொலி போன்ற இடியோசையும், வருவாரின் தலைதனைக் கொய்திடும் வாள் காண்பீர் என்றதனை வீசுதல் போல் மின்னல் வெட்டும் மிகுந்திருக்கும் வேளை! வயலுக்கும் வாவிக்கும், ஆற்றுக்கும் கரைக்கும், ஊருக்கும்

ஏரிக்கும் வித்தியாசம் இல்லை என்றெண்ணத்தக்க விதமாக எங்கும் வெள்ளக்காடாகிக் கிடந்திடும் நிலைமை! படல் கொண்டு பக்குவமாகப் பாதுகாத்துக் கொண்டதனால் அணையாமல் சிறு விளக்கொன்று ஒளியினைச் சிந்திடும் ஓர் இல்லம். ஆங்கு, முற்றத்தில், அகமும் முகமும் கவலை தோய்ந்திடக் குனிந்த தலையுடன் குமுறிடும் ஆடவன், எதையோ விரட்டிடத் துணைதனைத் தேடி இங்கும் அங்கும் உலவு கின்றான். என்னடா! மகனே! ஏதுக்கித்தனை வேதனை கொள்கிறாய்! எல்லாம் நல்லபடியாய்த்தானே நடந்திடுமப்பா! கலக்கம் விட்டொழி! கவலையை விரட்டு! என்றெல்லாம் கூறிட எண்ணிடும் முதியவர் ஏனோ முயன்று பார்க்கிறார், இயலவேயில்லை! அன்று நானும் இவன் போல்தானே நெஞ்சில் நெருப்புடன் நின்றேன், உழன்றேன்! இன்று

நான் எப்படி இவனைப் பார்த்து, ஏனடா மகனே! இத்தனைத் திகிலென எங்ஙனம் உரைத்திடுவேன் எவ்விதம் அவன் கவலை துடைத்திடுவேன், இயலாது என்னால் என்றெண்ணிப் பேச்சுக்காக எனப்பிறந்த ஓசையினைப் பெருமூச்சுத் தானாக்கி இருந்தார் ஓர் பக்கம். உள்ளேயோ, ஓ! அப்பா! அம்மம்மா! உயிர் போனால் போதும் இனித்தாளேன் வேதனையை! ஆயிரம்தேள் என்றன் அடிவயிற்றிலே தங்கி, எல்லாம் ஒன்றாகிக் கொட்டினால் நான் என்செய்வேன்! பல்லைக் கடித்துக் கொள் பருவதம்! என்று பாட்டி சொல்கின்றாள், பல்லுடைப்பேன் என்று கூடப் பதறி நான் கூறிவிட்டேன், பல்போன பருவத்தாள் என்பதனை மறந்து எல்லாம் இருண்டு கிடக்கிறதே! ஊரிலுள்ள நெருப்பெல்லாம் ஒன்றாக என் வயிற்றில் கொண்டு வந்து கொட்டினரோ கொடியோர்!

- என்று பல எண்ணி, அத்தனையையும் சேர்த்து அம்மம்மா! அப்பப்பா! அய்யய்யோ! என்ற சொற்களாக்கி, அலறுகிறாள். “அம்மா’ ஆகின்றாள்!”அவன்’ அவளை அவ்வாறாக்கிவிட்டு, அவதிப்படுகின்றான், அனைவ ரையும் பார்க்கின்றான். “அந்த”அவதி‘யிலே உருவாகி வளர்ந்ததுவே அவனி முழுதும் என்பது அறிவான் அவன், நம்போல; ஆனால் அறிந்ததத்தனையும் பறந்திடுது “அவள் எழுப்பும் அம்மம்மா ஒலி’ கிளம்பு அவன் செவி வீழ்வதாலே, செச்சே! இது என்ன பிழைப்பு! பெண்ணாகப் பிறந்தாலே இதுதானே”எழுத்து’ எனப் பெற்றவர்கள், பேசுகின்றார்; பிஞ்சுகள் புரியாமல், “கத்தாதிருக்க மருந்திலையோ?’’ என்கின்றார். இந்நிலையில், ஓ! ஓ! என்ற பேரொலி வெளிக்கிளம்பி, மறுகணம் விந்தை அமைதிக்கு இடங்கொடுத்து விரட்டிட, உள்ளே

இருந்தோர்"இசை' மெள்ளக் கிளம்பிடுது; உலவியவன் செவியினிலே ஓராயிரம் பண் ஒரே நொடியில்!! ஆண் பிள்ளை! என்பாரும், எல்லாம், "அவன் போலே!'' என்று அடையாளம் கூறுவாரும்,"தாத்தா வாயினிலே கொட்டுங்கள் கற்கண்டு'' என்பாரும், "கற்கண்டா! அவருக்கா!!'' எனக்கேட்டுச் சிரிப்பாரும் நடமாட ஒரே நொடியில், வேதனை சூழ்ந்த இல்லம் மகிழ்வெய்தித் துள்ளி நிற்கிறது!"எனக்குத் தெரியும் அப்போதே, இன்று இரவுக்குள் குழந்தை பிறந்திடும் என்பது'' எனச் செப்புகிறார் ஒருவர்: "அவன்' அவரைக் கண்டு சிரிக்கின்றான்! - அடடா! நீ இத்தனை கோழையாகிவிடுவாய் என்று நான் எண்ணிடவேயில்லை! எத்தனை பதறிவிட்டாய்! எதை எண்ணிக் கதறி நின்றாய்! என்று கேட்கின்றார் முதியவர், தந்தை ஆகிவிட்ட தன் தனயன்தனை

நோக்கி.”என்னினும் பெரியோர்கள் இருந்த நிலை கண்டே நான் என்ன ஆகிடுமோ என்றஞ்சி இருந்திட் டேன்; எனக்கத் தெரியாதா, மருத்துவரே கூறினாரே!!’’ என்றுரைத்தபடி “அவனும்’ இன்னும் அனுமதியை வழங்கிட லாகாதா! இத்தனைக்கும் காரணமாம் என்”மன்னவனை’ நான் காண!! - என்றெண்ணி உலவுகின்றான். முன்பு உலவியது நெருப்பின் மீது; இப்போதுலாவுவது பூங்காற்றின் மீது! ஏன்? வாழ்வின் பயன் கண்டான்! காதற்கனி பெற்றான்! இன்பப் பெருக்கதுவும் கண்மூக்கு வாய்பெற்று, காலுதைத்துக் கை அசைத்து, ”வந்துள்ளேன்! வாழ்வதற்கு! தந்திடுவேன் வாழ்வு உனக்கு’’ என்று கூறுகின்றான், பெற்றோர்க்கன்றி மற்றோர்க்குப் புரியாத பேரின்ப மொழியாலே!

பிள்ளைக் கனியமுதைப் பெற்றிடும்

வேளையிலே மற்ற நிலையத்தனையும் மறைந்திடுதல் போல எத்தனையோ இன்னலுக்கு ஆளாகியுள்ள இந்த நம் தமிழகத்தில், விந்தையாம் ஓர் மாற்றம் விரைந்திடுதல் காண்கின்றோம், பொங்கற் புதுநாள் பூத்திடும் நந்நாளன்று!

களத்தினிலே கடும் போரிட்டு, ஆற்றல் மறவரவர் விரட்டினர் மாற்றாரை; எனினும், பகை ஒழிந்தபாடில்லை, புகை நின்று போகவில்லை, எப்போது என்ன விபரீதம் வெடித்திடுமோ என்ற நிலையதுவும் கப்பிக் கொண்டே உளது, காரிருள் போலே! போர் கிளம்பி பொல்லாங்கை விளைவிக்கும் முன்பே, பொன்னாடாய் இந்த நாட்டை ஆக்குதற்கே பொறுப்பேற்றோம் என்று கூறி, எந்நாட்டிலும் இல்லை எமக்கு நிகர் நல்லோர்கள் என்று அறைந்து, இறுமாந்து கிடந்திடுவோர், இல்லாமைதனை விரட்ட

இயலாத தன்மையினால், இதனை இவன் முடிப்பான் என்றறிந்து அதனை அவன் கண்விடல் எனும் நெறி மறந்த காரணத்தால்,

உறுபசியும் ஓவாப்பிணியும் செறுபகையும்

சேரா தியல்வது நாடு.

□

குடிதழீஇக் கோலோச்சும் மாநில மன்னன்

அடிதழீஇ நிற்கும் உலகு.

□

கடுமொழியும் கையிகந்த தண்டமும் வேந்தன்

அடுமுரண் தேய்க்கும் அரம்.

எனும் குறள், ஏட்டிலே இருந்திட மட்டுமன்று, நாட்டிலே நடைமுறையாகிடவே என்பதனை மனத்திற்கொள்ளாத போக்கதனால், பொன் விளையும் பூமியென்றும் புவிக்கே ஓர் பூங்காவென்றும் பொய்யாமொழிப் புலவர் புகழ்ந்திட்ட திருநாட்டில் "திரு ஓட்டுத்'' திட்டத்தால் தீர்த்திடுவோம்"போதாமை' என்று கூறிடுவார் விழிநீர் அடக்கிடும் வழி வகுத்துள்ளார். அவர் படிக்க ஆன்றோர்கள் விட்டுச் சென்ற அருமைமிகு நூற்களிலே உள்ளந்தனைத் தொடும் ஓவியம் காண்கின்றார், நாட்டின் கோலம் நனி சிறந்திருந்ததென உணர்கின்றார். இன்றோ இன்னலும் இழிவும் இடரும் படர்ந்துள்ள பாழ்நிலை காண்கின்றார்; இந்நிலை காண்பதற்கோ மூவாறாண்டாக

முடிதரியா மன்னரென இருந்தீர் ஐயா! என்று கேட்டிடினோ, ஆளவந்தார், "அறியாச் சிறுவர்! அன்று இருந்தவர் தம் தொகை என்ன, வகை என்ன? இன்றுள்ள மாந்தர் தொகை பெருகியதை அறியாயோ!'' என்றுரைத்து, அந்த ஓர் விளக்கத்தில் அவனியின் அறிவத்தனையும் அடக்கித் தந்துள்ளோம் என்றெண்ணிக் களித்துக் கிடக்கின்றார்.

காலம் மாறுவதும், அதற்கேற்பக் கோலம் புதிதாகுவதும், புரியாத புதிரன்று; காலம் மாற்றுவது கோலத்தை மட்டுமன்று, முறை பலவும் மாறிடுதல் காண்கின்றோம்; அம்மாற்றம் அனைவருக்கும் நல்வாழ்வு கிடைத்திடும் ஓர் வழியை எத்தனையோ நாடுகளில் ஏற்றமுடன் தந்திருக்க, இந்த நாட்டினிலே மட்டும் ஏன் இந்த நிலை? என்பதே கேள்வி - இதற்கு யாது பதில்? குற்றம் கூறாதீர்! குறை கிளறிக்காட்டாதீர்! கொற்றம்

நடத்திடுவோர் அறிந்துள்ளார் அவ்வளவும்! மெள்ள மெள்ளத்தான் மலர்ந்திடும் நலவாழ்வு என்கின்றார். இந்த ஒரு பதிலை, ஐயன்மீர்! எத்தனை முறை நீர் கூறிடுவீர்! ஏழை நாங்கள் எத்தனை முறை இதனை ஏற்றிடுவோம்; என்று கூறுகின்றார் சில பேர்கள்; மற்றையோர் அச்சம் கொண்டு குமுறுகின்றார், நலிவாலே.

உண்ண உணவின்றி ஒரு ஆளும் சாகவிடேன்! உறுதி! உறுதி இது! என்று உரைக்கின்றார் - நமை ஆளும் நல்லோர் அல்ல; எங்கோ நெடுந்தொலைவில் இருக்கும் அமெரிக்க அதிபர்! இந்தத் திருநாடு உழவர் தம் பெருநாடு!! இங்கு அனுப்புகிறார் விந்தைத் தொழில் புரியும் நாட்டினராம் அமெரிக்கர், உணவுப் பொருள் குவியல்!!

காருலாவ, ஏருலாவ, சீருலாவும் நாடு இது என்கின்றார் கவிஞர் இங்கு; இந்நாட்டில் போதும் என்று கூறத்தக்க அளவு விளைவு

இல்லை என்கின்றார். ஏனெனிலோ, மெத்த ஆராய்ந்து கண்டறிந்து விட்டோம்! விளைவு மிகுந்திடாத காரணம் விளங்கியது, விளைவு மிகுந்திட வழி கண்டு கொண்டோம் யாம்! என்னை என்பீரேல், கூறிடுவோம், கேட்டிடுவீர், வயலில் வளம் காண உரம் இடுவீர் வகையாக! உரமிடுதல் வயலுக்கு வலிவிடுதல்! வலிவு பெறும் வயல், வழங்கிடும் செந்நெற் குவியல்! என்று உரைக்கின்றார் உணவமைச்சர். இத்தனை நாள் ஈதறியாது இடர்ப்பட்டு வந்தோமே! உரமிடுதல் வேண்டுமாம் வயலுக்கு!8 உரைக்கின்றார் அமைச்சர் என நாடே வாழ்த்திடும் என்று எண்ணுவரோ அமைச்சர்! இருக்கும்! அந்த நம்பிக்கை மிகுதியுடன் பேசுகிறார்; தெரிகிறது இதற்கு இவரை வாழ்த்திட வேண்டுமெனின் வள்ளுவரை அடியோடு நாம் மறந்திட இசைதல் வேண்டும்! அப்போதுதான் இவர்

கூறிடும் முறை ”கண்டு பிடிப்பு’ எனும் நிலை பெற்றிட இயலும் வள்ளுவரோ, ஈராயிரம் ஆண்டுகட்கு முன்னரே இயம்பியுள்ளார்:

ஏரினும் நன்றால் எரு இடுதல், கட்டபின்
நீரினும் நன்று அதன் காப்பு

என்பதாக! இதனையே இவர் கூறுகின்றார் இன்று எனில், எவர் இதனைப் புத்தறிவு என்றோ புதுமை முறை என்றோ கொள்ள இயலும்? ஒரு குறள் தன்னைப் பெறுகிறோம் பெருநிதி கொடுத்து என்றன்றோ எண்ணத் தோன்றும்!

உழவு நிலை இஃதெனில், தொழில் நிலையோ, ஒரு சிலரின் ஆதிக்கத்தில் சிக்கி ”ஓடப்பர்’ மிகுந்துள்ள கேடு மிகு நாடாக்கி விட்டதின்று.

சட்டம் எதுவெனினும் சாய்த்துவிடும் வல்லமை மிகப் பெற்றோர், சாயாத போக்கினரும் சாய்ந்திடும் விதமான சல்லாபப் பொருள் தந்து அவரைத் தம் "சரக்காக்கிக்' கொள்வோர்கள், மூதறிஞர் பற்பலரும் மூக்கின் மேல் விரல் வைத்து அடடாவோ! இப்படியோ!! என வியக்கும் விதமாக, பொதுப் பணத்தைத் தமதாக்கிக் கொண்டிடும் முந்த்ராக்கள், ஆழ்கடலைத் தாண்டியும் எமது அரசு உண்டு அறிந்திடுக! அரச நடத்திடுவோர் எமது ஆதாயம் தன்னைத் தடுத்திடவோ இயலாது, அவர் அரசின் அடிப்படைக்கே பொற்கட்டி தந்துள்ளோம் எனப் புகலும் டாட்டாக்கள், பிர்லாக்கள், டால்மியாக்கள்; பஞ்சையாய்ப் பாமரரை ஆக்கிவிட்டுப் பருத்தி ஆலையிலே பெரும் பொருள் ஈட்டிடுவோர், குடைந்தெடுத்து வந்திடுவீர், குவலயம் தழைத்திடவே என்றுரைத்து எளியோரை

அமர்த்தி, அவர் குவிக்கும் இரும்பாலும் கரியாலும் பொற்கோட்டை கட்டிடுவோர், பொருளாதாரக் கயிற்றில் அரசைப் பிணைத்திடுவோர், பொல்லாத போக்கினராம் முதலாளிகட்கே எல்லாம் என்றாகிவிட்ட இழி நிலையைக் காண்கின்றோம். சோஷியலிசம் பேசுங்கள், சுவை உண்டு, சூடுண்டு; ஆயினும், தனியார் துறை உண்டு மறவாதீர்! என்றுரைத்து, பன்னாள் பாடுபட்டுப் பல பெரியோர் வகுத்தளித்த பாகுபாடு அகற்றும் முறையாம் சமதர்மமதைக் குலைத்திட்ட வன்கணாளர், கொலு வீற்றிருக்கும் நம் குடியாட்சிக் கோமான்கள் தமக்குக் கொஞ்சும் பொருளானார்கள்! உழைக்கின்றான்; உருக்குலைந்து உழல்கின்றான், ஓராயிரம் நோய்க்கிருமி உடலை அரிக்கிறது; உற்பத்தி பெருக்கிடுக! உற்பத்தி பெருக்கிடுக! என்று ஊராள்வோர் உரைக்கின்றார்; உற்பத்தி

பெருகுவதும் உழைப்பாளி நொறுங்குவதும் காண்கின்றோம், இந்நிலையில் உள்ளதந்தோ தொழிலுலகம்!

விந்தைத் திட்டம் இதோ, விரட்டிடுவோம் வறுமைதனை, ஐந்து ஆண்டினிலே அமைத்திடுவோம் நல்வாழ்வு என்று அறிவித்து ஆளவந்தார், மூன்று திட்டங்கள் முடித்துவிட்டார்! மக்கள் முதுகெலும்பை நொறுக்கி விட்டார்! திட்டங்கள் நடாத்திப் பின் திரும்பிப் பார்க்கின்றார், தேனாறு எங்கே! பாலாறுதானெங்கே!! என்று கேட்கின்றார்!! ஓடுவதோ உழைப்பாளி உகுத்திட்ட கண்ணீரும் செந்நீரும்! காணுகின்றார்! கண்டு பின்னர்க் கூறுகின்றார், பெருகிய செல்வமது சென்ற இடம் தெரியவில்லை! ஏழைக்கு அச்செல்வம் வாராத காரணமும் எள்ளளவும் புரியவில்லை! எங்கோ ஓர் ”மர்மம்’ இருக்கிறது, கண்டறிவோம்; எம்மிடம்

அவ்வேலைதனை விட்டுவிட்டு, நாட்டினரே! உழைத்திடுவீர்! இந்நாடு பொன்னாடு ஆகிடும் உம் திறத்தாலே!! என்று ஊக்கவிக்கும் பேச்சினை ஊற்றித் தருகின்றார்.

மூன்றடுக்குக்காரன் அவன் எட்டடுக்கு ஏறிவிட்டான்! மூட்டை சுமப்பவனோ, குப்பை அள்ளுகின்றான்; செல்வச் சுமைதாங்கி செருக்குடன் உலவுகிறான், சிவனே உன் பாதம் சேர்த்துக்கொள்! எனை என்று செபிக்கின்றான் உழைப்பாளி. மாளிகையின் மணம் பரவி மயக்கமளிக்கிறது. பாட்டாளி விடுதியிலே வறுமை பாம்பாய்ப் படமெடுக்கிறது, இந்நிலையில் சமுதாயம் இருந்திடின் என்னாகும் என்பதனை எத்தனையோ வித்தகர்கள் எடுத்துரைத்துச் சென்றுள்ளார். அத்தனைக்கும் மாற்று மருந்துண்டு, பெற்றிடப் பொருள் உண்டு என்று இறுமாந்து கிடக்கின்றார்

செல்வரானோர். எமக்கு அவர்! அவர்க்கு யாம்! என்றே உள்ள ஓர் எழுதாத ஒப்பந்தம் இயக்கி வருகிறது ஆட்சி முறைதன்னை. இந்நிலையில், இல்லாமை போவதெங்கே! இடுப்பொடிந்ததும் இருமிக் கிடப்பதும், ஓட்டைச் சட்டியும் ஓலமிடுவதும் குப்பைப் கூளமும் எலும்புருவங்களும், இதோ! ஐந்தாண்டுத் திட்டம் பெற்றெடுத்த அழகரசர் யாம்! என்று அறிவிக்கக் காண்கின்றோம்.

தைத் திங்கள் வருகின்ற பொங்கல் நாளில்
தங்கத்தைச் சுமக்கின்ற மகளிர் ஆக்கும்
நெய்ப்பொங்கல் சுவைத்துண்டு மகிழ்ச்சிகொள்வர்
நிதிபடைத்த சீமான்கள்; என்றும் எங்கள்
கைதொட்டு வாய்பட்டதுண்டோ பொங்கல்?

கண்மட்டும் ஓயாமல் பொங்கும்! பொங்கும்!

தெய்வங்கள் திருநாட்கள் எங்கட் கில்லை:

தெருவோரச் சாக்கடையில் வருமா தெப்பம்?

வெட்கமாகக்கூட இருக்கிறது, வேதனை சூழ்நிலையினிலே விழாக் கொண்டாடுக என்று கூறுகிறோமே என்று கவிஞர் இராஜேந்திரன் கவிதையைப் படித்திடும்போது.

ஆயினும், தமிழர்தம் விழாவாம் பொங்கற் புதுநாள் விழாவினைக் கொண்டாடுதல் முறையே என்று கூறிட முற்படல் ஏனோவென்றால், இவ்விழா உண்டு உருசி கண்டு மயங்கிக் கிடந்திடவுமல்ல: பழய கணக்கினைத் துடைத்திடு, படையலிட்டேன்! பரமனே! புதுக் கணக்குப்

போட்டிட முனைகின்றேன் நான்! என வேண்டிடும் வகைக்கும் அன்று; சமுதாய நிலைதன்னை உணர்ந்திடவும் திருத்திடவும் உழைப்போர்க்கே இவ்வுலகம் எனும் உயர்நெறி வெற்றிபெற நாம் நம்மாலான அளவு பாடுபடுதல் வேண்டும் என்ற உறுதி பெறவும், நல்லெண்ணம் உள்ளமதில் பொங்கிடுதல் வேண்டும் என்பதற்கே இது விழா மட்டுமன்று விழி திறந்திட ஓர் அழைப்பு என்று கொண்டிட வேண்டும். அக்காரணம் பற்றியே நமது கழகத்தினரும் நற்றமிழை நாடு வாழத்தந்திடும் புலவர் பெருமக்களும், இவ்விழாவினை தமிழ், தமிழகம், தமிழ் நெறி என்பன பற்றிய விளக்கம் அளித்திடும் விரிவுரையாற்றுதற்கும், பண்பு மிகுந்திடும் முறை பற்றிய விளக்க உரை தந்திடுவதற்கும் வாய்ப்பாக்கிக் கொள்கின்றனர். கண்ணுக்கு விருந்து இல்லம் தந்திட, கருத்துக்கு

விருந்து கற்றோர் அளித்திட இவ்விழா பாற்பொங்கலாக மட்டுமன்றித் தூய எண்ணப் பொங்கலாகவும் இருந்திடக் காண்கின்றோம். இந்த நற்பயன் பெறவே இந்நாளை விழா நாள் என்கின்றோம். மெய்யான விழாவோ, எல்லார்க்கும் எல்லாம் இனிது உளது என்ற நெறி வெற்றியுடன் அரசோச்சும் நன்னாளே; இன்றல்ல!

இந்நாள், இஞ்சியும் மஞ்சளும், கதலியும் கரும்பும், செந்நெலும் பிறவும் கொஞ்சுமொழி பேசிடும் கோலம்தனைத் தந்திடும் திருநாள்; உழைப்பால் கண்டிடும் ”விளைவு’தனைக் கண்டிடச் செய்திடும் உன்னதமிகுநாள்! விதைத்தவர் அறுப்பர்! எனுமொழி தன்னில் தொக்கியுள்ளதத்தனையும் அறிந்து கொள்ளும் நல்வாய்ப்பு அளித்திடும் ஓர் அறுவடைத் திருநாள். இங்கு நாம் வாழப்பிறந்தோம், வாழ்வின் வகை நமது

உழைப்பின் வகையையும், உழைப்பின் விளைவைப் பயன்படுத்தும் முறையையும், அம்முறையினைச் சீராக வகுத்திடும் அரசின் திறத்தையும், அந்தத் திறத்தினைப் பெற்றுள்ளோரையே அரசோச்சிடச் செய்திடும் உரிமை பெற்ற மக்களின் அறிவாற்றலையும் பொறுத்துளது.

துள்ளிடும் புள்ளிமான்களுக்குத் தோழன் வேங்கை என்று கண்டிடின், காடும் கெடும்! நாட்டினிலேயே இது போன்ற முறை ஒன்று நீடிக்கவிட்டிடின் என்னாகும்? இப்போதுள்ள நிலையே என்னாகும் என்பதற்குப் பதில், வேறு எதற்கு!

எனவே, தம்பி! வாழ்வின் விளக்கம் பெற்றிடவும், வாழ்வினைச் செம்மையாக்கிடத்தக்க முறைபற்றி அறிந்திடவும், அந்த முறைக்கேற்ற அரசு அமைத்திடவும், உறுதி தேடிப் பெற்றிடவும்

இந்நாள் பயன்படுதல் வேண்டும்.

இவ்வாண்டு அரசாள்வோரே, பொங்கற் புதுநாளை ஏர்முனைத் திருநாள் என்று கொண்டாட முன்வந்துள்ளனர்! இது மெத்தவும் பாராட்டி வரவேற்கத்தக்க மாற்றம். ஏர் முனையின் வெற்றியே போர்முனை வெற்றிக்கும் அடிப்படை! ஒரு நாட்டு வாழ்க்கையின் அச்சாணியே உழவு; அதிலும் விரிந்து பரந்துள்ள இந்நாட்டில் இன்றும் நூற்றுக்கு எண்பதின்மர் என்ற அளவுள்ள மக்கள் உழவுத் தொழி-லேயே ஈடுபட்டவர்கள்; இன்று நேற்றல்ல, ஆயிரமாயிரம் ஆண்டுகளாக!

நிலத்திடை
நீரிடை
கானிடை
மலையிடை

என்று எங்கெங்கு விளைவுபெற முடியுமோ அத்தனையும் பெற்று வாழ்ந்தவர் முன்னோர். அவர்கள் நேர்த்தி மிகு உழவு முறை வகுத்து நடாத்தி வந்த அந்த நாட்களில், இன்றைய நாகரிக நாடுகள் பல, காடும் மேடும் கொண்டதாக, கண்டதைத் தின்றிடும் விலங்குப் போக்கினரின் உறைவிடமாக இருந்து வந்திருக்கின்றன இன்று இத்திருநாடு, அமெரிக்க உணவு பெற "ஆள்' அனுப்பும் நிலைக்கு முன்னேறி விட்டிருக்கிறது. பெற்றோம் பெருவெற்றி! என்கிறார்கள் அரசாள்வோர், ஐயமிட்டிட அயலவர் ஒப்புக் கொண்டது கேட்டு, உளம் பூரித்து!

இந்நாடு தன்னிறைவு பெறவும், இந்நாட்டில் கிடைப்பது இந்நாட்டவரிடையே வஞ்சனையின்றிப் பகிர்ந்தளிக்கப் படவுமான முறை கண்டிட வேண்டும். அதிலே நாம்

பெறும் வெற்றியைப் பொறுத்தே எதிர்காலம் வடிவமெடுத்திடும்.

மணமற்ற மலர், சுவையற்ற கனி, வெந்திட மறுத்திடும் காய்கறி, இவைகளைக் கொண்டு விழா கொண்டாடிட முடியுமோ? அஃதே போலத்தான், வாழ்வு விழாவாக அமைய வேண்டிடின், பொருள்கள் பயன் தருவனவாக இருந்திடல் வேண்டும், பெற்றிடும் பயன் அனைவர்க்கும் என்ற நெறி நிலைத்திட வேண்டும்.

பொங்கற் புதுநாள், புத்தாடை அணிந்த பூவையின் புன்னகையைப் பெற்றுக் களித்திட மட்டுமன்று; இன்று போல் இன்பம் என்றும் இருந்திடவும், நமக்குக் கிடைத்ததுபோல் இன்பம் எல்லோருக்கும் கிடைத்திடவும் வழி யாது, அதற்கு நாம் எங்ஙனம் பாடுபட வேண்டும் என்பது பற்றி எண்ணிப் பார்த்திடவும், உறுதி பூண்டிடவும் பயன்படுதல்

வேண்டும்.

கண்ணே! கனியமுதே! கற்கண்டே! செந்தேனே! என்று கொஞ்சினால் மட்டும் போதுமா, குழந்தை மகிழ்ச்சி ஒன்றினாலேயே குமரனாகிட முடியுமா? இயலாதல்லவா? அதுபோலவே, இந்நாடு எந்நாடு! பொன்னாடு. புலவர் போற்றிய திருநாடு, வீரம் பொங்கிடும் ஆற்றல் மறவர் நாடு. என்றெல்லாம் புகழ்பாடுவதால் மட்டும் நாட்டினை நன்னிலைக்குக் கொண்டு வந்துவிட முடியுமா? நாட்டை நன்னிலைக்குக் கொண்டு வந்திடும் பொறுப்பினை நாம்ஏற்றுக் கொண்டாக வேண்டும். புதிதாக நாம் எதனையும் ஆக்கக் கூடத் தேவையில்லை; நாட்டிலே உள்ளது என்ன என்று கண்டறிந்து பெற்றாலே போதும்.

எரிமலையும் பாலை நிலமும், சதுப்பும் நிலநடுக்கமும், கடற் கொந்தளிப்பும் பிறவுமான இயற்கையின் கோபம் இந்நாட்டின்

மீது அதிக அளவு வீசப்படவில்லை. மாறாக இயற்கை இங்கு பசுமையையும் வளத்தையும் பாங்குடன் அளித்திருக்கக் காண்கின்றோம். வாழ்ந்தே அறியாத மக்களாகவும் இந்நாட்டவர் இல்லை; ”மகஞ்சதாரோ, அரப்பா’ எனும் நிலைகளை நீண்ட நெடுங்காலத்திற்கு முன்பே பெற்றிருந்த சீர்மிகு வாழ்க்கை நடாத்திய மக்கள் என்று வரலாறு காட்டுகின்றது. இந்நிலையில், இங்குச் சிலர் நச்சுக் காற்றினைப் பரவவிடும் போக்கினை மட்டும் நீக்கிடும் ஆற்றல் நமக்கு இருந்திடின், எக்குறையும் இங்கு இல்லை என்று உலகினை நோக்கித் தலை நிமிர்ந்து கூறிட இயலும். இன்று நிலைமை அதுவோ? இல்லையே! வீட்டிலும் சரி, நாட்டிலும் சரி!

பொங்கற் புதுநாள்! அதோ உன் அங்கயற்கண்ணி அழகுக்கு அழகளிக்கும் புத்தாடை பூண்டு நடக்கின்றாள், உன்

இதய மேடையில்! உன் செல்வங்கள் பழத்தைக் குழைத்துக் கொண்டிருக்கக் கண்டு, அடிக்கிறேன் பார்! என்று மிரட்டியபடி அருகே சென்றிடும் அணிமயில், அடிக்கின்றாளா, பார்! இல்லையே! அணைத்துக் கொள்கின்றாள்! முத்தம் அளிக்கின்றாள்! ஏன்? அந்தச் சுட்டிப் பயல், பழம் குழைத்த விரலைத் தாயின் உதட்டருகே கொண்டு சென்று, அம்மா! அம்மா!! என்று கொஞ்சிவிட்டான்; அவ்வளவுதான்! ஒரு பழமா, உள்ள பழம் அத்தனையும், கையால், காலால் அவன் குழைத்துப் போட்டால்கூட அந்தக் காரிகையின் கண்களுக்கு விருந்தாகத் தான் தோன்றும். காணுகின்றாய், கண்கள் களிநடம் புரிந்திடுகின்றன. ஆனால், இந்தப் புத்தெழில் இல்லத்தரசி பெற்றிடக் கடன்பட்டிருப்பாயேல். அந்தக் கண்கள் கவலைக் குறிகளாக அல்லவா மாறிவிடும்!

”ராஜாபோல இல்லே! இந்தப் பட்டுச்சட்டை?’’ என்று கேட்கிறாள், உன்னை வென்றாள். ஆம்! என்கிறாய் இழுத்தாற் போல, பட்ட கடனை நினைவுபடுத்திக் கொண்டு; அவள் புரிந்து கொள்கிறாள்; பூத்த மலர் வாடுகிறதே! கண்டனையா?

அந்தக் குடும்பத்தை விட்டுவிடு, பொங்கற் புதுநாள் இன்னின்னது வேண்டும் என்று கேட்டு, ஆகட்டும் என்று தலை அசைத்து, கடைசியில் இல்லை என்று கைவிரித்து விட்ட நிலையில் எத்தனை எத்தனை குடும்பங்கள்! ஆங்கு விழாவின் காரணமாக மகிழ்ச்சியா பிறந்திடும்? விம்மல்; குமுறல், வேதனை.

விழா முழுச்சுவை தந்திடுவதாக இருந்திட வேண்டுமெனில், அது எல்லோர்க்கும் விழாவாக இருத்தல் வேண்டும். அந்த நிலை கண்டிட உழைப்பதிலேயே ஓர் தனி மகிழ்ச்சி பெற்றிடலாம்.

எல்லோரும் ஒன்றுதான், எல்லோரும் வாழப் பிறந்தவர் களே என்று கவிதை மேற்கோள்கள் காட்டி எத்தனை நாளைக்கு நமக்கு நாமே மயக்கமூட்டிக் கொள்வது?

மாரிதான் சிலரை வரைந்து பெய்யுமோ!
காற்றும் சிலரை நீக்கி வீசுமோ?
மாநிலம் சுமக்க மாட்டேன் என்னமோ?
கதிரோன் சிலரைக் காயேன் என்னுமோ?

பொருட்சுவை மிகுந்திருக்கிறது ஏடளிக்கும் இப்பாடல்! குரல் இனிமையும் இசை அறிவும் பெற்றவரிடம் சிக்கிக் கொண்டால் போதும், இப்பாடலைக் கொண்டு "ஒரு மணி நேரச் சொற்சிலம்பம்' நடத்திடுவார்; அவர் நாவிலே சரஸ்வதி

தாண்டவமாடுவதாகப் பாராட்டப் பெறுவார். ஆனால், தம்பி! இல்லாமை எனும் கேடு பீடித்துக் கொள்வாரை, மாரி மாய்த்து விடுகிறது, காற்று பிய்த்தெறிகிறது, கதிரவன் சுட்டுப் பொசுக்குகிறான். மாநிலம் மட்டும் சுமக்க மறுப்பதில்லை, ஏனெனில் வறியவன் உடல் தேய்ந்து தேய்ந்து வெறும் எலும்புக் கூடாகிப் போய்விடுவதால்! அவன் இருப்பது மாநிலத்துக்குத் தெரிவதுகூட இல்லை!

அறிநெறிதனை எடுத்தியம்பிடின், நல்லொழுக்கந்தனை உணரச் செய்திடின், மக்களை நன்மக்களாக்கிடின், சமூகத்தில் உள்ள கேடுகள் மாய்ந்தொழிந்து போகும் என்கின்றனர். அதுபோல் அறநெறி கூறிடல் கூடாது என்று கூறுவேன் என்ற எண்ணத் தேவையில்லை, தம்பி! ஆனால், அவையாவும், எரியும் கொப்பரை மீது தெளிக்கப்படும் பன்னீர்த் துளிகளெனப்

பொரிந்து போகின்றன.

செய்ந்நன்றி கொல்லன்மின்;
தீநட்பு இகழ்மின்;
பொய்க்கரி புகலன்மின்;
பொருள்மொழி நீங்கன்மின்;
அறவோர் அவைக்களம்
அகலாது அணுகுமின்;
பிறவோர் அவைக்களம்
பிழைத்துப் பெயர்மின்!

என்று சிலம்பு ஒலித்திருக்கிறது! புதிதாக நன்னெறி பற்றி நாம் ஆராய்ந்தறிந்து கூறிடத் தேவையில்லை. சிலப்பதிகாரத் திலேயே "பொய்க்கரி'யால் விளைந்த பொல்லாங்கு விளக்கப் பட்டுமிருக்கிறது. எனினும், சிலப்பதிகார காலத்து இளங்கோ அடிகள் கால முதற்கொண்டு இன்றளவும்

செய்யப்பட்டுவரும் நன்னெறி, சமூகத்தின் போக்கை மாற்றி அமைத்திடக் காணோமே, என் செய்வது?

“தனி மனித வாழ்க்கை’ என்பதே, தம்பி! இப்போது மிகமிக அரிதாகிக் கொண்டு வருகிறது சுற்றுச் சார்பின் வேகமும் நெருக்கமும்,”தனி மனித வாழ்க்கை’யை இயலாததாக்கி விட்டிருக்கிறது.

கேடுசூழ் இவ்வுலகில் நடமாடிடின் கெட்டுப் போவேன் என்று கருதிக் கிரேக்க ஞானி ஒருவர், பீப்பாய்க்குள் ஒளிந்து கொண்டார் என்று கதை கூறுவார்கள்.

இன்று எந்தத் தனி மனிதரும் சமூகத்தைக் கப்பிக் கொண்டுள்ள சூழ்நிலையினின்றும் தம்மை வேறுபடுத்திக் கொள்ள முடிவுதில்லை. நோய் தாக்காதிருக்கத் தடுப்பு ஊசி போட்டுக் கொள்வதுபோல, சூழ்நிலை தம்மைத்

தாக்கிடாதபடி சில தடுப்பு முறைகளை வேண்டுமானால் தேடிப் பெற்றிடலாமேயன்றி, பண்டை நாட்களைப் பெற்றிடுதல் தங்கு தடையற்ற தனிமனித வாழ்க்கையைப் போல இதுபோது இயலாது.

மக்கட் தொகை பெருக்கம் மட்டுமல்ல, மக்களுக்குள் ஏற்பட்டுவிட்டுள்ள தொடர்புகள், அவர்கள் ஈடுபடும் அலுவல்கள், அந்த அலுவல்களின்போது கிளம்பிடும் வேகம், புதியதோர் பிரச்சினையாகி விட்டிருக்கிறது.

பண்டை நாட்களைக் காட்டிலும் அதிக அளவிலும் வேகத்திலும் தனி மனிதன், சமுதாயத்திலே ஈடுபட வேண்டியிருக்கிறது.

தம்பி! வேடிக்கையாகவே இருக்கும், நான் கூறுவதனை ஆராய்ந்து பார்த்திடின், ஒரு ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு நகர்களில், இத்தனை மக்கள் ”நடமாட்டம்’ கண்டதில்லை;

இன்றோ எந்த ஒரு காலைப் போதினைக் கணக்குக்காக எடுத்துக் கொண்டாலும், வீட்டினில் உள்ளவர்களைக் காட்டிலும் வெளியே உள்ளவர்களின் தொகையே அதிகம். எந்த நகரத்து நெடுஞ்சாலையினையும் கூர்ந்து பார்த்திடு தம்பி! சாரை சாரையாக மக்கள், ஆடவர் பெண்டிர், இளைஞர், முதியோர், சென்ற வண்ணம் உள்ளனர்! எத்தனை வேகம் கவனித்தனையா! ஓர் வலிவுமிக்கவன் வீசிடும் சவுக்கடிக்குப் பயந்து, இதோ செல்கிறோம்! செல்கிறோம்! தாமதிக்கமாட்டோம்! என்று கூறிக் கொண்டே செல்பவர் போலத் தோற்றமளிக்கிறது, நடை, வேகம், பரபரப்பு. நண்பர்கள் தொலைவிலே இருந்துகொண்டே, புன்னகையை உதிர்த்துவிட்டுச் செல்கின்றனர். வேலை! வேலை! வேலை! ஓயாத வேலை! கடிகார முள் வேலாகிக் குத்துகிறது, விழி! எழு!

நட! என்று; சங்கொ- காதைத் துளைக்கிறது, கிளம்பு! கிளம்பு! உருளைகள் அழைக்கின்றன உடனே வந்திடு என்று, இத்தனை பரபரப்புக்கு இடையில், சமுதாயப் பின்னலுக்கு இடையில், தனி மனித வாழ்க்கை எப்படித் தப்பிப் பிழைத்துத் தழைத்திட முடியும்?

தம்பி! இந்தப் பிரச்சினை பற்றி அறிவாளர்கள் மேலும் நல்ல முறையில் தமது கருத்தினைச் செலுத்திட வேண்டும்.

இந்நிலையில், தனி வாழ்க்கை என்பது, அவரவர் தமக்கென அமைத்துக் கொள்ளும் வாழ்க்கை என்ற இலக்கணத்தை இழந்து விடுகிறது. வாழ்க்கையே இன்று பெரிதும், சமூகத்தில் ஏற்படும் பிணைப்பினாலும், பரவி விடும் சூழ்நிலையினாலும், இவைகளை முறைப்படுத்தும் பொறுப் பேற்றுக் கொண்டுள்ள அரசினாலும், அமைத்து அளிக்கப்படுகிறது.

அரசு இன்று மேற்கொண்டுவிட்டுள்ள பொறுப்பின் அளவும் அதிகம்; வகையும் பலப்பல.

இது, பண்டை நாட்கட்கும் இன்றுள்ள நிலைக்கும் இடையில் முளைத்துப் படர்ந்துவிட்டுள்ள மிகப்பெரிய வேறுபாடு, இதன் காரணமாக "தனி மனித வாழ்க்கை'யில் அரசின் வலிவுமிக்க நீண்ட கரம் வெகுவாகப் புகுந்து விட்டது. அரங்கு அமைப்பதும், ஆடும் முறை வகுப்பதும் மட்டுமல்ல, அரசு மேற்கொண்டு விட்டுள்ள அலுவல் ஆட முற்படுவோருக்குக் கயிறு பூட்டி இயக்குவிக்கும் அலுவலையும் அரசு மேற்கொண்டு விட்டிருக்கிறது.

எனவேதான் தம்பி! இன்று வாழ்வு செம்மைப்பட வேண்டுமெனில், அது அவரவர்கள் தத்தமது அறிவாற்றலுக் கேற்றபடி செய்து கொண்டிட இயலும்

என்பதிலிருந்து வெகுதூரம் விலகிவிட்டதுடன், வாழ்வின் வகையை ஆக்கித் தந்திடும் பொறுப்பினை அரசு மேற்கொண்டுவிட்ட நிலை உறுதிப்பட்டுப் போய்விட்டிருக்கிறது.

எனவே, சீர்கேடுகள், முறைகேடுகள் நீக்கப்படுவதற்கான பணியினைத் தனி மனிதர்கள் மேற்கொண்டு வெற்றி பெற்றிட வாய்ப்பு பெரிதும் கிடைப்பதில்லை - ஒரு சிலர் அத்தகைய தூய தொண்டாற்றி வருகின்றனர், நன்றி, மகிழ்ச்சி - அரசு மேற்கொண்டிட வேண்டிய அளவுக்குப் பிரச்சினை பெரிதாகிவிட்டிருக்கிறது; சிக்கல் மிகுந்ததாகி விட்டிருக்கிறது.

அத்தனை பொறுப்பினை மேற்கொண்டுவிட்டுள்ள அரசு இருக்கிறதே அதன் பொருள் என்ன? வகை என்ன? தனி மனிதர்கள் தமது வாழ்வை வகைப்படுத்திக் கொள்ளும் வாய்ப்பையும் இழந்திட வேண்டிய

விதமாகப் படை எடுத்துள்ள அரசு எனும் அமைப்பின் இலக்கணம் என்ன? விந்தை, தம்பி! மிக விந்தையானது!! அதே தனி மனிதர்கள் ஆக்கித் தந்திடும் அமைப்பே அந்த அரசு!! அதற்கா அத்தனை ஆற்றல்? ஆம்! அதற்கே!! உலைக்கூடத்தான் அமைத்துத் தருவதே வாள்! ஆயின் அந்த வாள் அவன் சிரத்தினையே கொய்திடும் வலிவு பெற்றுக் கொள்கிறதல்லவா? மனிதன் வெட்டுவதே குளம்! ஆயின் இடறி வீழ்ந்திடின் அவன் உயிரையே குடித்துவிடுகிறதல்லவா! பருகிடும் தேன், துளி சில உடலிலே தங்கிடின், சிற்றெறும்பு மொய்த்துக் கடித்திடுகிறதல்லவா, உடலை.

ஆகவே, தம்பி! இற்றை நாட்களில், தனி மனிதர்கள் பெற்றுவிட்ட வேகம் நிறைந்த வாழ்க்கை காரணமாக, சமுதாயப் பின்னலை அரசிடம் ஒப்படைத்துவிட்டிருப்பதாலும்,

அந்த அரசு தனிமனித வாழ்க்கையின் வடிவத்தையும் வகையையும் உருவாக்கிடும் பொறுப்பினை ஏற்றுக் கொண்டிருப்பதாலும், அத்தகைய அரசு எவ்விதமாக அமைகிறதோ அதைப் பொறுத்தே, தனிமனித வாழ்வின் செம்மையும், சமுதாய வாழ்வின் மாண்பும் இருக்கிறது.

தனிமனித வாழ்க்கை மங்கி மடிந்துகொண்டிருக்கும் இந்த நாளிலேயே இன்னமும் போதுமான தெளிவுடன் உணரப்படா மலிருக்கிற இந்தப் பேருண்மையைத் தமிழர் நீண்ட நெடுங்காலத்திற்கு முன்பே உணர்ந்து நெல்லும் நீரும் அல்ல, மன்னனே நாட்டுக்கு உயிர் அளித்திடுவோன் என்று அரசுக்கு உள்ள வலிமையினை முதன்மையானதாக்கிக் காட்டினர்.

அன்று அது எந்த அளவுக்கு உண்மையாக

இருந்ததோ, அதனினும் பன்மடங்கு அதிக அளவுள்ள உண்மை அது இன்று.

மன்னன். . . என்பது அரசு முறையிலே ஒருவகை; எனவே, இன்று மன்னன் என்ற சொல்லுக்கு ஈடாக அரசு என்ற சொல்லினைக் கொண்டிடல், முறையேயாகும்.

தம்பி! மன்னன் பிறக்கிறான்; "அரசு' அமைக்கிறோம் இருவேறு நிலைகள்! இந்த இருவேறு நிலைகளுக்கிடையில், இரத்த ஆறுகள் பெருக்கெடுத்து ஓடியிருக்கின்றன என்பதனை விளக்கிக் காட்டுகிறது வரலாற்றுச் சுவடி.

"அரசு' அமைத்திடும் பொறுப்பு. தனி மனிதரின் உரிமை. அதனை நிறைவேற்றுவதிலே தனி மனிதர் எத்தனைத் திறமை கொள்கின்றனரோ, அதனைப் பொறுத்தே அரசு அமைகிறது; அதன்

தொடர்பாகத் தனி மனித வாழ்க்கையின் வாழ்வும் இருக்கிறது.

எனவே, இன்று அரசியல் என்பது, தீண்டத் தகாத ஒன்று என்று எண்ணுவோர், ஏற்பட்டுவிட்டுள்ள மாறுதலை அறிந்து கொள்ளாதவர்கள் என்றுதான் கூற வேண்டும். அரசு அமைத்திடும் உரிமையைச் செவ்வனே நிறைவேற்ற வழி வகுத்திடும் கலையே, அரசியல். பாமர மக்கள் பாராளும் காலமிது என்றும், சிட்டுக்குருவிகள் வல்லூறை விரட்டும் காலமிது என்றும், எடுத்துரைத்து விட்டு, அரசியல் அத்துணை இன்றியமையாத அலுவலல்ல என்றும் பேசுவது, நாம் எவரிடம் எதைப் பறித்துக் கொண்டோம், எவர் நம்மிடம் உள்ளதைப் பறித்துக் கொள்வர் என்று எண்ணிக் கொண்டு, பொருள் எடுத்துக் கொண்டு நெடுவழி போவதற்கு ஒப்பாகும்.

தம்பி! இதனை உணர்ந்தே நாம் அரசியல்

பணியினை மேற்கொண்டுள்ளோம்; இந்தப் பணியின் வகை, திறம், இதிலே கிடைத்திடும் வெற்றி என்பதனைப் பொறுத்தே, சமூக இயல், பொருளாதார இயல், கலை இயல், பண்பாட்டு இயல், நெறி இயல் என்பவை அனைத்தும் சீர் பெறுவதற்கான வாய்ப்பு இருக்கிறது.

எனவே, நாம் ஓர் விடுதலைப் போரினில் ஈடுபட்டிருக்கி றோம் என்பதனை மறந்திடலாகாது,

விடுதலை என்றால், ஒரு நாட்டைப் பிறிதோர் நாட்டார் பற்றிக் கொண்டுள்ளதனை நீக்கிடுவது மட்டுமே என்போர் குறையறிவினர்.

நமது நாட்டிலேயே, நமது நாட்டவராலேயே மூட்டி விடப்படுபவை, பூட்டிவிடப்படுபவை ஆகிய தளைகளிலிருந்து மக்களை விடுவிக்கும் போரும் விடுதலைப்போரே.

அந்தப் போரினில் ஈடுபட்டுள்ளோருக்கு, மற்றைய விழாக்களைக் காட்டிலும் இவ்விழா, கருத்துக்கு விருந்தளிக்கும் தன்மையது என்பது பற்றியே, கழகத்தவர் பொங்கற் புதுநாளைப் போற்றுகின்றனர், அதன் பொலிவு பற்றி மகிழ்ந்துரைத்து விழா நடத்துகின்றனர்.

பொங்கற் புதுநாளின் பொலிவு, தம்பி! உன் இல்லத்திலும் இதயத்திலும் ஒளி தந்திடுவதாக! என்ற என் நல்வாழ்த்தை அளிக்கின்றேன். இவ்வளவுதானா என்கின்றாயா?

தம்பி! வில்லியம் கல்லன் பிரயான்ட் எனும் அமெரிக்கக் கவிஞரொருவர் (1794-1878) ”விடுதலை’ பற்றித் தீட்டிய கவிதையினைப் படித்திடும் பேறு, மொழிக் கிளர்ச்சியின்போது சிறைப்பட்டிருந்தபோது கிடைத்தது.

இத்தனை கூறுகிறானே, அண்ணன் பொங்கற் புதுநாள் பற்றி, என்ன தருகின்றான் என்று எண்ணிக் கொள்வாய், தம்பி! உனக்கு நான் என்ன தந்திட இயலும், பொன்னும் பொருளுமா! சே! உன் வியர்வைத் துளியிலே அஃது விளைந்திடும்! எனவே, எனக்குக் கிடைத்ததை உனக்களிப்பது என்ற முறையிலே அந்தக் கவிதையைத் தந்திடுகின்றேன்;

விடுதலையே! இருண்ட மொய்குழல்
சுருண்டு அழகு தரும்
கொடிபோன்றாள் !
இளமங்கை !
என்று உன்னைக் கூறுகின்றார்.
உண்மை அல்ல அது,
கவிஞர் கனவில் உருவானது.

வாளொடு கரம் !

வந்திடு கேடு தடுத்திடும்,

கேடயம் மறுகரம், படைக்கலன் பலஉள

போரிடும் வீரன் நீ !

களம் பல கண்ட கட்டுடலோன் நீ !

நெறிந்த புருவம் நேர்த்தி அளித்திடும்

முகமெலாம் வடுக்கள் போர்ப்புகழ்க் குறிகள் !

இடிதனை ஏவினர் உனை அழித்திட

இலைஅதற்கு ஆற்றல் உனை வீழ்த்திட !

உலைபல தனிலே உருக்கி வடித்தனர்

உனைப் பிணைத்திடத் தளை பலப்பல

கட்டி அடக்கினோம் என்றவர் களித்தனர்.

பட்டுத் தெறித்திடப் பலமதை ஏவினாய் !

உனை அடைத்திட அமைத்தனர் ஆழ்சிறை !

உதைத்து எழுந்தனை சிறை பொடியாகிட !

கொழுந்துவிட்டெறி தீயென, நீயுமே

எழுந்தனை! எழுப்பினை, எங்குள பேரையும் !

உன்குரல் கேட்டதும் பற்பல நாட்டவர்,

இங்குளோம்! இங்குளோம் !

என்று உடன் முழக்கினர்.

அடக்கிடும் சழக்கர்கள் அரண்டு ஓடிட !

கன்னல் மொழிச் சுவையில், விழி விருந்தில், விழா மகிழ்வில் உள்ள உனக்கு இந்தக் கவிதையைத்தானா நான் அனுப்பித் தருவது என்று எண்ணிக் கொள்ளமாட்டாய்;

அறிவாயே தம்பி! நீ, துறை இரண்டு, அகம்; புறம்.

அன்புள்ள

அண்ணாதுரை

14-1-66

37. வெள்ளை மாளிகையில் - 1

வெள்ளை மாளிகையில் கருப்பு மனிதர் !
”டாம் மாமா விடுதி‘யின் கருத்துகள் “டிரம்’ (முரசு) எனும் நீக்கிரோவின் கதை
நீக்கிரோக்களின் உயர்வுக்கு எடுத்துக்காட்டு: புக்கர் டி. வாஷிங்டன் இர்விங் வாலாஸ் எழுதிய”மனிதன்’ ஏடு கூறும் கதை

தம்பி,

வெள்ளை மாளிகை சென்றிடலாம் வருகின்றாயா? ஆமாம்! அமெரிக்க அரசு அதிபர் கொலுவிருக்கும் அழகு மணிமாடம்தான். அங்கா? நாமா? என்று மலைக்காதே! நாம் யார்? மனிதரில்லையா!! மனிதருக்காக அமைவதுதானே மாடம் கூடம் மணிமண்டபம் மாளிகை என்பவை யாவும்; மாளிகையின் நிறமும் பெயரும் எதுவாக

இருந்தால் என்ன - வெள்ளை - சிவப்பு - பச்சை - நீலம் - இவை பல்வேறு வகையான வண்ணங்கள், வேறென்ன? அமெரிக்க அதிபர் வீற்றிருக்கும் மாளிகைக்கு "வெள்ளை மாளிகை' என்று பெயர் இருப்ப தாலேயே, மாநிறக்காரர் நுழையக்கூடாதா என்ன!

மேலும், நான் வெள்ளை மாளிகைக்கு வரச்சொல்லுவது, அதனை மனக்கண்ணால் காண்பதற்காகத்தான். நாம் மாநிறம்! ஆனால், நான் உன்னைக் காண அழைக்கும் வெள்ளை மாளிகையில் ஒரு கருப்பு மனிதர் அரசோச்சுகிறார். எனக்குள்ள ஆசை அந்த வெள்ளை மாளிகையைக் காண்பதிலே கூட அவ்வளவு இல்லை; அங்கு ஒரு கருப்பு மனிதர் ஆட்சி செய்வதைக் காண்பதிலேதான்.

வெள்ளை மாளிகையில் ஓர் கருப்பு மனிதர்! - என்று நான் கூறுகிறேன், ஆனால், தம்பி! அந்த ஏட்டுக்கு உள்ள தலைப்பு அது

அல்ல; மனிதன் என்பதே தலைப்பு.

நிறம், வடிவம், நாடு, மதம், மொழி, நிலை, எப்படி எப்படி இருந்திடினும், மனிதன் மனிதன்தானே! அந்த உயர்ந்த பண்பினை உணர்த்த வேண்டும் என்பதற்காகவே நூலாசிரியர் தமது ஏட்டுக்கு மனிதன் என்ற தலைப்பிட்டுள்ளார். அந்த "மனிதனை'க் காண்பதற்காகவே, உன்னை வெள்ளை மாளிகைக்கு அழைக்கிறேன்; அங்கு யாராரோ இருந்தனர்; ஆனால், மனிதன் கொலுவிருக்கும் மாளிகையாக இருந்திடும் நிலையை இந்த "ஏடு' மூலமே காணமுடியும். கண்டேன், களிப்புற்றேன்; எண்ண எண்ண இனித்திடும் கருத்துண்டேன்; அந்தச் சுவையை நான், தம்பி! உன்னுடனன்றி வேறு எவருடன் கலந்துண்பதிலே மகிழ்ச்சி பெற்றிடுவேன். அதனால் உன்னிடம் கூறுகிறேன்; மேலும் உன்னிடம்

கூறுவதென்பது உயர் கருத்துகளின் பெட்டகம் போன்ற மனம் படைத்த இலட்சியவாதியிடம் கூறுவதென் றல்லவா பொருள் படுகிறது; அதனால் கூறுகிறேன்.

இப்போது அந்த வெள்ளை மாளிகையில் அமர்ந்து அரசோச்சுபவர் லிண்டன் ஜான்சன்; அறிவாய். அவர் சென்ற திங்கள் பெருமிதத்துடன் பேருரையாற்றி இருக்கிறார், உலகிலேயே நமது நாடுதான் செல்வம் மிகுதியாக உள்ள நாடு என்று; பழக்கப்பட்ட "பாஷை' விரும்புவோருக்காகச் சொல்லுகிறேன்."குபேரபுரி'.

அந்தக் "குபேரபுரி'யின் அதிபராகக் கொலுவிருக்கும் ஜான்சன், இப்போது உள்ளது போன்ற வளம் - செல்வப் பெருக்கம் - இதற்கு முன்பு எப்போதும் இருந்ததில்லை - அந்தச் செல்வம் மேலும் மேலும் வளருகிறது, "நமது நாட்டு மக்களின் வாழ்க்கையைப்

பூந்தோட்டமாக்கிடத்தக்க அளவு மட்டுமல்ல, உலகம் முழுவதிலுமே, மணம் வீசும் வாழ்வு மலரச் செய்திடத் தக்க அளவுக்கு" என்று பூரிப்புடன் பேசியிருக்கிறார்.

இப்போதே, தம்பி! அந்த அமெரிக்கப் பணம் நடமாடாத நாடு இல்லை என்று கூறலாம்; அந்த நாட்டை நாடாத தலைவர்கள் இல்லை என்று சொல்லலாம். யாரோ ஒரு கணக்குச் சொன்னார்கள், இந்தியாவிலே மக்கள் சாப்பிடும் உணவில் எட்டுக் கவளத்தில் ஒன்று அமெரிக்கா கொடுப்பது என்று. எனவே, ஜான்சன், அமெரிக்காவின் அளவுகடந்த செல்வம் இந்த அவனி முழுவதும் ஆனந்த வாழ்வு மலரச் செய்ய உதவிடும் என்று கூறிக் கொள்ள உரிமை பெற்றிருக்கிறார். அமெரிக்காவை எதிர்பார்த்துத்தானா நம் வாழ்க்கை அமைய வேண்டும் என்று எண்ணிப் பார்க்க வேண்டிய கடமை,

கையேந்துபவர்களுக்கு இருக்கிறது. அது ஒரு தனிப் பிரச்சினை. இப்போது ஜான்சன் கூறியிருப்பதிலே நாம் கவனித்துப் பார்க்க வேண்டிய பகுதி அமெரிக்காவில் இன்றுள்ள செல்வ மிகுதி. அது மறுக்க முடியாத உண்மை. பணத்திலே புரளுகிறார்கள் என்று கதைகளிலே எழுதுகிறார்களே, அது மெய்யான நிலைமையாக இருக்கிறது அமெரிக்காவில்.

ஒரு கணக்குக் காட்டுகிறேன். பார்த்துத் தெரிந்து கொள்ளேன், நிலைமையை.

இன்று அமெரிக்காவில் உள்ள மோட்டார் கார்களின் எண்ணிக்கை 690 இலட்சம்! டெலிபோன்கள் 890 இலட்சம்! டெ-விஷன் செட்டுகள் 600 இலட்சம்! உல்லாசப் படகுகள் 70 இலட்சம்! அமெரிக்க மக்கள் ஆண்டொன்றுக்கு இப்போது செலவிடும் பணம் இருக்கிறதே, வாழ்க்கை நடத்த

உல்லாசம் பெற, எவ்வளவு தொகை தெரியுமா, தம்பி! எச்சரிக்கையாக இரு. மயக்கம் வந்துவிடப் போகிறது, அவர்கள் செலவிடும் பணம் ரூபாய்!! 1985500000000! இவ்வளவு ரூபாய்கள் செலவிடுகிறார்கள் ஒரே வருடத்தில் பணத்திலே புரள்கிறார்கள் என்று ஏன் சொல்லக்கூடாது!!

தம்பி! ஓய்வு நாட்கள் உள்ளனவே. இயற்கை அழகு காண, செயற்கைச் சேட்டைகளைச் சுவைக்க, மலையுச்சி ஏற, கடலிலே குடைந்தாட, இவ்விதமான இன்பப் பொழுதுபோக்கு, இதற்கு மட்டும் இந்த ஆண்டு அமெரிக்க மக்கள் செலவிடும் தொகை 14,250 கோடி ரூபாயாம்! கேட்டனையா! செயற்கை நீச்சல் குளங்கள் மட்டும் சென்ற ஆண்டு புதிதாக 50,000 அமைத்திருக்கிறார்களாமே!

பணம் இந்த அளவு புரளும்போது, என்னென்ன சாமான்கள்தான் அவர்கள்

வாங்கமாட்டார்கள்! இங்கு நமக்கிருக்கிற தரித்திர நிலை, மகன் சட்டை தைத்தால் தகப்பன் மேல் வேட்டியை ஒட்டுப்போட்டுப் போட்டுக் கொள்ளும் நிலையையும், மகளுக்குச் சேலை வாங்கினால் தாய் சாயம் போனதைத் துவைத்துக் கட்டிக் கொள்ள வேண்டிய நிலையையும் மூட்டிவிடுகிறது. அங்கே பணம் படுத்துகிறபாடு, என்ன வாங்கலாம், எவ்வளவு வாங்கலாம் என்ற மன அரிப்பைத் தருகிறது. பண்டங்களை விற்பனை செய்பவர்கள், தத்தமது சரக்குகளை வாங்கும்படி மக்களைத் தூண்டிட விளம்பரம் செய்கிறார்கள். அந்த விளம்பரச் செலவுக்காக மட்டும் வணிகர்கள் செலவிடும் தொகை, ஒரு ஆண்டுக்கு 6850 கோடி ரூபாயாம். 3

இதைப் போல முன்பு ஒருமுறை பணம் புரண்டது. உச்சிக்குச் சென்று

உருண்டு கீழே விழுவதுபோல, அமெரிக்கப் பொருளாதாரத்தில் ஒரு பெரிய சரிவு ஏற்பட்டது; அது 1929லில் என்று எச்சரிக்கை தந்துள்ளனர் சிலர். ஆனால், பல பொருளாதார நிபுணர்கள் அவ்விதமான பயத்துக்குத் துளியும் ஆதாரம் இல்லை என்று அறிவித்திருக்கிறார்கள். இதுபற்றிக் கருத்து வேற்றுமை இருப்பினும், இன்றைய செல்வப் பெருக்கம் பற்றி மட்டும் யாரும் மறுப்புத் தெரிவிக்கவில்லை.

அத்தகைய அமெரிக்க நாட்டின் ஆட்சிபீடம் அமைந்துள்ள இடம் வெள்ளை மாளிகை!

ஆட்சிப் பீடம் உள்ள இடத்துக்குத்தான் வெள்ளை மாளிகை என்று பெயர் இருக்கிறது. ஆனால், அந்த ஆட்சியிலே உள்ளவர்கள் அனைவரின் நிறமும் வெள்ளையல்ல; கருநிறம் கொண்டவர்கள் இருக்கிறார்கள்; நீக்ரோ மக்கள்.

நிறம் கருப்பு, இனம் நீக்ரோ, பூர்வீகம் ஆப்பிரிக்கா கண்டம்; ஆனால், அவர்கள் அமெரிக்கர்கள்; சட்டம் சொல்லுகிறது; ஆபிரகாம் லிங்கன் அவர்களும் அமெரிக்கர் களே என்று வார்த்தைகளை வீசி மட்டுமல்ல ஒரு பெரிய பயங்கரமான உள்நாட்டுப் போர் நடாத்தியே கூறிட வேண்டி நேரிட்டது. ”சரி’’ என்றனர்; உதடு அசைந்தது தம்பி! உதடு! உள்ளம் இருக்கிறதே அதிலே புற்றரவு புகுந்து கொண்டுதான் இருக்கிறது, சாகவில்லை; சாகடிக்கவும் முடியவில்லை. அதனைச் சாகடிக்கத் துணிந்து கிளம்பிய கென்னடியைக் கொடியோர் கொன்று விட்டனர், பதறப் பதற; பக்கம் இருந்த அவர் துணைவியார் ஜாக்குலீன் துடிக்கத் துடிக்க.

இறவாப் புகழ் பெற்றுவிட்ட கென்னடி இதே வெள்ளை மாளிகையிலேதான் தங்கி ஆட்சி நடாத்தி வந்தார். அந்த

வெள்ளை மாளிகையில் ஒரு கருப்பு மனிதரை - நீக்ரோவை - அதிபராக அமரச் செய்து பார்க்கிறார். “மனிதன்’ எனும் ஏடு எழுதியுள்ள இர்விங் வாலாஸ் என்பவர் அந்தப் புத்தகத்தைப் படித்ததிலிருந்து எனக்கு ஒரே ஆவல், உன்னிடம் கூற வேண்டும் என்று. ஆனால், அந்த ஏட்டிலே கூறப்பட்டுள்ள கருத்தின் முழுப் பொருளைத் தெரிந்து கொள்ள வேண்டுமானால்,”கருப்பு மனிதர்கள்’, வெள்ளை மாளிகை உள்ள நாட்டில் எப்படி நடத்தப்பட்டு வந்தார்கள், எப்படி நடத்தப்பட்டு வருகிறார்கள் என்பது பற்றி தெரிந்து கொண்டாக வேண்டும் ”நீக்ரோ’க்களின் பிரச்சினையின் வேதனை நிரம்பிய உண்மைகளை உணர்ந்தால் மட்டுமே, இர்விங் வாலஸ் தீட்டியுள்ள காவியம் போன்ற ஏட்டின் கருத்து பயனளிக்கும், பொருள் விளங்கும். வெள்ளைப் புலி என்பது

விளங்க வேண்டுமானால், புலியைப் பற்றியும் வெள்ளை நிறம் பற்றியும் புரிந்திருக்க வேண்டுமல்லவா? தில்லைத் தீட்சிதர் தீண்டாமை ஒழிப்பு மாநாட்டுக்குத் தலைமை வகிக்கிறார் என்று பிரான்சு நாட்டிலே உள்ளவரிடம் சொன்னால் முழுப் பொருள் விளங்குமா? தீண்டாமைக் கொடுமையின் கேடுகளையும், தில்லை தீட்சிதர் என்ற முறையின் தன்மையையும், காலவேகம் இந்த இரண்டு நிலைமைகளையும் மாற்றி விட்டிருப்பதனையும் அறிந்தவர்கள் மட்டுமே தில்லைத் தீட்சிதர் தீண்டாமை ஒழிப்பு மாநாட்டுக்குத் தலைமை வகித்தார் என்ற வாசகத்தின் முழுப் பொருளையும் உணர முடியும், அது போலத்தான் "மனிதன்' எனும் அந்த ஏட்டிலே உள்ளவற்றினை முழு அளவில் உணர வேண்டுமானால், அந்த ஏட்டிலே இல்லாத வேறு பல ஏடுகளிலே உள்ள பல

உண்மைகளையும் நிலைமைகளையும் கூறியாக வேண்டும். ஆகவே, தம்பி! இந்த ஏடு என்னை உன்னிடம் வேறு பல ஏடுகளைப் பற்றிய நினைவுகளையும் கூறிடச் செய்கிறது.

ஒரு நல்ல உயிருள்ள ஏட்டுக்கு இதுவே சிறந்த இலக்கணம் என்று கூடக் கூறலாம்.

“டாம் மாமாவின் விடுதி’ என்று ஒரு ஏடு, நீக்ரோ பிரச்சினையை உருக்கத்துடன் எடுத்துக் கூறுவது. அது”அந்த நாட்களில்’ புரட்சி ஏடு! இன்றுள்ள அமெரிக்க நீக்ரோக்கள், ”டாம் மாமா’ என்றால் சண்டைக்கு வருவார்கள்! அந்த ஏட்டின் கருத்து நீக்ரோக்களுக்கு விடுதலை வாங்கித் தராது; அது அடிமை வாழ்க்கைக்கு ஒரு அலங்கார மெருகேற்றும் தந்திரத் திட்டம் என்று கூறுகிறார்கள்.

எந்த அளவுக்கு மனம் வெதும்பிக் கிடக்கிறது; ஆத்திரம் பீறிட்டுக் கிளம்பி

விட்டிருக்கிறது என்றால், வெள்ளையர் எங்களைச் சம உரிமையுடன் நடத்தவே மாட்டார்கள்; எனவே, எமக்கென்று அமெரிக்காவில் ஒரு தனி நாடு அமைத்துக் கொடுத்திடுக! என்று கேட்கின்ற அளவுக்குச் சென்றிருக்கிறது. இன்னும் சிலர், நாங்கள் அமெரிக்காவில் இருக்கிறோம். ஆனால், அமெரிக்கர் அல்ல, அமெரிக்கர் ஆகவும் முடியாது; தேவையுமில்லை; நாங்கள் நீக்ரோக்கள்; எங்கள் தாயகம் ஆப்பிரிக்கா; நாங்கள் அங்குச் சென்று, "எங்கள் இரத்தத்தின் இரத்தமாக உள்ள நீக்ரோ இனத்தாருடன் சேர்ந்து வாழ்ந்து கொள்கிறோம். இதற்கு ஏற்பாடு செய்து கொடுத்தால் போதும் என்று கேட்கத் தலைப்பட்டு விட்டனர்.

இத்தகைய நிலைமை இருந்திடுவது உணரப்பட்டால்தான், வெள்ளை மாளிகையில்

கருப்பு மனிதர் என்பதன் பொருள் விளங்கும்.

அமெரிக்க அரசு, நீக்ரோக்களில் தகுதி மிகுந்த சிலருக்கு உயர் பதவி கொடுத்திருக்கிறது. கீர்த்தி மிக்க வழக்கறிஞர்கள், கை தேர்ந்த மருத்துவர்கள், வளமான வாழ்க்கை நடாத்தும் வணிகர்கள் நீக்ரோக்களில் இருக்கிறார்கள். அதுபோலவே அரசாங்க அலுவலிலும் திறமை மிக்க அதிகாரிகளாகச் சில நீக்ரோக்கள் இருக்கிறார்கள்.

சென்ற திங்கள் அமெரிக்கக் குடியரசுத் தலைவர் ஜான்சன், அமைச்சரவையிலேயே ஒரு நீக்ரோவுக்கு இடம் கொடுத்திருக்கிறார்.

இந்தச் சம்பவங்கள் உலகத்தாருக்கு, பாராட்டுதலுக் குரியதாக, வாழ்த்தி வரவேற்கத்தக்கதாகத் தென்படுவதற்குக் காரணம், இவை கோபுரக் கலசங்கள்

போலப் பளபளப்பாகத் தெரிபவை; உலகின் கண்களுக்குச் சரியான அளவிலே தெரியாமல் உள்ள, அமெரிக்கக் கருப்பர்களின் பொதுவான வாழ்க்கையிலே ஏற்றப்பட்டிருக்கும் இழிவுகள், சிறுமைகள், கொடுமைகள், இன்னல்கள் மலைபோல உள்ளன.

இத்தகைய நிலையிலே உள்ள கருப்பர்களிலே சிலர், டாக்டர்களாவதும், வழக்கறிஞராவதும், அரசாங்க அதிகாரிக ளாவதும், அமைச்சர் அவையிலே இடம் பெறுவதும், நடைபெறக் கூடாதன நடந்து விட்டன என்ற பட்டியலைச் சேர்ந்தவை; மலடி வயிற்று மகன்! புதையல் எடுத்த தனம்!

அமைச்சர் அவையிலே இடம் பெற்றுவிடுவதே "அதிசயம்"' அதிர்ச்சி தரத்தக்க மாறுதல்' என்று கருதப்படுகிறது என்றால், ஒரு "கருப்பு மனிதர்' வெள்ளை

மாளிகையில், ஆட்சித் தலைவராகவே அமருவது என்றால், வெள்ளை வெறியர்களின் மனம் எரிமலையாகி வெடித்து ஆத்திரக் குழம்பினை அல்லவா கக்கிடச் செய்திடும்.

துணிந்து, ஆனால் தூயநோக்கத்தோடு, நூலாசிரியர் கருப்பு மனிதரை வெள்ளை மாளிகையில் அதிபராக அமரும்படி தம் கற்பனைக்குக் கட்டளையிட்டாரே தவிர, அவருக்கே கூட, அதிகதூரம் கற்பனையை ஓடவிடக் கூடாது, நம்பவே முடியாதது இது என்று படித்திடுவோர் கருதிவிடத்தக்க விதமாகக் கதை அமைந்து விடக்கூடாது என்ற எண்ணம் ஏற்பட்டு, வெள்ளை மாளிகையில் ஆட்சி அதிபராக அமரும்படி, அமெரிக்க மக்கள், நிறவெறியற்று, நிறபேதம் பார்க்காமல் ஒரு கருப்பரை, குடிஅரசுத் தலைவராகத் தேர்ந்தெடுத்தார்கள் என்று எழுதவில்லை;

எதிர்பாராத சில நிகழ்ச்சிகளால், ஒரு கருப்பர், வெள்ளை மாளிகையில் குடியரசுத் தலைவராக அமர வேண்டிய நிலை ஏற்பட்டது என்ற அளவிலேயே தமது கற்பனையை நிறுத்திக் கொண்டார்.

கற்பனை வளம் குறைவாக உள்ளவர்கள், ஒரு கருப்பர் வெள்ளை மாளிகையில் அதிபராக அமர்ந்தது போன்ற கனவு கண்டார்; அந்தக் கனவில். . . என்று எழுதியிருந்திருப்பார்கள். இர்விங் வாலஸ் நல்ல கற்பனைச் செறிவு இருப்பதால், நடந்திருக்கக் கூடும் என்று அனைவரும் ஒப்புக்கொள்ளத்தக்க விதமான ஒரு நிகழ்ச்சிச் சூழ்நிலையைக் காட்டி, வெள்ளை மாளிகையில் கருப்பு மனிதரை இருந்திடச் செய்திருக்கிறார்.

தம்பி! அமெரிக்காவிலேயே இருக்கிறார்கள், ஆனால் அவர்கள்

நிறம் கருப்பு என்பதால், அவர்களை ஓட்டல்களில் - படக்காட்சிக் கொட்டகைகளில் - கல்விக்கூடங்களில் - மருத்துவமனைகளில் - பிரித்து வைக்கிறார்கள்; இத்தனைக்கும் இப்படிச் செய்யக்கூடாது என்று சட்டம் இருக்கிறது. நீக்ரோக்களுக்குக் கல்விக்கூடங்களில் வெள்ளையருடன் சேர்ந்து படிக்கச் சட்டம் உரிமை அளிக்கிறது; ஆனால் நிறவெறி தடுக்கிறது; போலீஸ் துணையுடன் மட்டுமே கருப்பு மாணவர்கள் அந்தக் கல்விக்கூடங்கள் செல்ல முடிகிறது அங்குத் தரப்படும் பாடமோ "அனைவரும் சமம்'' என்பது. எத்தனை போலித்தனமான நடவடிக்கை!! எத்தனை காலமாக நடைபெற்றுக் கொண்டு வருகிறது! தலைமுறை தலைமுறையாக இந்தக் கொடுமையை அனுபவித்துக் கொண்டு வரும் நீக்ரோ மக்கள், வெள்ளையரிடம்

எப்படித்தான்"நட்புறவு' காட்ட முடியும்! பெரும்பாலும் முடிவதில்லை; காட்டப்படும் "நட்புறவில்' பெருமளவு"நடிப்பாக'வே இருந்துவருகிறது, வேறு எப்படி இருக்க முடியும்?

அன்புரை, அறிவுரை, விளக்கவுரை எல்லாம் ஏடுகளிலே நிரப்பித் தந்துள்ளனர்; இப்போதும் தந்தபடி உள்ளனர்.

அமெரிக்காவில் "நீக்ரோக்கள்' பற்றி"முற்போக்காளர்' கூடத் தமது கருத்தினைக் கூறும்போது, அங்கு உள்ள நிறவெறியர்களின் ஆத்திரத்தை அதிக அளவில் கிளறிவிடாத முறையிலே பக்குவமாகவே கூற வேண்டி நேரிட்டது. அதற்கே "புருவத்தை நெறிப்போரும்"'புண்படப் பேசுவோரும்' தாக்க வருவோரும் கிளம்புவர்.

"நீக்ரோக்கள்' மனித இனத்திலே

தாழ்ந்தவர்கள்; அமெரிக்கர்களை விட"மட்டம்', அது இயற்கைச் சட்டம், இறைவன் திட்டம் என்று பேசிடுவோர் அறிவாலயங்களென்று கூறப்படும் பல்கலைக் கழகங்களிலே பேராசிரியர்களாக இருந்திடும் நிலை.

"நீக்ரோக்கள்' அமெரிக்கரின்"உடைமைகள்'. எனவே அவர்களுக்கு மனித உரிமைகள் தரப்பட்டிருக்கின்றனவா என்று பார்க்க வேண்டியது அல்ல நமது கடமை, சொத்து உரிமைச் சட்டத்தின்படி நடவடிக்கை இருக்கிறதா என்று பார்க்க வேண்டியதே நமது கடமை என்று பேசிடும் சட்ட நிபுணர்களைத் தாங்கிக் கொண்ட நாடு அமெரிக்கா.

"என் உடைமை! இதனை நான் எதுவும் செய்வேன். கூடத்திலும் வைத்திருப்பேன். குப்பைமேட்டிலும் வீசுவேன், இரவல் கொடுப்பேன் அல்லது இன்னொரு பொருளுக்கு ஈடாக மாற்றிக் கொள்வேன்,

அல்லது உடைத்தெறிவேன்; என் விருப்பப்படி செய்வேன்; இது என் உடைமை!'' என்று வீடு காடு, மாடு வண்டி, குதிரை, ஆடு போன்ற உடைமைகள் குறித்துப் பேசும்போது, ஒருவருக்கும் அந்தப் பேச்சு அக்ரமமானது என்று தோன்றுவதில்லையல்லவா? அமெரிக்காவில் - இன்று அல்ல, முன்பு - நீக்ரோக்கள் உயிருள்ள ஜீவன்கள் அல்ல, உரிமைபெற்ற மாந்தர் என்று அல்ல. வெறும் உடைமைகள் என்றே கருதப்பட்டு வந்தது.

கர்த்தரின் சம்மதம் இந்த ஏற்பாட்டுக்கு உண்டு என்று உபதேசம் செய்தவர்களும், இது நாம் இயற்றியுள்ள சட்டம் என்று வாதாடி வெற்றி பெற்றவர்களும் இருந்து வந்தது கூட வியப்பல்ல; ஆமாம், நாம் "ஐயா'வின்"உடைமை'தான், என்ன செய்யவும் அவருக்கு உரிமை உண்டு என்று நம்பிக் கிடந்திடும் நிலையில் நீக்ரோக்களும்

இருந்தனர்! திடுக்கிடச் செய்திடும் வியப்பு இஃதன்றோ?

தம்பி! அமெரிக்காவில் அந்த நாட்களிலே இருந்து வந்த முறை பற்றியும், நிலைமை பற்றியும் வெளிவந்துள்ள பல ஏடுகளிலே ஒன்று "டிரம்' (முரசு) என்ற பெயர் கொண்டது. இதிலே அப்பன், மகன், அவன் மகன் என்று மூன்று தலைமுறையினரின் வாழ்வு விளக்கப்பட்டிருக்கிறது. வாழ்வா அது? இரத்தக் கண்ணீர் விடவேண்டும் அந்த வேதனையை உணரும்போது.

"டிரம்' என்பவன், ஆப்பிரிக்க நீக்ரோ - இளைஞன் - கட்டுடல்! அங்கு அவன் ஒரு அரசாளும் உரிமை பெற்ற மரபினன் கூட. அவனை அடிமை வியாபாரிகள் பிடித்திழுத்துக் கொண்டுபோய் விற்றுவிடுகிறார்கள்; அமெரிக்கப் பண்ணையாருக்கு! அமெரிக்காவில் பருத்தி

கரும்புப் பண்ணைகள் அமைத்து பொருள் குவித்தனர் - அங்குப் பாய்ச்சப்பட்டது தண்ணீர் மட்டுமல்ல - நீக்ரோக்களின் இரத்தமும் கண்ணீரும் கூடத்தான். அப்படி ஒரு பண்ணையில்"டிரம்' பாடுபட்ட சோகக் காதைதானே இது என்று எண்ணுகிறாயா தம்பி! அதுதான் இல்லை. இந்த "டிரம்' வேலை செய்தது, விந்தையான வேறோர் பண்ணையில்! உற்பத்திப் பண்ணையில்! விளங்கவில்லையா? விளங்காது சுலபத்தில், விளங்கினாலோ வேதனை உணர்ச்சி அடங்க நெடுநேரம் பிடிக்கும்.

ஆப்பிரிக்காவிலிருந்து நீக்ரோக்களை வேட்டையாடிப் பிடித்துக் கொண்டு வந்து அமெரிக்காவில் விற்றுப் பொருள் குவித்து வந்தனர் கொடியவர்கள் - கொடியவர்கள் என்று இப்போது கூறிவிடுகிறோம் - அப்போது அவர்கள் வியாபாரிகள்! கடலிலே

வலைவீசி மீன் பிடித்து விற்பதில்லையா, பறவைகளைப் பிடித்து விற்பதில்லையா, மான்களையும் காட்டுப் பன்றிகளையும், வேட்டையாடிக் கொன்று அந்த இறைச்சியை விற்பதில்லையா, அதுபோலத்தான் அடிமை வாணிபம் அனுமதிக்கப்பட்டு வந்தது. எனவே, அதிலே ஈடுபட்டவர்களைக் கொடியவர் என்று அந்த நாட்களிலே கூறுவதில்லை.

விலை கொடுத்து வாங்கிய அடிமை உழைத்து உழைத்து ஓடாகி, உருக்குலைந்து, நோயால் தாக்குண்டு இறந்து போய் விட்டால், பண்ணையார் மறுபடியும் சந்தைக்குச் சென்று வேறு அடிமைகளை விலைக்கு வாங்கிக் கொள்வார். நாளாகவாக இந்த அடிமைகளை ஆப்பிரிக்காவிலே இருந்து கொண்டுவந்து விற்பதற்க ஆகும் செலவு அதிகமாகிக் கொண்டு வந்தது; புதிதாக அடிமைகளை வாங்க அதிகப்பணம் செலவிட

வேண்டி வந்தது. அடிமைகள் உழைத்து உருக்குலைந்து போவதால், நாளாகவாக அவர்களின் வேலைத்திறன் குறையலாயிற்று. தலைமுறைக்குத் தலைமுறை தேய்ந்து கொண்டு வந்தனர். அந்தப் பழைய கட்டுடல், தாக்குப் பிடிக்கும் வலிவு குறைந்து கொண்டே வந்தது.

அதிகச் செலவு, வலிவிழந்த நிலை ஆகிய இரண்டையும் கண்ட ஒரு வெள்ளை பண்ணை முதலாளி, புதுத்திட்டம் வகுத்தான். ஆப்பிரிக்காவிலிருந்து புதிது புதிதாக, தொகை தொகையாக நீக்ரோக்களைப் பிடித்துக் கொண்டு வருவதை விட அமெரிக்காவிலே இடம்பெற்றுவிட்ட நீக்ரோக்களைக் கொண்டே, உற்பத்தியைப் பெருக்கிக் கொண்டால் என்ன? அமெரிக்காவிலுள்ள நீக்ரோக்களிடையே "பிறப்பு' அதிக மானால், புதிய புதிய

அடிமைகள் கிடைப்பார்களல்லவா என்று எண்ணினான். அதன் விளைவாகத்தான் அந்த ஆசாமி,"நீக்ரோ உற்பத்திப் பண்ணை' அமைத்தான்;

கோழிப்பண்ணை, ஆட்டுப் பண்ணை, மாட்டுப் பண்ணை நடத்துபவர்கள் தரமான ஜோடிகளை இணைத்து, உற்பத்தியின் அளவையும் தரத்தையும் பெருக்குகிறார்கள் அல்லவா, அதுபோல கட்டுடல் படைத்த தரமான நீக்ரோ இளைஞர்களைப் பருத்திக் காடுகளிலே வேலை செய்யச் சொல்லிக் கசக்கிப் பிழிவதை விட, அவர்கள் ஊட்டம் கொடுத்து வளர்த்து, வலிவும் பொலிவும் மிகுதியாகும்படி செய்து, அவர்களை நீக்ரோ பெண்களுடன் உறவு கொள்ளச் செய்து, உற்பத்தியைப் பெருக்குவது என்று திட்டமிட்டான். இதிலே அந்த ஆசாமி தன் திறமை முழுவதையும் செலவிட்டு, நல்ல

தரமான நீக்ரோக்களைத் தனது பண்ணையில் உற்பத்தி செய்து, விற்பனை செய்து வந்தான்.

நீக்ரோப் பெண்களில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு உடல் பாழாகும்படியான கடினமான வேலை கொடுக்காமல் வலிவளிக்கும் உணவு அளித்துத் தனிவிடுதிகளில் இருந்திடச் செய்து - அது போன்றே கட்டுடல் படைத்த நீக்ரோ வாலிபர்களைத் தேர்ந்தெடுத்து அந்த விடுதிகளில் விருந்தினராக இருந்திடச் செய்வது, உறவு பெற்றவள் கருவுற்றதும், அவனை வேறு விடுதிக்குச் சென்றிட உத்திரவிட்டு விடுவது, வேறு விடுதி அந்தச் சமயம் இல்லையானால், ஆடவர் பகுதியில், தக்க சமயம் வருகிற வரையில் இருந்திடச் சொல்வது, கருவுற்றவளுக்கு வலிவு குன்றாதிருக்கத்தகக உணவளித்து வருவது குழந்தை பிறந்ததும், சிறிது காலம்

தாயுடன் இருந்திடச் செய்துவிட்டு, பிறகு குழந்தைகள் வளர்ப்பு இடத்திற்கு எடுத்துச் சென்று வளரச் செய்வது! இப்படி ஒரு பண்ணையே நடத்தினான் அந்தப் பாதகன்.

கணவன் - மனைவி என்ற உரிமைத் தொடர்போ, தாய் - மகன் என்ற பாசத் தொடர்போ ஏற்படவிடுவதில்லை; ஆண் - பெண் - குழந்தை என்ற ஒரு "தொடர்' ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது அந்தப் பண்ணையில், தயாரிக்கப்பட்ட"அடிமை' என்றால் கிராக்கி அதிகம்; பேசிக் கொள்கிறார்கள் அல்லவா புங்கனூர்ப் பசு பழைய கோட்டைக் காளை, மூரா எருமை என்று "ரகம்' பற்றி. அதுபோல இந்தப் பண்ணைக்கு ஒரு பெயர்!!

இந்தப் பண்ணையில் வந்து சேருகிறான் தம்பி! "முரசு' என்ற நீக்ரோ வா-பன்! அடிமைச் சந்தைக்கு"ஆட்களை'ப் பெற்றுக் கொடுக்கும் வேலைக்காக.

அவன் பட்டபாடு, அவன் மகன், பேரன் ஆகியோர் கண்ட அவதிகள் அந்த நூ-லே விளக்கப்பட்டிருக்கிறது. நான் முழுவதும் கூறப்போவதில்லை; நீக்ரோக்கள் விஷயமாக என்னென்ன வகையான ஈனத்தனமான கொடுமைகள் இழைக்கப் பட்டன என்பதனை எடுத்துக்காட்ட மட்டுமே "டிரம்' பற்றிய ஏட்டினைக் குறிப்பிட்டுக் காட்டினேன். அத்தகைய நீக்ரோ ஒருவன், அமெரிக்கக் குடி அரசுத் தலைவராக அமர்ந்து அரசோச்சுவது என்றால், அதிர்ச்சி அளிக்கத்தக்க அதிசய மல்லவா!!"மனிதன்' எனும் ஏடு அந்த அதிசயத்தை அல்ல, குடியரசுத் தலைவரான கருநிறத்தான் என்னென்ன அல்ல லுக்கும் ஆபத்துக்களுக்கும், இன்னலுக்கும் இழிவுகளுக்கும், சூது சூழ்ச்சிக்கும் ஆளானான் என்பதைப் படம் பிடித்துக் காட்டுகிறது.

பொறுத்தார் பூமியாள்வார்; கல்வி எவரையும் உயர்த்தும்; காலம் மெள்ள மெள்ள, ஆனால் உறுதியாக மாறித் தீரும் என்று அறிவுரைகள் அளிக்கப்படுகின்றன. தாழ்ந்த இனம் அல்லது தாழ்த்தப்பட்ட இனம், தத்தளிக்கும் சமூகம் என்ற நிலை இருப்பினும், அதிலேயும் நல்முத்துக்கள் தோன்றிடின் மதிப்பளித்தே தீருவர் என்று பேசி மகிழ்வர், தீவிரமான மாறுதலைத் திட்டமிட்டு ஏற்படுத்தத் துணிவற்றவர்கள்; மனமற்றவர்கள்; வழி அறியாதவர்கள், தமது வாதத்தை வலிவுள்ளதாக்கிட உழைப்பால் உயர்ந்த உத்தமர்களின் கதைகளை ஆதாரமாகக் கூறுவர். அவ்விதமான "மணிகள்' நீக்ரோ சமுதாயத்திலே தோன்றாமலில்லை; உயர் பதவிகளிலே அமர்ந்து நற்பெயர் ஈட்டாமலில்லை. ஆனால், அவர்கள் வகித்த பதவி தந்திடும் மயக்கத்தில்

தம்மை மறந்து அத்தகைய”கருப்பர்களை’ப் பாராட்டினார்களேயன்றி, கருப்பர் இனத்தை அல்ல! கருப்பரிலும் இத்தகையவர்கள் உள்ளனரே என்று வியந்து பேசினர். கருப்பரிலா இப்படிப்பட்டவன் தோன்ற முடிந்தது என்றும், இந்த நிபுணன் நீக்ரோ இனமா? உண்மையாகவா? விசித்திரமாக இருக்கிறதே என்றும் பேசுவதை வாடிக்கையாக்கிக் கொண்டனர்.

வெள்ளை நிற வெறியர் இதுபோலக் கருதினர் என்றால், நீக்ரோக்களில் புரட்சி எண்ணம் கொண்டவர்கள் தம் இனத்திலே ஒரு சிலர் இவ்விதமான ”உயர் இடம் பெறுவது, இனத்தின் விடுதலைக்கோ மேம்பாட்டினுக்கோ பயன்பட வில்லை; அதற்கு மாறாக, மேலும் அந்த இனத்தை அழுத்தி வைக்கவே பயன்படுகிறது; பலர் கோடரிக்காம்புகளாக்கப் படுகின்றனர்;

அவர்களை உலகுக்குக் காட்டி நீக்ரோ இனம் ஒரு குறையுமின்றி வாழுகிறது என்று உலகுக்குக் கூறி உண்மை நிலைமையை மறைத்து விடுகின்றனர்; கழுத்துப் புண்ணை மறைத்திட (மாட்டின் கழுத்தில்) கட்டப்படும் வெண்கலமணி போன்றவர் இவர்! என்று கருதினர்; கூறிவந்தனர்.

புக்கர் டி. வாஷிங்டன் கல்வித் துறையில் பணியாற்றிய வித்தகர்; நீக்ரோ: சோர்ந்த உள்ளம் கொண்டவர்களுக்குப் புக்கர் டி. வாஷிங்டன் வரலாற்றை எடுத்துரைத்து, தன்னம்பிக்கையுடன் பணியாற்றி வந்தால், தகுதிகளைத் தேடிப் பெற்றால், மேம்பாடு அடைய முடியும், சமூகத்தில் உயர்ந்த மதிப்புப் பெற்றிட முடியும் என்று எடுத்துக்காட்டாத அறிவாளர் இல்லை என்று கூறலாம். அவ்விதம் "எடுத்துக் காட்டு'க்குப் பயன்பட்டவர் புக்கர் டி. வாஷிங்டன்; கருநிறத்தவர்.

பள்ளிக்கூடங்களில்
பாடப்புத்தகமாக்கப்பட்டிருக்கிறது புக்கர் டி. வாஷிங்டன் வாழ்க்கை வரலாறு.

எபினேசர் பேசெட் ஜொனாதன் ரைட், ஜெபர்சன் லாங், பிளான்ச் ப்ரூஸ், ராபர்ட் வீவர், பிரடரிக் மாரோ, ரால்ப் ப்ன்ச், ஆண்ட்ரூ ஹாட்சர், கார்ல் ரோவன், இப்படிப் பட்டியல் இருக்கிறது, பல்வேறு துறைகளிலே வித்தகர்களாக விளங்கிய நீக்ரோக்களைப் பற்றி. எனினும் இந்த நிலைமை, உழைத்தால் உயரலாம், தகுதியைத் தேடிப் பெற்றுக் கொள்ளலாம் என்ற பாடங்களைப் போதிக்கப் பயன்பட்டனவேயன்றி, நீக்ரோ சமுதாயத்தைப் பிறவி காரணமாகவே, நிறம் காரணமாகவே வெறுத்தொதுக்கியும் இழித்தும் பழித்தும் இன்னல் விளைவித்தும் வந்த வெள்ளை வெறியரின் போக்கை மாற்றிடப் பயன்படவில்லை.

இந்தச் சூழ்நிலையில் வெள்ளை மாளிகைக்கு ஒரு கருநிறத் தலைவர்! என்கிறபோதுதான், வியப்புடன் கூடிய வெடவெடப்பு எடுக்கிறது நிறவெறியர்களுக்கு.

எந்த ஆண்டு இந்த அதிசய நிகழ்ச்சி நேரிட்டது என்று நூலாசிரியர் குறிப்பிடவில்லை; அமெரிக்காவில் இன்றுள்ள மனப்போக்கைக் கொண்டு இதற்கான ஒரு ”நாள்’ முன்கூட்டிக் குறிப்பிடுவது இயலாது என்பதால் போலும்.

கென்னடி, அதற்குப் பிறகு லிண்டன் ஜான்சன் ஆகியோர் காட்டும் உறுதி கலந்த போக்கைக் கவனிக்கும் போது, எல்லாத் துறைகளிலும் நீக்ரோக்கள் சமஉரிமை பெற்றுவிடுவது வெகு விரைவில் என்று எண்ணிடத் தோன்றுகிறது. ஆனால் வெறியர்கள் இன்றும் நடாத்தி வரும்

கொடுமைகளைப் பார்க்கும் போது எத்தனைத் தலைமுறைகள் பிடிக்குமோ நீக்ரோக்கள் மனித உரிமை பெற்றிட என்று திகைத்திடத் தோன்றுகிறது.

என்றோ ஓர் நாள், வெள்ளை மாளிகையில், ஆட்சித் தலைவராக ஒரு கருநிறத்தவர் நுழைந்தால், நிலைமைகள் என்னென்ன வடிவமெடுக்கக் கூடும், எந்தெந்த புற்றிலிருந்து என்னென்ன அரவு கிளம்பி வந்து தீண்டக்கூடும் என்பது பற்றி, "கற்பனையாக', ஆனால், எல்லையற்ற பெருவெளியிலே பறந்திடாமல், ஆசிரியர் கதையொன்றைத் தீட்டித் தந்திருக்கிறார்.

அமெரிக்கக் குடியரசுத் தலைவர் தமது பதவிக் காலத்தில் இறந்துபடுவாரானால், உடனடியாகத் துணைத் தலைவர் தலைவராக்கப்படுவார். இது அங்கு மரபு. அந்த மரபின்படிதான், கென்னடியைக்

கொடியோன் சுட்டுக் கொன்றதும், அப்போது துணைத் தலைவராக இருந்து வந்த - ண்டன் ஜான்சன் குடியரசுத் தலைவராகப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

கென்னடி இருந்திருந்தால் எவ்வளவு நாட்கள் குடியரசுத் தலைவராக இருந்திருப்பாரோ, அந்த நாள் வரையில் துணைத் தலைவராக இருந்த ஜான்சன் தலைவராகப் பணியாற்றினார்.

பிறகு புதிய தேர்தல் வந்தது. அதிலே ஈடுபட்டு, ஜான்சன் தேர்ந்தெடுக்கப்பட்டு இப்போது குடியரசுத் தலைவராக இருந்து வருகிறார்.

குடியரசுத் தலைவர் இறந்துபடும்போது, ”இடைக்காலத் தலைவராக, துணைத் தலைவர் நியமிக்கப்படுகிற மரபின்படி, பலர் தலைவராகப் பணியாற்றியுள்ளனர்.

அவனி புகழ் நிலைபெற்ற ஆபிரகாம் லிங்கன் ஒரு கொடிய வனால், நாடக அரங்கமொன்றில் சுட்டுக் கொல்லப்பட்டதனை, தம்பி! அறிந்திருப்பாய். அப்போதும், துணைத் தலைவர், தலைவராக்கப்பட்டார்.

ஆரிசன், டைலர், கார்பீல்டு, மக்ஸ்லீ, ஆர்டின்சு, ரூசிவெல்ட், இப்படிப் பலர், தலைவர் பதவியில் இருந்தபடியே உயிர் நீத்தனர். அப்போதெல்லாம், துணைத் தலைவர்களே தலைவர்களாயினர்.

இந்த "மரபை'ச் சற்று விரிவுபடுத்தி, அதன் அடிப்படையிலேதான், தமது கற்பனையை அமைத்திருக்கிறார் இர்விங் வாலாஸ்.

தலைவர் இறந்துபட்டால், துணைத் தலைவர், துணைத் தலைவரும் இறந்துபட்டால்? பாராளுமன்றத் தலைவர்!

அவரும் இறந்துபட்டால்? பாராளுமன்ற மேலவைத் தலைவர்! இப்படி ஒரு மரபுபற்றி ஆசிரியர் குறிப்பிட்டுக் கொண்டு, தமது "கற்பனையை'க் கட்டியிருக்கிறார்.

மேலவைத் தலைவர், குடியரசுத் தலைவராகும் நிலை எப்போது ஏற்படுமென்றால், எதிர்பாராத வகையில் தமது பதவிக் காலத்தின்போதே, ஒரே சமயத்தில், குடியரசுத் தலைவர், துணைத் தலைவர், பாராளுமன்றத் தலைவர் ஆகிய மூவரும் இறந்துபட்டிருக்க வேண்டும்.

அவ்விதமான ஒரு சூழ்நிலையை நம்பத்தகாத முறையில் அல்ல, இருக்கக்கூடும் என்று எவரும் கூறிடத்தக்க விதத்தில், "மனிதன்' என்ற ஏடு உருவாக்கிக் காட்டுகிறது. திடீரென்று அமெரிக்கக் குடியரசின் துணைத் தலைவர் இறந்துபடுகிறார். குடியரசுத் தலைவர், நண்பர் இறந்ததால் ஏற்பட்ட

துக்கத்தைத் துடைத்துக் கொள்ளவும் நேரமின்றி, ஐரோப்பாவில், பிரான்சு நாட்டில் ஓர் ஊரில் சோவியத் அதிபரைச் சந்தித்து ஆப்பிரிக்கப் பிரச்சினை பற்றிப் பேசவேண்டி ஏற்பட்டுவிடுகிறது. அந்த மாநாட்டுக்குச் சென்றிருக்கிறார். அமெரிக்கத் தலைநகரில், மற்ற அமைச்சர்கள், உயர் அதிகாரிகள் இருக்கின்றனர். அவர்களுடன், மாநாட்டு இடைவேளையில்,"தொலைபேசி' மூலம் பேசுகிறார், குடியரசுத் தலைவர் - சோவியத் அதிபரின் போக்குபற்றி, தான் மேற்கொள்ள இருக்கும் ராஜதந்திரம் பற்றி, கேட்டு, வியப்படைவதும், தமது கருத்துக்களைக் கூறுவதும் மேலும் விளக்கம் கேட்பதுமாக - அமைச்சர்களும் உயர் அதிகாரிகளும் இருக்கையில், "தொலைபேசி' நின்றுவிடுகிறது; ஏதோ இயந்திரக் கோளாறு. பதை பதைக்கிறார்கள், பாதியிலே பேச்சு

நின்றுவிட்டதே என்று. நிமிடங்களி ஆண்டுகள்போல நகருகின்றன. பிரான்சிலே, குடி அரசுத் தலைவர்; வாஷிங்டனிலே அவருடைய பேச்சைக் கேட்க ஆவலுடன் காத்திருக்கும் ஆட்சிக்குழுவின் பல்வேறு தரமுள்ள அதிகாரிகள்.

"அய்யோ'' என்று அவர்கள் அலறும்படியான செய்தி வருகிறது தொலைபேசி மூலம். நம்ப முடியவில்லை; அதிர்ச்சி, குழப்பம், கலக்கம்.

தொலைபேசி தெரிவிக்கிறது, குடியரசுத் தலைவர் திடீரென்று இறந்துவிட்டார். மாநாடு நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, மாளிகையின் மேற்பகுதி இடிந்து விழுந்துவிட்டது. அந்த இடத்திலேயே குடியரசுத் தலைவர் மாண்டுபோனார்!

தம்பி! எப்படி இருக்கும் இந்தச்

செய்தியைக் கேள்விப் பட்டால். கதை என்பதால் உருக்கம் அந்த அளவுக்கு வராது; எனினும், எப்படி இருந்திருக்கக் கூடும் என்பதனை நாம் உணர்ந்து கொள்ளும் விதமாக அல்லவா, தாஷ்கண்டில் லால்பகதூர் மறைந்த செய்தி தாக்கிவிட்டது.

வாஷிங்டனில், குடியரசுத் தலைவர் நடாத்தும் மாநாட்டின் தகவல் அறிந்துகொள்ளத் தொலைபேசி பக்கத்தில் திரள்கிறார்கள் அதிகாரிகள், அமைச்சர்கள், அவர்களுக்குக் கிடைப்பதோ, குடியரசுத் தலைவர் இறந்துபட்டார் என்பது.

துணைத் தலைவரோ ஏற்னவே மறைந்து போனார்! தலைவரோ, பிரான்சிலே பிணமாகிக் கிடக்கிறார். எத்தனை சோகத்தைத் தாங்கிக் கொள்ள முடியும்! தத்தளித்தனர். அந்தத் தத்தளிப்புக்கு இடையிலேயே "மரபு' குறிப்பிடுகிறபடி

பாராளுமன்றத் தலைவர், குடியரசுத் தலைவராகப் பொறுப்பேற்க வேண்டுமே. அவருடைய முதல் அலுவலே, அந்தோ! முன்னாள் குடியரசுத் தலைவரின் உடலை வரவேற்று, உரிய முறையில் அடக்கம் செய்து, அனுதாபம் தெரிவிப்பதாக அமைகிறது. என்ன செய்வது! அவர் போன்ற ஒரு தலைவரை மறுபடியும் எங்கிருந்து பெற முடியும்? பத்து நிமிடங்களுக்கு முன்பு எவ்வளவு உற்சாகமாகப் பேசினார்,"தொலைபேசி' மூலம். வேடிக்கை மூட்டுகிற முறையிலேகூடப் பேசினாரே! இப்போது!! என்று எண்ண எண்ண அவர்கள் மனம் சுக்குநூறாகிறது. ஆயினும் அரசு நடைபெற்றாக வேண்டுமே, எனவே, துக்கம் உள்ளத்தைப் பிய்த்துக் கொண்டிருக்கும் நிலையிலும், "சேதி அனுப்புக!' உடனடியாக! பாராளுமன்றத்

தலைவரை, குடியரசுத் தலைவராக்கும் சட்ட ஒழுங்கு நடைபெற்றாக வேண்டுமே! கூப்பிடுக அவரை!'' என்றார் ஓர் அமைச்சர்."அவர் இங்கு எங்கே இருக்கிறார்? அவருமல்லவா, மாநாட்டில் கலந்து கொள்ள, குடியரசுத் தலைவருடன் சென்றிருக்கிறார்'' என்று விவரமளிக்கிறார் வேறொருவர். மீண்டும் பரபரப்பு, பதைப்பு! விபத்து நடந்தபோது "அவர்' எங்கே இருந்தார்? அவருக்கு எதுவும் நேரிடவில்லையே! என்ற பதைப்புப் பேச்சு. தொலைபேசி வேலை செய்கிறது. அடிபட்டவர்களில் அவரும் ஒருவர். ஆனால், உயிர் போகவில்லை. மருத்துவமனையில் கிடத்தப் பட்டிருக்கிறார் என்ற செய்தி கிடைக்கிறது. இவ்வளவு கேடுகளுக்கிடையில் இந்த ஒரு நல்ல செய்தியாவது கிடைத்ததே! அவருக்கு ஒன்றும் இல்லை! மருத்துவமனையில் இருக்கிறார். காயம்;

அவ்வளவுதான் என்று ஒருவருக்கொருவர் கூறிக் கொண்டு தைரியத்தைத் தருவித்துக் கொண்டிருக்கும்போதே அவர்கள் அனைவரையும் அடித்துக் கீழே தள்ளிவிடத்தக்க தாக்குதலை நடத்திற்று தொலைபேசி;"அவரும் இறந்துவிட்டார். மருத்துவமனையில்'' என்ற செய்தியைத் தெரிவித்து.

ஒரு அடி விழுந்ததும் மற்றொன்று; அதைத் தொடர்ந்து இன்னொன்று விழுவதுபோல, கொடுமையான செய்திகள் கிடைத்தன அவர்கள் திகைத்தனர், தேம்பினர், தத்தளித்தனர். இப்படியா ஒரு சங்கிலித் தொடர்போல இழப்புகள்! எப்படித்தான் ஒரு நாடு "இவ்வளவை'த் தாங்கிக் கொள்ளும்? தலைவர், துணைத் தலைவர், பாராளுமன்றத் தலைவர் மூவருமல்லவா மறைந்தனர்! இனி, இனி. . . ? என்று கண்ணீர் பொழிந்த

நிலையினர் குமுறினர்; “இனி, குடியரசுத் தலைவராக வேண்டியவர், பாராளுமன்ற மேலவைத் தலைவர்!’’ என்றார் ஒருவர்; அவர் யார் என்பது பற்றிய நினைப்புமற்ற நிலையில் சோகத்துடன்”ஆம்’ என்றனர் மற்றையோர். அந்த மேலவைத் தலைவர்தான் தம்பி டக்ளஸ் டில்மன் எனும் ஒரு நீக்ரோ!!

எப்படிப்பட்ட சூழ்நிலையைத் தீட்டி, ஒரு நீக்ரோவைக் குடியரசுத் தலைவர் ஆக்கிக் காட்டியுள்ளார் ஆசிரியர் பார்த்தனையா!!

தகுதியற்ற ஒருவர் தலைமைப் பதவியைச் சூழ்ச்சித் திறத்தால் பிடித்துக் கொண்டு விட்டால், பிறகு தகுதி மிக்கவர்களும், அச்சத்தால் தாக்கப்பட்டு, அடிபணிந்து கிடக்கின்றனர், காண்கின்றோம்.

டக்ளஸ் டில்மன், காட்டிலே திரிந்துகொண்டிருந்த ஒரு தற்குறி அல்ல,

நாட்டு ஆட்சி மன்றத்தில் ஒன்றான செனட் சபையின் தலைவர். தகுதி காரணமாக அந்த நிலை பெற்றார். வழக்கறிஞர். போதுமான அளவு வசதி பெற்றவர்; புகழ் ஈட்டிக் கொண்டவர். பதவிப் பசி கொண்டவரல்ல. எதிர்பாராத அழைப்பு! எட்டி எட்டிப் பார்த்தாலும் தொட்டுப் பார்த்திட முடியாத ஒரு பதவியில் அவர் "நிலைமை'யால் இழுத்துச் சென்று அமர்த்தப்பட வேண்டி ஏற்படுகிறது.

டக்ளஸ் டில்மன் - செனட் தலைவர்! அப்படியென்றால்? மரபு கூறுகிறது. அவர்தான் குடியரசுத் தலைவர் வேலை பார்க்க வேண்டும் என்று. குடியர.சுத் தலைவராகவா? ஒரு நீக்ரோவா?

செனட் சபையின் தலைவர் டக்ளஸ் டில்மன்!

ஆமாம்! அவர் ஒரு நீக்ரோ! கருநிறத்தான்!

கனவானாக இருக்கலாம், கற்றறிவாளனாக இருக்கலாம்! வழக்கறிஞராக இருக்கலாம்! ஆனால், அவர் ஒரு நீக்ரோ!!

மரபு இருக்கிறதே, தலைவர், துணைத் தலைவர், பாராளுமன்றத் தலைவர் ஆகியோர் இறந்துபடின், செனட் சபைத் தலைவரே. குடியரசுத் தலைவராக ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்று.

மரபு அது! ஆமாம்! ஆனால் டக்ளஸ் டில்மன், ஒரு நீக்ரோ! ஒரு நீக்ரோவா, அமெரிக்கக் குடியரசுத் தலைவராவது! எந்த அமெரிக்காவில் அடிமையாகக் கொண்டு வரப்பட்டு விற்கப்பட்டானோ அந்த நீக்ரோவின் வழி வழி வந்தவன், அந்த இனத்தவன், அவன் படித்தவனாக இருக்கட்டும், பண்புள்ள வனாக இருக்கட்டும், மரபு ஆயிரம் கூறட்டும், அந்த நீச்ரோ, அமெரிக்கக் குடியரசின் தலைவனாகப் பதவி ஏற்பதா! அதை அனுமதிக்கலாமா!

வெள்ளை இனத்தவர் ஏற்றுக் கொள் வார்களா! யார் உங்கள் குடியரசுத் தலைவர் என்று உலகினர் கேட்கும்போது, எப்படி மனம் ஒப்பி ஒரு நீக்ரோ கனவான் எமது தலைவராக இருக்கிறார் என்று கூறமுடியும். மாநாடு நடத்தச் சென்ற குடியரசுத் தலைவரைச் சாகடித்ததே, மண்டபம் இடிந்து விழுந்து; அது அவரை மட்டும் அல்லவே, நமது இனத்தின் மானத்தையே அல்லவா நொறுக்கிவிட்டிருக்கிறது. வெள்ளை மாளிகையில் ஒரு கருப்பர்!! காது குடைகிறதே கேட்கும்போதே; இரத்தம் கொதிக்கிறதே கோபத்தால்; கண்கள் இருளடைகின்றனவே அதிர்ச்சி தரும் மயக்கத்தால்! டக்ளஸ் டில்மன், அமெரிக்கக் குடியரசுக்குத் தலைவரா!! ஆமாம்! மரபு கட்டளையிடுகிறதே! எப்படி அந்த மரபை மீற முடியும்? ஆனால் எப்படி, ஒரு கருப்பரைத் தலைவராகக் கொள்ள முடியும்? எப்படித்

தாங்கிக் கொள்ள முடியும்?

சவுக்கடிப்பட்ட இனம்! கட்டிவைத்து சுட்டுக் கொல்லப் பட்ட இனத்தினன். நமது வேட்டை நாய்கள் இவன் இனத் தவனை முன்பு துரத்தித் துரத்திக் கடித்திட, கடிபட்டவன் கதறிக் கதறித் துடித்திட, வெள்ளைச் சீமாட்டிகள் காட்சியினைக் கண்டுகண்டு கைகொட்டிச் சிரித்தனர் முன்பு! அந்த இனத்தைச் சேர்ந்த ஒருவன் - நீக்ரோ - ஆட்சித் தலைவனா! நமக்கா!!

இப்போது நீக்ரோ அடிமை அல்ல! சந்தைச் சதுக்கத்திலே அவனைக் கட்டிவைத்து அடிக்க, சட்டம் இடம் கொடுப்ப தில்லை. இப்போது அவன் அங்காடிப் பொருள் அல்ல; ஆபிரகாம் லிங்கன், அடிமை முறையை ஒழித்ததால்! ஆனால், இப்போதும் நீக்ரோ தானே! அடிமை அல்ல! ஆனால் கருநிறம்! மட்டம்! தாழ்வு! அந்த இனத்தவனல்லவா, டக்ளஸ் டில்மன்.

இப்போதும், வெள்ளை இனத்தின் உயர்விலும் தனித் தன்மையிலும் நம்பிக்கைக் கொண்டவர்கள், கருப்பர்களைப் பள்ளிகளில், விடுதிகளில், படக்காட்சிக் கொட்டகைகளில் சேர்க்க மாட்டார்களே! ஒதுக்கித்தானே வைத்திருக்கிறார்கள்? ஓரத்தில்தானே இன்றும் தள்ளப்பட்டுக் கிடக்கிறான்; உழைக்கிறான் என்பதால் வேலை தருகிறோம்; வேலை செய்வதால் நாம் நடமாடும் இடத்தில் அவனும் நடமாடுகிறான்! ஆனால் நாமும் அவனும் ஒன்றா! ஒப்புக்கொண்டு விட்டோமா? இல்லையே! வேட்டையாடிப் பிடிப்து, சங்கிலிகளால் பிணைப்பது, சந்தையிலே நிறுத்தி வைத்து விற்பது, சவுக்காலடிப்பது, இவை இல்லை! கூடாது என்கிறது சட்டம்; அதனால். ஆனால் வெள்ளை வெள்ளைதான், கருப்பு கருப்புதானே! வெள்ளை ஆளும் இனம்! கருப்பு, அடிமை இனம்தானே! உயர

உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்து ஆகிவிடுமா! நீக்ரோ, படிப்பால், பணத்தால், பட்டத்தால், வெள்ளையனாகி விடுவானா? அமெரிக்காவில் பிறந்தான், வளர்ந்தான் என்பதாலேயே அவன் அமெரிக்கனாகி விடுவானா! அமெரிக்கன் என்று மக்கள் தொகைக் கணக்குக்காகக் கூறினாலும் நீக்ரோ வெள்ளையன் ஆகிவிடுவானா! அமெரிக்கா, எவருடைய நாடு? வெள்ளையர் நாடு! வெள்ளையர் நாட்டுக்கு ஒரு கருப்பர் தலைவராவதா!!

தம்பி! நிறவெறி கொண்டவர்களிலே, சற்று ஆத்திரத்தை அடக்கிக் கொள்ளத் தெரிந்தவர்களே இவ்விதமெல்லாம் தான் பேசியிருந்திருக்க முடியும்! டக்ளஸ் டில்மன் எனும் நீக்ரோ, வெள்ளை மாளிகை அமர்ந்து குடியரசுத் தலைவராகப் போகிறார்; மரபு அவ்விதம் அமைந்திருக்கிறது என்று

கூறப்பட்டபோது.

டக்ளஸ் டில்மன்! குடியரசுத் தலைவர்; அமெரிக்காவுக்கு.

வெள்ளை மாளிகையின் கூடத்திலே குழுமியிருந்த அமைச்சர்கள், உயர்நிலை அதிகாரிகள், தமக்கு, "அதிபராக'ப் போகும் டக்ளஸ் டில்மனைப் பார்க்கிறார்கள்; சிறிது தொலைவில் நிற்கிறார் டக்ளஸ்! அவர்களின் கண்களிலே பொறி பறக்கிறது. டில்மன்? திகைத்துப் போயிருப்பார்! வேறு எப்படி நிலை இருந்திருக்க முடியும்.

மரபின்படி, உயர்நீதிமன்றத் தலைவர் வருகிறார், பதவிப் பிரமாணம் செய்துவைக்க!

பைபிள்! ஆம்! வெள்ளையருக்கு ஒன்று, கருநிறத்தவருக்கு வேறு ஒன்றா இருக்கிறது! இல்லையே! இரு நிறத்தவருக்கும் ஒரே பைபிள்!

கட்டினவனே காத்திடுவான்.
அதைத்தவனே பாதுகாப்பான்
அவன் துணையின்றிப் பாதுகாவலன்
எதையும் பாதுகாத்திட முடியாது

என்ற கருத்து கொண்ட மணிமொழியுள்ள பகுதியைத் தேர்ந்தெடுத்து, அதனையே தமது "பிரார்த்தனை'யாகப் படிக்கிறார் டில்மன்!

பதவிப் பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

அமெரிக்க நாட்டுக்கு அமைந்துள்ள அரசியல் சட்ட திட்டத்தையும் ஒழுங்கையும் காப்பாற்றியும் அதற்குக் கட்டுப்பட்டும் நான் ஆட்சி நடத்தி வருவேன் என்று உறுதிமொழி கூறுகிறார் டில்மன்.

"அமெரிக்கக் குடியரசுத் தலைவரே, வாழ்க! கர்த்தர் தங்களை - அமெரிக்கக் குடியரசுத் தலைவரை - அமெரிக்கக் குடியரசுத்

தலைவராக அமரும் முதல் நீக்ரோவைக் காத்திடுவாராக! - என்று உயர் நீதிபதி கூறுகிறார். சூழ நிற்கிறார்கள் வெள்ளை இனத்தவர்! அவர்கள் அனைவரும் எந்தக் குடியரசுத் தலைவரின் ஆணைக்குக் கட்டுப்பட்டு நடந்து தீரவேண்டுமோ, அந்தக் குடியரசுத் தலைவர் நிற்கிறார்; ஒருவரை ஒருவர் பார்க்கிறார்கள் - ஓராயிரம் வகையான எண்ணங்கள் குமுறி எழுகின்றன!

வெள்ளை மாளிகையில் ஒரு "கருப்பர்' அதிபராகிறார்! பிறகு? என்கிறாயா, தம்பி! துவக்கம் இது! தொடர்வது என்ன என்கிறாயா? அடுத்த கிழமை கூறுகிறேன் இப்போது, காணக் கிடைக்காத காட்சியைக் காண்பதோடு திருப்தி அடைவோம்; வெள்ளை மாளிகையில் ஒரு கருப்பர் அதிபராகி விட்டிருக்கிறார்.

அண்ணன்,

அறிஞர் அண்ணாவின் கடிதங்கள்

கடிதங்கள் பட்டியல்

வெள்ளை மாளிகையில் - 2

வெள்ளையர் கொதிப்பு

முற்போக்காளரும் இருந்தனர்

மேல் மட்டத்தார் போக்கு
கறுப்பர்கள் மனிதர்களா?
கறுப்பர் கண்களிலே ஒளி!

தம்பி,

வெள்ளை மாளிகையில் அமர்ந்து அரசோச்ச ஒரு "கருப்பர்' அதிபரானது பற்றி படித்ததும் உனக்கோ எனக்கோ, ஒரு மகிழ்ச்சி துள்ளிடுமேயன்றி அச்சம் எழாதல்லவா? நிறம் எதுவாக இருந்தால் என்ன, தகுதியும் திறமையும் இருந்திட வேண்டும், அஃதன்றோ முக்கியம், இந்த நாட்களிலா நிறம் என்ன என்று பத்தாம்பசலிப் பேச்சுப் பேசுவார்கள்! என்று கூறுவோம். என்ன ஆகுமோ, ஏது ஆகுமோ என்ற எண்ணம் குடையாது, மன உளைச்சல் ஏற்படாது, மருட்சி கொண்டிட மாட்டோம்.

கதைதானே! - என்று கூறிடுவர், பழமைப்

பிடிப்பினர் கூட, உண்மையில் இதுபோல எங்கே நடைபெறப்போகிறது என்ற நம்பிக்கை கலந்த தைரியத்துடன்.

டில்மன் எனும் நீக்ரோ, அமெரிக்கக் குடியரசுத் தலைவரானார் என்ற செய்தி அறிவிக்கப்பட்டதும், அமெரிக்க மக்களிடம் என்னென்ன விதமான உணர்ச்சிகள் கொந்தளித்துக் கிளம்பியிருந்திருக்கும் என்பது பற்றி யூகித்தறிந்து கொள்ள முடிகிறதல்லவா!

முட்டாள்! முரடன்! ஏய்! கருப்புப்பயலே! கண்மண் தெரியவில்லையா! எச்சில்பட்ட கோப்பையை எடுத்துக் கொண்டு போய்க் கழுவிவரக்கூட மறந்து விட்டாயா, மடையா!

அவன் ஏன் இனி எச்சில் கோப்பையைக் கழுவப் போகிறான் அன்பே! அவனை இனி கருப்பா என்று கூடக் கூப்பிடக்கூடாது! டில்மன்

யார் தெரியுமா! குடியரசுத் தலைவர் யார் தெரியுமா, கருப்புதான்! கருப்பன் ஆள்கிறான், வெள்ளையர் நாட்டை!! என்று பேசுவாள்... காலம் மாறிவிட்டது, கண்ணாளா! கருப்பு வெளுப்பாகிவிட்டது!

இந்தப் பயல்களுக்கு மண்டைக்கனம் ஏறிவிட்டுத் தான் இருக்கும், புரிகிறது. . . ஆனால் கருப்பு வெளுப்பு ஆகிவிடாது, ஆகிவிட மாட்டார்கள்.

வெள்ளை மாளிகைக்குள்ளேயே நுழைந்தாகி விட்டதே, இன்னும் என்ன விபரீதம் நேரிட வேண்டும், இது போதாதா. . .! என்னமோ சட்டமாம்! மரபாம்! இப்படி ஒரு இழிவைச் சுமத்திவிட்டார்கள். கருப்பு நிறத்தான் குடியரசுத் தலைவராகக் கூடாது என்றல்லவா சட்டம் இருக்க வேண்டும். ஏமாளித்தனமான ஒரு சட்டத்தை வைத்துக் கொண்டு இப்படிப்பட்ட ஒரு இழிவைச்

சுமத்திவிட்டார்கள்.

கேட்பார் எவரும் இல்லையா, அமெரிக்காவிலே அறிவாளர்களே இல்லையா. . .

தம்பி, நிறவெறி பிடித்தவர்கள் இல்லங்களிலே இது போன்ற அளவு அல்ல, இதைவிட மோசமான முறையிலும் அளவிலும் பேச்சு எழாமலிருந்திருக்க முடியுமா? மாளிகைக்காரர்கள், வெள்ளையர்; அங்கு தோட்டக்காரன், வண்டி ஓட்டி, சமையற்காரன், பணியாள் நீக்ரோக்கள்! அடிமைகள் என்ற நிலை இல்லை, ஆனால் கூ-க்காரர்களாக, குற்றேவல் புரிபவர்களாக உள்ளனர். கூப்பிட்ட குரலுக்கு ஓடிவரவேண்டும், இடப்பட்ட வேலையைச் செய்திட வேண்டும், ஏன் என்ற கேள்வியை எழுப்பக் கூடாது. இது அவர்கள் நிலைமை! அவர்களிலே ஒருவர் அமெரிக்க அதிபர்! விந்தை என்பர் மற்றையோர், விபரீதம்

என்றுதானே கூவுவர் கொதிப்படைந்த வெள்ளையர்.

“டிரம்’ என்பானுடையதை பற்றிக் குறிப்பிட்டிருந்தேனே தம்பி! அந்த அடிமையை ஒரு உற்பத்திப் பண்ணைக்கார னல்லவா விலை கொடுத்து வாங்கி”தரமான’ நீக்ரோக்களை உற்பத்தி செய்து வந்தான் என்று சொன்னேன், அந்த வெள்ளை முதலாளிக்கு ஒரு வெள்ளை மாது “தொடர்பு’ - அந்த வெள்ளை மாது”டிரம்’ என்ற நீக்ரோவுக்குத் தன் உடலை ஒப்படைத்தாள், அவன் கேட்டதால் அல்ல, அவள் விரும்பியதால்! கருவுற்றாள். இது தெரிந்த வெள்ளை முதலாளி “டிரம்’ என்பானை அடித்துக் கொன்றுபோட்டான்; அவளை விரட்டிவிட்டான். அவள் வேறு ஊர் சென்று ஒரு காமக் களியாட்டக் கூடம் நடத்தி வந்தாள். அங்கு வேலைக்காரனானான்,

அவள் பெற்றெடுத்த”டிரம்சன்’.

தாயிடம் மகன் பணியாள்! தாய் அறிவாள் அந்தப் பணியாள் தன் மகன் என்பதை.

அவன் அறியான், எஜமானி தன் தாய் என்பதை. மகன் என்ற பாசம், அன்பு, துளியாவது அந்த வெள்ளை மாதுக்கு இருந்ததோ? இருந்தால், அவனைக் கடுமையாக மட்டுமல்ல, கேவலமான முறையிலும் வேலை செய்யச் சொல்லிக் கட்டளையிட்டிருப்பாளா! மாடாக உழைத்து வந்தான்! நாய்போல நடத்தப்பட்டான்; பெற்றவளால். ஏன்? அவள் ஒரு வெள்ளைமாது; இவனோ கருநிறத்தான்; நீக்ரோ! தன் களியாட்டக் கூடத்தில் வேலை பார்த்துவந்த ஒரு நீக்ரோ கிழவியின் மகனே, ”டிரம்சன்’ என்று சொல்லிவைத்தாள்.

கடைசிக்கட்டத்தில், மரணப்படுக்கையில்

இருந்தபோது, உண்மையைக் கூறினாளாம்; “அம்மா!’ என்று ஒரு தடவை கூப்பிடும்”உரிமை’யை வழங்கினாளாம்.

இந்த நிலையில் தள்ளப்பட்டிருந்து நீக்ரோ இனத்தவரில் ஒருவன் அமெரிக்க அதிபதி ஆகிவிட்டதால், நிற வெறியர் அதிர்ச்சி அடைந்திடாமலிருக்க முடியுமா!

டில்மன், பத்திரிகைகளைப் புரட்டிப் பார்க்கிறான். கண்டனம்! குமுறல்! மிரட்டல்! எரிச்சல்! ஏளனம்; எச்சரிக்கை! இவைகளே மிகுதியாகக் காணப்பட்டன! படித்த டில்மன் மனம் என்னபாடு பட்டிருக்கும்! கர்த்தரே! என்னைக் கருப்பனாகவும் படைத்து, அதிபதியும் ஆக்கி, இத்தனைக் கண்டனமும் என் தலையில் விழவைக்க வேண்டுமா! என்று மனம் உருகித் துதித்திடாமல் இருந்திருக்க முடியுமா?

இனத்தின் மீது வீசப்பட்ட இழிவு பெருமளவு தன் மீது விழாதபடி, ஒரு தகுதியை உழைத்துப் பெற்றுக் கொண்டு, நிம்மதியாக வாழ்ந்து வந்தான்; எதிர்பாராத முறையில், அதிபதி ஆக்கப்பட்டதால், வெள்ளை இனத்தவரின் வெறுப்பை அல்லவா பெற்றிட வேண்டியதாயிற்று. முள்முடி!

முற்போக்குக் கருத்தினைப் பரப்பிடும் ஓரிரு ஏடுகள், நிறபேதம் பார்க்கக் கூடாது, தகுதி திறமை பற்றி மட்டுமே பார்க்க வேண்டும், டில்மன் நீக்ரோவாக இருந்தால் என்ன, அமெரிக்கன், வழக்கறிஞர் துறையில் பெயர் பெற்றவன், நல்ல இயல்பினன், ஆகவே அவனுடைய ஆட்சி சிறப்பாகவே அமையும்; அனைவரும் ஆதரவு அளித்திட வேண்டும் என்று எழுதியிருந்த அந்தப் பாலைவன மலர் எழிலாக இருந்தது கருதி டில்மன் மகிழ்ச்சியுற்றான்; ஆனால் மறுகணமே

அத்தகைய இதழ்கள், அமெரிக்க மக்களிடம் மிகுந்த செல்வாக்குப் பெற்றவை அல்ல என்ற உண்மை உள்ளத்தைத் தாக்கிற்று. செல்வாக்குப் படைத்த பத்திரிகைகளோ? நெருப்பையும் நாராசத்தையும் வார்த்தை களாக்கி எழுதின! உண்மை அமெரிக்கா இதில்தான் தெரிந்தது - இதை எதிர்த்து நின்று வெற்றி பெற வேண்மும்; எதிர்ப்பதாக அறிவிக்காமலே இந்த நிலை டில்மன் பெற்றான்.

டில்மன் குடியரசுத் தலைவரானது சட்டப்படி மரபின்படி என்பதால், ஒப்புக்கொள்ள வேண்டிய நிலையில் இருந்தவர்கள் கூட, எந்தச் சிறிய தவறு செய்தாலும் போதும், தன் மீது பாய்ந்து தாக்கித் தீர்த்துக் கட்டிவிடுவார்கள் என்பது புரிந்தது. நடுக்கம் பிறந்தது.

தவறுகள் செய்திடும் தலைவர்களைக்

கூடத் தாங்கிக் கொள்வார்கள், ஆனால் ஒரு நீக்ரோ! ”தலைவன் ஆகி, அவன் தவறுகளையும் செய்தால், எப்படி தாங்கிக் கொள்வார்கள்! எரிமலை வெடிக்கும்.

எரிமலை குமுறிற்று! வெள்ளை இனத்தின் உரிமை மறுக்கப் பட முடியாத ஒன்று என்பதிலே அழுத்தமான நம்பிக்கையும் நிறவெறியும் கொண்ட இதழாசிரியன் ஒருவன், கச்சையை வரிந்து கட்டிக் கொண்டு நின்றான், இந்தக் கருநிறத்தானை வெள்ளை மாளிகையிலிருந்து விரட்டி அடித்தே தீருவேன் என்று!

சட்டம், மரபு, முறை என்று எதை எதையோ கருதிக் கொண்டுதானே இந்தக் கருநிறத்தானை கொலு மண்டபத்தில் அமரச் செய்தீர்கள்: அந்தச் சட்டமே தவறு! அதிலே ஓட்டை இருக்கிறது! அந்த நியமனமே செல்லாது; சட்ட நிபுணர் கூறுகிறார்: டில்மன்

குடியரசுத் தலைவராக அமர்த்தப்பட்டிருக் கிறார்; ஆகிவிடவில்லை மக்களால் தேர்ந்தெடுக்கப்படவில்லை குடியரசுத் தலைவரை மக்கள் தேர்ந்தெடுக்கும் வரையில் டில்மன் வேலை பார்க்கலாம்; அவ்வளவுதான்: ஆகவே உடனடியாகக் குடியரசுத் தலைவர் தேர்தலுக்கு ஏற்பாடு செய்திட வேண்டும்; அது முடிந்ததும், இவனை வெளியேற்ற வேண்டும்; என்று அவன் வாதிடலானான். அரசு அமர்த்தியிருந்த சட்ட நிபுணன் அதற்கு ஆதரவான சட்ட நுணுக்கங்களை விவரிக்கலானான். அந்த விவாதத்தை கேட்டுக் கொண்டிருந்த பேரதிகாரிகள், டில்மனுக்கு அடுத்தபடியில் இருந்தவர்கள், அந்த இதழாசிரியின் கூறிய ஏற்பாட்டுக்கு இணங்க மறுத்தனர்; நிறவெறி கூடாது. நியாயம் அல்ல என்பதால் அல்ல, வெள்ளை மாளிகையில் ஒரு கருப்பர் ஆட்சி செய்தால்

என்ன என்பதால் அல்ல; வழக்காடப் போதுமான ஆதாரம் இல்லை என்பதால்!!

ஏமாற்றமும் எரிச்சலும் அடைந்த அந்த இதழாசிரியன் தன் பேனாமுனையினாலேயே டில்மனைக் குத்திக் கொடுமை செய்து, அவனே மிரண்டோடும்படிச் செய்திடத் திட்ட மிட்டான். தொடர்ந்து தொல்லைகளை உருவாக்கியபடி இருந்தான். ஆனால் டில்மன் கலங்கவில்லை. வெள்ளையர் என்னைவிட எந்தவகையில் மேலானவர் கருநிறம் எந்த வகையில் தாழ்வானது என்றெல்லாம் வாதாடவுமில்லை, வம்புகள் பேசவுமில்லை. ஒரேவித உறுதியைத்தான் தெரிவித்தான், நான் சட்டப்படி குடியரசுத் தலைவராக அமர்ந்திருக்கிறேன்; என் கடமையைச் செய்து வருவேன்; நான் எந்த இனம், என்ன நிறம் என்பது பற்றிய விவாதம் பொருளற்றது; நான் அமெரிக்கக் குடியரசுத் தலைவன்!

இது டில்மன் கொண்ட உறுதி; கூறிய உறுதி என்றுகூடச் சொல்வதற்கில்லை.

தம்பி! நாட்டிலே ஒரு குறிப்பிட்ட பகுதி மக்களைத் தாழ்த்தப்பட்டவர்கள் என்று ஆக்கிவைத்துவிட்டால், பிறகு ஓர் நாள் அவர்களிலே ஒருவன், எக்காரணம் பற்றியோ, "உயர் பதவி'யில் அமர்ந்துவிட்டால், தம்மை உயர்வகுப்பு என்று எண்ணிக் கொள்பவர்கள், அவனுக்குக் கீழே வேலை செய்பவர்களாக இருப்பினும், அவன் நமக்குக் கட்டுப்பட்டு, அடங்கி ஒடுங்கி, விருப்பம் அறிந்து நடந்து கொள்ளத்தான் வேண்டும் என்று எதிர்பார்ப்பார்கள். டில்மன், குடியரசுத் தலைவராக இருக்கட்டும்; சுவையைப் பெறட்டும். வெள்ளை மாளிகையில் உலவட்டும்! ஆனால், எமது விருப்பம் அறிந்து நடந்து கொண்டு வர வேண்டும்; சுய சிந்தனை, தனி நடவடிக்கை, புதிய போக்கு

துளி தலைதூக்கினாலும், தூக்கி வெளியே எறிந்து விடுவோம் என்றுதான் அமைச்சர் நிலையினர் கருதிக் கொண்டனர். டில்மன் உயர் மண்டபத்தில் அமரட்டும், அதன் தகத் தகாயத்தைக் கண்டு களிக்கட்டும், ஆனால் தன் இச்சையைக் கட்டுப்படுத்திக் கொண்டு, நம் குறிப்பறிந்து நடந்து கொள்ள வேண்டும். . . மீறினால். . .”

டில்மன் அலங்கரிக்கப்பட்ட ஒரு அடிமையாக இருந்து வர வேண்டும் என்று விரும்பினார்கள்; குறிப்பும் காட்டினார்கள்.

வெள்ளை மாளிகையிலே நுழைந்த கருநிறத்தான், தன் உண்மையான ”எஜமானர்கள்’ யார் என்பதை அறிந்து அதற்கு ஏற்றபடி நடந்து கொள்ள வேண்டும் என்று எதிர்பார்த்தனர்.

அவர்களின் எண்ணத்தின்படி

நடந்துகொண்டால், குடியரசுத் தலைவர் என்ற நிலையையே கேலிக்கூத்து ஆக்குவதாகிவிடும்.

அவர்களின் எண்ணத்துக்கு மாறாக நடந்தால், பதவி பறிபோய்விடும்.!

பதவி பறிக்கப்பட்டு விடுவது கூட அல்ல பயமளிக்கத் தக்கது; ஒரு கருநிறத்தவனால், அத்தனை உயரிய பதவியைச் சரியான முறையிலே நடத்திச் செல்ல முடியவில்லை! என்ற பழி சுமத்தப்படும்; இனத்துக்கே இழிவு ஏற்படும். ஆக தலையாட்டியாகவும் இருக்கக்கூடாது, தன்னிச்சை யாகவும் நடந்து கொள்ளக்கூடாது. அப்படியானால் எந்த முறையில் நடந்து கொள்ள வேண்டும்?

டில்மனுக்கு மிகவும் வேண்டியவர் கீர்த்தி வாய்ந்த ஒரு வழக்கறிஞர்; வெள்ளையர் இனம்; ஆனால் நிறவெறி அற்றவர். அவருடன்

டில்மன் பேசுகிற ஒரு சந்தர்ப்பம் வருகிறது அப்போது இந்தப் பிரச்சினை எழுகிறது. டில்மன் அந்தப் பேச்சின்போது வெளியிட்ட ஒரு கருத்து, தம்பி! படிக்கும்போது, கண்கலங்க வைக்கிறது. நண்பருக்கு உற்சாகமூட்ட, உறுதி பெற்றிட வைக்க, அந்த வெள்ளை இன வழக்கறிஞர் கூறுகிறார், "டில்மன்! ஏன் கலக்கம்! உன் நிறம் கருப்பாக இருந்தால் என்ன! நீ ஒரு மனிதன்!'' என்று கூறுகிறார், மனித மேம்பாடு என்பது இனம், மதம், நிறம் ஆகியவைகளுக்கு அப்பாற்பட்டது என்ற அருங்கருத்தினை விளக்கிடும் முறையில் அப்போது டில்மன் வருத்தம் தோய்ந்த முறையில்"நண்பரே! என் நிறம் கருப்பு எனினும் நான் மனிதன்! அந்த உணர்வைப் பெற வேண்டும் என்கிறீரே... எப்படி முடியும். . . கருப்பர் மனிதரல்லவே. . .'' என்று கூறுகிறார். வெள்ளை

மாளிகையில் அதிபர்! அதிலே ஐயமில்லை!! ஆனால் கருப்பர், மனிதரா? இல்லையே!! - என்று டில்மன் கூறுவது அமெரிக்காவில் அனுமதிக்கப்பட்டுக்கிடந்த மனப்போக்கை அப்படியே எடுத்துக் காட்டுவதாக இருக்கிறது. மனதை உருகச் செய்திடும் நிலை; ஆனால் உண்மை! அமெரிக்க நிறவெறியர், கருப்பரை மனிதர் என்று ஒப்புக் கொள்வதில்லை; அவர்கள் அடிமைகள் அல்ல என்று சட்டம் வந்த பிறகும்! அந்தச் சட்டம் வருவதற்கு முன்பு, நீதிமன்றங்கள் தீர்ப்பே அளித்திருக்கின்றன, நீக்ரோக்கள் மனிதர் அல்ல; வெறும் உடைமைகள் என்பதாக.

1781-ம் ஆண்டு, ஒரு வழக்கு நடைபெற்றது. மேற்கு ஆப்பிரிக்காவிலிருந்து ஜமய்க்காவுக்கு 400 நீக்ரோக்கள் அடிமைகளாக விற்பதற்காகக் கப்பலில் கொண்டு செல்லப் பட்டார்கள், வழியிலே பலருக்கு நோய் கண்டு விட்டது.

கப்பல் தலைவன் நோயால் பாதிக்கப்பட்ட நீக்ரோக்களில் 132 பேர்களை (உயிரோடு) கட-லே எறிந்துவிட்டு, மற்றவர்களைக் கொண்டு போய்ச் சேர்த்ததுடன் கட-லே எறியப்பட்ட 132 நீக்ரோக்களின் மார்க்கட் மதிப்புக்கு ஏற்ற பணத்தை இன்ங்ரன்ஸ் கம்பெனிதான் கட்டித் தீர வேண்டும் என்று வழக்குத் தொடுத்தான். அதற்கு அவன் கூறிய வாதம் தம்பி! இப்போது நமது மக்களுக்குக் காட்டுமிராண்டிப் பேச்சாகப்படும்; கொண்டு செல்லும் சரக்கிலே கெட்டுப்போன பகுதிகளை அப்புறப்படுத்தி விடுவதன் மூலமே மற்ற சரக்கைக் கெடாதபடி பாதுகாத்திட முடியும் என்ற நிலையில் சரக்கிலே ஒரு பகுதியை அப்புறப்படுத்த நேரிட்டால் அதற்கான மதிப்புள்ள பணத்தை இன்ங்ரன்ஸ் கம்பெனி தர வேண்டும் என்ற "விதி'யைக் காட்டினான் வாதமாக! உயிரோடு தூக்கி எறிகிறான் நூற்றுக்கு

மேற்பட்ட நீக்ரோக்களை, பதறப்பதற; ஈவு இரக்கமின்றி; வழக்குமன்றத்திலே அவன் படுகொலை செய்தான் என்று அல்ல, சரக்கை இழந்ததற்கு அவனுக்கு நஷ்டஈடு தர வேண்டுமென்று வழக்கு! கேட்டனையா, தம்பி! இந்த விபரீதத்தை. கேளேன் முழுவதையும், அட கொலைகாரா! நூறு பேர்களைப் படுகொலை செய்த பாதகனா நீ! உன்னைச் சித்திரவதை அல்லவா செய்ய வேண்டும், உன்னைப் போன்ற மனிதர்கள், கடவுளின் குழந்தைகள், அவர்களைக் கடலிலே தூக்கி எறிந்த காதகனே! உன்னைவெட்டித் துண்டுகளாக்கிக் கழுகுக்கு விருந்தளிக்க வேண்டும் என்றெல்லாம் நீதிபதி சீறிக் கூறினாரா? அதுதான் இல்லை!! கேட்கக் கஷ்டமாகத்தான் இருக்கிறது. ஆயினும் என்ன செய்வது? ஆடுமாடுகள், குதிரைகள் கொண்டு செல்லப்படும்போது நோய்

வந்துவிட்டால், நோயுற்றவைகளை அப்புறப்படுத்தி மற்றவற்றைக் காத்திடுவது போன்ற முறைப்படிதான் கப்பல் தலைவன் நடந்து கொண்டான். ஆகவே அவனுக்குக் கம்பெனி நஷ்டஈடு தரத்தான் வேண்டும் என்று தீர்ப்பளித்தார். நீக்ரோ மனிதன் அல்ல! சரக்கு!! பொருள்!! உடைமை! நீதிமன்றத் தீர்ப்பு!

டில்மன், கருப்பர், மனிதர் அல்லவே என்று கூறியபோது, இந்த வழக்கு அவருடைய மனக்கண் முன் நிழலுருவமாகத் தெரிந்திருக்கும் போலும்!

அரசியல் தத்துவத்துக்கே வித்து அளித்த அரிஸ்டாடில், அடிமை எனும் சொல்லுக்குப் பொருள் அளிக்கும்போது உயிருள்ள கருவி, அடிமை என்றார்.

டில்மன் ஒரு கருவி! யாருடைய கருவி? யாருக்குப் பயன்பட வேண்டிய

கருவி? என்பதே பிரச்சினை என்று ஆகிவிட்டது. டில்மனைச் சூழ இருந்து வந்த அரசு அவையினர், வெள்ளையரின் விருப்பத்தை அறிந்து, அதற்குத் தக்கபடி பயன்பட்டுத் தீர வேண்டிய கருவி என்று உறுதியாக எண்ணிக் கொண்டார்கள், ஆனால் தங்கள் இனத்தவர் ஒருவர் அமெரிக்கக் குடியரசுத் தலைவரானார் என்ற உடன், மகிழ்ச்சியால் துள்ளினது மட்டுமல்ல, நீக்ரோ மக்கள் மனதிலே புதியதோர் நம்பிக்கை மலர்ந்தது. இனி நமது இன்னல் தீரும், இழிவு துடைக்கப்படும்; நிலை உயரும், வாழ்வு தழைக்கும்; வெள்ளை மாளிகையிலே நமது இனத்தவர்; இனி நம்மைக் கப்பிக் கொண்டுள்ள இருளை ஓட்டி வாழ்விலே புத்தொளி கண்டிட வழி பிறந்திடும் என்று திடமாக நம்பினர். அவர்களின் கண்களிலே எத்தனை ஒளி பூத்திருக்கும்! முகத்திலே

எத்தகைய ஒளி மலர்ந்திருக்கும்! பேச்சிலே என்னவிதமான இன்பம் கலந்திருக்கும் என்பது பற்றி எண்ணிடும்போது இனிதாக விளங்குகிறதல்லவா, தம்பி!

நாசரின் கரத்தை நமது அப்துல்காதர், சென்னை மேயர் என்ற முறையில், குலுக்கி வரவேற்ற செய்தியை இதழில் படித்த போது, எனக்குத் தம்பி நானே நாசரின் கரங்களைப் பிடித்துக் குலுக்கியது போன்ற ஒரு மகிழ்ச்சி உணர்ச்சி பிறந்தது.

நாம் நகராட்சி மன்றத்தில் அரசோச்ச வாய்ப்புப் பெற்றது, நடைபெறவே முடியாத, அதிர்ச்சி தரத்தக்க, தலைகீழ் மாற்றமான நிகழ்ச்சியல்ல, மிகச் சாதாரணமான ஒரு அரசியல் நிகழ்ச்சி. அதற்கே நமக்கு அகமகிழ்ச்சி எத்துணை ஏற்பட்டது! டில்மன் அமெரிக்கக் குடியரசுத் தலைவரானது என்பது சாதாரணம் அல்ல; அடிமைப்படுத்தப்பட்ட

இனம், இழிவாக நடத்தப்பட்டு வரும் இனம், நீக்ரோ இனம்; அதிலே ஒருவர் எஜமானர்கள் என்ற நிலையில் உள்ள வெள்ளையர்களும் அடங்கி நடந்தாக வேண்டிய "அதிபர்' நிலைபெறுவது என்றால், மகிழ்ச்சி, கொந்தளிப்பாக அல்லவா இருக்கும்!

டில்மன் குடியரசுத் தலைவராகிவிட்டதால், ஒரே வரியில், தங்கள் இழிவுகளைப் போக்கிவிட முடியும் என்று நம்பினர், கருநிறத்தவர்.

டில்மன் இதனை அறியாமலிருந்திருக்க முடியாது,

கதிர் குலுங்குவது காணும் உழவன் மனம் மகிழ்ச்சியால் துள்ளுவதுபோலத் தன் இனத்தவர் இருப்பார்கள் என்பதை உணர்ந்தார்; புன்னகை பூத்ததா? இல்லை! பெருமூச்சு!

அப்பா! அப்பா எனதருமை அப்பா! என் வாழ்த் துக்கள்! பாராட்டுதல்கள்! இங்கு ஒரே கொண்டாட்டம்! கோலாகலம்! எல்லோரும் என்னை வாழ்த்துகிறார்கள்! வந்து வந்து பார்க்கிறார்கள், புகழ்ந்து புகழ்ந்து பேசு கிறார்கள், நமது இனத்தவர் ஒரே ஆனந்தத் தாண்டவ மாடுகிறார்கள்! பல்கலைக் கழகமே விழாக்கோலம் பூண்டிருக்கிறது!

தொலைபேசி தந்திடும் இந்தத் தேன் துளிகள் செவியிலே பாய்கின்றன. டில்மன் கேட்கிறார்; இன்பமாகத்தான் இருக்கிறது; இனிப்பான பேச்சுதான்.

சரி! சரி! சந்தோஷம்!

அப்படியா ஓஹோ! நல்லது!

ஆமாம்! சரி, சரி.

இப்படிப் பதில் பேசுகிறார் டில்மன்.

மகிழ்ச்சிக் கொந்தளிப்புடன் பேசுபவன், டில்மன் மகன், கல்லூரி மாணவன்!!

இருக்குமல்லவா மகிழ்ச்சி, தந்தை, நாட்டை ஆளுந் தலைவராக அமர்ந்திருக்கிறார் என்பதால். எல்லோருக்கும் கிடைக்கக் கூடிய "வாய்ப்பா' இது, வெள்ளை மாளிகையில் அதிபராக அமருவது! அதிலும் ஒரு நீக்ரோவுக்கு அந்த வாய்ப்பு!

மகன் பேச்சிலே களிப்பு, பெருமிதம் ததும்பிடுவது தெரிகிறது. என் மகன் மகிழ்கிறான்! பெருமிதம் கொண்டுள் ளான்! நேற்றுவரையில் அவன் எத்தனையோ ஆயிரம் மாணவர்களிலே ஒருவன்; அதிலும் ஒரு நீக்ரோவின் மகன். கருப்பன்! இன்று? அவன் அமெரிக்கக் குடியரசுத் தலைவரின் மகன்! பெருமிதம் கொள்ளத்தானே செய்வான், தம்பி! அந்த மாணவன் பெற்ற மகிழ்ச்சியை மாய்த்திட விருப்பம் எழவில்லை. எனவே

இந்தக் கிழமை அவன் மகிழ்ந்திருக்கும் நிலையோடு நிறுத்திக் கொள்கிறேன். மற்றவை அடுத்த கிழமை.

அன்புள்ள

அண்ணாதுரை

13-2-66

38. வெள்ளை மாளிகையில் - 3

நீக்ரோ என்றால் என்ன பொருள் ?
மாணவர்கள் சமூகத்தின் ஈட்டி முனைகள் !
வீழ்ந்தவர்கள் வீழ்ந்தவர்களல்லர் !
விடுதலை, - இன்றேல் வீரமரணம் !
"டர்னரைட்' இயக்கம்
அபாண்டப் பழி !

தம்பி,

அடிமை வேலைக்காகவே ஆண்டவனால் படைப்பிக் கப்பட்ட இனம் நீக்ரோக்கள் என்று நிறவெறியர்கள் எண்ணிக் கொண்டனர் என்ற போதிலும், உழைத்து உழைத்து அவர்கள் எல்லாத் துறைகளிலும் வெள்ளையருடன் சரிசமமாக நிற்க முடியும் என்பதை மெய்ப்பித்துக் கொண்டு வந்தனர்.

"மகனே! நீ ஒரு நீக்ரோ! பொருள் என்ன

தெரியுமா? ஒவ்வொரு கட்டத்திலும் உனக்குத் திறமை இருக்கிறது என்பதை நிரூபித்துக் காட்டியபடி இருக்க வேண்டும். வெள்ளை இனத்தவருக்கு அந்த நிபந்தனை இல்லை! அவர்கள் தகுதியுடன் பிறந்திடும் இனத்தவர்! நாம் தகுதியைப் பெற வேண்டும், உழைப்பால், திறமையால், கல்வியால்''

ஒரு நீக்ரோ தன் மகனுக்கு இதுபோல அறிவுரை கூறினார் என்று ஒரு ஏடு தெரிவிக்கிறது. அந்த நிலையில் இருந்து வந்த இனத்திலே பிறந்த டக்ளஸ் டில்மன், எந்த அமெரிக்கனும் மதிக்கத்தக்க பதவியைப் பெற்றான் என்றால், அவனுடைய மகன் மட்டற்ற மகிழ்ச்சி அடையத்தானே செய்வான்.

ஜூலியன் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தான் - நீக்ரோக்களுக்காக மட்டும் என்று அமைந்த கல்லூரியில்!

டில்மன், கீர்த்திமிக்க வழக்கறிஞர், செல்வாக்கு பெற்ற செனட்டர், செனட் சபைக்கே தலைவர், என்றாலும் நீக்ரோவாயிற்றே! ஆகவே டில்மனுடைய மகன் நீக்ரோக்களுக் காக அமைந்திருந்த கல்லூரியில்தான் இடம்பெற முடிந்தது.

ஜூலியன்! ஜூலியன் நமது இனத்துக்கே பெருமை! காலமெல்லாம் நமது இனத்தின் மீது சுமத்தப்பட்டு வந்த இழிவும் பழியும் ஒரே நொடியில் துடைக்கப்பட்டு விட்டது!

நமது இனத்தின் தன்மானம் தரணியோரால் ஏற்றுக் கொள்ளப்பட்டு விட்டது! இனி எந்த வெள்ளைப் பயலாவது, கருப்பர் தாழ்ந்த இனம், மிருக இனம் என்று வாய்திறந்து கூறத்துணிவானா!

ஜூலியன்! உன்னோடு சேர்ந்து கல்லூரியில் ஒன்றாகப் படிக்கும் வாய்ப்புப்

பெற்ற நாங்கள் பெரும்பேறு பெற்றவர்கள்! ஜூலியன்! அப்பா நமது இனத்தின் விடுதலைக்காக முழுமூச்சுடன் பாடுபடுவார் அல்லவா!

ஜூலியன்! நமது இனத்தவரை இன்னமும் இழிவாக நடத்தும் போக்கைக் கண்டவராயிற்றே உன் அப்பா! அவருடைய இரத்தம் கொதிக்குமல்லவா அதை நினைக்கும்போது.

ஒரே வரி! அவருடைய பேனாவிலிருந்து! நமது இனம், சபிக்கப்பட்ட இனம் அல்ல, ஆளும் இனம்! என்று புது நியதி பிறந்து விடாதா!

பட்ட கஷ்டத்தையெல்லாம் மறந்தே விடுவர் நமது இனமக்கள் நாம் பரவாயில்லை; அடிமை வாணிபம் ஆபிரகாம் லிங்கனால் அகற்றப்பட்ட பிறகு பிறந்த தலைமுறை. முன்பு? காட்டு மிருகங்களை வேட்டை

யாடுவது போல அல்லவா நமது இனத்தவரை நடத்தி வந்தனர் இந்தக் கொடியவர்கள். சவுக்காலடிப்பது, சதை பிய்ந்துபோகும் வரையில்! குற்றுயிராக வெட்டவெளியில் போட்டு வைப்பது, மரத்திலே தொங்கவிடுவது சாகடித்து, கேட்கும்போதே, நெஞ்சம் வெடித்திடும்! எத்தனை எத்தனைக் கொடுமை களைத் தாங்கிக் கொண்டனர் நமது இனத்தவர்!

இன்று எல்லாவற்றுக்கும் ஈடு செய்வது போல, செய்த கொடுமைகளுக்கெல்லாம் பரிகாரம் தேடுவது போல மன்னிப்புக் கேட்டுக் கொள்வதுபோல, உன் அப்பாவின் காலடியில், குடியரசுத் தலைவர் பதவியைக் காணிக்கையாக வைத்திருக்கிறார்கள்!

வரலாற்றில் இடம் பெறுபவரின் மகன் நீ, ஜூலியன்! உன்னுடைய நண்பர்கள் என்பதைவிட எங்களுக்கு வேறு என்ன சிறப்பு

வேண்டும்?

காரிருள் விலகிவிட்டது! கதிரவன் உதித்துவிட்டான்!!

உணர்ச்சி கொந்தளிக்கும் பருவத்தினரல்லவா கல்லூரி மாணவர்கள்? வரலாற்று நிகழ்ச்சிகளையும், மக்கள் மனதிலே தோன்றிய எழுச்சிகளையும், உரிமைப்போர் நிகழ்ச்சிகளையும், விடுதலை வீரர்களின் கதைகளையும், சமத்துவம், சகோதரத்துவம் போன்ற இலட்சியங்களின் வரலாறுகளையும் படித்துப் படித்து, ஆர்வம் ததும்பும் உள்ளத்தினரல்லவா? ஆகவே, தம்பி! ஒரு நீக்ரோ இனவெறி பிடித்தலையும் அமெரிக்காவில், குடியரசுத் தலைவரான சேதி கேட்டதும், துள்ளிக் குதித்துத்தான் இருப்பர்! ஜூலியனிடம் மகிழ்ச்சியுடன் எழுச்சியுடன் ஏதேதோ பேசித்தான் இருப்பர், நண்பர்களின் பேச்சு தேனாக இனித்திருக்கும்

அந்த மாணவனுக்கு, அந்த மகிழ்ச்சிப் பெருக்குடன்தான் ஜூலியன் தன் தந்தையிடம் பேசினான் தொலைபேசி மூலம்.

என் தந்தை வெள்ளை மாளிகையில் !

என் தந்தை அமெரிக்கக் குடியரசுத் தலைவர் !

இந்த எண்ணம், அந்த இளைஞன் உள்ளத்தில், ஓராயிரம் நம்பிக்கைகளை ஏற்படுத்தித்தானே இருக்கும் ?

நீக்ரோக்களில், கூலிகளாக, வேலைக்காரர்களாக, பாட்டாளிகளாக, அலுவலகங்களிலே பணியாற்றுபவர்களாக இருந்தவர்களால், படிப்படியாக முன்னேறினால் போதும், மனித உரிமைகளை மெள்ள மெள்ளப் பெற்றால் போதும் என்ற விதமாக மட்டுமே நினைத்திட முடிந்தது. மாணவர்கள் மனதில், இந்தப் போக்கா இடம்

பெற்றிருக்கும்! மாணவர்கள் ஒரு சமூகத்தின் ஈட்டிமுனைகள்! எழுச்சிப் பிழம்புகள்! நம்மாலே ஆகுமா என்ற இழுப்புப் பேச்சும், என்ன செய்வது என்ற ஏக்கப் பேச்சும், உள்ளத்திலே இருந்திட மறுத்திடும் பருவம்! எந்த இன்னலை ஏற்றுக் கொண்டாகிலும் இழிவுகளைத் துடைத்தாக வேண்டும் என்ற உறுதி குடிகொண்ட உள்ளம் அவர்களுக்கு. ஆகவே கல்லூரிகள், விடுதலைக்கு இளைஞர்களைத் தயாரிக்கும் பாசறைகளாகத்தானே இருக்க முடியும்! எத்தனையோ கொடுங்கோலர்கள் வீழ்த்தப்பட்ட வரலாறுகளைப் படித்தது வீண் போகுமா! எத்தனையோ வல்லமையுடன் அமைக்கப்பட்ட பேரரசுகள், மக்களில் ஒரு பிரிவினரைத் தாழ்வாகவும் மிருகத்தனமாகவும் நடத்திய காரணத்தால், சமூகத்தில் வெடிப்புகள் தோன்றி, புரட்சிகள் புயலெனக் கிளம்பி, அதன் வேகத்தாலே

அழிக்கப்பட்டுப் போயின என்ற வரலாற்று உண்மைகள் இதயத்தில் பதிந்துள்ளனவே; அத்தகையவர்கள் அடிமைத்தளைகள் தன்னாலே விலகிடா, உடைத்தெறியப் பட வேண்டும் என்ற உண்மையினைப் பெறாமலா இருந்திருப்பர்.

பெரியவர்கள், பொறாமை என்றும் பொறுப்புணர்ச்சி என்றும், சட்டம் என்றும் ஒழுங்கு என்றும் மெள்ள மெள்ள என்றும் படிப்படியாக என்றும் பேசுவது கேட்டுக் கேட்டுக் காது புளித்துப் போய்விட்டது. விடுதலைக்கான முயற்சியில், விளைவு பற்றிக் கவலைப்படாமல், ஆபத்து குறித்துப் பொருட் படுத்தாமல், உடனடியாக ஈடுபட்டாக வேண்டும்! நீண்ட நெடுங்காலமாகப் பொறுத்தாகிவிட்டது! இனியும் பொறுத்துக் கொள்வது முடியாது, கூடாது! மனிதத் தன்மை மாய்க்கப் படுகிறது! உரிமைகள்

உண்டு என்ற உணர்ச்சியே நசுக்கப்பட்டு வருகிறது. எனவே, இப்போதே வீறிட்டுக் கிளம்ப வேண்டும், விடுதலைப்போர் தொடங்க வேண்டும். பலாத்காரமான முறையானாலும் சரி, புரட்சியே நடத்தித் தீர வேண்டும் என்றாலும் சரி, அச்சம் கொண்டிடலாகாது! அடிமையாக அஞ்சி அஞ்சி அடிபணிந்துக் கிடப்பதைக் காட்டிலும் விடுதலைக்காகப் போராடி குண்டடிபட்டு, மார்பிலிருந்து குபுகுபுவெனப் பீறிட்டுக் கொண்டு வரும் இரத்தத்தைப் பார்த்தபடி களத்தில் வீழ்ந்துபடுவதே, வீரம்! - என்ற விதமான எண்ணம் அமெரிக்க நீக்ரோக்களில் இளமைத் துடிப்பு உள்ளவர்களிடம் தோன்றிவிட்டது என்பதை எடுத்துக் காட்டுவதுபோல, பல புரட்சிகரமான நடவடிக்கைகள் அமெரிக்காவில் அவ்வப்போது நடைபெற்று வந்தன.

அவைகளை அமெரிக்க வெள்ளை அரசு அழித்துவிட்டன என்றாலும், ஒவ்வொரு நடவடிக்கையும் நீக்ரோக்களை இன்னமும் தாழ்வாக நடத்திக் கொடுமைப்படுத்திக் கொண்டு வருவது நடைபெறக் கூடியதல்ல என்ற எச்சரிக்கையாகவே அமைந்தது.

தம்பி! நான் முன்பு குறிப்பிட்டிருந்தேனே "டிரம்' என்ற கதை, அது கொடுமைக்கு இரையான நீக்ரோ பற்றியது. ஆனால் வெள்ளை நிற வெறியரை எதிர்த்து நின்று, கொல்லப்பட்ட நீக்ரோக்களின் வீரக்காதைகள் நிரம்ப உள்ளன. அந்த வீரக் காவியங்கள் அனைத்திலும், இறுதியில், புரட்சி மூட்டிய நீக்ரோ சுட்டுப் பொசுக்கப்பட்டானென்றோ, வெட்டி வீழ்த்தப்பட்டா னென்றோதான் இருக்கும். விடுதலை பெற்றார்கள் என்ற முடிவு இருப்பதில்லை! ஆனால் உயிர் அல்ல முக்கியம், உரிமையே உயிரினும் மேலானது

என்ற தத்துவத்தை அவர்கள் ஒவ்வொரு வரும் தமது இரத்தத்தால் எழுதிவிட்டுப் போயிருக்கிறார்கள்.

கொடுமைகள் குவிக்கப்படும்போது, அதனால், தத்தளிப்பவர்களிடமிருந்து கிளம்பும் சோகம், பெரும் புயலை எழுப்பிவிடும் என்பதனைக் கொடுமைப்படுத்துவோர் உணருவதில்லை. வீழ்த்திவிட்டோம், வீழ்ந்து விட்டது! என்று எண்ணிக்கொண்டு விடுகின்றார்கள்! ஆனால் வீழ்த்தப் படுபவர்கள், எண்ணற்றவர்களை எழுப்பிவிட்டுத்தான் போகிறார்கள்! தனி மனிதர்களாக இருப்பவர்கள், தமது உயிரைத் தியாகம் செய்வதன் மூலம் ஒரு அணிவகுப்பைப் பெற்றளித்து விடுகிறார்கள். இன்னமுமா இறுமாப்பு! இன்னமுமா எதிர்ப்பு! இவ்வளவு பேர் தூக்கிலே தொங்கிய பிறகுமா, புரட்சி

செய்யும் நினைப்பு! என்று வியப்புடன் கேட்பர், கொடுங்கோலர்; ஆனால் கொடுமையை எதிர்த்துச் சிந்தப்படும் ஒவ்வொரு துளி இரத்தமும் கொடுமையை எதிர்த்திடும் உறுதியை ஓராயிரம் புதியவர்களுக்கு ஊட்டி விடுகிறது.

ஒட்டி உலர்ந்துபோன உருவம்! உழைத்திட இலாயக் கில்லை என்று எஜமானனால் எக்கேடோ கெட்டுப்போ என்று ஓட்டிவிடப்பட்டு விட்டவன் அவன், தன் போன்ற ஓர் அடிமையிடமிருந்து ஒரு குவளை சாராயம் பெற்றுக் கொண்டு போகிறான்! குதிரைகளுக்குத் தரும் மட்டரகமான சாராயத்தை, வெள்ளை முதலாளி பார்த்து விடுகிறான். கருப்பு அடிமை பதுங்குகிறான். பளார்பளார்! என்று சவுக்கடி விழுகிறது!துடிக்கிறான்! தடுமாறிக் கீழே விழுகிறான்! சவுக்கடி

ஒயவில்லை! சவுக்காலடிப்பவன், குதிரை மீது! சவுக்கடிபடுபவன், தரையில்!!

பார்க்கிறார்கள் பலர்; பதறுகிறார்கள், ஆனால் வாய் திறந்து ஒரு வார்த்தை, ஐயோ! பாவம்! விட்டுவிடுங்கள்! என்று கூறவில்லை ஏன்? அடிப்பவன் எஜமானன்! வெள்ளை இனம்! துடிப்பவன், அடிமை; நீக்ரோ! பார்ப்பவர்களும் அடிமைகள்; நூக்ரோக்கள், ஐயோ! பாவம்! என்று சொன்னாலோ, போதும் நிறுத்துங்கள் என்று கூறினாலோ, அதே சவுக்கடி விழும் இவர்களுக்கு; இன்னும் வேகமாக. அடி தாளமாட்டாமல் ஓடினாலோ, வேட்டை நாய்களை அவிழ்த்துவிடுவார் எஜமானர்!! எனவே அவர்கள் பார்க்கிறார்கள், தங்கள் இனத்தவன் ஒருவன் தள்ளாடும் வயதினன், சவுக்கடி படுவதை! எஜமானன் அடிப்பதுடன் விடவில்லை குப்புறக் கீழே விழுந்தவன் மீது குதிரையை ஏற்றுகிறான்!

குற்றுயிராகிறான் அடிமை! கோபம் தீருகிறது எஜமானனுக்கு, மாளிகை செல்கிறான்! இரண்டு நாட்களில் அந்தக் கருப்பு அடிமை இறந்து போகிறான் மற்ற அடிமைகள் அவனை அடக்கம் செய்கிறார்கள். பிரார்த்தனை செய்யப்படுகிறது!! சட்டம்? அடிமையை என்ன செய்யவும் உரிமை பெற்றவன் எஜமானன்! பயல் செத்துவிட்டான்!! என்று கூறுகிறது, அந்த அடிமை செய்த பல குற்றங்களிலே, சவுக்கடியைத் தாங்கிக் கொள்ள முடியாமல் செத்ததும் ஒன்று என்பதுபோல! இதைக் கண்ட ஒரு கட்டுடல் கொண்ட நீக்ரோ இளைஞன், ஆயிரம் நீக்கேராக்களை இரகசியமாகத் திரட்டிக் கொண்டு, அந்த ஊரையே அழித்து, வெள்ளையர்களைக் கொன்று குவித்து, விடுதலை பெறத் திட்டமிடுகிறான். இந்தப் புரட்சி 1800-ம் ஆண்டு, அமெரிக்காவில் நடைபெற்றதை, "கருப்பு இடி'

என்ற ஏடு எடுத்துக் காட்டுகிறது.

ஆயுதம் இல்லை, புரட்சி நடத்திட! பயிற்சி கிடையாது, போர்முறையில்! அடக்கிடப் பலமான பட்டாளம் வெள்ளை அரசிடம் இருப்பதும் தெரியும். பிடிபட்டு விட்டால் தீர்த்துக் கட்டிவிடுவார்கள் என்பதும் புரிகிறது. ஆனாலும் எத்தனைக் காலத்திற்குத்தான் பொறுத்துக் கொண்டிருப்பது! கண் எதிரே சவுக்காலடித்துச் சித்திரவதை செய்கிறான் பார்த்துக் கொண்டு தானே இருக்க முடிகிறது! செத்தானே அந்தக் கிழவன், புரட்சியா செய்தான்? இல்லையே! அடங்கி ஒடுங்கிக் கிடந்தான் ! சவுக்கடி விழ விழத் துடித்தான்; எதிர்த்தானா? இல்லையே? ஏன் என்று கேட்டானா இல்லையே! வாய் திறக்கவே இல்லை! கண்ணீர் வடித்தான்! முடிவு? புதைத்துவிட்டார்கள்! புரட்சி செய்து பிடிபட்டால் சாக வேண்டும்! சரி! புரட்சி

செய்யாதிருந்தால் மட்டும் வாழ்கிறோமா! இது ஒரு வாழ்வா! எந்த நேரத்திலும் சவுக்கடி விழலாம். எந்தச் சமயத்திலும் குதிரையை விட்டு மிதிப்பார்கள். குற்றுயிராக்குவார்கள். பிறகு கர்த்தரிடம் சேர்ப்பிப்பார்கள்!! ஜெபம் நடத்துவார்கள்! இது ஒரு வாழ்வா! இதைவிட எதிர்ப்போம், வெற்றி பெற்றால் விடுதலை! இல்லையானால் வீரமரணம்!

இவ்விதம் கூறுகிறான் "கருப்பு இடி' என்ற காவியத் தலைவன் கேப்ரியல்; சரி என்று இசைகின்றனர். ஆயிரம் அடிமைகள். ஊரை வளைத்துப் பிடித்துக்கொள்ள திட்டம் வகுக்கிறான். திட்டம் வெற்றி பெறவில்லை. பெருமழை, அவன் திட்டத்தை நாசமாக்கி விடுகிறது. பிடிபடுகின்றனர் பலர். கேபிரியலும் வேறு சில சில தளபதிகளும் தப்பி ஓடுகின்றனர், காட்டுப்புறம் படை வருகிறது! வெள்ளையரின் இதழ்கள்"கருப்பு

அபாயம்’ பற்றிப் பொறி பறக்க எழுதுகின்றன. கேபிரியல் பிடிபடுகிறான். பிடிபடுகிறான் என்றுகூடச் சொல்வதற்கில்லை! தானே தன்னை ஒப்படைக்கிறான்! சரண் அடையவில்லை. அந்தச் சம்பவமும் கேபிரிய-ன் வீரத்தை விளக்குவதாகவே அமைகிறது. கேபிரியல் தப்பிச் செல்வதற்காக ஒரு படகு தயாராகிறது. ஆனால் கடைசி நேரத்தில், அவனுக்குத் துணை செய்ய முன் வந்தவன் பிடிபடுகிறான். போலீஸ் அவனை வளைத்துப் பிடித்துக் கொண்டு எங்கே கேபிரியல்? என்று கேட்கிறார்கள்; அவன் தனக்கு ஏதும் தெரியாது என்று மறுக்கிறான்; கொடுமைப் படுத்துகிறார்கள் போலீஸ் படையினர்; தனக்காகத் தன் நண்பன் இம்சைக்கு ஆளாவது கண்டு தாங்காத கேபிரியல், போலீசிடம் நிற்கிறான், ”இதோ நான்தான் கேபிரியல் விடுங்கள் அவனை ! என்னைக்

கைது செய்து கொள்ளுங்கள்'' என்று கூறுகிறான்.

தம்பி! "கருப்பு இடி' என்ற அந்த நூ-லே கூறப்பட்டிருப்பது அவ்வளவும் கற்பனை அல்ல, வரலாற்று நிகழ்ச்சி. வடிவம், கதையாக்கப்பட்டிருக்கிறது; அதற்கேற்ற சம்பவக் கோவைகள்; உரையாடல்கள் தரப்பட்டுள்ளன; ஆனால் ஒரு நீக்ரோ புரட்சி ஏற்பட்டதும், கேபிரியல் போன்ற நீக்ரோ தலைவர்கள் பிடிபட்டுக் கொல்லப்பட்டதும் உண்மைச் சம்பவங்கள்.

கடைசிக் கட்டம் உண்மையிலேயே கல் மனதையும் கரைத்து விடும்.

கேபிரியல் தூக்கிலே தொங்குகிறான். கலங்காமல் தாள் பணிய மறுத்து,

அந்தப் புரட்சியில் அவனுடன் துணிந்து ஈடுபட்டு ஆபத்துக்களைச் துச்சமென்று கருதிப்

பணியாற்றிய அவனுடைய காதலி - நீக்ரோ பெண்மணி - வெள்ளை வெறியரிடம் சிக்கி அடிமையாக விற்கப்படுகிறாள்.

இதைக் காணுகிறான், கதையின் துவக்கத்தில் சவுக்கடி கொடுக்கப்பட்டு ஒரு நீக்ரோ இறந்தானே, அதைப் பார்த்த, மற்றோர் நீக்ரோ!

அந்த நீக்ரோவும் கேபிரியலின் புரட்சியிலே ஈடுபட்டவன் தான்; இடையிலே அச்சம் அவனைப் பிடித்தாட்டிற்று; அவன்தான் புரட்சித் தலைவர்களைக் காட்டிக் கொடுத்து விட்டான்.

"கருப்பு இடி'யில் கூறப்பட்டுள்ளது போன்ற புரட்சிகள் பலப்பல அவ்வப்போது வெடித்துக் கிளம்பியபடி இருந்தன.

தம்பி! இதுபற்றி இங்குக் குறிப்பிடுவதற்குக் காரணம் நீக்ரோக்கள்

தங்கள் விடுதலைக்காக நடத்திடும் கிளர்ச்சியை அமெரிக்க வெள்ளை அரசு ஒழித்துக் கட்டுவதற்குக் கையாண்ட ஒரு முறை, அந்தக் கிளர்ச்சியை, "அன்னியர்கள்' அமெரிக்காவுக்கு எதிராகத் தூண்டிவிட்டிருக்கிறார்கள் என்ற பழி சுமத்தி, அமெரிக்க மக்களின் ஆத்திர உணர்ச்சியைத் தட்டி, எழுப்புவது என்பதைக் குறிப்பிடத்தான்.

இந்தி மொழி ஆதீக்கம் தங்கள் எதிர்காலத்தை நாசமாக்கும் என்று உணர்ந்து கொதித்து எழுந்த மாணவர்களை, நாம் தூண்டி விட்டு கலாம் விளைவித் தோம் என்று முதலமைச்சர் பக்தவத்சலம் கூறினாரல்லவா! இதே முறையைக் கையாண்டனர்; முன்பு; அமெரிக்காவில்.

"கருப்பு இடி' என்ற நூலிலே, புரட்சித் தலைவன் கேபிரியல் தான் தான் புரட்சி நடத்தியவன் என்று சொன்ன பிறகும்

விசாரணை நடத்திய நீதிபதிகள் விட வில்லை.

உனக்கு எப்படி இவ்வளவு திட்டமிடத் தெரிந்தது! நீயோ அடிமை! உனக்கு எங்கிருந்து இத்தனைத் துணிவு பிறந்தது. உண்மையைச் சொல். புரட்சியைத் தூண்டிவிட்டவர் யார்? சொல்லிவிடு! உன்மீது குற்றம் இல்லை. நீ பாவம், யாரோ ஆட்டுவித்தபடி ஆடிவிட்டாய். சூத்ரதாரிகளைக் கூறிவிடு. தப்பித்துக் கொள்ளலாம்.

என்றெல்லாம் கேட்கிறார்கள்.

ஒருவரும் தூண்டிவிடவுமில்லை, துணைக்கு வரவுமில்லை; திட்டமிடவுமில்லை. நானேதான் திட்ட மிட்டேன். அன்று மட்டும் பெருமழை வாராதிருந் திருப்பின் என் திட்டம் வெற்றியும் பெற்றிருக்கும்,

என்று கேபிரியல் சொல்லுகிறான், நம்பிக்கை ஏற்பட வில்லை! நீதிபதிகளுக்கு;

ஏனென்றால் (1800) அன்றைக்கு அமெரிக்காவில் கிளர்ச்சிகளை, புரட்சிகளை மூட்டி விடுபவர்கள் பிரன்ச்சுக்காரர்கள் என்ற எண்ணம் பலமாக இருந்து வந்தது, பிரன்ச்சுப் புரட்சியின்போது மலர்ந்த கருத்துக்கள் சமத்துவம் என்பது! நீக்ரோக்கள் சமத்துவம் அல்லவா கேட்கிறார்கள்! அவர்களுக்கு எப்படித் தெரியும் சமத்துவம் என்பது; பிரன்ச்சு நாட்டு புரட்சிக்காரர்கள் தூண்டிவிட்டதால் தெரிந்தது! ஆகவே நீக்ரோ கேபிரியல் நடத்திய புரட்சி பிரன்ச்சுக்காரர் மூட்டிவிட்டது! இது அமெரிக்கா நிறவெறியர் வாதம்

காக்கை கருப்பு நிறம்
கந்தசாமி நிறம் கருப்பு,
ஆகவே
கந்தசாமி காக்கை !

இப்படி ஒரு வாதம் ! அந்த நாள் அமெரிக்காவில்தானே என்று கேட்கின்றாயா

தம்பி. ஏன், இந்த நாள் பக்தவத்சலனார் வேறுவிதமாக வாதம் செய்கிறார்.

இந்தி ஒழிக என்கிறது தி. மு. க.
மாணவர்கள் இந்தி ஒழிக என்கிறார்கள்
ஆகவே
மாணவர்கள், தி. மு. க.

இப்படித்தானே வாதாடுகிறார்! ஆகவே பக்தவத்சலனாரின் வாதம் புதிது அல்ல! நெடுங்காலமாக இருந்து வருகிற வாதம்!

ஆதிக்கம் அழிந்துபடுமோ என்ற அச்சம் பீடிக்கும் நிலையிலுள்ளவர்கள் வழக்கமாகக் கூறிடும் வாதம்! தூக்குக் கயிற்றைக் கழுத்திலே மாட்டுவதற்கு ஒரு விநாடிக்கு முன்புகூடக் கேட்கிறார்கள் கேபிரியலை, ”ஏதாவது சொல்லிக் கொள்ள விரும்புகிறாயா?’ என்று,

”நானே, ஏதும் இல்லை. கயிறு பேசும்!’

என்கிறான் கேபிரியல்!

டக்ளஸ் டில்மன் குடியரசுத் தலைவரான நாட்களில் நீக்ரோக்களுக்குச் சமத்துவம் கிடைத்திடச் செய்வதற்குப் புரட்சியே சரியான வழி என்ற கருத்துடன் "டர்னரைட்' என்ற ஒரு இயக்கம் இருந்து வருகிறது.

இந்த இயக்கம், கம்யூனிஸ்டுகளால் நடத்தப்பட்டு வருகிறது; அமெரிக்காவை அழிக்கவே, நீக்ரோக்களின் விடுதலை என்று பெயர் கூறிக்கொண்டு இந்த பயங்கர இயக்கம் நடத்தப்பட்டு வருகிறது என்று அமெரிக்க அரசு கூறிவந்தது. ஒரு நீக்ரோவே குடியரசுத் தலைவர் ஆகிவிட்டதால், இந்த பயங்கர இயக்கம் மேலும் துணிவு பெற்று ஆட்டம் ஆடுமோ என்ற அச்சம் கொண்ட வெள்ளைநிற ஆதிக்கக்காரர்கள் இந்த பயங்கர இயக்கம் கம்யூனிஸ்டுகளின் கைப்பாவை, ஆகவே அதனைத் தடை செய்ய

வேண்டும் என்று வலியுறுத்துகின்றனர்.

டர்னரைட் இயக்கம் கம்யூனிஸ்டு இயக்கம் அல்ல; நிறவெறியை நிலைநாட்ட விரும்பும் வெள்ளையர் சுமத்தும் பழி அது; ஆகவே டில்மன் அந்த இயக்கத்துக்குத் தடை ஏதும் போடக் கூடாது என்று நீக்ரோ மக்கள் வலியுறுத்துகிறார்கள்.

டல்மன் யார் பக்கம் சேருவார்? தன் இன மக்கள் பக்கமா? வெள்ளையர் பக்கமா? என்ற கேள்வி எழும் போது டில்மன் உறுதியாகத் தெரிவிக்கிறார். அந்த இயக்கம் உண்மையிலேயே பயங்கர நடவடிக்கையில் ஈடுபடுகிறது, கம்யூனிஸ்டுகளால் நடத்தப்படுகிறது என்று மெய்ப்பிக்கப் பட்டாலொழிய அதனைத் தடை செய்யப் போவதில்லை; நமது சட்டம் இடந் தராது. நான் அந்த இயக்கம், கருப்பருக்காகவா, வெள்ளை யருக்காகவா

என்று பார்க்கப் போவதில்லை; அது அமெரிக்காவின் நன்மைக்கா, அமெரிக்காவைக் கெடுக்கவா, எதற்குப் பயன் படுகிறது என்பது பற்றித்தான் பார்க்கப் போகிறேன் என்று கூறுகிறார். அவரைச் சூழ இருந்த வெள்ளைப் பேரதிகாரிகளுக்கு அடக்கமுடியாத கோபம். ஒரு நீக்ரோவைக் கொண்டு நீக்ரோ விடுதலை இயக்கத்தைத் தடை செய்துவிடலாம். அதற்கு டில்மன் குடியரசுத் தலைவராகி இருப்பது பொன்னான சந்தர்ப்பம் என்று அந்த ராஜ தந்திரிகள் கருதித் திட்டமிட்டனர். டில்மன் ராஜதந்திரம் படிக்கவில்லை; ஆனால் இதயம் இருந்தது. அதிலே நீதிக்கும் நேர்மைக்கும் இடம் இருந்தது. பொறுப்புணர்ச்சி போதுமான அளவு இருந்தது. எந்தச் செயலும் அமெரிக்க நாட்டுக்கென அமைந்துள்ள சட்ட திட்டத்திற்கு உட்பட்டதாக, அதன் ஒழுங்கைக் குலைத்திடாததாக இருக்கும்

படித்தான் அமையவேண்டும், மேலும் விருப்பு வெறுப்புகளுக்கு இடமளிக்கக்கூடாது என்று உறுதி கொண்டிருந்தார்.

மகன் ஜூலியின் வந்து பார்த்து மகிழ்ச்சி பொங்கப் பொங்கப் பேசும்போதுகூட, டில்மன் இந்த நோக்கத்தை உறுதியாகத் தெரிவிக்கத் தவறவில்லை.

அற்புதம் நடந்துவிட்டது, அப்பா! அற்புதம்! வெள்ளை மாளிகையில் தாங்கள் வீற்றிருக்கும் வாய்ப்புக் கிடைத்ததை நாங்கள் ஒரு அற்புதம் என்றே கருதுகிறோம். அப்பா! நமது இனத்தவரும், அவர்களுக்காகப் பணியாற்ற ஏற்பட்ட அமைப்புகளும் ஒரு நூற்றாண்டுக் காலத்தில் சாதிக்க முடியாததை, தாங்கள் ஒரு நொடியில் சாதிக்கும் வாய்ப்பு அப்பா! இது! நமது இனத்தவர் எவ்வளவோ பேர் மடிந்தனர், உரிமை கேட்டு; அல்லற்பட்டனர்; அவதிப் பட்டனர். இப்போது

வெள்ளையர்களுக்கு ஆணை பிறப்பிக்க முடியும் தாங்கள். . .

ஆர்வமும் நம்பிக்கையும், கொந்தளிக்கும் விதமான ஜூலியன் பேச்சு, தன் தகப்பனார் பதவிக்கு வந்திருப்பது நீக்ரோ இனத்தின் மீது சுமத்தப்பட்டுள்ள பழியினை ஒரே வரியால் துடைத்திடத் தான் என்ற நம்பிக்கை. டில்மன் அமைதியாகத்தான் பேசுகிறார்.

நான் யாரையும் எதையும் செய்யச் சொல்லி வற்புறுத்து வதாக இல்லை. நான் அமெரிக்கக் குடியரசுத் தலைவன், நீக்ரோ மக்களின் குடியரசுத் தலைவன் அல்ல!

தம்பி! டில்மன்தான் அவ்விதம் சொன்னாரே தவிர, அவர் அந்த உயர் பதவி வகிப்பது கண்டு சகித்திட முடியாத நிறவெறியர்கள், டில்மன் கருப்பரின் தலைவர், அமெரிக்கக் குடியரசுத் தலைவர் அல்ல,

அதற்கு ஏற்ற தகுதியும் திறமையும் இல்லை; ஒழுக்கம் இல்லை; உயர் பண்பு இல்லை; கேட்பதற்கே கூசும் பல குறைபாடு கொண்டவர் குடியன், கூத்திக்கள்ளன்! - என்றெல்லாம் பழி சுமத்தினர்; வெட்டவெளியில் மட்டுமல்ல, அரச அவையிலேயே கண்டனத் தீர்மானம் கொண்டு வந்தனர்!

அதிலே அவர்கள் குறிப்பிட்ட பல குற்றச்சாட்டுகளிலே முக்கியமானவை இரண்டு; ஒன்று கம்யூனிஸ்டுகளால் தூண்டி விடப்பட்ட டர்னரைட் என்ற பயங்கர இயக்கத்தில், டில்மனுடைய மகன் ஜூலியன் ஒரு உறுப்பினன் என்பது; மற்றொன்று உயர் நிலையிலுள்ள ஒரு மாதை டில்மன் கற்பழிக்க முயன்றார் என்பது.

திடுக்கிடத் தக்க குற்றச்சாட்டுகள் அல்லவா? எப்படி இந்தத் தாக்குதலைத் தாங்கிக்கொள்ள முடியும்? தாங்கிக்

கொண்டார்! எப்படி இந்தக் குற்றச்சாட்டுகளை உருவாக்கினார்கள் என்பதையும் டில்மன் எப்படி உறுதியுடன் அவைகளைத் தாங்கிக் கொண்டார் என்பதையும் அடுத்த கிழமை விளக்குகிறேன்.

அன்புள்ள

அண்ணாதுரை

20-2-66

39. வெள்ளை மாளிகையில் - (4)

“வழக்கு’ என்னும் ஒரு நாடகம்
ஒதுக்கிடம், குப்பைமேடு !
கருப்பு முஸ்லிம் இயக்கம்
ஒரு நீக்ரோவின் உள்ளக் கிடக்கை
”வெள்ளை மாளிகை’ - என்னும் பெயர்

தம்பி,

உலகிலேயே கடைந்தெடுத்த பொய்யர்கள் இந்த வெள்ளையர்கள் என்று குற்றம் சாட்டுகிறேன்.

உலகிலேயே இவர்களை மிஞ்சிடும் குடிகாரர்கள் இல்லை என்று குற்றம் சாட்டுகிறேன்!

மிக மோசமான சூதாடிகள் இந்த

வெள்ளையர் என்று குற்றம் சாட்டுகிறேன்.

கொடிய கொலைகாரர்கள் இந்த வெள்ளையர்கள்! சாந்தியை - சமாதானத்தைக் குலைத்தவர்கள் இந்த வெள்ளையர்.

காமவெறி பிடித்தலையும் கயவர்கள், இந்த வெள்ளையர்!

மோசடிகள் பல செய்திட்ட பேர்வழிகள் இந்த வெள்ளையர்!

ஆகவே நீதிமன்றத்தினரே! இந்த வெள்ளையர்கள் குற்றவாளிகள் என்று தீர்ப்பளிக்கக் கேட்டுக் கொள்கிறேன்.

"வெள்ளையர்கள் குற்றவாளிகளே! தூக்கு தண்டனை விதிக்கிறேன் இவர்களுக்கு''

என்ன அண்ணா! டக்ளஸ் டில்மன் மீது தொடுக்கப்பட்ட கண்டன வழக்கு பற்றிய

விவரம் தருவதாகக் கூறி விட்டு, இது ஏதோ புதிதாக, அதிர்ச்சி தரத்தக்கதாக ஒரு வழக்கு பற்றி குறிப்பிடுகிறாயே என்றுதானே தம்பி! வியப்படைகிறாய். விளக்கம் தருகிறேன்.

வெள்ளையர் குற்றம் பல புரிந்தவர்கள்; ”பஞ்சமா பாதகம்’ புரிந்தவர்கள் என்பதாகக் குற்றம் சாட்டப்படுகிறது; வெள்ளையர் பஞ்சமா பாதகம் செய்தவர்களே என்பது மெய்ப்பிக்கப்படுகிறது; நீதிமன்றத் தலைவர், வெள்ளையருக்குத் தூக்குத் தண்டனை விதிக்கிறார் நாடகத்தில்!

அமெரிக்காவில், ”வழக்கு’ என்றோர் நாடகம்; வெள்ளை யரின் கொடுமைகளைக் கண்டிக்கும் நோக்கத்துடன், நியூயார்க் நகரிலேயேகூட இந்த நாடகம், ஒரு முறை அல்ல; இருமுறை நடத்தப்பட்டதாம்.

நாடகம் தீட்டி நடித்துக் காட்டும் பொறுப்பை

மேற் கொண்டவர்கள், நீக்ரோக்களின் விடுதலை இயக்கத்தின் பல வடிவங்களில் ஒன்று என்று கூறத்தக்க "கருப்பு முஸ்லீம்' எனும் அமைப்பினர். அந்த அமைப்பினர், நீக்ரோக்கள் தங்கள் உரிமைகளுக்காக வெள்ளையரிடம் கெஞ்சிக் கூத்தாடிக் கிடக்கத் தேவையில்லை; அது கேவலம்; தமக்குள் ஒரு எழுச்சியுடன் கூடிய ஒற்றுமையை ஏற்படுத்திக்கொண்டு,"கருப்பு இனத்தவர்! ஆம்! கருப்பு! அதனால் என்ன? கேவலம் என்ன அதிலே! என்று அடித்துப் பேச வேண்டும், நிமிர்ந்து நிற்க வேண்டும்; கிருத்துவ மார்க்கத்தை விட்டுவிட வேண்டும்; முஸ்லீம்களாகி விட வேண்டும்; தனி உரிமை, தனிநாடு, தனி அரசு கேட்டுப் பெற வேண்டும் என்ற புரட்சியை நடாத்திக் காட்டிடும் இயக்கம்.

அந்த இயக்கம், மேற்கொண்டுள்ள பிரசார முறையிலே ஒன்று நாடகம்; அந்த

நாடகங்களிலே ஒன்றுதான் நான் மேலே குறிப்பிட்ட "வழக்கு'.

டக்ளஸ் டில்மன் மீது பொச்சரிப்பு காரணமாக வெள்ளை அதிகாரிகள் வழக்குத் தொடுத்தது பற்றிக் குறிப்பிட்டபோது, கருப்பு இனத்தவர், மக்கள் மன்றத்திலே வெள்ளையர் மீது தொடுத்துள்ள "வழக்கு' பற்றி நாடகம் நடத்தப்படுவது நினைவிற்கு வந்தது.

"நான் இல்லை அங்கே! இருந்திருந்தால்!'' என்று கூறுவார் நமது முதலமைச்சர் பக்தவத்சலனார்.

வெள்ளையர் - கருப்பர் மோதுதல். அதன் காரணமாக இரத்தக் களறி சதா நடைபெற்றுக் கொண்டிருக்கும் நாடு அமெரிக்கா! இருந்தும் அங்கே வெள்ளையனைத் தூக்குத் தண்டனை பெறச் செய்கிறார்கள், நாடகத்தில். இங்கு மிகச் சாதாரணமான, துளியும் பலாத்கார

வாடை அற்ற, பிரச்சார நாடகமாடினாலும் என்ன நடக்கிறது! "உதயசூரியன்' என்ற நாடகத்தில் தம்பி கருணாநிதி எந்த விதமான"பலாத்கார' ப் பிரச்சாரத்தையும் சேர்க்கவில்லை! ஆனால் "உதயசூரியன்' என்று பெயர்! பக்தவத்சலனாரின் அரசாங்கம், ஆடாதே! என்று உத்திரவிட்டது;"உதயசூரியன்' நாடகம் நின்றுவிட்டது.

அமெரிக்காவில், வெள்ளையர் பஞ்சமாபாதகம் செய்ததாகவும், உலகமன்றத்தின் முன்பு அவர்கள் இழுத்து வந்து நிறுத்தி வைக்கப்படுவதாகவும், வழக்கு நடைபெறுவதாகவும், தூக்குத் தண்டனை தரப்படுவதாகவும், கருப்பருக்கான ஒரு அமைப்பு, "நாடகமாட' இடம் கிடைத்திருக்கிறது; நியூயார்க் நகரில்; போன நூற்றாண்டிலா? இல்லை! தம்பி! இப்போது, சில ஆண்டுகளுக்கு முன்பு!

ஆனால், ஒருபுறம் இந்த அளவு "உரிமை' உணர்ச்சி மதிக்கப் பட்டு வருகிறதென்றாலும், மற்றோர் புறத்தில் நீக்ரோக்களை ஒதுக்கி வைத்து, கேவலப்படுத்தும் கொடுமையும் நெளிந்து கொண்டிருக்கிறது. அந்தச் சூழ்நிலை கப்பிக் கொண்டிருக்கும். அந்தச் சூழ்நிலை கப்பிக் கொண்டிருக்கும் இடத்திலல்லவா, டக்ளஸ் டில்மன் குடியரசுத் தலைவரானார்? அவர்மீது நிறவெறியர் பாய்ந்திடாதிருப்பார்களா! அதன் விளைவுதான் டில்மன் மீது தொடுக்கப்பட்ட கண்டன வழக்கு.

குடியரசுத் தலைவர் பதவிக்குத் தகுதியானவர் அல்ல.

குடிகாரர்! கூத்திக்கள்ளன்!

மனப்பிராந்தி நோயால் தாக்கப்பட்டவன்!

வெள்ளைப் பெண்மணியைக் கற்பழிக்க

முயற்சித்த காதகன்.

இவ்விதமான "குற்றச்சாட்டுகள்!' ஆதாரங்கள்! சாட்சிகள்! வாதங்கள்! இதழ்களிலே கண்டனக் கணைகள்! இவ்வளவும், நிறம் கருப்பு என்பதால்,

டில்மன் நாணயமானவர் என்பதிலே இதற்கு முன்பு எவருக்கும் எவ்வளவு சந்தேகமும் எழுந்ததில்லை,

டில்மன் நீக்ரோக்களின் விடுதலைக்காகப் பொறி பறக்கப் பேசிடும் போக்கினரும் அல்ல; புரட்சி இயக்கத் தொடர்பும் கொண்டவர் அல்ல; பொறுத்துக் கொள்ளும் பயிற்சி பெற்றவர்; பொறுப்பினை நன்கு உணர்ந்தவர்.

நீக்ரோக்களிலே, சிறிதளவு செல்வம் செல்வாக்கு கிடைத்து விட்டால், வெளிச்சம் போட்டுக்கொண்டு திரிபவர்கள் சிலர் இருந்தனர்; இவர் அவ்விதமான போக்கினரும்

அல்ல.

தம்பி! நிறம் கருப்பு என்றால் என்ன என்று நாம் இங்கு எளிதாகப் பேசிவிடலாம்; கருப்பில் அழகியடி! என்று சிந்து பாடிடலாம்; ஆனால் அமெரிக்காவிலே உள்ளவர்களுக்குத் தான் தெரியும் "கருப்பு' என்னென்ன கொடுமைகளை, இழிவுகளைத் தாங்கிக் கொள்ள செய்கிறது என்கிற விவரம்.

அமெரிக்க நீக்ரோக்கள் எல்லோருமே கருப்பு நிறம் அல்ல! அவர்களிலே பலர், மாநிறம், வெள்ளை நிறம் கூட, ஆனால், இனம் நீக்ரோ, நீக்ரோ இரத்தம் கலந்திருக்கிறது என்று தெரிந்தால் போதும், அமெரிக்க சமூகத்திலே இடம் கிடையாது! ஒதுக்கிடம்! ஓரம்! குப்பைமேடு!!

இந்தக் கொடுமையிலிருந்து தப்பித்துக்கொள்ள எண்ணுவர் சிறிது

வெள்ளை நிறமாகப் பிறந்துவிடும் நீக்ரோக்கள். ”யாருக்கும் தெரியாமல், பிறந்த இடத்தை விட்டு நெடுந்தொலைவு சென்று, வெள்ளையருடன் வெள்ளையராக வசித்துவர விரும்புவராம். அவ்வளவு துடிப்பு, பாவம் அவர்களுக்கு. கர்த்தர்! தமது கருணையால் நம்மை கருப்பு நிறத்துடன் படைப்பிக்கவில்லை; நமது நிறமோ வெள்ளை! நாம் வெள்ளையர் வாழும் பகுதியில் சென்று இருந்து விடலாம்; யாவரும் கண்டுபிடிக்கமாட்டார்கள்; கருப்பு நிறத்தவர்மீது வீசப்படும் இழிவிலிருந்து, கொடுமை யிலிருந்து தப்பித்துக் கொள்ளலாம் என்று நினைப்பார்களாம்.

அவ்விதமான எண்ணம் கொண்டு, ஒருவருக்கும் தெரிவிக்காமல், பல ஆண்டுகளுக்கு முன்பே, வீட்டை விட்டு ஓடிவிட்டாள், டில்மன் பெற்றெடுத்த பெண்!

எங்கே இருக்கிறாள், எப்படி இருக்கிறாள் என்பதே தெரியாது; தொடர்பு அடியோடு அற்றுப்போய்விட்டது. ஆனால், எங்கோ வெள்ளையருடன் வெள்ளை மாதாக இருந்து கொண்டிருக்கிறாள்.

அந்தத் துக்கம் டில்மன் மனதைப் பிய்த்துக் கொண்டிருக் கிறது; அதையும் பொறுத்துக் கொள்கிறார்.

மனைவி, காலமாகி விட்டாள்; மகளோ தலைமறைவு; மகனோ கல்லூரியில் உலவுகிறான், அப்பா ஒரு நொடியில் நீக்ரோக்களின் இழிவுகளைத் துடைத்துவிடுவார் என்ற நம்பிக்கையுடன்; சூழ இருக்கும் வெள்ளை அதிகாரிகளோ, "தலையாட்டிக் கொண்டிருப்பதானால் தர்பாரில் இடம்! தன்னிச்சையாக நடந்துகொள்ள முனைந்தால் தூக்கி எறியப்படுவாய்!'' என்று எச்சரிக்கிறார்கள்;

பார்வையால், விஷமத்தனம் கலந்த புன்னகையால்.

இவ்வளவும் புரிகிறது; ஆனால் எதையும் வெளியே வெளிப் படையாகப் பேசுவதற்கும் இல்லை.

சிக்கலான பிரச்சினைகள், அய்யப்பாடுகள், மனக் குழப்பங்கள், மனக் குமுறல்கள் ஏற்படும்போது, எது முறை? எதனை எவ்விதம் செய்திடலாம்? என்பது பற்றிக் கலந்து பேசிடவும், தக்க கருத்து பெற்றிடவும், தன்னலமற்று, அறிவுத் தெளிவுடன் யோசனை கூறிடத்தக்கவர்களைப் பெற்றிடவும், முடியாது போய்விடும்போது, பொறுப்புக்களை மேற்கொண்டு விட்டுள்ளவர்களின் தவிப்பும் தத்தளிப்பும் எவ்விதம் இருக்கும் என்பதனை விளக்கிட முடியாது. அத்தகைய அல்லலால் தாக்குண்டவர்கள் பற்றி

எழுதப்பட்டுள்ள ஏடுகளிலிருந்து அது பற்றித் தெரிந்துகொள்ளலாம்; ஓரளவு; முழு அளவு அல்ல.

தெளிவும் துணிவும் பொறுப்பும் பொறுமையும் மிகுதியாக இருக்கவேண்டும்.

தன் சொந்தக் கருத்தைத் திணிக்க வேண்டும் என்ற நினைப்பு எழலாகாது.

பிரச்சினையை எந்தவிதமான விருப்பு வெறுப்பு களுடனும் பிணைத்து விடலாகாது.

தவறான கருத்தைத் தந்திரமாகப் புகுத்தும் முயற்சியை மேற்கொள்ளக் கூடாது.

என் யோசனைதான்! என் திட்டம்தான்! என்ற எக்களிப்பைக் கொட்டிக் காட்டக் கூடாது.

கேட்பவர், கருத்தற்றவர்; அறிவுப் பஞ்சத்தால் நம்மை வந்து நாடுகிறார் என்ற தப்புக் கணக்குப் போடக்கூடாது.

பிரச்சினையை அணுகும்போது, தனது நிலையை அளவுகோலாக்கிக் கொள்ளாமல், பொறுப்பினை மேற் கொண்டுள்ளவரின் நிலையினை அளவுகோலாகக் கொள்ள வேண்டும்.

கேட்பவர் மனம் மகிழவேண்டும் என்பதற்காகத் தித்திப்பு கூட்டக்கூடாது; பிரச்சினையை விட்டு விடட்டும் என்பதற்காகக் கசப்பினையும் கலக்கக் கூடாது.

இவ்வளவு இலக்கணமும் பொருந்தியுள்ளவர்கள், கிடைத்தால் மட்டுமே, பொறுப்பினை மேற்கொள்பவளர்கள், மனதிலே எழும் அய்யப்பாடுகளை நீக்கிக் கொள்ள, சிக்கல்களைப் போக்கிக் கொள்ள, வழி காண்பர். டில்மன், மனதிலே என்னென்ன அய்யப்பாடுகள் எழுந்திருக்கக் கூடும் என்பது பற்றி ஒரு பட்டியல் தயாரித்துப் பார்த்தால், தம்பி! தலை சுற்றும்; அவ்வளவு இருக்கத்தான்

செய்யும். யாரிடம் கலந்து பேசுவார்? அவர் நிறமோ கருப்பு! இருக்கும் இடமோ வெள்ளை மாளிகை!! சூழ உள்ளவர்களோ வெள்ளை ஆதிக்கப் பாதுகாவலர்! மக்களோ இரு பிரிவு; நிறத்தால், இனத்தால்; ஒன்றை ஒன்று பகைத்துக் கொண்டு. இவர் மனதிலே எழும் அய்யப்பாட்டிலே முக்கியமானதோ, நிறம் பற்றிய நினைப்பு அற்று, நீதியாக நேர்மையாக, அரசியல் சட்ட திட்டம் ஒழுங்கு முறை கெடாத வகையில் ஆட்சியை எப்படி நடத்திச் செல்ல முடியும் என்பது பற்றி. இதற்கு யாரிடம் யோசனை கேட்பார்! நீக்ரோ தலைவர்களிடம் கேட்க முனைந்தாலே புருவத்தை நெறிப்பர், பகை கக்குவர்; இனம் இனத்தோடு என்று பழி சுமத்துவர் வெள்ளையர்.

அவர்கள் எதையோ கூறிக்கொள்ளட்டும் என்று எண்ணி நீக்ரோ தலைவர்களுடன்

கலந்து பேசினால், அவர்கள் எந்த விதமான யோசனை கூறுவார்கள்? பெரும்பாலான நீக்ரோ தலைவர்கள்; ”படமுடியாதினித் துயரம்! பட்டதெல்லாம் போதும்’ என்ற மனப்போக்கினராகி விட்டனர், வெள்ளையரின் நிறவெறி அவர்களின் உள்ளத்தில் வெந்தழலை மூட்டிவிட்டது. அவர்கள் நிதானமாக நடந்துகொள்ளச் சொல்லவே மாட்டார்கள்!!

வெள்ளை இனத்தவரிடம் கலந்து பேசினால்? நீக்ரோ மக்களின் ”சாபம்’ தன்னாலே வந்துசேரும். வெள்ளையரின் எடுபிடி என்பார்கள்! இனத்தைக் காட்டிக் கொடுக்கும் கயவன் என்பார்கள்! கூசாமல் பழி சுமத்துவார்கள்.

இரு நிறத்தினரையும் கேட்காமல், இருந்திடின்? இதயம் சுக்கு நூறாகிறது, சிக்கல் நிறைந்த பிரச்சினைகளால்.

தம்பி “கை கூப்பியும் கண்ணீர் பொழிந்தும் கர்த்தரின் அருளைப் பெறப் பாசுரம் பாடியும், அடிமை நான் ஐயனே! கருணை காட்டுவீர்! அறியாமைப் பிடியில் உள்ளேன், தெரியாமல் பிழை செய்தேன், பொறுத்தருளுவீர்! நான் உமது அடிமை, உமது உடமை!’’ என்று கெஞ்சிடும் நிலையில் நீக்ரோக்கள் இல்லை. ரொட்டித் துண்டுகளை வீசினால் விழுந்தடித்துக் கொண்டு ஓடி பொறுக்கி எடுத்துக்கொள்ளும் இழிநிலையை விரும்பிடும் போக்கில் இல்லை. அவர்களின் கண்கள் பொழிய வேண்டிய அளவு கண்ணீரைப் பொழிந்துவிட்டன; வறண்டு விட்டன ; இப்போது அங்கிருந்து கிளம்புவது நீர் அல்ல; நெருப்பு; கோபப் பொறிகள்! கொடுமைகளைத் தாங்கித் தாங்கி அவர்களின் உள்ளம் எரிமலையாகி விட்டது! அவர்கள் இச்சகம் பேசவோ, பச்சைச் சிரிப்பு

சிரித்துக் காட்டி"பணம்' கேட்கவோ தயாரில் இல்லை. அவர்களை நிமிர்ந்து நிற்கச் செய்து விட்டனர், பலப்பல தலைவர்கள்; பல்வேறு வகையான தலைவர்கள், தொடர்ந்து எழுச்சியும் விழிப்புணர்ச்சியும், புரட்சிப் போக்கும் ஊட்டப்பட்டு வரப்பட்டதால், அவர்களை அடக்கி வைப்பதும் முடியாததாகி விட்டது, "ஆராரோ'' பாடி தூங்கவைக்கவும் முடியாததாகி விட்டது; பகட்டு, போலி, பளபளப்பு, பசை இவைகளைக் காட்டி மயங்க வைக்கவும் முடியாததாகி விட்டது, அவர்கள் உரிமையைக் கேட்கின்றனர்; உரத்த குரலில்; நிமிர்ந்து நின்று; நீதியின் பேரால் மட்டுமல்ல, எங்களாலும் எல்லாம் முடியும் என்ற வலிவு காட்டி.

இந்த நிலையினை மிக வேகமானதாக்கிடுவதிலே முனைந்து வேலை செய்த அமைப்புக்களிலே ஒன்றுதான் தம்பி!

நான் முதலிலே குறிப்பிட்டுக் காட்டினேனே, கருப்பு முஸ்லீம் என்ற இயக்கம்,

சட்டம், ஒழுங்கு, நீதி, நேர்மை, உலகம் போக்கு, உயர் தத்துவங்கள் ஆகியவைகளை விளக்கிக் காட்டியவர்களின் குரலைக்கேட்டு, மதிப்பளிக்காத நிறவெறியர்கள் எ-ஜா முகமது என்பவர் துவக்கி நடத்தி வந்த கருப்பு முஸ்-ம் இயக்கத்தவரின் இடியோசை கேட்டு மிரண்டிடலாயினர். டக்ளஸ் டில்மன் காலத்திலே அல்ல தம்பி டக்ளஸ் கதை; நான் குறிப்பிடும் கருப்பு முஸ்லீம் நடைமுறை நிகழ்ச்சி.

"கருப்பு முஸ்லீம்' இயக்கம் வெள்ளை நிறவெறியர் மனதிலே பீதியை மூட்டியதுபோலவே நீக்ரோக்கள் மனதிலே என்றும் இல்லாத ஒரு துணிவை ஊட்டிவிட்டது. எ-ஜா முகமது துவக்கிய இயக்கம், எண்ணற்ற, நீக்ரோக்களை, வெள்ளையரின் ஆதிக்கத்தை

எதிர்த்து நிற்கும் வீரம் பெறச் செய்தது; அவர்கள் ஒரு தனி வாழ்க்கை முறையே அமைத்துக் கொள்ளலாயினர். தனிப் பள்ளிக்கூடங்கள்; அங்காடிகள், தொழி-டங்கள்; பணிமனைகள்! ஓட்டும் வேண்டாம் உறவும் வேண்டாம் இந்த வெள்ளையருடன்! என்று துணிந்து கூறினர். புதியதோர் தன்னம்பிக்கையும் பெற்றனர்.

கிருத்துவ மார்க்கம் இந்தப் பிரச்சினையைத் தீர்த்து வைக்கத் தவறி விட்டது. அமெரிக்க சர்க்கார் தவறிவிட்டது. எனவே, அந்த மார்க்கமும் உமக்கு வேண்டாம். அந்த அரசிடம் பிடிப்பும் வேண்டாம். நீதி வேண்டும்; விடுதலை வேண்டும் சமத்துவம் வேண்டும்! இவற்றை ஒருவரும் தரமாட்டார்கள். நாமாகத்தான் பெற்றுக் கொள்ள வேண்டும். எப்படி? நாம் தனி! தனி இனம்! எனவே தனி அரசு

வேண்டும்! தனி நாடு வேண்டும் என்று கூறிவிடவேண்டும். வெள்ளையருடன் ஒரே அரசில் வாழ்வது ஓநாய்களுக்கு மத்தியில் ஆடுகள் இருப்பதைப் போன்றதே! நாம் யார்க்கும் குடியல்லோம்!

எலிஜாவின் இந்தப் பேச்சு, தத்துவமாகிவிட்டது; இயக்கம் மார்க்கமாகிவிட்டது. நீக்ரோக்களுக்கு என்றுமில்லாத அளவு "தெம்பு' பிறந்துவிட்டது. முஸ்லீம் மார்க்கத்தினை மேற்கொண்டு விட்டதாக இலட்சக் கணக்கானவர்கள் அறிவித்து விட்டனர்.

தம்பி! இதழ்களில் பார்த்திருப்பாய். சென்ற திங்கள் உலகப் புகழ் பெற்றிடும் வெற்றி ஈட்டினான் க்ளே என்ற நீக்ரோ குத்துச் சண்டை மாவீரன்! அவன், தன்னை "முஸ்லீம்' என்றுதான் அறிவித்திருக்கிறான்.

ஏன் கருப்பாகப் பிறந்தோம் என்று ஏங்கிக் கிடந்தவர்கள் எழுந்து நின்று, ஆமாம்! கருப்பு! அதனால் என்ன? கருப்பு, சிறப்பு! என்று முழக்கம் எழுப்புகிறார்கள் எலிஜா துவக்கிய இயக்கம் காரணமாக.

இப்படி! இப்படி! எல்லோரும் வாருங்கள்! வெள்ளை நிறத்தார்களைப் பற்றிப் பேசப் போகிறேன்.

பேசு! பேசு சகோதரா! பேசு! ஒன்று கேட்கிறேன், சொல்லுங்கள் பார்ப்போம். நல்லது செய்த ஒரு வெள்ளையனைப் பார்த்த துண்டா, நீங்கள்?

இல்லை! இல்லை!

போகட்டும், உங்கள் பேரில் பூட்டப்பட்டுள்ள பொருளாதாரத் தளைகள் பற்றித் தெரியுமா, உங்களுக்கு, சொல்லுகிறேன். காலையிலே எழுந்திருக்கிறீர்கள், படுக்கையை விட்டு; எ-

களும் கரப்பான் பூச்சிகளும் ஓடுகின்றன உங்கள் படுக்கையிலிருந்து. நான் சொல்வது சரிதானே?

உண்மைதான்! உண்மைதான்!

ஓடிப்போய் உங்கள் குழந்தையைப் பார்க்கிறீர்கள்; குழந்தையின் காதுகளை எ-கடித்துத் தின்று விட்டதா என்று பார்ப்பதற்காக! உண்மை தானே! சரிதானே நான் சொல்லுவது?

உண்மை! உண்மை!

கூரையிலிருந்து சுண்ணாம்பு அடை மேலே விழுகிறது. ஓட்டைச் சட்டியிலே தண்ணீர்! அதைக் கொண்டு முகத்தைக் கழுவிக் கொள்கிறீர்கள். அப்படித்தானே?

ஆமாம் ஐயா! ஆமாம்! அப்படித்தான்.

தூக்கத்தைக் கழுவி விட்டுவிட்டு, கந்தல்

ஆடையை உடுத்திக் கொள்ளுகிறீர்கள்; கடனுக்கு வாங்கியது; கடனைக் கட்டி தீர்க்கவில்லை இன்னும்; உண்மைதானே?

ஆமாம்! சொல்லு ஐயா! சொல்லு! கொல்ல வேண்டும் வெள்ளையர்களை.

பிறகு, அதற்குப் பிறகு, செல்லுகிறீர்கள். . . . வெள்ளை எஜமானனிடம் வேலை செய்ய. . . . அயிசன்பர்க்! அவன் வெயர் என்று வைத்துக் கொள்ளுங்கள்; வெள்ளை எஜமானன்.

ஆமாம்! வெள்ளை எஜமானனிடம் வேலை செய்கிறோம்.

எட்டு மணி நேரம் வேலை! வாரம் ஐந்து நாள்! மொத்தம் 44 டாலர் கூலி பெறுகிறீர்கள்.

ஆமாம் ! 44 டாலர் !

வியர்வை சிந்தச் சிந்த நீங்கள் உழைத்து இந்த 44 டாலர் சம்பாதிக்கிறீர்களே இதைப்

பார்த்துக் கொண்டிருக்கிறானே அயிசன் பர்க், அவன் 440 டாலர் சம்பாதிக்கிறான், நான் சொல்வது சரியா? தவறா?

முழுக்க முழுக்கச் சரி! உண்மை! அப்படிச் சொல்லு, அதை எல்லாம் சொல்லு.

கவலைப்படாதே சகோதரா! கவலைப்படாதே! அப்பட்டமான உண்மையைத்தான் சொல்வேன். எல்லோருக்கும் விளங்கும்படி, உள்ளதை உள்ளபடி சொல்லுவேன். நாளெல்லாம் உழைக்கிறீர்கள். பிறகு இங்கே வருகிறீர்கள் - வந்து துணி வாங்குகிறீர்கள்; யாரிடம்? கோசன் பர்க்கிடம்!

ஆமாம்!

அயிசன்பர்க்கிடம் வேலை செய்து வாங்கிய கூலியிலே ஒரு பகுதியைத் துணிக்காக கோசன் பர்க்கிடம்

கொடுக்கிறீர்கள். பிறகு? நகை நட்டு வாங்குகிறீர்கள், கோல்ட் பர்கிடம்!

ஆமாம் . . . அப்படித்தான் . . .

வீட்டு வாடகை கட்டுகிறீர்கள். . . பைன்பர்க்கிடம் ஆமாம் ஐயா! ஆமாம்!

கடன் வாங்குகிறீர்கள். கம்பெனியிடம்! கம்பெனி நடத்துவது யார்? வீன் பர்க்!

அப்படிச் சொல்லு! அதைச் சொல்லு!

ஆனால்; உங்களுக்கு எது தெரியவில்லை என்றால், நான் சொல்லிக்கொண்டு வந்தேனே அயிசன்பர்க், கோசன்பர்க், பைன்பர்க், கோல்ட்பர்க், வீன்பர்க் இவர்கள் எல்லாம் அண்ணன் தம்பிகள்! ஒரே இனம்!! உழைக்கிறீர்கள்; கிடைப்பதை இந்தக் கும்பல் பறித்துக் கொள்கிறது. இதுதான், நான் சொன்ன பொருளாதாரத் தளைகள், புரிகிறதா!!

ஒரே சிரிப்பொலி! ஆரவாரம்!

தம்பி! நீக்ரோக்கள் குடி இருக்கும் பகுதி ஒன்று? நியூயார்க் நகரில்; ஹார்லாம் எனும் பெயர், அந்த குப்பை மேட்டுக்கு; அங்கு தெருக் கோடியில் அடிக்கடி நடைபெறும் கூட்டம் பற்றியது நான் குறிப்பிட்டுக் காட்டியது. லோமாக்ஸ் என்பவர், கருப்பு முஸ்லீம்கள் பற்றிய விவரம் அளித்து எழுதியுள்ள ஏட்டில், இந்த நிகழ்ச்சி படமாக்கப்பட்டிருக்கிறது.

இந்த விதமான பிரசாரம் நீக்ரோ மக்களிடம் என்ன விதமான மனப்பான்மையைக் கிள்ளிவிட்டிருக்கும்! அந்த மனநிலையில் உள்ள நீக்ரோக்களை, ஒரு நீக்ரோ குடியரசுத் தலைவரான பிறகும் அடக்கி வைத்திட முடியுமா! அத்தனைக் கொடிய இனத் துரோகம் செய்திட யாருக்காகிலும் துணிவு பிறந்திடுமா!

ஆனால் வற்புறுத்துகிறார்கள் டில்மனை டர்னரைட் இயக்கத்தைத் தடை செய்யும் சட்டம் பிறப்பிக்கும்படி.

இந்த டர்னரைட் இயக்கந்தான், தங்களுக்காக உண்மை யாகப் பாடுபட்டு வருகிறது; அதன்மீது வேண்டுமென்றே வெள்ளையர்கள் பழி சுமத்தி ஒழித்துக்கட்டப் பார்க்கிறார்கள் என்று நீக்ரோக்கள் எண்ணிக் கொண்டுள்ளனர்.

ஆனால் டில்மனைச் சூழ உள்ள வெள்ளைப் பேரதிகாரிகளோ, டர்னரைட் இயக்கம் கம்யூனிஸ்டு இயக்கம், பலாத்கார இயக்கம் என்று வாதாடுகிறார்கள். ஒரு நீக்ரோ குடியரசுத் தலைவராகி விட்டதால் அந்த இயக்கம் தலை துள்ளி ஆடுகிறது. ஒரு நீக்ரோ, நீக்ரோ இயக்கத்திற்குத் தடை விதிக்க மாட்டார் என்ற தவறான நம்பிக்கையால்; ஆகவே தாங்கள், தங்கள்

நிறத்தை மறந்து, அமெரிக்க நாட்டுக் குடியரசுத் தலைவர் என்பதை நினைவிலே கொண்டு, அமெரிக்காவில் பயங் கரத்தையும் பலாத்காரத்தையும் மூட்டிவிட்டுப் பாழ்படுத்தும் டர்னரைட் இயக்கத்திற்குத் தடை விதிக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறார்கள்.

நீக்ரோ தலைவர்களோ டர்னரைட் இயக்கத்தைத் தடை செய்தால், இனத்துரோகி என்ற இழிவை ஏற்றுக்கொள்ள வேண்டி வரும் என்று எச்சரிக்கிறார்கள். டில்மன் மிரட்டல் எச்சரிக்கை இவைகளைப் பொருட்படுத்தவில்லை. எந்த முடிவு எடுப்பதாக இருந்தாலும், தீர யோசித்து நியாயமானதுதான், அரசியல் சட்ட திட்டத்துக்கும் ஒழுங்குக்கும் ஏற்றதுதான் என்று தெளிவாக மெய்ப்பிக்கப்பட்டால்தான் தடைவிதிக்க முடியும் என்ற கருத்துடன் இருந்தார்.

பலாத்கார இயக்கம் என்பதற்கும்

கம்யூனிஸ்டு தொடர்பு உள்ள இயக்கம் என்பதற்கும் ஆதாரம் வேண்டும்! பிறகுதான் தடைவிதிக்க முடியும் என்று அறிவிக்கிறார்; ஆத்திரம் பீறிட்டுக்கொண்டு வருகிறது வெள்ளைப் பேரதிகாரிகளுக்கு.

நமது யோசனையை மீறுகிறான் !

நம்மை மதிக்க மறுக்கிறான் !

கருப்பருக்காகப் பரிவு காட்டுகிறான் !

உண்மையிலேயே ஆட்சி செய்ய நினைக்கிறான் !

வெள்ளை மாளிகையில் இருக்கிறோம் என்று இறுமாப்புக் கொள்கிறான்.

மாளிகையின் பெயர் வெள்ளை மாளிகை ! இவன் நிறம் கருப்பு !

அதையே மறந்து விட்டான். இவ்விதம்

வெள்ளைப் பேரதிகாரிகள் எண்ணி இருந்திருப்பர், எரிச்சலாகத்தான் இருந்திருக்கும்.

நீக்ரோக்களின் உரிமைக் கிளர்ச்சியை இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு வெற்றிகரமாக நடத்திச் சென்ற நீக்ரோ தலைவர் மார்ட்டின் லூதர் கிங் என்பார், ஒரு முறை, அமெரிக்கக் குடியரசுத் தலைவராக இருந்து மறைந்த மாவீரன், அவனிபுகழ் கென்னடியிடம் தொலைபேசி மூலம் கேட்டாராம், "குடியரசுத் தலைவர் அவர்களே! நிறபேதம் ஒழிக்கப்பட வேண்டும் என்பதிலே அக்கறை காட்டும் தாங்கள் வீற்றிருக்கும் மாளிகையின் பெயரே வெள்ளை மாளிகை என்று இருக்கிறதே! பொருத்தமாக இல்லையே'' என்று; கென்னடி,"அது நெடுநாட்களாக இருந்து வரும் பெயர்; வேறு பொருள் கொள்ளத் தேவையில்லை'' என்று

பதிலளித்தாராம்.

ஆனால் நிறவெறியர்கள், அவ்விதம் கருதுவதில்லை. வெள்ளை மாளிகை! என்ற பெயர் பொருத்தம் பார்த்து, பொருள் அறிந்து வைக்கப்பட்டதாகவே கருதுகின்றனர், அதற்கேற்ற படியே நடந்து கொள்கின்றனர்.

அந்த இயல்பினர், டில்மன் தன்னிச்சையாக நடக்கத் தலைப்படுவது அறிந்து, இனியும் விட்டுவைக்கக்கூடாது; தீர்த்துக் கட்டிவிட வேண்டியதுதான் என்று முடிவு செய்தனர். அவர்களின் முடிவைத் துரிதப்படுத்துவது போல மற்றோர் சம்பவம் நடைபெற்றது. "டர்னரைட் இயக்கம்' பற்றிய தகவல்களை விசாரித்தறிந்து"அறிக்கை' அளிக்கும்படி ஒருவரை, டில்மன் நியமித்தார்.

நாங்கள் சொல்லுகிறோம்; எங்கள் வார்த்தையை நம்பாமல்

விசாரணைக் கமிட்டி நியமிக்கிறாரா! அவ்வளவுக்கு வளர்ந்துவிட்டாரா! என்று கோபம் கொப்பளித்தது வெள்ளைப் பேரதிகாரிகளுக்கு.

"டர்னரைட் இயக்கம்' பற்றிய விசாரணை நடத்தும்படி நியமிக்கப்பட்டவர் யார் என்பது தெரிந்தும், அந்தப் பேரதிகாரிகளின் ஆத்திரம் மேலும் சீறிக்கொண்டு எழுந்தது ஏன்? என்று கேட்கிறாய் தம்பி! கொஞ்சம் பொறுத்துக் கொள்ளேன் அடுத்த கிழமைவரையில்!

அன்புள்ள

அண்ணாதுரை

27-2-66

40. வெள்ளை மாளிகையில் - (5)

ஆதிக்கத்தின் கருவி
உரிமைப் போர் - ஒரு தொடர்கதை
மால்கோமின் "ஆள்வெறுப்பு'க் கோட்பாடு
டில்மனின் பொறுப்புணர்ச்சி
புயல் வெடித்தது!

தம்பி,

ஆதிக்கம் செலுத்தும் போக்கு ஒவ்வோர் நாட்டில் ஒவ்வோர் விதமான வடிவம் கொள்ளுகிறது; கருவியைத்தேடிப் பெற்றுக் கொள்கிறது. வடிவமும் கருவியும் வகையிலே பலவாக இருப்பினும் நோக்கம் மட்டும் ஒன்றுதான்! எளியோர் தமை வலியோர் சிலர் வதை புரிவதுதான்! வலியோராகச் சிலர் இருப்பதற்குக் காரணம் பலப்பல;

கட்டத்துக்குக் கட்டம், நாட்டுக்கு நாடு இக்காரணம் வேறு வேறாக இருந்திடும்.

இனம், மதம், மொழி, நிறம், பணம் என்பதை ஒவ்வொன்றும் ஒவ்வோர் காலத்தில், ஒவ்வோர் நாட்டில், ஆதிக்கக் கருவியாகப் பயன்பட்டு வருவதைக் காண்கிறோம். இந்த ஆதிக்கத்தின் எந்த வடிவத்தை ஆராய்ந்திடினும், ஒரு பொதுவான பாடம் கிடைத்திடும். அதற்காகவே ”நிறம்’ காரணமாகப் புகுத்தப்பட்டுள்ள ஆதிக்கத்தைக் குறித்துச் சிறிதளவு விரிவாகவே விளக்கிக் கொண்டு வருகிறேன். நிறம் என்பது கருவியாக அமைந்திருப்பதுபோல, இனம், மதம், பணம் என்பவைகளிலே ஏதேனும் ஒன்று கருவியாக அமைந்திடினும், கொடுமையின் அளவு குறைவானதாக இருந்திடாது. எனவேதான், எங்கோ அமெரிக்காவில் கப்பிக் கொண்டுள்ள நிறவெறி பற்றிய

விவரங்களைத் தெரிந்து கொள்வது வேறுவிதமான கருவியின் துணையுடன் இருந்து வரும் ஆதிக்கம் பற்றி எண்ணிடவும், பாடம் பெற்றிடவும் வழி காட்டும் என்ற எண்ணத்துடன் இத்தனை விரிவாக எழுதிக் கொண்டிக்கிறேன். பிரச்சினை எங்கோ நெடுந் தொலைவில் இருப்பது என்றோ, நமக்குச் சம்பந்தமில்லாதது என்றோ எண்ணிக் கொண்டு, பெற வேண்டிய பாடத்தினை இழந்துவிடக் கூடாது.

மதவெறி குறையவில்லை, ஜாதிப்பித்தம் போகவில்லை, குலச்சண்டை ஒழியவில்லை என்று பிறநாடுகள் குறித்து மிகக் கேவலமாகப் பேசும் வாடிக்கை பொதுவாக மேனாட்டினருக்கு உண்டு. மேனாட்டினரில் புரட்சிக் கருத்துக்களையும் புதுமுறை அரசியலையும் மேற்கொண்டவர்கள் அமெரிக்கர்கள். அமெரிக்காவுக்கு "மே

பிளவர்' என்ற கப்பலில் ஐரோப்பிய நாடுகளிலிருந்து, மதக் கொடுமை, அரசியல் ஆதிக்கக் கொடுமை ஆகியவற்றிலிருந்து விடுபட, கருத்துச் சுதந்திரம் பெற்றிட, மனிதத் தன்மையைப் போற்றிப் பேணிடக் கிளம்பியவர்கள்,"அமெரிக்கர்கள்,' ஆனபிறகு, கொடுமையான ஒரு ஆதிக்கத்தை, நிறவெறியைக் கருவியாகக் கொண்டு புகுத்தி விட்டனர்; அதனை மிருகத்தனமாக இன்றும் நடத்திக் கொண்டு வருகின்றனர்.

இந்த இயல்பு, அமெரிக்கர் மட்டுமே பெற்றுள்ளது என்று எண்ணிக்கொள்ளக் கூடாது.

ஆதிக்கத்தை எதிர்த்து நின்று ஒழித்தவர்கள், கொடுமை களைத் தாக்கித் தகர்த்தவர்கள், பிறகு தாமே ஆதிக்கம் செலுத்துவோராகவும், கொடுமையாளர்களாகவும் மாறி

விடுகின்றனர். எப்போது? தங்கள் நிலை, வலுவாகி விட்டது என்ற துணிவு பிறந்ததும். இதற்கான சான்றுகள் வரலாற்றுச் சுவடிகளில் நிரம்ப உள்ளன. சுவடிகளைக்கூடப் புரட்டிக் கொண்டிருக்கத் தேவையில்லை. நம்மைச் சுற்றிலும்கூட அந்த நிலைமை இருந்திடக் காண்கிறோம்.

பேச்சுச் சுதந்திரம், எழுத்துச் சுதந்திரம், கூடிக் குறைகளை எடுத்துக்கூறும் சுதந்திரம், கிளர்ச்சிச் சுதந்திரம், என்று மேடை அதிரப் பேசியவர்கள், ஆர்வம் கொந்தளிக்கப் பேசியவர்கள், ஆர்வத்தை மற்றவர்களுக்கும் ஊட்டியவர்கள்தான், காங்கிரஸ் கட்சியினர். ஆனால், அவர்களின் இன்றைய போக்கு? எந்த ஆதிக்கத்தையும் கொடுமையையும் எழுச்சியுடன் எதிர்த்து நின்றனரோ, அதே விதமான ஆதிக்கத்தையும் கொடுமையையும் கூசாமல், தட்டுத்தடங்கல் இல்லாமல்

செய்திடக் காண்கின் றோமே? இந்த பதினெட்டு ஆண்டுகளில் அடக்குமுறையை எதிர்த்து நின்ற இந்த ஆற்றல்மிக்கோர், தடைச் சட்டங்களைத் தூளாக்கிய இந்தத் தீரர்கள், சிறைச்சாலை என்ன செய்யும் என்று சிந்து பாடிய இந்தச் சீலர்கள், வெள்ளையராட்சியிலே வீசப்பட்ட எந்த அடக்குமுறைக் கருவியை விட்டு விட்டார்கள்? அதே குண்டாந்தடி; புதிதாகப் பித்தளைப்பூண் போட்டிருக் கிறார்கள். அதே துப்பாக்கிச் சனியன்; மாணவர்களின் மார்பினைக்கூடப் பதம் பார்க்கிறது; அதே குண்டுகள்; முன்பு விரட்டுவதற்கு; இப்போது சாகடிப்பதற்கு; அதே சிறை, அதே 144; அதேவிதமான அவசரச் சட்டங்கள், ஆள்தூக்கிச் சட்டங்கள், ஊரடங்குச் சட்டங்கள்; உடமையைப் பறிக்கும் சட்டங்கள்; நாடு கடத்தும் சட்டங்கள்; நாக்கறுப்புச் சட்டங்கள்; ஒன்றுகூட விட்டுவிட

வில்லை; ஆங்கில ஏகாதிபத்தியம் தனது பாசறையில் வைத்திருந்த கருவிகள் அனைத்தையும் இன்று காங்கிரசார், பயன்படுத்து கின்றனர்; உரிமைக் குரலை அடக்கிட; கிளர்ச்சிகளை ஒழித்திட!! வெள்ளையர்கள் கொண்டிடாத அளவு துணிவுடன், நம்பிக்கையுடன்!! ஆயினும் இவர்களேதான் ஐம்பதாண்டுகளுக்கு மேலாக ஆர்ப்பரித்தனர், அடக்குமுறை ஒழிக! அநியாயச் சட்டங்கள் ஒழிக! என்று.

எனவேதான் தம்பி! உரிமைக்காகப் போராடுவது, ஒரு தொடர் கதையாக, முடிவுபெறாத நீண்ட நெடுங்கதையாக இருந்து வருகிறது. விழிப்புடன் இருந்து வந்தாலன்றி, எழுச்சியுடன் இருந்து வந்தாலன்றி ஆதிக்கம் ஓசைப்படாமல் மறுபடியும் இடம் பிடித்துக் கொண்டுவிடும்! கதிரவன் ஒளி நித்த நித்தம் தேவைப் படுகிறது அல்லவா,

கப்பிக்கொண்டுள்ள இருளை நீக்கிட அது போல! உரிமை வாழ்வினைப் பெற்றிட மனிதகுலம் ஓய்வின்றி உழைத்தபடி இருந்தாக வேண்டி வருகிறது.

அமெரிக்காவில் குடியேறியவர்கள், கொடுங்கோலர்களின் வழிவழி வந்தவர்கள் அல்லர்; கொடுங்கோலை எதிர்த்து நின்றவர்கள். எனினும் அவர்கள் தங்களைக் கொடுங்கோலர் களிடமிருந்து விடுவித்துக் கொண்டான பிறகு, தாமே கொடுமைகளைப் புரியத் தொடங்கி விட்டனர்; அந்தக் கொடுமைகளை எதிர்த்து நிற்பவர்களை அழித்தொழிக்க, தமது வலிவினைப் பயன்படுத்தி வந்தனர். அந்தக் கொடுமையிலே ஒன்றுதான் நிறவெறி, இதனை எதிர்த்து நின்ற இயக்கங்கள் பலவற்றிலே ஒன்று டர்னரைட் இயக்கம். இந்த இயக்கம், பலாத்கார இயக்கமா, இரத்தவெறி

கொண்டலையும் இயக்கமா என்பதனைக் கண்டறிய டக்ளஸ் டில்மன் நியமித்தவர், நிறவெறியை எதிர்த்து நின்ற மற்றோர் இயக்கத்தை நடத்திச் செல்பவர்.

பகைவனிடம் பஞ்சாங்கம் பார்ப்பது என்பார்களே அதுபோலல்லவா இருக்கிறது இது என்று எண்ணி, வெள்ளைப் பேரதிகாரிகள் ஆத்திரம் கெண்டனர்.

டக்ளஸ் டில்மன், அமெரிக்கக் குடியரசுத் தலைவராவதற்கு முன்பு வசித்து வந்த வீட்டிலே, குடிஇருந்து வந்தார், ஒரு நண்பர். அவர் அமைதி பொறுமை, பொறுப்புணர்ச்சி, சட்டம், ஒழுங்குமுறை ஆகியவைகளுக்கு உட்பட்டு, நீக்ரோக்களின் உரிமைக்காகவும் நல்வாழ்வுக்காவும் பணியாற்றி வர ஒரு அமைப்பு கண்டார். ஆனால் அந்த அமைப்பு, ஆற்றலற்றது. பிரச்சினையின் அடிப்படையைக் கவனிக்க மறுப்பது,

கைகூப்பியும் கண்ணீர் பொழிந்தும், கர்த்தரிடம் முறையிட்டும் கருணையைக் கேட்டுப் பெற்றும் காரியமாற்றிட எண்ணிடும் கிழட்டுத்தனம் கொண்டது; ஆகவே அந்த அமைப்பு போதாது என்ற எண்ணம் கொண்டவர்கள், அமைதியுடன் பணியாற்றி வந்த அமைப்பிலிருந்து விலகி, புரட்சிகரமான, புதிய அமைப்பை ஏற்படுத்திக் கொண்டனர். அந்த அமைப்பின் பெயர்தான் ”டர்னரைட் இயக்கம்’ என்பது.

தீவிரம் நாடுவோர், புரட்சி முறை விரும்புவோர், புதிய விறுவிறுப்பு வேண்டுவோர், ஒவ்வோர் அமைப்பிலும் இருக்கத்தான் செய்வர். குருத்தோலைகள் பழுத்த ஓலைகளைக் கேலி செய்திட முனைவது விந்தை அல்ல; நடைமுறை. தம்பி! நான் குறிப்பிட்டேனே, வெள்ளையரைத் தூக்கிலிடுவதாக நாடகம் நடத்திடும் விதமான

புரட்சி இயக்கம், கிருத்துவ மார்க்கத்தையே உதறித் தள்ளிவிட்டு, புதிய மார்க்கத்தை மேற்கொண்ட இயக்கம், கருப்பு முஸ்லீம் இயக்கம்.

வெள்ளையர் நடுநடுங்க, கருப்பர் தலை நிமிர்ந்து நின்றிடச் செய்த இயக்கம், அதுவே, பிறகு மந்தமானதாக - பிற்போக்குத் தனமானதாக - கிழட்டுத்தனம் மேலிட்டு விட்டதாகக் கருதப்பட்டு, புதியதோர் அமைப்பு, கருப்பு தேசிய இயக்கம் என்ற பெயருடன், கருப்பு முஸ்லீம் எனும் அமைப்பிலே சட்டாம் பிள்ளையாக இருந்துவந்த
மால்கோம் என்பவரால் துவக்கப்பட்டது.

கருப்பு முஸ்லீம் அமைப்பின் கர்த்தாவான எலிஜா முகமது வெள்ளையரிடம் மூளையை அடகு வைத்து விட்டார் போராடும் இயல்பை இழந்துவிட்டார் என்று குற்றம் சாட்டிவிட்டு, புதிய அமைப்பைத் துவக்கிய

மால்கோம், தனது இயக்கம், புரட்சிகரமானது என்பதனைக் காட்டிட வெள்ளை இனத்தவரை வெறுக்கக் கற்றுக்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தினார்! அதிலே பெரும் அளவு வெற்றியும் கண்டார்.

பண்பறிந்து ஒழுகுதல், பகைவனுக்கும் இரங்குதல், படிப்படியாக முன்னேறுதல், மனதை மாற்றுதல் என்பவைகள் கோழைகளின் முறைகள், இரத்தத்திற்கு இரத்தம்! கொடுமைக்குக் கொடுமை! பழிக்குப்பழி! என்பதே ஆற்றல்மிக்கோர் மேற் கொள்ள வேண்டிய முறை என்று எடுத்துக் கூறிய மால்கோம் எந்த அளவுக்கு வெறுப்பை ஒரு தத்துவமாக்கிக் கொண்டார் என்றால், தம்பி! ஒரு விமான விபத்தில் 120 வெள்ளையர் இறந்துபட்ட ஒரு நிகழ்ச்சியை, அல்லாவின் அருளால் கிடைத்த அகமகிழ்ச்சி தரும் ஓர் நற்செய்தி என்று அறிவித்திடும் அளவுக்கு!

இப்படி வெறுப்புணர்ச்சியை வளர்த்திடலாமா என்று கேட்டவர்களுக்கு மால்கோம், "தவறு என்ன! வெறுப்பை வெறுப்பதிலே தவறு என்ன! பல நூற்றாண்டுகளாக கொடுமை களைச் செய்து குவித்துள்ள வெள்ளையர் மீது வெறுப்பு கொள்வது தர்மம் - நியாயம்!! என்று வாதிட்டாராம்.

வெள்ளையர்கள் எல்லோரும் பேய்கள் என்று கண்டிக்கிறீரே, அப்படியானால் ஏசுநாதரும் பேய்தானா? என்று ஒருவர் கேட்டபோது, மால்கோம் தட்டாமல் தயங்காமல் பதிலளித்தாராம்; "ஏசுநாதர் வெள்ளையர் என்று யாரய்யா உமக்குச் சொன்னார்கள்? ஏசுநாதர் கருப்பர், வெள்ளையர் அல்ல'' என்று.

உலகிலே அவ்வப்போது உலவிய புகழ்மிக்கார் அனைவருமே கருப்பர்; வெள்ளையர் அல்ல என்று வாதாடினார்

மால்கோம்.

கருப்பர், மனித இனத்திலேயே மட்டம், கர்த்தர் வெள்ளை மனிதர்களுக்கு உழைத்திடுவதற்கென்றே படைத்தார் மனித உருவு கொண்ட இந்த மிருகங்களை - என்று பேசிய வெள்ளைப் பாதிரிமார்கள் உண்டு! அந்த வெறியை அடக்கப் பிறந்த வெறி என்று கூறலாம் மால்கோம் போன்றார் ஊட்டிவிட்ட வெறுப்புணர்ச்சி.

இந்த வெறுப்புணர்ச்சி, கட்டு திட்டம், வரைமுறை சட்டம் ஒழுங்கு என்பவைகளை மதித்திடத்தக்க மனப்போக்கைத் துளியும் ஏற்படுத்தாதல்லவா? சுடு! இல்லையானால் சுடப்படுவாய்! கொல்லு! இல்லையானால், கொல்லப்படுவாய்! கொளுத்து! இல்லை யானால் கொளுத்தப்பட்டு விடுவாய்! வெட்டு! இல்லையானால் வெட்டப்படுவாய்! தட்டு! திறக்க மாட்டார்கள்! உடை! தன்னாலே வழி

திறந்து காணப்படும்! கேள்! கொடுக்க மாட்டார்கள்! பறித்துக் கொள், தடுத்திட இயலாது!! இந்தவிதமான பலாத்காரம் வெடித்துக் கிளம்பிற்று.

உரிமை, சமத்துவம் கேட்டுக் கேட்டு அலுத்துப்போய் விட்டது; வெள்ளையர் நாட்டில் கருப்பருக்கு உரிமையும் சமத்துவமும் கிடைத்திடாது; ஓநாய்களுக்கு மத்தியில் ஆடுகள் நிம்மதியாக வாழ்ந்திட முடியாது! ஆகவே அமெரிக்காவில் ஒரு பகுதியை, "கருப்பர் நாடு' என்று ஆக்கி அமைத்திடுக!! அங்கு கருப்பர், தமது தேசீயத்தை, தமது நெறியை அமைத்துக் கொள்வார்கள். அஃது இல்லையெனில், கருப்பர் - வெள்ளையர் பூசல் இருந்தபடியே இருக்கும்; புரட்சி பூத்தபடி இருக்கும்; இரத்தம் பீறிட்டுக் கிளம்பியபடிதான் இருக்கும்; என்று மால்கோம் போன்றார் முழக்கமிட்டனர். இந்த முழக்கம்

வெள்ளையரின் மனதிலே அச்சத்தை மூட்டி விட்டது! இது அழிக்கப்பட வேண்டிய ஆபத்து என்று அலறினர். அப்படிப் பட்ட ஆபத்து இந்த டர்னரைட் இயக்கம் என்று விவரம் விளக்கம் அளித்து, அதனைத் தடை செய்யும்படி பணித்தனர் வெள்ளைப் பேரதிகாரிகள்; குடியரசுத் தலைவராகி விட்ட அந்தக் கருப்பரோ, காரணம் கண்டறியாமல், குற்றங்கள் மெய்ப்பிக்கப்படாமல், தடைசெய்ய முடியாது என்று கூறிவிட்டு, கருப்பரின் உரிமைக்காக ஒரு அமைப்பினை நடத்திக் கொண்டு வந்த தன் நண்பர் ஒருவரை, உண்மையைக் கண்டறிய நியமித்தார் என்றால், ஆத்திரம் பீறிட்டுக் கொண்டு கிளம்பாமலிருக்குமா! கொதித்தனர்! ஆனால் டில்மன் கலக்கம் கொள்ளவில்லை; மரியாதையாக; ஆனால் உறுதி தளராமல் பதிலளித்தார்.

தம்பி! டில்மன் காட்டிய அமைதி கலந்த உறுதி என் மனதை வெகுவாக ஈர்த்தது; பலன் தரத்தக்க, நீண்ட காலம் நிலைத்து நிற்கத்தக்க வெற்றியினை ஈட்டிட விரும்புவோர் எத்தகைய போக்கை மேற்கொள்ள வேண்டும் என்பதற்கான பாடம் பெற்றிடச் செய்கிறது டில்மன் காட்டிய உறுதி, கலங்காத தன்மை., வீண் வாதிடாமை, விளைவு பற்றி பீதி கொள்ளாமை, நேர்மை பிறழாமை ஆகிய இயல்புகள், எளிதாகப் பெற்றுவிடக் கூடிய இயல்புகளா அவை!!

வேறோர் ஏட்டிலே பார்த்தேன் தம்பி! டர்னர் என்ற கருப்பு இனத் தீரன் ஒருவனைப் பற்றிய விவரத்தை. இர்விங்வாலஸ் எழுதிய "மனிதன்' என்ற ஏட்டில்,"டர்னரைட் இயக்கம்' என்று குறிப்பிட்டிருக்கிறார்; டர்னர் என்ற புரட்சிக்காரரை நினைவிலே கொண்டுதான் வாலஸ் கருப்பரின் விடுதலை இயக்கத்துக்கு

டர்னரைட் இயக்கம் என்று பெயரிட்டார் போலும்.

நான் படித்த மற்றோர் ஏட்டில், நாட்டர்னர் என்ற புரட்சியாளன் பற்றிய குறிப்பு, நெஞ்சினை உருக்குவதாக அமைந்திருக்கிறது. அந்த ஏடு கதைப் புத்தகம் அல்ல; உண்மை நிகழ்ச்சிகளின் தொகுப்பு. கருப்பரின் விடுதலைக்காக ஆர்வத்துடன் பாடுபட்ட நாட்டர்னர் என்ற நீக்ரோ 31 வயதினன் தூக்கிலே தொங்கவிடப்பட்டபோது; "கருப்பு வழிகாட்டி"'ஞானாசிரியன்'; "அவதார புருஷன்' என்றெல்லாம் புகழாரம் சூட்டினர், நீக்ரோ இனத்தவர்; வெள்ளை நீதிபதிகளோ அவன் கழுத்திலே சுருக்குக் கயிற்றினை வீசினர்; குடி சூது, பொய், வஞ்சகம் எனும் எந்த விதமான கெடுமதியும் அற்றவன் இந்த விடுதலை வீரன்.

இவன் மனதிலே கொழுந்துவிட்டு எரிந்து

வந்தது ஒரே ஒரு ஆர்வம், நீக்ரோக்கள் விடுதலை பெற வேண்டும், நிறவெறி ஒழிய வேண்டும் என்பது.

நிறவெறி ஒழிய மறுத்தது; அது கண்டு வெகுண்டெழுந்த நாட்டர்னர் நிறவெறியை விட மறுக்கும் வெள்ளையர்களை ஒழிப்பது என்று துணிந்தான், 1831-ம் ஆண்டு ஆகஸ்ட்டுத் திங்கள் 21-ம் நாள், புரட்சியை நடத்தினான். அவனுக்குத் துணை நின்றவர்கள் ஆறே ஆறு பேர்; துவக்கத்தில், பிறகோ வெள்ளையர்கள் வெடவெடக்கும் அளவுக்கு வளர்ந்தது பலாத் காரம். வெள்ளையர் வெட்டி வீழ்த்தப்பட்டனர்! பிடிபட்டான்; தூக்கிலிடப்பட்டான் டர்னர்!

டர்னர் கொல்லப்பட்டான்; ஆனால் அவன் நடத்திய பலாத்காரப் புரட்சியால் வெள்ளையர் மனதிலே மூண்டு விட்ட பீதி மடிய ஆண்டு பல ஆயினவாம். எந்த நேரத்தில் எந்தப் பக்கம்

இருந்து, எந்தக் கருப்பன் கிளம்பி, குத்திக் கொல்லுவானோ, வெட்டி வீழ்த்துவானோ, சுட்டுப் பொசுக்குவானோ என்ற பீதி.

டர்னர் தூக்கிலே போடப்பட்டு ஆண்டு இருபது கழிந்த பிறகும் அந்தப் பகுதி வெள்ளையர்கள் மனதில் அந்தப் பீதி இருந்து வந்ததாம்!

டர்னரைட் இயக்கம் என்ற உடன் வெள்ளையர்கள் மனதில் இந்த டர்னர் பற்றிய நினைவும், அதன் தொடர்பாக மருட்சியும் கிளம்பத்தானே செய்யும். எனவே டர்னரைட் இயக்கத்தைத் தடை செய்ய டில்மன் மறுத்ததும் வெள்ளைப் பேரதிகாரிகள், அழிவை அரசபீடத்தில் அடர்த்தி விட்டோம் என்ற அச்சம் கொண்டனர்.

என்ன இருந்தாலும் டில்மன், கருப்பு இனமல்லவா! வெள்ளைப் பேரதிகாரிகள்

எத்தனை வற்புறுத்தினாலும், நீக்ரோ இனத்துக்குத் துரோகம் இழைத்திட, சொந்த இனத்தைக் காட்டிக் கொடுக்க மனம் வருமா! தனது இரத்தத்தின் இரத்தம்! சதையின் சதை! தனது இனம் அந்த நீக்ரோ இனம் தன்மானத்துடன் வாழ்ந்திட உழைத்து வரும் ஒரு இயக்கத்தை ஒழித்துக்கட்ட டில்மன் எப்படி ஒப்புவார். நிமிர்ந்து நின்று மறுத்துவிட்டார்! அது அல்லவா வீரம்! அவனல்லவா மனிதன்! பதவி கொடுத்து, பக்கம் நின்று பசப்பு காட்டி பணிய வைத்திடலாம் என்று எண்ணினர் போலும், டில்மன் பதவி கண்டு பல்லிளிப்பவன் அல்ல! அறிவு மிக்கோன்! ஆற்றல் மிக்கோன்! இனப்பற்று கொண்டோன்! ஆகவே தான், டர்னரைட் இயக்கத்துக்குத் தடைவிதிக்க மறுத்துவிட்டான் என்று நீக்ரோ இனத்தவர் எண்ணிக் களிப்புற்றனர்.

டில்மன், நிறப்பற்று இனப்பற்று

காரணமாக இந்த முடிவினை மேற்கொள்ளவில்லை. வீண் பழி சுமத்தி ஒரு அமைப்பை ஒடுக்குவது நியாயமாகாது, நேர்வழி அல்ல, சட்டம் தந்துள்ள அடிப்படை உரிமைகளை அழித்திடும் செயலினை மேற்கொள்ளலாகாது என்பதனால் அந்த முடிவினை மேற்கொண்டார். டில்மனுடைய இந்த நேர்மை உணர்ச்சியினை கருப்பர் - வெள்ளையர் எனும் இரு சாராருமே உணரவில்லை.

கருப்பர் உலகு களிப்பினையும் வெள்ளையர் உலகு வெறுப்புடன் கலந்த கோபத்தினையும் வெளிப்படுத்திக் கொண்டிருந்தபோது. டர்னரைட் இயக்கம் உள்ளபடி பலாத் காரத்தில் ஈடுபட்டிருக்கிறது என்பதற்கான ஆதாரங்கள் கிடைத்துவிடுகின்றன. கிடைத்ததும் டில்மன், டர்னரைட் இயக்கத்தைத் தடை செய்திட முடிவு

செய்து விடுகிறான்.

தக்க காரணமின்றி இயக்கத்தைத் தடை செய்ய முடியாது என்று கூறியபோது எப்படி வெள்ளை இனத்தவர் கொதிப் படைவார்களோ என்பது பற்றிக் கவலையற்று, மனச்சாட்சிக்கு மட்டுமே மதிப்பளித்து நடந்து கொண்டாரோ, அதேவிதமாகவே, அந்த இயக்கம் பலாத்காரச் செயல்களிலே ஈடுபட்டிருக்கிறது என்பது மெய்ப்பிக்கப்பட்டதும், அதனைத் தடை செய்தால், கருப்பு இனத்தவர் தன்னைத் தூற்றுவார்களே, வெறுப்பார்களே, எதிர்ப்பார்களே என்ற கவலையற்று, நேர்மையாக நடந்து கொள்ள முற்பட்டார். தம்பி! இதற்குத் தேவைப்படும் நெஞ்சு உரம் பொதுப்பணியினில் ஈடுபட்டுள்ளோர் அனைவரும் முயற்சி செய்து பெற்றுக்கொண்டாக வேண்டிய ஒன்றாகும்.

கடமையைச் செய்திடும்போது, இனப்பற்று, பந்த பாசம், அச்சம், தயை தாட்சணியம் என்பவைகளுக்குக் கட்டுப்படும் போக்கு தலை தூக்குமானால், அதனைத் தூக்கி எறிந்துவிடும் துணிவு பிறந்திடவேண்டும்.

எந்த நீக்ரோ இனத்தவர் போற்றிப் புகழ்கிறார்களோ எமது ஈடு எதிர்ப்பற்ற தலைவன்! எமது இனத்தின் காவலன்! வெள்ளையரின் மிரட்டலுக்குப் பணிந்திடாத அஞ்சா நெஞ்சன்! என்றெல்லாம் புகழாரம் சூட்டுகிறார்களோ, அவர்கள் கண்ணீர் ததும்பிட நிற்பார்களே, இவ்வளவுதானா இவன் ஆற்றல்? என்று கேலி பேசுவார்களே; அடிபணிந்து விட்டாயா வெள்ளையருக்கு! பதவி மோகம் தலைக்கேறி விட்டதா! இனம் அழிந்தாலும் சரி, வெள்ளை மாளிகையில் கொலுவிருக்கும் நிலை இருந்தால் போதும்

என்று தீர்மானித்து விட்டானா! காவலன் என்றும் நாவலன் என்றும், வழிகாட்டி என்றும் புது வாழ்வளித்தோன் என்றும் வாய்வலிக்கப் போற்றிக் கிடந்தோமே! கருப்பரின் போற்றுதல் கால் தூசு; வெள்ளையரின் நேசமே பெரிது என்று கருதிவிட்டானா! வெற்றி பெற்று விட்டார்களா வெள்ளை நிற வெறியர்! கருப்பனைக் கொண்டே கருப்பரை அழிக்கும் காரியத்தை நடத்திக் காட்டுகின்றனரா, காலமெல்லாம் நம்மைக் கொடுமை செய்துவரும் காதகர்கள்!

வெள்ளை மாளிகையிலே ஒரு கருப்பர்! அடிமை இனத்தவன் அமெரிக்கக் குடியரசுத் தலைவன் என்று கூறிக்கூறிப் பூரித்துக் கிடந்தோமே! இதற்குத்தானா! இவன் வெள்ளை மாளிகையில் அதிபர் வேலை பார்க்கச் சென்றது, தனது இனத்தை அழித்திடத்தானா! கேட்பார் இல்லை என்ற

நிலை போய்விட்டது நமது இனத்தவனே அரசாள்கிறான் என்று பெருமிதம் கொண்டோமே! அடிமை இனம், எதற்கும் தகுதியற்ற கூட்டம், என்றெல்லாம் ஏசி வந்தீர்களே, வெள்ளை இனத்தவரே! பார்த்தீர்களா, வெள்ளை மாளிகையை! யார் அங்கே வீற்றிருக்கிறார் தெரிகிறதா? ஒரு கருப்பர்! ஒரு நீக்ரோ! எங்கள் இனமணி! இப்போதாவது புரிகிறதா நீக்ரோ இனத்தின் பெருமை! இனியாகிலும் உம்முடைய மனதிலிருந்து ஒழியுமா நிறத்திமிர்; இனப்பகை! என்றெல்லாம் எக்களிப்புடன் பேசி வந்து தன் இன மக்கள் - நீக்ரோ மக்கள் - டர்னரைட் இயக்கத்தைத் தடை செய்திட முனைவது கண்டால், பதறிப் போவார்களே, பயந்து விடுவார்களே, பாதகா! என்று அலறிக் கூவித்துடிப்பார்களே, இனத்துரோகி என்று ஏசுவார்களே என்றெல்லாம் எண்ணி டில்மன்

மனக் குழப்பம் அடையவில்லை.

வெகுண்டு எழுபவர் எவராக இருப்பின் என்ன! அவர் நிறம் எதுவாக இருப்பின் என்ன! எனக்குக் கட்டளை பிறப்பிக்கக் கருப்பருக்கும் உரிமை இல்லை; வெள்ளையருக்கும் இல்லை. என் உள்ளம் எனக்குக் கட்டளை பிறப்பிக்கிறது; தூற்றுவோர் தூற்றட்டும்; நான் என் கடமையைச் செய்திடுவேன் என்று துணிந்து நின்றான்.

தம்பி! உள்ள உறுதியுடன் நேர்மை வழி நடந்திட டில்மன் முற்பட்டபோது ஏற்பட்ட இன்னலையும் இழிவையும் படிக்கும்போது, உள்ளபடி மனம் உருகிடும்! அத்தனை இழிவுகளைத் தாங்கிக் கொள்ள முடிந்ததே அந்த நேர்மை யாளனால், நம்மால் முடியுமா, நமக்கு அத்தகைய உள்ள உரம் இருந்திடுமா என்று பொதுப் பணியினில் ஈடுபட்டுள்ளோர் ஒவ்வொருவரும் எண்ணிடுவர். அந்தவிதமாக

அமைந்திருக்கிறது, அந்தக் கட்டம்! இழிவும் இன்னலும் தாக்கிடும் கட்டம்.

அழுகல் முட்டைகள் வீசப்படுகின்றன! கற்கள் பறக்கின்றன! காட்டுக் கூச்சல் கிளம்புகிறது! பேசாதே! போ வெளியே! துரோகி! காட்டிக் கொடுக்கும் கயவனே! என்று மூலைக்கு மூலை கண்டன ஒலி! தாக்கிடத் துணிந்தோர், அருகே நெருங்குகிறார்கள்! என்னென்ன ஆபத்து வருமோ என்று எண்ணத்தக்க விதமான பரபரப்பு! போலீசும் படையினரும் வளையம் அமைத்து, உயிருக்கு ஆபத்து வராமல் பாதுகாக்க வேண்டி நேரிடுகிறது. போய்விடலாம்! நிலைமை மோசமாவதற்குள் இந்த இடத்தை விட்டுப் போய்விடலாம்! இந்தக் கும்பல் எதற்கும் அஞ்சாது! கொலைகாரக் கூட்டம்! வெறி தலைக்கேறிவிட்டிருக்கிறது! அமெரிக்கக் குடியரசுத் தலைவர், அடித்துக்

கொல்லப்பட்டார் ஆத்திரமடைந்த கும்பலால் என்று ஏற்பட்டுவிடுமானால் அது நாட்டுக்கே பெரிய அவமானம்; துடைக்கப்பட முடியாத கறை! என்றெல்லாம் கூறுகிறார்கள். டில்மனை, பாதுகாப்பான இடத்திற்குப் போலீசார் அழைத்துச் செல்கின்றனர்.

டர்னரைட் இயக்கம், பயங்கர நடவடிக்கைகளில் ஈடுபட்டி ருக்கிறது என்பது மெய்ப்பிக்கப்பட்டிருப்பதால், அந்த இயக்கத்தைத் தடை செய்யும் சட்டம் பிறப்பித்துள்ளேன் - என்று டில்மன் அறிவித்ததும் இத்தனை அமளி நடக்கிறது. குடியரசுத் தலைவர் உரை கேட்டு மகிழவும், அவரை வாழ்த்தவும் கூடியிருந்த பெருந்திரள், பகை கக்குகிறது, பாய்ந்து வருகிறது தாக்க! போலீஸ் மும்முரமாகிறது. விழா நடத்திட முனைந்த பிரமுகர்கள் பீதி கொள்கின்றனர். மகன் கண்களில் நீர்

கொப்பளிக்க நிற்கிறான். டில்மன் போலீஸ் வளையத்திலே நிறுத்தப்பட்டு பாதுகாப்பான இடத்திற்கு அழைத்துச் செல்லப்படுகிறார்.

தம்பி! இத்தனை அமளியும் நடப்பதே ஒருவர் மனதை மெத்தவும் வாட்டிவிடும்;

அதிலும் வரவேற்று வாழ்த்தி, விழா நடத்துகிறார்கள்; அந்த இடத்தில் அந்த நேரத்தில் அமளி! "கல்லெறி!' காட்டுக் கூச்சல்! இழிமொழிகள்! பழிச் சொற்கள்! என்றால் மனவேதனை மேலும் எந்த அளவு ஏற்படும்.

அதிலும், எந்தத் தகப்பன் இத்தனைப் பெரிய ஏற்றம் பெற்றிருக்கிறான் என்பது கண்டு பெருமிதம் கொண்டிருக் கிறானோ அந்த மகன் எதிரில் இந்த அமளி நடக்கிறது.

தந்தை வரவேற்கப்படுவதைக் கண்டுகளித்த கண்களால், ஆத்திரமடைந்த கூட்டம் அவரை விரட்டி அடிப்பதைக்

காண்கிறான் - டில்மனுடைய மகன் கல்லூரி மாணவன்!

தன் தந்தையுடைய வருகை காரணமாக விழாக்கோலம் எழக்கண்டு களிப்படைந்திருக்கிறான் - மகன் - அவன் எதிரில் கல்லெறி - தந்தைக்கு!

நீக்ரோ இனத்தின் பெருமையை உயர்த்திய தலைவன் என்று தன் தந்தையைச் சான்றோர் வாழ்த்திடக் கேட்டான் களிப்புடன் - மகன் - அதே காதுகளில் நாராசம் பாய்கிறது.

தந்தை விழாக்கூடம் நுழையும்போது எத்தனை மரியாதை, என்னவிதமான அணிவகுப்பு, பிரமுகர்கள் முகமன்; இவைகளைக் கண்டான். அதே இடத்தில், அல்லோலகல்லோலம்! விடாதே! பிடி, அடி! குத்து! கொல்லு! என்ற மிரட்டல்! மாலைகள் அணிவித்தார்கள் அந்த மணிமாடத்தில்

தந்தைக்கு! கற்களை வீசுகிறார்கள் அதே இடத்தில். காண்கிறான், கண்ணீர் உகுக்கிறான். ஆனால் அடப் பாவிகளே ஆகுமா இந்த அக்கிரமம்! அவரையா இப்படி இழிவு செய்கிறீர்கள். நமது இனத் தலைவனையா தாக்கக் கிளம்புகிறீர்கள் என்று அந்த மகனால் கேட்க முடியவில்லை, ஏன் டர்னரைட் இயக்கத்தை - கருப்பரின் பாதுகாவலனாக உள்ள அமைப்பை - ஒரு கருப்பரே தடை செய்யும்போது, இதுவும் நடக்கும் இதற்கு மேலும் நடக்கும் என்று எண்ணுகிறான். தந்தைக்கு ஏற்பட்ட இழிவு கண்டு தத்தளிக்கிறான். ஆனால் அவர் டர்னரைட் இயக்கத்தைத் தடை செய்தது நியாயம் என்று அவன் உள்ளம் ஏற்றுக் கொள்ள மறுத்தது. அவன் கல் வீசவில்லை, கண்டனக்குரல் எழுப்பவில்லை; ஆனால் கல் வீசியவர்களும் கண்டனக் குரல்

எழுப்பியவர்களும், என்ன கேள்வியை எழுப்பினார்களோ அதே கேள்வியைத்தான் அவனுடைய கண்ணீர் எழுப்பிற்று.

டர்னரைட் இயக்கத்திற்குத் தடை விதிப்பதாக, டில்மன் வெள்ளை மாளிகையில் இருந்தபடியே அறிவித்திருக்கலாம். அமளி செய்திடும் கூட்டம் அருகே நெருங்கியிருக்க முடியாது. அழுகல் முட்டைகள் வீசிடக் கும்பலுக்கு முடிந்திருக்காது.

ஆனால் டில்மன், தடைச்சட்டம் பற்றிய அறிவிப்பு அளித்தது, மகன் பயிலும் கல்லூரியில் நடைபெற்ற விழாவில்!

கல்லூரி விழாவில் ஒரு நீக்ரோ தலைவர் சொற்பொழிவாற்ற அழைக்கப்பட்டதே, இதற்கு முன்பு நடைபெற்றிராத ஒரு சிறப்பு நிகழ்ச்சி. அந்த விழாவிலே கலந்து கொண்டு, டில்மன் டர்னரைட் இயக்கத்தின் மீது

தடைவிதித்திருப்பதாக அறிவித்ததும், விழாக் கூடம் அமளிக் களமாகிவிட்டது.

எந்த இடத்தில் இதற்கு எதிர்ப்பு வெடித்துக் கொண்டு கிளம்பக் கூடுமோ அந்த இடமாகப் பார்த்து, சட்டம் பற்றி அறிவிக்க வேண்டும் என்ற எண்ணம் போலும் டில்மனுக்கு.

அமளி கண்டு மகன் கண்ணீர் சிந்துகிறான். வெள்ளையர்? எப்படி இருக்க முடியும்? ஒரு கேலிப் புன்னகை காட்டி இருப்பர்! மகத்தான வெற்றி என்று எண்ணிக் கொண்டிருப்பர்! குறும்புப் பார்வையைச் செலுத்தி இருப்பர்.

கருப்பர் தலைவனை எதிர்த்துக் கருப்பர் கூட்டம் அமளி செய்கிறது. வெள்ளைப் போலீஸ் அந்தக் கருப்புத் தலைவன் உயிருக்கு ஆபத்து வராதபடி பாதுகாப்பளிக்கிறது. இந்த வேதனை தரும் காட்சியைக் காணவா நான்

இந்தக் கல்லூரியில் இருக்க வேண்டும் என்று எண்ணி, டில்மனுடைய மகன் வேதனைப் படாமல் இருந்திருக்க முடியுமா?

நிறவெறி கொண்ட வெள்ளையர் என்ன பேசிக் கொண்டிருந்திருப்பர்!

புயல் வீசுகிறது! நிலைமை புரிந்திருக்கும்.

புயல் இப்போதுதான் ஆரம்பமாகி இருக்கிறது. போகப் போகத் தெரியும் அதனுடைய வேகம்.

கருப்பரின் அமைப்பை ஒரு கருப்பர் தலைவன் தடை செய்யும்போதே இத்தனை அமளி நடக்கிறதே, வெள்ளை இனத்தவர் தடைச் சட்டம் கொண்டு வந்திருந்தால், பயல்கள் தலையையே சீவிவிட்டிருப்பார்கள் போலிருக்கிறதே!

தலையைச் சீவுவார்களா! யார்? கருப்பரா? பீரங்கிகள் எதற்கு இருக்கின்றன, அகன்ற

வாயுடன்; ஒரு வெள்ளை இனத்தவன் மீது இந்த அழுகல் முட்டை விழுந்திருந்தால், கருப்புக் கும்ப-ன் மீது குண்டுகள் பொழிந்திருக்காதா? சும்மா விடுமா படை!

நடைபெற்ற குழப்பம், அமளி டில்மன் மனதை வாட்டாம லிருந்திருக்க முடியாது. ஆனால் கடமையைச் செய்தோம்; புரிந்து கொள்ளாதவர்கள் பகை கக்குகிறார்கள். அதற்காகக் கடமையிலிருந்து தவறலாமா? கூடாது! என்றுதான் எண்ணியிருப்பான். புயல் அந்த அளவோடு நின்று விடவில்லை. அதன் வேகம் பற்றியும் வகை பற்றியும் அடுத்த கிழமை தெரிவிக்கிறேன்.

அன்புள்ள

அண்ணாதுரை

6-3-66

41. "கனா' நிகழ்ச்சி - ஒரு எச்சரிக்கை !

”கனா‘வை விடுவித்தவரே கவிழ்க்கப்பட்டார்!
காரணம், ”எல்லாம் நானே’ எனும் நினைப்பே !
ஒரே கட்சி ஆட்சியால் வந்த வினை!
வெள்ளையரை விரட்டிய கருப்பரே வெள்ளையரானதன் விளைவு !

தம்பி,

நாட்டைக் குட்டிச்சுவராக்கிவிட்ட நாசகாலன் !

பொருளாதாரத் துறையைப் பாழ்படுத்தினவன் !

மக்களைப் பட்டினி போட்டுச் சாகடித்த பேயன் !

எதிர்க்கட்சிகளை ஒழித்துக்கட்டிய வெறியன் !

ஆடம்பர வாழ்வு நடாத்திய எதேச்சாதிகாரி !

எல்லாம் தனக்குத் தெரியும் என்று உறுமிய அகம் பாவக்காரன் !

ஏன் என்று கேட்பவர்களைச் சிறையில் தள்ளி வாட்டி வதைத்த காதகன் !

ஆளத் தெரியாதவன்! அகப்பட்டதைச் சுருட்டுபவன்! ஆணவக்காரன் !

”இருப்பை’த் தொலைத்துவிட்டான், நாட்டைக் கடனாளியாக்கிவிட்டான். வீண் பெருமைக்காகப் பணத்தை விரயம் செய்தான்!

தொழில் கெட்டது, விவசாயம் பாழ்பட்டது, வகையற்ற ஆட்சி நடத்தியதால்!

இன்று கனா நாட்டிலே இவ்விதம்

பேசிக்கொள்கிறார்கள், எழுதுகிறார்கள், நிக்ருமாவைப் பற்றி. ஆட்சியை ராணுவம் கைப்பற்றிக் கொண்ட பிறகு ஒரு புரட்சி சர்க்கார் அமைத்தான பிறகு பதவியைப் பறிகொடுத்துவிட்டு, வேறு நாட்டிலே "தஞ்சம்' புகவேண்டிய நிலைக்குத் துரத்தப்பட்டுவிட்ட நிக்ருமாவைப் பற்றி மிக வன்மையாகக் கண்டிருக்கிறார்கள்; அவன் ஆட்சியின் கேடுகள் பற்றி, கொடுமைகள் பற்றி அடுக்கடுக்காக எடுத்துரைக்கிறார்கள்.

மக்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்கின்றனர்,

பாட்டாளிகள் களிப்படைந்துள்ளனர்,

மாணவர்கள் மமதையாளன் தொலைந்தான் என்று எக்காளமிடுகின்றனர்,

அதிகாரிகள்கூட அகமகிழ்ச்சி கொண்டுள்ளனர், என்றெல்லாம் கூறப்படுகிறது.

இவற்றில் பெரும்பகுதி, புரட்சிச் சர்க்காரின் "பிரச்சார'த் தாக்குதலாக இருக்கக்கூடும்; மிகைப்படுத்திக் கூறுவதாக இருக்கக் கூடும். ஆனால் இந்தக் கண்டனத்தில் துளியும் உண்மை இல்லை என்று ஒரேயடியாகக் கூறிவிட முடியாது.

நிக்ருமாவின் ஆட்சி கவிழ்க்கப்பட்டபோது, "ஐயோ' என்று சொன்னவர்களோ, எப்படி அந்த ஆட்சியைக் கவிழ்க்கலாம் என்று கேட்டவர்களோ அதிகம் பேர் இருந்ததாகத் தெரியவில்லை.

அவருக்காக எமது உயிரையும் கொடுப்போம்! எமது பிணத்தின் மீது நடந்து சென்றுதான் அவர் அமர்ந்திருந்த அரியணையைத் தொட முடியும் உங்களால் என்று "வீரம்' பேசியவர்களையும் அதிகமாகக் காணோம்; தியாகம் புரிய முன் வந்தவர்களும் இல்லை.

ஆட்சி கவிழ்க்கப்படுகிறது! புதிய புரட்சி சர்க்கார் அமைக்கப்படுகிறது! கனா நாட்டு மக்கள், இது நடைபெற வேண்டியதுதான் என்ற முறையில் இருந்து விட்டிருக்கிறார்கள்.

பெரியதோர் உருவச்சிலை; கரத்தை உயர்த்திக் காட்டிய நிலையில்; விண்ணை நோக்கிய பார்வையுடன் அமைந்த சிலை; நிக்ருமாவின் சிலை; நிக்ருமாவே திறந்து வைத்த சிலை! அதைக் கீழே தள்ளி உடைத்துப் போட்டிருக்கிறார்கள்; தலை துண்டிக்கப்பட்டுப் போயுள்ள அந்தச் சிலை தரையிலே உருட்டப்பட்டுக் கிடக்கிறது; அதைச் சிறுவர்கள் சூழ நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்! நேற்றுவரை நாட்டை ஆண்டு வந்தவன் சிலை நொறுக்கப்பட்டுக் கிடக்கிறது; ஆத்திரம், ஆவேசம், அழுகை எதுவும் காணோம்.

இதுகூட அல்ல விசித்திரம். இந்த

அளவு கண்டிக்கப்படும் நிக்ருமா ஆட்சியில் இருந்தபோது - கடைசி நாள் வரையில் - இதே மக்கள் பயபக்தி விசுவாசம் காட்டி வந்தனர்.

கண்கண்ட தெய்வம் என்று கொண்டாடினர்.

ஏழைகளை வாழ்விக்க வந்த எம்மான் என்றனர்.

நாட்டை உய்விக்க வந்த பெம்மான் என்றனர்.

அவர் ஆற்றலை அவனி அறியும் என்றனர்.

ஆங்கிலர்க்கு அவருடைய பெயரைக் கேட்டாலே நடுக்கம் என்றனர்.

அவர் கனா நாட்டை மட்டுமல்ல, அடிமைப்பட்ட நாடுகளை எல்லாம் விடுவிக்க வல்ல தீரர் என்றனர்.

அவர் ஒரு நாட்டுத் தலைவர் மட்டுமல்ல,

எழுச்சி பெற்ற ஆப்பிரிக்கக் கண்டத்துக்கே வழிகாட்டி என்றனர்.

கருப்பருக்குப் புதுவாழ்வு தந்திட அவதரித்தவர் என்றனர்.

தீரம் - தியாகம் - ஆற்றல் ததும்பும் புதிய வரலாறு படைத் திடும் பெரியோன் என்றனர்.

அவர் கரம் அசைத்தால் போதும், நாடு கட்டுக்கு அடங்கும்; அவர் சொல் கேட்டால் போதும்; படைகள் எட்டுத் திக்கிலிருந்தும் கிளம்பும் என்றனர்.

தன்னலமற்றவர்; தாயகம் வாழ்ந்திடத் தன்னையே அர்ப்பணித்துக் கொண்டவர் என்றனர்.

இவற்றிலே குறிப்பிடத்தக்க பகுதி, நிக்ருமா ஆட்சியிலே நடத்தி வைக்கப்பட்ட "பிரசாரம்' என்று கூறப்படலாம்; ஆனால் மக்கள் காட்டியதாகக் கூறப்படும் கனிவு

முழுவதுமே”போலி’யாக இருந்திருக்க முடியாது.

போலி எந்த அளவு, உண்மை எந்த அளவு என்பது எதிர்கால வரலாற்றுத் துறையினர் கண்டறிய வேண்டிய ஒன்று! இன்று ஒன்று நன்றாகத் தெரிகிறது. புகழாரம் சூட்டப்பட்டு விட்டிருப்பதாலேயே, புனிதன் என்று விருது வழங்கப்பட்டு விட்டிருப்பதாலேயே கவிழ்க்கப்பட முடியாதவன்; காலமெல்லாம் நிலைத்திருக்கத் தக்கவன், என்று கூறிவிடுவதற்கில்லை. பெரு மரம் வீழ்த்தப்படக்கூடும் - புயலின் வேகத்தால்! எம்மான் என்றும், பெம்மான் என்றம் புகழப்பட்டவனே எத்தன் என்றும், பேயன் என்றும் கண்டிக்கப்படக்கூடும். உதடும் உள்ளமும் உறவு கொள்ளாமல், வெறும் ஓசை மட்டும் கிளம்பியபடி இருக்கக் கூடும்.

கனா நாட்டிலே நடைபெற்றுள்ள

திடுக்கிடத்தக்க நிகழ்ச்சி, அந்த நாட்டுக்கு மட்டுமல்ல, எம்மை அசைத்திடவும் ஆகாது எவராலும்! என்று இறுமாந்து கிடந்திடும் பெருந் தலைவர்கள் எக்காளம் கிளப்பிடும் எந்த நாட்டுக்கும், ஒரு பாடம்; ஒரு எச்சரிக்கை, ஒரு அபாய அறிவிப்புத் தருவதாக அமைந்திருக்கிறது.

விடமாட்டேன்! புரட்சிக்காரரைப் பொசுக்கியே தீருவேன்! காலம் வரும்; வெகுவிரைவில், கனா நாட்டில் வெற்றி நடை போடுவேன் என்று வீரம் பேசுகிறார் நிக்ருமா! இன்றோ அவர் ஒரு முன்னாள் ஆக்கப்பட்டுப் போய்விட்டிருக்கிறார். மீண்டும் கனாவை அவர் கைப்பற்றிப் பீடம் ஏறி அமர்ந்து, "வட்டியும் முதலுமாக'ப் புரட்சி நடத்தியவர்களைத் தீர்த்துக் கட்டிவிட்டு, பழையபடி அரசாளத் தொடங்கினாலும், இப்போது நடைபெற்று

விட்ட நிகழ்ச்சி இருக்கிறதே, அது இதயத்தில் ஏற்படுத்தியுள்ள”வடு’ மறையவே மறையாது. இவ்வளவுதானா இவர்களின் வாழ்வு! உலகம் பேசுகிறதே, அந்த ஏளனம் மாறாது. மீண்டும் கனா நாட்டு அதிபராக அவர் வருவதும் நடைபெறக் கூடியதாக இப்போதைக்குத் தெரியவில்லை, ஆப்பிரிக்காவிலே பெரியதோர் போர் மூண்டெழும் என்றாலும் கவலையில்லை என்று துணிந்து வல்லரசுகள் அவருக்காக வரிந்து கட்டிக் கொண்டு படை திரட்டி வந்தாலொழிய.

ஆப்பிரிக்க நாடுகளிலே சில, “இது அக்கிரமம்! நிக்ருமா வீரன், தீரன், தியாகி, அவரை விரட்டுவதா! இது அநீதி! அவருக்காக நாங்கள், எதையும் செய்திடத் தயார்! என்று கூறிய போதிலும் - கனா நாட்டு அதிபர், தமது”முடி‘யை நிக்ருமாவின் காலடியில் வைத்து

விட்டதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது - ஐக்கியக் குடியரசுத் தலைவர் நாசர் "மேல்மட்ட'த்தவர்களுக்கு இது குறித்து"மடல்' விடுத்திருப்பதாகக் கூறப்படுகிறது - ஆப்பிரிக்க நாடுகளிலே மிகப் பல, புதிய சர்க்காரை ஏற்றுக் கொண்டு விட்டன!

நிக்ருமா, தன்னை ராணுவப் புரட்சிக் குழுவினர் கவிழ்த்து விட்டனர் என்றும் அறிந்து கொள்ளாமல் "ராஜோபசாரம்' பெறச் சீனா சென்றபோது, அந்த நாட்டிலுள்ள கனா தூதரகம், புதிய சர்க்காருக்குக் கட்டுப்பட்டுவிட்டதாகத் தெரிவித்து, நிக்ருமாவை"அதிபர்' என்ற முறையில் வரவேற்க இயலாது என்று அறிவித்து விட்டது.

சீனத் தலைவர்கள், "கனா நாட்டு விடுதலை வீரனே! வருக! ஏகாதிபத்திய எதிர்ப்பு முன்னணி நிற்போனே! வருக! மேற்கத்திய நாடுகளின் அகம்பாவத்திற்கு

அஞ்சாத தீரனே! வருக!' என்று வாழ்த்தி வரவேற்றுக் கொண்டிருந்த அதே நேரத்தில், சீனாவில் அமைந்துள்ள கனா தூதரகத்தினர், தமது அலுவலக நுழைவு வாயிலில் தொங்கவிடப்பட்டிருந்த அதிபர் நிக்ருமாவின் படத்தை அகற்றிக் கொண்டிருந்தனர், அவர்"காலம்' முடிந்துவிட்டது என்பதற்கு அறிகுறியாக.

நடைபெற்றுவிட்ட நிகழ்ச்சி நிக்ருமாவுக்கு அடக்க முடியாத ஆத்திரத்தை மூட்டிவிட்டிருக்கும். அதனை அனைவரும் உணர்ந்து கொள்ள முடியும். ஆனால், மீண்டும் கனா அதிபர் ஆவேன் என்று முழக்கமிடுகிறாரே அதனை ஒப்புக் கொள்ளப் பல நாடுகள் தயாராக இல்லை.

புதிய கனா சர்க்காரை இந்தியப் பேரரசு ஏற்றுக் கொண்டு விட்டது.

நிக்ருமா ஆட்சியைக் கவிழ்க்க கனா நாட்டு ராணுவத் தலைவர்கள் இரகசிய நடவடிக்கையில் முனைந்திருக்கும் போது தான், உலகில் சமாதானம் மலரச் செய்திட, குறிப்பாக வியட்நாம் போர் பற்றிய பிரச்சினையைத் தீர்த்து வைக்கப் "புனித யாத்திரை' மேற்கொண்டிருந்தார் நிக்ருமா.

புதுடில்லி விமான நிலையத்தில் இந்தியப் பிரதமர் இந்திராகாந்தி அவர்களுடன் உலகப் பிரச்சினைகள் பற்றிக் கலந்து பேசினார்; கனா நாட்டுக்கு "வருகை' தரும்படி இந்திரா காந்தி அவர்களையும் அழைத்திருக்கிறார்.

இவர் இங்கு உலகப் பிரச்சினைகளைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கும்போது, அங்கே இவரை "ஒழித்துக் கட்ட' வேலை நடந்து கொண்டிருந்திருக்கிறது.

ராணுவத்தார், எத்தனை திறமையுடன்

தமது "புரட்சி'த் திட்டத்தை எவரும் கண்டறிய முடியாதபடி வகுத்துள்ளனர் என்பதைக் காணும்போது வியப்பாகவே இருக்கிறது.

துளியாவது, "குறி' தெரிந்திருக்குமானால், வாடை அடித்திருக்குமானால், நிக்ருமா நீண்டதோர் பயணத்தை மேற்கொண்டிருந்திருக்க மாட்டார்; இரண்டில் ஒன்று பார்த்துவிடுவோம் என்று துணிந்திருக்கக்கூடும்; ராணுவப் புரட்சியாளர்கள் தோற்கடிக்கப்பட்டிருப்பின் சுட்டுக் கொல்லப்பட்டிருப்பர்; அவர்கள் வெற்றி பெற்றிருப்பின், சிலைக்கு நேரிட்ட கதி நிக்ருமாவுக்கே நேரிட்டிருக்கக் கூடும்.

துளியும் திட்டம் வெளியே தெரியாதவண்ணம் தீட்டி யிருக்கிறார்கள் என்பது மட்டுமல்ல, காட்டிக் கொடுக்கும் எண்ணமும் துணிவும் கொண்டவர்கள் யாரும், ராணுவத்தின் எந்த மட்டத்திலும் இல்லை

என்பதும் இதனால் விளக்கமாகிறது.

ஆகவே இந்தப் புரட்சி, யாரோ சில விரல்விட்டு எண்ணக்கூடிய ”வெறியர்’ நடத்தியதாகத் தெரியவில்லை; நீண்ட நாட்களாக மக்கள் மனத்திலே இருந்து வந்த குமுறல், வெடித்துக் கிளம்பியதாகவே தெரிகிறது.

குமுறல் கிளம்பியபோதே, கவனித்திருப்பின் புரட்சி வெடித்துக் கிளம்பியிருந்திருக்காது.

குமுறலுக்கும் முன்பே கருத்துத் தெளிவுள்ள ஆட்சியாளர், குமுறலுக்கான குறிகள் தோன்றிடுவதைக் கண்டிடுவர்.

புன்னகை மடிந்து கவலைக்கோடுகள் மக்கள் முகத்தில் பதிந்து, கண்கள் ஒளி இழந்து, பெருமூச்சுக் கிளம்பிடும் போது, இனி அடக்கிக்கொள்ள முடியாத அளவுக்கு

அல்லல் வளர்ந்து விட்டிருக்கிறது என்பதை அறிந்து கொள்ளலாம், அக்கறையும் அறிவுத் தெளிவும் உள்ளவர்கள் ஆட்சி நடத்தினால்.

அறிவுத்தெளிவு ஆள்பவர்களுக்கு இருக்கவேண்டும் என்பது மட்டுமல்ல, குறிப்பினில் நிறத்தவேண்டிய உண்மை; அல்லற்பட்ட மக்கள் தமது மனக்குறையை அச்சமின்றி, தாராளமாக, எடுத்துக் கூறிடும் உரிமை பெற்றிருக்கவேண்டும் என்பதே அடிப்படை உண்மை.

வெடி மருந்தினைக் கெட்டித்து வைத்துள்ள "குழாய்' போல, மனம் இருந்திடச் செய்வார்களானால், ஓர் நாள் அது வெடித்திடத்தான் செய்யும்; விபரீதம்தான் விளையும்! தடுத்திட முடியாது.

ஆட்சியாளரின் போக்கு பற்றியும், நடவடிக்கை பற்றியும், சட்ட திட்டம் பற்றியும்

கட்டுக்காவல் குறித்தும், மக்கள் மனத்திலே "குறை' தோன்றிடுமானால், அதனை வெளியே எடுத்துரைக்க வாய்ப்பும் உரிமையும் இருந்திடுமானால், புரட்சி மூண்டிடாது, இரத்தக்களரி ஏற்படாது.

என்னை ஆள்பவர்கள் எப்படி ஆளவேண்டும் என்று எடுத்துரைக்கும் உரிமையும், திருத்திடவும் தடுத்து நிறுத்திடவும் உரிமையும் அதற்கு இடம் கொடாவிடின், ஆட்சி நடத்து வோரையும், தேவைப்பட்டால் ஆட்சிமுறையையும் கூட மாற்றிடும் உரிமையும், புதிய ஆட்சி, புது ஆட்சி முறை அமைத்துக்கொள்ளும் உரிமையும் எனக்கு உண்டு; நான் அந்த உரிமையுடன் என் கடமையைச் செய்திடும் போது, அலட்சியப்படுத்தவோ, அச்சமூட்டவோ, அடக்கி ஒடுக்கவோ அரசு முனையாது என்ற நிலையில் குடிமகன் இருக்கும் நாடுகளில்,

கனா நாட்டிலே நடைபெற்றது போன்ற நிகழ்ச்சி எலாது; தேவையுமில்லை.

ஆனால், கனா நாட்டுக்கு உண்மையிலேயே "ரட்சகர்' என்றுவந்த நிக்ருமா இந்த உரிமையைத் தர மறுத்து விட்டார். கொடுங்கோலராகி விட்டார் என்று பலரும் மனம் குமுறும் விதமாக நடந்துகொள்ளலானார்.

இது நிக்ருமாவுக்கு உள்ள இயல்பு; மக்களின் வாழ்வு பற்றி அவருக்கு அக்கறை கிடையாது; தைமூர், செங்கிஸ்கான் போன்ற இரத்தவெறி கொண்டலையும் போக்கு அவருக்கு என்றும் கூறிவிடுவதற்கில்லை.

கனா நாட்டு விடுதலைக்காக அயராது உழைத்தவர்; இன்னல் இழப்புகளை ஏற்றுக்கொண்டவர்; தன் நாட்டு மக்களை வாழவைக்க வேண்டும் என்று ஆர்வம்

ததும்பும் உள்ளத்தினர்.

தன்னல மறுப்புப்பற்றி அவருக்கு ஒருவரும் கற்றுத்தர வேண்டியதில்லை. அவர் விடுதலை வீரராக விளங்கிய போது அதனை அவர் மற்றவர்களுக்கு ஊட்டியவர்.

எனவே இயல்பிலேயே அவர் கெட்டவர், ஆகவேதான் கேடான பல செய்தார்; இன்று கவிழ்க்கப்பட்டும் போய்விட்டார் என்று கூறிவிடுவதற்கில்லை.

கனா நாட்டின் விடுதலையைப் பெற்றளித்தபோது, நாடே விழாக்கோலம் பூண்டபோது, வீட்டுக்கு வீடு அவரை "வழிபடும்' அளவுக்குப் பாசம் ததும்பி வழிந்தது.

அவர் அரசாள முன்வந்ததும், தங்கள் அல்லல் யாவும் அழிந்தொழிந்தது என்று நம்பினர்; களிப்புற்றனர்.

தெருவெல்லாம் ஆடலும் பாடலும்; அவர்

அரசாளும் நாளை விழாவாக்கினர்.

நிக்ருமாவின் புகழ், பாடலாக்கப்பட்டது; பள்ளிப் பிள்ளைகளுக்கு அவர் வரலாறு பாடநூல்! எங்கும் அவர் ஓவியம், அவருடைய சிலை! அவர் பெயரால் புதுப்புது அமைப்புகள்!

கருப்பர்கள் ஆளத் தெரியாதவர்கள் என்று ஏளனம் பேசினரே வெள்ளையர், பார்க்கட்டும் இப்போது, எத்தனை பெரிய ஆற்றல் கொண்டவர் எமது நிக்ருமா என்பதை என்று மார்தட்டிக் கூறினர். இத்தனை இன்ப இசையுடன் துவங்கப்பட்ட ஆட்சிதான் அவருடையது. பிறகு ஏன் அருவருக்கத்தக்க, கண்டிக்கத்தக்க, புரட்சி செய்தேனும் போக்கத்தக்கது என்று கருதத்தக்க செயல்களை அவர் மேற்கொண்டார்? மக்களைக் கொடுமையில் உழலச் செய்யவேண்டும் என்றா? இருக்க முடியாதே! ஆனால், காரணம் என்ன,

ஆட்சிகெட? அடிப்படைக் காரணம் ஒன்றே ஒன்றுதான்; எல்லாம் நானே! என்ற நினைப்புத் தான்.

இந்த நாட்டை விடுவித்த விடுதலை வீரன் நானே !

அடிமைகளாக இருந்த மக்களை ஆற்றல் பெறச் செய்தவன் நானே!

இந்த நாட்டை ஆளத் தகுதியும் திறமையும் படைத்தவன் நானே!

இந்த நாட்டை நடத்திச் செல்லும் உரிமை பெற்றவன் நானே!

இந்த மக்களுக்கு வளமான வாழ்வு அமைத்திட வல்லவன் நானே!

இந்த மக்களுக்கு எது நல்லது என்பதை அறியத் தக்கவன் நானே!

இப்படிப் பிறந்தது ஓர் நச்சுக்கருத்து.

விழாக்கோலம் கலைந்த நிலையில், மக்கள் ஆட்சி நிலையில், மக்கள் ஆட்சியின் பலன்பற்றிய கணக்குப் பார்த்திடும் போது போதுமான சுவை கிடைத்திடாததால், இப்படித்தானா? என்று கேட்டிட முன்வந்தனர். வந்தது கோபம் நிக்ருமாவுக்கு!

எப்படி ஆட்சி அமையவேண்டும் என்பதுபற்றி என்ன தெரியும் - உங்களுக்கு ?

எதை எப்படிச் செய்திட வேண்டும் என்பதுபற்றி அறிந்திடும் திறமை ஏது - உங்களுக்கு ?

அடிமைகளாகக் கிடந்தவர்களை விடுவித்து மனிதர் களாக்கினேன் - புதுவாழ்வு தந்தேன் - உங்களுக்கு !

என்னையா ஏன் என்று கேட்கத் துணிகிறீர்கள் ?

என்னிடமா கேள்விகளை வீசுகிறீர்கள் !

என்னை யார் என்று தெரியவில்லையா ?

என்னைப் புகழ்ந்தீர்கள், பாராட்டினீர்கள், பூசித்தீர்கள்,

என்னை வருந்தி வருந்தி அழைத்தீர்கள் அரசாள! இப்போது கணக்கா கேட்கிறீர்கள் கணக்கு !

நான் அறிவேன், உங்களுக்கு எது நல்லது என்பதனை.

எனக்குத் தெரியும் எதை எப்படிச் செய்யவேண்டும் என்று. என் சொல்லை நம்ப மறுக்கிறீர்களா?

என் சொல்லை மீறத் துணிகிறீர்களா ?

நான் இல்லாவிட்டால் கனா ஏது? விடுதலை ஏது ? ஆட்சி ஏது?

இவ்விதம் வளர்ந்தன விபரீத எண்ணங்கள்.

ஆட்சியிலே பல கோளாறுகள், திட்டங்களிலே பல தவறுகள், நிர்வாகத்திலே பல முறைகேடுகள்; இவற்றின் பயனாக மக்கள் மனத்திலே குமுறல்.

குமுறல்! ஆனால் அதனை வெளியே காட்டிக் கொள்ள வழி இல்லை! உரிமை இல்லை!

நாட்டுக்கு நானே தலைவன்! நான் ஒருவனே தலைவன்!

நாட்டை ஆள நான் வைத்திருக்கும் கட்சி ஒன்றக்குத்தான் உரிமை! வேறு எந்தக் கட்சியும் என் நாட்டில், இருந்திட நான் அனுமதிக்கப் போவதில்லை.

நோய் பிடித்துக் கொண்டது நிக்ருமாவுக்கு; ஆணவத் தடிப்பு நோய்.

ஒரே கட்சி ஆட்சியை அமைத்துக்கொண்டார். எண்ண,

எண்ணியதைப் பேச, எழுத, மக்களிடம் தமது கருத்துக்கு ஆதரவு திரட்ட எந்தக் கட்சிக்கும் உரிமை கிடையாது.

மக்கள், அதிபர் இடையே வேறு தொடர்பு தேவையில்லை என்று கருதிவிட்டார்; மக்களைக் கெடுக்க வேண்டும் என்ற நினைப்புடன் அல்ல, எது நல்லது என்று தெரிந்துகொள்ளும் அறிவுத் தெளிவு மக்களுக்குக் கிடையாது என்ற அழுத்தமான - ஆனால், தவறான - நம்பிக்கை காரணமாக.

முன்பு வெள்ளையர் ஆட்சி நடத்தினர் - அவர்களின் விருப்பத்தையே சட்டமாக்கிக் கொண்டு; எதிர்த்துப் பேசும் உரிமையைத் தர மறுத்து, மீறி எதிர்த்திடத் துணிந்தவர்களைச் சித்திரவதை செய்யவும் கூசாமல்.

அவர்களை விரட்டிய வீரன் நின்ருமா!

அவர்களை விரட்டிய எனக்கு, ”இதுகள்’

எம்மாத்திரம் என்று தனது நாட்டு மக்களைப் பற்றியே ஒரு துச்சமான எண்ணத்தை வளர்த்துக் கொண்டார்.

நாலுபேர் நாலு வழி காட்டுவார்கள், நாலுவிதமாகப் பேசுவார்கள், மக்களைப் பிளவுபடுத்துவார்கள், குழப்பம் உண்டாக்குவார்கள், நல்ல காரியம் நடைபெற விடாது முட்டுக்கட்டை போடுவார்கள், பதவிக்காக அலைவார்கள், போட்டிகளை மூட்டுவார்கள்; பொல்லாங்கு வளரும், பொதுமக்கள் பாழ்படுவர்! - இவ்விதம் நிக்ருமா வாதிடலானார், உரக்கக்கூட அல்ல; தமக்குள்.

இதுபோலத்தானே வெள்ளையர் வாதாடினர்; கருப்பருக்கு என்ன தெரியும்? காட்டுப் பூச்சிகள்; நாமல்லவா எல்லாவற்றையும் அவர்களுக்குக் கற்றுக் கொடுத்தோம்? ஆட்சி பற்றி என்ன தெரியும் அவர்களுக்கு? அதற்குத் தேவையான

அறிவுத் தெளிவும் ஆற்றலும் அவர்களுக்கு ஏது? அவர்களுக்குத் தேவை சோறு, வீடு, வேலை! இதை நாம் தந்து வருகிறோம்; போதவில்லை என்றால் மேலும் கொஞ்சம் கேட்டுப் பெற்றுக்கொள்ளட்டும்; அதை விட்டு விட்டு, உரிமை வேண்டும். ஆட்சியிலே பங்கு வேண்டும். ஆட்சி எம்முடையது ஆகவேண்டும். எங்கள் நாட்டை நாங்கள் ஆளவேண்டும் என்று கூவுகிறார்களே, எப்படி இந்தக் கூச்சலைச் சகித்துக் கொள்ள முடியும்? நாடாம் நாடு! இது நாடாகவா இருந்தது நாம் வந்தபோது? - இவர்கள் மனிதர்களாகவா இருந்தார்கள் நாம் நுழைந்தபோது? இப்போது உரிமை கேட்கிறார்கள், முன்பு இந்தக் காட்டிலே உலவிக்கொண்டு வேட்டையாடி வயிறு வளர்த்துக்கொண்டு கிடந்தவர்கள்!! பாருங்களேன் அக்கிரமத்தை! - என்றுதான் வெள்ளையர் பேசினர்.

நிக்ருமாவும் அதே "முடுக்குடன்' பேசத் தொடங்கி விட்டார்; கருப்பர் வெள்ளையராகிவிட்டார்!!

கட்சிகள் கிடையாது என்று ஆகிவிட்டதும், ஆட்சியிலே நடப்பது பற்றி "நல்லது... கெட்டது' அறிந்து கூறிடும் உரிமை பறிபோயிற்று.

சட்டங்கள் பிறப்பிக்கப்பட்டன - நிக்ருமாவின் விருப்பப்படி.

அவை நல்லவையா அல்லவா என்பதுபற்றி ஆராய்ந்திட வாய்ப்பு இல்லை. கண்ணீர் பொழியும் நிலையில் இப்படி ஒரு சட்டமா? என்று குமுறலாயினர்; குறையினை வெளியே எடுத்துக் கூறிட வழி இல்லை, மனத்திலே புகை கப்பிக் கொண்டது; நச்சுப்புகை.

"ஒரே கட்சி' ஆட்சி என்ற முறையிலிருந்து, அடுத்த கட்டம் செல்வது வேகமாகிவிட்டது.

ஒரே கட்சிதான், ஆனால் அதிலேயும் , நான் ஒருவன்தான், எதற்கும்; மற்றவர்கள் நான் சொல்வதைச் செய்திட, நான் என்ன செய்ய வேண்டும் என்பதைச் சொல்ல அல்ல! - என்று இலக்கணம் புகுத்திவிட்டார் நிக்ருமா! இதுவும் எல்லாம் தனக்குத் தெரியும்; தனக்கு மட்டுமே தெரியும், என்ற நினைப்பு தடித்துவிட்டதால்.

அதற்கு அடுத்த கட்டம், உடனிருந்து பணியாற்றுவோரை ஊழியக்காரர் போல நடத்துவது, கருத்து மாறுபாடு காட்டினால் கடுமையான நடவடிக்கை எடுப்பது, பதவியிலிருந்து விரட்டுவது, சிறையிலே தள்ளுவது - இப்படிச் சர்வாதிகாரம் வளர்ந்திடலாயிற்று.

”மந்திரிகள்’ என்ற நிலையில் இருந்த பலரை, ஆத்திரத்தில் நிக்ருமா அடித்துவிடுவாராம், மந்திரிசபைக் கூட்டத்திலேயே! இப்போது

தெரிவிக்கிறார்கள்!!

விடுதலைப் போராட்டத்தின்போது உடனிருந்த பல உயிர்த் தோழர்களை, தியாகிகளை, தன் கருத்தினை மறுத்தனர் என்ற காரணத்துக்காக, கொல்வது, நாடு கடத்துவது, சாகும்வரை சிறையிலே அடைத்துவைப்பது, சொத்தினைப் பறிமுதல் செய்வது என்றெல்லாம் வளர்ந்து விட்டது ஆட்சியின் அலங்கோலம்.

ஜனநாயகத்தின் பேரால் சர்வாதிகாரம் நடத்துபவர்கள்கூட நீதி மன்றங்களுக்கு உரிய மதிப்பு அளிப்பதுண்டு. நிக்ருமா, என்னைவிட நீதியின் தன்மையை உணர்ந்தவர்களும் இருக்க முடியுமா என்ற ஆணவம் தலைக்கேறிய நிலையில், ஒரு சதி வழக்கில், நிக்ருமாவின் விருப்பத்தைக் கருதாமல் உயர்நீதிபதி, சிலரைக் குற்றமற்றவர்கள் என்று கூறித்

தீர்ப்பளித்தபோது வெகுண்டெழுந்து, நீதிபதியை விரட்டி விட்டதுடன் நீதிமன்றத் தீர்ப்புகளை மாற்றவும், நீதிபதிகளை நீக்கவும், தண்டிக்கவும் தனக்கே அதிகாரம் உண்டு என்று சட்டம் இயற்றிக்கொண்டுவிட்டார்.

ராணுவம் ஒன்று மட்டும் இருந்தது! தனி அமைப்பாக, தனித் தன்மையுடன், வல்லமையுடன்.

அரசியலைக் காலடி கொண்டு வந்தாயிற்று; பாராளு மன்றம் தலையாட்டிகளின் கூடமாகி விட்டது, நீதிமன்றம் தன் பேனாமுனையின் தயவில் கொண்டு வரப்பட்டாகி விட்டது. மக்களை, உழைத்திடு! உறங்கிடு! ஊராள நான் இருக்கிறேன், அது பற்றிய கவலையை விடு! என்ற கட்டுக்குள் அடைத்தாகி விட்டது. ராணுவம் ஒன்றுமட்டும் தானே தலை காட்டிக் கொண்டி ருக்கிறது; அதையும் அடக்கிட

முனைந்தார்! தனக்குப் பிடிக்காத ராணுவத் தளபதிகளை நீக்கினார்! தானே முதல் தளபதி என்பதை மரபு ஆக்கினார்! இனி? இனி! உலகைக் கவனிப்போம்! என்றுதான் உலா கிளம்பினார். இனியும் விட்டுவைக்கக் கூடாது என்று ராணுவம் புரட்சி நடத்தி, நிக்ருமாவை நீக்கிவிட்டது.

எங்கோ ஒரு நாட்டிலே நடைபெற்ற பயங்கர நிகழ்ச்சி என்ற அளவிலும் முறையிலும் இதனை நோக்கினால் முழுப் பயன் கிடைக்காது.

”ஒரே கட்சி சர்வாதிகாரம் என்னென்ன விபரீதங்களை ஏற்படுத்தும் என்ற பாடத்தையும்,

மக்களின் மனக்குமுறல் கவனிக்கப்படாவிட்டால் பயங்கரமான விளைவுகள் எதிர்பாராத நேரத்தில் வெடித்துக்

கிளம்பிவிடக் கூடும் என்ற பாடத்தையும்,

இயல்பு நல்லது, நோக்கம் கூட நல்லது என்றாலும், முறையிலே ஒரு கனிவும் மக்களை மதித்திடும் பண்பும் இல்லையென்றால், ஆட்சி அருவருக்கத்தக்கதாகி விடும் என்ற பாடத்தையும்,

எல்லாம் எனக்கு மட்டுமே தெரியும் என்ற இறு மாப்பினை, மன்னன் - சீமான் என்பவர் மட்டுமல்ல, அரசாள முனையும் எவரும் கொள்ளக்கூடாது, மக்கள் அந்த ஆணவத்தை நெடுங்காலத்துக்குத் தாங்கிக்கொள்ள மாட்டார்கள் என்ற பாடத்தையும்.

உள்நாட்டிலே மக்களை அடக்கி ஒடுக்கி வைத்து விட்டு, "உலகப் புகழ்' தேடிச் செல்வது, ஆபத்தை விலை கொடுத்து வாங்குவதாக முடியும் என்ற பாடத்தையும் பெற்றிட வேண்டும் இந்த நிகழ்ச்சியின் மூலம்.

மாற்றத்தக்கது ஆட்சி, நீக்கத்தக்கவர்கள் ஆள வந்தோர், தீர்ப்பளிக்கத்தக்கவர்கள் மக்கள் என்ற இலக்கணத்தின் அடிப்படையில் அமைக்கப்படாத அரசுகள், அடித்தளம் அற்ற கட்டடங்களாகும். மக்களின் கோபம் எனும் கடும் காற்று வீசும்போது சரிந்து விழுந்துபோகும்.

மக்கள் தமது மனத்திலே பட்ட குறைகளை எடுத்துக் கூறும்போது, பொறுமையுடன் கேட்டுக் கொள்ளவும், பொறுப்புணர்ச்சியும் பரிகாரம் தேடித் தந்திடவும், கனிவுடன் விளக்கமளித்திடவும் முன்வந்திடும் ஆட்சி ஆலெனத் தழைத்திடும்..

இந்த நல்ல இயல்பு ”ஒரே கட்சி’ என்ற அரசியல் அமைப்பிலே வளராது, வாழாது. அதுபோலவே ஒப்புக்கு ஜனநாயகத்தை வைத்துக்கொண்டு எதிர்க்கட்சிகளை அலட்சியப்படுத்திக் கொண்டிருக்கும் போலி

ஜனநாயக அமைப்பிலேயும் வளராது, வாழ்ந்திடாது.

இப்போது - கவிழ்த்தான பிறகு - குறைகளைக் கொட்டிக்காட்டுகிறார்கள், கனா நாட்டு ஆட்சியிலே நிக்ருமாவால் ஏற்பட்டுவிட்ட குறைகளை.

நிக்ருமாவிடம் ஆட்சிப்பிடி இருந்தபோது, வாய் திறந்திட முடியவில்லை. இப்போது தடுத்திட அவர் இல்லை. ஆகவே, எத்தனை தொல்லைகளை இத்தனை ஆண்டுகளாகத் தாங்கிக் கொண்டோம் தெரியுமா என்று "கதை கதை' யாகக் கூறுகிறார்கள்; கண்டனத்தைப் பொழிகிறார்கள்.

1958-ம் ஆண்டு கனா விடுதலை பெற்றபோது, இருந்த "இருப்பு' 2000 இலட்சம் பவுன்கள்! இப்போது கனா, கடனாளியாக இருக்கிறது. யாரால்? நிக்ருமாவினால். ஏன்?

எவருடைய யோசனையையும் ஏற்க மறுத்து, தன்னிச்சையாகச் செயலாற்றி நாட்டுப் பொருளாதார யந்திரத்தையே பாழாக்கி விட்டதால். இப்படிப்பட்ட நிக்ருமாவின் ஆட்சி தொலையத் தானே வேண்டும்!- என்று கேட்கிறார்கள் விவரமறிந்தோர்; ஆம் என்கிறார்கள் உண்மை நிலைமையை உணர்ந்தோர்.

கனா நாட்டுக்கார இதழாசிரியர் ஒருவர் நிக்ருமாவின் ஆடம்பரச் செலவு பற்றிய ஒரு கணக்கு விவரம் கொடுக்கிறார், இப்போது!

பதினாறாவது நூற்றாண்டு "சக்ரவர்த்தி' போல, கோலாகல வாழ்க்கையிலே மூழ்கிக் கிடந்தார் நாட்டிலே வறுமையைப் படர வைத்துவிட்டு என்று அவர் குற்றம் சாட்டுகிறார்.

ஆண்டொன்றுக்கு அதிபர் நிக்ருமாவுக்கு

54,400 பவுன் சம்பளமாம்! கனா குடியாட்சித் தலைவர் என்பதற்காக 12,000 பவுன்; கனா பிரதம மந்திரியாக இருந்த வகையில் பென்ஷன் 2400 பவுன்; குடும்பப் பராமரிப்பு செலவுக்காக 6000 பவுன், சுற்றுப்பயணத்துக்காக 34,000 பவுன்; மொத்தத்தில் 54,400 பவுன்!

சுற்றுப்பயணச் செலவான 34,000 பவுன், அவர் சுற்றுப்பயணம் செய்தாலும், செய்யாவிட்டாலும், தரப்பட்டாக வேண்டும்.

ஐந்து அரண்மனைகளாம் நிக்ருமாவுக்கு.

கனாவை வெளிநாட்டு ஆட்சியிலிருந்து விடுவித்தாரே தவிர, நிக்ருமா தமக்கு ஆலோசனை கூற வெளிநாட்டுக்காரர் பதினைந்து பேர்களை உடன் வைத்துக் கொண்டுதான் ஆட்சி நடத்திவந்தாராம்! உள்நாட்டுக்காரர்கள்? கனா நாட்டவர்? பலர்

திறமை மிக்கவர்கள், சுயமாகச் சிந்திக்கத் தெரிந்தவர்கள். தவறு நேரிட்டால் எடுத்துக் கூறிடும் துணிவு பெற்றவர்கள் - சிறையில்! ஆட்சிக்கு எதிராக நடக்கிறார்கள், சதி செய்கிறார்கள் என்று குற்றம் சாட்டப்பட்டு.

மக்களுடைய வாழ்க்கைத் தரம் நாளுக்குநாள் தேய்ந்துகொண்டிருக்கிறது; நாட்டு வருமானம் போதுமான அளவு வளரவில்லை என்று குற்றம் சாட்டப்பட்டிருக்கிறது; இப்போது.

கனா நாட்டை இந்தச் சீர்குலைவில் வைத்துக் கொண்டு நிக்ருமா ஆப்பிரிக்காவின் மற்றைய நாடுகளுக்கு விடுதலையும் புதுவாழ்வும் காணத் துடித்தார்; இதற்காகப் பணியாற்றும் ஆப்பிரிக்க நாடுகள் ஒற்றுமைக் கழகம் நடத்த முனைந்த மாநாட்டுக்காக என்று கடனில் சிக்கிக் கிடந்த கனா நாட்டில் பலப்பல இலட்சம் பவுன் செலவிலே ஒரு அரண்மனை

அமைத்தாராம்!

நாளாகவாக மேலும் பலப்பல குற்றச்சாட்டுகள் வெளியிடப்படக்கூடும்.

கனா நாட்டுப் பொருளாதாரம் கொக்கோ ஏற்றுமதியைத் தான் பெரிதும் நம்பிக்கொண்டிருக்கிறது. நிக்ருமா ஆட்சியில் கொக்கோ பயிரிடப்படும் இடம் அதிகமாக ஆக்கப்பட்டது; ஆனால், கொக்கோவுக்கு உலகச் சந்தையில் இருந்துவந்த விலை சரிந்து விட்டதால், கனா நாட்டுப் பொருளாதாரத்தில் சீர்குலைவு ஏற்பட்டுவிட்டது; கொக்கோ பயிரையே நம்பி வாழும் கனா மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுவிட்டனர்.

எதிர்க்கட்சிகள் அனுமதிக்கப்பட்டு, உயிரூட்டமுள்ள ஜனநாயகம் நடைபெற்றிருக்குமானால், இந்தக் குறைகள் ஒவ்வொன்றும் தலைகாட்டும்போதே,

கண்டனம் பிறிந்திருக்கும், எச்சரிக்கை கிளம்பியிருக்கும், பொதுமக்களின் எதிர்ப்பு தோன்றியிருக்கும், நிலைமையை அரசு உணர்ந்திருக்கும், கேடு தவிர்க்கப்பட்டிருந்திருக்கும்.

ஆனால், அதற்குத்தான் நிக்ருமா வழிவைக்க வில்லையே! ஒரே கட்சி அல்லவா!! ஆகவேதான் கலம் கவிழும்போதுதான் வெளியே எடுத்துக்கூற முடிந்திருக்கிறது நிலைமையை.

ஜனநாயகம், கேடு தடுக்கப்பட வழிகாட்டுகிறது; சர்வாதிகாரம், பயங்கரமான இரத்தக் களரிக்குத்தான் அழைத்துச் சென்றிடும்.

ஜனநாயகத்தில், தவறுசெய்யும் ஆளவந்தார்கள் பதவி இழந்திடுவர்; சர்வாதிகாரத்தில் தவறு செய்யும் ஆளவந்தார்,

விரட்டப்படுவார், சுட்டுக் கொல்லப்படுவார்;

எனவே, ஜனநாயக முறை ஆள்பவர்களுக்கும் நல்லது, ஆளப்படுபவர்களுக்கும் நல்லது.

ஆனால், புதிதாக விடுதலை பெற்றுள்ள ஆப்பிரிக்க நாடுகள் பலவுமே, ஒரு கட்சி ஆட்சி முறையைத்தான் மேற்கொண்டுள்ளன; அதன் விளைவாகவே, அடுத்தடுத்துப் பல புரட்சிகள், ஆட்சி கவிழ்க்கப்படும் அதிர்ச்சிகள், ஆளவந்தார்கள் அழிக்கப்படும் பயங்கரங்கள் நடந்தபடி உள்ளன. இவைகள், ஜனநாயக முறையினைப் பாழ்படுத்தி வருபவர்களுக்கும், "போலி' யாக்கி வருபவர்களுக்கும், நிலைமை காரணமாக நினைப்பிலே ஆணவத்தைப் புகுத்திக்கொண்டுள்ளவர்களுக்கும் ஒரு பாடமாக இருக்கவேண்டும்.

திட்டம் காணீர்! அணை பாரீர்!

ஆலைகளைப் பாரீர்! அலங்கார மாளிகைகளைப் பாரீர்! என்று கூறி மக்களை மயக்கிவிட முடியாது என்பதற்கும் கனா நிகழ்ச்சி ஒரு சான்றளிக்கிறது.

நிக்ருமா, தனக்கு ஒரு நிலையான புகழும், கனா நாட்டுக்கு வளமும் தரத்தக்கதான வோல்ட்டா நீர்த்தேக்கத் திட்டத்தை அமைத்தளித்தார். பாசனம் மட்டுமன்றி, மின்சார உற்பத்திக்கும் ஏற்றது இந்தத் திட்டம். தொழில் நடத்தும் அமைப்புகளுக்கு (அன்னியருடைய அமைப்பு) லோல்ட்டா திட்டத்திலிருந்து மின்சாரம் விற்பதன் மூலம் நல்ல வருவாய் கிடைக்கவும் வழி கிடைக்கிறது.

என்றாலும், மற்றத் துறைகளிலே மூண்டுவிட்ட கேடுகளும், ஊழலும் ஊதாரிச் செலவும், எல்லாவற்றையும் விட அகம்பாவப் போக்கும் சர்வாதிகார முறையும், வோல்ட்டா

திட்டம் பற்றி எழக்கூடிய மகிழ்ச்சியைக்கூட மங்கச் செய்து விடுகிறது.

அதுபோலவே, பிறநாட்டுத் தலைவர்களின் நேசம், தொடர்பு, தோழமை, அவர்கள் சூட்டிடும் புகழாரம் ஆகியவற்றினைக் கொண்டு, உள்ளே புரையோடிக் கொண்டிருக்கும் ஒரு ஆட்சியை நிலைநிறுத்த முடியாது என்பதற்கும் கனா ஒரு எடுத்துக்காட்டு.

சீனா எனது நண்பன், ரஷ்யா எனது தோழன், எகிப்து எனது நேசன் என்று பட்டியல் காட்டினார் நிக்ருமா! சொந்த நாட்டு மக்களின் கனிவைப் பெறமுடியாமல், பெறுவதற்கு ஏற்ற முறையில் ஆட்சி நடத்தாமல், பிற நாடுகளிலே ”நற்சான்று இதழ்’ பெறுவதிலே என்ன பலன் கிடைத்திட முடியும்?

தனி மனிதர் ஒருவருடைய புகழ், அவருடைய ஆட்சியின் அலங்கோலத்தை

மூடி மறைத்திட உதவாது என்பதற்கும் கனா நிகழ்ச்சி சான்றளிக்கிறது.

உலகப் புகழ் நிக்ருமாவுக்கு! அவருடைய ஆட்சியைக் கவிழ்த்து புது ஆட்சியை நடத்த முன் வந்திருப்பவர்களின் பெயர் இன்னும் பழக்கத்திற்கே வரவில்லை. என்றாலும், அமெரிக்காவும் பிரிட்டனும், பிரான்சும், நிக்ருமா உலகப்புகழ் பெற்றவர் - ஆகவே அவர் இல்லாத ஆட்சியை நாங்கள் ஏற்றுக்கொள்ள மாட்டோம் என்று கூறிவிட வில்லை; புதிய ஆட்சியைச் சட்ட சம்மதம் பெற்ற ஆட்சி என்று ஏற்றுக்கொண்டு விட்டுள்ளன.

பிரிட்டனுடைய போக்கே இதுதானே! அமெரிக்காவுடைய போக்கும் இதுதானே! என்றும் கண்டித்து விடுவதற்கும் இல்லை. இந்தியப் பேரரசும் புதிய கனா சர்க்காரை அதிகார பூர்வமான சர்க்கார் என்று ஏற்றுக்கொண்டாகிவிட்டது.

எந்த நாட்டை விடுவித்தாரோ, எந்த நாட்டிலே பாதம் பட்டால் மண்ணும் மணம்பெறும் என்று கருதப்பட்டதோ, அந்தச் சொந்த நாட்டிலே இனி நிக்ருமா நுழைய வேண்டுமானால், பெரியதோர் படையின் துணை வேண்டும். அந்த நிலை "ஒரே கட்சி' ஆட்சியின் விளைவு.

இதனை இன்னமும் உணராமல்,

செனிகால்
காம்பியா
மவுரிடானியா
மாலி
சியாரா லியோன்
லைபீரியா
அய்வரி கோஸ்ட்
டோகோ
நைஜர்
சாட்

காமிரூன்
காபன்
காங்கோ
ரூவாண்டா
டான்ஜானியா
கெனியா
மாலவி
ஜாம்பியா
மலாக்சி

ஆகிய ஆப்பிரிக்க நாடுகளில் "ஒரே கட்சி' ஆட்சி முறையைப் புகுத்தி வைத்துள்ளனர்.

உகந்தாவில் "சர்வாதிகாரம்' துவக்கப்பட்டு விட்டிருக்கிறது.

விடுதலை பெற்ற வேறு பல ஆப்பிரிக்க நாடுகளில் ஒப்புக்கு எதிர்க் கட்சிகள் உள்ளன, உண்மையில் சர்வாதிகாரம் நடந்து வருகிறது.

இந்த நிலை கண்டுதான் மிக்க

மகிழ்ச்சி அடைந்து சீனத்து சோ-இன்-லாய் ஆப்பிரிக்காவுக்கு ஆர்வத்துடன் பலமுறை பயணம் மேற்கொண்டார்.

அவர் கரம்பட்ட இடங்களிலே ஒன்று கனா!!

விடுதலை பெற்ற நாடுகள் உண்மையான ஜனநாயகத்தை மேற்கொண்டாலொழிய வாழ்வில் வளம் இல்லை என்பதை உணர்ந்து கொள்வதற்கும், விடுதலைக்காகப் பாடுபட்டவர்கள் என்ற விருது ஒன்றே போதும் எத்தனை அலங்கோலமான ஆட்சியையும் நடத்திக் கொண்டிருக்கலாம் என்ற நினைப்பு எத்தனை விபரீதத்தை, ஆபத்தை மூட்டிவிடும் என்பதையும் கனா காட்டுகிறது.

முப்பத்து இரண்டு வயதுள்ள ஒரு மாது ”நீதிபதியாக’ அமர்ந்து மக்கள் வழக்கு மன்றம் நடத்தி, கனா நாட்டு அதிபராக இருந்த நிக்ருமா செய்த குற்றங்களை விசாரித்து அவருக்கு

மரண தண்டனை விதித்தாராம்!

வேடிக்கைக்காக நடத்தப்பட்ட நிகழ்ச்சி, ஆனால் நிக்ருமா சிக்கினால், புதிய சர்க்கார் என்ன நடவடிக்கையை மேற்கொள்ளும் என்பதனை விளக்கிட உதவுகிறது.

ஆனால், மரண தண்டனைகூட பரவாயில்லை என்று சொல்லலாம்; எந்த மக்கள் வாழ்த்தி வரவேற்றார்களோ அவர்களுடைய வெறுப்பினை, அரசியல் ஆணவம் கொண்டதால் பெற்று, ஆண்ட நாட்டிலிருந்து விரட்டப்பட்டு, ஆட்சி பறிக்கப்பட்டு, ”அன்றொரு நாள்’ பற்றி எண்ணி ஏங்கி ஏங்கி மனம் சின்னா பின்னமாகிடும் கொடுமை, மரண தண்டனையைவிட மோசமானது.

நாட்டை விடுவித்தவர் என்ற காரணத்துக்காக மக்கள் பாசம்

காட்டுகின்றனர்; அது மக்களின் நல்லியல்புக்கு எடுத்துக்காட்டு. ஆனால், பாசம் கொண்ட மக்களை, இனி இவர்களை என்ன செய்தாலும் எதிர்க்க மாட்டார்கள் என்று ஆட்சியிலுள்ளோன் எண்ணிக் கொள்வது ஏமாளித்தனம்.

நாட்டை விடுவித்த நமக்கு எதிராகவா ஒரு புரட்சி நடத்திட முடியும்; நம்மையா ஆட்சியிலிருந்து விரட்டிட முடியும் என்று நம்பிக் கிடந்தார் கனா அதிபர்.

அவர் "ஒரு கட்சி' சர்வாதிகாரம் செய்திட முனையாமல் உண்மையான ஜனநாயக ஆட்சியை நடத்தியிருப்பின் இந்தக்"கதி' ஏற்பட்டிருந்திருக்காது.

பாசம் கொண்ட மக்களை ஏதுமறியாதவர்கள், எதையும் செய்ய இயலாதவர்கள் என்று எண்ணிக்கொண்டு

சர்வாதிகாரம் செய்தார் நிக்ருமா. படைத் தலைவர்களோ, படையைக் காட்டி அவருடைய ஆட்சியைக் கவிழ்த்துவிட்டனர். "தன்வினை தன்னைச் சுடும்! ஓட்டப்பம் வீட்டைச்சுடும்!' என்ற பட்டினத்தடிகள் பற்றிய கதையின் நினைவுதான் பலருக்கும் வரும் - கனா அதிபரின் வீழ்ச்சி பற்றி அறியும்போது.

ஒரு நாட்டை விடுவித்த பெருமை நிக்ருமாவுக்கு. அது வரலாற்றுச் சிறப்புமிக்க புகழ், ஐயமில்லை. ஆனால் அந்தப் புகழேவா மக்களுக்கு வாழ்வு அளித்து விடும்? பசி! பசி! என்று துடிப்பவனிடம், பசி போக்கிக்கொள்ள வழி தந்திடாமல் தனித்தனி முக்கனி பிழிந்து வடித்து ஒன்றாகக் கூட்டிச் சர்க்கரையும் கற்கண்டின் பொடியும் மிகத் தூவி என்ற பாடலை இனிமையாகப் பாடிக் காட்டினால் பதறுவான், போதும்! போதும்! பசி தீர்ந்துவிட்டது என்றா கூறுவான்!

நிக்ருமா மட்டுமல்ல தமது நாட்டுக்கு விடுதலை பெற்றுத்தந்தவர் என்ற விருது பெற்றவர்களில் மிகப் பலர் இது போலவே நடந்து கொள்கிறார்கள்.

அதற்குக் காரணம், விடுதலை வீரன் என்ற விருது இவர் பெற எத்தனை எத்தனை மக்கள் தமது இன்னுயிரையும் ஈந்துள்ளனர், இன்னல் இழப்புகளைக் கண்டுள்ளனர் என்பதனை மறந்து விடுவதும், கணக்கெடுக்கத் தவறிவிட்டதுமேயாகும்.

விளக்கிலே காணப்படும் ஒளிக்கு, அதிலே ஊற்றப் பட்டுள்ள எண்ணெய்த்துளி ஒவ்வொன்றும் தன்னைத்தானே அர்ப்பணித்திருக்கிறது, திரியின் ஒவ்வொரு இழையும் தன்னைத் தானே தந்துவிட்டிருக்கிறது, இவற்றின் மொத்த விலையே ஒளி!

ஒரு நாட்டு விடுதலைக்காகப் பாடுபட்டு வெற்றி பெற்றவர் என்ற “விருது’ ஒருவருக்கோ, ஒரு சிலருக்கோ கிடைப்பதற்காக அந்த நாட்டில்”ஊர் பேர்’ தெரியாத எண்ணற்றவர்கள் உழைத்து உருக்குலைந்து போயுள்ளனர். அவர்களின் தியாகத்தின் விளைவின் காரணமாகவே, நாடு விடுதலை பெற்றிட முடிந்தது என்ற உண்மையை உணர்ந்திடின், எத்தனை பெரிய விடுதலை வீரனுக்கும் ஓர் அடக்க உணர்ச்சி ஏற்படும். அந்த அடக்கம் அவனது ஆற்றலைப் பன்மடங்கு அதிகமாக்கிடும்; பெருமையைப் பன்மடங்கு உயர்த்திடும்.

ஆனால், இந்த இயல்பு பலருக்கு எளிதாக இருப்பதில்லை, உச்சி செல்லச் செல்ல ஒரு மனமயக்கம் ஏற்பட்டு விடுகிறது.

எல்லாம் நானே! எதற்கும் நானே! நான் மட்டுமே! என்ற எண்ணமே

தலைக்கேறி விடுகிறது. அப்போது அவர்கள் தம்மையும் அறியாமல் "கொடுங்கோலர்' ஆகிவிடுகின்றனர்.

அப்படிப்பட்ட கொடுங்கோன்மை ஏற்பட்டுவிடுமானால், விடுவிக்கப்பட்ட மக்கள் மீண்டும் அடிமைகளாக்கப்பட்டுப் போவர். ஒரு சுமை கீழே தள்ளப்பட்டுப் புதுச்சுமை தலைமீது ஏற்றப்பட்டுவிடும் நிலை! தலைவலி போய் திருகுவலி வந்தது என்பார்களே அந்த நிலை.

மக்கள் உரிமையும் நலனும் பெற்று வாழ்ந்திடவே விடுதலை பெறுகின்றனர்; அந்த நோக்கம் ஈடேற வேண்டுமானால், மக்கள் மனதில் தமது கருத்தினைக் கேட்டறிந்து கொண்டுதான் ஆட்சி நடத்தப்படுகிறது என்ற உணர்வு எழவேண்டும்; அந்த உணர்வு உண்மையான ஜனநாயகத்திலேதான் பெறமுடியும் . அந்த உணர்வை அழித்திட்டார், ஆகவே அவருடைய முன்னாள் "புகழ்' கூட

அவருக்குத் துணை நிற்க முடியவில்லை.

அவராகிலும் உள்ளபடி விடுதலைக்காகப் பணியாற்றியவர், பெருமைக்கு உரியவர், மக்களிடம் மார்தட்டிக் கூறமுடியும் "நான் உங்களுக்காகப் பாடுபட்டவன் அல்லவா?' என்று. இங்கு பார்க்கிறோமே, விடுதலைக்காகச் சிறு விரலையும் அசைக்காத பேர்வழிகள் எல்லாம்கூட, அந்த முகாமில் நுழைந்து இடம் பிடித்துக் கொண்டதாலேயே, எக்காளம் கிளப்பிடும் உரிமை தமக்குக் கிடைத்து விட்டிருப்பதாக நினைத்துக் கொள்வதை.

வியர்வை பொழியப் பாடுபட்டேன் என்று விலாப் புடைக்கத் தின்றவன், சாப்பிடும்போது ஏற்பட்ட அலுப்புக் காரணமாகச் சிந்திய வியர்வையைக் காட்டினால் "ஆமப்பா!'' வியர்வை கொட்டக் கொட்டத்தான் பாடுபட்டிருக்கிறார் என்று ஏமாளியன்றி

வேறு யார் ஒப்புக் கொள்வார்கள், கடுமையான வேலை முடிந்து விழா நடந்து விருந்துண்ணும்போது பந்தியிலே இடம் பிடித்துக் கொண்டதுகளெல்லாம் இங்கே"வீரதீரம்' பேசும்போது, உள்ளபடியே நெருப்பாற்றில் நீந்தி வெளி வந்த நிக்ருமா, பெருமை பேசிக் கொள்ளக் கூடாதா? உரிமை உண்டு, ஆனால் அதையே காரணமாகக் காட்டி, கொடுங்கோலாட்சி செய்திடின்? நாடு ஒப்புக் கொள்ளாது என்பதனைக் காட்டுகிறது கனா நிகழ்ச்சி.

வெள்ளை மாளிகையில் என்ற தலைப்பில் நான் தந்து வந்த தொடர் கட்டுரையையும் இந்தக்கிழமை நிறுத்தி வைத்து, கனா பற்றி எழுதியதற்குக் காரணம், இந்த நிக்ருமா தன் ஆற்றலால் கனா நாட்டை மட்டுமல்ல, கருப்பர் இனம் முழுவதையுமே விடுவிக்க வந்தவர் என்ற விருது பெற்றவர், என்றாலும்

நிதானம் இழந்ததால், மக்களை மதிக்க மறுத்ததால் கவிழ்ந்து விட்டார் என்பது, ஆட்சி எவ்விதம் இருந்தால் மக்களின் நிலையான ஆதரவைப் பெற்றிடும் என்ற பொதுவான பாடத்தை, வெள்ளை மாளிகையில் என்ற தொடர் கட்டுரையுடன் இணைத்துப் படித்துக் கொள்வது பயனளிக்கும் என்பதால்.

அது மட்டுமன்றி, நான் எழுதிக் கொண்டு வந்த தொடர் கட்டுரையிலும் நிக்ருமா தொடர்பு கொள்கிறார். எங்ஙனம் என்பதை அடுத்த கிழமை தந்திடும் வெள்ளை மாளிகை பற்றிய தொடர் கட்டுரையில் காணலாம்.

அன்புள்ள

அண்ணாதுரை

42. வெள்ளை மாளிகையில் - (6)

கருப்பு நட்சத்திரம்

நம்பிக்கை நட்சத்திரம் “கார்வி’
சாதியைக் காத்திடக் கொலை !
”இரத்தக் கலப்பா? - கூடவே கூடாது !’
எட்னா என்னும் இனியவள்
சதியும் விழித்திருக்கிறது !

தம்பி,

”நான் படித்த எல்லா இலக்கியங்களிலேயும் என் உள்ளத்தில் அதிக அளவு எழுச்சியூட்டியது மார்கஸ் கார்வியின் தத்துவம் பற்றிய இலக்கியமே’ ’

என்று ஆர்வத்துடன் கூறினார் கனா நாட்டு அதிபராக இருந்து அகற்றப்பட்ட நிக்ருமா,

1958லில். நீக்ரோக்களின் உரிமைக்காகவும் நல்வாழ்வுக்காகவும் போராடியவர்களிலே மிகத் தீவிரவாதி இந்தக் கார்வி. இவர் பற்றிப் பெரு மதிப்புக் கொண்டவர் நிக்ருமா. அக்ராவில் 1958லில் நடைபெற்ற அகில ஆப்பிரிக்க மக்கள் காங்கிரசில் பேசும் போது கார்வியைப் பெரிதும் பாராட்டிப் பேசியதுடன், கனா நாட்டுத் துரைத்தனம் அமைத்த வியாபாரக் கப்பல் அணிக்கு, நிக்ருமா, "கருப்பு நட்சத்திர அணி'' என்று பெயருமிட்டர். எந்தக் கார்வியிடம் நிக்ருமா அத்தனை மதிப்பு வைத்திருந்தாரோ, அவர் பொறிபறக்க பேசினவர் புதுப்புதுத் திட்டம் தீட்டியவர் - துணிவுடன் போராடியவர். ஆனால் நிர்வாகத்தைத் திறம்பட நடத்திச் செல்லாமல் தோல்வி கண்டவர்.

பல ஆண்டுகள் கார்வியின் புகழ் நாடு பலவற்றினிலே பரவி நின்றது. கருப்பரின்

கஷ்டமெல்லாம் இனித் தீர்ந்து போகும், விடுதலையும், புதுவாழ்வும் கிடைத்துவிடும் என்று எண்ணற்ற நீக்ரோக்கள் நம்பினர். மார்கஸ் கார்வி, நீக்ரோக்கள் அமெரிக்காவில் இருந்துகொண்டு அல்லலையும் இழிவையும் தாங்கிக் கொண்டிருப்பானேன், அவர்களுக்கென்று தாயகம் இருக்கிறது, ஆப்பிரிக்கா! அங்கு சென்று உரிமையுடன் வாழ்ந்திடலாம்! எழுக! என்னுடன் வருக! ஆப்பிரிக்கா சென்றிடு வோம், அங்கு நமது அரசு கண்டிடுவோம்! என்று அழைத்தார். எழுச்சி ததும்பிற்று. மேற்கிந்தியப் பகுதியில் பிறந்த இந்தக் கார்வி அமெரிக்க நீக்ரோக்களின் மாபெரும் தலைவரானார். ஆப்பிரிக்கா சென்றிடுவது என்ற அவருடைய திட்டம், சொல்லளவுடன் இருந்துவிடவில்லை; ஏற்பாடுகளே மேற்கொள்ளப்பட்டன. கப்பல்கள் தயாரிக்கப்பட்டன; பெருநிதி

திரட்டப்பட்டது; பல இலட்ச நீக்ரோக்கள் புனிதப் பயணத் துக்குத் தயாராயினர், மூன்று கப்பல்களே கிளம்பின! அந்தப் பயணக் கம்பெனிக்கு கார்வி சூட்டிய பெயர்தான் "கருப்பு நட்சத்திரம்' என்பது. அந்தப் பெயரைத்தான் ஆட்சியில் அமர்ந்த போது நிக்ருமா கனா நாட்டுக் கப்பல் அணிக்குச் சூட்டினார்.

நின்ருமாவுக்கு எழுச்சியூட்டத்தக்க சிறப்புப் பட்டங்கள் பல உண்டு; அதுபோலவே கார்விக்கும் தளபதிகளாக்கப் பட்டவர்களுக்கும் விதவிதமான பட்டங்கள்.

ஆப்பிரிக்க மாமன்னர் - மன்னர் - அமைச்சர் - தளபதி - என்றெல்லாம் பட்டங்கள். எல்லாம் அமெரிக்காவில் இருந்து கொண்டே! கார்வி ஆப்பிரிக்காவில் காலடி வைத்ததே இல்லை; ஆனால் பல ஆண்டுகள் அமெரிக்காவில் அவரைச் சுட்டிக் காட்டுவர்

பெருமிதத்துடன், ஆப்பிரிக்க மாமன்னர் என்று!

பட்டங்கள் மட்டுமல்ல, அவைகளுக்கேற்ற விதமான பகட்டுடைகள்! பவனிகள்! பராக்குகள்!

கார்வி தோற்ற பிறகு இவைபற்றிப் பலர் ஏளனம் செய்தனர்; ஆனால் அவர் புனிதப் பயணம் பற்றிய திட்டத்தை எடுத்துரைத்துக் கொண்டிருந்தபோது, ஏளனம் செய்தவர் எவரும் இல்லை. எங்கும் எழுச்சி மயம்!!

அப்போது நிக்ருமா, அமெரிக்காவில் மாணவர்!

அந்த இளம் உள்ளத்தில் பதிந்துவிட்ட எழுச்சி காரணமாகவே, "நிக்ருமா ஆட்சிக்கு வந்தபோது, கார்வியே தனக்கு"வழிகாட்டி'யாக விளங்கிவந்தார் என்று கூறிடச் செய்தது.

அடிமைப்பட்டு, இன்னலையும் இழிவையும்

தாங்கித் தாங்கிக் குமுறிக் கிடக்கும் மக்களுக்கு, விடுதலை ஆர்வம் ஊட்ட, எழுச்சி உண்டாக, ஒரு நம்பிக்கை எழவேண்டும். அந்த நம்பிக்கையைத் தரத்தக்க ஒரு மாவீரன் வேண்டும்.

கார்வி அந்த மாவீரனாக விளங்கினான். ஆனால் எழுச்சியூட்டப் பயன்பட்ட அந்த மாபெருந் தலைவன் தானே எழுச்சி வயப்பட்டு, நடைமுறைக்கு ஏற்றதல்லாத திட்டம் தீட்டி, தோல்வி கண்டான்; சிறையிலேயே தள்ளப்பட்டான்; நாடு கடத்தப்பட்டான்.

நீக்ரோ இனத்தவரை அழைத்துச் சென்று மாபெரும் ஆப்பிரிக்கப் பேரரசு அமைக்கப் போவதாக அறிவித்து, அணிவகுப்பு நடத்திய கார்வி தன் கடைசி நாட்களை, இலண்டன் நகரில் கழிக்க வேண்டியதாயிற்று; கனவு கலைக்கப்பட்ட நிலையில்; மனம் உடைந்த நிலையில்; கவனிப்பாரற்று! நட்சத்திரம்

கருப்பாகி விட்டது!

இலட்சியங்களைக் கொண்டு எழுச்சி யூட்டுவதிலேயே வெற்றி கிட்டியான பிறகு, மக்களை அணி திரட்டியான பிறகு, செயலில் ஈடுபட்டு, இலட்சியத்தை நிறைவேற்றிட முனையும் போது ஏற்படும் ஏமாற்றம் தோல்வி வரலாற்று ஏட்டினிலே பலப் பல காணக் கிடக்கின்றன. இலட்சியம் காண்பதில், அதனை மக்கள் ஏற்று கொள்ளச் செய்வதில் வெற்றி கண்டவர்களிலேயே பலர், இலட்சியத்தை நடைமுறை வெற்றியாக்கிடும் முயற்சியில் தோல்வியால் தாக்குண்டு போயுள்ளனர், காலம் ஏற்றதாக அமையாததாலும் கருவிகள் செம்மையாகக் கிடைக்காததாலும், புதிய சூழ்நிலைகள் எதிர்பாராதவகையிலே வடிவமெடுத்து விடுவதாலும், அத்தகைய தோல்விகள் ஏற்பட்டு விடுகின்றன.

அந்தத் தோல்விகள் எல்லாமே இலட்சியம் சரியானதல்ல என்பதற்குச் சான்றுகள் என்று கொண்டுவிடக் கூடாது.

தோல்வி தாக்கிடும் என்று அஞ்சி இலட்சியங்களை மேற்கொள்ளாதிருப்பதும் தவறு; நடைமுறைக்கு ஏற்றதோ அல்லவோ என்பது குறித்த கவலையற்று காலமும் கருவியும் தக்கவிதமாக அமைகின்றனவா என்பதுபற்றிப் பொருட் படுத்தாமல், வெறும் இலட்சியமுழக்கம் எழுப்பியபடி இருந்து வருவதும் பயனற்ற வேலையாகிவிடும்.

குழுவின் துளைகள் சரியானபடி அமைத்து விடுவதாலேயே அதனைக் கொண்டு எவரும் இன்னிசை எழுப்பிடலாம் என்று எண்ணுவதும் தவறு; அதுபோலவே திறமைமிக்க இசைப் புலவன் நான்! எனவே குழ-ன் துளைகள் எப்படித் தாறுமாறாக இருப்பினும் இனிய இசையினை எழுப்பிட என்னால் முடியும் என்று

இறுமாந்து கூறுவதும் தவறு.

மக்கள் நம்முடன் வருவார்களா அவர்களால் முடியுமா கடினமான பயணம் மேற்கொள்ள என்று எண்ணி எண்ணித் தயங்கிப் பயணத்தைத் துவக்காமல் இருந்து விடுவதும் தவறு. மக்கள் தன்னோடு வருகிறார்களா இல்லையா என்பது பற்றிய கவலையற்று பயணத்தை மேற்கொண்டு விடுவதும் பயனற்றதாகிவிடும்.

ஆர்வம் காரணமாக, எந்தத் திட்டமும் எளிதாக நிறைவேற்றிவிடக் கூடியது என்ற ”மனமயக்கம்’ ஏற்பட்டு விடுவதுண்டு; ஆனால் அந்த மயக்கம் பீடித்து கொண்ட நிலையிலே செய்துவிடும் செயல் வெற்றிக்கு வழி அமைப்பதில்லை.

அச்சகத் தொழிலாளியாக வாழ்க்கையைத் துவக்கிய கார்வி ஆர்வம் கொந்தளிக்கும்

உள்ளத்தினராக கொடி, படை, முழக்கம் அமைத்துக் கொண்டு "ஆப்பிரிக்கப் பேரரசு அமைத்திடுவேன்' என்று சூள் உரைத்துக் கிளம்பியபோது, வெற்றி நிச்சயம் என்றுதான் நம்பிக் கொண்டிருந்தார்.

பச்சை - கருப்பு - சிகப்பு - என்ற விதமான மூவர்ணக் கொடியினைப் பறக்கவிட்டார் கார்வி! கருப்பு, இனத்திற்குச் சின்னம்; சிகப்பு இரத்தம் சிந்தியேனும் வெற்றி காண்போம் என்பதனை உணர்த்த; பச்சை, வளமான வாழ்வு அமைந்திடும் என்பதற்கான அடையாளம்!

கிட்டத்தட்ட பத்து இலட்சம் டாலர்கள் திரட்டினார், புனிதப் பயணத்துக்காக. கப்பல்கள் கிளம்பின! வழியிலேயே இன்னல், இழப்பு! திரட்டிய பணத்தைக் கொண்டு செம்மையான அமைப்பை நடத்திட முடியவில்லை. பணம் திரண்டதும்,

பசப்பித் திரிவோர், பல்லிளிப்போர், பறித்துத் தின்போர் மொய்த்துக் கொண்டனர். பணம் பாழாயிற்று. பொதுமக்களிடம் பணம் திரட்டி மோசம் செய்ததாக வழக்குத் தொடரப்பட்டு, கார்விக்கு ஐந்தாண்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

இரண்டாண்டுச் சிறை வாழ்க்கைக்குப் பிறகு, கார்வியை அமெரிக்க அரசு நாடு கடத்திவிட்டது. அவ்வளவோடு அவர் "கதை' முடிந்தது.

கார்வியை, மாணவ நாட்களிலே கண்டு களித்து, எழுச்சி பெற்ற நிக்ருமாவும், தனது நாட்டை வாழவைக்க வேண்டும் என்ற ஆர்வம் கொழுந்து விட்டெறியும் உள்ளத்தினர்; அதிலே ஐயமில்லை. ஆனால் நடைமுறைக்கு ஏற்றதா அல்லவா என்பதுபற்றி எண்ணிப் பார்த்திடாமல் திட்டம் பல மேற்கொண்டதுடன், எவருடைய கருத்தையும் மதிக்க மறுத்து,

ஜனநாயகத்தைச் சிதைத்து ஒரு கட்சிச் சர்வாதிகாரத்தைத் திணித்தார்; எல்லாம் நாட்டின் நன்மைக்காகவே!! ஆனால் நாடு தாங்கிக் கொள்ள மறுத்து விட்டது. எந்த நாட்டிலே அவரை "வழிபட்டு' நிற்க மக்கள் துடித்துக் கிடந்தனரோ, அதே நாட்டிலே அவர் இனி"படையுடன்' வந்து போரிட்டு வெற்றி பெற்றாலன்றி "பவனி' வந்திட முடியாது என்ற நிலை.

ஜனநாயகம் சிதைக்கப்பட்டால் ஏற்படக்கூடிய கேட்டினைக் கனா நிகழ்ச்சி எடுத்துக் காட்டுகிறது; அது போன்றே ஜனநாயகத்தை போலியானதாக்கி, ஆட்சி செய்பவரை "தலையாட்டி' யாக்கிட தருக்கர் சிலர் முனையக் கூடும்; அதிலும் நிறவேறி காரணமாக அந்தத் தருக்கு ஏற்பட்டிருப்பின் எத்தகைய அக்கிரமத்தையும் துணிந்து செய்வார்கள் என்பதை எடுத்துக் காட்டுகிறார்

இர்விங் வாலாஸ், தாம் எழுதிய கருத்தாழம் மிக்க மனிதன் என்ற ஏட்டின் மூலம்.

வெள்ளையருக்கு அஞ்சி அநீதிக்கு அடிபணியவும் மாட்டேன்; கருப்பர் என்ற இனப்பாசத்திற்காகவும் அநியாயத் துக்குத் துணை நிற்கவும் மாட்டேன் என்று டில்மன் பேச்சால் அல்ல, செயலால் காட்டியது கண்டு வெகுண்ட வெள்ளைப் பேரதிகாரிகள், அவர் மீது "கண்டனம்' தொடுத்தனர்.

தகுதியற்றவர்
தருக்கர் காமவெறி பிடித்தவர்
சதிகாரருக்குத் துணை நிற்பவர்

என்ற பல்வேறு வகையான குற்றங்களைச் சுமத்தினர்.

தம்பி! இனம், ஜாதி, குலம், செல்வம் என்பவை காரணமாக அமைக்கப்பட்டுவிடும் பேத உணர்ச்சி இருக்கிறதே,

அதனால் ஆட்டிப்படைக்கப்படுபவர்கள், சொல்லிடவும் கூசும் கொடுமைகளைச் செய்திடவும் துணிவர்; இனப்பெருமை காப்பாற்றப்படவேண்டும் என்பதற்காக, கொலையும் துணிந்து செய்திடுவர்.

நான் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த நாட்களில் - ஜாதிப் பிடிப்பு இன்றுள்ளதைவிட பயங்கரமான அழுத்தத்துடன் இருந்தது; அந்த நாட்களில், ஜாதி வெறிபிடித்தவர்கள் எத்தகைய கொடுமையைச் செய்யத் துணிவர் என்பதனை எடுத்துக் காட்டும் ஒரு பயங்கரச் சம்பவம் நடை பெற்றதாகக் கேள்விப்பட்டு கிடுகிடுத்துப் போனேன்.

தன்னை சற்று மேல்ஜாதி என்று கூறிக் கொண்டு தமது மகளை மண முடித்துக் கொண்டவன் உள்ளபடி தம்மை விடச் சிறிதளவு "மட்டமான' ஜாதி என்று அறிந்து கொண்ட பெண் வீட்டார், என்ன செய்தனர்

தெரியுமோ! தா-யை அறுத்துப்போடு! அந்தத் தகாதவனுடன் செய்து கொண்ட திருமணம், சாஸ்திர சம்மதம் பெற்ற திருமணம் அல்ல!! - என்று கூவிக் கொக்கரித்து"மாப்பிள்ளை'யை விரட்டிவிட்டு, பெண்ணைத் தமது வீட்டோடு வைத்துக் கொண்டார்கள் என்று எண்ணிக் கொள்ளுவாய். அவ்விதம் செய்யவில்லை! ஊரிலே கேள்வி பிறக்காதா? ஏன் பெண் மாப்பிள்ளை வீட்டுக்குப் போகவில்லை? என்ன தகராறு சம்பந்திகளுக்கு? என்று கேள்விகள் துவங்கி, கடைசியில் "மட்டஜாதி'க் காரனுக்குப் பெண்ணைக் கொடுத்து விட்டார்களாம் என்ற உண்மை அம்பலமாகி, ஊர் ஏசுமே, ஏளனம் செய்யுமே! காலத்துக்கும் இருக்குமே அந்தக் கறை!! ஆகவே வெளியே சொல்லவில்லை. உண்மை தெரிந்துவிட்டது என்று மாப்பிள்ளையே கூடத் தெரிந்துகொள்ள விடவில்லை. புன்னகை

காட்டியபடி இருந்தனர். மாப்பிள்ளை "விருந்து' சாப்பிட வந்தவர், மாலையில் உலவப் போனார்! இரவு பிணத்தைத்தான் தூக்கிக் கொண்டு வந்து போட்டனர்; யாருக்கும் தெரியாமல், ஆளைவிட்டு அடித்துக் கொன்று போட்டு விட்டனர். மகளை விதவை யாக்கினர், ஜாதி கெடக்கூடாது, ஜாதி காரணமாக இருந்து வந்த மதிப்பு மடியக் கூடாது என்பதற்காக; கொலையே செய்தனர், குலப் பெருமையைக் காப்பாற்றிக்கொள்ள! பெரிய இடம்! ஒரு துப்பும் கிடைக்க வில்லை! ஒரு புகாரும் எழவில்லை!! இங்கு மங்குமாக, மெள்ள மெள்ளப் பேச்சுக் கிளம்பிற்று.

இருக்கும்! இருக்கும் என்றவர்களும், இதை எல்லாம் யார் கண்டனர் என்றவர்களும்' இல்லாமல் பிறவாது அள்ளாமல் குறையாது என்றவர்களும்

நிரம்ப இருந்தனர்; இந்த அக்கிரமம்

ஆகுமா என்று கேட்க எவரும் கிளம்பவில்லை. அதுமட்டுமல்ல, தம்பி! ஜாதியைக் கெடுத்துக்கொள்ள எவனய்யா சம்மதிப்பான்? என்று கேட்டனர்களும், "வேறே வழி! தீர்த்துக் கட்டுவது தவிர வேறே வழி?'' என்று"நியாயம்' பேசியவர்களும், அவன் செய்த அநியாயத்துக்கு அவனை வெட்டி வெட்டியல்லவா போட்டிருக்க வேண்டும் என்று கொதித்துக் கூறியவர்களும், கொலை! கொலை! என்று பேசுகிறார்களே!! பாம்பைச் சாகடிக்காமல், படுக்கையில் புரளவிடுவார்களா! ஜாதியைக் கெடுக்க வந்தவனைக் சாகடித்துப் போடாமல், சந்தனத் தாம்பூலம் கொடுப்பார்களா! என்று பேசியவர்களும் இருந்தனர், பெரிய புள்ளிகளாக! ஊருக்கு நியாயம் வழங்கும் பெரியவர்களாக!!

ஒரு கருப்பு இனத்தவன் நாட்டை

ஆள்வது, எஜமானர் இனமான வெள்ளையர் அடிபணிந்து கிடப்பது இந்த அக்கிரமத்தைச் சகித்துக் கொள்ளச் சொல்லுகிறீர்களா? இது சட்ட சம்மதமானது என்று சொல்லுகிறீர்களா? அரசியல் வேறு? இன இயல் வேறு என்று விளக்கம் கூற முற்படுகிறீர்களா? இந்த வாதமும் விளக்கமும் கோழைத்தனத்தின் விளைவு, மதிப்பறியா நிலையின் விளைவு; நான் அவ்விதம் இருக்கமாட்டேன்; இந்தக் கருப்பனை வெள்ளை மாளிகையிலிருந்து விரட்டி அடிக்கும் வரையில் நான் ஓயமாட்டேன், நிம்மதியாக உறங்கமாட்டேன் என்று துவக்கமுதலே உறுமிக் கொண்டிருந்தான், நிறவெறியை ஒரு தத்துவம் தர்மம் என்று நம்பிய வெள்ளை இதழாசிரியன் ஒருவன். அவன் போன்றவர்கள், டில்மன்மீது வழக்கு தொடரப்பட்டதும் களிநடமாடினர். விரட்டி விடுவதைவிட, வீழ்த்தி விடுவதைவிட,

அவன்மீது குற்றம் சுமத்தி, தண்டித்து வெளியே துரத்துவதுதான் அவனுக்கு மட்டுமல்ல அவனுடைய "இனத்துக்கே' - இன்று மட்டுமல்ல, என்றென்றும் துடைக்கப்பட முடியாத கறையை ஏற்றிவைக்கும் என்று கருதி மகிழ்ந்தனர் நிறவெறியர்கள்.

இனம், ஜாதி, குலம் ஆகியவை கெட்டுவிடாமல் பாதுகாக்கப்பட வேண்டுமானால், "இரத்தக்கலப்பு' ஏற்படக் கூடாது; இரத்தக் கலப்பு ஏற்படாமலிருக்க வேண்டுமானால் இரு இனத்தவர்க்குள்ளே கலப்புமணம் அனுமதிக்கப்படக்கூடாது; உடலுறவு ஏற்பட்டு விடக்கூடாது என்று அழுத்தமான நம்பிக்கை காரணமாக, கட்டுதிட்டமும் சட்டமும் சம்பிரதாயமும் அமைந்துவிடுகின்றன.

நீக்ரோக்கள் தாழ்ந்தவர்கள், அவர்களுடைய "இரத்தம்' வெள்ளை

இனத்தவரின் இரத்தம் போன்றதல்ல; உயர்வானது அல்ல! என்று வாதாடினர்; அக்கிரமக்காரர்களும் அடாவடிப் பேர்வழிகளுமல்ல, கற்றவர்களே!! தம்பி! இன்று வெகு எளிதாகக் கூறிவிடுகிறோம், எல்லோர் உட-லும் ஒரேவிதமான இரத்தம்தான் ஓடுகிறது! இதிலே நீ என்ன உயர்வு? நான் என்ன மட்டம்? என்று கேட்கிறோம். மறுப்பார் இல்லை!! ஆனால் அமெரிக்காவில் இன்றளவும், நீக்ரோ இரத்தம் வேறு, வெள்ளையர் இரத்தம் வேறு; இந்த இரண்டும் கலந்திடக்கூடாது என்ற முரட்டுத்தனத்தையும் குருட்டுப் போக்கையும் கட்டிப் பிடித்துக் கொண்டுள்ளவர்கள் பலப்பலர்! இத்தகைய"காட்டுமிராண்டி'க் கருத்தைக் கொண்டவர்கள் முன்பு அமெரிக்காவில், பல்கலைக் கழகப் பேராசிரியர்கள் என்ற நிலையிலும்,

பாதிரிமார்கள் என்ற பட்டத்தைச் சுமந்து கொண்டிருக்கும் நிலையிலும் இருந்தனர்.

ஒரு சொட்டு நீக்ரோ இரத்தம் கலந்தாலும் போதும், நீக்ரோ ஆகிவிட வேண்டியதாகிவிடும்! ஒரு சொட்டு நீக்ரோ இரத்தம் கலந்தால் போதும் தலைமுடி சுருண்டுவிடும், உதடு பெருத்துவிடும், முகம் தட்டையாகி விடும், அறிவு ஒளி அணைந்து விடும், மிருக இயல்பு மிகுந்துவிடும், நீக்ரோ தன்மை தன்னாலே வந்துவிடும்.

1906-ல் தம்பி! இப்படிக் கூறியவர் தாமஸ் டிக்சன் என்பார். கர்த்தருக்கு பூஜை நடாத்திடும் புனிதப் பணியில் ஈடுபட்டிருந்தார். இந்தப் போக்கினராக இருந்த பல்லாயிரவரில் இந்த டிக்சன் ஒருவர்.

இவ்விதமான குருட்டுக் கோட்பாடு காரணமாக வெள்ளை இனத்தவர் தங்கள்

”இரத்தம்’ தூய்மையானதாக இருந்தாக வேண்டுமென்பதில் மிகுந்த அக்கறை காட்டி வந்ததுடன், நீக்ரோக்களுக்கு உரிமை கொடுத்தால், மனிதத் தன்மையுடன் நடத்திவந்தால், மெள்ள மெள்ள அந்த இரு இனத்துக்கும் இரத்தக் கலப்பு ஏற்பட்டு விடும், பிறகு வெள்ளை இனத்தின் உயர்வும் தனித்தன்மையும் நாசமாகிவிடும் என்று கருதினர். இந்த எண்ணத்தின் தொடர்பாக வேறோர் கருத்து கிளம்பிற்று; நீக்ரோக்கள் காமவெறியர்கள்! சிறிதளவு ஏமாந்த நிலையில் இருந்திடின் போதும், வெள்ளை மாதர்களைக் கற்பழித்து விடுவர்; அவர்களின் விலங்கியல்புக்கு வெள்ளை மாதர்கள் ப-யாகிப் போவர்! - என்ற எண்ணம்!

நீக்ரோக்களைத்தான் வெள்ளையர் தமது பண்ணைகளிலே மட்டுமல்ல, வீடுகளில், கடைகளில், அலுவலகங்களில்,

கேளிக்கைக் கூடங்களில் வேலைக்கு வைத்துக் கொண்டிருந்தனர்; கடுமையாக உழைப்பார்கள், அடக்க ஒடுக்கமாக நடந்து கொள்வார்கள், கூ-யும் அதிகம் தரத் தேவையில்லை என்ற காரணத்தால்.

வெள்ளையருடன் - மாதருடனும் - பழகியே தீர வேண்டிய நிலை நீக்ரோக்களுக்கு.

ஆனால், வெள்ளையர்களுக்குச் சொல்லிவைக்கப்பட்ட தகவல், கருப்பரிடம் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும், அவர்கள் மிருக இயல்பினர், காமவெறி கொண்டவர்கள் என்பது!

இதன் பயனாக வீணான சந்தேகத்துக்கு ஆளாகி, சித்திரவதை செய்யப்பட்ட நீக்ரோக்களைப் பற்றிய ஏடுகள் படிப்போரின் உள்ளத்தை உருக்கும்; இரத்தக் கண்ணீர் வடிப்பர்.

நிலைமையை உணர்ந்த நீக்ரோக்கள், இது விஷயத்தில் மிக ஜாக்கிரதையாக இருப்பர். வெள்ளை மாதர்களை நெருப்பாகக் கருதுவர்! எந்த நேரத்தில் எந்த விதமான பழி சுமத்தப்பட்டு விடுமோ என்பது மட்டுமல்ல, எந்தச் சமயத்தில் என்ன விதமான பயங்கரச் சோதனைக்கு ஆளாக்கப்பட்டு விடுவோமோ என்ற பயமும்கூட.

டக்ளஸ் டில்மன் குடியரசுத் தலைவரானதும், இந்த நிலைமையை எடுத்துக்காட்டும் நிகழ்ச்சி ஒன்று நடை பெறுகிறது. தம்பி! படித்ததும, நம்மையுமறியாமல் கண்களில் நீர் துளிர்க்கிறது.

வெள்ளையர்கள் மனதில் நெடுங்காலமாகப் படர்ந்து கிடக்கும் வெறுப்புணர்ச்சி, ஒரு கருப்பர் குடியரசுத் தலைவர் என்ற உயர் பதவி

பெற்றுவிடுவதாலே மட்டும், ஒரே அடியாக மறைந்து விடுமா?

தாங்கிக்கொள்ள வேண்டி இருக்கிறது, சகித்துக்கொண்டாக வேண்டும்.
வேறு வழி இல்லையே, என்ன செய்வது,

என்று எண்ணிக்கொள்வரேயன்றி, நிறம் எதுவாக இருந்தால் என்ன, குடியரசுத் தலைவர் என்ற முறையில், அவர் நம்முடைய அன்புக்கும் மரியாதைக்கும் உரித்தானவராகிறார் என்றா எண்ணிக் கொள்வர்; இயல்பு இலேசாகவா மாறிவிடும்!

டக்ளஸ் டில்மன் குடியரசுத் தலைவராகி, வெள்ளை மாளிகை சென்ற நாள்; முதல் நாள்.

குடியரசுத் தலைவருக்கென்று உள்ள பல அலுவலர்கள், ஒரு கருப்பரின் கீழ் வேலை செய்யவேண்டி இருக்கிறதே என்ற விசாரத்தில் மூழ்கிக்கிடக்கின்றனர். சிலர்

நீக்ரோ இனத்தவரான டில்மனுக்கு அதே இனத்தைச் சேர்ந்தவர்கள் பணியாட்களாக இருப்பது முறையாக இருக்கும் என்று கருதி, தமது வேலைகளை ராஜிநாமாச் செய்துவிட முடிவு செய்தனர். அவ்விதம் முடிவு செய்தவர்களில் ஒருவர் எட்னா என்ற வெள்ளை மாது; குடி யரசுத் தலைவருக்கு அந்தரங்கக் காரியதரிசியாக வேலை பார்ப்பவர். இனி நீக்ரோ மாது ஒருத்தியைத்தான் இந்த வேலையைப் பார்த்துக்கொள்ளச் சொல்லவேண்டும், இன்று மட்டும் குடியரசுத் தலைவருக்கு அலுவலக முறைகளைக் கூறிவிட்டால் போதும் என்று எண்ணிக்கொண்டு, ராஜிநாமாக் கடிதத்தைத் தயாராக எடுத்துக்கொண்டு, அன்று அவர் பார்க்க வேண்டிய அலுவல்கள் பற்றிய குறிப்புப் புத்தகத்துடன், குடியரசுத் தலைவருடைய தனி அறைக்குச் செல்கிறாள்.

டில்மனுக்கு வணக்கம் கூறிவிட்டு, அவருடைய அன்றைய அலுவல் பற்றிய குறிப்பைத் தந்துவிட்டு, ராஜிநாமாக் கடிதத்தைத் தந்திடத் தயாராகிறாள்.

முக்கியமான ஒரு கடிதம் எழுதப்பட வேண்டும் என்ற குறிப்பினைக் காட்டுகிறார் டில்மன். அவர் கூறிக்கொண்டுவர எட்னா சுருக்கெழுத்தில் எழுதவேண்டும். இருவரும் உட்கார்ந்து கொள்வதற்கு வசதியாக அமைந்திருந்த ஒரு சோபாவைக் காட்டுகிறார் டில்மன். உடனே எட்னா, பலகணியை இழுத்து மூடுகிறாள்; அறைக்கதவைச் சாத்தித் தாளிடுகிறாள்.

"என்ன செய்கிறாய் எட்னா?''

"கதவைச் சாத்தித் தாளிடுகிறேன். தாங்கள் கூறப்போகும் தகவல் - கடிதம் - இரகசியமானதாயிற்றே! குடியரசுத் தலைவர்

தமது அந்தரங்கக் காரியதரிசியைக் கொண்டு தயாரிக்கும் கடிதத்தில் உள்ள விஷயம் வெளியே ஒருவருக்கும் தெரியக்கூடாதே....''

"அதனால் கதவைத் தாளிட்டாயா, எட்னா? வேண்டாம், கதவு திறந்தே இருக்கட்டும். ஏன் என்று திகைத்திட வேண்டாம்.... என் நிலை அப்படி.... ஒரு சம்பவம் நினைவிலே இருக்கிறது. முன்பு குடியரசுத் தலைவராக இருந்த அயிசனவர் ஒரு நீக்ரோவுக்கு முக்கியமான பதவி கொடுத்தார்... அந்த நீக்ரோ தனக்கு உதவியாளராகப் பணிபுரிய, வெகு கஷ்டப்பட்டுத்தான் ஒரு வெள்ளை மாதைப் பெற முடிந்தது.... வெள்ளை மாதர்கள் ஒரு கருப்பரிடம் வேலை பார்த்திட விரும்பவில்லை... பலர்.... எப்படியோ... ஒரு பெண் கிடைத்தாள்..... அவள் அலுவலகத் தனி அறையில் அமர்ந்து வேலை பார்க்கும்போது, கதவுகளைத் திறந்தே வைத்திருந்தாள்.

பாவம்! அத்தனை பயம், யார் என்ன சொல்வார்களோ, கருதிக்கொள்வார் களோ என்பதால்.... நான் அந்தச் சம்பவத்தை மறக்கவே இல்லை.... மறக்கவே முடியாது... எட்னா! கதவுகளைத் திறந்துவை!''

தம்பி! இந்தக் கருத்துப்பட டில்மன் கூறியதும், எட்னாவின் மனம் எப்படி உருகாமலிருந்திருக்க முடியும்? நிறம் கருப்பு என்ற ஒரு காரணத்தினால், குடியரசுத் தலைவர் பதவி பெற்ற போதிலும், வெள்ளைமாதுடன் தாளிடப்பட்ட தனி அறையில் இருப்பது முறையல்ல, முறைமை அல்ல என்று வெள்ளை உலகம் வெகுண்டெழுந்து கூறும் என்றல்லவா கருதுகிறார் டில்மன்! நிலைமையும் வெள்ளையர் நினைப்பும் அதுபோலத்தானே இருக்கிறது! எத்தனை வேதனை ஏற்பட்டிருக்கும் தனது நிலைமையை

எண்ணிப் பார்த்திடும் போது! தத்தளிக்கிறார் பரிதாபம்! இவருக்குப் பரிவு காட்டி, மனித உள்ளத்தோடு நடந்துகொள்ள வேண்டும். நிறவெறி எல்லோருக்கும் இருந்தே தீரும் என்பதில்லை; வெள்ளையரிலும் மனிதர்கள் இருக்கிறார்கள் என்பதனை மெய்ப்பித்தாக வேண்டும். அஞ்சாதீர் ஐயா! உமது நிறம் கருப்பு, என் நிறம் வெளுப்பு! இருந்தால் என்ன? ஒரு வெள்ளை மனிதர் மேலான பதவியில் இருந்தபோது நான் எப்படி நடந்து கொண்டேனோ அதுபோலவே உம்மிடம் நடந்துகொள்வேன்; பேதம் காட்டமாட்டேன்; உமது இதயத்தில் குமுறும் வேதனையை நான் உணருகிறேன்! - என்றெல்லாம் எட்னா கூறவில்லை; பார்வையின் மூலமாகவும் பெருமூச்சின் மூலமாகவும் இவ்வளவும் இதற்கு மேலும் விளக்கமாக்கினாள் போலும்!

தலைவர் அவர்களே! கதவுகள்

தாளிடப்பட்டே இருக்கட்டும். அதுதான் முறை.

எப்போதும் உள்ள முறை. சரி. எட்னா! நான் பார்க்க வேண்டிய முத அலுவல் என்ன? குறிப்பு இருக்கிறதல்லவா?

முதல் அலுவல், உமது அலுவலகத்திற்கான பணியாளர்களை, உதவியாளர்களை நியமித்துக் கொள்வது. முன்பு குடியரசுத் தலைவராக இருந்தவரிடம் வேலை பார்த்தவர்களையே வேண்டுமானால் நியமித்துக் கொள்ளலாம்; புதிதாக நியமித்துக் கொள்ளவும் செய்யலாம்....''

அப்படியா! முன்பு இருந்தவர்களையே நியமிக்க விரும்புகிறேன்... எட்னா! முதலாவதாக உன்னிலிருந்து துவக்க விரும்புகிறேன், என்னிடம் பணியாற்றச் சம்மதமா?

நன்றி, வணக்கம். பணியாற்றுகிறேன்

மகிழ்ச்சியுடன். அப்படியானால் எட்னா! குடியரசுத் தலைவராகி யுள்ள நான் முதன் முதலாகப் பிறப்பிக்கும் உத்திரவு, உன்னை வேலைக்கு அமர்த்துவதுதான்....

மெத்தவும் நன்றி, தலைவர் அவர்களே! மிக்க நன்றி, உமக்கு எல்லோருமே துணை நிற்பார்கள்; உதவி செய்வார்கள்!

அப்படியா கருதுகிறார்! எனக்கு அப்படித் தோன்றவில்லை, எட்னா!

எல்லோரும் உதவி செய்வர்! உங்கள் வெற்றிக்காகப் பிரார்த்தனை நடத்துவர். ட்ரூமனுக்கும் ஜான்சனுக்கும் துணை நின்றது போல உமக்கும் துணைபுரிவார்கள், முன்பு போலவே....

முன்பு! இப்போது நிலைமை மாறி இருக்கிறது. அவர்கள் - முன்பு தலைவர்களாக இருந்தவர்கள் கருப்பர்

அல்லவே... இருக்கட்டும்... யாருடைய உதவி கிடைக்காவிட்டாலும், ஆண்டவனுடைய உதவி கிடைக்குமல்லவா.... ஆண்டவன் கருப்பா, வெள்ளை நிறமா என்று நிச்சயிக்கப்படவில்லை அல்லவா!

இந்தக் கருத்துப்பட டில்மன் பேசக்கேட்ட எட்னாவால் அழுத்திவைக்கப்பட்ட, தாழ்வாக நடத்தப்பட்டு வந்த ஒரு இனத்தின் இதயத்தில் கொதித்துக் கொண்டிருக்கும் வேதனையை உணர முடிந்தது. டில்மன் எத்தனை நேர்த்தியான நற்குணம் படைத்தவர் என்பதையும் எப்படி உணராமல் இருந்திருக்க முடியும்? ராஜிநாமாக் கடிதத்தைக் கசக்கி எறிந்துவிட்டு, அந்த மனிதனிடம் பணியாற்றி, மனிதத்தன்மையின் மாண்பினை உயர்த்திட உறுதி கொண்டாள்.

எட்னா எனும் வெள்ளை மாதிடம் இத்துணைப் பெருங் குணத்துடன்

நடந்துகொண்ட டில்மன் மீதுதான் வெள்ளைப் பேரதிகாரிகள், சாலி வாட்சன் என்ற வெள்ளை மாதைக் கற்பழிக்க முயன்றார் என்று குற்றம் சாட்டினர்.

சாலி என்ற அந்த வெள்ளை மாது, வாட்சன் என்ற செனட் உறுப்பினரின் மகள்! சீமானின் மகள், சீமானுக்கு வாழ்க்கைப் பட்டு அவனிடமிருந்து விடுதலை பெற்று, புதிய பூங்காவில் உலவிடத் துடித்துக் கொண்டிருந்த உல்லாசி. குறியற்ற குதூகலத்திலும் சாலி குடைந்தாடியபடி இல்லை. பெரிய இடம் தேடிக் கொண்டிருந்தாள்.

ஈட்டன் என்ற வெள்ளைப் பேரதிகாரி, குடியரசுத் தலைவருக்கு அடுத்த நிலையினன்! ராஜாங்கக் காரியதரிசி என்ற செல்வாக்கு மிக்க பதவி வகித்து வந்தவன் - மணமானவன் - மனைவியோ மலைமுகடு, கடலோரம், சந்தைச் சதுக்கம், சல்லாபக்கூடம் ஆகிய

இடங்களிலே உலவிக் கொண்டிருந்தாள், இவனைத் தனியனாக்கி விட்டு! அவனைத் தன் "இனியன்' ஆக்கிக் கொண்டிருந்தாள் சாலி! இந்தச் சல்லாபியைக் கெடுக்க முயற்சித்ததாகக் குற்றச்சாட்டு. அவள் போக்கு அறிந்தவர்களும் அந்தப் புகார் கேட்டுக் கொதித்தனர்; ஆயிரம்தான் இருக்கட்டும், அவள் ஆடிக் கெட்டவள் என்ற பெயரெடுத்தவளாகக் கூட இருக்கட்டும், அவள் வெள்ளை இனம்! இவன் குடியரசுத் தலைவராகிவிட்டதாலேயே வெள்ளை இனத்தவனாகிவிடுவானா! கருப்பன்! நீக்ரோ! ஒரு நீக்ரோ வெள்ளை மாதைக் கற்பழிக்க....! என்ன அக்கிரமம்! என்ன அக்கிரமம்! என்று கொதித்தனர்.

டில்மன், மாசற்றவன்; பொறுப்பு மிக்கவன்; வெள்ளை இனத்தவரால் தன் இனத்தவர் மீது ஏற்றப்பட்டிருக்கும்

பழிகளை நன்கு அறிந்தவன்; எட்னா எனும் வெள்ளை மாது தன்னுடன் தாளிடப்பட்ட தனி அறையில் இருந்துங்கூட தகாத செயல் என்று "நாலுவேர்' கூறுவார்களே என்பதை எண்ணி நடுங்கினவன்; நேர்மையாளன்! அவன் மீது இந்தப் பழி! பொதுவாக நீக்ரோக்கள் மீது சுமத்தப்படும் பழி இது! அவர்கள் மனிதர்கள் அல்லவே! மிருகங்கள்! மிருகங்கள் தாக்கத்தானே செய்யும், அடக்கி வைக்காவிட்டால்!

சாலி வாட்சன் தந்திர மிக்க சதி புனைந்தாள்.

டில்மன் - ஒரு கரு நிறத்தான் - குடியரசுத் தலைவரானது அவளுக்குக் கட்டோடு பிடிக்கவில்லை; ஆயினும் தானாக வலியச் சென்று "சிபாரிசு' பிடித்துக் கொண்டு சென்று டில்மனிடம் வேலைக்கு அமர்ந்தாள்; - குடியரசுத் தலைவர் அவ்வப்போது

உள்நாட்டுப் பிரமுகர்களுக்கும் வெளிநாட்டுத் தலைவர்களுக்கும் நடத்திடும் விருந்து வைபவங்களைக் கவனித்துக் கொள்ளும் காரியதரிசியாக.

பகட்டும் ஆடம்பரமும், பளபளப்பாளர்கள் பலருடன் பழகும் வாய்ப்பும் கிடைக்கும் என்பதற்கு மட்டுமல்ல; குடி யரசுத் தலைவருடன் நெருங்கிப் பழகவும், அவருடைய "அந்தரங்கம்' அறியவும் வாய்ப்புக் கிடைக்கும் என்பதால்.

அதிலே என்ன ஆதாயம்? என்று எண்ணுவாய் தம்பி! ஏன் ஆதாயம் இல்லை! கண்டறியும் தகவல்களை உடனுக்குடன் தன் "காதலன்' ஈட்டனுக்குத் தந்திடலாம்; அதனைக் கொண்டு அவன் தன் செல்வாக்கை மேலும் வலுவாக்கிக் கொள்ளலாம்.... பிறகு.... பிறகு குடியரசுத் தலைவராகவே வந்துவிடலாமே, தக்கசமயம் பார்த்து. அதனால் சாலிக்கு என்ன

கிடைக்கும்? என்ன கிடைக்குமா? அவள் சாலி ஈட்டன் ஆகிவிடலாம்! அமெரிக்காவின் முதல் ஆரணங்கு ஆகிவிடலாம்!!

இத்தனை சதித்திட்டம் உருவாயிற்று, அந்தச் சரசிக்கு.

குடியரசுத் தலைவரின் கட்டிலறை! இரவு! ஆடை நெகிழ, மயங்கிய நிலையில், சாலி!

டில்மன் அவளை எழுப்புகிறார்; அவள் சாய்கிறாள் மேலே; மயக்கத்தில்! அவர் தாங்கிப் பிடித்துக் கொள்கிறார்.

எப்படி நேரிட்டது இந்த நிலை? ஏன் நேரிட்டது என்று கேட்கிறாய்; புரிகிறது தம்பி! உன் ஆசை. சல்லாபச் சீமாட்டியின் சதி நாடகத்தை அவ்வளவு சாமான்யமாகவா எண்ணிக் கொண்டாய். ஒரு வாரம் பொறுத்திரு, முழு வடிவம் கண்டிட.

அன்புள்ள

அண்ணாதுரை

20-3-66

43. வெள்ளை மாளிகையில் - (7)

சதிக்குள் சதி-1

பண்பு நிறைந்த காதலர்கள்
சாகசக்காரி சாலி வாட்சன்
சாலி தலை குனிந்தாள்!
அருங்குணக் குன்று டில்மன்

தம்பி,

அமெரிக்கக் குடியரசுத் தலைவரிடம் ”கலந்து பேசவும்‘, “உடன்பாடு காணவும்”’உதவி பெற்றிடவும்’ உலகில் பல்வேறு நாட்டின் தலைவர்கள் வருகை தருவர். அப்போது அளிக்கப்படும் விருந்துகளில், உபசரிக்க - அளவளாவ - குடியரசுத் தலைவரின் துணைவியார் உரிமை பெறுகிறார். குடியரசுத் தலைவரின்

துணைவியார், நாட்டின் முதல் ஆரணங்கு எனும் அரியநிலை பெறுகிறார். டக்ளஸ் டில்மன் தாரமிழந்தவர்; எனவே துணைவி யாருக்குப் பதிலாக, பண்புள்ள ஒரு மாது இந்தப் பக்குவமான காரியத்தைக் கவனித்துக்கொள்ளத் தேவை. இதனை அறிந்தே, வாட்சன் எனும் செனட்டரின் மகள் சாலி வாட்சன், அந்தப் பதவியைக் கேட்டுப் பெற்றாள்.

குடியரசு தலைவர் நடத்திடும் விருந்துகளுக்கு, "தக்காருக்கு' அழைப்பு அனுப்புவது, விருந்துக்கான எல்லா ஏற்பாடுகளையும் கவனித்துக் கொள்வது, விருந்தில் கலந்து கொள்ள வருபவர்களிடம் உரையாடி மகிழ்விப்பது என்பவைகள் சாலி வாட்சன் மேற்கொண்ட அலுவல்கள்.

தனக்குத் துணைவியில்லாததால். இந்த ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டது

என்பதனால் மட்டுமல்ல, இது பொருத்த மானது என்பதாலும் டில்மன் மகிழ்ச்சி அடைந்திருக்க வேண்டும். வெள்ளை மாளிகையில் எல்லாமே "கருப்பு மயம்' ஆகிவிட வில்லை; குடியரசுத் தலைவர் மட்டுமே"கருப்பு'. ஆனால், விருந்தினை நடத்திவைக்க, உரையாட, உபசரிக்க அமர்த்தப் பட்டிருப்பவரும் கருப்பு அல்ல; வெள்ளை இனமாது!! - என்பதிலே வெள்ளை இனத்தவர் மிகுந்த மகிழ்ச்சி
கொள்வரல்லவா!

துணைவியார் இறந்தபிறகு டில்மன் தனியாக இருந்து வந்தார்; ஆனால் அவருடைய உள்ளம் மெள்ள மெள்ள வேறோர் மாதிடம் ஈர்க்கப்பட்டு வந்தது. அறிவும் அடக்க உணர்வும், பண்பும் நிறைந்த ஒரு மாதினை அவர் உளமார நேசித்தார். திருமணம் செய்து கொள்ளலாம் என்ற முடிவுக்கு அவர் வருகிற

சமயத்திலேதான், குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டுவிட்டார்!

அந்தப் பெரிய பதவியில் இருந்துகொண்டு திருமணத்தை நடத்திக்கொண்டால், மிகச் சிறப்பாக அல்லவா இருக்கும்; நாடே விழாக்கோலம் கொள்ளுமே; உலகின் பல நாடுகளின் தலைவர்கள் வாழ்த்துக் கூறிட வருவார்களே, எத்தனை கோலாகலமாக நடத்திக் கொள்ளலாம்! ஏன் டில்மன் தாம் விரும்பிய மாதைத் திருமணம் செய்து கொண்டு வெள்ளை மாளிகைக்கு அழைத்துச் செல்ல வில்லை? சென்றிருந்தால் சாலி வாட்சன் தேவைப்பட்டிருக்க மாட்டாரே. நாடகம் நடந்திடவே இடம் கிடைத்திருக்காதே என்றுதான் எண்ணிடத் தோன்றும் - எவருக்கும்! ஆனால் டில்மன் மனதில் வேறுவிதமான கருத்து!

ஒரு நீக்ரோ, குடியரசுத் தலைவரானது

மட்டுமல்லாமல், இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டு, திருமணமும் செய்துகொண்டு விழா நடத்திக் கொள்கிறான், எத்தனை வீண் பெருமை! என்று வெள்ளையரில் வெறியர் கேலி பேசுவர். வெள்ளை மாளிகையில் தலைவர் மட்டுமல்ல, அவருடைய துணைவியாரும் கருநிற இனம், எப்படித் தாங்கிக் கொள்வது சகித்துக் கொள்வது என்று வெறுப்புடன் பேசுவர். எதற்காக வீண் வம்பைத் தேடிப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று டில்மன் எண்ணியிருந்திருக்க வேண்டும். அதனால்தான், அவர், தாம் மிகவும் விரும்பிய வாண்டா கிப்சன் எனும் மாதைத் திருமணம் செய்துகொள்வது தமது நிலைமைக்கு முறையாக இருக்காது என்று கருதிக் கொண்டார்.

தமக்குக் கிடைத்த பதவியைத் தமது

பெருமைக் காகவும் சுவைக்காகவும் துளியும் பயன்படுத்திக் கொள்ளக் கூடாது என்பதிலே அவ்வளவு அக்கறை காட்டினார்.

வாண்டா கிப்சன், கருநிறம்கூட அல்ல; கவர்ச்சிமிக்க மாந்தளிர் மேனி! நீக்ரோ இனம் என்றுகூடக் கூறிவிடுவதற்கில்லை. நீக்ரோ- வெள்ளையர் கலப்பிலே பிறந்து, ஒரு தலைமுறை கடந்த இனம்! முலாட்டோ என்பது அவர்கட்கு இடப்பட்டிருந்த பெயர். டில்மன்போலவே, கிப்சன் பெருந்தன்மை கொண்டவராக இருந்திருக்க வேண்டும் எனத்தெரிகிறது. நூற்றிலே தொண்ணூறு பெண்கள், தன்னை விரும்புவர், தகுதிமிக்க இடம் பெற்றிடும் போது, திருமணம் செய்துகொள்ளும்படி அல்லவா வற்புறுத்துவார்கள்! கண்ணைக் கசக்கிடுவர்! அன்றோர் நாள் சொன்னதனை அடியோடு மறந்தீரோ என்று கேட்பர்; உயர்ந்த

விட்டீர், உள்ளத்திலிருந்து என்னைத் தூக்கி எறிந்து விட்டீர் என்று கோபத்துடன் பேசுவர், பார்க்கிறோம்; கதைகளிலே மிகச்சுவையான கட்டங்களாக இவை அமைந்திருப்பதை. வாண்டா கிப்சன், தன் காதலனுக்குத் துளியும் சங்கடம் ஏற்படத் தக்கவிதமான எந்த நிலைமையும் எழக்கூடாது என்ற பெருங்குணம் கொண்டவராக இருந்திருக்கிறார்.

ஆகவே டில்மன் திருமணம் செய்துகொள்ளவில்லை; சாலி வாட்சன் வெள்ளை மாளிகையில் சீமாட்டி வேலை பார்த்து வந்தாள்.

குடியரசுத் தலைவருடன் நெருங்கிப் பழகும் நிலை.

விருந்து, வைபவம் ஆகியவற்றினை ஏற்பாடு செய்திடும் அலுவல்; ஆகவே

எப்போதும் அணிபணிபூண்டு, நகைமுகம் காட்டி இருந்திடும் நிலைமை.

மனதைக் கட்டுப்படுத்திக் கொள்ளும் திறனற்றவர்களின் மனம் நெகிழ்ந்து போவதும், தவறுகள் நேரிட்டு விடுவதும், நெருக்கடிகள் விளைவதும், இத்தகைய சூழ்நிலையில்தானே!!

ஆளப்பிறந்தவர்கள் என்ற அகம்பாவத்துடன் நடந்து கொள்ளும் வெள்ளையர்மீதே ஆட்சி நடத்தும் வாய்ப்புக் கிடைத்தாலே போதும், தலை சுற்றும்; கால் பூமியில் அழுத்தமாக அமைந்திடாது, கொடுமை செய்திடத் தோன்றும்; கோலாகலமாக நடந்திடத் தோன்றும்; எவரையும் எடுத்தேன் கவிழ்த்தேன் என்று பேசிடத் தோன்றும்! அதுமட்டும் போதாமல், அழகிய இளமை மெருகு குலையாத, ஆடிப்பாடி மகிழ்விக்க வல்ல

ஒரு வெள்ளைச் சீமாட்டியும், தன் பக்கம் நின்று, பாசம் நிறைந்த பார்வையை வீசியும், பாகு நிறைந்த சொல்லினைத் தந்தும் வந்திடின், கிடைத்தது இன்ப வாழ்வு! என்று கருதி, களியாட்டத்தில் அல்லவா மூழ்கிடத் துடிப்பர், நூற்றுக்கு அறுபதுபேராகிலும். டில்மன் மனதிலே இறுமாப்போ, மயக்கமோ, தூய்மையற்ற எண்ணமோ, துளியும் இடம் பெறவில்லை. இருந்தும், அவர்மீது சாலி வாட்சன் என்ற வெள்ளை மாதினைக் கற்பழிக்க முயன்றதாகக் குற்றச்சாட்டு; சாலியே தொடுக்கிறாள் அந்தக் குற்றச் சாட்டை!

வெளிநாட்டுத் தலைவர் ஒருவருக்கு விருந்து நடை பெறுகிறது. சுவைமிகுபானம்! சொக்க வைக்கும் பேச்சுக்கள்! ஒளிவிடு பார்வை! ஒய்யார நடை! போதைமிகுந்திடும் நிலை! டில்மன் இந்த மயக்கம் எதிலும்

சிக்கவில்லை. விருந்தளிப்பது, தனது கடமையின் ஒரு பகுதி என்று மட்டுமே கருதி அதிலே கலந்துகொண்டார்.

சாலி? உல்லாசியாகக் காட்சி தந்தாள்! அளவுக்கு அதிகமாகவே உட்கொண்டாள்; ஆனால் உட்கொண்ட போதைப் பொருளைவிடக் கொடிய சதி எண்ணம் அவள் மனதிலே நிரம்பிக் கிடந்தது. எப்படியும் அன்றிரவு டில்மனுடைய இரகசியக் குறிப்புகளைக் கண்டறிந்து, அவற்றினை ராஜாங்க மந்திரியும் தன் காதலனும் - எதிர்காலக் கணவனுமான - ஈட்டனிடம் தந்துவிடுவது என்று துணிந்து விட்டாள்.

விருந்து மண்டபம் விட்டு டில்மனும் வெளிநாட்டிலிருந்து வந்திருந்த விருந்தினர்களும் வேறோர் கூடம் சென்று ஏதோ ஓர் படக்காட்சி காண ஏற்பாடாகி இருந்தது. தனக்குத் தலைவலியாக

இருப்பதாகவும், வீடுசெல்வதாகவும் கூறிவிட்டு, விடைபெற்றுக் கொள்கிறார் சாலி வாட்சன்.

வீட்டுக்கு அல்ல, டில்மனுடைய படுக்கை அறைக்குச் செல்கிறாள்! - அவருடைய குறிப்பு ஏடுகளைக் கண்டெடுக்க! கிடைத்துவிடுகின்றன. அவைகளைத் தனியே தனித் தாட்களில் குறித்துக்கொள்கிறாள் விரைவாக. திடீரென யாரோ நடமாடும் அரவம் கேட்கிறது. ஒரு கணம் மிரட்சி! மறுகணம் சதி தயாராகி விடுகிறது; விளக்கை அணைத்து விடுகிறாள். மயங்கி விழுந்தவள் போல, கட்டலிலே சாய்ந்து கொள்கிறாள்.

உள்ளே வெண்ணிற நாகம் இருப்பது அறியாமல் நுழைந்த டில்மன், படுக்கை அறைக் கதவினைத் தாழிட்டு விட்டு விளக்கைப் பொருத்துகிறார்; காட்சி அவரைத் திணறச் செய்கிறது.

நள்ளிரவு நேரத்தில், சாலி வாட்சன், தன் கட்டிலின் மீது! அலங்காரப் பதுமை! ஒய்யார உருவம்! வெள்ளை மாது! சிங்காரவல்லி! அவள் படுத்துக்கிடக்கிறாள், ஆடை நெகிழ்ந்த நிலையில். அறையையோ தானே தாளிட்டிருக்கிறார்.!

வெள்ளை மாளிகையில் ஒரு கருப்பர், குடியரசுத் தலைவர்! அவர் படுக்கை அறையில் ஒரு வெள்ளை மாது! நள்ளிரவில்! கட்டிலின்மீது! என்ன கருதுவர் வெள்ளை மாளிகை அலுவலர்கள் இது கண்டிடின்! அமெரிக்காவே அதிர்ச்சி அடையுமே இது பற்றிக் கேள்விப்பட்டால்! வெள்ளையர் மனம் எரிமலையென வெடிக்குமே. அவர் மனத்திலே, அந்தச் சமயம் என்னென்ன அதிர்ச்சி தரத்தக்க எண்ணங்கள் கிளம்பித் தாக்கினவோ, எவ்விதமான திகைப்பும், திகிலும் கொண்டாரோ, யாரறிவார்? எப்படி

இருந்திருக்கும் அவர் நிலை என்பதை எண்ணும்போதே நடுக்கம் பிறந்திடும் பலருக்கு.

அருகே செல்கிறார், உற்றுப் பார்க்கிறார், மிகுந்த வேதனையை அடக்கிக்கொண்டு, அவள் மயங்கிச் சாய்ந்திருப்பது போலத் தெரிகிறது, தோற்றம்; அவள் நடிப்பு அவ்வளவு நேர்த்தியாக இருக்கிறது.

குடிமயக்கத்தில் இடம் புரியாமல் வந்து படுத்துக் கொண்டாள் என்று எண்ணிக்கொண்ட டில்மன், சாலியை எழுப்பினார்.

தொட்டு எழுப்பும் வரையில் எழுந்திருப்பாளா - தூங்காமல் தூங்கும் சாலி! எங்கோ கனவு உலகிலிருந்து திரும்புவது போல ஒரு பாவனை காட்டினாள். கண்களைத் திறந்தாள், மீண்டும் மூடிக்கொண்டாள், மறுபடி

திறந்தாள் ஒரு மிரட்சிப் பார்வை !

யார்.... இங்கே எப்படி நீங்கள்.. ஏன் வந்தீர்கள்...? அய்யோ! .... நான் எங்கு இருக்கிறேன்....!

தம்பி! வழக்கமான திகைப்பு, வியப்பு, அதிர்ச்சி! நாடகத் திலே நாம் பார்க்கிறோமல்லவா, சாகசக்காரிகள் தம்மிடம் சிக்கிக்கொள்ளும் ஆடவரைச் சாய்த்திடும் காட்சியினை.

"என் படுக்கை அறையில் வந்து படுத்துக்கொண்டாய் சாலி! யார் கண்களிலாவது பட்டிருந்தால் என் கதி!'

உங்கள் படுக்கை அறையா....? அய்யோ...! ஆமாம்.... தலைவருடைய தனி அறைதான்.... இங்கு எப்படி நான் வந்தேன்....? ஏன் என் தலையிலே இவ்வளவு குடைச்சல்...?

"விருந்திலே சற்று அதிகமாக உட்கொண்டு

விட்டேன், மயக்கமாக இருக்கிறது, வீடு செல்கிறேன்; தலைவலி' என்று சொல்லி புறப்பட்டாயே சாலி!

ஆமாம்.... இப்போதுதான் நினைவிற்கு வருகிறது... மயக்கம்.... தடுமாற்றம்... எங்காவது சென்று படுத்துத் தூங்கியாகவேண்டும் என்ற நினைப்பு.... இது வேறு ஏதோ ஒரு அறை என்று எண்ணி..... மன்னிக்கவேண்டும்....

பரவாயில்லை.... இப்படியெல்லாம் சில வேளைகளில் நடந்துவிடுவதுண்டு... பரவாயில்லை.. எழுந்திருந்து ஆடையைச் சரிப்படுத்திக்கொள் சாலி! மோட்டார் வரவழைக்கிறேன்.... வீட்டுக்குப் போ!

அய்யோ! ஆடைகள் இப்படியா அலங்கோலமாகவா படுத்துக் கிடந்தேன்..... என்ன தவறு செய்துவிட்டேன்....

பெருந்தவறு....

நான் அந்தப் பக்கமாகச் சென்றுவிடுகிறேன், சாலி! நீ எழுந்திருந்து ஆடையைச் சரிப்படுத்திக் கொள்.

சாலி திடுக்கிட்டுவிட்டதுபோலப் பாவனை காட்டி எழுந்திருக்கிறாள்; படுக்கைமீது இருந்த அவளுடைய "கைப்பை' கரம்பட்டுக் கீழே விழுகிறது; விழும்போது அதற்குள்ளே இருந்த பொருள்கள்-குறிப்பு அட்டைகள் - கீழே சிதறி விழுகின்றன. டில்மன் அவைகளை எடுக்கிறார்.

அவள் அலறுகிறாள்! வேண்டாம்! வேண்டாம்! நான் எடுத்துக்கொள்கிறேன்! ஒன்றுமில்லை.... சாதாரண குறிப்பு அட்டைகள்.... நானே எடுத்துக் கொள்கிறேன்....

டில்மன், குறிப்பு அட்டைகளைப் பார்த்துவிடுகிறார்; எல்லாம் விளங்கி

விடுகிறது. ஆத்திரம் அல்ல, அளவற்ற வருத்தம் பிறக்கிறது அவருக்கு.

நிறவெறி காரணமாக எவ்வளவு கீழ்த்தரமான செயலுக்கும், இழித்தன்மைக்கும் சென்றுவிடத் தோன்றுகிறதே என்பதுபற்றி எண்ணி வருத்தப்பட்டார்.

ஒன்றும் இல்லை; தவறாக எண்ணிக் கொள்ளாதீர்கள்.... குறிப்புகள் எடுத்தேன்.... உங்கள் வாழ்க்கை பற்றி ஒரு புத்தகம் எழுதப் போகிறேன்... ஒரு நாள்... அதிலே சேர்ப்பதற்காக இந்தக் குறிப்புகள்....

புரிகிறது சாலி, புரிகிறது! இதற்காகத்தானா இங்கு வந்தாய்! ஈட்டனுக்கு வேலை செய்ய, என்னிடம் வேலைக்கு அமர்ந்தாய்.... தெரியும்.... போ! இந்த இடத்தை விட்டு.... உன் குறிப்பு ஏடுகளைக் கொடு

ஈட்டனிடம்.... வேலையை முடித்துவிட்டேன் என்று கூறிவிடு....போ! சாலி! இனி இங்கு வரவும் வேண்டாம்....

"ஈட்டனைப் பற்றி எனக்கென்ன கவலை? அவனுக்கும் எனக்கும் என்ன சம்பந்தம்? அவன் மணமானவன்.... மனைவி இருக்கிறாள்... நான் அவனுக்காக எதையும் செய்யவில்லை... எங்களுக்குள் என்ன தொடர்பு? எங்கள் இருவரையும் இணைத்துப் பேசாதீர்....

நாடே பேசுகிறது! நானும் அறிவேன்.... ஈட்டன் குடியரசுத் தலைவர் வேலை பார்க்க விரும்புகிறான்.. அவனுக்காக இங்கு வேலை பார்க்கிறாய்... புரிகிறது....

உண்மையைச் சொல்லி விடுகிறேன்.... கூச்சத்தை விட்டு... ஈட்டனுக்காக நான் எதுவும் செய்யவில்லை.... குறிப்பு எடுத்தது புத்தகம்

எழுதத்தான்.... இங்கு வந்தது குறிப்பு எடுக்க அல்ல... தனியாகச் சந்திக்க... பழகி... பாசமாக இருந்திட .... விரும்புவதால்... அன்பினால்....

சீமாட்டி சாகசம் நடத்திட முனைந்தால் எப்படி இருக்கும் என்பதுபற்றி அதிகமான விவரமா தர வேண்டும்?

வெள்ளை மாளிகையில், அந்த நள்ளிரவில், கட்டிலறையில், கருப்பு இன டில்மன் கரங்களைப் பற்றிக் கொண்டு, வெள்ளை இன சாகசக்காரி காமப் படுகுழிக்கு அழைப்பு விடுகிறாள்; தழுவிக் கொள்ளத் துடிக்கிறாள்.

தனியாகத் தவிக்கிறீர்கள், பாவம்.... என் மனம் பாகாய் உருகிவிட்டது.... என் நேசம் வேண்டாமா... நானே உம்மிடம் நேசமாக இருந்திடத் துடிக்கிறேன்.. அதனால்தான் இங்கு வந்தேன்; உங்களுக்காகக்

காத்துக்கொண்டிருந்தேன்.... அதுவரையில் பொழுதை ஓட்டவேண்டுமே... அதனால் உம்முடைய குறிப்பு ஏடுகளைப் புரட்டினேன்.... சிலவற்றைக் குறித்துக்கொண்டேன், புத்தகம் எழுதப் பயன்படும் என்பதற்காக.

கைப் பையில், குறிப்புத் தாட்களைத் திணித்து அவளிடம் கொடுத்தான் டில்மன்; வெறுப்பும் கண்டிப்பும் கலந்த குரலில் கூறினான் போ! உடனே! வெளியே!- என்று.

சாலி கடைசிக் கணையையும் ஏவிட முனைந்தாள்....

பயமா... நான் வெள்ளை மாது என்பதால் பயமா? வெளியே தெரிந்தால் பகை கிளம்புமே என்ற பயமா! எனக்குக் கருப்பு இனத்தின் மீது வெறுப்புக் கிடையாது. நிறபேதம் கிடையாது.... சொல்லப்போனால் கருப்பு இனத்தின்மீது எனக்கு விருப்பம்கூட.... ஆமாம் பலருடன்

பழகி இருக்கிறேன் கருப்பு இனத்தவரிடம் ..... எனக்கு மிகவும் விருப்பம்.... பயம் வேண்டாம், துளியும். நான் என்னை உம்மிடம் ஒப்படைக்கிறேன், ஏற்றுக் கொண்டிடுங்கள்...

இணங்க மறுத்தான் டில்மன். அடிபட்ட புலியானாள் சாலி!

மாதின் மனதை அறிந்து கொள்ள முடியாத மதியிலி! சுவை உணர முடியாத மிருகம்!

ஒரு பெண்ணின் உள்ளத்தை மகிழ்விக்கத் தெரியாத உலுத்தன்!!

சுடுசொற்கள் மளமளவெனக் கிளம்பின. அந்தத் தூற்றலுக்கு இடையிலே அவள் டில்மனுக்கு எதிராக உருவாகிக்கொண்டு வரும் சதி பற்றியும் கோடிட்டுக் காட்டினாள்.

இரு கால் மிருகமே! இன்னும் எத்தனை நாளைக்கு உனக்கு இந்த வெள்ளை மாளிகை வாசம். உன் காலம் முடிகிறது, வெகுவிரைவில்.

வெள்ளை மாளிகையில் இன்னும் எத்தனை நாளைக்குக் காட்டுமிராண்டி கொலு இருந்திட முடியும்? இந்த இடத்திற்கு ஏற்ற பெரிய மனிதர் வருகிறார், புறப்பட, வெளியேறத் தயாராகிவிடு!

ஏற்கனவே ஈட்டன் என்ற வெள்ளைப் பேரதிகாரியும் நிறவெறி கொண்ட இதழாசிரியர்களும், டில்மனை விரட்டிவிடத் துடிதுடித்தபடி இருந்தனர்.

எதிர்த்துப் பேசுவதோ, இறுமாந்து கிடப்பதோ தனது முறையாக்கிக் கொண்டிருந்தால், டில்மனை ஒழித்துக் கட்டும் வேலையை அவர்கள் எளிதானதாக்கிக் கொண்டிருந்திருப்பார்கள்.

துளியும் தன்னலம் காட்டாமல், தலைக்கனம் கொள்ளாமல், பதவியைத் தன் உயர்வுக்காகவோ, தனக்கு

வேண்டியவர்களின் உயர்வுக்காகவோ பயன்படுத்தாமல், நேர்மையாக, நாணயமாக நடந்துகொள்கிறார். ஆனால், அதே நேரத்தில் எவருடைய மிரட்டலுக்கும் வளைய மறுக்கிறார். குடியரசுத் தலைவர் நாட்டு மக்களுக்கு அளித்திடும் செய்தி என்ற பெயரில் உரை நிகழ்த்துவதும், அந்த உரையைப் பெரிய அதிகாரிகள் தயாரித்துக் கொடுப்பதும், தயாரித்துத் தரப்பட்ட உரையையே தம்முடைய பேருரை என்று படித்து முடிப்பதும் ஒப்புக்கொள்ளப்பட்டிருந்த ஒரு பழக்கம்; முறை. அதன்படி டில்மனுக்கு வெள்ளைப் பேரதிகாரிகள் உரை தயாரித்து அனுப்புகிறார்கள். அதிலே இன்ன குறை இருக்கிறது, இப்படி மாற்றவேண்டும், இன்ன கருத்தைச் சேர்க்கவேண்டும் என்றுகூடக் கூறவில்லை, கலந்து பேசவில்லை, வாதாடவில்லை; அதற்கு மாறாக, எனக்காக

உரை தயாரித்துக் கொடுத்ததற்கு எனது நன்றி. ஆனால் நானே பேருரை தயாரித்துக் கொண்டுவிட்டதால், தாங்கள் அனுப்பிய உரையைத் திருப்பி அனுப்பி இருக்கிறேன். பெற்றுக் கொள்ளவும். எனக்காகத் தாங்கள் எடுத்துக்கொண்ட கஷ்டத்திற்கு என் நன்றி - இவ்விதமாக அல்லவா கடிதம் அனுப்புகிறார்!

குடியரசுத் தலைவராக்கப்பட்ட கருப்பனாக நடந்து கொள்ள மறுக்கிறார்; குடியரசுத் தலைவராகவே நடந்து கொள்ள விரும்புகிறார்; இது தாங்கிக் கொள்ள முடியாத தொல்லை; அனுமதிக்கப்பட முடியாத ஆபத்து என்று வெள்ளைப் பேரதிகாரிகள் முடிவு செய்தனர். அவர்களுக்குத் தலைமை வகித்திருந்தான், ராஜாங்க மந்திரி வேலை பார்த்து வந்த ஈட்டன். அவன் எதிரில் போய் நின்றாள் சாலி வாட்சன், ஆடை கிழிக்கப்பட்டு, அலங்கோல நிலையுடன்! உடலிலே கூடச் சில கீறல்கள்!

என்ன அலங்கோலம்? என்ன நேரிட்டது....

கருப்பு வெறியன் என்னைக் கற்பழிக்க...

அவ்வளவு அக்கிரமம் செய்யத் துணிந்தானா அற்பன்? முயன்றான்.... பெரும் போராட்டம்.... தப்பித்துக் கொண்டேன்-அந்தப் பயங்கரமான முரட்டுப் பிடியிலிருந்து.... இதோ கீறல்கள்....

ஆமாம்! இரத்தகாயம்! கருநிற மிருகம் இனியும் உலவக் கூடாது...

கட்டிப் போட்டாக வேண்டும்.....

விரட்டவேண்டும் வெள்ளை மாளிகையிலிருந்து.

ஏற்கனவே குவிந்துள்ள குற்றச் சாட்டுகளுடன்

இதோ புதிய, பயங்கரமான, நாட்டு மக்கள் காதில் விழுந்ததும் கொதிப்பினை மூட்டத்

தக்க குற்றம்... கற்பழித்தல்..

கற்பழிக்க முயற்சித்தல்...

வெள்ளை மாதை.... சீமாட்டியை.... செனட்டர் வாட்சன் திருக் குமாரியை.

டில்மன் மீது இத்தகைய முறையில் கண்டனக் கணைகள் தொடுத்ததும், அவனைப் பதவியிலிருந்து விரட்டிவிடத் தீர்ப்பாகிவிடும்.

அந்தத் தீர்ப்பு கிடைத்ததும் அன்பே! குடியரசுத் தலைவர் ஆகவேண்டியது... யார்.....?

நான்தான்..... ராஜாங்க மந்திரி ஈட்டன்தான் அடுத்த குடியரசுத் தலைவர்! முறை அதுதான்....

ராஜாங்க அமைச்சர் ஈட்டனா! என் காதலர் ஈட்டன்! என் கணவர் ஈட்டன்!...

ஆமாம், ஆரூயிரே! உன்னை மறந்தா....

பதவி எவ்வளவு உயரினும், உன்னிடம் நான் கொண்டுள்ள அன்பு குறையுமா....

எப்போது, உமது மனைவி என்று கூறிக் கொள்பவ ளிடமிருந்து விடுபடப் போகிறீர்? எப்போது விவாக விடுதலை? எப்போது சாலி வாட்சன், சாலி ஈட்டன் ஆகிவிடுவது?

சதி, தம்பி, ஒரே ஒரு வட்டம் அல்ல; வட்டத்திற்குள் வட்டம்; வட்டங்கள் என்ற முறையில்தான் இருந்திட முடியும்.

ஈட்டன், சதி செய்கிறான் குடியரசுத் தலைவர் ஆகிவிடுவதற்காக.

சாலி சதி செய்கிறாள் ஈட்டனின் மனைவி ஆவதற்காக.

ஈட்டனுக்காகச் சாகசம் காட்டி வேலை செய்கிறாள் சாலி! கற்பழிக்க முயற்சித்த குற்றம் சுமத்தப் படுகிறது டில்மன்மீது. தீர்ப்பைப்பற்றிய சந்தேகம் எழவே

நியாயமில்லை. மிகப்பெரும் அளவு வெள்ளையர்கள் - அதிலும் நிறவெறி பிடித்தவர்கள் கொண்ட அவையில், ஒரு கருநிறத்தான் வெள்ளை மாதைக் கற்பழிக்க முயன்றதாக மெய்ப்பிக்கப்பட்டுவிட்டால், பிறகு அவன் கீழே உருட்டப்படுவான் என்பதிலே என்ன சந்தேகம் எழ முடியும்?

கண் சிமிட்டினான்! பச்சைச் சிரிப்பு சிரித்தான்! அந்தத் தோட்டத்து மலர் எனக்குக் கிடைக்குமோ என்று கேட்டான்!

என்ற இவ்விதமான "குற்றச் சாட்டுகளுக்கே' கருப்பரை, அடித்துக் கொன்று மரத்திலே தொங்கவிட்டிருக்கிறார்கள்! நிறத் தூய்மையைக் காத்தாக வேண்டும் என்ற முறையை வெறியாக்கிக் கொண்ட அமெரிக்காவில்.

வழக்கு நடைபெற்றுக்

கொண்டிருக்கும்போது, டில்மன்மீது கண்டனக் கணைகளைச் சரமாரியாகத் தொடுத்துக் கொண்டி ருக்கும்போது, இதழ்கள் வெறுப்பையும் கோபத்தையும் கக்கியபடி இருந்தபோது, தீர்ந்தது இவன் காலம் என்று மக்கள் பேசிக் கொண்டிருந்தபோது, மற்றோர் விசித்திரமான விபரீதம் நடக்கிறது.

சாலி ஈட்டன் ஆகப்போவது உறுதி; வெள்ளை மாளிகையின் ஆரணங்கு ஆகப் போகும் நாள் விரைவில் என்று எண்ணி அகமகிழ்ச்சியுடன் இருந்து வந்த சாலி வாட்சன் தற்செயலாக, ஈட்டன் நடத்தும் சதியைக் கண்டறிகிறாள்.

உனக்காகத்தான் இவ்வளவும் என்று சாலி கூறியபோது உன்னோடு சேர்ந்துதான் வெள்ளை மாளிகைக்குச் செல்லப் போகிறேன் என்று பசப்பிய ஈட்டன், திருநாள் உறுதி என்று தெரிந்ததும், எங்கே நெடுந் தொலைவில்

இருந்து வந்த தன் மனைவிக்கு அழைப்பு அனுப்புகிறான்! நான் குடியரசுத் தலைவராகப் போகிறேன்; வெள்ளை மாளிகை உன்னை அழைக்கிறது; உடனே வந்திடுக! என்று; அவளும் வந்து சேருவதாகச் சேதி அனுப்புகிறாள்.

இது தெரிந்ததும் சாலி சீறுகிறாள்; ஈட்டன் தன்னை ஏமாற்றுவது அறிந்து பதறுகிறாள்.

டில்மன் மீது தொடுக்கப்பட்ட வழக்கிலே நெருக்கடியான கட்டம்!

அதே நேரத்தில், சாலி - ஈட்டன் தொடர்பிலே நெருக்கடி!

ஆத்திரம் பீறிட்டுக் கொண்டுவந்த நிலையில், சாலி வாட்சன் , தன் தவறு பற்றியும், டில்மன் மாசற்றவன் என்பது குறித்தும், குற்றச்சாட்டு பொய் - இட்டுக் கட்டப்பட்டது என்பது

பற்றியும் - தன் தகப்பனாரிடம் ஒப்புக் கொள்கிறாள். அவளுடைய வாக்கு மூலம், சட்டமுறைப்படி தயாரிக்கப்படுகிறது. அதை எடுத்துக்கொண்டு போகிறார் வாட்சன்; தனது மன்னிப்பைத் தெரிவித்துக் கொள்கிறார் டில்மனிடம்.

"வீணான பழி சுமத்தினார்கள் என்பதை உணருகிறேன். இதோ என் மகள் தந்த வாக்குமூலம். இதனைத் தாங்கள் பயன்படுத்திக் கொள்ளலாம்'' என்று கூறி சென‌ட்டர் வாட்சன் தன் பெருந்தன்மையை எடுத்துக் காட்டுகிறார்.

அதனைக் காட்டிலும் மேலான பெருங்குணம் தமக்கு உண்டு என்பதை எடுத்துக்காட்டும் விதத்தில் டில்மன் அந்த வாக்குமூலத்தை வாட்சனிடமே கொடுத்துவிட்டு உண்மையை நீங்கள் உணர்ந்து கொண்டீர்களே அதுபோதும்

எனக்கு என்று கூறுகிறார்.

ஆனால் வாட்சன்! இந்த ஒரு விஷயம், வீண்பழி என்பதாலேயே, நான் உமது பக்கம் இருப்பேன் வழக்கிலே என்று எண்ணிக்கொள்ளாதீர். வழக்கு விவரம் முழுவதும் அறிந்து, நேர்மையின் பக்கம்தான் நிற்பேன், என் மகள் பழி சுமத்தினாளே என்ற பரிதாபத்துக்காக உம்பக்கம் நிற்பேன் என்று நம்பிவிடா தீர்கள் என்று அந்த முதியவர் கூறகிறார். நேர்மையின் பக்கம் நின்றிடுவதை நான் வரவேற்கிறேன் என்று ஒப்பம் அளிக்கிறார் டில்மன்.

இப்படிச் சித்திரவதை செய்வதைவிட, டில்மனை வெள்ளை வெறியர்கள் ஒரே அடியாகக் கொன்று போட்டு விட்டிருக்க லாமே என்று கேட்கத் தோன்றும்.

ஆபிரகாம் லிங்கனைக்

கொன்றுவிடவில்லையா! கென்னடி யைச் சுட்டுக் கொன்றுவிடவில்லையா! டில்மன் மீது மட்டும் கொலைகாரர்கள் பாயாமலா இருந்திருப்பார்கள். பாய்ந்தனர்! தப்பித்துக் கொண்டார். அந்தக் கொலை முயற்சியை யொட்டியும் ஒரு உள்ளம் உருக்கும் நிகழ்ச்சி இருக்கிறது. அடுத்த கிழமை அதுபற்றிக் கூறுகிறேன்.

அன்புள்ள

அண்ணாதுரை

27-3-66

44. வெள்ளை மாளிகையில் - (8)

சதிக்குள் சதி ! (2)

ஆபிரகாம் லிங்கன் - கென்னடி போல....
ஆத்திரத்திலே அறிவை இழந்து....
உல்லாசியின் சதி வலை
வீரன் விழித்துக் கொண்டான்
கருப்பைக் காத்தது "வெள்ளை'....
உலகம் காடாகிப் போய்விடவில்லை !

தம்பி,

அடக்கப்பட முடியாத ஆத்திரம், அதிலும் நீதியற்ற காரணத்துக்காக மூட்டிக் கொள்ளப்பட்டுவிடும் ஆத்திரம், வெறியாகிவிடுகிறது; அந்த வெறியிலே சிக்கிக்கொள்பவர்கள் எந்தக் கொடுமை செய்திடவும், இழிசெயல் புரிந்திடவும் கூசுவ

தில்லை. வெறிகளில் மிக மோசமானது, தன் இனம், தன் மதம் உலகிலேயே உயர்வானது, தூய்மையானது என்ற அழுத்தமான நம்பிக்கையின் காரணமாக விளைந்திடும் வெறி - தன் இனத் தூய்மை காப்பாற்றப்பட்டாக வேண்டும் என்பதற்காக அந்தத் தூய்மையைக் கெடுக்க முனைபவர்களை அல்லது அந்தத் தூய்மையை ஒப்புக்கொள்ள மறுப்பவர்களைத் தீர்த்துக் கட்டிவிடவும் துணிந்துவிடச் செய்கிறது.

அப்படிப்பட்ட கொலைபாதகத்துக்குப் பலியான வர்களே, அமெரிக்கக் குடியரசுத் தலைவர்களான ஆபிரகாம்லின்கனும், கென்னடியுமாவர்.

இங்கேயும் உலக உத்தமர் என்று கொண்டாடப்பட்ட காந்தியாரின் உயிரைக் குடித்ததும் ஒருவிதமான வெறி உணர்ச்சியேயாகும்.

எதிர்பாராத வகையில் குடியரசுத் தலைவராகிவிட்ட டக்ளஸ் டில்மனையும் கொன்று போட வெள்ளை வெறியர் திட்டமிட்டதிலே வியப்பேதும் இல்லை. ஆனால் டில்மன் தப்பித்துக் கொள்கிறார். அவரைக் கொலை செய்துவிடத் தீட்டப்பட்ட சதி தோற்றுவிட்டதாலேதான், அவர் மீது கொடுமையான பழிசுமத்தி வழக்குத் தொடுத்தனர்.

கொலை செய்து போடுவதைக் காட்டிலும் மோச மான செயல் ஒருவருடைய பெயருக்குக் களங்கம் ஏற்படுத்தி, இழிவான பழிசுமத்திக் கேவலப்படுத்தி விடுவது.

டக்ளஸ் டில்மனை, வெள்ளை மாளிகைத் தோட்டத்திலேயே அவர் உலவும்போதே மறைந்திருந்து தாக்கித் தீர்த்துக்கட்டி விடுவது என்று தீர்மானித்த சதிகாரர்கள், அதற்கேற்ற சூழ்நிலையை உருவாக்கிட முனைந்தனர்.

குடியரசுத் தலைவருக்குத் தக்க பாதுகாப்பளிக்க, திறமைமிக்க காவலர் பலர் அமர்த்தப்பட்டிருந்தனர். அவர்களில் மிகுந்த கடமை உணர்ச்சியும், துணிவும் கொண்ட வெள்ளை இனத்தவன் ஒருவன் இருந்தான். அவன் மனதிலேயும் ஒரு குமுறல் மூண்டு கிடந்தது; இனவெறி காரணமாக அல்ல; தனக்கு உரிய இடம், மே-டம் தரப்படாமல், அந்த மே-டம் ஒரு நீக்ரோவுக்குத் தரப்பட்டுவிட்டது என்பதாலே மூண்டிட்ட குமுறல். ஆனால் அவனைக் கைக்குள் போட்டுக்கொண்டு காரியத்தை முடித்திட சதிகாரர்கள் முனையவில்லை. ஒருவேளை மனதிலே குமுறல் இருப்பினும், இத்தகைய இழிசெயலுக்கு அவன் உடந்தையாகிட மாட்டான் என்று எண்ணிடத்தக்க விதமாக அவன் போக்கு இருந்திருக்கும்போல

இருக்கிறது. சதிச் செயலுக்கு அவன் உடந்தையாக இருக்க மாட்டான் என்பதை மட்டுமல்ல; அவன் டில்மனைக் காத்து நிற்கிற வரையில் தமது கொலைபாதகத் திட்டம் நிறைவேறாது என்ற எண்ணமும் தோன்றிவிட்டது சதிகாரர்களுக்கு. ஆகவே அவனை முதலில் மடக்கத் தீர்மானித்தனர். அதற்கு ஒருமை விழியாள் கிடைத்தாள்!

அவள் அழகி; கருநிறக் கவர்ச்சியும் இளமை மெருகும், இனிய இயல்பும் கொண்டவள் : நீக்ரோ.

நிறவெறி தலைவிரித்தாடிடும் நிலையிலும் இனத்தூய்மை காப்பாற்றப்படுவதற்காக எத்தகைய கொடுமையையும் இழிசெயலையும் செய்திடத் துணிவுகொண்ட நிலையிலும், காமம் - அல்லது காதல் எனும் உணர்ச்சி, இன பேதம், நிறபேதம் என்பவைகளைக்

கடந்த ஒரு கவர்ச்சியாக அல்லவா இருக்கிறது! அந்தக் கவர்ச்சியையே, விழிப்புடன் இருந்து வந்த அந்த வெள்ளைக் காவலாளியை வீழ்த்தப் பயன்படுத்தினர். இது ஒரு "ஏற்பாடு' என்பதனை அவன் உணரவில்லை; மைவிழியாள் உள்ளபடி தன்னிடம் மயங்கிவிட்டாள் என்று எண்ணிக் கொண்டான்; அவன் அவளிடம் மயங்கி விட்டதன் விளைவு அந்த எண்ணம்.

ஒரு சிற்றுண்டி விடுதியில் ஏற்பட்ட சந்திப்பு, புன்னகை யாகி, பொருளற்ற பேச்சாகி, பொழுது போக்காகி, பிறகு ஆசைதான் ஆனால் அச்சமாக இருக்கிறதே என்ற சாகசப் பேச்சாகி, பிறகு இதுவரையில் நான் என்னை எவரிடமும் ஒப்படைத்ததில்லை, உம்மிடமோ என்னை முழுவதும் ஒப்படைத்து விடத் துணிந்துவிட்டேன் என்ற காதற்பேச்சாகி, கடைசியில் தனி அறைக்கே கொண்டு சென்று

விட்டது.

அன்றைய தினமும் அவன் குடியரசுத் தலைவரின் அருகிருந்து காவல் செய்யவேண்டிய முறை இருந்தது. ஆனால் இந்த விருந்து முடிந்ததும் வேலையைக் கவனிக்கலாம் என்று இருந்துவிட்டான். தன்னைக் கடமையைச் செய்யவிடாமல் தடுத்திடவே இந்தக் கள்ளி அமர்த்தப்பட்டிருக்கிறாள் என்பதை அவன் உணரவில்லை. கள்ளி என்றா எண்ணிக்கொண்டான், கற்கண்டு, பாகு, தேன் என்று அல்லவா எண்ணிக் கொண்டான். ஆடவன்! இளைஞன்! மயக்கம்! தன்னையும் அறியாமல் ஒரு பயங்கர சதியிலே பங்கெடுத்துக்கொள்கிறோம் என்ற எண்ணமே எழவில்லை, அவன்தான் பாவம் அவளுடைய விழியின் ஒளியையும் அது விடுத்திடும் அழைப்பையும் கண்டு

மெய்ம்மறந் திருக்கிறானே, மதுவும்கூட அருந்திவிட்டான்! நிலைமையை மேலுமா விளக்கவேண்டும்.

இசைத்தட்டு ஒலி எழுப்புகிறது; அவள் இதழ் அழைக்கிறது; அவன் தன்னை மறந்திருந்தான்.

நீக்ரோ இனத்தவள் தன் இனத்தானைக் கொன்று போடச் செய்யப்படும் சதியிலே எப்படி ஈடுபட முடிந்தது என்று வியப்பு ஏற்படும். தம்பி! வெறுப்பும் ஆத்திரமும், தெளிவான அறிவின் மீது கட்டப்படுவதில்லையல்லவா! டக்ளஸ் டில்மன்மீது வெள்ளையரில் வெறியருக்கு, நிற பேதம் காரணமாகப் பகை கிளம்பியது போலவே, நீக்ரோ இனத்தவருக்கு, டில்மன் தன் இனத்தை மறந்தவன், கை விட்டு விட்டவன், காட்டிக் கொடுப்பவன் என்ற ஒரு தவறான எண்ணம் காரணமாக வெறுப்பும் ஆத்திரமும் கொந்தளித்துக் கொண்டிருந்தது.

வெள்ளை மாளிகையில் கொலு விருக்கிறான், இவன் இனப்பற்று உள்ளவனானால், ஒரே வரியில், நமது இனத்தின் இழிவைத் துடைத்திட முடியாதா - செய்தானா?

குடியரசுத் தலைவர் பதவியைக் காப்பாற்றிக் கொண்டால் போதும், இனம் எக்கேடு கெட்டால் என்ன என்று எண்ணி விட்டான்; சுயநலக்காரன்.

இனத்துக்காகப் பரிந்து பேசினால், வெள்ளைப் பேரதி காரிகள் தன்னைக் கவிழ்த்து விடுவார்களோ என்ற பயம்! கோழை!

இவன்தான் இப்படி என்றால் நமது இன விடுதலைக்காகப் பாடுபட்டுக் கொண்டு வந்ததே ஒரு இயக்கம், அதனையாவது விட்டு வைத்தானா? தடைச் சட்டம் போட்டு விட்டான்! இனத்தைக் காட்டிக் கொடுத்து விட்டான்.

அது மட்டுமா! வெள்ளையர்களே ஏதோ பச்சாதாபப் பட்டுக்கொண்டு, நீக்ரோ மக்களுடைய வறுமையைப் போக்க பெரிய தொகையைச் செலவிட ஒரு சட்டம் கொண்டுவந்தார்கள்; இந்த இனத்துரோகி அந்தச் சட்டத்தையுமல்லவா, தூக்கி எறிந்து விட்டான்! இவனுக்கு வெள்ளை மாளிகையில் வாசம்! இவன் இனம் நாம்! நமக்குச் சாக்கடை ஓரம்! இவனை நாம் நமது இனத்தின் ரட்சகன் என்று கூறிக் கொண்டாடினோம் புத்தி கெட்டு! இவன் நமது இனத்தின் இழுக்கு அவ்வளவும் ஒன்று திரண்டு வந்துள்ள உருவம்! நீக்ரோ இனத்தை நாசமாக்க வந்துள்ள கேடு! தம்பி, இந்த விதமான எண்ணம், நீக்ரோக்களில் மிகப் பலருக்கு. அவர்களின் தயாரிப்பு இந்தக் கவர்ச்சிமிக்க ஒரு நிறக்காரிகை!

கட்டிலின்மீது சாய்ந்து கிடக்கிறாள்; காமவெறியால் அவன்

ஆட்டிவைக்கப்படுகிறான்; மிருக உணர்ச்சியை மது கிளறி விடுகிறது. காரியம் கச்சிதமாக முடிவடைகிறது என்ற களிப்புடன் அவள் பேசுகிறாள்:

நான் உன்னிடம் மயங்கியதுபோல, இதற்கு முன் வேறு எவரிடமும் மனதைப் பறிகொடுத்ததில்லை. எத்தனையோ பேர் முயற்சித்தனர். எட்டிநில்! கிட்டே வராதே! என்றேன். ஆனால் உன்னிடம்! எல்லோரையும் போலவா நீ? நீ தனி!

அதென்ன! நான், மற்றவர்களைக் காட்டிலும் எதிலே சிறந்தவன்!

எப்படிச் சிறந்தவன்! தம்பி! உணர்ச்சி தோன்றிய நாள் தொட்டு, நடை பெற்றுக் கொண்டு வரும் "உரையாடல்' தான்! காதலில் கட்டுண்ட நேரத்தில், பெருமூச்சும் பூங்காற்றாகத் தோன்றும்; பொருளற்ற

பேச்சிலே ஒரு தனிச் சுவை தெரியும்; உள்ளம் நெகிழ்ந்திடும் நிலை அல்லவா! அதிலும் ஒரு பெண்”சல்லாபம்’ செய்வது என்று தீர்மானித்துவிட்டால், மயங்காத ஆடவன் ஏது!!

சல்லாபப் பேச்சோடு பேச்சாக அவள்,

”எனக்கு ஒன்று பிடிக்கவில்லை, உன்னுடைய தகுதிக்கும் திறமைக்கும் ஏற்ற வேலையிலா இருக்கிறாய்... போயும் போயும் காவல் வேலை! அதிலும் யாருக்கு....

அமெரிக்கக் குடியரசுத் தலைவருக்கு!! அது என்ன சாமான்யமா....

தலைவர்! குடியரசுத் தலைவர்! யார்... கருநிறத் தான்தானே...

உன் இனம்! உன் இனத்தவர் வெள்ளை மாளிகை யிலே கொலுவிருப்பது உனக்குப் பெருமை அல்லவா....

என் இனம்! இன உணர்ச்சி அற்ற மனிதனை என் இனம் என்று எண்ணிப் பெருமைகொள்ள நான் என்ன முட்டாளா! எப்படியோ அங்கே இடம் கிடைத்து விட்டது! அனுபவிக்கிறான்! அவ்வளவுதானே....

வியப்பாக இருக்கிறதே உன் பேச்சு.,. வெறுப்பாகப் பேசுகிறாயே.... மகிழ்ச்சியால் துள்ளுவாய் என்றல்லவா எண்ணினேன்....

மகிழ்ச்சியா? எதற்காக! என் இனத்தின் உரிமைக் காகப் போராடி வந்த இயக்கத்தை ஒழித்துக் கட்டினானே அதற்காகவா.... என் இனம் வறுமையிலிருந்து விடுபட, பெரிய தொகை தரச் சட்டம் கொண்டு வந்ததை வேண்டா மென்று கூறினானே, அதற்காகவா....

இவ்விதமாகப் பேச்சு தொடர்ந்திடவே, விருந்து பெற வேண்டிய நேரத்தில்

வீணான விவாதம் நடைபெறுகிறதே, காலம் வீணாகிறதே என்ற கவலை பிறக்கிறது அவனுக்கு. துடியிடை! சுவைதரும் இதழ்! இனக்கவர்ச்சிமிகு ஈடில்லா இன்பம்! இவைகளை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறான் அவன்! அவளோ கட்டிலறையில், அரசியல் பேசுகிறாள்! அதிலும் வெறுப்பைக் கொட்டிக் காட்டும் பேச்சு! இடத்திற்கோ, நேரத்திற்கோ, நிலைமைக்கோ துளியும் பொருத்தமற்ற பேச்சு. அவளிடம் அவன் எதிர் பார்த்தது, கண்ணாளா! என்ற கொஞ்சுமொழி; அவளோ வெள்ளை மாளிகையில் உள்ள "கருப்பன்' எங்கள் இனத்துரோகி என்று பேசுகிறாள். திடுக்கிட்டுப் போனான். அதிலும், குடியரசுத் தலைவரின் அருகே இருந்து வந்ததால் அவன் அறிந்திருந்த உண்மை நிலைமைக்கும், அவள் டில்மனைக் குறித்துப் போட்டிருந்த

மதிப்பீட்டுக்கும் பொருந்தவே இல்லை.

ஒரு உண்மை கூறுகிறேன், உல்லாசி! அதை மட்டும் கேட்டிடு; மேற்கொண்டு அரசியல் பேச்சே வேண்டாம்; ஆடிப்பாடி மகிழ்ந்திட வேண்டிய நேரம் இது; அரசியல் பேச அல்ல! நான் அறிந்துள்ள உண்மையைக் கூறுகிறேன், கேள். டில்மன் நீ நினைப்பது போலக் கெட்டவன் அல்ல. வெள்ளை மாளிகையிலே வாழ்வதிலே சுகம்கண்டு அதிலே மூழ்கிக் கிடந்திடவில்லை. இனத்தைக் காட்டிக் கொடுத்திடும் கயவன் அல்ல, டில்மன். தன் இனத்திற்கு ஏதும் செய்திட முடியாத இக்கட்டான நிலைமையில் சிக்கித் தத்தளிக்கிறான்...

என்ன சொல்லுகிறாய்...? டில்மன, வெள்ளை மாளிகை வாழ்விலே இன்பம் கண்டு அதிலே மூழ்கி, தன் இனத்தையும் மறந்து கிடந்திடும் போக்கிலே இல்லை என்றா

சொல்லுகிறாய்....

சொல்லப்போனால், வெளியே இருப்பவர்கள்தான் டில்மன் சொகுசான வாழ்க்கை வாழ்வதாக எண்ணிக் கொள்வார்கள்... உண்மை என்ன தெரியுமா.... யாரை நம்புவது என்றுகூடத் தெரிந்துகொள்ள முடியாத நிலையில், டில்மன் தவிப்பதை நான் கண்கூடாகப் பார்க்கிறேன். டில்மன் நிலைமையைப் பார்க்கும்போது எனக்கு "ஐயோ பாவம்' என்றுதான் தோன்றுகிறது. சுற்றிலும் சூழ்ச்சிக்காரர்கள் எப்படி, எப்போது கவிழ்த்துவிடுவது என்று திட்டம் தீட்டியபடி உள்ள சதிகாரர்கள். தாங்கள் ஆட்டி வைக்கிறபடி அவன் ஆடவேண்டும், இல்லையென்றால் அவனைப் பதவியி லிருந்து விரட்டிட வேண்டும் என்று எண்ணும் சூழ்ச்சிக் காரர்களுக்கு மத்தியிலே கிடந்து திகைக்கிறான்.....

உண்மையாகவா... டில்மன், வெள்ளையரின் விளையாட்டுப் பொம்மையாக இல்லையா?

யார் சொன்னது அப்படி?... டில்மன் வெள்ளையர் கருப்பர் என்ற நிறத்தை அடிப்படையாக்கிக் கொண்டு கடமையைச் செய்யவில்லை. நாணயமானவனாக நாலுநாள் பதவியில் இருந்தாலும் போதும் என்று எண்ணுகின்றவன். தன்னை வெள்ளையர் இழிவாக நடத்த விரும்புவதையும் உணருகிறான்; கருப்பர் தன்னிடம் வெறுப்புக் கொண்டிருப்பதையும் உணருகிறான். ஆனால் தன் மனச்சாட்சியின்படி நடக்க முனைகிறான்; குடியரசுத் தலைவருக்கு உள்ள கடமையைச் செம்மையாகச் செய்திட விரும்புகிறான். மகிழ்ச்சி இல்லை! நட்புக் காட்டுவோர் இல்லை!! பரிதாபமான நிலைமை! இதுதான்

உண்மை. சரி.... சரி.... மேலும் நமக்கு எதற்கு அரசியல் .... வா! வடிவழகி! வாரி அணைத்திட நான் துடித்திடும் வேளையில், நீ மேலும் அரசியல் பேசி ஆயாசத்தை மூட்டிவிடாதே; வா!

அவள் வரவில்லை! துடிதுடித்து எழுந்திருக்கிறான். சற்றே தொலைவில் நிற்கிறாள், பாசப்பார்வை காணோம்! பாகுமொழி இல்லை! மையலூட்டும் நிலை இல்லை! கண்களிலே கொப்ப ளித்துக் கொண்டு வருகிறது கண்ணீர்.

பெருந்தவறு! பெரிய அக்கிரமம் செய்யத் துணிந்தேனே! நானோர் பேதை! கலகக்காரர் பேச்சை நம்பினேன்; நாசவேலைக்கு உடந்தையானேன்.... உண்மை புரிகிறது. டில்மன்.... பாவம்..... இந்நேரம் என்ன நேரிட்டிருக்குமோ.... மனம் பதறுகிறதே... என் இனத்தவரின் சிலர், டில்மன் இனத்துரோகி, ஒழித்துக் கட்ட வேண்டும் என்று கூறினர்;

இணங்கினேன். இங்கு உன்னை மயக்கத்தில் கட்டிப் போட்டு வைக்கச் சம்மதித்தேன். என் சல்லாபத்தில் உன்னைச் சிக்கவைக்கச் சொன்னார்கள். அந்த நேரமாகப் பார்த்து டில்மனை அவர்கள்.... தீர்த்துக்கட்ட... ஐயோ! என்ன ஆகி இருக்குமோ இந்நேரம்....

கட்டழகியிடம் கொண்ட மையல், சல்லாப உணர்ச்சி, வா-பத் துடிப்பு எல்லாம் இருக்குமிடம் தெரியாமல் பறந்தது; அவன் நிலைமையை உணர்ந்து கொண்டான். துடித்தெழுந்தான்; ""அடிப்பாவி! சாகசக்காரி! சதிகாரி விபசாரி!'' என்று ஏசினான், உடைகளைச் சரிப்படுத்திக் கொண்டான்; அவளைக் கொன்றுவிடத் துடித்தான். குடியரசுத் தலைவரின் நிலைமை எப்படியோ என்ற எண்ணம் அவனைச் செயலிலே துரத்திற்று. ஓடினான்! ஓடினான்! காப்பாற்ற வேண்டும்; கடமையைச் செய்தாக

வேண்டும்! பரிதாபத்துக்குரிய டில்மன் பாதகர்களின் குண்டுக்கு விழாதபடி தடுத்தாக வேண்டும் என்று உறுதிகொண்டு, வெள்ளை மாளிகையை நோக்கி அம்பெனப் பாய்ந்தான்.

அவள் சொன்னபடியே சரிகாரர்களால் ஏற்பாடு செய்யப்பட்டபடி, தோட்ட வேலைக்காரனாக வந்திருந்த ஒருவன் - ஒரு நீக்ரோ-டில்மன் மீது குறி பார்த்துத் துப்பாக்கியால் சுடுகின்ற நேரம், கடைசி வினாடி, வெள்ளை இனத்தவனாகப் பிறந்தும் நிறவெறியற்று, நீதியில் பற்று வைத்துப் பணியாற்றிட உறுதி கொண்ட காவலாளி, டில்மன் மீது பாயக் கிளம்பிய குண்டினைத் தானே ஏற்றுக் கொண்டு டக்லஸ் டில்மன் உயிரைக் காப்பாற்றினான். அவன் மடியவில்லை., படுகாயமுற்றான்.

தம்பி! எத்தகைய வெறி உணர்ச்சி ஊட்டப்பட்டிருந்தாலும், நீதியிலும்

நேர்மையிலும் நம்பிக்கை கொள்பவர்கள், வெறி உணர்ச்சியை உதறித் தள்ளிவிட முடியும்; மனிதனாக முடியும் என்பதை மெய்ப்பிக்கும் மன நெகிழ்ச்சி தரத்தக்க சம்பவமல்லவா இது!

உடல் வனப்பைக் காட்டி, வலை வீசி காமவெறி ஊட்டி வாழ்க்கை நடத்திடும் ஒரு பெண்ணே அல்லவா, உண்மை புரிந்ததும் உள்ளம் சுட்டதும், திருந்துகிறாள், ஒரு நொடியில்!

வாலிப முடுக்கு காரணமாகவும், இன்பம் பெறும் துடிப்பு காரணமாகவும், தன்னை மறந்து கிடந்திடும் நிலை பெற்ற போதிலும், தன்னையும் அறியாமல் ஒரு அக்கிரமத் திட்டத்திற்குத் தான் உடந்தை ஆக்கப்படுவதை உணர்ந்ததும் அந்த மனிதன், ஓடோடிச் சென்றானல்லவா, உல்லாசியை உதறித் தள்ளிவிட்டு, தன்

உயிரை இழந்தாகிலும், தன்னை நம்பியுள்ள நாட்டுத் தலைவன் உயிரைக் காத்திட! இன வெறி எல்லோரிடமும் இடம் பெற முடியாது. மனித உள்ளம், எல்லாவிதமான வெறியையும் மாய்த்துக் கொண்டு எழ முடியும் என்பதனை எடுத்துக் காட்டும் சம்பவமல்லவா இது? மனிதத் தன்மையை மாய்த்திட, மிருக உணர்ச்சியைக் கிளறிவிட எத்தனை கேடான சூழ்ச்சிகள் மூட்டப்பட்டு விடினும், எல்லோருமே பலியாகிவிடுவதில்லை; ஒரு சிலர் ஒப்பற்ற தனித் தன்மை காட்டி, தாங்கள் மனிதர்கள் என்பதை மெய்ப்பித்துக் கொண்டு வருவதனால்தான், உலகு காடாகிப் போகாமல் இருந்து வருகிறது.

தன்னைக் கவிழ்த்திடச் சதிசெய்யும் வெள்ளையர்களும், தன்னிடம் வெறுப்பைக் கக்கிடும் நிலையில் தன் இனத்தவரும் இருக்கக்கண்டு இதயம் நொந்துகிடந்த

டில்மனுக்கு, ஒரு சாதாரணக் காவற்காரன் காட்டிய இந்தத் தியாக உணர்ச்சி, நீதியில் பற்று, நேர்மையில் உறுதி, எவ்வளவு நெஞ்ச நெகிழ்ச்சி உண்டாக்கி இருந்திருக்கும்!

வெள்ளையர் - கருப்பர் என்ற இருபிரிவாக மட்மல்ல மக்கள் இருப்பது; மனிதர்களும் இருக்கிறார்கள் என்பதை உணர்ந்து டில்மன், புதிய உறுதி பெற்றிருக்க வேண்டும்.

அந்தப் புதிய உறுதியுடனேயே. டக்ளஸ் டில்மன் தன் மீது தொடுக்கப்பட்ட வழக்கைச் சந்தித்தான்; துளியும் கலக்கமின்றி; விளைவு பற்றிய கவலையற்று, கடமையைச் செய்கிறோம் என்ற மனத்திருப்தியுடன்.

அன்புள்ள

அண்ணாதுரை

3-4-66

45. வெள்ளை மாளிகையில் - (9)

சதிக்குள் சதி! (3)

தன்னலத்தின் பல வடிவங்கள் !
பெருமைக்கு உரிய நன்மகன்
புகழுரையில் பாதி பொய்யுரை !
இனம் வெள்ளை-உள்ளம் தூயது !
விந்தையான மாறுதல்....

தம்பி,

“மனிதன்’ என்ற தலைப்பிட்டு இந்த ஏடு எழுதப்பட்டி ருப்பதன் நோக்கம் மனிதத் தன்மை இன, மத, குலப் பற்று வெறியாகிடும்போதும், சுகபோகத்தில் நாட்டம், சுயநலத்தில் விருப்பம் எழும்போதும், மாய்க்கப்பட்டுவிடுகிறது; அத்தகைய நிலையிலும் வீழாமல்,

நிமிர்ந்து நின்று, நேர்மையுடன் யார் நடந்துகொள்கிறார்களோ,"இதயசுத்தி' யுடன் நடந்துகொள்கி றார்களோ, அவர்களையே "மனிதன்' என்ற பட்டியலில் சேர்க்க முடியும்;"மனிதன்' என்ற தகுதியை அவர்களே பெறுகிறார்கள் என்பதை எடுத்துக் காட்டும் தூய நோக்கமே காரணமாக அமைந்திருக்கிறது. இந்த ஏட்டின் தனிச் சிறப்புக்கு இதுவே காரணமாகவும் அமைகிறது.

தன்னலம் தலைகாட்டவே செய்யாது என்று கூறிவிடுவதோ, என்னிடம் தன்னல உணர்ச்சி வெற்றிகொள்ளவே செய்யாது என்று இறுமாந்து கூறிடுவதோ பொருளற்றதாகும்.

தன்னலம் என்பதற்கே வடிவங்கள் பலப்பல.

தன்னலத்தை ஊட்டிடும் நிலைகளும்

பலப்பல.

தன்னலத்தை நிறைவேற்றிக் கொள்வதற்கான முறைகளும் பலப்பல.

தன்னலத்தைத் துளியும் கருதாதவன் என்றோ, தன்னல நோக்கமே எழாத நிலையினன் என்றோ ஒருவரைப் பற்றிக் கூறி, பெருமைப்படுத்துவதைக் காட்டிலும், உண்மையான பெருமை, தன்னலத்தை வென்றவன், தன்னல உணர்ச்சியால் தாக்கப்பட்டும் தாழ்ந்துவிட மறுத்தவன், தன்னல உணர்ச்சியுடன் போரிட்டு வெற்றி கண்டவன் என்பதிலேதான் இருக்கிறது.

தன் வாழ்க்கை, அதிலே குளிர்ச்சி; தன் குடும்பம், அதிலே ஏற்றம்; தன் நிலை, அதிலே பெருமிதம் பெற்றிட வேண்டும் என்று உணர்ச்சி, கெட்டவர்களுக்கும் மட்டுமே தோன்றிடக்கூடியது என்று கூறிவிடுவதும்

முற்றிலும் உண்மையாகிவிடாது. இயற்கையாகவே அனைவருக்கும் எழக்கூடிய உணர்ச்சியே அது.

அவ்விதமான உணர்ச்சியே இல்லை, கற்சிலை போன்ற உறுதி இவருக்கு என்று பெருமைப்படுத்தக் கூறிடலாம்; அது கேட்டுச் சிலர் பெருமகிழ்ச்சியும் கொண்டிடலாம். ஆனால் உண்மையான பெருமை, தன்னல உணர்ச்சி எழவே எழாது என்ற நிலையில் இல்லை; தன்னல உணர்ச்சி எழுகிறது; எதைச் செய்தாகிலும், எவரைக் கெடுத்தாகிலும், நேர்மையை மறந்தாகிலும் தன்னலத்தைப் பெருக்கிக்கொள்ளலாம் என்று கருதிவிடாமல், தன்னல உணர்ச்சியைக் கட்டுப்படுத்தவும், பொது நன்மைக்காக விட்டுக் கொடுக்கவும், நீதியாக நடப்பதன் மூலம் தன்னலம் பெற்றிட முடியாது என்ற நிலை ஏற்படின் நீதி பெரிது, தன்னலம் அல்ல என்ற உறுதி கொள்வதும்,

அதன்படி ஒழுகி இன்னலை இன்முகத்துடன் ஏற்றுக் கொள்வதுமாகிய நிலைமை இருக்கிறதே, அதிலேதான் உண்மையான, நிலையான பெருமை இருக்க முடியும்.

அதிலும், அடிப்படைத் தேவைகளைப் பெறும் முயற்சியிலேயே அநீதிக்கு அடிபணிய வேண்டிய நிலை ஏற்பட்டு விடுகிறபோது, யார் அடிப்படைத் தேவைகளையும் கூட இழந்திடுவேன், இன்னலை ஏற்பேன், வாழ்வதற்காக நீதியை இழந்திட மாட்டேன் என்று கூறுகிறானோ கூறியபடி செயல் படுகிறானோ, அவனே எல்லாப் பெருமைக்கும் உரியவனாகிறான்.

தம்பி! நமது செவிகளிலே விழுகிறதல்லவா, பெரிய இடத்தைப் பிடித்துக் கொண்டவர்களைப் பற்றிய புகழுரை; அவற்றிலே மிகப்பெரும் அளவு வெற்றுரையே; அல்லது பலன்பெற விழைந்து செய்யப்படும்

அர்ச்சனையேயாகும்.

அவர் எப்படிப்பட்டவர் தெரியுமா! தன்னலம் துளியும் அற்றவர்! தன் குடும்பம், தன் குழந்தைகள் இதைப் பெற வேண்டும் அதைப் பெறவேண்டும் என்று அலைபவர் அல்ல, குடும்பம் அல்ல அவருடைய கண்முன் தெரிவது; நாடு, மக்கள்; அத்தகைய தியாகி அவர் என்று ஒருவரைப் பற்றிப் புகழ் சொரிவது எப்போது பொருளுள்ள பேச்சாக முடியும்? அவருக்குக் குடும்பம் இருந்து, அதனைக் காத்திடவும், ஏற்றம் பெறச் செய்திடவும் அவர் தமது முழுநேரத்தையும் நினைப்பையும், ஆற்றலையும் வாய்ப்புகளையும் பயன்படுத்திக் கொண்டிருந்துவிடும் போக்கிலே செல்லாமல், தன் குடும்பம் நாட்டு மக்கள் சமுதாயத்திலே ஒரு அங்கம் என்ற அளவிலே கருதி, பொதுநலனைப்

புறக்கணிக்காமல் தமது பணியினை நடாத்திச் செல்லும்போது; குடும்பத்திடம் இயற்கையாக ஏற்படும் பாசத்துக்கு முழுக்க முழுக்கக் கட்டுப்பட்டு விடாமல், சமுதாயத்தை மனதிலே கொண்டு பணியாற்றும்போது; தன் குடும்ப நலனை மட்டுமே கவனித்துக் கொண்டு பிறர் நலனைப் பேணிடத் தவறாமல், பொது நலனுக்காக உழைத்திடும் போது. அவ்விதமின்றி, குழந்தை குட்டிகளைக் காப்பாற்றிக் கொண்டிருக்கும் போக்கு கொண்டவரல்ல அவர்; எப்போதும் பொதுத் தொண்டிலே நாட்டம் காட்டுபவர் என்று ஒருவரைக் குறித்துப் புகழ்ந்துவிட்டு அவருக்கு எத்தனைக் குழந்தைகள்? என்று கேட்கும் போது, அவருக்குத் திருமணமே ஆகவில்லையே! என்று பதிலளித்தால், தியாகி என்றும், தன்னலம் மறுத்தவர் என்றும் புகழ்ந்து பேசியது என்ன பொருளைத் தரும்?

அவர் தன் குழந்தைகளைக் கவனிப்பதிலே காலத்தைத் தள்ளிவிடவில்லை! ஏனென்றால், அவருக்குக் குழந்தைகளே இல்லை!! ஏனென்றால் அவருக்குத் திருமணமே ஆகவில்லை!!

இந்த நிலையிலே அவரைப் புகழ்ந்து பேசுவதிலே பொருளோ பொருத்தமோ எப்படி இருக்கமுடியும்!

அவருடன் நீச்சல் போட்டியிலே எவனும் வெற்றி காண முடியாது; ஆனால் அவருக்கு நீச்சலே தெரியாது.

அவள் மலரைத்தொட்டுத் தன் கொண்டையில் செருகிக்கொள்ளவே மாட்டாள்; ஏனெனில் அவள் தலை மொட்டை.

அவன் பசும்பாலே சாப்பிடமாட்டான்; ஏனெனில் அவன் இருக்கும் இடத்தில் உள்ளவை அவ்வளவும் எருமைகள்?

அவன் எந்த அழகியையும் ஏறெடுத்தும் பார்க்க மாட்டான்; ஏனேனில் அவன் பிறவிக்குருடன்!

தம்பி! இந்த வரிசையிலேதான் சேர்க்கவேண்டும், திருமணம் செய்துகொள்ளாத ஒருவரைப் பற்றிப் பேசும்போது அவர் தமது குழந்தை குட்டிகளின் நலனுக்காகப் பாடுபடுபவர் அல்ல என்று புகழ்வது! இல்லை ஆகவே தேவை இல்லை! குழந்தைகள் இருந்து, அவை காகூவெனக்கூவி, அவைகளுக்காகப் பாடுபடாமல், நாட்டுத் தொண்டுக்கே என் நேரம் முழுவதும என்று கூறிச் செயலாற்றினவரா? இல்லையே! குழந்தைகள் இல்லை, ஆகவே குழந்தைகளைக் கவனிப்பதா சமுதாயத்தைக் கவனிப்பதா என்ற சிக்கல் எழவே காரணம் இல்லை.

என்றாலும் புகழ்கிறார்களே! ஏன்? மகிழச்

செய்திடலாம் என்ற எண்ணம். அந்த எண்ணம் எழக்காரணம்? ஏதாவது கிடைக்காதா என்ற ஆசைதான்!

தம்பி! தன்னலத்துக்கும் பொதுநலனுக்கும் இடையிலே சிக்கி, தத்தளித்து இறுதியில் பொதுநலனுக்காகத் தன்னலத்தை இழந்திட உறுதிகொள்பவனே, மனிதன்!

நிறம் கருப்பு என்ற போதிலும், குடியரசுத் தலைவர் நிலை என்றபோதிலும், நான் ஓர் மனிதன் என்பதை எத்தனையோ இடர்ப்பாடுகள் இடித்தபோதும் கலங்காது எடுத்துக்காட்டினாரே டக்ளஸ் டில்மன், அவருக்கு மற்றோர் ”மனிதன்’ துணை நிற்க முன்வருகிறான்.

ஓர் வழக்கறிஞன்; டில்மனுக்கு நெடுநாளைய நண்பன்; வெள்ளை இனம்;

ஆனாலும் தூய உள்ளம்.

திறமைமிக்க வழக்கறிஞர்! ஆனால் வருவாய் அதிகம் இல்லை! காரணம் அவர் ஏழை எளியோருக்காகவே வாழ்ந்து வந்தவர்.

குடும்பம் இல்லாதவர் அல்ல! வாழத் தெரியாதவர் அல்ல, வாழ்ந்திட வேண்டிய அவசியமே அற்றவர் அல்ல! ஒண்டிக் கட்டை அல்ல; நான் எதற்காகவும் எவரிடமும் தயவு கேட்கத் தேவையில்லை; நாலு முழத் துண்டு போதும் இடுப்புக்கு; நாளைக்கு ஒரு வேளை சோறு போதும்; படுத்து உறங்க எந்தத் தெருத்திண்ணை கிடைத்தாலும் போதும் என்று "வக்கணை' பேச.

தன்னையொத்த வழக்கறிஞர்கள், தன்னிலும் திறமை குறைவானவர்கள் பொருள் திரட்டி, தனவானாகி, கனவானாகி, மாளிகையிலே வாழ்ந்திடக் காணும்போதுகூட,

நாம் ஏன் பணம் திரட்டக் கூடாது என்ற எண்ணம் கொள்ளவில்லை.

”உழைப்பு அதிகம். இதயம் பலகீனமாக இருக்கிறது. இதே அளவிலும் வேகத்திலும் வேலை செய்து கொண்டி ருந்தால், நல்லதல்ல; ஆபத்தாகிடக் கூடும்.’’

மருத்துவர் கூறுகிறார் இதுபோல. இதுகேட்ட துணைவர் தன் துணைவியின் கண்களைக் காண்கிறார்; சோகம் கப்பிக் கொண்டிருக்கிறது! ஆகவே ஒரு புது முடிவுக்கு வருகிறார், நல்ல வருவாய் தரத்தக்க முறையில் தொழிலை’ அமைத்து நடத்தி, பிறகு ஓய்வு எடுத்துக் கொள்ளவேண்டும். சிற்றூரில் ஒரு வசதியான வீடு அமைத்துக்கொண்டு, இயற்கைச் சூழ்நிலையில் தனது முதுமையைக் கழித்திட வேண்டும் என்று விரும்புகிறார். இந்த எண்ணத்தை, அனுமதிக்கப்பட முடியாத தன்னலம் என்றோ

பொறுத்துக் கொள்ளக்கூடாது கெடு நினைப்பு என்றோ பேதையும் கூறிடான்.

நாலுமுழத் துண்டு போதும் என்று "தன்னலமற்றவர்' பேசுகிறாரே, அவருக்கு நாளைக்கு மூன்று வேளை குளியல்'! ஒவ்வொரு குளிப்பாட்டுக்குப் பிறகும் புதிதாக வெளுக்கப் பட்ட ஆடை! என்றால் அவர் நாலு முழத்துண்டு போதும் என்று பேசியது, தன்னலமற்ற தன்மையா அல்லது ஏழையைத் தடவிக் கொடுக்கும் தந்திரமா என்பது பற்றிய விளக்கம் கூற வேண்டும்.

பெரியதோர் மாளிகையில், திண்டுமீது சாய்ந்தபடி பேசலாம், எனக்கென்னய்யா? படுத்துத் தூங்கத் தெருத் திண்ணை போதும்! என்று. தந்திரப்பேச்சன்றி வேறென்ன வாக அது இருக்க முடியும்?

கடினமாகப் பல ஆண்டுகள்

ஏழைகளுக்காக உழைத்தான பிறகு, மேலும் அதுபோலவே உழைத்துக் கொண்டிருக்க உடல் இடம் தராது என்று மருத்துவர் எச்சரிக்கை தந்தான பிறகு, வாழ்க்கையை இனிச் சற்று நிம்மதியாக நடத்திச் செல்ல வழி தேடிக்கொள்ள வேண்டும் என்ற நிலையினைக் கொள்வது - ”தன்னலம்’ என்று இழிவாகக் கூறப்பட வேண்டியதாகிடுமா! பேதையும் அங்ஙனம் கூறிடக் கூசுவான்.

ஒரு வாய்ப்பும் தன்னாலே வந்தது, அந்த வழக் கறிஞருக்கு.

செல்வாக்கு மிக்க ஒரு வணிக நிறுவனம், குறிப்பிட்ட சில ஆண்டுகள், சட்ட ஆலோசகராக இருக்க அழைத்தது, ஊதியம் அதிக அளவில்! கட்டு திட்டங்கள் குறைவு, கண்ணியமாக நடத்துவார்கள்! இந்த வணிக அமைப்புடன் ஒப்பந்தம் செய்து கொண்டு சில ஆண்டுகள் வேலை பார்த்தால், பிறகு பலப்பல ஆண்டுகள்

இன்னலற்ற வாழ்க்கை நடத்திச் செல்வதற்கு ஏற்ற பொருள் கிடைத்துவிடும். சிங்காரச் சிற்றூர்! வயல் வெளி! இயற்கை அழகு! ஓய்வு தரும் மகிழ்ச்சி!

வழக்கறிஞர் இசைவு தருகிறார்! துணைவியார் மெத்தவும் மகிழ்ச்சி கொள்கிறார்கள்; வணிக அமைப்பின் பொறுப்பாளர் வேலை சம்பந்தமான ஒப்பந்தம் அச்சடித்துத் தருகிறார்; படித்துப் பார்க்கிறார் வழக்கறிஞர்; திருப்தியாகவே இருக்கிறது; கையொப்பமிட முனைகிறார்; தொலைபேசி மணி அடிக்கிறது.

இன்ப நிகழ்ச்சிகள் காண்கிறாள் வழக்கறிஞரின் மனைவி, வணிகக் கோட்டத்துப் பொறுப்பாளன், விழா நடத்த விரும்புகிறான்; உயர்தரமான உணவு விடுதியில்! இனி அவர் உடலுக்கு ஆபத்தின்றி வாழ்க்கை நடத்தலாம்; நிம்மதி பெறலாம்

என்பதிலே அவளுக்கு மகிழ்ச்சி; சிற்றூரும் சிங்காரச் சிற்றிலும் மனக் கண்ணால் காணுகின்றாள்; இதழ்களில் புன்னகை தவழ்கிறது.

கவலை தோய்ந்த முகத்துடன் காணப்படுகிறார் வழக்கறிஞர்.

என்ன! என்ன! தொலைபேசியில் யார்? என்ன திடுக்கிடத்தக்க செய்தி? ஏன் இந்தக் கலக்கம்?

யார் பேசினார்கள் தொலைபேசி மூலம்.

என் நண்பர் டக்லஸ் டில்மன் குடியரசுத் தலைவர்.

என்ன சொல்கிறார் உங்கள் நண்பர்?

அவர்மீது வழக்குத் தொடுத்திருக்கிறார்களல்லவா....?

ஆமாம்! பயங்கரமான குற்றச்சாட்டுக்கள்,

கடினமான வழக்கு!

அந்த வழக்கில், அவர் சார்பாக வாதாட அழைக்கி றார், என்னை; நம்பிக்கையுடன்; நட்பு உரிமை யுடன்....

என்ன! என்ன! டில்மனுக்காக நீர் வாதாடுவதா? நன்றாய் இருக்கிறது வேடிக்கை. வேடிக்கைகூட அல்ல; இது விபரீதம்! நமது கம்பெனி, டில்மன் வீழ்த்தப்பட வேண்டும் இந்த வழக்கின் மூலம் என்று விரும்புகிறது; திட்டமிட்டிருக்கிறது; அதற்காகப் பணம் செலவிடவும் முனைந்திருக்கிறது.

நான் உமது வணிகக் கோட்டத்திலே பணி புரிய ஒப்பந்தம் செய்துகொள்வது என்றால், என் இச்சையாக வேறு வழக்குகளை கவனிக்கக் கூடாதா? அப்படி ஒரு நிபந்தனையா....!

எந்த வழக்கையும் கவனிக்கலாம், இந்த

வழக்கைத் தவிர! டில்மன் ஆட்சியில் இருப்பது எமது கம்பெனிக்கு இடையூறாக இருக்கிறது.

குடியரசுத் தலைவருக்காக வாதாட எத்தனையோ வழக்கறிஞர்கள் கிடைப்பார்களே...

கிடைப்பார்கள்.... ஆனால், அவர் என்னை அழைக்கிறார்; நம்பிக்கையுடன்; நான் மறுக்க மாட்டேன் என்ற நம்பிக்கையுடன்...

மறுக்கத்தான் வேண்டும்.... உம்மையே டில்மனுக்கு எதிராக வாதாடச் செய்திட விரும்பினோம். நண்பர் என்கிறீர். ஆகவே வற்புறுத்த விரும்பவிலலை. ஆனால் கம்பெனியுடன் ஒப்பந்தம் செய்து கொள்வதானால், டில்மனுக்காக வாதாடக்கூடாது...

ஒப்பந்தம் நமக்கு நிரம்பச் சாதகமானது என்பதை மறவாதீர். உமது துணைவியாக

உள்ள நான் வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்; இத்தனை ஆண்டுகள் உழைத்தது போதும்; இனிக் குடும்பத்தைச் சற்று கவனித்திட வேண்டுகிறேன். மருத்துவர் கூறினதை மறந்திடலாமா.... உங்கள் நண்பர் புரிந்து கொள்வார் நிலைமையை.... கூறிவிடுங்கள் வேறு ஒருவரை வழக்கை நடத்தச் சொல்லி....

ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதானால், இந்த நிபந்தனையை மறவாதீர்; டில்மனுக்காக வாதாடக் கூடாது....

கையொப்பமிட்டால்தானே, நிபந்தனை....?

அப்படியானால் எமது கம்பெனி அழைப்பை மறுத்து விடப்போகிறீரா.....

வேண்டாம்... வேண்டாம்... என் பேச்சைக் கேளுங்கள். குடும்பத்தை நாசமாக்காதீர்கள். மனைவி என்ற உரிமையுடன் உங்கள் நலனில் அக்கறை கொண்டவள் என்ற முறையில்,

உம்மைக் கெஞ்சிக் கேட்டுக்கொள்கிறேன்....

ஒப்பந்தத்திலே கையெழுத்திடும் ஐயா! ஏன் ஓராயிரம் யோசனை. உம்மாலும் முடியாது, உம்மைப்போன்ற பலர் கூடினாலும் முடியாது டில்மனைக் காப்பாற்ற....

நிலைமை மோசமாக இருப்பதால்தான், டில்மன் என்னை அழைத்திருக்கிறார்; புரிகிறது. நான் ஒப்பந்தத்தில் கையொப்பம் செய்யப்போவதில்லை.

வணிகக் கோட்டத்தானுக்குக் கடுங்கோபம். ஒப்பந்தத் தாளை மடித்து எடுத்துக்கொண்டு வெளியே செல்கிறான். கண்ணீர் பொழிந்த நிலையில் துணைவி இருக்கிறாள். ஒரு புறம் அவளுடைய கண்ணீர் தெரிகிறது! மற்றோர் புறம் டில்மனுடைய குரல் காதிலே விழுகிறது! மனக்கண்ணால் பார்க்கும்போது ஒரு பக்கம், மாளிகை, பைபையாகப் பணம், பளபளப்பான

வாழ்க்கை, பொன்னகையும் புன்னகையும் துலங்கிடும் நிலையில் மனைவி; சிற்றூர்; சாலை; சோலை; இன்பச் சூழ்நிலை தெரிகிறது; மற்றோர் புறமோ, துயரம் தோய்ந்த முகத்துடன் டில்மன்; அவன் கண்கள் அனுப்பும் அழைப்பு! நான் துரத்தப்படுகிறேன்! என்னை வேட்டையாடுகிறார்கள் - கருநிறம் என்பதால்! பழிசுமத்து கிறார்கள் என்னைச் சூழ்ந்து நிற்கும் நிறவெறியர்! என் கண்களுக்கு ஒரே ஒரு நண்பன் தெரிகிறான்! அதனால்தான் அழைக்கிறேன்; நம்பிக்கையுடன் என்று அந்தக் கண்கள் பேசுகின்றன.

தத்தளிக்கும் நிலையினளான அம்மாதரசி விழிநீரைத் துடைத்திடவும் மனமின்றி, எழுந்து செல்கிறாள் வெளியே....

எங்கே? இந்த நேரத்தில்? தனியாக! என்னிடம் சொல்விக் கொள்ளாமல்! அவன் கேட்கிறான்.

எங்கே என்றா கேட்கிறீர்கள் - நெடுஞ்சாலை நோக்கிச் செல்கிறேன்; ஏதாவது ஒரு மோட்டார் கிடைக்காதா... விழுந்து செத்துத் தொலைக்கிறேன். அவள் கூறுகிறாள், மனம் உடைந்த நிலையில்.

தம்பி! இது அல்லவா சிக்கல்! இது அல்லவா சோதனை! திருமணமே ஆகாத ஒரு திருவாளர், நான் என்ன என் பிள்ளை குட்டிகளுக்காகவா பாடுபடுகிறேன், எல்லாம் உங்களுக்காகத் தானே என்று பேசுகிறாரே, அந்த நிலைமையா இது!

ஒரு புறம் உள்ளம் உருகிக் கசிந்திடும் மனைவி.

மற்றோர் புறம், திகைத்துக் கிடக்கும் நண்பன்.

மனைவியின் கண்ணீரையும் துச்சமென்று கருதிவிட முடியாது; அந்த

மாதரசியும் அக்கிரமம் எதனைச் செய்தாகிலும் எனக்குச் சுகபோக வாழ்வு அமைத்துக் கொடு என்று கேட்க வில்லை. நிம்மதியாக வாழக் கிடைத்திடும் ஒரே வாய்ப்பை இழந்துவிட வேண்டாம் என்றுதான் கெஞ்சுகிறாள்.

மனைவியின் வேண்டுகோளை மதித்திடுவதும், குடும்பத் திற்கு நிம்மதியான நிலையை அமைத்திடுவதும், ஒரு குடும்பத் தலைவன் மேற்கொண்டாக வேண்டிய கடமைகளிலே ஒன்று! அநீதியல்ல, அக்கிரமம் அல்ல! பிறரைக் கெடுப்பது அல்ல!

நண்பன் அழைப்பை ஏற்றுக்கொண்டால், அந்த நல்லவன் கண்களிலே ஒரு களிப்பு ஒளிவிடும்! மறுத்தால், அந்தக் கண்களிலே இரண்டொரு சொட்டு கண்ணீர் சிந்திடும்.

நண்பனுடைய கண்களிலே நம்பிக்கை ஒளி எழக் காண வேண்டுமானால்,

மனைவியின் கண்ணீரைக் கண்டு கலங்கக் கூடாது.

மனைவியை மகிழக் செய்திடும் கடமையைக் காட்டிலும் நண்பனைக் காத்திடும் கடமை பெரிது.

குடும்பம் - தன்னை ஒட்டியது! நண்பன் பிரச்சினையோ, பொதுவானது!

தன்னலம் விரண்டோடிற்று! பொதுநல உணர்ச்சி வென்றது. வெளியே புறப்பட்ட மனைவியைத் தடுக்கக் கூட இல்லை.

தம்பி! இதனை ஒத்த சிக்கல் எழும்போது, தன்னலத்தைத் துறந்திடும் உறுதி பிறந்திட வேண்டும். இந்த நிகழ்ச்சியைத் திருப்பித் திருப்பிப் படித்துக்கொண்டே இருக்கவேண்டும்போலத் தோன்றுகிறது.

குடும்ப நலனைப் பற்றிய கவலையை உதறித் தள்ளி விட்டு கண்ணீர் பொழியும்

மனைவியின் மனம் நொந்து போகிறதே என்பது பற்றிய சங்கடத்தையும் தாங்கிக் கொண்டு, அந்த வழக்கறிஞர் டில்மனுக்காக வாதாடியே தீருவேன் என்று உறுதி கொண்டாரே, அது எவருடைய மனதிலே முளைத்திடும் தன்னல உணர்ச்சியையும் பொசுக்கிக் கருக்கி விடத் தக்கது. எவரும் வியந்து பாராட்டுவர் அந்த வழக்கறிஞர் மேற்கொண்ட தன்னல மறுப்பினை.

ஆனால் அவரே கண்டு வியந்து பாராட்டும் விதமாக அமைகிறது அவருடைய துணைவியாரின் செயல். என்ன செயல்; அந்த மாதரசிதான் குடும்பத்தைக் கவனிக்கும்படி வற்புறுத்தினார்களே; வணிகக் கோட்டப் பணியை மேற்கொள்ளச் சொன்னார்களே; சிக்கலை ஏற்படுத்தினார்களே; அப்படிப்பட்ட செயலுக்காகவா பாராட்ட முடியும் என்று கேட்கிறாய்!

இல்லை, தம்பி! வெளியே சென்ற மாதரசி, ஒரு மணி நேரம் கழித்த பிறகு வீடு திரும்பினார்கள்; திரும்பியதும், "கண்ணாளா! என்னை மன்னித்துவிடும்! டில்மனுக்காக வாதாடச் சம்மதம் தெரிவித்துவிடும்! எப்படியும் டில்மனைக் காப்பாற்றியாக வேண்டும்'' என்று கூறினார்கள். எதனால் ஏற்பட்டது இந்த விந்தையான மாறுதல் என்று கேட்கிறாய்.

எதனால் ஏற்பட்டிருக்கக்கூடும் என்பது பற்றி, தம்பி! நீயேதான் சிறிதளவு சிந்தித்துப் பாரேன். நடந்ததை நான் அடுத்த கிழமை தெரிவிக்கிறேன்.

அன்புள்ள

அண்ணாதுரை

46. வெள்ளை மாளிகையில் - (10)

மனிதன் மிருகமல்ல !

வழக்கறிஞரின் திறமை எதற்குப் பயன்படவேண்டும் ?

பெண் உள்ளம் பெரிய உள்ளம்

“நல்ல நாடு’ என்ற பெயரே ஒரு நாட்டுக்கு வேண்டும் !

அய்ந்தாவது”குற்றச்சாட்டு !’

ஏடு காட்டும் நன்முடிவு நாட்டிலே ஏற்படுமா ?....

தம்பி,

இன்ப வாழ்க்கைக்கான அழைப்பு ஒரு புறத்திலிருந்து. செல்வம்! செல்வாக்கு! மாளிகை! மலர்த்தோட்டம் துணைவி யாரின் மனம் மகிழ்ச்சியால் துள்ளிடும் நிலை! குடும்பத்துக்கு நிம்மதி! இவையாவும் எதிரே

நிற்கின்றன!

எங்கோ நெடுந்தொலைவிலிருந்து ஒரு பெருமூச்சு ஒலி கிளம்புகிறது! வழக்கறிஞர் நாட் ஆபிரகாம்ஸ் செவியிலே அந்தப் பெருமூச்சு புகுந்ததும், இன்ப வாழ்க்கைக்கான அழைப்பை அவர் உதறித் தள்ளுகிறார்.

வழக்கறிஞர் திறமையைக் காட்டி வெற்றி பெற்றிடுவதை மட்டுமே கடமையாகக் கொள்ளவேண்டும் என்ற ஒப்புக் கொள்ளப்பட்ட "மரபு,' மனிதத்தன்மையை மாய்த்திடும் நிலைக்கு அந்த வழக்கறிஞரை இழுத்துச் செல்லுமானால், அந்த"மரபு' மாண்பானதாக முடியாது.

வழக்கறிஞரின் திறமை எதற்குப் பயன்படுதல் வேண்டும்? எதிர்த்தரப்பினர் எந்த இடத்திலே இடருவார், எந்தக் குறிப்பிலே குழம்புவார், எந்தக் கட்டத்திலே குளறுவார்,

எந்த வாதத்தை மறந்திடுவார், எந்த சட்ட நுணுக்கத்தை வலியுறுத்தத் தவறி விடுவார் என்று கூர்மையாகக் கவனித்துக் கொண்டிருந்து, தக்க சமயமாகப் பார்த்து பாய்ந்து தாக்கி வீழ்த்துவது மட்டுந்தானா!

நாட் அவ்விதம் எண்ணவில்லை. வழக்கறிஞர், நீதிக்காகப் பரிந்து பேசவேண்டும்; சட்டத்தைக் கொண்டு எவரேனும் எவரையேனும் வாட்டி வதைத்திட முனைந்தால், அவர்களைக் காத்திட முனையவேண்டும். எத்தனை சட்ட நுணுக்கங்கள், சான்றுகள், விளக்கப்பட்டபோதிலும் அவையாவும், நீதியை நிலைநாட்ட மட்டுமே பயன்படுதல் வேண்டும்; அதற்கான முறையிலே வழக்கு நடத்தப்படுகிறதா என்பதைக் கண்டறிவதே வழக்கறிஞரின் தனித் திறமையாக இருக்கவேண்டும் என்று நாட் கருதினார்.

குற்றவாளிக் கூண்டிலே கொண்டு வந்து நிறுத்தப்படுபவர், தமது நண்பர் என்பதாலேயே, அவர் காப்பாற்றப்பட்டாக வேண்டியவர் என்ற கோணல் வாதத்தை நாட் ஆபிரகாம் மேற்கொள்ளவில்லை.

தனது நண்பர், ஓர் மனிதர்! நிறம் கருப்பு, ஆனால் நெஞ்சம் தூய்மையானது! அவர் மீது பழி சுமத்தப்படுகிறது என்று நம்பினார்.

அவர்மீது குற்றம்சாட்டும் வெள்ளை இனத்தவர் பல நூற்றாண்டுகளாகக் கருப்பர் மீது பகை, வெறுப்பு கக்கி வருபவர். கருப்பர்களைக் கொடுமை செய்வது, அறமல்லவே முறையல்லவே என்ற உணர்வே அற்றவர்கள். அவர்கள் குற்றம் சுமத்துகிறார்கள் என்றால், பகை காரணமாகத்தான் இருக்கமுடியும் என்று நாட் திடமாக நம்பினார்.

எல்லாவற்றையும்விட, தன்னை எத்தனை நம்பிக்கையுடன், நட்புணர்ச்சியுடன் அழைத்தார் டில்மன் என்பதை எண்ணும் போது, எதை இழப்பதாயினும் சரி, எத்தனை இன்னலை ஏற்கவேண்டி நேரிடினும் சரி, நண்பன் பக்கம் நின்றாக வேண்டும் என்ற உறுதி பிறந்தது.

துணைவியாரின் பேச்சும் கண்ணீரும், தன் நெஞ்சை உருக்கிடுவதை உணர்ந்தார். பேதைப் பெண்! என்னைக் கணவனாகப் பெற்றதால், சீமாட்டியாகலாம், சிங்கார வாழ்விலே புரளலாம் என்று எண்ணிக்கொண்டாள். பெருத்த ஏமாற்றம், பாவம்! எறிச்சலாகத்தான் இருக்கும். இத்தனைக் காலமாகத்தான் ஏழை எளியோர்களுக்காக வேலை செய்து, வாழ்க்கையைப் பாலையாக்கிக் கொண்டார்! இப்போது ஒரு வாய்ப்புக் கிடைக்கிறது - பெரிய

வணிகக் கோட்டம் அழைக்கிறது - கேட்கும் பணம் தரச்சம்மதிக்கிறது - இதையும் உதறித் தள்ளிவிடுவதா! குடும்பம் எக்கேடோ கெடட்டும் என்றா இருப்பது! நான் வேண்டுகிறேன், கெஞ்சிகிறேன், கண்ணீர் வடிக்கிறேன்! கவலைப்படக் காணோமே!! என்று பாபம், அவள் பதறுகிறாள். என் எண்ணத்தை அவள் ஏற்க மறுக்கிறாள். அவள்மீது கோபித்து என்ன பயன்? எந்த மனைவியும் தன் கணவனிடம் எதை எதிர்பார்ப்பாளோ அதைத்தான் அவள் எதிர்பார்க்கிறாள்! நான்தான் அவளுக்கு ஏமாற்றத்தைத் தருகிறேன். நான் வேறென்ன செய்ய முடியும்...

நாட் ஆபிரகாம்ஸ் இவ்விதமாகவெல்லாம் எண்ணி எண்ணி ஏங்குகிறார். உட்கார்ந்தபடியே உறங்கிவிடுகிறார்.

வெகுண்டு வெளியே சென்ற அவர் மனைவி வருகிறாள்; மெள்ளத் தன் கணவன்

தோளைத் தொட்டு எழுப்புகிறாள். வேறு ஏதோ ஓர் உலகு சென்று திரும்பியவன் போன்ற நிலையில் ஆபிரகாம் இருக்கக் காண்கிறாள்.

தழதழத்த குரலில் அவள் பேசுகிறாள்! "அன்பே! என்னை மன்னித்து விடு! ஏதோ மனக் குழப்பம். என்னென்னமோ பேசிவிட்டேன், கோபமாக. உங்கள் முடிவுதான் சரியானது, நியாயமானது, டக்ளஸ் டில்மனை நாம் கைவிடக்கூடாது. அவருக்காக வாதாட வேண்டியதுதான் கடமை...''

"என்ன சொல்லுகிறாய் அன்பே! டக்ளஸ் டில்மனிடம் இத்தனைப் பரிவு எப்படி ஏற்பட்டது.''

"பாவம்! அத்தனைப் பெரிய மாளிகையில், தன்னந்தனியாகத் தானே டில்மன் தவித்துக் கொண்டிருப்பார்; தனக்காகப் பரிந்து பேச, தனக்கு நியாயம் கிடைக்கும்படிச்

செய்ய ஒருவரும் இல்லையே என்ற துக்கம் துளைத்திடும் நிலையில், அதை எண்ணிக்கொண்டால், மனம் என்ன பாடுபடுகிறது தெரியுமா...''

"இந்த மனமாற்றம் ஏற்படக் காரணம்?''

"உண்மையை உணர்ந்ததால்; டக்ளஸ் டில்மன் எந்த நிலைமையில் இருக்கிறார்; அவரைச் சுற்றிலும் எத்தனைப் பகை கப்பிக் கொண்டிருக்கிறது என்பதை உணர்ந்ததால்,அன்பே! கோபமாகச் சென்றேனல்லவா வெளியே; சிறிது தூரம் சுற்றிவிட்டு, அந்த மாளிகைக்கு எதிர்ப்புறம் நின்றேன்; வெள்ளை மாளிகைக்கு எதிர்ப்புறம் உள்ள சாலையில். அகமகிழ்ச்சியுடன் பேசிக்கொண்டே அவ்விடம் வந்த ஓர் ஆரணங்கையும் அவள் மணவாளனையும் கண்டேன்! புது மணமக்கள் போல இருக்கிறது. அந்தப் பெண் அவனைக் கேட்டாள்,"அதோ

அதுதானே வெள்ளை மாளிகை?'' என்று; ஆம் என்றான் அவன்; உள்ளே போய்ப் பார்க்க வேண்டும் என்று எனக்கு ஆசையாக இருக்கிறது என்றாள் அந்தப் பெண், அவனோ ஓர் ஏளனச் சிரிப்புடன் கூறினான் :

"அங்குதானே! போகலாம்; ஆனால் இப்போது வேண்டாம்; இப்போது அங்கு ஒரு கருப்பன் அல்லவா இருக்கிறான்!! ஆனால் அவன் அங்கே அதிக நாட்கள் இருக்கப்போவதில்லை; வெளியே துரத்தப் போகிறார்கள். வழக்குத் தொடுத்தாகி விட்டது; கருநிறத்தான் வெளியே சென்றதும், நாம் உள்ளே போய்ப் பார்க்கலாம், வெள்ளை மாளிகையைக் கழுவிச் சுத்தப்படுத்தி விடுவார்கள் என்றான்; அவள் சிரித்தாள். அன்பே! அப்போது தான் எனக்கு டக்ளஸ் டில்மனுடைய நிலைமை புரிந்தது! சட்டப்படி குடியரசுத் தலைவராக அமர்ந்திருக்கிறார்.

ஆனால் நிறவெறி காரணமாக அவரை அவ்வளவு வெறுக்கிறார்கள்; கேவலமாக பேசுகிறார்கள்; ஒழித்துக் கட்டவே முனைகிறார்கள். அவ்வளவையும் தாங்கிக் கொண்டல்லவா அவர் தத்தளிக்கிறார். நீதி அறிந்தவர்கள் அவர் பக்கமாக நிற்கவேண்டும்! அதனை உணர்ந்தேன், ஓடோடி வந்தேன்; என்ன தவறான காரியம் செய்துவிட்டேன் என்பதை எண்ணியபடி. அன்பே! உடனே குடியரசுத் தலைவரிடம் கூறிவிடு, வழக்கு மன்றம் வரத் தயார் என்று; நீதிக்காக வாதாடத் தயார் என்று.''

"அன்பே, உன் மனம் மாறும் என்பதை நான் அறிவேன். அதனை எதிர்பார்த்து, நான் ஏற்கனவே குடியரசுத் தலைவருக்குத் தொலைபேசி மூலம் தெரிவித்து விட்டேன், அவர் சார்பில் வழக்கை நடத்துவதாக!''

தம்பி! இதுபோல இருவரும் உரையாடி

மகிழ்கின்றனர். குடும்பம் நிம்மதியாக வாழ்ந்திட வேண்டும் என்ற இயற்கையான, தேவையான, நியாயமான எண்ணத்தின் காரணமாகச் சிறிதளவு "மாசு' மனத்திலே புகுந்தது; எனினும் மீண்டும் தூய்மைப்பட்டு விட்டது.

அப்போது அந்த மாது கூறுவதாக நூலாசிரியர் ஓர் கருத்தைத் தருகிறார்; அது என் மனதை வெகுவாக நெகிழச் செய்தது.

பெரிய வணிகக் கோட்டத்தின் வழக்கறிஞரானால், பணம் ஏராளமாகக் கிடைக்கும்; சில ஆண்டுகளுக்குப்பிறகு, சிற்றூரில் ஓர் சிங்கார இல்லம், சாலையும் சோலையும் சூழ்ந்த இடத்தில் ஒரு பண்ணை அமைத்திடலாம்; அங்கு நிம்மதியாகக் குதூகல மாக வாழ்ந்திடலாம்; குழந்தைகளுக்கு அந்த எழிலகத்தைத் தந்திடலாம் என்றல்லவா ஆசைப்பட்டாள் வழக்கறிஞரின் மனைவி;

அதை மீண்டும் நினைவுபடுத்திவிட்டுச் சொல்கிறாள்; நாம் நினைத்தபடி சிற்றூரில் எழிலகம்! சாலையும் சோலையும் அமைந்த ஒரு பண்ணை! இவைகளை நமது குழந்தைகளுக்கு நாம் பெற்றளிக்க முடியாது, ஆனால் அன்பே! நீதிக்கு இடமளிக்கும் நாட்டை ஒப்படைத்துவிட்டுச் செல்லும் பாக்கியம் கிடைக்கு மல்லவா! அது போதும்! அது பண்ணையை விட எவ்வளவோ மேலானது.''

இரும்புப் பெட்டியிலே எண்பது இலட்சம்! கரும்புத் தோட் டத்திலே வருட வருமானம் பல இலட்சம்! ஆலை! சோலை! சாலை! ஆள் அம்பு! கோட்டம்! மாடம்! கூடம்! - எல்லாம் தன் பிள்ளைகளுக்குத் தரவேண்டும்! எத்தனைப் பாடுபட்டாகிலும் அந்தச் செல்வநிலையைப் பெற வேண்டும். பிறகு!

அந்த மாளிகையிலே மந்தகாசம்!

மலர்த்தோட்டத்திலே காதல் கீதம்!

ஊரிலே பெருமதிப்பு! செல்வாக்கு! உயர்நிலை ! !

பிள்ளைகள் - பேரப்பிள்ளைகள் - வழிவழி வந்தோர் மகிழ்ச்சிப் பொங்கிடும் நிலையில் வாழ்ந்திடுவர்!

என்முன்னோர் எனக்காக இத்தனை செல்வத்தைச் சம்பாதித்து வைத்தார் என்று பேசுவர்; போற்றுவர்; வழி படக்கூடச் செய்வர்.

ஆனால், ஒரு தந்தை தன் மகனுக்கு இத்தகைய செல்வத்தை மட்டும் சேர்த்துவைத்துவிட்டால் போதுமா?

செல்வத்தைக் குவித்து வைத்துக் கொள்வதாலே மட்டுமே இன்ப வாழ்வு கிடைத்துவிடுமா?

பொறாமை! வஞ்சகம்! பொல்லாங்கு!

பகை! சூது! சூழ்ச்சி! மாச்சரியம்! - இவை நெளியும் நிலையில் நாடு இருந்திடின், அந்த நாட்டிலே மாளிகை உண்டு மந்தகாச வாழ்வு உண்டு என்று கூறி இருந்திட முடியுமா!

நீதி! நேர்மை! பண்பு! அறம்! அறிவு! இவைகளற்ற நிலையில் ஒரு நாடு இருந்திடின்.... அங்கு கோடி கோடியாகப் பணம் குவிந்திருந்திடினும், வாழ்விலே ஒரு நிம்மதி கிடைத்திடுமா!

நல்ல நாடு! என்பதைக் காட்டிலும் மேலான செல்வம், நிலையான செல்வம் வேறு எதுவும் இல்லை. நல்ல நாடு! ஒருவரை ஒருவர் தாழ்த்திடும் இழித்தன்மை இல்லாத நாடு! நிறம், மதம், மொழி, குலம், எனும் எதன் காரணமாகவும் பேதமும் பிளவும் ஏற்படாமல், எல்லோரும் ஓர் இனம், எல்லோரும் ஓர் நிறை என்ற முறை ஏற்றுக்கொள்ளப் பட்டுள்ள இடமே நல்ல நாடு!

என் மக்கள் வாழ்வதற்காக அத்தகைய நல்ல நாடாக இந்நாட்டை ஆக்கிட உழைப்பேன்; இதனைக் காட்டிலும் நான் என் பிள்ளைகளுக்குச் செய்யக்கூடிய நன்மை - தரக்கூடிய செல்வம் - விட்டுச் செல்லக் கூடிய வரலாறு - வேறு என்ன இருக்க முடியும்.

செல்வம் சேர்த்துக் கொடுத்திடலாம் - எதற்கு அது பயன்பட வேண்டும்? நிறவெறி தலைக்கேறி ஆட்டமாடுகிறார் களே அதற்காகவா! ஆளப்பிறந்த இனம் என்ற செருக்கை மூட்டிவிடவா செல்வம்!!

பூங்கொடியாளிடம் ஓர் பேழை! பேழை நிறைய வைரக் கற்கள்!! ஆனால் அவள் இருக்கும் இடமோ, வழிப்பறிக்காரர் தங்கும் குகை!!

படுத்துத் தூங்க மலர் தூவப்பட்ட படுக்கை!! ஆனால் எந்த இடத்தில்! பாம்புப் புற்றின்

பக்கத்தில்!!

இவ்விதமல்லவா இருந்திடும் நமது மக்களுக்குச் சுகமளித் திடும் என்ற நம்பிக்கையில் சொத்துமட்டும் சேர்த்துக் கொடுத்துவிட்டு, நாட்டை நயவஞ்சகர் கொட்ட மடிக்கும் காடாக இருக்க விட்டு விட்டால்!

தம்பி! இதுபோலப் பலப்பல எண்ணிடத் தோன்றுகிறது, அந்த மாது கூறிய,

நமது மக்கள் வாழ ஒரு நல்ல நாடு கிடைத்திடச் செய்திடுவோம்!

என்ற அருமை மிகு கருத்து,

நாம் வாழும் நாட்டில் நாம் காணும் கொடுமைகளில், அநீதிகளில். ஒரு சிறு அளவினையாகிலும் நாம் நமது அறிவாற்றலால், உழைப்பால், தன்னல மறுப்பால், போக்கிடுவது தான் நாம் முதல் கடமையாகக் கொண்டிடுவது என்ற நெறி,

நடைமுறையாகிடுமானால், தம்பி! உலகு புன்னகைப் பூங்காவாக அல்லவா வடிவம் கொள்ளும்.

ஆனால் மிகப் பெரும்பாலோரின் எண்ணம், தன் வீடு, தன் குடும்பம், தன் மக்கள், அவர்களின் எதிர்காலம் என்ற அளவோடு அல்லவா நின்றுவிடுகிறது.

தன் பிள்ளைகளின் எதிர்காலம் இன்பமுள்ளதாக இருந்திட வேண்டும் என்று எண்ணிக்கொண்டு, காலமெல்லாம் அதற் காகவே கடுமையாக உழைத்துவிட்டு, நிம்மதியான வாழ்வையே கெடுத்திடத்தக்க அக்கிரமபுரியாக நாடு இருந்திடுவதை மாற்றி அமைக்காவிட்டால் என்ன பயன்?

ஒரு தலைமுறை மற்றோர் தலைமுறைக்காக, தனித் தனி இல்லங்கள், செல்வம் என்ற இன்றைய

முறையைக்காட்டிலும், ஒரு தலைமுறை தன் காலத்தில் காணப்படும் கேட்டினைக் களைந்தெறிந்து தன் நாட்டைத்தான் காண்பதைக் காட்டிலும் சிறிதளவேனும் நல்ல நாடு ஆக்கி அளித்துவிட்டுச் சென்றிட வேண்டும் என்ற முறை எத்துணை நேர்த்தியானது!

பலப்பல எண்ணம் என் மனதிலே மலர்ந்தது தம்பி! அந்த வழக்கறிஞரின் மனைவி கூறிய கருத்தைக் கேட்டு.

தான் மேற்கொள்ளும் காரியத்தைத் தன் மனைவியும் வரவேற்று ஆதரிக்கிறாள் என்பதைத் தவிர மகிழ்ச்சியையும் எழுச்சியையும் மிஞ்சக் கூடியதாக வேறு எதுவும் இருக்க முடியாதல்லவா!

என்னமோ போக்கு! வீட்டைக் கவனிக்காமல் குடும்பத்தைக்

கெடுத்துக்கொண்டு ஊருக்கு உழைக்கி றாராம் ஊருக்கு!!

என்ற சலிப்பும வேதனையும் நிரம்பிய பேச்சைத் தாங்கிக் கொண்டபடி பொதுக் தொண்டாற்றுவது காதுக்குள் ஓர் வண்டு புகுந்து கொட்டிக் கொண்டிருக்கும் நிலையில், வாட்போரில் ஈடுபட்டு வெற்றிபெற முனைவதற்கு ஒப்பானதாகும்.

ஆனால் நமது கழகத் தோழர்களிலே மிகப் பலர்அத்தகைய பேச்சையும் தாங்கிக்கொண்டுதான் தொண்டாற்றுகிறார்கள்.

அவர்களின் தொண்டு மிகச் சிறந்தது என்ற நேர்த்திக்கு உரியதாவதன் காரணமே அதுதான். மாலை நேரப் பூப்பந் தாட்டம்! அல்ல, பொதுத்தொண்டு.

வழக்கறிஞர் ஆபிரகாம்ஸ்

தன் துணைவியின் எண்ணம் தூய்மைப்பட்டுவிட்டதனால், புதிய எழுச்சி பெற்றிருக்க வேண்டும் - நிச்சயமாக.

வழக்கு மன்றத்திலே அவர் அதே எழுச்சியுடன் பேசுகிறார்.

வாதத் திறமையால் குற்றச்சாட்டுகளை உடைத்தெறிவது, குறுக்குக் கேள்விகளால் சான்றுகளைப் பிளந்தெறிவது, சட்ட நுணுக்க விளக்கத்தால் வழக்கின் அடித்தளத்தைப் பெயர்த்திடுவது என்ற இவைகளிலே சுவை உண்டு; இந்தச் சுவை கிடைத்திடத்தக்க வழக்குப்பற்றிய ஏடுகள் பல படித்திருக்கிறேன். இந்த ஏட்டிலே என் மனதை மிகவும் ஈர்த்த பகுதி, வழக்கறிஞர் தமது திறமையை விளக்கிய பகுதி அல்ல; இதயத்தைத் தொட்டிடும் பகுதியே.

தம்பி! டக்ளஸ் டில்மன்மீது நான்கு குற்றச்

சாட்டுகள், அவைகளில் ஒன்றுகூட இறுதியில் மெய்ப்பிக்கப்படவில்லை, ஆதாரமற்றவை என்பதால்; இட்டுக் கட்டப்பட்டவை என்பதால்.

அந்தக் குற்றச்சாட்டுகளை உடைத்தெறிவதிலே அல்ல, வழக்கறிஞர் என் மனதைக் கவர்ந்தது.

நான்கு குற்றச்சாட்டுகளை வெறியர் டில்மன் மீது சுமத்தினர்,. இவரோ, ஐந்தாவது குற்றச்சாட்டு ஒன்றைச் சேர்த்துக்கொண்டார்.

ஐந்தாவது குற்றம் - பட்டிய-லே சேர்க்கப்படாதது - வெளிப்படையாக எடுத்துச் சொல்லப்படாதது - ஆனால் மற்ற நான்கு குற்றச்சாட்டுகளுக்கும் அடிப்படையாக அமைந்திருப்பது - அதுதான் அவர் ஓர் நீக்ரோ என்ற குற்றச்சாட்டு!! - என்று வழக்கறிஞர் ஆபிரகாம்ஸ் எடுத்து விளக்குகிறார்; ஆனால் மனதிலே நியாய உணர்ச்சிக்கு

இடமளித்திடுவோர் அனைவரும் உருகிடும் நிலை பெறுகின்றனர்.

குற்றம் சாட்டுகிறார்கள்!

யார்! யார்மீது?

வெள்ளையர்! கருப்பர் மீது!

ஏன் குற்றம் சாட்டுகிறார்கள்?

கப்பன் அரசாள்வதா என்பதால்!

குடிவெறி! காமச் சேட்டை; திறமைக் குறைவு கற்பழிக்க முயற்சித்தது! மகனுக்கு உடந்தையாக இருந்தது! வெள்ளை இனம் என்று ஏய்த்துத் திரியும் மகளுக்குத் தந்தையாக இருப்பது; - இவை குற்றச் சாட்டுகள்,

இவைகள் எப்போது கிளம்புகின்றன? எப்போது கிளப்பப் படுகின்றன! வெள்ளையரின் தலையாட்டிப் பொம்மையாக

டில்மன் இருக்க மறுத்திடும்போது!

கிடைத்த பதவிபோதும், சுகபோகம் போதும் என்று இருந்திருந்தால்? வழக்கு எழாது! வாழ்த்துக் கிடைத்திடும். ஆனால் அந்த வாழ்த்திலேகூட விஷம் கலந்திருக்கும்;

கருப்பர் இனத்தவராக இருப்பினும் கண்ணியமாக, திறமையுடன் நடந்து கொண்டார்!

கருப்பு இனத்தவர் கண்ணியமாக நடந்துகொள்ள மாட்டார்கள், திறமையாக நடந்திட மாட்டார்கள், என்ற பொதுவான குற்றச் சாட்டை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

கருப்பு இனத்தில் தவறிப் பிறந்தவர்!

என்ற பட்டம் தரப்படும்; சூட்டிக் கொள்ளலாம்.

இனத்தை இழிவுபடுத்துபவர்; ஏன் என்று

கேட்கக் கூடாது. தனி மனிதருக்கு புகழ் தரும் என்று மகிழலாம்!

இந்த நிலையினை உணர்ந்த ஆபிரகாம்ஸ், வழக்கு மன்றத்திலே கூடி டில்மனை ஒழித்துக்கட்ட ஏன் விரும்புகிறார்கள் என்ற இரகசியத்தை அம்பலப்படுத்த முனைந்தார். அதனால்தான், ஐந்தாவது குற்றம் அடிப்படைக் குற்றம் - என்பதுபற்றிப் பேசுகிறார்.

தம்பி! அவருடைய விளக்கத்தில், நூலுடைய தலைப்பு இருக்கிறதே மனிதன் என்ற தலைப்பு - அதனையே எடுத்து ஒரு தத்துவமாக்கிக் காட்டுகிறார்.

மனிதன்! மனிதன்! என்ற தம்பி! எல்லோருந்தான் பேசுகிறோம்; என்ன எண்ணிக்கொண்டு பேசுகிறோம்? எண்ணிப் பார்த்திடும்போதுதான் விந்தையான பல

உண்மைகள் நமக்குத் தோன்றிடும்.

நானும் மனிதன்தான்!

அவன் ஒரு மனிதனா? எல்லோரும் மனிதர்கள் தானய்யா!

மனிதனுக்கு மனிதன் என்ன வித்தியாசம்?

மனிதனாகப் பிறந்துவிட்டால் போதுமா!

அவன் மனிதன் அல்லய்யா....!

மனிதன் செய்கிற காரியமா இது!

இப்படிப் பல்வேறு நிலைகளில் பல்வேறு முறையாகப் பேசுகிறோம்.

மனிதன் என்றால் என்ன பொருள்? - இது பற்றியே வழக்கு மன்றத்தில் விளக்கம் அளிக்கப்படுகிறது.

பல்வேறு சிந்தனையாளர்கள் தந்துள்ள விளக்கங்களை எடுத்துக் காட்டிவிட்டு,

இறுதியாகக் கூறுகிறார்.

மனிதன் மிருகமல்ல!

இதைக் கூடச் சொல்லவேண்டுமா என்று கேட்கத் தோன்றும், தம்பி! ஆனால் நீக்ரோக்களை, “மிருகம்’ என்று கூட அல்ல,”உடைமை’ என்றே அமெரிக்க ”நீதி’ மன்றங்கள் கூறியுள்ளன என்பதை மறந்து விடக்கூடாது.

இங்கு மட்டும் என்ன!! ஜாதியால், பொருளாதார நிலையால் மூட்டப்பட்டுவிடும் வெறுப்பும் கேவல உணர்ச்சியும் ஆட்டிப் படைக்கும் நிலையில் உள்ளவர்கள், தம்மிலும் தாழ்ந்தவர்கள் என்று கருதப்படுபவர்களை மனிதர்களாகவா நடத்துகிறார்கள். மிருகமாக! மிருகத்தை விடக் கேவலமாக!!

டாக்டர் அம்பேத்கார் ஒரு முறை கூறினார், ஒரு உயர் ஜாதி இந்து தன்னுடைய நாயிடம்

பரிவு காட்டித் தொட்டு விளையாடுவான், ஒரு தாழ்த்தப்பட்டவனைத் தொடமாட்டான் என்று.

மிருகங்கள் பல உள; சிங்கம், புலி, நாய், நரி, ஓநாய்! - இப்படி. ஆனால் பித்துப்பிடித்தவனன்றி மற்ற எவனும் மனிதனுக்கும் மிருகத்துக்கும் வித்தியாசம் தெரியாமல் குளற மாட்டான்.

ஆனால் நமது நாட்டிலே சிலர், கருப்பு நிறம் கொண்டவர் களை அந்த நிறம் காரணமாகவே, மிருகம் என்று கூறுவதைக் கேட்டிருக்கிறேன்.

இது மடத்தனம் அல்லது வெறுப்பு என்பதும், இந்த முட்டாள்தனத்தைப் போக்கவல்லது கல்வி அறிவு என்பதையும் உணர்ந்திருக்கிறேன்.

மனிதன் - மிருகம்-இவை பற்றிய விளக்கம் கூறுவதற்காகப் பொறுத்திட வேண்டுகிறேன்; ஆனால் இந்த வழக்கு நடைபெறும் போது

இந்த விளக்கத்தை மறந்துவிடாதீர்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்.

வழக்கு நடப்பது, நாற்கால் பிராணிமீது அல்ல! ஒரு மனிதன் மீது! உங்களைப்போன்ற ஒரு மனிதன் மீது! அதை மறந்துவிடாதீர்கள்!

நான் குறிப்பிடும் ஐந்தாவது குற்றச்சாட்டு என்ன வென்றால் டக்லஸ் டில்மன் நீக்ரோ என்பதை மறந்து அமெரிக்கக் குடியரசுத் தலைவராக அமருவதற்கு இணங்கினார் அல்லவா, அதுதான்!

நீக்ரோ யார்? முழுமனிதன் அல்லவே! மட்டம்! இரண்டாந் தரக் குடிமகன்! மிருகம்! - அப்படித்தானே நிற வெறி யர்கள் கருதுகின்றனர், பேசுகின்றனர்.

நீக்ரோ, முழுமனிதன் அல்ல! ஆகவே அறிவுள்ளவனாக இருக்க முடியாதே! ஆகவே அடக்கி வைக்கப்பட வேண்டியவன்!!

இல்லையென்றால், குடித்துவிட்டு உருளுவான், குமரிப் பெண்களைக் கெடுத்திடத் துடிப்பான்! - அப்படித்தானே வெள்ளை இனத்தின் உயர்வுபற்றிய வெறியுணர்ச்சி கொண்டோர் கருதுகின்றனர்.

அப்படிப்பட்ட ஒரு கருப்பன், உயர்ந்த இனமான வெள்ளையர்களையும் சேர்த்து ஆளத்தக்க நினைப்பு கொள்ளலாமா! குடியரசுத் தலைவர் ஆகலாமா!! பெரிய குற்றமல்லவா!

மன்னிக்கப்பட முடியாத குற்றமல்லவா! டக்ளஸ் டில்மன் செய்த குற்றம் இதுதான் - அடிமை இனத்தவன் இவன்! ஆளப்பிறந்தவர் வெள்ளையர்! இந்த நியதியை மறந்தானே!! குடியரசுத் தலைவன் என்றானானே, அதுதான் அவன் செய்த குற்றம்.

குற்றப் பட்டியலில் அது இல்லை;

வெள்ளை வெறியரின் உள்ளத்தில் அதுதான் மேலோங்கி நிற்கிறது.

அந்தக் குற்றத்தை வெளியே கூறக் கூச்சப்பட்டுக் கொண்டு வேறு பலவற்றை இட்டுக் கட்டியிருக்கிறார்கள்.

நான் ஒரு மனிதனுக்காக வாதாடுகிறேன் - மனிதன் மிருகமல்ல என்ற தூய கருத்துக்காக வாதாடுகிறேன்.

தம்பி! வழக்கறிஞரின் இந்தப் பேச்சு உள்ளத்தைத் தொடு கிறது; ஆனால் வெள்ளையர் தலைவர் ஒருவர் வெகுண்டெழுந்து இது வழக்குக்குத் தொடர்பற்ற பேச்சு, விபரீதப் பேச்சு, இதனை மேலும் அனுமதிக்கக் கூடாது என்றெல்லாம் கூறுகிறார். நீதிபதியும், மேற்கொண்டு இது பற்றிப் பேச அனுமதி கிடையாது என்று அறிவித்து விடுகிறார்.

மேலும் பேசுவானேன் தம்பி! மனிதன் மிருகமல்ல! அந்த ஒரு வாக்கியமே போதுமே; அதிலே பொதிந்துள்ள பொருள் ஏடுபல கொள்ளுமே! நல்லவர் உள்ளத்தை உருக்குமே; அதுபோதும்!

மனிதன் மிருகமல்ல! என்பது மட்டும் தம்பி! உலகிலே அதிலும் குறிப்பாக "உயரிடங்களிலே' ஒப்புக் கொள்ளப்பட்டு விட்டால்!

மனிதன், மிருகமல்ல! என்பது மட்டும், அது எல்லாச் செயல்களுக்கம் அடிப்படையாக அமைந்துவிட்டால்!!

மனிதன், மிருகமல்ல! இதனை மட்டும் ஆட்சியாளர்கள் உணர்ந்துவிட்டால்!

நாடு, காடு ஆகிடாது! நல்ல நாடு கண்டிடலாம்.

தம்பி! வழக்கிலே டில்மன்

குற்றமற்றவர் என்பது மெய்ப்பிக்கப்படுகிறது என்பதுபற்றியும், தன்னைக் கற்பழிக்க முயன்றதாகக்குற்றம்சாட்டிய சாலி வாட்சன் எனும் மாது, உண்மையை எடுத்துரைத்து, டில்மன்மீது ஏற்றப்பட்ட பழியைத் துடைத்திட்டாள் என்பதையும் முன்பே குறிப்பிட்டுக் காட்டினேன்; நினைவிலிருக்கும் என்று நம்புகிறேன்.

வழக்கு முடிகிறது; டில்மன் குற்றமற்றவர் என்ற தீர்ப்புக் கிடைக்கிறது; வழக்கறிஞரும் அவர் போன்றோரும் மகிழ் கின்றனர்; குடியரசுத் தலைவர் டில்மன் தமது "கடமை'யைக் கவனிக்கச் செல்கிறார் என்ற முறையில் ஏடு முடிகிறது.

ஏடு, ஒரு நல்ல முடிவைக் காட்டுகிறது. நாடு? அது பற்றித் தம்பி! எண்ணிப் பார்த்திடத்தான் இவ்வளவும் சொல்லி வைத்தேன்.

அன்புள்ள

அண்ணாதுரை

17-4-66

47. கணக்குத் தீர்க்கும் காலம் !

கோபம், பலக்குறைவின் அறிகுறி !

காமராசருக்கு இந்திராவால் தொடர்ந்து குட்டுகள் !

வலதுசாரிகள் முடிவை மாற்றிக்கொள்ளத் தயங்கார் !

காமராசருக்கு அச்சம் - எதிர்க்கட்சிகளின் உடன்பாட்டால் !

தம்பி,

“தேர்தல் நெருங்க நெருங்கக் காங்கிரஸ் தலைவர் காமராஜரின் கோபம் வளர்ந்து வருகிறது, வார்த்தைகளிலே கடுமையும் தொனியிலே மிரட்டலும் மிகுதியாகிறது. சில ஆண்டுகளாகவே அவரிடம் தொத்திக்கொண்டுவிட்ட”எல்லாம் நானே!’ என்ற போக்கு இப்போது உச்சக்கட்டம்

சென்றிருக்கிறது. எனக்கு அதிலே ஒருவிதமான மகிழ்ச்சி, ஏனென்றால், இதற்குமேல் போவதற்கு இல்லை! ஆகவே, கீழே சரிந்தாகவேண்டும்! அவர் அல்ல! அவருடைய போக்கிலே காணப்படும் முடுக்கு!

"கோபம் பலவீனத்தின் அறிகுறி' என்று காந்தியார் கூறினார். அவர்தான் போய் விட்டாரே, இனி அவர் உபதேசம்' பற்றியா கவலைப்படப் போகிறார்கள் - அவர் பெயர் கூறிப் பெரியவர்களாகிவிட்டவர்கள்.

அவருக்குச் சிலைகள் அமைத்திருக்கிறோம். அவர் பெயரில் நகர்கள், நெடுஞ்சாலைகள், பூங்காக்கள், பவனங்கள், கல்விக் கூடங்கள், பிரார்த்தனை மண்டபங்கள் அமைத்திருக்கிறோம். போதாதா எமக்குள்ள பக்தியைக் காட்ட என்று கேட்பார்கள் அவர் "பேச்சை'த் துச்சமென்று தள்ளிவிட்ட தூயவர்கள்.

கோபம், பலக்குறைவின் அறிகுறி என்பதனை எவரும் மறுப்ப தில்லை; மறுப்பதற்கில்லை. கோபம், அடக்கமுடியாத ஆசையை நிறைவேற்றிக் கொள்வதிலே தடை ஏற்பட்டுவிடும்போது பன்மடங்கு அதிகமாகிவிடுகிறது. காமராஜர் அந்த நிலையால் நெளிகிறார்; ஆகவேதான் அத்தனை ஆத்திரத்தைக் கொட்டிக் கொண்டிருக்கிறார்.

அதிலும், மிகவும் வேண்டியவர்கள், தனக்குக் கட்டுப் பட்டவர்கள், தம்மால் உயர்நிலை சென்றவர்கள், தன் பேச்சைத் தட்டி நடப்பது மட்டுமல்ல, தன் பேச்சு பொருளற்றது, பயனற்றது, பொருட்படுத்தத் தக்கதல்ல என்று வெளிப்படை யாகவே கூறிடுவதைக் கேட்கும்போது, அவருக்கு - பெரியவருக்கு! - கோபம் கோபமாகத்தானே வரும்! அந்தக் கோபத்தை யார்மீது காட்டுவது?

எதிர்க்கட்சிகள் மீது!! காட்டுகிறார்!!

அமெரிக்காவின் உதவியைப் பெறுவதற்காக, அந்த நாட்டு ஆட்சியாளர்கள் நீட்டிடும் காகிதத்தில் காட்டிடும் இடத்தில் கையெழுத்திடுவது, அடிமை முறிச் சீட்டிலே கையொப்பமிடுவதற்கு ஒப்பாகும்.

பலர் இந்தக் கருத்தினைக் கூறினர்; கூறி வருகின்றனர். பேரரசினை நடத்திச் செல்பவர்கள் தந்திடும் சமாதானம், விளக்கம், வாதத் திறமைக்கு எடுத்துக்காட்டாக அமைகிறது; ஏற்பட்டுவிட்ட அய்யப்பாட்டை நீக்குவதாக இல்லை.

அய்யப்பாடும் அருவருப்பும் கொண்டுள்ளவர்களில் பெரியவரும் ஒருவர்.

உரத்தொழிற்சாலை சம்பந்தமாக அமெரிக்காவிடம் இந்தியப் பேரரசு செய்து கொண்டுள்ள ஒப்பந்தம் அக்கிரம மானது,

அநீதியானது, சோஷலிசக் கொள்கைக்கு ஊறு தேடுவது என்பது காமராஜரின் கருத்து.

இந்தக் கருத்தினை அவர் ஜெய்ப்பூரில் வெளியிட்டார்.

கை தட்டினர்; வரவேற்றனர்; யார் தவறான வழி சென்றாலும், பெரியவர் தடுத்து நிறுத்துவார் என்று பாராட்டினர்.

இந்திராகாந்தி அம்மையார் அமெரிக்கா சென்றார்களல்லவா- வசந்தம் கண்டேன்! என்று மகிழ்ந்து அறிவித்தார்களே!! - அப்போது. கேட்டார்கள் அவர்களை, காமராஜரின் கருத்துப் பற்றித் தாங்கள் என்ன கருதுகிறீர்கள் என்று.

அவர் கருத்தை நான் ஏற்றுக் கொள்ளவில்லை.

என்று அம்மையார், சுருக்கமாக, ஆனால், கரீல் என்று படும்படி, பதில் கொடுத்தார்கள்!

கேள்வியை எழுப்பியவர்கள் அந்தப் பதிலைக் கேட்ட போது, எந்தவிதமான "தோற்றம்' காட்டினரோ தெரியவில்லை; ஆனால், எளிதிலே புரிந்துகொள்ளலாமே!!

என்ன இருந்தாலும் இப்படிக் குட்டி இருக்கக் கூடாது.

என் தலைவர்! என் வழிகாட்டி! என்று இங்கே "பஜனை' செய்வது; அங்கே போய் அவர்கருத்தை நான் ஏற்றுக்கொள்ளவில்லை என்று அத்தனை அலட்சியமாகச் சொல்லுவது! இதுவா தலைவரிடம் கொண்டுள்ள"மதிப்பு'க்கு அடையாளம்!

என்ன எண்ணிக்கொள்வார்கள் அமெரிக்கர்கள் தலைவரைப்பற்றி! அவர் எதையோ பேசுவார்! ஆனால் அவர் பேச்சை ஆட்சி நடாத்தும் அம்மையார் ஏற்றுக் கொள்ள

மாட்டார்கள்! அவ்வளவுதான் அவருக்கு உள்ள "பிடி'யின் இலட்சணம்! என்றெல்லாம் கேலி பேசமாட்டார்களா!

பச்சையாகச் சொல்வதானால், தலைவரின் முகத்தில் கரி பூசிவிட்டார் என்றுதான் தெரிகிறது!

காட்டிக் கொடுத்துவிட்டார் என்று சொல்ல வேண்டும்.

இவ்விதமெல்லாம் பேசிக் கவலைப்பட்டிருப்பர் "துதி பாடகர்கள்.

அவருக்கு மட்டும் என்ன மனத்திலே கோபம் எழாமலா இருந்திருக்கும். கொட்டிக் காட்ட "இடம்' பார்த்தபடி இருந்திருக்கிறார்; எதிர்க்கட்சி மீது கொட்டுகிறார்.

எதிர்க்கட்சிகள்மீது பாயும்போது காட்டும் ரோஷ உணர்ச்சியிலே நூற்றிலே ஒருபங்கு பயன்படுத்தியாவது, அம்மை யாரைப் பார்த்து,

மரியாதையாக, ஆனால், உறுதியாகக் கூறியிருக்க வேண்டாமா, காமராஜர்

தாங்கள் அமெரிக்காவில் என் கருத்தைப் பற்றி அவ்வளவு அலட்சியமாகப் பேசி இருந்திருக்கக்கூடாது என்று.

கூறினாரா! இல்லை! ஏன்? அம்மையார் மேலும் என்னென்ன சொல்லிவிடுவார்களோ என்ற அச்சந்தான்! வேறென்ன?

எரிச்சலை அடக்கிக்கொண்டார்; மனம் குமுறியபடி இருந்தது.

"பஞ்சாபி சுபா' - வங்காளக் கலவரம்' போன்ற மிக முக்கியமான நிகழ்ச்சிகளை ஒட்டி அம்மையார் முடிவுகளெடுத்தபோது பெரியவர் நெடுந்தொலைவிலே நிறுத்தி வைக்கப்பட்டுவிட்டார்! மனம் படாதபாடு பட்டிருக்கத்தானே செய்யும்!!

பஞ்சாபி சுபா அமைக்கும் காலம்வரையில்

பஞ்சாபில், குடியரசுத் தலைவரின் ஆட்சி ஏற்படுத்தப் படுவதைத்தான் விரும்புகிறேன்; என் சொந்தக் கருத்து அதுதான் என்று காமராஜர் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

அம்மையாரும் உடனுள்ள அமைச்சர்களும் கூடிப் பஞ்சாபில் இப்போதுள்ள "மந்திரி சபை'யே நீடிக்கட்டும்; குடியரசுத் தலைவரின் நேரடி ஆட்சி வேண்டாம் என்று முடிவு செய்து அறிவித்து விட்டனர்.

இவ்விதம் தொடர்ந்து குட்டுகள்; குடைச்சல்கள்! அதன் பயனாக ஏற்பட்ட மனக்குமுறல், காமராஜரை எதிர்க்கட்சிகள் மீது பாயச் செய்கிறது.

பட்டாளம் வந்துவிடும் என்று பயம் காட்டினார்!

அவருடைய இந்தப் பேச்சை, கவனிக்கத்தக்கதாகக்கூட அம்மை யாரும்

மற்ற அமைச்சர்களும் கருத மறுத்துவிட்டனர். எதையாவது பேசிக்கொண்டிருப்பார்; பேசிக்கொண்டிருக்கட்டும் என்று இருந்து விட்டனர்.

இந்த அளவு அலட்சியப்படுத்தி இருந்திருக்க வேண்டியதில்லை என்று பலரும் பரிதாபப்படத்தக்க முறையிலே பிரதம மந்திரியார் நடந்துகொண்டார்!

காமராஜரின் "பட்டாளப்"பேச்சை அறிவாளர்கள் பலமாகக் கண்டிக்கலாயினர்; இதழ்கள் கண்டித்தன. கோபம் கிளம்பி இருக்கவேண்டுமே! காணோம்! ஏன் கண்டனத்துக்கு மறுப்புக் கூறக் கிளம்பி, மேலும் எதை எதை வாங்கிக் கட்டிக் கொள்ள வேண்டி வந்துவிடுமோ என்ற அச்சம்! அந்தப் பேச்சை அந்த அளவோடு விட்டுவிட்டார்!!

பேசாமலும் இருக்க முடியவில்லை.

பேசினாலும் மாட்டிக்கொள்ள வேண்டி வந்து விடுகிறது!

"ஆகட்டும் பார்க்கலாம்' என்ற பாணியோடு நின்றிருக்க வேண்டும்!

மேலால் சென்றதுதான் இத்தனை சங்கடத்துக்கும் காரணம்!

என்றெல்லாம் அவர் எண்ணிக்கொண்டிருந்திருப்பார். எடுபிடிகள் விடுமா! எமது தலைவர் ஏன் அவ்விதம் சொன்னார் என்றால் என்று துவங்கி ஏழும் ஏழும் பத்தடா! இதை இல்லை என்பான் யாரடா!! என்ற பாடிடும் பாணியிலே பேசிடக் கேட்கிறோம். அவர் ஒருமுறை பேசியதுடன் நிறுத்திக் கொண்டு விட்டார்.

இப்போது மற்றோர் "கரடி'யை ஓட்டி வந்து காட்டுகிறார்.

வெளிநாடுகள் பணம் தருகின்றனவாம்,

இங்குள்ள எதிர்க் கட்சிகள் சிலவற்றுக்கு, எதிர்க்கட்சிகள் சில தேர்தலிலே செலவிடும் பணத்தின் அளவைப் பார்க்கும்போது, தனக்கு அவ்விதம் தோன்றுகிறதாம். இவ்விதம் கூறியதும் நாட்டு மக்கள் பதைபதைத்து, துடிதுடித்து, கொதித்தெழுந்து எதிர்க்கட்சிகளைச் சாடுவர் என்று பெரியவர் எண்ணிக் கொண்டு இந்தக் "கரடியை' ஓட்டிக் காட்டுகிறார். விவரமறிந்தவர்கள் கைகொட்டிச் சிரிக்கிறார்கள்; இது எத்தகைய விந்தையான அரசு! துப்பறியும் இலாகாவும், போலீசும், சுங்கத் துறையும் வெளிநாட்டுத் தூதரகங்களும், கொள்ளை கொள்ளையாகப் பணத்தை மென்று தின்று கொண்டிருக்க, அத்தனை வளையங்களையும் மீறி வெளிநாட்டுப் பணம் இங்கே வந்திட எப்படி முடிந்தது! இவ்வளவுதானா இந்த அரசுக்கு உள்ள திறமை! கையும் பிடியுமாகப்

பிடித்துக் காட்ட வல்லமையற்று, வக்கற்று, வழியற்று இருந்திடலாமா! பணம் அனுப்பும் வெளிநாடுகள் யாவை? எந்தக் கட்சிகளுக்குத் தருகின்றன? ஏன் என்ற விவரத்தைக் கண்டறிந்து, குற்றவாளிகளை அம்பலப் படுத்தாமல், பொறுப்பிலே உள்ளவர்கள் இப்படியா பேசுவது; மூன்று முழ நீளமுள்ள குதிரைக் கொம்பை ஆறு பொதி அளவுள்ள அத்திமலர் கொடுத்து வாங்கினேன் என்ற முறையிலா பேசுவது?

வெளிநாடுகள் பணம் தருவது, குற்றம்! மன்னிக்கப் படமுடியாத குற்றம்.

வெளிநாடுகளிடம் கட்சிகள் பணம் வாங்குவது மாபெருங்குற்றம்; தேசத்துரோகக் குற்றம்.

அப்படிச் சில கட்சிகளுக்கு வெளிநாடுகள் பணம் கொடுக்கின்றன என்று தோன்றுகிறது

என்று பேசி விட்டு அதைக் கண்டுபிடிக்காமல் இருப்பது, பொறுப்புள்ள சர்க்காராக இருக்க முடியாது.

அத்தகைய போக்கிலே ஒரு சர்க்கார் இருப்பது அந்த நாட்டுக்கே அவமானம்!

இது வெறும் தேர்தல் தந்திரப் பேச்சு தானே!! என்று இடித்துக் கேட்கிறது மெயில் இதழ்.

தெளிவும் துணிவும், திறமையும் பொறுப்பும் வல்ல மையும் பண்பும் இருப்பது உண்மையானால் எந்தெந்த வெளிநாடுகள் எந்தெந்தக் கட்சிகளுக்குத் தேர்தல் செலவுக் காகப் பணம் தந்துள்ளன என்ற விவரத்தைக் காம ராஜர் வெளியிட வேண்டும்; தயக்கமின்றி; அச்சமின்றி; வெளியிடு வாரா!!

வெளிநாடுகள் பணம் தருவதாகத் தோன்றுகிறது; ஆனால், விவரம்

தெரியவில்லை : கண்டுபிடிக்க முடியவில்லை என்று கூறுவதாயின், இத்தனை பெரிய இடத்தில் இருந்துகொண்டு விவரமறியாமல், விளக்க முடியாமல் பேசுவது கேட்டு அறிவாளர் கைகொட்டிச் சிரிப்பார்கள்! வெளிநாடுகளும் இந்த அரசு பற்றியும் நடத்திடும் தலைவர்கள் பற்றியும் மிகக் கேவலமாகக் கருதிக் கொள்வார்கள்.

ஏன் அதுபோலப் பேசினார் காமராஜர்? தேர்தலைப் பற்றிய திகில்! என்ன நேரிட்டுவிடுமோ என்ற அச்சம்! கணக்குக் கேட்கும் காலம் வருகிறதே என்ற கலக்கம்.

கோடி கோடியாகப் பணத்தைக் கொட்டிக் குவித்தாலும், ஏமாற்றப்பட்டுப்போயுள்ள மக்களின் மனக்கொதிப்பை அடியோடு போக்கிவிடமுடியாது; அவர்கள் தமக்கு இழைக்கப் பட்டுள்ள கொடுமைகளுக்காகப் பழிதீர்த்துக் கொள்ளக் கிளம்புவதைத் தடுத்து

விட முடியாது என்று காமராஜர் உணருகிறார்.

காங்கிரசுக் கட்சியில் உள்ள பணக்காரர்களை எண்ணிப் பார்த்திடும்போது, ஒரு விதமான தைரியம் வருகிறது. என்றாலும், எந்தப் பக்கம் திரும்பினாலும், வறண்ட தலையினர், இருண்ட கண்ணினர், கூனிக்கிடப்போர், கொத்தடிமை செய்தும் வாழ்க்கை பொத்தல் இதை போன்றாகிடக்கண்டு வதைப்படுவோர், இல்லாமை கொட்டுவதால் துடிதுடித்துக் கிடப்போர் என்போர் களே தெரிகின்றனர். அவர்களின் கண்கள் கேள்விக்குறிகளாகி விட்டிருப்பதையும் காண்கிறார்! இந்தப் புயலைச் சமாளிக்கப் பணத்தால் ஆகுமா என்று எண்ணுதிறார்; திகைக்கிறார்.

காங்கிரசுக் கட்சியை எதிர்க்க முனையும் கட்சிகளைக் காட்டுப்போக்கில் தாக்கிப்பேசினால் அச்சத்தால் அடங்கி

ஒடுங்கிப் போவார்களா என்று பார்க்கிறார்; பலிக்காதது கண்டு பதைக்கிறார்.

ஒரே ஒரு தைரியம் அவருக்கு! காங்கிரசுக்கு எதிர்ப்பு நிரம்ப இருக்கிறது; பல முனைகளிலிருந்து, பல்வேறு முகாம்களிலிருந்து!

ஒரு கணம் மிரட்சி ஏற்படுகிறது, இத்தனை முகாம்களி லிருந்தா எதிர்ப்பு என்று! மறுகணமோ மகிழ்ச்சி துளிர்க்கிறது; பலமான எதிர்ப்புதான், ஆனால், பல முகாம்கள்!! ஒரே அணியில் இல்லை! பல அணிகள்! பல்வேறு போர் முறைகள்!! எனவே, பிழைதுக் கொள்ளலாம் என்ற தைரியம் பிறக்கிறது.

நாட்டுக்கு விடுதலை கிடைத்திட வேண்டும் என்ற ஒரே நோக்கத்தின் அடிப்படையில் அறுபது ஆண்டுகளுக்கும் மேலாகப் பணியாற்றிய காரணத்தால் இந்தியா

முழுவதற்குமாக காங்கிரஸ் எனும் அமைப்பு பரவி வளர்ந்திட முடிந்தது.

இன்று வளர்ந்துள்ள எதிர்ப்புகள் அதுபோல ஒரே முகாமாக வடிவம் கொள்வது எளிதான காரியமல்ல.

எனவே, இந்த முகாம்களுக்குள் மோதுதலை மூட்டி விட்டால், மூலபலம் முறிந்துவிடும் என்பது காமராஜரின் கணக்கு!

ஆனால், நாடு இன்று பூண்டுள்ள போர்க்கோலத்தைப் பார்க்கும்போது இந்தக் கணக்கும் பொய்த்துப் போய்விடும் என்றே தோன்றுகிறது.

காங்கிரசுக்கு எதிர்ப்பாக உள்ள கட்சிகள் பல; அவைகளிலே ஒன்றை ஒன்று பகைத்துக் கொள்ளும் நிலையும் இருந்திடக் காண்கிறோம்.

ஒவ்வொரு கட்சிக்கும் ஒரு இயல்பு,

திறமை, வரலாறு, வாய்ப்பு, வலிவு, கொள்கை, திட்டம் இருந்திடக் காண்கிறோம்.

ஆனால் , இவை யாவும், தனித்தனியாகத் தத்தமது கொள்கைகளை எடுத்துக் கூறிடுவதுடன், காங்கிரசின் எதேச்சாதிகாரப் போக்கைக் கண்டிப்பதிலும், காங்கிரசு ஆட்சி நீக்கப்படவேண்டும் என்பதை வலியுறுத்துவதிலும் ஒன்றுபட்டு நிற்கின்றன.

மொத்தத்தில் நாட்டு மக்களிடம் காங்கிரசாட்சிக்கு எதிர்ப்பான உணர்ச்சி பெரிய அளவிலே கொழுந்துவிட்டு எரிகிறது.

எல்லா எதிர்க்கட்சிகளும் எடுத்துக் கூறுவதிலிருந்து, காங்கிர சாட்சி மாற்றப்பட்டாகவேண்டும் என்ற எழுச்சியை மக்கள் பெறுகிறார்கள்; முதலில்! பெறுவதால் காங்கிரஸ் கட்சிக்கு இம்முறை ”ஓட்டு’ அளிக்கக்கூடாது என்ற உறுதி பெறுகிறார்கள்.

இந்த உறுதி பெற்ற பிறகு காங்கிரசை வீழ்த்த, இன்றுள்ள எதிர்க்கட்சிகளில், எதற்கு வலிவும் வாய்ப்பும் போதுமான அளவு இருக்கிறது என்ற எண்ணம் பிறக்கிறது.

அத்தகைய வலிவும் வாய்ப்பும் உள்ள கட்சி எது என்று கண்டறிந்ததும், அந்தக் கட்சியிடம், தமக்கு நலன் தரத்தக்க கொள்கையும் திட்டமும் இருக்கிறதா என்று பார்த்திட முனைவர். அதிலே பொதுமக்கள் மனத்திற்கு நிறைவு ஏற்படின் அந்தக் கட்சியினை ஆதரிப்பர்.

தம்பி; இந்த முறையில் பொதுமக்கள் நமக்குத் தந்த வாக்குகளின் எண்ணிக்கைதான், சென்ற தேர்தலின்போது 34 இலட்சம்.

சென்ற தேர்தலின்போது இருந்தது போலவே இப்போதும் காங்கிரசை எதிர்க்கும் கட்சிகள் பல முகாம்களாக உள்ளன என்ற

போதிலும்,

சென்ற தேர்தலைவிட இம்முறை, கட்சிகளுக்குள் "உடன்பாடு' பெருமளவு ஏற்பட்டுத்தீரும் என்பதற்கான அறிகுறிகள் பளிச்சிட்டுக் கொண்டுள்ளன.

வலதுசாரிகள் நம்மோடு "ஒட்டுஉறவு' கொள்ளப்போவதில்லை யாமே, அண்ணா! அப்படி இருக்கக் கட்சிகளுக்குள் உடன்பாடு இம்முறை சென்ற முறையைவிட அதிக அளவிலே இருக்கும் என்று எப்படிக் கூறலாம் என்று கேட்கிறாயா, தம்பி! காரணத் தோடுதான் கூறுகிறேன்.

வலதுசாரிகள் நம்மோடுதான் உடன்பாடு செய்து கொள்ள மறுக்கிறார்கள். ஆனால், அவர்களும் "உடன் பாடு தேவை என்பதை உணர்ந்து, இடதுசாரிகள், சோஷியலிஸ்டுகள், தமிழரசுக் கழகம் ஆகிய அமைப்பு களுடன்

கலந்து பேச விழைகிறார்கள்.

நான் இந்த ”விழைவை’ வரவேற்கிறேன். பத்துப் பதினைந்து முகாம்கள், ஒரே முகாமாக அமையா விட்டாலும் பத்துப் பதினைந்தாகவே இருக்கப் போவதில்லையல்லவா? மூன்று அல்லது நான்கு முகாம்களாகும் போலத் தோன்றுகிறது.

அந்த அளவுக்கு நிலைமை உருவெடுத்தால் கூட வரவேற்கத் தக்கதுதான்.

எடுக்கப்பட்டுள்ள முடிவு, இறுதி முடிவு என்று நான் கருதவில்லை.

ஆந்திர வலதுசாரித் தலைவர், எவருடன் கூடியேனும் காங்கிரசை வீழ்த்தவேண்டும் என்ற கருத்துடன் இருப்பதாக இதழில் கண்டேன்.

இந்த எண்ணம் வளர்ந்து, இன்றைய முடிவு மறுவடிவம் கொள்ளக் கூடும் என்பதிலே

எனக்கு நம்பிக்கை இருக்கிறது.

சென்ற தேர்தலின்போது, சுதந்திரக் கட்சியுடன் உடன்பாடு செய்து கொள்வது, தமது தூய்மையைக் கெடுத்துவிடும் என்று பேசிவந்த கம்யூனிஸ்டு நண்பரொருவர், தேர்தல் நெருங்க நெருங்க, மாநில மட்டத்திலிருந்து மாவட்ட மட்டத்திற்கு வந்து, அதிலிருந்து கடைசியில் "தொகுதி' மட்டத்துக்கு வந்தார். நினைவில் இருக்கிறது! நிலைமையை உணர உணர, முடிவுகள் திருத்தி அமைக்கப்படும்.

சுதந்திரக் கட்சியுடன் "உடன்பாடு' செய்து கொள்ள முடியாது - அவர்களை ஆதரிக்க முடியாது - என்று திட்ட வட்டமாகத் தெரிவித்துவிட்ட கம்யூனிஸ்டுகள் - சுதந்திரக் கட்சியுடன்"உடன்பாடு' செய்து கொண்ட "பார்வார்டு பிளாக்குடன்"'உடன்பாடு' செய்துகொண்டு,. ஒத்துழைப்பு நல்கினர்.

நல்லவர்கள் தம்பி! அவர்கள்! அவர்கள் அவ்வப்போது எடுக்கும் முடிவுதான் இறுதி முடிவு என்று எண்ணிக் கொள்ளாதே, மாற்றிக்கொள்ளத் தயக்கம் காட்ட மாட்டார்கள்!

இதழில் பார்க்கிறேன், சோவியத் ர□யர்வில் கம்யூனிஸ்டு கட்சி பற்றிய ஒரு செய்தியை.

மே தினம் வருகிறதல்லவா, தம்பி! அன்று உலக நாடுகள் பலவற்றுக்கும் வாழ்த்து வழங்க, எந்த முறையில், எந்த வடிவத்தில், எந்தக் காரணம் காட்டி வாழ்த்து வழங்குவது என்பது பற்றி சோவியத் கம்யூனிஸ்டு கட்சியின் மத்தியக் கமிட்டி கூடி 111 வாழ்த்துகளைத் தயாரித்துள்ளது.

அதிலே ஒன்று, சோவியத் ரஷியாவும் அமெரிக்காவும் மேலும் விரிவான முறையில் ஒத்துழைக்க வேண்டும் என்பதாகும்!

ஆமாம், தம்பி! யாராவது வலதுசாரி மயக்கமடித்து விழப்போகிறார்; ரஷியாவும்அமெரிக்காவும் விரிவான முறையில் ஒத்துழைக்க வேண்டும் என்பதுதான் வாழ்த்தோவியம்!

முதலாளித்துவத்தை வெட்டி வீழ்த்திக் குழிதோண்டிப் புதைத்து, அந்தப் புதைகுழிமீது புதுமைப் பூங்காவை அமைத்து, அங்கிருந்து கிளம்பும் சமதர்ம மணத்தை அவனியெங்கணும் பரவிடச் செய்திடும் பாட்டாளியின் அரசாம் சோவியத் ரஷியாவா, உலக முதலாளித்துவ முகாமாகவும், சோஷியலிசத்தை ஒழிக்கச் சதி நடத்தும் பாசறையாகவும் உள்ள அமெரிக்காவுடன் ஒத்துழைக்க வேண்டும்! புனிதமிகு மே தினத்திலா இந்தப் பேச்சு! ரஷிய கம்யூனிஸ்டு கட்சியிடமிருந்தா! ஐயகோ! அக்கிரமம்! அக்கிரமம்! அடுக்காது இந்த

அநீதி!! என்றெல்லாம் துடி துடித்திடுவதில் பயன் இல்லை என்பதைக் கூறிடு, தம்பி! அமெரிக்காவுடன் விரிவான முறையில் ர□யர் ஒத்துழைக்க வேண்டும் என்ற வாழ்த்து தயாராகிறது.

அமெரிக்க-ரஷியா ஒத்துழைப்பு, எதற்கு? ஒரு குறிப்பிட்ட காரியத்துக்காக. உலகிலே புதியதோர் போர் மூண்டிடாமல் தடுத்திட!

அமெரிக்கா தனியுடைமைத் தத்துவத்துக்கும் ரஷியா பொதுவுடைமைத் தத்துவத்துக்கும் கட்டுப்பட்டவையே.

அந்த அடிப்படையிலே விட்டுக் கொடுப்பது, பணிந்து போவது, வளைவது, நெளிவது இல்லை.

பொதுவுடைமை மூலமாகவே மனிதகுலம் மாண்பு பெற முடியும் என்ற தத்துவத்தை ரஷியா இழக்க வில்லை; மறக்கவில்லை;

வற்புறுத்தத் தவறப் போவதுமில்லை.

ரஷியாவுடன் விரிவான அளவிலே ஒத்துழைப்பதால், அமெரிக்கா பொதுவுடைமைத் திட்டத்தை ஏற்றுக் கொள்ளப் போவதில்லை.

ஆனால், அந்த இரு நாடுகளும், உலகிலே போர் மூண்டிடாதிருக்கச் செய்யும் புனிதப் பணியில் ஒத்துழைக்க முனைகின்றன.

தம்பி! சுதந்திராவுடனா...! என்று கோபம் கொப்பளிக்கும் நிலையினில் கேட்கின்றனரே, அவர்கள் ரஷியா காட்டிடும் பாடத்தையுமா, என்மீது உள்ள கோபத்தால் மதிக்க மறுக்க வேண்டும்! வேடிக்கையாகத்தான் இருக்கிறது, அந்தப் போக்கு!

இட்லரின் கொடுமையை ஒழிக்க அமெரிக்க ரூஸ்வெல்டும், சோவியத் ஸ்டாலினும், பிரிட்டிஷ் சர்ச்சிலும் ஒன்று

கூடினர்; ஒரு குறிப்பிட்ட காரியத்துக்காக நோக்கத்துக்காக.

அதனை உலகமே வியந்து பாராட்டத் தக்க ராஜ தந்திரம் என்று கூறினர், அரசியல் துறை வித்தகர்கள்.

காங்கிரஸ் எதேச்சாதிகாரத்தை வீழ்த்தப் பிற கட்சிகளுடன் செய்துகொள்ளும் "உடன்பாடு' பற்றி அதிர்ச்சி கொள்வோர், இந்த மூவர் முகாம் பற்றிய வரலாறு பற்றி ஏன் சிந்திக்கக் கூடாது!

தம்பி! இதனை விரிவாக எழுதுவது, அவர்களை, கண்ணே! வா! வா! கண்மணியே! வா! வா!! என்று அழைத்திட அல்ல. அவர்களேதான் தமது போர்முறையை வகுத்துக் கொள்ள வேண்டும். நான் இதுபற்றி எழுதுவதன் காரணம், காமராஜர் இந்த "உடன்பாடு' பற்றிப் பேசி வருகிறாரே,

அதுபற்றி விளக்கிடத்தான்.

காங்கிரசை எதிர்க்கும் சக்திகள் ”உடன்பாடு’ செய்து கொள்வது அவருக்கு அச்சமூட்டுகிறது.

அதன் காரணமாகவே அவர் ஆத்திரப்பட்டுப் பொருளற்றனவற்றைக்கூடப் பேசிக்கொண்டு வருகிறார்.

அன்புள்ள

அண்ணாதுரை

24-4-66

48. கண்ணீர் பொங்கும்....

காரணம் கூறா நாடகம் !

வளரா நாடு வளர்ந்த நாட்டிடம் கடன் வாங்கலாம் !

கடனுக்குமேல் கடன் வாங்குவது ஆபத்து !

அமெரிக்கா கடன்தரக் கேட்டிடும் தகவல்கள் என்னென்ன ?

தம்பி,

ஒரு சிறு நாடகம் காண்கிறாயா? நாடகம் அளவிலே தான் சிறியது; அதிலே பின்னப்பட்டிருப்பவர்கள் பெரியவர்கள்! பெரிய இடத்து விவகாரம் என்றுகூடச் சொல்லலாம்.

நாட்டிலே நடப்பனவற்றிலே இதுவும் ஒன்று என்று ஒப்புக் கொள்வாய், நாடகத்தைப் படித்ததும்.

நடப்பதைத்தான் நான் தீட்டியிருக்கிறேன்; ஏன் அவ்விதம் நடந்தது என்பது பற்றி நீயே எண்ணிப் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று விட்டுவிட்டிருக்கிறேன்.

மலர்கள் இங்கும் அங்கும் நிறையச் சிதறிக் கிடந்தன - என்று கூறினால், ஏன் என்பது பற்றி எண்ணிப் பார்த்தால், என்னென்ன தோன்றும்?

கடுங்காற்று வீசி மலர்கள் சிதறி இருந்திருக்கக் கூடும்.

மந்திபுகுந்து மலர்களைப் பறித்துப் பாழாக்கிப் போட்டிருக்கக்கூடும்.

காதலர்களின் ஊடலின் விளைவால் ஏற்பட்டதாக இருக்கக்கூடும்.

படமெடுப்பதற்காகச் சினிமாக்காரர்கள் அந்தத் தோற்றத்தை உண்டாக்கி இருந்திருக்கலாம்.

இதுபோல ஏதோ ஒரு காரணம் மனத்திலே தோன்றுமல்லவா - மலர்கள் சிதறிக் கிடந்தன என்று கூறினது கேட்டால். அதுபோல, நாடகத்தில் உள்ள நிகழ்ச்சிகளைக் கண்டதும், அதற்கான காரணங்கள் என்னவாக இருக்க முடியும் என்று எண்ணிப் பார்த்திட முடியும். சுவையும் மிகுதி; பயனும் உண்டு. ஆகவேதான் தம்பி! நிகழ்ச்சிகள், நிலைமைகள் ஆகியவைகளை மட்டும் தந்துள்ளேன்; காரணம்பற்றி ஏதும் கூறவில்லை. இனி நாடகம் கண்டிடுவாய்.

-[1948]-

இடம் : மங்களவிலாஸ் கூடம்.

இருப்போர் : மங்களபுரி மைனர், மானேஜர் மந்திர மூர்த்தி, பணியாள் பெருமாள்.

நிலைமை : மங்களபுரி மைனர் சோர்வாகச் சோபாவில் சாய்ந்து கொண்டிருக்கிறார்.

பணியாள், கால்களைப் பிடித்துக் கொண்டிருக்கிறான் மானேஜர் சிறு குறிப்புப் புத்தகத்தைப் புரட்டிக் கொண்டிருக்கிறார்.

மைனர் : நம்ம ஜெமீனிலே இதுவரை இல்லாத வழக்கமாக இருக்குதேய்யா, நீ சொல்வது, ஏன் அந்த ஆசாமியை நான் பார்க்கணும், என் பேரைச் சொல்லிக் கேட்டயேல்லோ.... பிறகு என்ன? என்னை ஏன் பார்க்கணுமாம்...

மானேஜர் : கேட்டதைத் தர அப்போதே சம்மதம் சொல்லி விட்டான்.... தங்களைப் பார்க்கணும் என்கிறது அந்த மூணு இலட்சம் தருகிற விஷயமாக அல்ல. அவனுக்கு ஒரு ஆசை.... நாலுபேர் மத்தியில், நான்கூட ஜெமீன்தாரரைத் தரிசனம் செய்தேன் என்று சொல்லிப் பெருமை தேடிக்கொள்ளத் தான். பணம் எப்படியோ சேர்ந்துவிட்டது அவனிடம். ஆனாலும் அந்தஸ்த்து தன்னாலே வருமா....

இப்படிப்பட்ட இடத்திலே தனக்குச் சினேகம் இருப்பதாகச் சொல்லி அந்தஸ்த்து தேடிக் கொள்ளலாம் என்கிற ஆசைதான்....

மை : கடன் விஷயமாக இங்குப் பேசக் கூடாது, தெரிகிறதா?

மா : வாயைத் திறக்கமாட்டான்- (மானேஜர் குறிப்புக் காட்டுகிறார். பணியாள் வெளியே செல்கிறான்.) மை : ஏன்யா... ரேஸ் கிளப்புக்கு அனுப்பவேண்டியதை...

மா : எல்லாம் விவரமாகக் குறித்து வைத்திருக்கிறேன்... நாளைக் காலையிலேயே எல்லாம் கட்டிவிட முடியும்...

(பணியாளுடன் வருகிறார் வட்டி வியாபாரம் வரதராஜன். வரதராஜன் பணிவாகக் கும்பிடுகிறான். மைனர் தலையை அசைக்கிறார்;)

மா : இவர்தான்... வரதராஜன்

என்பவர்.... நம்ம ஜெமீனிடம் அலாதியான அன்பு.... (மைனர் இலேசாக ஒரு புன்னகை உதிர்க்கிறார்,)

வரதராஜன் : பெரிய ஜெமீன்தாருடைய தண்ணீர்ப் பந்தல் தருமகாரியத்தை என் தகப்பனார்தான் பார்த்துக்கொண்டு வந்தார்.

மை : இலேசாகத் தலைவலி.... அதிகம் பேச முடியாது....

வர : படுத்துக்கொள்ளுங்கள்... உடம்பைப் பார்த்துக் கொள்ளுங்கள்.... தங்கள் தரிசனம் கிடைத்ததே போதும்.. உடனே அனுப்பி வைக்கிறேன்...

மை : (ஏதும் அறியாதவர்போல) அனுப்பி வைக்கிறீரா? எதை.... என்னய்யா மானேஜர்!.... பாவம் சாமான்யமானவாளை எதுவும் கேட்டுத் தொல்லைப்படுத்தக் கூடாது என்ற கண்டிப்பாக உத்திரவு போட்டுமா இப்படி....

மர் : அய்யய்யோ, தப்பா நினைத்துக் கொள்ளப்படாது. ... அவராகத்தான்.... ஏதாவது வருவாய் கிடைக்குமென்று... பலருக்கும் தம்மிடம் நம்பிக்கை ஏற்படுமென்று... தர விரும்பினார்... சரி என்றேன்...

மை : உன் நோக்கம் சரியாக இருக்கலாம்... ஊரிலே என்ன பேசுவார்கள்... வட்டிக்கு ஜெமீன்தார் கடன் வாங்கினார் என்றுதானே....

வ : ஒரு ஆளுக்குக்கூடத் தெரிய விடமாட்டேன். பெரிய இடத்து விஷயம் .... வெளியே பரவ விடுவேனா... (மைனர் எழுந்து உள்ளே செல்கிறார். மூவரும் வெளியே செல்கின்றனர்.)

- [1950] -

இடம் : மங்களவிலாஸ் கூடம்.

இருப்போர் : மைனர், மானேஜர், புதிய வேலையாள்.

நிலைமை : மைனர் ஒரு சாய்வு நாற்காலியில் சாய்ந்து கொண்டிருக்கிறார். பக்கத்தில், எரிந்து போன சிகரட் துண்டுகள் சிதறிக் கிடக்கின்றன. கண்கள் சிவந்து போயுள்ளன. மானேஜர், கையில் நாளிதழ் வைத்துக் கொண்டிருக்கிறார். பணியாள், சோபா பக்கத்தில் சிதறிக் கிடந்த கண்ணாடிப் பாத்திரத் துண்டுகளைப் பொறுக்கி எடுத்துக் குவித்துக் கொண்டிருக்கிறான்; ஜெமீன்தாரரின் பட்டு மேலங்கி ஒரு வுறம் விழுந்து கிடக்கிறது : கூடத்துக் கடிகாரம் நின்று போயிருக்கிறது.

மைனர் : ஏன்யா இப்படி மரம்போல நின்னுகிட்டே இருந்தா என்ன ஆகிறது... எட்டு மணிக்கு ஆள் அப்பினே.... அந்தப் பய இன்னும் வரவும் இல்லை, சேசியும் சொல்லி அனுப்பல்லே மானேஜர் : சேதி சொல்லி அனுப்பிவிட்டான்... அவசரமான வேலையாம்...

ஆடீர் மிட்டாவை இவனிடம் ஒப்படைத்து விட்டார்கள் அல்லவா, அதற்கான கணக்கு சரிபார்த்துக் கொண்டிருக்கிறானாம்....

மை. : ஆடீர் மாடீர், காடீர்னு ஏதேதோ சாக்கு... பணம் தரமுடியும் என்கிறானா, முடியாது என்கிறானா....

மா : ஐயா கேட்டிருக்க மாட்டார்.... நானாகத்தான் கேட்கிறேன் என்று ஒரு தப்பு எண்ணம் போல இருக்குது அவனுக்கு....

மை : பச்சையாத்தான் சொல்லன்யா... நானே கேட்கணும், ஒரு இலட்சம் அவசரமாத் தேவைன்னு.... அப்படித்தானே....

மா : அப்படி எல்லாம் இல்லே.. நான்தான் மானேஜரை அனுப்பிவைத்தேன்னு ஒரு வார்த்தை சொன்னால் போதும். (பணியாள் வேலை செய்வதை நிறுத்திவிட்டு, இந்தப் பேச்சை உன்னிப்பாகக்

கேட்டுக் கொண்டிருக்கிறான். அதைக் கவனித்துவிடுகிறார் மைனர்.)

மை : ஏண்டா தடிப்பயலே! என்ன பேசறாங்கன்னு கவனமா கேட்டாச்சேல்லோ.... இனி ஊர் பூரா தமுக்கு அடிப்பே... அப்படித்தானே.... வேலையாள் : எனக்கு அந்தப் பழக்கமே கிடையாதுங்க.... நேரம் ஏதுங்க வெட்டிப் பேச்சுக்கு....

(வட்டி வரதராஜன் வருகிறார், கலகலப்பான சிரிப்பை உதிர்த்தபடி வணக்கம் கூறுகிறார், மைனர், சோபாவைக் காட்டியபடி)

மை : உம் பரவாயில்லே... சோபாவிலேயே உட்காரலாம்....

வ : வேண்டாம்ங்க... பரவாயில்லே.... இப்படியே நின்று கொண்டாலே போதும்.

மை : பரவாயில்லே உட்காரய்யா..... இதிலே என்ன மரியாதைக் குறைவு

வந்துவிடப் போகுது.... உட்கார்...

வ : அதுக்கு இல்லிங்க.... சோபாவிலே ஒரே மூட்டைப் பூச்சி தொல்லைங்க... போன வியாழக்கிழமை உட்கார்ந்தேன் பாருங்க., பிடுங்கித் தின்னுவிட்டுதுங்க மூட்டைப்பூச்சி...

மை : மூட்டைப் பூச்சி இல்லாய்யா.... உணி.... உணி தெரியாது... நாய்க்குப் பிடிக்குமே... நம்ம டெரியர் என்ன அடித்து விரட்டினாலும் அந்தச் சோபாவிலேதான் போய் உட்காரும்.... சுத்தக் குரங்கு அந்த நாய்.. சரி எனக்கென்ன வேறே வேலையே கிடையாது என்கிற நினைப்பா.... எப்ப வருவாரு வரதராஜபூபதி, வரம் எப்பத் தருவாருன்னு காத்துகிட்டு இருக்க...

வ : தப்பா எடுத்துக் கொள்ளக் கூடாது, நான் துளியும் எதிர்பார்க்கவில்லை.... தங்களுக்கு இவ்வளவு பெரிய தொகை

இவ்வளவு அவசரமாகத் தேவைப்படும் என்று.... சென்னை பெரிய பங்களா கூட ஏதோ ஆபீசுக்கு வாடகைக்குக் கொடுத்ததாகக் கேள்வி....

மா : விவரம் தெரியாமல் பேசாதீர். வாடகைக்க விடுவதற்காக வீடு கட்டுகிறவரா ஜெமீன்தார்.... யாரோ அவருடைய சினேகிதர் வேண்டும்னு கேட்டா, சரின்னு சொன்னார்....

வ : எனக்கு வந்த தகவல் வேறே விதமாக இருந்தது....

மை : மானேஜர் வந்து சொன்ன தகவலைக் குறித்துப் பேசுமய்யா? ஏன் வீண் விவகாரம் உமக்கு?

வ : என் வீட்டுக்காரியும் பெரிய மகனும் இதேதான் எனக்குச் சொல்லியபடி இருக்கிறார்கள். கொடுத்த பணத்தை ஒழுங்காகத் திருப்பி வாங்காமப்படிக்கு

மேலும் மேலும் கடனைக் கொடுத்தபடி இருந்தா ஆபத்து என்று.... போனமாதம் கேள்விப்பட்டிருப்பீங்களே! தவன உத்சவம் தாதுலிங்கம்பிள்ளை மஞ்சக் கடுதாசி நீட்டிவிட்டாரே - அரை இலட்சம்

மா : உமக்கும் கோவிந்தாதானா அரை இலட்சம்

வ : ராமானுக்கிரகத்தாலே அப்படி ஆகவில்லிங்க.... என் பணத்துக்கு ஈடா ஒரு பத்து ஏக்கர் நஞ்சையை வாங்கிக் கிட்டேன், கப்பல் கவிழும் என்கிற சந்தேகம் வந்தபோதே

மா : பலே ஆசாமியாச்சே நீ

வ : பணம் இப்ப முன்னேபோல இல்லிங்க - நானே கொஞ்சம் வட்டி அதிகம் கொடுத்துத்தான் வாங்கி வர்ரேன்

மை : சுற்றி வளைச்சி பேசுவானேன் - வட்டி கொஞ்சம் கூடுதலாக வேண்டும்

- அவ்வளவுதானே? ஏன்யா அதுக்காகத் தலையைச் சொரிந்துகிட்டு இருக்கே - எழுதிக்கிட்டுவா, போ! சுருக்கா வா

வ : ஆகட்டுமங்க - நம்மக் கணக்கப்பிள்ளையிடம் கொடுத் தனுப்பறேன் பத்திரம்

மா : பணம்? அது யார் மூலம் கொடுத்தனுப்பறே

வ : பத்திரம் கைக்குவந்ததும் மகனிடம் கொடுத்தனுப்பினா அவன் ஒரு மணி நேரத்துக்கெல்லாம் ஓடிவருவான் இங்கே, - பணத்தோட

(விடைபெற்றுச் செல்கிறார். மைனர் முகத்தில் கோபக்குறி காண்கிறார் மானேஜர்).

- [1954] -

இடம் : மங்களவிலாஸ் முன்புறம் -

அலங்காரக் கொட்டகை.

இருப்போர் : மைனர், மானேஜர், வேலையாள்.

நிலைமை : (மைனர் இளைத்துப்போய், களைத்துப் போய் இருக்கிறார், கொட்டகையில் போடப்பட்டுள்ள பலகைமீது உட்கா□ந்து கொண்டிருக்கிறார். சிறிது அழுக்காகியுள்ள திண்டு பலகைமீது கிடக்கிறது. ஓர் புறம் வெற்றிலைப்பெட்டி இருக்கிறது. வேலைக்காரன் தூக்கக் கலக்கத்துடன் மைனருக்கு விசிறிக் கொண்டிருக்கின்றான். மானேஜர், பஞ்சாங்கத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்.)

மைனர் : ஏன்யா அதைப் புரட்டறே - எந்த நேரம் நல்ல நேரம் அவனைப் பார்க்க என்பதற்காக -

மானேஜர் : இல்லிங்க - முந்திரித்தோப்பு விஷயமா ரிஜிஸ்திரார் ஆபீசுக்கு நாளைக்குப் போகலாம்னு பார்த்தேன். கரிநாளா இருக்குது

மை : வாங்குகிற பயலுக்கு இல்லாத அக்கறை நமக்கு எதுக்காக - நான் கையெழுத்துப் போடணுமா ?

மா : தேவையில்லிங்களே - முந்திரித்தோப்பு பெரியம்மா பேர்லே தானே இருக்குது - அவங்க வந்தாப் போதும் -ஆனா பெட்டிவண்டி

மை : பெட்டி வண்டியிலே வரமாட்டேன் என்கிறாங்களா பெரியம்மா

மா : அதெல்லாம் இல்லிங்க. பெட்டி வண்டியோட "இருசு' வளைந்து போய் கிடக்குது - மை : இப்ப நாம வரதராஜப்பிள்ளை வீட்டுக்குப் போக, வண்டி.

மா : அவரோட குதிரை வண்டியே வருது

- இப்பத்தான் அவரோட காரியஸ்தன் வந்து சொன்னான். சைகிள்லே வந்தான்

(வண்டிவந்து நிற்கிறது. மைனர் ஏறிக் கொள்கிறார். மானேஜர், தயக்கப்படுகிறார்.)

மை : பரவாயில்லை, ஏறு! எல்லாம் இப்ப! சமம் - ஏதோ பேப்பர்லே பார்த்தேன் - எவனோ ஒருத்தன் பேசி இருக்கறான் முழநீளம் - ஏறு! ஏறு

(மானேஜர் ஏறிக் கொள்கிறார்)

(வண்டி, புதிய முறையில் கட்டப்பட்டுள்ள இரண்டடுக்கு மாடி வீட்டின் முன் வந்து நிற்கிறது.)

வரவேற்க யாரேனும் வருகிறார்களா என்று பார்க்கிறார் மானேஜர். வீதியில் யாரேனும் இருக்கிறார்களா, தன்னைப் பார்த்து விடுவார்களா என்ற சந்தேகத்துடன் மைனர் பார்க்கிறார். ஒரு பத்து வயதுச்

சிறுவன் உள்ளே இருந்து வருகிறான். மானேஜர் அவனைப் பார்த்து "அப்பா' இருக்கிறாரா என்று கேட்கிறார்.

(சிறுவன் அதற்குப் பதில் ஏதும் கூறாமல், வண்டிக்காரனை முறைத்துப் பார்க்கிறான்.)

வண்டிக்காரன் : பெரியவருதான் போய் வரச் சொன்னாரு

சிறுவன் : ஏய் உனக்கு எங்கே போச்சு புத்தி - நான் பள்ளிக்கூடம் போகணும்னு தெரியலியா - ஊர்லே இருக்கறவங்க ஏறி சவாரி செய்யத்தான் பாட்டி வண்டியை வாங்கித் தந்தாங்களா

(மைனர் கோபத்தை அடக்கிக்கொண்டு வீட்டுக் குள்ளே போகிறார்,

உள் கூடத்தில் நாலைந்துபேர் உட்கார்ந்து கணக்கு எழுதிக் கொண்டிருக்கிறார்கள்.

மானேஜர் கனைத்துக் காட்டுகிறார்.

ஒருவர், கா-யாக உள்ள நாற்காலிகளைக் காட்டுகிறார்.

மைனர் உட்காருகிறார்.

கூடத்தை அடுத்து உள்ள அறையிலிருந்து ரேடியோ சத்தம் கேட்கிறது.

"ஆன முதலில் அதிகம் செலவானால் மானம் அழிந்து மதி கெட்டு, என்ற பாடலை யாரோ வானொலியில் நிறுத்தி நிதானமாக, சோகக் குரலில் பாடுகிறார்கள்.

மைனர், சிகரட்டைப் பற்றவைக்கிறார். அதைப் பார்த்துவிட்ட குமாஸ்தா ஒருவர் சுவரில் மாட்டப் பட்டுள்ள முருகன் படத்தைக் காட்டுகிறார்.

மைனர் சிகரெட்டைக் கீழே போட்டு அணைத்து விடுகிறார்.

மானேஜர் குறும்புப் புன்னகை கிளம்புவதைக் கஷ்டப்பட்டு அடக்கிக் கொள்கிறார்.

உட்புறக் கதவைத் திறந்துகொண்டு, வரதராஜன் வருகிறார்.

மைனரைப் பார்த்தது:ம பதறுவதுபோல பாவனை காட்டி)

வ : அபசாரம்! அபசாரம்! இங்கேயா உட்காரச் சொன்னார்கள். மடப்பயல்கள். உள்ளே வாங்க... குளிர்ச்சியாக இருக்கும்.... வாங்க.... வாய்யா மானேஜர்! வா, நீயும்

(உள்ளே செல்கிறார்கள். ஏர்-கண்டிஷன் செய்யப் பட்டுள்ள அறை. வசதியும் பகட்டும் கொண்ட சோபாக்கள் போடப்பட்டுள்ளன.)

வ : என்ன சாப்பிடுகிறீர்கள் காப்பியா - ஓவலா - மைலோவா - மை : புறப்படும்போதுதான் ஆர்-க்ஸ் சாப்பிட்டேன்.

ஒன்றும் வேண்டாம்

வ : ஆர்லிக்ஸ் உங்களுக்கு ரொம்பப் பிடிக்குமா - அப்படியானா என் பாக்கியம்தான் - ஏன்னா! இந்த ஜில்லா பூராவுக்கும் நான்தான் ஏஜண்டு ஆர்லிச்சுக்கு -

மா : யாரோ ஆராவமுதன் என்று பேர் போட்டிருந்துதே

வ : நம்ம பயதான் - மச்சினன் - அவன் பேர்லேதான் எடுத்துப் போட்டிருக்கிறேன் - உங்களை வரச் சொல்லி விட்டேனே தவிர, பிறகுதான் கையைப் பிசைந்து கொண்டேன், என்னடா ஒரு பெரிய மனுஷரை வரச் சொல்லிவிட்டமே, கணக்கு வழக்கைப் பார்க்காமப் படிக்குன்னு. பிறகு பார்த்தேன், பதறிப் போனேன்...

மை : பதறிப் போனிங்களா? ஏன்....

(ஒரு மேஜையைத் திறந்து காகிதத்தை

எடுத்து மைனரிடம் தந்தபடி)

வர : பாருங்களேன் நீங்களேதான், படிச்சி.

(வேகமாகப் படிக்கிறார் மைனர். முகம் கடுகடுப் பாகிறது.)

மை : என்ன இது போக்கிரித்தனமான கேள்வி, சொத்து விவரம் - கடன் விவரம் - புதிய கடன் எதற்கு என்ற விவரம் - இதெல்லாம்... என்னைக் கேட்கிற கேள்வியா இது....

வர : கோபிக்கப்படாது. இதெல்லாம் உங்களுக்காக எழுதப் பட்டவை அல்ல. ஒருமுறைக்காக வைத்திருக்கிறோம். ஒரு குறிப்பிட்ட அளவுக்குமேல் கடன் தொகை ஏறிவிட்டால், இந்த விவரம் கேட்டுத் தெரிந்துக்கொண்டு, திருப்தி ஏற்பட்ட பிறகுதான் கடன் கொடுக்கவேண்டும் என்ற கண்டிப்பான சட்டம் போட்டுவிட்டான், என் மகன்; பெரியவன்; அமெரிக்கா போய்ப்

படித்துவிட்டு வந்திருக்கிறான்....

மை : எழுந்திரய்யா மானேஜர். போதும் இவரோட உறவு.... உம்! எழுந்திரு.

இருவரும் எழுந்து செல்கின்றனர். பதறாமல் அதைப் பார்த்துக் கொண்டிருந்துவிட்டுப் பிறகு புன்னகை செய்கிறார் வரதராஜன்.)

- [1956] -

இடம் : ”வளர்பிறை’ மாளிகைக்கூடம்

இருப்போர் : வட்டி வரதராஜன், அவர் மகன் பால்

நிலைமை : (மகன் தயாரித்துக் கொடுத்த பத்திரங்களைப் படித்துப் பார்ககிறார் வரதராஜன். வேலையாள் வருகிறான்.)

வேலையாள் : நாளைக்கு வரலாமா என்று கேட்கிறார்....

வரதராஜன் : யார்? மைனரா? ஏன்! இன்னும் நாலு நாள் பொறுத்து வருவதுதானே... அதற்குள்ளே இன்னும் நாலு இடத்திலே கடனை வாங்கலாமே.... போ! போ! கையோடு அழைத்துவரச் சொன்னதாகச் சொல்லு, நாளைக்கு வருகிறாராம் நாளைக்கு.

மகன் : ஒவ்வொரு நாளும் ஆசாமி முழுகிக் கொண்டிருக்கிறான்... காரியத்தைச் சுருக்காக முடிக்க வேண்டும்.... போடா! போய், அழைத்துக்கொண்டு வா....

வே : நம்ம குதிரை வண்டியை...

வர : மோட்டாரை எடுத்துக்கிட்டுப் போயேன். கடன்காரப் பயல்களுக்காகத்தானே வண்டி, வாகனம் இங்கே வாங்கி வைத்திருக்குது. மடையன்! போயி, அந்த மானேஜர் இருக்கானே அவனிடம் சொல்லு, ஒரு வாடகை வண்டி

பிடிச்சிக்கிட்டுச் சீக்கிரமா வரச் சொல்லு....

(வேளையாள் ஓடுகிறான்.)

இதுபோலவே இன்ன ஊரில் நடைபெற்றது, தெரியும் எனக்கு; வகையின்றி வாழ்க்கை நடத்தி, வாங்கக்கூடாத அளவு கடனைவாங்கி, திருப்பிக்கட்ட முடியாமல் திகைத்து, கடனை அடைக்க மேலும் கடன்வாங்கி இறுதியில் சொத்தினை இழந்து தத்தளித்தார். இன்ன பண்ணைக்குச் சொந்தக்காரர், அல்லது இன்ன ஜெமீன் குடும்பத்தைச் சேர்ந்தவர் என்று பலரும் தமக்குத் தெரிந்த பல ”வரலாறுகளை’க் கூறுவார்கள். தம்பி! அவைகளை அறிந்துகொள்ள அல்ல நான் இதனை எழுதினது.

தனி மனிதர்கள் போலவே நாடுகளும் கடன் வாங்குவ துண்டு.

கடன் வாங்குவதே தவறு என்று கூறிடமுடியாது. வளர்ச்சி அடைவதற்காக வளாச்சி அடையாத நாடுகள் வளர்ச்சி அடைந்த நாடுகளிடம் கடன்வாங்குவது தேவைப்படும் ஒன்று.

கோபக்குரலில் தம்பி! காங்கிரசார் சொல்லக் கேட்டிருப் பாயே, ரஷியாவே கடன் வாங்கித்தான் வளர்ச்சி அடைந்தது; அமெரிக்காவே கடன்வாங்கி இருக்கிறது என்றெல்லாம்.

கடன் வாங்கவே கூடாது என்று எவரும் கூறவில்லை.

கடன் எந்தமுறையில், எந்த அளவில், என்ன காரியத்துக்காக வாங்குவது என்பதிலும்,

கடன் வாங்கிய தொகையைத் தக்க காரியத்துக்குப் பயன்படுத்தி, அதன் மூலம்

வருவாய் பெற்று, பட்ட கடனைத் திருப்பிக் கொடுத்துவிடத் திட்டமிடப்பட்டுச் செயல் மேற்கொள்ளப்பட்டிருக்கிறதா என்பதைப் பொறுத்துமே இருக்கிறது, கடன் வாங்கியது தவறா அல்லவா என்பது.

மங்களபுரி மைனர் போல ஆடிப்பாடிக் கிடந்திடக் கடனுக்குமேல் கடன் வாங்கியபடி இருந்தால், தவறு என்பது மட்டுமல்ல, ஆபத்து என்றே கூறவேண்டும்.

அவருக்கு இருக்கும் சொத்துக்கு, இந்தக் கடன் அவரை என்ன செய்துவிடும்! ஒரே வருஷ வருமானத்தைக்கொண்டு கடனைக் கட்டிவிடலாமே என்றும்.

கரும்பு மாசூல் ஒன்றுபோதுமே, கடனை அடைக்க என்றும்,

ஜெமீன் குடும்பம் என்ன சாமான்யமானதா! எவனுக்குத் துணிவு

பிறக்கும், கடனைத் திருப்பிக்கொடுத்தாக வேண்டும், விரைவாக என்று வற்புறுத்த என்றும்.

கடனை ஏராளமாக வாங்கியபடி உள்ள பெரிய இடத்தைப் பற்றி ஊரார் பேசிக் கொள்வார்கள், துவக்கத்தில்! பிறகோ? சொத்து இருக்கட்டுமே மலை அளவு! இருந்து! கடனய்யா ஊரைச்சுற்றி! வட்டியே சரியாகக் கட்டவில்லையாம், வருஷம் இரண்டு முடிகிறதாம்! எந்த நேரத்தில் எவன் கோர்ட்டுக்குப் போய்க் கொடி ஏற்றி விடுகிறானோ, எவன் தமுக்குத்தட்ட வருகிறானோ என்ற திகில் ஆசாமியைத் துரும்பாக இளைக்க வைத்துவிட்டது என்று கேலி பேசுவர்.

கடன் வாங்குவதிலே உள்ள கேவலத்தைவிட அதிகக் கேவலம், கடனைத்திருப்பிக்கட்ட வழி ஏது என்று

ஊரார் பேசிக் கொள்வது காதிலே விழுந்திடும் வேளையில்,

பருத்தி விளையுமாமே தரமாக. நல்ல ஆதாயம் கிடைக்கு மாமே என்றும்,

பொட்டல்காடுதான்யா அந்தச் சதுரம்; ஆனால், சர்க்கார் கட்டப்போகும் விருந்தினர் விடுதிக்கு அதை விட்டால் வேறு பொருத்தமான இடம் ஏது! ஆகவே அந்தப் பொட்டல் இடத்தை என்ன விலை கொடுத்தாகிலும் வாங்கியே தீருவது என்று அதிகாரிகளின் மேல் மட்ட மாநாட்டிலே முடிவு செய்திருக்கிறார் களாம் என்றும் கடன் கொடுத்தவர்கள், கடன் வாங்கிய "கனவான்' பெற்றுள்ள சொத்துப்பற்றிய விவரம் பேசுவர்; அதனைத் தமக்குள் பங்கு போட்டுக்கொள்ளும் நோக்கத்துடன்.

தனி மனிதர்கள் கடன் வாங்குவது

அதிகப்பட அதிகப்படக் கடன் கொடுப்பவன் குரலிலே கண்டிப்பு அதிகப்படும், வட்டி ஏறும், வார்த்தைகளிலே கடுமை மிகுந்துவிடும்.

ஒரு நாடு மற்றோர் நாட்டிடம் கடன் கேட்டு வாங்கியபடி இருந்திடுமானால், ராஜதந்திரமுறை காரணமாகப் பேச்சிலே கடுமை எழாது. ஆனால் நிபந்தனை புதிது புதிதாக விதிக்கப்படும்!

ராஜதந்திரக் கலை இன்று மிக நேர்த்தியான வளர்ச்சியும் வடிவமும் பெற்றுவிட்டிருப்பதால், நிபந்தனையைக் கூட நிபந்தனை என்று பச்சையாகக் கூறாமல், ”யோசனைகள்’ என்ற பெயரிட்டுத் தருவர்; தருகின்றனர்,

கடன் சுமை அதிகமாகிக்கொண்டு போவதிலே உள்ள சங்கடம், சஞ்சலம் ஆபத்து ஆகியவை பற்றி அக்கறையுடன் ”புத்திமதி’

கூறுவதும்,

கடனைத் திருப்பிக் கட்டுவதற்கான திட்டம் செம்மை யானதாக இருக்கவேண்டும் என்று நட்புணர்ச்சியுடன் "ஆலோசனை' கூறுவதும், அதற்கான திட்டங்கள் எந்தவிதத்தில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன என்பதை அறிந்துகொள்ள"ஆவல்' கொள்வதும்,

அந்தச் செயல்முறை எந்த அளவு பலன் தந்திருக்கிறது என்பதைக் கணக்குப் பார்க்கத் "துணை' செய்ய விரும்புவதும்,

செயல் முறையின் பயன் அதிக அளவினதாக, தாமும் உடனிருந்து மேற்பார்வை செய்திடமுற்படுவதும்,

செயல் முறையின் ஒரு பகுதியை நடத்திச் செல்லத் தக்கவர் களை அனுப்பிவைக்க முற்படுவதும் - என்ற இந்த முறைகளில், நிபந்தனைகள் புகுத்தப்படும்.

சுதந்திரம் பெற்ற ஒரு நாட்டின் நடவடிக்கைகளில் மற்றோர் நாடு தலையிடுவது தவறு; அதனை அனுமதிப்பது தேசியத் தன்மானத்தை அழித்துக்கொள்ளும் இழி நிலையை மூட்டிவிடும்! மற்றோர் நாட்டிடம் "பிடி'யை ஒப்படைப்பதோ, அடிவருடிக் கிடப்பதோ கேவலம் என்பது மட்டுமல்ல, அது ஆபத்தாகவும் ஆகிவிடும்.

ஆகவே, நிபந்தனையற்ற உதவி பெற மட்டுமே தன்மானத்தையும் சுதந்திரத்தையும் காத்துக்கொள்ள விரும்பும் நாடு சம்மதிக்கும்.

இந்த நிலைமையினை, கடன் கொடுக்கும் நாடும் உணராமலிருக்க முடியாது. ஆகவே, கடன் தருவதற்கு நிபந்தனை விதிக்க அந்த நாடு முற்படாது.

அறிவுரை
ஆலோசனை

கணக்குப் பார்ப்பது
துணைபுரிவது
மேற்பார்வை
பொறுப்பிலே பங்கு

என்ற சொற்களை, நிபந்தனை என்ற சொல்லுக்கு மாற்றுச் சொற்க ளாக்கிக்கொள்ளும்!

எத்தனை இன்னல் வந்து தாக்கிடினும் நிபந்தனையுடன் கூடிய கடன் - உதவி - ஏற்க மாட்டோம்.

என்று கடன் வாங்கும் நாடு எக்காளமிடுவதும்,

எந்த ஒரு நிபந்தனையையும் நாங்கள் விதிக்க மாட்டோம்; தேசியத் தன்மானத்தை மதித்து நடந்திடுவோம்.

என்று கடன் கொடுக்கும் நாடு கனிவு காட்டுவதும், இன்று வேகமாக வளர்ந்து

வரும் ”ராஜதந்திர’த்தின் விளைவு. ஆனால், அந்தப் பகட்டுப் போர்வை, உண்மையை அடியோடு மறைத்து விடுவதில்லை; கூர்ந்து பார்த்திடுவோர், உண்மையைக் காணத் தவறுவதில்லை.

எந்த விதமான நிபந்தனைக்கும் கட்டுப்பட்டுக் கடன்வாங்க மாட்டோம் என்ற கூறிக் கொள்வதிலே பொருள் இல்லை; ஏனெனில் கடன் வாங்குவதே, கடன் படும் நாட்டைக் கடன் கொடுக்கும் நாட்டிடம் கட்டுப் பட்டு விடச் செய்து விடுகிறது, தன்னாலே!

எனவே, தனியாக நிபந்தனை எதனையும் புகுத்த வேண்டிய அவசியமே இல்லை.

ஒரு நிபந்தனையும் கிடையாது என்று கடன் வாங்கும் நாட்டின் ஆளவந்தார்கள் கூறுவது, மக்களை மயக்கிட, உண்மை நிலைமையை மறைத்திட!

உதவி கேட்கிறோம் - கடன் கேட்கிறோம் - ஆனால், அடிமைகளாகிட மாட்டோம், தலையாட்டிகள் ஆகிட மாட்டோம் என்று ஆளவந்தார்கள் முழக்கமிடும்போது, விவரமறியாத மக்கள் நிமிர்ந்து நிற்கின்றனர்.

கடன் கொடுத்த நாட்டினனோ கண் சிமிட்டுகிறான், குறும்புப் புன்னகையுடன்.

தம்பி! இந்திராகாந்தி அம்மையார் அமெரிக்கா சென்றார்களே, கடன் கேட்கத்தானே என்று வினவியபோது, ஆளவந்தார்களின் ஆலவட்டங்கள் கூறின,

கேட்க! கெஞ்சிட அல்ல!

ஆளுங்கட்சியை ஆதரிப்பதைத் தமது வாழ்வின் இலக்கண மாக்கிக் கொண்டுவிட்டுள்ள இதழ்களோ, தமது தனித் திறமையைக் காட்டி எழுதின!

எந்த அளவுக்குத் தொகை தரக்கூடிய

நிலையில் அமெரிக்கா இருக்கிறது என்பதனை நேரடியாகவே கண்டறிவதற்காகப் பிரதம மந்திரி அமெரிக்கா சென்றிருக்கிறார்!

இந்தியாவுக்கு அவசரமாகவும் அதிக அளவிலும் உதவி தேவை, கடன் தேவை என்பதைக்கூட எடுத்துக் கூறிடுவது கூடாது என்ற அளவுக்கு ஆளவந்தார்களிடம் கட்டுப்பட்ட இதழ்கள், இந்திராகாந்தி, அம்மையார் சென்றது அமெரிக்காவின் நிலைமை என்ன? என்பதைக் கண்டறிய! உதவி செய்கிறேன்; கடன் தருகிறேன் என்று பேசுகிறதே அந்த நாடு, உண்மையில், கடன் தரக்கூடிய "வசதி' அந்த நாட்டுக்கு இருக்கிறதா, அல்லது வெறும்' வறட்டு ஜம்பம்' பேசுகிறதா என்பதைக் கண்டறியச் சென்றிருக் கிறார் என்ற கருத்துப்பட எழுதின ;

தூக்கிலே தொங்குபவன் கயிற்றின் வலிவு எப்படி இருக்கிறது என்று "பரீட்சை'

பார்த்தான் என்பது போலவும்,

ஆற்றிலே விழுந்து மடிந்து போனவன் பிணம் மிதக்கும் என்ற தத்துவத்தை மெய்ப்பிக்கவே முற்பட்டான் என்பது போலவும்,

இது இருக்கிறதே என்று கேட்கத் தோன்றுகிறதா, தம்பி; கேட்டுவிடாதே! பெரிய இடத்தின் பொல்லாப்பு எதற்கு!

ஒரு பேச்சாளர் உச்சிக்கே சென்றுவிட்டார்; இந்தியா தனது நாலாவது ஐந்தாண்டுத் திட்டத்தை நிறைவேற்றுவதிலே, அமெரிக்க உதவி பெறாவிட்டால், எத்தனை விதமான சங்கடப்பட நேரிடும் என்பதை இந்திராகாந்தி அம்மையார் எடுத்துரைப்பார்கள் என்று "உண்மை'யைக் கூறுவதுகூட, எஜமானர்களுக்கு என்னமோ போலிருக்கும் என்ற எண்ணத்துடன் பேசினார்.

அமெரிக்க நாட்டுத் தலைவர் ஜான்சன்

நமது பாரதப் பிரதமரிடம், இன்றைய நிலைமையில், வெளி நாடுகளுக்குக் கடன் தருவதிலே அமெரிக்காவுக்குள்ள சங்கடங்கள், சிக்கல்கள் ஆகியவைபற்றி விரிவாக, மனம் திறந்து பேசுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது!

கவனித்தனையா, தம்பி! அமெரிக்கா தனக்கு உள்ள சங்கடங்கள் எற்றி, பேசுமாம்! இந்தியப் பிரதமர் சென்றிருப்பது, அதைக் கேட்டு ஆறுதல்கூற; கடன் கேட்க அல்ல!; இந்த அளவுக்கு ”தங்க பஸ்பம்’ சாப்பிட வேண்டி வந்து விட்டது.!

அமெரிக்கா வர விரும்புகிறேன்.

இப்போது வேண்டாம், செப்டம்பர் மாதம் வரலாம்!

லால்பகதூர் - ஜான்சன் பேச்சு இதுபோல அமைந்திருந்தது.

விரைவில் அமெரிக்கா வரவும்.

பாராளுமன்ற வேலைகள் முடிந்ததும், வர முடியும், வருகிறேன்.

இல்லை! இப்போதே வந்து போவது நல்லது.

சரி வருகிறேன். இப்படிக் கருத்துப் பரிமாறிக் கொள்ளப்பட்டது, பாரதப் பிரதம ருக்கும் அமெரிக்கத் தலைவருக்கும் இடையில் பாராளுமன்றக் கூட்டம் நடந்து கொண்டிருக்கும் நேரத்திலேயே, அம்மையார் அமெரிக்கா சென்று திரும்பினார்! அழைப்பின் பேரில்தான்!!

ஒருவரை இப்போது வரவேண்டாம் என்று சொல்லவும், மற்றொருவரை உடனே வந்து போகவும் என்று அழைத்திடவும் அமெரிக்கத் தரைவரால் முடிந்திருக்கிறது.

நிபந்தனை கிடையாது கடன் தருவதில்!

ஆனால், வரவேண்டாம் என்ற கூறவும், வா! என்று அழைத்திடவுமான நிலை இருக்கிறது.

அமெரிக்கக் குடியரசுத் தலைவருக்கு!

நிபந்தனையா! எமக்கா! அத்தனை துணிவா? இணங்க நாங்கள் என்ன அடிமைப்பட்டவர்களா! என்று முழக்க மிட்டார்கள், தம்பி! மற்ற நிபந்தனைகள் யாவை என்ற ஆராய்ச்சி கூடப் பிறகு நடத்திடலாம்; முதலில் நிபந்தனையையே கவனித்தாயா?

அமெரிக்கக் குடியரசுத் தலைவர் அழைக்கும் போதுதான், பாரதப் பிரதமர் போகலாம்!

அமெரிக்கக் குடியரசுத் தலைவர் அழைக்கும் போது பேறு எந்த வேலை இருப்பினும், தள்ளிவைத்து விட்டுச் சென்றாக வேண்டும்!

இது நிலைமை! நிபந்தனை அல்ல!! எப்படி வேடிக்கை!!

இப்போது மீண்டும் நாடகத்தைப் படித்துப் பார்த்திடு தம்பி! என்ன சொல்கிறார், வட்டி வரதராஜன்.

வரசொல் ! உடனே வரச்சொல்!

கையோடு கூட்டிக் கொண்டு வா! .

கடன் கொடுத்தபோது, நான் வரக் சொன்னதும் வந்தாக வேண்டும் என்று ஏதேனும் நிபந்தனை உண்டா; இல்லை! ஆனால் நிலைமை? நிபந்தனையைத் தன்னாலே கொண்டு வந்து விடுகிறது!!

கடன் வாங்காமல் இருக்கவேண்டும் - இருக்க முடியும் என்பதை வலியுறுத்த அல்ல இதனை எழுதுவது.

கடனுக்கு மேல் கடன் என்று சுமையை

அதிகமாக்கிக் கொண்டால், கடனைத் திருப்பிக் கட்டுவதற்கான வழிகள் அடைபட்டுக் கிடந்தால், நிலைமை எத்தனை மோசமாகிவிடும் என்பதை விளக்கத்தான்.

என்ன இது! போக்கிரித்தனமான கேள்விகள், சொத்து மதிப்பு! கடன் விவரம் இவைகளைப் பற்றி எல்லாமா கேட்பது, என்னை?

மங்களபுரி மைனர் (நாடகத்தில்) கொதித்திடக் கண்டனை அல்லவா! இதோ பார். தம்பி! கடன் கேட்கும் பாரத சர்க்காரிடம் அமெரிக்கா கேட்டிடும் தகவல்களை.

இன்னும் எத்தனை காலம் - கடன் வாங்கியபடி இருக்கப் போகிறீர்கள்?

இதுவரை வாங்கிய கடன் தொகையை எவ்விதம் பயன்படுத்திக் கொண்டிருக்கிறீர்கள்?

கடனைத் திருப்பித் தருவதற்குத் தேவைப்படும் வருவாய் பெற்றிட வழிகள் யாவை?

வருவாய் பெருகுவதுகூட இருக்கட்டும்; வயிற்றுச் சோற்றுக்கே வேதனைப்படுகிறீர்களே, ஏன் இந்த நிலைமை வந்தது?

விவசாயத் துறையிலே ஏன் போதுமான வளர்ச்சி பெறவில்லை?

அந்த வளர்ச்சியைக் கவனிக்காமல், தொழில்துறையில் ஏன் அகலக் கால் வைக்கிறீர்கள்?

தொழில் வளத்தைப் பெருக்கிட உதவி கேட்கிறீர்களே, ஏன் அந்தக் காரியத்தை உங்கள் நாட்டுத் தனியாரிடம்' (முதலாளிகள்) ஒப்படைக்கத் தயக்கம் காட்டுகிறீர்கள்?

தொழில் வளர, "முதல்' கேட்கிறீர்களே, ஏன்

தொழில் துறையில் பல"கட்டுகள்', "தடைகள்' போட்டு, அன்னிய நாட்டு முதலாளிகளின் உற்சாகத்தைக் குறைத்தபடி இருக்கிறீர்கள்?

கடன் அதிகம்! வளம் குறைவு! வாட்டம் அதிகம்! இந்நிலையில் ஏன் பாகிஸ்தானுடன் பகை?

பாகிஸ்தானுடன் காஷ்மீர் பிரச்சினை பற்றி ஒரு சமரசம் செய்து கொள்ளாவிட்டால், இராணுச் செலவு அதிகமாகும், தாங்க முடியாது; தொழில் வளர வழி கிடைக்காது; இதை உணர்ந்து பாகிஸ்தானுடன் ஏன் சமாதானமாகிவிடக் கூடாது?

பாகிஸ்தானுடன் தகராறு இருக்கும்வரையில், தொழிலில் "மூலதனம்' போட அன்னிய முதலாளிகளுக்கு எப்படித் தைரியம் வர முடியும்?

விலைக்கட்டுப்பாடு, விநியோகக்

கட்டுப்பாடு இலாப விகிதக் கட்டுப்பாடு போன்றவைகளை நீக்கினாலொழிய எப்படி அமெரிக்க "முதல்' இந்தியாவுக்குக் கிடைக்க முடியும்?

பாகிஸ்தானுடன் சேர்ந்து கூட்டாகச் சில தொழில் திட்டங்களை ஏன் செயல்படுத்தக்கூடாது?

தம்பி! சலிப்பாக இருக்கிறது முழுப்பட்டியலை விளக்கமாக்கிட.

இவ்விதமாகவெல்லாம் கேட்கிறது அமெரிக்க சர்க்கார் - கேள்விகள் என்று கூறாதே; கோபம் வருகிறது கோலேந்தி களுக்கும் அவர்தம் தாளேந்திகளுக்கும் - தகவல்களைக் கேட்கிறார்கள்;

ஏன்? கடன் கேட்கிறோமே! நாலாயிரம் கோடி ரூபாய் அளவுக்கு; ஏற்கனவே கடன் பட்டிருக்கிறோமே!

அதனால்!!

தம்பி!! இந்தத் தகவல்களை விளக்கியதும், அமெரிக்க சர்க்கார்.

விவசாயத்துறை
தொழில்துறை
வெளிவிவகாரத்துறை
நிர்வாகத்துறை

ஆகியவற்றிலே இந்தியப் பேரரசு என்னென்ன முறைகளைக் கையாளவேண்டும், திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும் என்ற நிபந்தனைகளை விதித்திட முற்படுகிறது.

மறந்து விட்டேனே, தம்பி! நிபந்தனை என்று கூறினால்தான் அவர்களுக்கு ஆத்திரமும் அழுகையும் வருகிறதே, நிபந்தனைகள் அல்ல;

அறிவுரை

ஆலோசனை
கருத்துரை
நட்புரை!

அம்மையாரிடம் “ஒட்டுமொத்தமாக’ப் பேசியாகிவிட்டது, இப்போது அசோக்மேத்தாவிடம்,”புட்டுப் புட்டு’க் காட்டிப் பேசுகிறது அமெரிக்க அரசு! இது இன்றைய நிலைமை!

இப்போது மற்றோர் முறை படித்திடேன் தம்பி! நாடகத்தை; களிப்பு அல்ல, கண்ணீர் பொங்கும்.

அன்புள்ள

அண்ணாதுரை

1-5-66

49. உன்னால் முடியும் ! - (2)

நந்தனாருக்கு வேதியர்; நமக்கோ காமராசர் !

மன அரிப்பின் விளைவு !

உழைக்கும் உத்தமர் நம்மிடம் !

கழகம் காமராசரைத் ”தண்டால்’ போட வைக்கிறது !

தம்பி!

உன்னிடம் ஒரு பாட்டுப் பாடிக் காட்டவேண்டும் என்று ஆவலாக இருக்கிறது; ஆனால், துணிவுவர மறுக்கிறது; என்னிடம் இத்தனை பரிவும் பாசமும் கொண்டுள்ள உனக்குச் சங்கடத்தைத் தந்திட மனம் இடந்தரவில்லை. ஆகவே, பாட்டுபற்றிக் குறிப்பு மட்டும் தருகிறேன்.

”சிதம்பர தரிசனமா! நீ அதைச்

சிந்திக்கப்போமா...'' என்ற ஒரு பாட்டு உண்டு; நந்தனார் பற்றிய பாடல். அந்தப் புத்தகம் கிடைத்தால் படித்துப்பார், தம்பி! பாடக் கூடியவர்களைப் பாடச் சொல்லிக் கேட்டுப்பார், சுவையான சந்தம்! இனிமையாக இருக்கும், இசைக்கு ஏற்ற குரல்வளம் உள்ளவர்கள் பாடினால்.

பாட்டின் கருத்து பற்றித்தான் நான் இப்போது கூற முற்படுகிறேன்.

சேரியில் வாழ்ந்துகொண்டிருந்த சீலமிக்க நந்தனாருக்குச் சிதம்பரம் சென்று ஆடலரசனைத் "தரிசனம்' செய்திட வேண்டும் என்ற ஆர்வம் மிகுதியாக,

"தில்லை அம்பலத் தலமொன்றிருக்குதாம்
அதைக் கண்டபேர்க்கு
ஜனனமரணப் பிணியை அறுக்குதாம்''

என்று மனம் உருகிய நிலையில்

வேதியர்முன் பாடி,

”போய்வர உத்தாரம் தாரும் ஐயனே!’’

என்று கேட்கிறார், அய்யர், நந்தனாரின் ஆண்டை. ஆகவே அவருடைய உத்தரவு தேவைப்படுகிறது. ”வேதியர்’ அனுமதி மறுப்பதற்காக என்று அமைந்துள்ள பாட்டு நான் துவக்கத்தில் குறிப்பிட்டுள்ளது.

“சிதம்பர தரிசனமா? நீ அதைச் சிந்திக்கப்போமா!’ என்று கேட்பது மட்டுமல்ல, நந்தனார் என்னென்ன செய்து காலந்தள்ள வேண்டும், எது முறை, எவை அவருக்கென்று ஏற்பட்டுள்ள”நியதி’ என்று விளக்கமாகவும் ”வேதியர்’ எடுத்துரைக்கிறார்.

காடு கழனியை உழுதிடு
கள்ளுத் தண்ணியைக் குடித்திடு
காடன் மாடனைக் கும்பிடு’’

என்ற கருத்துப்பட,

நந்தனாருக்காகவென்றே சாஸ்திரமும் சம்பிரதாயமும் வகுத்து வைத்துள்ள முறைகளை எடுத்துக் கூறுகிறார் வேதியர்.

அந்த வேதியரின் நினைவுதான் வருகிறது, தம்பி! காமராஜர் நம்மைப்பற்றிச் சின்னாட்களுக்கு முன்பு பேசியதனை அறிந்தபோது.

கடவுளை எதிர்த்துப் போரிடு
பார்ப்பன ஒழிப்பை நடத்திடு

இவைகளை விட்டுவிட்டு, தேர்தலிலே ஈடுபடுவதா! காங்கிரசை எதிர்ப்பதா! ஆட்சியிலே அமர்ந்திட முனைவதா! - என்று கேட்கிறார்.

நாம் எதைச் செய்யக்கூடாது என்பதனையும் கூறுகிறார், எதையெதைச் செய்திட வேண்டும் என்பதனையும் எடுத்துக் காட்டுகிறார். அவ்வளவு அக்கறை, நம்மிடம்!

இன்பத் திராவிடம் கேட்பதை விட்டுவிட்டார்கள்! கடவுளை ஒழிப்பதை விட்டுவிட்டார்கள்! பிராமண எதிர்ப்பை விட்டுவிட்டார்கள்! கொள்கைகளை விட்டு விட்டார்கள்! என்று கோபத்துடன் பேசுகிறார்; பேசுகிறாரா? ஏசுகிறார், எரிச்சல் காரணமாக.

அந்தக் கொள்கைகளை விட்டுவிட்டார்களே என்று கடுங்கோபங்கொண்டு, அந்த மதியி-கள் விட்டுவிட்டால் என்ன, இதோ நான் இருக்கிறேன், அறிவுக்கரசன்! ஆற்றல் மிக்கோன்! நான் இனி அந்தக் கொள்கைகளை ஆதரிக்கத் தலைப்பட்டு விட்டேன்! அவனியோரே! இதனை அறிந்து கொள்ளுங்கள்! என்றுகூறி, துந்துபி முழங்கட்டும்! என்று கட்டளையிட்டுவிட்டு, சல்லடம் கட்டிக்கொண்டு, தோள்தட்டி, துடைதட்டிக் கிளம்புகிறாரோ, களம் நோக்கி

இந்த வீராதிவீரர் என்று கேட்கிறாயோ, தம்பி! இல்லை! இல்லை! அவர் எப்போதும்போல,

ஓட்டு வேட்டை நடத்துவார்
ஆட்சியை அமைப்பார்.
பராக்குக் கூறிடுவோர்
புடைசூழப் பவனி வருவார்!
இலட்ச இலட்சமாக நிதி திரட்டுவார்.

நம்மைத்தான் செய்யச் சொல்கிறார் ”ஒழிப்பு’ வேலையை.

ஏன்? அந்த வேலைகளில், அந்தக் கொள்கைகளிலே அவருக்கு அவ்வளவு விருப்பமோ என்று கேட்பாய். விருப்பம் அல்ல; விருப்பம் இருந்தால், யார் செய்தாலும் செய்யாது விட்டிடினும், இதோ நான் செய்தே முடிப்பேன், செய்து முடித்திடாமல் ஊண் உறக்கம் கொள்ளேன் என்று சூளுரைத்தல்லவா கிளம்புவார், வாளை

உருவிக்கொண்டு. விருப்பம் அல்ல, நம்மை அவர் உசுப்பி விடுவதற்கான காரணம்.

இன்பத் திராவிடம் கேட்டிடுவோர், தேர்தலிலே ஈடுபட முடியாது. அப்படி ஒரு சட்டத்தை உருவாக்கி வைத்துக்கொண்டு விட்டிருக்கிறார் அல்லவா? அதனால், இன்பத் திராவிடத்தை ஏன் விட்டுவிட்டாய் என்று கேட்டு, நம்மை உசுப்பி விடுவதன் மூலம், தேர்தலிலே நாம் ஈடுபடுவதைத் தடுத்துவிடலாம் அல்லவா! அந்தத் தந்திர புத்தியால், ஏன் இன்பத் திராவிடத்தை விட்டு விட்டீர்கள் என்று கேட்கிறார்.

அதுபோலவேதான், கடவுள் ஒழிப்பு, பிராமண எதிர்ப்பு இவைகளை ஏன் விட்டுவிட்டீர்கள் என்று இவர் கேட்பது, அவைகளிலே ஈடுபட்டுக்கொண்டு காலந்தள்ளுங்கள், தேர்தலிலே ஈடுபட்டு என் ஆதிக்கத்துக்கு ஆபத்தை உண்டாக்காதீர்கள்

என்ற கருத்துடன்தான்.

இன்பத் திராவிடம் கேட்கிறார்கள் இந்தக் கழகத்தார்; ஆனால், இவர்கள் கேட்பதை, ஆட்சி மன்றத்தினர் ஒருவர்கூட ஆதரிக்கவில்லை என்று கூறுவார். ஏனெனில், இன்பத் திராவிடம் கேட்பவர்கள்தான் தேர்தலிலே ஈடுபடக்கூடாது என்று சட்டம் இருக்கிறதே!

கடவுளை எதிர்த்திடும் கயவர்கள், பார்ப்பனரைப் பழித்திடும் பாதகர்கள், இவர்களையா ஆதரிப்பர் என்று ஒரு போடுபோட்டு, தேர்தலிலே நம்மைத் தாக்கித் தகர்த்திடலா மல்லவா! அந்த நப்பாசை.

ஆகவேதான், நந்தனாருக்கு வேதியர் சொன்ன விதமாக நம்மைப் பார்த்துச் சொல்கிறார், நாடாளும் வாய்ப்பை இழந்துவிட வேண்டிவந்து விடுமோ என்று நடுக்கம்

கொண்டுள்ள காமராஜர், ஏன் கொள்கைகளை விட்டுவிட்டீர்கள் என்பதாக.

தோட்டம் காடு பார்த்துக்கொண்டு, மாடு கன்றுகளைக் கவனித்துக்கொண்டு, கிராமத்திலே இருந்து கொண்டு, கோயில் குளத்தை வலம் செய்துகொண்டு நிம்மதியாகக் காலந்தள்ளுவதை விட்டுவிட்டு, இங்கு ஏனடா வந்தாய்! என்று கேட்பது உண்டல்லவா அண்ணன், தம்பி பட்டணம் வந்தது கண்டால். அது போலப் பேசுகிறார் காமராஜர். அவர் பேச்சு எனக்குக் கோபத்தைக் கிளறவில்லை; மாறாக, சிரிப்பைத்தான் மூட்டுகிறது.

வெட்ட வெளியிலே நின்றுகொண்டு,. அது சொத்தை இது சோடை என்று பேசிக் கொண்டிருப்பானேன் - வந்து பாருங்களேன் சட்டசபைக்கு! நின்று பாருங்களேன் தேர்தலுக்கு! கேட்டுப் பாருங்களேன்

ஓட்டுகளை!! என்றெல்லாம் முன்பு சொன்னார்! இப்போதோ, இந்தப் பாவிகள் ஓட்டுக் கேட்க முழங்கவேதான் நமது ஆதிக்கத்திலே ஓட்டையும் ஒடிசலும் விழுந்து விடுகிறதே என்ற கிலிகொண்டு, ஏன் தேர்தலிலே ஈடுபடுகிறீர்கள், கடவுள் ஒழிப்பு, பிராமண எதிர்ப்பு ஆகியவைகளை ஏன் விட்டுவிட்டீர்கள் என்று கேட்கிறார்.

கடவுளை ஒழிக்கட்டும், பரவாயில்லை; பிராமண எதிர்ப்பு நடத்தட்டும் பரவாயில்லை; தனி நாடு கேட்கட்டும் பரவாயில்லை; பாவிப் பயல்கள் "ஓட்டு' அல்லவா கேட்கிறார்கள், நமது ஓய்யார வாழ்வுக்.கு அல்லவா உலைவைத்து விடுவார்கள்போல இருக்கிறது என்ற அச்சம் பிடித்தாட்டும் நிலையில் பேசுகிறார்.

அன்றும் இன்றும், தம்பி! கடவுள் ஒழிப்பு எனும் காரியத்திலே தி.மு. கழகம்

ஈடுபட்டதில்லை; ஆனால் கடவுள் பெயர் கூறிச் செய்யப்படும் கபட நாடகங்களை அம்பலப் படுத்துவதிலும், கடவுள் பெயர் சொல்லிக் காதகர் செய்திடும் கயமைகளைக் கண்டிப்பதிலும் தயக்கம் காட்டியதில்லை; தயக்கம் காட்டவில்லை.

தி..மு. கழகம், தீப்பந்தம் ஏடுகள் அக்ரகாரத்தைக் கொளுத்த என்று சொன்னதுமில்லை, அக்காரத்திலுள்ளவர்கள் "பூதேவர்கள், ' நாம் அவர் அடிவருடப் பிறந்தவர்கள் என்ற அக்கிரமத்தை ஏற்றுக்கொண்டதுமில்லை.

ஒன்றே குலம்! ஒருவனே தேவன்! என்ற நெறியைத் தேர்தலில் ஈடுபட்ட பிறகு அல்ல, தேர்தலைப் பற்றிய நினைவே எழாது நாள் தொட்டு, திராவிட முன்னேற்றக் கழகம் மேற்கொண்டு ஒழுகி வருகிறது. இதனை நாடு அறியும், நல்லோர் பாராட்டியுமுள்ளனர்.

தி.மு. கழகம், திராவிடர் கழகத்தைப் போல கடவுளின்மீதும், பிராமணர்மீதும் போர் தொடுத்துக் கொண்டு இருந்திடாமல், காங்கிரஸ் எதேச்சாதிகாரத்தின் மீது போர் தொடுத்திருக்கிறதே, அதற்குத் தேவைப்படும் வல்லமையும் வளர்ந்துகொண்டு வருகிறதே, அந்தப் போரிலே வெற்றி கிட்டுவதற்கான குறிகளும் பளிச்சிட்டுக் கொண்டுள்ளனவே என்பதைக் காணும்போது பெரியவர் கடுங்கோபம் கொள்கிறார்.

அவருடைய நோக்கம் மக்களிடம் தோழமைத் தொடர்பு கொண்டு, நாடெங்கும் நல்ல முறையிலே பரவி வளர்ந்துள்ள தி.மு. கழகத்தைத் தேர்தல் களத்தை விட்டுத் திசை திருப்பி விடவேண்டும் என்பதாகும்.

ஆலவட்டங்களுக்குத்தான் கணக்குப் புரிவதில்லை; அவருக்குக் கணக்குப் புரிகிறது.

ஐம்பத்து ஆறு இலட்சம்
முப்பத்துநாலு இலட்சம்

என்ற அளவிலேதான் 1962ல் ஓட்டுகள் விழுந்துள்ளன, காங்கிரசு க்கும் கழகத்துக்கும் என்பது.

இந்தக் கணக்கு கிளப்பிவிடும் கிலி காரணமாகவே அவர் நம்மை வேற வேலைகளைப் பார்த்திடுவதுதானே என்கிறார்.

நாட்டிலே ஜனநாயகத்தை நிலைநாட்டுவது என்பதையும்,

காங்கிரஸ் எதேச்சாதிகாரத்தை வீழ்த்துவது என்பதையும்,

காங்கிரசுக்கும் பணக்கார வர்க்கத்துக்கும் ஏற்பட்டு விட்டிருக்கிற எழுதாத ஒப்பந்தத்தைக் கிழித்து எறிவது என்பதையும்.

திராவிட முன்னேற்றக் கழகம், தனது கொள்கையாக, வேலைத் திட்டமாக மேற்கொண்டு விட்டிருக்கிறது.

திராவிட முன்னேற்றக் கழகம் இந்த வேலைத் திட்டத்தை வெற்றிகரமாக நடத்திச் செல்லத்தக்க வலிவும் வாய்ப்பும் பெற்றிருக்கிறது.

இந்த உண்மை காமராஜருக்கு நன்றாகப் புரிகிறது. எரிச்சல் பிறக்கிறது. துடிக்கிறார்: நம்மைத் தூற்றுவதன் மூலம் அந்த அரிப்பை அடக்கிக் கொள்ளப் பார்க்கிறார்.

தம்பி! அரிப்பு எடுத்த நிலையினர் என்னென்ன செய்து அந்த அரிப்புத் தொல்லையைப் போக்கிக்கொள்ள முனைவார்கள் என்பதைப் பார்த்தாலே வேடிக்கையாக இருக்கும்: அதிலும் நல்ல கோடை காலத்தில், முதுகுப் புறத்திலே

அரிப்பு எடுத்துவிட்டால் பாவம் நெளிவான், வளைவான்; கையை வளைத்து அரிப்பு எடுத்த இடத்தருகே கொண்டு செல்வான்: முடியாமற் போய்விடும்; விசிறிக்காம்பைக் கொண்டு கீறிப்பார்த்திடுவான்; எந்த இடத்தில் அரிப்பு எடுக்கிறதோ அந்த இடத்தருகே விசிறிக்காம்பு செல்லாது; மேலும் துடிப்பான்; கொஞ்சம் சொரிந்து விடுங்கள் என்று யாரிடமாவது கெஞ்சுவான்; அவர்களும் எந்த இடத்தில் அரிப்பு எடுக்கிறது என்பதை அறிந்து பக்குவமாகச் சொரிந்துவிடவில்லை என்றால், கூச்சத்தைத் துரத்திவிட்டுச் சுவரிலே போய்த் தேய்த்துக் கொள்வான்; அரிப்புத் தீருமட்டும்; இரத்தம் கசிகிறவரையில்! பார்க்கவே பரிதாபமாக இருக்கும்.

உடல் அரிப்புக்கே இந்தப்பாடு, இந்தத் தவிப்பு என்றால், உள்ளத்து அரிப்பு ஏற்பட்டுவிட்டால், தவிப்பு எப்படி இருக்கும்

என்பதைச் சொல்லவா வேண்டும்? காமராஜர் அந்தத் தவிப்புத் தவிக்கிறார்; பாபம், அவருடைய சமீபகாலப் பேச்சுகள்

அவர் அடைந்துள்ள உயர்ந்த நிலை

அவருக்கு இருப்பதாகச் சொல்லப்படும் வல்லமை

அவருக்குக் கிடைத்திருந்திருக்க வேண்டிய அனுபவம்

அவருடைய கட்சியிடம் அவருக்கு இருக்க வேண்டிய நம்பிக்கை ஆகிய எதற்கும் ஏற்றதாகவோ பொருத்தமானதாகவோ காணோம். ஒரே தூற்றல்! எடுத்தேன் கவிழ்த்தேன் என்ற பேச்சு! எல்லாம் எனக்குத் தெரியும் என்ற போக்கு! எவனால் என்ன ஆகும் என்ற கேள்வி! என்ன செய்துவிடுவேன் தெரியுமா என்ற மிரட்டல்!

எல்லாம் அவருக்கு ஏற்பட்டுவிட்டுள்ள

மன அரிப்பின் விளைவு! அதனால்தான் தம்பி! எனக்கு அவரிடம் கோபம் வரவில்லை; பச்சாத்தாபம் பிறக்கிறது.

எவ்வளவு பெரிய இடத்திலே அமர்ந்திருக்கிறார்; என்றாலும் எவ்வளவு பதைக்கிறார், பதறுகிறார், படபடக்கிறார்.

அமைச்சர்கள், நிரம்பிய அணிவகுப்பு!

கோடீஸ்வரர்கள் கொடி பிடிக்கிறார்கள்

கொலு மண்டபத்திலே இலட்சாதிபதிகள் சாமரம் வீசுகிறார்கள்,

கேட்டதும் எந்த அளவுப் பணமும் கொட்டிக் கொடுக்க முதலாளிகள் காத்துக் கிடக்கிறார்கள்!

அவர் பாதையிலே புழுதி இருந்தால் பாதம் அழுக்காகி விடுமே என்று பயந்து பரிவு காட்டித் தமது பட்டாடையை விரிக்கிறார்கள், இதன்மீது

நடந்து செல்லுங்கள் என்று!

பத்து மோட்டார், முன்னாலே! பத்து, பின்னாலே! படகு மோட்டாரிலே இவர்! வைரமோதிரக்காரர்கள், பக்கத்தில்! ஆயிரக்கணக்கான ரூபாய்களைச் செலவிட்டுப் போடப்பட்ட அலங்கார வளைவுகள்! சர்க்கார் சிப்பந்திகள் இரவெல்லாம் கண்விழித்துக்கொண்டு வேலைசெய்து எழில்கூட்டித் தந்த மேடை அமைப்புகள்!

மாளிகைகளிலே விருந்து! மகோன்னதமான வரவேற்பு வைபவம்!

ஆண்டு பல செலவிட்டு மருத்துவம் கற்றுக் கொண்ட வித்தகர்கள், அவர் எடுத்துக் கூறும் பொருளற்ற பேச்சைப் பொறுமையாகக் கேட்டுக்கொள்கிறார்கள்.

அரசியல் - பொருளாதாரம் - ஆகிய

துறைகள் பற்றிய ஆய்வுரை நடத்தியவர்கள் அவர் தரும் "அறிவுரை' கேட்டு, இது போலப் பேருரை ஆற்றியவர் பலகாலும் படித்த கல்லூரிகளிலே இருந்ததில்லையே! என்று கூறிடக் கூட ஒருப்படுகிறார்கள்.

இவ்விதமான ஏற்றம்! இந்த மே-டம்! இதிலே இருந்து கொண்டு, பாவம் அவர் தமது இயல்பை மறந்திட முடியாமல், தூ, தூ! சே! சே! என்ற அவருடைய தனிச்சிறப்பைத்தான் விளக்கிக் காட்டிக் கொண்டு வருகிறார் என்றால், தம்பி! பரிதாபமாகத்தானே இருக்கும்!

கெம்பீரமான யானை! அதன்மீது உயர்தரமான அம்பாரி! அதிலே அமர்ந்துகொண்டு பவனி வந்து கொண்டிருக்கும் போது, வழியிலே நிறுத்து! நிறுத்து! என்று ஊர்வலத்தை நிறுத்தச் செய்து கீழே குதித்து, அங்குச் சிதறிக் கிடக்கும்

ஈச்சம் பழங்களை எடுத்து வாயிலே போட்டுக் குதப்பிக் கொண்டே, என்ன சுவை! என்ன சுவை! என்று கூறிக் குதூகலித்திடின், பார்ப்போர் என்ன எண்ணுவர்! பாவம்! எல்லாச் செல்வமும் இருந்தும், இப்படி இருக்கிறதே மனம்! - என்று எண்ணிப் பரிதாபப்படுவர்! வேறென்ன செய்வர்!

காமராஜரிடம் உள்ளன்பு கொண்டவர்கள்கூட, அவர் இத்தனை மேலான இடம் சென்றும், தரத்தைத் தூக்கி எறிந்துவிட்டுத் தாறுமாறாகப் பேசுகிறாரே என்று வருத்தப்படுவார்கள்.

தொத்தலும் வத்தலுமாக உள்ளதுகள் மட்டுமே "பெரியவர்' நம்ம"பாணி'யைப் பழகிக் கொண்டுவிட்டாரே என்று எண்ணிக் களிநடமிடக்கூடும்.

தம்பி! காமராஜருக்குக் கிடைத்துள்ள

வசதிகளில் நூற்றிலே ஒரு பாகம் நமக்குக் கிடைத்தாலும் போதும், நாம் கண்டபடி பேசிடாமல், காரியத்தைக் கன கச்சிதமாக முடித்துக் கொண்டிட முடியும்.

நமக்கு உள்ள வசதிக் குறைவுகளை நாடறியும்.

கனதனவான்கள் நம்மிடம் இல்லை, இருக்க வேண்டுமென எதிர்பார்க்கவும் உரிமை இல்லை, நியாயமுமில்லை.

நமது கூட்ட மேடைகளிலே வந்து அமருகிறவர்கள் அனைவருமே உழைத்தால் மட்டுமே பிழைக்கக் கூடியவர்கள். நிலபுலம் பற்றி, வட்டி வாடகை பற்றி, பேசிக் கொண்டிருக்கக் கூடியவர்கள், வைரக் கடுக்கன்களும், வெள்ளிப் பூண்போட்ட தடி பிடித்து நடப்பவர்களும், பாண்டியாக்குகளும் ப்யூக்குகளும் பண்ணைகள் கொண்டோரும்

பர்மிட் பெற்றோரும் நம்மிடம் இல்லை. மாதச் சம்பளக்காரர்கள், தினக்கூலி பெறுவோர், வாடகை வீட்டிலே வசிப்பவர்கள், பெட்டிக்கடை நடத்து பவர்கள், மூட்டை சுமந்து விற்பவர்கள், இப்படிப்பட்ட உழைக்கும் உத்தமர்கள் நம்மிடம். எடு அரை இலட்சம் என்று கேட்டால், கொடுத்தேன் இப்போதே என்று கூறக் கூடியவர்கள் அல்ல; கொளுத்து அரசியல் சட்டத்தின் மொழிப் பிரிவை என்று கழகம் கட்டளையிட்டால், இதோ! இப்போதே! என்று ஆர்வத்துடன் கூறிச் செயலாற்றும் செம்மல்கள்! நாம் யானைமீது அம்பாரி அமைத்து அதிலே அமர்ந்து பவனி வந்து அரசபோகம் அனுபவித்திடுவோர் அல்ல; உச்சி வேளையில் கால் கடுக்க, மண்டையிலே வெப்பம் தாக்க, வியர்வை பொழிய, கல்லும் முள்ளும் நிரம்பிய பாதையிலே நடந்து சென்றிடுவோர்.

என்றாலும், நாம் நமது பேச்சிலும் செயலிலும் ஒரு தரம் இருக்க வேண்டும், ஒரு கண்ணியம் இருக்கவேண்டும், பொறுப்பும் பண்பும் இருக்கவேண்டும் என்பதிலே மிக்க கவலை எடுத்துக் கொள்கிறோம். காமராஜரோ, யானை மீது அம்பாரி கட்டி அதில் அமர்ந்து பவனி வருபவன் பாதை ஓரத்திலே உள்ள பழத்தை எடுக்க யானையை நிறுத்திவிட்டு கீழே குதித்திடும் போக்கின ராகிறார். ஏனோ. பாவம் !

தி. மு. கழகத்தாருக்கு மானம் இல்லை என்கிறார்.

தி. மு. கழகத்தார் கூலிகள், காலிகள் என்று ஏசுகிறார்.

தி. மு. கழகத்தார், ஆச்சாரியாருக்கு அடிமையாகி விட்டார்கள் என்று தூற்றுகிறார்.

தமிழக மக்களில் முப்பது இலட்சத்துக்கு

மேற்பட்டவர்கள் எந்தக் கழகத்திற்குத் தமது ஆதரவைத் தந்திருக்கிறார்களோ, எந்தக் கழகம் தமிழகச் சட்டமன்றத்திலே அதிகாரம் பெற்ற எதிர்க் கட்சியாகப் பணியாற்றிடும் நிலை பெற்றிருக்கிறதோ, எந்தக் கழகம் தாய்மொழி காத்திட அறப்போர் நடாத்திப் பல ஆயிரவர் சிறைக் கோட்டம் சென்று வாடிட வேண்டிய நிலையிலே கிளர்ச்சி நடத்திற்றோ, எந்தக் கழகத்தின் சொல்கேட்க ஒவ்வொரு நாளும் பல்லாயிரவர் ஆர்வத்துடன் தமிழகத்தின் மூலை முடுக்கெல்லாம் கூடத் திரண்டு வருகின்றனரோ, அந்தத் திராவிட முன்னேற்றக் கழகத்தினரை மானமற்றவர்கள் என்று ஏசுகிறார்; மதிகெட்டதால் அல்ல; மமதை அதிகமாகி விட்டதால்.

எடுத்தெறிந்து பேச, ஒன்றுக்கு ஒன்பதாகத் திருப்பித்தர, கடுமையும் கொடுமையும் நிரம்பிய வார்த்தைகளை உமிழ்ந்திட,

தி.மு.கழகத்தில் யாருமே இல்லை என்பதல்ல நிலை; நாம் பெற்றுள்ள வளர்ச்சியும் அடைந்துள்ள இடமும், பொதுமக்கள் தந்துள்ள ஆதுரவும் நமது நினைப்பையும் நேர்த்தியானதாக்கி பொறுப்பையும் உயர்த்தி இருப்பதாலே, இழிமொழி உமிழ்வது நமது தகுதிக்கு ஏற்றதல்ல என்ற தெளியுவுடன் கழகத் தோழர்கள் நடந்து கொள்கின்றனர். அவரோ? மேலிடத்தில் தமக்கு இடம் கிடைத்து விட்டதாலேயே எவ்வளவு தரக்குறைவான பேச்சையும் வீசலாம், நாடு தாங்கிக்கொள்ளும் என்ற துணிவுடன் பேசுகிறார்.

கடந்த பத்து ஆண்டுகளாக இவருக்குப் பத்திரிகைகளிலே தரப்பட்டுள்ள அளவுள்ள, வகையுள்ள விளம்பரம் - மேய்ப்பு தேய்ப்பு - தி.மு. கழகத்திற்குக் கிடைத்ததுண்டா?

காமராஜர் நடக்கிறார்; காமராஜர் படுக்கிறார்; காமராஜர் படிக்கிறார்; காமராஜர்

திறக்கிறார். காமராஜர் சிரிக்கிறார் - என்ற இப்படிப் பல கோலங்களை நித்தநித்தம் இதழ்கள் காட்டிக் காட்டி இவரை ஊட்டி வளர்த்து வருவதுபோல - அதே அளவுகூட வேண்டாம், அதிலே நூற்றிலே ஒரு பங்கு என்ற அளவேனும் - கழகத்துக்குக் கிடைத்ததுண்டா? இல்லை என்பதை எவரும் மறுத்திட முன்வர மாட்டார்கள். இன்று வரையில் ஏழாம் பக்கம், மூன்றாம் பக்கம், கடுகு எழுத்து என்ற அளவிலேதான் கழகத்தாரின் பேச்சு இதழ்களிலே வெளியிடப்படுகின்றது.

மூன்று மணி நேரம் வாதத்திறமையுடன் பேசியிருக்கலாம் கழகத் தோழர்; மூன்றே வரியிலே முடித்துவிடும், இதழ்கள்!

பேச்சுக்கு மதிப்பளிக்க மறுத்திடும் அதே இதழ்கள், அந்தப் பேச்சினை மக்கள் அறிந்துகொள்ள வேண்டும் என்பதிலே அக்கறைகாட்ட மனமில்லாத இதழ்கள்,

கழகக் கூட்டத்திலே ஒரு பன்றி புகுந்து விட்டால், அந்தப் பன்றிக்குக்கூட அக்கறை காட்டி விளம்பரம் தேடிக்கொடுக்கின்றன! இந்த நிலையிலே! கழகம் அடைந்துள்ள வளர்ச்சியைக் காணும்போதுதான் உண்மைக்கு மதிப்பளித்திடும் பண்பினர், கழகத்தைப் பாராட்டுகின்றனர்; அதன் வளர்ச்சி கண்டு வியப்படைகின்றனர்.

எப்படி முடிகிறது இவர்களால் இந்த அளவு வளர்ச்சி அடைய என்பதுபற்றி ஆச்சரியப்படுவோர்களும்,

எந்தவிதமான வசதியுமின்றி எப்படி இவர்கள் இவ்வளவு பணபலம் படைத்த காங்கிரசை எதிர்த்து நிற்க முடிகிறது, தொடர்ந்து போரிட முடிகிறது, குறிப்பிடத்தக்க வெற்றிகளை ஈட்டிட முனைகிறது என்று கேட்டுக் கேட்டு, உண்மைக் காரணம் புரியாததாலே வியப்பிலாழ்ந்திடுகின்றனர்;

அதே நிலைதான், காமராஜருக்கு எரிச்சலையும், அருவருப் பையும், அடக்க முடியாத பொச்சரிப்பையும், அணைய மறுக்கும் வெறுப்பையும் கிளறிவிட்டு விடுகிறது; அந்த எரிச்சலைப் போக்கிக்கொள்ளவே ஏதேதோ பேசுகிறார்.

எனக்குக் கழகத்திடம் பயம் இல்லை என்கிறார்; யாரும் இவரைப் பார்த்துக் கேட்கக்கூட இல்லை, கழகத்தைக்கண்டு பயமா உங்களுக்கு என்று; இவராகவே சொல்லுகிறார், ஏன்? இவரை மக்கள் பார்த்திடும். பார்வையே என்னமோ போல் இருக்கிறது இவருக்கு. நான் ஒன்றும் பயப்படவில்லை என்று கூறி, தனது ”தைரியத்தை’ வார்த்தை அளவிலாவது மெய்ப்பித்துக் காட்ட வேண்டிய நிலைக்குத் துரத்தப்படுகிறார்.

மற்றவர்களுக்குத் தைரியம் வருவிக்கும்

நோக்கத்துடன்,

இந்தத் தடவை கழகத்தை ஒழித்துக் கட்டிவிடுவேன் என்றும்,

இந்தத் தடவை கழகத்துக்கு ஐந்து இடங்களுக்கு மேல் கிடைக்காது என்றும்,

கழகம் ஆடி அடங்கிவிட்டது. அலுத்துக் கீழே விழுந்து விட்டது என்றும், பேசுகிறார்.

அவ்வளவு பலம் இழந்துவிட்ட, மக்களால் வெறுத்து ஒதுக்கப்பட்டுவிட்ட நிலையில் கழகம் இருப்பது உண்மை யானால், ஏன் இவர் நாள் ஒன்றிக்கு ஊர் பத்து என்ற கணக்கில் சுற்றிக் கொண்டிருக்க வேண்டும். பேசுகிற கூட்டம் அத்தனை யிலும், கழகம் பற்றியே பேசிக் கொண்டிருக்க வேண்டும், விளக்கக் காணோமே!

உருட்டி மிரட்டிப் பேசுகிறார், அடிபணிவோர் அகமகிழ; உள்ளமோ கொதிப்படைந்து

கிடக்கிறது; நமக்கு இருப்பது போன்ற பதவிபலம், பணபலம், பத்திரிகைபலம் அற்றவர்கள், இந்த அளவுக்கு நம்முடன் போரிடுகிறார்களே, களத்திலே எந்த முனையிலும் அவர்கள் கச்சையை வரிந்து கட்டிக்கொண்டு நிற்கிறார்களே, அவர்களுக்கு மக்களின் ஆதரவு ஒவ்வொரு கட்டத்திலும் வளர்ந்தபடி இருக்கிறதே, அந்த வளர்ச்சியைக் குலைக்க நாம் எடுத்துக் கொண்ட சூழ்ச்சித் திறன் அவ்வளவும் பயனற்றுப் போயினவே, இப்படியே நிலைமை வளர்ந்தால், என்ன ஆகும், நாம் எங்குத் துரத்தப்பட்டு விடுவோம் என்று எண்ணுகிறார்; எரிச்சல் மூளுகிறது; அரிப்பைப் போக்கிக் கொள்ள, தேய்த்துக்கொள்கிறார், வேகவேகமாக.

தம்பி! இந்தத் தடவை விடமாட்டேன், வேரோடு பறித்துக் கீழே போட்டுவிடுவேன் என்று வீரம் பேசுகிறாரோ, இதுவாவது புத்தம்

புதிதா? இல்லை! பழைய பல்லவி!!

1957-லும் இதைத்தான் சொன்னார்; 1962-லும் இதையே தான் சொன்னார்; இப்போதும் இதையே சொல்லிக் கொண்டிருக்கிறார்.

சென்னை மாநகராட்சி மன்றத் தேர்தலின்போது கூட இதனைச் சொன்னார். தெருத்தெருவாகக் கூட்டம் போட்டு மட்டுமல்ல, வீடுவீடாக நுழைந்து. நடந்தது என்ன? நாடறியும்!

ஆகவே, தம்பி! அவர் தூற்றுவது பற்றி எப்படி நான் கவலைப்படவில்லையோ அதுபோலவேதான் அவர் மிரட்டு கிறாரே இந்தத் தடவை ஒழித்துக் கட்டி விடுவேன் என்று, அதற்காகவும் நான் கவலைப்படவில்லை; தேவையுமில்லை.

அத்தனை பெரிய இடத்தைப் பிடித்துக் கொண்டவர், அத்தனை

பணபலத்தைத் திரட்டியவர், பத்திரிகைகளின் பிரசாரபலத்தைப் பெற்றுக் கொண்டவர், நம்மை எதிர்த்து நிற்பதற்காக, எவ்வளவு பாடுபட வேண்டி நேரிடுகிறது : காடு மேடு என்று பாராமல், பகல் இரவு என்று பாராமல், சுற்றிக் கொண்டிருக்க வேண்டி இருக்கிறது என்பதைக் கவனிக்கும் போதுதான், களிப்பு பொங்குகிறது! கழகம் அவரை அத்தனை ”தண்டால்’ போடவைக்கிறது என்பதை எண்ணிப் பெருமிதமே கொள்ளச் செய்கிறது.

ஐந்தே இடங்கள் தானாம், தம்பி! நமக்கு! 1967லில் !

அவ்வளவு திட்டவட்டமாகத் தெரிகிறது நமது எதிர் காலம் - இந்த அரசியல் ஆருடக்காரருக்கு!!

ஆனால், அவர் அலைவதையும் அரற்றுவதையும் பார்த்தால், எப்படி

இருக்கிறது?

கொண்டுவா கூர்மையான வாள்! என்று கேட்டிடும் வீரனை எந்த எதிரியை வீழ்த்த? என்று நண்பன் கேட்க, இதோ இதை வெட்டிடத்தான் என்று கூறி, உருட்டி வைக்கப்பட்டுள்ள வெண்ணெய் உருண்டையை அவன் காட்டினால்? கை கொட்டிச் சிரிக்க மாட்டார்களா! அந்தச் சிரிப்பொலி எழுப்பித்தான் மக்கள் பழமொழி, சமைத்தளித்தனர், வெண்ணெய் வெட்டிச் சிப்பாய் என்பதாக.

ஆத்திர மூட்டத்தக்க முறையிலே பேசிக்கொண்டு வருபவர் - ஏன் சில கட்சிகள் காங்கிரசிடம் கோபித்துக்கொள்கின்றன என்ற ஒரு கேள்வியை அவரே எழுப்பி, அதற்கு அவரே விடை வீசி மகிழ்ந்து கொள்கிறார்- ஏன் காங்கிரசிடம் கோபம் கொள்கிறார்கள்?

ஊரிலெல் லாம் மின்சார விளக்குப் போட்டிருக்கிறோமே, அதனாலா. பள்ளிக்கூடங்களை நிறையக் கட்டியிருக்கிறோமே. அதனாலா? ஏழைகள் படிக்க வசதிசெய்து கொடுத்திருக்கிறோமே, அதனாலா? என்ன காரணத்துக்காகச் சில கட்சிகள் காங்கிரசிடம் கோபித்துக் கொள்கின்றன என்று கேட்கிறார்.

நன்றி கெட்டவர்கள்! புத்தி கெட்டவர்கள்! ரயிலே இவர்களுக்கு இப்படி இருக்குமென்று நாம்தான் காட்டினோம்!! ஆறுகளைக் கட்டுப்படுத்தினோம்! ஆஸ்பத்திரிகள் அமைத்தோம்! நெடுஞ்சாலைகளைப் போட்டுக் கொடுத்தோம்; கல்விச் சாலைகளையும் விஞ்ஞானக் கூடங்களையும் அமைத்தோம்; விஞ்ஞானக் கூடங்களையும் அமைத்தோம்; மின்சாரத்தைக் கொடுத்து இருளை ஓட்டினோம்; இயந்திரங்களைத் தந்து

உழைப்பின் கடினத்தைக் குறைத்து உற்பத்தி பெருகிடச் செய்தோம். இவ்வளவும் செய்த நம்மிடம், ஏன் இவர்கள் கோபம் காட்டுகிறார்கள் என்று வெள்ளைக்காரன் கூடத்தான் வெகுண்டுரைத்தான்!

பாலமும் பள்ளிக்கூடமும், பகல் உணவும், சீருடையும், மருத்துவ மனையும் பிறவும், இவர் தந்தாராம்!! ஆகவே, தயாபரனே! போற்றி போற்றி என்று மக்கள் இவர் தாள் பணிந்து, தூபதீப நைவேத்தியம் படைத்துப் பூஜை செய்திட வேண்டுமாம்! இது இவருடைய அரசியல்!! இதற்கு அடிவருடிகள் வாய் பிளந்து கொண்டு நிற்கிறார்கள்.

கட்டினார், வெட்டினார், திறந்தார், ஊட்டினார் - சரி - எதனால். வரிப்பணம் கொட்டிக் கொட்டிக் கொடுக்கிறார்களே மக்கள், அதனால்.

இப்போது இவர் கட்சியை எதிர்த்து மக்களிடம் ஆதரவு கேட்கும் கட்சிகள் வெற்றி பெற்றதும்

பாலங்களை உடைத்தெறிவோம்
பள்ளிக்கூடங்களை இடித்துத் தரைமட்ட மாக்குவோம்
மருத்துவ மனைகளை மூடிவிடுவோம்

என்றா பேசுகின்றன! பைத்தியக்கார விடுதியிலே உள்ளவன் கூடப் பேசமாட்டான் அதுபோல.

மக்களைக் கசக்கிப் பிழிந்து வரி வாங்கி ஊழல், ஊதாரிச் செலவு, நிர்வாகச் சீர்கேடு, பாதகர்களுக்குப் பங்கு என்ற முறையில் பாழாக்கியதுபோக மிச்சம் இருப்பதைக் கொண்டு, நீங்கள் கட்டிடும் பாலம் பள்ளிக்கூடத்தைவிட அளவிலும் சரி, தரத்திலும் சரி, உயர்வானதாக நாங்கள்

அமைத்துத் தரமுடியும் என்று கூறித்தான் மக்களிடம் ஆதரவு தேடுகின்றன.

இதுதான் ஜனநாயக முறை! பள்ளிக் கூடம் கட்டும் கட்சி என்று ஒன்றும், பள்ளிக்கூடத்தை இடித்திடும் கட்சி என்று மற்றொன்றுமா இருக்கிறது? இல்லை! இதனையா மக்கள் உணரமாட்டார்கள்! ஆனால், இவர் உயர் இடத்திலே இருந்து பேசுவதால், வாய்திற வாமல் கேட்டுக்கொள்கிறார்கள். அச்சம் அவர்களின் வாயைத்தான் பூட்டிவிடுகிறது, சிந்தனையை அல்ல!

உணர்வு பெற்ற மக்கள், பாலம், பள்ளி, படிப்பகம், மருந்தகம், மின்சாரம், பகலுணவு என்பனவற்றைத் தரவல்லது காங்கிரஸ் ஒன்றுதான் என்று நம்பிடின், எப்படி நூற்றுக்கு அறுபது என்ற அளவு மக்கள் மற்றக்கட்சிகள் இதே காரியத்தை இதைவிடத் திறமையாகச் செய்வார்கள் என்று நம்பி, ஓட்டு அளித்திருக்க

முடியும்! அளித்திருக் கிறார்களே, என்ன பொருள் அதற்கு!

காமராஜர் பேசிடும் அரசியல், அபத்தம் என்பதுதான் மக்கள் காட்டிய போக்குக்குப் பொருள். வேறென்னவாக இருக்க முடியும். ஏன் இவர்கள் கட்டிய பாலம் பள்ளிக்கூடம் ஆகியவற்றைக் கண்ட பிறகும் காங்கிரசை எதிர்த்துப் பெரும்பான்மையினர் ஓட்டளித்தனர்?

ஆளும் வாய்ப்பு அளிக்கப்பட்டால் காங்கிரஸ் கட்சியைவிடத் திறமையாக மற்றக் கட்சிகள் மக்களுக்குத் தேவையான நலன்களைச் செய்து தருவார்கள் என்ற நம்பிக்கையால்!

தம்பி! மக்கள் நம்மிடம் இவ்விதமான நம்பிக்கையைத் தெரிவித்திருக்கும்போது, நாம் இவருடைய பேச்சை மதித்திடத்

தேவையில்லை, அல்லவா!

பள்ளிக்கூடம் பார், பாலம் பார், பகலுணவு பார், மருந்தகம் பார், மின்விளக்கு பார்! - என்று இவர் காட்டுகிறார்; மக்களோ- பள்ளிச் சிறுவர்களின் ஏழ்மை நிலையைப் பார்!

ஆசிரியர்கள் படும் அவதியைப் பார்!

நடுக் கொள்ளைக்காரன் நடத்தும் தர்பாரைப் பார்!

நோயினால் நலிந்திடும் ஏழையைப் பார்!

வேலையற்றோர் படும் வேதனையைப் பார்!

ஊழலும் ஊதாரித்தனமும் பெருகி விட்டதைப் பார்!

கள்ளமார்க்கட்டைப் பார்!

கொள்ளை இலாபம் அடிப்பவனையும் பார்!

அவனுடன் கூடிக் குலாவும்

காங்கிரஸ் தலைவர்களையும் பார்!

நாங்கள் கொட்டிக் கொடுக்கும் வரித் தொகையையும் பார்!

எமக்குக் கிடைத்திடும் வசதி எவ்வளவு குறைவு என்ற கணக்கையும் பார்!

பணக்காரன் மேலும் பணக்காரன் ஆவதைப் பார்!

பஞ்சை, பராரியாகிடும் பரிதாபத்தையும் பார்!

என்று கூறுகிறார்கள். என்ன பதில் சொல்லுவது? என்ன பதில் சொல்கிறார்.

ஊரிலே ஏழடுக்கு மாடிக் கட்டடம் பல இருக்க அவைகளைக் கண்டு பாராட்டாமல், ஊர்க் கோடியிலுள்ள சாக்கடையைப் பார்த்துவிட்டு முகத்தைச் சுளித்துக் கொள்ளுவதா என்று கேட்டாராம்!

சாக்கடை ஓரத்திலே இருந்து தீரவேண்டிய நிலையிலே தள்ளப்பட்டவர்கள், வேறு

இடத்திலே இருக்கும் ஏழடுக்கு மாளிகையை எண்ணி மகிழ்ந்து கொண்டிருக்க வேண்டும் என்கிறாரா?

சேற்றிலே உழல்வார்கள் ஏழைகள், ஐயா! சேறு! என்று கூறினால், இதனையே சொல்லிக் கொண்டிருக்காதீர்கள், வேறு இடத்தில் பன்னீரில் குளித்துவிட்டு, பரிமளகந்தம் பூசிக்கொண்டு, பால் பாயாசம் சாப்பிட்டுவிட்டு, பஞ்சணையில் படுத்துக் கொண்டு சுகமாக இருக்கிறார்கள், அதனை எண்ணித் திருப்திப் பட்டுக்கொள் என்றா கூறுவது?

அவ்விதமான புத்திமதி கூறுகிறார், சோஷியலிசம் என்ற புனிதக் கருத்தை ஏற்றுக் கொண்டிருப்பதாகப் பேசுபவர்.

கை கால் ஊனம் இல்லை! காது செவிடு இல்லை. கண்ணிலே மட்டுந்தான் "பூ'

விழுந்து விட்டது; பார்வை இல்லை; இருந்தால் என்ன; உடலிலே மற்றப் பகுதிகள் ஒழுங்காக இருக்கின்றன, அதுபோதும்; குறைபட்டுக் கொள்ளாதே; கண் பழுதானால் என்ன, காலைப் பார், கையைப் பார், காதைப் பார், என்று கூறிடுபவரை, பாராட்டவா செய்வார்கள். பாராட்டச் சொல்கிறார், இதுபோலப் பேசிடும், இவரை!!

காங்கிரசாட்சி மக்களிடம் கசக்கிப் பிழிந்து வசூலித்திருக்கும் வரிப் பணத்தின் அளவைக் கணக்குப் பார்க்கும்போது, அந்த ஆட்சி மக்களின் வசதிக்காகச் செய்திருக்கிற ஏற்பாடு மிக மிகக் குறைவு என்பது நமது குற்றச்சாட்டு!

காங்கிரசிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள ஆட்சியை, மக்கள் மற்றவர்களிடம் ஒப்படைத்தால், காங்கிர சாட்சியால் ஏற்பட்டுள்ள கேடுகளை நீக்குவதுடன்,

ஏழைகளைக் கசக்கிப் பிழியும் வரிகளைக் குறைப்பதுடன் நலன்கள் மிகுதியாகும்படி செய்யமுடியும் என்பது நாம் அளிக்கும் உறுதிமொழி.

இதுபோல மக்களிடம் கூறிடும் உரிமையைத் தருவதே ஜனநாயக முறை.

ஒருமுறை மற்றவர்களிடந்தான் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைத்துப் பார்ப்போமே.

என்ற முடிவெடுக்க வேண்டிய பொறுப்பும் உரிமையும், திறமையும் பெற்றவர்கள் பொதுமக்கள். அவர்களிடம், தமது கட்சியினர் ஆட்சி நடத்திச் சாதித்தவைகளை எடுத்துக் கூற வேண்டியவர் காமராஜர்.

மற்றவர்களுக்கு நாடாளும் தகுதியும் திறமையும் இல்லையென்று கூறுவது துடுக்குத்தனம். ஜனநாயகப் பண்பு மேலோங்கியுள்ள நாட்டினிலே அத்தகைய

அரசியல் துடுக்குத்தனத்தை அனுமதிக்க மாட்டார்கள்.

இங்கு மக்கள் மனத்திலே, அதிகாரத்திலுள்ளோர் மூட்டிவிடும் அச்சமும், அவிழ்த்துவிடும் அடக்கு முறையும், இத்தகைய அரசியல் துடுக்குத்தனம் நடமிட இடமளித்து விடுகிறது.

ஆனால், மெள்ள மெள்ள அந்த "அச்சம்' கலைந்து கொண்டு வருகிறது. கேள்விகள் பிறந்துவிட்டன! கண்டனக் கணைகள் பறந்தபடி உள்ளன. விழிப்புணர்ச்சி தோன்றிவிட்டது.

இதை ஓரளவு உணருவதால்தான் காமராஜர், தூற்றித் துளைத்திடலாமா என்ற நப்பாசையைக் கடைசிக் கருவியாகக் கொண்டு பயணம் நடத்தி வருகிறார்.

நாடாள எமக்கன்றி வேறு எவருக்கும் தகுதி

இல்லை என்று பேசிப் பார்க்கிறார்.

கடவுள் ஒழிப்பு, பிராமண எதிர்ப்பு என்று எதையாவது செய்து கொண்டிருப்பதை விட்டுவிட்டு, ஏன், நாடாள விழைகிறீர்கள் என்று நம்மைக் கேட்கிறார்.

அதனைக் கண்டதால்தான் தம்பி! எனக்கு, நந்தனாரைப் பார்த்து வேதியர் கேட்டதாகப் பாடுகிறார்களே, அந்தப் பாடல் நினைவிற்கு வந்தது.

மற்றொன்றும் புரிந்தது. இவ்வளவு வசதிக் குறைவுகளுக்கு இடையிலேயும், நாம் ஏற்படுத்தி வைத்திருக்கிற மக்கள் எழுச்சி, காமராஜரை இவ்வளவு வேலை வாங்குகிறதே, தரக்குறைவாகப் பேசியாவது பார்க்கலாம் என்ற நிலைக்குத் துரத்திவிட்டிருக் கிறதே, நாம் இன்னமும் முழு அளவில், பணியாற்றினால் எவ்வளவு வேகமாகக்

காங்கிரஸ் எதேச்சாதிகாரம் வீழ்ந்துபடும் என்பதும் புரிகிறது. அது புரிவதால்தான் தம்பி! உன்னைக் கேட்டுக்கொள்கிறேன்,

நிலைமை மிக நன்றாக இருக்கிறது.

உன் ஆற்றல் தக்க பயனைத் தந்திருக்கிறது.

உன் பணி காரணமாக எழுந்துள்ள விழிப்புணர்ச்சி காமராஜரைக் கடுமையாக வேலை வாங்குகிறது.

காங்கிரசாட்சியின் கேடுகள் பற்றி நீ தந்திடும் விளக்கங்களை மறுத்திட வக்கற்ற நிலையினில் காமராஜர், கடுமொழியும் இழிமொழியும் தவிர வேறு எதனையும் உமிழ முடியாத நிலைக்கு வந்துவிட்டார்.

ஆகவே, மேலும் உற்சாகத்துடன், நம்பிக்கையுடன் பணியாற்றிடப் புறப்படு என்பதாக.

கழகத் தோழர்கள் சீரிய முறையில் பணியாற்றுகின்றனர்; மகிழ்ச்சி அடைகிறேன்.

ஆனால், ஒவ்வொருவரும் தங்களைத் தாங்களே கேட்டுக் கொள்ள வேண்டும்,

மற்ற எந்தவிதமான ஆசாபாசங்களையும் ஒதுக்கி வைத்துவிட்டுப் பணியாற்றுகிறேனா?

என் ஆற்ற-ன் முழு வேகத்தையும் பணியாற்று வதிலே இணைத்திருக்கிறேனா?

தொடர்ந்து பணியாற்றுகிறேனா? தோழர்களை அணி திரட்டிக் கூட்டாகப் பணியாற்றுகிறேனா?

ஆத்திரப்படாமல், பொறுப்புணர்ச்சியுடன் பணியாற்றுகிறேனா?

ஜனநாயகக் கடமை உணர்ச்சியுடன் பணியாற்றுகிறேனா?

மக்களுக்கு நல்லாட்சி கிடைத்திடச்

செய்யும் மகத்தான தொண்டு என்பதை உணர்ந்து பணியாற்று கிறேனா?

தம்பி! இந்தக் கேள்விகள், ஒருவரை மற்றொருவர் கேட்டுக் கொள்வதற்காக அல்ல; ஒவ்வொருவரும் தங்களைத் தாங்களே கேட்டுக்கொள்வதற்காக. ஏன் இத்தனைக் கூறுகிறேன் என்றால், தம்பி! உன்னால் இப்போது செய்திடுவதைக் காட்டிலும் அளவிலும் தரத்திலும் உயர்வான பணியாற்றிட முடியும். நாளை! நாளை என்று எண்ணிக் கொண்டிருந்திடக் கூடாது. இன்று இன்று! - என்ற எழுச்சியுடன் புறப்பட்டாக வேண்டும். இழிமொழி உமிழ்ந்திடுகிறார் இடம் பிடித்துக் கொண்டவர்; அரசியல் ஆணவத்தை அடக்கிட முடியும் என்ற நம்பிக்கை இருப்பதால்தான் உன்னிடம் கூறுகிறேன்; முறையிடுகிறேன்.

அன்புள்ள

அண்ணாதுரை

8-5-66

50. உன்னைத்தான் நம்பியிருக்கிறேன் !

காங்கிரஸ் பேசும் சோஷியலிசம் போலிப் பேச்சு !

உழுபவனுக்கு நிலமா என்றவர் காமராசர் !

எதேச்சாதிகாரத்தை வீழ்த்த உன்னையே நம்பியுள்ளேன்!

நான் எதிர்பார்ப்பது ஒன்றே !

உன் இதயத்தில் இடம் !

தம்பி,

எனக்காக அல்ல - என் இலாபத்துக்காக அல்ல - ஏழை எளியவர்களுக்காக - இல்லாது இடர்ப்படுவோர் களுக்காக - சாவடி கட்ட - ஆகவே, விலை குறைவு என்று தயங்காதே - நல்ல காரியத்துக்காக - தர்மத்துக்காக - புண்ணிய காரியத்துக்காகக் கொடு!

உருக்கமாகப் பேசுகிறார்; மறுக்கமுடியாத “நியாயம்’ எடுத்துக் காட்டுகிறார் தண்டாயுதபாணி கோவில் தர்மகர்த்தா - ஆறு ஆயிரம் மதிப்புள்ள”சதுரத்தை’ இரண்டாயிரத்துக்குத் தந்து விடும்படி விளங்கானூராரிடம்.

விலை மிகவும் குறைத்துக் கேட்கிறார். நாலு ஆயிரத்துக்கு முன்பு ஒருவர் கேட்டார், ஆறுக்கு அரை பைசா குறையாது என்று அடித்துப் பேசினோம். வேறு ஒருவரும் இவ்வளவு குறைவாக விலை கூறமாட்டார்கள். ஆனால்... தர்மகாரியம் என்கிறார்; புண்ணியம் கிடைக்கும் என்கிறார்; சாவடி கட்ட என்கிறார்; எப்படி மறுக்க முடியும் - ஒரே குழப்பமாக இருக்கிறதே என்று எண்ணி ஏக்கப்படுகிறார் விளங்கானூரார்.

ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு பார்த்தால், அந்தச் சதுரத்தில் “தண்டாயுதபாணி

மாளிகை’ தெரிகிறது; ஒரு நாள் தங்க வாடகை இருபத்து ஐந்து ரூபாய் என்று குறிப்புப் பலகை தொங்குகிறது.”அறை காலி இல்லை’ என்ற அறிவிப்புப் பலகையும் தொங்கவிடப் பட்டிருக்கிறது. சாவடி கட்ட! ஏழைகளுக்காக! தர்மகாரியத்துக் காக! என்று மயக்கி, சதுரத்தை மிகக் குறைந்த விலைக்கு வாங்கியவர் உயர்தரமான உணவு விடுதி கட்டிக் கொழுத்த இலாபம் அடைகிறார்.

”மாளிகை’யிலே பெரிய பெரிய புள்ளிகள் வந்து தங்குகிறார்கள் : கும்பாபிஷேகம் காண வந்தவர்கள் அல்ல! கள்ளச்சரக்கு வியாபாரம் செய்வோர்! ஊருக்குத் தெரிகிறது. ஆனால், அதிகாரிகளிடம் தருவதற்கான ஆதாரங்கள் மட்டும் எவர் கரமும் சிக்குவதில்லை; அவ்வளவு திறமையாக நடத்தப் படுகிறது திருட்டு வேலை.

தர்மகாரியம் - புண்ணிய காரியம்

- என்று மயக்க மூட்டும் பேச்சுப் பேசி, விவரமறியாதானை வலையிலே விழச் செய்து, இலாப வேட்டையாடிடும் வஞ்சகத்துக்கும் நாங்கள் ஜனநாயக சோஷியலிசத்தைத் தந்திடப்போகிறோம்; ஏழையை வாழ வைக்கப் போகிறோம் என்ற ஆசை வார்த்தையை ஊட்டி, ஓட்டுகளைத் தட்டிப் பறித்துக்கொண்டு; ஏழையைக் கசக்கிப் பிழிந்து கொழுத்திடும் செல்வவான்களுக்குத் தங்கள் "முதுகை'க் கொடுத்து அவர்கள் வீசிடுவதை வழித்தெடுத்து சுவைத்திடும் போக்குக்கும் அதிக வித்தியாசமில்லை. அளவிலே அவை வேறு வேறு; தரத்திலே இரண்டும் ஒன்றுதான்.

களவு என்று எண்ணாதே குழந்தாய்! உனக்கு நற்கதி தந்திடவே நாம் இதனைச் செய்தோம். செல்வம், மனத்தை மயக்கும்; பண்பை அழிக்கும் : கடவுளிடம் கொண்டிட

வேண்டிய பக்தியினை அழித்தொழிக்கும்.

பணம், பாபத்தின் சின்னம்! அதிலே பற்றும் பாசமும் மிகுந்திடின் பாபத்தின் பிடியிலே சிக்கிக் கொள்வாய்;

மகனே! உன்னைப் பாபத்தின் பிடியிலிருந்து விடுவிக்கவே நாம் உன் பொருளைப் பறித்துக் கொண்டோம். சென்று சிவனருளை நாடு;

என்று வழிப்பறி நடத்தியவன் பேசிடின் அதற்குப் பெயர் "உபதேசம்' என்றாகுமா! சூது! வஞ்சகம்! சூழ்ச்சி!

ஆனால், பாப புணிணியம் பற்றிய உருக்கத்தைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு ஏய்த்திடுவோர் போல, ஆட்சியில் அமர்ந்திடுவோர் மயக்கமூட்டும் பேச்சினை வீசி மக்களைத் தம் பக்கம் ஈர்த்துக்கொண்டு, பிறகு அந்த

மக்களுக்கே கேடு செய்திடத் துணிகின்றனர்.

காங்கிரசாட்சியினர் பேசிடும் ஜனநாயக சோஷியலிசம், இதுபோன்றதோர் சூழ்ச்சியாகவே இருந்து வருகிறது.

போலிப் பேச்சு - அல்லது மயக்கமூட்டும் பேச்சு அல்லது சூழ்ச்சிப் பேச்சு காங்கிரசாட்சி பேசிடும் சோஷியலிசம் என்பதை நன்கு உணர்ந்து கொண்டிருப்பதால்தான், சீமான்கள் காங்கிரஸ் கட்சியில் அச்சமின்றி இருந்து வருகிறார்கள்.

உண்மையிலேயே காங்கிரசாட்சி சோஷியலிசத்தை நடைமுறைக்குக் கொண்டு வந்துவிடும் என்ற நிலைமை இருந்திடின் இத்தனை முதலாளிகள் காங்கிரஸ் முகாமிலே இருந்து வருவார்களா? தற்கொலை செய்துகொள்ளச் சம்மதிப்பார்களா!

ஒரு புதுவரி தமக்குப் பாதகமான

முறையிலே போடப் பட்டுவிட்டால் காட்டுக் கூச்சலிட்டு, எதிர்ப்புக் கிளப்பி, அந்த வரி எடுபடுகிற வரையில் புயலைக் கிளப்பியபடி இருக்கும் இயல்பு படைத்த முதலாளிகள், தங்கள் வாழ்க்கை முறைக்கே உலைவைக்கக் கூடிய திட்டமான சோஷியலிசத்தைக் காங்கிரசாட்சி மேற்கொள்வதாக அறிவித்தது கேட்டு வாளாவா இருப்பார்கள்! தேளாகிக் கொட்டுவார்களே! ஆனால், அவர்கள் ஒரு துளியும் கவலைப்படாமல்லவா இருக்கிறார்கள்! ஏன்? அவர்களுக்கு நன்றாகத் தெரியும் காங்கிரசாட்சி பேசிடும் சோஷியலிசம், மக்களை மயக்கவே தவிர, தங்கள் ஆதிக்கத்தை மாய்க்க அல்ல என்ற உண்மை.

நிலத்துக்கு உச்சவரம்பு கட்ட சட்டம் வரும் என்று தெரிவித்ததும், எவ்வளவு எதிர்ப்பு, ஆர்ப்பரிப்பு செய்தனர் இந்தப் பிரபுக்கள்!

இன்று சோஷியலிசம் பேசப்படுகிறது. கவலையற்று இருக்கிறார்கள் என்றால் காரணமற்றா?

ஆதரித்தே கூடப் பேசுகிறார்கள் சீமான்கள்; வரட்டுமே சோஷியலிசம் என்று! ஏன்? அவர்கள் மிக நன்றாக அறிவார்கள், காங்கிரசாட்சி சோஷியலிசத்தை நடைமுறைக்குக் கொண்டு வராது என்பதனை.

அமெரிக்கத் தலைவரொருவரைக் கேட்டனர் அந்நாட்டு முதலாளிகள், இந்தியாவுக்குக் கடன் கொடுங்கள் தாராளமாக; ஏராளமான "முதல்' போட்டுத் தொழில் நடத்துங்கள் என்று கூறுகிறீர்களே, இந்தியாவிலே காங்கிரஸ் அரசு, சோஷியலிசத் திட்டத்தினை மேற்கொண்டிருக்கிறதே, அந்த நிலையில் நாங்கள் எப்படி முதல் போட முடியும் என்று.

அமெரிக்கத் தலைவர் சொன்னார், இந்தியாவில் காங்கிரசாட்சியினர் பேசிடும் சோஷியலிசத்தைக் கண்டு பயப்படாதீர்கள்; அந்தச் சோஷியலிசம் நம்மை ஒன்றும் செய்துவிடாது என்று.

விவரம் தெரிந்தவர்கள், காங்கிரஸ் கட்சியின் அமைப்பை அறிந்தவர்கள், நன்றாகத் தெரிந்து கொண்டிருக்கிறார்கள், பேசப்படும் சோஷியலிசம் போலி என்று... ஆனால், பாமரருக்கு அந்தப் பேச்சு தித்திப்புத் தரும் என்பதைத் தெரிந்துகொண்டுதான் காங்கிரஸ் தலைவர்கள் ஓயாமல் சோஷியலிசம் பற்றிப் பேசுகிறார்கள். காங்கிரஸ் ஆதிக்கத்தை எதிர்ப்பவர்களெல்லாம் சோஷலிச விரோதிகள் என்று பழியும் சுமத்துகிறார்கள்.

எவரெவர் சோஷியலிசம் ஏற்பட்டால் ஆதிக்கத்தை, உடைமைகளை, சுகபோகத்தை

இழந்தாக வேண்டி நேரிட்டு விடுமோ அவர்களெல்லாம் வாய் மூடிக் கொண்டிருக் கிறார்கள் - சோஷியலிசத் திட்டத்தை எதிர்க்காமல்.

சோஷியலிசம் ஏற்படின், அதனால் நிரம்பப் பயன் அடையக்கூடிய ஏழை எளியோர் நடுத்தரக் குடும்பத்தினர் மிகப்பெரும் அளவு இடம் பெற்றுள்ள கழகம், நம்முடையது. உள்ளபடி சோஷியலிசம் நடை முறைக்கு வரும் என்றால், நாமல்லவா மகிழ்ச்சியால் துள்ளுவோம்; திட்டத்தை வரவேற்போம்.

நாம் அவர்கள் சோஷியலிசம் பேசுவதையும் பார்க்கிறோம்; அதேபோது சோஷியலிசப் பகைவர்கள் அந்த முகாமிலே மூலவர்களாக இருப்பதையும் காண்கின்றோம். எனவேதான், வெறும் மயக்கமூட்டும் பேச்சு இது என்று கூறுகிறோம்.

சோஷியலிசம் பேசி மக்களை ஏய்ப்பதனை எதிர்க்கிறோம், சோஷலிசத் திட்டத்தை அல்ல.

ஆரோக்கியசாமி என்ற பெயருள்ள ஒருவர் அக்கிரமம் செய்திடக் கண்டு கண்டித்தால், உடனே ஆரோக்கியத்தைக் கண்டிக்கிறோம், வெறுக்கிறோம் என்றா பொருள்? பித்தரும் கூறமாட்டார் இதுபோல. ஆனால், பெரிய தலைவர்கள் பேசுகிறார்கள், கழகம் சோஷியலிசத்தை எதிர்க்கிறது என்று.

ஆறாயிரம் மதிப்புள்ள சதுரத்தை இரண்டு ஆயிரம் கொடுத்துத் தட்டிக் கொண்டு போகத் தந்திரம் செய்ப வனைக் கண்டித்தால், உடனே அவன், நாம் "சாவடி' கட்டும் புண்ணிய காரியத்தைத் தடுக்கிறோம், எதிர்க்கிறோம் என்றா பேசப் புறப்படுவது ?

ஆனால் காமராஜர், இந்த அபத்தப்

பேச்சைத்தான் அள்ளி அள்ளி வீசுகிறார், ஊரூருக்கும்.

நான் ஏழை பணக்காரன் வித்தியாசத்தைப் போக்கப் பாடுபடுகிறேன், அதனை இந்தக் கழகத்தான் எதிர்க்கிறான் என்றாராம், பெரியவர்!

ஏழை பணக்காரன் என்ற வித்தியாசத்தைப் போக்க இவர் வைத்துக் கொண்டுள்ள திட்டம் என்ன? சொல்லட்டுமே பார்ப்போம்,

திட்டவட்டமாக அவர் தமது ஏற்பாட்டினைக் கூறட்டும், அது போலியாகிப் போய்விடாது என்பதை விளக்கட்டும், பிறகு அந்தத் திட்டத்தைக் கழகத்தினர் எதிர்க்கிறார்களா என்று பார்க்கட்டும்.

நான் ஏழை பணக்காரன் பேதத்தைப் போக்க இன்ன திட்டம் தீட்டினேன். அதனை

இந்தக் கழகத்தான் எதிர்த்தான் என்று எடுத்துக்காட்டி மெய்ப்பிக்கட்டும், பார்ப்போம்.

ஓட்டை ஒடிசல் உள்ள முறையிலே தயாரிக்கப்பட்டது என்ற போதிலும் நிலத்துக்கு உச்சவரம்பு கட்ட சட்டம் வந்தபோது கழகம் வரவேற்றது; நாடு அறியாதா இந்த உண்மையினை.

நிலப்பிரபுக்கள் தப்பித்துக் கொள்வதற்கான ஓட்டைகள் சட்டத்திலே இருக்கின்றன என்பதை எடுத்துக் காட்டிற்று, கழகம்.

உச்சவரம்புச் சட்டத்திலிருந்து தப்பித்துக் கொள்ள, நிலப்பிரபுக்கள் செய்திடும் சூழ்ச்சிகளை விளக்கிக் காட்டிற்று.

உச்சவரம்புச் சட்டத்தை ஏய்க்க, நிலப்பிரபுக்கள் செய்துகொண்ட நிலப் பிரிவினைகள், சூதானவை, புரட்டானவை

என்பதனைக் கழகம் அம்பலப்படுத்திற்று.

இந்த முறையிலே கழகம் நடந்து கொண்டதே தவிர நிலத்துக்கு உச்சவரம்பு கட்டவே கூடாது. அப்படிப் பட்ட சட்டம் தவறானது, என்று கூறிற்றா? எதிர்த்தா? எடுத்துக்கூறச் சொல்லட்டுமே பார்க்கலாம்.

நில உச்சவரம்புச் சட்டத்தை வரவேற்று அந்தச் சட்டம் மேலும் செம்மையானதாக்கப்பட வேண்டும்; அதில் உள்ள ஓட்டைகள் அடைக்கப்பட வேண்டும் என்று வாதாடிய நமது கழகமா சோஷியலிசத்தை எதிர்க்கும் கழகம். பேதையும் இதனை நம்பமாட்டானே! ஆனால், பெரிய இடத்தைப் பிடித்துக் கொண்டவர் பேசுகிறார் இப்படி ஒரு அபத்தத்தை.

இவர் போன்றாரே, சோஷியலிசப் பகைவர்கள் என்று பகிரங்க மாகக் குற்றம் சாட்டுகிறோம்.

இவர் போன்றார்க் கூடிக் குலாவுவதும் தேடிப் பெற்று மகிழ்வதும் முதலாளிகளை என்று மெய்ப்பித்துக் காட்டிக்கொண்டு வருகிறோம்.

கபிஸ்தலமும், வாண்டையாரும், வடபாதியும், நெடும்பலமும், செய்யூரும் பிறவும், காங்கிரசின் கொலுமண்டபத்திலே நாயகர்களாக இருந்து வருவதைக் காட்டுகிறோம்.

சீமான்களுக்காக இந்த ஆட்சியிலே தொடர்ந்து செய்யப்பட்டுவரும் வசதிகள் எவை எவை என்பதனை எடுத்துக்காட்டி வருகிறோம்.

இந்த ஆட்சியின் துணைபெற்று எவ்வளவு வேகமாக முதலாளித்தனம் வளர்ந்து கொண்டு வருகிறது என்பதனை விளக்கிக் காட்டுகிறோம்.

இந்த ஆட்சியின் தயவினால்

இலாபவேட்டை நடத்துபவர்கள், இந்த ஆட்சியை நடத்திடும் கட்சிக்கு கோடிக்கணக்கிலே "நிதி' தந்து வருவதற்கான புள்ளி விவரத்தைக் காட்டுகிறோம்.

இவ்விதமாக காங்கிரஸ் நடத்திடும்ட கபடத்தை உடைத்தெறியும் கழகமா சோஷியலிசம் வேண்டாம் என்று கூறிடும், மந்த மதி படைத்தவனும் ஏற்கமாட்டானே! ஆனால், பேசுகிறாரே, பெரியவர்!! ஏன்! எதையும் பேசலாம், என்ற நிலை தமக்கு இருக்கிறது என்ற நினைப்பினால்.

சோஷியலிச தத்துவத்துக்கு முரணாக முதலாளித்து வத்துக்கு அரணாக இருந்து வரும் மோட்டார் பஸ் தொழி லைத் தனிப்பட்ட முதலாளிகளிடம் விட்டு வைக்காமல், சர்க்கார் ஏற்று நடத்தவேண்டும் என்ற மசோதாவைக் கழகம் கொண்டு வந்தபோது எதிர்த்து மாய்த்தவர்கள் யார்? இதே காமராஜர்

கட்சி அல்லவா? அன்று சோஷியலிசத் திட்டத்தைப் பதைக்கப் பதைக்கப் படுகொலை செய்துவிட்டு இன்று சோஷியலிசம் பேசினால், யார் நம்புவார்கள்?

கூட்டிவைத்துக் கேட்கவில்லையா இந்த மகானுபாவர்கள், பஸ் முதலாளிகளை.

பிழைக்கப் போகிறீர்களா?

சாகப்போகிறீர்களா?

காங்கிரசாட்சி ஏற்பட்டால், பிழைத்திருக்க முடியும்!

எதிர்க்கட்சி வெற்றி பெற்றால், செத்தீர்கள். என்ன சொல்லுகிறீர்கள்?

என்ன செய்யப்போகிறீர்கள்?

சாகப்போகிறீர்களா, அல்லது பிழைக்கப் போகிறீர்களா?

பிழைக்க விரும்பினால் காங்கிரசுக்கு நிதி

கொடுங்கள்! கழகத்தைத் தோற்கடியுங்கள். என்றெல்லாம். இது உலகறிந்த இரகசியமல்லவா!

அமைச்சர் பிரான்களின் ஊர்வலங்கள், பெரியவரின் பவனி இவற்றின்போது ஊரூருக்கும் ஆயிரக்கணக்கான ரூபாய்களைச் செலவிட்டு அமைக்கப்பட்ட அலங்கார வளைவுகளிலேயே, இது இன்ன பஸ் முதலாளியின் உபயம் - அன்பளிப்பு - என்று பொறிக்கப்பட்டதில்லையா! அதை மக்கள் காணவில்லையா! மக்கள் இவைகளை அடியோடு மறந்தா போய்விடுவார்கள்!

மக்கள் பார்த்துக் கொண்டுதானே இருக்கிறார்கள், புதிய புதிய தொழிற்சாலைகள் கிளம்புவதை; பொட்டலெட்டாம் புது நகர்களாக மாறுவதை; அவ்வளவும் முதலாளிகளின் பாசறையாக இருப்பதனை.

இந்தப் புதிய வளர்ச்சி முதலாளிகளுக்கு ஏற்பட்டிருப்பது காங்கிரசாட்சியினால்தான் என்பது மக்களுக்குத் தெரியாதா!

இரத்தக் கறை படிந்த கரமுடையான் அகிம்சை பற்றிய புதிய அகவலை அரங்கேற்றுவதுபோல, திட்ட மிட்டு முதலாளித்துவத்தை வளர்த்துக் கொண்டு வரும் இவர்களா பேசுவது சோஷியலிசம் பற்றி! அந்தப் புனிதமான கோட்பாட்டைப் பற்றிப் பேச இவர்களுக்கு அருகதை ஏது?

ஆனால், பேசுகிறார்கள்; ஏமாளிகள் நம்பட்டுமே; நம்பாதவர்கூட நம்மை எதிர்த்தா கேட்கமுடியும்! நமது செல்வாக்கென்ன, அதிகார பலம் என்ன, பளபளப்பு என்ன!! இவற்றினைக் கண்டதும் அவர்களுக்குத் தன்னாலே வாயடைத்துப் போய்விடாதா, என்ற நினைப்பு.

தம்பி! காங்கிரசினால் சோஷியலிசத்தை நடைமுறை ஆக்க முடியாது; அந்த உறுதியோ விருப்பமோ அவர்களுக்குக் கிடையாது என்பதற்கு விளக்கமளித்திட ஒன்று கூறுகிறேன்.

இரண்டு திங்களுக்கு முன்பு கோடீஸ்வரரான பிர்லா தம்மையொத்த பெருவணிகர்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுத்தார்!

நமக்கு (முதலாளிகள் - தொழில் அதிபர்கள்) ஏற்ற சர்க்கார் காங்கிரஸ் சர்க்கார்தான்.

நாம் காங்கிரஸ் சர்க்கார் அமைவதற்குப் பாடுபட வேண்டும்; ஆதரவு அளிக்க வேண்டும் என்று.

காங்கிரஸ் சோஷியலிசம் ஏற்படுத்தும் என்று தெரிந்தால் பிர்லா இவ்விதம்

பேசியிருப்பாரா?

பிர்லா விரும்பி வரவேற்கும் ஆட்சி சோஷியலிச ஆட்சியாகவா இருக்க முடியும்!

என்ன விளக்கமளிக்கிறார்கள் இந்த விந்தைக்கு - பிர்லாவின் ஆதரவுக்கு!

சிந்தையில் கள் விரும்பி சிவ சிவா என்பது போல, முதலாளித்தனத்தை வளர்த்துக்கொண்டே, சோஷியலிசம் பேசுகிறார்கள். இதனைப் பண்டித நேருவின் உடன் பிறந்தார் விஜயலட்சுமி அவர்களே உடைத்து காட்டினார்களே,

காங்கிரஸ் பேசும் சோஷியலிசம் உதட்டளவுதான் என்று.

உதட்டளவுதான் இவர்கள் பேசும் சமதர்மம் என்று நாம் கூறினால், கூரைக்குத் தாவிக் கொக்கரிக்கிறாரே காமராஜர்; வாய் திறக்கிறாரா, அம்மையார் பேசியது கேட்டு,

கிலி! சுடச்சுட ஏதாவது கொடுத்துவிடப் போகிறார்கள், செம்மையாக என்ற பயம். ஓடோடி வருகிறார், இங்கு! நம்மை ஏச!! உதட்டளவுதான் நமது சோஷியலிசம் என்று அங்கே உலகப் புகழ் ஈட்டிய அம்மையார் குட்டுகிறார்; அது மோதிரக் கை என்பதாலே இவர் பட்டுக்கொள்கிறார், துடைத்துக் கொள்ளக்கூடத் துணிவற்று. பேசச் சொல்லுங்கள் கழகத்தைப் பற்றி, ஏ! அப்பா! வாய் எத்தனை அகலமாகி விடுகிறது! வார்த்தை எவ்வளவு நாராசத்தில் தோய்த்து எடுத்து வீசப்படுகிறது!

தம்பி! காங்கிரஸ் கட்சி பேசிடும் சோஷியலிசம் போலி என்பதை உணர்ந்து, காங்கிரசிலேயே ஒரு பகுதியினர்.

காங்கிரஸ் சோஷியலிச அணி என்று ஒரு உள் அமைப்பே நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

வெட்கம் துளி இருந்தால், ஏ! போக்கிரிகளே! காங்கிரசே சோஷியலிசத்தைத் தன் திட்டமாக, கொள்கையாகக் கொண்டு நடந்துகொள்கிறபோது, காங்கிரசிலேயே இருந்துகொண்டு சோஷியலிச அணி என்ற உள் அமைப்பை நடத்தலாமா; ஊர் என்ன சொல்லும், உலகம் என்ன சொல்லும்; காங்கிரசிலே மிகப் பெரும்பகுதியினர் உண்மையான சோஷியலிஸ்டுகள் அல்ல என்றல்லவா பேசும்; இப்படி கட்சிக்கே ஒரு இழுக்கைத் தேடிக்கொடுக்கிறீர்களே; இது கட்டுப்பாட்டையே குலைத்து விடுவதாகுமே; மரியாதையாக சோஷியலிச உள் அமைப்பைக் கலைத்துவிடுங்கள்; இல்லையென்றால் கட்சியை விட்டு வெளியே செல்லுங்கள் என்றல்லவா காங்கிரசின் தலைவர் கட்டளை பிறப்பிப்பார்! செய்யச் சொல்லுங்கள்,

பார்ப்போம்! பீடமே ஆடிப்போகும்! ஆகவே, உள்ளே இருந்து கொண்டு அவர்கள் குட்டுகிறார்கள்; இவர் அந்த எரிச்சலை இங்கே கொண்டுவந்து கொட்டுகிறார், கொடி பிடித்தானூரிலும் கொடுத்தானூரிலும்.

இவர்கள் பேசுவது போலி சோஷியலிசம், நாங்கள்தான் உண்மையான சோஷியலிசத்தைக் கொண்டு வரப்போகிறோம் என்று சொல்லுவதாகத்தானே பொருள் - காங்கிரசுக்குள்ளேயே ஒரு சோஷியலிச அணி செயல்படும் விந்தை. ஆஹா நம்மோடு இருப்பவர்களே நம்மைப் பற்றிச் சந்தேகப்படுகிறார்களே என்று பதறுகிறாரா? எப்படிப் பதறுவார்! அவர்கள்தான் தயாராக இருக்கிறார்களே, வெளியே சென்று இவர்களின் ன்பர்சோஷியலி சத்தை வெளுத்துக் கட்ட - அந்தப் பயத்தால், பெட்டிப்

பாம்பாகி விடுகிறார்! இங்கு வந்து சீறுகிறார்!!

சோஷியலிசம் என்றால் என்ன என்று புரிந்து கொள்ளாமல், வாயால் சோஷியலிசம் பேசிக் கொண்டிருக்காதீர்கள்.

சோஷியலிசத்திலே நம்பிக்கையில்லாத மந்திரிகளை, மந்திரிசபையிலிருந்து வெளியே துரத்தியாக வேண்டும்.

என்று தம்பி! நான் சொன்னால் காங்கிரசின் மாபெருந் தலைவர் மட்டுமல்ல, கையேந்திகள்கூடக் கடுங்கோபம் கக்கிட முனைவது காணலாம்! எமது மந்திரிகளுக்கா சோஷியலிசம் புரியவில்லை! அவர்களுக்கா சோஷியலிசத்தில் நம்பிக்கை இல்லை! அப்படிப் பேசிடு வோன் நாவினைத் துண்டித்துக் காக்கை கழுகுக்கு விருந்திடுவேன்! இன்றே! இப்போதே! இதோ! என்று ஆவேசமாடிடுவர்.

ஆனால், நான் அல்ல, இதனைக்கூற முன்வந்தது.

பாராளுமன்றத்தில் ஒரு காங்கிரஸ் உறுப்பினர் பேசியதை நான் எடுத்துக் காட்டுகிறேன். அமைச்சர் கொலு வீற்றிருந்த அவையில், வெளிநாட்டு இதழ்களின் நிருபர்கள் குறிப்பெடுக்கும் அந்த அவையில், ஒழுங்கு நடவடிக்கை எடுப்பார்களோ என்பது பற்றித் துளியும் அஞ்சாமல், மார்ச்சு 12-ந் தேதி டி.சி. சர்மா எனும் காங்கிரஸ் உறப்பினர், இது போலப் பேசினார்.

ஐயன்மீர்! நீங்கள் சோஷியலிசம் பேசுகிறீர்களே தவிர, அதன் பொருளை உணரவில்லையே!

ஏடுகளிலும் பல நாடுகளிலும் அறிவாளர்கள் சோஷியலிசத்திற்குத் தந்துள்ள பொருளுக்கும் உமது

வியாக்யானத்திற்கும் துளியும் பொருந்தவில்லையே!

சோஷியலிசத்தின் பொருளைப் புரிந்துகொண்டா பேசுகிறீர்கள்?

என்று நாம் மிகப் பணிவுடன் பேசிடுவது கேட்டாலே, காங்கிரஸ் தலைவர்கள் பெருத்த குரலெடுத்து ஏசுகிறார்கள், ஆத்திரத்தைக் கொட்டுகிறார்கள். பாராளுமன்றத்திலேயே பலமான சவுக்கடி கொடுக்கிறார், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்; துடைத்துக் கொண்டு விடுகிறார்களே! மற்றவர்களைக் கேட்கிறார்கள், மானம் இல்லையா! - என்று!!

சோஷியலிசம் வெற்றி பெற வேண்டுமென்றால், முதலில் உழுபவனுக்கே நிலம் என்ற கொள்கை நடைமுறையாக்கப்படல் வேண்டும் என்று வலியுறுத்தியபோது நெடுங்காலம் அதனை

எதிர்த்துக் கேலி பேசிக்கொண்டிருந்தவர்தான் இந்தக் காமராஜர். அவருடைய பொன்மொழி ஊரறியுமே, தம்பி! உனக்குக் கவனமில்லையா!

உழுபவனுக்கு நிலமா !
ஏறுபவனுக்கு இரயிலா !
இருப்பவனுக்கு வீடா !

என்று வக்கணை பேசிக்கொண்டிருந்தார்.

ஆனால் நாட்டு மக்கள் வெகுவேகமாக சோஷியலிசத்தின் பக்கம் சென்று கொண்டிருக்கிறார்கள் என்று கண்டு கொண்டதும், "சோஷியலிசமா! நாங்களே அதனைத் தருகிறோம்!!' என்று பேசத் தொடங்கினர்.

சோப்பு வேண்டுமா சீப்பு வேண்டுமா, ஆடும் பொம்மை வேண்டுமா அலங்காரச்சட்டை வேண்டுமா என்று

தன்னிடம் உள்ள சரக்குகளை விற்றிடச்சந்தைக் கடைக்காரன் நச்சரித்தான். தொல்லை தாளமாட்டாமல் ஒருவன், எனக்கு ஒரு சாமானும் வேண்டாம் : தொல்லை செய்யாதே; போ! போ! மேலும் தொல்லை கொடுத்தால், போலீஸ்காரரைத் கூப்பிட்டு உன்னை ஒப்படைத்து விடுவேன் என்றானாம்.

தந்திரக்கார வியாபாரி பயந்து விடவுமில்லை, சலித்து விடவுமில்லை.

ஒரு ஊதுகுழலை எடுத்துக்காட்டி, இதோ ஊது குழல்! போலீஸ்காரரைக் கூப்பிட உதவும் - எட்டணாதான் விலை! வாங்கிக் கொள்ளுங்கள் என்றானாம்.

தம்பி! காங்கிரஸ் கட்சியை நடத்திச் செல்பவர்கள் அது போன்ற தந்திரத்தை மேற்கொள்பவர்கள்! அதனால்தான், தங்களிடம் கைவசம் இருக்கும் சரக்கு

விலைபோகவில்லை என்று தெரிந்ததும், மக்களுக்கு சோஷியலிசத்திலே விருப்பம் ஏற்பட்டு விட்டது தெரிந்ததும்.

இதோ சோஷியலிசம் என்று கூவுகிறார்கள்.

ஆனால், "லேபிள்' தான் சோஷியலிசம் - சரக்கு அல்ல!

சரக்கு எப்படிப்பட்டது என்பதற்கு ஒரு எடுத்துக் காட்டினை மட்டும் தருகிறேன், தம்பி! ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம் பார்த்தால் போதுமல்லவா?

நில உச்சவரம்பு சட்டம், புரட்சித் திட்டம், புதுமைத் திட்டம், சமதர்மத் திட்டம் என்றெல்லாம் விளம்பரம் செய்துகொண்டு வந்தார்கள்.

நாம் அந்தச் சட்டத்திலே இவர்கள் வேண்டுமென்றே ஏற்படுத்தி வைத்திருந்த

ஓட்டைகளைக் காட்டி, சட்டம் சரியாக இல்லை என்று கூறியபோதுகூட, உரத்த குரலெடுத்து மறுத்தார்கள், நிலப்பிரபுத்துவமுறை ஒழிந்துவிடும், ஏழைகளுக்கு ஏற்றம் கிடைக்கும், உழுபவனுக்கு நிலம் கிடைக்கும் என்று.

காங்கிரஸ் கட்சியிலே இடம் பிடித்துக்கொண்டு விட்ட நிலப்பிரபுக்கள், குறும்புப் புன்னகை உதிர்த்தனர். சட்டம் நிறை வேற்றப்பட்டது. உழுபவன் எந்த அளவு பலன் பெற்றிருக்கிறான், அந்தச் சட்டத்தின் துணைகொண்டு. ஊரறியுமே! சட்டம் நிறைவேற்றப்பட்டு செயல்படுத்தப்பட்டு ஆண்டு பல ஆகிவிட்டன. ஆயினும், உழுபவனுக்கு, இந்தச் சட்டத்தின் மூலம் எந்த அளவு நிலம் கிடைத்திருக்கிறது. நேர்மையிலே நாட்டம் கொண்டுள்ள எவரேனும் நடைமுறையிலே இந்தச்

சட்டம் எப்படி வடிவமெடுத்திருக்கிறது என்பதைக் கண்டு வெட்கமும் வேதனையும் அடையாமலிருக்க முடியுமா! டி.டி. கிருஷ்ணமாச்சாரி யாரே கூறினாரே, நில உச்சவரம்புச் சட்டம் போட்டோம்; ஆனால், பெரிய நிலப் பிரபுக்கள் எங்களை ஏய்த்துவிட்டார்கள் என்று.

சட்டம் ஏட்டளவுதான் இருக்கிறது, நாட்டிலே அது நிறைவேற்றப்பட்டதாகத் தெரியவில்லை என்று இவர்களே வரவழைத்த அமெரிக்க ஆய்வாளர்கள் எடுத்துக்காட்டினரே!

சோஷியலிசத்திலே உண்மையான நம்பிக்கையும் அதனைச் செயல்படுத்தவேண்டும் என்பதிலே தீவிரமும் உள்ளவர்களானால் என்ன செய்திருக்க வேண்டும்? ஓட்டைகளை அடைத்திருக்க வேண்டுமல்லவா? செய்தனரா?

பெயரளவுக்கு நில உச்சவரம்பு சட்டத்தை நிறைவேற்றி வைத்தனரே தவிர, அதனால் உருப்படியான பலன் கிடைத்திருக் கிறதா? கிடைக்கவில்லை என்பதற்குத் தம்பி! அமைச்சர்களின் பேச்சே சான்றளிக்கிறதே!

உச்சவரம்பு சட்டத்தைச் செயல்படுத்தி, நிலப் பிரபுக்களிட மிருந்து நிலத்தை எந்த அளவு பெற்றீர்கள், உழுபவனுக்குத் தந்திட என்ற தகவல் தரும்படி கேட்டதற்கு அமைச்சர் அளித்திருக்கிற விவரத்தைப் படித்திருப்பாயே, தம்பி! மலையைக் கெல்லி எலியைப் பிடித்த கதை போலில்லையா!

உண்மையான நேர்மையான சோஷியலிசத் திட்டம் இப்படியா இருக்கும்?

ஊரை வளையக்கட்டித் தமதாக்கிக் கொண்டுள்ள நிலப்பிரபுக் களிடம் சிக்கிக் கொண்டுள்ள நிலத்திலே உச்சவரம்பு

சட்டத்தின் மூலம் இலட்சக்கணக்கான ஏக்கர் நிலம் கிடைத்திடும்; அவ்வளவையும் உழுபவனுக்குப் பகிர்ந்தளிக்க முடியும்; அவன் உள்ளம் களிநடமிடும்; கதிர் குலுங்கும், செந்நெல் குன்றெனக் குவியும் உணவுப் பஞ்சமே ஒழிந்து போகும்; வெளிநாடுகளுக் கெல்லாம் உணவுப் பொருளை ஏற்றுமதி செய்திடலாம் என்றெல்லாம் எழுச்சிமிக்க குரலில் பேசினார்களே, நிலைமை என்ன இப்போது என்பதுபற்றி வாய் திறக்கிறார்களா! கவனித்துப் பாரேன், தம்பி!

உச்சவரம்புச் சட்டத்தின் மூலம், எவ்வளவு நிலம் பெறப் பட்டது என்பதுபற்றி அமைச்சர் தந்த விவரத்தைப் பார்த்து விட்டு, இந்த ஆட்சியினர் உண்மையான சோஷியலிஸ்டுகளா என்பதுபற்றிய தீர்ப்பு அளிக்கும்படி மக்களைக் கேட்டுக் கொண்டால் என்னவிதமான தீர்ப்புக் கிடைக்கும்?

உச்சவரம்புச் சட்டத்தின்படி கிடைத்துள்ள நில அளவு

மாவட்டம் நஞ்ச	ை-ஏக்கர் புஞ்சை-ஏ	க்கர்
செங்கற்பட்டு	87.89	269.89
வடாற்காடு	146.43	198..96
தென்னாற்காடு	337.63	348.63
தஞ்சாவூர்	711.95	68.69
திருச்சி	184.65	283.88
சேலம்	12.28	217.90
தர்மபுரி	73.03	344.72
மதுரை	59.23	1135.330
கோவை	4.47	334.88
இராமநாதபுரம்	91.93	30.92
நெல்லை	18.29	484.38

தம்பி! அமைச்சர் இராமய்யா அறிவித்துள்ள மகத்தான சாதனை இது! மொத்தத்தில் இதுவரை பெறப்பட்டுள்ள

நிலத்தின் அளவு 5445 ஏக்கர்! புதுமைத் திட்டம்! புரட்சித் திட்டம்! இதுவாம்!! சொல்லிக் கொள்கிறார்கள் வெட்கமின்றி! மார்தட்டிக் கொள்கிறார்கள், சோஷியலிசத்தை நடத்துவதாக!! இதை நாடு நம்பவேண்டும் என்றும் எதிர்பார்க்கிறார்கள்.

ஆட்சி பீடத்திலே இருப்போர்முன்

கைகட்டி நிற்க
பராக்குக் கூற
பல்லாண்டு பாட
பல்லிளித்துக் கிடக்க
பாதம் தாங்கிட
தலையாட்டிட
பண்டம் மாற்றிட
பேரம் பேசிட

பலர் முன்வருவர்! இது உலக அதிசயங்களிலே ஒன்று அல்ல! திருவிழாக்

கூட்டத்திலே, சிறார்கள் கண்களை அகலத் திறந்துகொண்டு வேடிக்கை பார்த்திடவில்லையா, பொம்மைக் கடையை, அதுபோல! ஆட்சியாளர்களின் அங்காடியிலே அடுக்கிக் காட்டப்படும் பொம்மைகள் பளபளப்பானவை, பகட்டானவை! ஒவ்வொன்றுக்கு ஒவ்வொரு விலை.

காட்டிக் கொடுத்தால் இந்தப் பொம்மை.
அடுத்துக்கொடுத்தால் அந்தப் பொம்மை.
பிளவு மூட்டினால் இந்தப் பொம்மை!

என்று ஒவ்வொரு பொம்மைக்கும் ”விலை’ குறிக்கப்பட்டிருக்கிறது.

இந்த ”வியாபாரம்’ இன்று நேற்றல்ல, மனித மனத்திலே ஆசையும் சூழ்ச்சித் திறனும் முளைத்த நாள் தொட்டு இருந்து வருகிறது.

இத்தகையோர் தம்மைச் சுற்றி நின்று சூடம் கொளுத்தி, வந்தனை வழிபாடு

செய்வதுகண்டு, நாடே நமது பக்கம்! என்று எண்ணிக்கொள்வதும் இயல்வு. ஆனால் நாடு, இத்தகையவர் களைத் தாங்கிக் கொண்டிருக்கிறதே தவிர, நாட்டின் குடிமக்கள், நாணயமான குடிமக்கள் நப்பாசைக்கு ஆளாகாத குடிமக்கள், கோடி கோடியாக உள்ளனர். அவர்கள்மீது நம்பிக்கை வைத்துத் தான் தம்பி! நாம் பணியாற்றி வருகிறோம். அவர்களின் கண்ணீரைத் துடைத்திட! அவர்கள் புன்னகை பூத்திட! புதுவாழ்வு பெற்றிட.

போலி சோஷியலிசம் பேசிடும் காங்கிரஸ் அந்த மக்களை வாட்டி எடுக்கிறது என்பதனை எடுத்துக்காட்ட அதிகம் கூறத் தேவையில்லை.

காங்கிரசாரும் மறுக்க முடியாத ஒரு புள்ளி விவரம் தருகிறேன். தம்பி! இது, நாலாவது ஐந்தாண்டுத் திட்ட விளக்கத்துக்காக காங்கிரஸ் சர்க்கார் வெளியிட்டுள்ள புள்ளி

விவரம். நாட்டு மக்களை இந்த ஆட்சி எந்த இலட்சணத்தில் வைத்திருக்கிறது என்பதைக் காட்டிடுவது.

இன்று

430 இலட்சம் மக்கள் - நாள் ஒன்றுக்கு 30-பைசாவும்
430 இலட்சம் மக்கள் - 42 பைசாவும்
460 இலட்சம் மக்கள் - 51 பைசாவும்
430 இலட்சம் மக்கள் - 59 பைசாவும்

வருவாயாகப் பெறுகிறார்கள்!

எப்படி இருக்கும் இந்த எளியோரின் வேதனை என்பதனை விளக்கிடவா வேண்டும்!!

இந்த வேதனை நிலையை மூட்டிக்கொண்டு வருபவர்கள், சோஷியலிசம் வேறு பேசுவது, துகிலுரிந்த துச்சாதனன், துரௌபதிக்கு விலையுயர்ந்த பட்டாடை

வாங்கித் தரப்போகிறேன் என்று கூறுவதற்கு ஒப்பானது அல்லவா?

ஏழைகளை வேதனையில் ஆழ்த்திவிட்டு, ஏழ்மை இந்த அளவு படருவதற்குக் காரணமாக உள்ள முதலாளித்தனத்துக்குத் துணை இருந்துகொண்டே, காங்கிரசாட்சி சோஷியலிசம் பேசுகிறது. நியாயமா?

இல்லை! இல்லை! இல்லை! என்ற முழக்கம் எங்கும் கேட்கிறது.

அந்த முழக்கம் மூட்டிவிடும் கலக்கம் காமராஜரைத் துரத்துகிறது, கிராமம் கிராமமாக! - மாலையிலே பொது மக்களை மயக்க - காலையிலே ஊழியர்களை உற்சாகப்படுத்த - இடையிலே வலைவீச - முதலாளிமார்களை உலுக்கிப் பணம் திரட்ட!!

அவருடைய பரபரப்புமிக்க நடவடிக்கையும், கொதிப்பு மிக்க பேச்சும், தம்பி!

காங்கிரசாட்சிக்கு எதிராகத் திரண்டு எழுந்துள்ள எதிர்ப்பினை நன்கு எடுத்துக் காட்டுகிறது.

இதனை உணர்ந்திடின் தம்பி! நமக்கெல்லாம் புதிய உற்சாகமும், உறுதியும், பிறந்திடத்தானே செய்யும்.

அந்த வேகத்துடன் நமது தோழர்கள் தீவிரமாகப் பணியாற்றுகிறார்கள்.

தம்பி! ஒவ்வொரு நாளும் உன்னை நீயே கேட்டுக் கொள்ள வேண்டும். இன்று நாம் செய்தது என்ன? எந்த வகையில் கழகப் பணியாற்றினோம்? என்பதனை, ஏன் என்கிறோயோ தம்பி! காங்கிரஸ் எதேச்சாதிகாரத்தை வீழ்த்தும் புனிதப் பணிக்கு நான், உன்னைத்தான் நம்பிக் கொண்டிருக்கிறேன்.

உருட்டி மிரட்டிப் பேசிடுபவனல்ல நான்

- நான் உன்னோடு இருப்பவன் - உயர ஏறிவிட்டவன் அல்ல.

என்னைத் தேடி இலட்சாதிபதிகள் வரமாட்டார்கள் - நான் உனக்காகப் பணியாற்றுபவன் என்பது அவர்களுக்குத் தெரியும்!

நமது மாளிகைக்கு விருந்துண்ண வருக! என்று என்னை எவரும் வேண்டிக் கேட்டுக்கொள்ள மாட்டார்கள். நான் பர்மிட் லைசென்சு கொடுப்பவனல்ல!

ஊர்க்கோடியிலே மணிக் கணக்கிலே காத்திருந்து எனக்கு மாலை அணிவிக்கச் சீமான்கள் நின்றுகொண்டிருக்க மாட்டார்கள்; நான் பதவியைத் தந்திட வல்லவன் அல்ல.

நான் இன்னின்னது பேசினேன் - இத்தனை முறை கை தட்டினார்கள் - இத்தனை மாலைகள் போட்டார்கள் - என்று இதழ்கள்

வெளியிடாது - நான் அவர்கள் போற்றிப் புகழ்ந்திடும் இடத்திலே இல்லை.

நான், அவனுக்கு என்ன தெரியும், இவனுக்கு என்ன தெரியும், எவனுக்கு என்ன யோக்கியதை இருக்கிறது என்றெல்லாம் பேசிட முடியாது - என் இயல்வு இடந்தராது - அப்படிப் பேசினாலும் தாங்கிக்கொள்ள மாட்டார்கள். ஏனெனில், நான் தர்பாரில் இடம் பெற்றவன் அல்ல.

கூப்பிடு அவரை! கொண்டு வா இவரை! என்று நான் கட்டளை பிறப்பிக்க முடியாது - ஏனெனில், எவரும் மதித்தே ஆகவேண்டும் என்ற பகட்டான பதவிப் பீடத்திலே நான் இல்லை.

நான் இவைகள் கிடைக்கவில்லையே என்று ஏக்கப்படவு மில்லை; கிடைக்கும் என்று எதிர்பார்க்கவுமில்லை.

நான் எதிர்ப்பார்ப்பது ஒன்றுதான், உன் இதயத்தில் இடம்.

எனக்குக் கிடைத்திருப்பதும் ஒன்றுதான், உன் இதயத்தில் எனக்கோர் இடம்.

நான் விளக்கிக் காட்ட முடியும் - செய்கிறேன். வேண்டுகோள் விடமுடியும் - செய்கிறேன்.

உன் ஆதரவை, உழைப்பைக் கேட்க முடியும் - கேட்கிறேன்.

என்னால் முடிந்ததை நான் செய்கிறேன்; உன்னால் முடியக்கூடிய தனைத்தையும் தம்பி! நீ செய்திட வேண்டும்.

செய்திடின் தம்பி! மாலை போடவரும் கனவான், மாளிகையில் விருந்து வைக்கும் சீமான், கூப்பிட்ட குரலுக்கு ஒடிவரும் பூமான் ஆகியோரின் துணையில்லையே என்று எவரேனும் என்னிடம் கூறிடினும், எனக்கு

ஏன் அந்தப் போலிச் சரக்கு, அதோ என் உடன் பிறந்தார்களின் உறுதியைப் பார்! உள்ளன்பைப் பார்! உற்சாகத்தைப் பார்! எந்த இன்னலையும் ஏற்றுக்கொள்ளும் துணையைப் பார்! தனக்கென எதனையும் தேடிடாத தூய்மையைப் பார்! அந்த உத்தமன் அளித்திடும் உழைப்பைப் பார்! அந்தச் சக்தியின் மீது பகட்டு உலகினர் திரட்டித் தரும் படைக்கலன் பாய்ந்திடின், படைக்கலன் நொறுங்கும் - அறிவேன் நான் - என்று கூறிடுவேன் - எழுச்சியுடன் - நம்பிக்கையுடன்.

உன்னைத்தான் நம்பியிருக்கிறேன், தம்பி உன்னைத்தான்.

அன்புள்ள

அண்ணாதுரை

15-5-66

தொலை நோக்கு – Vision

தமிழ் மொழி மற்றும் இனக்குழுக்கள் சார்ந்த மெய்நிகர்வளங்கள், கருவிகள் மற்றும் அறிவுத்தொகுதிகள், அனைவருக்கும் கட்டற்ற அணுக்கத்தில் கிடைக்கும் சூழலை உருவாக்குதல்.

பணி இலக்கு – Mission

அறிவியல் மற்றும் சமூகப் பொருளாதார வளர்ச்சிக்கு ஒப்ப, தமிழ் மொழியின் பயன்பாடு வளர்வதை உறுதிப்படுத்துவதும்,

அனைத்து அறிவுத் தொகுதிகளும், வளங்களும் கட்டற்ற அணுக்கத்தில் அனைவருக்கும் கிடைக்கச்செய்தலும்.

எமது பணிகள்

- **கணியம் மின்னிதழ்** kaniyam.com
- கணிப்பொறி சார்ந்த கட்டுரைகள், காணொளிகள், மின்னூல்களை இங்கு வெளியிடுகிறோம்.
- **கட்டற்ற தமிழ் நூல்கள்** FreeTamilEbooks.com
- இங்கு யாவரும் எங்கும் பகிரும் வகையில், கிரியேட்டிவ் காமன்ஸ் உரிமையில், தமிழ் மின்னூல்களை இலவசமாக, அனைத்துக் கருவிகளிலும் படிக்கும் வகையில் epub, mobi, A4 PDF, 6 inch PDF வடிவங்களில் வெளியிடுகிறோம்.

- தமிழுக்கான கட்டற்ற மென்பொருட்கள் உருவாக்கம்
- தமிழ் ஒலியோடைகள் உருவாக்கி வெளியிடுதல்
- விக்கி மூலத்தில் உள்ள மின்னூல்களை பகுதிநேர/முழு நேரப் பணியாளர்கள் மூலம் விரைந்து பிழை திருத்துதல்
- OpenStreetMap.org ல் உள்ள இடம், தெரு, ஊர் பெயர்களை தமிழாக்கம் செய்தல்.

மேற்கண்ட திட்டங்கள், மென்பொருட்களை உருவாக்கி செயல்படுத்த உங்கள் அனைவரின் ஆதரவும் தேவை. உங்களால் எவ்வாறேனும் பங்களிக்க இயலும் எனில் உங்கள் விவரங்களை kaniyamfoundation@gmail.com க்கு மின்னஞ்சல் அனுப்புங்கள்.

வெளிப்படைத்தன்மை

கணியம் அறக்கட்டளையின் செயல்கள், திட்டங்கள், மென்பொருட்கள் யாவும் அனைவருக்கும் பொதுவானதாகவும், முழுமையான வெளிப்படைத்தன்மையுடனும் இருக்கும். https://github.com/KaniyamFoundation/Organization/issues இந்த இணைப்பில் செயல்களையும், https://github.com/KaniyamFoundation/Organization/wiki இந்த இணைப்பில் மாத அறிக்கை, வரவு செலவு விவரங்களுடனும் காணலாம்.

கணியம் அறக்கட்டளையில் உருவாக்கப்படும் மென்பொருட்கள் யாவும் கட்டற்ற மென்பொருட்களாக மூல நிரலுடன், GNU GPL, Apache, BSD, MIT, Mozilla ஆகிய உரிமைகளில் ஒன்றாக வெளியிடப்படும். உருவாக்கப்படும் பிற வளங்கள், புகைப்படங்கள், ஒலிக்கோப்புகள், காணொளிகள், மின்னூல்கள், கட்டுரைகள்

யாவும் யாவரும் பகிரும், பயன்படுத்தும் வகையில் கிரியேட்டிவ் காமன்சு உரிமையில் இருக்கும்.

நன்கொடை

உங்கள் நன்கொடைகள் தமிழுக்கான கட்டற்ற வளங்களை உருவாக்கும் செயல்களை சிறந்த வகையில் விரைந்து செய்ய ஊக்குவிக்கும்.

பின்வரும் வங்கிக் கணக்கில் உங்கள் நன்கொடைகளை அனுப்பி, உடனே விவரங்களை kaniyamfoundation@gmail.com க்கு மின்னஞ்சல் அனுப்புங்கள்.

Kaniyam Foundation

Account Number : 606 1010 100 502 79

Union Bank Of India

West Tambaram, Chennai

IFSC – UBIN0560618

Account Type : Current Account